All my writings related to science and spirituality have been prepared as a single book for students and youth to read easily

அறிவியல் விஞ்ஞானம் ஆன்மிகம் தொடர்பான எனது பதிவுகள் அனைத்தும் மாணவர்கள், இளைஞர்கள் எளிதில் வாசிக்கும் வகையில் வகையில் ஒரே புத்தகமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.









RAHMATH RAJAKUMARAN

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ



இளைஞர்களுக்காக .....

முயற்சியும், நேர்மையும் உங்கள் வாழ்க்கையில் என்னென்றும் நிலவட்டுமாக!

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்கிறார் ஔவை .

ஒரு முட்டைக்குள் உறங்கும் கோழிக்குஞ்சு வெளியில் வர வெப்பத்தை வேண்டுமானால் தாய் கோழித் தரலாம். ஆனால் ஓட்டை உடைத்துக் கொண்டு வெளியில் வர குஞ்சுதான் முயற்சி எடுக்க வேண்டும்.

அதுபோல வாழ்க்கைக்கு வழி பிறர் காட்டலாம் . அதில் வெற்றி பெறுவது நமது முயற்சியை பொறுத்தேதான் அமையும் .

உயரம் குறைந்தவன் போலீஸ் வேலைக்கு வேண்டுமானால் போக முடியாமல் போகலாம் ; ஆனால் போலீஸை வேலை வாங்குகிற கலெக்டர் வேலைக்கு போக முடியும் .

கொஞ்சம் நிறம் குறைந்தவள் உலக அழகியாக முடியாமல் போகலாம். ஆனால் அவர்களை தேர்வு செய்யும் குழுவின் தலைவியாக ஆக முடியும் . எனவே வெற்றிபெற நம்பிக்கையும் முயற்சியும் தேவை.

அமெரிக்காவின் பிரபல கோடீஸ்வரர் ராக் ஃபெல்லர் முதுமையிலும் கடுமையாக உழைத்தார் . விமான பயணத்தின் போது ஓர் இளைஞர் அவரிடம், " ஐயா தாங்களுக்கு இருக்கும் சொத்திற்கு நீங்கள் உட்கார்ந்து சாப்பிடலாமே " என்று ....

அதற்கு அவர், "இப்பொழுது பறக்கும் விமானத்தின் எஞ்சினை நிறுத்தினால் விபத்து ஏற்படும் . அதுபோலதான் வாழ்க்கையும் போராடிக் கொண்டே இருந்தால்தான் வெற்றி பெற்றுக் கொண்டே இருக்கலாம் " என விளக்கம் அளித்தார் .

'கடும் உழைப்பே வெற்றி தரும்'என்பதாக மு.மேத்தா அவர்கள்

நட ... நாளை மட்டுமல்ல இன்றும் நம்முடையதான் நட ..

வெற்றி தேவதை உன்னுடைய விலாசத்தை விசாரிக்க தொடங்கும்வரை நட ...

பாதங்கள் நடக்க தயாராக இருந்தால் பாதைகள் மறுப்பு சொல்ல போவதில்லை ...

நெய்யாய் திரியாய் நீயே மாறினால் தோல்வியும் உனக்கு ஒரு தூண்டுகோலாகும் நட ...

என்னும் கவிதை மூலம் காட்டுகிறார்

போராடும் குணம் கருவிலேயே தொடங்கிவிடுகிறது என்கிறார்கள் .

கர்ப்பையில் செலுத்தப்படும் 30 கோடி உயிரணுக்களில் அத்தனைவற்றையும் புறந்தள்ளி, நீங்கள் ஒருவர் மட்டுமே சினைமுட்டையை துளைத்து , குழந்தையாக உருவெடுக்கும் போதே போராட்டம் தொடங்கிவிடுகிறது .

எனவே வாழ்க்கையில் போராடும் குணம் உடையவர்கள் வெற்றி பெறமுடியும் சோதனையும் , வேதனையும் இல்லாமல் சாதனை பிறப்பதில்லை .

வாழ்க்கையில் இன்பம் மட்டுமன்றி துன்பமும் நமது தோழனே என எண்ணுங்கள் .

"ஒரு மனிதனால் ஒன்று முடியும் என்றால் அது எல்லா மனிதனாலும் ஏன் முடியாது ? " என்று கேட்கிறார் விவேகானந்தர் .

கஷ்டத்தின் இறுதியில் இஷ்டப்பட்டு கிடைப்பதுதான் வெற்றியும் , மாலையும் அது ஒன்றும் சும்மா இருந்து கிடைப்பதில்லை .

فَاِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ۙ

ஆதலின் நிச்சயமாகத் துன்பத்துடன் இன்பம் இருக்கிறது.

(அல்குர்ஆன் : 94:5)

اِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا

நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது.

(அல்குர்ஆன் : 94:6)

என்ற இரு வசனத்தை இரண்டு முறை இறைவன் கூறியிருப்பதுக் கூட "முயற்சி செய் , முயற்சி செய் " என்று கூறுவது போல் இருக்கிறதல்லவா ?

இளைஞர்களுக்காக .....

உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலம். மூன்று பேர் ஒரு இளைஞரை அழைத்துக்கொண்டு உமரிடம் வந்தனர் .

" இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே..! இவர் எங்கள் தந்தையை கொன்று விட்டார்.எனவே இவரை பழி தீர்க்க வேண்டும் என வேண்டினர்.

" ஏன் அவரை கொலை செய்தாய் ? " என்று அந்த இளைஞரிடம் உமர் கேட்டார் .

"நான் ஓர் ஒட்டகம் மேய்ப்பாளன் . எனது ஒட்டகங்களில் ஒன்று இவர்களது தந்தையின் வயலில் உள்ள பயிரை மேய்ந்து விட்டது. எனவே அவர் அதை கல்லால் அடிக்க, அதனால் அது இறந்து விட்டது. உடனே நான் அந்தக் கல்லை எடுத்து, அவரைத் தாக்க கல்லடிப்பட்டு அவர் இறந்து போனார் " என்றார் அந்த இளைஞர் .

"அப்படியானால் உனக்கு கொலைக் குற்றத்துக்கான தண்டனை கிடைக்கும் " என்று உமர் கூறினார்.

அதற்கு அவர் " எனக்கு மூன்று நாள் அவகாசம் வழங்குங்கள். ஏனெனில் எனது தந்தை எனக்கும் எனது சிறிய தம்பிக்குமாக சேர்த்து புதையல் ஒன்றைக் கொடுத்து விட்டு இறந்து விட்டார். என்னை நீங்கள் கொன்றுவிட்டால் ,எனது தம்பியும் காணாமல் போய், அந்த புதையலும் யாருக்கும் தெரியாமல் வீணாய் போய்விடும் "என்று கூறினார்.

"அவகாசம் தருகிறேன். ஆனால் உனக்கு யார் ஜாமீனாக இருப்பார்" என்று உமர் வினவினார் .

சுற்றுமுற்றும் சிறிது நேரம் பார்த்த அவர், பின்னர் அங்கே இருந்த அபூதர் (ரலி) அவர்களைச் சுட்டிக் காட்டினார்.

அபூதரிடம் , "இவருக்கு நீர் ஜாமீனாக இருக்கிறீரா ?" என்று உமர் கேட்டார்.

"ஆம் . இருக்கிறேன்." என்று அபூதர் கூறினார் .

"அப்போது அவர் தப்பி ஓடி விட்டால் , நீர்தான் பொறுப்பாளர். உம்மைத்தான் நான் தண்டிப்பேன்" என்றார்.

"பரவாயில்லை .நான் ஜாமீனாக இருக்கிறேன் " என்றார் அபூதர் .

பின்னர் அந்த இளைஞர் புறப்பட்டுச் சென்றார். முதல் நாள், இரண்டாம் நாள் என நாட்கள் கடந்து கொண்டிருந்தன.

மூன்றாம் நாளில் சூரியன் மறையும் ஆரம்பித்துவிட்டது. எங்கே அபூதர் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு விடுவாரோ என்று மக்கள் பெரும் கலக்கத்துடன் காணப்பட்டனர்.

அந்த நேரத்தில் அந்த இளைஞர் மூச்சிரைக்க ஓடிவந்து ,உமர் முன்னிலையில் நின்றார் .

"ஜனாதிபதி அவர்களே..! புதையலையும், தம்பியும் எனது சிறிய தந்தையிடம் ஒப்படைத்துவிட்டேன். இப்போது எனக்கு தண்டனையை தாராளமாக வழங்குங்கள் " என்று கூறினார்.

ஆச்சரியத்தின் உச்சத்தில் நின்ற உமரவர் , " இளைஞரே ! நீ நினைத்திருந்தால், தப்பி ஓடி இருக்கலாம் .ஆனால் அப்படி ஓடாது இங்கே உன்னை மீண்டும் வரவழைத்தது எது ? என்று கேட்டார்.

அதற்கு அவர் " வாக்குறுதியை நிறைவேற்றும் பண்பாடு மனிதர்களுக்கு இல்லாமல் போய்விட்டதே என்று மக்கள் என்னை குறிப்பிட்டு பேசி விடுவார்களோ என்ற அச்சம்தான் " என்று கூறினார்.

அடுத்து அபுதரை நோக்கி, "உம்மை அவருக்காக ஜாமீன் ஏற்கத் தூண்டியது எது ? " என்று கேட்டார் உமர்

அதற்கு அவர், " பிறருக்கு உதவி - நன்மை புரியும் பண்பாடு மனிதர்களிடம் இல்லாமல் போய் விட்டதே என்று என்னைக் குறிப்பிட்டு மக்கள் பேசி விடுவார்களோ என்ற அச்சம்தான் " என்று கூறினார்.

நடந்த இரண்டு உன்னத அதிசய நிகழ்வுகளும் உமரிடம் வழக்குக்கு கொண்டுவந்த மூவரின் உள்ளங்களை பெரிதும் பாதித்தது .

எனவே "எங்கள் தந்தையை கொன்ற இந்த இளைஞரை உளப்பூர்மாக நாங்கள் மன்னித்து விட்டோம் " என்று கூறினார்

உடனே உமர் அவர்கள் " உங்களை மன்னிக்க தூண்டியது எது ?" என்று வினவினார்.

அதற்கு அவர்கள், " மன்னிக்கும் பண்பாடு மனிதர்களிடம் இல்லாமல் போய்விட்டதே என்று மக்கள் எங்களை குறிப்பிட்டுப் பேசி விடுவார்களோ என்ற அச்சம்தான் " என்றார்கள். சுபஹானல்லாஹ் !

அன்பர்களே முயற்சியும் , போராடும் குணமும் ,
வாக்குறுதி பேணுதலும் ,
பிறருக்கு உதவி புரிதலும் ,
மன்னிக்கும் மனப்பான்மையும் ,
வரலாற்றில் மின்னினால் போதுமா ?
நம் வாழ்வில் மின்ன வேண்டாமா...?

🖉 ரஹ்மத் ராஜகுமாரன்

+919486909903   /// +919443446903

வாசிப்பு

அறிவு என்னும் அற்புதம்

(அறிவு - பர்ளு கிபாயா)

அறிவு பாராட்டப்படுவது போல், பிறருக்கு அறிவுறுத்துவதும் பாராட்டப்படுகிறது. கல்விக்கு பெருமை கொடுத்த இஸ்லாம் கற்பிக்கும் அறிஞர்களுக்கும் பெருமை கொடுத்திருக்கிறது

இஸ்லாம் பொதுவாக கல்விக்கும் கல்வியாளர்களுக்கும் அதிகமான முக்கியத்துவமளித்த மார்க்கமாகும். சிந்திப்பது, ஆராய்ச்சி செய்வது, கற்பது, வாசிப்பது போன்ற செயற்பாடுகளை அது ஒரு வாஜிபாகவே கருதுகின்றது.

குர்ஆனின் முதல் வசனம் ஓதுவீராக! வாசிப்பீராக! என்ற பொருள்களைத் தரும் 'இக்ரஃ' எனும் சொல்லாகும்.பேனாவின் மீது சத்தியமாக! என்று இன்னுமொரு மக்கீ வசனம் ஆரம்பிப்பதிலிருந்தும் இந்த உண்மையைப் புரியமுடியும்.

அறிவு தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமை.
(இப்னு மாஜா)

(நபியே) இவர்களுடைய அறிவு பறந்து விடக்கூடிய நாளை இவர்கள் சந்திக்கும் வரையில் நீங்கள் இவர்களை விட்டு விடுங்கள் குர்ஆன் (52:45)

'அறிவு (உலகிலிருந்து) உயர்த்தப்படுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்'(புகாரீ,முஸ்லிம்) போன்ற ஹதீஸ்களும் அறிவின் முக்கியத்துவத்துக்கான சான்றுகளாகும்.

இறைவன் கூறுகிறான் : "உங்களில் நம்பிக்கை கொண்டவர்களுக்கும், அறிவு பெற்றவர்களுக்கும் இறைவன் பல படித்தரங்களைக் கொடுக்கிறான்"

"நம்பிக்கையாளர்களை விட அறிஞர்கள் உயர்ந்தவர்கள். இவ்விரு சாராருக்கும் இடையே உள்ள தூரம் மிக நீளமானது என்பது இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கருத்து

இதோ மனிதனைப் பார்த்து இறைவன் கேட்கிறான் : "அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாக முடியுமா ?குர்ஆன் (39 : 9)

"இறைவனுக்கு அஞ்கிறவர்கள் அறிஞர்களே !" என்னும் கருத்து திருக்குர்ஆனில் வேறு ஒரு இடத்தில் காணப்படுகிறது

"மானிடர்களே உங்கள் மானத்தை மறைத்துக் கொள்வதற்கு நாம் உடைகளை கொடுத்தோம் " என்ற இறை வசனத்தில் ' உடை ' என்பது ஒரு குறியீடு. உடை என்னும் வார்த்தை அறிவையே குறிக்கிறது.

அது அறியாமை என்னும் அவமானம் ஏற்படாதபடி தடுக்கிறது. மனிதனுக்கு உடையினால் பெருமை கிடைப்பது போல அறிவினாலும் பெருமை கிடைக்கிறது

எனவே, மனித சமூகத்தின் ஈருலக விமோசனத்துக்குத் தேவையானது என கருதப்படும் எந்தவொரு அறிவும் பயனுள்ளதாகவே அமையும்.

அது மார்க்கத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டதாகவோ உலக விவகாரங்களுடன் நேரடியாக சம்பந்தப்பட்டதாகவோ அமைந்திருந்தாலும் சரியே. அந்த அனைத்து கல்வி ஞானங்களிலும் ஈடுபடுவதும், கற்பதும், கற்பிப்பதும் தவிர்க்க முடியாத 'பர்ளு கிபாயா' வாக அமையும்.

அந்தவகையில், குர்ஆன், சுன்னா, பிக்ஹ், அகீதா, ஸீரா போன்ற மார்க்கத்துடன் நேரடியாகத் தொடர்பான துறைகளில் நிபுணத்துவம் மிக்க உலமாக்களை உருவாக்குவது போலவே,

மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்ட அறிஞர்கள், தொழிநுட்பவியலாளர்கள், விஞ்ஞானிகள், ஊடகவியலாளர்கள் போன்ற உலக விவகாரங்களோடு தொடர்பான அறிவுகளில் ஆழமான அறிவு கொண்டவர்களை உருவாக்குவதும் 'பர்ளு கிபாயா'வாகவே கருதப்படும்.

மருத்துவம், விவசாயம், பொறியியல், கணிதம், தொழிநுட்பம், தகவல் தொழிநுட்பம், தாவரவியல், விலங்கியல், வானவியல், புவியியல், வர்த்தகம், நிதியியல், உளவியல் போன்ற இன்னோரன்ன உலக அறிவுகள் மனித வாழ்வின் இயக்கத்துக்கு இன்றியமையாதவைகளாகும்.

உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு போன்ற மனித அடிப்படைத் தேவைகளை சிறப்பாக அமைத்துக்கொள்ளவும் அறிவீனம், வறுமை, நோய் போன்றவற்றை இயன்றவரை தவிர்க்கவும், பொருளாதார ரீதியாக, நாகரீக ரீதியாக முன்னிலை பெறவும் சுயகௌரவத்தோடு வாழவும் இந்த கலாஞானங்கள் அவசியப்படுகின்றன.

மார்க்கக்கல்வி என்று மக்களால் அடையாளப்படுத்தப்படும் கலாஞானங்களைப் பொறுத்தவரையில் கூட அவற்றைப் படிப்பதும் 'பர்ளு கிபாயா'வாகும். ஏனெனில்,மார்க்கக் கல்வி மனித வாழ்வுக்கு இன்றியமையாததாகும்.

மார்க்கக்கல்வி மூலம் ஒருவர் தான் யார்? தன்னைச் சூழவுள்ள பிரபஞ்சம் ஏன் படைக்கப்பட்டது? தனது வாழ்வின் இலட்சியம் யாது? தன்னைப் படைத்தவன் யார்? போன்ற அடிப்படையான கேள்விகளுக்கு விடையைப் பெற்றுக் கொள்கிறார்.

அவருக்கு உலகக் கல்விகளில் இவற்றுக்கான விடைகள் கிடைக்கமாட்டாது. மனிதனின் உரிமைகள், கடமைகள் யாவை என்பதை மார்க்கக் கல்வியின் மூலமே அறிய முடியும். குப்ர், ஷிர்க், நிபாக், பெரும்பாவங்கள், நன்மை, தீமை, ஒழுக்க விழுமியங்கள் போன்றவற்றை அறிவதற்கும் மார்க்கக் கல்வியே துணை செய்கிறது

அந்தவகையில், மார்க்கக் கல்வியை கற்பது ஒரு வாஜிபாகவும் மாறுகிறது. இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய இமாம்களான தபரீ, குர்துபீ, புகாரி, முஸ்லிம், மாலிக், ஷாபி, அபூஹனீபா, அஹ்மத் போன்ற ஆயிரக்கணக்கான மேதைகள் சன்மார்க்கப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்து அறிவுப் பணியைத் தம் வாழ்வின் அச்சாணியாக அமைத்ததால்தான் நாம் இன்றும்கூட முஸ்லிம்களாக வாழ்ந்து வருகிறோம்.

இந்த மார்க்கக் கல்வியைக் கற்பதற்காக ஒரு குழுவினர் தம்மை அர்ப்பணிப்பது அவசியம் என்ற கருத்து பின்வரும் குர்ஆன் வசனத்திலிருந்து தெரிய வருகிறது:

وَمَا كَانَ الْمُؤْمِنُوْنَ لِيَنْفِرُوْا كَآفَّةً فَلَوْلَا نَفَرَ مِنْ كُلِّ فِرْقَةٍ مِّنْهُمْ طَآٮِٕفَةٌ لِّيَتَفَقَّهُوْا فِى الدِّيْنِ وَ لِيُنْذِرُوْا قَوْمَهُمْ اِذَا رَجَعُوْۤا اِلَيْهِمْ لَعَلَّهُمْ يَحْذَرُوْنَ

'விசுவாசிகள் அனைவருமே (மதீனாவிலிருந்து) யுத்தத்திற்காகச் செல்ல வேண்டியதில்லை. அவர்களது ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு சாரார் மார்க்கத்தில் ஆழமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வெளியேறிச் சென்றிருக்கக்கூடாதா?

அவர்களது சமூகத்தவர்கள் (ஜிஹாதிலிருந்து) அவர்களிடம் திரும்பி வந்தவுடன் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக இவ்வாறு செய்திருக்கலாமல்லவா? (இதன் மூலம்) அவர்கள் (அந்த அவர்களது சமூகம்;) எச்சரிக்கையாக நடந்துகொள்ளலாம் குர்ஆன் (9:122)


மேற்படி வசனம் இறக்கப்பட்ட சந்தர்ப்பம் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். அறப்போரில் பங்கெடுப்பதன் சிறப்புக்கள் பற்றி அதிகமாக அறிந்த நபித்தோழர்கள் அதற்காகச் செல்வதற்கு போட்டி போட்டதுடன் நபி(ஸல்) அவர்களை மதீனாவில் தனியாக விட்டுவிட்டு அதற்குப் போகவும் முயற்சித்தனர்.

எனவே, யுத்தத்திற்காக ஒரு குழுவினர் செல்ல பிறிதொரு குழுவினர் மதீனாவில் தங்கியிருந்து, நபி(ஸல்) அவர்கள் கூறும் ஹதீஸ்களை செவிமடுத்து, ஜிஹாதுக்காகச் சென்றவர்கள் திரும்பி வந்தவுடன் அவர்களுக்கு அவற்றை எத்திவைக்கும்படி கட்டளையிடும் மேற்படி வசனம் இறக்கப்பட்டது.

அறிவு பாராட்டப்படுவது போல், பிறருக்கு அறிவுறுத்துவதும் பாராட்டப்படுகிறது. கல்விக்கு பெருமை கொடுத்த இஸ்லாம் கற்பிக்கும் அறிஞர்களுக்கும் பெருமை கொடுத்திருக்கிறது

அறிவு'-ஆம், அது நாம் வானுலகு ஏறுதற்குரியவனின் சிறகு. -ஷேக்ஸ்பியர்

வாசிப்பு





சார்லஸ் டிக்கன்ஸ் ஒருநாள் வீதியில் நடந்து போகின்ற போது பரிச்சயமில்லாத ஒரு பெண் ஒருத்தி அவரை தன் வீட்டுக்குள் கூப்பிட்டாள். "டிக்கன்ஸ் அவர்களே ! என் வீடு முழுவதும் நிரப்பி வைக்க நிறைய நண்பர்களை தந்த உங்கள் கைகளை நான் தொடலாமா ? " என்று கேட்டாள். புத்தகத்தைத்தான் அவள் நண்பனாக சொல்லி இருக்கிறாள்.ஒவ்வொரு புத்தகமும் நம்மையே நமக்கு இனம் காட்டுகின்ற நல்ல நண்பன்.

நாம் நிறைய வாசிக்க வேண்டும் வாசித்ததை எல்லாம் யோசிக்க வேண்டும். அவற்றை நம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

'தந்திர மிகுந்தவர்கள் வாசிப்பை கண்டிருக்கிறார்கள். எளிமையானவர்கள் அதே நேசிக்கிறார்கள். புத்திசாலிகள் அதைப் பயன்படுத்துகிறார்கள்' என்பதாக அறிஞர் ஒருவர் கூறி இருக்கிறார்.

துறவி ஒருவர் இந்தியாவின் பல இடங்களிலும் சுற்றித் திரிந்து, ரொம்பவும் கஷ்டப்பட்டு பல ஏட்டுச் சுவடிகளை சேகரித்தார்.

சேகரித்த ஏட்டுச் சுவடிகளை எல்லாம் படகில் ஏறினார். கங்கையில் அக்கறையை நோக்கி போய்க்கொண்டிருந்தது படகு . நதியில் பாதி தூரம் போகும் போது ஏட்டுச் சுவடிகளின் பாரம் தாங்காமல் படகு கவிழ கூடிய நிலை ஏற்பட்டது.

"இரண்டு கட்டு ஏட்டுச் சுவடிகளை தூக்கித் தண்ணீரில் போட்டு விட்டால், பாரம் குறையும். படகு கவிழ்ந்து." என்று படகோட்டி துறவியிடம் சொன்னான்.

" ஆ! எவ்வளவு கஷ்டப்பட்டு சேகரித்த அரிய அறிவுப் பொக்கிஷங்கள், இவைகளை நதியில் போடுவதா ? " என்று துறவி அதிர்ச்சி அடைந்தார்.

" வேண்டாம்பா. பாரம்தானே குறையவேண்டும் நானே படகிலிருந்து குதித்து விடுகிறேன். இந்த ஏட்டுச் சுவடிகளை பத்திரமாக மடத்தில் கொண்டு போய் சேர்த்துவிடு ! " என்று படகோட்டி இடம் சொல்லிவிட்டு ,தன் உயிரைப் பற்றி கவலைப்படாமல் நடுகங்கையில் குதித்து விட்டார் அந்த அந்தத் துறவி .

அந்தத் துறவிதான் கி.பி 406-ல் சீன யாத்திரிகராக இந்தியாவுக்கு வந்த **பௌத்த துறவி பாஹியான்.**

இப்படி எண்ணற்றோர் தங்கள் இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் பழைய ஓலைச் சுவடிகளையெல்லாம் காப்பாற்றாமல் விட்டிருந்தால் , எழுதிய சுவடு தெரியாமல் சுவடிகள் பல இலக்கியங்கள் காணாமல் போயிருக்கும். மேலும் அவை காணாமல் போன விபரங்கள் கூட காணாமல் போயிருக்கும்.

என்னுடைய முகநூல் பதிவுகள் கூட கால வெள்ளத்தில் கரைந்து போய்விடுமோ என்று அடிக்கடி எண்ணி கவலைப்பட்டதுண்டு.

வல்ல ரஹ்மான் நல்ல நண்பர்களைக் கொண்டு மிக அழகாக ஒவ்வொன்றையும் முத்துமாலையில் கோர்த்த முத்துக்களாக ஜொலிக்கச் செய்து நவீன சூழலுக்கு ஏற்ப அதன் எழுத்து வடிவம் மாறாமல் **(E-BOOKS)**புத்தகமாக நமது கையில் தவழ செய்துள்ளான்

இதை நாம் **PRINT+ BINDING** செய்து நம் இல்லங்களில் புத்தகமாகவே வைத்து ஓய்வு நேரங்களில் நாம் வாசித்துக் கொள்ளலாம் மாணவ மாணவிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும்.
வீடுகளில் புத்தகமாக இருக்கும் பட்சத்தில் அதை நம் குழந்தைகள் இயல்பாகவே வாசிக்கக் கூடிய சூழல் அங்கு அமையும்

மற்றும் நவீன சூழலுக்கு ஏற்ப **(E.BOOK) PDF&WORD FORMAT)** பதிவிறக்கம் செய்து நமது தொலைபேசியிலோ அல்லது TABLETல் வைத்துக்கொண்டு பயண நேரங்களில் மற்றும் ஓய்வு நேரங்களிலும் வாசித்துக் கொள்ளலாம்

இறையருளால் எனது எழுத்துப் பதிவுகள் ஒரு துறையை மட்டும் சார்ந்து இல்லாமல் பல துறைகளை சார்ந்து பதிவு செய்திருக்கிறேன்

காட்சி ஊடகங்களின் ஆட்சியை மீறி , மறுபடியும் அச்சு ஊடகம் கோலாச்ச ஆரம்பித்திருப்பதை புத்தக கண்காட்சி நடக்கும் இடங்களெல்லாம் திருவிழாவைப் போலவும் , நிறைய புத்தகங்களை .. இல்லை புத்தகக் கட்டுகளை மக்கள் அள்ளிக் கொண்டு போவதை பார்க்கவும் போது , படைப்பாளிகள்
நெருப்பில் கருகி இறந்து தன் சாம்பலில் இருந்து மீண்டும் மீண்டும் எழும் பீனிக்ஸ் பறவையை போல' காட்சி அளிக்கிறார்கள் .

வாசிப்பு சுவாசிப்பாகவும் நேசிக்கும் காலம் வந்துவிட்டது கண்டு என் மனம் குளிர்கிறது .
🖉 ரஹ்மத் ராஜகுமாரன்

காலம்



உலகத்தைப் பற்றி எதுவும் புரிந்து கொள்ளாமலே நாம் அன்றாடம் வாழ்க்கை நடத்தி வருகிறோம் .

உயிர்வாழ்வை இயலச் செய்கிற கதிரொளியை உற்பத்தி செய்யும் பொறிமுறை பற்றியோ , விண்ணில் சுழற்றி வீசப்படாமல் பூவுலகோடு நம்மை ஒட்ட வைத்திருக்கும் புவிஈர்ப்பு பற்றியோ , எவற்றால் நாம் ஆகியிருக்கிறோமோ , எவற்றின் நிலைத் தன்மையை நாம் ஆதாரமாகக் கொண்டுள்ளோமோ அந்த அணுக்கள் பற்றியோ நாம் அதிகமாய்ச் சிந்தித்துப் பார்ப்பதில்லை .

இயற்கை ஏன் இப்படி இருக்கிறது ?அண்டம் எங்கிருந்து வந்தது ? அல்லது அது எப்போதும் இஙகுதான் இருந்ததா ?

காலச் சக்கரம் என்றாவது ஒரு நாள் பின்னோக்கிச் சுழன்று காரியங்கள் காரணங்களை முந்திக் கொள்ளுமா ? அல்லது மாந்தர்கள் அறிந்து கொள்ளக் கூடியதற்கு இறுதி எல்லைகள் உண்டா ?
இப்படியெல்லாம் கேள்வி கேட்டு சிந்திப்பதற்கு நம்மில் பலருக்கு நேரமில்லை.

காலம் அழிப்பது தவிர வேறு என்ன செய்யும் ?

وَقَالُوا مَا هِيَ إِلَّا حَيَاتُنَا الدُّنْيَا نَمُوتُ وَنَحْيَا وَمَا يُهْلِكُنَا إِلَّا الدَّهْرُ وَمَا لَهُمْ بِذَٰلِكَ مِنْ عِلْمٍ إِنْ هُمْ إِلَّا يَظُنُّونَ
"இவ்வுலகத்தில் நாம் வாழும் வாழ்க்கையைத் தவிர வேறொரு வாழ்க்கை இல்லை" என்றும், "(இதில்தான்) நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்; பின்னர் இறந்து விடுகின்றோம். காலத்தைத் தவிர (வேறு யாதொன்றும்) நம்மை அழிப்பதில்லை" என்றும் அவர்கள் கூறுகின்றனர். இதைப்பற்றி இவர்களுக்கு யாதொரு ஞானமும் இல்லை. இவர்கள் வீண் சந்தேகத்தில் ஆழ்ந்திருப் போரைத் தவிர வேறில்லை. (குர்ஆன் : 45:24)

மனிதன் பிறப்பதே உலக இன்பங்களைத் துய்ப்பதற்குத்தான் என்று ஒரு கூட்டத்தினர் எண்ணி இருந்து கொண்டே இருக்கிறார்கள் . பாவ மூட்டையை மூட்டை மூட்டையாக அள்ளிக் கட்டிக் கொள்கிறார்கள்.

இன்று கூட நம்மிடையே " மறுமையும் இல்லை , மீண்டும் உயிர்ப்பும் இல்லை அட , மரணத்திற்கு பின் ஏதும் இல்லை" என்று நினைப்போரும் நம்மிடம் உண்டு .இந்த நினைப்புதான் துணிந்து பாவம் செய்ய தூண்டுகிறது .

" இறைவன் இப்படிச் செய்தான் " என்று அறிவுறுத்தப்பட்டால், " அட , அது இயற்கையாகவே நிகழ்ந்தப்பா விடு கவலை" என்பர்

" சரி, அந்த இயற்கை என்றால் என்ன?
அது எங்கிருந்து வந்தது ? ஏன் வந்தது ?
எப்படி வந்தது ? " என்று கேட்டால் அவர்களால் பதில் அளிக்க முடியவில்லை.

கடல் பிளந்து பாதை பிறந்ததும் ,
சந்திரன் பிளந்து பின்பு இணைந்ததும் ,
நெருப்பு பற்றி பின்பு குளிர்ந்ததும் இயற்கைதானே என விட்டு விட முடியுமா என்ன ?

" இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறில்லை" என்று வாழ்ந்து வந்த மக்கத்து இணைவைப்பாளர்கள், "காலத்தைத் தவிர (வேறெதுவும்) நம்மை அழிப்பதில்லை " என்று அவர்கள் கூறினார்கள்.

காலம் ஏன் நம்மை அழிக்க வேண்டும் ?
பிரபஞ்சங்களின் படைப்பு , மனிதனின் பிறப்பு , அவன் வாழ்நாள் , அவன் மறைவு , பூ பூக்குவதும் காய்கனியாகி உதிர்ந்து போவதும் , சந்திர , சூரியன் , விண்மீன்கள் , விலங்கினங்கள் , ஊர்வன , பறப்பன - ஆகியவை பிறந்து மறைந்ததெல்லாம் பற்றி இவர்களுக்குத் தெரிந்தவை ,தெரியப்படுத்தபட்டவை யெல்லாம் மேலெழுந்தவையான சில சொற்ப செய்திகள்தாம்.

ஆனால் இந்த மேலெழுந்த நோட்டக்காரர்களின் கண்களில் படாமல் மறைந்து கிடப்பவை கோடான கோடி உண்மைகள் .

காலம் உள்பட பிரபஞ்சங்கள் அனைத்தையும் படைத்து , கண்காணித்து , இயங்க வைக்கும் இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்தால், இந்த கோடான கோடியில் நமக்குத் தேவையான உண்மைகள் பற்றி காலம் நமக்கு தெளிவை பிறக்க வைக்கும் .

ஓர் இரவுப் பொழுதான காலம் (லைலத்துல் கதிர் இரவு) 83 வருடங்களுக்கும் மேலான பாவத்தை மன்னிக்க செய்யும் .

அரபா வெளி லுஹர் பொழுதிலிருந்து மக்ரிப் வரையுள்ள ஒரு பகல் பொழுது காலம் அன்று பிறந்த பாலகனாய் அது தூய்மையாக்கி விடும் .

காலம் தூய்மையானதும் துல்லியமானதும் கூட ! காலத்தை மறந்து கோடிக்கோடியாய் அநியாயமாய் இன்பம் துயிக்க மனம் செய்யும் . அதுவரை காலமான மாயம் மாயமாகத்தான் இருக்கும்

குர்ஆனும் , நோபல் விஞ்ஞானமும் . 29-01-2018
(முன் குறிப்பு)



நவீன அறிவியலில் இன்று அதிசயங்கள் மிக அவசர அவசரமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன . யாரோ ஒரு வானத்து மறைமுக வித்தகன், " நீ இதுவரை தெரிந்து கொண்டது போதாது; இன்னும் எத்தனையோ இருக்கிறது; இதோ பார் ... இதோ பார் " என்று தினம் தினம்
விஞ்ஞானத்தின் அற்புதத்தை அவ்வப்போது கொடுத்துக் கொண்டே இருக்கிறான்.

وَاِنْ مِّنْ شَىْءٍ اِلَّا عِنْدَنَا خَزَآٮِٕنُهٗ وَمَا نُنَزِّلُهٗۤ اِلَّا بِقَدَرٍ مَّعْلُوْمٍ
ஒவ்வொரு பொருளின் பொக்கிஷங்களும் நம்மிடமே இருக்கின்றன. எனினும், அவற்றை (அந்தந்தக் காலத்தில் அவற்றிற்குக்) குறிப்பிட்ட அளவில் தான் நாம் இறக்கி வைக்கிறோம்.
(அல்குர்ஆன் : 15:21)

அணுக்கருவின் உள்ளுக்குள் இருக்கும் துகள்களான புரோட்டான், எலக்ட்ரான் போன்றவைகளின் இயற்கைத் தன்மைகளை ஆராய அது பிரபஞ்சத்தின் ரகசியத்தை வெளிப்படுத்திற்று .
கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாயிற்று.
மேலும் மேலும் விஞ்ஞானிகள் கண்டறிய முயற்சித்த போது , பிரபஞ்சத்தின் உண்மை என்ன என்று அவர்கள் அறிய ஆசைப்பட்ட போது ஒரு விதமான விளிம்புக்கு வந்து தவித்தார்கள் .ஒரு எல்லைக்கு மேல் பிரபஞ்சத்தின் உண்மையைக் கண்டறிய முடியாது என்பதை விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்ளக் கஷ்டப்பட்டார்கள் .
ஞானிகள் படைத்தவனிடமிருந்து இல்ஹாம்" என்னும் மறைவான ஞானத்தைப் பெற்றார்கள் என்றால் , விஞ்ஞானிகள் படைப்பினங்களிடமிருந்து" knowledge " என்னும் அறிவு ஞானத்தைப் பெற்றார்கள் .
ஞானிகளின் உழைப்பில் சற்று ஏறக்குறைய அதே உழைப்பை விஞ்ஞானிகளும் செய்திருக்கிறார்கள் . 'உண்மை' இவர்களுக்கும் தெரிந்திருக்கிறது. அதை வெளிப்படுத்திய விதம்தான்


கட் புலனுக்குட்பட்ட விஞ்ஞானம் .
இதில் ஆச்சர்யம் என்னவென்றால், அருட்பெரும் ஜோதியில் இருவருமே திளைத்திருக்கிறார்கள் . இருவரும் பெற்ற அனுபவத்தின் வடிவங்கள்தான் வேறு வேறு கண்டதெல்லாம் ஒரே உண்மையின் இரு வேறு பக்கங்கள் .தனிப் பெரும் கருணை இவர்களின் மீதும் பட்டிருக்கிறது.
ஒரு எல்லையைக் கடந்த பின் விஞ்ஞானமும் .வேதாந்தமும் (metaphysics) ஒரே இலக்கை நோக்கிச் செல்கிறது.
ஞானம் என்பது புலன் அறிவிற்கு அப்பாற்பட்டது என்பதை பல மேற்கத்திய விஞ்ஞானிகள் இப்போது தயக்கத்துடன் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.
" உண்மை " என்பதே வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது என்பதுதான் இந்த தொடரின் ஆதார சுருதி . அதை அறிய, உணர உங்களைப் போலவே நானும் ஆசைப்படுகிறேன் . அதை விஞ்ஞானத் தத்துவங்கள் அவ்வப்போது அவதானித்து அவனிக்கு தரும் போது .அதன் மூலாதாரங்கள் குர்ஆனில் மெல்லிய இழையாய் ஊடுருவி இருப்பதை எனக்கு உணர்த்தப்படுகிறது .அந்த அழகான சிந்தனைப் பற்றி குர்ஆன் நம்மிடம் கூறும்போது

اَفَلَا يَتَدَبَّرُوْنَ الْقُرْاٰنَ اَمْ عَلٰى قُلُوْبٍ اَ قْفَالُهَا
இவர்கள் குர்ஆனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அல்லது அவர்களின் இதயங்கள் மீது பூட்டுகள் போடப்பட்டிருக்கின்றனவா?
(அல்குர்ஆன்: 47:24)
என்கிறது .

சூபியாக்கள் என்னும் ஞானிகளைப் பற்றி நாம் முன்னர் ஆய்வு செய்த தொடர் மாதிரி விஞ்ஞானிகளைப் பற்றியும் அவர்களது தத்துவங்களைப் பற்றியும் ஆராயும் ஒரு தொடர். விஞ்ஞானத்தின் ஆழ்நிலையை அப்படியே அள்ளித் தராமல் மெல்லிய இறகால் வருடி வருடி உங்களுக்கு கொடுக்க முயற்சிக்கிறேன்.
அறிவியலின் அற்புதத்தை ஆராய்வோம் அவனின் அளவற்ற ஆற்றலைக் கண்டு ரசிப்போம்.. இன்ஷா அல்லாஹ் .

R**ahmath Rajakumaran**
நோபல் பரிசு என்பது ஒப்பற்ற ஆய்வு மேற்கொண்டவர்களுக்கும் பெரும் பயன் விளைவிக்கும் தொழில்நுட்பங்கள் அல்லது கருவிகளைக் கண்டுபிடித்தவர்களுக்கும் சமூகத்திற்கு அரிய தொண்டாற்றியவர்களுக்கும் வழங்கப்படும் உலகளவில் பெரிதும் மதிக்கப்படும் பரிசு ஆகும்.
அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் சில நிறுவனங்களுக்கும் வழங்கப்படுவது உண்டு. மார்ச் 2005 வரை 770 நோபெல் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், சிலர் இந்தப் பரிசைப் பெற்றுக்கொள்ள மறுத்ததும் உண்டு.
இது வேதியியலாளர் ஆல்ஃபிரட் நோபெல் என்பவரால் 1895ல் தொடங்கப்பட்டது. முதல் பரிசு 1901 ல் வழங்கப்பட்டது. சில ஆண்டுகள் ஒரு பரிசு கூட அறிவிக்கப்படாமல் போனதும் உண்டு. எனினும், குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது இந்தப் பரிசு அறிவிக்கப்படும். நோபெல் பரிசு, திரும்பப் பெறத்தக்கதல்ல.
நோபல் பரிசு
The Nobel Prize
விருதுக்கான
காரணம்
இயற்பியல், வேதியியல், இலக்கியம், மருத்துவமும் உடலியங்கியலும், அமைதி, பொருளியல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவோருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் பரிசு.
வழங்கியவர்
சுவீடன் அக்காதமி,
ரோயல் சுவீடிய அறிவியல் கழகம்,
கரொலீன்ஸ்கா கல்விநிலையம்,
நோர்வே நோபல் குழு
நாடு
சுவீடன்
நோர்வே(அமைதிப் பரிசு மட்டும்)
முதலாவது விருது
1901 **[nobelprize.org** அதிகாரபூர்வ தளம்]

குர்ஆனும், நோபல் விஞ்ஞானமும் 1



(Dr. அப்துஸ் ஸலாம்) (1926 - 1996)

இவர்தான் 1979-ல் பௌதிகத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஒரே ஒரு பாகிஸ்தானியர் .
ஸலாம் ஆராய்ச்சி தொடங்கிய போது ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் பொது சார்பியல் தத்துவத்தின் மூலம் பிரபஞ்சத்தில் 4 சக்திகள் தனிப்பட்டு இயங்குவதாக தென்பட்டது
1. புவி ஈர்ப்பு சக்தி. 2. மின்காந்த சக்தி .
3அணுக்கருவிற்குள் இருக்கும் வலுவான அணுக்கரு சக்தி , 4. அணுக் கருவிற்குள் இருக்கும் மெலிதான அணுக்கரு சக்தி.
இந்த 4. சக்திகளைக் கொண்டுதான் பிரபஞ்ச இயக்கங்கள் அனைத்தையும் புரிய வைக்க முடிந்தது.
ஏன் நான்கு ..? இந்த நான்கையும் இணைத்து ஒன்று என்று சொல்ல முடியாதா ? என்று ஐன்ஸ்டன் கேட்டு 4 கையும் இணைத்து **(unified Field theory)** என்ற ஒன்றாக்கி தன் வாழ்நாளின் கடைசி வரை முயற்சித்து ஐன்ஸ்டைன் தோற்றுப் போய் மரணித்தும் விட்டார்.


அப்துஸ் ஸலாம் அவர்கள் "புவி ஈர்ப்பு விசையைத் தற்போதைக்கு விட்டு விட்டு மின் காந்த விசையையும் . மெலிதான அணுக்கரு சக்தியையும் எடுத்து இணைத்து வெற்றி பெற்றார்.
"இது எப்படி முடிந்தது உங்களால்? " என்று கேட்டதற்கு, கீழ்க்கண்ட வசனத்தை மேற்கோள் காட்டினார் ஸலாம்.

اَوَلَمْ يَرَ الَّذِيْنَ كَفَرُوْٓا اَنَّ السَّمٰوٰتِ وَالْاَرْضَ كَانَـتَا رَتْقًا فَفَتَقْنٰهُمَا وَجَعَلْنَا مِنَ الْمَآءِ كُلَّ شَىْءٍ حَىٍّ اَفَلَا يُؤْمِنُوْنَ
(ஆரம்பத்தில்) வானம் (என்றும்) பூமி (என்றும் தனித்தனியாக) இல்லாமல் இருந்ததை நாமே பிரித்தமைத்து (வானத்திலிருந்து மழையை பொழியச் செய்து அந்த மழை) நீரைக் கொண்டு (உயிருள்ள) ஒவ்வொன்றையும் வாழ்ந்திருக்கச் செய்தோம் என்பதையும் இந்நிராகரிப்பவர்கள் பார்த்தேனும் நம்பிக்கை கொள்ள மாட்டார்களா?
(அல்குர்ஆன் : 21:30)

இந்த சம்பவத்தை மகாவெடிப்பின் போது உஷ்ணம் மிக மிக அதிகமாக இருந்தது.
எவ்வளவு உஷ்ணம் ? பத்துப் பின் 15 சைபர் போட்டுக் கொள்ளுங்கள் அத்தனை டிகிரி உஷ்ணம்.
பிரபஞ்சத்தின் உஷ்ணம் இன்றைக்கு மிகவும் குளிர்ந்து விட்டதால் (மைனஸ் 273 டிகிரி) அணுக்கருவுக்குள்ளே விசையும் ரொம்பவும் " விக்" ஆகி விட்டது என்று சிந்தித்தார் உடனே
" Electro weak unification Theory" யை 1979-ல் நிரூபித்தார் அவருக்கு நோபல் பரிசும் 7 கோடி பணமும் கொடுத்து கௌரவிக்கப்பட்டது.
அப்துஸ் ஸலாமிடம், "மின் காந்த விசையையும் , அணுக்கருவுக்குள் உள்ள விசையையும் எப்படி உங்களால் ஒரு சேர சிந்திக்க முடிந்தது ? என்று கேட்டபோது .
وَمِنْ كُلِّ شَىْءٍ خَلَقْنَا زَوْجَيْنِ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ
ஒவ்வொரு வஸ்துக்களையும் (ஆண், பெண் கொண்ட) ஜோடி ஜோடியாகவே நாம் படைத்திருக்கின்றோம். (இதனைக் கொண்டு) நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவீர்களாக!
(அல்குர்ஆன் : 51:49)
என்ற குர்ஆன் வசனத்தை மேற்கோள் காட்டினார் .

அப்துஸ் ஸலாமின் நிரூபணங்களை ஆய்வு மூலம் நிரூபிக்க, ஜெனீவாவில்
6 கி.மீ நீள காந்தம் அமைத்து ஆக்ஸ்லரேட்டர்களில் மின்துகள்களைத் துரத்தி , வேகப்படுத்தி , மோத வைத்து, பிரபஞ்சத்து ஆரம்ப காலத்து உஷ்ண நிலையை உண்டாக்க முடிந்தது .
அந்நிலையில் ஸலாமின் கணக்குப்படி "வெக்டர் போஸான்கள் " என்கிற கண நேரத் துகள்கள் பாய்ந்து . ஸலாமிற்கு அது ஸலாம் சொன்னது

குர்ஆனும் நோபல் விஞ்ஞானமும் - 2
அலெக்சாண்டர் ஃபிளமிங் (1881-1955)



முதல் உலகப் போர் 1914- ஜூலை 28 ஐரோப்பியாவில் தொடங்கியது சுமார் 70 மில்லியன் போர் வீரர்கள் யுத்தத்தில் ஈடுபட்டனர் . 40 மில்லியன் வீரர்களுக்கு காயம் ஏற்பட்டது. இதில் 20 மில்லியன் போர் வீரர்கள் ஆன்டி செப்டிக் மருந்து கண்டு பிடிக்காத காரணத்தால் போர் புண்களில் பாக்ட்ரியா தொற்றி இறந்தனர் . 1918 நவம்பர் 11ல் முதல் உலகப் போர் முடிவடைந்தது. அது வரை ஆன்டி செப்டிக் என்றால் என்ன என்பது கூட இந்த உலகத்திற்கு தெரியாமல் போர் வீரர்கள் முதல் வீட்டில் .ரோட்டில் சாதாரண நோயாளிகள் கூட காயம் பட்டு செப்டிக்காகி இறந்து போயினர் .
1928-ல் இலையுதிர் காலத்தில் ஒரு மாத கால விடுமுறைக்கு பின்னர் அன்றுதான்
தனது ஆராய்ச்சி சாலை சாதாரண ஒரு விஞ்ஞானி அலெக்சாண்டர் ஃபிளமிங் திறந்தார்.
தான் ஆராய்ச்சி செய்யும் மேஜை மீது ஒரு மாதத்திற்கு முன்பு தான் சாப்பிட்ட ரொட்டி துண்டின் மிச்சங்கள் பூசனம் பூத்து நாற்றம் அடித்துக் கொண்டிருந்தன


அதே நேரத்தில் தான் ஆய்வு செய்ய வைத்திருந்த நிமோனியா முதற்கொண்டு மனிதனுக்கு பலவிதமான வியாதிகள் வரக் காரணமான **" staphylococcus "**

என்ற பாக்ட்ரியாக்கள் ரொட்டி பூசன பூஞ்ஞாங்களால் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியத்தின் ஆகாயத்தில் பறந்தார் ஃபிளமிங் .
உலக விஞ்ஞானிகள் அத்தனை பேரும் பாக்டிரியாவை வதம் செய்து கொல்லும் ஆயுதத்தை மைக்ராஸ் கோபுக்கு அடியில் தேடிக் கொண்டிருக்கும்
போது , ஊசிப் போன உணவு பூசனத்தில் அதற்குரிய ஆயுதம் அழகாக பூத்திருந்தது .
தனது உடம்பையை சோதனை சாலையாக்கி வில்லன் பாக்டீரியாக்களை தனது உடம்புக்குள் செலுத்தி காய்ச்சல் வந்ததும் பூசனத்தால் உருவாக்கப்பட்ட மருந்தை தனது உடம்பில் செலுத்திக் கொண்டார் சில மணி நேரங்களில் காய்ச்சல் காணாமல் போனது .
ரொட்டி துண்டு பூசனத்தை மைக்ராஸ்கோப் அடியில் பார்த்த போது அது அவருக்கு ஓவியம் தீட்டும் பிரஸ் மாதிரி தெரிந்தது "பென்சிலின் " என்றால் இத்தாலியில் ஓவிய தூரிகை .
1939-ல் இரண்டாம் உலகப் போர் ஆஸ்திரேலியா விஞ்ஞானி தர்பூசணி பழத்திலிருந்து பென்சிலீனை பெருமளவு தயாரித்து காட்டினார். யுத்த வீரர்களுக்கு பென்சிலீன் இருக்கும் வரை உயிர் கூட பிரியாது என்று சொல்லி வைக்கப்பட்டது
இரண்டாம் உலக யுத்தம் உயிர் காக்கும் மருந்து இருப்பதால் , போர் முன்னை விட உக்கிரமாக நடந்தது.
பாக்ட்ரியாவால் இன்ஃபெக் ஷன் ஆனால் என்ன செய்வது ? என்ற பயத்தில் அறுவை சிகிச்சை பக்கம் திரும்பாமல் இருந்த உலக மருத்துவர்கள் பென்சிலீன் இருக்க பயம் ஏன் ? என்று நிறைய ஆப்ரேஷன்கள் நடந்தது.
எத்தனையோ வருடங்கள் நோயுடன் போராடிய நோயாளிகள் ஆப்ரேஷன்களால் நிவாரணம் பெற்றனர்.
மனித இனத்துக்கு இந்த மாமருந்ததைக் கொடுத்தாலும் ஃபிளமிங் அதற்கான தொகையை வாங்கிக் கொள்ளவே இல்லை.
பென்சிலீனுக்கு காப்புரிமை பெற்றிருந்தால் , மிகப் பெரிய கோடீஸ்வராக திகழ்ந்திருக்கலாம். அதை அவர் விரும்பவில்லை .
கேட்டதற்கு "இயற்கை அன்னை எனக்கு இலவசமாக அளித்துக் கொடுத்ததை அவளின் மக்களுக்கு நான் விற்பனை செய்ய மாட்டேன் " என்றார்
وَاِذَا مَرِضْتُ فَهُوَ يَشْفِيْنِ ۙ
நான் நோயுற்ற தருணத்தில் அவனே என்னை குணப்படுத்துகிறான்.
(அல்குர்ஆன் : 26:80)

ஃபிளமிங்கின் உயிர் காக்கும் கண்டுபிடிப்புக்காக 1945 -ம் ஆண்டு நோபல் பரிசு வழங்கி உலகம் இவருக்கு நன்றி செலுத்தியது .
நபி அய்யூப் (அலை) செழிப்புடன் வளமான வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த போது . நோய் தொற்றி நாளுக்கு நாள் சொரிந்து, சொரிந்து உடல் முழுவதும் புண்ணாது சில சமயம் கற்களைக் கொண்டும் , இரும்பு துண்டுகளைக் கொண்டும் சொரிவார்கள் இதனாலும் உடம்பில் செப்டிக் ஆகி புண் பரவலாகி ரொம்பவும் கஷ்டப்பட்டார்கள்.
நபியவர்களின் உடலில் பன்னிரண்டாயிரம் புழுக்கள் இருந்ததை "பன்னிரெண்டாயிரத்தை எளிதில் வென்று விட முடியாது மேலும் இந்த நோயால் பதினெட்டு ஆண்டுகள் துன்புற்றனர்கள் " என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் .
பின் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் "உம்முடைய வலக் காலை மண்ணிலே மிதியும் " என்றார்கள் .அங்கு ஒரு வெந்நீர் ஊற்று தோன்றியது .அதில் குளித்தார்கள் . நோய் நீங்கப் பெற்றார்கள் அதன் பின் 40 அடி நடந்து "உமது இடது காலைக் கொண்டு மண்ணிலே மிதியும் " என்றார்கள்
اُرْكُضْ بِرِجْلِكَ‌ هٰذَا مُغْتَسَلٌ ۢ بَارِدٌ وَّشَرَابٌ
(அதற்கு நாம்) "உங்களுடைய காலை(ப் பூமியில்) தட்டுங்கள்" (என்று கூறினோம். அவர் தட்டவே ஓர் ஊற்று உதித் தோடியது. அவரை நோக்கி) "இதோ நீங்கள் குளிப்பதற்கான குளிர்ந்த நீர். (இதுவே உங்களது) பானமுமாகும்" என்று கூறினோம். (அதனால் அவருடைய நோய்கள் குணமாகி விட்டன.)
(அல்குர்ஆன் : 38:42)

அங்கு ஒரு குளிர் நீர் ஊற்று தோன்றியது அதனை வயிறு நிரம்ப அருந்தினார்கள் .நபியவர்களின் உடல் பொன்போல் மின்னியது.
சிரியாவில் உர்துன் மாநிலத்தில் நாவா என்னும் ஊருக்கு அருகில் "அய்னே அய்யூப் " என்ற பெயருடன் நீர்ச்சுனைகள் இன்றும் உள்ளது நோயாளிகள் குளித்து நோய் நீங்கப் பெறுவதாக ரௌஸதுஸ் ஸபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது
அய்யூப் நபி (அலை) அவர்களுக்கு நீர்ச் சுனைகள் மூலம் தீர்க்க முடியாத நோயக்கு நிவாரணத்தை இறைவன் கொடுத்தான் .
நவீன கால மக்களுக்கு "பென்சிலீன் " என்னும் உயிர் காக்கும் மருந்தை ஊசிப் போன உணவு துகள்களில் ஏற்படும் பூஞ்சனங்களிலிருந்து கொடுத்தான் .
அவன் நம்மை காப்பதற்கு என்று முடிவு எடுத்து விட்டால், எதனைக் கொண்டும் காப்பான் என்பதே இப் பதிவின் இழையோடி இருக்கும் கருத்து .
சிறு விபத்தின் போது எனக்கு பிட்டியில் போடப்பட்ட இன்ஜெக்ஷனில் ஒன்று பென்சிலீன் .அப்போவே நினைவு கூர்ந்தேன் அலெக்சாண்டர் ஃபிளமிங்கை .

.குர்ஆனும் நோபல் விஞ்ஞானமும் -3
(சர். ஐசக் நியூட்டன் 1643 - 1727)



ஏசு பிறந்த டிசம்பர் 25 கிருஸ்துமஸ் அன்று 1643-ல் பிறந்தார்.
1669 - அதாவது தன்னுடைய 26 வயதில் ஒளியியல் ஆய்வு மேற்கொண்டு வெற்றி பெற்றவர்
பட்டகம் (**Prism)** எனப்படும் முக்கோணத்தில் ஒளி விழும்போது ஏற்படும் விளைவுகளை அவர் கண்டறிந்தார். ஒரு பட்டகத்தின் **(prism)** ஊடே கதிரவனின் ஒளிக்கதிர் செல்லும்போது அது ஏழு வண்ணங்களாகப் பிரிவதைச் செய்முறையில் விளக்கினார். மேலும், பல வண்ணங்களைக் கொண்ட நியூடன் தகட்டைச் **(Newton's disc)** சுழற்றும்போது அது வெண்மை நிறம் கொண்டதாக மாறுவதையும் செய்து காட்டினார். வெண்ணிற ஒளி, பல நிற ஒளிகளின் சேர்க்கையென முதலில் விளக்கியவரும் இவரே.

அடுத்து பிரபஞ்சததில் எந்த ஒரு பொருளும் ஒன்றை ஒன்று கவர்ந்தது இழுக்கும் இப்படி கவரும் சக்தி **F** பொருள்களின் எடை **m1 m2**
அதாவது எடை அதிகரிக்க அதிகரிக்க கவர்ச்சி அதிகரிக்கும்
இரு பொருகளின் இடையே உள்ள தூரம் d குறைய குறைய கவர்ச்சி அதிகமாகும் இதற்கிடையே உள்ள புவி ஈர்ப்பாற்றல் G யை கணக்கிட்டால் பூமியின் எடையை கண்டுபிடித்து விடலாம் என்று கூறி அதை நிருபித்தும் காட்டினார்

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் அராபிக் மாணவர்களுக்கு "குர்ஆனும் விஞ்ஞானமும் " சொற்பொழிவு ஆற்றும் போது ."புவி ஈர்ப்பு விசையைப் பற்றி
குர்ஆன் எந்த இடத்தில் கூறுகிறது ? என்று ஒரு மாணவர் என்னிடம் கேட்டபோது , அந்த உடனே என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஒரு மாத காலத்திற்கு பிறகு அதே கல்லூரியில் சிறப்புரையாற்றும் போது "குர்ஆனும் புவி ஈர்ப்பு விசையும் "பற்றி மட்டுமே பேசினேன் .

குர்ஆனில் ,
وَالسَّمَآءَ رَفَعَهَا وَوَضَعَ الْمِيْزَانَۙ
"அவனே வானத்தை உயர்த்தினான்.மேலும் தராசை அமைத்தான் "
(அல்குர்ஆன் : 55:7) என்ற ஒரு வசனம் புவி ஈர்ப்பு விசையைப் பற்றி பேசுவதாக எனக்குப்பட்டது . ஆனால் தப்ஸீர்களில், "பூமியில் உள்ளவர்களது நன்மைக்காக கீழிலிருந்து மேலே வானை முகடாக உயர்த்தினான் .
"தராசை அமைத்தான் " என்பதற்கு நீதியை விதித்ததான். அதாவது பாத்தியக்காரருக்கு அவரவருக்குரிய பாத்தியதையை நிறுத்துக் கொடுத்திட வேண்டும் என்பது கருத்தாகும் என்பதாக த ஃப்ஸீரில் ஹமீது குறிப்பிப்பட்டுள்ளது .
தஃப்ஸீர் எழுதிய கண்ணியமானவர்கள் இந்த வசனத்தை விஞ்ஞான கண்ணோட்டத்தில் அணுகிருக்க முடியாது. அது அப்போதைக்கு அவர்களுக்கு தெரியாமல் கூட இருந்திருக்கலாம் . இருந்தாலும் அவர்கள் என்றுமே கண்ணியவான்களே. ஆனால் ,

நவீன விஞ்ஞானம் வானத்திற்கும் எடைநிறுக்கும் தராசிற்கும் மிக மிக நெருக்கமான தொடர்பு இருப்பதை நியூட்டனின் புவி ஈர்ப்பு கோட்பாடுகள் மூலம் அறிந்து கொண்டேன் .
ஒரு பொருளின் எடை எங்கே அதிகமாக இருக்கும் ? எங்கே குறைவாக இருக்கும் ? பொருளின் எடை இடத்திற்கு இடம் மாறுமா ... நீங்கள் கேட்பது புரிகிறது. ஆமாம் .. மாறும்
பூமி உருண்டையின் விட்டம் 6400 கி.மீ அதன் ஆரம் 3200 கி.மீ பூமியிலிருந்து மேலே செல்லச் செல்ல பூமியின் ஈர்ப்பு குறைகிறது. அதாவது ஒரு கிலோ கிராம் (1000 கிராம்) எடை , 6400 கி.மீ உயரத்திற்கு அதாவது பூமியின் ஆரத்தைப் போல் 2 மடங்கு (3200 X 2 = 6400 கி.மீ) உயரத்தில் எடை போட்டால் , 1000 கிராம் எடை (d= தூரம் இரு மடங்கு) 1000 / 4 = 250 கிராம்தான் இருக்கும்.
அதே 1000 கிராமை பூமியின் மேற்பரப்பில் இருந்து 9600 கிமீ உயரத்தில் (d= 3 மடங்கு = 9)
1000 / 9 = 111 கிராம்தான் இருக்கும்
அதே 1000 கிராமை பூமியின் மேற்பரப்பில் இருந்து 12800 கி.மீ உயரத்தில் (d= 4 மடங்கு = 16)

1000 / 16 = 6 2.5 கிராம்தான் இருக்கும்

பூமியிலிருந்து 36,290 கி.மீ உயரத்தில் பூமத்திய ரேகைக்கு மேலே பூமியோடு உடன் சுற்றும் பாதையில் சர்வதேச விண்வெளி மையத்தில் சுனிதா வில்லியம்ஸ் இருந்தார் அந்த இடத்தில் 1000 கிராம் (1 கிலோ)யை எடைப் போட்டால் 36,290 என்பது பூமியின் ஆரத்தைப் போல் 11 மடங்கு
(11 ன் மடங்கு 121)
1000 / 121 = 8 கிராம்தான் இருக்கும்.
நியூட்டனின் புவி ஈர்ப்பு விசை கோட்பாட்டின் மூலம் மேற்கண்ட குர்ஆன் வசனத்திற்கு என்னால் விளக்கம் சொல்ல முடிந்தது .


நோபல் பரிசு 1895 ஆம் வருஷத்தில் இருந்துதான் வழங்கப்பட்டது. நியூட்டனின் ஆயுட்காலம் 1727-ல் முடிவடைகிறது . நோபல் கொடுப்பதாக இருந்தால் அவரது கண்டுபிடிப்புகள் அத்தனைக்கும் பல நோபல் பரிசுகளை வென்றிருப்பார் .
தம் சாதனையைப்பற்றி நியூட்டன் பின்வருமாறு கூறுகிறார்.
“ நான் இவ்வுலகிற்கு எவ்வாறிருப்பினும் என்னில் பொருத்தமட்டில் நானொரு கடற்கரையில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவன்,மென்மையான கூழாங்கல்லையும் அழகிய சங்கையும் கண்டுள்ளேன்,ஆனால் விரிந்து பரந்துள்ள பெருங்கடலோ என் கண்முன்னே காணப்படாமல் உள்ளது."
"சர் ஐசக் நியூட்டன்" நோய்வாய்ப்பட்டு 1727 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதி இயற்கை எய்தினார். லண்டனில் புகழ்பெற்ற **"Westminster Abbey"-**யில் அடக்கம் செய்யப்பட்டார்.

மனித குலத்தின் மிகச் சிறந்த விலை மதிப்பில்லா மாணிக்கம் **(The Best and Invaluable Gem of Mankind)** என்று அவர் கல்லறையில் பொறிக்கப்பட்டது.
நியூட்டனுக்கு பலர் அஞ்சலி செலுத்தினாலும் போப் எழுதிய அஞ்சலி மிக ஆழமானது. இந்த வாசகம் நியூட்டன் பிறந்த அறையில் இன்றும் பொறிக்கப்பட்டிருக்கிறது!
“ "இயற்கையும் அதன் விதிகளும் இருளில் கிடந்தன, கடவுள்... நியூட்டன் பிறக்கட்டும் என்றார் ஒளி பிறந்தது"

Rahmath Rajakumaran
" Integral calculus " என்ற முழுமைக் கலன கணிதத்தை கண்டுபிடித்தவரும் நியூட்டன்தான்
என்னுடைய BE - முதல் வருடத்தில் இந்த கணிதப் பாடத் தேர்வில் இரு முறை தவறி பின்னே வெற்றி பெற்றேன் . கணிதப் பேராசிரியர்கள் காளிஈஸ்வரன் ,
பெர்னாட்ஸ் இவர்களை மறக்க முடியாது .
நியூட்டன் தன்னுடைய 23 ஆம் வயதில் இந்த கணிதத்தை கண்டுபிடித்தார் என்றால் எவ்வளவு விந்தையாக வியப்பாகவும் இன்னும் இருக்கிறது எனக்கு.
நவீன அறிவியலின் நிறைய கண்டுப்பிடிப்பிற்கு இந்த கணிதக் கோட்பாடே மூலாதாரமாக இருந்திருக்கிறது . எனவே நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு நியூட்டன் ஆதாரமாக எப்போதுமே இருந்து கொண்டே இருக்கிறார்
Rahmath Rajakumaran
மைக்கேல் ஹெச். ஹார்ட் எழுதிய "புதிய வரலாறு படைத்தோரின் வரிசை முறை 100-ல் ... நபி(ஸல்) அவர்களை முதலிடமாகவும் இரண்டாவது இடம் நியூட்டனுக்கும் கொடுக்கப்பட்டது . சற்று சிந்திக்கவும்
اِنَّ اللّٰهَ يُمْسِكُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ اَنْ تَزُوْلَا وَلَٮِٕنْ زَالَـتَاۤ اِنْ اَمْسَكَهُمَا مِنْ اَحَدٍ مِّنْ بَعْدِهٖ اِنَّهٗ كَانَ حَلِيْمًا غَفُوْرًا
வானங்களும் பூமியும் (தத்தம் எல்லையிலிருந்து) விலகிவிடாதபடி தடுத்துக் கொண்டிருப்பவன் நிச்சயமாக அல்லாஹ்தான். (தம் எல்லையில் இருந்து) அவ்விரண்டும் சாய முற்பட்டபோதிலும் அவை சாயாதபடி தடுக்கக்கூடியவன் அல்லாஹ்வைத் தவிர வேறொருவனுமில்லை. நிச்சயமாக அவன் பொறுமையுடையவனும் மன்னிப்புடையவனாகவும் இருக்கின்றான்.
(அல்குர்ஆன் : 35:41)

Rahmath Rajakumaran
சரிதான் இது (35 : 41) இரு பொருள்களுக்கு இடையே உள்ள ஈர்ப்பு விசை இருக்கும் என்ற நியூட்டனின் கோட்பாட்டை குறிப்பதாக இருந்தாலும் நான் குறிப்பிடுவது
புவி ஈர்ப்பு விசை பூமியின் மேலே போகப் போக குறைகிறது என்பதற்குரிய வசனமான
(குர்ஆன் 55:07)
மேலும் தராசு என்ற ஒற்றை சொற்றொடர் புவி ஈர்ப்பு விசையையும் அது உயரம் செல்ல செல்ல குறையும் என்பதையும் குறிக்கும் ஒரு குறியீடு சொல்தான் "தராசு" இப்படி சொல்லும் தகுதி அவனைத் தவிர யாரால் முடியும் ?

குர்ஆனும், நோபல் விஞ்ஞானமும் -4



மேரி க்யூரி (நவம்பர் 7, 1867 – ஜூலை 4, 1934)

புகழ்பெற்ற போலந்து மற்றும் பிரஞ்சுவேதியியல் அறிஞர் ஆவார். இவர் போலந்தில் வார்சா எனும் இடத்தில் 1867இல் பிறந்தார். பின்னர் பிரான்சில் வசித்தார். இவர் இயற்பியல் மற்றும் வேதியியலுக்காக நோபல் பரிசை முறையே 1903 ,1911 ஆம் ஆண்டுகளில் பெற்றார். (இரண்டு நோபல் பரிசுகளைப் பெற்ற முதல் நபர்)
ரேடியம், பொலோனியம் போன்ற கதிர்வீச்சு மூலகங்களைக் கண்டு பிடித்தார்.
பிட்ச்பிளன்டி என்னும் உலோகத்தை சுத்தீகரித்துச் சோதித்ததில், யுரேனியத்தை விட 400 மடங்கு அதிகக் கதிர்வீசும் முதல் புதிய மூலகம் **[Element**] ஒன்றைக் கண்டு பிடித்தார்கள். அதற்கு மேரி தன் பிறந்த நாட்டு நினைவாக, 'பொலோனியம் **'** **[Polonium]** என்று பெயரிட்டார்.

இது நச்சுத்தன்மையுள்ள ஒரு தனிமம் ஆகும். யுரேனியத்தின் தாதுவில் பொலோனியம் காணப்படுகிறது. விண் ஆய்விகளில் வெப்பமூட்டியாக, நிலைமின் எதிர்ப்புப் பொருளாக, நியூட்ரான் மற்றும் ஆல்பா துகள்களுக்கு மூலமாக பொலோனியம் பயன்படுகிறது.
அத்துடன் அவரது ஆராய்ச்சிப் பணி முடியவில்லை. பொலோனியத்தைப் பிரித்தெடுத்த பின்னும் உக்கிரக் கதிர்வீச்சு, முன்னை விட மிக்க அளவில், அதிசயமாக மிஞ்சிய பிட்ச்பிளன்டியில் வந்து கொண்டிருந்தது! அந்த உலோகத்தின் கதிர் எழுச்சி யுரேனிய இயக்கத்தை விட 900 மடங்கு அதிகமாக இருந்தது. 1898 இல் இம்மியளவு [மில்லியனில் ஓர் பங்கு] உள்ள அந்த அபூர்வ ஒளி உலோகத்தைப் பிரித்து அதற்கு ரேடியம் என்று மேரி பெயரிட்டார்.

ரேடியத்தை கண்டுபிடிப்பதற்குரிய நிரூபணத்தை கட்டமைக்க இரவு - பகலா மேரி ரொம்பவும் கஷ்டப்பட்ட போது தூக்கத்தில் நிரூபணத்தின் சூத்திரம் எழுதி காண்பிக்கபட்டதாம் அந்த தூக்க கிறக்கத்திலேயே முகம் பார்க்கும் கண்ணாடியில் லிப்ஸ்டிக்கால் அதை எழுதி வைத்து விட்டு மீண்டும் உறங்கி விட்டார் .விடிந்ததும் அதைப் பார்க்க அது ரேடியத்தை கண்டு பிடிக்கும் சமன்பாடாக இருந்தது


அவனுடைய அனுமதியின்றி அவனிடத்தில் (எவருக்காகிலும்) யார்தான் பரிந்து பேசக்கூடும்? அவர்களுக்கு முன் இருப்பவற்றையும் அவர்களுக்குப் பின் இருப்பவற்றையும் அவன் நன்கறிவான். அவனுடைய விருப்பமின்றி அவனுக்குத் தெரிந்த வற்றிலிருந்து யாதொன்றையும் (மற்றெவரும் தங்கள் அறிவால்) அறிந்துகொள்ள முடியாது.
(அல்குர்ஆன் : 2:255)

முதலாம் உலகப்போரின்போது மேரி கியூரி கண்டுபிடித்த ரேடியம், கதிர்வீச்சு ஆகியவை காயம்பட்ட போர்வீரர்களைக் காப்பாற்றப் பயன்பட்டன. போர்முனையில் அவற்றைப் பயன்படுத்தி நடமாடும் மருத்துவ மையங்கள் அமைக்கப்பட்டன

ரேடியத்திற்கு காப்புரிமைக்காக விண்ணப்பித்தால் நிறைய பணம் கிடைக்கும் என்று நண்பர்கள் வற்புறுத்தியும் அதனைச் செய்ய மறுத்து விட்டனர் அந்தத் தம்பதியினர். அதற்கு என்ன காரணம் தெரியுமா? கதிரியக்கம் பற்றி உலகின் எல்லா விஞ்ஞானிகளும் இன்னும் அதிகமாக ஆராய்ந்து புதிய பலன்களைக் கண்டுபிடிக்க வேண்டும் அதனால் மனுகுலம் நன்மை பெற வேண்டும் என்ற ஒரே காரணம்தான். எதற்குமே உரிமை கொண்டாட விரும்பும் இந்த சுயநல உலகில் இந்த பிரபஞ்சமே நன்மை பெற வேண்டும் என்று சிந்தித்த அந்த அதிசய தம்பதியரை வரலாறு மட்டுமல்ல நாமும் மனதார பாராட்ட வேண்டும்.
ரேடியத்தின் உண்மையான விளைவைக் கண்டறிய பியரி கியூரி தன் உடலின் மேல் அதனைப் பயன்படுத்திப் பார்த்தார். முதலில் எரிச்சல் உண்டானது. பின்னர் புண் ஏற்பட்டது. அதன் பிறகு உடலில் ஏற்படும் கட்டிகளுக்கு சிகிச்சை அளிக்க ரேடியம் பயன்படுத்தப்பட்டது. அதனை “கியூரி தெரபி” என்று அழைத்தனர்.
மேரி கியூரியின் கண்டுபிடிப்புகளால்தான் புற்று நோய்க்கு சிகிச்சை பிறந்தது. ஆனால் எந்த கண்டுபிடிப்பு பல புற்று நோயாளிகளின் வாழ்க்கையை மீட்டுத்தர உதவியதோ அதே கண்டுபிடிப்பு அவரது வாழ்க்கைக்கே உலை வைத்ததுதான்

மிகப் பெரிய அறிவியல் சோகங்களுள் ஒன்று. பல ஆண்டுகள் ரேடியத்தோடு ஆராய்ச்சி செய்ததால் அவருக்கு கடும் கதிரியக்க தாக்கம் ஏற்பட்டது. மனுகுல மேன்மைக்காக பாடுபட்ட அந்த உன்னத விஞ்ஞானியின் உடலை **"லுக்கிமீயா"** என்ற புற்றுநோய் அரித்தது. கிட்டதட்ட தனது விரல்களையும், கண் பார்வையையும் கதிரியக்கத்திற்கு காவு கொடுத்த நிலையில் 1934 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் தேதி தனது 67 ஆவது அகவையில் மரணத்தைத் தழுவினார் மேரி கியூரி அம்மையார்.

குர்ஆனும் , நோபல் விஞ்ஞானம்-5 9 FEB 2018



ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்
(Albert Einstein, மார்ச் 14, 1879 – ஏப்ரல் 18, 1955)

சிறப்பு சார்பியல் தத்துவம் (1905)

பொது சார்பியல் தத்துவம் (1915) இந்த இரண்டையும் உலகுக்கு அளித்தவர்.

முதல்ல பொது சார்பியல் தத்துவத்தை சொல்றேன்.
எங்க வீட்டிலிருந்து மார்க்கெட் போகும் வழியில் எனக்கு இடது புறத்தில் உஸ்மானிய்யா மதரஸா உள்ளது. சரிதான்.
மார்க்கெட்டிலிருந்து எங்க வீட்டிற்க்கு வரும் வழியில் எனக்கு வலது புறத்தில் உஸ்மானிய்யா மதரஸா உள்ளது. சரிதான்.
இதில் எது உண்மை ? இரண்டுமே உண்மைதான். காரணம் திசையை சார்ந்து பேசும் போது இந்த முரண் ஏற்படுகிறது .
இந்த பூமி உருண்டையில் இந்தியாவில் நாம் நேராக நிற்கும் போது , அமெரிக்கர் கள் தலைகீழாகவா நடக்கிறார்கள் .அங்குள்ள அட்லாண்டிக் கடல் தலை குப்புறவா கவிழ்ந்து விட்டது ? இல்லையே இது எப்படி ?
விண்வெளியில் மேல்-கீழ் என்ற பாகுபாடு இல்லைவே இல்லை.

உள்ளபடியே " செங்குத்து **" (Vertical)** சித்தாந்தம் அண்ட வெளிக்கு அறவே பொருந்தாது. அங்கே ஒவ்வொரு கோளகத்தில் ஒவ்வொரு எதிரெதிர் விட்டப்புள்ளிகளும் ஒன்றுக்கொன்று செங்குத்தானவை.
பூமியில் நம் தலை உச்சிக்கு நேர்மேலே தெரியும் சந்திரன் .சந்திரனில் நீங்கள் நின்று அண்ணாந்து நோக்கினால்தான் பூமி தெரியும்.
பூமியும் சந்திரனும் மற்ற கோள்களும் மேசை மாதிரியோ அல்லது தோசை மாதிரியோ தட்டையான பரப்பு உடையவை அல்ல. மேல் பாகம் , கீழ் பாகம் என்ற பாகு பேதம் அவற்றுக்குக் கிடையவே கிடையாது

رَبُّ الْمَشْرِقَيْنِ وَ رَبُّ الْمَغْرِبَيْنِ
(சூரியன், சந்திரன் இரண்டும்) உதிக்கும் இரு திசைகளுக்கும் அவனே சொந்தக்காரன். மேலும், (அவைகள்) மறையும் இரு திசைகளுக்கும் அவனே சொந்தக்காரன்.
(அல்குர்ஆன்: 55:17)
சிறப்பு சார்பியல் தத்துவம் சொல்றேன்.
அணு சின்னஞ் சிறிய சூரிய மண்டலமாக காட்சியளித்தது விஞ்ஞானிகளுக்கு . வானம் பூமி எல்லாமே ஒன்றாக இருந்த போது பெரு வெடிப்பு (Big_Bang) ஏற்பட்டு வானம் என்றும் பூமி என்றும் பிரிந்தது அப்போது மகா மகா வெடிப்பின் சக்தியை அந்தந்த துகள்களில் அப்போதே இயற்கை சேமித்து வைத்தது..
" (ஆரம்பத்தில்) வானம் (என்றும்) பூமி (என்றும் தனித்தனியாக) இல்லாமல் இருந்ததை நாமே பிரித்தமைத்தமைத்தோம்."
(அல்குர்ஆன்: 21:30)

சூரிய மண்டலத்தில் நடு மையமாக திகழும் சூரியனை தகர்த்தால் எத்தனை மகா சகதி அளப்பரிக்குமோ, அத்தனை சக்தியும் சூரியனாக திகழும் அந்த அணுவுள் ஏற்கனவே சேமித்த சக்தி கணக்கற்ற அளவில் ஆர்ப்பரிக்கும் அல்லவா ?
சூரியன் பிறக்கும்போதே கூடவே பிறந்தது கனமானத் துகள்களான யூரேனியம் . இன்டீரியம் போன்றவை
பொருளும் சக்தியும் பின்னிப் பிணைத்தவைகள் . பொருளை அழித்தால் புதிய சக்தி தோன்றும் . மொத்த சக்தியும் ஒன்றாக பரிணமிக்கும் போது பொருள் திரளலாம். இதன் அடிப்படையில் உருவானதுதான்

E = mc 2

E = Energy (சக்தி) ; M = Mass (பொருளின் எடை) ; C = ஒளியின் வேகம்

பொருளை அழித்து சக்தியாக மாறும் போது பெறப்படும் சக்தியின் வேகம் ஒளியின் வேகமான ஒரு விநாடிக்கு 3 லட்சம் கி.மீ. எனவே பொருள் அழியும் போதெல்லாம் இந்த மாபெரும் வேகம் சக்திக்கு துணை நின்று அதை இயக்குகிறது .
E = mc 2 அதாவது அணுவின் உள்ளே பூட்டி வைத்திருக்கும் சக்தியின் அளவு கிட்டத்தட்ட நம்பவே முடியாதபடி அவ்வளவு அதிகமானது. அணுவின் எடையைப் போல் ஒன்பது கோடி மடங்காக உள்ளது .
இவர் புகழ்பெற்ற சார்புக் கோட்பாட்டை முன்வைத்ததுடன், குவாண்டம் எந்திரவியல், புள்ளியியற் எந்திரவியல் மற்றும் அண்டவியல் ஆகிய துறைகளிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார்.
ஒளி மின் விளைவைக் கண்டுபிடித்து விளக்கியமைக்காகவும், கோட்பாட்டு இயற்பியலில் அவர் செய்த சேவைக்காகவும், 1921ல் இவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

Rahmath Rajakumaran

பிரபஞ்சத்தின் ரகசியமும், இயற்பியல் சிக்கல்களும்
நம் பிரபஞ்சம் உருவாகி கிட்டத்தட்ட 13.8 பில்லியன் வருடங்கள் ஆகின்றன என்று தற்போது விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இந்த நம்பர் எங்கிருந்து வந்து என்றால், எல்லாம் ஐன்ஸ்டின் வித்திட்டது தான், அவரது பொதுச் சார்புக் கோட்பாட்டில் இருந்து செயப்பட்ட கணிப்புக்களே இந்த 13.8 பில்லியன் வருடங்கள் என்ற வரையரைக்குக் காரணம்.
அப்படியென்றால் அந்த 13.8 பில்லியன் வருடங்களுக்கு முன் என்ன இருந்தது? இந்தப் பிரபஞ்சம் அப்போது எங்கே இருந்தது என்று கேள்விகள் எழும்பலாம் தானே? நிச்சயம். நீங்கள் பெருவெடிப்பு (Big Bang) என்று கேள்விப்பட்டிருக்கலாம். அதாவது இந்த பிரபஞ்சமானது 13.8 பில்லியன் வருடங்களுக்கு முன்பு ஒரு மிகச்சிறிய புள்ளியளவு இருந்ததாக இயற்பியலாளர்கள் கருதுகின்றனர்,


Rahmath Rajakumaran

அப்போது தான் அந்த பெருவெடிப்பு நிகழ்ந்தது, அது ஏன் நிகழ்ந்தது, எப்படி நிகழ்ந்தது என்று எல்லாம் நமக்கு தெரியாது, அதை நாம் அறிந்த இயற்பியல் விதிகளும் சொல்ல முடியாமல் தவிக்கின்றன. காரணம் நமது இயற்பியல் விதிகள் எல்லாம் இந்தப் பிரபஞ்சம் உருவாகிய பின் அதனுள் இருக்கும் இயற்க்கை சமாச்சாரங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டன, அவற்றால் தொடக்கத்தின் தொடக்கத்திற்கு முகவுரை எழுத முடியவில்லை. அப்படி எழுத எத்தனித்தாலும், நாம் அறிந்த விதிகள் அந்த தொடக்கத்தில் உடைந்துவிடுகின்றன.
குறிப்பாக இந்த பிரபஞ்சத்தைப் பற்றி கூறும் இயற்பியல் கோட்பாடு, ஐன்ஸ்டினின் பொதுச் சார்புக் கோட்பாடுதான். இதனால் இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் மிகப்பெரிய கட்டமைப்புகளையும் அதன் பண்புகளையும் விபரிக்க முடிகிறது. ஆனால் இந்த பொ.சா.கோ வினால் ஒருமைப்புள்ளியை விளக்க முடியவில்லை. ஒருமைப்புள்ளியைப் பற்றி சமன்பாடுகள் அமைக்கும் போது அங்கு முடிவிலிகள் தோன்றுவதினால், அந்த சமன்பாடுகளை தீர்க்க முடியாமல் போகிறது.
இதற்கும் காரணம் இல்லாமல் இல்லை, ஐன்ஸ்டீனின் பொ.சா.கோ ஈர்ப்புவிசை நீண்ட தூரத்தில், அதாவது ஒளியாண்டுகள் தூரத்தில், எப்படி செல்வாக்கு செலுத்துகிறது என்று மிகத் தெளிவாக விளக்குகிற போதும், சிறிய அளவுகளில் அதாவது அணுக்களுக்கிடயிலான தூரத்தில் இவை எப்படி செயல்படும் என்று அதனால் குறிப்பிட முடியவில்லை.
அணுக்களுகிடயிலான தொடர்பை, அதன் நடத்தைகளைப் பற்றி தெளிவாக விளக்கும் இயற்பியல், குவாண்டம் இயற்பியல் எனப்படுகிறது. இன்று இயற்பியலில் இருக்கும் மிகப்பெரிய சிக்கலே, இந்த குவாண்டம் இயற்பியலை, பொ.சா.கோ வுடன் பொருத்தமுடியாமல் இருப்பதே. இந்த இரண்டு இயற்பியல் விதிகளும் இரண்டு துருவங்களாக இருக்கின்றன

Rahmath Rajakumaran

ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் தத்துவங்கள்
மற்றவர்களைவிட திறமையாக விளையாட வேண்டுமானால் முதலில் விளையாட்டின் விதிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்.
வெற்றிபெற்ற மனிதனாக ஆவதற்கு முயற்சி செய்யாதீர்கள்! மாறாக மதிப்புமிக்க மனிதனாக மாற முயலுங்கள்.
அமைதி என்பது ஆழமான புரிதலினால் ஏற்படுவது, அதை ஒருபோதும் அடக்குமுறையால் ஏற்படுத்திவிட முடியாது.
மற்றவர்களுக்காக வாழும் வாழ்க்கையே, ஒரு பயனுள்ள வாழ்க்கையாகிறது.
ஒரு விஷயம் ஆழமாக பார்க்கப்படுவதால் மட்டுமே அதனைப்பற்றிய முழுமையான புரிதல் உண்டாகிறது.
புத்தி கூர்மையின் உண்மையான அறிகுறி அறிவு சம்பந்தப்பட்டதல்ல, அது கற்பனைத்திறனுடன் தொடர்புடையது.
ஒருவரின் அனுபவமே அவரின் ஒட்டுமொத்த அறிவாற்றலின் ஒரே ஆதாரமாக கருதப்படுகிறது.
ஒரு பிரச்சினை எந்த வழியில் ஏற்பட்டதோ, அதே வழியில் அதற்கான தீர்வைப்பற்றி யோசிக்கும்போது நம்மால் அதை தீர்க்கமுடியாது.
முட்டாள்களுக்கும் மேதைகளுக்கும் உள்ள வித்தியாசம், மேதைகள் எப்போதும் அவர்களின் எல்லை என்னவென்று அறிந்தவர்கள்.
தவறுகளே செய்யாத ஒருவன் இருக்கிறானென்றால், அவன் புதிதாக எதையுமே முயற்சிக்கவில்லை என்று அர்த்தம்.
நமது அணுகுமுறையில் உள்ள பலவீனமே, நமது கேரக்டரின் பலவீனமாக மாற்றம் பெறுகிறது.

குர்ஆனும் , நோபல் விஞ்ஞானமும் -6



(ஒளியின் வேகம்)

அறிவியல் களத்தில் நோபல் பரிசை வென்ற முதல் அமெரிக்க விஞ்ஞானியான ஆல்பர்ட் ஆபிரகாம் மைக்கேல்சன் () (19 டிச 1852 - 9 மே 1931)

போலந்து நாட்டின் ஸ்டெரல்னோ என்ற ஊரில் யூதக் குடும்பத்தில் (**1852)** பிறந்தவர். இவர் பிறந்து 2 ஆண்டுகளுக்குப் பிறகு, குடும்பம் அமெரிக்காவில் குடியேறியது.

அமெரிக்க குடியுரிமை பெற்றார். இயற்பியல் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டார். ஒளியின் வேகத்தைக் கண்டறியும் ஆய்வுகளில் ஈடுபடத் தொடங்கினார். 'குறுக்கீட்டுமானி' (Interferometer) என்ற எளிய கருவியை வடிவமைத்து, ஒளியின் வேகத்தை துல்லியமாகக் கணக்கிட்டார்.

* ஒளியின் வேகம் அடிப்படை மாறிலி என்பதை ஆய்வு மூலம் நிறுவினார். குறுக்கீட்டுமானியைக் கொண்டு, 'ஆல்பா ஆரியன்ஸ்' என்ற விண்மீன் விட்டத்தை அளந்து கூறினார்.

பிரபஞ்சம் முழுவதும் திரவ, வாயு நிலைக்கு இடைப்பட்ட 'ஈதர்' என்ற ஊடகம் பரவியுள்ளதாகவும், அதன் வழியாகவே ஒளி ஊடுருவிச் செல்வதாகவும் அதுவரை அறிவியலாளர்கள் கருதியது தவறு என்பதை மார்லி என்ற விஞ்ஞானியோடு இணைந்து நிரூபித்தார். இது 'மைக்கேல்சன் - மார்லி ஆய்வு' என்று புகழ்பெற்றது.

அமெரிக்க இயற்பியல் கழகத் தலைவராக 1900-ல் நியமிக்கப்பட் டார். ஒளியியல், நிறமாலையியல், வானிலை குறித்த இவரது ஆய்வுகளுக்காக 1907-ல் இவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு கிடைத்தது. இதன்மூலம் அறிவியல் களத்தில் நோபல் பரிசு பெற்ற முதல் அமெரிக்கர் என்ற பெருமை பெற்றார்.

இந்தப் பிரபஞ்சத்தில் பல விசித்திரமான விடயங்கள் இருப்பினும், அதில் மிக முக்கியமான விசித்திரமான ஒரு வஸ்து – ஒளி. அப்படி என்ன விசித்திரம்? காலைல வருது, சாயங்காலம் போயிடுது என்று நமக்கு சாதாரணமாக தோன்றும் இந்த ஒளி, இன்னும் இயற்பியலால் “பூரணமாக” விளங்கிக்கொள்ளபடாத ஒன்று!

மண்ணில் வாழ்வதற்கு ஏற்றவாறு மனிதனை மண்ணிலிருந்தே படைத்தான் இறைவன் . வானவர்களை ஒளியிலிருந்து படைத்தான் , காரணம் வானம் ஒளியின் கோட்டை வானில் வாழ்வதற்கேற்றவாறு வானவர்களுக்கு பறக்கும் இறக்கைகளைப் படைத்தான்.

ஒளியினால் படைக்கப்பட்ட வானவர்கள் விஞ்ஞானக் கூற்றின் படி ஒரு விநாடிக்கு 3 லட்சம் கி.மீ வேகத்தில் பறக்கமுடியும் .அதிலும் கூடி மிக மிக வேகத்தில் பறப்பதற்கு ஏற்றவாறு அவர்களின் இறக்கைகளின் எண்ணிக்கையிலும் கூடுதல் உண்டு என்பதாக குர்ஆனில் ...

اَ لْحَمْدُ لِلّٰهِ فَاطِرِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ جَاعِلِ الْمَلٰٓئِكَةِ رُسُلًا اُولِىْٓ اَجْنِحَةٍ مَّثْنٰى وَثُلٰثَ وَرُبٰعَ يَزِيْدُ فِى الْخَلْقِ مَا يَشَآءُ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! வானங்களையும் பூமியையும் அவனே படைத்தான். மலக்குகளைத் தன்னுடைய தூதைக் கொண்டு போகிறவர்களாகவும் ஆக்கினான். அவர்கள் இரண்டிரண்டு, மும்மூன்று, நான்கு நான்கு இறக்கைகள் உடையவர்களாக இருக்கின்றனர். அவன் விரும்பியதைத் தன் படைப்பில் பின்னும் அதிகரிப்பான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றலுடையவன்.

(அல்குர்ஆன் : 35:1)

வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்களுக்கு 600 இறக்கைகள் உண்டு என்பதாக கிதாபுகளில் காணக் கிடைக்கிறது .

ஒரு பொருள் ஒளியின் வேகத்தை அடையும் போது அதனது காலம் (நேரம்) நின்றுவிடும். அனால் ஒளியைத் தவிர வேறு திணிவுள்ள எந்தப்பொருளாலும் ஒளியின் வேகத்தை அடையமுடியாது. இதற்கும் விளக்கத்தை ஐன்ஸ்டீனின் பொதுச் சார்புக்கோட்பாடே தருகிறது. அதையும் பார்ப்போம்.

பொதுச் சார்புக் கோட்பாடு நமக்கு என்ன சொல்கிறது என்றால், ஒரு பொருளின் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க, அதன் திணிவும் அதிகரிக்கும் அதேபோல அதன் நேரம் துடிக்கும் வேகமும் குறையும். ஒரு பொருள் ஒளியின் வேகத்தை அடைய, அதன் திணிவு முடிவிலியாகவும் அதனது நேரத்தின் துடிப்பு முற்றாகவும் நின்றுவிடும். இதிலிருந்துதான் இயற்பியலின் மிகப்பிரசித்தி பெற்ற சமன்பாடான E=mc2 என்ற ஐன்ஸ்டீனின் சமன்பாடு
ஐன்ஸ்டீன் இதற்கு ஒரு மிகப்புதிசாலித்தனமான ஒரு கருத்தை முன்வைத்தார் – அசையும் பொருட்கள் ஓடும் நேரத்தின் வேகத்தை குறைகிறது! நேரம் என்பது ஒரு மாறிலி அல்ல, மாறாக அது ஒரு நீரோடையை போன்றது, அது வளைந்து, நெளிந்து, வேகமாக, மெதுவாக செல்லக்கூடியது – இதுவே ஐன்ஸ்டீனின் சார்புக்கோட்பாட்டுக்கு வித்திட்டது.

வேகத்துக்கும் நேரத்துக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம், சொல்கிறேன்.....இப்படி நினைத்துக்கொள்ளுங்கள். அதாவது ஒரு ராக்கெட், ஒரு செக்கண்டிற்கு **299,792.458** கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கும் பொது (ஒரு பேச்சுக்கு), ராக்கெட்டில் உள்ளவர்களது நேரம் துடிப்பது நின்றுவிடும். அதாவது நேரம் ஓடாது! அப்படியென்றால், ராக்கெட்டில் இருபவர்கள் எல்லாம் என்ன சிலை போல் ஆகிவிடுவார்களா? இல்லை!
இங்கு மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது, நேரம் என்பது ஒரு மாறிலி அல்ல, ஆகவே பூமியில் இருந்து பார்பவர்களுக்குதான் ராக்கெட்டில் நேரம் ஓடாதது போல இருக்கும், ராக்கெட்டில் இருப்பவர்களுக்கு அவர்களது நேரம் சரியாக ஓடிக்கொண்டே இருக்கும். நேரம், வேகம் எல்லாம் அதை அளப்பவர்களுக்கு சார்பானது, இப்போது புரிந்திருக்கும் ஏன் ஐன்ஸ்டீன் தனது கோட்பாட்டுக்கு, சார்புக்கோட்பாடு என பெயர் வைத்தார் என்று.
ஆக இந்த ராக்கெட்டில் (ராக்கெட் ஒளியின் வேகத்தில் 99% வேகத்தில் செல்கிறது என்று வைத்துக்கொள்வோம்) ஒருவர், ஒரு வருடம் பயணித்துவிட்டு பூமிக்கு வரும் போது (ராக்
கெட்டில் இருப்பவரின் கடிகாரத்தின்படி ஒரு வருடம்). இங்கு பூமியில் பல நூறு வருடங்கள் சென்றிருக்கும்!
அடுத்து , ஒளியினாலே படைக்கப்பட்ட வானவர்கள் ஒளியின் வேகத்திற்கு மேல் பயணிப்பவர்களான வானவர்களின் வயது காலம் எவ்வாறு இருக்கும்....? என்று நீங்கள் கேட்பது புரிகிறது . சொல்றேன் .
ஒரு தடவை ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு வஹி கொண்டு அவர்களின் வீட்டு வாசலுக்கு வந்த போது, நபிகளாரின் மகள் பாத்திமா (ரலி) அவர்கள் , ஜிப்ரயீல் (அலை) அவர்களைப் பார்தது, " அஸ்ஸலாமு அலைக்கும் . வாருங்கள் என் சிறிய தகப்பனரே.... என்று அழைக்க,
ஜிப்ரயீல் (அலை) பதில் சொல்லாமல் இருக்கிறார்கள். உடனே பாத்திமா(ரலி) அவர்கள் " ஸலாத்திறகு பதில் சொல்வது வாஜிபா இருக்க , நீங்கள் ஏன் பதில் ஸலாம் சொல்லவில்லை ? என்று கேட்க , உடனே பதில் ஸலாம் சொல்லிவிட்டு , " நான் உமது தகப்பனார் அவர்களை விட வயதால் நான் மூத்தவராயிருக்க , நீங்கள் என்னை சிறிய தகப்பனரே என்று அழைத்ததால் உங்களுக்கு பதில் ஸலாம் சொல்லாமல் நின்றேன் " என்றார்கள்
இவ்விஷயத்தை பாத்திமா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் தெரிவிக்க, அது கேட்டு, நபி (ஸல்) அவர்கள் .ஜிப்ரயீலிடம் " தாங்கள் என்னை விட வயதில்
முதிர்ந்தவாரன்பதற்கு என்ன அதிசயத்தைத் தெரிந்திருக்கிறீர் ?

" வடபுறத்தில் ஓர் நட்சத்திரம் உதயமாகி 70,000 வருஷம் மறையாமலிருந்து, பின்னர் 70 000 வருஷம் மறைந்து போகும். இவ்விதம் 70,000 தடவை கண்டு இருக்கிறேன் . " என்றார்கள்
அது கேட்டு நபி (ஸல்) அவர்கள், "அந்த நடசத்திரத்தை கண்டால் , இப்போது உம்மால் அடையாளம் காட்ட முடியுமா ?" என்று சொல்லிக் கொண்டே, தங்கள் தலைப்பாகையைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு தன் தலையை காண்பித்தார்கள்.

அந்த முபாரக்கான அறுஷாகிய தலையின் உச்சந் தலையில் அந்த நட்சத்திரம் இலங்கிக் கொண்டிருந்தது.
ஆதாரம் : இரத்தின மஹ்ம்மது காரண சரித்திரம் பக்கம் 13 - 15 அச்சு : 1946
ஒளியினால் படைக்கப்பட்ட வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்களின் வயதுதான் என்ன ?
ஒளியின் சொரூபமான நபி (ஸல்) அவர்களின் வயதுதான் என்ன ?
ஒளியைப் பற்றி விஞ்ஞானிகளால் இன்னும் " பூர்ணமாக " விளங்கிக் கொள்ள முடியவில்லை .

குர்ஆனும் , நோபல் விஞ்ஞானமும்-7



செல்கள் செயல்பாடு பற்றி ஆராய்ந்த 3 பேருக்கு 2013ஆம் ஆண்டுக்கான மருத்துவ நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது
மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு ஸ்வீடனின் ஸ்டாக்ஹோம் நகரில் அறிவிக்கப்பட்டது.
அமெரிக்க விஞ்ஞானிகள் ஜேம்ஸ் ரோத்மேன் **(James Rothman)(**யேல் பல்கலைக்கழகம்),
ராண்டி ஷீக்மேன் **(Randy scheman)** (கலிபோர்னியா பல்கலைக்கழகம்),
ஜெர்மன் விஞ்ஞானி தாமஸ் சுடோப் **(Thamas C. Sudhof)** (ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம்) ஆகியோர் 2017 ஆம் ஆண்டு மருத்துவம் மற்றும் உடற்கூறுவியலுக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
உடலில் உள்ள செல்களின் செயல்பாடுகள், மூலக்கூறுகளின் விதிமுறைகளை ஆகியவற்றை கண்டறிந்ததற்காக இவர்களுக்கு இந்த பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மூவரும் தனித்தனியாக தங்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.
நமது உடலில் உள்ள ஒவ்வொரு செல்லும் உயிர்காக்கும் புரோட்டீன்கள் மற்றும் ஏராளமான மூலக்கூறுகளை உற்பத்தி செய்து சரியான நேரத்தில், சரியான இடத்துக்கு சிறு சிறு பகுதிகளாக கடத்துகிறது. உதாரணத்துக்கு இன்சூலின் உற்பத்தி செய்யப்பட்டு ரத்தத்தில் கலக்கப்படுகிறது. அதேபோல் நியூரோ டிரான்ஸ்மிட்டர் என்ற ரசாயண சிக்னல்கள் ஒரு நரம்பு செல்லில் இருந்து மற்றொன்றுக்கு அனுப்பப்படுகிறது.
இந்த போக்குவரத்தில் தடங்கல் ஏற்படும்போதுதான் நரம்பியல் நோய்கள், சர்க்கரை நோய் உட் பட பல நோய்கள் ஏற்படுகின்றன. செல் மூலக்கூறு கடத்தலுக்கு தேவையான ஜீன்களை, ராண்டி ஷீக்மேன் கண்டுபிடித்தார்.

وَلَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ وَنَعْلَمُ مَا تُوَسْوِسُ بِهٖ نَفْسُهٗ وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ
நிச்சயமாக நாம்தான் மனிதனை (முதன் முதலாகவும்) படைத்தோம். அவன் மனதில் உதிக்கும் எண்ணத்தையும் நாம் அறிவோம். பிடரியிலுள்ள இரத்த நரம்பைவிட நாம் அவனுக்கு மிக சமீபமாகவே இருக்கின்றோம்.
(அல்குர்ஆன்: 50:16)

பாலூட்டிகளின் செல்மூலக்கூறு செயல்பாடுகளை ஜேம்ஸ் ரோத்மேன் கண்டறிந்தார்.

وَاِنَّ لَـكُمْ فِى الْاَنْعَامِ لَعِبْرَةً ‌ نُسْقِيْكُمْ مِّمَّا فِىْ بُطُوْنِهٖ مِنْ بَيْنِ فَرْثٍ وَّدَمٍ لَّبَنًا خَالِصًا سَآٮِٕغًا لِّلشّٰرِبِيْنَ
(ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைகளிலும் உங்களுக்கு ஒரு படிப்பினை உண்டு. இரத்தத்திற்கும் சாணத்திற்கும் இடையில் அதன் வயிற்றில் இருந்து கலப்பற்ற பாலை (உற்பத்தி செய்து) நாம் உங்களுக்குப் புகட்டுகிறோம். அது அருந்து பவர்களுக்கு மிக்க இன்பகரமானது.
(அல்குர்ஆன்: 16:66)

மூலக்கூறுகளை கடத்தும்படி ரசாயண சிக்னல்கள் எப்படி அறிவுறுத்துகிறது என்பதை தாமஸ் சுடோப் கண்டறிந்தார்.

فَقُلْنَا اضْرِبُوْهُ بِبَعْضِهَا ‌ كَذٰلِكَ يُحْىِ اللّٰهُ الْمَوْتٰى ۙ وَيُرِيْكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ
ஆகவே, அவர்களை நோக்கி (நீங்கள் அதனை அறுத்து) "அதில் ஒரு பாகத்தைக்கொண்டு (கொலையுண்ட) அவனை அடியுங்கள்" என நாம் கூறினோம். (அவ்வாறு அடித்தவுடன் இறந்தவன் உயிர்பெற்றெழுந்து கொலையாளியை அறிவித்தான். அவன்

உயிர்பெற்ற) இவ்வாறே இறந்தவர்களை அல்லாஹ் உயிர்ப்பிப்பான். மேலும், நீங்கள் அறிந்துகொள்வற்காக அவன் தன்னுடைய (ஆற்றலை அறிவிக்கக்கூடிய) அத்தாட்சிகளை உங்களுக்குக் காட்டுகின்றான்.
(அல்குர்ஆன் : 2:73)

நோபல் பரிசு ரூபாய் 7 கோடியை மூவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பை நோபல் பரிசுக்குழு தலைவர் தாமஸ் பெர்ல்மன்
வெளியிட்டார்.

காலப் பயணம் - (Time Travel)
(Grandfather Paradox)
(விண்வெளி ரகசியம் 01)



காலப்பயணம் என்ற கருக் கோள் விஞ்ஞான உலகில் பெரும் தாக்கத்தை உண்டாக்கி அவரவர்களின் மனதை இறக்கைக் கட்டி பறக்க வைக்கிறது !
வேறொரு காலத்தில் மூக்கை நுழைப்பது என்பது மனிதனின் ஆழ்மன ஆசைகளில் ஒன்று . எக்கச்சக்கமான வேலைகளை செய்யலாம் அதுவும் வெகு எளிதாக செய்யலாம் !....என்ற கற்பனையை போதாக்குறைக்கு திரைப்படங்கள் இந்த ஆசையை நன்றாகவே தூண்டிவிட்டிருக்கின்றன.
ஆனால்,
காலப்பயணம் என்பது முற்றிலும் கற்பனையானது என்பது சராசரி மனிதர்களாகிய நமக்கே தெரிந்திருக்கும்போது, ஸ்டீபன் ஹாக்கிங் போன்ற பெரிய விஞ்ஞானிகள் அது சாத்தியம். மனித குலம் இன்றல்ல என்றாவது ஒரு நாள் மனித குலம் சாதித்தே தீரும் என்று கூறி , அந்த உடனேயே காலப் பயணிகளை வரவேற்று விருந்து உபச்சாரம் செய்வதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து காத்தும் இருந்தார் .

உதாரணமாக **2250** வாக்கில் காலப் பயணம் சாத்தியப்பட்டு , காலப் பயணிகள் புறப்பட்டு 2018 வருடத்தை பின்னோக்கி பயணம் செய்து காத்திருக்கும் ஸ்டீபன் ஹாக்கிங்கை கண்டிப்பாக சந்திப்பார்கள் .

பூமியின் அருகே இந்த புழுத் துளையின் **(வார்ம் ஹோல்)** ஒரு பகுதி. அதன் மற்றொரு பகுதி, எங்கோ தொலைதூரத்தில், நம்மால் கற்பனையே செய்துபார்க்கமுடியாத விண்வெளியின் மற்றொரு இடத்தில் இருக்கும். எனவே, இதனுள் நுழைந்தால், குறுகிய காலத்தில் அந்த இன்னொரு பகுதிக்குப் போய்விடமுடியும். இதனால் தூரம் என்பது குறுகிவிடுகிறது. மனிதன் விண்வெளியின் பலப்பல இடங்களை ஆராயமுடியும்.
இது, தூரம் என்பதை மனதில்கொண்டு உருவான தியரி. அதுவே, இந்த புழுத் துளையின் இரண்டு முனைகளும், 'காலம்' என்ற அளவையால் பிரிக்கப்பட்டால்? அதாவது, புழுத் துளையின் இரு முனைகளுமே பூமியை நோக்கியே குவிக்கப்பட்டால், ஒரு முனையில் நுழைந்து, மற்றொரு முனையின் வழியாக நாம் வெளியேறும்போது பல்லாயிரக்கணக்கான வருடங்கள் முன்போ பின்போ பூமியை நாம் பார்க்கலாம். இதுதான் விஞ்ஞானத்தின் பார்வையில் காலப்பயணம்.

ஆனால், இதற்கான சில முன்னேற்பாடுகள் இருக்கின்றன. கால வெளி விஞ்ஞானி பயணிக்கும் தூரம் என்பது ஒரு மணி நேரத்துக்கு ஐந்துகோடி கிலோ மீட்டர்களாக இருக்கவேண்டும். அதேசமயம், இதில் உள்ள ஒரு சிக்கல் – இதன்மூலம் விஞ்ஞானி கடந்தகாலத்தில் ஒரு நபரை பார்க்கிறார் என்று வைத்துக் கொள்வோம் , அப்போது ஒரு துப்பாக்கியை எடுத்து விஞ்ஞானி தன்னை தானேயோ அல்லது அந்த கடந்த நபரையோ சுட்டுவிட்டால் என்ன ஆகும் ? ரொம்ப யோசிக்க வைக்கிறது அல்லவா ?

இத்தகைய ஒரு சிச்சுவேஷன் தான் **paradox.** நடக்குமா நடக்காதா என்று சொல்ல இயலாத ஒன்று. உண்மையில் ***Grandfather Paradox*** என்பது விஞ்ஞானத்தில் புகழ்பெற்ற ஒன்று. கடந்த காலத்தில் நமது தாத்தாவை பேச்சிலராக சந்தித்து, அவரைக் கொன்றுவிட்டால், தற்காலத்தில் நாம் உயிரோடு இருக்கமுடியுமா ?


இது முழுக்க விஞ்ஞான கற்பனை என்று எண்ணி உதாசீனப்படுத்தி விடாதீர்கள் .
கடந்த கால மனிதர்கள், வருங்கால மனிதர்கள் இவர்களையெல்லாம் ஒரே நேரத்தில் நிகழ்காலத்தில் காணமுடியும் என்பதை குர்ஆன் , மற்றும் நபிமொழி உண்மைப்படுத்துகிறது என்று நான் சொன்னால் நீங்கள் நம்புவீர்களா ?

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் .
இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:
(ஒரு விண்ணுலக பயணத்தில்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "அல்அஸ்ரக்" பள்ளத்தாக்கைக் கடந்து சென்றார்கள்.
அப்போது, "இது எந்தப் பள்ளத்தாக்கு?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "அல்அஸ்ரக் பள்ளத்தாக்கு" என்று பதிலளித்தார்கள்.
"மூசா (அலை) அவர்கள் உரத்த குரலில் "தல்பியா" சொல்லிக்கொண்டு இந்த மலைக் குன்றிலிருந்து இறங்கிவந்து கொண்டிருப்பதை (இப்போதும்) நான் காண்பதைப் போன்று உள்ளது" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
பிறகு ஹர்ஷா மலைக் குன்றுக்குச் சென்றார்கள். "இது எந்த மலைக் குன்று?" என்று கேட்டார்கள். மக்கள், "(இது) ஹர்ஷா மலைக் குன்று" என்று பதிலளித்தனர்.
அதற்கு "யூனுஸ் பின் மத்தா (அலை) அவர்கள் கம்பளி நீளங்கி அணிந்தவர்களாகக் கட்டுடல் கொண்ட சிவப்பு ஒட்டகமொன்றின் மீது "தல்பியா" சொல்லிக் கொண்டிருப்பதை நான் (இப்போதும்) காண்பதைப் போன்று உள்ளது. அவர்களது ஒட்டகத்தின் கடிவாளம் ஈச்ச நாரினாலானது" என்று கூறினார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் 268

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
நான் (விண்ணுலகப் பயணத்திற்காக) அழைத்துச்செல்லப்பட்ட இரவில் இம்ரானின் புதல்வர் மூசா (அலை) அவர்களைக் கடந்துசென்றேன். மூசா (அலை) அவர்கள் (யமனியர்களான) "ஷனூஆ" குலத்தைச் சேர்ந்த மனிதரைப் போன்று மாநிறமுடையவர்கள்; உயரமானவர்கள்; சுருள்முடியுடைவர்கள்.

(அப்பயணத்தில்) மர்யமின் மைந்தர் ஈசா (அலை) அவர்களையும் கண்டேன். அவர்கள் நடுத்தர உயரமும் சிவப்பும் வெண்மையும் கலந்த, மிதமான சரும அமைப்புக் கொண்டவர்களாகவும் படிந்த, தொங்கலான தலைமுடி உடையவர்களாகவும் இருந்தார்கள்.
மேலும், நரகத்தின் காவலரான (வானவர்) மாலிக்கும், (இறுதிக் காலத்தில் வரவிருக்கும் மகா பொய்யனான) தஜ்ஜாலும் எனக்குக் காட்டப்பட்டனர். இவையெல்லாம் அல்லாஹ் எனக்குக் காண்பித்த அவனுடைய சான்றுகளில் உள்ளவை.
"நீங்கள் அவரைச் சந்தித்ததில் சந்தேகம் ஏதும் கொள்ள வேண்டாம்"
குர்ஆன் (32:23)
இதை இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
மேற்கண்ட (32:23ஆவது) வசனத்திற்கு விளக்கமளிக்கையில் கத்தாதா (ரஹ்) அவர்கள், "நபி (ஸல்) அவர்கள் மூசா (அலை) அவர்களைச் சந்தித்தது பற்றி நீங்கள் சந்தேகம் ஏதும் கொள்ள வேண்டாம்" என்று கூறினார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் 267

புழுத்துளை (Wormhole)
(விண்வெளி ரகசியம் 02)



" Through The Wormhole " - Morgan Freeman எழுதிய " புழுத்துளை வழியே " என்கிற புத்தகம் மிகவும் சுவாராசியமானது .மனித கற்பனைகளையெல்லாம் மீறிய சமாச்சாரங்கள் சரளமாக பேசப்படுகிறது .
புழுத்துளைப் பற்றி மிக மிக எளிமையாக சொல்லப்போனால், அது புழு மாதிரியே சுருங்கி விரியக் கூடியது . நீங்கள் தற்போது உங்கள் ஊர் ஆண்டிபட்டியில் அமர்ந்து கொண்டு கணினித் திரையை நோக்கியவாறே எதையாவது நோண்டிக் கொண்டிருக்கிறீர்கள். அப்போது திடீரென உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் வருகிறது. " இன்னும் அரை மணி நேரத்தில் அண்டார்ட்டிகாவில் வந்து முதலில் என்னைச் சந்திப்பவர்களுக்கு 500 கோடி அளிக்கப்படும்' என்று
பில் கேட்ஸ் அறிவித்திருக்கிறார். இது முற்றிலும் நம்பகமான உண்மை என்று வைத்துக்கொள்ளுங்கள்.

"எப்படி அரை மணி நேரத்தில் ஆண்டிபட்டியிலிருந்து அண்டார்ட்டிகாவுக்குச் செல்வது? "
நீங்கள் இருக்கும் இடத்தை விட்டு எழுந்து , உங்க வீட்டிலுள்ள ஓர் அறையில் இருக்கும் ஒரு கதவைத் திறக்கிறீர்கள் . கதவின் மறுபக்கத்தில் அட , அன்டார்ட்டிகா !
அங்கே தொலைவில் தன் மூக்கு கண்ணாடியைத் துடைத்துக்கொண்டு பில் கேட்ஸ் நிற்கிறார். அடுத்த நிமிடம் உங்கள் கையில் 500 கோடி . இதுதான் **Wormhole** என்னும் புழுத்துளையின் மாயம் .
புழுத்துளை இரண்டு இடங்களை இணைக்கும் ஒருவிதமான மாய பாலம் . அந்த இரண்டு இடங்களுக்கும் இடையே இருக்கும் தூரம், மனித மனதால் கற்பனையே செய்யமுடியாத ஒரு மிகப்பெரிய தூரமாகக் கூட இருக்கலாம். அல்லது அடுத்த பிரபஞ்சத்தைக் கூட தொடலாம். ஆனாலும் புழுத் துளை இருப்பது முற்றிலும் உண்மை .
இன்னும் சொல்லப்போனால்,ஸ்டீபன் ஹாக்கிங்கின் கருத்துப்படி தற்போது நம்மைச் சுற்றிலும் எக்கச்சக்கமான **wormhole** கள் என்னும் புழுத் துளைகள் இருந்து கொண்டே இருக்கின்றன என்கிறார் ஹாக்கிங். அப்படியென்றால் எளிதில் இதுபோன்று எங்கு வேண்டுமானாலும் செல்லலாமே ?
முடியாது . இங்குதான் பிரச்சனையே இருக்கிறது தற்போது இருக்கும் **wormhole** கள் அளவில் மிக மிகச் சிறியவை. எந்த அளவு என்றால், ஒரு சென்டிமீட்டரில், ட்ரில்லியனில் ட்ரில்லியனில் பில்லியன் பாக அளவே இவை இருக்கின்றன. இதை வைத்துக்கொண்டு எதுவுமே செய்யமுடியாது. இவ்வளவு சிறிய வஸ்துக்களுக்குள் எப்படி மனிதன் நுழைய முடியும்?

இவை எங்கே இருக்கின்றன? க்வாண்டம் மெகானிக்ஸில் " Quantum Foam " என்ற ஒரு பதம் உண்டு. அதாவது எந்தப் பொருளுக்குள்ளும் அடிப்படையாக இருக்கும் ஒரு துகள். சரி , இதனை எப்படி அளப்பது? மனிதர்களால் அளக்கக்கூடிய அளவைகளில் இதுவரை இருப்பதிலேயே மிகச் சிறிய அளவு ஒன்றை, **Planck Length** என்று அழைப்பார்கள். இதை எண்ணிக்கையில் சொல்லவேண்டும் என்றால், 0.00000000000000000000000000000000001 என்று அதனைக் குறிக்கலாம் (டெஸிமல் பாயிண்ட்டுக்குப் பின்னர் **34** ஸைஃபர்கள்). எனவே, இத்தனை சிறிய ஒரு வஸ்துவை நாம் **wormhole** ஆக உபயோகிக்க முடியாது. கூடவே, இவை உருவானவுடனே அழிந்துவிடுபவை.

இதனால்தான் – இப்படிப்பட்ட குழப்படிகள் நேரலாம் என்பதால்தான், காலப்பயணம் என்பது சாத்தியம் இல்லாத ஒன்று என்றும் விஞ்ஞானிகளால் சொல்லப்படுகிறது.
.....ஆனால் மெஞ்ஞானத்தில் சாத்தியப்பட்டிருக்கலாம். அதாவது குவாண்டம் இயல் என்பது நுணுக்கத்திலும் நுணுக்கமான விஷயம் பற்றி விஞ்ஞானத்தால் இன்னும் முடியாவிட்டாலும் அது பற்றி பேசுகிறது தெளிவாகப் பேசுகிறது .
planck Length என்னும் நுணுக்க தூரம் மனித கற்பனைக்கு அப்பாற்பட்டது . இருந்தாலும் விஞ்ஞானம் பேசுகிறது .
இதையே குர்ஆனில் அல்லாஹ் சர்வ சாதாரணமாக சொல்கிறான் .
"பிடரியிலுள்ள இரத்த நரம்பைவிட நாம் அவனுக்கு மிக சமீபமாகவே இருக்கின்றோம்.
(அல்குர்ஆன் : **50:16)**
பிடரி நரம்பே மனிதனுக்குள்ளேதான் இருக்கிறது .அதற்கு எங்கு தூரம் என்று எதைச் சொல்வது ? ஆனாலும் இறைவன் அதை விட மிக்க சமீபம் என்பது மனித கற்பனை மீறுகிறதா ?
" (வளைந்த) வில்லின் இரு முனைகளைப் போல், அல்லது அதினும் நெருக்கமாக வந்தார்" .
*(அல்குர்ஆன் : **53:9)***
வளைந்த வில்லின் இரு முனைகளுக்கு இடையே உள்ள தூரம் பற்றி பேசப்படும் போது கண்ணுக்குத் தெரியும் தூரம் , அதே ஒரே வில் எனும் போது தூரம் நம் கற்பனை மீறுகிறதா ?
படுக்கையின் சூடு ஆறும் முன்னே மிஹ்ராஜ் என்னும் விண்வெளி பயணம் நடந்து முடிந்தது என நபி (ஸல்) அவர் குறிப்பிடுகிறார்கள் . **Planck length** போலவே **planck Time** பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள் .

பிளாங்க் நேரம் (Planck time)
(விண்வெளி ரகசியம் 03)

$$\text{Planck Temperature} = \sqrt{\frac{\hbar c^5}{G k_B^2}} = 1.42\times10^{32}\,\text{K}$$

$$\text{Planck Mass} = \sqrt{\frac{\hbar c}{G}} = 2.2\times10^{-8}\,\text{kg}$$

$$\text{Planck Time} = \sqrt{\frac{G\hbar}{c^5}} = 5.4\times10^{-44}\,\text{s}$$

$$\text{Planck Length} = \sqrt{\frac{G\hbar}{c^3}} = 1.6\times10^{-35}\,\text{m}$$

$$\text{Planck Energy} = \sqrt{\frac{\hbar c^5}{G}} = 1.22\times10^{19}\,\text{GeV}$$

$$\text{Planck Density} = \frac{c^5}{G^2\hbar} = 5.16\times10^{93}\,\text{g/cm}^2$$

இயற்பியலில் பிளாங்க் நேரம் (**Planck time)** என்பது பிளாங்க் அலகுகளில் காலத்தின் அலகு ஆகும்.
ஒரு பிளாங்க் நேரம் என்பது வெற்றிடத்தில் ஒளி ஒரு பிளாங்க் தொலைவு கடக்க ஆகும் நேரம் ஆகும். இது tP என்று குறிக்கப்படுகிறது. அறிவியலாளர் மாக்ஸ் பிளாங்க் இதனை முதலில் முன்மொழிந்தார்.
{\displaystyle t_{P}\equiv {\sqrt {\frac {\hbar G}{c^{5}}}}\approx 5.39124(27)\times 10^{-44}{\mbox{ s}}}
இதனை கணிதவியல் வரையறை சொல்லி வைக்கிறேன் .இது பற்றிய தெளிவு Msc பிஸிக்ஸ் அல்லது வானவியல் என்னும் அஸ்ட்ராலஜி (**Astro Physics)** படித்தவர்கள் ரொம்பவும் அழகாக சொல்லித் தருவார்கள்.
இது பற்றி நான் சொல்வதற்கு நிறைய டைம் வேண்டும் . சூத்திரத்தைப் பயன்படுத்தும் ஒரு நிகழ்வை உதாரணமாக சொல்லித் தருகிறேன் . இது கனவில் நடந்தது அல்ல ; நிசர்சன சம்பவமாகும் .

சூஃபியிஸத்தின் தலைவர் ஹளரத் ஜுனைதுல் பாக்தாதி ரஹ் அவர்களின் சீடர் ஒருவர் குளிப்பு கடமையாகி குளிப்பதற்காக தஜ்லா நதிக்கு வருகிறார் அந் நேரம் சுபுஹ் தொழுகைக்கு சற்று முந்தைய நேரம்
ஆடைகளை களைந்து ஆற்றின் ஓரத்தில் வைத்து விட்டு நதியில் இறங்கி ஒரே ஒரு முங்குதான் போட்டார் . . . . . .
அவ்வளவுதான் அவர் கண்டம் விட்டு கண்டமோ அல்லது இந்த பிரபஞ்சத்தின் வேறு ஏதோ ஒரு கிரகத்தின் நதியிலோ குளித்தவாறு வெளியே வருகிறார் அங்கு ரொம்ப காலம் அங்குள்ள தன் மனைவியோடும் மக்களோடு மக்களாகவும் வாழ்ந்து வருகிறார்

. . . . . . ஒரு நாள் அங்குள்ள நதியில் யதார்த்தமாக குளிப்பு கடமையாகி குளிக்கிறார் . அந்த நதியில் ஒரே ஒரு முங்கு போட்டார் . . . . . . அவ்வளவுதான் மீண்டும் தஜ்லா நதியில் நின்று கொண்டு இருக்கிறார் . . .

ஆச்சரியம் அதே சுபுஹ் நேரம் இன்னும் சுபுஹ் தொழுகை நடைபெறவில்லை களைந்து வைத்த துணி கூட அங்கு அதே இடத்தில் அப்படியே இருக்கிறது . . . . துணி உடுத்துக் கொண்டு சுபுஹ் தொழுகையில் கலந்து கொள்கிறார் .

சுபுஹு தொழுகையின் பாங்குக்கும் இகாமத்திற்கும் இடையே உள்ள நேரத்தில் ஒரு மனிதரால் இப்பிரபஞ்சவெளியில் எங்கோ ஓரிடத்தில் பெருவாழ்வு வாழ முடிகிறது .

இதைப்பற்றி தனது ஷைகான ஜுனைதுல் பக்காதி ரஹ் அவர்களிடம் கூறிய போது " சில சமயம் ரொம்ப அதிகமாக வணக்க வழிபாடுகளில் ஈடுபட நினைக்கும் சாதாரண சாதகருக்கு பல காலம் வணங்கும் பாக்கியத்தை இப்படியும் இறைவன் வழங்குகின்றான் .

உங்களுக்குக் கூட ஒரு சமயத்தில் சொற்ப நேரத்தில் பெருவாழ்வு வாழ்ந்ததாக நினைவு இருக்கலாம் .அது கனவு அல்ல ; நிஜம். காலம் செய்யும் மாயம் . ஏனெனில் "காலமாக " இறைவன் இருக்கிறான் .

ர.ரா

ஒரே ஓர் இரவில் ஓராயிரம் வருஷம்
(விண்வெளி ரகசியம் 04)



வயோதிகமான ஓர் இறைநேசரை வெள்ளிக்கிழமை சந்திக்க கிள்ரு (அலை) அவர்கள் வருவது அந் நாட்டு மன்னவருக்கு தெரிய வருகிறது. மன்னருக்கு கிள்ரு (அலை) அவர்களை சந்திக்க ஆவல் உண்டாகி உத்தரவும் கிடைக்கிறது

மன்னர் கிள்ரு (அலை) அவர்களிடம் , "தாங்களே மிகப் பெரிய அற்புதமான மனிதர் அப்படிப்பட்ட உங்களுக்குத் தெரிந்த மிக அற்புதமான விஷயங்களைப் பற்றி எங்களுக்குச் சொல்லுங்கள் " என்று கேட்க ,

" ஒரு சமயம் இந்த ஊரிலிருந்து வெளியே ஒரு தோட்டத்தைப் பார்த்தேன். அங்கு ஒருவர் . . " யாத்ரிகரே இங்கே வாரும் என்று கூறி ஒரு பெட்டி திராட்ச பழம் கொடுத்தார் .

" என்ன விலை ? " என்று கேட்க,

" விலையேதும் இல்லை. இங்கு

உள்ள பாதுஷா வழிப் போக்கருக்கு இப்பழங்களை இலவசமாகவே கொடுக்கச் சொன்னார் "

அதே தோட்டத்தின் மறுகோடியில் இனிப்பு வழங்கபபட்டது விலையேதும் இல்லாமல் . . . . அவரும் இவர் சொன்ன மாதிரி பாதுஷா இலவசமாக கொடுக்க சொன்னதாக சொன்னார் .

500 வருடங்களுக்குப் பிறகு .....இதே வழியே நான் வரும்போது அந்த இடத்தில் தோட்டம் இல்லை ; ஆனால் பெரிய நதி ஓடுகிறது . தோட்டம் பற்றி விசாரித்த போது அப்படி ஒரு தோட்டம் இருந்ததாக எங்களுடைய மூதாதையர்கள் கூட சொல்வே இல்லையே ...! என்றனர் அங்கு வாழ்ந்தவர்கள் .

பின் 500 வருடங்களுக்குப் பிறகு அவ்வழியே நான் வரும் போது அந்த நதி அங்கு இல்லை ; வெறும் காடுதான் இருந்தது நதி பற்றி யாருக்கும் எதுவும் தெரியவில்லை .

பின் 500 வருடங்களுக்குப் பிறகு வந்த போது . . . அதே தோட்டம் அதே திராட்சை பழம் மற்றும் அதே தோட்டத்தின் மறு கோடியில் இனிப்பு .

" என்ன விலை. ?" என்று நான் கேட்க ,

"போப்பா. . நேற்றுதானே சொன்னேன் பாதுஷா வழிப்போக்கர்களுக்கு ஒரு பெட்டி பழம் . விலை இல்லை . இலவசம்.

அதே மாதிரி இனிப்பும் வழஙகப்பட்டது . .

கிள்ரு (அலை)அவர்கள் , அந்த மன்னரிடம் " எனக்கு 1500 வருடங்கள் ஆகியிருக்கிறது . ஆனால் அந்த தோட்டக்காரர்களுக்கு ஒரே ஓர் இரவுதான் ஆகி இருக்கிறது " .

ஆதாரம் . :மல் ஃபூழாத்தே ஃபகீஹுல் உம்மத் பாகம் 1 பக் 67

இந்த நிகழ்வுகளையெல்லாம் விஞ்ஞானத்தில் பிளாங்க் டைம் (planck Time) வரிசையில் குறிப்பிடுவதா ? அல்லது கிள்று (அலை) wormhole என்னும் புழுத் துளையில் பயணித்துக் கொண்டிருக்கிறார்களா ?

நீங்கள்தான் சொல்ல வேண்டும் .

ர.ரா

Rahmath Rajakumaran


குர்ஆனில் பிளாங்க் டைம் குறித்த சேதியை உங்களால் எப்படி யூகிக்க முடிந்தது ? நண்பர் கேட்டார்

விஞ்ஞானத்தின் கோட்பாடுகளைப் படித்ததும் குர்ஆன் நிகழ்வுகளை எல்லாம் மனதில் அசை போடும் போது சுவிட்ச் போட்ட மாதிரி " பளீச் "

" சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்செல்வங்கள் யாவும்

கொணர்திங்கு சேர்ப்பீர் " என்று பாரதி தமிழுக்குக் சொன்னதை , கொஞ்சம் மாற்றி "குர்ஆனில் சொல்லப்பட்டதை எட்டுத்திக்கும் கொண்டு சேர்ப்பீர் " என்பதாக நான் விளங்கிக் கொண்டேன்

கருந்துளையா..... ? அது வானத்தின் பாதையா.... ?
(விண்வெளி ரகசியம் 05)



வானத்தின் பாதைகளாக கருந்துளை என்னும் (**Black hole)** இருக்கலாம் என்று (**Astro Physics)** என்ற வான பௌதிகத் துறை சிந்திக்கிறது

ஹோல் என்பது ஓட்டை, பள்ளம் , வெறுமை , வண்ணம் இல்லாதது , இருட்டு.... இந்த ஓட்டை இது இருக்கிறதை எல்லாம் ஈர்த்து விட்டுப் பழையபடி வெறுமையாகி விடும். ஒன்றும் செய்யாத மாதிரி இருந்துவிடும்.

இந்த கருந்துளைகள் வானில் நிறைய இருப்பதற்கு நியூட்டன் மற்றும் ஐன்ஸ்டீனின் ஈர்ப்பாற்றல் தத்துவம் பல காரணங்களை சொல்கிறது

1919 நவம்பர் சூரிய கிரணத்தின் போது சந்திரன் மறைக்கிறது அப்போது அதன் பின்னால் இருந்த நட்சத்திரங்களிலிருந்து புறப்பட்ட ஒளி சூரியனின் ஈர்ப்பாற்றலால் விளிம்பில் வளைந்து நம்மால் பார்க்க முடிந்தது

பக்கத்தில் உள்ள வெளியை வளைக்கிறது .

ஈர்ப்பாற்றல் அதிகமாக அதிகமாக வளைவும் அதிகமாகும் மித மிஞ்சி போய் வளைந்து வளைந்து உள்ளுக்குள் சுருளாக சுருண்டு கொள்ளும் இதைத்தான் கருந்துளை என்கிறார்கள் .

நட்சத்திரங்களின் எரிபொருள் தீர்ந்து தனக்குள் சுருங்க ஆரம்பித்து கருந்துளை உண்டாக ஏதுவாகிறது

ஐன்ஸ்டீன் சமன்பாட்டின்படி . மிக மிகக் குறைவான பொருளை சக்தியாக மாற்றினாலே ஏராளமான சக்தி வெளிப்படும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை

இதைப் போல் காலவெளி (**Time space)** பரப்பில் ஏற்படும் பாதைகள் (கவனிக்கவும் பாதைகள்) ஒரே ஒரு சென்டி மீட்டரில் பத்து லட்சம் கோடி கோடி யில் ஒரு பங்கு அளவே நீளமுடையவை இதனை (**Plank Length)** என்கிறார்கள்.

எனவே கால வெளி சுருட்டப்படுவதால் காலமும் சுருங்கிவிடுகிறது

அதாவது பூமியின் காலம் யுகங்களாக இருக்கும் போது கருந்துளையின் மறுபுறம் அங்குள்ள நாளின் மிகச் சிறிய ஒரு பொழுதாக இருக்கும் .

இதைத்தான் குர்ஆன் :
" ஐம்பதினாரயிரம் வருடங்களுக்கு சமமான ஒரு நாள் " குர்ஆன் (70: 04)
என்று குறிப்பிடுகிறது
கருந்துளைக்கு முன்னால் உள்ள சிறு கல் கருந்துளைக்கு மறுபுறத்தில் பெரிய மலையாகவும் ,சிறு செடி அங்கு பெரும் சோலைகளாகவும் (சுவனத்தின் சோலைகள்) சின்ன குழி பெரும் பள்ளத்தாக்குகளாகவும் (நரகம்)
உருவாகுவதை மறுதலிக்க முடியாது
அதைப் போல் கருந்துளை தாண்டிய வெளியில் மனித வாழ்வு
இருக்குமானால் அது காலம் காலமான யுகங்களாகத்தான் இருக்கும் .
சுவனவாசிகள் என்றென்றும் அதில் தங்கிவிடுவார்கள் (குர்ஆன் **3 : 15)**

கனடா தேசத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற ஹரீந்தர் சந்து என்ற சீக்கியர் தனது இணைய தளத்தில் **Life after Death** ல் நிறைய ஆய்வுகள் செய்து விவரிக்கிறார்
ஆற்றலை ஆக்கவோ அழிக்கவோ முடியாது ஆனால் ஒன்றை இன்னொன்றாக மாற்ற இயலும் இது ஆற்றல் மாறாக் கோட்பாடு எனும் விதி . . . . இவ்வாறே அறிவு என்பதையும் ஓர் ஆற்றலாக் கொண்டால் அதுவும் அழிவதில்ல ஆன்மாவும் அவ்வாறே அழிவதில்லை .
நம் பிரபஞ்சத்திலுள்ள கருந்துளை என்பது அறிவின் மொத்த உறைவிடமாகவோ அல்லது தேவலோகமாகவோ கருதப்பட இடமுண்டு விஞ்ஞானத்தால் அறுதி இட முடியாத விஷயங்களில் இதுவும் ஒன்று
ஞான ஜோதி சம்மங்கி எழுதிய . " "**மரணம் ,மறுமை , முக்தி** "எனும் ஆய்வு நூலில் ,பிரபஞ்சத்திலுள்ள கருந்துளைச் சுற்றி நான்கு வளையங்கள் உள்ளன
ஊர்வன பறப்பன இவற்றோடு தீய எண்ணங்களால் தீய காரியங்களையே செய்த மனித ஆத்மாக்கள் யாவும் முதல் வளையத்தை அடைகிறது

நல்லதும் கெட்டதும் கலந்து ஓரளவு மனிதத் தன்மையோடு வாழ்ந்த ஆன்மாக்கள் இரண்டாவது வளையத்தையும் அடைகிறது
நல்ல எண்ணங்களுக்கு மட்டுமே இடம் கொடுத்து நல்ல செயல்களால் மட்டுமே வாழ்ந்தார்களின் ஆன்மாக்கள் மரணத்திற்குப் பிறகு மூன்றாவது வளையத்தை அடைகிறது
வணக்க வழிபாடு தியானம் பிறருக்காகவே வாழ்ந்த புனித ஆன்மாக்கள் மரணத்திற்குப் பிறகு நான்காவது வளையத்தை அடைகிறது

யோக நெறிகளான தியானத்தில் முதிர்ந்து முக்தி அடைந்து சமாதி நிலையை அடைந்த பூரண யோகியரின் ஆன்மாக்கள் உடலை நீர்த்ததும் நேராக இந்த கருந்துளைக்குள்ளே நுழைந்து அதில் சங்கமாகி விடுகின்றன என்பதாக கருந்துளையின் அமைப்பையும் அதன் பயன்பாட்டையும் குறிப்பிட்டுள்ளார்
ஸஹீஹ் முஸ்லிம் பாகம் 1 பக்கம் 211ல் . "வான எல்லையில் உள்ள இலந்தை மரம் என்கிற சித்ரத்துல் முன்தஹா பற்றிய குறிப்பில மேற்கண்ட அத்தனை விஷயங்களை உண்மைப்படுத்தி நம்மை வியக்கச் செய்கிறது

சித்ரத்துல் முன்தஹா என்பது வான எல்லையில் உள்ள ஓர் இடத்தின் பெயர் (வான் கருந்துளையின் மறுபக்கமா ?) ' சித்ரத் ' என்பதற்கு இலந்தை மரம் (jujube) என்று பொருள்.
முன்தஹா 'என்றால் இறுதியானது என்று பொருள் இறுதி எல்லையில் உள்ள இலந்தை மரம் என்று பொருள் விரியும் .

வான எல்லையில் உள்ள பிரம்மாண்டமான இந்த மரத்தின் இலைகள் ஒவ்வொன்றும் யானையின் காதுகளைப் போன்றும் பழங்கள் பெரிய கூஜாவைப் போன்றும் இருக்கும்
6 வது வானத்தில் இதன் வேர் உள்ளது 7 வது வானத்திற்கும் மேல் வரை இம்மரம் நெடிதுயர்ந்து உள்ளது
பொன் வண்டுகள் அந்த மரத்தை மொய்த்துக் கொண்டிருக்கிறது அந்த மரம் பல வண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது அதன் அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை
பூமியில் உள்ளவர்கள் புரியும் செயல்கள் பற்றிய குறிப்பு இங்குதான் செல்கிறது
பூமியில் கைப்பற்றப்படும் உயிர்களும் இங்கேதான் வந்து சேர்கின்றன
இதற்கு மேலிருந்து வரும் இறைக் கட்டளைகள் இங்குதான் முதலில் இறங்குகின்றன
வானவர்களின் அறிவு இந்த இடத்தோடு முற்றுப் பெறுவதாலேயே இதற்கு எல்லை (முன்தஹா) எனும் பெயர் வந்தது
இங்கிருந்து 4 ஆறுகள் ஓடுகின்றன இரண்டு உள் நோக்கி பாயும் சல்சபீல் மற்றும் கவ்ஸர் ஆகிய சுவனத்தின் ஆறுகள் மற்றது இரண்டும் வெளியே பாயும் நைல் மற்றும் யூப்ரடீஸ் நதிகளாகும்
சித்ரத்துல் முன்தஹா வழியே நபிஸல் அவர்களின் விண்ணுலக பயணம் நடந்தது .
சித்ரத்துல் முன்தஹா கருந்துளையின் மறுபக்கமா ?
"அழகிய பாதைகள் உடைய வானத்தின் சத்தியமாக " (குர்ஆன் 51 : 07)

பிரிந்த உயிர் செல்லும் பாதை .
(விண்வெளி ரகசியம் 06)



இப்பாதை அநேகமாக கருந்துளை வழியாக செல்வதாக கீழ்க்கண்ட கருத்துக்கள் அமைகிறது
சித்ரத்துல் முன்தஹா என்பது வான எல்லையில் உள்ள ஓர் இடத்தின் பெயர்
பூமியில் உள்ளவர்கள் புரியும் செயல்கள் பற்றிய குறிப்பு இங்குதான் செல்கிறது
பூமியில் கைப்பற்றப்படும் உயிர்களும் இங்கேதான் வந்து சேர்கின்றன
இதற்கு மேலிருந்து வரும் இறைக் கட்டளைகள் இங்குதான் முதலில் இறங்குகின்றன
வானவர்களின் அறிவு இந்த இடத்தோடு முற்றுப் பெறுவதாலேயே இதற்கு எல்லை (முன்தஹா) எனும் பெயர் வந்தது . இதையே.....,

ஞான ஜோதி சம்மங்கி எழுதிய . " "மரணம் ,மறுமை , முக்தி "எனும் ஆய்வு நூலில் ,பிரபஞ்சத்திலுள்ள கருந்துளைச் சுற்றி நான்கு வளையங்கள் உள்ளன
ஊர்வன பறப்பன இவற்றோடு தீய எண்ணங்களால் தீய காரியங்களையே செய்த மனித ஆத்மாக்கள் யாவும் முதல் வளையத்தை அடைகிறது
நல்லதும் கெட்டதும் கலந்து ஓரளவு மனிதத் தன்மையோடு வாழ்ந்த ஆன்மாக்கள் இரண்டாவது வளையத்தையும் அடைகிறது

நல்ல எண்ணங்களுக்கு மட்டுமே இடம் கொடுத்து நல்ல செயல்களால் மட்டுமே வாழ்ந்தார்களின் ஆன்மாக்கள் மரணத்திற்குப் பிறகு மூன்றாவது வளையத்தை அடைகிறது
வணக்க வழிபாடு தியானம் பிறருக்காகவே வாழ்ந்த புனித ஆன்மாக்கள் மரணத்திற்குப் பிறகு நான்காவது வளையத்தை அடைகிறது

யோக நெறிகளான தியானத்தில் முதிர்ந்து முக்தி அடைந்து சமாதி நிலையை அடைந்த பூரண யோகியரின் ஆன்மாக்கள் உடலை நீர்த்ததும் நேராக இந்த கருந்துளைக்குள்ளே நுழைந்து அதில் சங்கமாகி விடுகின்றன என்பதாக கருந்துளையின் அமைப்பையும் அதன் பயன்பாட்டையும் குறிப்பிட்டுள்ளார் .

மேற்கூறப்பட்ட இரண்டு விஷயங்களில் கைப்பற்றப்படும் உயிர்கள் குறித்து பேசப்படுகிறது.
உத்தம மனிதரின் உயிர் பிரியும் நேரத்தில் வெண்மை ஒளி வீச வானவர்கள் வருகிறார்கள். சுவனத்தில் இருந்து ஆடையும் (கபன்) வாசனைத் திரவியங்களும் கொண்டு வருகிறார்கள்
உத்தம மனிதனைச் சுற்றி நின்று அவனின் உள்ளம் உவகையுறும் வகையில் காட்சி தருகிறார்கள் .

பிறகு இஸ்ராயீல் (அலை) அவர்கள் அழகிய தோற்றத்தில் வந்து , உத்தம மனிதன் தலை அருகே நின்று , " "இறையருள் நிறைந்தவரே! அவ்வருளின் பக்கம் வாருங்கள் " என்றழைக்கின்றனர் .
பிறகு இவரது உயிரை வானவர்கள் மிக மரியாதையுடன் விண்ணோக்கிக் கொண்டு செல்கிறார்கள் . ஏழு வானங்களின் வாயில்களும் திறந்து வைக்கப்படுகின்றது .அங்கே அவரை அழகிய பெயரிட்டழைத்து வரவேற்க்கப்படுகிறது.

பிறகு இவரது பெயரை " இல்லிய்யீன் " என்ற சிறப்புப் பெற்ற இடத்தில் எழுதப்படுகிறது . இதன் பின்னரே உயிரை மண்ணறைக்கு கொண்டு வரப்படுகிறது.
தீயோரின் இறுதி நேரத்தில் இங்ராயீல் (அலை) அவர்கள் மிக கோரமாகக் காட்சி தருகிறார்கள் . அவரைக் கண்டதும் மரணப் பிடியிலிருக்கும் மனிதன் பயத்தால் மிரளுகிறான்.

இந்த நேரத்தில் ஷைத்தான் பற்பல எண்ணங்களை நினைவூட்டி வதைக்கிறான் .உற்றார் , உறவினர்கள், மனைவி மக்களை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து தனிமையில் அதுவும் பயங்கர வேதனைகளை அனுபவிக்கப் போகிறோம் என்ற எண்ண அலைகள் மனதில் வந்து குவியும் .

மிக மெல்லிய ஈரத் துணியை முட்கள் நிறைந்த செடி கொடிகள் மீது விரித்து விட்டு, முரட்டுத்தனமாக அத்துணியை இழுத்தால், எப்படி அத்துணி தாறுமாறாகக் கிழிபடுமோ, அதைவிட மிகப் பயங்கரமாக விவரிக்க முடியாத வகையில் அவனது உயிர் பறிக்கப்படுகிறது .

தீயோரின் ரூஹ் சிஜ்ஜீனில் பதிவு செய்யப்பட்டு கொண்டு வரப்படுகிறது . சுற்றி நிற்கும் வானவர்களும் பயங்கரமான தோற்றத்தில் இவனைச் சபித்துக் கொண்டே இருக்கிறர்கள் .
"மண்ணறை மனிதனுக்கு சுவனப் பூங்காக்களில் ஒன்றாகவோ, அல்லது நரகக் கிடங்குகளில் ஒன்றாகவோ அமையும் " - நபி (ஸல்) அவர்கள்.

கருந்துளையைக் கண்டவர்கள்
(விண்வெளி ரகசியம் 07)



" மரணம் என்பது ஒரு பாலத்தைப் போன்றதாகும். அது நேசனை நேசனுடன் சேர்த்து வைக்கின்றது " _ ஹதீஸ்
பிரபல அமெரிக்க பெண் கவிஞர் _ பாடகி பாம் ரேனால்ட்ஸ் என்பவருக்கு 1991-ல் வித்தியாசமான அனுபவம் நேர்ந்தது .

35 வயதான அவருக்கு மூளையில் ரத்தக் கட்டி வந்ததால், அவசர ஓர் ஆபரேஷன் செய்தார்கள்.
ஏழு மணி நேர நீண்ட அறுவை சிகிச்சையின் நடுவே . அதிக நேரம் மூளைக்குச் செல்லும் ரத்த சப்ளையை முற்றிலும் நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது . அதாவது டெக்னிக்கலாகப் பார்த்தால், அந்தச் சில நிமிடங்களில் பாம் உயிருடன் இல்லை.

ஆபரேஷன் முடிந்து கண் விழித்த பிறகு அந்த வினோத அனுபவத்தை விவரிக்கிறார் பாம் :
" இசையின் ரிஷப ஸ்வரம் போல என் காதில் ஒரு விதமான சப்தம் கேட்டது. அந்த நிமிடத்தில் என் உடம்பிலிருந்து விடுபட்டு நான் மேலே எழும்ப ஆரம்பித்தேன் . என்னுடைய உடல் கீழே ஆபரேஷன் டேபிளில் கிடக்கிறது .நான் அந்தரத்தில் மிதந்து கொண்டே அதைப் பார்க்கிறேன் .
டாக்டர் பேசுவதெல்லாம் தெளிவாகக் கேட்கிறது. . மின்சார ரம்பத்தில் என் மண்டையை அறுக்கிறார்கள் .நான் ஓர் இருட்டான மிக நீண்ட குகை வழியாக போவதாக உணர்ந்தேன் .
திடீரென்று தூரத்தில் சூரியன் போல் ஒரு பிரகாசமான வெளிச்சம் . ஆனால் கண்ணைக் கூசாத அழகான வெளிச்சம் குகையில் மிதமான குளிர் .அந்தச் சமயம் இறந்து போன என் உறவினர்கள் பலரை அங்கே பார்த்தேன் .

அவர்கள் என்னைத் தடுத்து நிறுத்தி உனக்கு இன்னும் வேளை வரவில்லை திரும்பிப் போ " என்று அன்புடன் சொன்னார்கள்.
என் மாமா என்னை அழைத்துக் கொண்டு வந்து ஆஸ்பத்திரி ஆப்ரேஷன் டேபிளில் விட்டார். என் உடலுக்குள் திரும்ப நுளைந்த போது ஐஸ் தண்ணீர் குளத்தில் சட்டென்று குதித்தது போல சிலீரிட்டது.


சரியாக அதே நேரத்தில் டாக்டர்கள்
பாமின் நின்று போன இதயத்தை இயங்க வைக்க ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு குலுக்கலுடன் துடிக்க ஆரம்பித்தது இதயம் !
பிறகு டாக்டர்கள் நிமிட வாரியாக எழுதி வைத்திருந்த ஆபரேஷன் குறிப்புகளைப் பார்த்தால் பாம் சொன்னதுடன் ஆச்சரியமாக ஒத்துப் போயிற்று .

முழுவதும் மயக்க மருந்து கொடுக்கப் பட்டுக் கண் திறக்காமல் படுத்திருந்த பேஷண்ட் தாங்கள் பேசியது, செய்தது எல்லாவற்றையும் எப்படித் தெளிவாகச் சொன்னார் என்பது மருத்துவர்களுக்கே விடை தெரியாத புதிராக இருந்தது.

உமர் இப்னு தீனார் (ரலி) அவர்கள் :
" ஓர் அடியான் மரணம் அடைந்தவுடன் வானவர் அந்த ஆத்மாவை (ரூஹை) கையில் எடுத்துக் கொண்டு அவ்விடத்திலேயே நிற்கிறார் .
அந்த ஆத்மா தன் உடலை எப்படி குளிப்பாட்டுகிறார்கள் . எப்படி கபன் இடுகிறார்கள். யார் யாரெல்லாம் இந்த வேலையை செய்கிறார்கள் என்பதை பார்த்துக் கொண்டே இருக்கிறது. எப்பொழுது மக்கள் குளிப்பாட்டு வதற்காக பலகையின் மீது உடலைக் கொண்டு போய் கிடத்தி, பின்னர் மக்களும் இறந்தவரை புகழ ஆரம்பிக்கும் போது வானவர் , தம் கையிலுள்ள அம் மைய்யத்தின் ரூஹை நோக்கி , ரூஹே ! உம்மைப் புகழ்வதைப் பார்த்தீரா ? என கூறுகிறார் .
நூல் : அபூ நயீம்

பாடகி பாம் ரேணால்ட்ஸ் நேர்ந்தது "ஊப்" (00BE) எனப்படும் (out of body experience) உடல் ரத்து செய்யப்பட்டு , மனம் மட்டும் தனியாக இயங்குவதை விஞ்ஞானம் இன்னும் ஜீரணிக்கச் சிரமப்பட்டாலும் , இதை முழுவதும் பொய் என்று தள்ளிவிட முடியாத அளவுக்கு நூற்றுக்கும் மேற்பட்டவர்களிடம் பரிசோதித்ததில் இது உண்மைதான் என்று தெளிவாகி இருக்கிறது .
ஹதீஸ் குறிப்பிடும் பாலம் , பாடகி பாம் குறிப்பிடும் இருட்டான மிக நீண்ட குகை
இதெல்லாம் கருந்துளை என்னும் Black hole யை குறிப்பிடுகிறதா ?

அண்ட வெளியில் மனிதக் குரல்கள்
(விண்வெளி ரகசியம் 08)



" VOICE FROM THE UNIVERSE

(அண்ட வெளியில் குரல்கள்) - சுவிடன் நாட்டு ஜிர்கென்சன் என்ற ஆய்வாளர் எழுதிய புத்தகம் ரொம்பவும் சுவராசியமானது . இறந்தவர்களை புதைத்தப் பிறகோ , அவர்கள் மண்ணோடு மண்ணாகி மக்கிய பின்போ அவர்களின் குரல்களை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா ...? அதெப்படி அவர்களால் பேச முடியும் நாம எப்படி அதைக் கேட்க முடியும் ?
"முடியும் " என்கிறார் ஜிர்கென்சன் .

இந்த ஆய்வு நூலின் விஞ்ஞானி ஜிர்கென்சன் இசை ஆர்வம் உள்ளவர். மனித சஞ்சாரமற்ற காடுகளிலும் மலைப் பிரதேசங்களிலும் பல சப்த ஒலிகளை டேப் ரிக்கார்டு மூலம் பதிவு செய்தார் . அவற்றை பொறுமையாக வீட்டில் போட்டுக் கேட்ட பொழுது சில வித்தியாசமான குரல்கள் ஒலிப்பதைக் கேட்டார் . நிச்சயமாக அது பறவைகளின் குரல்கள்களோ, மிருகங்களின் குரல்களோ அல்ல என்பதையும் மெல்ல மெல்ல புரிந்து கொண்டார் .

மீண்டும் ஏகாந்தமான பல வனாந்திர வெளியில் பறவைகள் இல்லாத இடங்களில் டேப்பை ஓடச் செய்தார். இப்படி நூற்றுக்கணக்கான முறை ஆய்வு செய்தார் .அதில் பல வித்தியாசமான குரல்கள் டேப்பில் பதிவானது.
சில சமயங்களில் ஆராய்ச்சியாளரது இறந்து போன நண்பர்கள் மற்றும் உறவினர் குரல்களும் பதிவாயின . மேலும் முகம் தெரியாத பல மனித குரல்களும் பதிவாயின. மற்ற விஞ்ஞானிகள் இவரின் ஆய்வை பரிசோதனை செய்து ஒத்துக் கொண்டுள்ளனர். ஜிர்கென்சன் தாம் செய்த ஆய்வை நம்மையும் செய்யத் தூண்டுகிறார் . நீங்கள் தயாரா ?
" (நிராகரித்துக் கொண்டிருக்கும்) அவர்களில் எவனுக்கும் மரணம் வந்தாலோ (அவன் தன் இறைவனை நோக்கி) "என் இறைவனே! என்னை (உலகத்திற்கு) திரும்ப அனுப்பிவிடு.

நான் விட்டு வந்த அ(ந்த உலகத்)தில் (இனி) நல்ல காரியங்களையே நான் செய்து கொண்டிருப்பேன்" என்று கூறுவான். (எனினும்,) அது ஆகக்கூடிய காரியமன்று. (இத்தகைய சந்தர்ப்பங்களில்) அவன் கூறக்கூடியது வெறும் வார்த்தையே (யன்றி வேறில்லை.) அவர்களுக்கு முன் ஓர் அரண் ஏற்பட்டு விடும். (உயிர் கொடுத்து) எழுப்பப்படும் நாள் வரையில் அதில் தங்கிவிடுவார்கள் ."
(அல்குர்ஆன் : 23: 99,100)

நாம் உலகில் ரூஹும் உடலும் இணையப் பெற்று வாழ்வதைப் போன்று, அவர்களும் ஆலம் பர்ஜக்கேற்ற (மண்ணறையில்) முறையில் ரூஹும் , உடலும் இணையப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எனினும் அது நம் உடலைப் போன்று அல்ல .


ஸஃது இப்னு ஜிதாமா (ரலி) , அவ்பு இப்னு மாலிக் (ரலி) இருவரும் நண்பர்கள் இருவரில் யார் முதலில் மரணம் அடைந்தாலும் இருப்பவரின் கனவில் வந்து அங்குள்ள நிலவரம் பற்றி சொல்ல வேண்டும் என்ற முடிவு செய்திருந்தனர்

ஸஃது (ரலி)முதலில் இறந்து அவ்பு (ரலி) கனவில் தோன்றி , பல கஷ்டங்களுக்குப் பிறகு எனக்கு மக்ஃபிரத் கிடைத்தது என்பதை சொல்லும் போது , ஸஃது (ரலி) நினைவில் சொல்வது போல் இருந்ததாம் அவ்பு (ரலி) அவர்களுக்கு .
ஸஃது கழுத்தில் கரு நிற கோடு இருந்ததை அவ்பு விசாரித்தார்கள் அதற்கு ஸஃது " இன்ன யூதனுக்கு 10 அஷ்ரப் காசுகள் கடன் கொடுக்க வேண்டும் என் வீட்டில் இன்ன இடத்தில் அந்த காசுகள் இருக்கிறது அதை எடுத்து அந்த யூதனுக்கு கொடுத்து விடவும் .

என் மரணத்திற்குப் பிறகு என் வீட்டில் நடந்த சகல காரியங்களும் எனக்கு தெரியும் ; நான் வளர்த்த பூனை இறந்தது உட்பட எனக்கு எல்லாமே தெரியும் , இன்னும் 6 நாட்களில் என் அன்பு மகள் இறக்கப் போவதையும் என் வீட்டில் தெரிவித்து விடுங்கள் " .
ஸஃது இட்ட கட்டளைகளை அவ்பு நிறைவேற்றினார்கள். பூனை இறப்பும் சரியாக இருந்தது , அதே மாதிரி 6 நாட்களில் அவருடைய மகள் இறப்பும் துள்ளியமாக நடந்தது .
(ஆதாரம் உயூனுல் ஹிகாயத்)

அண்டவெளியில் மரணித்த ஆத்மாக்களால் சலனத்தை ஏற்படுத்த முடியும் என்பது மட்டும் அல்லாமல் உயிருடன் இருக்கும் நம்முடைய ஆன்மாக்களும் அண்ட வெளியில் சலனத்தை ஏற்படுத்துகிறது .
உமர் (ரலி) அவர்கள், அலீ (ரலி) அவர்களிடம் " ஹஸனின் தந்தையே ! ஒருவர் கனவு கண்டால் சில உண்மையாகவும் , சில பொய்யாகவும் ஆகிவிடுகின்றனவே , இது பற்றி தங்கள் கருத்து என்ன ?
" ஆம் , இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றிருக்கின்றேன் . அதாவது தூங்கக் கூடிய ஆண் , பெண்களின் ஆன்மாக்கள் அல்லாஹ்வின் அர்ஷு வரை சென்று பின்பு விழிப்படைகிறதோ அந்த ஆன்மா கண்ட கனவு விஷயங்களனைத்தும் நிச்சயம் நடந்தேறும் . இன்னும் எவர் ஆன்மா அர்ஷு வரை செல்லாத நிலையில் விழிப்படைகிறதோ அந்த கனவு பொய்க் கனவாக ஆகிவிடுகிறது
ஆதாரம் - முஸ்தத்ரக் ஹாகிம் .

பிரபஞ்ச ரகசியம்
(விண்வெளி ரகசியம் 09)



இந்த பிரபஞ்சம் உருவான ரகசியத்தை மெஞ்ஞானம் கடவுள் படைத்தார் என்கிறது. . மொத்த பிரபஞ்சமும் அணுக்களால் ஆனது என்கிறது விஞ்ஞானம்.
லியோன் லேடர்மான் என்பவர்தான் ஹிக்ஸ் போஸானுக்கு ‘கடவுள் துகள்’ என்று பெயர்வைத்தார். இவர் எழுதிய ‘கடவுள் துகள்' (தி காட் பார்ட்டிக்கிள்) என்னும் புத்தகத்திலிருந்தே இந்தப் பெயர் பிரபலமானது. லியோன் லேடர்மான், நோபல் பரிசு வென்ற இயற்பியலாளர்

" (அவன் எப்பொருளாலும் ஆனவன் இல்லை) அவன்தான் இவ்வுலகிலுள்ள ஒவ்வொன்றையும் படைப்பவன் அல்லாஹ்தான். அவன் ஒருவனே! அவனுக்கு இணைதுணையில்லை அவனே உலகிலுள்ள அனைத்தையும் அடக்கி ஆளுகின்றான் "
(அல்குர்ஆன் : 13:16)
இப்பேர்பட்ட இறைவனை படைப்பாளனை படைப்பாக்கி , அந்த படைப்பின் துகளை கடவுள் துகள் என்கிறார்கள் . இது முற்றிலும் முட்டாள்தனமான சொற்றொடர்தான் இந்த கடவுள் துகள் அதை " ஹிக்ஸ் போஸான் " என்றே நாம் அழைப்போம் .
ஹிக்ஸ் போஸான் இருப்பது **99.999%** உறுதி செய்யப்பட்டுள்ளதாக இது தொடர்பான ஆராய்ச்சியை நடத்தி வரும் விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.
இதன்மூலம் ஹிக்ஸ் போஸான் இருக்கிறதா இல்லையா என்பது தொடர்பான கேள்விகளுக்கு ஓரளவுக்கு விடை கிடைத்திருக்கிறது.

Big Bang எனப்படும் பெரு வெடிப்பைத் தொடர்ந்தே அணுக்களும், மூலக்கூறுகளும், கிரகங்களும், இந்த பேரண்டமும் (universe) உருவாயின என்பது விஞ்ஞான தியரி.
" ஆரம்பத்தில் வானம் என்றும் பூமி என்றும் தனித்தனியாக இல்லாமல் இருந்ததை நாமே பிரித்தமைத்தோம் "
(அல்குர்ஆன் : 21:30)

இதன்படி பிக் பேங் வெடிப்பு நிகழ்ந்த கணத்தில் அணுக்கள் ஒளியை விட பயங்கரமான வேகத்தில் எல்லா திசைகளிலும் சிதறின. அப்போது அந்த அணுக்களுக்கு எந்த நிறையும் (mass) இல்லை.
ஆனால், ஹிக்ஸ் போஸான் எனப்படும் 'சக்தியோடு' அவை தொடர்பு கொண்ட பிறகே அந்த அணுக்களுக்கு நிறை கிடைத்தது. இதன் அடிப்படையில்தான் இந்த பேரண்டம் உருவானது என்று சொல்கிறது ஸ்டாண்டர்ட் மாடல் தியரி.
இதையை எளிமையான உதாரணத்தால் சொல்கிறேன். கட்டடத்தை கட்டுவதற்கு செங்கற்களை அடுக்கி கட்டும் போது அவற்றிற்கு இடையே சிமிண்ட்டை வைத்து செங்கற்களை ஒன்றோன்று பிணைக்கப்படுகிறதல்லவா.. இந்த மாதிரியான பிணைப்பை ஏற்படுத்தும் சிமிண்ட்தான் இந்த ஹிக்ஸ் போஸான் என்ற அணுத்துகள்களை ஒன்றொடு ஒன்று ஒட்டும் சக்தி .
" பின்னர், வானத்தைப் படைக்கக் கருதினான். அது ஒருவகை புகைதான். அதனையும் பூமியையும் அவன் நோக்கி "நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி (வழிபட்டு) என்னிடம் வாருங்கள்" என்று கூறினான். அதற்கு அவைகள், "இதோ நாங்கள் விருப்பத்துடனேயே வந்தோம்" என்று கூறின. (அல்குர்ஆன் : 41:11)
விருப்பத்துடன் வந்த துகள்கள் எல்லாம் ஒன்றாகி கோள்கள் , நட்சத்திரங்கள் என அவன் நாடியபடியெல்லாம் உண்டாகின.

இந்த கோட்பாட்டின்படி (தியரி) இந்த யுனிவர்ஸ் உருவாக முக்கிய அடிப்படையாக இருந்தவை 12 வகையான அணுத் துகள்கள். அடுத்தடுத்து நடந்த ஆய்வுகளில் 11 அணுத் துகள்கள் அடையாளம் காணப்பட்டுவிட்டன. அவை இருப்பதையும் பார்த்துவிட்டோம்.
ஆனால், இதுவரை கண்ணுக்குப் புலப்படாத 'சூப்பர் ஸ்டார்' தான் ஹிக்ஸ் போஸான். சரி, இதைத் தான் கண்டுபிடிக்கவே முடியவில்லையே, விட்டுவிட வேண்டியது தானே என்றால், அதுவும் முடியாது. காரணம், அது இந்த யுனிவர்ஸ் உருவானது தொடர்பான ஒட்டு மொத்த தியரிகளையும் இது குப்பைக்குக் கொண்டு போய்விடும்.

சுவிஸ் நாட்டு இப்பரிசோதனைக்கு முன்னர் அமெரிக்காவில் பெரிய நிலத்தடி வட்டப் பாதையொன்று அமைக்கப்பட்டு, முறையாகப் பரிசோதனைகள் நடத்தப்பட்ட இன்னுமொரு பரிசோதனைச் சாலையொன்று அமெரிக்காவில் இருக்கிறது. அதை 'ஃபெர்மி லாப்' என்பார்கள். இது சிகாகோ மாகாணத்தில் உள்ள இல்லிநாய்ஸில் இருக்கிறது. இந்த ஃபெர்மி லாப் மூலம் பல அடிப்படைத் துகள்களை ஏற்கெனவே கண்டுபிடித்திருக்கிறார்கள் இந்த ஃபெர்மி லாபின் நிர்வாகத் தலைவராக இருந்தவர்தான், ஹிக்ஸ் போஸானுக்கு 'கடவுள் துகள்' என்னும் பெயரைச் சூட்டிய இக்கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்ன லியோன் லேடர்மான். அமெரிக்காவில் பல ஆண்டுகள் நீடித்த இந்த சோதனைகள் எந்த முடிவையும் எட்டாததால், அந்த ஆய்வுகளுக்கு நிதி தருவதை அமெரிக்க அரசு நிறுத்திவிட்டது.

இதைத் தொடர்ந்தே பிரான்ஸ்-சுவிஸ் எல்லையில் ஜெனீவா அருகே **27** கி.மீ நீளம் **574** அடி ஆழம் (அரை கி.மீ ஆழம்) சுரங்கம் தோண்டி ,**113** நாடுகளிலுள்ள 608 பல்கலை கழகத்தில் உள்ள **7931** அறிவியல் விஞ்ஞானிகள் ஆய்வு செய்ய, ஐரோப்பிய அணு ஆராய்ச்சிக் கழகம் **(CERN)** அமைத்த மாபெரும் வட்ட சுரங்க ஆய்வகத்தில் இந்தச் சோதனைகள் தொடங்கின.
அணுத் துகள்களுக்கு நிறையைத் தருவதாகக் கருதப்படும் ஹிக்ஸ் போஸான் தான் நம்மைச் சுற்றியுள்ள இந்த பேரண்டத்தின் பெரும் பகுதியை நிறைத்திருக்கிறது.

ஹிக்ஸ் போஸானால் பாதிக்கப்படாத ஒரே அணுத் துகள் ஒளிக் கதிர்களான போட்டான்கள் மட்டுமே. இதனால் தான் போட்டான்களுக்கு நிறை இல்லை. மற்ற எல்லா அணுத் துகள்கள் மீதும் இந்த ஹிக்ஸ் போஸான் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி நிறையைத் தந்துவிடுகிறது என்று சொல்கிறது ஸ்டாண்டர்ட் மாடல் தியரி.

ஆனால், அதில் விடுபட்டு நிற்கும் ஒரே கேள்வி அணுத் துகள்களுக்கு நிறையைத் தரும் ஹிக்ஸ் போஸானின் எடை என்ன என்பதே. (நிறை என்றால் என்ன?. ஒரு பொருளின் எடை மைனஸ் புவிஈர்ப்பு விசை தான் நிறை. அதாவது நமது எடை 55 கிலோ என்றால் நம் உடலின் மீது புவிஈர்ப்பு விசை செலுத்தும் இழுவிசையைச் சேர்த்தது தான் 55 கிலோ எடை. இதில் புவிஈர்ப்பு விசையை கழித்துவிட்டால் மிச்சமிருக்கும் எடையே நிறை)
பார்க்கவே முடியாத ஹிக்ஸ் போஸானை நிரூபிக்க ஒரே வழி. அதன் எடையைக் கண்டுபிடிப்பதே. இந்த ஆய்வைத் தான் **CERN** நடத்தியது.

இதற்காகத் தான் சிறிய அளவிலான **Big Bang** வெடிப்பை செயற்கையாக நடத்திப் பார்த்தனர். இதற்காகத் தான் நியூட்ரான்-புரோட்டான்களின் அதி பயங்கர மோதலை நடத்தினர். இந்த மோதலில் வெடித்துச் சிதறிய பல்வேறு அணுத் துணைத் துகள்கள், கதிர்வீச்சுகளுக்கு இடையே ஹிக்ஸ் போஸானையும் (அதன் எடையை) தேடினர்.

ஸ்டாண்டர்ட் மாடல் தியரியின் படி ஹிக்ஸ் போஸானின் எடை **125** கிகா எலெக்ட்ரோ வோல்ட்ஸ் **(GeV)** என்ற அளவில் இருக்க வேண்டும். அதாவது அணுக்களுக்குள் இருக்கும் துணைத் துகளான புரோட்டானின் எடையை விட **125** மடங்கு அதிகமாக இருக்க வேண்டும்.

CERN விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியில் **125.3+ GeV** எடை கொண்ட துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது 99.999% ஹிக்ஸ் போஸானாகத் தான் இருக்க வேண்டும் என்கிறார்கள்.

ஆனால், **0.1%** சந்தேகக் கேள்வி இன்னமும் மிச்சமிருக்கிறது கண்டு பிடித்தது ஹிக்ஸ் போஸான்தானா ...?

பிரபஞ்சத் தோற்றத்தைப் பற்றிய ஆய்வுகள் மிகவும் அவசியம்தான். ஆனாலும், பிரபஞ்சத்தின் முடிவுக்கு அவையே காரணமாக ஆகிவிடுமோ என்று பொதுமக்களைப் போலவே விஞ்ஞானிகளும் அஞ்சும்போது அந்த அச்சத்தை அவ்வளவு எளிதாகப் புறந்தள்ளிவிட முடியாது.

கருப்பு ஆற்றல் (Dark Energy)
(விண்வெளி ரகசியம் 10)



கருப்பு ஆற்றல் **(Dark Energy)** என்பது நமது பிரபஞ்சம் விரிவடைவதற்கு காரணமாகச் சொல்லப்படும் ஒரு கருதுகோள் அளவிலான ஆற்றல் ஆகும் பெருவெடிப்புக் கொள்கையின்படி நமது பிரபஞ்சம் தோன்றிய நாளிலிருந்து இந்நொடி வரை விரிவடைந்து கொண்டே போகிறது.

" (எவருடைய உதவியுமின்றி) நம்முடைய சக்தியைக் கொண்டே வானத்தை அமைத்தோம். நிச்சயமாக நாம் அதனை அவர்களின் அறிவிற்கெல்லாம் எட்டாதவாறு மிக்க விசாலமாக்கியும் வைத்திருக்கின்றோம்.
(அல்குர்ஆன் : 51:47)

இந்த விசாலமாக்கல் என்ற திட்டவட்ட வடிவமைப்பின்படி பார்த்தால் அண்டம் அல்லது பிரபஞ்சப் பெருவெளியை எடுத்துக்கொண்டால், பிரபஞ்சத்தில் உள்ள நம்மால் காணக் கூடிய பருப்பொருளின் அளவு வெறும் 5 சதவீதம் என்கின்றன. இந்த 5 சதவீகிதத்தில்தான் பால் வீதி முதல் அத்தனை சூரியன் கிரகங்கள் எல்லாமே அடங்கிப் போய் விடுகிறது

இதுவரையிலான வானியல் ஆய்வுகள். ஆனால் பிரபஞ்சத்தின் மீதமுள்ள 95 சதவீதம் என்னவென்று கேட்டால், நம் கண்ணுக்குத் தெரியாத கருப்பு பருப்பொருள் **(Dark matter)** சிறு அளவும், மீதம் மொத்தமும் 'கருப்பு ஆற்றல்' **(Dark energy)** எனப்படும் (மனிதர்களால் இன்னும் விளங்கிக்கொள்ள முடியாத) ஒருவகை மர்ம ஆற்றல்தான் என்கிறார்கள் வானியல் ஆய்வாளர்கள்.

சுருக்கமாகச் சொன்னால், இதற்கு முன்னர் 'மாற்றமடையாத ஒரு வெற்றிட ஆற்றலாகக் கருதப்பட்ட கருப்பு ஆற்றலானது தொடர்ந்து மாற்றமடையும் தன்மை கொண்ட சக்திவாய்ந்த ஒரு ஆற்றல்' என்பது இந்த ஆய்வு மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. முக்கியமாக, கருப்பு ஆற்றல் குறித்த இந்த புதிய உண்மையை உறுதி செய்ய, அடுத்த தலைமுறை கருவியான 'டார்க் எனெர்ஜி ஸ்பெக்டரோஸ்கோப்பிக் இன்ஸ்ட்ரூமென்ட் சர்வே' **(Dark Energy Spectroscopic Instrument (DESI) survey**) வைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொள்ள இருக்கிறார்கள்.
அதுமட்டுமல்லாமல், மிகவும் சக்திவாய்ந்த தொலைநோக்கியான ஜேம்ஸ் வெப் ஸ்பேஸ் டெலஸ்கோப் **(James Webb Space Telescope)** கருவியும் கருப்பு ஆற்றல் தொடர்பான பல மர்மங்களை விளக்கக்கூடிய ஆய்வுகளை மேற்கொள்ள பெரிதும் உதவும் என்று கூறப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தப்பிரபஞ்சத்தில் மனமும்,பொருளும் கனகச்சிதமாக சேர்க்கப்பட்டுள்ளது ஆனால் மனம் பொருளை விட வேறுபட்டதாகும் . அதேசமயம் பொருளால் முடியாத ஒரு செய்கையை மனத்தினால் வெகு சுலபமாகச் செய்யமுடியும். மனமானது எதுவொன்றைச் செய்யவும் பொருள் என்ற மூலப்பொருள் அவசியம் வேண்டும் . சொல்வது புரிகிறதா என்று உங்கள் மனதிடம் கேட்கிறேன் .

மூலப்பொருளை மனம் தன் இஷ்டப்படி உருமாற்றி அதற்கோர் புதுப்பெயர் கொடுத்து அறிமுகப்படுதததுகிறது .
இவ்வாறு செய்யும் போது மனமும் தன் தன்மையை இழக்கவில்லை அவ்வாறே பொருளும் தன் தன்மையை இழக்கவில்லை .இது எவ்வளவு அழகான விஷயம் .

ஒரு சிம்மாசனம் என்பதை ஆதாரமாகப் பார்த்தால் கண்ணுக்குத் தெரியாத கோடான கோடி அணுக்களின் கூட்டுச் சேர்க்கை ஆனால் சிம்மாசனம் கண்ணுக்குத் தெரிகிற ஒரு வஸ்து .
இந்த அணுக்கள் அனைத்தும் இங்கேதான் இருக்கிறது என்று சொல்ல முடியாது . அவைகள் இங்கே இருக்கலாம் என்ற சாத்தியக்கூறுகள் தாம் .இந்த சாத்தியக் கூறுகள் சாத்தியமாவது அவைகளை யாராவது பார்க்கும் போதுதான் "பார்ப்பது" என்பது அளவிடுவது போல . இந்த அளவிடும் செயலே சிம்மாசனத்தின் உண்மையைப் பாதித்து விடுகிறது என்கிறது குவாண்டம் கோட்பாடு

நீங்கள் வந்து அந்த அணுவைப் பற்றி நினைக்கையில்தான் அது ஒரு வடிவத்திற்கு வருகிறது நீங்கள் அதைப்பற்றி நினைக்கவில்லையெனில் இந்த பிரபஞ்சத்து அத்தனை அணுக்களும் சிதறிப் பரவிவிடும்
அணுக்களாக இல்லாமல் ஒரு சிம்மாசனம் என்று நினைக்கும் போதுதான் அந்த சிதறிப் போகும் அணுக்கள் ஒருவாறு தம்மை கட்டட அமைப்பாக அமைத்துக் கொண்டு சிம்மாசனம் என்று ஆகிறது

நீங்கள் பார்க்க விரும்பினால்தான் அணுக்கள் நிஜமாகின்றன அதனால்தான் நான் ஆரம்பத்தில் சொன்னது போல் இந்தப் பிரபஞ்சமே நீங்கள் அதைப்பற்றி நினைக்காவிட்டால் உண்மையாவதில்லை
(ஸுலைமான் தன் மந்திரிகளை நோக்கி) "சன்றோர்களே! அவர்கள் கட்டுப்பட்டவர்களாக என்னிடம் வந்து சேருவதற்கு முன்னதாகவே அவளுடைய சிம்மாசனத்தை என்னிடம் கொண்டு வருபவர் உங்களில் யார்?" என்று கேட்டார்.

அதற்கு ஜின்களிலுள்ள "இஃப்ரீத்" (என்னும் ஒரு வீரன்) "நீங்கள் இந்தச் சபையை முடித்துக்கொண்டு எழுந்திருப்பதற்கு முன்னதாகவே அதனை நான் கொண்டு வந்துவிடுவேன். நிச்சயமாக நான் இவ்வாறு செய்ய மிக்க சக்தியும் நம்பிக்கையும் உடையவன்" என்று கூறினான்.

(எனினும், அவர்களில்) வேத ஞானம் பெற்ற ஒருவர் (இருந்தார். அவர் ஸுலைமான் நபியை நோக்கி) "நீங்கள் கண்மூடித் திறப்பதற்குள் அதனை நான் உங்களிடம் கொண்டு வந்துவிடுவேன்" என்று கூறினார். (அவ்வாறே கொண்டு வந்து சேர்த்தார்.) அது தன் முன் (கொண்டு வந்து வைக்கப்பட்டு) இருப்பதை (ஸுலைமான்) கண்டதும், "இது நான் அவனுக்கு நன்றி செலுத்துகின்றேனா இல்லையா என்று என்னைச் சோதிப்பதற்காக என் இறைவன் எனக்குப் புரிந்த பேரருளாகும். எவன் (இறைவனுக்கு) நன்றி செலுத்துகிறானோ அவன் தனக்கே நன்மை செய்து கொள்கிறான். எவன் நன்றியை நிராகரிக்கின்றானோ (அதனால் என் இறைவனுக்கு யாதொரு நஷ்டமுமில்லை.) நிச்சயமாக என் இறைவன் (எவருடைய) தேவையற்றவனும், மிக்க கண்ணியமானவனாகவும் இருக்கிறான்" என்று கூறினார்
(அல்குர்ஆன் : 27: 38 - 40)

"(மூஸாவே !) உங்களுடைய தடியை நீங்கள் எறியுங்கள் என்றும் கூறப்பட்டது அது ஒரு பாம்பாகி நெழிவதைக் கண்டு அவர் திரும்பிப் பார்க்காது அதனைவிட்டு விலகி ஓடினார் மூஸாவே நீங்கள் பயப்படாதீர்கள் நிச்சயமாக என்னிடத்தில் எந்தத் தூதரும் பயப்படமாட்டார்கள்
திருக்குர்ஆன் (27 : 10)

பாம்பாக மாறியதை மூஸா (அலை) அவர்கள் பிடிக்க மீண்டும் தடியானது .
நெழிந்த பாம்பு எங்கே போனது ?
கருப்பு ஆற்றலை அறிந்து கற்றுக் கொண்ட பின்

" (சூனியக்காரர்கள்) தங்களுடைய தடிகளையும் கயிறுகளையும் எறிந்து ஃபிர்அவ்னுடைய கௌரவத்தின் மீது சத்தியமாக ! நிச்சயமாக நாங்களே வென்றுவிட்டோம் என்று கூறினார்கள்
பிறகு மூஸாவும் தன் தடியை எறிந்தார் அது பெரிய பாம்பாகி அவர்கள் கற்பனை செய்திருந்த சூனியங்கள் அனைத்தையும் விழுங்க ஆரம்பித்து விட்டது . திருக்குர்ஆன் (26 : 44 - 45)
மீண்டும் பாம்பை மூஸா பிடிக்க தடியாகி விடுகிறது !
ர. ரா

பிரபஞ்சத்தின் ரகசியமும்,
இயற்பியல் சிக்கல்களும்.
(விண்வெளி ரகசியம் 11)



"குவாண்டம் " என்ற சொல் ஒரு இலத்தீன் மொழிச் சொல்லாகும். அதன் பொருள் எவ்வளவு என்ற கேள்வியாகும். ஆனால் இக்காலத்தில் இச் சொல் "பொட்டலம் " என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகிறது .

குவாண்டம் கோட்பாட்டின்படி, இயற்கையின் அடிப்படைக் கூறுகள் தொடர்ந்து பிரிக்கக்கூடியவை அல்ல. உதாரணமாக, ஒளி அலை எனக் கருதப்பட்டாலும் அது ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழ் பிரிக்கப்பட முடியாதாகும் .
இது போலவே இடமும் , காலமும் கூட ஒரு அளவுக்கு மேல் சிறியதாக்கப்பட முடியாது என்பது குவாண்டம் கோட்பாட்டின் முடிவு ஆகும்.

குவாண்டம் இயற்பியல் நியூட்டனின் இயற்பியலுடன் அடிப்படையிலேயே வேறுபடுகின்றது .
நியூட்டனின் இயற்பியலில் " "நாம் இயற்கையின் போக்கை மாற்றாமல் அதனை ஆராய முடியும் " எனக் கருதப்பட்டது.

ஆனால் ஹைஸன்பர்க், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், இக்கருத்து தவறு என நிறுவினார்.
" நாம் இயற்கையின் ஒரு பகுதியைக் கவனிக்கும் செயலே **(the act of observation)** அதன் போக்கை மாற்றும் " என அவர் நிறுவினார்.
இதனால் நியூட்டனின் இயற்பியலில் இருந்து வந்த பிரபஞ்சத்திலிருந்து முழுக்க விலகிய நோக்கு **(entirely objective view of the universe)** எனும் கோட்பாடு நீங்கியது.
அளவீடு என்பது ஒதுக்கப்பட முடியாத ஒரு பகுதியானது. மேலும், ஒரு எலெக்ட்ரானின் இடத்தை நிர்ணயிக்கச் செய்யப்படும் ஒரு அளவீட்டினால் அதன் திசைவேகம் மாறிப்போகிறது.அதன் திசைவேகத்தை கணிக்கும் போது எலக்ட்ரானின் இருப்பிடம் மாறிப் போய் விடுகிறது .
எனவே ஒரே நேரத்தில் மிகச்சரியாக திசைவேகத்தையும் இடத்தை நிர்ணயிக்க முடியாது என்று அறிவித்தார் ஹைஸன்பர்க் .

இது இன்னாளில் ஹைஸன்பர்க்கின் ஐயப்பாட்டுக் கொள்கை என அழைக்கப்படுகிறது. இது குவாண்டம் இயற்பியலின் ஓர் அடிப்படைக் கோட்பாடாகும். இதனால் இயற்கையின் நிலையையோ போக்கையோ மனிதன் முழுமையாக அறிந்து கொள்ள முடியும் என்ற கொள்கை வீழ்ந்தது.

இயற்கையின் மகத்தான அதன் செயல்பாட்டை , மனிதன் ஒரு போதும் அறிந்து கொள்ள முடியாத மர்மமாகவே இருக்கும்
ஆனால் இறை ஞானிகளால் இயற்கையின் மர்மத்தை மட்டும் அல்ல,

அதன் எளிய செயல்பாட்டை அழகாக தானே செய்து காட்டுகிறார்கள் .
இப்படி செய்துகாட்டும் செயல்பாடுகள் சிறுபிள்ளைத்தனமாகவும் , கேலியும் கிண்டலுமாயும் நகைப்பிற்குரியதாகவும் ஆகி , அந்த இறைஞானியை மிக சுலபமாக " பைத்தியக்காரர்" என்ற முத்திரையை குத்தி விடுகிறது .

ஹஜரத் புஹ்லூல் தானா (ரஹ்) அவர்கள் ஒரு நிறைவான (மஜ்தூப்) தீவிர இறை நேசராக இருந்தார்கள் கலீஃபா ஹாரூன் ரஷீத் காலத்தில் பாக்தாத்தில் இருந்து வந்தார்கள்
ஒரு நாள் மாலை அந்தி சாயும் நேரத்தில் கலீஃபா ஹாரூன் ரஷீத் தன் மனைவி ஜுபைதா காத்தானுடன் டைகரீஸ் நதி (தஜ்லா நதி) நதிக்கரையோரம் உலாவச் சென்றார் அங்கு புஹ்லூல் தானா (ரஹ்) அவர்கள் ஈரமான ஆற்று மண்ணில் மணல் வீடுகள் கட்டிக் கொண்டு இருந்தார்கள்

அதைப் பார்த்த ஜூபைதா "பாபா , தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் ? "
"நான் சுவனத்தில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறேன்."
" இந்த வீடுகளைத் தாங்கள் விற்பனை செய்வீர்களா ? "
. "ஆமாம் ' ஒரு வீட்டின் விலை உமது கழுத்தில் கிடக்கும் முத்துமாலை "
உடனே ஜூபைதா முத்துமாலையை கழற்றிக் பாபாவிடம் கொடுத்து விட்டார்.
புஹ்லூல் மாலையை வாங்கிக் கொண்டு "செல்லுங்கள் இதுதான் உம்முடைய சுவனமாளிகை' " என்றார்கள்
இதைப் பார்த்துக் கொண்டிருந்த கணவர் ஹாரூன் ரஷீத் தன் மனைவியிடம் , "ஒரு மஜ்தூபிடம் விலை மதிப்பற்ற உன்னுடைய முத்து மாலையை கொடுத்து விட்டாயே , நீ ஒரு சரியான முட்டாளாக இருக்கிறாய் " என்று சற்று கோபப்பட்டார்.
அன்று இரவு உறக்கத்தில் கலீஃபா ஹாருன் ஒரு கனவு கண்டார். சொர்க்கத்தில் அவர் உலாவிக் கொண்டிருக்கும் போது மிக உயரமான அழகான முத்துக்களால் ஆன ஒரு மாளிகையைக் கண்டார் அதன் அழகில் அவர் அப்படியே சொக்கி நின்று விட்டார் அதன் வாயிலில் "ஜூபைதா காத்தூன் " என்று பொறிக்கப்பட்டிருந்தது

ஹாரூன் , அட நம்ம மனைவியின் மாளிகைதானே என்று உள்ளே நுழைய முயற்சிக்கும் போது ஒரு வானவர் அவரைத் தடுத்து " இது ஜூபைதா காத்தூனுடைய மாளிகை நேற்றுதான் தம்முடைய முத்துமாலையை விலையாகக் கொடுத்து வாங்கிக்கிறார் அவர் இதனுள் நுழையாதவரை வேறு யாருக்கும் நுழைய அனுமதி இல்லை" என்றார்.

ஹாரூன் ரஷீத் திடுக்கிட்டு எழுந்து டைக்ரீஸ் நதிக் கரைக்கு ஓடோடி விரைந்தார் அங்கு புஹ்லூல் தானா அவர்கள் நிறைய வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்தார் . ஹாரூன் அவரிடம் "பாபா எனக்கும் ஒரு வீடு தாருங்கள் அதற்குரிய தொகையைக் கொண்டு வந்திருக்கிறேன் என்றார்.

புஹ்லூல் புன்னகைத்தபடி "சுவனத்தில் எவர்கள் முத்து மாளிகையைக் காணவில்லையோ அவர்களுக்கே நாம் இந்த வீடுகளை விற்பனை செய்வோம். எவர்கள் சுவனத்து முத்து மாளிகையைக் கனவில் கண்டார்களோ அவர்களுக்கு நாம் ஒருபோதும் இந்த வீடுகளை விற்பதில்லை எனக் கூறி விட்டு சென்று விட்டார்.

புஹ்லூல் தானா (ரஹ்) அவர்கள் பூமியின் நதிக்கரையில் கட்டப்பட்டும் சிறிய சிறிய மணல் வீடுகள், அவைகள் சுவனத்தின் பெரிய பெரிய மாளிகையாக பரிணாமம் பெறுவதில்தான் குவாண்டம் கோட்பாட்டின் தாக்கம் தெரிகிறது
இயற்பியலில் நாம் இயற்கையின்
போக்கை மாற்றாமல் அதனை ஆராய முடியும் என்ற நியூட்டனின் கோட்பாட்டை
நாம் இயற்கையின் ஒரு பகுதியைக் கவனிக்கும் செயலே **(the act of observation)** அதன் போக்கை மாற்றும் என்ற சொன்ன ஹைஸன்பர்க் கோட்பாடு மேற்சொன்ன எளிய நிகழ்வில் ஹாரூன் ரஷீது அரசர் மூலம் நிரூபணமாகி இருக்கிறது .
"விண்ணிலும் மண்ணிலும் வலிமார்களுக்கு எந்த தடையும் கிடையாது .அவர்கள் விரும்பினால் (மரணத்திற்குப் பின்னரும்) தம் சொந்த உடலுடன் இப்பூமிக்கு வர முடியும்.
- கௌதுல் அஃலம் அப்துல் காதிர் ஜிலானி .
இது குவாண்டம் தத்துவத்தை அப்படியே பிரதிபலிக்கிறது .

சந்திரனில் மனித வாழ்க்கை

(விண்வெளி ரகசியம் 12)



" தவறாது ஒழுங்காக நடைபெற்று வருமாறு சூரியனையும் சந்திரனையும் உங்களுக்குப் பயனளிக்கக் கூடிய விதத்தில் படைத்து அமைத்தான்.
(மாறி மாறி) வரக்கூடிய இரவு பகலையும் உங்களுக்காக (அமைத்து அதில்) பயனடைய வகை செய்தான் " .
(அல்குர்ஆன் : 14:33)

சந்திரன் குறித்து கூறப்பட்ட இவ்வசனத்தில் பயனளிக்கும் விதத்தில் படைத்ததாக இறைவன் கூறுகிறான்.
நவீன அறிவியல் காலத்தில் சந்திரனின் பயன்பாடு என்பது அங்கு மனிதன் சென்று வாழ்வதற்கு ஏற்ற வகையில் அதனை மாற்றியமைக்க முடியுமா என்று விஞ்ஞான உலகம் எதிர்பார்க்கிறது.

மனித வாழ்க்கைக்கு ஏதுவான அடிப்படை வசதிகள் இல்லாத, ஆபத்தான தட்ப வெப்ப சூழல்களைக் கொண்ட ஒரு வெற்று நிலப்பரப்பாகத்தான் இருக்கிறது நிலவு.
நிலவுக்கும் நமக்குமான பந்தம் மிகச் சிறு வயதிலேயே நமக்குள் விதைக்கப்பட்டு விட்டது. சிறுவயதில் நிலவைக் காட்டி அம்மா சோறு ஊட்டியதும், அந்த நிலவில் பாட்டி அமர்ந்து வடை சுட்டுக் கொண்டிருக்கிறாள் என்று அம்மா கூறிய கதையும் நம்மால் மறக்க முடியாது.

நவீன காலத்தில் இன்று அதே நிலவில் சென்று வாழ்வதற்கான ஆயத்தங்களை உலக விஞ்ஞானிகள் செய்து வருகிறார்கள். தூரத்தில் இருந்து பார்க்கும்போது மிக அழகாகத் தெரியும் நிலா நிஜத்தில் அப்படி இல்லை. மனித வாழ்க்கைக்கு ஏதுவான அடிப்படை வசதிகள் இல்லாத, ஆபத்தான தட்ப வெப்ப சூழல்களைக் கொண்ட ஒரு வெற்று நிலப்பரப்பாகத்தான் இருக்கிறது நிலவு.

மனிதன் நிலவில் சென்று வாழ வேண்டுமானால், முதலில் அங்கு செல்லும் விண்வெளி ஆய்வாளர்கள் தாங்கள் பயணம் செய்த விண்வெளி கருவியை விட்டு வெளியேறி, நிலவின் நிலப்பரப்பில் தங்கி வாழ்வதற்கான சூழலை, அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம். அதன்பிறகுதான் அங்கு குடியிருப்புகளை நிறுவும் முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.
இதற்கிடையே சந்திரனில் வேற்றுகிரகவாசிகள் வந்து சென்றதற்கான சில தடயங்கள் கிடைத்திருப்பதாக சந்திரனில் எடுக்கப்பட்ட சில படங்களின் மூலம் சில வேற்றுகிரகவாசிகளின் தடயங்கள் கிடைத்துள்ளன என்பதாக அமெரிக்காவில் உள்ள அரிசோனா மாகாண பல்கலைக்கழகத்தின் இயக்குனர் டாக்டர் பால் டேவிஸ், ராபர்ட் வாக்னர் போன்ற விண்வெளி ஆராய்ச்சியார்கள் கூறுகின்றனர்.
அந்த வகையில், சமீபத்தில் நிலவில் இருந்து தகவல்களை சேகரித்து அனுப்பிய ஜப்பான் நாட்டு ‘செலீன்’ விண்கலம் **(Selene spacecraft),** நிலவில் அதிக அளவில் இருக்கக்கூடிய லாவா குழாய்கள் **(Lava Tubes)** எனப்படும் பகுதிகள் மனித வாழ்க்கைக்கு ஏதுவான அல்லது பாதுகாப்பான இடங்களாக இருக்கக்கூடும் என்ற தகவலை தெரிவித்துள்ளது.

இந்த லாவா குழாய்கள் நிலவில் ஏற்படக்கூடிய மிகப்பெரிய எரிமலைகளால் உருவாக்கப்படும் குழாய் போன்ற அமைப்புகள் என்று கூறப்படுகிறது. இதுபோன்ற லாவா குழாய்கள் பூமியிலும் எரிமலைகளால் உருவாக்கப்படுகின்றன.
அது சரி, லாவா குழாய்கள் எப்படி மனித வாழ்க்கைக்கு பாதுகாப்பான இடமாக இருக்க முடியும்?
லாவா குழாய்கள் வழியாக ஓடக்கூடிய லாவா குழம்பு முழுவதும் வடிந்துவிட்ட பின்னர், அந்த குழாய்கள் மனிதர்கள் வாழக்கூடிய அளவுக்கு உறுதியான ஒரு அமைப்பாக மாறுகிறது. மேலும், ஒரு அமெரிக்க நகரம் முழுவதையும் குடியமர்த்தும் அளவுக்கு மிகப் பெரிய ஒரு அமைப்பாக நிலவின் லாவா குழாய்கள் இருக்கின்றன என்கிறார் இந்த ஆய்வினை மேற்கொண்ட விண்வெளி ஆய்வு மையமான ‘ஜாக்சா’வின் **(Japan Aerospace Exploration Agency, JAXA)** ஆய்வாளர் ஜுனிச்சி ஹருயாமா.
மேலும், இந்த லாவா தொடர்பான மேலதிக தகவல்களை அளிக்கக்கூடிய பாறை மாதிரிகள், வெப்ப ஓட்ட தகவல்கள் மற்றும் நிலவின் பூகம்பங்கள் தொடர்பான தகவல்கள் அனைத்தையும் ஆய்வு செய்ய வேண்டியது அவசியம் என்கிறார்

ஹருயாமா.வேற்றுகிரக வாசிகள் இந்த லாவா குழாயைத்தான் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதும் விஞ்ஞானிகளுக்கு தெரிய வந்துள்ளது .

மனிதர்களின் நிலவுக் குடியிருப்பாக எதிர்காலத்தில் மாறக் கூடிய லாவா குழாய்களை முழுமையாகப் புரிந்துகொள்ள, தற்போது நிலவைச் சுற்றி வட்டமடித்து தகவல்களைச் சேகரித்து வரும் ஜப்பானின் செலீன் விண்கலம் அனுப்பிய தகவல்கள் மட்டுமல்லாமல் கடந்த 2011-ம் ஆண்டில் நாசாவின் கிராவிட்டி ரெக்கவரி அண்டு இன்டீரியர் லேபரட்டரி அல்லது கிரெய்ல் திட்டத்தில் **(Gravity Recovery and Interior Laboratory (GRAIL) mission)** சேகரிக்கப்பட்ட தகவல்களையும் ஆய்வு செய்துள்ளது ஜப்பானிய ஆய்வுக்குழு.
முக்கியமாக, நிலவில் உள்ள மேரியஸ் மலைகள் (Marius Hills) எனப் படும் எரிமலைக்குன்று மலைத் தொடர்களுக்கு அருகில் உள்ள லாவா குழாய்கள் தொடர்பான ஆதாரங்கள் இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

மேலும், நிலவுக்கு மனிதர்களை அனுப்பி அங்கு குடியிருப்புகளை அமைக்க நிலவிலுள்ள மேலும் பல லாவா குழாய் களைக் கண்டறிவதும், அவை எவ்வளவு ஆழமாக மற்றும் உயரமானவையாக இருக்கின்றன என்பதை உறுதி செய்வதும் அவசியம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.
ஆக மொத்தத்தில், மனிதர்கள் நிலவில் சென்று வாழ்வது உறுதியாகும் பட்சத்தில் நமது வாழ்விடம் லாவா குழாய்களாக இருந்தால் ஆச்சரியப்படத் தேவையில்லை!
" தவறாது ஒழுங்காக நடைபெற்று வருமாறு சூரியனையும் சந்திரனையும் உங்களுக்குப் பயனளிக்கக் கூடிய விதத்தில் படைத்து அமைத்தான் "

கால வெளி பரிமாணங்கள்.
(விண்வெளி ரகசியம் 13)



ஒரு புள்ளி ஓர் இடத்தில் நிலையாக இருக்குமெனில் அது ஒற்றைப் பரிணாமத்தில் இருக்கிறது . கணித ரீதியாகச் சொன்னால் " dot (புள்ளி).
இதே புள்ளி நகர்ந்தாலும் ஒற்றைப் பரிமாணத்தில் உள்ள நேர்கோடு **(Stright line)** என்கிறார்கள்.
இந்த கட்டுரை ஆய்வு பேப்பர் நீளம் அகலம் கொண்ட இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. புரிகிறதா ?...புரிந்திருக்கும் .

நீங்கள் கட்டியிருக்கும் வீடு நீளம் , அகலம் , உயரம் கொண்ட முப்பரிமாணமானது .
அடுத்து நான்காம் பரிமாணம் என்பது "நேரம் " ஆம். அது நேரம்தான். நான் முன்பு கூறியது போல் இந்தப் பூமியில் நீளம், அகலம், மற்றும் உயரம் அல்லது ஆழம் உள்ளது போல் நேரமும் உள்ளது. ஆனால் இந்த பூமியினுள் நீங்கள் இருக்கும் வரை உங்களால் நான்காம் பரிமாணத்தை உணர முடியாது அல்லது அது மிகக் கடினம். ஏனெனில் உங்களால் இங்கு நேரத்தைக் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் இதனைப் புரிந்து கொள்ள ஓர் உதாரணம் கூறுகிறேன்.

நீங்கள் உங்கள் நண்பரைச் சந்திக்க வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு உணவகத்தில் சந்திப்பதாக முடிவு செய்யப்பட்டது .
இங்கு நீங்கள் உங்களையே அறியாமல் மூன்றாம் பரிமாணத்துடன் நேரத்தை நான்காம் பரிமாணமாக சேர்க்கிறீர்கள். ஆனால் உங்களால் இந்த நேரத்தைக் கட்டுப்படுத்த முடியாது. அதாவது உங்களால் மற்ற பொருட்களின் நீளம், அகலம் மற்றும் உயரத்தைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியும் ஆனால் நேரம் அதுவாகவே ஒரு முன்னோக்கி சென்று கொண்டு இருக்கிறது.

நதியைப் போல .
தற்பொழுது நீங்கள் வெள்ளிக் கிழமைக்குப் பதிலாக சனிக்கிழமை மாலை 4 மணிக்குச் செல்கிறீர்கள்... தற்போது உங்கள் நண்பர் அங்கு இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவர் வெள்ளிக்கிழமை மாலை காத்திருந்து விட்டு சென்று இருப்பார். இப்பொழுது உங்களால் நேரத்தைக் கட்டுப்படுத்த முடியும் என கற்பனை செய்து கொள்வோம், நீங்கள் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இருக்கிறீர்கள். உங்கள் நண்பர் அங்கு இல்லை. ஆனால் உங்களுக்கு அவரை எங்கு சென்று பார்க்க வேண்டும் எனத் தெரியும். ஆகையினால் நீங்கள் உங்களது நேரத்தை மாற்றியமைத்து வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குச் சென்று உங்கள் நண்பரை சந்திக்கிறீர்கள். அறிவியல் ரீதியாக இது இன்னும் சாத்தியமில்லை எனினும் இதை விஞ்ஞானம் கற்பனை செய்து அப்படி காலத்தை பின் நகர்த்த யோசிக்கிறது !

.....ஆனால் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவன் இதை சாத்தியமாக்கி இருக்கிறான் . ஒரு சமயம் அலீ (ரலி) அவர்கள், நபிகளார் கொடுத்த வேலையை செய்து முடிப்பதற்குள் அஸர் தொழுகை "களா" ஆகி விட்டது . இதனால் அலீ (ரலி) அவர்கள் ரொம்பவும் பரிதவித்தார்கள் உடனே நபிகளார் , மறையக்கூடிய சூரியனை பின்னோக்கி நகரச் செய்து அஸர் நேரத்தை மீட்டுக் கொண்டு வந்தார்கள் . அதாவது காலத்தைப் பின்னோக்கி நகர்த்தினார்கள் .அலீ (ரலி) அஸர் தொழுகையை வஃதோடு தொழு முடிகிறார்கள் .

நீங்கள் இயக்குனர் **கிறிஸ்டோபர் நோலன்** படமாக்கிய விஞ்ஞான சினிமா "**இன்டெர்ஸ்டெல்லர்** " படம் பார்த்திருப்பீர்களானால், அதில் ஆங்காங்கே, எதிர்கால மனிதர்கள் ஐந்து பரிமாணம் மூலம் அந்தக் குழுவை தொடர்பு கொள்வதாய் காட்சி வரும்.
அப்படத்தின் உச்சகட்ட காட்சியில் Cooper மற்றும் ரோபோட் **TARS** உடன் **gargantua** கருந்துளையினுள் விழுந்து விடுவார். அதன் பின் அவர் ஒரு ஐந்து பரிமாணப் பகுதிக்குள் கண் விழிப்பார். அந்த ஐந்து பரிமாணம் மூலம் இறந்த காலத்தில் உள்ள தன்னையும், தன் மகளையும் காண்பார் மற்றும் தன் மகளுடன் ஈர்ப்பு விசையின் மூலம் தொடர்பு கொள்வார். இது எப்படி சாத்தியம் ?
;
இதுவும் சாத்தியமாகி இருக்கிறது. மிஹ்ராஜ் என்ற விண்வெளி பயணத்தின் போது நபிகளார் எதிர்காலத்தில் வர இருக்கும் தஜ்ஜாலையும் பார்க்கிறார்கள் . கடந்தகாலத்தில் வாழ்ந்த நபி மூஸா (அலை) , யூனுஸ் (அலை) , ஈஸா (அலை) ஆகியோர்களைப் பார்க்கிறார்கள்
(ஹதீஸ் முஸ்லிம்)

சில பரிமாணங்கள் உங்கள் வீட்டுக்குள்ளே புகுந்து வீட்டுப் பின்வெளிப்புறம் வழியாக சென்று அது இரண்டாவது வானத்தை அடையலாம். அது உங்களுக்குத் தெரிவது இல்லை .
முப்பரிணாமத்தைக் கொண்டு வாழும் நாம், நாம் இருக்கும் இதே தெருக்களில் அதே திசையில் இன்னொரு பரிணாமக்காரர்களின் சொந்த வீடுகள், அவர்களுடைய வாகனங்கள், அவர்களுடைய உயிரினங்கள் கூட இருக்கலாம். அவைகள் இருப்பதும் உங்களுக்கும் எனக்கும் தெரிவதில்லை .

நபி (ஸல்) அவர்கள் முப்பரிமாணத்திற்கும் அப்பாற்பட்ட வேறொரு பரிமாணத்திலுள்ள வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்களைக் கண்டதாக குர் ஆனில்
"நிச்சயமாக ஜிப்ரயீல் தெளிவான வானத்தின் கடைக்கோடியில் மெய்யாகவே கண்டார்"
குர்ஆன் (81 : 23)

அதே ஜிப்ரயீல் (அலை) மூன்றாம் பரிணாமத்திற்குள் வந்து "யா ரசூல்லாஹ் ! இஸ்லாம் என்றால் என்ன ? கேள்வி கேட்டு விட்டு ஜிப்ரயீல் போன பிறகு சுற்றி இருந்த நபித்தோழர்களிடம் " வந்தது யார் தெரியுமா என்று கேட்க அவர்கள் தெரியாது என்றதும் வந்தவர் வானவர் ஜிப்ரயீல் (அலை) என்கிறார்கள் நபியவர்கள் .
நபி ஸாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகம் கொலை செய்யப்பட்டதும், அதன் கன்று தன் தாய் ஒட்டகம் எந்த மலையிலிருந்து வெளிப்பட்டதோ அதே மலையின் உள்ளே போய் மறைந்தும் விட்டது . அந்த கன்று கியாமத் நாளின் போது "தாபித்துல் அர்ளு" என்ற கால்நடையாக உருமாறி , அந்த ஒட்டக கன்று வெளிவரும் . (ஹமீதிய்யா தப்ஸீர்)

" இறுதி நாள் அவர்களை நெருங்கிய சமயத்தில், அவர்களுக்காகப் பூமியில் இருந்து ஒரு கால்நடையை நாம் வெளிப்படுத்துவோம். அது அந்தெந்த மனிதர்கள் நம்முடைய வசனங்களை நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை அவர்களுக்குச் சொல்லிக் காண்பிக்கும் " குர்ஆன் (27 : 82)

அந்த கால்நடை எந்த பரிமாணத்தில் இப்போது மறைத்து வைக்கப்பட்டு இருக்கிறது ?
கியாமத் நாளின் போது ஒற்றைக் கண் தஜ்ஜால் வெளிப்படுவான் நெற்றில் 'காபிர் " என்று எழுதப்பட்டிருக்கும் தன்னை இறைவன் என்பான் . அவன் மழை பொழியச் சொல்வான் மழையும் பொழியும் -ஹதீஸ்
நபி (ஸல்) அவர்கள் காலத்தில் நபிகளார் சொல்லிய அடையாளத்தை உடையவனை நபித் தோழர் ஒருவர் அவனைப் பார்த்து , நபியிடம் சொன்னபோது . நபிகளார் ," நீங்கள் பார்த்தது தஜ்ஜாலேதான் " என்று உறுதி அளித்துள்ளார்கள்.
அன்று கண்ட அந்த தஜ்ஜால் கியாமத் நாள் வரை எங்கே இருக்கிறான் ? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான் ? எத்தனையாவது பரிமாணத்தில் அவன் ஒளிந்து இருக்கிறான் என்று யாருக்காவது தெரியுமா ?
சரி எத்தனை பரிமாணங்கள்தான் பிரபஞ்சத்தில் இருக்கிறது?

சுமார் 16 பரிமாணங்கள் வரை இருக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.
நபிகளார் மிஹ்ராஜ் சென்று இறைவன் 50 கால தொழுகையை கடமையாக்கியதை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து பின் ஐங்கால தொழுகை பெற்று வந்தார்களே ... இது எத்தனையாவது பரிமாணத்தில் நிகழ்ந்த நிகழ்வு என்று எந்த விஞ்ஞானத்திடம் நாம் கேட்பது

அங்கே பார்வைகள் சென்றடைய முடியாது .
(விண்வெளி ரகசியம் 14)



لَا تُدْرِكُهُ الْاَبْصَارُ وَهُوَ يُدْرِكُ الْاَبْصَارَ‌ وَهُوَ اللَّطِيْفُ الْخَبِيْرُ
" பார்வைகள் அவனை அடைய முடியாது. அவனோ பார்வைகள் அனைத்தையும் அறிந்து கொள்கின்றான். அவன் (எவரின் பார்வைக்கும் அகப்படாத) மிக நுட்பமானவன்; மிக்க அறிந்தவன்."
(அல்குர்ஆன் : 6:103)

இஸ்மாயீல் பின் உலய்யா (ரஹ்) அவர்கள் மேற்கண்ட வசனத்திற்கு "பார்வைகள் அவனை எட்ட இயலாது என்பது இம்மையைப் பொறுத்ததாகும். ஆனால் மறுமையில் , " அந்நாளில் சில முகங்கள் மலர்ந்திருக்கும் : தம் இறைவனைப் பார்த்துக் கொண்டிருக்கும் " _ குர்ஆன் (75 : 22)
இம்மையில் இருந்து பார்க்கும் பார்வைகள் அங்கே போக முடியாதற்குரிய காரணமாக ஈர்ப்பு ஆற்றலை குறிப்பிடுகிறார்கள் விஞ்ஞானிகள் .

ஈர்ப்பு ஆற்றலைப் பற்றி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் ஆராய்ந்தார். பூமி நம்மை எல்லாம் இழுக்கிறது . சூரியன் தன்னைச் சுற்றும் கிரகங்களைக் கவர்கிறது . இந்த கவரும் சக்திக்கு ஈடு கொடுக்க கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. அந்தச் சுற்றினால் ஏற்படும் வெளி நோக்கிய சக்தி , ஈர்ப்பு சக்திக்கு ஈடு கொடுப்பதால் கிரகங்களால் ஏறக்குறைய வட்டப்பாதைகளில் சுற்றிச் சமாளிக்க முடிகிறது .

இந்த ஈர்ப்பு சக்தி இருப்பதை நிஜமென்று எடுத்துக்கொண்டு விஞ்ஞானி நியூட்டன் போன்றவர் , கிரகங்கள் சுற்றும் பாதைகளைத் துல்லியமாகக் கணக்கிட்டார்கள் .
நியூட்டன் விதிப்படி இந்த ஈர்ப்பு சக்தி என்பது ஒவ்வொரு பொருளின் ஆதார இயற்கை .ஒரு பொருளின் எதிரே மற்றொரு பொருளை வைத்தால், இரண்டும் ஒன்றுக்கொன்று கவர்ந்து கொள்வது அவற்றின் இயற்கை என்று அவர் நம்பினார்,
ஆனால் ஐன்ஸ்டீன் அப்படி அதை நம்பவில்லை. இந்த ஈர்ப்பாற்றல் ஜடப்பொருளின் இயற்கை அல்ல . அந்தப் பொருளைச் சுற்றியுள்ள வெளி , ஸ்பேஸ் , அந்தப் பொருள் இருப்பதால் வெளியை வளைத்து விடுகிறது.

இந்த வளைவினால் ஏற்படும் சரிவே , வழுக்கலே , ஈர்ப்பாற்றாலாகி விடுகிறது
இந்தக் கருத்து சூரிய கிரகணத்தின் போது சூரியனுக்குப் பின் மறைந்திருக்கும் நட்சத்திரங்கள் சூரியனைச் சூழ்ந்துள்ள "வெளி" வளைந்திருப்பதாக காட்டியது. அந்த நட்சத்திர ஒளி வளைந்து வளைந்து நம்மை வந்து சேரும் என்றார் ஐன்ஸ்டீன்
'இப்படி வளைந்து வளைந்து வெளி முழுவதும் திரும்ப ஒன்றுடன் ஒன்று சேர்ந்துகொண்டு விடும். அப்படியெனில் இங்கிருந்து புறப்பட்ட ஒளிக்கற்றை விண்வெளியில் சென்று கோடிக்கணக்கான வருஷங்களுக்குப் பிறகு புறப்பட்ட இடத்துக்கே திரும்ப வந்துவிடும் ! இதில் காலம் என்பது என்ன ? தூரம் என்பது என்ன ? சரித்திரம் என்பது என்ன ? எதிர்காலம் , இறந்த காலம் எல்லாம் ஒன்றிப் போகின்றன
!வளைந்த வெளியை சிந்தனையில் தேக்குவதற்கே முடியாமல் விஞ்ஞானிகள் திணறினார்கள்


" வளைந்த வெளியாவது ...? சரி ! "
" வளைந்த வெளிக்கு அப்பால் என்ன ?
அதுவும் வெளிதானே ...? "
" இல்லை ! வெளிவளைவோடு அவ்வளவுதான் ! "
" எப்படி ? நினைத்துப் பார்க்கவே முடியவில்லையே !"
இதிலிருந்து விஞ்ஞானிகள் 'நம்புலன்களுக்கும் , சிந்தனைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு ஞானம் இருக்கலாமோ என்று சிந்திக்கத் துவங்கியுள்ளார்கள்
இந்த வகை ஞானத்தைப் பற்றி உபநிஷத்துகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது .
" அங்கே பார்வை போவதில்லை .பேச்சு நுழைவதில்லை. மனம் செல்வதில்லை அதை எப்படி தொடுவதென்று நமக்குத் தெரியாது , நமக்குப் புரியாது " என்று ' 'கேனோபநிஷத்தில் ' சொல்லியிருப்பது அவர்களை - நவீன பௌதீக விஞ்ஞானிகளை வேத சிந்தனை அழைத்தது இந்த ஈர்ப்பாற்றலின் கோட்பாடுகள் .
ர.ரா

Alaudin Muthalief

நியூட்டனின் தியரியான ஈர்ப்பு சக்தியினால் சூரியன், சந்திரன் போன்றவைகள் கட்டுண்டு சுற்றி வருவதாக சொன்னதும் அதனைத் தொடர்ந்து ஐன்ஸ்டீனின் தியரியான விண்வெளியில் இருக்கக்கூடிய வளைவினால் ஏற்படும் வழுக்கலே ஈர்ப்பு விசையாகவும், அதனால் கிரகங்கள் வட்டப்பாதையில் சுற்றுகின்றன போன்ற தியரிகள் இருந்தாலும் அல்லாஹ் தன்னுடைய திருமுறையில் தெளிவாக சூரா யாசீன் 36:40வது ஆயத்தில் "சூரியனும் சந்திரனும் அவற்றிற்கென்று நியமிக்கப்பட்ட *வட்டப்பாதையில்* *நீந்தி செல்கின்றன* " என்று குறிப்பிடுகிறான்.

நீந்திச் செல்கின்றன என்ற வார்த்தைக்கு தன்னைத்தானே சுற்றிக்கொண்டு செல்லும் செயல் தான் நீந்துதல் என்று பலராலும் அர்த்தப்படுத்தப்பட்டாலும், அதற்கு அடுத்து வரும் ஆயத்தில் அதற்கு அத்தாட்சியாக தாவூத் (அலை) அவர்களின் சந்ததிகள் நிரப்பப்பட்ட கப்பலைக் குறிப்பிடுவதிலிருந்தும் அதற்கு அடுத்த ஆயத்தில் அது போன்ற பல கலங்களைப் படைத்திருப்பதற்கு ஒப்பிடுவதிலிருந்தும் அதற்கு அடுத்த ஆயத்தில் நாம் நாடினால் மூழ்கடித்துவிடுவோம் என்று சொல்வதிலிருந்தும் ஈர்ப்பு விசையினால் கிரகங்கள் வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன என்பதை விட சூரியன், சந்திரன் போன்ற கிரகங்களை விண்வெளியில் அவற்றிற்கான வட்டப்பாதைகளில் நீந்தச் செய்வதுடன் எப்படி தாவூத் (அலை) அவர்களின் கப்பலை வெள்ளப்பிரளயத்தில் மூழ்கிவிடாமல் தன் கட்டுப்பாட்டில் நீந்தி செல்ல வைத்தானோ அது போல் சூரியனையும், சந்திரனையும் அவன் கட்டுப்பாட்டில் வட்டவரைக்குள் பாதுகாப்பாக நீந்திச் செல்லவைத்து அவற்றை செலுத்துகிறான் என்று உவமைப்படுத்துவதனைப் புரிந்து கொள்ள முடிகிறது. அல்லாஹுவே மிகவும் அறிந்தவன்.

அணுக்குள்ளே ஓர் உலகம்.
(சிவ தாண்டவம்)
(விண்வெளி ரகசியம் 15)



நவீன விஞ்ஞானம் அணுக்குள் புகுந்து பார்த்ததில் அத்தனையுமே மெஞ்ஞான கோட்பாடுகள் ! இதை எங்கே போய் சொல்வது ?
அணுக்குள் இருக்கும் துகள்கள் எல்லாம் சக்தியின் வடிவங்கள்! அவை சதாசஞ்சரித்துக் கொண்டே இருக்கின்றன. ஒன்றுடன் ஒன்று சதா உறவாடுகின்றன. தத்தம் சக்திகளைப் பரிமாறிக் கொள்கின்றன. சக்திகளை இழக்கின்றன. அவைகளை இன்ன இடத்தில்தான் ஸ்திரிமாக இருக்கின்றன என்று தனிப்படுத்திச் சொல்ல யாராலும் முடியவில்லை .புதிது புதிதாக தோன்றுகின்றன . மாறுகின்றன. எப்போதுமே அவை அசைந்தாடுகின்றன சதா சுறுசுறுப்பான இந்த இயக்கத்தின் மூலம் ஏற்படும் ஒட்டுமொத்தமான இந்த வடிவமைப்புதான் வெளி உலகத்தில் நீங்களும் நானும் காணும் எல்லா வஸ்துகளின் தோற்றங்கள் என்றால் , எவ்வளவு பெரிய ஆச்சரியங்கள் .

உன்னிப்பாகப் பார்த்தால் பிரபஞ்சம் முழுவதுமே ஓர் இயக்கம்தான் . சதா துடிப்புத்தான்; சக்தியின் உத்வேகம்தான் செயல்பாடுகள்தாம் இதை விஞ்ஞானமே சொல்கிறது.

அணுக்கருவுக்குள் இருக்கும் துகள்களை ஆராயும் போது ஒரு வித ஒழுங்கை கவனிக்கிறார்கள் . நம்மைச் சுற்றியுள்ள பொருட்கள் அனைத்தும் எலக்ட்ரான் , புரோட்டான் , நியூட்ரான் இம் மூன்றும் ஸ்திரமான துகள் இவைகளுக்கு எடை உண்டு. நியூட்ரான் என்பது சுயமாக அழியக் கூடியது - அழிவது என்றால் கலைந்து போய் விடுவது. இதனை "பீட்டா டீ க்கே **(Beta decay)** என்கிறார்கள் .

மின்காந்த சக்தி ஏற்படுத்தும் போது எலக்ட்ரான் , புரோட்டான் , ஃபோட்டான். ஏற்படுகிறது இதில் ஃபோட்டானுக்கு எடை இல்லை .

நியூட்ரான் தானாகவே கலைந்து போகும் போது புரோட்டானாக மாறுகிறது . அத்துடன் ஓர் எலக்ட்ரானும் உண்டாகிறது .மேலும் நியூட்ரீனோ என்று ஓர் எடையில்லாத ஸ்திரமான துகளும் ஏற்படுகிறது.
இந்த ஒவ்வொரு துகளுக்கும் ஓர் எதிர்த்துகள் **(anti particle)** ஏற்படுகிறது.
எலக்ட்ரானுக்குப் பாஸிட்ரான் , புரோட்டானுக்கு ஆண்ட்டி புரோட்டான் , நியூட்ரானுக்கு ஆண்டி நியூட்ரான் ,
நியூட்ரீனோக்கு ஆண்டி நியூட்ரீனோ. இப்படி ஜோடிகள் .
" அவன்தான் சகலவற்றையும் (ஆணும் பெண்ணும் கலந்த) ஜோடி ஜோடியாக படைத்தான் " - (அல்குர்ஆன் : 43:12)

நியூட்ரான் கலைவில் வெளிப்படும் இந்த மாதிரி துகள்கள் நூற்றுக்கணக்கில் இருக்கிறது. இவை யாவும் மிக மிக தற்காலிகமான துகள்களே. சிறிது காலம் மிகச் சிறிது காலம் வாழும் விட்டில் பூச்சிகள் இந்தத் துகள்கள். ஒரு செகண்டில் பத்து லட்சத்திற்கு ஒரு பங்கே வாழக்கூடியவை . இருந்தும் இந்தத் துகள்களின் மிகச் சிறிய அளவுடன் ஒப்பிட்டால் , இந்தச் சிறிது காலம் கூட நம்முடைய 100 வருட முழு வாழ்நாளுக்கு ஒப்பாகும் . அது சரி 50 ஆயிரம் வருடங்கள் பூமியில் ஆகும் போது தங்களுக்கு ஒரு நாள்தான் ஆகும் என்று மலக்குமார்கள் , 100 வருடம் வாழும் மனித குலத்தின் வாழ்வு ,
மலக்குமார்களுக்கு துச்சமாக இருப்பது போல , இந்த சிறிய துகள்களின் வாழ்வு காலம் நமக்கு மிக துச்சமாக தெரிகிறது.
" அந்நாளில் மலக்குகளும், ஜிப்ரயீலும் அவனிடம் போய்ச் சேருவார்கள். (அந்நாள்) ஐம்பதினாயிரம் வருடங்களுக்குச் சமமாக இருக்கும் "
(அல்குர்ஆன் : 70:4)

நியூட்ரான் கலைவில் நூற்றுக்கணக்கான துகள்களுக்கு பெயர்கள் : ஹேட்ரான்ஸ் ,லெப்டான்ஸ் . மெஸான் ,ம்யூவான் , பையான் ,கவான் இப்படி .... இந்தத் துகள்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று மிகச் சிக்கலான முறையில் உறவாடும் போது மிகச் சிறிய காலம் உயிர் வாழ்கின்றன . அழிகின்றன . வேறு துகள்களாக மாறுகின்றன .
இந்தச் சிறிய உலகத்தில் துகள்கள் சக்தியாகவும் , சக்தி துகளாகவும் அடிக்கடி விந்தையாக மாறிக்கொண்டே இருக்கிறது . சற்று நேரம் ஒரு துகள் நகர்கிறது .மற்றொரு துகளுடன் மோதுகிறது. அல்லது இணைகிறது . அப்போது சக்தி வெளிப்படுகிறது. அந்தச் சக்தியின் பாதிப்பால் புதிய துகள்கள் பிறக்கின்றன. இந்த விந்தையான வாழ்வை விஞ்ஞானிகள் 'பபிள் சேம்பரில் அழகாக படம் பிடித்துக் காட்டுகிறார்கள் . ' பாருங்கள் பாருங்கள் மனித வாழ்வு மாதிரியே அணுக்குள்ளும் உள்ள துகள் வாழ்வில் உண்டு ' என்கிறார்கள் .
மிகச் சிறிய துகள்களின் வாழ்வும் மரணமும் அப்படியே மனித வாழ்வோடு மிகக் கச்சிதமாக ஒத்துப் போகிறது .
وَهُوَ الَّذِىْۤ اَحْيَاكُمْ ثُمَّ يُمِيْتُكُمْ ثُمَّ يُحْيِيْكُمْ اِنَّ الْاِنْسَانَ لَـكَفُوْرٌ
"அவன்தான் உங்களை உயிர்ப்பித்தான். அவன்தான் உங்களை மரணிக்கச் செய்வான். பின்னும், அவனே உங்களை உயிர்ப்பிப்பான். எனினும், நிச்சயமாக மனிதன் மிக நன்றி கெட்டவனாக இருக்கிறான்" . (அல்குர்ஆன் : 22:66)
இயற்கையிலும் இந்த வகை மாறுதல்கள் சதா நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன . விண்வெளியான அண்டத்திலிலிருந்து வரும் காஸ்மிக் கதிர்கள் - அவை எங்கிருந்து வருகின்றன என்பது இதுவரை யாராலும் , எந்த விஞ்ஞானத்தாலும் சொல்ல முடியவில்லை . சதா பற்பல துகள்கள் சக்தி வெளிப்பாடுகள் மூலம் நம் பூமியைத் தாக்கிக் கொண்டே இருக்கின்றன .நம் உலகத்து காற்று வெளியைத் தாக்கும் போது , காற்றின் அணுக்கள் சிறு சிறு துகள்களாகச் சிதறி 'துகள் மழை ' ஏற்படுவதுண்டு. இது சாஸ்வதமானது. இதை இயற்கையான சக்தியின் நடனம் என்கிறார்கள். இதனால் புதிய துகள்கள் பிறக்கின்றன பழைய துகள்கள் அழிக்கின்றன. வேஷம் மாறுகின்றது . அரங்கம் மாறுகிறது . காட்சியும் மாறுகிறது .
இதை அவர்கள் சிவதாண்டவத்தின் தத்துவம் என்கிறார்கள் . பிரம்ம ராத்திரியில் இயற்கை செயலற்று இருக்கையில் , சிவ தாண்டவம் உயிர் அளிக்கிறது. சிவன் எழுகிறான் . நடனம் ஆடுகிறான். அவனின் நடனம் அசைவில்லா பொருட்களின் ஊடே உயிர் இயக்கத் துடிப்பலைகளை ஏற்படுத்துகிறது .எல்லா ஜடப் பொருள்களும் நடனமாடுகின்றன. அவனின் நடனத்தாலே அவைகளுக்கெல்லாம் உயிரளிக்கிறான்
நடனமாடிக் கொண்டே அவைகளை எல்லாம் அழிக்கிறான் . அவைகளை அழித்தும் ,சிருஷ்டித்தும் இடைவிடாது நடனமாடிக் கொண்டே இருக்கிறான் . அணு முதல் அண்டம் வரை சிவ தாண்டவமே என்கிறார்கள்
இதை குர்ஆனில் இறைவன் படைக்கப்பட்டவை எல்லாம் தன்னை வணங்குகின்றன என்பதாக . . . ...
(நபியே!) வானங்களில் இருப்பவர்களும், பூமியில் இருப்பவர்களும், சூரியனும், சந்திரனும், மலைகளும், மரங்களும், கால்நடைகளும், மனிதரில் ஒரு பெரும் தொகையினரும் நிச்சயமாக அல்லாஹ்வுக்குச் சிரம் பணிந்து வணங்குகின்றனர் என்பதை நீங்கள் காணவில்லையா? (அல்குர்ஆன் : 22:18)
ர. ரா

Alaudin Muthalief

சூரா 70:4. “ஒரு நாள் மலக்குகளும், (ஜிப்ரீலாகிய) அவ்வான்மாவும், அவனிடம் ஏறிச் செல்வார்கள்; அ(த்தினத்)தின் அளவு ஐம்பதினாயிரம் ஆண்டுகள் (சமமாக) இருக்கும்”.

இந்த ஆயத்தில் அல்லாஹ் குறிப்பிடும் *ஒரு நாள்* என்பது நியாயத்தீர்ப்பு நாளைக் குறிப்பிடுகிறது என்பதனை அந்த ஆயத்துகளுக்கு முன்னரும் பின்னரும் வரக்கூடிய ஆயத்துகளிலிருந்து தெளிவாக அறிந்துகொள்ளலாம். அதாவது *நியாயத்தீர்ப்பு நாளானது நாம் கணக்கிடும் ஐம்பதாயிரம் வருடங்களுக்கு சமமாகும்*.
ஆனால் கீழ்க்கண்ட 2 ஆயத்துகளிலும் அல்லாஹ்வின் புறத்தில் ஒரு நாள் என்பது நாம் கணக்கிடும் 1000வருடங்களுக்கு சமம் என்று குறிப்பிடுகிறான்.

1. 22:47. "(நபியே! இன்னும் வரவில்லையே என்று) வேதனையை அவர்கள் அவசரமாக தேடுகிறார்கள்; அல்லாஹ் தன் வாக்குறுதிக்கு மாறு செய்வதேயில்லை; மேலும் உம்முடைய இறைவனிடம் ஒரு நாள் என்பது, நீங்கள் கணக்கிடுகிற ஆயிரம் ஆண்டுகளைப் போலாகும்."

2. 32:5. "வானத்திலிருந்து பூமி வரையிலுமுள்ள காரியத்தை அவனே ஒழுங்குபடுத்துகிறான்; ஒரு நாள் (ஒவ்வொரு காரியமும்) அவனிடமே மேலேறிச் செல்லும், அந்த (நாளின்) அளவு நீங்கள் கணக்கிடக்கூடிய ஆயிரம் ஆண்டுகளாகும்."

Alaudin Muthalief
இதிலிருந்து நாம் அறிவது நியாயத்தீர்ப்பு நாள் என்பது அல்லாஹுவின் புறத்தில் 50 நாட்களாகும். அதாவது நாம் கணக்கிடும் ஐம்பதாயிரம் வருடங்களாகும். (50நாட்கள்*1000வருடங்கள்=50,000வருடங்கள்). இதனைக் கீழ்க்கண்ட ஹதீதுகளிலிருந்து உறுதிப்படுத்தலாம்.

Abu Hurairah said:
"I heard the Messenger of Allah say: 'Any man who has camels and does not pay what is due on them in its Najdah or its Risl mean?' He said: 'In times of hardship or in times of ease; they will come on the Day of Resurrection as energetic, fat and lively as they ever were. He will be laid face down in a flat arena for them and they will trample him with their hooves. When the last of them has passed, the first of them will return, on a day that is as long as fifty thousand years, until judgment is passed among the people, and he realizes his end.........,,,. Sunan an-Nasa'i 2442.

Narrated Sa'd ibn AbuWaqqas:
The Prophet (ﷺ) said: I hope my community will not fail to maintain their position in the sight of their Lord if He delays them half a day. Sa'd was asked: How long is half a day? He said: It is five hundred years. Sunan Abu Dawud 4350


It was narrated from Abu Hurairah that the Messenger of Allah (ﷺ) said:
"The poor believers will enter Paradise half a day – five hundred years – before the rich.'"
கடைசியாகக் குறிப்பிட்ட 3 ஹதீதுகளிலிருந்தும் பாதி நாள் என்பது நாம் கணக்கிடும் 500வருடங்கள் என்பதும் ஆக அல்லாஹுவின் புறத்தில் ஒரு நாள் என்பது நாம் கணக்கிடும் 1000வருடங்களுக்கு சமம் என்பதும் நியாயத்தீர்ப்பு நாளானது அல்லாஹ்வின் புறத்தில் 5 நாட்கள் என்பது நாம் கணக்கிடும் ஐம்பதினாயிரம் வருடங்கள் என்பதனையும் தெளிவாக அறிந்து கொள்ளலாம்


Alaudin Muthalief கடைசியில் குறிப்பிடப்பட்ட 5 நாட்கள் என்ற இடத்தில் 50நாட்கள் என்று படிக்கவும்.

Rahmath Rajakumaran ரொம்ப அழகாக **Alaudin Muthalief** ஹதீஸ்களை மேற்கோள் காட்டியமைக்கு மிக்க நன்றி ! ஒரு

வேளை நண்பர்கள் புத்தகமாக வெளியிட்டால் உங்கள் பின்னூட்டத்தையும் சேர்த்து வெளியிட வேண்டும்

புலன் அறிவிற்கும் அப்பால் ....
(விண்வெளி ரகசியம் 16)
ஞானத்திற்கும் , விஞ்ஞானத்திற்கும் என்ன தொடர்பு ?





ஜே.எஸ். பெல் என்பவர் **1964**-ல் ஒரு புரட்சிகரமான விஷயத்தைச் சொன்னார்
பிரபஞ்சத்தில் உள்ள அத்தனை விஷயங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளது என்று நிரூபித்துக் காட்டினார் .
பெல்லின் சித்தாந்தம் மிகவும் சிக்கலானது .அதைக் கொஞ்சம் எளிமைப்படுத்திச் சொன்னால் "குவாண்டம் தத்துவத்தின் கணக்குகள் சரியென்றால் , உண்மையைப் பற்றி நம் பகுத்தறிவு கூறுவதெல்லாம் தப்பு " - என்று நிரூபித்தார் . குவாண்டம் தத்துவத்தின் கணக்குகள் எல்லாமே சரிதான் .எனவே பகுத்தறிவு தவறு !
எப்படி பார்க்கலாம் ?
பகுத்தறிவுக்குப் புறம்பானது என்பது எது ? நீங்கள் என்னை வந்து சந்திக்கிறீர்கள். நாம் இருவரும் பேசிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய உரையாடல் நம் இருவரையும் மட்டுமே பாதிக்கிறது. பிரபஞ்சத்தின் மற்ற அங்கங்களை பாதிப்பதே இல்லை. இது பகுத்தறிவு .
நாம் பேசிக் கொள்வது பிரபஞ்சம் முழுவதையுமே ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கிறது என்று சொன்னால் அது நம் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது .ஆனால் குவாண்டம் மெக்கானிக்ஸின்படி இப்படி நடந்தாக வேண்டும் என்று பெல் சொல்கிறார் .
'புல்லை வெட்டினால் பிரபஞ்சமே ஆடும் '
சொல்வது நவீன விஞ்ஞானமான குவாண்டம் .
ஒரு பெண்ணுக்கு மணவிலக்கு கொடுக்கும் போது இறை அர்ஷ்ஷே குலுங்குகிறது சொல்வது இஸ்லாம் .
விஞ்ஞானம் வெளியுலகத்தில் நடப்பதை ஆராய சொல்லுகிறது. விஞ்ஞானத்தில் அத்தனை உண்மைகளுக்கும் கடைசியில் நம் புலன்உணர்வுகள்தாம் எஞ்சி இருக்கின்றன .என்னதான் விநோதமாக பூச்சி பூச்சியாய் கணக்குப் போட்டு அடிப்படை சித்தாந்தங்களை அமைத்தாலும் , அந்த அறிவு அத்தனையுமே ஏதாவது ஒரு புலன் உணர்வைச் சார்ந்திருக்கிறது.
விஞ்ஞானம் என்பது கூட குறியீடுகள் **(Symboles)** அடங்கிய ஒரு பாஷைதான் .
உண்மை குறியீடுகளில் "சிறைப்படாத உண்மை"த் தேடச் சொல்கிறது . விதிகள் பல அமைத்து அதற்குள் விடை வந்து விழ வேண்டுமென விஞ்ஞானம் எதிர்பார்க்கிறது. ' விரித்த வலையில் புத்திக் கெட்ட பறவைகள் வந்து விழுவது போல '.
ஞானம் என்பது புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மனத்தால் வெளியை உணர்வது . 'மாட்டிய வலையில் இருந்து தப்பித்த பறவைக்கு கிடைத்த சுதந்திரம் போல ஞானம்' , புலன் உணர்வுகளுக்கு அப்பால் கிடைக்கும் ஞானத்தை ஞானி பத்திரகிரியார் இப்படி பாடுகிறார் :
"ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனனச் சுட்டறுத்து தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எங்காலம் ....?
சேயாய் சமைந்து செவிடூமை போல் திரிந்து பேய் போல் இருந்து உன் பிரமை கொள்வ தெக்காலம் ...?
பற்றற்று நீரில் படர் தாமரை இலைபோல
சுற்றத்தை நீக்கி மனம் தூரநிற்ப தெக்காலம் .....?
மனதை ஒரு வில்லாக்கி வாலறிவை நாணாக்கி எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம் ....?
வீடுவிட்டுப் பாய்ந்து வெளியில்
வருவார்போல் கூட்டுவிட்டுப் பாயும் குறிப்பறிவது எக்காலம் .....?
ஆட்டம் ஒன்றும் இல்லாமல் அசைவு சற்றும் காணமல் தேட்டம் அற்ற
வான்பொருளைத் தேடுவதும் எக்காலம் ...?
தான் என்ற ஆணவமும் தத்துவமும் கெட்டொழிந்தே ஏன் என்ற பேச்சும் இலாது இலங்குவதும் எக்காலம்...? "
தேவி கேட்கிறாள் :
" பெருமானே , உன் உண்மை என்ன ? இந்த விந்தை நிறைந்த பிரபஞ்சம் என்பது என்ன ? இதன் விதை என்ன ?இதன் மையம் என்ன ?

உருவத்துக்கு அப்பாற்பட்ட உயிர் என்பது என்ன ? உருவத்துள் ஊடுருவும் உயிர் என்பது என்ன ? அதனுள் எப்படி நாம் நுழைவது? காலம் , தூரம் , பெயர் , வர்ணனை இவைகளை எப்படிக் கடந்து செல்வது ?
சிவன் பதில் தருகிறார் :
"பிரகாசமானவளே ! இந்த அனுபவம் உன் மேல்மூச்சுக்கும் ,கீழ் மூச்சுக்கும் இடையே தோன்றலாம் . இரண்டு மூச்சுக்களின் இடையில் , ஒரு கணத்தில் சக்தியற்ற , சக்தி நிரம்பிய மையத்தை தொட முயற்சி செய் !
" தேவி ! எழுத்துக்களாகப் பார் .அப்புறம் அவைகளை சப்த ரூபங்களாகப் பார் .
பின் அவைகளை எல்லாம் புறக்கணித்து விட்டு , அவைகளின் உள்ளே இருக்கும் சுதந்திரத்தைப் பார் .
"கண்களை மூடிக்கொண்டு உன்னுள்ளேயே விவரமாகப் பார் .உன் இயற்கையைப் பார் .
" தலையில் இருக்கும் ஏழு வாசல்களையும் கைகளால் மூடிக் கொண்டு , கண்களுக்கு இடையே இருக்கும் வெளியில் எல்லா பிரபஞ்சமும் அடங்கிவிடுவதைப் பார் ."
ஒரு பெண் ரொம்ப நாள் " ஜென் " பற்றி ஒரு குருவிடம் பயின்று கொண்டிருந்தாள். அவளுக்கு ஞானம் கிடைக்கவில்லை .
அந்த பெண் : " ஒரு நாள் ராத்திரி நல்ல நிலா . நான் மூங்கில் போட்டுக் கட்டிய பழைய பக்கெட்டில் தண்ணீர் எடுத்துச் சென்று கொண்டிருந்தேன் .அப்போது மூங்கில் உடைந்து , பக்கெட்டின் அடிப்பாகம் சட்டென்று விழுந்துவிட்டது .
குரு ...." என்ன...? "என்று சைகையால் அவளிடம் கேட்டாள் .
" இப்படியும் , அப்படியும் நான் பழைய பக்கெட்டைக் காப்பாற்ற முயற்சித்தேன் . திடீர் என்று அடிப்பாகம் விழுந்து விட்டது.
" ..பாத்திரத்தில் இனி தண்ணீரும் இல்லை . தண்ணீரில் இனி நிலவும் இல்லை " _ என்றாள் அவள் .
குரு சொன்னார் : " அவள் ஞானம் பெற்று விட்டாள். "
புலனறிவில் எந்த படைப்பும் " இல்லை " என்றால் , அதுதான் ஞானமா ?
#கலிமா :- " இல்லை. வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர. "

வேதங்கள் கூறுவது நாடள் அல்ல ;
அது யுகங்கள்.
(விண்வெளி ரகசியம் 17)



தேவன் 6 நாட்களில் பிரபஞ்சத்தைப் படைத்து ஏழாவது நாளில் ஓய்வெடுத்தான் என்கிறது பைபிளின் ஆதியாகாமம் .
"நிச்சயமாக நாம்தாம் வானங்களையும் பூமியையும் அதற்கு மத்தியில் உள்ளவைகளையும் 6 நாட்களில் படைத்தோம் அதனால் நமக்கு யாதொரு களைப்பும் ஏற்படவில்லை " .
என்று அல்லாஹ் குர்ஆனில் **(50 : 33)**
"வானத்தில் இருந்து பூமி வரையிலுள்ள ஒவ்வொரு காரியத்தையும் அவனே ஒழுங்குபடுத்துகின்றான். நீங்கள் எண்ணுகிற கணக்கின்படி 1000 ஆண்டுகளுக்குச் சமமான ஒரு நாளொன்று அவனிடம் சென்றுவிடும்". குர்ஆன் (32: 05)

"ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்குச் சமமான அந்நாளில் மலக்கு ஜிப்ரீல் ஆகிய பரிசுத்த ஆவியும் சென்று ஏறுவார்கள் " குர்ஆன் (70 : 04)

மேலே மேற்கொள் காட்டப்பட்ட குர்ஆன் வசனங்களில் இருந்து "யௌம்" என்ற வார்த்தை 1000 ஆண்டுகளையும் குறிக்கும் 50 ஆயிரம் ஆண்டுகளையும் குறிக்கும் அதே நேரத்தில் ஒரு நாளையும் குறிக்கும் எனவே இப் பதத்திற்கு தகுந்தாற் போல் கால அளவை நிர்ணயிக்க வேண்டும்

திருக்குர்ஆன் விரிவுரையாளர் **யூசுஃப் அலி "யௌம் "** என்ற வார்த்தை மிக நீண்ட கால அளவு அதை யுகங்கள் யுகாந்திரங்கள் **(Aeons)** என்று பெருள் கொள்ள வேண்டும் என்கிறார்
குர்ஆன் கூறும் நாட்களுக்குப் பதில் ஆறு யுகங்கள் என்றே பொருள் வேண்டும் என்கிறார் மாரிஸ் புகைல்
" நீர் கூறும் இவ்வளவு பெரிய பூமியை இரண்டே நாட்களில் படைத்தவனை நீங்கள் நிராகரித்து விட்டு மற்றவைகளை அவனுக்கு இணையாக்கின்றீர்களா ? இதில் வசிப்போருக்கு வேண்டிய ஆகாரத்தையும் நான்கு நாட்களுக்குள் திட்டமிட்டான் பின்னர் இரண்டு நாட்களில் ஏழு வானங்களாகத் திட்டமிட்டு ஒவ்வொரு வானத்திற்கும் அதனதன் கடமையை அறிவித்தான் " .
குர்ஆன் (41 : 09 10 11 12).
இங்கு மேற்கோள் காட்டப்பட்ட வசனங்களிலுள்ள "நாள்" என்ற சொல்லுக்குப் பதிலாக " யுகங்கள் " என்ற சொல்லைப் போட்டு வாசித்து பாருங்கள் மிக துல்லியமாக விஞ்ஞான உண்மை இதனை தெரிவிக்கிறது .
இவ்வுண்மையை **1400** ஆண்டுகளுக்கு குர்ஆன் சொல்லிற்று என்பதை நினைக்கும போது மெய் சிலிர்க்கிறது !
யோக வாசிஷ்டத்திலிருந்து ஒரு மாய சம்பவத்தை கிருஷ்ணரிடம் நாரதர் கேட்கிறார் .
"சுவாமி ! முடியாத காரியத்தை முடிக்கவல்ல தாங்களுடைய 'மாயை' யை எனக்கு சிறிது காட்டியருள வேண்டும் .
ஒரு நாள் நாரதரை அழைத்துக்கொண்டு சர்வேசுவரன் நெடும் பாலைவனத்தில் புறப்படுகிறார் .
"நாரதரே ! எனக்கு தாகமாக இருக்கிறது குடிக்க தண்ணீர் எடுத்து வாருங்கள் "
தூரத்தில் ஒரு ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது . ஆற்றை நெருங்கிய போது , அங்கு ஒரு பெண்ணை காண்கிறார் நாரதர் . தான் மணக்க விருப்பம் தெரிவித்து திருமணமும் செய்து கொள்கிறார் .
நாளடைவில் அந்தப் பெண் மூலமாக நாரதருக்குப் பல குழந்தைகள் பிறக்கிறார்கள் .சந்தோஷமான வாழ்க்கையில் , நாட்டில் தொத்து நோய் பரவுகிறது .
நாரதர் தன் மனைவி பிள்ளைகளைப் பிடித்துக் கொண்டு ஊரை காலி செய்து போகும் போது , வழியில் அதே ஆறு குறுக்கிடுகிறது . அந்த ஆற்று பாலத்தின் மீது ஏறிய போது காட்டாற்று வெள்ளம் பாலத்தை உடைக்கிறது .

ஆற்று வெள்ளம் மனைவி, பிள்ளைகளை அடித்து கொண்டு போய் விடுகிறது .
நாரதர் துன்பம் தாளாமல் அந்த ஆற்றங்கரையில் கதறியழுது கொண்டிருக்கிறார் . சர்வேசுவரன் அவரது முன்னாடி தோன்றி ,
" என்ன நாரதரே ! தண்ணீர் கேட்டேனே , ஏன் அழுது கொண்டிருக்கிறீர்கள் ? தண்ணீர் மொந்து கொண்டு வரவேண்டியதானே?

பகவானைக் கண்டதும் நாரதருக்குப் பழைய நினைவுகள் எல்லாம் வருகிறது .
" சர்வேசுவரா ! உங்களுக்கு ஒரு நமஸ்காரம் , உங்களுடைய மாயைக்கும் ஒரு நமஸ்காரம் "
இதுவரை 3 வேதங்களில் உள்ள சொல்லப்பட்ட நாட்களை குறிப்பிட்டுள்ளேன் .உங்களுக்கு ஒரு தெளிவு கிடைத்திருக்கும் என நினைக்கிறேன் .
வேதங்கள் கூறுவது நாட்களா ? யுகங்களா ?

பிரம்மமும் , பிரபஞ்சதனமும்
(விண்வெளி ரகசியம் 18)



உற்று நோக்கி நல்ல சிந்தித்துப் பாருங்கள் நம் வாழ்வு , பொருட்களாகவும் , அப் பொருட்களைச் சுற்றி நடைபெறும் நிகழ்ச்சிகளாகவும் பிரிந்து கிடக்கிறது . இவைகளைத்தான் உண்மை என்று நம்புவதை ' மாயை ' என்கிறார்கள் .

பொருட்களும், நிகழ்ச்சிகளும் இல்லை என்றால் நம் வாழ்வை நினைத்துக்
கூடப் பார்க்க முடியாத ஒரு கேள்வி குறியாகி விடும்.
எல்லாப் பொருட்களும் , எல்லாச் சம்பவங்களும் ஒரே ஒரு முழுமையின் அங்கங்களே . இந்த முழுமை சாஸ்வதமானது . அழிக்க முடியாதது .அழியாதது .

இதை
"பிரம்மம் " என்கிறார்கள் .
பிரம்மத்தை அடைய " இஸ்லாம் " (மார்க்கம் அல்லது வழி) என்கிறது.பௌத்தர்கள் "தாவ்" (பாதை) என்கிறது .எல்லாமே ஒரு முன்னோக்கிய பயணம்தான் என்கிறார்கள்.
பிரபஞ்சம் முழுவதும் விரவியிருக்கும் ஒரு விதமான ஒருமைப்பட்ட உறவு
நிலைதான் உண்மை (ஹக்) என்கிறார் டேவிட் போம் .


" நம் கண்ணெதிரே காணும் பொருள் தனிப்பட்ட ஒன்றல்ல .இது பிரபஞ்சத்தின் ஒரு மிகப் பெரிய உண்மையின் , நாம் உணரும் , காணும் அத்தனையும் சேர்ந்த ஒரு மஹா உண்மையின் , ஒரு சிறிய வெளிப்பாடு " என்கிறார் ஓப்பன்ஹைமர் .
இந்த பிரம்மத்திலிருந்து சதா செய்தி எல்லாப் பொருட்களுக்கும் சென்று , அது நிகழ்ச்சி தொடராக நிரல் வடிவமாக பெறுவதை விஞ்ஞானம் கண் கூடாகப் பார்க்கிறது .
எலக்ட்ரான்களின் சில நடவடிக்கைகளை வைத்துக்கொண்டு அதன் ஆதாரத்தில் சொல்கிறார்கள் .
சில சமயம் எலக்ட்ரான்கள் இரட்டை இரட்டையாக வெளிப்படுகின்றன. இந்த இரட்டையரைப் பிரித்து ஒன்றைக் கிழக்கேயும் , மற்றதை மேற்கேயும் போகச் சொல்லுமாறு , காந்த சக்திக்கு உட்படுத்தி வலதுபக்கம் திரும்ப வைத்தால், மேற்கே போன எலக்ட்ரான் அது பிரபஞ்சத்தில் எங்கு சென்றாலும் முன் எலக்ட்ரான் எந்தப் பக்கம் திரும்பியதோ அதற்கு எதிர்ப்பக்கம் இது திரும்புகிறது ! அது வலது என்றால், இது இடது . அது இடது என்றால் இது வலது .
எலக்ட்ரான் என்பது ஒரு துகள் .உயிர் தன்னிச்சை என்று ஏதும் இல்லாதது.

கிழக்கே சென்ற எலக்ட்ரானைப் பற்றி மேற்கே சென்றதற்கு , எப்படியோ ஒரு செய்தி போய்ச் சேருகிறது. அதுவும் மிக முக்கியமாக கால இடைவெளி இல்லாமல் !
ஐன்ஸ்டைனின் தத்துவப்படி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செய்தி போக ஒரு வேக எல்லை உண்டு. அது ஒளியின் வேகம். அதற்கு மேல் விரைவாக செய்தி போவதற்கு ஐன்ஸ்டைனின் தத்துவத்தில் சாத்தியமே இல்லை.
ஆனால் இங்கு நடப்பது கால இடைவெளி இல்லாத ஒரு தொடர்பு எங்கோ நிகழ்வது வேறு எங்கோ நிகழ்வதை உடனே எப்படி பாதிக்கிறது ?
எனவே பிரபஞ்சம் முழுவதும் ஒரு விதமான காரணத்தால் எப்போதுமே தொடர்பு கொண்டு இருக்கிறது .அதை பிரம்மம் என்கிறார்கள் . விஞ்ஞானிகள் பிரபஞ்சதனம் என்கிறார்கள் .
" ஏழு வானங்களையும், அவைகளைப் போல் பூமியையும் அல்லாஹ் தான் படைத்தான். இவைகளில் தினசரி நிகழக்கூடிய எல்லா விஷயங்களைப் பற்றிய கட்டளை இறங்கிக்கொண்டே இருக்கின்றது " அல்குர்ஆன் : (65:12)

" நீங்கள் என்ன நிலைமையில் இருந்தபோதிலும், குர்ஆனிலிருந்து நீங்கள் எ(ந்த வசனத்)தை ஓதியபோதிலும், (உங்களுடைய காரியங்களில்) நீங்கள் எதைச் செய்தபோதிலும், நீங்கள் அவற்றில் ஈடுபட்டிருக்கும்போதே உங்களை நாம் கவனிக்காமல் இருப்பதில்லை. பூமியிலோ, வானத்திலோ உள்ளவற்றில் ஓர் அணுவளவும் (நபியே!) உங்களது இறைவனுக்குத் தெரியாமல் தவறிவிடுவதில்லை. இவற்றைவிட சிறிதோ அல்லது பெரிதோ (எதுவாயினும்) அவனுடைய விரிவான பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாமலில்லை (குர்ஆன் : 10:61)

மொழிகளுக்கும் அப்பால் சில சிந்தனைகள் .


(விண்வெளி ரகசியம் 19)



அணுவியல் கொள்கைகள் தோற்றுவிக்கப்பட்ட ஆரம்ப காலக்கட்டங்களில் மின்காந்தக் கதிர்கள்
மிகச் சிறிய கொள்ளவுக்குள் அடைபடுகிற துகள்களாகவும் ,
அத்துகள்கள் வெளியில் மிகப் பெரிய பகுதியில் வியாபிக் கூடிய தொடர் அலைகளாகவும் ஒரே சமயத்தில் எப்படி இருக்கக் கூடும் என்பதே மிகவும் புதிர் நிறைந்த விளைவாக இது விஞ்ஞானிகளுக்குத் தோன்றியது.
இந்த நிலையை எந்த மொழியாலோ , கற்பனையாலோ மிகச் சரியாக சொல்ல முடியவில்லை. அப்படிச் சொன்னாலும் சொல்லப்பட்ட விஷயம் முழுமை பெறாதது .
குவாண்டம் கொள்கையின் உண்மைகளும் , சார்பியல் கொள்கையின் உண்மைகளும் மரபு வழி தர்க்கவியலை ஊடுருவிக் கடக்கின்றன. இவைகளைப் பற்றி எந்த மொழியிலும் பேச இயலாது .
இங்கே மொழி வாயிலாகத் தோன்றக் கூடிய சிக்கல்கள் கடுமையானவை. அணுக்களின் அமைப்பற்றி நாம் ஒரு வகையில் பேசவிரும்புகிறோம் . அப்படியே பேசி தீர்த்தவைகள் முழுமையான சேதியை சொல்லி முடிக்கவில்லை என்பதை அந்த உடனே விஞ்ஞானிகள் அறிகின்றனர் .ஆனால் சாதாரணமாக மொழியில் அணுக்களைப் பற்றிப் பேச நம்மால் இயலவில்லை என்பதாக வெர்னர் ஹெய்சென்பெர்க் என்ற விஞ்ஞானி கூறுகிறார் .
இறைவனால் படைக்கப்பட்ட வஸ்துகளின் உண்மை நிலை விவரிக்க மொழிகள் முடியாமல் போகிறது .இதே மாதிரி அவனால் அருளப்பட்ட குர்ஆனில் தன் வார்த்தைகளுக்கு பொருள் விளக்கம் கூறுகையில் எழுதப்படுகின்ற கலமான மரங்கள் , அது தொட்டு எழுதும் மையான கடல்கள் போன்ற வஸ்துகளே காணாமல் போய்விடுகிறது. இருந்தும் அவனது வார்த்தைகள் இன்னும் மிஞ்சி இருக்கிறது .இது ஒரு " முடிவுறா தொடர் நிகழ்வு " என்பதாக இறைவனே குர்ஆனில் கூறும் இரு வசனங்களாக ....
قُلْ لَّوْ كَانَ الْبَحْرُ مِدَادًا لِّكَلِمٰتِ رَبِّىْ لَنَفِدَ الْبَحْرُ قَبْلَ اَنْ تَنْفَدَ كَلِمٰتُ رَبِّىْ وَلَوْ جِئْنَا بِمِثْلِهٖ مَدَدًا
(நபியே!) நீங்கள் கூறுங்கள்: கடல் நீர் அனைத்தும் மையாக இருந்து என் இறைவனின் வாக்கியங்களை எழுத ஆரம்பித்தால், என் இறைவனின் வாக்கியங்கள் முடிவதற்கு முன்னதாகவே இந்தக் கடல் மை அனைத்தும் செலவாகிவிடும். அதைப் போல் இன்னொரு பங்கு (கடலைச்) சேர்த்துக் கொண்டபோதிலும் கூட!
(அல்குர்ஆன் : 18:109)

وَلَوْ اَنَّ مَا فِى الْاَرْضِ مِنْ شَجَرَةٍ اَقْلَامٌ وَّالْبَحْرُ يَمُدُّهٗ مِنْ بَعْدِهٖ سَبْعَةُ اَبْحُرٍ مَّا نَفِدَتْ كَلِمٰتُ اللّٰهِ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ
பூமியிலுள்ள மரங்கள் (செடிகள்) அனைத்தும் எழுது கோல்களாகவும், கடல் நீரை மையாகவும் வைத்து (அது தீர்ந்து) பின்னும் ஏழு கடல் நீரையும் மையாக வைத்து எழுதியபோதிலும் அல்லாஹ்வுடைய வசனங்கள் (எழுதி) முடிவு பெறாது. நிச்சயமாக அல்லாஹ் (அனைத்தையும்) மிகைத்தவனும் ஞானமுடைய வனாகவும் இருக்கின்றான்.
(அல்குர்ஆன் : 31:27)
அவனின் வல்லமை அணு முதல் அண்டம் வரை என்னவென்று யாரால் கூற முடியும் ?

" நானே காலமாக இருக்கிறேன் "
(விண்வெளி ரகசியம் 20)



எங்கெல்லாம் பருப் பொருள் **(matter)** இருக்கிறதோ, அங்கெல்லாம் ஈர்ப்பு
(Gravity) இருக்கிறது . பொருளின் பொருண்மை (எடை) அதிகமாக அதிகமாக ஈர்ப்பும் அதிகமாகிறது எனவே பருப்பொருளானது , இந்த பரந்தவெளி. காலம் தொடர்பத்தையும் வளைக்கிறது.

பிரபஞ்ச பொருட்களான நட்சத்திரங்கள். சூரியன் போன்றவைகளின் ஈர்ப்பு சக்தியால் இவைகளைச் சுற்றியுள்ள பரந்தவெளியை வளைத்து விடுகிறது இதனால் பரந்தவெளியுடன் தொடர்புடைய #காலமும்வளைந்து- #சூழ்ந்து விடுகிறது !

நட்சத்திரங்கள் , சூரியன் மட்டும் அல்ல , அணுத்துகள்கள் , ஏன் உங்களையும் , என்னையும் சுற்றியும் உள்ள வெளி வளைந்து, இதனால் வெளியுடன் தொடர்புடைய காலமும் வளைந்து விடுகிறது. அட , காலம் கூட பந்து விழுந்த வலைப் போல் வளைந்து விடுகிறது .

" என்னுடைய அருளானது எல்லாப் பொருட்களிலும் விரிந்து , பரந்து , சூழ்ந்து நிற்கிறது " குர்ஆன் (7 : 156)

நபி (ஸல்) அவர்கள் காலம் பற்றி கூறும் போது " ஆதமுடைய மகன் என்னை நோவினைப்படுத்துகின்றான். அவன் 'காலத்தின் நஷ்டமே ' ... என்று சொல்ல வேண்டாம் ஏனெனில் நிச்சயமாக நானே காலமாக இருக்கின்றேன். அதன் இரவையும் , பகலையும் புரட்டிக் கொள்கிறேன். நான் நாடினால், இரண்டையும் கைப்பற்றிக் கொள்வேன் " அபுஹுரைரா - புகாரி

ஆல்பர்ட் ஐன்ஸ்டனின் சார்பு நிலைக் கோட்பாட்டின்படி , பொருட்களால் அதற்குரிய ஈர்ப்புத் தன்மை ஏற்படுகிறது. எங்கெல்லாம் ஈர்ப்புப் பற்றி பேசப்படுகிறதோ அங்கெல்லாம் பரந்தவெளியும் , காலமும் அதன் வளைவுப் பற்றியும் பேசப்படுகிறது .

ஆக பருப்பொருள் என்பது ஈர்ப்புப் புலத்திலிருந்து தனித்துப் பிரிக்க முடியாதாகும் .அதைப் போல் ஈர்ப்புப் புலத்தையும் வளைவுற்ற வெளியிலிருந்து பிரிக்க முடியாது .

காலத்தின் இந்த இரண்டு அம்சங்களும் இறைவன் புறத்தில் ஒன்று அருளாகவும், மற்றொன்று அவனின் அன்பாகவும் பார்க்கப்படுகிறது .

الرَّحْمٰنِ الرَّحِيْمِۙ

" அவன்தான் அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையவன்". குர்ஆன் (1:3)

விஞ்ஞான கண்ணோட்டத்தில் குர்ஆனை அணுகலாமா ?   28-03-2019

(நண்பர் Muhammed Ibrahim இதன் முந்தைய பதிவுக்காக)



திருக்குர்ஆனில் மொத்தம் **6666** வசனங்கள் உள்ளன. மனித வாழ்வியல் குறித்து பேசும் வசனங்கள் **250** .ஆனால் நேரடியான விஞ்ஞானத்தைக் கூறும் வசனங்கள் சுமார் 750 , மறைமுக விஞ்ஞானத்தைக் கூறும் வசனங்கள் சுமார் 500 வசனங்கள். அதென்ன மறைமுகமான விஞ்ஞானம் ....?

اَلَمْ تَرَوْا كَيْفَ خَلَقَ اللّٰهُ سَبْعَ سَمٰوٰتٍ طِبَاقًا ۙ

ஏழு வானங்களையும், அடுக்கடுக்காக எவ்வாறு அல்லாஹ் படைத்திருக்கின்றான் என்பதை
நீங்கள் கவனிக்கவில்லையா?

(அல்குர்ஆன் : 71:15)

மேற்கண்ட வசனத்தில் அவன் ஏழு வானங்களை அடுக்கடுக்காக அடுக்கி வைத்திருப்பதை நாம் எப்போது கவனித்தோம் ? இன்னும் இல்லை . விஞ்ஞான வளர்ச்சியால் மட்டுமே காண முடியும் . விஞ்ஞானத்தின் அபார வளர்ச்சியில் இனி இன்ஷா அல்லாஹ் காண்போம் . அன்றைய தினம் இக்குர்ஆன் வசனம் மெய்பிக்கப்படும் .

வாழ்வியல் முறையை விளக்கும் 250 வசனங்களைத் தழுவி பல்லாயிரக்கணக்கான கிதாபுகள் எழுதப்பட்டும் , அதனை போதிக்கப்பட்டும் வருகிறது . நவீன விஞ்ஞானத்தின் கோட்பாட்டை ரொம்ப எளிமையாக சொல்லி காட்டும் குர்ஆன் , இதை போதிக்கும் மதரஸாக்களில் வானத்தை உற்று நோக்கும் ஒரு டெலஸ்கோப் இல்லாவிட்டாலும் , ஒரு பைனார்குலர் கூட கிடையாது .

எகிப்து கெய்ரோவில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாட்டில் "மைக்கெல் ஹார்ட் " என்கிற யூதர் கூறும்போது, இஸ்லாமிய அறிஞர்கள் பலரும் இஸ்லாத்தை ஒரு ஆன்மீக மார்க்கம் என்ற அடிப்படையின் உணர்வில் பேசினார்களேத் தவிர யாருமே அறிவியல் போக்கில் திருக்குர்ஆனைப் பற்றி பேசாதது எனக்கு ஒரு பெரும் ஏமாற்றமாக இருந்தது. இஸ்லாத்தில் ஆன்மீகம் ஒரு பகுதி மட்டுமே .மற்றப்படி அறிவியல் போக்கிலான மார்க்கமே இஸ்லாம் என்பது எனக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கை மட்டுமல்ல, உண்மையும் கூட . ஏனோ இஸ்லாமிய அறிஞர்கள் அறிவியல் பக்கமே போகமாட்டேன் என்கிறார்கள். அறிவியல் அடிப்படையில் இஸ்லாத்தை விளங்கினால் அல்லவா இஸ்லாத்தினுடைய சிறப்பும் மட்டுமல்ல , பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்வும் வாக்கும் எந்த அளவுக்கு அறிவியலோடும் , பகுத்தறிவோடும் உலகுக்கு வழிகாட்டும் தன்மையுடையதாக விளங்குகிறது என்பது அறிவியல் பூர்வமாக புலப்படும் என்றார் .

ஒரு யூதருக்கு நன்கு புலப்படுகிற அறிவியல் விஷயம் தினம் தினம் குர்ஆனை ஓதும் இஸ்லாமியராகிய நமக்கு நாள்பட்டு புரிகிறது.

அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதெல்லாம் ஆன்மீகத்தை மட்டுமல்ல அறிவியலையும்தான் .

வலது புறமாக தலை முதலில் சீவுங்கள் , வலது காலில் செருப்பை முதலில் அணியுங்கள் என்று வலது வலதாக முற்படுத்தியதும் , சிறுநீர் கழித்து டெலாக்கட்டி பிடிப்பதிலும் , உணவு உண்ட பின் கை விரல்களை சூப்பச் சொல்வதிலும் ஆன்மீகத்தைக் காட்டிலும் அறிவியலே மிகைத்திருந்தது என்பது நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை .

நபிகளார் சொன்னதில் அறிவியல் மிகைத்திருந்தது .அறிவியலுக்கென்று ஒரு நபி வந்திருக்கிறார்கள் என்றால் அது அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டுமே .

அறிவியலை ஏகமாக கூறும் குர்ஆனை யூதர்களும் , கிருஸ்தவர்களும் , ஜெர்மானியர்களும் ஆய்வு செய்து விஞ்ஞான கண்டுபிடிப்புகளை உலகுக்கு அளிக்கிறார்கள் . நமக்கு அருளப்பட்ட குர்ஆனை பட்டு குஞ்சத்தில் கட்டி உயர இடத்தில் வைக்கிறோமே தவிர அதை படிக்கக் கூட வில்லை பின் எப்போது ஆராய ?

اَفَلَا يَتَدَبَّرُوْنَ الْقُرْاٰنَ اَمْ عَلٰى قُلُوْبٍ اَ قْفَالُهَا

மேலும் அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்கள் இருதயங்கள் (இருக்கின்றனவே) அவற்றின் மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா?

(அல்குர்ஆன் : 47:24)

இஸ்லாமிய விஞ்ஞானிகள் என்று கணக்கிட்டால் , இந்தியாவில் ஒரு அப்துல் கலாம் , பாகிஸ்தானில் ஒரு அப்துல் ஸலாம் , இதில் அப்துல் ஸலாம் தன் குவாண்டக் கோட்பாட்டின் கண்டுபிடிப்புக்கு " ஜோடி ஜோடியாக இறைவன் படைத்திருக்கிறான்" என்ற வசனமே காரணம் என்று ஸலாம் குர்ஆனையே சுட்டிக் காட்டினார் . நோபளும் பெற்றார் போதுமா ?

உலக முஸ்லிம் மக்கள் 1302 மில்லியனுக்கு குர்ஆனை அணுகி விஞ்ஞானம் விளக்கம் சொன்ன இஸ்லாமிய விஞ்ஞானிகளின் சதவீதக் கணக்கு சரியா வருகிறதா ?

நியமமாக பார்த்தால் இஸ்லாமியர்களே விஞ்ஞான கண்டுபிடிப்புகளை உலகுக்கு அளித்திருக்க வேண்டும். மருத்துவத்தையும் சொல்லிக் கொடுத்த நபிகளாரின் மருத்துவமும் கையில் வைத்துக் கொண்டு யூதர்களிடமும் , கிருஸ்தவர்களிடமும்தான் நாம் மருத்துவ விஞ்ஞானத்தை எதிர்நோக்க வேண்டிய அவலம் இருக்கிறது.

இது உலகக் கல்வி, இது மார்க்க கல்வி என்று தனித்தனியாக பிரித்ததில்தான் இஸ்லாமியர் ஆரம்பத்திலேயே சறுகி விட்டனர். இதுவே முதல் கோணல் , உலகலாய கல்வியான விஞ்ஞான தத்துவத்தை குர்ஆன் உங்களுக்கு உரைத்துக் காட்டவில்லையா ? பின் ஏன் நீங்கள் குர்ஆனை மார்க்க கல்வி என்று திரை போட்டு மறைத்தீர்கள் .

இந்தக் குர்ஆனில்தான் எய்ட்ஸ்க்கும் , கேன்சருக்கும் மருந்து இருக்கிறது .
இந்தக் குர்ஆனில்தான் மூன்றாம் உலகப் போரை தடுத்து நிறுத்தி வைக்கும் அமைதியான ஆற்றல் இருக்கிறது.
இந்தக் குர்ஆனில்தான் உலகத்தை நடுநிலையான நீதியின் பக்கம் கொண்டு வரும் நியாயம் இருக்கிறது

وَلَقَدْ صَرَّفْنَا لِلنَّاسِ فِىْ هٰذَا الْقُرْاٰنِ مِنْ كُلِّ مَثَلٍ فَاَبٰٓى اَكْثَرُ النَّاسِ اِلَّا كُفُوْرًا


இந்தக் குர்ஆனில் எல்லா உதாரணங்களையும் மனிதர்களுக்கு(த் திரும்பத் திரும்ப) விவரித்துக் கூறியிருக்கிறோம். எனினும், மனிதர்களில் பெரும்பாலானவர்கள் இதனை நிராகரிக்காமல் இருக்கவில்லை. (அல்குர்ஆன் : 17:89)

முதல்ல பிள்ளை படிக்க வையுங்கள். தமிழ் குர்ஆனும் , கொஞ்சம் தமிழ் ஹதீஸ் கிதாபுகள் வாங்கி வீட்டு அலமாரியில் வையுங்கள் .

செல்போனையும் , TV வையும் அடிக்கடி சுவிட்ச் ஆப் பண்ணச் சொல்லிக் கொடுங்கள் .முதல்ல நீங்க இதை நடைமுறைப்படுத்துங்கள் .

மனமும் ,புலன் அறிவும்

(விண்வெளி ரகசியம் 21)




லீப்னிட்ஸ் என்பவர் ஜெர்மானிய தேசத்து விஞ்ஞானி , வெளிச்சம் , நிறம், வெப்பம் முதலிய குணங்கள் மாத்திரமின்றிப் பொருளின் உருவம் , இயக்கம் முதலியவை வெறும் தோற்றமே என்பது இவருடைய கொள்கை.

ஏனெனில் வெளிச்சம், வெப்பம், நிறம், வெப்பம் , நிறம், உருவம் , இயக்கம் இன்னும் பொருளின் மற்றெல்லாக் குணங்களும் மனிதனுடைய புலன்களின் அறிவாலேயே ஏற்படுகின்றன; மனிதப் புலன் அறிவுக்கும் அப்பால் அப்பொருள் பொருளே அல்ல !

ஒரு "பொருள் " என்று நாம் குறிப்பிடுவது ,அப்பொருளினுடைய குணங்களின் கூட்டுத்தொகை . அக்குணங்களை உணருவது நம்புலன்கள். நம் புலன்களை இயக்குவது நம் மனம். ஆகவே நம் மனம்தான் வெளிப் பொருளைப் பற்றிய குணங்களின் இருப்பிடம் .
சக்தியும், பொருளும் , அணுவும் , அண்டமும் நிறைந்து காணப்படும் இப்பரந்த பிரபஞ்சம் முழுவதும் நம் மனத்தால் உண்டாக்கிய சிருஷ்டி ! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் மனோ விகாரத்தைக் களைந்து விட்டு நோக்கினால் , இப்பிரபஞ்சம் இல்லை - அது ஒன்றுமில்லாத ஒரு சூன்ய வெளி !

பெர்க்கலே என்கிற விஞ்ஞானி, "மண்ணுலகிலும், விண்ணுலகிலும் நிறைந்து கிடப்பதாகத் தோன்றும் அத்தனைப் பொருள்களுக்கும் , என்னுடைய மனமே , உருவம் கொடுக்கிறது .என்னால் , என் மனத்தால் அவை உணரப்படாத வரையில் அவற்றின் உருவங்கள் அனைத்தும் அருவமே " என்கிறார்
ஆல்பர்ட் ஐன்ஸ்டின் , " பொருள்களின் நிறத்தையும் , உருவத்தையும் எவ்வாறு மனத்தின் உணர்வாக நாம் கருதுகிறோமோ அதே மாதிரியான மன உணர்வுதான் காலமும் , இந்த பரந்த வெளியும் .
இந்த பரந்தவெளியை நாம் உணர்வது எப்போது ...? இப் பரந்த வெளியில் உள்ள பொருள்களின் அமைப்பை நாம் உணரும் போதுதானே இப் பரந்த வெளியையும் உணருகிறோம் ? அதே வகையில் பொருள்களில் ஏற்படும் நிகழ்ச்சிகளை வரிசைப் பிரகாரம் அளக்க முற்படும்போதுதானே காலத்தை உணருகிறோம் .
"காலம் " என்பதும் நம் மனத்தின் உணர்வே. சுதந்திரமான , தனிப்பட்டதோர் நிலை பரந்த வெளிக்கும் இல்லை, காலத்திற்கும் இல்லை .
பொருள்கள் அடங்கியுள்ள அண்டமே இப் பரந்த வெளி . பொருள்களில் ஏற்படும் நிகழ்ச்சிக் குறிப்புகள் காலப் பிரமாணத்தால் கணக்கிடப்படுகின்றன . ஆகையால் பரந்தர வெளியும், காலமும் பொருளின் அடிப்படையில் எழுந்தவை.
பொருளைப் பற்றிய உணர்வு நம் மனத்தால் உண்டாகிறது .ஆகவே பொருளின் அடிப்படையில் எழுந்த பரந்த வெளியும், காலமும் மனத்தின் உணர்வால் உண்டாகின்றன என்று நான் சொல்வதில் உங்களுக்கு அபிப்பிராயபேதம் இருக்க நியாயமில்லையே !
அணுவும், அண்டமும், பொருளும், பிரபஞ்சமும் , காலமும் வெளியும் நம் மனத்தின் உணர்வால் எழுந்த மகத்தானதொரு மாய மாளிகை !
நம் புலன்களின் அறிவால் கட்டுப்படுத்தப்பட்ட நமது மனத்தின் உணர்வுக்கும் அப்பால் சென்று விட்டால் ..., அணுவும் இல்லை அண்டமும் இல்லை , பொருளும் இல்லை இப் பிரபஞ்சமும் இல்லை. காலமும் இல்லை இப் பரந்த வெளியும் இல்லை.
" இறைவனே ! நீ எதற்காக படைப்பினங்களைப் படைத்தாய் ?" என்று தாவூத் (அலை) அவர்கள் இறைவனிடம் கேட்டதற்கு ,
" நீ இருப்பது என்னால் வெளிப்பட்டது .
நான் இருப்பது உன்னால் உண்டாக்கப்பட்டது .
என்னாலேயன்றி நீ வெளியாக்கப்பட்டிருக்க மாட்டாய்.
உன்னாலேயன்றி நான் உண்டாக்கப்பட்டிருக்க மாட்டேன் "

விடை தெரியாத கேள்விகள்
(விண்வெளி ரகசியம் 22)



" விளக்கம் " என்ற சொல் உண்மைப் பொருளைக் கண்டறிய முன்னேறும் ஒவ்வொரு படியிலும் சுருங்கிக் கொண்டே வருகிறது .அதாவது , உண்மையை அதிகமாக அறிய , அறிய அதை விளக்கிச் சொல்வது கடினமாகிக் கொண்டே போகிறது .

மின்சாரம் , காந்தம் , ஈர்ப்பு சக்தி போன்ற பதங்களை விஞ்ஞானம் உண்மையில் விளக்க முடியாது . அந்த இயற்கைச் சக்திகளை முன்கூட்டியறியவோ , அச் சக்திகளின் இயக்கங்களை அளந்து சொல்லவோதான் விஞ்ஞான அறிவு பயன்படுகிறதே தவிர ,

அச்சக்திகளின் ஆரம்பம் என்ன என்பதைப் பற்றியோ , அவற்றின் கடைசி நிலை என்ன என்பதைப் பற்றியோ விஞ்ஞான அறிவால் ஒன்றும் கூறமுடியவில்லை .

தற்கால விஞ்ஞான ஆய்வாளர்களின் பெரும்பாலோர் அந்த மாயாஜால இயற்கைச் சக்திகள் ' உண்மையில் என்ன ' என்பதைக் கண்டு பிடிக்கவே முடியாது என்று அவ்வாராய்ச்சி எண்ணத்தையே ஒதுக்கி தள்ளிவிட்டார்கள் .
பெர்ட்ரண்டு ரஸ்ஸல் என்னும் அறிஞர்,
மின்சாரம் என்றால் என்ன என்பதற்கு , "மின்சாரம் என்பது ஸெயிண்ட் பால்ஸ் கதீட்ரல் மாதா கோயிலைப் போல் ஒரு பொருள் அன்று . மின்சாரத்தில் பொருள்கள் இவ்வாறு இயங்கும். பொருள்களில் மின் சக்தியைச் செலுத்தினால் அவை இம்மாதிரியான மாறுதலையடையும் , இந்த இந்த சந்தர்ப்பங்களில் பொருள்களில் மின்சக்தியைப் பாயவிட முடியும் , என்பது போன்ற விஷயங்களை நாம் பிறருக்குச் சொல்லத்தான் முடியுமே தவிர , ' மின்சாரம் ' என்பது என்ன என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லவே முடியாது " .
இவ்வாறு, விஞ்ஞான அறிவு " எப்படி ? " என்ற கேள்விக்கே பதில் கொடுத்தது ; ஆனால் " ஏன் " என்ற கேள்விக்கு அது பதில் கொடுக்க முடியவில்லை.
அரிஸ்டாடில் என்ற கிரேக்க தத்துவஞானி , இயற்கைச் சக்திகளால் ஏற்படும் பிரச்சனைகளில் " எப்படி " என்ற கேள்விக்கு மாத்திரம் பதில் கொடுக்க முற்பட்டார் . ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் துவங்கிய அவருடைய முயற்சியின் லட்சியம் இயற்கைப் பிரச்னைகளின் "ஏன்" என்ற கேள்விக்குப் இன்னும் பதில் யாராலும் கொடுக்க முடியவில்லை .

விஞ்ஞானம் என்பது முழுமையான ஞானம் அல்ல... அது ஒரு விதமான சிந்திக்கும் முறை. மேகங்களைப் பற்றி , மழை பொழிவதைப் பற்றி, குழந்தைப் பிறப்பதைப் பற்றி , நேற்று சாப்பிட்ட சோறு , இன்று எப்படித் தண்ணீர் குழாய் பைப் அடிக்கத் தெம்பாக மாறுகிறது என்பது பற்றியெல்லாம் சிந்திக்க வைத்து பரிசோதனைகள் மூலம் பதில் கண்டுபிடிப்பதுதான் அதன் குறிக்கோள்.

விஞ்ஞானம் சில ' ஏன் 'களுக்கு பதில் சொன்னாலும் , பல ' ஏன் ' களுக்கு அதனிடம் பதில் இல்லை. உதாரணமாக..
சூரியன் ஏன் வட்ட வடிவில் இருக்கிறது ஏன் முக்கோண வடிவத்தில் இருக்கக் கூடாது ? பதில் சொல்ல முடியாது .

'எப்படி' என்று கண்டுபிடிப்பதில்தான் விஞ்ஞானத்துக்கு ஆதாரமான பூரிப்பு ஏற்படுகிறது !
ஆகவே , நம்மால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளவே முடியாது.பால் வீதி
(Milky Way) என்றழைக்கப்படும் நம்முடைய கேலக்ஸியில் மட்டுமே கோடிக்கணக்கில் நட்சத்திரங்களும் , கிரகங்களும் இருக்கின்றன. இப்படிக் கோடிக்கணக்கான கேலக்ஸிகள் இருக்கின்றன ! இவையெல்லாம் அறிவது மனிதனின் நேற்றைய _ இன்றைய _ நாளைய ஏன் , மனிதனின் ஒட்டு மொத்தமான சரித்திர காலத்தில் கூடச் சாத்தியமில்லை.
" வானங்களையும், பூமியையும், இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் வீணுக்காக நாம் படைக்கவில்லை " (அல்குர்ஆன் : 38:27)

பிரபஞ்சத்தின் வடிவத்துக்கு ஏன் போக வேண்டும் ? ஒரு கல் உப்பு - ஸோடியம் க்ளோரைடு அதில் எத்தனை அணுக்கள் இருக்கின்றன தெரியுமா ? நூறு கோடி !
பொழுது போகவில்லையென்றால் ஒன்றுக்கு பக்கத்தில் பதினாறு சைபர் போட்டுக் கொள்ளுங்கள். நம் மூளைக்குள் இருக்கும் நியுரான்களின் எண்ணிக்கை அத்தனையும் கணக்கிட்டால்கூட , ஒரே ஒரு கல் உப்பை முழுமையாக அறிவதற்குப் போதாது.
மனித சரித்திரத்திலேயே மிகப் பெரிய விஞ்ஞானி சர் ஐஸக் நியூட்டன் : '' நான் கடற்கரையில் விளையாடும் ஒரு சிறுவன் . இங்கே ஒரு கூழாங்கல் , அங்கே ஒரு அழகான சங்கு என்று கண்டுபிடித்துப் பெருமிதப் பட்டுக் கொண்டிருக்கையில் , எதிரே 'உண்மை ° என்ற மாபெரும் சமுத்திரம் இன்னும் கண்டறியப்படாமல் பரவிக் கிடக்கிறது"
உன் ரப்பு யார் ? என்று கேட்ட கேள்விக்கு ,

قَالَ رَبُّنَا الَّذِىۡۤ اَعۡطٰى كُلَّ شَىۡءٍ خَلۡقَهٗ ثُمَّ هَدٰى
அதற்கு மூஸா "எவன் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய இயற்கைத் தன்மையைக் கொடுத்து (அவைகளை பயன்படுத்தும்) வழியையும் (அவைகளுக்கு) அறிவித்தானோ அவன்தான் எங்கள் இறைவன்" என்றார்.
(அல்குர்ஆன் : 20:50)

பிரபஞ்சத்தின் இயக்கம்
(விண்வெளி ரகசியம் 23)



ஒரு கப்பல் கடலில் மிதந்து கொண்டிருக்கிறது கப்பலின் ஓர் அறையில் சிலர் சதுரங்கம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். சதுரங்கக் காய்கள் சதுரங்கப் பலகையின்மேல் வைக்கப்பட்டிருக்கின்றன . காய்களை நகர்த்தாமல் சதுரங்கப் பலகையை அப்படியே எடுத்து வேறு ஒரு அறையில் கொண்டு போய் வைத்து விடுகிறார்கள் .

இப்போது சதுரங்கப் பலகையைப் பொறுத்தவரை காய்கள் இருந்த இடத்தில்தான் இருக்கின்றன. ஆனால் உண்மையில் அவை ஓர் அறையில் இருந்து மற்றொரு அறைக்கு நகர்ந்து சென்றிருக்கின்றன .

சதுரங்கப் பலகை அதே அறையில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த அறையைப் பொருத்தவரையில் , சதுரங்க பலகை இருந்த இடத்தில்தான் இருக்கிறது . ஆனால் கப்பலோ நகர்ந்து கொண்டு இருக்கிறதே ! அப்போது கப்பலுக்குள் இருக்கும் சதுரங்கப் பலகையும் நகர்ந்து சென்று கொண்டுதானே இருக்க வேண்டும்!

கப்பல் ஒரு துறைமுகத்தில் நின்று கொண்டிருப்பதாகவே வைத்துக் கொள்வோம் கடலைப் பொருத்தவரை பூமியைப் பொருத்தவரை அந்தக் கப்பல் இருந்த இடத்தில்தான் உள்ளது ஆனால் பூமியே நகர்ந்து கொண்டிருக்கிறதே ! அப்போது அந்த பூமியின் மேலுள்ள கப்பலும் நகர்ந்து கொண்டுதானே இருக்க வேண்டும் !

சதுரங்கப் பலகையைப் பொறுத்தவரை நகர்ந்தவையே கப்பலைப் பொறுத்தவரை நகராத சதுரங்கப் பலகை , கடலையும் , பூமியையும் பொறுத்தவரை நகர்ந்து கொண்தான் இருக்கிறது . கடலைப் பொறுத்தவரை நகராத கப்பல் வான வீதிகளில் திரியும் பிரபஞ்சப் பொருள்களைப் பொறுத்தவரை நகர்ந்து கொண்டிருப்பதாகத்தான் கருத வேண்டும் .

இந்த சுவாரசியமான சிந்தனையை ஜான் லாக் என்னும் தத்துவ ஞானி 300 ஆண்டுகளுக்கு முன் தமது புத்தகத்தில் எழுதியுள்ளார்.

மேற்கண்ட சம்பவங்களில் பொருள்களின் இருப்பிடத்தைப் பற்றிய உண்மையை , விளக்கும் ஒப்புமைத் தத்துவத்திற்கு இது உவமானமாகும் இதே உவமானத்தைக் கொண்டு பிரபஞ்ச இயக்கத்தோடு பொருத்தி பார்த்து விளங்கிக் கொள்ளலாம் .

நமது பூமி தன்னைத்தானே மணிக்கு1000 மைல் வேகத்தில் சுற்றிக் கொள்கிறது. அதே சமயத்தில் விநாடிக்கு 20 மைல் வேகத்தில் சூரியனைச் சுற்றி வருகிறது .இந்தச் சூழல்களைத் தவிர, பூமி வேறு விதமான
சூழல்களுக்கும் இலக்காகின்றது .

சந்திரன் பூமியைச் சுற்றி வருவதாக பெரும்பாலோர் நினைக்கின்றனர் ; ஆனால் உண்மை வேறு ; பூமியும் சந்திரனும் ஒன்றையொன்று சுற்றி வருகின்றன ! இன்னும் சரி வர சொல்ல வேண்டுமானால் , இரண்டுக்கும் பொதுவானதோர் புவி ஈர்ப்புத் தானத்தில் அவை சுற்றி வருகின்றன .

சூரிய மண்டம் முழுவதுமே நமது நட்சத்திர மண்டத்தில் விநாடிக்கு 13 மைல் வேகத்தில் சுற்றி வருகின்றன .

நமது நட்சத்திர மண்டலமோ விநாடிக்கு 200 மைல் வேகத்தில் பால் வீதியில் சுற்றி வருகின்றன .

நமது பால் வீதி ஆகாசவெளியில் விநாடிக்கு 100 மைல் வேகத்தில் சுற்றி வருகின்றன .ஆக பிரபஞ்ச இயக்கம் ஒன்றை ஒன்று சார்ந்த இயக்கம் .

இதனை குர்ஆனில் ..

لَا الشَّمْسُ يَنْبَغِىْ لَهَاۤ اَنْ تُدْرِكَ الْقَمَرَ وَلَا الَّيْلُ سَابِقُ النَّهَارِ وَكُلٌّ فِىْ فَلَكٍ يَّسْبَحُوْنَ

சூரியன் சந்திரனை அணுக முடியாது. இரவு பகலை முந்த முடியாது. (இவ்வாறே நட்சத்திரங்கள்) ஒவ்வொன்றும் தன்னுடைய வட்டவரைக்குள் நீந்திச் செல்கின்றன. (அல்குர்ஆன் : 36:40)

மொத்த பிரபஞ்சத்தின் இயக்கம் எதைச் சுற்றி வருகிறது ?


ர. ரா

Rahmath Rajakumaran

நபி யூனுஸ் (அலை) அவர்களை மீன் விழுங்கும்படி இறைவன் செய்தான் .அவர் மீன் வயிற்றில் இருந்தார் ஆனால் மீன் கடலைச் சுற்றி வந்தது.

கடல் பூமியில் இருந்தது . பூமி சூரியனைச் சுற்றி வந்தது . சூரியன் வான வெளில் பால் வீதியில் சுற்றி வந்தது . பால் வீதி வெளியில் சுற்றி வந்தது . மொத்த வெளியும் எதனைச் சுற்றி வருகிறது.

பிரம்மாண்டத்திற்கும் , பரமாணுக்கும் இடையில் மனிதன் .
(விண்வெளி ரகசியம் 24) 01-04-2019



பிரபஞ்சம் என்பது ஒன்றுமே இல்லாத சூன்யமா ? ஆமாம். நாம் வாழும் பிரபஞ்சம் மனத்தின் உணர்வால் நாமே சிருஷ்டித்துக் கொள்ளும் காட்சி ஜோடனையாக மட்டும் இருந்துவிடுமேயானால் , ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் மனத்திலும் வெவ்வேறு வகையான பிரபஞ்ச சிருஷ்டிகள் ஏற்பட்டு விடுமே !

அப்போது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் ஒவ்வொரு பிரபஞ்சமா ? இந்த விபரீத மனத்தத்துவம் பிரபஞ்ச உண்மைகளைப் பற்றி அறியும் ஆராய்ச்சிகளனைத்தையும் குழப்பக் குட்டையில் கொண்டு போயல்லவோ கரைத்துவிடும் ?
ஆனால்-ஒவ்வொரு மனிதனின் மன உணர்விலும் நுட்பமானதோர் ஒழுங்கு காணப்படுகின்றது. மன உணர்வுகளில் ஏற்படும் அந்த ஒழுங்கின் அர்த்தம் என்ன ? பிரபஞ்சத்தைப் பற்றி அடிப்படை உண்மை என்பதைத் தெரிவிக்கும் நுட்ப உணர்ச்சியாக அது இருக்குமோ ?


புலன்களால் பொருள்களை உணரும் போது ஏற்படும் அபிப்பிராய பேதங்களைனைத்தும் மேல்தளத்தில் உண்டாகின்றன . அவ்வுணர்வுகளின் அடித்தளத்தில் பொருள்களினுடைய உண்மைத் தன்மையின் தெளிவற்ற உருவத்தையாவது ஆராயும் மனம் அறியாமலிருக்க முடியாது.
" நிச்சயமாக அல்லாஹ்தான் வானங்களையும் பூமியையும் மிக்க மேலான அமைப்பில் படைத்திருக்கிறான் என்பதை (மனிதனே!) நீ கவனிக்கவில்லையா?"
(அல்குர்ஆன் : 14:19)
....என்று இறைவன் ஒவ்வொரு மனிதனிடமும் கேட்பது அவனின் மனத்தை நோக்கிதான் .
பெர்க்கலே , டெகார்ட்டே , ஸ்பைனோஸா போன்ற தத்துவ ஞானிகள் இயற்கையின் இயக்க ஒழுங்கிற்குக் காரணம் கடவுளைச் சார்ந்தது என்கிறார்கள் .


பௌதிக விஞ்ஞானிகள் இயற்கையின் இயக்க ஒழுங்கிற்கு காரணம் கணித விதிகளையே நம்புகிறார்கள் . கணித விதிகளின்படிதான் இந்த மாயப் பிரபஞ்சத்தின் மர்ம இயக்கங்கள் நடைபெறுவதாகத் திருத்தக் கூறினாலும் , எல்லாக் காலங்காலங்களிலும், எல்லாச் சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் பிரபஞ்ச இயக்கங்கள் இவ்விதிகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு தெய்வீக சக்தியால்தான் நடைபெறுகின்றன என்ற முடிவுக்கே வரவேண்டிய நிர்பந்தம் தற்கால விஞ்ஞானிகளுக்கும் ஏற்பட்டுள்ளது .
وَلَٮِٕنْ سَاَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ لَيَـقُوْلُنَّ اللّٰهُ قُلِ الْحَمْدُ لِلّٰهِ بَلْ اَكْثَرُهُمْ لَا يَعْلَمُوْنَ
(நபியே!) "வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார்?" என்று நீங்கள் அவர்களைக் கேட்பீராயின், அதற்கவர்கள் "அல்லாஹ்தான்" என்று நிச்சயமாகக் கூறுவார்கள். (அதற்கு நீங்கள் "இவ்வளவேனும் உங்களுக்கு அறிவு இருப்பது பற்றி) அல்லாஹ்வை நான் புகழ்கிறேன்" என்று கூறுங்கள். எனினும், அவர்களில் பெரும்பாலானவர்கள் (இறைவனை இவ்வாறு புகழ்ந்து துதி செய்ய) அறிய மாட்டார்கள்.
(அல்குர்ஆன் : 31:25)

இயற்கையை ஊடுருவிப் பார்க்கும் கணித முறைகள் அதிகாரிக்க அதிகரிக்க , பிரபஞ்சத்தை ஆராயும் மனிதனின் பிரமிப்பு அதிகரித்துக் கொண்டே போகிறது.
இயற்கையின் முக்கியமான மர்மங்கள் பிரபஞ்சத்தின் மிகப் பெரிய பிரமாண்டமான சிருஷ்டியிலும் , மிகச் சிறிய பரமாணுவான சிருஷ்டியிலும் , மறைந்துக் கிடப்பதை மெஞ்ஞானிகள் அதையெல்லாம் அவனின் சொரூபமாக எண்ணி , மிக எளிதாக கடந்து செல்கிறார்கள் .

ஆனால் விஞ்ஞானிகளோ , காலைச் சுற்றி வளைக்கும் பாம்புகள் மாதிரி கணித ரீதியான சாம்ய சம்பந்தங்களை கட்டிக் கொண்டு மெஞ்ஞானிகளைப் போல் ரசிக்க வியக்க முடியாமல் , விஞ்ஞானிகளால் திருப்தியடைந்து விட முடியவில்லை .
இந்த நொடிக் கூட இடைவிடாது இப்பிரபஞ்சம் படைக்கப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது !

பூமியின் மேல்புறம் தலைகீழே வரும் போது பொருட்கள் ஏன் வெளியில் சிதறுவது இல்லை ? (விண்வெளி ரகசியம் 25)





பரந்த பிரபஞ்ச வெளி மண்டலத்தில் ஒரு குடை ராட்டினம் சுற்றிக் கொண்டு இருப்பதாக கற்பனையுங்கள். இந்த குடை ராட்டினத்தில் ஒரு பெட்டி வெளிப்புறம் தெரியாதபடி விஞ்ஞானிகளின் ஓர் அறையும் உள்ளது என்பதாகவும் கற்பனையுங்கள் .
இப்போது அறையில் இருக்கும் விஞ்ஞானிகளுக்குத் தங்கள் குடை ராட்டினத்தோடு சுற்றிச் சுற்றி வருவது தெரியாது. இருந்தாலும் குடை ராட்டினம் சுற்றிக் கொண்டே இருக்கிறது . ஆனால் ஒரு பொருளை அறையினுள் போட்டால் கீழே நோக்கி விழும், அதாவது ஈர்ப்பு சக்தி உள்ள இடத்தில் அவர்கள் இருப்பதாக உணர்கிறார்கள் .
குடை ராட்டினத்திற்கு வெளியே நின்று பார்த்துக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு , குடை ராட்டினத்தின் மையத்தை நோக்கி அந்த அறை இழுக்கப்படுகிறது என்பது புலப்படும்.
இவ்வாறு ஒரு பொருள் ஏதேனும் ஒரு புள்ளியைச் சுற்றி இழுக்கப்படும் போது அந்தப் பொருளின் மையச் சுழற்சி விசை **(centrifugal force)** யை அந்த அறைக்குள் இருக்கும் விஞ்ஞானிகளால் அறிய
நியாயமில்லை.
மேலும் அந்த அறையின் தரை எது , அதன் கூரை எது என்ற உண்மையான உணர்வும் அவர்களுக்கு ஏற்படாது. காரணம் குடை ராட்டினம் சுழன்று கொண்டிருக்கிறது ! அறையின் எந்தப் பாகத்தில் விஞ்ஞானிகளின் கால்கள் ஊன்றி அழுத்துகின்றதோ அதுவே அவர்களுக்குத் தரை ; எந்தப் பாகத்தை நோக்கிப் பொருட்கள் அறையினுள் விழுகின்றதோ அந்த பாகம்தான் தரை.
அந்த தரைக்கு எதிர்ப்புறத்தில் இருப்பது கூரை ! அவ்வளவே .
குடை ராட்டினத்தை வெளியில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் மனிதனுக்கு அந்த அறையின் வெளிப்புறச் சுவராகக் காட்சியளிக்கும் அதே சுவர்தான் அறையினுள் இருக்கும் விஞ்ஞானிகளுக்கு தரையாக உணரப்படும்.
அப்படியே குடை ராட்டினத்தை பூமியாக இப்போது கற்பனையுங்கள்
ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால், பரந்த வெளியில் " மேல் " என்றும் " கீழ் " என்றும் சொல்லப்படும் வார்த்தைகளுக்கு அர்த்தமில்லை என்பது புலப்படும். நாம் பூமியில் தரை என்று குறிப்பிடுவது பூமியின் ஈர்ப்பு விசை நம்மை இழுக்கும் திசையேயாகும்.
ஆனால் இறைவன் தன் குர்ஆனில் பூமியை பார்த்தவாறு சூரியன் சந்திரன் உதிப்பதையும் , மறைவதையும் தன் பார்வையில் குறிப்பிடுகிறான் .
رَبُّ الْمَشْرِقَيْنِ وَ رَبُّ الْمَغْرِبَيْنِ
(சூரியன், சந்திரன் இரண்டும்) உதிக்கும் இரு திசைகளுக்கும் அவனே சொந்தக்காரன். மேலும், (அவைகள்) மறையும் இரு திசைகளுக்கும் அவனே சொந்தக்காரன். (அல்குர்ஆன் : 55:17)
உதாரணமாக சூரியனில் இருந்து கொண்டு ஒருவன் பூமியைப் பார்ப்பதாகக் கற்பனை செய்து கொண்டால் , ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா முதலிய பூமியின் தென் கண்டங்களில் வசிப்பவர்கள் , பூமியின் மேல்தளத்தில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு நடமாடுவதாகவே அந்த சூரிய மனிதனுக்குத் தோன்றும் ! அதே மாதிரி ஒருவன் ஆகாய விமானத்தில் பூமியின் தென்துருவத்தில் பறந்து சென்று கொண்டிருப்பதை அந்தச் சூரிய மனிதன் , அந்த விமானம் பூமியைச் சுற்றி தலைகீழாகப் பறந்து கொண்டிருப்பதாகத்தான் நினைப்பான் .
எனவே , குடை ராட்டினத்தில் சுழன்று கொண்டிருக்கும் அந்த அறையில் உள்ள விஞ்ஞானிகள் செய்யும் பரிசோதனைகள் எல்லாம் அந்த அறை
#நேர்செங்குத்தாகச் செல்லும்போது ஏற்படும் விளைவையே உண்டாக்குகின்றன. அறையிலுள்ள பொருள்கள் தரையை நோக்கி விழுகின்றன .எனவே அந்த விஞ்ஞானிகள் அறையில் நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் காரணம் ஈர்ப்பு விசைதான் என்று

நினைப்பதோடு, தாங்கள் அனைவரும் ஈர்ப்பாற்றல் பிரதேசத்தில் நிலையாக இருந்து கொண்டிருப்பதாகவே பூர்ணமாக நம்புவார்கள் . ஆனாலும் அவர்கள் குடை ராட்டினத்தில் சுழன்று கொண்டிருக்கிறார்கள் .
குடை ராட்டினத்தில் ஒவ்வொரு பெட்டியும் பூமியின் தரைக்கு செங்குத்தாக இருப்பதாலும் , மேலும் ஈர்ப்பாற்றல் பிரதேசத்தில் பிரவேசிப்பதாலும் குடை ராட்டினத்தில் பொருட்கள் வெளியில் விழுவது இல்லை .அதேப் போலவே பரந்த வெளியில் பூமியின் மேல்புறம் தலைகீழே வரும் போதெல்லாம் பொருட்கள் வெளியில் சிதறுவது இல்லை .

Rahmath Rajakumaran
ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின்
பொது சார்பியல் தத்துவத்தை சொல்றேன்.
எங்க வீட்டிலிருந்து மார்க்கெட் போகும் வழியில் எனக்கு இடது புறத்தில் உஸ்மானிய்யா மதரஸா உள்ளது. சரிதான்.
மார்க்கெட்டிலிருந்து எங்க வீட்டிற்க்கு வரும் வழியில் எனக்கு வலது புறத்தில் உஸ்மானிய்யா மதரஸா உள்ளது. சரிதான்.
இதில் எது உண்மை ? இரண்டுமே உண்மைதான். காரணம் திசையை சார்ந்து பேசும் போது இந்த முரண் ஏற்படுகிறது .
இந்த பூமி உருண்டையில் இந்தியாவில் நாம் நேராக நிற்கும் போது , அமெரிக்கர் கள் தலைகீழாகவா நடக்கிறார்கள் .அங்குள்ள அட்லாண்டிக் கடல் தலை குப்புறவா கவிழ்ந்து விட்டது ? இல்லையே இது எப்படி ?
விண்வெளியில் மேல்-கீழ் என்ற பாகுபாடு இல்லைவே இல்லை.
உள்ளபடியே " செங்குத்து " (Vertical) சித்தாந்தம் அண்ட வெளிக்கு அறவே பொருந்தாது. அங்கே ஒவ்வொரு கோளகத்தில் ஒவ்வொரு எதிரெதிர் விட்டப்புள்ளிகளும் ஒன்றுக்கொன்று செங்குத்தானவை.
பூமியில் நம் தலை உச்சிக்கு நேர்மேலே தெரியும் சந்திரன் .சந்திரனில் நீங்கள் நின்று அண்ணாந்து நோக்கினால்தான் பூமி தெரியும்.
பூமியும் சந்திரனும் மற்ற கோள்களும் மேசை மாதிரியோ அல்லது தோசை மாதிரியோ தட்டையான பரப்பு உடையவை அல்ல. மேல் பாகம் , கீழ் பாகம் என்ற பாகு பேதம் அவற்றுக்குக் கிடையவே கிடையாது
رَبُّ الْمَشْرِقَيْنِ وَ رَبُّ الْمَغْرِبَيْنِ
(சூரியன், சந்திரன் இரண்டும்) உதிக்கும் இரு திசைகளுக்கும் அவனே சொந்தக்காரன். மேலும், (அவைகள்) மறையும் இரு திசைகளுக்கும் அவனே சொந்தக்காரன்.
(அல்குர்ஆன் : 55:17)

இரவு வரும் பகலும் வரும் உலகம் ஒன்றுதான் .
(விண்வெளி ரகசியம் 26)



சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைவது இந்த பூமியில் நீங்கள் வாழ்கிற பூமியின் மத்திய பகுதியில் மட்டும்தான் .

இதே பூமி அது அச்சு சுழலும் மேல் கீழ் இரு உச்சியில் கிழக்கில் மட்டும் இல்லை எல்லா திசையிலும் சூரியன் உதிக்கும் .
நீங்கள் ஒரு உச்சியான அண்டார்டிகாவில் தென் துருவ பகுதியில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் இருக்க நேர்ந்தால் ஒரே நாளில் சூரியனை தெற்கு , வடக்குத் திசை உட்பட நான்கு திசைகளிலும் உதிக்கக் காணலாம் . இது முதலாம் அதிசயம் . அட , இந்த அண்டார்டிகா கூட நம்ம பூமியில்தான் உள்ளது.

அண்டார்டிகா தென் துருவப் பகுதியில் செப்டம்பர் 21 ந் தேதி சூரியன் உதிக்கும் . அதன் பிறகு ஆறு மாதம் கழித்துதான் அஸ்தமிக்கும் . அதுவரை ஓயாத ஒரே பகல்தான் . இது இரண்டாம் அதிசயம் . சூரியன் அவ்விதம் உதித்தப் பிறகு அடிவானத்துக்கு சற்றே மேலே தொடர்ந்து இருந்தபடியே கொஞ்சம் கொஞ்சமாய்ப் பக்கவாட்டில் நகரும்.
பின்னர் நேர் வடக்கே நகரும். அப்போதும் அது அடிவானத்துக்குச் சற்று மேலேதான் இருக்கும். பிறகு தொடர்ந்து பக்கவாட்டில் நகர்ந்து மேற்கு திசைக்கு வரும் .

அங்கிருந்து பிறகு தென் திகைக்கு வரும். தெற்கிலும் அது அடிவானத்துக்குச் சற்று மேலேதான் இருக்கும் . அங்கிருந்து மறுபடி கிழக்குத் திசைக்கே வந்து சேரும். பிறகு இதே போல் அடிவானத்தில் இருந்தபடியே வட்டமடிக்கும். அடி வானில் ஒரு முறை வட்டமடித்து முடிக்க 24 மணி நேரத்தில் இத்தனை திசையிலும் சூரியன் உதிக்கிறது . இது மூன்றாம் அதிசயம் .

ஒவ்வொரு நாளும் அது அடிவானத்தில் கொஞ்சம் மேலே செல்லும் . சுமார் 3 மாத காலத்தில் அது அடிவானத்திலிருந்து சுமார் 23 டிகிரி உயரத்துக்கு வரும் . அவ்வளவுதான் .

பிறகு அது கீழ் நோக்கி இறங்க ஆரம்பிக்கும் . அதாவது சூரியன் எந்தத் திசையில் இருந்தாலும் சரி அது அடிவானத்தில் இருந்து இருக்கின்ற உயரம்தான் குறைய ஆரம்பிக்கும்.
மார்ச் 21ந் தேதி அன்று அடிவானத்தில் அஸ்தமித்து விடும் பிறகு அடுத்த செப்டம்பர் 21 ந் தேதி வரை தொடர்ந்து ஓயாத ஒரே இரவுதான் . இது நான்காம் அதிசயம் .

அண்டார்டிகா தென் துருவத்தில் சூரியன் அஸ்தமித்த அதே சமயத்தில் வட துருவத்தில் பூமியின் இன்னொரு உச்சியான ஆர்டிக் பகுதியில் சூரியன் அடிவானத்தில் உதித்து இதே போல ஆறு மாத காலம் அடி வானத்துக்குச் சற்று மேலே வட்டமிட்டுக் கொண்டிருக்கும் . ஒரு வித்தியாசம் .கிழக்கே உதித்த பின் அது தெற்கு வானுக்கும் பிறகு மேற்கு வானுக்கும் அடுத்து வடக்கு வானுக்கும் வந்து விட்டு பழையபடி கிழக்கே வந்து சேரும் .
அதாவது இந்தியாவில் பகல் என்றால் அமெரிக்காவில் இரவு . இது ஒரே ஒரு நாளில் நடைபெறுவது. இதே போல பூமியின் இரு உச்சிகளான அண்டார்டிகாவிலும் , ஆர்டிக்கிலும் இது 6 மாதம் பகல் 6 மாதம் இரவு
நீங்கள் இரவு நேரத்தில் ஒரு பூசனைக் காயைக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டு விளக்குகளை அனைத்து விட்டு அதன் மீது டார்ச் லைட்டைப் போட்டால் பூசணைக் காயின் மறுபுறத்தில் டார்ச் லைட் வெளிச்சம் விழாது . பூசணிக்காயை லேசாகச் சுற்றி விட்டால் பூசணைக் காயின் மறுபுறம் டார்ச் லைட்டுக்கு எதிரே வரும் .
இது போலத்தான் பூமி தனது அச்சில் சுழல்வதால் இரவும் பகலும் ஏற்படுகிறது .
اِنَّ فِىْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّاُولِى الْاَلْبَابِ
வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும், இரவு பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையவர்களுக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.
(அல்குர்ஆன் : 3:190)

வட தென் துருவத்தில் இந்த இரவு பகல் நிலைமைகள் வேறு. எப்படி விளக்குவது ...?
ஆ,...ங் .. நீங்கள் குடை ராட்டினத்தில் தொங்குகின்ற ஒரு குதிரை மீது உட்கார்ந்து கொள்கிறீர்கள் . சில அடி தூரத்தில் ஒரு பெட்டிக்கடையில் பிரகாசமான விளக்கு எரிகிறது .குடை ராட்டினம் சுழல ஆரம்பித்து உங்கள் குதிரை மறுபுறத்துக்குச் சென்றுவிடும் போது பெட்டிக்கடை விளக்கு உங்களுக்குத் தென்படாது . ஒரு சுற்று முடிந்த பின் விளக்குத் தென்படும்.
ஆனால் குடை ராட்டினத்தில் உச்சியில் ஒருவர் உட்கார்ந்திருப்பதாக வைத்துக் கொண்டால் அவரால் பெட்டிக்கடை விளக்கைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க இயலும். பூமியும் ஒரு வகையில் குடை ராட்டினம் போன்றதே . வடதென் துருவப் பகுதிகள் பூமியின் இரு உச்சிகள் ஆகும்.
பூமி தனது அச்சில் 23.5 டிகிரி அளவுக்குச் சாய்ந்து இருப்பதன் காரணமாக அது சூரியனைச் சுற்றி வருகையில் ஒரு சமயம் வட துருவத்தின் (அண்டார்டிகா) மீது சூரிய ஒளி ஆறு மாத காலம் தொடர்ந்து விழுகிறது . ஆறு மாதங்களுக்குப் பிறகு தென் துருவப் பகுதி மீது ஆறு மாதகாலம் சூரிய ஒளி விழுகிறது .

இதனால்தான் துருவப் பகுதிகளில் மாறி மாறி ஓயாத இரவும் , ஓயாத பகலும் உள்ளன.
இறைவானால் நமக்கு சில அச்சுறுத்தல்களை சொல்லிக் காட்டிவதற்கு உதாரணங்களாக வட தென் துருவங்களின் இரவு - பகல் இயல்பு நிலை கோடிட்டு காட்டுகிறான் .

قُلْ اَرَءَيْتُمْ اِنْ جَعَلَ اللّٰهُ عَلَيْكُمُ الَّيْلَ سَرْمَدًا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ مَنْ اِلٰـهٌ غَيْرُ اللّٰهِ يَاْتِيْكُمْ بِضِيَآءٍ‌اَفَلَا تَسْمَعُوْنَ
(நபியே!) நீங்கள் கேளுங்கள்: "இரவை மறுமை நாள் வரையில் உங்கள் மீது நீண்டிருக்கும்படி அல்லாஹ் செய்துவிட்டால், உங்களுக்கு(ப் பகலின்) வெளிச்சத்தைக் கொண்டு வரக்கூடிய இறைவன் அல்லாஹ்வையன்றி வேறு ஒருவன்இருக்கின்றானா?" (இக்கேள்வியை) நீங்கள் செவியுற வேண்டாமா?
(அல்குர்ஆன் : 28:71)

قُلْ اَرَءَيْتُمْ اِنْ جَعَلَ اللّٰهُ عَلَيْكُمُ النَّهَارَ سَرْمَدًا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ مَنْ اِلٰـهٌ غَيْرُ اللّٰهِ يَاْتِيْكُمْ بِلَيْلٍ تَسْكُنُوْنَ فِيْهِ اَفَلَا تُبْصِرُوْنَ
(பின்னும் நபியே!) நீங்கள் கேளுங்கள்: “பகலை இறுதி நாள் வரையில் உங்களுக்கு நீண்டிருக்கும்படி அல்லாஹ் செய்துவிட்டால், நீங்கள் இளைப்பாறக் கூடிய இரவை உங்களுக்குக் கொண்டு வரக்கூடிய இறைவன் அல்லாஹ்வையன்றி வேறொருவன் இருக்கின்றானா?”
(இதனை) நீங்கள் (படிப்பினை பெறும் கண் கொண்டு) பார்க்க வேண்டாமா?
(அல்குர்ஆன் : 28:72)

வான் நிகழ்வுகளால் கணிக்கப்பட்ட காலண்டர்கள்
(விண்வெளி ரகசியம் 27)



தமிழர்களின் அக்கால வான இயல் ஆய்வுத் துறை நம்மை இன்றும் பிரமிக்க வைக்கிறது . தமிழர்கள் தங்கள் நாட்காட்டி என்னும் காலண்டர்கள் முதல் பஞ்சாங்கம் வரை சந்திரனை அடிப்படையாக வைத்துதான் கணிக்கப்படுகிறது . இதையேதான் இஸ்லாமிய காலண்டர்களும் சந்திரனை வைத்துதான் கணிக்கப்பட்டுள்ளது .இது தான் மிகப் பெரிய ஆச்சரியம் .
"குகைத் தோழர்கள் 300 வருடங்கள் தூங்கினார்கள் என்றும் சிலர் 9 வைக் கூட்டி 309 வருடங்கள் தூங்கினார்கள் என்றும் கூறுகின்றனர் "
திருக்குர்ஆன் (18 : 25)

பூமி சூரியனை 365 1/4 நாட்களில் சுற்றி முடிகிறது அதே நேரத்தில் சந்திரன் பூமியோடு சேர்ந்து சூரியனை 354 நாட்களில் சுற்றி முடிகிறது என்பதாக குர்ஆனும் குறிப்பிடுகிறது அதாவது
365 x 300 = 109500 / 354 = 309 வருடங்கள் . அதாவது சூரிய கணக்கின்படி 300 வருடங்களும் சந்திர கணக்கின்படி 309 வருடங்களும் தூங்கினார்கள் , கணக்கு சரியா வருதா ?
சந்திரன் பூமியை ஒரு நீள்வட்டப் பாதையில் சுற்றி வர சராசரி 29 . 32 நாட்கள் 29.32 யை 29.5 நாட்களாக ஆக்கி ஒரு வருடத்திற்கு கணக்கிடும் போது

29.5 x 12 மாதம் = 354 நாட்கள் என்று சந்திர காலண்டர் என்கிறார்கள்
ஆனால் சந்திரன் உடுசுழற்சி காலம்
27. 321582 நாட்கள் அதாவது 27 . 3 நாட்கள் இதன் அடிப்படையில்தான் கரு வளர்ச்சியுறுகிறது என்பதாக .
27.3 X 10 மாதம் = 273 நாட்கள் இதுதான் ஒரு பெணணின் பிரசவ காலம். இதற்கு முன்னர் 27.3 நாட்களில்தான் பெண்ணுக்கு மாதவிலக்கு காலம் அதாவது 27 நாட்களும் 8 மணி நேரமும் ஆகும் இதையே பெண்கள் 28 நாட்கள் என்று குறிப்பிடுகிறார்கள் .
273 நாட்களில் மாற்றம் ஏற்பட்டு குறைந்தால் குறை பிரசவம் அதிகரித்தால் முதிர் பிரசவம்
மாதம் 27.3 நாட்கள் அதாவது 27 நாட்களும் 8 மணி நேரம் கொண்ட ஒரு மாதக்கணக்கில்தான் மனிதர்கள்
(10 மாதம்) முதல் எல்லா ஜீவராசிகளும் கருதரித்து தங்கள் இனத்தை உற்பத்தி செய்கின்றன .
இஸ்லாம் சந்திர நாட்காட்டி பிரகாரம் சந்திர தினங்களை பிறை என்றழைக்கப்படுகிறது . தமிழர் நாட்காட்டியில் அதையே திதி என்றழைக்கப்படுகிறது .

அமாவாசை அன்று சூரியனும் சந்திரனும் பூமியில் இருந்து பார்க்கும் போது சேர்ந்திருக்கும் அதாவது ஜிரோ (0) டிகிரி இதனால் பூமியில் உள்ளவர்கள் சந்திரனைப் பார்க்க முடியாது அதன் பின் சந்திரன் 12 டிகிரி விலகும் அந்த நாள் பிறை 1 தமிழர் நாட்காட்டில் பிரதமை
பிறை 2 - துதியை , பிறை 3 - திருதியை பிறை 4 - சதுர்த்தி .பிறை 5 - பஞ்சமி , பிறை 6 - சஷ்டி . பிறை 7 - சப்தமி ,
பிறை 8 - அஷ்டமி , பிறை 9 - நவமி
பிறை 10 - தசமி , பிறை 11 - ஏகாதசி
பிறை 12 - துவாதசி
பிறை 13 - திரயோதசி ,
பிறை 14 _ சதுர்தசி
பிறை 15 - பௌர்ணமி
இதை இருளிலிருந்து வெண்மை (சுக்கலா பட்சம்) என்கின்றனர்
பிறை 16 - பிரதமை . பிறை 17 - துதியை
பிறை 18 - திருதியை , பிறை 19 - சதுர்த்தி பிறை 20 - பஞ்சமி , பிறை 21 - சஷ்டி , பிறை 22 - சப்தமி . பிறை 23 - அஷ்டமி,
பிறை 24 - நவமி , பிறை 25 - ஏகாதசி .
பிறை 26 - துவாதசி ,

பிறை 27 - திரயோதசி ,
பிறை 28 - சதுர்தசி ,
பிறை 29 - அமாவாசை
இந்த திதிகளை கிருஷ்ண பட்சம் (அதாவது வெண்மையிலிருந்து)கருமை நோக்கி .
சந்திரன் ஒவ்வொரு நாளும் 12 டிகிரி சூரியனிடமிருந்து விலகும் இப்படி நாட்கள் விலகும் போது 15 x 12 = 180 டிகிரி இது சூரியனுக்கு முழுப் பார்வை யாக இருக்கும் அன்று தான் பௌர்ணமி
பின்பு சந்திரன் அதே 12 டிகிரி விலகி விலகி சூரியன் அருகே வர அதே 15 x 12 = 180 டிகிரி ஆக 180 + 180 = 360 டிகிரி. முழுமையான சுற்று அதாவது O டிகிரி அன்றுதான் அமாவாசை .
" இன்னும் (உலர்ந்த வளைந்த) பழைய பேரீத்தமட்டையைப் போலாகும் வரையில் சந்திரனுக்கு நாம் பல மன்ஸில் களை (தங்குமிடங்களை) ஏற்படுத்தியிருக்கின்றோம் .
திருக்குர்ஆன் (36 : 39)

நாட்காட்டிகள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாக பின்பற்றபட்டன .
இஸ்லாமிய நாட்காட்டி சந்திரக் கணக்கின்படியும், ஈரானிய நாட்காட்டி சூரிய கணக்கின்படியும் , சூரியன் மற்றும் சந்திரன் இரண்டு இயக்கத்தினைக் கொண்டு தமிழர் நாட்காட்டியும் ,வீனஸ் கிரகத்தின் இயக்கத்தை வைத்து பண்டைய எகிப்து நாட்காட்டியும் உருவாக்கப்பட்டது . இவை அத்தனையும் வான இயலின் விஞ்ஞானத்தின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டது .
தமிழர் நாட்காட்டியின் திதிகள் ஒவ்வொன்றிலும் என்ன என்ன காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை வகுத்து அதனை பஞ்சாங்கமாக மாற்றிக் கொண்டனர்
அதிலும் சந்திரன் சூரியனிடமிருந்து விலகும் கோணத்தின் அளவில் இருந்தும் அதன் மூலம் பூமிக்கு கிடைக்கும் சந்திரனின் கதிர்வீச்சையும் கணக்கிட்டு காரியங்களை வகுத்தார்கள் .
(உ-ம்)வண்டி வாகனங்கள் வாங்கலாம் பயணம் செய்யலாம் என்று துவிதியை , சப்தமி ,துவாதசி ஆகிய தினங்களை வகுத்தார்கள்.

பிரதமை , சஷ்டி , ஏகாதசி ஆகிய திதிகளில் கட்டடத்தை உயர்த்தலாம் திருவிழா நடத்தலாம் என்று பஞ்சாங்கத்தில் எழுதியுள்ளது சதுர்த்தி , நவமி, சதுர்த்தசி போன்ற திதிகளில் குரூரமான காரியங்களான யுத்தம் செய்யலாம் என்று பஞ்சாங்க குறிப்பில் உள்ளது .

ஷவ்வால் முதல் பிறை ஈதுல் ஃபித்ர் (நோன்புப் பெருநாள்)
துல்ஹஜ் பிறை 9 வது நாள் அரஃபா உடைய நாள்
துல்ஹஜ் பிறை 10 வது நாள் ஈதுல் அள்ஹா (பக்ரீத் பெருநாள்)
முஹர்ரம் , ரஜப் , துல்கஃதா மற்றும் துல் ஹஜ் ஆகிய 4 மாதங்கள் போர் செய்ய தடை என்று குர்ஆன் குறிப்பிடுகின்றது
அதேப்போல் தக்கலை பீரப்பா அவர்கள் ரஜபு , ஜமா்துல் ஆகிர், ஷவ்வால் , முஹர்ரம் , துல்ஹஜ்ஜு பிறைகள் 2,7,8,10,11,17,19, 26 - திங்கள், வியாழன், வெள்ளி இரவே திருமணத்திற்கு நேர்த்தியான தருணம் என்று 5 நூற்றாண்டிற்கு முன்னரே வகுத்துள்ளார்கள் (476 ரோஸ்ஸாக்கு மாலை)
கஃபா அடித்தளம் இடப்பட்ட துல்காயிதா பிறை 25, கல்பா கிரஹப்பிரவேசம் பெற்ற துல் ஹஜ்ஜூ 18, .தாத்தும் , ஸிபாத்தும் சங்கமித்த இரவு ரஜப் 27, நபி பட்டம் வழங்கப் பெற்ற முஹர்ரம் 22 , இறை அருட்கொடை மனித வடிவில் வெளியான ரபீயுல் அவ்வல் பிறை 12 ஆக 5 நாட்களும் உஜூதியாக்களின் பிரியமான விரத நாட்கள் என ரோஸ்ஸாக்கு மாலை 382 ல் குறிப்பிடுகின்றார்கள்


" அவனே சூரியனே ஒளியாகவும், சந்திரனை வெளிச்சம் தரக்கூடியதாகவும் ஆக்கி ஆண்டுகளின் எண்ணிக்கையும் (மாதங்களின்) கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்வதற்காக அவைகளுக்கு (மாறி மாறி வரக்கூடிய) தாங்கும் இடங்களையும் நிர்ணயம் செய்தான் . மெய்யான தக்க காரணமின்றி இவைகளை அல்லாஹ் படைக்க வில்லை. சிந்தித்து அறியக்கூடிய மக்களுக்காக தன் ஆற்றலுக்குரிய சான்றுகளை இவ்வாறு விவரிக்கிறான்.
திருக்குர்ஆன் (10 : 05)
ர.ரா
முதல் Com யை பார்வையிடவும்

Rahmath Rajakumaran

இஸ்லாம் சந்திரனை அடிப்படையாகக் கொண்டு மாதங்களைக் கணக்கிடுகிறது .
ஆனால் அனைத்து தொழுகை நேரங்களையும் இஸ்லாம் சூரியனை அடிப்படை கொண்டு கணக்கிட்டுள்ளது
بِسْــــــــــــــــمِ اِللّٰهِ الرَّحْمَنِ الرَّحِيم
நம்பிக்கைக் கொண்டோர் மீது தொழுகையானது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக உள்ளது.
அல்குர்ஆன் 4:103
குர்ஆனில் ஐவேளை தொழுகைகள்
11:114 பகலின் இரு ஓரங்களிலும் (ஃபஜ்ர், அஸர்), இரவின் பகுதிகளிலும் (மக்ரிப், இஷா) தொழுகையை நிலை நாட்டுவீராக! நன்மைகள் தீமைகளை அழித்து விடும். படிப்பினை பெறுவோருக்கு இது அறிவுரை

17:78 சூரியன் சாய்ந்ததிலிருந்து (லுஹ்ர்) இரவில் இருள் சூழும் வரையில் தொழுகையையும் (மக்ரிப்) பஜ்ரு (தொழுகையில்) குர்ஆனையும் நிலை நாட்டுவீராக! பஜ்ரு (தொழுகையில்) குர்ஆன் சாட்சி கூறப்படுவதாக இருக்கிறது
20:130 (முஹம்மதே!) அவர்கள் கூறுவதைச் சகித்துக் கொள்வீராக! சூரியன் உதிப்பதற்கு முன்பும் (ஃபஜ்ர்), அது மறைவதற்கு முன்பும் (அஸ்ர்), இரவு நேரங்களிலும் (மக்ரிப், இஷா) உமது இறைவனைப் போற்றிப் புகழ்வீராக! பகலின் ஓரங்களிலும் (ஃபஜ்ர், அஸர்) துதிப்பீராக! இதனால் (கிடைக்கும் கூலியில்) நீர் திருப்தியடையலாம்.
30:17,18 நீங்கள் மாலைப் பொழுதை அடையும் போதும் (அஸ்ர்), காலைப் பொழுதை அடையும் போதும் (ஃபஜ்ர்), அந்தி நேரத்திலும் (மக்ரிப்), நண்பகலிலும் (லுஹ்ர்) அல்லாஹ்வைத் துதியுங்கள்! வானங்களிலும், பூமியிலும் அவனுக்கே புகழனைத்தும்.
50:39 அவர்கள் கூறுவதைச் சகித்துக் கொள்வீராக! சூரியன் உதிப்பதற்கு முன்பும் (ஃபஜ்ர்), மறைவதற்கு முன்பும் (அஸ்ர்) உமது இறைவனைப் போற்றிப் புகழ்வீராக!
24:58 நம்பிக்கை கொண்டோரே! உங்கள் அடிமைகளும், உங்களில் பருவ வயதை அடையாதோரும் ஃபஜ்ரு தொழுகைக்கு முன்னரும், நண்பகலில் (உபரியான) உங்கள் ஆடைகளைக் களைந்துள்ள நேரத்திலும், இஷா தொழுகைக்குப் பிறகும் ஆகிய மூன்று நேரங்களில் (வீட்டுக்குள் நுழைவதற்கு) உங்களிடம் அனுமதி கேட்கட்டும். இம்மூன்றும் உங்களுக்குரிய அந்தரங்க (நேர)ங்கள். இவையல்லாத மற்ற நேரங்களில் (வருவது) அவர்கள் மீதோ, உங்கள் மீதோ எந்தக் குற்றமும் இல்லை. அவர்கள் உங்களைச் சுற்றி வருபவர்கள். உங்களில் ஒருவர் மற்றவரிடம் வந்து செல்பவர்கள். இவ்வாறே அல்லாஹ் வசனங்களைத் தெளிவுபடுத்துகிறான். அல்லாஹ் அறிந்தவன்; ஞானமிக்கவன்.

இரு திசைகள் .
(விண்வெளி ரகசியம் 29)



رَبُّ الْمَشْرِقَيْنِ وَ رَبُّ الْمَغْرِبَيْنِ
(சூரியன், சந்திரன் இரண்டும்) உதிக்கும் இரு திசைகளுக்கும் அவனே சொந்தக்காரன். மேலும், (அவைகள்) மறையும் இரு திசைகளுக்கும் அவனே சொந்தக்காரன்.
(அல்குர்ஆன் : 55:17)
சூரியன் எப்போதும் ஒரே இடத்தில் உதயமாவதில்லை . தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சம் மாறித்தான் உதயமாகும். கிழக்குத் திசையில் தெற்கிலும் வடக்கிலுமாக நகன்று கொண்டே இருக்கும் .
ஒரு முறை மகர ராசி ரேகையிலிருந்து தீட்ச ராசி ரேகைக்கு வந்து மீண்டும் திரும்பவும் மகர ராசி ரேகைக்கு வர சரியாக ஒரு வருடமாகும்.
ஆகவே விஞ்ஞானிகள் இதனைக் கணித்து பூமியின் உத்தர துருவத்தில் இருந்து **(North Pole) ,** தட்சண துருவம் **(south Pole)** வரை ஐந்தாகப் பிரித்து சூரியோதய நடமாட்டமுள்ள மேற்கண்ட இரு ரேகைகளுக்கும் மத்தியிலுள்ள பிரதேசங்களுக்கு **(Torrid zone)** உஷ்ணப்பிரதேசமென்றும்
இப் பிரதேசத்துக்கு வடக்கில் உள்ளதை இரண்டாகப் பிரித்து உஷ்ணப் பிரதேசத்துடன் சேர்ந்திருக்கிற பாகத்துக்கு **(North Temperate zone)** உத்தர மத்திப சீதப் பிரதேசம் என்றும் , அதற்கு வடக்கில் உத்தர துருவம் வரையுள்ள பிரதேசத்துக்கு **(North Frigid zone)** உத்தர சீதப் பிரதேசம் என்றும் , உஷ்ணப் பிரதேசத்துக்குத் தெற்கிலுள்ள பாகத்தில் உஷ்ணப் பிரதேசத்தைச் சேர்ந்த பாகத்துக்கு **(south Temperate zone)** தட்சண மத்திய சீதப் பிரதேசம் என்றும் .அதற்கு தெற்கில் தட்சணதுருவம் வரையுள்ள பிரதேசத்துக்கு **(south Frigid zone)** தட்சண சீதப் பிரதேசம் என்றும் பிரித்திருக்கிறார்கள் .
உத்தர மத்திய சீதப் பிரதேசத்துக்கும் உஷ்ணப்பிரதேசத்துக்கும் மத்தியில் எல்லையாக இருப்பதற்கு **(Tropid of cancer)** மகர ராசி ரேகை என்றும் தட்சண சீதப் பிரதேசத்துக்கும் உஷ்ணப் பிரதேசத்துக்கும் மத்தியில் எல்லையாக இருப்பதற்கு (Tropic of capricorn) நிரட்ச ராசி ரேகை என்றும். கூறுகிறார்கள் .
இந்த இரு ரேகைகளிலும் வருடத்தில் ஒரு நாள்தான் சூரியன் உதயமாகி மறையும் . இவ்விரு ரேகைகளில் உதயமாவதைத்தான் இங்கு #மஷ்ரிகைன் (இரு உதயங்கள்) என்றும், இந்த ரேகைகளில் மறைவதை #மஃரிபைன் (இரு அஸ்தமனங்கள்) என்றும் கூறப்பட்டிருக்கிறது.
சூரியன் இவ்விரு ரேகைகளுக்கும் மத்தியில் நடமாடிக் கொண்டிருப்பதால் , பருவநிலைகளும் மாறுகின்றன மழைக்காலம் கோடை காலங்களின் மாறுதல் உண்டாகின்றன .
இவ்வாறு உலக மெங்கும் சூரியப் பிரகாசமும் உஷ்ணமும் , குளிரும் மாறி மாறி வருமாறு செய்து உலக மக்கள் சுகமாக வாழ இறைவன் தக்க ஏற்பாடு செய்திருப்பது இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

தவிர, சூரியன் உதயமாகும் இடம் , சந்திரன் உதயமாகும் இடம் ஆகிய இரண்டுக்கும் " மஷ்ரிகைனி என்றும் , அவை இரண்டும் மறையும் இடங்களுக்கு " மக்ரிைபைனி " என்றும் சிலர் கூறி இருக்கிறார்கள் .
மார்ச் 21 , செப்டம்பர் 23 ஆகிய இரண்டு நாட்களில் மட்டும்தான் பகலும் , இரவும் ஒரே அளவாக இருக்கும் .

பயணிகள் கவனிக்கவும் .
(விண்வெளி ரகசியம் 30)



நீங்களும் நானும் இப்போதும் பயணம் செய்து கொண்டேயிருக்கிறோம் என்று நான் சொன்னால் நீங்கள் நம்புவீர்களா ?
....இல்லை உங்கள் கட்டுரையைதான் படித்துக் கொண்டு இருக்கிறேன். எப்படி நான் பயணிக்க முடியும் என்று நீங்கள் சொன்னாலும் நிச்சயமாக நீங்களும் நானும் இந்த ஆகாய வெட்ட வெளியில் பயணித்துக் கொண்டு இருக்கிறோம்.

நீங்களும் நானும் நம் பூமியோடு பயணிக்கிறோம் நம் பூமி நொடிக்கு (ஒரு சொடக்கு) 29 புள்ளி 8 கிமீ வேகத்தில் நம் சூரியனை சுற்றி பயணிக்கிறோம்
நம் சூரியன் நொடிக்கு 20 கிமீ வேகத்தில் தன் குடும்பமான 9 கோள்களையும் அவைகளின் துணை கோள்களையும் கூட்டிக் கொண்டு "ஹெர்குலிஸ் " என்னும் நட்சத்திர கூட்டத்தை நோக்கி பயணிக்கிறது .


நமது சூரிய குடும்பம் ஆகாய கங்கை என்னும் " மெட்டா கேலக்ஸி " யில் "பெர்சியஸ் ஓரியன் " என்கிற நட்சத்திர கூட்டத்தின் வளைவில் அமைந்து கொண்டு பயணிக்கிறது .
நமது சூரிய குடும்பமும் அதைச் சார்ந்த மற்ற நட்சத்திரக் கூட்டங்களும் சேர்ந்து நொடிக்கு 220 கிமீ வேகத்தில் "கைனக்ஸ் "என்கிற நட்சத்திர கூட்டத்தை நோக்கி பயணிக்கிறது .
நாமும் நம் சூரியனும் நமது நட்சத்திர கூட்டங்களும் சேர்ந்து நமது கேலக்ஸியில் நொடிக்கு 230 கிமீ வேகத்தில் வலம் சுற்றி பயணிக்கிறோம்.

நமது ஆகாய கங்கை என்கிற மெட்டா கேலக்ஸியில் நம் பூமி ஒரே ஒரு தடவை வலம் சுற்றி முடிக்க 240 மில்லியன் வருடங்கள் ஆகும் .
சரி ....பூமியின் எல்லையைக் கடந்து நம்மால் பயணிக்க முடியாமா ? என்ற ஏக்கம் விஞ்ஞானத்திற்கு உண்டு காரணம் இந்த பூமியாளர்கள் அணுவைத் துளைத்து அறிவை செலுத்தி ஆக்க பூர்வமான காரியத்தைக் காட்டிலும் அழிவு பூர்வமான காரியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள் எனவே மனித குல வாழ்வு அணுக் குண்டின் மீது இருந்து கொண்டு விதியை எதிர் நோக்க வேண்டிய சூழல் எனவே மனிதன் வாழுக் கூடிய வேற்று கிரகத்தை தேடியலைய வேண்டிய கட்டாயம்
சரி அதற்கு பூமியின் எல்லையை கடந்து போக முடியாமா ? முடியும் என்றுதான் குர்ஆன் கூறுகிறது
" மனு ஜின் கூட்டத்தார்களே . . நீங்கள் வானங்கள் பூமியின் எல்லையைக் கடந்து சென்று விட உங்களால் கூடுமாயின் அவ்வாறே செல்லுங்கள் ஆனால் ஆற்றல் இல்லாமல் நீங்கள் செல்ல முடியாது குர்ஆன் (55: 33)
இது போன்ற வசனம் வேறு எந்த வேத்திலும் சொல்லப்படவில்லை
இறைவனே வேற்று கிரகத்தை தேட சொல்கிறான் என்று தானே விளக்கம் .
மேற்கண்ட வசனத்தில் இரண்டை குறிப்பிடுகிறான் 1 ஜின் 2 ஆற்றல்
ஜின்னைப் பற்றி விஞ்ஞானம் அறியாது அமானுஷ்ய சக்தி என்று குறிப்பிடும். அவ்வளவுதான் . ஆனால் இஸ்லாம் அவங்களை ஒரு இனமாக பாவிக்கிறது.
ஜின்களாடு மனிதர்கள் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் வானம் நமக்கு வசப்படலாம் காரணம் ஜின்களுக்கு வானம் நம்ம NH ரோடு மாதிரி .
"நிச்சயமாக ஜின்களாகிய நாங்கள் வானத்தைத் தடவிப் பார்த்தோம் .அது பலமான பாதுகாவலர்களாலும் ,

எரி நட்சத்திரங்களாலும்
நிரப்பப்பட்டிருக்கிறது என்பதை
நாங்கள் கண்டோம் " குர்ஆன் (72 : 08)
ஜின்களாடு தொடர்பு கொள்ள நீங்கள் தயாரா ?
விண்வெளியில் பயணிப்பதற்கு இறைவன் கூறிப்பிடும் "ஆற்றல் " மிக முக்கியம் விண்வெளி பயணம் சந்திரன் வழியே தொடர்ந்தால் மிக குறைவான ஆற்றல் போதுமானது காரணம் சந்திரனின் புவி ஈர்ப்பாற்றல் நம் பூமியை விட 6 மடங்கு குறைவு இதனால் ஒரு விண்கலத்தை பூமியிலிருந்து அனுப்புவதை விட சந்திரனிலிருந்து அனுப்பினால் 3 சதவிகிதம்தான் எரிபொருள் தேவை
விண்கலத்தின் வேகம் பூமியை விட சந்திரனில் இருந்து அனுப்பினால் 5ல் ஒரு பங்கு போதுமானது
விண்கலங்களை பூமியில் இருந்து அனுப்புவதற்கு ஏவுகணை தேவை சந்திரனில் இருந்து அனுப்ப இது தேவையில்லை காரணம் ஈர்ப்பாற்றல் குறைவு மேலும் காற்று மண்டலம் சந்திரனில் இல்லை இதனால் எரி பொருள் மிக குறைவு
இந்த எரிபொருள் சந்திரனில் நிறையவே கிடைக்கிறது .
ஆகையால் பூமியின் வாசிகளான நமக்கு சந்திரன் வழியாகதான் வேற்று கிரகம் போக முடியும் .
"சூரியனையும் சந்திரனையும் உங்களுக்கு பயனளிக்கும் விதத்தில் அமைத்தான் "
(குர்ஆன் 14:33)
சந்திரனிலிருந்து விண்வெளி போகும் வரைதான் எரிபொருள் தேவை விண்வெளியில் பயணிக்க சூரிய சக்தி போதுமானது.
வானமென்னும் வீதியிலே பயணிக்க நீங்கள் தயாரா ?

வேற்று கிரகவாசிகள் இருக்கிறார்களா ?

(விண்வெளி ரகசியம் 31)



وَلَقَدْ خَلَقْنَا فَوْقَكُمْ سَبْعَ طَرَآئِقَ وَمَا كُنَّا عَنِ الْخَلْقِ غٰفِلِيْنَ
(மனிதர்களே! இவ்வாறு நாம் உங்களை மட்டுமா படைத்திருக்கிறோம்?) நிச்சயமாக உங்களுக்கு மேலுள்ள ஏழு வானங்களையும் நாமே படைத்தோம். (அவை ஒவ்வொன்றிலும் உங்களைப் போன்ற எத்தனையோ படைப்புகள் இருக்கின்றன. இவைகளைப் படைத்து இருப்பதுடன்) இப்படைப்புக(ளுக்கு வேண்டியவைக)ளைப் பற்றி நாம் பராமுகமாகவும் இருக்கவில்லை. (அவைகளுக்கு வேண்டியவை அனைத்தையும் முழுமையாக நாம் படைத்தும் இருக்கிறோம்.)
(அல்குர்ஆன் : 23:17)
நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பூமியை உள்ளடக்கிய நமது சூரிய குடும்பத்தைப் போல பல சூரிய குடும்பங்கள் பிரபஞ்சத்தில் பரவிக்கிடக்கின்றன இந்த பிரபஞ்சத்தில் லட்சோபலட்சம் நட்சத்திரங்களும் அதை சுற்றி கணக்கிலடங்கா கிரகங்களும் இருக்கின்றன.பிரபஞ்சத்தில் உயிரின வாழ்க்கை என்பது நம் பூமியில் மட்டும் தான் இருக்கமுடியும் என்று நினைப்பது சற்றும் பொருத்தம் இல்லாதது .

பூமியில் இருந்து வெகு தொலைவில் உள்ள லட்சோபலட்சம் கிரகங்களில் சில நூறுகிரகங்களிலாவது உயிர்

வாழ்க்கை அமையப் பெற்று இருக்கும் அவற்றுள் சிலவற்றில் உள்ள உயிரினங்கள் நம்மைவிட எல்லா நிலைகளிலும் மேம்பட்டு இருக்க வாய்ப்புள்ளது .சில கிரகங்களில் இன்னும் நுண்ணுயிரிகள் என்ற அளவிலேயே வாழ்க்கை அமையப் பெற்றிருக்கககூடும்.
தற்போது மனித இனம் மற்றும் பல உயிரினங்கள் இந்த பூமியின் சூழலுக்கு ஏற்ப வாழ்ந்து கொண்டு இருக்கின்றன.இந்த பிரபஞ்சத்தில் உள்ளடக்கிய நம் சூர்ய குடும்பத்தில் உள்ள கிரகங்களில் நம் பூமியில் மட்டுமே உயிரினங்கள் உள்ளதாக இதுவரை அறியப்பட்டு வந்துள்ளது ஆனால்,இந்த பிரபஞ்சத்தில் மற்ற பல சூரிய குடும்பங்களில் உள்ள கிரகங்களில் உயிரின வாழ்வு இருக்கக்கூடும் என்பது தற்போதைய அறிவியலாளர்களின் கருத்தாகும் மேலும் உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகள் அனைவரும் வேற்றுகிரகங்கள் பலவற்றில் உயிரின வாழ்வு என்பது சாத்தியம்தான் என்று அறிவியில் பூர்வமாக சிந்திக்க தொடங்கி இருக்கின்றார்கள் .

நூறு வருடங்களுக்கு முன்பு விஞ்ஞானிகள் அனைவரும் வேற்றுகிரகத்தில் உயிரின வாழ்க்கை இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள் என்பதும் உண்மை.
இப்பிரபஞ்சத்தில் பூமியும் நம்மைத் தவிர வேற்று கிரகதத்தில் உயிரினங்களோ மனிதர்களோ இருக்கிறார்களா ?அவ்வாறு இருந்தால் நம்மை அவர்கள் பார்த்திருக்கிறார்களா ? நாம்தான் அவர்களைப் பார்க்க முடியுமா ?
... இப்படி எண்ணற்ற கேள்விகள் நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் கேட்கவும், தேடவும் செய்கிறோம்.
பறக்கும் தட்டுகள் (U. F. O) வேற்று கிரகங்களில் இருந்து பூமிக்கு வந்து போனதாகவும், பல நாடுகளில் இச்செய்திகள் பலமாக பதியப்பட்டுள்ளது.
وَالسَّمَآءِ ذَاتِ الْحُبُكِ ۙ
(நட்சத்திரங்களின்) அழகிய பாதைகளுடைய வானத்தின் மீது சத்தியமாக!
(அல்குர்ஆன் : 51:7)
வேற்று கிரக வாசிகள் பூமியில் எதற்காக வரவேண்டும் ? அவர்களின் நோக்கம் என்ன என்பது பற்றி நிறைய பேர்கள் புத்தகம் புத்தகமாக எழுதி இருக்கிறார்களேத் தவிர ஆனால் இதுவரை "இதோ வேற்று கிரக வாசி இவர்தான் "என்று யாருமே நிரூபிக்கவில்லை . என்றாலும் அவர்களின் பல போட்டோக்கள் போலியானது என்று ஒதுக்கினாலும் சில போட்டோக்கள் தேர்ந்த விஞ்ஞானிகளையும் . கேமரா நிபுணர்களையும் தலை சுற்ற வைக்கிறது.
குர்ஆனில் சில வசனங்கள் சூசகமாக இது பற்றி விவரிக்க மாதிரியான நிறைய வசனங்கள் இருக்கின்றன.
"பூமிக்குள் பதிகின்றவைகளும் , அதில் இருந்து வெளிப்படும் இவைகளையும், வானத்தில் இருந்து இறங்குபவைகளையும் , அதன் பக்கம் ஏறுகின்றவைகளையும் அவன் நன்கறிவான். " குர்ஆன் (34 : 02)

இது விஷயமாக நபி (ஸல்) அவர்கள்
" நீங்கள் அறியாததையும் அவன் சிருஷ்டிப்பான் " குர்ஆன் (16 : 08)
என்ற குர்ஆன் வசனத்திற்கு விளக்கமளிக்கையில் " இவ்வுலகைப் பார்க்கிலும் 30 மடங்கு பெரியதாக உள்ள வெண்மையான பூமியை அல்லாஹ் சிருஷ்டித்துள்ளான் .நம் பூமியில் பச்சை நிறமும் நீல நிறமும் அதிகமாக இருப்பது போல் அக்கிரகம் வெண்மை நிரம்பி இருக்கிறது.அதில் இறைவனது சிருஷ்டிகளான மக்கள் நிரம்பி இருக்கின்றனர் .அக்கிரக மக்கள் அல்லாஹுத்தலாவுக்கு ஒரு கணப்பொழுதேனும் மாறு செய்வதே இல்லை" என்று கூறினார்கள் .
அப்பொழுது நபித்தோழர்கள்
"அம்மக்கள் ஆதமுடைய மக்களைச் சேர்ந்தவர்களா-...?"
"ஆதமை அல்லாஹ் படைத்திருக்கிறான் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள் என்றார்கள் நபிகளார் (ஸல்) அவர்கள்.
"அவர்களில் இப்லீஸ் எங்கே...? என்று கேட்டனர் .
"அல்லாஹ் இப்பீஸ் - யை சிருஷ்டித்திருக்கிறான் என்பதையும் அம்மக்கள் அறிய மாட்டார்கள். என்றார்கள்.
ஆதாரம் : அல் புஸ்தான்
பூமிக்கு மிக அருகிலேயே பூமியை விட 30 மடங்கு பெரிய புதிய பூமி இருப்பதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானி , ஸ்டீவன் வாட் கூறுகையில் தண்ணீர், காற்று கொண்ட மற்றொரு பூமி இருக்கிறது. அதி நவீன தொலை நோக்கியில் பார்த்ததில் வளி மண்டலத்தில் சிறிய நட்சத்திரம் போல் அது சுற்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அருகில் சென்றால் நம் பூமியை விட 30 மடங்கு பெரியதாக இருக்கும்.
அதில் உயிரினங்கள் வசிக்க 100 சதவீகித வாய்ப்பு இருக்கிறது என்றார்.
கலிபோர்னியா பல்கலைக்கழக வாஷிங்டன் கார்னிஜி ஆராய்ச்சி கழக விஞ்ஞானிகள் இது தொடர்பான ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்
ஆதாரம் :கலைக்கதிர் ஜூலை 2012 பக்கம் 55
ர.ரா
Rahmath Rajakumaran
திசை கண்டேன் வான் கண்டேன் - சுஜாதா எழுதிய நகைச்சுவை ததும்பும் விஞ்ஞானப் புனைக்கதை
விஞ்ஞான கதைகளில் கையாளப்படும் அடிப்படை மையக்கதை இது தான்-பூமியை வேற்று கிரகம் அல்லது உலகத்திலில் இருந்து வரும் மனிதர்கள் அல்லது ஜீவிகள் தாக்கினால் பூமியின் கதி என்ன? அப்படி வரும் ஜீவராசிகள் மனிதர்களிடம் அன்பு செலுத்தினால் என்ன ஆகும்? அவைகளுக்கு நமது உணர்ச்சிகள் இருந்தால் என்ன ஆகும்? யோசித்து பாருங்கள். இது தான் இந்த கதையின் சாராம்சம். இதை சுஜாதா நயம்பட நகைச்சுவையுடன் சொல்லி இருக்கும் விதம் தான் இந்த கதை இன்னும் ரசிக்கப்படுவதற்க்கு காரணம்.

நமக்கு தெரிந்த சங்கதி தான்-நம்முடையதைப் போல பல கிரகங்கள் உண்டு, மற்றும் galaxy -ம் . உண்டு. அப்படிப்பட்ட ஒரு galaxy தான் Andromeda. அந்த galaxy இல் உள்ள நோவா என்னும் கிரகத்தில் ஒரு பாலம் கட்டுகிறார்கள். அந்த பொல்லாத பாலம் வரும் வழியில் நமது பூமி வருகிறது (அய்யஹோ!). பூமியில் உள்ளவர்களுக்கு எச்சரித்து விட்டு(!) பூமியை அழிக்கும் நோக்கத்துடன் பாரி என்னும் வேற்று கிரக வாசி அனுப்பபடுகிறான். அவனின் வாகனமாக 121 என்னும் இயந்திரம் அனுப்பபடுகிறது. அவர்கள் பூமியில் இறங்கி சந்திக்கும் சவால்கள், விநோதங்களே கதை. நடுவே ஒரு மானுடக்(!) காதலையும் ஒரு சுவாரசியத்துக்காக சேர்க்கிறார் சுஜாதா, இல்லையெனில் இந்த கதையில் உள்ள விஞ்ஞான விஷயங்கள் மூளையில் ஏறாது என்பதால்.
இதில் விசேஷம் என்னவென்றால் அவர்கள் நம்மை விட அறிவு ஜீவிகள். அதிலும் 121 பேசும் , யோசிக்கும் இயந்திரம். கூற்றுக்கு கேக்கவா வேண்டும்? புகுந்து விளையாடி இருக்கிறார் சுஜாதா. இதெல்லாம் அவருக்கு அல்வா சாப்பிடுவது போல.
அவர்கள் பூமியில் வந்து இறங்கும் நேரம் மணி மற்றும் செங்கமலம் என்னும் அழகான பெண்ணைக் (இதை படிக்கும் உங்கள் கண் பாப்பாக்கள் விரிவது எனக்கு ஞான திருஷ்டியில் தெரிகிறது!) காண்கிறார்கள். சூழ்நிலை பாரியை 121 விடம் இருந்து பிரித்து விடுகிறது. பாரி மணியுடன் ஒட்டிக் கொள்கிறான் அவனது வாகனம் கிடைக்கும் வரை. இடையே நடக்கும் விபரீதங்களால் பாரி சிறையில் அடைபடுகிறான். குற்றம் -கேவலம் கள்ள நோட்டு விட்டதற்காக! செங்கமலத்தின் புத்திசாலித்தனத்தால் பாரி தப்பிக்கிறான். பதிலுக்கு அவளின் காதல் நிறைவேற 121 உதவுகிறது . இறுதியில் பாரி வந்த காரியம் என்ன ஆகிறது, எப்படி பூமி தப்பிக்கிறது (பின்னே? நாம் ஜீவிக்க வேண்டாமா?!) என்பது தான் மீதிக்கதை.
இதில் இருக்கும் நகைச்சுவை வேறு எதிலும் நாம் பார்க்க முடியாது. பாரி முதல் முதலாக வந்து இறங்கும் பொது நடக்கும் களேபரங்கள், அவன் சந்தையில் தொப்பி வாங்கும் போது அள்ளி விடும் ரூபாய் நோட்டுக்கள் (பாவம் அந்த ரூபாய் நோட்டுக்கள்!), morph ஆகும் 121, 'செங்கமலத்தின்' கல்யாணத்தில் நடக்கும் வேடிக்கைகள், 121 செய்யும் குறும்புகள், பாரியை பின் தொடர்ந்து வரும் உப குப்தர் என்னும் இயந்திரம் செய்யும் ஏடாகூடங்கள் , இப்படி ஏகப்பட்ட சிரிப்பு பக்கங்கள் உண்டு. அடிப்படை கருத்து என்று பார்த்தால் நாம் சிறுமை இல்லாமல் இருக்க வேண்டும் என்பதே. எனில் நமக்கு தெரியாத விஷயங்கள் நிறைய உண்டு-பூமிக்கு உள்ளேயும் வெளியேயும்.
பல முறை படித்து, ரசித்து, சிரித்து மகிழ்ந்து, சிந்திக்க வேண்டிய கதை

டைம் டிராவல் (Time Travel) 1



கனவுகளை நனவாக்கும் முயற்சியில் இப்போதைய அறிவியல் பயணிக்கின்றது என்றும் சொல்லலாம் காரணம் மனிதன் விஞ்ஞானத்தில் பயணிக்கிறான் ஒரு காலத்தில் தெய்வங்களாக பார்த்து வணங்கிய சூரிய சந்திரனை இப்போது ஓர் ஆற்றலாக நிரூபித்தது இந்த அறிவியல் என்பது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இப்போதைய அறிவியல் உலகில் காலப்பயணம் டைம் ட்ராவல் என்பது விஞ்ஞானிகளுக்கு பெரும் சவாலாக இருந்து வருகின்றது

காலத்தைக் கடக்கும் ஆற்றல் பெற்றவன் இறைவன் என்று ஒரு புராணம் கூறுகின்றது. இன்னொரு வேதம் காலத்தையே இறைவன் என்று கூறுகின்றது. ஆனாலும் அதே வகை பயணத்தை மனிதராலும் செய்ய முடியும் என்கின்றனர் விஞ்ஞானிகள். அப்படி என்றால் நீல் ஆம்ஸ்ட்ராங் சந்திக்கலாமா வள்ளுவரின் தாடி உண்மையா? பாரதியின் திமிரை நேராக பார்க்க முடியுமா? இவற்றுக்கு "முடியும் " என்கின்றனர் விஞ்ஞானிகள்

அவ்வளவு ஏன் ராஜராஜ சோழனை நேரில் சந்திக்கலாம் உங்களுக்கு வீரம் இருந்தால் அவர் போர் படையில் நீங்கள் சேர்ந்து அவரோடு யுத்த களத்திற்குச் செல்லலாம் என்று அடித்துக் கூறுகிறார்கள் .

263. அபூதர் (ரலி) அவர்கள் அறிவித்துவந்ததாக அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: " நான் மக்காவில் இருந்தபோது என் வீட்டின் கூரை பிளக்கப்பட்டது. (அதன் வழியாக வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறங்கி (வந்து) என்னுடைய நெஞ்சைப் பிளந்தார். பிறகு அதை "ஸம்ஸம்" நீரால் கழுவினார். பிறகு நுண்ணறிவாலும்

இறைநம்பிக்கையாலும் நிரம்பிய தங்கத் தாம்பூலம் ஒன்றைக் கொண்டு வந்து என் நெஞ்சத்தினுள் அதை ஊற்றி (நிரப்பி)னார். பிறகு (பழையபடியே) நெஞ்சை மூடிவிட்டார்.

பிறகு என் கையைப் பிடித்து (என்னை அழைத்து)க் கொண்டு விண்ணில் ஏறினார். முதல் வானத்திற்கு நாங்கள் வந்தபோது முதல் வானத்தின் காவலரிடம் ஜிப்ரீல், "திறப்பீராக!" என்று கூறினார். அதற்கு அக்காவலர் "யார் அது?" எனக் கேட்டார். அவர் "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் யாரேனும் வந்திருக்கிறார்களா?" என்று அக்காவலர் கேட்டார். அவர், "என்னுடன் முஹம்மத் (ஸல்) வந்திருக்கிறார்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்துவரும்படி) அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று அவர் கேட்க, ஜிப்ரீல் "ஆம்" என்று பதிலளித்தார். (முதல் வானத்தின் கதவை அதன்) காவலர் திறந்தார்.

நாங்கள் முதல் வானத்தில் (இன்னும்) மேலே சென்றபோது அங்கே ஒரு மனிதர் இருந்தார். (என்னைப் பார்த்து,) "நல்ல இறைத்தூதரே, வருக! நல்ல மகனே, வருக!" என்று அந்த மனிதர் கூறினார். நான் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம், "யார் இவர் ஜிப்ரீலே?" என்று கேட்டேன். ஜிப்ரீல் (அலை) அவர்கள், "இவர்தாம் (ஆதிமனிதர்) ஆதம் (அலை) அவர்கள்.

இவை காலப்பயணம் என்பதன் மூலம் சாத்தியமே என்பதே ஆய்வின் முடிவு. அதற்கு விஞ்ஞானிகள் கொடுக்கும் விளக்கம் சற்று குழப்பமானது சிந்தனையை சிதறவிடாமல் அந்த விளக்கத்தை படியுங்கள்

நேரத்தை (காலம்) தொட அல்லது பார்க்க முடியாது என்றாலும் கூட அதன் விளைவே உணரமுடியும் வயது என்பதே இதற்கு சிறந்த உதாரணம்.

மனிதர்களுக்கு நரை வருகின்றது முகம் பார்க்கும் கண்ணாடி அதைக் காட்டுகின்றது .பக்கத்தில் அவர்களின் குழந்தை கால புகைப்படம் இருக்கிறது .எம் சூழலில் உள்ள மரம் ஒன்று வளர்ந்து கொண்டே செல்கிறது. இவற்றின் மூலம் காலம் எம்முடன் நகருகின்றது அல்லது காலத்தோடு நாம் நகர்கின்றோம் என்பது தெளிவாகின்றது.

இப்போதுகூட படிப்படியாக இதனை நீங்கள் படித்துக் கொண்டு வரும்போது காலத்தோடு பயணித்துக் கொண்டுதான் வருகின்றீர்கள் ஆனாலும் காலத்தை நிறுத்தி விட முடியாது நொடிக்கு நொடி இறந்த காலத்திற்கு பயணம் செய்து கொண்டு இருக்கின்றோம் .

முப்பரிமாணத்தில் வாழ்ந்து வருகின்றோம் உயரம் + நீளம் + அகலம் என்பதே அது . நான்காவது பரிமாணம் உண்டு . அதுவே காலம். இதனோடு நாம் பயணிக்கின்றோம் .

இங்கு கண்ணுக்கு தெரியாத மிக மிக குறுகிய அளவு நேரம் இவற்றையும் தாண்டி பல பரிமாணங்கள் உலகில் உண்டு .

அதாவது இரு நேரங்களுக்கு இடையில் உள்ள இடைவெளியை தொடர்பு படுத்துகின்றதே நேரம் அல்லது காலம் இவ்வாறான இடைவெளியை கண்டுபிடித்து அதன் ஊடாக அதாவது காலத்தின் ஊடாக பயணம் செய்யும் இயந்திரம் அதிக சக்தியை உறிஞ்சும் இயந்திரமாக காணப்படும்

இவ்வாறான பயணம் சாத்தியம் என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்னும் விஞ்ஞானியின் ரிலேட்டிவிட்டி தியரி வலுப்படுத்துகின்றது

E=mc2 என்பதே அவர் கூறிய தியரி . அதாவது ஒளியின் வேகத்தில் பயணம் செய்தால் நாம் இறந்த காலத்திற்கும் , எதிர் காலத்திற்கும் கூட செல்லலாம் என்று நிரூபித்துள்ளார் .

இயற்கை எனப்படும் எதிர்காலத்துக்கும் இறந்த காலத்துக்கும் அவற்றைத் தாண்டி மனிதன் செயற்கையாக பயணம் செய்ய முடியுமா எனும் போது கருந்துளை (Warm Hole) - இது காலத்தின் குறுக்குவழி என்பதையும் பௌதிக ஆய்வாளர்கள் கருத்தில் எடுக்க வேண்டும் என்று கூறுகின்றனர்

ஜடப் பொருள்கள் அனைத்தும் அணுக் கோர்வைகளால் ஆனது அதுபோல நேரத்திற்கும் இவ்வாறான அணுத்துகள்கள் மூன்று பரிமாணங்களுக்கு உட்பட்ட அனைத்திலும் இருக்கின்றது.

இவை நான்காவது பரிமாணம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்திலும் காணப்படுகின்றது அணுவை விட மிகமிகச் சிறிய இடைவெளிகள் நேரத்திலும் காணப்படுகிறது என்பதுதான் விஞ்ஞானிகளின் வியக்கத்தக்க கருத்து

மிகமிகச் சிறிய இடைவெளிகள் ஆனவை இரு வேறு நேரத்தையும் இடத்தையும் அந்த இடைவெளிகளே இணைக்கின்றன .இந்த இடைவெளி மில்லியன் ட்ரில்லியன் சென்டிமீட்டர் ஒரு சதுர குறுக்குவெட்டு பரப்பளவு இருக்கலாம் இதனால் மனிதன் நுழைவது சாத்தியமில்லை இங்குதான் கால எந்திரத்தின் உதவி தேவை இவ்வாறான மிகச்சிறிய இடைவெளிகளை பெரிதாக வேண்டியது அந்த இயந்திரத்தின் பணி.

விஞ்ஞானிகள் இவ்வாறான இடைவெளி துகள்களில் ஒன்றே பெரிதாக்கினால் அதனுள் மனிதனால் சென்றுவிட முடியும் எனவும் நம்புவதோடு அதற்கான ஆய்வுகளிலும் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள்

ஈர்ப்பு விசையுடன் இவை சாத்திய தன்மை குறைவு என்பதற்காக விண்வெளியில் இதற்கான ஆய்வுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றது .விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் காலப்பயணம் சாத்தியம் என்றே கூறுகின்றார் .இவை இப்போதும் நடைபெற்று வருகின்றது எனவும் எதிர்கால மனிதர்கள் இறந்த காலத்திற்கு வந்து செல்கின்றார்கள் அது போல இறந்த காலத்து மனிதர்கள் நிகழ்காலத்திலும் வந்து போகிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் நிறையவே கிடைத்துள்ளன .

300 வருடத்திற்கு முன் ஜோர்டன் நாட்டு குகையில் தூங்கிய தோழர்கள் தூக்கம் விழித்து நிகழ்காலத்தில் உணவு வாங்க வந்தார்கள் என்பதாக புனித வேதம் திருக்குர்ஆன் சாட்சியம் பகருகின்றது .

وَكَذٰلِكَ بَعَثْنٰهُمْ لِيَتَسَآءَلُوْا بَيْنَهُمْ قَالَ قَآىِٕلٌ مِّنْهُمْ كَمْ لَبِثْتُمْ قَالُوْا لَبِثْنَا يَوْمًا اَوْ بَعْضَ يَوْمٍ قَالُوْا رَبُّكُمْ اَعْلَمُ بِمَا لَبِثْتُمْ فَابْعَثُوْۤا اَحَدَكُمْ بِوَرِقِكُمْ هٰذِهٖۤ اِلَى الْمَدِيْنَةِ فَلْيَنْظُرْ اَيُّهَاۤ اَزْكٰى طَعَامًا فَلْيَاْتِكُمْ بِرِزْقٍ مِّنْهُ وَلْيَتَلَطَّفْ وَلَا يُشْعِرَنَّ بِكُمْ اَحَدًا
(குகைத் தோழர்கள்) அவர்கள் (அதில் எவ்வளவு காலம் இருந்தனர் என்பதைத்) தங்களுக்குள் கேட்டறிந்து கொள்ளும் பொருட்டு இவ்வாறு (நித்திரை செய்யும்) அவர்களை நாம் எழுப்பினோம்.

அவர்களில் ஒருவர் (மற்றவர்களை நோக்கி) "நீங்கள் எவ்வளவு நேரம் நித்திரையில் இருந்தீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்களில் சிலர் "ஒரு நாள் அல்லது ஒரு நாளில் சிறிது பாகம் (இருந்திருப்போம்)" என்று கூறினர்.

(மற்றவர்கள்) "நீங்கள் நித்திரையிலிருந்த காலத்தை உங்கள் இறைவன்தான் நன்கறிவான்" என்று கூறி...


"உங்களில் ஒருவரிடம் இந்த (வெள்ளி) நாணயத்தைக் கொடுத்து அவரைப் பட்டினத்திற்கு அனுப்பி வையுங்கள். அவர் (அங்கு சென்று) நல்ல உணவுப் பொருள் எது (எங்கிருக்கின்றது) என்பதைத் தேடிப்பார்த்து அதில் சிறிது வாங்கி வரவும். எனினும், உங்களை(ப் பட்டினத்திலிருப்பவர்களில்) ஒருவரும் அறிந்து கொள்ளாதவாறு மிக்க எச்சரிக்கையாகவே அவர் நடந்து கொள்ளவும்.
(அல்குர்ஆன் : 18:19)


இவ்வாறாக ஆதாரங்களுக்கு மர்மம் என்ற பெயர் கொடுக்கப்பட்டு இன்றுவரை மறைக்கப்பட்டு கொண்டே வருகின்றது காரணம் மெய்ப்படும் வரை அனைத்துமே மர்மமே

நிச்சயம் ஒருநாள் காலப்பயணம் சாத்தியம் அப்படி வந்தால் இன்னொரு முறை இந்த பதிவை மறக்காமல் படித்துவிட்டு அந்த காலத்திற்குள் போய்விடுங்கள்.

டைம் டிராவல் (Time Travel)15-7-2020

யாரும் அறிந்திராத டைம் டிராவல் தகவல்கள்!





டைம் டிராவல் அதாவது காலப்பயணம் இன்று வரை கனவாகவே இருக்கின்றது. உண்மையில் இது எந்தளவு சாத்தியம் அல்லது காலப்பயணம் மேற்கொள்ள முடியுமா என பல்வேறு சந்தேகங்கள் மனதில் எழுகின்றன.

ஆனால் இவை எதற்கும் இன்று வரை பதில் இல்லை. கற்பனையில் காலப்பயணம் சுவாரஸ்யமான விஷயமாக தெரிந்தாலும், இதனை வெற்றிகரமாக மேற்கொள்வது என்பது இன்றைய தொழில்நுட்ப யுகத்திலும் மிகவும் கடினமான ஒன்றாகும்.

இதோடு இதில் பல்வேறு சிக்கல்களும் இருக்கின்றது. காலப்பயணம் (Time Travel) பற்றிய கருத்து இன்று வரை பல்வேறு முரண்பட்ட கருத்துகளை கொண்டுள்ளது. காலப்பயணத்தைப் பற்றிய குறிப்புகள் பண்டைய காலத்தில் இருந்து காணப்படுகிறது.

நவீன தத்துவங்கள் 1895 ல் ஹச்.ஜி. வெல்ஸ் (H.G.Wells) எழுதிய
தி டைம்ஸ் மெஷின்(The Time Machine) என்ற புத்தகத்திலிருந்தான் தோன்றியது. நாம் அறிந்து இது தான் முதல் காலப்பயணம் பற்றிய புத்தகமாகும்.

காலப்பயணம் சாத்தியமா, அல்லது சாத்தியமற்றதா என்பது மிகவும் குழப்பமான நிலையில் இருந்து வரும் சூழலில் காலப்பயணம் குறித்த தகவல்களை பற்றி பார்ப்போம்

டைம் டிராவலில் உள்ள கிராண்ட் பாதர் முரண்பாடு

நீங்கள் கடந்த காலத்திற்குச் சென்று உங்கள் தாத்தாவைக் கொன்றால் உங்கள் அப்பா பிறந்திருக்க மாட்டார் அதனால் நீங்களும் இருக்க மாட்டீர்கள். நீங்கள் பிறக்கவில்லை என்றால், உங்கள் தாத்தாவைக் கொன்றது யார் அதனால் நீங்கள் இப்படி டைம் டிராவல் செய்து கடந்த காலம் அல்லது நிகழ் காலத்திற்கு சென்றாலும் நீங்கள் எதையும் மாற்ற முடியாத ஒரு பிம்பமாகவே இருப்பீர்கள்.

கால பயணங்களை மேற்கொண்டதாகக் கூறும் நபர்களின் கூற்றுப்படி, கடந்த காலங்களில் நீங்கள் செல்லும் பொழுது அங்கு வாழும் மக்கள் மற்றும் கட்டிடங்களை நீங்கள் காணலாம். வானிலை திடீரென மாறிவிட்டது என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம்.
நிகழ்காலத்தில் இல்லாத பல விஷயங்களை நீங்கள் காணலாம். ஆனால் நீங்கள் பார்க்கும் எந்தவொரு பொருளையும் நீங்கள்

தொடவோ எடுக்கவோ முடியாது. கடந்த காலத்தில் நீங்கள் பார்க்கும் நபர்கள் உங்களைப் பேசவோ பார்க்கவோ மாட்டார்கள். நீங்கள் உங்களுடையவர்களாக இருக்கிறீர்கள், இருவரும் ஒருபோதும் தொடர்பு கொள்ள முடியாது.

டைம் டிராவல் பற்றிய திரைப்படங்கள் சீனாவில் தடை செய்யப்பட்டுள்ளன. இது “வரலாற்றை அவமதிப்பதாக” இருப்பதால் அவர்கள் அதைத் தடைசெய்ததாக கூறுகிறார்கள்.
விண்வெளியில் நாம் எவ்வளவு வேகமாகப் பயணிக்கிறோமோ அவ்வளவு மெதுவாக நாம் கால பயணத்தில் பயணிக்கிறோம். காலம் நான்காவது பரிமாணம். எனவே நீங்கள் டைம் டிராவலில் பயணிக்கும்போது, நான்காவது பரிமாணத்தில் பயணிக்கிறீர்கள். டைம் டிராவல் அப்படி ஒரு குழப்பமான பயணம்.

டைம் டிராவலின் மூலம் வரலாற்றை அவமதிப்பதாக இருப்பதால் சீனா தடைசெய்தது .ஆனால் இஸ்லாத்தில் கடந்த காலத்தில் வாழ்ந்தவர்களை நபி (ஸல்) அவர்கள் சந்தித்தது குறித்து அதை கண்ணியமான வரலாறாக புதுபிக்கப்படுகிறது .

முஸ்லிம் 259: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
(விண்ணுலகப் பயணத்தின்போது) என்னிடம் கோவேறு கழுதையைவிடச் சிறியதும், கழுதையைவிடப் பெரியதுமான வெள்ளை நிறத்திலமைந்த நீளமான புராக் எனும் (மின்னல் வேக) வாகனம் ஒன்று கொண்டுவரப்பட்டது.

அது பார்வை எட்டுகிற தூரத்திற்குத் தனது கால் குளம்பை எடுத்து (எட்டு) வைக்கும். அதிலேறி நான் பைத்துல் மக்திஸ் (ஜெரூசலேம்) இறை ஆலயம் வரை சென்றேன். பிறகு இறைத்தூதர்கள் தமது வாகனத்தைக் கட்டி வைக்கும் வளையத்தில் எனது வாகனத்தைக் கட்டிவைத்துவிட்டு அந்த இறையாலயத்திற்குள் நுழைந்து இரண்டு ரக்அத்கள் தொழுதேன்.

பிறகு நான் அங்கிருந்து புறப்பட்ட போது (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் (என்னிடம்) ஒரு பாத்திரத்தில் மதுவும் மற்றொரு பாத்திரத்தில் பாலும் கொண்டுவந்தார். (அதில் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுமாறு கூறினார்.) நான் பால் பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். அப்போது ஜிப்ரீல், "இயற்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்" என்று கூறினார்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு முதல் வானத்திற்கு உயர்ந்தார். (அதன் கதவைத்) திறக்கும்படி கூறினார். அப்போது "நீங்கள் யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உங்களுடன் (வந்திருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்து வரச்சொல்லி) அவரிடம் ஆள் அனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(அவரை அழைத்து வரச்சொல்லி என்னை) அவரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது" என்றார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. நான் அங்கு (ஆதி மனிதர்) ஆதம் (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் என்னை வாழ்த்தி வரவேற்று, எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக் கொண்டு இரண்டாம் வானத்திற்கு உயர்ந்தார். (அதன் கதவைத்) திறக்கும்படி சொன்னார். அப்போது "நீங்கள் யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உங்களுடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்துவரும்படி) அவரிடம் ஆளனுப்பப் பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்து வரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப் பட்டிருந்தது" என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு சகோதரிகளின் புதல்வர்களான ஈசா பின் மர்யம் (அலை), யஹ்யா பின் ஸகரிய்யா (அலை) ஆகியோரை நான் கண்டேன்.அவர்கள் இருவரும் என்னை வரவேற்று, எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தனர்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு மூன்றாம் வானத்திற்கு உயர்ந்தார். (அதன் கதவைத்) திறக்கும்படி கூறினார். அப்போது "நீங்கள் யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்துவரும்படி) அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்துவரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது" என்று பதிலளித்தார். உடனே எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் யூசுஃப் (அலை) அவர்களைக் கண்டேன். (மொத்த) அழகில் பாதி அவர்களுக்கு வழங்கப்பெற்றிருந்தது. அன்னாரும் என்னை வரவேற்று எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு நான்காம் வானத்திற்கு உயர்ந்தார். (அந்த வானத்தின் கதவைத்) திறக்கும்படி கூறினார். அப்போது "யார் அது?" என்று கேட்கப்பட்டது. அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர் "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்துவரும்படி) அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம் அவரை அழைத்துவரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது" என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் இத்ரீஸ் (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் (என்னை) வரவேற்று எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள். (இத்ரீஸ் (அலை) அவர்கள் தொடர்பாக) அல்லாஹ், "மேலும், நாம் அவரை ஓர் உயரிய இடத்தில் உயர்த்தினோம்" (19:57) என்று கூறுகின்றான்.-

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு ஐந்தாம் வானத்தில் ஏறினார். (அந்த வானத்தின் கதவைத்) திறக்கும்படி கூறினார். அப்போது, "யார் அது?" என்று கேட்கப்பட்டது. அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்துவருமாறு) ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்துவருமாறு என்னை) அவரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது" என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் ஹாரூன் (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் (என்னை) வரவேற்று எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு ஆறாம் வானத்தில் ஏறினார். (அந்த வானத்தின் கதவைத்) திறக்கும்படி கூறினார். "யார் அது?" என்று கேட்கப்பட்டது. அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர் "முஹம்மத்" என்று பதிலளித்தார் "(அவரை அழைத்து வரும்படி) அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்துவரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது" என்று

பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் மூசா (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் (என்னை) வரவேற்று, எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு ஏழாவது வானத்தில் ஏறினார். (அந்த வானத்தின் கதவைத்) திறக்கும்படி கூறினார். "யார் அது?" என்று கேட்கப்பட்டது. அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்து வரும்படி) அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்துவரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது" என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் இப்ராஹீம் (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் அல்பைத்துல் மஅமூர் (எனும் வானவர்கள் அதிகம் சஞ்சரிக்கும்) இறையில்லத்தில் தமது முதுகைச் சாய்த்து அமர்ந்துகொண்டிருந்தார்கள். அ(ந்த இறையில்லத்)தில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் வானவர்கள் (இறைவனை வணங்கச்) செல்வார்கள். அவர்கள் மறுபடியும் அங்கு நுழைவதில்லை. (புதியவர்களே அடுத்து நுழைவார்கள்.)

இஸ்லாம் டைம் டிராவல் குறித்து இவ்வளவு விவரமாக துல்லியமாக பதிவு செய்கிறது என்பது விண்ணை முட்டும் வியப்பான விஷயம் .

டைம் டிராவல் (Time Travel) 3

16/07/2020



கடந்த காலத்தைப் பற்றிய அறிவு "ரெட்ரோகாக்னிஷன் " என்று அழைக்கப்படுகிறது, அதாவது கடந்த கால பயணம். டைம்ஸ் டிராவல் செய்ய ஒளியை விட வேகமாக பயணிக்க வேண்டும். ஒளியின் வேகத்தில் 99.5% சதவிகித வேகத்தில் நீங்கள் பயணிக்க முடிந்தால் உங்களுக்கு 4 நண்பர்கள் உள்ளனர் என வைத்து கொள்ளுங்கள்.
அனைவருக்கும் ஒரே வயது அதாவது 15 வயதாக இருந்தால் 5 வருடமாக நீங்கள் டைம் டிராவலில் இருந்தால் உங்கள் வயது 20 ஆனால் உங்கள் நண்பர்கள் வயது 65 ஆக இருக்கும். நீங்கள் 15 வயதில் 5 ஆண்டுகள் தொடர்ந்து பயணம் செய்திருந்தால் உங்களுக்கு 20 வயதாகும் போது, உங்கள் நண்பர்கள் அனைவரும் 65 வயதை எட்டியிருப்பார்கள்.

ஒளியின் வேகத்தில் நீங்கள் பயணிக்கும் போது உங்கள் ஆறடி உயரம் மூன்றடியாக சுருங்கிவிடும் உங்கள் எடைநூறு கிலோ இரு நூறு கிலோவாகிவிடும் இரண்டு வருஷம் ஒரு வருஷமாகிவிடும் இதுதான் ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் சிறப்பு சார்பியல் தத்துவம்

இதை அணுவினுள்ள பைமெஸான் என்கிற துகளை ஒளியின் வேகத்திற்கு உள்ளாக்கி பரிசோதித்த போது ஐனஸ்டைன் சொன்னதுபோல் அதன் எடை இரு மடங்கானது அதன் வாழ்நாள் அதிகமானது அதன் அளவு பாதியாக குறைந்தது விஞ்ஞான உலகம் ஸ்தம்பித்தது நோபிள் பரிசு வீட்டிற்கு வந்தது

. . இந்த விஞ்ஞான சங்கதியொல்லாம் நபிஸல் அவர்களின் மிஹ்ராஜ் என்கிற விண்வெளி பயணத்தின் போது நடந்ததா ?இல்லை. இல்லவே இல்லை . நபி (ஸல்) அவர்களின் இரவு படுக்கையின் சூடு ஆறுவதற்குள் நடைபெற்று முடிந்தது. அதனால்தான் இங்குள்ள நபித்தோழர்களுக்கு வயது யாருக்கும்
அதிகமாகவில்லை.

இன்றைய காலப்பயணம் பற்றி நம் புரிதலுக்கு மிக முக்கியமானவர்ககளில் ஒருவர் ஸ்டீபன் ஹாக்கிங் இவர் தனது புத்தகங்களில் அதிகம் காலப்பயணம் பற்றி கூறியுள்ளார். இவர் காலப்பயணம் பற்றி கூறியுள்ள ஆரம்ப கருத்தில், காலப்பயணம் சாத்தியமா என்றால் அதை உறுதியாக கூற முடியாது.
ஆனால் இது வரை கண்டறியப்படவில்லை. ஆனால் அவர் பிற்காலத்தில் காலப்பயணத்திற்கு ஆதரவாய் பல கருத்துக்களை கூறியுள்ளார். டைம் டிராவல் குறித்த பல்வேறு கோட்பாடுகளில் "டைம் டிராவல் மூலம் ஏற்படும் பிரச்சனைகளில் இருந்து இந்த பிரபஞ்சம் தன்னை தானே காத்து கொள்ளும் " என்பதை தெரிவிக்கின்றன.

ஆனால் இயற்பியில் மூலம் காலப்பயணம் இயந்திரங்கள் தயாரிப்பது சாத்தியமற்றது என்பதை உணர்ந்தார். டைம் டிராவல் செய்யும் போது எந்த இடத்திற்கு டைம் டிராவல் செய்கிறமோ அவ்விடத்தின் உபகரணங்களோ , உயிரினங்களோ பயன்படுத்தப்பட்டால் ஒரு சமயம் டைம் டிராவல் சாத்தியப்படலாம்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
(விண்ணுலகப் பயணத்தின்போது) என்னிடம் கோவேறு கழுதையைவிடச் சிறியதும், கழுதையைவிடப் பெரியதுமான வெள்ளை நிறத்திலமைந்த நீளமான புராக் எனும் (மின்னல் வேக) வாகனம் ஒன்று கொண்டுவரப்பட்டது.

அது பார்வை எட்டுகிற தூரத்திற்குத் தனது கால் குளம்பை எடுத்து (எட்டு) வைக்கும். (அதாவது மின்னல் வேகத்தில்) அதிலேறி நான் பைத்துல் மக்திஸ் (ஜெரூசலேம்) இறை ஆலயம் வரை சென்றேன். பிறகு இறைத்தூதர்கள் தமது வாகனத்தைக் கட்டி வைக்கும் வளையத்தில் எனது வாகனத்தைக் கட்டிவைத்துவிட்டு அந்த இறையாலயத்திற்குள் நுழைந்து இரண்டு ரக்அத்கள் தொழுதேன்.
பிறகு நான் அங்கிருந்து புறப்பட்ட போது (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்களுடன் புறப்பட்டேன். (முஸ்லிம் 259)

ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் டைம் டிராவல் குறித்த ஆய்வுகளுக்கு தடை செய்ய சட்டம் இயற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.
டைம் டிராவல் வழிமுறைக்கு தடை கோரும் வகையில் 'க்ரோனோலாஜி ப்ரோடெக்ஷன் கான்ஜெச்சர்' என்ற பெயரில் சட்டம் இயற்ற வேண்டும் என கூறி வந்த ஸ்டீபன் ஹாக்கிங் கோரிக்கை விடுத்த போதும் இன்று வரை இச்சட்டம் இயற்றப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சட்டம் இயற்றப்படாததை தொடர்ந்து ஹாக்கிங் காலப்பயணம் மேற்கொள்வது சாத்தியமாகலாம், ஆனால் இது நடைமுறை இல்லை என தெரிவித்தார். காலப்பயணம் மேற்கொள்ளும் போது பிரபஞ்சம் மாறாது, இதனால் காலப்பயணத்தினை உண்மையில் உணரவோ முடியாது. காரணம் நாம் ஏற்கனவே காலப்பயணி ஒருவரால் பார்க்கப்பட்டுள்ளோம். 2000 மாவது ஆண்டில் அறிவியல் சார்ந்த இணைய விவாதங்களில் தான் ஒரு காலப்பயணி என கூறிக்கொண்டு தான் 2036 ஆம் ஆண்டில் இருந்து வருவதாக கூறினார்.

2036 ஆம் ஆண்டில் இருந்து வருவதாக கூறிய ஜான் டைட்டர் தான் ஒரு மிலிட்டரி டைம் டிராவலர் என தெரிவித்ததோடு, தடையமே இல்லாமல் அடிக்கடி மறைந்து விட்டதோடு சில கணிப்புகளை தெரிவித்து இணைய வாசிகளை மகிழ்வித்து வந்ததாக கூறப்படுகின்றது. பல்வேறு பிரபஞ்சங்கள் இருப்பது உண்மை என்றும் தான் கடந்து வந்த காலத்தின் டைம்லைன் முற்றிலும் வித்தியாசமானது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

உண்மையில் காலப்பயணம் மேற்கொள்ள முடியுமா என்ற கேள்வி மட்டும் நிலையாய் இருக்க டைம் டிராவல் குறித்த ஆராய்ச்சிகளும் அவ்வப்போது கோட்பாடுகளும் வெளியாகி கொண்டே தான் இருக்கும்.

டைம் டிராவல்4 16/07/2020
'புராக்' வாகனப்பயணமும் அறிவியல் நிரூபணமும்.- (ரஹ்மத் ராஜகுமாரன்)

(An Excellent Article. Don't miss it)
www.nidur.info



பகுத்தறிவாதம் பேசும் சில நண்பர்கள் மூடநம்பிக்கையை வேரறுப்பதாக எண்ணி தங்களுடைய சிந்தனையை முடமாக்கிக் கொண்டுள்ளார்கள். அவர்கள் எடுத்து வைக்கும் வாதங்களின் சாரம்சங்கள்...

1. புராக் விமானத்தில் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பயணம் செய்த நிகழ்ச்சிக்கு அறிவியல் ரீதியான நிரூபணங்கள் உண்டு என்பதற்கு என்ன ஆதாரம்?

2. எரிபொருள், விமானம் இவை கண்டு பிடிக்கப்படாத காலத்தில் மேற்கூறிய புராக் விமானம் எந்த ஆற்றலின் உதவியால் விண்ணில் செலுத்தப்பட்டது?

எனவே இறை ஆற்றலினால்தான் இச்சம்பவம் நடந்ததாகக் கதை அளக்க முடியுமே தவிர அதில் அறிவியல் உண்மை இருப்பதாக ஒரு போதும் இவர்களால் நிரூபித்துக் காட்ட முடியாது என்பது அவர்களின் வாதம்.

ஒரு சின்ன பிளாஷ்பேக்: இவர்களை 1905 ஆம் ஆண்டிற்கு கூட்டிச் செல்வோம். அப்போது ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் என்கிற 25 வயது விஞ்ஞானி ஒரு பிரம்மாண்டமான சிந்தனையை தத்துவமாக நுழைத்து மொத்த விஞ்ஞானிகளையும் கலக்கி விட்டார். அவர் ஆய்வு செய்தது ஒளியைப்பற்றி மேற்சொல்லப்பட்ட அத்தனை விஷயங்களுக்கும் ஒளியைப்பற்றிய விபரம் தெரிந்தால்

பகுத்தரிவாதிகள் என்று தங்களை சொல்லிக்கொள்ளும் இவர்கள் மட்டுமல்ல இனி எவரும் இது மாதிரி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி பேச மாட்டார்கள்.

பஸ் நிலையத்தில் நிற்கும் போது வழக்கம் போல உங்களை பஸ் கடந்து போகிறது. பஸ்ஸுக்குள் ஒரு சிறுவன் பந்தை எறிந்து விளையாடிக் கொண்டிருக்கிறான். பஸ் போகும் திசையில் 10 அடி தூரத்திற்கு பந்தை எறிகிறான். அந்த ஒரு செகண்டில் பஸ் 20 அடி நகர்கிறது. பந்தின் வேகம் என்ன? பையனுக்கு செகண்டுக்குப் பத்து அடி வேகம். ஆனால் வெளியிலிருந்து பார்க்கும் உங்களுக்கு முப்பது அடி (10 + 20 = 30 அடி) எது நிஜம்? இரண்டுமே நிஜம் தான். வேகம் என்பது பார்ப்பவர்களைப் பொறுத்திருக்கிறது. புரிகிறது அல்லவா?

கொஞ்சம் கவனமாக கவனியுங்கள். அடுத்து நம் பூமியும் ஒருவகையில் பஸ்தான். சூரியனைச் சுற்றிவரும் பஸ். என்ன வேகம்? ஒரு செகண்டுக்கு சுமார் 18 மைல். சரி சந்தோஷம். ஒளியின் வேகம் என்ன தெரியுமா? ரொம்பவும் ஜாஸ்தி. ஒரு செகண்டுக்கு 1,86,282 மைல் (கி.மீ அல்ல) அல்லது 3 லட்சம் கி.மீ

பஸ்ஸில் எறிந்த பந்துக்கு நேர்வது போல் பூமி பஸ்ஸில் எறியப்பட்ட ஒளிக்கதிருக்கு நேருமா? அதாவது பூமி சுற்றிக் கொண்டு போகும் திசையிலும், அதன் எதிர்திசையிலும் ஒளியின் வேகம் மாறவேண்டாமா? அதாவது பூமி சுற்றிக்கொண்டு போகும் திசையில் (186282+18)ம் எதிர்திசையில் (186282+18)ம் இருக்க வேண்டுமே! அப்படித்தான் தோன்றுகிறது பார்ப்போம்.

'மைக்கல்சன்' என்கிற விஞ்ஞானி 1887-ல் ஒளியின் வேகத்தை நுட்பமாகக் கணக்கிட்டுப் பரிசோதனை செய்தார். பூமி சுற்றும் திசை, எதிர்திசை, ஏன் எல்லாத் திசைகளிலும் ஒளியின் வேகத்தை அளந்து பார்த்தார். ஊஹூம்! எந்த திசையிலும் ஒளியின் வேகம் மாறவில்லை! அதே 186282 மைல்-ஒரு நொடிக்குப் பயணமாகிறது.

விஞ்ஞானி ஐன்ஸ்டைனும் தன் ஆய்வின் முடிவில் ஒளியின் வேகம் மாறாமல் இருப்பது பரிசோதிக்கப்பட்ட நிஜம். அதற்கு சரியான ஒளியின் வேகம் எதிர்பாராத விநோதமான சித்தாந்தங்களை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றார். நிஜமாகவே விநோதம் தான் என்ன? மறுபடியும் பஸ்.

அடுத்த பஸ் கிடைத்து நீங்கள் சென்று கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் நகர்வதால் உங்களில் சிறுமாறுதல்கள் நிகழ்ந்தாக வேண்டும் என்றார் ஐன்ஸ்டைன் என்ன மாறுதல்கள்?

ரொம்ப சிம்பிள். பஸ் போகும் திசையில் நீங்கள் செல்லும் போது கொஞ்சம் சுருங்குகிறீர்கள். அதே சமயம் உங்கள் எடை கொஞ்சம் கூடுதலாகிறது! உங்கள் வாட்ச் கொஞ்சம் ஸ்லோவாக ஓடுகிறது என்றார். அப்போது தான் ஒளியின் வேகம் மாறாமல் இருப்பதை விளக்க முடியும்?

ஒரே ஒரு விஷயம்-பூமியில் கிடைக்கக் கூடிய நேரங்களில் இந்த எடை கூடுவது, மூஞ்சி சப்பட்டையாவது, கடிகாரம் மெள்ள ஓடுவது எல்லாம் மிகக் மிகக் குறைவாக அளவிடக் கூட முடியாத படி அவ்வளவு நுட்பமாக இருக்கும். எப்போது அளவிட முடியும்? கொஞ்சம் அதிவேகத்தில் பஸ் போனால்! உதாரணத்துக்கு ஒரு செகண்டுக்கு 2,60,000 கி.மீ வேகத்தில் போனால் அப்போது என்ன ஆகும்? ஆறடி மனிதன் மூன்றடியாக சுருங்கிவிடுவான். அவன் நூறு கிலோ எடை இருநூறு கிலோவாகி விடும். இரண்டு வருஷம் ஒரு வருஷமாகி விடும். இதுதான் ஐன்ஸ்டைனின் சிறப்பு சார்பியல் தத்துவம்.

வேகத்தால் ஏற்படும் இந்தச் சுருக்கங்களை லோரன்ஸியன் கண்டராக்ஷன் என்பார்கள் நம்புவதற்கு கஷ்டமாக இருக்கிறதல்லவா? ஏன்? இதெல்லாம் நம் அன்றாட அனுபவங்களும், பகுத்தறிவுக்குப் புறம்பாக இருக்கிறது என்று பகுத்தறிவாளர்கள் நினைக்கலாம். ஆனால் ஐன்ஸ்டைன் சொன்னது ஏதோ ஒரு குருட்டாம் போக்குச் சித்தாந்தமல்ல. பரிசோதனைகளின் மூலம் நிரூபிக்கப்பட்டது. இது தான் அவருடைய மகா மேதைமைக்கு சாட்சி.

விஞ்ஞானி ஐன்ஸ்டைன் சொல்லும் மாறுதல்களை உணர மிகமிக வேகம் தேவைப்படும் ஒளியின் வேகத்துக்கு மிக அருகில் சென்றால் தான் இதெல்லாம் அளவிட முடியும். அன்றாட வேகங்களில் நல்ல வேளை இந்த விளைவுகளை உணரவே முடியாது.

ஒளியின் வேகத்தின் அருகில் செல்லக் கூடியவை அணுக்கருக்கள் இருக்கும் துகள்கள் (ப்ரோட்டின், நியூட்ரான், எலக்ட்ரான் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே) இந்த வகைத்துகள்களில் ஒன்றான 'பைமெஸான்' என்ற ஒரு துகளை அதிக வேகத்திற்கு உள்ளாக்கிய பரிசோதனை செய்தபோது ஐன்ஸ்டைன் சொன்னது போல் அதன் எடை கூடியது! அதன் வாழ்நாள் அதிகமானது! விஞ்ஞான உலகம் ஸ்தம்பித்தது! நோபல் பரிசு ஐன்ஸ்டைனைத் தேடி வந்து சேர்ந்து கொண்டது.

மேற்கண்ட ஆய்வை ஒளியின் வேகத்தில் பயணிக்க செய்பவருக்கு என்ன நேர்கிறது? என்பதைப் பார்ப்போம். ஒளி வேகத்தில் இயங்கக்கூடிய வாகனத்தில் பயணம் செய்பவர்களுக்கு 'காலம்' என்பது இயங்குவதில்லை. இது தான் அறிவியல் உண்மை. ஆனால் ஒளிவேக வாகனத்தில் பயணம் செய்யக் கூடிய வரை வழியனுப்ப வந்தவர்களுக்கு அனந்த கோடி வருஷங்கள் ஆகி இருக்கும்!

அதாவது சென்னையிலிருந்து ஒளி வேக ஊர்தியில் ஒரு நாள் பயணம் (ஒரே ஒரு நாள்) பயணம் புறப்படுகிற நண்பர்; (வயது 45) அவரை வழியனுப்ப வந்த அவரது மனைவி; (வயது 40) மகன் (வயது 6) மகள் (வயது 8) இவர்கள் வழியனுப்ப இவர்; விண்வெளி பயணம் மேற்கொள்கிறார். இவர் பயணிப்பது ஒளி வேக ஊர்தி நொடிக்கு 1,86,282 மைல் வேகம் ஒரே ஒரு நாள் பயணத்தை முடித்துவிட்டு அதே சென்னைக்கு திரும்புகிறார். இப்போதும் அதே அவர் குடும்பத்தார் வரவேற்க வந்துள்ளனர். திருவாளர் நண்பர் வரவேற்கப்படுகிறார். மீடியாக்கள் பேட்டி கேட்கிறார்கள். மிஸ்டர் நண்பர்; நீங்கள் எத்தனை வருடம் விண்வெளியில் ஒளிவேக வாகனத்தில் பயணித்தீர்கள்?

'எத்தனை வருடங்களா...?
ஒரே ஒரு நாள்...!'

'உங்க வயது என்ன நண்பரே!'

45 வயசும் ஒரு நாள் மட்டுமே! என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போதே அவர் கேட்கிறார்... 'யார் அந்த பாட்டியம்மா...?' எங்கோ பார்த்த மாதிரி இருக்கே?

'அடபோங்க சார்! அவங்க உங்க மனைவி தான்!!!'

இது காலத்தின் விபரீத விளையாட்டு இது விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்ட உண்மை. பொய் அல்ல. பித்தலாட்டம் அல்ல மோடி மஸ்தான் வேலை அல்ல! உண்மை! அதுவும் தெளிவான உண்மை!! ஒளியின் வேகத்தில் பயணிக்கும் போது காலம் என்பது இயங்குவது இல்லை என்பது நிரூபணமாகிறது.

சரி விஷயத்திற்கு வருவோம். இறைவன் ஒவ்வொரு படைப்பையும் ஒவ்வொரு பொருளைக் கொண்டு படைத்திருக்கிறான். மனிதனை படைக்க மண்ணைப் பயன்படுத்தியுள்ளான். ஜின்களைப் படைக்க நெருப்பை பயன்படுத்தியுள்ளான். வானவர்களை ஒளியால் படைக்க இறைவன் அவர்கள் பயன்படுத்தும் வாகனங்களையும் ஒளியால் படைத்துள்ளான். 'புராக் என்ற வாகனம் தன் பார்வை எட்டிய தூரத்தில் அது தன் குளம்பை எடுத்து வைக்கின்றது.' (நூல் முஸ்லிம் 234) எவ்வளவு பெரிய உண்மை.

ஒளியினால் அந்த புராக் வாகனம் படைக்கப்பட்டுள்ளது என்பதற்கு இதைவிட என்ன ஆதாரம் தேவை? புராக் என்கிற வாகனத்தை ஓட்டி வந்தவர் ஜிப்ரயீல் (அலைஹிஸ்ஸலாம்) என்கிற வானவர். அவர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைக்க வந்துள்ளார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வுடைய நூரிலிருந்து (ஒளியிலிருந்து) வெளியானவர்கள் ஒரு சமயம் ஆயிஷா (ரளியல்லாஹு அன்ஹா) அவர்கள் தன் ஊசியில் கோர்ப்பதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்த போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் பக்கம் வர அவர்களின் வெளிச்சத்தில் நூலை கோர்த்ததாக ஹத்தீஸ் காணக் கிடைக்கிறது.

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நிழல் பூமியில் விழாது காரணம் ஒளிக்கு ஏது நிழல் இதுவும் ஹதீஸ்களில் உள்ளது.மேலும் விண்ணுலகில் பயணிக்கும் போது ஆறடி மனிதன் மூன்றடியாக குறைவதாக கண்டோம். அந்த வேகத்தில் பயணிக்கும் போது பயணிப்பவரின் இதயம் ஒரு நிமிடத்திற்கு 72 தடவை துடிப்பது சாத்தியமாகாது என்பதை பார்க்கும் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விண்வெளியில் பயணிப்பதற்கு சாதகமாக இருப்பதற்கு வேண்டி வானவர் ஜிப்ரயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களால் இதயத்தில் தக்க மாற்றம் செய்யப்பட்டதையும் ஹதீஸ்களில் காணமுடிகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விண்வெளி பயணம் இரவு இஷா தொழுகைக்குப்பிறகு இரவில் படுத்திருக்கும்போது அவர்கள் அழைத்துச் செல்லவப்பட்டார்கள். இந்த விண்வெளிப் பணயத்தைப்பற்றி நபி صلى الله عليه وسلم அவர்கள் சொல்லும் போது 'எனது பயணம் இரவுப்படுக்கையின் சூடு ஆறுவதற்குள் நடந்து முடிந்தது' என்கிறார்கள். ஒரு நாள் பயணமாக இருந்திருந்தால் பூமியில் அனந்த கோடி வருஷங்கள் ஆகியிருக்கும். எனவே அவர்களின் விண்வெளிப்பயணம் ஒரு சில நிமிடப்பொழுதில் நடந்து முடிந்திருக்கிறது. பகுத்தறிவாத நண்பர், விண்வெளி பயணம் முடித்துவிட்டு மீடியாக்களிடம் பேட்டி கொடுக்கும்போது என் விண்வெளிப்பயணம் ஒரே ஒரு நாள் மட்டும்தான் என்கிறார். ஆனால் பூமியில் பலவருடங்கள் உருண்டோடியுள்ளது.

இதே நிலை நாளை மறுமையில் விசாரணைக்காலம் நடைபெறும் நாளில், குற்றவாளிகள் தாங்கள் இப்பூவுலகில் ஒரு நாழிகையைத் தவிர அதிக நாட்கள் தங்கி இருக்கவில்லை என்று சத்தியம் செய்வார்கள். இவ்வாறே இவ்வுலகத்திலும் அவர்கள் பொய்யையே பிதற்றிக் கொண்டிருந்ததாக குர்ஆனில் அல்லாஹ் (30.55) (76.46) கூறுகிறான். காரணம், இந்த மனிதர்கள் இறந்து தற்போது விசாரிக்கப்படும் இடத்தில் ஒரு நாள் என்பது மிலியின் ஆயிரம் வருடங்களுக்கு சமமாகவோ (குர்ஆன் 22:47) அல்லது பூமியின் 50 ஆயிரம் வருடங்களுக்கு சமமாகவோ (70.4-7) கூட இருக்கலாம். இதுதான் அந்த மனிதர்களின் குழப்பத்திற்கு காரணம்.

இந்த விஞ்ஞான உண்மையை குர்ஆன் மிகத் தெளிவாகக் கூறுகிறது. எனவே முஸ்லிம்கள் குறிப்பிடும் இறைவனும் திருகுர்ஆனும் கற்பனையோ கட்டுக்கதையோ அல்ல. இறைத்தூதர் முஹம்மது நபி صلى الله عليه وسلم அவர்களின் விண்வெளிப் பயணம் தான் இன்றைய விண்வெளிப் பயணங்களின் முன்மாதிரிப் பயணமாக இருந்தது என்பது உறுதி.

பகுத்தறிவாத(!) நண்பர்களே! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மிஹ்ராஜ் எனும் விண்ணுலகப் பயணத்திற்கு இந்த அறிவியல் நிரூபணம் போதும் என நினைக்கிறேன்.

www.nidur.info

டைம் டிராவல் (Time Travel) 5

காலத்தில் பின்னோக்கி பயணிக்க முடியுமா? 16-07-2020





ரோன் மாலெட் ஒரு இயற்பியல் பேராசிரியர். அவருக்கு ஒரு கனவு இருந்தது. காலத்தில் பயணிக்க வேண்டும் என்பதே அது. தமிழ் சினிமா பாணியில் சொல்ல வேண்டுமென்றால், இன்றிலிருந்து நேற்றும், நேற்றிலிருந்து நாளையும் பயணிக்க வேண்டும் என்பதுதான் அது.

ஆனால் அது எல்லாம் சாத்தியமா. இப்படியாக யோசிப்பது ஒரு நல்ல அறிவியல் புனைவிலக்கியத்திற்கு வேண்டுமானால் பயன்படலாம் என்றார்கள். ஆனால், இது வெறும் புனைவல்ல.

ரோன் மாலெட் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை அதற்காகவே செலவிட்டு இருக்கிறார்.

காலத்தை கடக்க நினைப்பது ஏன்?

ரோனின் தந்தை தனது 33 ஆம் வயதில் மரணித்தார். அப்போது ரோனுக்கு வெறும் 10 வயதுதான். இந்த இழப்பினால் நிலைகுலைந்து போனார் ரோன். இந்த இழப்பிலிருந்து மீள புத்தகங்களில் தன்னைத்தானே புதைத்துக் கொண்டார். அப்போது அவர் கடந்துவந்த ஒரு புத்தகம்தான் அவருக்கு கால இயந்திரம் குறித்து ஆர்வம் ஏற்பட காரணம்.

"என் பதினோரு வயதில் நான் படித்த ஒரு புத்தகம் என் வாழ்க்கையையே திருப்பி போட்டது. அந்த புத்தகம் எச்ஜி.வெல்ஸின் "தி டைம் மிஷின்." என்கிறார் கனெக்டிகட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரோன்.

அந்த புத்தகம் எப்படி தன்னை ஈர்த்தது என்பது குறித்து விளக்கும் ரோன், "முதலில் என்னை புத்தகத்தின் அட்டை வடிவம்தான் ஈர்த்தது. மெல்ல அந்த புத்தகத்தை புரட்டியபோது, அதில் உள்ள ஒரு வரி எனக்குள் அழுத்தமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த வரி இதுதான், '"அறிவியலாளர்களுக்கு நன்கு தெரியும். காலமும் வெளியை (Space) போன்றதுதான். வெளியில் எப்படி நாம் முன்னும் பின்னும் நகர முடியுமோ? அதுபோல நாம் காலத்திலும் முன்னும் பின்னும் நகர முடியும்'" என்று இருந்தது. இது என்னை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது." என்கிறார்.

"நம்மால் ஒரு கால இயந்திரத்தை உருவாக்க முடியுமானால், அதில் பயணித்து என் தந்தையை சந்திக்க முடியும் தானே, அவரது உயிரைக் காக்க முடியும் தானே, எல்லாவற்றையும் மாற்ற முடியும்தானே? என்று அந்த கணத்தில் யோசித்தேன்." என்கிறார் பேராசியர் ரோன்.

இதெல்லாம் எங்கே நடக்கப் போகிறது என்று கால இயந்திரம் குறித்த கனவை ஆயாசமாக கடந்து சென்றாலும், இயற்கையின் புதிர்கள் குறித்த பல முடிச்சுகளை வெற்றிகரமாக அவிழ்த்த அறிவியலாளர்கள் நிச்சயம் ஒரு நாள் இதனை உருவாக்குவார்கள். ரோனின் கனவு நிச்சயம் ஒரு நாள் நிஜமாகும்.

இந்த வெளியின் மூன்று பரிமாணங்களும் நான்காவது பரிமாணமான காலத்துடன் தொடர்புடையது என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் நம்பினார்.

வெளிக்கும் காலத்திற்கும் ஒரு பாலத்தை ஏற்படுத்துவதன் மூலம், காலப் பயணத்தை சாத்தியப்படுத்தலாம் என்று அவர்நம்பினார் . இது வார்ம்ஹோல் (wormhole) ஆகும். அதாவது தமிழில் பரவெளி.

எளிமையாக புரிந்துக் கொள்ளும்படி சொல்ல வேண்டுமென்றால், ஒரு சுரங்கப் பாதையை கற்பனை செய்துக் கொள்ளுங்கள் அதன் ஒரு முனை வெளியின் ஒரு காலத்திலும், இன்னொரு முனை மற்றொரு காலத்திலும் இருக்கிறது.

பரவெளி இயற்கையாகவே இந்த பிரபஞ்சத்தில் இருக்கலாம். ரஷ்ய விஞ்ஞானிகள் ரேடியோ டெலஸ்கோப்பை பயன்படுத்தி இதனை உறுதிப்படுத்தும் முயற்சியில் இருக்கிறார்கள். ஆனால், பரவெளியை பயன்படுத்தி காலத்தில் பயணிப்பது சரியான ஒன்றாக இருக்காது.

ஏனெனில், பரவெளியில் நாம் பயணித்தாலும், அதன் மற்றொரு முனை பிரபஞ்சத்தின் எந்தப் புள்ளியில் இருக்கும் என்று நம்மால் கணிக்க முடியாது.

பரவெளியில் இன்னொரு பிரச்சனையும் இருக்கிறது என்கிறார்கள் அறிவியலாளர்கள். பரவெளி தன்னுள் இருக்கும் அனைத்தையும் நெரித்து, அழுத்திவிடும் அபாயம் இருக்கிறது.

ஆனால், பரவெளியை கட்டுப்படுத்தும் பட்சத்தில் எதிர்காலத்தில் நாம் அதில் பயணிக்கலாம், காலத்தின் ஏதோ ஒரு பகுதியில் இறங்கலாம். இதற்கு காலப் பயணம் செய்பவர்களின் உடலில் மாற்றம் செய்யப்பட வேண்டும் .

263. அபூதர் (ரலி) அவர்கள் அறிவித்துவந்ததாக அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
நான் மக்காவில் இருந்தபோது என் வீட்டின் கூரை பிளக்கப்பட்டது. (அதன் வழியாக வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறங்கி (வந்து) என்னுடைய நெஞ்சைப் பிளந்தார். பிறகு அதை "ஸம்ஸம்" நீரால் கழுவினார். பிறகு நுண்ணறிவாலும் இறைநம்பிக்கையாலும் நிரம்பிய தங்கத் தாம்பூலம் ஒன்றைக் கொண்டு வந்து என் நெஞ்சத்தினுள் அதை ஊற்றி (நிரப்பி)னார். பிறகு (பழையபடியே) நெஞ்சை மூடிவிட்டார்.பிறகு என் கையைப் பிடித்து (என்னை அழைத்து)க் கொண்டு விண்ணில் ஏறினார்.

ஆஸ்திரேலியா குயின்ஸ்லாந்த் பல்கலைக்கழகத்தின் பிரபஞ்சவியலாளர்கள் டமாரா டேவிஸ், "நம்மால் பரவெளியை உருவாக்க முடியுமா, நம் ஆற்றலுக்குள் அது அடங்குமா நம் உடலில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமா என்று தெரியவில்லை. ஆனால், யார் கண்டது எதிர்காலத்தில் எதுவுமே சாத்தியமாகலாம்" என்கிறார்.

ஆனால், ரோனுக்கு கால இயந்திரத்தை நிச்சயம் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சமன்பாடு குறித்து அவர் 12 வயதில் படித்த புத்தகம்தான் அவருக்கு இந்த நம்பிக்கையை தருகிறது என்கிறார் அவர். அதற்கான முயற்சியிலும் இருக்கிறார்.

கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்

காலப் பயணம் சாத்தியமே இல்லை என்கிறார் கனடா பெரிமீட்டர் கல்வி நிலையத்தின் பேராசிரியர் லீ ஸ்மோலின். அவர் சொல்கிறார், " நிகழ்காலம் இருக்கிறது. கடந்த காலம் நம் நினைவில் மட்டுமே இருக்கிறது. எதிர்காலம் இருக்கப்போகிற ஒன்று. அதனால், நினைவில் மட்டுமே உள்ள ஒரு விஷயத்திற்கும், இப்போது இல்லாத ஒரு வெளிக்கும் நாம் எப்படிப் பயணம் செய்ய முடியும்?

குவாண்டம் அறிவியலின் வளர்ச்சி இந்த கேள்விகளுக்கு பதில் தரலாம் என்கிறார் பெரிமீட்டர் கல்வி நிலையத்தின் இயக்குநர் பேராசிரியர் நீல் டுரோக்.

அவர், "இங்கே, முடியாது என்று எப்போதுமே கூறக் கூடாது. ஏனெனில் இப்போது நம்மால் முடியாத ஒரு விஷயத்தை எதிர்காலத்தில் யாரேனும் ஒரு புத்திசாலி இளைஞர் வந்து நிகழ்த்தி காட்டுவார்" என்கிறார் பேராசிரியர் நீல் டுரோக்.

இன்னொரு ஒரு விஞ்ஞானி காலப் பயணத்தை ஒரு உதாரணம் மூலம் விளக்க விரும்புகிறேன் என்கிறார் .

ஒளியின் வேகம் ஒரு வினாடிக்கு ஒரு மீட்டர்தான் என்று வைத்துக் கொள்வோம்.நீங்கள் ஒரு வினாடிக்கு 5 மீட்டர் ஓடக் கூடியவர் என்று வைத்துக் கொள்வோம்.

இப்போது நீங்கள் உங்கள் வீட்டு திண்ணையில் அமைதியாக ஒரு 10 வினாடிகள் உட்கார்ந்து இருந்து விட்டு, திடீரென எழுந்து ஓடுங்கள். ஒரு வினாடிக்குள் 5 மீட்டர் ஓடிவிட்டு திடீரென நின்று திரும்பிப் பாருங்கள்.இப்போது நீங்கள் உங்களையே அந்த திண்ணையில் அமர்ந்து கொண்டு இருப்பதைப் பார்க்க முடியும்.
எப்படி என்றால், ஒளியின் வேகம் ஒரு வினாடிக்கு ஒரு மீட்டர்தான் என்பதால், 5 வினாடிகளுக்கு முன்பு நீங்கள் திண்ணையில் அமர்ந்து கொண்டு இருந்த அந்த காட்சிதான் இப்போது உங்கள் கண்களை வந்து அடைந்திருக்கும். இன்னும் 4 வினாடிகள் கழித்துதான் நீங்கள் திடீரென எழுந்து ஓட ஆரம்பித்தது உங்கள் கண்ணுக்கு தெரியும்.
காலப்பயணம் என்பது கிட்டத்தட்ட இதுபோல்தான். இதையே உங்கள் அதிவேகத்தை பொறுத்து பல ஆண்டுகள் பின்னால் நடந்த நிகழ்வுகளை காண முடியும்.

ஆனால், ஒளியின் வேகத்தை (வினாடிக்கு தோராயமாக 3 லட்சம் கிலோ மீட்டர்கள்) தாண்டி இயங்கும் ஒரு வாகனம்/இயந்திரம் இங்கு சாத்தியம் இல்லை.அதற்கு காலம் வரும் வரை காலப் பயணம் என்பதும் சாத்தியம் இல்லை.

மேலும், மேற்கண்ட உதாரணத்தில், நீங்கள் ஓடத்தொடங்கும் முன்னால், நீங்கள் 1 வினாடிக்கு அப்புறம் 5 மீட்டர் தொலைவில் நிற்பதை, உங்களால் பார்த்திருக்க முடியாது (உதாரணத்தில் ஒளியின் வேகம் வினாடிக்கு ஒரு மீட்டர்தான் என்பதால்). அதனால் எதிர் காலத்து மனிதர்கள் கால இயந்திரம் மூலம் இப்போது வந்ததை நான் பார்த்தேன் என்று யாராவது சொன்னால் அது முழுமையான கட்டுக்கதை என்கிறார் .

.... ஆனால் நபி(ஸல்) அவர்கள் மிஹ்ராஜ் பயணம் இன்றிலிருந்து நேற்று அதாவது பின்னோக்கும் பயணமாக இருந்தது .

259. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
(விண்ணுலகப் பயணத்தின்போது) என்னிடம் கோவேறு கழுதையைவிடச் சிறியதும், கழுதையைவிடப் பெரியதுமான வெள்ளை நிறத்திலமைந்த நீளமான புராக் எனும் (மின்னல் வேக) வாகனம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அது பார்வை எட்டுகிற தூரத்திற்குத் தனது கால் குளம்பை எடுத்து (எட்டு) வைக்கும். அதிலேறி நான் பைத்துல் மக்திஸ் (ஜெரூசலேம்) இறை ஆலயம் வரை சென்றேன். பிறகு இறைத்தூதர்கள் தமது வாகனத்தைக் கட்டி வைக்கும் வளையத்தில் எனது வாகனத்தைக் கட்டிவைத்துவிட்டு அந்த இறையாலயத்திற்குள் நுழைந்து இரண்டு ரக்அத்கள் தொழுதேன். பிறகு நான் அங்கிருந்து புறப்பட்ட போது (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் (என்னிடம்) ஒரு பாத்திரத்தில் மதுவும் மற்றொரு பாத்திரத்தில் பாலும் கொண்டுவந்தார். (அதில் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுமாறு கூறினார்.) நான் பால் பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். அப்போது ஜிப்ரீல், "இயற்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்" என்று கூறினார்.

267. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
நான் (விண்ணுலகப் பயணத்திற்காக) அழைத்துச்செல்லப்பட்ட இரவில் இம்ரானின் புதல்வர் மூசா (அலை) அவர்களைக் கடந்துசென்றேன். மூசா (அலை) அவர்கள் (யமனியர்களான) "ஷனூஆ" குலத்தைச் சேர்ந்த மனிதரைப் போன்று மாநிறமுடையவர்கள்; உயரமானவர்கள்; சுருள்முடியுடையவர்கள். (அப்பயணத்தில்) மர்யமின் மைந்தர் ஈசா (அலை) அவர்களையும் கண்டேன். அவர்கள் நடுத்தர உயரமும் சிவப்பும் வெண்மையும் கலந்த, மிதமான சரும அமைப்புக் கொண்டவர்களாகவும் படிந்த, தொங்கலான தலைமுடி உடையவர்களாகவும் இருந்தார்கள். மேலும், நரகத்தின் காவலரான

(வானவர்) மாலிக்கும், (இறுதிக் காலத்தில் வரவிருக்கும் மகா பொய்யனான) தஜ்ஜாலும் எனக்குக் காட்டப்பட்டனர். இவையெல்லாம் அல்லாஹ் எனக்குக் காண்பித்த அவனுடைய சான்றுகளில் உள்ளவை. "நீங்கள் அவரைச் சந்தித்ததில் சந்தேகம் ஏதும் கொள்ள வேண்டாம்". (32:23)
இதை இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
மேற்கண்ட (32:23ஆவது) வசனத்திற்கு விளக்கமளிக்கையில் கத்தாதா (ரஹ்) அவர்கள், "நபி (ஸல்) அவர்கள் மூசா (அலை) அவர்களைச் சந்தித்தது பற்றி நீங்கள் சந்தேகம் ஏதும் கொள்ள வேண்டாம்" என்று கூறினார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் அத்தியாயம் : 1. இறைநம்பிக்கை

268. இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:
(ஒரு பயணத்தில்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "அல்அஸ்ரக்" பள்ளத்தாக்கைக் கடந்து சென்றார்கள்.அப்போது, "இது எந்தப் பள்ளத்தாக்கு?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "அல்அஸ்ரக் பள்ளத்தாக்கு" என்று பதிலளித்தார்கள். "மூசா (அலை) அவர்கள் உரத்த குரலில் "தல்பியா" சொல்லிக்கொண்டு இந்த மலைக் குன்றிலிருந்து இறங்கிவந்து கொண்டிருப்பதை (இப்போதும்) நான் காண்பதைப் போன்று உள்ளது" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு ஹர்ஷா மலைக் குன்றுக்குச் சென்றார்கள். "இது எந்த மலைக் குன்று?" என்று கேட்டார்கள். மக்கள், "(இது) ஹர்ஷா மலைக் குன்று" என்று பதிலளித்தனர். அதற்கு "யூனுஸ் பின் மத்தா (அலை) அவர்கள் கம்பளி நீளங்கி அணிந்தவர்களாகக் கட்டுடல் கொண்ட சிவப்பு ஒட்டகமொன்றின் மீது "தல்பியா" சொல்லிக் கொண்டிருப்பதை நான் (இப்போதும்) காண்பதைப் போன்று உள்ளது. அவர்களது ஒட்டகத்தின் கடிவாளம் ஈச்ச நாரினாலானது" என்று கூறினார்கள்.
இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது.
ஸஹீஹ் முஸ்லிம் அத்தியாயம் : 1. இறைநம்பிக்கை

டைம் டிராவல் (Time Travel) 6 16/06/2020

காலப்பயணம்: புனைவா? மறைக்கப்பட்ட உண்மையா?

அறிவியல் உலகில் பல்லாண்டு காலமாக நீங்காத மர்மங்களில் Time Travel எனப்படும் காலப்பயணமும் முக்கியமான இடத்தினை பிடிக்கிறது.

காலப்பயணம் (Time Travel) என்றால் என்ன?

தற்போது இருக்கும் காலத்தில் இருந்து இறந்த காலத்திற்கோ அல்லது எதிர்காலத்திற்கோ பொருள்களை அனுப்புவதோ, தகவல்கள்/சமிக்ஞைகளை அனுப்புவதோ, அல்லது மனிதர்கள் பயணம் செய்வதையோ காலப்பயணம் என குறிப்பிடுகின்றனர்.
ஐன்ஸ்டீனால் உருவாக்கப்பட்ட சிறப்பு சார்பியல் மற்றும் பொது சார்பியல் கொள்கைகளே காலப்பயணம் என்ற கருத்தை முதலில் முன்வைத்தது.மேலும், இவ்வாறான காலப்பயணத்தை அடைய பயன்படும் தொழிநுட்ப சாதனத்தினை கால இயந்திரம் என்று குறிப்பிடுகின்றனர்.

கடந்த 19ம் நூற்றாண்டில் இருந்து காலப் பயணம் மற்றும் கால இயந்திரம் பற்றி எண்ணற்ற புனைவு கதைகள் வரத் தொடங்கியது.
1895ம் ஆண்டு H. G. Wells என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் எழுதிய கால இயந்திரம் (The Time Machine) என்ற அறிவியல் புனைவு நாவல் மூலம், கால இயந்திரம் என்ற வார்த்தையும், காலப் பயணமும் உலகம் முழுவதும் பிரபலம் அடைய தொடங்கியது.

இந்திய புராணமான மகாபாரதத்தில் கூறப்படும் கதையை வைத்து காலப்பயணத்தை இன்னும் எளிதாக விளக்கலாம். ரைவதா (Raivata Kakudmi) அரசன் கதையில் அவர் படைப்புக்கடவுளான பிரம்மாவைக் காண்பதற்கு உலகைவிட்டு சொர்க்கத்திற்கு பயணிக்கிறார்.
பின்னர் பூமிக்கு திரும்ப வந்தவுடன் பல யுகங்கள் கடந்துவிட்டதைக் கண்டு அவர் கடும் அதிர்ச்சியுறுவதாக கூறப்பட்டுள்ளது.

எவ்வாறு காலப்பயணம் செய்யலாம்?

இயற்பியல் கோட்பாடுகள் மூலம் காலப்பயணம் சாத்தியம் என ஐன்ஸ்டீன் முதல் ஸ்டீபன் ஹாக்கிங் வரை பல அறிவியல் அறிஞர்களால் கூறப்பட்டிருந்தாலும், செயல்முறையில் இதனை இன்னும் சாத்தியப்படுத்தியதாக எந்த பதிவும் இல்லை.
கால வெளியில் பிராயணம் செய்ய வேண்டுமென்றால்:
ஒளி வேகத்துக்கு இணையான வேகத்தில் பிராயணிக்க வேண்டும். அப்படி பிராயணம் செய்ய பயன்படும் அந்த பாதைகளை Worm Holes என விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். மனிதனால் போக முடியாதா அளவில் காணப்படும் அந்த #துளைகள், இந்த பேரண்டத்தில் பல கோடிக் கணக்கிலிருக்கின்றன.

விஞ்ஞானிகள் அந்த துளைகளில் ஒன்றை பெரிதாக்கி அதனுள் மனிதனை ஒளி வேகத்துக்கு இணையான வேகத்தில் செலுத்தலாம் என்று முயற்சிக்கின்றனர்.

ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவத்தில் கூறப்பட்டுள்ளதை போல, ஒளியின் வேகத்தில் பயணித்தால் காலப்பயணம் சாத்தியம் என்றும், அவ்வாறு பயணம் செய்தால், பயணிப்பவர்களுக்கு வயது மிக மிக மெதுவாகவே மாற்றமடையும் என்றும் கூறுகின்றனர்.
வேகம் ஒளியின் வேகத்தை அடைந்தால் நேரம் நீளும், இதனால் தான் விண்வெளி செல்லும் நபர்களுக்கு வயதாகுவது இல்லை என்று கூறப்படுகிறது. ஏனெனில் விண்வெளியில் காலம் கிடையாது.

இவ்வாறு பல ஆச்சர்யங்களையும் ,மர்மங்களையும் கொண்டு சுவாரஸ்யமாக விளங்கும் இந்த காலப்பயணம் சாத்தியமா அல்லது சாத்தியம் இல்லையா என்று திட்டவட்டமாக அறுதியிட்டு கூற அறிவியலாளர்களாலேயே இன்னும் முடியவில்லை.

காலப் பயணம் பற்றிய செய்திகள்:
ஆனாலும், பல்லாண்டுகளுக்கு முன்பிருந்து காலப்பயணம் பற்றி எண்ணற்ற செய்திகளும் புகைப்படங்களும் வெளிவந்துள்ளன.

ஏற்கனவே எண்ணற்றோர் காலப்பயணம் செய்து இறந்த காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் பயணித்திருப்பார்களோ என்ற சந்தேகத்தினை வலுப்படுத்துகிறது.
பல்லாண்டுகளாக கோட்பாடுகளில் மட்டுமே சாத்தியமாகியுள்ள காலப்பயணம், எதிர்காலத்தில் நிஜத்திலும் சாத்தியம் அடைவதற்கான வாய்ப்புகள் இருக்கலாம். அவ்வாறு சாத்தியமாகி மனிதர்கள் தங்கள் கடந்த காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் பயணித்தால் என்ன நடக்கும் என்பதை கற்பனையில் கூட விவரிக்க முடியாது!

சூஃபியிஸத்தின் தலைவர் ஹளரத் ஜுனைதுல் பாக்தாதி ரஹ் அவர்களின் சீடர் ஒருவர் குளிப்பதற்காக தஜ்லா நதிக்கு வருகிறார்
அந் நேரம் சுபுஹ் தொழுகைக்கு சற்று முந்தைய நேரம்
ஆடைகளை களைந்து ஆற்றின் ஓரத்தில் வைத்து விட்டு நதியில் இறங்கி ஓரே ஒரு முங்குதான் போட்டார் . . . . . . அவ்வளவுதான் அவர் கண்டம் விட்டு கண்டமோ அல்லது இந்த பிரபஞ்சத்தின் வேறு ஏதோ ஒரு கிரகத்தின் நதியிலோ குளித்தவாறு வெளியே வருகிறார் அங்கு ரொம்ப காலம் அங்குள்ள மக்களோடு மக்களாக வாழ்ந்து வருகிறார்

. . . . . . ஒரு நாள் அங்குள்ள நதியில் யதார்த்தமாக குளிக்கிறார் அந்த நதியில் ஒரே ஒரு முங்கு போட்டார் . . . . . . அவ்வளவுதான் மீண்டும் தஜ்லா நதியில் ஆற்றில் நின்று கொண்டு இருக்கிறார் . . . ஆச்சரியம் அதே சுபுஹ் நேரம் இன்னும் சுபுஹ் தொழுகை நடைபெறவில்லை களைந்து வைத்த துணி கூட அங்கு அதே இடத்தில் அப்படியே இருக்கிறது . . . . துணி உடுத்துக் கொண்டு சுபுஹ் தொழுகையில் கலந்து கொள்கிறார்

இதைப்பற்றி தனது ஷைகான ஜுனைதுல் பக்காதி ரஹ் அவர்களிடம் கூறிய போது சில சமயம் ரொம்ப அதிகமாக வணக்க வழிபாடுகளில் ஈடுபட நினைக்கும் சாதாரண சாதகருக்கு பல காலம் வணங்கும் பாக்கியத்தை இப்படியும் இறைவன் வழங்குகின்றான்

இது சாத்தியமா ? என்றால் விஞ்ஞானத்தின் பதில் . .. .சாத்தியமே

டைம் டிராவல் (Time Travel) 7

சித்தர்களின் டைம் டிராவல் 19-07-2020

விண்வெளிப் பயணம் போன்று காலப் பயணம் என்ற ஒன்றையும் கூறுகின்றார்கள். காலப்பயணம் என்பது கொள்கை வடிவில் உள்ளது. இது சாத்தியந்தான் என்று ஸ்டீபன் ஹாகின்ஸ் (Stephen Hopkins) கூறுகின்றார்.

காலப்பயணம் செய்ய அண்டவெளி புழுத்துளை (Worm hole) தேவைப்படுகின்றது. இத்துளை நம்மை சுற்றியே உள்ளதாகவும் ஸ்டீபன் கூறுகின்றார். இதனுள் செல்ல அணு வடிவம் எடுத்து மிகுந்த வேகத்தில் செல்ல வேண்டுமாம். பணயம் முடிந்தவுடன் மீண்டும் சுய உருவம் பெற வேண்டுமாம்.

கோள்களின் நகர்வை வைத்து காலம் கணக்கிடப்படுகின்றது. பொருள்களின் மாற்றங்களை காலத்தின் நீளம் கொண்டு கணக்கிடுகின்றோம். பொருள்களில் மாற்றம் செய்யாமல் காலத்தை மட்டும் முன் நோக்கி அல்லது பின்னோக்கி நகர்த்தி பார்ப்பது காலப் பயணமாகும்.

உதாரணமாக 2500-ஆம் ஆண்டு இவ்வுலகம் எப்படி இருக்கும் என்பதனை நமது உடலில் மாற்றம் இல்லாமல் 2500-ஆம் ஆண்டிற்கு சென்று பார்ப்பது. அல்லது கிருஸ்த்து பிறப்பிற்கு முன்னுள்ள காலத்திற்கு சென்று பார்ப்பது.

நமது தமிழ்ச் சித்தர்கள் இப்படிப்பட்ட காலப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். கோரக்க சித்தர் தாம் செய்த காலப்பயணத்தின் அனுபவங்களை பாடல்களாக சந்திர ரேகை என்கின்ற நூலில் பாடல் 194 முதல் 199 வரை பதிவு செய்துள்ளார். கலியுகத்தின் பிறப்பு முதல் முடிவு வரை நடக்கும் நிகழ்ச்சிகளை இப்பாடல்களில் உரைத்துள்ளார்.

தமது காலப் பயணத்தை கோரக்கர் பதிவு செய்தது போல் விண்வெளிப் பயணத்தை திருமூலர் பதிவு செய்திருக்கின்றார். இதற்கு “கெவுணம் பாய்தல்” என்ற சித்தர் மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. வேற்று கிரக வாசிகள் இருக்கின்றார்களா? இல்லையா? என்று நாம் இன்று விவாதித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் திருமூலர் விண்வெளியில் உள்ள மனிதர்களிடம் பேசியுள்ளார். அவரது பயண விவரங்களை தமது பாடல்களிலும் பதிவு செய்துள்ளார். மேலும் இப்பிரபஞ்சம் 1008 அண்டங்களை உடையது என்ற தகவலையும் கூறுகின்றார்.

விண்வெளி பயணத்திற்கு சிவயோகம் செய்து காய சித்தி அடைந்து உடலை ஒளி உடலாக மாற்ற வேண்டும். இதனால் கணக்கில்லாத வேகத்தில் செல்ல முடியும். மேலும் குளிகை ஒன்றையும் தயார் செய்தார். திரவ பாதரசத்தை அணு மாற்றம் செய்து திடப்பொருளாக மாற்ற வேண்டும். அதன்பின் உலோகங்கள் ரத்தினங்கள் (உப ரசங்கள் 120) பாசானங்கள் ஆகியவற்றின் அணுக்களை திடரூப பாதரசத்துக்குக் கொடுத்து (சாரணை) பாதரசத்தின் நிறையை தங்கத்தின் நிறைக்குச் சமமாக கொண்டு வரவேண்டும். இவ்விதம் ஒரு முறை சாரணை செய்தால் அந்த குளிகைக்குச் ‘சகம்’ என்று பெயர். 14 முறை

சாரணை செய்தால் 'கமலினி' என்று பெயர். 17 முறை சாரணை செய்தால் 'சொரூபம்' என்று பெயர். இந்த கமலின் மற்று சொரூப குளிகையினை விண்வெளி பயணத்திற்கு பயன்படுத்தினார்கள்.

(வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் (என்னிடம்) ஒரு பாத்திரத்தில் மதுவும் மற்றொரு பாத்திரத்தில் பாலும் கொண்டுவந்தார். (அதில் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுமாறு கூறினார்.) நான் பால் பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். அப்போது ஜிப்ரீல், "இயற்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்" என்று கூறினார்.

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது:
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (தமது சிறு வயதில்) சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்து நபியவர்களைப் பிடித்துப் படுக்கவைத்து,அவர்களின் நெஞ்சைத் திறந்து இருதயத்தை வெளியிலெடுத்தார்கள். ஓர் (சதைத்) துண்டை வெளியில் எடுத்து, "இதுதான் உம்மிடமிருந்த ஷைத்தானுக்குரிய பங்கு" என்று ஜிப்ரீல் கூறினார்.

பிறகு ஒரு தங்கத் தாம்பூலத்தில் இதயத்தை வைத்து ஸம்ஸம் நீரால் அதைக் கழுவினார். பின்னர் முன்பு இருந்த இடத்தில் இதயத்தைப் பொருத்தினார்.

(நபியவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த) அந்தச் சிறுவர்கள் நபியவர்களின் செவிலித் தாயிடம் ஓடிச் சென்று "முஹம்மத் கொல்லப்பட்டுவிட்டார்" என்று கூறினர்.

குடும்பத்தார் நபியவர்களை நோக்கி வந்தபோது (அச்சத்தால்) நபியவர்கள் நிறம் மாறிக் காணப்பட்டார்கள்.
அறிவிப்பாளர் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நபி (ஸல்) அவர்களின் நெஞ்சில் ஊசியால் தைத்த அந்த அடையாளத்தை நான் பார்த்திருக்கிறேன்.
ஸஹீஹ் முஸ்லிம் : 261.

நபிஸல் அவர்களுக்கு மெத்தம் நான்கு முறை நெஞ்சு இருதய அறுவை சிகிச்சை செய்து திரும்பவும் மூடப்பட்டுள்ளது

1 அவர்கள் 3 அல்லது 4 வயதில் ஹலீமா ரலி அவர்களிடம் வளர்ந்து வந்த போது

2 பத்தாவது வயதில் ஒரு முறை நடந்ததாக . . முஸ்னத்

3 நபித்துவம் வழங்கப்பட்ட போது ஹிரா குகையில் வைத்து நடந்தது

4 மிஹ்ராஜ் விண்வெளி பயணத்தின் போது நடந்தது முஸ்லிம் 260 பக்கம் 198 அடிக்குறிப்புகள்

இன்றைக்கு சூரிய மண்டலத்தையும் தாண்டி பயோனியர் 10 என்ற விண்கலம் ஆள் இல்லாமல் விண்வெளிக்கு அனுப்பட்டு சிக்னல் மூலம் செய்திகள் வந்த வண்ணம் உள்ளது

மனிதர்களை அனுப்புவதற்கு ஒரு நிமிடத்திற்கு 72 தடவை துடிக்கும் இதயத்தை மாற்றியமைக்க வேண்டும் எனபதாக விஞ்ஞானம் கண்டுள்ளது

. . . ஒரு நிமிடம் என்பது 365 நாட்களில் சூரியனை சுற்றி வரும் நம் பூமியிக்கு மட்டுமே செல்லுபடியாகும் . பூமியை தாண்டிய விண்வெளியில் ஒரு நிமிடம் என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

டைம் டிராவல் (Time Travel) 9

காலப் பயணம் சாத்தியம்தான் 20-07-2020

காலம் ஒரு அம்பு போல முன்னே பாய்ந்து செல்கிறது என்றும், பூமி, செவ்வாய், சூரியன் என்று பிரபஞ்சத்தில் எங்கும் காலம் ஒரே மாதிரி பயணித்துக்கொண்டிருக்கிறது என்றும் நியூட்டன் சொல்கிறார்.

நியூட்டன் காலத்துக்குப் பிறகு, 18-ம் நூற்றாண்டில் இத்தாலிய அறிவியலாளர் லக்ராஞ், இயக்கவியலைப் பற்றிச் சொல்லும்போது “இயக்கம் என்பது நான்கு பரிமாணங்களில் நடைபெறுகிறது. மூன்று பரிமாணங்கள் இடத்தைச் சார்ந்தவை, ஒரு பரிமாணம் காலம்” என்று காலத்தை நான்காவது பரிமாணமாக முன்வைக்கிறார். அதற்குப் பிறகு 'நான்காவது பரிமாணமாகக் காலம்' என்ற கோட்பாடு சூடுபிடிக்கிறது.

நதி போல பாயும் காலம்

காலத்தைப் பற்றிய கோட்பாடுகள் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கிப் போடுகிறார் ஐன்ஸ்டைன். அண்டவெளி, காலம் இரண்டும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்த 'கால-வெளி'என்ற கோட்பாட்டை முன்வைக்கிறார்.

காலத்தை ஐன்ஸ்டைன் ஒரு நதி போல உருவகிக்கிறார். நதி எப்படி ஒரு இடத்தில் வேகமாகவும் வேறொரு இடத்தில் மெதுவாகவும் போகிறதோ அதுபோலத்தான் காலமும். செவ்வாய் கிரகத்தின் ஒரு நொடியும் பூமியின் ஒரு நொடியும் ஒன்று கிடையாது. அதேபோல் பிரபஞ்சத்தின் ஏதோ ஒரு இடத்தில் இருக்கும் விண்மீனின் ஒரு மணி நேரமும் பூமியின் ஒரு மணி நேரமும் ஒன்று இல்லை என்பதை 1915-ல் வெளியான ஐன்ஸ்டைனின் பொதுச் சார்பியல் கோட்பாடு சொல்கிறது.

இதில்தான் காலப் பயணத்துக்கான சாத்தியத்தை ஐன்ஸ்டைன் தன்னையே அறியாமல் ஒளித்துவைத்திருக்கிறார். இத்தனைக்கும் காலப் பயணம் சாத்தியமில்லை என்றே நம்பியவர் ஐன்ஸ்டைன்!

கருந்துளையைச் சுற்றி...

பொதுச் சார்பியல் கோட்பாட்டின் படி பெரும் நிறையானது காலத்தையும் அண்டவெளியையும் வளைக்கிறது. சூரியன் போன்ற பெரும் நிறைகொண்ட விண்பொருள் தன்னைச் சூழந்திருக்கும் கால-வெளியை வளைக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு ஒரு விண்பொருள் அதிக நிறை கொண்டிருக்குமோ அந்த அளவுக்கு அது கால-வெளியை வளைக்கும். அந்த விண்பொருளுக்கு அருகில் காலம் மெதுவாகிறது. இதுவும் ஒரு வகையில் காலப் பயணம்தான்.

காலத்தை மிகவும் மெதுவாக ஆக்குவதற்கு சூரியனை விட ஆயிரக்கணக்கான மடங்கு நிறை தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட நிறை கொண்ட பொருள் ஒன்று நமது விண்மீன் மண்டலமான பால்வீதியிலேயே இருக்கிறது. ஆம், பால்வீதியின் மையத்தில் சூரியனை விட 40 லட்சம் மடங்கு நிறை கொண்ட கருந்துளை ஒன்று இருப்பதாகக் கருதப்படுகிறது.

பால்வீதியின் மையத்திலுள்ள கருந்துளையை ஒரு விண்கலத்தைச் சுற்றிவரச் செய்ய வேண்டும். பூமியில் 16 நிமிடங்கள் கழிந்திருந்தால் அந்த விண்கலத்தில் உள்ள கடிகாரத்தில் 8 நிமிடம் கழிந்திருக்கும். அந்த விண்கலத்தில் உங்களின் இரட்டைச் சகோதரர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். விண்கலத்தில் அவர் புறப்பட்டபோது உங்கள் இருவருக்கும் 25 வயது என்றால் பூமியில் 10 ஆண்டுகள் கழிந்த பிறகு உங்களுக்கு 35 வயது ஆகியிருக்கும். உங்கள் சகோதரருக்கோ 30 வயதுதான் ஆகியிருக்கும். தனது 30-வயதில் 35 வயதுக்காரரான உங்களை அவர் சந்தித்ததால் உங்கள் சகோதரர் மேற்கொண்டது காலப் பயணமே.

ஆனால், இந்த கருந்துளையை அடைவதில் இரண்டு சிக்கல்கள் உள்ளன. ஒன்று, அந்தக் கருந்துளை இருப்பது பூமியிலிருந்து 26,000 ஒளியாண்டுகள் தொலைவில், அதாவது 260,00,00,000,00,00,000 கிலோ மீட்டர் தொலைவில். ஒளியின் வேகத்தில் பயணம் செய்வது சாத்தியமில்லை என்றாலும் அப்படிப் பயணம் செய்வதாக வைத்துக்கொண்டாலும் அந்தக் கருந்துளைக்கு அருகே செல்வதற்கு 26 ஆயிரம் ஆண்டுகள் ஆகும்.

ஆனால், மனிதர்கள் செல்லும் விண்கலத்திலேயே அதிக வேகம் கொண்ட அப்போலோ-10 கலமே கிட்டத்தட்ட மணிக்கு 40 ஆயிரம் கிலோ மீட்டர்தான் செல்லும். இன்னொரு சிக்கல், கருந்துளைக்கு அருகில் சென்றால் அது ஒளியைக்கூடத் தப்ப விடாது. ஆக, காலப் பயணம் மேற்கொள்வதற்காகக் கருந்துளையைச் சுற்றிவருவதென்பது கோட்பாட்டளவில் சாத்தியமே ஒழிய நடைமுறையில் சாத்தியம் இல்லை.

நபி (ஸல்) அவர்களின் மிஹ்ராஜ் என்னும் விண்வெளிப் பயணம் கருந்துளை வழியாக நடந்திருக்கக் கூடும் என்பதாக ஹதீஸ் முஸ்லிமில் கருந்துளையை சித்ரத்துல் முன்தஹா என்று குறிப்பிடலாம் .

பிரிந்த உயிர் செல்லும் பாதை
அநேகமாக கருந்துளை வழியாக செல்வதாக கீழ்க்கண்ட கருத்துக்கள் அமைகிறது

சித்ரத்துல் முன்தஹா என்பது வான் எல்லையில் உள்ள ஓர் இடத்தின் பெயர் ஆகும் சித்திரத் என்பது இலந்தை மரம் முன்தஹா என்றால் இறுதியானது என்று பொருள் இறுதி எல்லையில் உள்ள இலந்தை மரம் என்று பொருள் விரியும்

வான் எல்லையில் உள்ள பிரம்மாண்டமான இந்த மரத்தின் இலைகள் ஒவ்வொன்றும் யானையின் காதுகளைப் போன்றும் பழங்கள் ஒவ்வொன்றும் பெரிய பூஜாவை போன்றும் இருக்கும். ஆறாவது வானத்தின் இதன் வேர்கள் உள்ளது ஏழாவது வானத்திற்கு மேல் வரை இம்மரம் நெடிது உயர்ந்து உள்ளது

பொன்வண்டுகள் இந்த மரத்தை மொய்த்துக் கொண்டிருக்கும் .அந்த மரம் பல வண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது .அதன் அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை

பூமியில் உள்ளோர் புரியும் செயல்கள் பற்றி குறிப்பு இங்கு தான் செல்கிறது பூமியில் கைப்பற்றப்படும் உயிர்களும் இங்கேதான் வந்து சேர்கின்றன.

இதற்கு மேல் இருந்து வரும் வேளை இறைகட்டளைகள் இங்கு தான் முதலில் இறங்குகின்றன வானவர்களின் அறிவு இந்த இடத்தோடு முற்றுப்பெறுவதாலே இதற்கு ' முன்தஹா ' என்று பெயர் வந்தது என்பர் .

அதிலிருந்து நான்கு ஆறுகள் ஓடுகின்றன இரண்டு உள்நோக்கி பாயும் சல்சபீல் மற்றும் அல் கவ்ஸர் ஆகிய சொர்க்கத்தின் ஆறுகளாகும். மற்ற இரண்டும் வெளியே பாயும் நைல் மற்றும் யூப்ரடீஸ் நதிளாகும். அல்லாஹ்வே மிக அறிந்தவன்

ஞான ஜோதி சம்மங்கி எழுதிய . " "மரணம் ,மறுமை , முக்தி "எனும் ஆய்வு நூலில் ,பிரபஞ்சத்திலுள்ள கருந்துளைச் சுற்றி நான்கு வளையங்கள் உள்ளன
ஊர்வன பறப்பன இவற்றோடு தீய எண்ணங்களால் தீய காரியங்களையே செய்த மனித ஆத்மாக்கள் யாவும் முதல் வளையத்தை அடைகிறது

நல்லதும் கெட்டதும் கலந்து ஓரளவு மனிதத் தன்மையோடு வாழ்ந்த ஆன்மாக்கள் இரண்டாவது வளையத்தையும் அடைகிறது

நல்ல எண்ணங்களுக்கு மட்டுமே இடம் கொடுத்து நல்ல செயல்களால் மட்டுமே வாழ்ந்தார்களின் ஆன்மாக்கள் மரணத்திற்குப் பிறகு மூன்றாவது வளையத்தை அடைகிறது

வணக்க வழிபாடு தியானம் பிறருக்காகவே வாழ்ந்த புனித ஆன்மாக்கள் மரணத்திற்குப் பிறகு நான்காவது வளையத்தை அடைகிறது

யோக நெறிகளான தியானத்தில் முதிர்ந்து முக்தி அடைந்து சமாதி நிலையை அடைந்த பூரண யோகியரின் ஆன்மாக்கள் உடலை நீர்த்ததும் நேராக இந்த கருந்துளைக்குள்ளே நுழைந்து அதில் சங்கமாகி விடுகின்றன என்பதாக கருந்துளையின் அமைப்பையும் அதன் பயன்பாட்டையும் குறிப்பிட்டுள்ளார் .

பேரனைவிட இளைய தாத்தா

அடுத்த சாத்தியமும் ஐன்ஸ்டைனின் சிறப்புச் சார்பியல் கோட்பாட்டில்தான் இருக்கிறது. 'ஒளியை விட வேகமாகப் பயணித்தால் கடந்த காலத்துக்கு நாம் தந்தி அனுப்ப முடியும்' என்று ஐன்ஸ்டைன் நகைச்சுவையாக ஒருமுறை குறிப்பிட்டார். என்றாலும், பிரபஞ்சத்தின் உச்சபட்ச வேகம் ஒளியினுடையதே; அந்த வேகத்தை எதுவும் தாண்ட முடியாது என்பது அவருடைய கோட்பாடு.

ஒளியின் வேகத்துக்குச் சற்று அருகே ஒரு விண்வெளி வீரர் விண்கலத்தில் பயணித்துவிட்டுச் சில வருடங்கள் கழித்து பூமிக்கு வருவாரென்றால் பூமியில் இருக்கும் அவரது பேரனைவிட இளமையாக இருப்பார்.

ஒளியின் வேகத்துக்கு அருகே பயணிக்கும் எதுவும் மிக மெதுவாகவே மூப்படையும் என்பது சுவிட்சர்லாந்தில் உள்ள செர்ன் (CERN) ஆய்வுக் கூடத்தில், பை-மேசான்கள் என்ற அணுத்துகள்களைக் கொண்டு நிரூபிக்கப் பட்டிருக்கிறது. ஒரு நொடியை 2,500 கோடி மடங்காகப் பகுத்தால் எவ்வளவு நேரம் கிடைக்குமோ அவ்வளவு நேரம்தான் ஆயுள் அந்தத் துகள்களுக்கு. செர்னில் தரைக்கு அடியில் 16 மைல் தொலைவுகொண்டதாய் அமைக்கப்பட்டிருக்கும் சுற்றுப்பாதையில் அந்தத் துகள்களை ஒளியின் வேகத்தில் 99.99% வேகத்தில் அனுப்பிப் பார்த்தபோது அந்தத் துகள்கள் தங்கள் வழக்கமான ஆயுளைவிட 30 மடங்கு அதிக நேரம் வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆகவேதான் ஒளியின் வேகத்துக்கு அருகில் பயணிப்பதும்கூட காலப் பயணமாகக் கருதப்படுகிறது. இதுபோன்ற நிரூபணங்களால்தான் காலப் பயணம் சாத்தியம் என்ற மனமாற்றத்துக்கு அறிவியலாளர்கள் வந்திருக்கிறார்கள்.

காலப் பயணம் மேற்கொள்வதற்கு மேலும் பல வழிமுறைகள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் 'கால-வெளித்துளை' (wormhole). பெயருக்கேற்ப காலத்திலும் வெளியிலும் இருப்பதாக நம்பப்படும் துளை இது. பிரபஞ்சம் முழுவதும் இந்தத் துளைகள் இருப்பதாகவும், இவை மிகவும் நுண்ணியவை என்றும் கருதப்படுகிறது. இந்தத் துளையைப் பெரிதாக்கி, அதன் ஒரு முனையில் நுழைய முடிந்தால் பிரபஞ்சத்தில் நாம் சாதாரணமாக எட்ட முடியாத இன்னொரு மூலைக்கு மட்டுமல்ல, காலத்திலும் வேறொரு புள்ளிக்கு இந்தத் துளை நம்மைக் கொண்டுபோய் விடும் என்று நம்பப்படுகிறது.

கடந்த காலத்துக்குப் போக முடியாது

'இண்டெர்ஸ்டெல்லார்' படம் நினைவிருக்கிறதா? 'கால-வெளித் துளை' வழியே பயணிக்கும் கதாநாயகன் தன் மகளைச் சந்திக்கத் திரும்பி வருகிறார். கதாநாயகன் இளைஞராகவும் அவருடைய மகள் தொண்டு கிழவியாகவும் இருக்கிறார். காலப் பயணம் மேற்கொண்டதன் விளைவுதான் இது.

எதிர்காலத்தை நோக்கிய காலப் பயணம்தான் சாத்தியம்; கடந்த காலத்தை நோக்கிய காலப் பயணம் சாத்தியமே இல்லை என்கிறார் ஸ்டீவன் ஹாக்கிங். ஒரு வகையில் காலப் பயணத்துக்கான கனவுகள் காலத்தை மட்டுமல்ல, காலத்தோடு பின்னிப் பிணைந்துள்ள மரணத்தையும் வெல்வதற்கான கனவுகளே. கூடவே, தூரத்தை வெற்றிக்கொள்வதற்குமானது காலப் பயணம் என்ற கனவு.

இதைப் பற்றி ஸ்டீவன் ஹாக்கிங் இப்படிச் சொல்கிறார்: 'காலம் மெதுவாவதால் இன்னுமொரு பலன் உண்டு. கோட்பாட்டளவில் ஒருவர் தனது ஆயுட்காலத்துக்குள் மிக மிக நீண்ட தொலைவை எட்ட முடியும் என்பதுதான் இதன் அர்த்தம். நமது பால்வீதியின் விளிம்பை 80 ஆண்டுகளுக்குள் நாம் எட்டிப் பிடிக்கலாம். இந்தப் பிரபஞ்சம் எவ்வளவு விசித்திரமானது என்பதை அது உணர்த்தக்கூடும் என்பதுதான் எல்லாவற்றையும் விட மிகவும் பரவசமூட்டக் கூடியது.'

நன்றி: ஸ்டீவன் ஹாக்கிங்,
மிஷியோ காக்கு

டைம் டிராவல் (Time Travel) 10

டைம் டிராவல் செய்ய ரெடியா? எகிப்தில் ஸ்டார்கேட் கண்டிபிடிப்பு! 22-07-2020

எகிப்து நாட்டின் அபேடாஸ் எனும் இடத்தில் உள்ள சேட்டி 1 கோவில் எப்போது மர்மங்களுக்கு பெயர் பெற்றது. இங்கு பழங்கால ஸ்டார்கேட் இருப்பதாகவும், அதன் மூலம் வேறு உலகத்திற்கான நுழைவுவாயில் இருப்பதாகவும் வதந்தி நிலவுகிறது. இந்த மர்மங்களுக்கு வலுசேர்க்கும் விதமாக, இக்கோவிலில் உள்ள பல சுவர்களில் விசித்திரமான சிற்பங்கள் உள்ளன. ஆனால் அவற்றை எகிப்துநாட்டு ஆய்வாளர்களால் விளக்க இயலவில்லை.

இது போன்ற சிற்பங்கள் வேறெந்த கோவில்களிலும் காணக்கிடைப்பதில்லை. இக்கோவிலில் பல நூற்றாண்டுகளாக ஸ்டார்கேட் எனும் டைம்டிராவல் செய்வதற்கான நுழைவுவாயில் மறைந்துள்ளது என்ற தகவலை இந்த புதிய ஆதாரங்களை நிரூபிப்பதால், அவற்றை ஆராய்ந்து உண்மையான அர்த்தங்களை கண்டறிய வேண்டும்.

அபேடாஸ் கோவில்

அபேடாஸ் கோவில் பழமையான நிலத்தில் உள்ள இடுகாடு எனவும், இது எகிப்தின் மையப்பகுதியில் இருப்பதாகவும் நம்பப்படுகிறது. இன்றைக்கு காணப்படும் அந்த கோவிலானது, மிகவும் பழமையான புனித கோவில் மீது சேட்டி1 ஆல் கட்டப்பட்டது. இதில் பல்வேறு ஆழமான இரகசியங்கள் ஒளிந்துள்ளன. பழங்கால நம்பிக்கையின் படி இந்த அபேடாஸ் கோவில் அடுத்த உலகிற்கு மிகவும் நெருக்கமான புள்ளியாக இருப்பதாக நம்பப்படுகிறது.

மெல்கிசெதேக்

இந்த கோவில் மெல்கிசெதேக் மதகுருக்களின் இல்லமாக திகழ்கிறது. இவர்கள் உண்மையான தொலைநோக்கு பார்வை கொண்டவர்கள் மற்றும் மற்றவர்களுக்கு சேவைபுரிய அர்பணிக்கப்பட்டவர்கள். இவர்கள் தான் அபேடாஸ் கோவிலில் உள்ள ஸ்டார்கேட்டின் பாதுகாவலர்களாக திகழ்கின்றனர்.

ஸ்டார்கேட்டை திறந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன

சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற இரகசிய விண்வெளி திட்டத்தில், அபேடாஸ் கோவிலில் உள்ள இயற்கையான ஸ்டார்கேட் இராணுவ ஆய்வுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. அவர்கள் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கட்டாயமாக ஸ்டார்கேட்டை திறந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டைன்மென்ட் ரிங் அந்த இராணுவ ஆய்வில் அந்த கேட்டிற்கு அருகில் 4 பீல்ட் போஸ்ட்களும், ப்ரேஜெக்சன் கருவியும், ஒரு பேரலும், சில கண்டைன்மென்ட் ரிங்-களும் பயன்படுத்தப்பட்டதாகவும், எலெக்ட்ரோமேக்னெடிக் ஆற்றலை பயன்படுத்தி, இயற்கையான ஸ்டார்கேட்டை திறந்து பயன்படுத்தியாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டைம்மிஷன்

அந்த டைம்மிஷன் இயந்திரத்தை அப்படியே பிரதிபலிப்பது போல, கோவில் சுவர்கள் முழுவதும் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தது. அதில் இருந்த இறக்கைகளுடன் கூடிய ஒரு வாகனம், 'தி டைம் மிஷன்' படத்தில் வரும் டைம் டிராவல் வாகனத்தை நினைவுபடுத்துகிறது.

சொர்கத்திற்கான வழி

இந்த சுவர் சிற்பங்களை படம்படித்து ,எகிப்திய ஆய்வாளர்களிடம் காட்டிய போது, இது 'இரண்டாம் உலகிற்கான நுழைவுவாயில்' என பதிலளித்தனர். ஆனால் இந்த சுவரில் ஒரு பகுதி மட்டும் முழுவதும் பெயர்த்து எடுக்கப்பட்டது. இதை பார்க்கும் போது, யாரும் இந்த இரகசயத்தை முழுமையாக அறிய கூடாது என்ற நோக்கத்துடன் செய்ததாகவே தோன்றுகிறது. இந்த சுவர் சிற்பங்கள் பற்றிய தகவல்களை உண்மையென்று நிரூபிக்க எந்த வழியும் இல்லாத நிலையில், பல்வேறு அதிக மேம்படுத்தப்பட்ட உள்ளுணர்வாளர்களிடம் இந்த அபேடாஸ் சிற்பங்கள் பற்றி கேட்கப்பட்டது. அவர்களின் கருத்து 'சொர்கத்திற்கான வழி', 'கற்பனைக்கு அப்பாற்பட்டது' என பலதரப்பட்ட நேர்மறை மற்றும் எதிர்மறையாக இருந்தது.

ஆனால் நபி (ஸல்) விண்வெளிப் பயணத்தின் ஸ்டார் கேட் ஜெருஸ்லேமில் உள்ள மஸ்ஜித்துல் அக்ஸா வழியாக நடைபெற்றதாக குர்ஆன் குறிப்பிடுகிறது .

"அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். அவன் (முஹம்மது நபி (ஸல்) என்னும்) தன் அடியாரை(க் கஅபா கிய) சிறப்புற்ற பள்ளியிலிருந்து (வெகு தூரத்தில் இருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஒரே இரவில் அழைத்துச் சென்றான் (அவ்வாறு அழைத்துச் சென்ற) நாம் அவரை அதனைச் சூழவுள்ளவை சிறப்புற்று ஓங்க அபிவிருத்தி அடைய செய்திருக்கிறோம் . நம்முடைய அத்தாட்சிகளை அவருக்குக் காண்பிப்பதற்காகவே (அங்கு அழைத்துச் சென்றோம்) நிச்சயமாக உங்களது இறைவன் செவியுறுபவனாகவும், உற்று நோக்கியவனாகவும் இருக்கின்றான்"
குர்ஆன் (17 : 01)

நபி (ஸல்) அவர்களை மக்கா ஹரம் சரீபிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு அழைத்துச் சென்றான் .இந்த பயணத்தை " அல் இஸ்ரா" என்றும் அக்ஸாவிலிருந்து விண்வெளிக்கு சென்றதை "மிஹ்ராஜ் " என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஒரு சமயம் விண்வெளிக்கு செல்லும் பாதை மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து கூட இருக்கலாம் .

அல் இஸ்ரா என்கிற இப் பயணம் பூமியிலிருந்து செங்குத்தாக வானவெளிக்குப் பயணம் செய்வது அல்ல , தரைக்கு இணையாக கிடைமட்டப் பயணம் .பூமியிலிருந்து சுமார் 10 அல்லது 12 அடி உயரத்தில் பூமியின் தரையைப் பார்த்தவாறே ஒரு பயணம் . இந்த அல்- இஸ்ரா பயணம் முன்னோக்கிய பயணம் அல்ல., பின்னோக்கிய பயணம் .அதாவது இன்று புறப்பட்டு நேற்று சேர்கின்ற பயணம் . கடந்தகாலத்திற்குள் பிரவேசிக்கும் பயணம் .

அதனால்தான் நபி(ஸல்) அவர்கள் "அல் அஸ்ரக் பள்ளத்தாக்கை கடந்து சென்ற போது, நபி மூஸா (அலை) அவர்கள், உரத்த குரலில் ' தல்பியா' சொல்லிக் கொண்டு இந்த மலைக் குன்றிலிருந்து இறங்கி வந்து கொண்டிருப்பதை "இப்போதும் " நான் காண்பதைப் போன்று உள்ளது . (சுமார் 1000 வருடத்திற்கு முன்னுள்ள கடந்தகாலத்தை இப்போதுள்ள நிகழ்காலத்தின் நிகழ்ச்சியாக நபிகளார் கண்டார்கள்)

நபி மூஸா (அலை) அவர்கள் யமனியர்களான "ஷனூஆ" குலத்தைச் சேர்ந்த மனிதரைப் போன்று மாநிறமுடையவர்கள். உயரமானவர்கள் . சுருள் முடியுடையவர்கள்.

பிறகு ஹர்ஷா மலைக்குன்றின் அருகே நபியூனுஸ் (அலை) அவர்களைக் கண்டேன் .அவர்கள், கம்பளி நீளங்கி அணிந்தவர்களாகக் கட்டுடல் கொண்ட சிவப்பு ஒட்டகம் ஒன்றின் மீது ' தல்பியா' சொல்லிக் கொண்டிருப்பதை நான் இப்போதும் காண்பதைப் போன்று உள்ளது . அவர்களது ஒட்டகத்தின் கடிவாளம், ஈச்ச மர நாரிளானது " என்று கூறினார்கள்

இப்பயணத்தில் மர்யமின் மைந்தர் நபி ஈஸா (அலை) அவர்களையும் கண்டேன் அவர்கள் நடுத்தர உயரமும், சிவப்பும் வெண்மையும் கலந்த மிதமான சரும அமைப்புக் கொண்டவர்களாகவும், படிந்த தொங்கலான தலைமுடி உடையவர்களாகவும் இருந்தார்கள்


இவையெல்லாம் அல்லாஹ் எனக்குக் காண்பித்த அவனுடைய சான்றுகளில் உள்ளவை .

" நீங்கள் அவரைச் சந்தித்ததில் சந்தேகம் ஏதும் கொள்ள வேண்டாம் "
குர்ஆன் (32 : 23)

ஆதாரம் : முஸ்லீம் தமிழ் பதிப்பு 267, 268 பக்கம் 205

டைம் டிராவல் (Time Travel) 11 24/07/2020

``இவையெல்லாம் நடந்தால் டைம் டிராவல் பண்ணலாம்!'' - அறிவியல் சொல்லும் வழி முறைகள்


டைம் டிராவல் என்ற விஷயத்தை தற்போதுவரை யாரும் நிரூபித்துக் காட்டவில்லை. ஆனால், என்றைக்காவது, யாரோ ஒருவர் இதைச் சாத்தியப்படுத்தலாம் என்ற நம்பிக்கை அறிவியலாளர்களுக்கு இருக்கிறது. அப்படி டைம் டிராவல் செய்வதற்கு அறிவியல் சொல்லும் வழிமுறைகளில் பிரபலமானவற்றில் சில இவை.

வார்ம்ஹோல்ஸ் (புழுத் துளை)

டைம் டிராவல் என்று வந்துவிட்டால் அங்கே முதலிடத்தில் இருப்பது இந்த வார்ம்ஹோல்ஸ் (புழுத் துளை) என்ற விஷயம்தான். விண்வெளியின் இரு வெவ்வேறு பகுதிகளை இணைக்கும் ஒரு குறுக்குவழியாக இது கருதப்படுகிறது. இதனால் காலப் பயணம் சாத்தியமாகும். அது மட்டுமன்றி இதன் வாயிலாக நமது பிரபஞ்சத்திலிருந்து மற்றொரு பிரபஞ்சத்துக்குக்கூடச் சென்று வரலாம் என்ற ஒரு கருத்தும் கூறப்பட்டு வருகிறது. ஆனால், இதுவரை வார்ம்ஹோல்ஸ் என்ற ஒன்று யாராலும் கண்டறியப்படவில்லை. மேலும் இதன் அளவும் சிறியதாக இருக்கக் கூடும் என்பதால் இதைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதான விஷயமில்லை. வார்ம்ஹோல்கள் பிரபஞ்சத்தில் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால், அவற்றின் அளவு அணுவைவிட சிறியது. ஒரு வேளை அவற்றை நம்மால் கண்டறிய முடிந்தால் அதை மனிதர்கள் பயணம் செய்யும் அளவுக்குப் பெரிதாக மாற்றம் செய்ய வேண்டும். அதுவும் அவ்வளவு எளிதான காரியமாக இருக்காது. அதைச் செய்வதற்கு நமக்கு மிகப்பெரிய அளவு ஆற்றல் தேவைப்படலாம். எவ்வளவு தேவைப்படும் என்று கேட்டால், நமது சூரியனிலிருந்து வெளிப்படும் அளவு என்று வைத்துக்கொள்ளுங்களேன் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

பிளாக் ஹோல்

விண்வெளியில் பல இடங்களில் இருக்கும் பிளாக் ஹோல் மூலமாக டைம் டிராவல் செய்ய முடியும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இந்தக் கருத்தைத் தெரிவித்தவர்களில் மறைந்த இயற்பியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் முக்கியமானவர். பிளாக் ஹோல் மூலமாக டைம் டிராவல் சாத்தியம் என்பதை அவர் பல இடங்களில் பதிவு செய்திருக்கிறார். இதற்கு இயற்கையான டைம் டிராவல் மெஷின் என்று பெயரிட்டிருக்கிறார் அவர். அதிக அளவு நிறை கொண்ட நட்சத்திரம் ஒன்று வாய்ப்பிருந்தால் அதன் இறுதிக் காலத்துக்குப் பின்னர் கருந்துளையாக உருமாறும். கற்பனைகூட செய்ய முடியாத அளவுக்கு அதன் ஈர்ப்பு விசை இருக்கும். அதனுள்ளே இருந்து ஒளிக்கூட தப்பிக்க முடியாது. எனவே, இதன் அருகே காலம்கூடக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். "விண்கலம் மூலமாக ஒரு பிளாக் ஹோலின் சுற்றுப்பாதையில் ஒரு முறை முழுமையாகச் சுற்றி வந்தால் அது பூமியில் இருக்கும் நேரத்தைவிட குறைவாகதான் அங்கே ஆகியிருக்கும். உதாரணத்திற்கு, விண்கலம் அப்படியே ஐந்து வருடங்கள் சுற்றி வந்துவிட்டு பூமிக்குத் திரும்பும்போது, இங்கே இருப்பவர்களின் வயது பிளாக் ஹோலைச் சுற்றி வந்தவர்களைவிட ஐந்து வயது அதிகமாகவே இருக்கும்" என்கிறார் ஸ்டீபன் ஹாக்கிங். பிளாக் ஹோலுக்குப் பக்கத்தில் செல்லும் எதுவுமே தப்பிக்காது எனும்போது விண்கலம் மட்டும் எப்படித் தப்பிக்கும் என்ற சந்தேகம் சிலருக்கு இருக்கலாம்.

அதற்கும் விஞ்ஞானிகளிடம் பதில் இருக்கிறது. மெழுகுவத்தி எரியும்போது அதன் சுடரின் வெப்பநிலை 1,400 °C என்ற அளவில் இருக்கும். அதில் நடுவே விரலை வேகமாகச் சென்று அதே வேகத்தில் பின்னால் இழுத்துவிட்டால் எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. அதே போலத்தான் குறிப்பிட்ட வேகத்தில் இயங்கினால் பிளாக் ஹோலின் ஈரப்பு விசையிலிருந்து தப்பித்துவிடலாம் என்கிறார்கள். இங்கே வேகம்தான் முக்கியம் அதை அடையும் திறனை நாம் பெற்றுவிட்டால் நமக்கு டைம் டிராவலும் சாத்தியமாகலாம். வார்ம் ஹோல்போல இல்லாமல் பிளாக் ஹோலைப் பொறுத்தவரையில் அது இருப்பது பல வருடங்களுக்கு முன்னரே உறுதி செய்யப்பட்டுவிட்டது. ஆனால் அதன் தெளிவில்லாத புகைப்படமே இப்போதுதான் நமக்குக் கிடைத்திருக்கிறது. டைம் டிராவல் செய்ய ஆசைப்பட்டால் ஒரு பிளாக் ஹோலை அருகே செல்லவே நமக்குப் பல மில்லியன் வருடங்கள் தேவைப்படும்.

ஒளியின் வேகத்தில் பயணம்

இந்தப் பிரபஞ்சத்தில் நமக்குத் தெரிந்தவரையில் அதி வேகமாகப் பயணம் செய்வது ஒளிதான். நொடிக்கு 186,000 மைல்கள் அல்லது 3 லட்சம் கி.மீ பயணம் செய்யும் ஒளியை முந்துவது எளிதான காரியமில்லை. ஒரு வேளை அது நடந்தால் டைம் டிராவலும் சாத்தியமாகலாம். பிரபஞ்சத்தின் அனைத்து இடங்களிலும் நேரம் ஒரேபோல இருப்பதில்லை. அது ஒவ்வோர் இடத்திலும் இருக்கும் காரணிகளைப் பொறுத்து வேறுபடுகிறது. அதேபோல ஒளியின் வேகத்தை விஞ்சி பயணிக்கும்போது காலம் மெதுவாக நகர்கிறது. இதுவும் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகவே இருக்கிறது. இதை ஒரு பரிசோதனையின்

மூலமாகவும் நிரூபித்திருக்கிறார்கள். இந்த ஆய்வில் துல்லியத்துக்குப் பெயர் பெற்ற அணுக் கடிகாரங்கள் இரண்டை ஆய்வாளர்கள் எடுத்துக்கொண்டார்கள். அதில் ஒன்று ஜெட் விமானத்திலும் மற்றொன்று தரைப்பகுதியிலும் இருந்தது. விமானம் பறக்கும் வேகத்தின் காரணமாக விமானத்தில் இருந்த கடிகாரத்தின் நேரம் சற்றுக் குறைவாகவே இருந்தது. இதேபோல் மனிதனும் ஒளியின் வேகத்தில் பயணிக்கும்போது காலம் குறைவாகவே நகரும். ஆனால், அவ்வளவு வேகத்தில் பயணிக்கும் திறன் இப்போது நம்மிடம் இல்லை.

டைம் டிராவல் செய்வதற்காகக் கூறப்பட்டுள்ள வழிமுறைகளைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கான ஆற்றல் இப்போது நம்மிடம் இல்லை. ஒரு வேளை மேம்பட்ட தொழில்நுட்பத்தால் பல யுகங்கள் கழித்து காலப் பயணம் சாத்தியமாகலாம். இல்லை நடக்காமல்கூட போகலாம். அறிவியல் புனைக்கதைகளில் சொல்வது போல போல ஒரு வேற்று கிரகவாசி அவரிடமிருக்கும் மேம்பட்ட தொழில்நுட்பத்தால் பிரபஞ்சத்தின் பாதியைக்கூட அழிக்கக் கூடும், அப்போது அதைச் சமாளிக்க மனிதர்கள் தயாராகவும் இருக்கலாம், அறிவியலில் எதுவும் சாத்தியம்தான்.

ஒளியின் வேகத்தில் டைம் டிராவல் செய்து பிளாக் ஹோல் வழியாக நம் ஆகாயகங்கை பால் வீதியை தாண்டி அடுத்த பால் வீதியை அடைவதற்குள் நமக்கு வயசாகி விட்டால் என்ன செய்வது ?

அதற்கும் விஞ்ஞானிகள் ஒரு கருத்தை சொல்கிறார்கள் . மரணித்து பின் உயிர்த்தெழுந்தால் சாத்தியம் என்கிறார்கள் . அதாவது செத்து செத்து விளையாடி பின் உயிர்த்தெழுதலின் நுட்பம் தெரிந்தால் எல்லாமே சாத்தியமாகி விடும். இது பற்றிக் கூட குர்ஆன் கூறுகிறது .

சரி, முதலில் இறந்தவர்களை எப்படி உயிர்ப்பிப்பது ? இது பற்றியும் குர்ஆன் குறிப்பிடுகிறது .

திருக்குர்ஆனின் 2-வது அத்தியாயம் அல்பகரா . கொலையாளியைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு பசு மாட்டை அறுத்து அதன் உறுப்பான நாக்கைக் கொண்டு கொலை செய்யப்பட்ட சடலத்தின் மீது அடிக்க சடலம் மீண்டும் உயிர்த்தெழுந்து தன்னை கொலை செய்தவனை காட்டிக் கொடுப்பதாக இறைவன் கூறும் இவ் வரலாற்றில் பயன்படுத்தும் அந்த மாட்டை இவ்வத்தியாயத்தின் தலைப்பாக "அல்பகரா " என்றழைக்கப்படுகிறது.

....ஆகவே, அவர்களை நோக்கி (நீங்கள் அதனை அறுத்து) "அதில் ஒரு பாகத்தைக்கொண்டு (கொலையுண்ட) அவனை அடியுங்கள்" என நாம் கூறினோம். (அவ்வாறு அடித்தவுடன் இறந்தவன் உயிர்பெற்றெழுந்து கொலையாளியை அறிவித்தான். அவன் உயிர்பெற்ற) இவ்வாறே இறந்தவர்களை அல்லாஹ் உயிர்ப்பிப்பான். மேலும், நீங்கள் அறிந்துகொள்வற்காக அவன் தன்னுடைய (ஆற்றலை அறிவிக்கக்கூடிய) அத்தாட்சிகளை உங்களுக்குக் காட்டுகின்றான். (அல்குர்ஆன் : 2:73)

இறந்து போய் சடலமான காலத்தில் எந்த சம்பவமும் சடலத்திற்கு இல்லை எனவே " சம்பவமே இல்லை என்றால் காலம் இல்லை" . மரணித்த மனிதனுக்கு வயது ஒரு நாள் கூட அதிகமாகுவதில்லை. இது ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் எனகிற விஞ்ஞானியின் தத்துவம் .

உதாரணத்திற்கு ஒரே சூலில் இரட்டை ஆண் குழந்தைகள் இருவரும் வாழ்ந்து மரணிக்கும் போது ஒருவருக்கு 50 வயது மற்றவருக்கு 150 வயது இது எவ்வாறு சாத்தியம் ? விஞ்ஞானம் இதை சாத்தியம் என்கிறது .

புஷ்து நஸ்ர் என்ற கொடுங்கோல் மன்னன் தவ்ராத் வேதம் கற்றவரைக் கண்டாலே கொன்று விடுவான்

பைத்துல் முகத்தஸ் செல்லும் வழியில் ஒரு நகரம் அங்குள்ளவர்கள் தவ்ராத் கற்றவர்கள் எனவே அவர்களை கொன்று அவர்கள் ஊரை சின்னாபின்னமாக்கினான். குர்ஆன் 2 : 259

அவ்வழியே உஜைர் நபி அலை செல்லும் போது (வயது 30)
இந்த நகரை எப்படி இறைவன் மீண்டும் உருவாக்குவான் ? என்று சிந்தித்துக் கொண்டே தான் கொண்டு வந்த பானத்தைக் குடித்து மீதியை மரத்தடியில் தொங்க விட்டதும் அவரை 100 வருடங்கள் மரணிக்கச் செய்தான் பின் அவரை உயிர்ப்பித்து தன் அருகில் அவருடைய உணவும் பானமும் அதுவரை கெட்டுப் போகவில்லை ஆனால் கழுதை இறந்து எலும்புகள் மட்டும் கிடக்கக் கண்டார் இறந்த உயிர்களை தன்னால் மீண்டும் உயிர்ப்பிக்க இயலும் என்பதை அவர்க்கு உணர்த்த எண்ணி அல்லாஹ் கழுதையை உயிர் பெற்று எழச் செய்தான் இப்போதும் உஜைர் நபிக்கு வயது அதே 30 வயதுதான் ! மரணித்த காலமான 100 வருடங்கள் என்ன ஆனது ?

ஆனால் அவருடன் பிறந்த சகோதரருக்கு வயது 130 பின் இருவரும் 20 வருடங்கள் வாழ்ந்து ஒரே நாளில் மரணிக்கின்றனர் உஜைர் நபிக்கு 50 அவருடைய சகோதரருக்க வயது 150

விஞ்ஞானக் காரணம் சம்பவமே இல்லை என்றால் அவருக்கு காலமே இல்லை .

(நபியே!) அல்லது ஒரு கிராமத்தின் மீது சென்றவரைப் போல் (நீங்கள் பார்த்திருக்கின்றீரா? அவர்) அ(க்கிராமத்)திலுள்ள (வீடுகளின்) முகடுகளெல்லாம் இடிந்து (பாழாய்க்) கிடக்க(க் கண்டு) "இவ்வூர் (மக்கள் இவ்வாறு அழிந்து) இறந்தபின் அல்லாஹ் இதனை எவ்வாறு உயிர்ப்பிப்பான்?" என்று கூறினார். ஆகவே, (அவருடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக) அல்லாஹ் அவரை நூறு ஆண்டுகள் வரையில் மரணித்திருக்கச் செய்து பின்னர் அவரை உயிர்ப்பித்து (அவரை நோக்கி "இந்நிலையில்) நீங்கள் எவ்வளவு காலம் இருந்தீர்கள்" எனக் கேட்க "ஒருநாள் அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் இருந்தேன்" எனக் கூறினார். (அதற்கு அவன்) "அல்ல! நீங்கள் நூறு ஆண்டுகள் (இந்நிலையில்) இருந்தீர்கள். (இதோ!) உங்களுடைய உணவையும், உங்களுடைய பானத்தையும் பாருங்கள். (அவை இதுவரை) கெட்டுப்போகவில்லை. (ஆனால்) உங்களுடைய கழுதையைப் பாருங்கள். (அது செத்து மக்கி எலும்பாகக் கிடக்கின்றது.) இன்னும் உங்களை(ப் போல் சந்தேகிக்கும்) மனிதர் களுக்கு ஓர் அத்தாட்சியாக ஆக்குவதற்காக (கழுதையின்) எலும்பு களையும் நீங்கள் பாருங்கள். எவ்வாறு அவைகளைக் கூடாகச் சேர்த்து அதன் மீது மாமிசத்தை அமைக்கின்றோம் என்று கூறி (அவ்வாறே உயிர்ப்பித்துக் காட்டி)னான். (இவை அனைத்தும்) அவர் முன் தெளிவாக நடைபெற்றபோது (அவர்) "நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் மிக பேராற்றலுடையவன் என்பதை நான்

உறுதியாக அறிந்துகொண்டேன்" என்று கூறினார்.
(அல்குர்ஆன் : 2:259)

டைம் டிராவல் (Time Travel) 12 25-07-2020

Time travel எனப்படும் காலப்பயணம் சாத்தியமா? முழுமையான அலசல் டைம் டிராவல்களை நிரூபிக்கும் வரலாற்று ஆவணங்களோடு ஆதாரங்கள்.

இது ஹார்ட்வெட் பல்கலை கழகத்தில் தாவரவியல் ஆய்வாளர்கள் சக்திவாய்ந்த புகை பட கருவியை கொண்டு ஒரு செடியில் மொட்டை படம் எடுத்த போது நடந்தது...அந்த புகை படத்தில் மொட்டுக்கு பதில் ஒரு மலரின் புகை படம் கிடைத்தது... சரி ஏதோ டபுள் எக்ஸ்போசன் போல சமாச்சாரம் என்று விட்டு விட்டார்கள் .அதன் பின் அந்த மொட்டு மலர்ந்த போது காத்திருந்தது ஆச்சர்யம்.
அது அந்த புகை படத்திற்கு 100 சதம் ஒத்திருந்தது.
இது எப்படி நிகழ்ந்தது என விளக்கம் கேட்டதற்கு பல குழப்பத்திற்கு பின்..அவர்கள் கொடுத்த விளக்கம் ..

' எதிர்காலம் என்பது இப்போதே இங்கயே வேறு ஒரு லேயரில்... நம்மால் உணர முடியாத பரிமாணத்தில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது ..இந்த கருவி அதை புகை படம் பிடித்து இருக்கிறது..'

இரண்டாவதாக...
இன்றைய அதிநவீன அக சிவப்பு கேமராவை கொண்டு ஒருவர் நீண்ட நேரம் அமர்ந்து ...எழுந்து சென்ற ஒரு காலி நாற்காலியை படம் பிடித்தால் ஒரு நிழல் உருவமாக அந்த நபர் யார் என்பதை கண்டு கொள்ள முடியும் (அவரது உடல் வெப்பம் கொஞ்ச நேரம் நாற்காலியில் தங்கி இருப்பது தான் காரணம்) எனில் என்ன பொருள்.. அந்த கருவி அந்த நாற்காலியின் கடந்த காலத்தை புகை படம் எடுத்துள்ளது என்று சொல்லலாமா?

இன்றைய தொழில்நுட்பத்திற்கு 5 அல்லது 10 நிமிட காலத்தை பிடிப்பது சாத்தியமாக இருக்கலாம் எதிர்காலத்தில் அது நீட்டிக்கபடலாம்..கூடவே அதில் பயண படவும்..
இந்த time dilation என்கிற கால வேறுபாடு என்பதன் நீட்சிதான் time travel ஆக முடிகிறது.

time dilation இல் உங்களுக்கு சந்தேகமே வேண்டாம்.. நமது ஈர்ப்புவிசை எல்லையை தாண்டி இருக்கும் செயற்கை கோள்களில் இந்த கால மாறுபட்டால் அதில் அமைக்கப்பட்டுள்ள அதி நுட்பமான கடிகாரங்கள் எப்போதுமே பூமியில் உள்ள கடிகாரங்களுக்கு பொருந்தாத தவறான நேரத்தையே எப்போதும் காட்டுகின்றன என்பது உங்களுக்கு தெரியுமா? அது மேட்ச் ஆவதற்கு தன்னை தானே திருத்தி கொள்ளும்படி அவைகள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த time dilation ..time travel இதெல்லாம் எப்போ எப்படி எந்த சித்தாந்த அடிப்படையில் நடைமுறை சாத்தியம் ?
இப்போது நவீன விஞ்ஞானம் time travel ஐ relativity theory ஐ வைத்து விளக்கி கொண்டிருப்பதை கொஞ்சம் பின்னால் வைத்து விட்டு quantum mechanism கொண்டு அதிகம் விளக்கு கிறது....
Time travel என்று வரும் போது உண்மையாகவே யாராவது time travel பண்ணி இருக்கிறார்களா ?
அப்படி யாரையாவது நாம் சந்தித்து இருக்கிறோமா இல்லையா என்ற கேள்வி எல்லோருக்கும் வருவது இயல்புதான்.

அவ்வபோது உலகத்தில் திடீரென்று ஆங்காங்கே பல பேர் தான் கால பயணம் செய்ததாக.... அங்கே எதிர் அல்லது கடந்த காலத்தில் தன்னையே பார்த்ததாக அல்லது எதிர்கால நிகழ்வுகள் பார்த்ததாக எல்லாம் சொல்லுவார்கள்... அடித்து சத்தியம் கூட செய்வார்கள்...
அவர்களில் பெரும்பாலானவர்கள் time travel குறித்து நமக்குள்ள curiosity ஐ ஊறுகாய் ஆக்கி புகழ் தேடுபவர்கள்.. ஏற்று கொள்ளப் பட்ட டைம் டிராவல் என நாம் யாரை சொல்லலாம் என்றால்...அது Sergei Vasilyevich Avdeyev போன்றவர்களை தான்..

யார் இந்த S V A என்றால் இவர் 1989 வாக்கில் இருந்த ஒரு ரஸ்ய விண்வெளி வீரர். இவர் விண்வெளியில் மொத்தம் 747.59 நாட்கள் தங்கி இருந்தவர் மேலும் 11968 முறை பூமியை அதன் சுற்றுவட்ட பாதையில் சுற்றியவர்...515,000,000 கிமி யை கடந்தவர்... எனவே சிறப்பு சார்பியல் கோட்பாடு படி அவர் டைம் டைலேஷனை சந்தித்தவர்... இவர் கிட்ட தட்ட 750 நாள் விண்வெளியில் சுற்றி இவர் பயணம் செய்த கால பயணம் எவ்வளவு தெரியுமா.. 0.02 வினாடி .
அதாவது 20 மில்லி வினாடி...

அதாவது பூமியில் உள்ளவரை ஒப்பிடும் போது இவர் 0.02 வினாடி இளமையாகி இருப்பார்...இதை செய்த ஒரே மனிதர் இவர் அல்ல.. இன்னும் பல பேர் இவரின் சாதனையை முறியடித்தாலும் அவர்கள் வெளியில் தங்கி இருந்தது சில நாட்களுக்கு மட்டும் தான்...
அடுத்ததாக சில ஆய்வாளர்கள் பிரமிட்களின் அருகில் time dilation ஏற்படுவதாக சொல்கிறார்கள் அங்கே அருகில் போய் மிக நுட்பமாக படம் பிடிக்கும் கமெரா கொண்டு வீடியோ எடுத்து பார்த்தால் தூரத்தில் இருப்பபவை எல்லாம் கொஞ்சம் பார்ஸ்ட் பார்வட் இல் நிகழ்வதை போல வேகம் கூடி இருப்பதை போல தெரிவது தெரிகிறதாம்.

யூனுஸ் (அலை) பழைய ஏற்பாட்டில் "யோனா " (Jonah) (கி.மு 800 முதல் கி.மு 784) இராக்கில் நீனவா எனும் பகுதிக்கு நபியாக அனுப்பப்பட்டார்கள் . மேலும் யூனுஸ் (அலை) அவர்கள் கம்பளி உடையுடன் சென்னிற ஒட்டகையில் ஷாஷாலுப்த் என்னுமிடத்தில் ஓடையைக் கடந்து கொண்டிருப்பதையும் ஒட்டகையின் மூக்கணாங்கயிறு பேரீத்த மரத்தின் நாரினால் செய்யப்பட்டிருந்தது என்றும் நபி (ஸல்) அவர்கள் தங்களுடைய மிஹ்ராஜ் என்னும் விண்வெளி பயணம் பற்றி கூறும் போது இது பற்றி கூறுகிறார்கள் .

மூஸா (அலை) (கி.மு 1526 - கி.மு 1406) அவர்கள் செம்மை நிறமான மேட்டின் மீதுள்ள மண்ணறையில் நின்று தொழுது கொண்டிருந்ததை மிஃராஜ் உடைய இரவில் நபி (ஸல்) அவர்கள் கண்டார்கள்
(முஸ்லிம்)

மக்கா, மதீனாவுக்கிடையே நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் செல்லும் போது நபி மூஸா (அலை) அவர்கள் காதில் கையை வைத்து தப்பியாச் சொல்லிக் கொண்டு அர்ஜுக் ஓடையை கடந்து கொண்டிருந்தை தான் பார்த்ததாக கூறுகிறார்கள்.

அப்பயணத்தில்) மர்யமின் மைந்தர் ஈசா (அலை) (கி.மு - கி.பி 33) அவர்களையும் கண்டேன். அவர்கள் நடுத்தர உயரமும் சிவப்பும் வெண்மையும் கலந்த, மிதமான சரும அமைப்புக் கொண்டவர்களாகவும் படிந்த, தொங்கலான தலைமுடி உடையவர்களாகவும் இருந்தார்கள்.

" நானே தலைவன் "

வியப்பூட்டும் விஞ்ஞான ஆய்வுகள் 1 14-08-2020



வகுப்பறையானாலும் சரி , அரசியல் கட்சி குழுவானாலும் சரி அட , ரவுடிகளின் கூட்டமானலும் சரி அங்கெல்லாம் தலைமைப் பதவிக்கு எப்போதும் ஒரு போட்டி இருந்துகொண்டே இருக்கும் .

பொதுவாக ஒரு கூட்டம் இருந்தால் அதற்கு நிச்சயம் தலைவன் ஒருவன் இருப்பான் .தலைவன் எப்போது அழிந்து போவான் அந்த தகுந்த இடம் எப்போது காலியாகும் என்று அடுத்த ரேங்கில் இருக்கும் நபர் எதிர்பார்த்து அடுத்த 'ரேங்கில் 'இருக்கும் நபர் காத்துக் கிடப்பார் . இது உலக இயற்கை.

நம்மை அறியாமலேயே நமக்குள் நாம் அந்த அடுக்கு வரிசையில் ஒரு இடத்தில் நம்மை நாமே அமர்த்திக் கொள்கிறோம். அல்லது அந்தக் குழுவே நம்மை அமர்த்தி கொள்கிறது.

சிங்கம் யானை குரங்கு போன்ற விலங்குகளிடமும் பறவைகளிடமும் கூட இந்த தலைமைத்துவப் போட்டி இருந்து கொண்டே இருக்கிறது !

உதாரணமாக , காட்டில் சிங்கம் தான் பிரவேசிக்கும் இடத்துக்குள் தன் பெண் துணைகளை வைத்துக்கொண்டு மற்ற சிங்கங்கள் அந்த இடப் போட்டிக்கும் தலைமைக்கும் வரக்கூடாது என்று அந்த இடத்தின் பரப்பளவை சுற்றி தன் மூத்திரத்தை பெய்து உறுதிப்படுத்தி இடம் பிடித்துக் கொள்கிறது .

இதன் மூலம் இந்த இடத்தின் தலைவன் தானே என்று பிரபல்ய படுத்திக் கொள்கிறது . இதற்கு அடுத்தக் கட்ட ஆண் சிங்களையும் ஒரு கொஞ்ச காலத்திற்குப் பின் தன் கூட்டத்திலிருந்து விரட்டி விட்டு அதன் பெண் துணைகளையும் பத்தோடு பதினொன்னாக தன்னுடன் சேர்த்துக் கொள்கிறது. இந்த ஒற்ற தலைவனுக்கு மற்ற பெண் சிங்கங்களும் துணையாகவும், தாம்பத்யமாகவும் இருக்க சம்மதம் தெரிவித்து கொள்கிறது

இந்த பதவி மோகம் தலைமை ஸ்தானம் எல்லாம் எதற்கு என்கிறீர்களா விலங்குகளிடம் அது பெண் ஆசைக்காகவும் தன் சுய பலத்தை நிரூபிப்பதற்காகவும் தலைமை குணம் கொண்ட விலங்கு அதிகமான தன் சந்ததிகள் உண்டாக வாய்ப்பு ஏற்படுகிறது.

தலைமுறை தலைமுறையாக இது தொடர்ந்து ஏற்படுவதால் ஒரு பெரும் கூட்டத்தில் பெரும்பாலான தலைமைத்துவம் குணமுடைய விலங்கிலிருந்து பிறந்ததாக ஜின்கள் இருப்பது நியாயம்தானே..

இந்த தலைமைத்துவ குணம் பரிணாம வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது. எப்படி என்றால் அதாவது தான்தான் என்கிற ஆணவப்போக்கால் பேடி, பயந்தாங்கொள்ளி , கோழை, தலைமைப் பண்பு இல்லாத நோஞ்சான் உயிரினங்கள் இதன்மூலம் வடிகட்டப்பட்டு , இந்த கூட்டம்தான் வலிமை வாய்ந்தத தைரிய கூட்டமாக கருதப்படுகிறது.

தலைமைப் பண்புக்கும் மூளைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா ? என்று நியூஜெர்சியில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் எலிகளை வைத்து ஆய்வு செய்தனர்

நாற்பது எலிகளை வழக்கமான இரும்பு கூண்டுகளில் வளர்க்காமல் ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் கிட்டத்தட்ட இயல்பான சூழ்நிலையில் இருப்பது போல பொந்து, வளை ஆகியவை அமைத்து வளர்த்தனர் .

இதன்காரணமாக அவற்றுக்கிடையே குழுத் தலைவன் என்ற பதவி அவைகளுக்குள் ஏற்பட்டு ஒரு தலைமை எலியும் உருவாகியது. அது மற்ற ஆண் எலிகளை அடக்கி அவற்றிற்குரிய பெரும்பாலான பெண் எலிகளை தனக்கே உரிமையாக்கிக் கொண்டது !

அப்படிப்பட்ட தலைமை எலியின் மூளையை பரிசோதித்துப் பார்த்ததில் மிக முக்கிய வேறுபாடு இருப்பது தெரிந்தது. அதாவது நினைவாற்றலை நீடிக்க வைக்கும் உறுப்பாகிய ஹிப்போகேம்பஸ் (Hippocampus) பகுதியில் புதியதாக தோன்றும் நரம்பு செல்கள் நீண்ட காலம் நீடித்து இருப்பது தெரிந்தது மற்ற கோழை எலிகளில் இந்தப் பகுதியில் உள்ள நரம்பு செல்கள் சீக்கிரம் சீக்கிரமே அழிந்துபோயின !

தலைமைத்துவ குணத்திற்கு சாதுரியம், நினைவாற்றல் ,சீக்கிரம் கற்றுக் கொள்ளல் , சுய திறமையில் தனித்துவம் போன்றவை அவசியம் இது தலைமைத்துவம் வாய்ந்த மிருகங்களிலும் பறவைகளிலும் காணப்படுகிறது .

மேற்கண்ட ஆய்வுகளை குர்ஆனோடு ஒப்பிட்டு பார்க்கும்போது சில உண்மை நிலவரம் தெரியவருகிறது அதாவது நபி தாவூத் அலை அவர்களுக்கு தேனிசை குரலால் சபூர் வேதத்தை ஓதும் தனித்துவத்தை இறைவன் வழங்கி இருந்தான் . இது தலைமையத்துவத்திற்கு சிறப்பாக இருந்தது

وَلَقَدْ اٰتَيْنَا دَاوٗدَ مِنَّا فَضْلًا يٰجِبَالُ اَوِّبِىْ مَعَهٗ وَالطَّيْرَ وَاَلَـنَّا لَـهُ الْحَدِيْدَ ۙ

இன்னும், நிச்சயமாக நாம் தாவூதுக்கு நம் (மேன்மையான) அருளை வழங்கினோம்; “மலைகளே! (அவர் தஸ்பீஹு செய்யும் போது) அவருடன் (அத்துதியை) நீங்களும் எதிரொலியுங்கள்; பறவைகளே! (நீங்களும் அவ்வாறே செய்யுங்கள் என்றோம்;) மேலும் நாம் அவருக்கு இரும்பை மிருதுவாக்கித் தந்தோம்.
(அல்குர்ஆன் : 34:10)

ஒரு நாள் தாவூத் அலை அவர்கள் தங்களின் வணக்க மாளிகையின் முன் பக்க கதவுகளை உட்புறமாக தாழிட்டு விட்டு மாளிகையில் அமர்ந்து மனமொன்றி இறைவனை வணங்கிக் கொண்டிருந்தார்கள் அப்பொழுது இருவர் சுவர் ஏறி தொப்பென்று கீழே குதித்து உள்ளே நுழைந்தனர் அவர்களை கண்டதும் தாவூத் அலை அவர்கள் திடுக்கிட்டார்கள்.

"தாவூதிடம் நுழைந்த போது அவர்; அவர்களைக் கண்டு திடுக்குற்றார்; அப்போது அவர்கள் கூறினார்கள்; “பயப்படாதீர்! நாங்களிருவரும் வழக்காளிகள்; எங்களில் ஒருவர் மற்றவர் மீது அநீதம் செய்திருக்கிறார்; எங்களிருவருக்கிடையில் நீதத்தைக் கொண்டு தீர்ப்பளிப்பீராக! (அதில்) தவறிழைத்து விடாதீர்! எங்களைச் செவ்வையான பாதைக்கு நேர்வழி காட்டுவீராக!"

(அவர்களில் ஒருவர் கூறினார்:) “நிச்சயமாக இவர் என்னுடைய சகோதரர்; இவரிடம் தொண்ணூற்றொன்பது ஆடுகள் இருக்கின்றன; ஆனால் என்னிடம் ஒரே ஓர் ஆடுதான் இருக்கிறது; அவர் அதனையும் தனக்குக் கொடுத்துவிட வேண்டுமெனச் சொல்லி, வாதத்தில் என்னை மிகைத்து விட்டார்.”

(அதற்கு தாவூது:) “உம்முடைய ஆட்டை அவர் தம்முடைய ஆடுகளுடன் சேர்த்து விடும்படிக் கேட்டது கொண்டு நிச்சயமாக அவர் உம்மீது அநியாயம் செய்து விட்டார்; நிச்சயமாகக் கூட்டாளிகளில் பெரும்பாலோர் - அவர்களில் சிலர் சிலரை மோசம் செய்து விடுகின்றனர்; ஈமான் கொண்டு (ஸாலிஹான) நல்லமல்கள் செய்பவர்களைத் தவிர; இத்தகையவர் சிலரே” என்று கூறினார்; இதற்குள்: “நிச்சயமாக நாமே அவரைச் சோதித்து விட்டோம்” என்று தாவூது எண்ணித் தம்முடைய இறைவனிடம் மன்னிப்பு கோரிக் குனிந்து விழுந்தவராக இறைவனை நோக்கினார்.
(அல்குர்ஆன் : 38:22_24)

நபி தாவூத் அலை அவர்கள் தீர்ப்பு வழங்கியது தவறேதும் ஏதும் இல்லையே பின் ஏன் இறைவனிடம் பாவ மன்னிப்பு கேட்டார்கள் ? அவர்கள் தீர்ப்பு கூறி வாய் மூடுமுன் அவர்களின் அறிவுக் கண்கள் வெளிச்சம் பெற்றன. அவர்களின் மனச்சான்று அவர்களை குத்தியது

காரணம் தீர்ப்பு கேட்டு வந்த இருவரும் "தாவூத் தமக்கே தாம் தீர்ப்பளித்துக் கொண்டார் " என்று கூறியதும் வந்திருந்த இருவரும் இறைவனால் அனுப்பி வைக்கப்பட்ட வானவர்கள் என்று நபி அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்

தன் மனச்சான்று உறுத்துதலுக்கு காரணமான சம்பவத்தை அறிய முன்காலத்தில் தாவூத் அலைஅவர்கள் செய்த காரியத்தை நீங்கள் அறிய வேண்டும்

முன்னொரு காலத்தில் ஒரு நாள் தங்களின் மண்டபத்தின் உப்பரிகை லிருந்து ஒரு அழகான பெண் தன் இல்லத்தில் குளித்துக் கொண்டிருக்கும் பெண்ணை பார்த்தார்கள் . அந்தப் பெண்ணின் அழகில் தம்மைத்தாமே மறந்தார்கள் அத்தனை பேரழகு கொண்ட பெண் உடனே அந்தபுரத்து பெண்கள் இருவரை அழைத்து தான் சற்று முன் பார்த்த அழகிய பெண்ணைப் பற்றி விசாரிக்கிறார்கள் .

அதற்கு அந்தப் புறத்தில் பெண்கள் விசாரித்ததில் அவள் ஊரியா என்பவரின் மனைவி "பத்த ஷாயா" என்று கூறினார்கள் அதுகேட்டு தாவூத் அலை அவர்கள் பெரிதும் ஏமாற்றம் உற்றார்கள்.

எனினும் ஆசை அறிவுக்கண்ணை மறைக்க அவர்கள் அந்தப் பெண்ணின் கணவர் ஊரியாவை அழைத்து வருமாறு செய்து அவர் தம் மனைவி பத்த ஷாயாவை மணவிடுதலை செய்து விடுமாறும் பின் தாம் அவளை மணமுடித்து வாழ விரும்புவதாகவும் கூறினார்கள் அதற்கு அவளின் கணவர் ஊர்யா மனம் வருத்தப்பட்டு பின் சம்மதித்தார்.

ஆனால் அந்த அழகிய பெண்ணும் மன்னராய் இருந்த தாவூத் நபியிடம் ஒரு வாக்குறுதி கேட்டாள் அதாவது "நான் தங்களை மணந்த பின் தங்கள் மூலம் எனக்கு பிறக்கக்கூடிய மகனுக்கே அரியணை மற்றும் ஆட்சி அதிகாரம் தரவேண்டும்" என்று கேட்டாள்

அவளின் அழகு உந்துதலின் காரணமாக அதற்கும் நபி தாவூத் அலை வாக்குறுதி கொடுத்தார்கள்.

ஊரியா அவளை மண விடுதலை செய்ய நபி தாவூத் அலை அவளை மணந்து தன் மனம் விரும்பிய மனைவியை பெற்று மகிழ்ந்தார்கள் . அந்த அழகிய பெண் பத்த ஷாயாதான் நபி சுலைமான் அலை அவர்களை ஈன்றெடுத்த தாய் ஆவார்கள்

ஆனால் ஊரியாவோ தம் அழகான மனைவியை இழுந்து தம் உள்ளத்தின் உள்ளே உழந்து கொண்டிருந்தார்.

ஒரு பெண்ணை விரும்பினால் அந்தப் பெண்ணின் கணவனை விவாகரத்து செய்யச் சொல்லி திருமணம் செய்வது அக்கால ஷரியத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தது .அக்காலத்தில் உள்ள மக்கள் இவ்வாறு திருமணம் செய்து கொள்வது வழக்கம்.

என்றாலும் நபி தாவூத் அலை அவர்கள் முர்ஸலான நபியாக இருந்ததால் அவர்களது உயர்வான அந்தஸ்துக்கு இம்முறையில் திருமணம் செய்வது நல்லது அல்ல என்பதை உணர்த்தவே அவ்விரு வழக்காளிகளான 99+1 பெண் ஆடுகளின் வானவர்கள் மனித வடிவத்தில் தோன்றி தாவூத் அலை அவர்களது செயலை உருவகமாக கூறி உணர்த்தினார்கள்.

எனவே தாம் செய்த தீர்ப்பு சரியானதாக இருந்தாலும் தனக்கு 99 மனைவிகள் இருக்க ஊரியாவின் ஒரே ஒரு மனைவியை தான் சொந்தம் கொண்டாடியது தவறு என்று தன் மனம் உறுத்தியது இதற்காக நபி தாவூது அலைஹி தன் பாவத்தை மன்னிக்க வேண்டி இறைவனிடம் அழுது புலம்பினார்கள் .



இது குறித்து நபி ஸல் அவர்கள் உலகத்தினர் அழுத கண்ணீரை விட ஆதம் அலை அவர்களின் கண்ணீரை அதிகம் . நபி ஆதம் அலை அவர்களின் கண்ணீரை விட நபி தாவூத் அலை அவர்களின் கண்ணீரே அதிகம் " என்பதாக அனஸ் ரலி அவர்கள் அறிவிக்கிறார்கள் .

எதிரொலிகள்

வியப்பூட்டும் விஞ்ஞான ஆய்வுகள் 2

மனிதர் உணர்ந்துகொள்ள மனிதக் காதல் அல்ல...

காதல் அல்ல...

உங்கள் யூகம் சரிதான். எதிரொலிகளைப் பற்றிதான். சில காட்சிகளின் ஆழத்தை, செறிவை, எதிரொலிகள் அப்படியே தூக்கிக் கொடுத்துவிடும் அல்லவா?

அடிப்படையில் ஒலி ஒரு அலை. ஒலி பரவுவதற்கு ஏதேனும் ஒரு ஊடகம் வேண்டும். ஊடகத்தின் ஒவ்வொரு புள்ளியும் அதிருகையில் ஒலி கடத்தப்படுகிறது. காற்றில் தோராயமாக மூன்று நொடிகளுக்கு ஒரு கி.மீ என்ற வேகத்தில் (விநாடிக்கு 330 மீட்டர்) காற்றில் பரவுகையில், இடைப்படும் எல்லாப் பொருட்களிலும் பட்டுச் சிதறும். சிதறுகையில், இருவிதமான விளைவுகள் ஏற்படுகின்றன.

ஒன்று ஒலி உருவாவதற்கும், வேறு ஒரு பொருள் மீது மோதிச் சிதறுவதற்கும் இடைப்பட்ட நேரம் குறுகலாய் இருந்தால், அந்த ஒலி கொஞ்சம் நீண்டு ஒலிக்கிற மாதிரி தெரியும். இதற்கு ரெவர்பரேஷன் (reverberation) என்று பெயர். கச்சேரிகளில், சிறிய அரங்குகளில் இது இசையில் உயிர்ப்பை ஏற்றுகிறது.

ஒலி அலைகள் நீள நெடுகப் போய் எதிர்ப்பக்கம் தொலைவில் இருக்கும் பொருளைத் தொட்டுவிட்டு திரும்ப வர வேண்டும் அல்லவா? அதனால் ஏற்படும் காலதாமதத்தால், இது அசல், இது எதிரொலி என்று ஆறு வித்தியாசம் கண்டுபிடிப்பதுபோல், காது சொல்லிவிடும்.

சோனார் (**SONAR**) எனப்படும் கடல்படுகை ஆய்வில் இந்த எதிரொலி பயன்படுகிறது. SOund Navigation And **Ranging** என்பதன் சுருக்கமே சோனார். நீரில், மீயொலிகளைப் **(ultrasonic waves**) பாய்ச்சி, அது கடல்படுகையிலோ, அல்லது நீர்மூழ்கிகளிலோ மோதித் திரும்புகிற நேரத்தையும், நீரில் ஒலி பாயும் வேகத்தையும் கொண்டு, கீழே இவ்வளவு தூரத்தில் தரை இருக்கிறது அல்லது நீர்மூழ்கிகளின் இருப்பிடம் இது எனத் தெரிந்துகொள்ள முடிகிறது.

இன்னொரு முக்கியமான உபயோகம், கருவுற்றிருக்கும் பெண்ணின் வயிற்றில் இருக்கும் குழந்தையைப் படம் பிடித்தல். வேறு எந்த சோதனை என்றாலும், கதிரியக்கம் அல்லது வேதிப்பொருட்களால் பாதிப்பு உண்டாகும். ஆனால், நம்மால் கேட்க முடியாத ஒலியலைகளை வயிற்றின் தோல் வழியாக உட்செலுத்தி, அந்த ஒலியலையின் எதிரொலியைக் கொண்டு ஒரு முப்பரிமாண படம் மூலம், குழந்தையின் அசைவைக் காண முடியும்.

வவ்வால்கள் தான் எழுப்பு கிரீச் சப்தத்தை எழுப்பி இதன் எதிரொலியை நம்பித்தான் பறப்பதற்கு பயன்படுத்துகிறது.

இதைப்போலவே, பார்வையற்றோரில் சிலர் வெறும் க்ளிக் க்ளிக் என்று வாயினால் ஒலியெழுப்பி, அதன் எதிரொலியைக் கொண்டு நகர்கிறார்கள். இந்த முறைக்கு, echolocation என்று பெயர்.

وَلَقَدْ اٰتَيْنَا دَاوٗدَ مِنَّا فَضْلًا ؕ يٰجِبَالُ اَوِّبِىْ مَعَهٗ وَالطَّيْرَ‌ ۚ وَاَلَـنَّا لَـهُ الْحَدِيْدَ ۙ

இன்னும், நிச்சயமாக நாம் தாவூதுக்கு நம் (மேன்மையான) அருளை வழங்கினோம்; "மலைகளே! (அவர் தஸ்பீஹு செய்யும் போது) அவருடன் (அத்துதியை) நீங்களும் எதிரொலியுங்கள்; பறவைகளே! (நீங்களும் அவ்வாறே செய்யுங்கள் என்றோம்;) மேலும் நாம் அவருக்கு இரும்பை மிருதுவாக்கித் தந்தோம்.

(அல்குர்ஆன் : 34:10)

வாத்தின் "குவாக்" சத்தம் எதிரொலிக்காது!

பாடசாலைகளில்எதிரொலி பற்றி கற்பிக்கப்படும் போது வாத்து எழுப்பும் "குவாக்"ஒலி விதிவிலக்காக எதிரொலிக்காது என கற்பிக்கப்பட்டது.

எனினும் அது தவறு என தற்போதைய
விஞ்ஞான ஆய்வுகள்
உறுதிப்படுத்தியுள்ளன.
உண்மையில் "குவாக்"
ஒலி எதிரொலிக்கிறது, எனினும்
நமது செவிப்பறையும் (அதனுடன்
இணைந்த மூளை நரம்புகளும்) அந்த
ஒலியின் மீடிறனிற்கு (frequencies)
எதிர்வினையைக்காட்டுவதில்லை!
அதனாலேயே வாத்தின் "குவாக்"
ஒலி நமது காதுகளுக்கு எதிரொலிக்காததுபோன்று தோன்றுகிறது.
"குவாக்" ஒலிக்கு எதிரொலிப்பு உண்டு என்பது,விசேடமாக தயாரிக்கப்பட்ட
எதிரொலி அறை மூலம்
நிரூபிக்கப்பட்டது

உலகில் சில இடங்களில் எழுப்பப்படும் சப்தங்கள் மிகவும் அதிசயத்தக்க வகையில் எதிரொலிக்கின்றன அப்படிப்பட்ட சில எதிரொலிகள் பற்றிய தகவல்கள் இதோ

-இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டுஷயர் என்ற இடத்தில் உள்ள பள்ளத்தாக்கில் ஏதேனுமொரு சப்தம் எழுந்தால் அது இருபது முறை திரும்ப கேட்கும்

- சிலி தீவில் உள்ள குகையில் தகரத்தை அசைத்தால் அதனால் உண்டாகும் சிறிய சப்தம் பீரங்கியில் தோன்றும் வெடி சத்தத்தை போல அதிகமாகிவிடும்

- லண்டனில் உள்ள செயின்ட் பால்ஸ் கதீட்ரல் ஆலயத்தின் ஒரு மூலையில் நின்றுகொண்டு குசுகுசுவென பேசினாலும் முப்பது மீட்டருக்கு அப்பால் உள்ள இன்னொரு முனையில் தெளிவாக கேட்கும்.

- மான்டோனா என்ற இடத்தில் ஆற்று வெள்ளத்தின் ஓசை எதிரொலியால் சங்கு ஊதுவது போலவும் , நரி ஊளையிடுவது போலவும் கேட்கும் பல ஆண்டுகளுக்கு முன்பு இதை பேய் பிசாசுகள் எழுப்பும் சப்தம் என்று நினைத்து பயந்து உள்ளனர்.

- வேல்ஸ் என்னுமிடத்தில் உள்ள இரும்பு பாலத்தை ஒருமுறை தட்டினால் அதிலிருந்து 576 சப்தங்கள் எழுகிறது

- சிலி நாட்டில் 30 மீட்டர் உயரம் உள்ள ஒரு கட்டிடத்தின் கீழ் அறையில் மூச்சு விட்டாலும் கூட அந்த ஓசை 36 மீட்டர் உயரத்தில் உள்ள மேல்மாடியில் தெளிவாக கேட்கிறது. **டயோனீஷியஸ்** என்ற அரசன் தன் பகைவர்களை கட்டிடத்தில் அழைத்து வைப்பார் அவர்கள் ஒருவரோடு ஒருவர் கிசுகிசு வென பேசிக்கொண்டிருப்பதை மேல் மாடியில் இருந்து கேட்பாராம்.

மரணத்தை வெல்லுமா நவீன விஞ்ஞான தொழில்நுட்பம் ?

வியப்பூட்டும் விஞ்ஞான ஆய்வுகள் 3

மனித வாழ்க்கையைப் பொறுத்தவரை மனித உடலை விட்டு ஒருமுறை உயிர் பிரித்தால் அது பிரிந்ததுதான். அதனை மீட்டுக் கொண்டு வந்து மனித உடலுக்கு மீண்டும் சேர்ப்பது என்பது எந்த விஞ்ஞானம் அல்லது தொழில் நுட்பத்தாலும் முடியாது என்பதே இன்றைய நிலை.

ஆனால், உயிருள்ள மனிதர்களை 196 டிகிரி செல்சியஸ் உறை வெப்பநிலையில் உறைய வைத்துப் பின்னர் மாதங்கள் அல்லது ஆண்டுகள் பல கழித்து மீண்டும் 37 டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக்கு கொண்டு வருவதன் மூலம், அவர்களை (அதாவது உயிரற்ற உடல்களை) மீண்டும் உயிர்ப்பிக்க முடியும் என்ற நம்பிக்கை சில பல விஞ்ஞானிகளிடம் இருந்து வருகிறது.

உதாரணமாக, இந்த மருத்துவக் கூற்று அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலேயே இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜே.எஸ்., எனும் பெயர்கொண்ட ஒரு 14 வயது சிறுமி, மிகவும் அரிதாக ஒரு வகைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டதன் காரணமாக இறக்கும் தறுவாயில் இருந்தபோது, தன்னை உறைய வைக்கும்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, அதில் வெற்றியும் கண்டார். தற்போது அவரது உடல் உறைய வைக்கப்பட்டிருக்கிறது.

இவரைத் தாக்கிய அரிதான புற்றுநோய்க்கான மருந்துகள் எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டால், அவரை மீண்டும் உயிர்ப்பித்து அவரின் புற்றுநோயைக் குணப்படுத்தி மீண்டும் அவர் ஆரோக்கியமாக வாழ ஒரு வாய்ப்பு இருக்கிறது எனும் கூற்றை அந்தச் சிறுமியும், அவரது தாயாரும் நம்பியதே இந்த நிகழ்வுக்குக் காரணம் என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

சிறுமிக்கும் அவரைப் போன்ற நம்பிக்கை கொண்ட மற்ற பலருக்கும் நம்பிக்கை ஊட்டும் விதமாக உள்ளது

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், எலிகளுடைய சிசுக்களின் வளர்ச்சியானது ஒரு வகையான ரசாயனத்தின் மூலம் முற்றிலுமாக நிறுத்தப்பட்ட (அதாவது உறைந்துபோனது போன்ற நிலைக்கு தள்ளப்பட்ட) பின்னர், சுமார் நான்கு வாரங்களுக்கு பிறகு அந்த ரசாயனத்தை நீக்கியபோது, மீண்டும் அந்த சிசுக்களின் இயற்கையான வளர்ச்சி தொடர்ந்தது கண்டறியப்பட்டது.

ஆங்கிலத்தில் **Suspended Animation** என்று அழைக்கப்படும் ஒரு வகையான வளர்ச்சி உறைநிலையில் இருந்து ஒரு சிசுவானது மீண்டும் இயற்கையாக வளரும் என்பது ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்படுவது உலகில் இதுவே முதல்முறை.

இதன் அடிப்படையில், இந்த ஆய்வில் கர்ப்பப்பையில் பொருத்தப்படாத நிலையில் இருக்கக்கூடிய எலிகளுடைய வளர்ச்சியின் நிலையான **Blastocyst-**ல் உள்ள உயிரணுக்களின் வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்கவே ஆய்வாளர்கள் முயன்றனர்.

அதாவது, உயிரணுக்களின் பல்வேறு செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் திறன்கொண்ட mTOR எனும் புரதத்தின் செயல்பாடுகளைத் தடுக்கும் **mTOR inhibitors** எனப்படும் ஒருவகையான ரசாயன மருந்து மூலம் சிசு உயிரணுக்களின் வளர்ச்சி வேகத்தைக் குறைக்க முயன்றபோது, அந்த உயிரணுக்களின் வளர்ச்சி முற்றிலுமாகத் தடைபட்டு நின்றுபோனது தெரியவந்தது.

இந்த ரசாயன சிசு உயிரணுக்கள் மீது பயன்படுத்துவதை நிறுத்தியபோது, அதே சிசுவானது மீண்டும் இயற்கையாக வளரத் தொடங்கியது. ஆய்வாளர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. மிகவும் முக்கியமாக, இந்த வளர்ச்சி உறைநிலையானது அதிகபட்சமாக சுமார் நான்கு வாரங்கள் வரையில் பாதிப்புகள் இன்றித் தொடர்ந்து அதே சிசுக்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால், இத்தகைய ஒரு வளர்ச்சி உறைநிலையும் பின்னர் மீண்டும் இயற்கையாக வளர்வதும் எலிகளுக்குப் புதிதல்ல என்று கூறப்படுகிறது.

உதாரணமாக கர்ப்பமாக இருக்கும் எலிகள், மிகவும் மனஉளைச்சல் அல்லது உடல்ரீதியான உளைச்சல்கள் உள்ள சூழல்களின்போது (அதாவது உணவு இல்லாத சூழல் போல) தனது கர்ப்ப வளர்ச்சியை சில காலம் உறைநிலையில் வைத்திருந்துவிட்டு, பின்னர் உணவு கிடைக்கும் சூழல் ஏற்பட்டவுடன் மீண்டும் கர்ப்ப வளர்ச்சியை இயற்கையாகத் தொடரும் திறன் எலிகளுக்கு உண்டு என்று கூறப்படுகிறது.

ஆனால் முக்கியமாக இந்த ஆய்வில் எலிகளின் சிசுக்கள் மட்டுமல்லாமல், உடலின் எல்லா வகையான உயிரணுக்களையும் உற்பத்தி செய்யும் சிசு ஸ்டெம் செல்களையும் **(Embryonic Stemcells) mTOR inhibitors** மருந்து மூலம் உறைய வைத்து மீண்டும் உயிர்ப்பித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்டெம் செல்களுக்கு உள்ளே நிகழும் பெரும்பாலான மரபணுச் செயல்பாடுகளைக் குறைப்பதன் மூலமே இந்த மருந்துகள் ஸ்டெம் செல்களின் வளர்ச்சியைத் தடுத்து உறையச் செய்கின்றன என்று விளக்குகிறார்கள் ஆய்வாளர்கள்.

சிசுக்களையும், ஸ்டெம் செல்களையும் உறைய வைத்துப் பின்னர் மீண்டும் உயிர்ப்பிக்கக்கூடிய அசாத்திய திறன் கொண்ட இந்தப் புதிய தொழில் நுட்பத்தின் உதவியுடன், முழுமையாக வளர்ந்த உயிரணுக்கள் மற்றும் சிசுக்களையும் சில காலம் உறையச் செய்து தேவையானபோது மீண்டும் உயிர்ப்பிக்க முடியும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

அதாவது உடலில் குறிப்பிட்ட ஒர பகுதியைத் தாக்கியுள்ள (புற்றுநோய் போன்ற) ஒரு நோயானது உடலின் பிற பகுதிகளுக்கும் பரவி உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுக்க, அத்தகைய உயிரணுக்கள் அல்லது திசுக்களை உறையச் செய்துவிடலாம் என்கின்றனர்.

அதுமட்டுமில்லாமல், தொடக்க நிலை கர்ப்பத்தில் உள்ள சிசுக்களை உறையச் செய்வதன் மூலம் அவற்றில் மிகவும் ஆபத்தான மரபணு குறைபாடுகள் இருக்கின்றனவா என்பது தொடர்பான மேலதிக பரிசோதனைகளைச் செய்து பார்த்துவிட்டு மீண்டும் கர்ப்பத்தைத் தவிர்ப்பதா என்பது குறித்த முடிவுகள் எடுக்கும் வாய்ப்பு மனிதர்களுக்கு உருவாகும்.

ஆக மொத்தத்தில் உயிரணுக்களை உறையச் செய்து மீண்டும் உயிர்ப்பிக்கும் இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் மனித குலத்தைப் புற்றுநோய் போன்ற ஆபத்தான நோய்களில் இருந்து காப்பாற்றுவது முதல் மரபணு குறைபாடுகள்ள குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது உள்ளிட்ட இன்னும் கண்டறியப்படாத பல பலன்கள் இருக்கின்றன என்று உறுதியாகக் கூறுகிறார்கள் விஞ்ஞானிகள்.

وَلَتَجِدَنَّهُمْ اَحْرَصَ النَّاسِ عَلٰى حَيٰوةٍ ۛ وَ مِنَ الَّذِيْنَ اَشْرَكُوْا ۛ يَوَدُّ اَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ اَ لْفَ سَنَةٍ وَمَا هُوَ بِمُزَحْزِحِهٖ مِنَ الْعَذَابِ اَنْ يُّعَمَّرَ وَاللّٰهُ بَصِيْرٌ بِمَا يَعْمَلُوْنَ

அன்றி, (நபியே! அந்த யூதர்கள்) மற்ற மனிதர்களை விடவும் (குறிப்பாக இணைவைத்து வணங்கும்) முஷ்ரிக்குகளை விடவும் (நீண்ட நாள்) உயிர்வாழ மிகவும் பேராசை உடையவர்களாக இருப்பதை நிச்சயமாக நீங்கள் காண்பீர்கள்!

அவர்களில் ஒவ்வொருவனும் "நான் ஆயிரம் ஆண்டுகள் உயிர்வாழ வேண்டுமே?" என்று விரும்புவான்.

(அவ்வாறு நீண்ட நாள்) யிருடன் இருக்க அவனை விட்டு வைத்தாலும் அது வேதனையிலிருந்து ஒரு சிறிதும் அவனைத் தப்பிக்க வைத்துவிட மாட்டாது.

அல்லாஹ் அவர்கள் செய்வதை உற்று நோக்குபவனாக இருக்கின்றான்.
(அல்குர்ஆன் : 2:96)

தங்கம் கலந்த பழங்கால மருந்து உடலையும், ஆன்மாவையும் சுத்திகரிக்கின்றன !

வியப்பூட்டும் விஞ்ஞான ஆய்வுகள் 4



நீங்கள் எகிப்துக்குச் சென்றால், கெய்ரோ அருங்காட்சியகத்தில் தங்கத்தால் ஆன ஒரு பல் இணைப்பைக் காணலாம் - இது 4,500 ஆண்டுகள் பழமையானது ஆகும்.

தங்கம் பணமாக மாறிய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அது பல்வேறு பயன்களைக் கொண்டிருந்தது. பண்டைய எகிப்தியர்கள் தங்களின் உடல், ஆன்மா மற்றும் மனம் ஆகியவற்றை சுத்திகரிக்க தங்கள் உணவில் தங்கத் துகள்களை சேர்த்தனர் என்று சில வரலாற்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பண்டைய நகரமான அலெக்ஸாண்ட்ரியாவில், நேர்த்தியைப் பிரதிபலிக்கும் மர்மமான பண்புகளை தங்கம் கொண்டிருப்பதாக இரசவாதிகள் நம்பியதால், திரவ தங்கத்தினால் ஆன ஒரு 'அமிர்தத்தை' இரசவாதிகள் உருவாக்கினர்.

மனித உடலில், முழுமையான ஆரோக்கியத்தை மீட்பது தவிர, அது புத்துணர்ச்சியளிக்கிறது மற்றும் பல நோய்களைத் தீர்க்கிறது.

இடைக்கால ஐரோப்பாவில் தங்கம் பூசப்பட்ட மாத்திரைகள் மற்றும் தங்கத் தண்ணீர் ஆகியவை மிகவும் பிரபலமாக இருந்ததாக புராணங்கள் கூறுகிறது.

‘கை கால் வலிகளைத் தணிப்பதற்காக’ இரசவாதிகள் தங்கத் துகள்களை பானங்களில் கலந்துப் பயன்படுத்தினர் (மூட்டு வலியை குணமாக்க பயன்படுத்தப்பட்டது).

15ஆம் மற்றும் 16ஆம் நூற்றாண்டுகளில், நவீன மருந்தியலின் தந்தையாக கருதப்படும் பாராசெல்ஸஸ் என்பவர், தங்கம் உட்பட விலைமதிப்பற்ற உலோகங்களைப் பயன்படுத்தி பல மருந்துகளை உருவாக்கியுள்ளார்.

பாராசெல்ஸஸ் என்பவர் நவீன மருந்தியலின் முன்னோடியான லேட்ரோ-வேதியியல் அல்லது மருத்துவ வேதியியல் ஆகியவற்றுக்கான பள்ளியை நிறுவியுள்ளார்.

தங்கத்தின் மருத்துவ குணங்களின் மீதான நம்பிக்கை என்பது 19 ஆம் நூற்றாண்டு வரை எல்லா இடங்களிலும் இருந்தது. ஐரோப்பியர்கள் நூறு ஆண்டுகளுக்கு மேலாக தங்கம் பூசப்பட்ட மாத்திரைகள் மற்றும் தங்கத் தண்ணீரை கடைகளில் வாங்கி வருகின்றனர் என்று சில எழுத்தாளர்கள் கூறியுள்ளனர்.

நவீன காலகட்டத்திலும் கூட, கிராமப்புற சீனாவில், தங்கம் என்பது இன்னும் இயற்கை மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது; விவசாயிகள் தங்கத்தின் புத்துணர்ச்சியூட்டும் குணநலன்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, அவர்கள் சமைக்கும் அரிசியில் ஒரு தங்க நாணயத்தைப் போடுகிறார்கள். நகரங்களில் உள்ள பல உணவகங்களில், சீன சமையல்காரர்கள் தங்கள் உணவில் 24 காரட் தங்க இலைகளை சேர்த்துக் கொள்வதாகக் கூறப்படுகிறது.

நவீன விஞ்ஞான யுகத்தில், இது மிகைப்படுத்தப்பட்டதாக தோன்றலாம். ஆனால் இதைக் கவனியுங்கள்: சிகாகோவில் உள்ள ஒரு மருத்துவரான டாக்டர் எட்வர்ட் ஓகனெர் என்பவர் மருத்துவ மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை என்ற இதழில் ஜூலை 1935-ல் வந்த ஒரு கட்டுரையில் பின்வருமாறு கூறினார்:

"உடலின் நிலைமை நம்பிக்கையற்றதாக இருக்கும்போது, நோயாளிகளுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் கூழ்ம தங்கம் என்பது ஆயுளை நீட்டிக்கிறது மற்றும் அதிக தாங்கும் வல்லமையை அளிக்கிறது, ஏனெனில் அது உடல்நலமின்மை காலகட்டத்தைக் (நாள்பட்ட நோயுடன் தொடர்புடைய பொதுவான உடல் பலகீனம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு) குறைக்கிறது,

மேலும் வலி மற்றும் அசௌகரியம் ஆகியவற்றைப் பொதுவாகக் குறைக்கிறது, மற்றும் பெரும்பாலான நிகழ்வுகளில் ஓபியேட்ஸ்-க்கான தேவைகளைக் குறைக்கிறது.”

'தங்கத்தின் மீதான அதிக ஆசையும்' ஒரு நோய் என்று அழைக்கப்படுகிறது, ஆனால், அவ்வாறு ஏற்படும் பொழுது, அதை தங்கம் உண்மையில் குணமாக்குகிறது.

தங்கத்தின் மீதான அதிக ஆசையைப் பற்றி இஸ்லாம்.....

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"(மேற்காசியாவில் பாயும்) யூப்ரடீஸ் நதியானது வற்றி, தங்க மலை ஒன்றை வெளிப்படுத்தாத வரை யுக முடிவு நாள் வராது.

அதற்காக (உரிமை கொண்டாடி) மக்கள் சண்டையிட்டுக்கொள்வர். அப்போது ஒவ்வொரு நூறு பேரிலிருந்தும் தொண்ணூற்றொன்பது பேர் கொல்லப்படுவர். அவர்களில் ஒவ்வொருவரும் "உயிர் பிழைப்பவர் நானாக இருக்க வேண்டுமே!" என்று கூறுவர்.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அதில் தக்வான் (ரஹ்) அவர்கள், "அதை நீ கண்டால், அதை நெருங்க வேண்டாம்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாகக் கூடுதலாக அறிவிக்கிறார்கள் முஸ்லிம் : 5548.

ர.ரா

கடவுள் இருக்கிறாரா? இருந்தால் அவர் எங்கே இருக்கிறார்?

வியப்பூட்டும் விஞ்ஞான ஆய்வுகள் 5

உலகில் இதுவரை பிறந்த விஞ்ஞானிகளில் முதன்மையானவராகக் கருதப்படும் ஐன்ஸ்டீனிடம் ஒருமுறை “கடவுள் இருக்கிறாரா?” என்று கேட்டபோது “கடவுள் தேவைப்படுகிறார்” என்று பதில் அளித்தார்.

ஐன்ஸ்டீனின் சில கோட்பாடுகள் மனித குலத்தை கடவுளை உணர அல்லது கடவுளுக்கு அருகில் கொண்டு செல்ல வைப்பவை.

பிரபஞ்சம் எவ்வாறு உருவானது என்பதைக் கண்டுபிடிக்கும் ஆய்வில் மனிதன் சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாக நவீன விஞ்ஞானம் நம்புகிறது.

“பெரு வெடிப்பு” எனப்படும், ஒரு சூன்யத்தில் இருந்து எண்ணிப் பார்க்க முடியாத அளவிலான ஒரு மகாசக்தி வெடித்துச் சிதறியதால் இந்த பிரபஞ்சம் உருவானது என்பதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கும் ஆய்வில் முன்னேறிக் கொண்டிருப்பதாக நம்பும் மனித இனம், இந்த மகாவெடிப்பின் முதல் மூன்று நிமிடங்களில் (**THE FIRST THREE MINUTES)** என்ன நடந்தது? அதாவது பெருவெடிப்பின் ஆரம்பக் கணங்களில் நடந்தது என்ன என்பதைத்தான் தேடித் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

இந்த முதல் நொடியில் என்ன நடந்தது என்பதை மனிதன் உணர்ந்து விட்டால், அறிந்து விட்டால், நாம் கடவுளைக் கண்டு பிடித்து விட்டதாகத்தான் அர்த்தம். கடவுளைப் பற்றிய இதுபோன்ற ஒரு பேட்டியில்தான் ஐன்ஸ்டீன் “அவர் இருக்கிறாரோ, இல்லையோ, தேவைப்படுகிறார்” என்று சொன்னார்.

ஐன்ஸ்டீனின் காலமான சென்ற நூற்றாண்டு வரை பிரபஞ்சத்தில் நீளம், அகலம், உயரம் என மூன்று பரிமாணங்கள்தான் இருக்கின்றன என்று நம்பப்பட்டது.

அதாவது ஒரு உயிருக்கு இடம்-வலம், மேலே-கீழே, முன்-பின், என மூன்று நிலைகள் இருக்கும். இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் ஒரு மனிதன் தனக்கு இடப்புறமாகவோ, வலப்புறமாகவோ, மேலும், கீழுமாகவோ, முன்னும் பின்னுமாகவோ எல்லாத் திசைகளிலும் பயணிக்க முடியும். இதுவே நீளம், அகலம், உயரம் எனும் முப்பரிமாண நிலை.

மனித குலத்தைத் திசை திருப்பிய இயற்பியல் விஞ்ஞானியான ஐன்ஸ்டீன், நினைத்துப் பார்க்க முடியாத வேகத்தில் ஒரு மனிதன் பயணம் செய்ய முடியுமானால் அவனது வேகத்தைப் பொருத்து, அவன் செல்லும் வாகனத்தினுள் நேரம் சுருங்கும் என்று சொன்னார். இதுவே அவரது புகழ் பெற்ற சார்பியல் கோட்பாடு..

இதை நாம் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நீளம், அகலம், உயரம் என்ற மூன்று நிலைகளை அடுத்து “காலம்” என்ற ஒன்றையும் அவர் நான்காவது பரிமாணமாகச் சொன்னார்

அதிக வேகத்தில், ஏறக்குறைய ஒளி செல்லும் வேகமான ஒரு வினாடிக்கு மூன்று லட்சம் கிலோமீட்டர் வேகத்திற்கு அருகில், ஒரு மனிதனால் பயணம் செல்ல முடியுமானால், அவனுக்கு ஒரு மணிநேரம் என்பது ஒரு நிமிடமாகச் சுருங்கும் என்பதை ஐன்ஸ்டீன் நிரூபித்துக் காட்டினார்.

காலத்திற்கு ஊடாக மிக வேகமாகப் பயணம் செய்யும் ஒருவருக்க, ஒரு மணி நேரம் என்பது ஒரு நிமிடமாக இருக்கும் .

வேதங்களில், நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள் எனவும், நம்முடைய ஆறு மாதம் அவர்களுக்கு ஒரு பகல், இன்னொரு ஆறு மாதம் அவர்களுக்கு ஒரு இரவு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதையே குர்ஆன் வேதத்தில் ...

تَعْرُجُ الْمَلٰٓٮِٕكَةُ وَ الرُّوْحُ اِلَيْهِ فِىْ يَوْمٍ كَانَ مِقْدَارُهٗ خَمْسِيْنَ اَلْفَ سَنَةٍ

அந்நாளில் மலக்குகளும், ஜிப்ரயீலும் அவனிடம் போய்ச் சேருவார்கள். (அந்நாள்) ஐம்பதினாயிரம் வருடங்களுக்குச் சமமாக இருக்கும்.

(அல்குர்ஆன் : 70:4)

விண்வெளியில் மிக வேகமாகச் செல்லும் ஒருவருக்கு, அல்லது வேறு ஒரு பரிணாம நிலையில் இருக்கும் ஒருவருக்கு, நமது ஒரு வருடம் என்பது அவருக்கு ஒரு நாளாகச் சுருங்குவதற்குச் சாத்தியம் இருக்கிறது என்பதை இப்போது நவீன விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

சார்பியல் தத்துவத்தை உலகிற்கு அறிவித்த இதே ஐன்ஸ்டீன், அதிக எடையுள்ள ஒரு பொருளின் அருகில் வரும் ஒளி, அந்தப் பொருளின் ஈர்ப்பு விசையால் நேராகச் செல்லாமல் வளைந்து செல்லும் என்பதையும் சொன்னார். இந்த விதி இப்போது நாம் பார்க்கும் சில நட்சத்திரங்கள் இருக்கும் இடத்தையே கேள்விக்குறியாக்கியது.

ஆனால் ஐன்ஸ்டீன் அப்படி அதை நம்பவில்லை. இந்த ஈர்ப்பாற்றல் ஜடப்பொருளின் இயற்கை அல்ல . அந்தப் பொருளைச் சுற்றியுள்ள வெளி , ஸ்பேஸ் , அந்தப் பொருள் இருப்பதால் வெளியை வளைத்து விடுகிறது.
இந்த வளைவினால் ஏற்படும் சரிவே , வழுக்கலே , ஈர்ப்பாற்றலாகி விடுகிறது

இந்தக் கருத்து நிரூபிக்க அமெரிக்கா வில் 1919 - மே 29 -ல் சூரிய கிரகணத்தின் போது பட்டப் பகலில் சூரியன் மறைந்தது . ஹயாடெஸ் **(Hyades)** என்கிற நட்சத்திர விண்மீன் தொகுதியில் உள்ள நட்சத்திரத்தை முந்தைய இரவில் டெலஸ்கோப் மூலம் படம் பிடித்து , டெலஸ்கோப்பை நகர்த்தாமல் அப்படியே வைத்து அன்றைய சூரிய கிரண பகலில் ஏற்பட்ட போது மீண்டும் அதே நட்சத்திரத்தை படம் எடுக்க அந்த நட்சத்திரம் கொஞ்சம் இடம் மாறி இருந்த இடமாற்றத்தின் வளைவு 1.75 ° ஆர்க் வினாடி ஆக விண்வெளி வளைந்திருக்கிறது. கிரகங்கள் சுற்றி வரும் பாதைகளும் வளைந்திருக்கிறது ; ஈர்ப்பாற்றல் என்று எதுவும் இல்லை என்றார்.

இந்த சூரிய கிரகணத்தின் போது சூரியனுக்குப் பின் மறைந்திருக்கும் நட்சத்திரங்கள் சூரியனைச் சூழ்ந்துள்ள "வெளி" வளைந்திருப்பதாக காட்டியது. அந்த நட்சத்திர ஒளி வளைந்து வளைந்து நம்மை வந்து சேரும் என்றார் ஐன்ஸ்டீன்

'இப்படி வளைந்து வளைந்து வெளி முழுவதும் திரும்ப ஒன்றுடன் ஒன்று சேர்ந்துகொண்டு விடும். அப்படியெனில் இங்கிருந்து புறப்பட்ட ஒளிக்கற்றை விண்வெளியில் சென்று கோடிக்கணக்கான வருஷங்களுக்குப் பிறகு புறப்பட்ட இடத்துக்கே திரும்ப வந்துவிடும் ! இதில் காலம் என்பது என்ன ? தூரம் என்பது என்ன ? சரித்திரம் என்பது என்ன ? எதிர்காலம் , இறந்த காலம் எல்லாம் ஒன்றிப் போகின்றன !

ஐன்ஸ்டீன் ஒளி வளைவுக் கொள்கை நிரூபிக்கப்பட்டு உலகமே அவரைக் கொண்டாடியது.

கடவுளைப் பற்றிய புதிர்களை அவிழ்க்கும் அவரது இன்னொரு கோட்பாடு “தியரி ஆப் எவ்ரிதிங்” என்பதாகும். இந்த விதி “பிரம்மாண்டமான இந்த பிரபஞ்சத்திற்கும், ஒரு மிகச் சிறிய அணுவிற்கும் அடிப்படையாக இருப்பவைகள் ஒரே கணிதச் சமன்பாட்டில் அடங்கும்” என்று சொல்கிறது.

ஐன்ஸ்டீன் அறிவித்த தியரி ஆப் எவ்ரிதிங் தத்துவத்தை நிரூபிக்க முயற்சித்த விஞ்ஞானிகளில் ஒருவரான எட்வர்ட் விட்டன் அவரது ஆய்வு முடிவுகளை இருபது வருடங்களுக்கு முன் “எம் தியரி” என்ற பெயரில் வெளியிட்டார்.

அதன் சுருக்கம் என்னவெனில், பிரபஞ்சத்தில் மூன்று பரிமாணங்கள் இருப்பதை அறிந்த நாம், ஐன்ஸ்டீனின் காலம் என்கிற நான்காவது பரிமாணத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தற்போது கிடைத்திருக்கும் ஆய்வு முடிவுகளின்படி மொத்தம் பதினொரு பரிமாணங்கள் இருக்கிறது என்பதை நிரூபிக்க முடியும் என்பதே அது.

இந்தப் பரிமாணங்களுக்கும், கடவுளை உணருதலுக்கும் உள்ள தொடர்பை நவீன விஞ்ஞானம் தேடுவதை விளக்க வேண்டுமானால், முதலில் இந்த பரிமாணங்களின் வகையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பரிமாண உயிரையும், இரண்டு பரிமாண உயிரையும் புரிந்து கொள்ள, முதலில் ஒரு நேர் கோட்டையும், அதனை வெட்டிச் செல்லும் ஒரு படுக்கைக் கோட்டையும் ஒரு கூட்டல் குறியினைப் போலக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

ஒரு நேர் கோட்டில் முன் பின்னாகச் சென்று வாழும் மிகவும் மெதுவான செயல்பாடுகளைக் கொண்ட ஒரு பரிமாண உயிரான, ஒரு ஆமையால் அந்தக் கோட்டில் மட்டுமே வாழ முடியும், பார்க்க முடியும், உணர முடியும். அதைத் தவிர வேறு எதையும் அது அறியாது. கோட்டுக்கு வெளியில் இன்னொன்று இருப்பதாகச் சொன்னாலும் நம்பாது.

நேர் கோட்டினை வெட்டிச் செல்லும் படுக்கைக் கோட்டில் வாழும் முயல் ஆமையை விட அறிவானது, விரைவானது. இந்த இரண்டு பரிமாண உயிரான முயலால், ஆமையைப் பார்க்க முடியும். ஆனால் ஆமையால் முயலைப் பார்க்க முடியாது. இந்த இரு கோடுகளும் இணையும் நடு மத்திப் புள்ளியில் எப்போதாவது முயல் வருமாயின் அப்போது மட்டும் ஆமையால் முயலைப் பார்க்க முடியும்.

இப்போது இந்தக் கூட்டல் குறி போன்ற இரண்டு பரிமாண உயிர் அமைப்புகளின் மையப் புள்ளியில் ஒரு பென்சிலை வைப்போம். அதன் உச்சியில் இவை இரண்டையும் விட விரைவான, இவைகளுக்கு இல்லாத பறக்கும் சக்தியுள்ள மூன்று பரிமாண உயிரான பருந்து இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

இந்தப் பருந்து இருப்பதை உணரவோ, பார்க்கவோ, ஆமையாலும், முயலாலும் முடியாது. ஏன், இப்படி ஒன்று இருக்கிறது என்பதைக் கூட இவைகள் கற்பனை செய்ய முடியாது. ஆனால் பருந்து இந்த இரண்டையும் பார்க்க முடியும். அதேபோல கீழே இருக்கும் இரண்டு பரிமாண உயிர்களை இணைக்கும் புள்ளியில் பருந்து வரும்போது மட்டும் பருந்தை மற்ற இரண்டால் பார்க்க முடியும்.

நாம் இருப்பது இப்போது இந்த பருந்தின் அமைப்பில்தான்.

இந்தக் கூட்டல் குறியையும் அதன் மேல் நிற்கும் பென்சிலையும் சேர்த்தாற் போல் அதன்மேல் ஒரு டப்பாவைக் கவிழ்த்துங்கள். நான்காவது பரிமாண உயிர் அந்த டப்பாவினுள் அடங்கும். இறந்தவர்கள் ஆவிகளாக இருப்பது பரிமாண இந்த அமைப்பில்தான் என்ற கருத்து இப்போது வலுப்பெற்று வருகிறது.

இந்தப் பரிமாணத்தில், ஆவி வடிவில், சூட்சும உடலுடன் இருக்கும், நம் முன்னோர்களால் நம்மைப் பார்க்க முடியும். ஆனால் நம்மால் அவர்களைப் பார்க்க முடியாது.

அதேநேரத்தில் அபூர்வமாக பரிமாண மையப் புள்ளியில் அவர்கள் வர நேரிடும்போது நம் கண்களுக்கு ஆவிகளாகத் தெரிகிறார்கள்.

நான் முந்திய பாராவில் சொன்னதைப் போல, எப்படி பருந்து இருப்பதை முயல் நம்பாதோ, பருந்தும், முயலும் இருப்பதை ஆமை நம்பாதோ, அதேபோல இதையும் நீங்கள் நம்பச் சற்றுச் சிரமமாகத்தான் இருக்கும்.

இந்த டப்பாவிற்கு மேல் டப்பாவாக நவீன விஞ்ஞானம் சொல்லும் பதினோரு பரிமாணங்கள் எனும் டப்பாக்களை அடுக்கிக் கொண்டே போங்கள்.
இதில் ஏதோ ஒரு பரிமாணத்தில் இறைவனின் அரியணை கூட நீரில் மீது இருக்கும் .
وَ هُوَ الَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ فِىْ سِتَّةِ اَ يَّامٍ وَّكَانَ عَرْشُهٗ عَلَى الْمَآءِ لِيَبْلُوَكُمْ اَيُّكُمْ اَحْسَنُ عَمَلًا وَلَٮِٕنْ قُلْتَ اِنَّكُمْ مَّبْعُوْثُوْنَ مِنْ بَعْدِ الْمَوْتِ لَيَـقُوْلَنَّ الَّذِيْنَ كَفَرُوْۤا اِنْ هٰذَاۤ اِلَّا سِحْرٌ مُّبِيْنٌ
அவன்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாள்களில் படைத்தான். (அச்சமயம்) அவனுடைய "அர்ஷு" நீரின் மீதிருந்தது. உங்களில் நற்செயல்களைச் செய்பவர்கள் யார் என்று உங்களைப் பரிசோதிப்பதற்காக (உங்களையும், இவற்றையும் அவன் படைத்தான். நபியே! நீங்கள் மனிதர்களை நோக்கி) "நீங்கள் இறந்த பின்னர் நிச்சயமாக (உயிர்கொடுத்து) எழுப்பப்படுவீர்கள்" என்று கூறினால், அதற்கு அவர்களிலுள்ள நிராகரிப்பவர்கள் "இது பகிரங்கமான சூனியமேயன்றி வேறில்லை" என்று கூறுகின்றனர். (குர்ஆன் : 11:7)

சூரியனின் கோபம்

வியப்பூட்டும் விஞ்ஞான ஆய்வுகள் 6



وَّجَعَلَ الْقَمَرَ فِيْهِنَّ نُوْرًا وَّجَعَلَ الشَّمْسَ سِرَاجًا
அவனே, அவைகளில் சந்திரனைப் பிரதிபலிக்கும் வெளிச்சமாகவும், சூரியனை ஒளி விளக்காகவும் அமைத்தான்.
(குர்ஆன் : 71:16)

சூரியன் விளக்கு என்றால் விளக்கைச் சுற்றி இருட்டு இருக்கும் . ஆனால் சூரியனுக்குள் கரும்புள்ளிகள் இருட்டாக இருக்கிறது . இது ஏன் ?

கரும்புள்ளி என்றால் அது கருப்பான புள்ளி அல்ல. வெள்ளைக்காரன் பக்கத்தில் பஞ்சாபி ஒருவர் நின்றால் பஞ்சாபி கருப்பாக தெரிவார் . அதுபோலான சூரியனில் கரும்புள்ளிகள் தென்படுகிறது .

கடும் கோபத்தில் இருப்பவரைக் குறிப்பிடும்போது, “அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது” என்பதாகக் கூறுவது உண்டு. சூரியனின் முகத்திலும் அவ்வப்போது ‘எள்ளும் கொள்ளும் வெடிப்பது’ போன்ற நிலைமை தோன்றுகிறது. அந்த ‘கோபம்’ மாறி, வேறொரு சமயத்தில் சூரியன் முகத்தில் சாந்தம் தவழும் நிலை ஏற்படுவதும் உண்டு.

தினமும்தான் சூரியன் உதிக்கிறது. ஆனால், நாம் சூரியனை உற்றுக் கவனிப்பதில்லை. சூரியனை உற்றுப் பார்ப்பது முடியாது . கூடாது . கலிலியோவுக்கு அந்திம காலத்தில் கண் கெட்டுப்போனதே சூரியனை தன் டெலஸ்கோப் மூலம் நேரடியாக பார்த்ததால்தான் என்று சொல்கிறார்கள்

சூரியனைப் பார்க்க விஷேச கருவிகள் உண்டு. சூரியனைக் கவனித்து வருவதற்கென்றே விசேஷமான செயற்கைக் கோள்களும் உள்ளன. அப்படி கவனிக்க வேண்டிய காரணம் உள்ளது.

சூரியனின் முகத்தில் அவ்வப் போது கரும்புள்ளிகள் தோன்றுகின்றன. பின்னர் அவை மறைகின்றன. சூரியனில் கரும்புள்ளிகள் தோன்றுவது சூரியனின் காந்த மண்டலத்துடன் தொடர்புடையது.

கரும்புள்ளி அதிகமாக இருக்கும் சமயங்களில் சூரியன் சீறுகிறது. இது மட்டுமின்றி, சூரியனில் இருந்து அப்போது சிஎம்இ **(CME-Coronal Mass Ejection)** எனப்படும் ஆற்றல் மொத்தைகள் தூக்கி எறியப்படுகின்றன. சில சமயங்களில் இவை பூமியைத் தாக்குகின்றன.

கரும்புள்ளிகள் தோன்றும் கால அளவு சில மணி நேரங்களிலிருந்து பல வாரங்கள் வரையானதாகவும் காணப்படுகிறது. நீண்ட கால அளவைப் பெற்றிருப்பின் புவியின் அயனி மண்டலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இதனால் வானொலித் தகவல் தொடர்பில் பாதிப்பு ஏற்படுகிறது.
புவியை நோக்கி வரும் மின்னூட்டப்பட்ட துகள்களை மின்காந்தப் புலம் விலக்கித் தள்ளும். இதனால் அத்துகள்கள் புவியின் இருதுருவங்களை நோக்கி ஈர்க்கப்படும். இவ்வாறு துருவங்களை நோக்கி மின் துகள்கள் ஈர்க்கப்படுவதால் வடக்கு மற்றும் தெற்கு துருவம் நோக்கி பேரொளி (அ) அறோறா பொறியாலிஸ் **(Aurara Borealis)** எனப்படும் விந்தைக் காட்சிகள் அதிகமாகக் காணப்படும்.

இதன் விளைவாக பூமியின் காற்று மண்டலம் பாதிக்கப்பட்டு அது விரிவடைகிறது. காற்று மண்டலம் பூரி போல உப்புகிறது. அதுவரை காற்று மண்டலத்துக்கு வெளியே அமைந்திருந்த செயற்கைக் கோள்கள் காற்று மண்டலத்துக்குள் வந்துவிடும் நிலை ஏற்படுகிறது. இதனால் செயற்கைக் கோள்களின் வேகம் பாதிக்கப்பட்டு, நீண்ட கால அளவில் அவற்றின் ஆயுள் குறைகிறது.

ரேடியோ ஒலிபரப்புகளும் பாதிக்கப்படுகின்றன. தவிர, பூமியில் மின்கட்டமைப்பும் பாதிக்கப்படுகிறது. கனடாவில் ஒருமுறை, மின்விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டு, பெரும் பகுதி இருளில் மூழ்கியது.

பூமியில் நிலத்துக்கு அடியில் புதைக்கப்பட்டுள்ள எரிவாயுக் குழாய்கள், கச்சா எண்ணெய்க் குழாய்களும் பாதிக்கப்படுவது உண்டு.

ஆனால், சூரியனில் ஏற்படும் சீற்றமோ, சூரியனில் இருந்து வீசி எறியப்படும் ஆற்றல் மொத்தைகளோ மக்களை நேரடியாக பாதிப்பதில்லை.

சூரியனில் கரும்புள்ளிகள் நிறைய இருக்கும்போதுதான் இத்தனை பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

அக்டோபர் 4 ஆம் தேதி சூரியனில் 126 கரும்புள்ளிகள் காணப்பட்டன. இதே மாதம் 21 ஆம் தேதி கரும்புள்ளிகளின் எண்ணிக்கை 207 ஆக அதிகரித்தது. கரும்புள்ளிகள் அதிகரிக்கும் போது தான் சூரியனின் குணம் கோபமாக மாறுகிறது.

சூரியனின் மேற்பரப்பில் மற்ற இடங்களைக் காட்டிலும் ஓரிடத்தில் வெப்பம் குறைவாக இருந்தால் அந்த இடம் நமக்குக் கரும் புள்ளியாகத் தெரிகிறது. கரும்புள்ளியைச் சுற்றி உள்ள இடத்தில் வெப்பம் 6000 டிகிரி செண்டிகிரேட் என்றால் கரும்புள்ளி உள்ள இடத்தில் வெப்பம் சுமார் 4200 டிகிரி செண்டிகிரேட் அளவுக்கு இருக்கலாம்.

பூமியிலிருந்து பார்த்தால் சிறியதாகத் தெரிகிறதே தவிர, மற்றபடி ஒரு கரும் புள்ளிக்குள் பூமியைப் போட்டு நிரப்ப முடியும். சூரியனில் தென்படும் கரும் புள்ளிகள் நிரந்தரமானவை அல்ல. சில நாட்களில் மறைந்து விடலாம். சூரியனில் கரும்புள்ளிகளே இல்லாத கட்டம் ஏற்படுவது உண்டு. கரும் புள்ளிகளின் எண்ணிக்கை உச்சத்தை எட்டுகிற கட்டமும் உண்டு. இதில் ஒரு வகையான கால ஒழுங்கு உள்ளது.

சூரியனில் மிக நீண்ட காலம் கரும்புள்ளிகளே தோன்றாமல் போகுமா?

கடந்த காலத்தில் நமக்குத் தெரிந்து குறைந்தது நான்கு தடவை அவ்விதம் ஏற்பட்டுள்ளது. கி.பி. 1645 முதல் 1715ம் ஆண்டு வரையிலான 70 ஆண்டுகளில் சூரியனில் கரும்புள்ளிகளே காணப்படவில்லை.

சூரியனின் கரும்புள்ளிகளை ஆராய்ந்தவரான எட்வர்ட் மாண்டர் என்ற விஞ்ஞானியைக் கௌரவிக்கும் வகையில் இக் காலகட்டத்துக்கு "மாண்டர் மினிமம்" (**Maunder Minimum**) என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கி.பி. 1280 - 1350 காலகட்டத்திலும் கி.பி.1460 - 1550 காலகட்டத்திலும் இவ்வித நிலைமை இருந்தது. மாண்டர் மினிமத்துக்குப் பிறகு கி.பி. 1790 முதல் 1830ம் ஆண்டு வரையிலான காலகட்டத்திலும் இதேபோல சூரியனில் அனேகமாகக் கரும்புள்ளிகளே காணப்படவில்லை

இதில் வேடிக்கை என்னவென்றால் 2012ம் ஆண்டு வாக்கில் சூரியனில் அதிகபட்சமாகக் கரும்புள்ளிகள் தோன்றும் என்றும், அதன் விளைவாக சூரியனில் கடும் சீற்றங்கள் ஏற்படும் என்றும், அதையடுத்து பூமிக்கே ஆபத்து ஏற்படும் என்ற கற்பனை அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஹாலிவுட் தயாரிப்பாக ஓர் ஆங்கிலப் படம் (2012 **- http://www.sonypictures.com/homevideo/2012/**) வெளியானது. இந்தியாவிலும் அது திரையிடப்பட்டது.

கடந்த 2008 ஆம் ஆண்டில் சூரியனில் கரும்புள்ளிகளே காணப்படவில்லை. பின்னர் இது படிப்படியாக அதிகரித்து ஆரம்பித்தது. சுமார் ஐந்தரை ஆண்டுக் காலம் இவ்விதம் அதிகரித்துக் கொண்டே போகும்.பின்னர் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும். அடுத்த ஐந்தரை ஆண்டுகளுக்குப் பிறகு சூரியனில் அனேகமாகக் கரும்புள்ளிகளே இராது. இப்படியாக ஒரு சுற்று முடிவடைவதற்கு சராசரியாக 11 ஆண்டுகள் ஆகின்றன. இதைக் கரும்புள்ளிக் காலவட்டம் (SunSpot Cycle) என்று குறிப்பிடுகிறார்கள்.

கரும்புள்ளிகளின் எண்ணிக்கை
ஏறுவதையும் இறங்குவதையும் இந்த
வரிவடிவப் படம் காட்டுகிறது. பின்னூட்டத்தில் பார்க்கவும் .


கரும்புள்ளிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதில் உலகில் இரு அமைப்புக்ள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை தனி பார்முலா அடிப்படையில் கரும் புள்ளிகளைக் கணக்கிடுகின்றன. மேலே கரும்புள்ளிகள் பற்றி அளிக்கப்பட்ட தகவல் அமெரிக்க NOAA அமைப்பின் ஒரு பிரிவு தெரிவித்ததாகும்.

கரும்புள்ளிகள் அதிகரித்துக் காணப்படும் கால கட்டத்தில் சூரியனில் ஏற்படும் கிளர்வுகள் பூமியை-- மனிதனின் பல செயல்பாடுகளைப் பாதிக்கின்றன். ஆகவே தான் நிபுணர்கள் சூரியன் மீது ஒரு கண் வைத்திருக்கிறார்கள்.விசேஷ செயற்கைக்கோள்களும் சூரியனைத் தொடர்ந்து கவனித்து தகவல்களை அளிக்கின்றன.

சூரியனில் கரும்புள்ளிகள் ஐந்தரை வருஷம் வரை உச்சத்தைத் தொடுகின்றது
பின் ஐந்தரை வருஷம் வரை குறைந்து கொண்டே போகிறது .ஆக ஏதோ சத்தியத்திற்கு கட்டுப்பட்டு சூரியன் நடந்து கொள்கிறது .பின் கொஞ்ச காலம் எந்த கரும்புள்ளி இல்லாமல் இருக்கிறது

இதெல்லாம் எப்படி நடக்கிறது ? ஏன் ?
தெரியவில்லை .

வியப்பூட்டும் விஞ்ஞான ஆய்வுகள் 7



சூப்பர் கன்டக்டிவிட்டி **(super conductivity**) என்ற இயல் . அதாவது உலோகங்களிலுள்ள வெப்பத்தைப் பற்றி விஞ்ஞான உலகம் தீவிரமாக ஆராய்ச்சி செய்கிறது.

இந்த இயலில் உலக நாடுகள் பணத்தை கொட்டோ கொட்டு என்று கொட்டி ஆராய்கிறது . இன்னும் விடை கிடைக்கவில்லை அப்படி என்ன ஆராய்ச்சி ?

ஒரு பொருளின் வெப்ப நிலை மைனஸ் 273 டிகிரிக்கு குறைந்தால் அந்த வெப்பநிலைக்குப் பெயர் " அப்ஸல்யூட் ஜீரோ**" (Absolute Zero)**

அப்படி என்ன மைனஸ் 273 டிகிரியில் அப்படி என்ன விசேஷம் ?

சொல்றேன்.

இதற்கு மேல் குளிர் என்பது விஞ்ஞான ரீதியாக இல்லை . இந்த மைனஸ் 273 டிகிரியில் சில வினோதங்கள் அந்த பொருளின் மீது விசித்திரமாக நிகழ்கின்றன . இது கற்பனை இல்லை , நிரூபிக்கபட்ட விஞ்ஞான உண்மை.

அதாவது, உலோகங்களிலுள்ள அணுவில் உள்ள எலக்ட்ரான்கள் வெளிவட்டத்தில் சுற்றிக் கொண்டிருப்பது முற்றிலுமாக நின்று போய் உஷ்ணம் என்பதே இல்லாத நிலை அந்த உலோகத்திற்கு வந்து விடுகிறது . இப்போது அது உலோகம்தானா ? என்ற கேள்வி விஞ்ஞானத்திற்கு வருகிறது . அது ஓரமாக இருக்கட்டும் .

இந்த மைனஸ் 273 டிகிரியில் உலோகங்களின் மின் தடைகளில் (Resistance) கணிசமான மாற்றம் ஏற்பட்டு . மின்சாரத்தைக் கடத்தும் தகுதி நேரடியாக அதிகமாகி விடுகிறது . மின்சாரத்தை தடுத்து நிறுத்த வேண்டிய தடை மின்சாரத்தை ஒரேயடியாகக் கடத்துகிறது . அந்த உலோகத்தின் மின் தடைக்கு என்னாச்சி ? இதென்ன மாறுபட்ட இயல்பு ?

அதாவது லாரி ஓட்டுவதற்கு "'பிரேக் " மிகவும் தேவையானது . "பிரேக் _ வேகத்திற்கு தடை .

அதே மாதிரி 'ரெஸிஸ்டன்ஸ் " என்பது மின்சார தடை . இந்த மின் தடையை எல்லா உலோகங்களுக்கும் அலோகங்களுக்கும் இருக்கும் . இந்த இயல்பான தடை இப்போது இல்லாமல் செய்து விடுகிறது இந்த மைனஸ் - 273 டிகிரி . இதனால் உலோகங்களில் பெரும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

அதாவது பிரேக்கே இல்லாத லாரி தலைதெறிக்க ஓடுவது மாதிரி மின்சாரம் மின் தடை ஏதுமின்றி சகட்டுமேனிக்கு பாய்கிறது . விஞ்ஞானமே இது பற்றி கொஞ்சம் பயந்துதான் இருக்கிறது.

ஒரு ஆங்கிலப் படத்தில் பொம்மை ஒன்று எல்லோரையும் விரட்டி விரட்டி கொலை செய்யுமே... பார்த்திருக்கீங்களா ? கடைசியில் கதாநாயகி பொம்மைக்குள் பேட்டரி இருக்கிறதா ... பார்க்கும் போது பேட்டரி இல்லாமல் , கையிலிருந்து பொம்மை குதித்து ஓடுமே .... - அது மாதிரி விஞ்ஞானிகளுக்கெல்லாம் மின் தடையை மீறிய மின்சாரப் பாய்ச்சல் உலோகங்களுக்குள் எப்படி வந்தது ? இங்கென்ன விஞ்ஞானப் பேயா உலோகம் / அலோகத்திற்குள் வந்தது ?

இது ஏன் ? தெரியவில்லை .

தெரிந்தால்,

நாளைய நவீன உலகத்தில் போக்குவரத்து , கம்யூட்டர், மின் சக்தி உற்பத்தி, விண்வெளிப் பயணம் அதுவும் ஒளியின் நிகர வேகத்திற்கு கலங்கள் உருவாகி வேற்று கிரகவாசிகளை சந்தித்து தலைப்பாக் கட்டு பிராணி சாப்பிட நீங்கள் ஏலியன்களை அழைக்கலாம்.

உலகில் விஞ்ஞானத்தில் ஏன் எல்லா துறைகளிலுமே பெருத்த மாற்றம் ஏற்படப் போகிறது. நிறைய விஞ்ஞான விதிகளிலும் மாற்றம் ஏற்பட்டு , ஒரு பொருள் பொருள்தானா என்பதற்கு நிறைய அத்தாட்சிகள் தேவைப்படும் . மொத்தத்தில் விஞ்ஞானம் மெஞ்ஞானத்தின் பிடிக்குள் இருக்கும் . மெஞ்ஞான சித்தாத்தங்கள் கோலோச்சும் . நிறைய மெஞ்ஞானப் பாடல்களுக்கு விஞ்ஞானிகளால் விளக்கம் கொடுக்கப்படலாம்.

மைனஸ் 273 டிகிரி வெப்ப நிலை என்பதை விட மிக உச்சக்கட்ட குளிர் என்பதே சரி.

இது பற்றி விளக்கம் உங்களுக்குத் தெரிந்தால் கோடி கோடியாய் பணமும் நோபிள் பரிசும் உங்கள் வீடு தேடி வரும்.

" எவன் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய இயற்கைத் தன்மையைக் கொடுத்து அவைகளைப் பயன்படுத்தும் வழியையும் அவைகளுக்கு அறிவித்தானோ அவன்தான் எங்கள் இறைவன்" என்றார் மூஸா


திருக்குர்ஆன் (20 : 50)

- மைனஸ் 273 டிகிரி என்பது ஒவ்வொரு பொருளின் இயற்கைத் தன்மை என்கிறது குர்ஆனின் விஞ்ஞான விளக்கம். இது என்ன இயற்கைத் தன்மைக்கு மாற்றமான குணம் எப்படி வந்தது என்பது பற்றி இனி விஞ்ஞானிகளும்தான் குர்ஆனைத் தூக்க வேண்டும் .

அதள பாதாளத்தில் அழகானதொரு நகரம் .

வியப்பூட்டும் விஞ்ஞான ஆய்வுகள் 8





وَاذْكُرُوْٓا اِذْ جَعَلَـكُمْ خُلَفَآءَ مِنْ بَعْدِ عَادٍ وَّبَوَّاَكُمْ فِى الْاَرْضِ تَتَّخِذُوْنَ مِنْ سُهُوْلِهَا قُصُوْرًا وَّتَـنْحِتُوْنَ الْجِبَالَ بُيُوْتًا فَاذْكُرُوْٓا اٰلَاۤءَ اللّٰهِ وَلَا تَعْثَوْا فِى الْاَرْضِ مُفْسِدِيْنَ

"(அன்றி) "ஆத்" (என்னும்) மக்களுக்குப் பின்னர் (அவர்களுடைய) பூமியில் உங்களைக் (தமூதுமக்களை) குடியேறச் செய்து (அதற்கு) உங்களை அதிபதிகளாக்கி வைத்ததை நீங்கள் நினைத்துப் பாருங்கள்.

நீங்கள் அதன் சமவெளியில் மாளிகைகளைக் கட்டியும், மலைகளைக் குடைந்தும் வீடுகளை அமைத்துக் கொள்கின்றீர்கள்.

ஆகவே, அல்லாஹ்வின் இவ்வருட்கொடைகளை எல்லாம் நீங்கள் நினைத்துப் பாருங்கள்; அன்றி பூமியில் விஷமம் செய்துகொண்டு அலையாதீர்கள்" (என்றும் கூறினார்.)
(அல்குர்ஆன் : 7:74)

தமூத் அல்லது ஸமூத் என்பது வடமேற்கு அரேபியாவில் வாழ்ந்த பழம்பெரும் ஒரு சமூகத்தாரின் பெயராகும்.

ஹிஜ்ர் என்னும் ஊர் அவர்களின் தலைநகரமாக விளங்கியது . அது இன்றும் "மதாயினு ஸாலிஹ்" என அழைக்கப்படுகிறது .

ஆது சமூகத்தாருக்குப் பின் வாழ்ந்த
தமூது எனும் இக்கூட்டத்தார்கள் கட்டடக் கலையில் சிறந்து விளங்கினர்.

கல் மாளிகைகள் , மலைக்குகைகள் , மலைப்பிரதேசமான கல் பாறை தரையில் கூட அழகாக தோண்டி அற்புதமான வீடுகளை தங்களுக்கு அமைத்துக் கொண்டனர். இவர்களின் நகரத்தை பெட்ரா (Petra) என்றழைக்கின்றனர்

இத் தமூது கூட்டத்தாரை நல்வழிப்படுத்த அவர்களில் ஒருவரான ஸாலிஹ் (அலை) அவர்களை நபியாக அல்லாஹ் அனுப்பினான் . அம்மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மலைப்பாறையைப் பிளந்து சினை ஒட்டகத்தை வரவழைத்து பின் அது ஒரு ஒட்டகக் கன்றையும் ஈன்றது .

தமூத் சமூகத்தார்கள் போன்று இன்றைய நவீன காலத்திலும் கனடாவில் அண்டர் கிரவுண்ட் நகரமான மாண்ட்ரீல் உருவாக்கி இருக்கிறார்கள் .

மொத்த நடைபாதை நீளம் 40 லட்சம் சதுர அடி..அதாவது 30 கி.மீட்டர் நீளமுள்ள நடைபாதைகள் கொண்ட நகரம்அமைந்திருப்பது பூமிக்கு அடியில்..

கனடா நாட்டின் ஒன்டாரியோ க்க்க்லி உள்ள டொரொண்டோ நகரின் கீழேதான் இந்த அதிசய அண்டர் கிரவுண்ட் நகரம் அமைந்து இருக்கிறது.

உலகில் பல நகரங்களில் அண்டர் கிரவுண்ட் மால்கள் வந்து விட்டன என்றாலும் டொரொண்டோ தான் உலகின் மிகப்பெரிய பாதாள பஜாரைக் கட்டி இருக்கிறது!

இதன் வெற்றிக்கு காரணம் கனடாவின் கடும் பனிப்பொழிவு!. டொரொண்டோ நகரில் வருடத்தில் ஆறுமாதம் வெளியே தலைகாட்ட முடியாது. வெயில் காலத்தில் 35 டிகிரி வரை வெப்பம் உயருவது போலவே, பனிக்காலத்தில் மைனஸ் 20 டிகிரியாக

ஊரே உறைந்து விடும். அந்த ஆறுமாதகால நீங்கள் வெளி உலகைப் பற்றிக் கவலையே இல்லாமல் இந்த பாதாள நகரில் உலவலாம்.

1900-ஆம் ஆண்டு ஈட்டன்ஸ் என்கிற நிறுவனம் பக்கத்து தெருவில் இருக்கும் இன்னொரு வனிகவளாகத்தை இணைக்க பூமிக்கடியில் சுரங்கப்பாதை அமைத்ததுதான் ஆரம்பம். இதை PATH என்று அழைக்கிறார்கள். பூமிக்கு அடியில் வழிகாட்ட அங்கங்கே இந்த PATH என்கிற பெயர் பொறித்து வைத்து இருப்பார்கள். அதில் 'பி' என்கிற எழுத்து சிகப்பு நிறத்தில் இருந்தால் அது தெற்கே போகும் பாதை.'ஏ' என்கிற எழுத்து ஆரஞ்சு நிறத்தில் இருந்தால் மேற்கே போகிறீர்கள் என்று பொருள்.இதே போல , மேற்கு 'டி' புளூ, கிழக்கு 'ஹெச்' மஞ்சள் என்று மக்கள் குழம்பிவிடாமல் இருக்கும் வகையில் எளிமையாக வடிவமைத்து இருக்கிறார்கள்.

பூமிக்கு அடியில் 1200 சரவணா ஸ்டோர்கள் ஒரே இடத்தில் இருந்தால் எவ்வளவு பெரிதாக இருக்குமோ அந்தளவுக்கு பிரமாண்டமான அண்டர் கிரவுண்ட் உலகம் மாண்ட்ரீல் இது!

உணவகங்கள்,திரை அரங்குகள், இருக்கின்றன. ஆறு பெரிய அடுக்குமாடி வணிக வளாகங்கள் இணைக்கப்பட்டு இருக்கின்றன. யூனியன் ஸ்டேஷன் என்கிற நகரின் பிரதான ரயில் நிலையம்,5 சப்வே ரயில் நிலையங்கள், நான்கு மால்கள், 20 பிரமாண்ட கார் பார்க்குகள் இணைக்கப்பட்டு இருக்கின்றன. 2014-ம் ஆண்டு முதல் இதன் விரிவாக்கப் பணிகளை மீண்டும் தொடங்கப்பட்டு இருக்கின்றன.

இந்த பாதாள நகரம் விரைவில் இரண்டு மடங்காகப் போகிறது. மனிதர்கள் மட்டுமின்றி இதன் உள்ளே பயணிக்க வாகனங்களும் வரலாம். நம்ம ஊரிலும் பூமிக்கடியில் ஒரு ரங்கநாதன் தெருவும் பாண்டி பஜாரும் அமைத்தால் நாமும் கோடைகாலத்தை கொண்டாடலாம்.

பெட்ராவும் , மாண்ட்ரீலும் மனிதனின் கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்

பூமியின் அடியாழத்தில் 100 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய நீர்

வியப்பூட்டும் விஞ்ஞான ஆய்வுகள் 9



قُلْ اَرَءَيْتُمْ اِنْ اَصْبَحَ مَآؤُكُمْ غَوْرًا فَمَنْ يَّاْتِيْكُمْ بِمَآءٍ مَّعِيْنٍ
(பின்னும் நபியே!) நீங்கள் கூறுங்கள்: "(நீங்கள் குடிக்கும்) தண்ணீர் பூமிக்குள் வெகு ஆழத்தில் சென்றுவிட்டால், பிறகு தண்ணீரின் (வேறொரு) ஊற்றை உங்களுக்குக் கொண்டு வருபவன் யாரென்று கவனித்தீர்களா?
(அல்குர்ஆன் : 67:30)

அக்காலத்தில் திரு மக்காவில் ஜம்ஜம் கிணறும் மைமூனுல் ஹள்றமீயின் கிணறும் தான் இருந்தன இவ்விரு கிணற்று தண்ணீர் தான் பொதுமக்களின் சேவைகளுக்கு உதவியாக இருந்தது .இவ்விரண்டின் தண்ணீரும் பூமிக்குள்ளே வற்றி போய் விடுமாயின் உங்களுக்கு ஊறுகிற தண்ணீரை கொண்டு வருவது யார் ?...

என்று வினவுமாறு நபி ஸல் அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது.
இவ்வாலயத்தை ஓதி முடித்தவுடன் இதிலுள்ள கேள்விக்குப் பதில் அளிக்கும் தோரணையில் "ரப்புல் ஆலமீன் கொண்டு வருவான் " என்று கூற வேண்டும் என ஹதீஸில் கூறப் பட்டிருக்கிறது

ஓர் ஆசிரியர் தன்னுடைய மாணவனுக்கு இந்த வசனத்தை கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார் . அங்கு ஒரு ஜிந்தீக் அதாவது அல்லாஹுத் தஆலாவின் மீது விசுவாசமற்றவனும் பொதுவுடமைக் கொள்கையுடையவனுமான ஒருவன் இதனை கேட்டுக் கொண்டிருந்து கோடாரியும் கடப்பாரையும் அதனைத் திரும்பக் கொண்டுவர முடியும் என்று குறும்புத்தனமாக கூறினான்.

அவன் அன்று இரவு தூங்கி எழுந்து திருக்கையில் கண் குருடனாக போய்விட்டான் " இப்பொழுது உனது கண்ணிலுள்ள நீர் வற்றிப் போய்விட்டது கோடாரியும் கடப்பாரையும் அதனை திரும்ப கொண்டுவர முடியுமா ? "என்று கூறுக என அவனுக்கு அசரீரி கேட்டதாம் என தஃப்ஸீர் ஜாஹிதியில் எழுதப்பட்டிருக்கிறது .

இந்த வசனத்தில் 'வெகு அழத்திற்குள் போய்விடும் ' என்பதை குறிக்க ஃகவ்ர் எனும் சொல் மூலத்தில் ஆளப்பட்டுள்ளது இது 'ஊறுதல்' என்பதற்கு எதிர்பதமாகும்.

இதனாலேயே இவ்வசனத்தின் அடுத்த தொடர் உங்களுக்கு வேறு ஒரு நீருற்றை கொண்டு வருபவர் யார் என்று நீங்கள் எனக்குச் சொல்லுங்கள் என கேட்குமாறு சொல்கிறது .

அதாவது பொங்கிப் பெருகி நிலத்தின் மேற்பரப்பில் பிரவாகம் எடுத்து ஓடுகின்ற தண்ணீரை உங்களுக்கு கொண்டு வருபவர் வேறு யார் ? அதாவது இதற்கு வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் ஆற்றல் கிடையாது

அவனது கருணை மற்றும் கிருபை காரணமாக உங்களுக்காகத் தண்ணீரை பூமியில் அவன் ஊரைச் செய்தான் இதை அடியார்களின் தேவைக்கேற்ப குறைவாகவோ அதிகமாகவோ பூமியின் பல்வேறு பகுதியில் ஓடச் செய்தான்.

"நூறு கோடி ஆண்டுகள் பழமையான நீர் பூமிக்கடியில் அதிகம் உள்ளது என்பதாக விஞ்ஞானம் கண்டு பிடித்துள்ளது.

நிலத்துக்கு கீழே மிகவும் ஆழத்தில் உள்ள பாறை இடுக்குகளில் காணப்படுகின்ற உலகின் மிகப் பழமையான தண்ணீர், நாம் ஏற்கனவே நினைத்ததை விட மிகவும் அதிகமான அளவுகளில் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்

பூமிக்கடியில் பல கிலோமீட்டர்கள் ஆழத்தில் 100 கோடி ஆண்டுகள் கணக்கில் பழமையான இப்படியான தண்ணீர் காணப்படுகிறது. இந்த தண்ணீர் பூமியின் மேற்பரப்பில் ஒரு காலத்தில் ஓடிய ஆறு மற்றும் நீருற்றுகளாக இருக்கும் என்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள் . உதாரணமாக சரஸ்வதி என்ற பெரிய நதி இவ்வுலகை விட்டு மறைந்து விட்டதாக ஒரு கருத்துக்கோள் உள்ளது . இதைத்தான் குர்ஆனில்...

"(நீங்கள் குடிக்கும்) தண்ணீர் பூமிக்குள் வெகு ஆழத்தில் சென்றுவிட்டால் " என்கிறது

11 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் என்ற அளவில் இந்த பழைய தண்ணீர் இருக்கலாம் என ஆய்வாளர்கள் தற்போது கணித்துள்ளனர். அதாவது உலகிலுள்ள அனைத்து ஆறுகள், ஏரிகள், குளங்கள் அனைத்திலும் இருக்கின்ற நீரை விட புவியின் மேற்பரப்புக்கு மிக ஆழத்தில் இருக்கின்ற இந்த பழைய தண்ணீரின் அளவு அதிகம்.

அமெரிக்கன் ஜியோஃபிஸிகல் யூனியன் என்ற அறிவியல் கழகத்தின் இலையுதிர்காலத்து மாநாட்டில் இந்த விஷயம் விவாதிக்கப்பட்டுள்ளது.

தவிர "நேச்சர் " என்ற அறிவியல் சஞ்சிகையிலும் இந்த ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது.

பூமிக்கடியில் கிலோமீட்டர்கள் ஆழத்தில் இந்த தண்ணீர் இருந்தும், தண்ணீருக்கும் பாறைகளுக்கு இடையிலான நடக்கின்ற ரசாயன மாற்றங்களால் ஹைட்ரஜன் வாயு உருவாவதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஹைட்ரஜன் என்பது சில வகை நுண்ணுயிர்களின் உணவு ஆதாரமாக இருக்கிறது.

எனவே இவ்வளவு ஆழமான இடங்களிலும், உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியம் இருப்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

பழைய தண்ணீர் பற்றி ஆய்வு செய்துள்ள விஞ்ஞானிகளில் ஒருவரான ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் கிறிஸ் பல்லென்டின் பழைய தண்ணீர் பற்றி பிபிசியிடம் விளக்கினார்.


இந்த தண்ணீர் மிகவும் அதிகமான உப்புத்தன்மை கொண்டுள்ளது என்றும் அதில் யாரும் விழுந்தால் சாவுக் கடலைப் போல மிதப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

"ஆனால் இந்த மிகப் பழைய தண்ணீர்ல் உயிர்கள் வாழத் தேவையான இரசாயன மூலக்கூறுகள் இருக்கின்றன. இந்த மாதிரியான இராயானங்கள் இருந்தால் அதில் நுண்ணுயிர்கள் இருக்கும் என்பது மாதிரியான சில இடங்கள் நமக்கு தெரியும்."

கனடாவில் பூமிக்கு அடியில் கிட்டத்தட்ட இரண்டரை கிலோமீட்டர்கள் ஆழத்தில் கண்டெடுக்கப்பட்ட தண்ணீர் 250 கோடி ஆண்டுகள் பழமையானது என ஆய்வுகள் காட்டியுள்ளன.

இதுவரையில் பூமியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பழமையான தண்ணீர் இதுதான்.
சுரங்கங்களில் பழைய தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டது (படம்)

இல்லாமையிலிருந்து எல்லாம்.
அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 1



اَوَلَمْ يَرَ الَّذِيْنَ كَفَرُوْۤا اَنَّ السَّمٰوٰتِ وَالْاَرْضَ كَانَـتَا رَتْقًا فَفَتَقْنٰهُمَا وَجَعَلْنَا مِنَ الْمَآءِ كُلَّ شَىْءٍ حَىٍّ اَفَلَا يُؤْمِنُوْنَ

(ஆரம்பத்தில்) வானம் (என்றும்) பூமி (என்றும் தனித்தனியாக) இல்லாமல் இருந்ததை நாமே பிரித்தமைத்தமைத்தோம் என்பதையும் , உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரிலிருந்தே படைத்தோம் என்பதையும் இந்நிராகரிப்பவர்கள் கவனிக்க வேண்டாமா ? (இதை) அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்களா?
(அல்குர்ஆன் : 21:30)
பிரபஞ்சத்தின் துவக்கத்தை பற்றி சொல்வது ஓர் அற்புதச் செயல் போலத்தான் தோன்றுகிறது. ஒருகணத்தில் உருவானது என்கிறார்கள் . அதை புரிந்துகொள்ள நம் சம்பிரதாயச் சிந்தனை முறையே மாற்றிக் கொள்ள வேண்டி இருக்கிறது !
13.7 பில்லியன் வருடங்களாக அதாவது 1370 கோடி வருடங்களுக்கு முன்பாக ஒரு மஹா வெடிப்பு (Big Bank) வெடித்தது என்பதை ஒரு மனிதனாக உங்களால் கற்பனைப் பண்ணி பார்க்கவே முடியாது. இலக்கங்களாக எழுதினாலும் அதன் தாக்கம் புரியாது . அதனால் அதை ஒரு உதாரணத்தின் மூலம் சுலபமாக புரிய வைக்க விஞ்ஞானிகள் முயல்கிறார்கள்.
அண்டம் இப்போதும் விரிவடைகிறது என்று சொன்னால்,எப்படி தெரியும் என்ற கேள்வி உங்களுக்கு எழும் அல்லவா ?
சொல்றேன் . பூமியிலிருந்து நவீன தொலைநோக்கிக் கருவிகள் மூலம் அண்டத்தின் எல்லைவரை பார்க்கும்போது அங்கேயுள்ள காலக்ஸிகள் (Galaxy) நம்மை விட்டு விலகிச் செல்வதை அறியமுடிகிறது.
உதாரணமாக பலூனில் பேனாவின் மூலம் சுற்றிவர புள்ளிகளை இட்டு பின்னர் அந்த பலூனை படிப்படியாக பெரிதாக ஊதும் போது , அதில் உள்ள புள்ளிகள் எப்படி ஒன்றைவிட்டு ஒன்று விலகிச் செல்லுமோ அப்படி அண்டத்தின் எல்லைகளில் இருக்கும் கேலக்ஸிகளும் விலகிச் செல்கின்றன .

(எவருடைய உதவியும் இன்றி) நம்முடைய சக்தியைக் கொண்டே வானத்தை அமைத்தோம் . நிச்சயமாக நாம் (அதனை அவர்களின் அறிவிற்கெல்லாம் எட்டாதவாறு) மிக்க விசாலமாக்கியும் வருகின்றோம். குர்ஆன் (51: 47)
ஒரு பேச்சுக்கு 13.7 பில்லியன் வருடங்களே 'ஒரு வருடம்' என்று கற்பனையாக எடுத்துக் கொள்ளுங்கள். இந்தக் கட்டுரையை நீங்கள் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் தேதி படித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள் . அதாவது சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர் 2020ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் தேதி பிக் பேங்க் என்னும் அந்த பெருவெடிப்பு நடந்திருக்கும் .

நமது சூரியன் 2021 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதியில்தான் உருவாகியிருக்கும். பூமியில் உயிரினம் தோன்றியது இன்று காலைதான். அதாவது 2021 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதியில காலை 7 மணிக்கு . இன்று இன்று காலை 11 மணிக்கு மனிதன் பூமியில் தோன்றினான் . இரண்டு செகண்டுக்கு சற்றுமுன்னர் மோசேயுடன் கடவுள் பேசினார் . ஒரு செகண்டுக்கு முன்னர் இயேசு பூமியில் பிறந்தார். அரை செக்கண்டிற்கு முன்னர் அண்ணலெம் பெருமானர் (ஸல்) அவர்கள் மிஹ்ராஜில் இறைவனிடம் உரையாடி ஐங்காலத் தொழுகையை வாங்கிச் சென்றார்கள் . இத்தனையும் 13.7 பில்லியன் வருடங்களே 'ஒரு வருடம்' என்று கற்பனையாக எடுத்துக் கொள்ளும் போது நடக்கிறது .
இப்போது நான் சொன்ன இந்த கால அளவீடுகளில் நீங்கள் புரிந்து கொண்டால் , இதையும் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் ! ஒரு வருடத்திற்கு முன்னர் பெருவெடிப்பில் அண்டம் தோன்றியது என்று வைத்துக் கொண்டால், கடவுள் மனிதனுடன் தொடர்பு கொண்டது இரண்டு செகண்டுகளுக்கு முன்னர்தான் . அதாவது 13.7 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் தோன்றிய அண்டத்தில் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் கடவுள் மனிதனுடன் பேசியிருக்கிறார் எவ்வளவு பெரிய இடைவெளி என்று யோசித்துப் பாருங்கள் . அது மட்டுமல்லாமல் பிரபஞ்சம் ஒரு புள்ளியாக சுருங்கி இருந்த போதும், அதற்கு முன்னரும் கடவுள் எங்கிருந்தார்? என்ன செய்து கொண்டிருந்தார் ? என்ற கேள்விகளும் அறிவியலில் கேட்கப்படுகிறது .

இது என்ன முட்டாள்தனமான கேள்விகள் கடவுள் எங்கிருந்தார் ? என்ன செய்து கொண்டிருந்தார் ? என்று கேட்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் கடவுள் எங்கும் இருப்பவரல்லவா ? என்றுதான் நாம் சிந்திப்போம் . ஆனால் அண்டம் புள்ளியாக ஒடுங்கியிருந்த நிலையில் அந்த " எங்கும் " என்ற சொல்லுக்கே அர்த்தம் இல்லை என்கிறது இதை அறிவியல் .

இடம் , காலம் , தூரம், வேகம், வெளிச்சம் என எதுவுமே இல்லாத சூனியம் அது . அங்கு "எங்கும் " என்பதும் இல்லை "எதுவும் " என்பதும் இல்லை . இதை சரியாக நீங்கள் புரிந்து கொண்டால்தான் மிக முக்கியமான மேலே உள்ள கேள்விகளை விளக்க முடியும்.

அண்டம் (universe) என்பது நம்மால் கற்பனையே பண்ண முடியாத அளவுக்கு பெரியது . பூமியிலும் , பூமிக்கு வெளியிலும் இரண்டு இடங்களுக்கு இடையில் இருக்கும் தூரத்தை நம்மால் கணித்துச் சொல்ல முடிகிறது . நாம் நடப்பதாக இருந்தாலும், பிரயாணம் செய்வதாக இருந்தாலும் இந்த இடை தூரத்தினூடாகத்தான் இயங்க முடியும்.

உங்கள் காலை தூக்கி ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு இடமாவது இருந்தால்தான் , உங்களால் ஒரு அந்த ஒரு அடி தூரத்தை கடக்க முடியும் . இந்த இடைவெளி அதாவது இடையில் இருக்கும் வெளி பூமியில் இருந்தால் அதை "தூரம் " என்கிறோம் . அதுவே பூமிக்கு வெளியே இருந்தால் "வெளி " என்கிறோம்.

இப்போது கற்பனையாக நாம் நிற்கும் பூமி படிப்படியாக சுருங்கி ஒரு புள்ளியாகி விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். பூமி புள்ளியாகி விட்டதா ?

அந்தப் புள்ளியிலேயே நிற்கும் நீங்கள் எங்கு எப்படி நகர முடியும் ? நீங்கள் நகர்வதற்கு 'இடம்' என்பதே இல்லாமல் போய்விடுமல்லவா ?

அதைத்தொடர்ந்து, கோடான கோடி நட்சத்திரங்களைக் கொண்ட பேரண்டம் படிப்படியாக சுருங்குகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள் . அண்டம் மொத்தமாக சுருங்கி ஒரு புள்ளியாகிறது. ஆனால் நீங்கள் மட்டும் முழுமையாக இருக்கிறீர்கள் . அப்படியாயின் நீங்கள் நடப்பதற்கும் நகர்வதற்கும் இடமே அங்கு இல்லாமல் போய்விடுமல்லவா ?

அங்கு இருப்பது நீங்களும் ஒன்றுமே இல்லாத வெறும் சூனியமும்தான் . உங்களால் எங்கும் நடக்க முடியாது; நடப்பதற்குத்தான் இடமில்லையே . பார்க்கமுடியாது; பார்ப்பதற்குத்தான் பொருளில்லையே. பேச முடியாது ; பேச்சை கடத்தும் சாதனம்தான் ஏதுமில்லையே . எதையும் சிந்திக்க முடியாது ; சிந்திப்பதற்குத்தான் எதுவும் கிடையாதே ; காரணம் சிந்தனை என்பதே நம்மைச் சுற்றி உள்ள பொருள்கள் , சம்பவங்கள் சார்ந்ததுதானே ! அவை எதுவுமே இல்லை என்றால் சிந்தனைக்கும் இடம் இல்லை .

கீழ் , மேல் , இடம் , வலம் என்ற திசைகள் கூட இல்லை . அப்படிப்பட்ட நிலையில் நீங்கள் அங்கு என்ன செய்வீர்கள் ? அப்படியே உங்களை கோடி ஆண்டுகள் விட்டு விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள் ?

இதுபோல அண்டம் தோன்றுவதற்கு முன்னர் , அது ஒரு புள்ளியாக ஒடுங்கி , இருந்தல்லவா ? கடவுள் எப்போதும் உள்ளவர் அல்லவா ? எனவே அண்ட வெடுப்பின்போதும் , அதற்கு முன்னரும் கடவுள் எங்கிருந்தார் ? என்ன செய்தார் ? என்ற கேள்விகள் எழுவது நியாயமாக இருக்கிறதா ? அறிவியலுடன் இறையியல் மோதும் முக்கிய இடமாக இது இருக்கிறது .இங்கு கடவுளுக்கான ஒரு விளக்கத்தைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகிறது .

"லா இலாஹ இல்லல்லாஹ் "

இல்லை ; வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமே இல்லை (எதுவுமில்லை)

இதையெல்லாம் சிந்திக்கும் மனிதனை இன்ன பொருள் என்று கூறுவதற்கு இல்லாத நிலையில் இறைவன் படைத்தான் .

هَلْ اَتٰى عَلَى الْاِنْسَانِ حِيْنٌ مِّنَ الدَّهْرِ لَمْ يَكُنْ شَيْـًٔـــا مَّذْكُوْرًا

ஒவ்வொரு மனிதனுக்கும் (அவன் வெளிவருவதற்கு) முன்னர் ஒரு காலம் செல்லவில்லையா? அதில் அவன், இன்ன பொருள் என்றும் கூறுவதற்கில்லாத நிலைமையிலிருந்தான். (குர்ஆன் : 76:1)

இந்த அண்டத்தைப் படைக்கவா காரணம் காரியம் அவனுக்கு வேண்டும் ?

بَدِيْعُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَ اِذَا قَضٰٓى اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ لَهٗ كُنْ فَيَكُوْنُ


(அன்றி) அவனே வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன். அவன் எதைப் படைக்கக் கருதினாலும் அதனை "ஆகுக!" எனக் கூறிய மாத்திரத்தில் உடனே அது ஆகிவிடுகிறது. (அல்குர்ஆன் : 2:117)

ஐன்ஸ்டைன் இது பற்றி கூறும் போது ,

"நம் வாழ்விலேயே மிக மிக அழகான அனுபவம் வியப்புதான். உண்மையான கலை அனுபவம் உண்மையான அறிவியல் இரண்டிற்குமேயுள்ள ஆதாரமான உணர்ச்சி இது . இதை அறியாதவர் , வியக்க இயலாதவர், ஆச்சரியப்பட முடியாதவர், இறந்தவருக்கு ஈடானவர். கொஞ்சம் பயம் கலந்த சந்தேகமும் , வியப்பும்தான் மனித உணர்ச்சிகளுக்கு பிறப்பிடம் .

நம்மால் இதுவரை அறியப்படாத , அறிய முடியாத ஏதோ ஒன்று இருக்கிறது . அது நம் மிகத் தீவிரமான தர்க்கங்களுக்கும், மிக நுட்பமான அறிவுக்கும் எட்டாத ஒரு ஜொலிக்கும் அழகு . நம்மின் ஆதியாரம்ப குணங்களினால் மட்டுமே அணுகக் கூடிய அந்த அனுபவம்தான் , உண்மையான மனித உணர்ச்சி என்பேன் . எனக்கு இது போதும் வாழ்வின் சாசுவத்தின் அறிமுகம் போதும் ; புறவுலகின் ஆச்சரியகரமான அமைப்பை பற்றி எனக்கு கிடைத்த சொற்ப காட்சி , கடைக்கண் பார்வை அது போதும் . இயற்கையின் காரணத்தை அறிந்து கொள்ள ஏற்பட்ட விருப்பம் அது மட்டுமே போதும் " என்கிறார் .

அணுவுக்குள்ளும் அதிர்வுகள் எனும் இறை துதிகள் .
அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 2



அப்துஸ் ஸலாம். இவர்தான் 1979-ல் பௌதிகத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஒரே ஒரு பாகிஸ்தானியர் .
ஸலாம் ஆராய்ச்சி தொடங்கிய போது ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் பொது சார்பியல் தத்துவத்தின் மூலம் பிரபஞ்சத்தில் 4 சக்திகள் தனிப்பட்டு இயங்குவதாக தென்பட்டது
1. புவி ஈர்ப்பு சக்தி. 2. மின்காந்த சக்தி .
3அணுக்கருவிற்குள் இருக்கும் வலுவான அணுக்கரு சக்தி ,
4. அணுக் கருவிற்குள் இருக்கும் மெலிதான அணுக்கரு சக்தி.

இந்த 4. சக்திகளைக் கொண்டுதான் பிரபஞ்ச இயக்கங்கள் அனைத்தையும் புரிய வைக்க முடிந்தது.
ஏன் நான்கு ..? இந்த நான்கையும் இணைத்து ஒன்று என்று சொல்ல முடியாதா ? என்று ஐன்ஸ்டன் கேட்டு 4 கையும் இணைத்து (unified Field theory) என்ற ஒன்றாக்க , தன் வாழ்நாளின் கடைசி வரை முயற்சித்து ஐன்ஸ்டைன் தோற்றுப் போய் மரணித்தும் விட்டார்.
அப்துஸ் ஸலாம் அவர்கள் "புவி ஈர்ப்பு விசையைத் தற்போதைக்கு விட்டு விட்டு மின் காந்த விசையையும், மெலிதான அணுக்கரு விசையையும் எடுத்து இணைத்து வெற்றி பெற்றார்.
அப்துஸ் ஸலாமிடம், "மின் காந்த விசையையும் , அணுக்கருவுக்குள் உள்ள விசையையும் எப்படி உங்களால் ஒரு சேர சிந்திக்க முடிந்தது ? என்று கேட்டபோது .
وَمِنْ كُلِّ شَىْءٍ خَلَقْنَا زَوْجَيْنِ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ
ஒவ்வொரு வஸ்துக்களையும் (ஆண், பெண் கொண்ட) ஜோடி ஜோடியாகவே நாம் படைத்திருக்கின்றோம். (இதனைக் கொண்டு) நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவீர்களாக! (குர்ஆன் : 51:49)
என்ற குர்ஆன் வசனத்தை மேற்கோள் காட்டினார் .
மேற்கண்ட நான்கு சக்திகளையும் இணைப்பதற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது ஈர்ப்புவிசை மட்டும்தான். ஈர்ப்பு விசையின் வலிமை , வலிமையற்ற தன்மைகள் பற்றிய சந்தேகம் விஞ்ஞானிகளுக்கு எழுந்தது .
ஒருவகையில் பார்த்தால் இந்த அண்டத்தில் உள்ள எல்லாமே ஈர்ப்பு விசையினால் ஒன்றறொன்று கவர்ந்தபடியே இருக்கின்றன . மிகவும் வலிமையான சக்தியாக அது இருக்க வேண்டிய நிலையில் ஏன் வலிமையற்றதாகக் காணப்படுகிறது ?
அண்டத்தில் உள்ள வெற்றிடம் எங்கும் இந்த ஈர்ப்பு விசை பரவியிருக்கிறது .150 மில்லியன் கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் பூமியைத் தனது ஈர்ப்பு விசையினாலேயே இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறது சூரியன்.
சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் இருப்பது எல்லாமே மிகப்பெரிய வெற்றிடம் .இந்த வெற்றிடத்தினூடாக எப்படி பூமியை சூரியன் இழுக்கிறது ? எதைக் கொண்டு இழுக்கிறது ? இழுக்க பயன்படுத்துவது எதுவானாலும் அது பூமியிலிருந்து சூரியன் வரை 150 மில்லியன் கிலோ மீட்டருக்கு அண்டவெளி எங்கும் நிறைந்து இருக்க வேண்டும் அல்லவா ?
அணுக்கருவில் இருக்கும் நியூட்ரான் புரோட்டான் இரண்டையும் பிரித்து பார்த்தபோது அவற்றினுள் ஒரேவிதமான குவார்க்குகள் இருந்தன நவீன இயற்பியலில் குவார்க்குகளுக்குள் என்ன இருக்கும்.. என்று சிந்தித்தபோது கிடைத்த முடிவுகள் ஆச்சரியமானவை. குவார்க்குகளுக்குள்ளும் கிராவிட்டான் என்ற மிகமிகச்சிறிய அதிர்வலைகளால் அதிர்ந்து கொண்டிருக்கின்றன என்பது புரிந்தது .
கிடைத்தது . அதைத்தான் கிராவிட்டான்கள் (Graviton) என்று விஞ்ஞானிகள் அழைக்கிறார்கள் .
இந்த கிராவிட்டானின் ஏதோ ஒரு செயற்பாட்டினால்தான் விசைகளை ஒன்றாக்கும் சமன்பாடு சாத்தியமாகவில்லை என்பதும் புரிந்தது
கிராவிட்டானின் இயக்கம் வயலினில் அல்லது கிடாரில் இருக்கும் அதிர்விழையில் (strings) ஏற்படுத்தும் அதிர்வுகளின் செயல்பாடு என்று கண்டுபிடிக்கப்பட்டது .
இந்த கிராவிட்டான்கள் இடம் விட்டு இடம் நகர்வதாலேயே வலிமையற்ற தன்மையை ஏற்படுத்துகிறது என்ற முடிவுக்கும் விஞ்ஞானிகள் வரமுடிந்தது.
இடம் விட்டு இடம் நகர்தலில் கூட தாளகதியில் கிராவிட்டான்கள் நகருகிறது . சூஃபியக்களின் ஸமா நடனம் போல.

இந்த அதிர்விழைகளின் அதிர்வுகள் எல்லாம் ஏதோ ஒரு சந்தேகத்தின் அடிப்படையில் எடுக்கப்படவில்லை . முழுமையான கணித கணிப்பீடுகளை வைத்தே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. கணித முடிவுகள் என்றுமே மாறாதவை.

அதாவது அணுவைக் கடைசி வரை பிரித்து இறுதியில் அதனுள் என்ன இருக்கிறது என்று பார்த்தால் அங்கு ஒன்றுமே இல்லை . அங்கு இருப்பது எல்லாம் நுண்ணிய இழைகளின் அதிர்வுகள் அதனால் ஏற்படும் ஒருவிதமான இசை மட்டும் அங்கு காணப்படுகிறது .

இந்து மதத்தில் தாள லயத்துடன் சிவனால் ஆடப்படும் நடனம்தான் இந்த பிரபஞ்சம் ." நாத விந்து கலாதி நமோ நம " என்கிறார் அருணகிரிநாதர் .


அணுவுக்குள் இருக்கும் உப அணுத்துகள் கூட இந்த அதிர்விழைகளாகத்தான் துடித்துக் கொண்டிருக்கின்றன. அண்டம் முழுவதும் பரவியிருக்கும் கிராவிட்டான்களும் அதிர்விழைகளாகவே துடித்துக் கொண்டிருக்கின்றன அணு முதல் அண்டம் வரை இந்த அதிர்விழைகளின் இசை ராஜ்ஜியம் நடந்து கொண்டிருக்கிறது .

ஆனால் இஸ்லாம் அணு முதல் அண்டம் வரை துதி எனும் அதிர்வலைகள் இருந்து கொண்டேயிருக்கின்றன என்கிறது.

تُسَبِّحُ لَهُ السَّمٰوٰتُ السَّبْعُ وَالْاَرْضُ وَمَنْ فِيْهِنَّ وَاِنْ مِّنْ شَىْءٍ اِلَّا يُسَبِّحُ بِحَمْدِهٖ وَلٰـكِنْ لَّا تَفْقَهُوْنَ تَسْبِيْحَهُمْ اِنَّهٗ كَانَ حَلِيْمًا غَفُوْرًا

ஏழு வானங்களும் பூமியும் இவற்றிலுள்ள அனைத்தும் அவனைப் புகழ்ந்து கொண்டே இருக்கின்றன. (இவற்றில்) ஒன்றுமே அவனைத் துதி செய்து புகழாதிருக்கவில்லை. எனினும், அவை துதி செய்து புகழ்வதை நீங்கள் அறிந்து கொள்வதில்லை. நிச்சயமாக அவன் பொறுமையுடையவனும், மன்னிப்புடையவனாகவும் இருக்கின்றான். (குர்ஆன் : 17:44)

பற்பல பரிமாணங்கள்
அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 3



ஐன்ஸ்டைன் வெளியிட்ட இன்னுமொரு கோட்பாடுதான்

"தியரி ஆஃப் எவ்ரிதிங் " (Theory of Everything) என்பதாகும். அதாவது '' பெரிதாக விரிவடைந்திருக்கும் அண்டத்திற்கும், சிறியதாக இருக்கும் அணுவுக்கும் அடிப்படையாக இருக்கும் விசைகள் (Forces) அனைத்தும் ஒரே கணிதச் சமன்பாட்டில் அடங்கும் '' என்று அந்த விதி சொன்னது.

இந்த கோட்பாட்டில் முடிவு கிடைத்தாலும், அந்த முடிவில் ஒரு குழப்பம் இருந்தது. காரணம் இந்த சமன்பாட்டை தேடிப் போனது, கிடைத்ததோ ஐந்து சமன்பாடுகள். ஒரு கிணறு வெட்ட , ஐந்து பூதங்கள் கிளம்பிய கதையாகி விட்டது

1) எம் தியரி (M Theory) , 2) பற்பல பரிமாணங்கள் (Multi dimensions), 3) மெம்ப்ரான் (Membrane) , 4) பாரலல் யூனிவேர்ஸ் , 5) மல்டிவேர்ஸ் (Multiverse) எனப் பிரமிப்பூட்டும் ஆச்சரியக் கோட்பாடுகள் .

இந்த 5 சமன்பாடுகள் உண்மைபோல இருப்பவை.தப்பே இல்லாதவை . இங்கு தான் குழப்பம் ஏற்பட்டது. இந்த இடத்தில் ஏதோ தவறு இருக்கின்றது என்பதை நவீன இயற்பியலாளர்கள் புரிந்து கொண்டனர் . அந்த தவறும் என்னவென்று கண்டுபிடிக்கப்பட்டது .

எட்வர்ட் விட்டன் (Edward witten) என்பவர் 1990-ல் இந்த 5 சமன்பாடுகளையும் ஒன்று சேர்த்து "எம் தியரி " உருவாக்கினார்.

அதாவது இதுவரை நாம் மூன்று பரிமாணங்கள் (Dimensions) (நீளம், அகலம் , உயரம்) உள்ளதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். அதனுடன் ஐன்ஸ்டைன் கூறிய ஸ்பேஸ் டைம் (spacetime) என்ற காலத்தை நான்காவது பரிமாணமாக எடுத்துக் கொள்ளலாம் .அத்தோடு பரிமாணங்களின் எண்ணிக்கை நின்றுவிடவில்லை .இவை தவிர்த்து ஆறு பரிமாணங்கள் உள்ளன . அதாவது மேலே சொன்ன 5 கோட்பாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பரிமாணத்துக்கு உரியவை.

நாம் வாழும் பூமியிலும் அண்டத்திலும் முன் பின் , இடம் வலம், மேல் கீழ் என்ற மூன்று பரிமாணங்கள் இருக்கின்றன என்பதை மட்டுமே நம்மால் கற்பனை செய்ய முடிகிறது. அதற்கு மேல் நான்காவதாக காலத்தை நம்மால் புரிந்து கொள்ள கடினமாக இருக்கும் போது , பரிமாணங்கள் மொத்தம் பத்து இருக்கின்றன என்றும்

"மிகைஈர்ப்புவிசை" (Supergravitation) என்ற ஒரு பரிமாணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு , ஆக மொத்தம் இது 11 பரிமாணங்கள் உண்டு என்ற முடிவுக்கு நவீன விஞ்ஞானம் வந்துள்ளது .

அண்டத்தில் இருக்கும் அனைத்து பரிமாணங்களும், ஒரு நுண்ணிய தோல் போன்ற அமைப்பினால் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் மிக மிக அருகில் காணப்படுகின்றன . இந்த மெல்லிய நுண்ணிய தோல் போன்ற அமைப்பைத்தான்

'பரான் ' அல்லது 'மெம்ப்ரான் ' (Membrane) என்றழைக்கப்படுகிறது . இந்த மெம்பிரான் என்பதிலிருந்துதான் M Theory தோன்றியது என்கிறார்கள் .

பரிமாணங்கள் எல்லாமே ஒன்றுக்கொன்று மிக அருகிலேயே காணப்படுகின்றன என்பதை வார்த்தைகளால் சொல்லும்போது, உங்களால் கற்பனைப் பண்ணிப் பார்க்க முடியாது. அதனால் இப்படிச் சிந்தித்துப் பாருங்கள், ஒரு புள்ளியை ஊடறுத்து முன் பின்னாகச் செல்லும் நேர்கோடு , ஒரு பரிமாணம் எனப்படுகிறது .

அந்த நேர்கோட்டில் முன் பின்னாக மட்டும் ஒரு உயிரினம் இயங்கிக் கொண்டிருந்தால் , அது ஒரு பரிமாணத்தில் அது இயங்கிறது என்று எடுத்துக் கொள்ளளலாம்.

அந்த ஒரு பரிமாண நேர்கோட்டிற்கு வலமாகவோ, இடமாகவோ ஒரு மில்லிமீட்டர் அளவிலாவது அந்த உயிரினம் நகர்ந்தால் அது இரண்டாம் பரிமாணத்தில் இயங்குகிறது என்றாகிவிடும். இப்படியே ஒவ்வொரு பரிமாணங்களும் பிரிக்கப்பட்டிருக்கின்றன .

அண்டத்தில் பல பரிமாணங்களைப் பெற்றிருப்பதாலும் , அவற்றின் சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு பரிமாணங்களும் தனித்துவமானவை. ஒன்றை ஒன்று சிதைப்பவை அல்ல. அதாவது ஒரு பரிமாணத்தின் செல்வாக்கானது இன்னொரு பரிமாணத்தில் செல்லாது. இதேபோல் பரிமாண வெளிகளும் தனித்துவமானவை. ஒன்றையொன்றை ஊறுபடுத்தாதவை . வேறு வேறானவை.

முப்பரிமாணத்தைக் கொண்டு வாழும் நாம், நாம் இருக்கும் அதே இடங்களில், நமது தெருக்கள் நீளும் அதே திசையில் இன்னொரு பரிமாணத்திற்கு சொந்தமான வீடுகள் , அவர்களுடைய தெருக்கள், காடுகள் ,ஏன் மனிதர்களை ஒத்த உயிர்னங்கள் கூட வாழ்கின்றன .

அந்த பரிமாணத்தின் வீடுகளோ, தெருக்களோ , காடுகளோ, நம் வீட்டையோ தெருவையோ, காடுகளையோ சேதப்படுத்தவில்லை . அத்துடன் அது இருப்பதும் உங்களுக்கும், எனக்கும் தெரிவதில்லை .

இப்படி பரிமாணங்கள் பரிமாணங்களாக பிரிக்கப்பட்டு, அந்தந்த பரிமாணத்தில் தனித்தனி உயிரினங்களோ , தாவரவர்க்கங்களோ, மனிதர்களோ வாழ்வதாக குர்ஆனிலும் , நபிமொழியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதுதான் விண்ணை முட்டும் வியப்புக்குரியது !

وَبَيْنَهُمَا حِجَابٌ وَعَلَى الْاَعْرَافِ رِجَالٌ يَّعْرِفُوْنَ كُلًّا بِسِيْمٰٮهُمْ وَنَادَوْا اَصْحٰبَ الْجَـنَّةِ اَنْ سَلٰمٌ عَلَيْكُمْ لَمْ يَدْخُلُوْهَا وَهُمْ يَطْمَعُوْنَ

(நரகவாசிகளும் சுவர்க்கவாசிகளும் ஆகிய) இவ்விருவருக்குமிடையில் ஒரு மதில் இருக்கும். அந்த மதிலின் சிகரத்தில் சில மனிதர்கள் இருப்பார்கள்.

(நரகவாசி சுவர்க்கவாசியாகிய) ஒவ்வொருவரையும் அவர்களின் (முகக்) குறியைக் கொண்டே இவர்கள் அறிந்து கொள்வார்கள். இவர்கள் சுவர்க்கவாசிகளை நோக்கி "(இறைவனுடைய) சாந்தியும்,சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாகுக!" என்று சப்தமிட்டுக் கூறுவார்கள். (சிகரத்தில் இருக்கும்) இவர்கள் (இதுவரையிலும்) சுவர்க்கத்தில் நுழையவில்லை. எனினும், அவர்கள் (அதில் நுழைவதை) மிக ஆவலுடன் ஆசைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். (அல்குர்ஆன் : 7:46)

சுவர்க்கமும் , நரகமும் வேறுவேறு பரிமாணங்களாக இருக்கலாம் .

عِنْدَ سِدْرَةِ الْمُنْتَهٰى

ஸித்ரத்துல் முன்தஹா என்னும் (வானெல்லையிலுள்ள) இலந்தை மரத்தருகே. (அல்குர்ஆன் : 53:14)

عِنْدَهَا جَنَّةُ الْمَاْوٰى

அதன் சமீபத்தில்தான் ஜன்னத்துல் மஃவா என்னும் சுவர்க்கம் இருக்கிறது. (அல்குர்ஆன் : 53:15)

ஸித்ரத்துல் முன்தஹாவும் , ஜன்னத்துல் மஃவா சுவர்க்கமும் அடுத்தடுத்த பரிமாணத்தில் இருக்கலாம்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(விண்ணுலகப் பயணத்தின்போது) என்னிடம் கோவேறு கழுதையைவிடச் சிறியதும், கழுதையைவிடப் பெரியதுமான வெள்ளை நிறத்திலமைந்த நீளமான புராக் எனும் (மின்னல் வேக) வாகனம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அது பார்வை எட்டுகிற தூரத்திற்குத் தனது கால் குளம்பை எடுத்து (எட்டு) வைக்கும். அதிலேறி நான் பைத்துல் மக்திஸ் (ஜெரூசலேம்) இறை ஆலயம் வரை சென்றேன்.

பிறகு இறைத்தூதர்கள் தமது வாகனத்தைக் கட்டி வைக்கும் வளையத்தில் எனது வாகனத்தைக் கட்டிவைத்துவிட்டு அந்த இறையாலயத்திற்குள் நுழைந்து இரண்டு ரக்அத்கள் தொழுதேன். பிறகு நான் அங்கிருந்து புறப்பட்ட போது (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் (என்னிடம்) ஒரு பாத்திரத்தில் மதுவும் மற்றொரு பாத்திரத்தில் பாலும் கொண்டுவந்தார். (அதில் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுமாறு கூறினார்.) நான் பால் பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். அப்போது ஜிப்ரீல், "இயற்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்" என்று கூறினார்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு முதல் வானத்திற்கு உயர்ந்தார். (அதன் கதவைத்) திறக்கும்படி கூறினார். அப்போது "நீங்கள் யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உங்களுடன் (வந்திருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்து வரச்சொல்லி) அவரிடம் ஆள் அனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(அவரை அழைத்து வரச்சொல்லி என்னை) அவரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது" என்றார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. நான் அங்கு (ஆதி மனிதர்) ஆதம் (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் என்னை வாழ்த்தி வரவேற்று, எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள். .

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக் கொண்டு இரண்டாம் வானத்திற்கு உயர்ந்தார். (அதன் கதவைத்) திறக்கும்படி சொன்னார். அப்போது "நீங்கள் யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உங்களுடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்துவரும்படி) அவரிடம் ஆளனுப்பப் பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்து வரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப் பட்டிருந்தது" என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு சகோதரிகளின் புதல்வர்களான ஈசா பின் மர்யம் (அலை), யஹ்யா பின் ஸகரிய்யா (அலை) ஆகியோரை நான் கண்டேன்.அவர்கள் இருவரும் என்னை வரவேற்று, எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தனர்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு மூன்றாம் வானத்திற்கு உயர்ந்தார். (அதன் கதவைத்) திறக்கும்படி கூறினார். அப்போது "நீங்கள் யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்துவரும்படி) அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்துவரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது" என்று பதிலளித்தார். உடனே எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் யூசுஃப் (அலை) அவர்களைக் கண்டேன். (மொத்த) அழகில் பாதி அவர்களுக்கு வழங்கப்பெற்றிருந்தது. அன்னாரும் என்னை வரவேற்று எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள்.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு நான்காம் வானத்திற்கு உயர்ந்தார். (அந்த வானத்தின் கதவைத்) திறக்கும்படி கூறினார். அப்போது "யார் அது?" என்று கேட்கப்பட்டது. அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர் "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்துவரும்படி) அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம் அவரை அழைத்துவரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது" என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் இத்ரீஸ் (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் (என்னை) வரவேற்று எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள். (இத்ரீஸ் (அலை) அவர்கள் தொடர்பாக) அல்லாஹ், "மேலும், நாம் அவரை ஓர் உயரிய இடத்தில் உயர்த்தினோம்" (19:57) என்று கூறுகின்றான்.-

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு ஐந்தாம் வானத்தில் ஏறினார். (அந்த வானத்தின் கதவைத்) திறக்கும்படி கூறினார். அப்போது, "யார் அது?" என்று கேட்கப்பட்டது. அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்துவருமாறு) ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்துவருமாறு என்னை) அவரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது" என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் ஹாரூன் (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் (என்னை) வரவேற்று எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள்.

.

பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு ஆறாம் வானத்தில் ஏறினார். (அந்த வானத்தின் கதவைத்) திறக்கும்படி கூறினார். "யார் அது?" என்று கேட்கப்பட்டது. அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர் "முஹம்மத்" என்று பதிலளித்தார் "(அவரை அழைத்து வரும்படி) அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்துவரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது" என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் மூசா (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் (என்னை) வரவேற்று, எனது நன்மைக்காகப் பிரார்த்தித்தார்கள்.


பிறகு ஜிப்ரீல் என்னை அழைத்துக்கொண்டு ஏழாவது வானத்தில் ஏறினார். (அந்த வானத்தின் கதவைத்) திறக்கும்படி கூறினார். "யார் அது?" என்று கேட்கப்பட்டது. அவர், "ஜிப்ரீல்" என்று பதிலளித்தார். "உம்முடன் (இருப்பவர்) யார்?" என்று கேட்கப்பட்டது. அவர், "முஹம்மத்" என்று பதிலளித்தார். "(அவரை அழைத்து வரும்படி) அவரிடம் ஆளனுப்பப்பட்டிருந்ததா?" என்று கேட்கப்பட்டது. அவர், "(ஆம், அவரை அழைத்துவரும்படி என்னை) அவரிடம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது" என்று பதிலளித்தார். அப்போது எங்களுக்காக (கதவு) திறக்கப்பட்டது. அங்கு நான் இப்ராஹீம் (அலை) அவர்களைக் கண்டேன். அவர்கள் அல்பைத்துல் மஅமூர் (எனும் வானவர்கள் அதிகம் சஞ்சரிக்கும்) இறையில்லத்தில் தமது முதுகைச் சாய்த்து அமர்ந்துகொண்டிருந்தார்கள்.

அ(ந்த இறையில்லத்)தில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் வானவர்கள் (இறைவனை வணங்கச்) செல்வார்கள். அவர்கள் மறுபடியும் அங்கு நுழைவதில்லை. (புதியவர்களே அடுத்து நுழைவார்கள்.)

பிறகு (வான் எல்லையிலுள்ள இலந்தை மரமான) "சித்ரத்துல் முன்தஹா" எனும் இடத்திற்கு என்னை ஜிப்ரீல் அழைத்துச்சென்றார். அதன் இலைகள் யானைகளின் காதுகளைப் போன்றிருந்தன. அதன் பழங்கள் கூஜாக்களைப் போன்றிருந்தன. அல்லாஹ்வின்

கட்டளையால் இனம் புரியாத (நிறங்கள்) அதைச் சூழ்ந்து கொண்டபோது (அதன் அமைப்போ முற்றிலும்) மாறிவிட்டது. அல்லாஹ்வின் படைப்புகளில் எவராலும் அதன் அழகை விவரித்துக் கூற முடியாது.
அப்போது அல்லாஹ் அறிவிக்க வேண்டியச் சிலவற்றை எனக்கு அறிவித்தான். என்மீது இரவிலும் பகலிலும் (நாள் ஒன்றுக்கு) ஐம்பது தொழுகைகளைக் கடமையாக்கினான்.
பிறகு நான் மூசா (அலை) அவர்களிடம் இறங்கிவந்தேன். அப்போது அவர்கள், "உங்கள் சமுதாயத்தாருக்கு உம்முடைய இறைவன் என்ன கடமையாக்கினான்?" என்று கேட்டார்கள்.
"ஐம்பது (வேளைத்) தொழுகைகளை(க் கடமையாக்கினான்)" என்று நான் பதிலளித்தேன். "உங்கள் இறைவனிடம் திரும்பிச்சென்று (உங்கள் சமுதாயத்தாருக்காக தொழுகையின் எண்ணிக்கையைக்) குறைக்கும்படி கேளுங்கள். ஏனெனில், உங்கள் சமுதாயத்தார் இதைத் தாங்கமாட்டார்கள். நான் (என்னுடைய) பனூ இஸ்ராயீல் மக்களிடம் பழகி அனுபவப் பட்டிருக்கிறேன்" என்று கூறினார்கள்.
நான் என் இறைவனிடம் திரும்பிச்சென்று, "என் இறைவா! என் சமுதாயத்தார்மீது (ஐம்பது வேளைத் தொழுகைகளின் எண்ணிக்கையைக்) குறைப்பாயாக!" என்று கேட்டேன். இறைவன் (ஐம்பதிலிருந்து) ஐந்தை எனக்குக் குறைத்தான். நான் மூசா (அலை) அவர்களிடம் திரும்பிவந்து,
"(ஐம்பதிலிருந்து) ஐந்தை எனக்குக் குறைத்தான்" என்று கூறினேன். அப்போது அவர்கள், "உங்கள் சமுதாயத்தார் இதையும் தாங்கமாட்டார்கள். எனவே, உங்கள் இறைவனிடம் திரும்பிச்சென்று இன்னும் குறைக்கும்படி கேளுங்கள்" என்றார்கள்.
இவ்வாறே நான், என் இறைவனுக்கும் மூசா (அலை) அவர்களுக்குமிடையே திரும்பிச் சென்றுகொண்டிருந்தேன்.
இறுதியாக, "முஹம்மதே! இவை இரவிலும் பகலிலும் (நிறைவேற்ற வேண்டிய) ஐவேளைத் தொழுகைகள் ஆகும். ஒவ்வொரு தொழுகைக்கும் பத்து (நற்பலன்) உண்டு. (நற்பலனில்) இவை ஐம்பது வேளைத் தொழுகை(க்கு ஈடு) ஆகும். ஒருவர், ஒரு நன்மை செய்ய வேண்டும் என (மனத்தில்) எண்ணிவிட்டாலே, அதைச் செயல்படுத்தாவிட்டாலும் அவருக்காக ஒரு நன்மை பதிவு செய்யப்படும். அதை அவர் செய்து முடித்துவிட்டால் அவருக்காகப் பத்து நன்மைகள் பதிவு செய்யப்படும். ஒருவர் ஒரு தீமையைச் செய்ய எண்ணி, (அல்லாஹ்வுக்கு அஞ்சி) அதைச் செய்யாமல் இருந்துவிட்டால் (குற்றம்) எதுவும் பதியப்படுவதில்லை. (எண்ணியபடி) அதை அவர் செய்து முடித்துவிட்டால் ஒரு குற்றமாகவே அது பதிவு செய்யப்படுகிறது" என்று கூறினான்.
பின்னர் நான் அங்கிருந்து புறப்பட்டு மூசா (அலை) அவர்களிடம் வந்துசேர்ந்தேன். அ(ல்லாஹ் கூறிய)தை அவர்களிடம் நான் தெரிவித்தேன். அப்போது அவர்கள், "உங்கள் இறைவனிடம் திரும்பிச் சென்று இன்னும் குறைக்கும்படி கேளுங்கள்" என்று கூறினார்கள். உடனே நான், "(பல முறை) என் இறைவனிடம் திரும்பிச் சென்றுவிட்டேன். (இன்னும்) அவனிடம் (குறைத்துக் கேட்க) நான் வெட்கப்படுகிறேன்" என்று கூறிவிட்டேன்.
இதை அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் : 259.
மேற்கூறிய ஹதீஸில் ஏழு வானங்களும் தனித்தனி பரிமாணங்களாக இருக்கலாம்.

பரிமாணம் விட்டு பரிமாணங்களில் பயணிப்பவர்கள்.
அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 4




அண்டத்தில் நீளம், அகலம், உயரம் என்கிற முப்பரிமாணத்தில் நீங்களும் , நானும் இயங்குகிறோம் . இந்த அண்டத்தில் முப்பரிமாணம் மாதிரி மொத்தம் 11 பரிமாணங்கள் இருப்பதாக இதற்கு முந்தைய கட்டுரையில் பார்த்தோம். இப்படி 11 பரிமாணங்கள் இருக்கும் பட்சத்தில், அந்த ஒவ்வொரு பரிமாணத்திலும் ஏன் வெவ்வேறு வகையான உயிரினங்கள் வாழ்ந்து

கொண்டிருக்க முடியாது ? நிச்சயமாக வாழ்ந்து கொண்டிருக்கிறது. நம்புவதற்கு கஷ்டமாக இருக்கிறதா ? உதாரணத்துடன் சொல்றேன்.
இரு பரிமாணத்தில் இயங்கும் ஓர் எறும்புக்கு முப்பரிமாணத்தில் இயங்கும் கழுகு என்றொரு பறவை இருக்கிறது என்று சொன்னால் அதனால் அதை நம்பவே முடியாது. காரணம் ,கழுகு மூன்றாவது பரிமாணமான உயரத்திலேயே எப்போதும் பறந்து கொண்டிருக்கும்.
எப்போது அது இரையை தேடி பூமியின் தரைக்கு வருகிறதோ அங்கு இரண்டு பரிமாணத்தில் அதாவது நீளம் , அகலத்தில் இயங்கும் உயிரினங்களை பிடிக்கும் போது , மூன்று பரிமாணத்தில் இயங்கும் கழுகைப் பற்றி எறும்புக்கு தெரிய வந்து அதை நம்பும்.
அதுபோல , நான்காவது , ஐந்தாவது , ஆறாவது என இப்படியே .... பதினோராவது பரிமாணங்களில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன என்று சொல்லும்போது, நாம் நம்ப மாட்டோம். அதிகம் ஏன் ..? அதை நம்மால் கற்பனை கூடச் செய்ய முடியாது.
ஆனால் நம்முடைய முப்பரிமாணத்தை விட கூடுதலான பரிமாணங்களில் இயங்கக்கூடிய உயிரினங்கள், மனிதர்கள் போன்ற தோற்றமுடைய இனங்கள் வாழ்ந்து வருகின்றன என்று சொன்னால் நீங்கள் நம்ப வேண்டும். மேலும் நம்முடைய முப்பரிமாணத்தில் அவர்கள் வந்து மனிதர்களை சந்தித்து உரையாடியும் இருக்கிறார்கள் என்றால் அதையும் நீங்கள் நம்ப வேண்டும் .
நம்முடைய முப்பரிமாணத்தை விட கூடுதலான பரிமாணங்களை உடையவர்கள் நம்மை விட மிகப் பெரிய திறமை பெற்றவர்களாகவும் , அதிக பலசாலிகளாகவும் இருக்கலாம் .
மலக்கு ஜிப்ரயீல் (அலை) அவர்களை அல்லாஹ் திருமறையில் அறிமுகப்படுத்தும் போது ..
عَلَّمَهٗ شَدِيْدُ الْقُوٰىۙ
மிக்க வல்லமையுடைவர் (ஜிப்ரீல்) அவருக்குக் கற்றுக் கொடுத்தார்.
ذُوْ مِرَّةٍ فَاسْتَوٰىۙ
(அவர்) மிக்க உறுதியானவர்; பின்னர் அவர் (தம் இயற்கை உருவில்) நம் தூதர் முன் தோன்றினார்.
وَهُوَ بِالْاُفُقِ الْاَعْلٰى
அவர் உன்னதமான அடி வானத்தில் இருக்கும் நிலையில்-
ثُمَّ دَنَا فَتَدَلّٰىۙ
பின்னர், அவர் நெருங்கி, இன்னும், அருகே வந்தார்.
فَكَانَ قَابَ قَوْسَيْنِ اَوْ اَدْنٰى
(வளைந்த) வில்லின் இரு முனைகளைப் போல், அல்லது அதினும் நெருக்கமாக வந்தார். (அல்குர்ஆன் : 53 : 5 _ 9)
இதே மாதிரி கியாமத் நாளின் போது வரவிருக்க தஜ்ஜால் பற்றியும் ஹதீஸ்களில் குறிப்பிடப்படுகிறது.
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
(இறுதி நாள் நெருங்கும்போது) மஸீஹுத் தஜ்ஜால் கிழக்குத் திசையிலிருந்து மதீனாவைக் குறிவைத்து வந்து, "உஹுத்"மலைக்குப் பின்னால் இறங்குவான்.
பின்னர் வானவர்கள் அவனது முகத்தை ஷாம் திசை (வடக்கு) நோக்கித் திருப்பிவிடுவார்கள். அங்குதான் அவன் மடிவான்.
இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் : 2673.
நபி(ஸல்) அவர்கள் காலத்தில் ஜிப்ரயீல் (அலை) அவர்களை சுயரூபத்திலேயே நபியவர்கள் கண்டிருக்கிறார்கள் . அதே மாதிரி தஜ்ஜாலும் வெளிப்பட்டிருக்கிறான் . இதே தஜ்ஜால் கியாமத் நாளின் போது மீண்டும் வெளிபடுவான் என்றால் இவன் எந்த பரிமாணத்தில் இப்போது மறைத்து வைக்கப்பட்டிருக்கிறான் என்பதை அல்லாஹ்வே அறிவான் .

பரிமாணத்தின் வாசல்கள்.

அறிவியிலிலிருந்து ஆன்மிகம் வரை 5



பரிமாணங்கள் எல்லாமே ஒன்றுக்கொன்று மிக அருகிலேயே காணப்படுகின்றன என்பதை வார்த்தைகளால் சொல்லும் போது , உங்களால் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாது.

அதனால் இப்படி சிந்தித்துப் பாருங்கள். ஒரு புள்ளியை ஊடறுத்துச் முன்பின்னாக செல்லும் நேர்கோடு , அதை ஒரு பரிணாமம் எனப்படுகிறது . அந்த நேர்கோட்டில் முன்பின்னாக மட்டுமே ஓர் உயிரினம் இயங்கிக் கொண்டிருந்தால், அது ஒரு பரிணாமத்தில் இயங்குகிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

அந்த முதல் பரிமாணம் நேர்கோட்டில் வலமாகவோ இடமாகவோ ஒரு மில்லி மீட்டர் அளவிலாவது அங்குள்ள உயிரினம் நகர்ந்தால், அது இரண்டாம் பரிமாணம் என்றாகிவிடும்.

அதாவது முதலாவது பரிமாணத்தின் இடது பக்கத்திலோ அல்லது வலது பக்கத்திலோ ஒரு மில்லி மீட்டருக்கும் குறைவான இடத்திலேயே இரண்டாவது பரிமாணம் ஆரம்பமாகிவிடுகிறது . அதே போல் இந்த இரண்டு பரிமாணங்களுக்கு மேலாகவோ கீழாகவோ ஒரு மில்லி மீட்டருக்கும் குறைவான உயரத்தில் மூன்றாவது பரிமாணம் ஆரம்பமாகிவிடுகிறது .

இந்த மூன்று பரிமாணங்களும் மிகச் சிறிய இடைவெளியுடன் அருகருகே இருக்கின்றன. இது உங்களுக்கு புரிகிறதா ? அதாவது முதல் மூன்று பரிமாணங்களும் மிக மிக மெல்லிய கோடு ஒன்றினால் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

அதுபோலவே நான்காவது பரிமாணமும் , ஐந்தாவது பரிமாணமும் மெல்லிய அமைப்பினால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படியே 11 பரிமாணங்களும் ஒன்றுக்கொன்று மிக அருகிலேயே காணப்படுகின்றன. எல்லாமே நானோ மீட்டர் அளவு இடைவெளியில் பிரிக்கப்பட்டு காணப்படுகின்றன .

இதை ஒரு நிகழ்வு மூலம் புரிய வைக்கிறேன்.

ஏகத்துவத்தை ஸமூது மக்களிடம் நபி ஸாலிஹ் (அலை) அவர்கள் எடுத்து சொன்ன போது ஜுன்தாஹ் மன்னன் ஸாலிஹ் நபியிடம் , "ஸாலிஹே ..! அதோ தெரிகிறதே வானளாவ உயர்ந்து நிற்கின்ற " அல்காத்திபா " என்கிற மலை சிகர பாறையிலிருந்து , சூல்கொண்ட நிறைமாத ஒட்டகம் ஒன்று அம்மலையைப் பிளந்து, தமக்காக வெளிவரவேண்டும் .

அந்த ஒட்டகத்திற்கு கருநிற நெற்றியும் வெண்ணிற உடலும், நீளமான முடியும் இருக்க வேண்டும். வெளிவந்ததும் கன்று ஒன்றை அது ஈன வேண்டும் . குட்டியும் முற்றிலுமாக தாயைப் போன்றே இருக்க வேண்டும் " என்று கூறினான்.

அதுகேட்டு ஸாலிஹ் நபி அதிர்ச்சியுற்றார்கள் ."எங்ஙனம் உயிரற்ற ஒரு மலைப்பாறை உயிருள்ள ஓர் ஒட்டகத்தை எப்படி வெளிக்கொண்டு வரும் ?

அதற்கு இறைவன் : " ஸாலிஹே ! ஒன்றும் யோசிக்காதீர்கள். உம் மூலம் ஒரு மாபெரும் அற்புதத்தை உலகம் என்றும் மறக்காத வண்ணம் வெளியாக்குவோம் . இதன்மூலம் உங்களுடைய தூதுவத்தை மெய்ப்பிக்கவே நாம் ஏற்கனவே நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அம்மலைக்குள் அவர்கள் கேட்கும் ஓர் ஒட்டகத்தை படைத்து இதுவரையிலும் பரிபாலித்து வருகிறோம் "என்று இறைவன் கூறினான் . (பரிணாமம் மலைக்குள்ளேயும் ஊடுருவுகிறதா ?)

அச்செய்தி ஸாலிஹ் நபி அவர்களை மகிழ்வித்தது . பின் அம்மக்களிடம் , "அல்லாஹ் உங்களது கோரிக்கையை நிறைவேற்றினால் , நீங்கள் என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் .என்னைப் பின்பற்றி நடக்க வேண்டும்" என்று உறுதிமொழிகளைப் பெற்றார் .

ஸமூது மக்களின் முக்கியமான தொழில் ஒட்டகம் மேய்ப்பதும் அதன் பயன்பாட்டை வியாபாரமாக்குவதும் , அடுத்த தொழில் மலைப் பாறைகளை குடைந்து இல்லங்கள் அமைப்பதும் அதை வியாபாரமாக்குவதும் எனவே இந்த இரண்டு விஷயங்களையும் ஒன்று சேர்த்து ஒட்டகத்தை மலைப்பாறை ஈன வேண்டும் என்றார்கள்.

பின்னர் நபியவர்கள் இறைவனை வேண்ட , அந்த குறிப்பிட்ட அல்காத்திபா மலைப்பாறை மெதுவாக துளும்ப தொடங்கியது. அது பெண்கள் பேறுகாலத்தில் முழங்குவது போன்று முனங்கல் சப்தமிட்டது . அதன்பின் மலைப்பாறையில் ஒரு கீறல் ஏற்பட்டு அது சிறிது சிறிதாக பிளந்து, மலைப்பாறைகள் தெறிக்க தெறிக்க அதிலிருந்து மிக பிரம்மாண்டமான ஓர் ஒட்டகம் வெளியே வந்தது .

உலகில் இந்த ஒட்டகம் போன்று எந்த ஒட்டகமும் இல்லை. காரணம் மலை ஈன்ற ஒட்டகம் மலைப்பூட்டும் மஹா ஒட்டகமாகத்தானே இருக்கும் ? அடுத்த கணம் அது ஒரு குட்டியை ஈன்றது. அதுவும் தாயை போன்றே இருந்தது. இது அதிசயத்திற்கெல்லாம் அதிசயமாக இருந்தது.

ஒட்டகம் தன் குட்டியுடன் திறந்தவெளியில் மேய்ந்தது, மக்களின் கிணற்றில் நீர் அருந்தியது. அதே நேரத்தில் மற்ற ஒட்டகங்கள் அதன் பிரமாண்டமான தோற்றத்தை கண்டு அஞ்சி மிரண்டு ஓடியது . இறைவனின் ஒட்டகம் கிணற்று நீரை முழுவதுமாக குடித்தது. அவர்கள் கேட்ட மாதிரி அவர்களின் தேவைக்கு மேலாக பாலைக் கொடுத்து . அவர்கள் அதனை விற்று செல்வந்தர்கள் ஆனார்கள் .

இறைவனின் ஒட்டகம் நீர் அருந்தும் அன்றைக்கு மட்டும் ஒட்டகங்கள் நீர் அருந்தக்கூடாது. மற்ற ஒட்டகங்கள் நீர் அருந்தும் அன்றைக்கு இறைவனின் ஒட்டகம் நீர் அருந்தக்கூடாது என்ற நியதி உருவாக்கப்பட்டது .

எந்த ஒட்டடகத்திற்கும் பொதுவான ஒரு இயல்பு ஒட்டகம் ஒரு தடவை நீர் அருந்தினால் , பல நாட்கள் நீர் அருந்த அதற்கு தேவை இருக்காது. இதனால் ஸமூது மக்களின் ஒட்டகங்கள் ஏதும் நீர் அருந்தாமல் கஷ்டப்படவில்லை என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

ரபியுல் ஆகிர் 16-வது நாள் புதன்கிழமை உலக வரலாற்றிலேயே மிகவும் துக்ககரமான நாளாக இருந்தது.ஸமூது மக்களில் குதார் என்பவனும் மஸ்தஹ்ஹும் என்பவனும் கூட மிக மோசமான ஏழு பேர்களையும் சேர்த்துக்கொண்டனர் . இவர்கள் மது அருந்திவிட்டு , ஒட்டகம் நீர் அருந்தி விட்டு திரும்பும் வழியில் குதார் ஒரு பாறையின் அடிப்பகுதியிலும் மஸ்தஹ் அதற்கு எதிர்புற பாறையிலும் ஒளிந்து கொண்டனர்.

ஒட்டகம் மஸ்தஹ் அருகில் வந்ததும் , அவன் அம்பு எய்து அதன் கால் தசையில் உள்ள நரம்பை துண்டித்தான். உடனே குதார் தனது வாளால் ஒட்டகத்தை பலமாகத் தாக்கி , அதன் பின்னங்கால் தொடையில் உள்ள தசை நார்களை வெளியே எடுத்தான் . உடனே அது தரையில் மிகவும் சத்தமாக ஓலமிட்டு தன் குட்டியை எச்சரிக்கும் விதமாக கீழே விழுந்தது.

ஸாலிஹ் நபி அவர்கள் இச்செய்தியை கேள்விப்பட்டதும், ஓடிவந்து ஒட்டகத்தை பார்த்து , உள்ளம் பதறி அழுதார்கள். "ஒட்டகத்தின் கன்றினையாவது கொண்டு வாருங்கள். அதை முன்னிறுத்தி நாம் இறைவனிடம் இறைஞ்சுவோம் அதன் பொருட்டு நீங்கள் மன்னிக்கப்படலாம்" என்று கூறினார்கள்

ஆனால் அதன் குட்டி, தாய் எந்த உயரமான மலை அல்காத்திபா

பாறையிலிருந்து வெளியே வந்ததோ , அதே பாறையில் போய் மூன்று முறை பேரொலி ஒலி எழுப்பிவிட்டு , பாறையின் கீறிலில் நுழைந்து மறைந்தது.

இது வெளிவரும் அப்போது அதை "தாப்பத்துல் அர்ளு" என்று அழைப்பார்கள். அது ஒட்டக கன்றாக இல்லாமல் வேறொரு வினோத மிருகமாய் வெளிப்படும் .

நபி ஈஸா (அலை) அவர்களும் , முஸ்லிம்களும் பைத்துல்லாஹ்வை தவாஃபு செய்து கொண்டிருக்கும் பொழுது , அவர்களுக்கு கீழே பூமி ஆடும். விளக்குகள் ஆடுவது போல ஆடும் .

ஸஃபா மலை ஸஈ செய்யும் இடத்தைச் சார்ந்த பகுதியில் பூமி பிளந்து அதிலிருந்து இந்த மிருகம் வெளியேறும்

இது முழுமையாக வெளியேற மூன்று நாட்களாகும் .

இதற்கு இரண்டு சிறகுகளும் , காளை மாட்டு தலையும் , மனித முகமும், பன்றிக் கண்ணும் , யானைக் காதும், மாட்டுக் கொம்பும், ஒட்டகக் கழுத்தும் , சிங்க நெஞ்சும், பூனை இடுப்பும் , தும்பை ஆட்டு வாலும் , ஒட்டகக் காலும் , வேங்கை நிறமும் கொண்டதாக இருக்கும் .

அதன் வலது கையில் நபி மூஸா (அலை) அவர்களின் ' அஸா 'என்ற தண்டமும் , இடது கையில் நபி சுலைமான் (அலை) அவர்களின் 'காத்தம்' என்னும் முத்திரையும் இருக்கும்.

மூமின்களை அவர்களது நெற்றியில்

அத்தண்டத்தால் அது அடிக்கும் அவ்வடியின் அடையாளத்தால் ஒரு புள்ளி போல் விழும். அது கொஞ்சம் கொஞ்சமாக பெரியதாகி முகம் பிரகாசிக்கும் . அந்த ததும்பும் பிரகாசத்தில் " இவர் மூமின் " என்று நெற்றியில் எழுதும் . "இவர் சுவனவாசி " என்றும் கூறும் .

இறை மறுப்பாளர்களுடைய மூக்கில் அந்த முத்திரையைக் கொண்டு முத்திரை இடும் . அது மச்சம் உண்டாகி , படர்ந்து பெரியதாகி முகத்தைக் கருப்பாக்கி விடும். " இவன் காஃபிர் " என்று அவனுடைய இரு கண்களுக்குமிடையில் எழுதும் . "இவன் நரகவாசி " என்றும் கூறும்

ஹயாத்துல் ஹைவான் என்ற கிதாபில் கூறப்பட்டுள்ளது.

நம்முடைய முப்பரிமாணத்தின் எல்லை அந்த அல்காத்திபா மலையின் கீறலின் வெளியோடு முடிவடைந்து , மலைப்பாறையினுள் வேறொரு பரிமாணத்தின் எல்லை ஆரம்பிக்கலாம் .

ஜோர்டான் நாட்டில் ஹிஜ்ர் நகரத்தில் உள்ள அல் காத்திபா மலை சிகரம் சாக்கடலுக்கும் அகாபா வளைகுடாவிற்கும் இடையில் அமைந்துள்ளது. ஆனால் இந்த ஒட்டகத்தின் கன்று உலக முடிவு நாளின்போது மக்காவிலுள்ள ஸபா - மர்வா என்ற இரு மலைப்பாறைகளுக்கு இடையில் வெளிப்படும்.

அந்த ஒட்டக கன்று மறைந்துள்ள பரிமாணத்தின் எல்லை ஜோர்டான் நாட்டிலிருந்து மக்கா ஹரம் வரை இருக்கலாம். யார் அறிவார்கள் ?

وَ اِذَا وَقَعَ الْقَوْلُ عَلَيْهِمْ اَخْرَجْنَا لَهُمْ دَآبَّةً مِّنَ الْاَرْضِ تُكَلِّمُهُمْۙ اَنَّ النَّاسَ كَانُوْا بِاٰيٰتِنَا لَا يُوْقِنُوْنَ

இறுதிநாள் அவர்களை நெருங்கிய சமயத்தில், அவர்களுக்காகப் பூமியிலிருந்து ஒரு கால்நடையை நாம் வெளிப் படுத்துவோம். அது எந்தெந்த மனிதர்கள் நம்முடைய வசனங்களை நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை அவர்களுக்குச் சொல்லிக் காண்பிக்கும். (அல்குர்ஆன் : 27:82)

யூனிவர்ஸ் (universe) ஒன்றல்ல ;
அது பற்பல மல்டிவேர்ஸ் (Multiverses)
அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 6




நவீன இயற்பிய?லில் பல பரிமாணங்கள் இருப்பது போல பல அண்டங்களும் உள்ளன என்று விஞ்ஞானம் நம்புகிறது . அதாவது இதுவரை ஒரே ஒரு அண்டம்தான் இருக்கிறது என்று நம்பி இருந்தோம். அதனால்தான் அண்டத்திற்கு "uni"Verse என்று பெயரிட்டிருந்தோம் . ஆனால் இருப்பது ஒரு யூனிவேர்ஸ் அல்ல ; மல்டிவேர்ஸ் (Multivarse) பல அண்டங்கள் என்கிறது நவீன இயற்பியல் .
நமது அண்டத்திற்கு எதிராக இன்னொரு எதிர் அண்டம் இருப்பதாக சொன்னால் உங்களால் நம்ப முடியவில்லையா ? நம் வசிக்கும் இந்த அண்டம் சரி , இன்னொரு அண்டமா ? அது இதுதானே..?
கவுண்டமணி : டேய், நான் உன்னை என்ன வாங்கிட்டு வர சொன்னேன்?
செந்தில்: ரெண்டு வாழப்பழம் அண்ணே
க: கடைக்கு போனியா?
செ: போனேன்
க: கடைக்காரன் எத்தனை பழம் கொடுத்தான்?
செ:ரெண்டு கொடுத்தான்
க: ரெண்டு கொடுத்தானா?
செ: கொடுத்தான்
க: சரி..அந்த ரெண்டுல ஒண்ணு இங்கே இருக்கு..இன்னொரு பழம் எங்கே?
செ: அதுதாண்ணே இது.
மல்டிவேர்ஸ் என்று சொல்லும்போது பத்து அண்டங்கள், நூறு அண்டங்கள் அல்லது ஆயிரம் அண்டங்கள் இருக்கின்றன என்று நவீன இயற்பியல் சொல்லவில்லை , ஒரு சமுத்திரத்தில் எத்தனை நீர்த்துளிகள் இருக்கலாமோ அத்தனை அண்டங்கள் இருக்கின்றன என்கிறது! இதையெல்லாம் சிந்திக்க ஆரம்பித்தால் படைத்தோனின் வல்லமையை என்னவென்று சொல்வது ?
நவீன இயற்பியலில் குறிப்பாக சொல்லப்பட்ட இன்னும் ஒரு விஷயம் உண்டு. அதுதான் பாரல்லல் யூனிவேர்ஸ் (parallel universe) பூமியில் உள்ள அனைத்து துகள்களுக்கும் சமமானதும் , நேரெதிரானதுமான வேறு துகள்கள் இருந்தே தீரும் என்கிறது அறிவியல் . அதுவே பூமி சமநிலையில் வைத்திருப்பதற்கு காரணமும் ஆகிறது. இந்த சமச்சீர் தன்மை மிகவும் அவசியமானது.
உங்களை எடுத்துக் கொள்ளுங்கள் , வலது / இடது என இரண்டு சம பகுதிகளாகவும் , நேரெதிராகவும் , சமச்சீராகப் பிரிக்கப்பட்டு இருக்கிறீர்கள். வலது கைக்கு இடது கையும், வலது காதுக்கு இடது காதும் என ஒவ்வொன்றும் சமச்சீராக அடுக்கப்பட்டது போல நீங்கள் காணப்படுகிறீர்கள் , நேர் என்று இருந்தால் எதிர் என்ற ஒன்று இருந்தே தீரவேண்டும்.
இரவு X பகல், ஆண் X பெண் ,நீர் X நெருப்பு, சொர்க்கம் X நரகம் , குளிர் Xவெப்பம் என்று எல்லாமே இரட்டையாகத்தான் இருக்கும் . இருக்க வேண்டும் என்பதுபோல அண்டத்தில் துகள் (matter) நிறைந்திருக்க அதற்கு எதிரான எதிர்த் துகளும் (Antimatter) நிறைந்திருக்கின்றன என்கிறது அறிவியல்.
அணுக்களானாலென்ன, அண்டமானாலென்னா அனைத்துமே சமச்சீராக இருக்கின்றன. இதனால்தான் விஞ்ஞானிகள் . தாங்கள் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு உப அணுத் துகள்களுக்கும் (Subatomic particle) சமமானதும், எதிரானதும் இன்னுமொரு உபத்துகளை தேடிக்கொண்டிருக்கிறார்கள்.
கிடைத்தா ? வியப்பான விஷயம் கிடைத்தது .
புரோட்டானுக்கு எதிரான ஆன்ட்டிப் புரோட்டனும் எலக்ட்ரானுக்கு எதிரான பாஸீட்ரானும் இயற்கை சேர்த்து வைத்த ஜோடிகள். இந்த எதிரான துகள் (Anti mater) நம் அண்டத்திற்கு எதிரான அண்டத்திலிருந்து வந்தவை.

இதில் நம் பிரபஞ்சத்தின் எலக்ட்ரானுக்கு எதிரான பாஸிட்ரானை சோதனைச் சாலையில் தயாரிக்கும் யுக்தியை டிராக் (Dirac) 1930 ல் சொன்னார் .
1932 ல் அமெரிக்க விஞ்ஞானி ஆன்டர்ஸன் பாஸிட்ரான்கள் விண்வெளி இருந்து வரும் காஸ்மிக் கதிர்களில் இருப்பதை பரிசோதனை மூலம் நிரூபித்து காட்டினார். அன்றிலிருந்து அபொருள் இன்னொரு பிரபஞ்ச வஸ்துவாக மாறியது.மேலும் இனம் புரியாத வியப்பும் ஓர் அதிர்ச்சியும் விஞ்ஞானிகளைக் பிடித்துக் கொண்டது
இதுபோல நமது அண்டத்திற்குச் சமச்சீராகவும் , எதிரானதுமான ஒரு அண்டம் மிக அருகிலேயே நமது அண்டத்தை போலவே அப்படியே நகல் எடுத்தது போல இருக்கும் என்கிறார்கள்.
இயற்கையின் நியதியில் படைப்பில் எல்லாமே ஜோடி ஜோடியாக படைப்பதுதான் அவனின் வல்லமை என்பதை குர்ஆனில் அல்லாஹ்
سُبْحٰنَ الَّذِىْ خَلَقَ الْاَزْوَاجَ كُلَّهَا مِمَّا تُنْۢبِتُ الْاَرْضُ وَمِنْ اَنْفُسِهِمْ وَمِمَّا لَا يَعْلَمُوْنَ
இவர்களையும், பூமியில் முளைக்கும் புற்பூண்டுகளையும் ஜோடி ஜோடியாகப் படைத்து, இவர்கள் (இதுவரையில்) அறியாத மற்றவைகளையும் படைப்பவன் மிகப் பரிசுத்தமானவன். (அல்குர்ஆன் : 36:36)

உண்மை என்பது உண்மைதானா ?

அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 7



உண்மை என்றால் என்ன ? இந்த கேள்வியை பற்றி எப்போது சிந்தித்திருக்கிறீர்களா ? " அட...! இது என்ன அபத்தமானதொரு கேள்வி. நமக்கு கண்ணுக்கு காட்சியளிக்கும் அனைத்தும் உண்மைதானே ? நமக்கு முன்னால் நிகழும் ஒவ்வொன்றும் உண்மைதானே ? நான் உண்மை,நீங்கள் உண்மை , சூரியன் உண்மை. சந்திரன் உண்மை என்று நீங்கள் அடிக்கிக் கொண்டேயிருப்பீர்கள் . அது தவிர்த்து உண்மை என்பதற்கு பல விதமான அர்த்தங்களையும் நீங்கள் கற்று வைத்திருக்கலாம் . அந்த உண்மைகள் எப்போதும் உண்மைதான் என்று நீங்கள் நம்புகிறீர்கள் . ஆனால் நீங்கள் நம்பும் எதுவுமே உண்மை இல்லை என்பதுதான் உண்மையான உண்மை என்பது உங்களுக்கு தெரியுமா ? என்ன குழப்பமாக இருக்கிறதா சரி உண்மைகள் பற்றி கொஞ்சம் விரிவாக அறிவியல் சார்ந்து ஆய்வோம் .

கண்ணாடி உங்களைப் பார்த்திருக்கிறீர்களா ? தெரிவது 100 சதவீதம் நீங்கள்தானா ? கண்ணாடி உங்கள் முகத்தை இடம் வலமாக மாற்றி காண்பிக்கிறது. முகத்தின் வலது கண் உங்கள் இடது கண்ணாக இருக்கும் . நீங்கள் வலது கையை உயர்த்தும் போது கண்ணாடியில் தெரியும் உங்கள் உருவத்தில் இடதுகை உயர்த்தப்படும். எனவே கண்ணாடியில் பார்க்கும் உங்கள் முகத்தை உங்கள் உண்மையான முகம் என்று நினைப்பதே தவறு !
அடுத்து நாம் ஒரு பொருளை எப்படிப் பார்க்கிறோம் என்று தெரிந்து இருக்கிறீர்களா ? ஒரு பொருளில் இருந்து வரும் ஒளி நமது கண்ணில் உள்ள லென்ஸினூடே சென்று விழித்திரையில் பிம்பமாக விழுகின்றது . எப்படி விழுகிறது தெரியுமா ? மிகச் சிறியதாகவும் தலைகீழாகவும் விழுகிறது. விழித்திரையில் விழுந்த பின்பும் பார்வை நரம்புகள் மூலம் மூளைக்கு அனுப்பப்படுகிறது . பின்னர் நமது மூளை தான் அந்த தலைகீழ் சிறிய பிம்பத்தை நிமிர்த்தி அளவு பரிமாணங்களைக் கொடுத்து , நாம் பார்க்கும் பொருள் இதுதான் என்று அறிவிக்கிறது.
வானம் நீல நிறம் என்கிறோம். உண்மையில் வானம் நீல நிறமா ? பூமியின் காற்று வளி மண்டலத்தின் ஊடாகத் சூரிய ஒளியின் எல்லா நிறமும் ஊடுருவி வர , நீல நிறம் மட்டும் அங்கே சிதறுகிறது. அதனால் வானம் நீலமாக தெரிகிறது. மேலே சென்றால் அங்கே வானம் நீல நிறமாக இருக்காது. ஒளியில்லாத வானம் நீலமாகக் காட்சியளிக்கும் .

உண்மை என்பது நம் புலன் அறிவுக்கும் அப்பாற்பட்டும் இருக்கிறது . அந்த உண்மையை அந்த ஞானத்தை நம்மில் யாராலும் விளங்கிக் கொள்ள முடியாது. நம் புலன்களால் அறியப்படும் உண்மை என்பது முழுமையான உண்மை அல்ல.

وَمَا تِلْكَ بِيَمِيْنِكَ يٰمُوْسٰى

“மூஸாவே! உம்முடைய வலது கையில் இருப்பது என்ன?” (என்றும் அல்லாஹ் கேட்டான்.) (அல்குர்ஆன் : 20:17)

قَالَ هِىَ عَصَاىَ اَتَوَكَّؤُا عَلَيْهَا وَاَهُشُّ بِهَا عَلٰى غَنَمِىْ وَلِىَ فِيْهَا مَاٰرِبُ اُخْرٰى

(அதற்கவர்) “இது என்னுடைய கைத்தடி; இதன் மீது நான் சாய்ந்து கொள்வேன்; இதைக் கொண்டு என் ஆடுகளுக்கு இலைகள் பறிப்பேன்; இன்னும் இதில் எனக்கு வேறு தேவைகளும் நிறைவேறுகின்றன” என்று கூறினார்.
(அல்குர்ஆன் : 20:18)

قَالَ اَلْقِهَا يٰمُوْسٰى

அதற்கு (இறைவன்) “மூஸாவே! அதை நீர் கீழே எறியும்” என்றான். (அல்குர்ஆன் : 20:19)

فَاَلْقٰهَا فَاِذَا هِىَ حَيَّةٌ تَسْعٰى

அவ்வாறே அவர் அதனைக் கீழே எறிந்தார்; அப்போது அது ஊர்ந்து செல்லும் ஒரு பாம்பாயிற்று.(அல்குர்ஆன் : 20:20)

قَالَ خُذْهَا وَلَا تَخَفْ سَنُعِيْدُهَا سِيْرَتَهَا الْاُوْلٰى

(இறைவன்) கூறினான்: “அதைப் பிடியும்; பயப்படாதீர்; உடனே நாம் அதை அதன் பழைய நிலைக்கே மீட்டுவோம்.”
(அல்குர்ஆன் : 20:21)

இப்போது நீங்கள் சொல்லுங்கள் நபி மூஸா (அலை) அவர்கள் கையில் இருப்பது கைத்தடியா ? பாம்பா ?

வலிமார்களும், வான சாஸ்திரமும்



காஜா நாயகத்தின் மஜ்லீஸில் சொற்பொழிவாற்றுதற்கு நண்பரும், கலீபாவுமான உஸ்மானி யூசுப் அவர்கள் வழக்கமான அழைப்பின் பேரில் இன்று இரவு மஜ்லீஸில் சொற்பொழிவாற்றினேன். அதன் சாரம்சம்
கி.பி 588 கிபி 1192ல்_ 57 வயதில் ஹாஜா நாயகம் அவர்கள் இந்தியா வந்து சேர்ந்தார்கள் . அந்த குறுநிலத்தை பிரித்திவிராஜ் என்கிற ராஜபுத்திர அரசன் ஆண்டு கொண்டிருந்தான் . அவனுடைய அரண்மனை "தாரா கட்" என்ற உயரமான குன்றின் மீது அமைந்திருந்தது.அந்த குன்றின் அடிவாரத்தில் அரண்மனையின் ஒட்டகங்கள் அடைக்கும் தொழுவம் இருந்தது. தொழுவத்தின் அருகில் ஹாஜா நாயகம் அவர்கள் வந்து அமர்ந்தார்கள்.
அரசாங்க ஒட்டக மேய்ப்பாளர்கள் அங்கு தங்குவதற்கு அவர்களை அனுமதிக்கவில்லை . எனவே அவர்களை அந்த இடத்தை விட்டு காலி செய்ய சொன்னார்கள். ஹாஜா "ஏன் ?"என்று அவர்களிடம் கேட்க, "இது ஒட்டகம் அடைக்கப்படும் இடம் இங்கு மற்றவர்கள் தங்குவதற்கு அனுமதி இல்லை" என்றார்கள் . உடனே "அடைக்கப்பட்ட ஒட்டகம் அடக்கப்பட்ட மாதிரியே இருக்கட்டும் " என்று கூறி பக்கத்தில் உள்ள "அன்னா சாகர் "என்ற ஏரிக்கரைக்கு வந்து தங்கினார்கள்.

மறுநாள் காலையில் ஒட்டகத்தை எழுப்ப முயன்ற அதன் பணியாளர்கள் ஒட்டகம் எதுவுமே எழுந்திருக்க முடியாமல் படுத்தே கிடந்தன. உடனே நேற்று ஒரு பெரியவரை விரட்டும் போது அவர் சொன்ன பிரகாரம் ஒட்டகங்கள் எழுந்திருக்க முடியாமல் அடங்கிக் கிடக்கின்றன என்பதை அறிந்து, பணியாளர்கள் ஹாஜா அவர்களிடம் மன்னிப்பு கேட்க,ஹாஜா அவர்கள் , " ஒட்டகங்களை எவன் அடக்கி வைத்தானோ அவனே அதனை எழுப்பி விடுவான் " என்று கூற ஒட்டகங்கள் எழுந்து நின்றன .
மன்னன் பிரதிவிராஜனின் தாய் ராஜமாதா வாசவதத்ரா ஜோதிட கலையில் நிபுணத்துவம் பெற்றவள் . அவள் தன் மகன் பிரதிவிராஜனிடம் , " உன்னுடைய இந்த குறுநில ஆட்சி இன்னும் 12 வருடத்தில் முடிவுக்கு வந்து விடும் . இன்ன இன்ன அடையாளங்களோடு வரக்கூடியவரால் அது நடத்தப்படும் " என்றாள் . அவருடைய உருவத்தை மகன் வரைந்து கேட்க , ஜோதிடம் மற்றும் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்ற ராஜ மாதா, ஹாஜா அவர்களின் உருவத்தை வரைந்து கொடுத்தாள்.

மேலும் தன் மகனிடம் , " மகனே ! நீயோ குறுநில மன்னன் அஜ்மீரையும் அதன் சுற்று வட்டாரத்தை மட்டுமே ஆள முடியும் . அவரோ பெரும் கீர்த்தி பெற்ற இறை நேசர் . அவர் அகண்ட பாரத்தையே உலக இறுதிநாள் வரை ஆளக்கூடியவர் " என்று ஜோதிடத்தின் மூலம் கணித்தார்.

ஹாஜாவின் ஆட்சி இந்தியா மட்டுமல்லாமல் பாகிஸ்தானிலும் தொடர்கிறது . அஜ்மீரின் ஒவ்வொரு வருடாந்திர கந்தூரியின் போது இந்திய அரசாங்கத்தில் இருந்து மக்பூரா விரிப்பு கண்ணியமான முறையில் காணிக்கையா செலுத்தப்படுகிறது ராஜ மாதா வாசவதத்தாவின் வான சாஸ்திரத்தின் கணிப்பு மிகச் சரியாக இருக்கிறது.

இந்த ஜோதிட வான சாஸ்திரம் என்ற கலை இருப்பது பற்றி இஸ்லாம் கூறுவது : "இந்த வான சாஸ்திரத்தை வானத்திலிருந்து பூமிக்கு கொண்டு வந்தவர் நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகும்.

ஒருநாள் இவர் வெயில் கடுமையாக இருந்தது அதன் வெப்பம் தாளாது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் பெரிதும் துயருற்றார்கள் . "சூரியனிலிருந்து இவ்வளவு தொலைவு பூமியிலிருந்தும் இங்குள்ள மக்களுக்கு இவ்வளவு வெப்பமாக இருக்கிறது. அந்த சூரியனை சுமக்கும் அந்த வானவருக்கு அதன் வெப்பத்தை எவ்வாறு பொறுத்துக் கொள்வார் ? இறைவனே அவரின் துன்பத்தை இலகுவாய் ஆக்குவாயாக !"

அந்த உடனே சூரியனின் வெப்பம் குறைக்கப்பட்டது .அந்த வானவர் சந்தோஷப்பட்டு இத்ரீஸ் (அலை) அவர்களை காண பூமிக்கு வந்து , நபியவர்களை வானலோகத்திற்கு

அழைத்து சென்று மலக்குகள் பார்வையிடும் "ஸிர்ருல் மலக்கூத்து " _என்கிற பிரபஞ்சங்களின் இரகசிய

கிதாபை படிக்க கொடுத்தும் , மேலும் சூரியனுடைய கோள்கள் சுற்றி வரும் பாதைகளில் அந்தந்த கிரகங்களோடு அவரையும் பயணிக்க செய்தார்கள்.

இப்படி சனிக்கோளுடன் சேர்ந்து 30 ஆண்டுகள் விண்ணிலே பயணித்து வந்தார்கள். ஆகையால் இவர்களால் தன்னால் நேரில் கண்ட நட்சத்திரத்திரங்களைப் பற்றியும் கிதாபு ஸிர்ருல் மலக்கூத்து (பிரபஞ்சங்களின் இரகசியத்தை) ஒன்றாக சேர்த்து வான சாஸ்திரத்தை இவர்கள் தொகுத்து பூமிக்கு கொடுத்தார்கள்.

இதெல்லாம் நிஜமாலுமா ..? என்று நீங்கள் கேட்பது புரிகிறது. சொல்றேன்

பைலபூஸ் மன்னர் கிரேக்க அரச குமாரி கிலாயா மணக்கிறர் .சிற்றரசர் மல்க்கான் என்பவரை அவள் தங்கை அல்காவை மணக்கிறார் .பைலபூஸ் 40 ஆண்டு காலமாக சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு வானத்தைப் பார்த்து கோள்கள் நட்சத்திரங்கள் ஆகியற்றின் அமைப்புகளையும் ஆராயும் வழக்கம் அவருக்கு உண்டு.

இந்த வான சாஸ்திரத்தின் மூலம் கியாமத் நாள் வரை ஜீவித்திருக்கக் கூடிய அவதார புருஷனை பெற முடியும் என்று நம்பி அந்த குறிப்பிட்ட நட்சத்திரம் மேலோங்கும் போது மனைவியுடன் வீடு கூட வேண்டும் என்ற வான சாஸ்திரத்தின் நியதி. இதன்படி சிற்றரசர் மல்கான் தன் மனைவி அல்காவுடன் வீடு கூடி ,கிள்று நபி (அலை) அவர்களைப் பெறுகிறார்கள் .

சற்று நாழிகை கழித்து பைலபூஸ் மன்னர் தன் மனைவி கிலாயாவுடன் வீடு கூடி உலகம் சுற்றி வந்த மாமன்னர் துல்கர்னன் (அலை) அவர்களை பெறுகிறார்கள்

"ஒரு குழந்தை பிறக்கும் போது, அதன் முதல் மூச்சு, வடிவம் பெற்று அது உலகத்தில் ஓர் உயிராய் பிரவேசிக்கும் போது, இந்த பிரபஞ்சவெளியிலும் ஒரு பிரத்தியேகமான நிகழ்ச்சி நிகழ்கிறது" என்கிறது வான சாஸ்திரம்

ஏதோ ஒரு நட்சத்திரம் ஒரு குறிப்பிட்ட நிலையில் உச்சம் பெறுகிறது. இந்த நட்சத்திரம் மற்றும் கிரகங்களின் நிலை இதெல்லாம் பிறந்த உயிருக்கு தொடர்புபடுத்தி நிறைய நிறைய கணிக்கிறார்கள் .

இது விஷயமாக குர்ஆனில் தேடிய போது, ''நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் நட்சத்திரங்களை கூர்ந்துப்பார்த்தார் " குர்ஆன் (37 : 88) " இலா "என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருந்தால் "கூர்ந்து " என்று அர்த்தம் வரும். எனவே நட்சத்திரக் கலையை பயின்றார். மேற்கண்ட வசனத்தைத் தொடர்ந்து இப்ராஹிம் (அலை) அவர்கள்

" பின்னர் நட்சத்திரங்களைக் கூர்ந்து பார்த்து . நிச்சயமாக எனக்கு ஒரு நோய் ஏற்படும் போல் இருக்கின்றது " என்று கூறவே குர்ஆன் (37 : 88,89) குறிப்பிடுகிறது .

"எந்த நபியுடைய ஜென்ம நட்சத்திரம் விண்ணில் அவர் பிறப்பதற்கு முன் தோன்றாமல் இருந்ததில்லை "

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்

நபி மூஸா (அலை) அவர்கள் பிறப்பதற்கு முன்னதாக பிர்அவ்னின் அரண்மனையில் உள்ள வான சாஸ்திரிகள், "வானில் ஜென்ம நட்சத்திரம் தோன்றி விட்டது .இது ஓர் அவதாரப் புருஷன் பனி இஸ்ரவேலர்களில் பிறந்தற்குரிய அறிகுறி " என்று கணித்ததும் , ஒரு லட்சத்திறகும் அதிகமான பிறந்த ஆண் குழந்தைகளின் தலை சீவப்பட்டது . அக்கால வான இயல் வல்லுநர் கணித்ததில் தவறெதும் உண்டா ? மூஸா (அலை) பிறக்காமலா போனார்கள் ? பிறந்தார்கள் அல்லவா ? குர்ஆன் (20 : 39) (28 : 07) இது பற்றி கூறுகிறது


இது போன்றே நபி ஈஸா (அலை) அவர்கள் பிறக்கும் போது மூன்று வான இயல் வல்லுநர்கள் ஜென்ம நட்சத்திரம் வானில் தோன்றியதை கண்டு பைத்துல் முகத்தஸ் வந்து சேர்ந்து இஸ்ரவேலர்களின் அரசர் பிறந்து விட்டாரா என்று ஐரதூஸ் மன்னனிடம் கேட்க , பின் விசாரித்தில் மாட்டுத் தொழுவத்தில் மாநபி ஈஸா (அலை) அவர்கள் பிறந்தது உண்மைதானே.?

"பதினோரு நட்சத்திரங்களும் . சூரியனும், சந்திரனும் எனக்கு தலை வணங்கக் கண்டேன்" குர்ஆன் (12 : 04) என்று சிறுவர் நபி யூசுப் (அலை) கனவில் கண்ட நட்சத்திரங்கள் தன்னுடைய சகோதரர்கள் என்பதை தந்தை நபி யாகூப் (அலை) அவர்கள் அறிவிக்கவில்லையா ?

ரோமபுரி ஹெர்குலிஸ் மன்னர் "இன்றிரவு நான் நட்சத்திர மண்டலத்தை ஆராய்ந்தபோது, "விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களின் மன்னர் தோன்றிவிட்டதாக ஜென்ம நட்சத்திரத்தின் மூலம் அறிந்தேன்" என்று கூறி அண்ணலெம் பெருமானார் நபி முஸ்தபா (ஸல்) அவர்களின் பிறப்பை பதிவு செய்யவில்லையா ? புகாரி பாகம் 1 - ஹதீஸ் 07

இறை நேசர் ஹாஜாவின் ஆட்சி இன்னும் நடந்து கொண்டுதானே இருக்கிறது ? இது கியாமத் நாள் வரை தொடரும். இன்ஷா அல்லாஹ் .

ஒரு பொருள் இரண்டு இடத்தில் இருக்க முடியுமா ?
அறிவியிலிலிருந்து ஆன்மிகம் வரை 8



அறிவியல் உலகில் எத்தனை ஆயிரம் கோட்பாடுகள் வந்தாலும், இன்றளவும் அறிவியல் உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டிருப்பது இரண்டு கோட்பாடுகள்தான் ஒன்று ஐன்ஸ்டைனின் சார்பு நிலை தத்துவமும் , மன்றொன்று குவாண்டம் பிசிக்ஸ் என்ற கோட்பாடும்.
இதில் சார்புநிலை தத்துவம் ஆராய்வது ,பிரமாண்டமான நட்சத்திரம் ,பிளாக் ஹோல், கிராவிட்டி ,space-time என்று பெரிதினும் பெரிது என்று பெரியதில் உண்மைகளை ஆராய்கிறது.
குவாண்டம் தத்துவம் என்பது அணுக்கள், அதற்குள் இருக்கும் உட்கரு , அதற்குள் சப்- அடாமிக் பார்ட்டிக்குகள், அதற்குள்ளும் ஒற்றை ஸ்ட்ரிங் , அதிலும் நுணுக்கமாக வெறும் எனர்ஜி ஃபார்ம் ,என்று சிறிதினும் சிறிது என்று உள்ளேயே சென்று நுணுக்கமான உண்மைகளை ஆராய்கிறது.
எவ்வளவு பெரியதாயினும் அதனையும் , எத்தனை சிறியதாயினும் அதனையும் தெளிவான தன் குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல் இல்லை என்கிறான் இறைவன் .
وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا لَا تَاْتِيْنَا السَّاعَةُ قُلْ بَلٰى وَرَبِّىْ لَتَاْتِيَنَّكُمْۙ عٰلِمِ الْغَيْبِ لَا يَعْزُبُ عَنْهُ مِثْقَالُ ذَرَّةٍ فِى السَّمٰوٰتِ وَلَا فِى الْاَرْضِ وَلَاۤ اَصْغَرُ مِنْ ذٰ لِكَ وَلَاۤ اَكْبَرُ اِلَّا فِىْ كِتٰبٍ مُّبِيْنٍۙ
(எனினும்) "மறுமை நமக்கு வராது" என்று இந்நிராகரிப் பவர்கள் கூறுகின்றனர். (நபியே!) நீங்கள் கூறுங்கள்: "அது வரும். என் இறைவன் மீது சத்தியமாக! நிச்சயமாக அது உங்களிடம் வந்தே தீரும். என் இறைவன் மறைவானவை அனைத்தையும் அறிந்தவன். அவன் அறியாது வானங்களிலோ பூமியிலோ உள்ளவற்றில் ஓர் அணுவளவும் தப்பிவிடாது. அணுவைவிட சிறியதோ அல்லது பெரியதோ (ஒவ்வொன்றும் "லவ்ஹுல் மஹ்ஃபூள்" என்னும்) தெளிவான குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல் இல்லை." (அல்குர்ஆன் : 34:3)
இந்த இரண்டு கோட்பாடுகளும் அப்படி என்னதான் விளக்குகின்றன என்று பார்த்தால் , அடிப்படையில் அவை இரண்டும் ஒரே விஷயத்தைத்தான் விளங்குகின்றன . அதாவது இந்த பிரபஞ்சத்தின் இயல்பை , அதன் இருப்பை, அதன் இயங்கும் தத்துவத்தை.. இப்படியே பிரபஞ்சத்தைப் பற்றியேதான் விளக்குகின்றன .
ஆனால் இரண்டும் தனக்கே உரிய பாணியில் தனித்து இவைகளை செய்கின்றன.தனித்தனியாக வைத்து பார்க்கும் போது அவை இரண்டும் மிகச் சிறப்பான ஆதாரங்களோடு மிகச்சரியாக ஒத்துக் கொள்ளும்படி பிரபஞ்ச இயல்பை விளக்குகின்றன .

ஆனால் என்ன விசேஷம் என்றால் இரண்டையும் ஒன்றாக வைத்துப் பார்க்கும்போது ஒரு சிக்கல் இடிக்கிறது.இவை இரண்டும் சொல்லும் உண்மைகள் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டு முரண்பட்டு காணப்படுகின்றது. அதாவது இரண்டில் ஏதாவது ஒன்றுதான் உண்மையாக இருக்க முடியும். ஒரே நேரத்தில் இரண்டும் அல்ல .

இப்படிப்பட்ட இவைகள் பொதுவான ஒரு தளத்தில் மட்டும் இரண்டும் ஒன்றாக இருக்கின்றன. அது என்னன்னு பார்த்தீங்கன்னா இரண்டுமே எளிதில் புரிவதில்லை. இரண்டுமே சரியான குழப்படி கோட்பாடுகள் கொண்டவை இரண்டுமே படிக்க படிக்க நமக்கு தலையே சுற்றுகிறது .
இவைகள் இப்படி தோற்றமளிக்க காரணம் இல்லாமலில்லை. இவைகளுக்கு இருக்கும் ஒரு தனிச்சிறப்பு என்னவென்றால், இரண்டுமே நமது அன்றாட பௌதிக அடிப்படைக்கும் , நமது இயல்பான தர்க்கரீதியான அறிவியல் புரிதலுக்கும் அப்பாற்பட்டவை.

நீங்கள் எதை ஒன்றையும் அறிவுபூர்வமாக அலசி ஆராய்ந்து தர்க்கரீதியாக புரிந்துகொள்ளக்கூடியவரா ? மன்னிக்கவும் அப்படி என்றால், இந்த கோட்பாடு ஓரளவுதான் உங்களால் விளங்கிக்கொள்ள முடியும் .
எந்த வரையறையும் கட்டுப்பாடும் இன்றி உங்களால் வளமான கற்பனை செய்ய முடியுமா ? அப்படி என்றால் இந்தக் கோட்பாடுகளை நீங்கள் நன்கு புரிந்து கொள்ளலாம்.
கற்பனை குறித்த ஐன்ஸ்டைன் சொன்ன இரண்டு வாக்கியங்கள் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.
" உலகில் அதிகமான விஷயம் தெரிந்தவன் நிஜமான அறிவாளி அல்ல ; அதிகம் கற்பனை செய்யக் கூடியவன் எவனோ அவன்தான் நிஜமான புத்திசாலி "
குவாண்டம் தத்துவம் சொல்வதை ஓர் எளிய உதாரணத்தோடு உங்களுக்கு சொல்கிறேன்.
இப்பிரபஞ்சத்தின் ஒரு பொருள் ஒரே நேரத்தில் நேரத்தில் இரண்டு இடத்தில் இருக்க முடியாது இது ஒரு சாதாரண பௌதீக உண்மை சரிதானே ?
அதாவது குறிப்பிட்ட ஒரு இடத்தில்தான் ஒரு பொருள் ஒரு நேரத்தில் இருக்க முடியும் . ஆனால் குவாண்டம் உலகில் அப்படி இல்லை .
குவாண்டம் உலகில் எனது பேனா ஒரே நேரத்தில் என் வீட்டிலும் , அதே நேரத்தில் எனது ஆபிஸ் மேஜையிலும் இருக்க முடியும் . நம்புவதற்கு கஷ்டமாக இருக்கிறதா ? நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும் .
இதை நபிமொழி வாயிலாக விளக்குகிறேன் .
நான் (விண்ணுலகப் பயணத்திற்காக) அழைத்துச்செல்லப்பட்ட இரவில் இம்ரானின் புதல்வர் மூசா (அலை) அவர்களைக் கடந்துசென்றேன். மூசா (அலை) அவர்கள் (யமனியர்களான) "ஷனூஆ" குலத்தைச் சேர்ந்த மனிதரைப் போன்று மாநிறமுடையவர்கள்; உயரமானவர்கள்; சுருள்முடியுடைவர்கள். ஸஹீஹ் முஸ்லிம் : 267.
இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் விண்ணுலகப் பயணத்திற்காக அழைத்து செல்லப்பட்ட போது, மூசா (அலை) அவர்கள் "அல்அஸ்ரக்" பள்ளத்தாக்கைக் கடந்து சென்றார்கள்.
அப்போது, "இது எந்தப் பள்ளத்தாக்கு?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "அல்அஸ்ரக் பள்ளத்தாக்கு" என்று பதிலளித்தார்கள்.

"மூசா (அலை) அவர்கள் உரத்த குரலில் "தல்பியா" சொல்லிக்கொண்டு இந்த மலைக் குன்றிலிருந்து இறங்கிவந்து கொண்டிருப்பதை (இப்போதும்) நான் காண்பதைப் போன்று உள்ளது" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். வந்துள்ளது. ஸஹீஹ் முஸ்லிம் : 268.
பிறகு நாங்கள் ஆறாம் வானத்தைச் சென்றடைந்தோம். அங்கு நான் மூசா (அலை) அவர்களிடம் சென்று அவர்களுக்கு சலாம் சொன்னேன். அவர்கள், "நல்ல சகோதரரும் நல்ல நபியுமான உங்கள் வரவு நல்வரவாகட்டும்" என்று (வாழ்த்துக்) கூறினார்கள். நான் அவர்களைக் கடந்து சென்றபோது அவர்கள் அழுதார்கள். "நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், "இறைவா! என் சமுதாயத்தாரில் சொர்க்கம் செல்கின்றவர்களை விட அதிகமானவர்கள் எனக்குப் பிறகு உன்னால் அனுப்பப்பெற்ற இந்த இளைஞரின் சமுதாயத்தாரிலிருந்து சொர்க்கம் செல்வார்கள்" என்று பதிலளித்தார்கள். ஸஹீஹ் முஸ்லிம் : 264 .
மிஹ்ராஜ் என்கிற விண்வெளி பயணம் இரு பகுதிகளைக் கொண்டது . 'இஸ்ரா ' என்பது கிடைமட்டமான பூமியின் தரைக்கு இணையாக சுமார் 20 அடி உயரத்தில் பறத்தல் .இது மக்காவிலிருந்து பைத்துல் முஹத்தஸ் வரை .
விண்வெளி நோக்கி செங்குத்து பயணம் . இது பைத்துல் முஹத்தஸ் முதல் ஏழாவது வானம் , அர்ஷ் வரை .
மிஹ்ராஜ் என்னும் மின்னல் வேகம் ஒரே பயணத்தின்போது ,நபி மூஸா (அலை) அவர்களை இப்பூமியில் அல்அஸ்ரக் பள்ளத்தாக்கிலும், ஆறாவது வானத்திலும் ஆகிய இரண்டு இடங்களில் நபி (ஸல்) அவர்கள் பார்க்கிறார்கள் .
இப்பிரபஞ்சத்தின் ஒரு பொருள் ஒரே நேரத்தில் இரண்டு இடத்தில் இருக்க முடியாது என்பது பௌதீக உண்மை . ஆனால் குவாண்டம் கோட்பாட்டின்படி குறிப்பிட்ட ஒரு பொருள் ஒரே நேரத்தில் இரண்டு இடத்திலும் இருக்க முடியும் .
நவீன அறிவியலின் கோட்பாடு ஆன்மிகத்தில் நிரூபணமாகி இருக்கிறது .

கல்லே... கல்லே ... கொஞ்சம் நில்லு !
அறிவியலிலிருந்து ஆன்மீகம் வரை 9



"யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும் " (திருக்குறள் 1094)
காமத்துப்பாலில் இந்த குறள் தரும் அர்த்தம் அப்படியே முழுமையாகக் குவாண்டம் நிலையில் நடைபெறும் செயல் ஒன்றுடன் ஒத்துப் போகிறது என்று நான் சொன்னால் நிச்சயம் நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள் !
"நான் பார்க்கும்போது நிலத்தைப் பார்த்து , நான் பார்க்காத நேரத்தில் என்னைப் பார்த்து தனக்குள் மெல்லச் சிரிப்பாள்" என்பதுதான் இந்தக் குறளின் பொருள்.
இதில் பார்ப்பவரும் , பார்க்கப்படுவரும் காதலர்கள். இருவரும் உயிருள்ளவர்கள். ஆனால் குவாண்டம் நிலையிலுள்ள துகள்கள் கூட இப்படியான செயல்பாட்டிலேயே இயங்குகின்றன என்பது உங்களுக்கு தெரியுமா ?
அதாவது குவாண்டம் நிலையில் இருக்கும் ஒரு எலக்ட்ரான், அதை கவனிக்கும்போது ஒருவிதமாகவும் , அதை கவனிக்காத போது அதற்கு எதிரான வேறொரு விதமாகவும் இயங்குகிறது. அந்த எலக்ட்ரானுக்கு நாம் அவன் கவனிப்பது ஏதோ வகையில் தெரிகிறது.
என்ன நம்ப முடியவில்லையா ?
குறளில் சொன்னது போல உயிருள்ள ஒருவரால், பார்க்கும்போது பார்க்காமல் இருக்கவும் , பார்க்காதபோது பார்க்கவும் செய்ய முடியும் . அது எப்படி உயிர் இல்லாத எலக்ட்ரான்கள் பார்க்கும்போது ஒரு விதமாகவும் பார்க்காதபோது வேறு விதமாகவும் இருக்க முடியும் ?
விஞ்ஞானிகளே ஆச்சரியத்துடன் நிமிர்ந்து உட்கார வைத்த ஒரு செயல்பாடு . இது இதனால் உயிரில்லாத அஃறிணை பொருளுக்கும் உயிர் உண்டோ என்று எண்ணத் தோன்றியது விஞ்ஞானிகளுக்கு !
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
பனூ இஸ்ராயீல் சமுதாயத்தார் பிறந்த மேனியுடன் ஒருவர் மற்றவரது மறைக்க வேண்டிய உறுப்பைப் பார்த்துக்கொண்டே குளிப்பார்கள்.
மூசா (அலை) அவர்கள் தனியாகவே குளிப்பார்கள். (அன்னாரைக் கொச்சைப்படுத்த விரும்பிய) அந்த மக்கள் "அல்லாஹ்வின் மீதாணையாக! மூசா குடலிறக்க நோயாளியாய் இருப்பதனால்தான் அவர் நம்முடன் சேர்ந்து குளிப்பதில்லை" என்று கூறினர்.
ஒரு முறை மூசா (அலை) அவர்கள் குளிக்கப் போனார்கள். அப்போது அவர்கள் தமது ஆடையை(க் களைந்து) ஒரு கல்லின் மீது வைத்தார்கள். அந்தக் கல் அவர்களது துணியுடன் ஓடியது.
மூசா (அலை) அவர்கள் அதைப் பின்தொடர்ந்து கல்லே, எனது துணி! கல்லே, எனது துணி! என்று கூறியவாறு விரைந்து ஓடினார்கள்.
இறுதியாக (பனூ இஸ்ராயீல் மக்கள் பகுதிக்கு வந்தபோது அவர்கள்) மூசா (அலை) அவர்களின் மறைக்க வேண்டிய உறுப்பைப் பார்த்துவிட்டு,

"அல்லாஹ்வின் மீதாணையாக! மூசாவிற்கு எந்தக் குறையுமில்லை என்று கூறினர்.
மூசா (அலை) அவர்கள் (நன்கு) பார்க்கப்படும்வரை (ஓடிய) அந்தக் கல் (பின்பு) நின்றுவிட்டது. உடனே மூசா (அலை) அவர்கள் தமது ஆடையை எடுத்துக்கொண்டு அந்தக் கல்லை (தமது கைத்தடியால்) அடிக்கலானார்கள்.
அல்லாஹ்வின் மீதாணையாக! மூசா (அலை) அவர்கள் (தமது கையிலிருந்த தடியால்) கல்லின் மீது அடித்த காரணத்தால் ஆறு அல்லது ஏழு தழும்புகள் அந்தக் கல்லில் பதிந்துவிட்டன.
அறிவிப்பாளர் ஹம்மாம் பின் முனப்பிஹ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து அபூஹுரைரா (ரலி) அவர்கள் எங்களுக்குப் பல ஹதீஸ்களை அறிவித்தார்கள். இந்த ஹதீஸும் அவற்றில் ஒன்றாகும். ஸஹீஹ் முஸ்லிம் : 566.

நான், நீங்கள், அந்த நிலா எல்லாமே தகவல்கள்
அறிவியலிலிருந்து ஆன்மீகம் வரை 10



நவீன இயற்பியலின்படி குறிப்பாக குவாண்டம் இயற்பியலின் படி இப்படி பூமியில் இருக்கும் அனைத்தும் தகவல்களாகவே , (Information) அமைக்கப்பட்டிருக்கின்றன.

நான், நீங்கள், நீங்கள் உட்கார்ந்திருக்கும் நாற்காலி, வீட்டின் அருகே இருக்கும் அந்த பள்ளிவாசல்...என எல்லாமே தகவல்களால் அடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டவை என்கிறது அறிவியல். இது புரிந்துகொள்ள முடியவில்லையா ?

இதை புரிந்து கொள்வதற்கு ஓர் உதாரணத்துடன் சொல்றேன்.

ஒரு வீட்டை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த வீடு முழுவதுமே செங்கற்களால் கட்டப்பட்டவை என்றும் வைத்துக் கொள்ளுங்கள். வீட்டின் வெளியே நின்று அதன் அமைப்பைப் பார்க்கும் போது அது விதவிதமான வடிவங்களில் நவீனமாக அமைக்கப்பட்டிருக்கும்.

அதை நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தால் அவை எல்லாம் பல செங்கற்களின் ஒழுங்கான அமைப்பின் மூலம் உருவானது என்பது தெரியும். சரிதானா ?

ஒவ்வொரு செங்கல்லும் செவ்வக வடிவில் காணப்பட்டாலும், அவற்றை வைத்து அடுக்கிக் கட்டப்பட்ட வீடு வளைந்து வளைந்து அழகிய வடிவத்தில் காணப்படும்.

இப்போது இந்த செங்கற்கள் ஒழுங்காக அடுக்குவதற்கு எது உதவியது என்று பார்த்தால் , அந்த வீடு கட்டுவதற்கு என்று "வரைவு '' ஒன்று இதற்கென்றே படித்து பட்டம் பெற்ற ஒருவரால் வரையப்பட்டிருக்கும்.

இந்த வரைவு கணினி மூலமாக கணித விதிகளின்படி துல்லியமாக வரையப்பட்டிருக்கும் . அந்த வரவை அடிப்படையாகக் கொண்டு அந்த வீடும் கட்டப்பட்டிருக்கும். இந்த வரைவு எடுத்துக்கொண்டால் , அந்தக் கட்டடம் அமைப்பதற்கான சகல தகவல்களையும் (Information) அது கொண்டிருக்கும் . அதாவது அமைக்கப்படும் அந்த வீடும் , இந்தத் தகவல்களைக் கொண்டதாகத்தான் இருக்கும் புரிகிறதா ?

எங்கிருந்தோ ஒரு வீட்டின் Blue print வரையப்படும். அந்த புளு பிரிண்ட்டின் அத்தனை தகவல்களைக் கொண்டு எங்கோ ஓர் இடத்தில் வீடு கட்டப்படும். எல்லாமே தகவல்கள்தான் .

ஹஜரத் புஹ்லூல் தானா (ரஹ்) அவர்கள் ஒரு நிறைவான (மஜ்தூப்) தீவிர இறை நேசராக இருந்தார்கள் கலீஃபா ஹாரூன் ரஷீத் காலத்தில் பாக்தாத்தில் இருந்து வந்தார்கள்.

ஒரு நாள் மாலை அந்தி சாயும் நேரத்தில் கலீஃபா ஹாரூன் ரஷீத் தன் மனைவி ஜுபைதா காத்தானுடன் டைகரீஸ் நதி (தஜ்லா நதி) நதிக்கரையோரம் உலாவச் சென்றார். அங்கு புஹ்லூல் தானா (ரஹ்) அவர்கள் ஈரமான ஆற்று மண்ணில் மணல் வீடுகள் கட்டிக் கொண்டு இருந்தார்கள். ஒரு குழந்தையைப் போல.

அதைப் பார்த்த ஜூபைதா "பாபா , தாங்கள் என்ன செய்து கொண்டிடுக்கிறீர்கள் ? "

"நான் சுவனத்தில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறேன்."

" இந்த வீடுகளைத் தாங்கள் விற்பனை செய்வீர்களா ? "

"ஆமாம் ' ஒரு வீட்டின் விலை உமது கழுத்தில் கிடக்கும் முத்துமாலை "

உடனே ஜூபைதா முத்துமாலையை கழற்றிக் பாபாவிடம் கொடுத்து விட்டார்.புஹ்லூல் மாலையை வாங்கிக் கொண்டு "செல்லுங்கள் இதுதான் உம்முடைய சுவனமாளிகை' " என்றார்கள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த கணவர் ஹாரூன் ரஷீத் தன் மனைவியிடம் "ஒரு மஜ்தூபிடம் விலை மதிப்பற்ற உன்னுடைய முத்து மாயையை கொடுத்து விட்டாயே நீ ஒரு சரியான முட்டாளாக இருக்கிறாய் " என்று சற்று கோபப்பட்டார்.

அன்று இரவு உறக்கத்தில் கலீஃபா ஹாரூன் ஒரு கனவு கண்டார் . சொர்க்கத்தில் அவர் உலாவிக் கொண்டிருக்கும் போது மிக உயரமான அழகான முத்துக்களால் ஆன ஒரு மாளிகையைக் கண்டார்..


அதன் அழகில் அவர் அப்படியே சொக்கி நின்று விட்டார் அதன் வாயிலில் "ஜூபைதா காத்தூன் " என்று பொறிக்கப்பட்டிருந்தது.. ஹாரூன் , "அட நம்ம மனைவியின் மாளிகைதானே.. !"என்று உள்ளே நுழைய முயற்சிக்கும் போது ஒரு வானவர் அவரைத் தடுத்து " இது ஜூபைதா காத்தூனுடைய மாளிகை நேற்றுதான் தம்முடைய முத்துமாலையை விலையாகக் கொடுத்து வாங்கிக்கிறார். அவர் இதனுள் நுழையாதவரை வேறு யாருக்கும் நுழைய அனுமதி இல்லை" என்றார்.

ஹாரூன் ரஷீத் திடுக்கிட்டு எழுந்து டைக்ரீஸ் நதிக்கரைக்கு விரைந்தார். அங்கு புஹ்லூல் தானா அவர்கள் நிறைய வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்தார். ஹாரூன் அவரிடம் "பாபா எனக்கும் ஒரு வீடு தாருங்கள் அதற்குரிய தொகையைக் கொண்டு வந்திருக்கிறேன் என்றார்....

புஹ்லூல் புன்னகைத்தபடி "சுவனத்தில் எவர்கள் முத்து மாளிகையைக் காணவில்லையோ அவர்களுக்கே நாம் இந்த வீடுகளை விற்பனை செய்வோம். எவர்கள் சுவனத்து முத்து மாளிகையைக் கனவில் கண்டார்களோ அவர்களுக்கு நாம் ஒருபோதும் இந்த வீடுகளை விற்பதில்லை "எனக் கூறி விட்டு சென்று விட்டார்...

புஹ்லூல் தானா (ரஹ்) அவர்களால் நதிக்கரையில் கட்டப்பட்ட மணல் வீடுகள். அது சுவனத்தில் மாளிகைகளாகவே கட்டப்பட்டன .

வானத்தில் வெடிப்புமும் இல்லை , ஓட்டையும் இல்லை !
அறிவியலிலிருந்து ஆன்மீகம் வரை 11



சமீபத்தில் அறிவியலில் பெரும் விவகாரமாகும்

விவாதமாகவும் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு அறிவியல் யுத்தத்தைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

" அண்டத்தில் எங்குமே கருந்துளைகள் (Black Holes) கிடையாது" - என்று உலக இயற்பியல் வரலாற்றில் மிக முக்கியமானவரும் , நவீன இயற்பியலில் பெயர் பெற்றவரும் , கடந்த பல தசாப்தங்களாக கருந்துளைகள் பற்றி வரிந்து வரிந்து ஆராய்ந்து எழுதியவருமான ஸ்டீபன் ஹாக்கிங் (Stephen Hawking) அவர்கள் சொன்ன புரட்சிகரமான கருத்து இது .

இதைத்தானே குர்ஆனும் 1400 வருடங்களுக்கு முன்பே சொன்னது :

اَ فَلَمْ يَنْظُرُوْۤا اِلَى السَّمَآءِ فَوْقَهُمْ كَيْفَ بَنَيْنٰهَا وَزَ يَّـنّٰهَا وَمَا لَهَا مِنْ فُرُوْجٍ-

தங்களுக்கு மேலிருக்கும் வானத்தை அவர்கள் கவனித்துப் பார்க்கவில்லையா? நாம் அதனை எவ்வாறு ஒரு கட்டுக்கோப்பாக அமைத்து, அதனை (நட்சத்திரங்களைக் கொண்டு) அலங்காரமாக்கி வைத்திருக்கின்றோம். அதில் எவ்வித வெடிப்புமில்லை. (ஓட்டை உடைசலும் இல்லை!) (குர்ஆன் : 50:6)

நாஸா உட்பட பல ஆராய்ச்சி மையங்களில் பல ஆயிரக்கணக்கான கருந்துளைகள் கண்டுபிடித்திருக்கும் இந்தச் சூழ்நிலையில் ஸ்டீபன் ஹாக்கிங் இப்படியானதொரு ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார் .

அவர் இப்படி ஒரு முடிவுக்கு வந்ததற்கு காரணம் ஒரு யுத்தம் (War) அறிவியல் யுத்தம் கத்தியின்றி இரத்தமின்றி நடைபெறும் அறிவியல் யுத்தம் அது .

ஒருபுறம் ஸ்டீபன் ஹாக்கிங்கும் , மறுபுறம் ' லெனார்ட்

சஸ்கிண்ட் (Leonard Susskind) என்னும் இன்னுமொரு அறிவியல் மாமேதைக்கும் இடையில் நடக்கும் அறிவியல் யுத்தம். சஸ்கிண்ட் என்பவரும்

சாதாரணமானவரல்ல.உலகப் புகழ்பெற்ற ஸ்ட்ரிங் தியரியின் (String Theory) கட்டமைப்பாளர்களில் ஒருவர்.

இவர்கள் இருவரும் கருத்துளையில் நடைபெறும் முக்கிய நிகழ்வு ஒன்றை பற்றிதான் முரண்படுகிறார்கள். அதனாலேயே இந்த யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

ஸ்டீபன் ஹாக்கிங், "கருந்துளைக்குள் சென்று விழும் எந்தப் பொருளானாலும் அதன் மையத்தை நோக்கி இழுக்கப்பட்டு, இல்லாமல் போய்விடும்" என்கிறார் .

ஆனால் சஸ்கிண்ட் , "அண்டத்தில் எதையும் அழிக்க முடியாது. அது திடப்பொருளாக இருந்தாலென்ன,சக்தியாக இருந்தாலென்ன அவை இன்னுமொன்றாக மாற்றப்பட்டு அண்டத்திலேயே இருக்குமேயொழிய , இல்லாமல் ஒன்றும் போகாது " என்கிறார்.

இதையொட்டி சஸ்கிண்ட் சொன்ன புரட்சிகரமான இன்னுமொரு கருத்து , "கருந்துளைக்குள் சென்று விழும் பொருட்கள் கருந்துளையின் அதி உயர் வெப்ப கதிர்களால் சிதைக்கப்பட்டு , அவை தகவல்களாகக் (information) கருந்துளையின் "நிகழ்வு எல்லையில் "(Event Horizon) பதிந்திருக்கும்" என்கிறார் . கவனிக்கவும் தகவல்களாக பதிந்திருந்திருக்கும் என்கிறார் .

இப்படி பார்க்கும்போது சஸ்கிண்ட் சொன்னதைவிட , ஹாக்கிங் சொன்னதையே ஏற்றுக் கொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள். ஆனால் அதிகமான அறிவியல் அறிஞர்கள் சஸ்கிண்ட் சொன்னதே ஏற்கின்றனர் .
சஸ்கிண்ட் இத்துடன் நிறுத்திவிடவில்லை .அவர் ஓர் உதாரணத்தையும் குறிப்பிடுகிறார்.' சினிமா படத்தை ஒளிபரப்பும் புரஜெக்டர் சாதனம் போல, நிகழ்வு எல்லையானது , தன்னுள் பதிந்து வைத்திருக்கும் தகவல்களை, ஹோலோகிராம் படக்காட்சிகள் போல் காலவெளி என்னும் விண்வெளியில் அந்தந்த நேரத்தில் ஒளிபரப்புகிறது . அது ஒளிபரப்பும் திரைப்படக் காட்சிகள்தான் நானும், நீங்களும், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், அந்த பூனைக்குட்டியும் உட்பட பூமியில் இருக்கும் அனைத்து பொருட்களும் 'என்கிறார்.
மேலும் பூமியில் நாம் பார்க்கும் எதுவுமே உண்மையில்லை. நாம் அனைவருமே கருந்துளைகள் தெறிக்கவிட்ட மாயத்தோற்றங்கள். இந்த 'மாயை ' என்ற வார்த்தையும் அவர் வாயால் சொன்னதுதான்.
இந்த பிளாக்ஹோல்களின் Even Horizon வெளியிடும் தகவல்களால் (information) வெளிப்படும் தோற்றங்களைத்தான், நாம் நிஜமாக நடப்பதாக கற்பனை பண்ணிக்கொண்டு இருக்கிறோம் . அதாவது 'வாழ்வதாக நாம் நினைப்பதே பொய்' என்று பயத்தை கிளப்புகிறார். இதில் அவர் குறிப்பிட்ட தகவல்களை விளக்குவதற்குத்தான் உங்களுக்கு ஓர் உதாரணத்தைக் கூறுகிறேன் .

இறைவன் உலகத்தை படைப்பதற்கு முன்னாள் வெண்மையான முத்துக்களின் கோர்வையின் மூலம் ஒரு பலகையை அமைத்தான். சிவப்பு மரகதக் கற்கள் அதன் இருபுறமும் அமைக்கப்பட்டிருக்கும். அதை ஒவ்வொரு நாளும் 360 தடவை இறைவன் பார்க்கிறான்.
இறைவன் தனது எழுதுகோலுக்கு கட்டளையிட்டு, தன் விருப்பப்படி என்னென்ன நடக்க வேண்டுமோ அதையெல்லாம் எழுதி வைத்துள்ளான். இப்பலகை ஏழாவது வானத்தில் பாதுகாப்பாக உள்ளது . இதன் செய்திகள் அனைத்தும் பதிக்கப்பட்ட ஏழாவது வானத்திலிருந்து திருக்குர்ஆன் முதல் வானத்தில் இறக்கப்பட்டுள்ளது.
அந்த லவ்ஹுல் மஹ்ஃபூள் பலகையில் இருந்து வந்ததுதான் திருக்குர்ஆன் ஓர் இலை பழுத்து விழுவதானாலும், அதில் எழுதப்பட்டிருக்கும் .இந்த பலகையை இறைவன் தன் பாதுகாப்பில் வைத்துள்ளான் . மற்ற படைப்பினங்கள் எதுவும் இதை அறிந்து கொள்ள முடியாதவாறு அமைத்துள்ளான்
நூல் : ஸமர்கந்தி தஃப்ஸீர் .

فِىۡ صُحُفٍ مُّكَرَّمَةٍۙ
(அது) சங்கையாக்கப்பட்ட ஏடுகளில் இருக்கிறது.
مَّرۡفُوۡعَةٍ مُّطَهَّرَةٍ ۙ
உயர்வாக்கப்பட்டது; பரிசுத்தமாக்கப்பட்டது.
بِاَيۡدِىۡ سَفَرَةٍۙ
(வானவர்களான) எழுதுபவர்களின் கைகளால்-
كِرَامٍۢ بَرَرَةٍؕ
(லவ்ஹுல் மஹ்ஃபூளிலிருந்து எழுதிய அவ்வானவர்கள்) சங்கை மிக்கவர்கள்; நல்லோர்கள். (குர்ஆன் : 80: 13 -16)
அவன் அறியாமல் ஓர் இலையும் உதிர்வதில்லை. பூமியின் (ஆழத்தில் அடர்ந்த) இருள்களில் கிடக்கும் சிறு வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் (எந்தப் பொருளும்) தெளிவான (அவனுடைய) பதிவேட்டில் இல்லாமலில்லை.(குர்ஆன் : 6:59)
வானத்திலும், பூமியிலும் மறைந்துள்ளவற்றில் நின்றும் எதுவும் (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) தெளிவான குறிப்பேட்டில் பதிவு செய்யப்படாமல் இல்லை. (குர்ஆன் : 27:75)
அன்றியும் அல்லாஹ்தான் உங்களை (முதலில்) மண்ணால் படைத்தான்; பின்னர் ஒரு துளி இந்திரியத்திலிருந்து - பின் உங்களை (ஆண், பெண்) ஜோடியாக அவன் ஆக்கினான், அவன் அறியாமல் எந்தப் பெண்ணும் கர்ப்பம் தரிப்பதுமில்லை; பிரசவிப்பதுமில்லை. இவ்வாறே ஒருவருடைய வயது அதிகமாக்கப்படுவதும், அவருடைய வயதிலிருந்து குறைப்பதும் (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) ஏட்டில் இல்லாமலில்லை; நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு எளிதானதேயாகும். (குர்ஆன் : 35:11)
இன்னும், உணவளிக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்ளாத எந்த உயிரினமும் பூமியில் இல்லை; மேலும் அவை வாழும் இடத்தையும் (இருக்கும்) இடத்தையும், அவை (மடிந்து) அடங்கும் இடத்தையும் அவன் அறிகிறான். இவையனைத்தும் (லவ்ஹுல் மஹ்ஃபூல் என்னும்) தெளிவான புத்தகத்தில் (பதிவாகி) இருக்கின்றன. (குர்ஆன் : 11:6)
நிச்சயமாக மரணமடைந்தவர்களை நாமே உயிர்ப்பிக்கிறோம்; அன்றியும் (நன்மை, தீமைகளில்) அவர்கள் முற்படுத்தியதையும், அவர்கள் விட்டுச் சென்றவற்றையும் நாம் எழுதுகிறோம்; எல்லாவற்றையும், நாம் ஒரு விளக்கமான ஏட்டில் பதிந்தே வைத்துள்ளோம். (குர்ஆன் : 36:12)
பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஹ்ஃபூள்) ஏட்டில் இல்லாமலில்லை; நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும்.(குர்ஆன் : 57:22)
இதைத்தான் லெனார்ட் சஸ்கிண்ட் (Leonard Susskind) சினிமா படத்தை ஒளிபரப்பும் புரஜெக்டர் சாதனம் போல, நிகழ்வு எல்லையானது , தன்னுள் பதிந்து வைத்திருக்கும் தகவல்களை, ஹோலோகிராம் படக்காட்சிகள் போல் காலவெளி என்னும் விண்வெளியில் ஒளிபரப்புகிறது . அது ஒளிபரப்பும் திரைப்படக் காட்சிகள்தான் நானும், நீங்களும், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், அந்த பூனைக்குட்டியும் உட்பட பூமியில் இருக்கும் அனைத்து பொருட்களும் 'என்கிறார்.

டெலிபோர்டேஷன்
அறிவியலிலிருந்து ஆன்மீகம் வரை 12



டெலிபோர்டேஷன் இது புராணங்களிலும் பழைய மாயாஜால கதைகளிலும் , சினிமா படங்களிலும் அதிகம் பார்க்கலாம். அதாவது ஒரு பொருளை ஒரு இடத்திலிருந்து மறைய வைத்து வேறு ஓரிடத்தில் வரவழைப்பது .
இப்படி ஒரு மாயவித்தை சாத்தியமா ? என்றால் நமது அன்றாட அறிவியல் இந்த விஷயத்தில் திணறிக் கொண்டிருக்க , குவாண்டம் அறிவியல் இதை எப்பவோ சாத்தியப்படுத்திய காட்டிவிட்டது, ஆய்வின் மூலம் நிரூபித்துக் காட்டிவிட்டது ! என்ன ஒன்னு இதுவரை ஒரு சின்ன துகள் அளவில்தான் இது சாத்தியப்பட்டிருக்கிறது ! பரவாயில்லை...முதல்முதலில் விமானத்தில் பறந்தவர் வெறும் 100 மீட்டர் அளவுக்கு கிட்டத்தட்ட தானே பறந்தார் . அதுவும் ஒரு ஸ்கூட்டி வேகத்தை விட குறைவாக . இப்போது ஜெட் விமானம் மிக வேகமாக பறக்கவில்லையா ? அது மாதிரி டெலிபோர்டேஷன் பெரிய அளவில் சாதிக்கும் .
சரி இதை எப்படி செய்கிறார்கள் தெரியுமா ?
உதாரணத்திற்கு ஒரு கட்டிடம் எடுத்துக் கொள்ளுங்கள். அது ஆயிரக்கணக்கான செங்கல்கள் அடுக்கப்பட்ட அமைப்புதானே அல்லவா ?
இப்போது அந்த கட்டிடத்தை அப்படியே செங்கல் செங்கலாக பிரித்து வண்டியில் ஏற்றி வேறு இடம் கொண்டு போய் , முன்பு அடுக்கப்பட்டிருந்த அச்சு அசல் அதே வடிவத்தில் செங்கல் அடுக்கி வைத்தால் அல்லது பழைய கட்டிடம் மாதிரி வரைபடத்தை கொண்டு அச்சு அசலாக வேறு ஒரு கட்டிடம் கட்டினால் என்ன ஆகும் ? அந்த அதே கட்டிடம் இங்கே கிடைத்துவிடும் அல்லவா ? இதுதான் கான்செப்ட் .
அதாவது ஒரு பொருளை அணு அணுவாக பிரித்து அதை வேறொரு இடத்தில் அந்த மாதிரியே அப்படியே உண்டு பண்ணுவது.

டெலிபோர்ட் கான்செப்டை வைத்து 1998 இல் ஒரு ஆய்வு செய்தார்கள். ஒளியை சுமந்துள்ள ஒரு போட்டான் அணுவை சோதனைக்கு எடுத்துக்கொண்டு , அதன் நுண் கட்டமைப்பை மிகச்சரியாக வரைபடம் எடுத்து வைத்துக்கொண்டார்கள். அந்தத் தகவலை பக்கத்தில் வேறு ஒரு இடத்தில் கடத்தினார்கள். அதிக தூரமில்லை சுமார் ஒரு மீட்டர் தூரத்திற்கு கடத்தினார்கள் . அங்கே இதேபோல் கட்டமைப்பை கொண்ட அணுகூட்டத்தை பழைய அளவில் இருந்தது போன்றே அதே வரைபட படி ஒரு போலி போட்டானை வடிவமைத்து பார்தார்கள் .
என்ன ஆச்சரியம் ! தன்னை போல் ஒருவன் வந்த உடனே அந்த ஒரிஜினல் அணு காணாமல் போய்விட்டது ! அதாவது வேறு விதமாக சொல்ல வேண்டும் என்றால் , இது இங்கிருந்து அங்கே டெலிபோர்ட் ஆகிவிட்டது .
இந்த சோதனைகளில் வரைபட தகவலை கடத்துவதும் வேறு ஒரு அணுதான் . அதன்பின் கேபிளை வைத்து கடத்தி வெற்றி பெற்றார்கள்.
2006-இல் லேசரை வைத்து கடத்தினார்கள் அதுவும் வெற்றி அதன் பிறகு 2012 இதை இன்னும் விரிவாக கிட்டத்தட்ட 80 கிலோ மீட்டர் தூரத்துக்கு எல்லாம் கடத்திவிட்டார்கள் . சைனாக்காரர்கள் விண்வெளிக்கு அதை கடத்தி வெற்றி பெற்றதாக செய்தி வந்துள்ளது.
சிறிது நேரம் தாமதித்தார்; அதற்குள் (ஹுது ஹுது வந்து) கூறிற்று: “தாங்கள் அறியாத ஒரு விஷயத்தை நான் அறிந்து கொண்டேன். “ஸபா”விலிருந்து உம்மிடம் உறுதியான செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன்.” -அல்குர்ஆன் – 27:22
إِنِّي وَجَدتُّ امْرَأَةً تَمْلِكُهُمْ وَأُوتِيَتْ مِن كُلِّ شَيْءٍ وَلَهَا عَرْشٌ عَظِيمٌ
“நிச்சயமாக அ(த் தேசத்த)வர்களை ஒரு பெண் ஆட்சி புரிவதை நான் கண்டேன்; இன்னும்> அவளுக்கு (தேவையான) ஒவ்வொரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது; மகத்தான ஓர் அரியாசனமும் அவளுக்கு இருக்கிறது. -அல்குர்ஆன் – 27:23
قَالَ يَا أَيُّهَا الْمَلَأُ أَيُّكُمْ يَأْتِينِي بِعَرْشِهَا قَبْلَ أَن يَأْتُونِي مُسْلِمِينَ
“பிரமுகர்களே! அவர்கள் என்னிடம் வழிபட்டவர்களாக வருமுன், உங்களில் யார் அவளுடைய அரியாசனத்தை என்னிடம் கொண்டுவருபவர்?” என்று (ஸுலைமான் அவர்களிடம்) கேட்டார். -அல்குர்ஆன் – 27:38
قَالَ عِفْرِيتٌ مِّنَ الْجِنِّ أَنَا آتِيكَ بِهِ قَبْلَ أَن تَقُومَ مِن مَّقَامِكَ ۖ وَإِنِّي عَلَيْهِ لَقَوِيٌّ أَمِينٌ

ஜின்களில் (பலம் பொருந்திய ஓர்) இஃப்ரீத் கூறிற்று; நீங்கள் உங்கள் இடத்திலிருந்து எழுந்திருப்பதற்கு முன் அதை நான் உங்களிடம் கொண்டு வந்து விடுவேன்; நிச்சயமாக நான் அதற்கு சக்தியுள்ளவனாகவும், நம்பிக்கைக்கு உரியவனாகவும் இருக்கிறேன்." -அல்குர்ஆன் – 27:39

قَالَ الَّذِي عِندَهُ عِلْمٌ مِّنَ الْكِتَابِ أَنَا آتِيكَ بِهِ قَبْلَ أَن يَرْتَدَّ إِلَيْكَ طَرْفُكَ ۚ فَلَمَّا رَآهُ مُسْتَقِرًّا عِندَهُ قَالَ هَٰذَا مِن فَضْلِ رَبِّي لِيَبْلُوَنِي أَأَشْكُرُ أَمْ أَكْفُرُ ۖ وَمَن شَكَرَ فَإِنَّمَا يَشْكُرُ لِنَفْسِهِ ۖ وَمَن كَفَرَ فَإِنَّ رَبِّي غَنِيٌّ كَرِيمٌ

இறைவேதத்தின் ஞானத்தைப் பெற்றிருந்த ஒருவர் (ஆஸிப் இப்னு பர்க்கியா அவர்கள்) : "உங்களுடைய கண்ணை மூடித்திறப்பதற்குள், அதை உங்களிடம் கொண்டு வந்து விடுகிறேன்" என்று கூறினார்; (அவர் சொன்னவாறே) அது தம்மிடம் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும்: "இது என்னுடைய இறைவனின் அருட் கொடையாகும் நான் நன்றியறிதலுடன் இருக்கின்றேனா அல்லது மாறு செய்கிறேனா என்று (இறைவன்) என்னைச் சோதிப்பதற்காகவும்; எவன் ஒருவன் (இறைவனுக்கு) நன்றி செலுத்துகின்றானோ அவன் நன்றி செலுத்துவது அவனுக்கே (நன்மை)யாவும்; மேலும், எவன் (நன்றி மறந்து) மாறு செய்கிறானோ (அது அவனுக்கே இழப்பாகும்; ஏனெனில்) என் இறைவன், (எவரிடத்தும்) தேவைப் படாதவனாகவும், மிகவும் கண்ணியம் மிக்கவனாகவும் இருக்கின்றான்" என்று (ஸுலைமான்) கூறினார். -அல்குர்ஆன் – 27:40

27:41 قَالَ نَكِّرُوا لَهَا عَرْشَهَا نَنظُرْ أَتَهْتَدِي أَمْ تَكُونُ مِنَ الَّذِينَ لَا يَهْتَدُونَ

27:41. (இன்னும் அவர்) கூறினார்: "(அவள் கண்டு அறிந்து கொள்ள முடியாதபடி) அவளுடைய அரியாசன(த்தின் கோல)த்தை மாற்றி விடுங்கள்; அவள் அதை அறிந்து கொள்கிறாளா ? அல்லது அறிந்து கொள்ள முடியாதவர்களில் ஒருத்தியாக இருக்கிறாளா ? என்பதை நாம் கவனிப்போம்."

27:42 فَلَمَّا جَاءَتْ قِيلَ أَهَٰكَذَا عَرْشُكِ ۖ قَالَتْ كَأَنَّهُ هُوَ ۚ وَأُوتِينَا الْعِلْمَ مِن قَبْلِهَا وَكُنَّا مُسْلِمِينَ

27:42. ஆகவே> அவள் வந்த பொழுது "உன்னுடைய அரியாசனம் இது போன்றதா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவள்: "நிச்சயமாக இது அதைப் போலவே இருக்கிறது" என்று கூறினாள்;

அறிவியல் ஒரு சின்ன துகள் அளவுக்கு கடத்தி வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் ஆன்மிகத்தில் ஆஸிப் இப்னு பாக்கியா என்ற இறை நேசர் அரியணையே மாற்றி அமைத்து காட்டியிருக்கிறார்கள்.

குறிக்கப்பட்ட நேரம்
அறிவியலிலிருந்து ஆன்மீகம் வரை 13



பொதுவாக, இயற்கை எனும் தத்துவக் கோட்பாடு, ஒரு செயலை மீண்டும், மீண்டும் செய்துகொண்டேதான் இருக்கிறது.

உயிர்கள் பிறப்பதும், இறப்பதும், பின்பு மீண்டும் பிறப்பதும் நம் கோள்களின் சுழற்சி போல, கெடிகாரத்தின் சுழற்சி போல நிகழ்ந்து கொண்டேயிருக்கும் ஒரு செயல். இரவானால் உறங்க வேண்டும், பகலில் எழ வேண்டும், உணவு உண்ண வேண்டும், பின்பு மீண்டும் உறங்க வேண்டும் என்பவை நம் ஜீன்களில் பதிந்துபோன ஒரு விஷயம்.அதுவும் குறிக்கப்பட்ட நேரம் தவறாமையில் நடைபெறும் நிகழ்ச்சி நிரல் .

ஆதி மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உண்டு, குறிப்பிட்ட நேரத்தில் கழிவுகளை கழித்தும் வாழ தொடங்கும்போது, அவர்களின் உடலும் அதற்குப் பழகிப் போகிறது. உதாரணமாக, சூரியன் உச்சியில் இருக்கும் போது உணவு உண்கிறார்கள் என்றால், அதை மீண்டும் மீண்டும் செய்ய தொடங்க, மறுநாள் சூரியன் உச்சிக்கு வரும் முன்பே வேட்டைக்குச் சென்றுவிட வேண்டும் என்று அவர்களுக்கு தோன்றும்.

இந்த சூரியன் உச்சியில் இருக்கும்போது நாம் உணவு உண்டுவிட வேண்டும் என்று அவன் முதன் முதலில் நினைத்தபோதே, அவன் நேரம் என்ற கோட்பாட்டை அவனுக்கு தெரியாமலே உருவாக்கிவிட்டான். பகலானால் வேட்டை, இரவானால் உறக்கம் என்பதும் அதற்கான உதாரணம்தான்.

பின்பு நாகரிகம் வளர வளர, அவன் அன்றாடம் செய்யும் செயல்கள் அதிகமாக, அதிகமாக அவற்றையெல்லாம் எப்போது செய்ய வேண்டும் என்று குறித்துக்கொள்ள அவனுக்கு ஒரு அளவு கோல் தேவைப்பட்டது. அதுதான் நேரம் என்ற கோட்பாடு. தற்போது நேரம் என்பது மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் காரணமாக விளங்குகிறது.

நேரம் இல்லாத உலகம் குழப்பங்களின் குவியலாக இருக்கும் என்று நீங்கள் நினைத்தால் அதுதான் இல்லை. நேரம் இல்லாத உலகம் என்பது சாத்தியமே இல்லாத ஒன்று. நேரம் என்ற ஒன்று இல்லாத உலகம் வேண்டும் என்றால், அங்கே இருக்கும் உயிர்களின் ஜீன்களுக்குள் சுழற்சி என்ற விஷயமே பதிந்திருக்கக் கூடாது.

எப்போது நம் வாழ்வில் சுழற்சி என்ற ஒன்று நுழைந்துவிட்டதோ, அப்போதே நேரம் என்ற ஒரு கோட்பாடு உள்ளே நுழைந்துவிட்டதாகத்தான் அர்த்தம். அதை கூறுகளாக பிரித்து கெடிகாரம் கொண்டு அளக்கவில்லை,அவ்வளவுதான்.

ஒரு பெண் தன் மாதவிலக்கின் சுழற்சி மற்றும் பேறுகாலத்தின் காலம் என்று சந்திரனின் சுழற்சி கணக்கின்படி மாதத்திற்கு 28 நாட்கள் என்று கணக்கிட்டாலும், குழந்தை பிறந்த பிறகு பால் குடிப்பு இரண்டு வருடம் என்பது சூரிய கணக்கின்படியே குறிக்கப்படுகிறது .ஆக இயற்கையின் தத்துவக் கோட்பாட்டோடு இயைந்து கொள்கிறது .

وَوَصَّيْنَا الْاِنْسٰنَ بِوَالِدَيْهِ‌ حَمَلَتْهُ اُمُّهٗ وَهْنًا عَلٰى وَهْنٍ وَّفِصٰلُهٗ فِىْ عَامَيْنِ اَنِ اشْكُرْ لِىْ وَلِـوَالِدَيْكَ اِلَىَّ الْمَصِيْرُ

"தனது தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து(க் கர்ப்பத்தில்) அவனைச் சுமந்து கொண்டலைந்தாள். (பிறந்த) பிறகும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். ஆகவே, நீ எனக்கும் நன்றி செலுத்து; உன்னுடைய தாய் தந்தைக்கும் நன்றி செலுத்து. முடிவில் நீ நம்மிடமே வந்து சேர வேண்டியதிருக்கின்றது. (குர்ஆன் : 31:14)

உதாரணமாக ஐந்தறிவு மிருகங்களால் நேரம் என்றால் என்னவென்று புரிந்துகொள்ள முடியாது. ஆனால், எப்போது உணவு தேடச் செல்ல வேண்டும், உணவு உண்ண வேண்டும், எப்போது இனப்பெருக்கம் செய்ய வேண்டும் என்ற விஷயங்கள் அவைகளுக்கு நன்றாக தெரிகிறது . அது மிருகத்துக்கு மிருகம் மாறுபடுமே தவிர, ஆனால் அது சுழற்சியாக நடந்து கொண்டேதான் இருக்கும்.

துரதிர்ஷ்டவசமாக, நம் பிரபஞ்சத்தின் இயற்பியல் விதிகளின்படி, சுழற்சி என்ற ஒன்று இயற்கையின் தன்மையாக இருக்கிறது. இங்கே நாம் நேரம் என்ற ஒன்றை விட்டு விடவே முடியாது. நாம் நாள் முழுவதும் கெடிகாரத்தை பார்க்காமல் தவிர்க்கலாம். நம் கண்களை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடுமா என்ன?


ஆனால், பசித்தால் உணவு உண்ண வேண்டும். உறக்கம் வந்தால் உறங்க வேண்டும் . வஃது (குறிப்பிட்ட நேரம்) வந்தால் தொழ வேண்டும் என உங்கள் உடலின் தேவைகள் சுழற்சி நிலையில்தான் இருக்கும். மூஃமின்களின் எண்ணம் தொழுகையின் நேரத்தை தவறவிடக்கூடாதென மனம் ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கும்.அதை மூஃமின்கள் நினைத்தாலும் மாற்ற முடியாது. அதைப்போல் தொழுகையையும் நேரம் மாற்றக் கூடாது. காரணம் தொழுகையும் இயற்கையின் படைப்பில் பெரிதான சூரியனின் நிலையை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் தொழுகை நிறைவேற்றப்பட வேண்டும் .

நிச்சயமாக குறிப்பிட்ட நேரங்களில் தொழுகையை நிறைவேற்றுவது முஃமின்களுக்கு விதியாக்கப் பெற்றுள்ளது.
(அல்குர்ஆன் : 4:103)

இயற்கை எனும் தத்துவக் கோட்பாடு, ஒரு செயலை மீண்டும், மீண்டும் செய்துகொண்டேதான் இருக்கிறது. அதுவும் குறிக்கப்பட்ட நேரத்தில் .

தாவரங்களும் பேசுகின்றன...!

அறிவியலிலிருந்து ஆன்மீகம் வரை 14



தாவரங்களுக்கு உணர்வும் அறிவும் இருக்கின்றன, என்கிறார் பரிணாமவியல் சூழலியலாளர் மோனிகா கக்லியானோ.

தான் மேற்கொண்ட அறிவியல் சோதனைகளின் விளைவாகவும், அறிவியல் தரவுகளின் அடிப்படையிலும் இந்தக் கருத்து உருவானது என்றும், மூளையும் நரம்பு மண்டலமும் இல்லாவிட்டாலும், அறிவாற்றலை கொண்டு தாவரங்களால் செயல்பட முடியும் எனவும் அவர் கூறுகிறார்

தாவரங்கள் பேசுவதை மனிதர்களால் கேட்க முடியுமா?
சொற்களை பயன்படுத்தி பேசுவது என்ற மனித வழக்கத்தின்படி, அவை பேசுவதில்லை. ஆனால், அவை பேசுவதை கேட்க வேண்டுமென யாரேனும் விரும்பினால், அவை பேசும்.

தாவரங்களால் கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழலுக்கு இயற்கையிலேயே ஒத்திசைவு கொண்ட உயிரினங்கள் நாம். எனவே, ஏதாவது ஒரு வழியில் அவற்றுடன் நாம் தொடர்புகொள்ள வேண்டியது அவசியம். அப்போதுதான் நாம் எப்படி ஒருவரோடு மற்றொருவர் இணைந்திருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இன்றைய சூழலியல் சீர்கேடுகளுக்கு முக்கிய காரணம், தாவரங்களுடன் கொண்டிருந்த உறவை நாம் மறுத்து வருவதுதான் காரணம்.
மனிதர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொள்வதைப் போன்றது தான் இதுவும். நமக்கு விருப்பமான சிலருடன் உரையாடுவது மகிழ்ச்சியைத் தரும். அதை போலவே, சிலருடன் பேசுவதை நாம் விரும்புவதில்லை.
தாவரங்களை வளர்ப்பவர்கள், அவற்றின் அருகில் இருப்பவர்கள் எந்த நேரமும் அவற்றை கவனித்துக் கொண்டிருப்பதால் அவற்றின் மொழியை அறிய முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் உடலையும் மனதையும் அமைதிப்படுத்தி, அவை என்ன சொல்ல வருகின்றன? என்று கவனிக்கவும், புரிந்துகொள்ளவும் முயல வேண்டும். கருணையோடு அவற்றை அணுகி தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எல்லா உறவுகளுக்குமே இதுதான் அடிப்படை.
ஓர் உயிர் அறிவாற்றலுடன் திகழ்வதற்கு மூளை தேவை இல்லை. அறிவியல் பூர்வமாக இதை நிரூபிப்பதற்கு இப்போது எங்களிடம் தரவுகள் இருக்கின்றன. தாவரங்கள் ஒன்றோடொன்று பேசுவது மட்டுமல்லாமல், கற்பது, நினைவில் கொள்வது, முடிவெடுப்பது போன்ற திறன்களையும் கொண்டிருக்கின்றன என்பதற்கான தரவுகளும் எங்களிடம் உள்ளன.

இவை அனைத்தும் அறிவாற்றலுடன் சம்பந்தப்பட்டவை. முடிவெடுப்பது, கற்றல் ஆகியவற்றுக்கு விஷயங்களை தேர்ந்தெடுக்கும் திறன் தேவைப்படுகிறது. எனவே, தாவரங்கள் அறிவாற்றல் மிகுந்தவையே என விளக்கம் அளிக்கிறார், பரிணாமவியல் சூழலியலாளர் மோனிகா கக்லியானோ.
நபி ஸல் அவர்கள் மிம்பர் படியிலிருந்து பயான் செய்யும்போது தங்களுடைய கரத்தை ஒரு பேரீத்த மரத்துண்டு மீது வைத்திருந்து பேசுவார்கள். பின் அந்த மிம்பர் மாற்றியமைக்க என்று முடிவு செய்யப்பட்டது . ஆகையால் பேரீத்த மரத்துண்டை எடுத்துவிட்டு புதிய மிம்பர் செய்யப்பட்டது. அப்புறப்படுத்தப்பட்ட ஈச்ச மரத்துண்டு குழந்தை அழுவது போன்று அழுததாகவும் ,அதை நபிதோழர்கள் கேட்டதாகவும் கூறப்படுகிறது.
நபி (ஸல்) அவர்கள் சிறுவராக இருந்தபோது அபூதாலிப் அவர்கள் சிரியாவிற்கு வியாபார நிமித்தமாக செல்லும்போது நபியவர்களை அழைத்துச் சென்றார்கள் அப்போது சிரியாவிற்கு சற்றுமுன்னர் அவர்களை கவனித்து பஹீரா என்கிற பிரபலமான ஞானி அவர்கள் அபூதாலிபிடம் , " இந்த சிறுவர் யார் ?" என்றார்கள் அவர் என் மகன் என்று கூறினார் அதற்கு பஹீரா "சாத்தியம் இல்லையே " என்று கூறினார்கள் உடனே அபுதாலிப் இவர் என்னுடைய சகோதரரின் மகன் இவர் பிறப்பதற்கு முன்பே இவருடைய தகப்பனார் இறந்து விட்டார்கள் இவரின் தாயார் இவர் பிறந்ததும் இறந்துவிட்டார்கள் எனவே நானே என் மகனாக எடுத்து வளர்க்கிறேன் என்று கூறினார்கள்

அதற்கு நீங்கள் சொல்வது உண்மையே மேலும் இவ்வாறு இறைவனால் அனுப்பப்பட்ட தூதுவராக இருப்பார் ஏனென்றால் இவருக்கு செடிகள் தாவரங்கள் ஸுஜூது செய்வதை நான் கவனித்தேன் எனவே இவரை சிரியாவிற்கு அழைத்துச் செல்ல வேண்டாம் இவரை உங்கள் தாய் நாட்டிற்கு உடனடியாக அனுப்பி வையுங்கள் இதனால் இவருக்கு வர இருக்கும் ஆபத்துகளிலிருந்து இவரை தவிர்க்கலாம்.
وَّالنَّجْمُ وَالشَّجَرُ يَسْجُدٰنِ
செடிகள், (கொடிகள்,) மரங்கள் (ஆகிய அனைத்தும் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டுச்) சிரம் பணிகின்றன.
(அல்குர்ஆன் : 55:6)

உயிரினங்களின் வகைகள் .

அறிவியலிலிருந்து ஆன்மீகம் வரை 15



பூமியில் கோடிக்கணக்கான உயிர்கள் உள்ளன . இவற்றை வகைப்படுத்துவது கடினம் . ஆனாலும், முன்னோர்கள் உயிரினங்களை ஆதிகாலம் முதலே பகுத்துப் பார்க்க தொடங்கினர் .
நமது முன்னோர்கள் செடி, கொடிகளை 4 பிரிவாகவும், பிராணிகளை 3 பிரிவாகவும் பிரித்தனர் .
இதன்படி மனிதனும், பாலூட்டிகளும் ஒரு வகுப்பு . மீன், பறவை, பாம்பு ஆகிய முட்டையிடும் பிராணிகள் 2 -வது பிரிவு . 3 -வது பிரிவு தனி ரகம் என்று பிரித்தனர் .
செடிகளில் பூ உள்ளவை ஒரு பிரிவு . பூ இல்லாதவை ஒரு பிரிவு . காய்ந்தபின் வாடி அழிந்துபோகும் செடிகள் ஒரு வகை . படரும் தண்டுகளை உடையவை 4 -வது பிரிவு என்று பகுத்தனர் .
புல், பூண்டு தாவரங்களை உற்றறியும் ஓரறிவு உயிரினங்களாகவும், சிப்பி, நத்தை போன்றவை இரண்டறிவு உள்ளவையாகவும், எறும்புகள், ஈசல் போன்றவை மூன்றறிவு உள்ளவை என்றும், தும்பி, வண்டு போன்றவை நான்கறிவுள்ளவை என்றும், பறவைகள், விலங்குகள் ஐந்தறிவு உள்ளவை என்றும், மனிதன் ஆறறிவு உள்ளவன் என்றும் தொல்காப்பியம் வகைப்படுத்துகிறது .
ஆனால் இந்த வகைப்படுத்துதலை விஞ்ஞானிகள் ஏற்கவில்லை . இவை செயற்கையானவை என்று கூறிவிட்டனர் .
1707 -ம் ஆண்டில் லின்னேயஸ் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி இயற்கையான வகைப்படுத்தும் திட்டத்தை வெளியிட்டார் . அவர் உயிகளின் உடலமைப்பு, தன்மை, இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தினார் .
உயிரினங்கள் முதலில் தாவரங்கள், பிராணிகள் என்று இரு மாபெரும் பிரிவுகளாக பிரிக்கப்படுள்ளன .
இவை இரண்டிலும் பல உட்பிரிவுகள் உள்ளன . பிராணிகளில் முதுகெலும்பு உள்ளவை, முதுகெலும்பு இல்லாதவை என்று இரு உபபிரிவுகள் உள்ளன . முதல் பிரிவில் மீன், தவளை, ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் என்று 5 பிரிவுகள் உள்ளன .
அமீபா, கடற்பஞ்சி, பவளம், மண்புழு, பூச்சி, சிப்பி, நட்சத்திரமீன் ஆகியவை முதுகெலும்பு இல்லாத பிராணிகளின் பிரிவுகள் ஆகும் . இவற்றுக்குள் பல உப பிரிவுகள், குடும்பங்கள், உப குடும்பங்கள், வகுப்புகள், இனங்கள் அடங்கி உள்ளன.இவற்றின் மிகச்சிறிய தொகுதியே இனமாகும் .
தாவரங்களில் இரு பெரும் பிரிவுகள் உண்டு . பூ உள்ளவை, பூ இல்லாதவை . பூவுள்ள தாவரங்களில் மூடிய விதையுள்ளவை, மூடாத விதை உள்ளவை என உப பிரிவு உண்டு . ஆல்கா, காளான், பாசி, பிரணி ஆகியவை பூவாத தாவர பிரிவுகள் ஆகும்.
ஆனால் குர்ஆனில் அல்லாஹ் தாவரங்களை பலவகைப்படுத்தி, அவைகள் படைப்பில் வெவ்வேறானாவைகளாக இருந்தாலும் அவைகளுக்கு ஒரே நீர் புகட்டப்படுவதை கூறி சிந்திக்கச் சொல்கிறான்.
وَ فِى الْاَرْضِ قِطَعٌ مُّتَجٰوِرٰتٌ وَّجَنّٰتٌ مِّنْ اَعْنَابٍ وَّزَرْعٌ وَّنَخِيْلٌ صِنْوَانٌ وَّغَيْرُ صِنْوَانٍ يُّسْقٰى بِمَآءٍ وَّاحِدٍ وَنُفَضِّلُ بَعْضَهَا عَلٰى بَعْضٍ فِى الْاُكُلِ اِنَّ فِىْ ذٰ لِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ
பூமியில் பல தொகுதிகளை சேர்ந்தாற்போல் அமைத்து (அதில்) திராட்சை, தானியப்பயிர் நிலங்களையும், பேரீச்சந் தோப்புகளையும் ஆக்கினான்; கிளைகள் உள்ளதும், கிளைகள் இல்லாததுமான மரங்களையும் (உற்பத்தி செய்கிறான். இவை அனைத்திற்கும்) ஒரேவித நீர் புகட்டப்பட்டபோதிலும், சிலவற்றைவிட சிலவற்றை சுவையில் நாம் மேன்மையாக்கி வைத்தோம். இதில், அறிவுடைய மக்களுக்கு நிச்சயமாக பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (குர்ஆன் : 13:4)
பாலூட்டிகள் குட்டி போட்டு பால் தருபவை . ஊர்வனவற்றுள்ள பாலூட்டிகள் உஷ்ண ரத்தம் உடையவை . நுரையீரல்களால் சுவாசிப்பவை . பறவைகளும் நுரையீரலால் சுவாசிக்கின்றன . ஆனால் அவை முட்டையிட்டு குஞ்சு பொரிப்பவை .
காது வெளியே தெரிகிற உயிரினங்கள் குட்டி போட்டு பால் கொடுக்கும் .காது உள்ளடக்கி இருக்கிற உயிரினங்கள் முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும் என்பதாக அலி (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்
இஸ்லாம் விலங்குகள் அனைத்தையும் நீரில் இருந்து படைத்ததாகக் கூறுகின்றது.
وَاللّٰهُ خَلَقَ كُلَّ دَآبَّةٍ مِّنْ مَّآءٍ فَمِنْهُمْ مَّنْ يَّمْشِىْ عَلٰى بَطْنِهٖ وَمِنْهُمْ مَّنْ يَّمْشِىْ عَلٰى رِجْلَيْنِ وَمِنْهُمْ مَّنْ يَّمْشِىْ عَلٰٓى اَرْبَعٍ يَخْلُقُ اللّٰهُ مَا يَشَآءُ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ
(மனிதர்களே!) ஊர்ந்து செல்லக்கூடிய (உயிர்ப் பிராணிகள்) அனைத்தையும் அல்லாஹ் ஒரேவித தண்ணீரைக் கொண்டு படைத்திருந்த போதிலும் (அவை யாவும் ஒரு வகையாக இருக்க வில்லை.) அவைகளில் சில தன் வயிற்றால் (பாம்புகளைப் போல்) ஊர்ந்து செல்கின்றன. அவைகளில் சில இரு கால்களால் நடக்கின்றன. அவைகளில் சில நான்கு கால்களால் நடக்கின்றன.

(இவ்வாறு) அல்லாஹ் தான் விரும்பியவைகளை (விரும்பியவாறு) படைப்பான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.
(அல்குர்ஆன் : 24:45)
ஒவ்வொரு பிரிவிலும் வெவ்வேறு லட்சணங்களும், பாகுபாடுகளும் உண்டு . ஆடும், மாடும் ஒரே குடும்பம் . பூனையும், புலியும் ஒரு குடும்பம் . கழுதையும், குதிரையும் ஒரே குடும்பம் . இவை பாலூட்டிகள் . இவற்றில் சைவம், அசைவம் உண்டு . என்வே நாய், பூனை, புலி இவை உறவுள்ள இனங்கள் . கழுதையும், குதிரையும் இவற்றின் தாயாதிகள் . ஆடும், மாடும் இவற்றின் உறவினர்களாகும் .
உணவுக்காக எந்தெந்த விலங்கினங்களை பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி இஸ்லாம் தெளிவுப்படுத்துகிறது
விலங்கினங்களில் எவற்றுக்குக் கோரைப் பற்கள் உள்ளனவோ அவற்றை உண்ணக் கூடாது என்று நபிகள் நாயகம்(ஸல்) தடை செய்தார்கள்.
அறிவிப்பவர்: அபூ ஸலமா (ரலி), நூல்: புகாரி 5781, 5530.
மேற்பகுதியில் உள்ள பல் வரிசையின் முன் பற்களில் நான்கு பற்களுக்குப் பின் உள்ள பல் கோரைப் பல் எனப்படும்.
கோரைப் பல் என்பது மற்ற பற்களை விட நீளமாக இருக்கும். மனிதனுக்குக் கூட மற்ற விலங்கினம் அளவு இல்லா விட்டாலும் கோரைப் பல் இருக்கிறது.
மேல் பகுதியில் அமைந்துள்ள பற்களில் வலப்பக்கம் ஒரு பல்லும் இடப்பக்கம் ஒரு பல்லும் மற்றபற்களை விட நீளம் அதிகமாக இருக்கும்.
இப்படி கோரைப் பல் எவற்றுக்கு உள்ளதோ அதை நாம் உண்ணக் கூடாது. ஆடு, மாடு போன்றவற்றின் பற்கள் அனைத்தும் சமமான உயரம் கொண்டதாக அமைந்திருக்கும்.
பூனை,நாய், சிங்கம், புலி போன்ற விலங்குகளுக்கு இரண்டு பற்கள் மட்டும் மற்ற பற்களை விட மிகவும் நீளமாக இருக்கும்.
இந்த அளவுகோலை விளங்கிக் கொண்டால் எவற்றை உண்ணலாம் என்பது எளிதில் விளங்கிவிடும்.
கழுதையைப் பொறுத்தவரை அதன் பற்கள் வரிசையாக இருந்தாலும் இந்த அளவு கோலில் அவை அடங்காவிட்டாலும் அதைக் குறிப்பிட்டு ஹராமாக்கி விட்டதால் கழுதைக்கு இந்த அளவு கோலைப் பொருத்தக் கூடாது.
பல துறைகளிலும் விற்பன்னராக இருந்த அபூஅலீ இப்னு ஸீனா அவர்கள் விலங்கினங்களை ஆய்வு செய்து ஒரு தகவலைத் தருகிறார்.
கொம்பு உள்ள எந்த உயிரினத்துக்கும் கோரைப் பல் இருக்காது என்பது அவரது ஆய்வு.
எனவே எந்த விலங்குக்காவது கொம்பு இருந்தால் அதை நாம் உண்ணலாம். எவற்றுக்கு கொம்பு இல்லையோ அவற்றுக்கு மட்டும் கோரைப் பல் உள்ளதா என்று ஆய்வு செய்த பின் உண்ணலாம்.

ஒட்டகமும், பாவோபாப் மரங்களும்
அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 16





ஒட்டகம் பாலைவனத்தில் வாழ்பவை என்பது உங்களுக்கு தெரிந்ததுதான் . பொதுவாக பாலைவனத்தில் வசிக்கும் பிராணிகள் தன் உணவில் இருந்து நீரை எடுத்து கொள்ளும். ஆனால், இதற்கு மாறாக ஒட்டகமோ நீரூற்றில் இருந்துதான் நீரை எடுத்து கொள்ளும். தண்ணீர் கிடைத்துவிட்டால் 10 நிமிடத்தில் 123 லிட்டர் நீரை ஒரே மூச்சில் உறிஞ்சிவிடும். எவ்வளவு தூரம் வெயிலில் நடந்தாலும் இவற்றிற்கு வியர்த்து போகாது.
இரண்டு வகை ஒட்டகம் உள்ளது. ஒருவகை ஒரு முதுகு உடையது; மற்றொன்று இரண்டு முதுகு உடையது. இரண்டுமே நீரில் நன்றாக நீந்தும். 70-80 லிட்டர் தண்ணீர் குடிக்கும் ஒட்டகத்துக்கு மூன்று வயிறுகள்.
முதல் வயிற்றில் உணவை சேகரிக்கும். இரண்டாவது வயிற்றில் திரவ சுரப்புகள் இருக்கும். மூன்றாவதில் அசை போடப்பட்ட உணவு ஜீரணமாகும்.
முதல் இரண்டு வயிற்றில் உள்ள பைகளில் தண்ணீரை நிறைய சேமித்து வைத்து கொள்ளும். அந்த பைகளில் நீர் நிரம்பியவுடன் தசைகள் மூடிவிடும். தண்ணீர் தேவைப்படும் போது திறந்து சுரக்கும்.
ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய கால்நடைகளில் இரத்தத்திற்கும் சாணத்திற்கும் இடையில் அதன் வயிற்றில் இருந்து கலப்பற்ற பாலை இறைவன் சுரக்க செய்கிறான் என்பதாக குர்ஆனில் அல்லாஹ்

وَاِنَّ لَكُمْ فِىْ الْاَنْعَامِ لَعِبْرَةً نُّسْقِيْكُمْ مِّمَّا فِىْ بُطُوْنِهٖ مِنْ بَيْنِ فَرْثٍ وَّدَمٍ لَّبَنًا خَالِصًا سَآٮِٕغًا لِّلشّٰرِبِيْنَ
(ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைகளிலும் உங்களுக்கு ஒரு படிப்பினை உண்டு. இரத்தத்திற்கும் சாணத்திற்கும் இடையில் அதன் வயிற்றில் இருந்து கலப்பற்ற பாலை (உற்பத்தி செய்து) நாம் உங்களுக்குப் புகட்டுகிறோம். அது அருந்து பவர்களுக்கு மிக்க இன்பகரமானது. (குர்ஆன் : 16:66)

ஆனால் ஒட்டகத்தின் வயிற்றில் மட்டும் தண்ணீர் சேமித்து வைத்திருக்க பை போன்ற 'வாட்டர்டேங்க்' கையும் சேர்த்தே இறைவன் படைத்திருக்கிறான் .

பாலைவனப் பயணத்தின்போது குடிநீர் காலியாகி, கிடைக்காமல் போனால் , பயணிகள் பயணம் செய்யும் ஒட்டகங்களில் ஒன்றை அறுத்து அதன் வயிற்றிலிருக்கும் நீரை குடிநீராகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் .

ஒட்டகம் மாதிரி இறைவன் ஒருவித மரத்தையும் படைத்துள்ளேன்.

மடகாஸ்கர் தீவில் இருக்கும் Baobab (பாவோபாப்) மரங்கள் தான் உலகில் மிகப்பெரிய மரங்கள். உயரத்தில் அல்ல, சுற்றளவில். இந்த மரங்களின் உயரம் என்னவோ 15லிருந்து 98 அடி தான். ஆனால் மரத்தின் சுற்றளவும் அதிகபட்சமாக 154 அடிகள் வரை இருக்கும்.

இவற்றின் மற்றொரு ஸ்பெஷல் என்ன தெரியுமா? மரத்தின் அடிப்பகுதி மூங்கில் மாதிரி வெற்றிடம் கொண்டதாகவும், அந்த வெற்றிடத்தில் நீர் நிறைந்தும் இருக்கும். ஒரு பெரிய Baobab மரத்தில் 1,20,000 லிட்டர்கள் நீர் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். கோடை காலங்களில் இந்த நீர் ஆவியாக மாறிவிடாமல் மரங்களே பாதுகாக்கின்றன.

மடகாஸ்கர் தீவிலிருக்கும் மக்கள் வறட்சிக்காலங்களில் இம்மரங்களிலிருக்கும் நீரை அருந்துகின்றனர். மரங்கள் இறந்துவிட்டால், அடிப்பகுதியைத் தண்ணீர் சேமித்து வைக்க உபயோகப்படுத்துகின்றனர். 1000 வருடங்கள் பழமையான மரங்கள் இத்தீவில் இருக்கின்றன என்று சொல்லப்பட்டாலும், அதை நிரூபிக்க ஆதாரம் ஏதும் இல்லை..ஏனென்றால், மரங்களின் வயதைக் கணக்கிடும் growth rings பாவோபாப் மரங்களில் கிடையாது.

இறை வல்லமை என்னவென்று சொல்வது ?

நித்திரை எனும் ஒரு நிம்மதி
அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 17



ஒரு நாளின் மொத்த உடலியக்கத்தைக் கட்டுப்படுத்துவது உடல் கெடிகாரத்தின் வேலை. சூரிய ஒளியின் இருப்பை அடிப்படையாகக் கொண்டு சுரக்கும் மெலடோனின் ஹார்மோன், பகலுக்கும் இரவுக்கும் நம்மை தயார்படுத்துகிறது.

பகலில் விழித்திருக்கும் உயிரினங்கள் பகலாடிகள், இரவில் விழித்திருக்கும் உயிரினங்கள் இரவாடிகள். பகலில் விழித்துச் செயல்படும் வகையிலும், இரவில் ஓய்வுக்கு ஏற்ற வகையிலும் பகலாடி உயிரினத்தின் உடல் அமைந்திருக்கும். நாமும் பகலாடிகள்தான்.

ஒரு நாளின் மொத்த உடலியக்கத்தைக் கட்டுப்படுத்துவது உடல் கெடிகாரத்தின் வேலை. சூரிய ஒளியின் இருப்பை அடிப்படையாகக் கொண்டு சுரக்கும் மெலடோனின் ஹார்மோன், பகலுக்கும் இரவுக்கும் நம்மை தயார்படுத்துகிறது.

மெலடோனின், பீனியல் எனும் சுரப்பியால் சுரக்கப்படுகிறது. இதுவே ஓய்வுக்கும் உறக்கத்துக்கும் உடலை தயார்படுத்துகிறது. ரத்த அழுத்தத்தையும், இதய துடிப்பையும் மிதமாக குறைக்கிறது.
சூரியஒளி இருந்தால், மெலடோனின் சுரப்பு தடுக்கப்பட்டு, உடல் விழிப்பு நிலையில் இருக்கிறது.
சில நேரம் தூக்கமின்மை, வேறு நேர மண்டலங்களுக்குப் பயணிப்பதால் உடலுக்கு ஏற்படும் 'ஜெட்லாக்' எனப்படும் உடல் கெடிகாரக் கோளாறு ஆகியவற்றை சரிசெய்ய மெலடோனினை பயன்படுத்துகிறார்கள்.
அதே நேரம் நீல நிற ஒளியால் மெலடோனின் சுரப்பு தடுக்கப்படுகிறது.

பகல் நேரத்து சூரிய வெளிச்சம் போக, இரவு நேரத்தில் நாம் பயன்படுத்தும் விளக்குகள் அனைத்தும் மஞ்சள் ஒளியையே வெளியிட்டுவந்தன. மின்விளக்குகள் வந்த பிறகும்கூட, மஞ்சள் ஒளியை உமிழும் குண்டு பல்புகள்தான் பயன்பாட்டில் அதிகம் இருந்தன. அதன் பின்னர் வந்த குழல் விளக்குகள் வெண்ணிற ஒளியைத் தந்தாலும், நீல ஒளியையும் வெளியிட்டதால் மெலடோனின் சுரப்பு குறையாமல் இருந்து வந்தது.
கடந்த 10 ஆண்டுகளாக அதிகம் புழக்கத்தில் உள்ள எல்.இ.டி., அதிக நீல ஒளியை வெளியிடுகின்றன. இந்த விளக்குகளை வீட்டில் பயன்படுத்தும்போது மெலடோனின் சுரப்பில் தடை ஏற்பட வாய்ப்புண்டு.
விளக்குகள் அனைத்தையும் அணைத்துவிட்டாலும், கணினித்திரை, கைபேசி திரையில் இருக்கும் ஒளி உமிழிகள் நீல நிற ஒளி பாதிப்பை ஏற்படுத்தும். மெலடோனின் இயல்பாகச் சுரந்து, ஒழுங்காக உறக்கம் வரவேண்டும் என்றால் உறங்குவதற்கு சில மணி நேரத்துக்கு முன்னர் நீல ஒளியை பார்ப்பதை நீங்கள் தவிர்க்க வேண்டும்.
அதேநேரம் இன்றைக்கு நாம் பயன்படுத்தும் கைபேசி, மடிக்கணினி அனைத்திலும் நீல ஒளியை குறைக்கிற அமைப்புகள் வந்துவிட்டன. 'நைட் மோட்' என்று அழைக்கப்படும் அவற்றைப் பயன்படுத்தும்போது, திரை மெல்லியச் சிவப்பு ஒளியுடன் தோன்றும். அதனால் நீல ஒளி தவிர்க்கப்பட்டு இயல்பான மெலடோனின் சுரப்புக்கு உடல் தயாராகும்.
கணினி, கைபேசிகளில் அந்த அமைப்பு இல்லையென்றால், அவற்றுக்கான இலவச செயலிகள் இணையத்தில் உண்டு. அவற்றைத் தரவிறக்கியும் பயன்படுத்தலாம். தூக்கம் முக்கியம் அல்லவா?
ஒரு சுரப்பி சுரக்கும் ஹார்மோனைக் கொண்டு நமக்கு நித்திரை என்னும் பாக்கியத்தை அருளச் செய்த வல்ல ரஹ்மான் பாக்கியமுடையவன்.
وَمِنْ اٰيٰتِهٖ مَنَامُكُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ وَابْتِغَآؤُكُمْ مِّنْ فَضْلِهٖ اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّسْمَعُوْنَ
இரவிலும் பகலிலும் நீங்கள் நித்திரை செய்து இளைப்பாறிக் கொள்வதும்,
(பூமியின் பல பாகங்களிலும் சென்று) நீங்கள் அவனுடைய அருளைத் தேடிக்கொள்வதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும்.
(நல்லுபதேசத்தைச்) செவியுறும் மக்களுக்கு இதிலும் நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.
(அல்குர்ஆன் : 30:23)

எறும்பின் கூட்டு முயற்சி
அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 18



ஒன்றன் பின் ஒன்றாக வரிசை மாறாமல் எறும்புகள் செல்வது சர்வசாதாரணம்..
ஒரு கூட்டமாக ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு கோடையில் நம்முடைய தண்ணீர் சேமிப்பில் மிதக்கும் . பார்த்திருப்பீர்கள் ஆனால் கிட்டத்தட்ட ஒரு படகு/தட்டு மாதிரி செல்வது பார்த்திருக்கிறீர்களா ?

காடுகளிலிருக்கும் நெருப்பெறும்புகள் மழைக்காலங்களில் வரும் வெள்ளப்பெருக்கிலிருந்து தப்பிக்கத்தான் இப்படி ஒரு ட்ரிக்கை உபயோகிக்கின்றன.

மழையால் எறும்புப்புற்றுகளில் தண்ணீர் நுழையும்போது, அதில் வாழும் எறும்புகளனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு தட்டுபோன்ற அமைப்பை உருவாக்கி, இலைகள் மிதப்பதுபோல் நீரில் மிதக்கின்றன.

மெதுவாக மிதந்துவந்து மற்றொரு தரைப்பகுதியையோ அல்லது மரங்களையோ பற்றி உயிரைக் காப்பாற்றிக்கொள்கின்றன.

நடுப்பகுதியில் ராணி எறும்பும், அதைச் சுற்றி சின்ன வயது எறும்புகளும், வயதில் பெரிய எறும்புகள் ஓரத்தில் இருப்பது போலவும் இவை ஒன்று சேர்கின்றன.

நீரில் மிதந்து வரும்போது, (நிஜமான) படகுக்கோ மீன்களுக்கோ இரையாகாமல் தப்பிப்பதுதான் இவற்றின் மிகப் பெரிய சவால்.

இந்த மிகச் சிறிய ஜீவராசிகளின் கூட்டு முயற்சியைப் பற்றியும் குர்ஆனில் மிக அழகாக அவைகளின் முடியாட்சியின் அரசாட்சியைப் பற்றியும் அழகாக படம் பிடித்து காட்டுகிறான் .

எறும்பு பேசியதைக்கேட்ட சுலைமான் நபியும் , பிரேசிலின் விஞ்ஞானக் கண்டுபிடிப்பும்!

இறைத்தூதர் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் (கி.மு. 1032 - கி.மு. 975) ஓர் பேரரசர்.

"அவர்கள் எறும்புகளின் ஓடைக்கருகே (வாதிந் நம்ல்) வந்தபோது ஓர் எறும்பு, “எறும்புகளே நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் (மஸாகின்) நுழைந்துவிடுங்கள். சுலைமானும் அவருடைய படையினரும் உங்களை மிதித்துவிட வேண்டாம்” என்று கூறியது. அது கூறியதைக் கேட்டு சுலைமான் புன்னகைத்துச் சிரித்தார். (27:18,19)

இங்கு ‘எறும்பு ஓடை’ என்பதைக் குறிக்க ‘வாதிந் நம்ல்’ எனும் சொற்றொடர் ஆளப்பட்டுள்ளது. நம்லத்-எறும்பு; நம்ல்-எறும்புகள். ‘வாதீ’ என்பதற்கு பள்ளத்தாக்கு (Conyon), கணவாய் (Ravine), மலை இடுக்கு (Gully), இடுக்கு வழி (Gorge), ஓடை (Rivulet) ஆகிய பொருள்கள் உள்ளன. இந்தச் சொல்லாக்கத்தைப் பார்த்து கீழை அறிஞர்கள் சிலர் நகைத்ததுண்டு.

ஏனெனில், புற்றுகளில் எறும்பு இருக்கும்; மண் தரையில் வழியமைத்து சிறிய அளவில் வீடுகளை அமைத்து வாழும். எறும்புகளுக்குப் பெரிய அளவில் ஓடையோ சுரங்கமோ எங்கே உள்ளது என்று அவர்கள் குர்ஆன்மீது வினா தொடுத்தார்கள்; இதைக் கருத்தில் கொண்டுதானோ என்னவோ நம்மில் சிலரும் ‘வாதிந் நம்ல்’ என்பதற்கு ‘எறும்புப் புற்று’ என்றே பொருள் செய்துவருகிறோம்.

உண்மையில் புற்றைக் குறிக்க இவ்வசனத்தில் வேறொரு சொல் (மஸாகின் - குடியிருப்புகள்) ஆளப்பெற்றிருப்பது கவனத்திற்குரியது. ஆக, எறும்புக்கு ஓடையோ சுரங்கமோ இல்லை என்றே உலகம் கருதிவந்த நிலையில் அண்மையில் அப்படி ஒன்று உண்டு என்பதை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதுதான் வியப்பு.

பிரேசில் நாட்டில் அண்மையில் நடந்த அகழ்வாராய்ச்சியில் பூமிக்கடியில் எறும்புகளின் ஒரு நகரமே கண்டுபிடிக்கப்பட்டது. அதில் எறும்புகளுக்கான சாலைகள், தோட்டங்கள் என எல்லாம் உள்ளன. சீனாவின் பெருஞ்சுவரைப் போல மிகப்பெரும் அற்புதமாக இது காட்சியளிக்கிறது. பல மில்லியன் எறும்புகள் சேர்ந்து இச்சாதனையைப் புரிந்துள்ளன இந்த எறும்பு நகரத்தில், பொதுச்சாலைகள், கிளை நடைபாதைகள், பூங்காக்கள் உள்பட ஒரு நகரத்திற்கு வேண்டிய எல்லா கட்டமைப்புகளும் உள்ளன.

இதுதான் உலகிலேயே எறும்புகளின் பெரும்கூட்டம் வசிக்கும் இடமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. காற்று வாங்குவதற்காகக் கால்வாய் போன்று எறும்புகள் தயாரித்துள்ள இடைவெளிகளில் 10 டன் வெள்ளை சிமிண்டை முதலில் நிபுணர்கள் கொட்டினார்கள். இதனால் அக்கால்வாய்கள் வலுவாகவும் உறுதியாகவும் மாறக்கூடும். பூமியின் மேற்பரப்பிற்குக் கீழே 8 மீட்டர் ஆழத்தில் 46.5 ச.மீட்டர் பரப்பை நிரப்புவதற்காக சிமிண்ட் கொட்டும் பணிக்கே 10 நாட்கள் பிடித்தது.

ஒரு மாதத்திற்குப்பின், பேராசிரியர் லூயிஸ் ஃபோர்ஜி தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் குழு பூமியை அகழும் பணியைத் தொடங்கியது. அப்போதுதான் எறும்புகளின் இந்தப் பிரமாண்டமான நகரத்தைக் கண்டுபிடித்து, சீனப் பெருஞ்சுவர் போன்ற உலக அற்புதம் இது என்று வர்ணித்தனர். கட்டமைப்புகளை உருவாக்குவதில் வியத்தகு ஆற்றல் பெற்றது எறும்புக் கூட்டம்.

ஒவ்வோர் எறும்புக்கும், தன் எடையைப்போல் 50 மடங்கு எடையைச் சுமக்கும் ஆற்றல் உண்டு. அதைத் தூக்கிக்கொண்டு பல பத்து கி.மீ. தூரம் நடக்கவும் அதற்கு முடியும். இதைத் தொடர்ச்சியாகத் திரும்பத் திரும்பச் செய்யும் திறன் படைத்தது. இந்த அடிப்படையில்தான், இந்தச் சுரங்கத்தைக் கட்ட சுமார் 40 டன் மண்ணை ஒரு பெரிய எறும்புக் கூட்டம் தோண்டி எடுத்துள்ளது.

இதன்மூலம் எறும்புகள் புதிய காற்றைச் சுவாசிக்கவும் சுருக்க வழியில் பயணிக்கவும் வழி பிறந்தது. இந்த எறும்பு நகரத்தில், அறைகளை இணைக்கும் முதன்மைச் சாலைகள் உண்டு. புற்றுகளுக்குச் செல்லும் குறுக்குச் சாலைகளும் உண்டு. அங்கு சிறு தானியங்களையும் சேமித்த உணவுகளையும் எறும்புகள் பாதுகாக்கின்றன. அவ்வாறே, எறும்புகள் கொண்டுவந்து சேர்த்த பச்சைப் புற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள தோட்டங்களும் உண்டு. இவை எறும்புகளின் முட்டைப் புழுக்களை (Larva) காப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

இப்போது சொல்லுங்கள்! அந்த வசனத்தில் எறும்பு ஓடை, அல்லது பள்ளத்தாக்கு (வாதிந் நம்ல்) என்று அல்லாஹ் குறிப்பிட்டிருப்பது எவ்வளவு பொருத்தம்! எவ்வளவு பெரிய ஆராய்ச்சி! எத்துணை பெரும் உண்மை! சுப்ஹானல்லாஹு!

Ref : வலைதளம் மற்றும் அஹ்மத் கான் பாக்கவி பதிவிலிருந்தும்

Mayday Mayday Mayday (மே டே ...மே டே ..மே டே...)

அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 19





விமானம் பறந்துகொண்டிருக்கும்போது, அதிலிருப்பவர்களுக்கு ஏதும் பெரிய ஆபத்து நேர்ந்தால், தரையிலிருக்கும் கண்ட்ரோல் ரூமுக்கு தாங்கள் ஆபத்திலிருக்கிறோம் என்று தெரிவிக்க விமானிகள் "Mayday" என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.
அதென்ன "Mayday" ?
1923ஆம் ஆண்டு லண்டன் விமானநிலையத்தில் பணியாற்றிய Frederick Stanley Mockford என்பவரை அவசர காலத்தில் விமானிகள் உபயோகிக்க வார்த்தை ஒன்று சொல்லுங்கள் என்று கேட்டனர் அதிகாரிகள்.
"Help" என்ற வார்த்தை மிகச்சாதாரணமாக எல்லோராலும் உபயோகிக்கப்படுவதால், ஆபத்துக்காலங்களில் அந்தச் சொல்லைப் பயன்படுத்தும்போது வித்தியாசம் ஏதும் தெரியாது.
1923களில் லண்டனுக்கும் பாரிசுக்கும் இடையில் அதிக விமானங்கள் பறந்ததால் , கண்ட்ரோல் ரூமில் இருப்பவர்கள் பிரெஞ்சு மொழி பேசும் விமானிகளுடன் அதிகம் உரையாட வேண்டியிருந்தது. இதயெல்லாம் யோசித்த அந்த அதிகாரி, "Help Me" என்று பொருள் தரக்கூடிய "m'aider" என்ற பிரெஞ்ச் வார்த்தையின் சாயலில் "Mayday" வார்த்தையை சஜஸ்ட்டினார். அப்படி உருவானது தான் இந்த Mayday.
விமானங்கள் மட்டுமல்ல, கப்பல்களிலும் இதே வார்த்தைதான் உபயோகப்படுத்தப்படுகிறது.
அமெரிக்காவில் தேவையில்லாத நேரத்தில் Mayday அழைப்பு விடுத்தால், விமானிக்கு 6 வருட சிறையும், 250,000 டாலர்கள் அபராதமும் விதிக்கப்படும். செப்டம்பர் 11 விமானத் தாக்குதலின் போது ஒரே ஒரு விமானத்திலிருந்து மட்டும் இந்த Mayday அழைப்பு வந்தது. சமீபத்தில் காணாமல் போன மலேசிய விமானத்திலிருந்து இந்த Mayday அழைப்பு கடைசி வரை வரவில்லை.

وَاِذَا مَسَّكُمُ الضُّرُّ فِى الْبَحْرِ ضَلَّ مَنْ تَدْعُوْنَ اِلَّاۤ اِيَّاهُ فَلَمَّا نَجّٰىكُمْ اِلَى الْبَرِّ اَعْرَضْتُمْ وَكَانَ الْاِنْسَانُ كَفُوْرًا
இன்னும், கடலில் உங்களை ஏதேனும் தங்கடம் (துன்பம்) தீண்டினால், அவனையன்றி நீங்கள் (தெய்வங்கள் என) எவற்றை அழைத்துக் கொண்டிருந்தீர்களோ, அவையாவும் மறைந்து விடும்; எனினும் (அல்லாஹ்) உங்களை ஈடேற்றிக் கரையளவில் கொண்டு வந்து சேர்க்கும் பொழுது நீங்கள் (அவனைப்) புறக்கணித்து விடுகிறீர்கள் - இன்னும், மனிதன் மகா நன்றி மறப்பவனாகவே இருக்கின்றான்.
(அல்குர்ஆன் : 17:67)


اَفَاَمِنْتُمْ اَنْ يَّخْسِفَ بِكُمْ جَانِبَ الْبَرِّ اَوْ يُرْسِلَ عَلَيْكُمْ حَاصِبًا ثُمَّ لَا تَجِدُوْا لَـكُمْ وَكِيْلًا ۙ
(கரை சேர்ந்த) பின் அவன் உங்களை பூமியின் ஒரு புறத்தில் புதையும்படி செய்து விட மாட்டான் என்றோ, அல்லது உங்கள் மீது கல்மாரியை அனுப்பமாட்டான் என்றோ அச்சந் தீர்ந்து இருக்கிறீர்களா? பின்னர் நீங்கள் உங்களைப் பாதுகாப்போர் எவரையும் காண மாட்டீர்கள்.
(அல்குர்ஆன் : 17:68)

اَمْ اَمِنْتُمْ اَنْ يُّعِيْدَكُمْ فِيْهِ تَارَةً اُخْرٰى فَيُرْسِلَ عَلَيْكُمْ قَاصِفًا مِّنَ الرِّيْحِ فَيُغْرِقَكُمْ بِمَا كَفَرْتُمْ ۙ ثُمَّ لَا تَجِدُوْا لَـكُمْ عَلَيْنَا بِهٖ تَبِيْعًا
அல்லது, அவன் மீண்டும் ஒரு தடவை அக்கடலில் உங்களை மீளச் செய்து, (எல்லாவற்றையும்) முறித்துத் தள்ளும் புயல் காற்றை உங்கள் மீதனுப்பி, நீங்கள் நிராகரித்ததற்காக உங்களை மூழ்கடித்து விடமாட்டான் என்றும் நீங்கள் அச்சந்தீர்ந்து இருக்கிறீர்களா? (அப்படி நேர்ந்தால் ஏன் இவ்விஷயத்தை அவ்வாறு செய்தோம் ஏன் இவ்விஷயத்தை அவ்வாறு செய்தோம் என) நம்மைத் தொடர்ந்து உங்களுக்காக(க் கேட்போர்) எவரையும் காணமாட்டீர்கள்.
(அல்குர்ஆன் : 17:69)

இயற்கையின் பேரிடர் மற்றும் ஆபத்து காலங்களில் விமானங்களிலோ, கப்பல்களிலோ உதவி கோரி மேடே , மேடே என்று கத்துவதை "Help Me" என்று பொருள் தரக்கூடிய "m'aider" என்ற பிரெஞ்ச் வார்த்தையின் சாயலில் "Mayday" என்று கத்துவதை பழக்கிக் கொடுத்தவர்கள் " 0h..my God ....! " என்று இறைவனை அழைப்பதை ஏனோ கற்றுக் கொடுக்க மறுக்குகிறார்கள் .
இதைத்தான் குர்ஆனில் அல்லாஹ் "இன்னும், கடலில் உங்களை ஏதேனும் தங்கடம் (துன்பம்) தீண்டினால், அவனையன்றி நீங்கள் (தெய்வங்கள் என) எவற்றை அழைத்துக் கொண்டிருந்தீர்களோ, அவையாவும் மறைந்து விடும்; எனினும் (அல்லாஹ்) உங்களை ஈடேற்றிக் கரையளவில் கொண்டு வந்து சேர்க்கும் பொழுது நீங்கள் (அவனைப்) புறக்கணித்து விடுகிறீர்கள் - இன்னும், மனிதன் மகா நன்றி மறப்பவனாகவே இருக்கின்றான்.

அமில ஆறும் / இரத்த ஆறும்

அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை 20




ரியோ டிண்டோ(Rio Tinto) ஒரு அமில நதி. ஸ்பெயின் நாட்டிலிருக்கும் Andalusia மலைத்தொடரில் உருவாகும் இந்த நதியின் நீர் ரத்தச் சிவப்பில்(மொத்தமும் விஷமாய்) இருக்கிறது.
ஸ்பெயின் தென்மேற்குப் பகுதியில் பாய்கிறது இந்த ரியோ டிண்டோ நதி. சுமார் 100 கிலோ மீட்டர் நீளம் பாய்ந்து செல்லும் இந்த நதி செவ்வாய் கிரகத்தின் நிலப்பரப்பைப் போல் இருக்கிறது என்கின்றனர் விஞ்ஞானிகள்.
காரணம், பல நூற்றாண்டுகளாக இங்கு நடந்த, நடைபெற்றுக்கொண்டிருக்கும் சுரங்கத்தொழில். கி.மு 3000 ல் தொடங்கி இந்த ஆற்றோரம் தாமிரம், வெள்ளி, தங்கம் என பல உலோகங்களுக்காக சுரங்கங்கள் இன்னும் தோண்டப்பட்டு வருகின்றன.
நடுவில் கொஞ்சகாலம் யாராலும் கண்டுகொள்ளப்படாமலிருந்த சுரங்கங்கள், 1556ஆம் ஆண்டு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு ஸ்பெயின் அரசாங்கத்தின் கருணைப்பார்வையில்(!) வந்து விழுந்தது.
1724ஆம் ஆண்டு முதல் ஆற்றோரங்களில் மீண்டும் தொடங்கியது உலோக வேட்டை. சுரங்கங்களிலிருந்து வெளியேற்றப்படும் தேவையில்லாத கழிவுப்பொருட்கள் ஆற்றில் கலந்ததால், ஆற்று நீர் விஷமாக மாறியது. அவற்றிலிருந்த அளவுக்கதிகமான இரும்புதான் தண்ணீரின் ரத்தச் சிவப்பு நிறத்துக்கான காரணம்.
ஆரம்பத்தில் இந்நதி நன்னீர் ஓடும் நதியாகத்தான் இருந்திருக்கிறது . மனிதனின் தீராத பேராசையால்தான் இது அமிலம் கலந்த இரத்த நதியாக மாற்றப்பட்டிருக்கிறது.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
'இன்றிரவு (கனவில்) இரண்டு மனிதர்களைக் கண்டேன். அவர்கள் என்னிடம் வந்து தூய்மையான ஒரு நிலப்பகுதிக்கு என்னை அழைத்துச் சென்றனர்.
நாங்கள் நடந்து வந்தபோது, இரத்த ஆறு ஒன்றை அடைந்தோம்.
ஆற்றில் ஒருவர் நின்றிருந்தார். ஆற்றின் நடுவில் இன்னொருவர் தமக்கு முன்னே கற்களை வைத்து நின்றிருந்தார்.
ஆற்றிலே உள்ளவர் வெளியேற முனையும்போது, அவர் வாயில் (ஆற்றின் நடுவில்) நின்றிருந்தவர் கல்லை எறிந்து அவர் முன்பு நின்ற இடத்திலேயே அவரைக் கொண்டுபோய் நிறுத்தினார். அவர் வெளியேற வரும் போதெல்லாம் இவர் அவரின் வாயில் கல்லை எறிய, அதனால் அவர் முன்பிருந்த இடத்திற்கே திரும்பிச் சென்று கொண்டிருந்தார்!
'அவர் யார்?' என்று (என்னை அழைத்துச் சென்றவர்களிடம்) கேட்டேன்.
அதற்கவர்கள் 'ஆற்றில் நீர் பார்த்தவர் வட்டி உண்பவராவார்!' எனக் கூறினார்கள்.' என ஸமுரா(ரலி) அறிவித்தார்.

ஸஹீஹ் புகாரி : 2085.
மனிதன் செய்த பெரும் பாவத்தில் ஒன்று வட்டி .இந்த வட்டி பாவத்தின் காரணமாக இரத்தம் பெருக்கெடுத்து ஓடும் நதியை நபிகளார்கள் கண்டார்கள் .
மனிதனின் பேராசையால் ஓர் அமில நதியும் , மனிதன் பாவத்தால் ஓர் இரத்த நதியும் உருவாகி இருக்கின்றன.
ரஹ்மத் ராஜகுமாரன்.
இத்துடன் "அறிவியலிலிருந்து ஆன்மிகம் வரை " தொடர் பதிவு நிறைவு பெறுகிறது

இயற்கையின் அதிசயங்கள் -1 (கடல்)



தொடங்குமிடம் எது? முடியுமிடம் எது? என்று எதுவுமற்று இந்த உயிர்க்கோளத்தை சுற்றி வியாபித்திருக்கும் நீர்க்கோளம்தான் கடல். இன்றைய காலகட்டத்தில் எதனுடைய தோற்றத்தையும் அறிவியலால் அறியும் நாம், அதன் துணைகொண்டே கடல் தோன்றியதையும் அறிகிறோம்.
சுமார் 380 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்த உலகத்தில் வாயுக்களே நிறைந்திருந்தன. பூமியின் வெப்பநிலை 212 டிகிரி பாரன்ஹீட்டுக்கு வந்தபோது வாயுக்கள் தண்ணீராக மாறி பூமியின் பள்ளங்களில் நிறைந்து கொண்டன. இதுவே கடல் தோன்றிய முறை.
ஆர்ப்பரிக்கும் கடல் அலையை பார்ப்பது ஒருவித பரவசம் தான். காலை மற்றும் மாலை நேரங்களில் கடற்கரையில் கடலின் அழகை ரசித்தபடி நடந்து செல்வது மகிழ்ச்சியானது. இந்நிலையில் கடலின் அருகில் வசிப்பது, மனநிலைக்கு ஆரோக்கியமானது என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இங்கிலாந்தின் எக்ஸ்டர் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில், கடலோரத்தில் வசிப்பவர்களுக்கு, பதட்டம் மற்றும் மன அழுத்தம் போன்ற மனநிலை பாதிப்புகள் வருவதில்லை. கடற்கரை என்பது உளவியலுக்கு ஒரு பாதுகாப்பான மண்டலம் போல விளங்குகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
நீரின்றி அமையாது உலகு எத்தனை சத்தியமான வார்த்தைகள் !

இந்தப் புவிப் பரப்பின் மொத்தப் பகுதியில் 71% தண்ணீர்.இதில் 97.2 %கடல். அதாவது புவிப் பரப்பில் 70% கடல். உலக நாடுகளின் மொத்த கடற்கரையில் நீளத்தைக் கூட்டினால், மொத்தம் 3,12 ,000 மைல்கள்.
உலகின் பெரிய கடல் பசிபிக் பெருங்கடலை எடுத்துக்கொண்டால், உலகின் மொத்த பரப்பில் மூன்றில் ஒரு பகுதியைக் கொண்டது (16.92 கோடி சதுர கிலோமீட்டர்) பசிபிக் கடலில் உள்ள தீவுகளின் எண்ணிக்கை மட்டும் 25,000.

உலகத்திலேயே சின்னப் பெருங்கடலான ஆர்டிக் பெருங்கடலை எடுத்துக்கொண்டால், புவியின் கடல்நீரில் வெறும் 1% மட்டுமே அதில் இருக்கிறது. ஆனாலும் உலகில் உள்ள ஆறுகள், நன்னீர் ஏரிகள் அனைத்திலும் உள்ள நீரின் அளவை விட 25 மடங்கு அதிகம்.

தாவரங்களுக்கு அப்பாற்பட்டு, மனித இனத்துக்கு உணவையும், புரதத்தையும் வாரித்தருவது கடல்தான். ஒவ்வோர் ஆண்டும் 750 லட்சம் டன்கள் வரையிலான மீன்களை, மனித இனத்திற்குக் கடல் தருகிறது. உலகம் முழுக்க வளர்க்கப்படும் ஆடு, மாடு, பன்றி, கோழி, வாத்து என அத்தனையும் கூட்டினாலும் மீன்வளத்தின் பக்கத்தில் கூட அதன் கூட்டுத்தொகை வராது.

நமது சங்ககாலங்களில் இருந்தே கடல் என்பது முக்கியமான ஒன்றாக இருந்துவருகிறது. கடலில் இருந்து கிடைக்கும் முத்தும் பவளமும், ஆடம்பரமான பொருள்களென்று மன்னரின் சிம்மாசனத்தையும் அரண்மனை கருவூலத்தையும் அலங்கரித்துள்ளன. கடற்படை வைத்திருந்ததையே மிகப்பெரிய பெருமையாகவும், பாதுகாப்பாகவும் உணர்ந்து வைத்துள்ளனர் நமது முன்னோர்கள். இதே கடல்தான் பலவகைகளில் மனிதனுக்கும் இந்த உலகிற்கும் உதவி வருகிறது. மீனவர்களுக்கு வாழ்வாதாரமாகவும், வணிகத்தின் மூலம் பல்வேறு தொழில்புரிபவர்களுக்கு சரக்குகளை கொண்டு வரும் போக்குவரத்திற்கும், பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா எனவும் இந்தக்கடல் பலருக்கும் பலவிதங்களில் உதவிகரமாய் இருக்கிறது.


وَهُوَ الَّذِىْ سَخَّرَ الْبَحْرَ لِتَاْكُلُوْا مِنْهُ لَحْمًا طَرِيًّا وَّتَسْتَخْرِجُوْا مِنْهُ حِلْيَةً تَلْبَسُوْنَهَا وَتَرَى الْـفُلْكَ مَوَاخِرَ فِيْهِ وَلِتَبْتَغُوْا مِنْ فَضْلِهٖ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ
அவன்தான் நீங்கள் மீன்களைப் (பிடித்துச் சமைத்துப்) புசிக்கவும், நீங்கள் ஆபரணமாக அணியக்கூடிய பொருள்களை எடுத்துக்கொள்ளவும் கடலை (உங்களுக்கு) வசதியாக்கித் தந்தான். (பல இடங்களுக்கும் சென்று வர்த்தகத்தின் மூலம்) இறைவனின் அருளை நீங்கள் தேடிக்கொள்ளும் பொருட்டு (கடலில் பயணம் செய்யும்பொழுது) கப்பல் கடலைப் பிளந்துகொண்டு செல்வதை நீங்கள் காண்கிறீர்கள். (இதற்காக இறைவனுக்கு) நீங்கள் நன்றி செலுத்திக் கொண்டிருப்பீர்களாக! (அல்குர்ஆன்: 16:14)

இந்த பூமியின் இயற்கைச் சமநிலையிலும், பருவநிலை மாற்றத்திலும் கடலின் பங்கு இன்றியமையாதது. கடலின் அருகில் வாழ்பவராயினும், கடலை விட்டு நீண்ட தூரத்தில் வாழ்பவராயினும் தான் சுவாசிக்கும் மூச்சிலும், அனைத்து இடங்களிலும் பெய்கின்ற மழையிலும் கடலின் பங்கு இன்றியமையாதது. கார்பனை உள்ளிழுத்து, நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனை வெளியிடுவதில் கடலும் முக்கிய பங்காற்றுகிறது.
நிலத்தில இருக்கிற உலகம்தான் மனிதனின் கண்ணுக்கு தெரிகிறது. நிலத்திலுள்ள உலகத்தைப் போலப் பல உலகம் கடலுக்குள் இருக்கிறது என்கிறார் மீனவன் நண்பர்கள். உண்மைதான் கடலில் இருக்கும் பெருமலைகளின் நீளத்தை கூட்டினாலே ஐயே 40 ஆயிரம் மைல்களை தாண்டும் .

ஹவாயில் உள்ள மௌனா கீ மலையைக் கடல் மட்டத்தில் நின்று பார்த்தால் 13 ஆயிரத்து 680 அடி உயரத்துக்கு தெரியும். கடலடித் தரையிலிருந்து அதன் உயரமோ 33 ஆயிரத்து 474 அடி
உலகிலுள்ள எரிமலையின் வெடிப்புகளில் 90% கடலில்தான் நடக்கின்றன. தெற்கு பசிபிக் கடலில் மட்டும் சுமார் 1,133 எரிமலைகள் நெருக்கமாக அதுவும் உயிர்ப்புடன் இருக்கின்றன.
கடலுக்குள் ஒவ்வொரு கணமும் எண்ணற்ற மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. ஒரு புறம் பசிபிக்கடல் சுருங்கிக் கொண்டிருக்கிறது. மறுபுறம் அட்லாண்டிக் கடல் விரிந்து கொண்டே இருக்கிறது.
10 ஆயிரம் ஆண்டுக்கு முன் கடல் நீர் மட்டம் இப்போது இருக்கும் நீர் மட்டத்தை விட 330 அடி கீழே இருந்ததாக விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். கடந்த நூறு ஆண்டுகளில் மட்டும் கடல் நீர் மட்டம் 10 முதல் 25 செ.மீ வரை உயர்ந்திருக்கிறது. இது மேலும் அதிகரிக்கும் என்கிறார்கள்.

உலகின் இரு துருவங்கள் உட்பட எல்லாப் பகுதிகளிலும் பனி உருகினால் கடல் பொங்கி நீர் மட்டும் இப்போது இருப்பதை விட மேலும் 200 அடி உயரும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.
பரந்து விரிந்த கடல்தான் மனிதவாழ்விற்கு பொக்கிஷமாக இருந்து வருகிறது. நாமும் நமது தலைமுறையினரும் நன்றாக வாழ நாம் பாதுகாக்க வேண்டிய இயற்கை வளத்தில் கடல் முக்கிய இடத்தில் இருக்கிறது.

இயற்கையின் அதிசயங்கள் 2



வூலி மமூத் **(Woolly Mammoth)** என்கிற இன்றைய யானைகளுடன் தொடர்புடைய விலங்கினம், அதன் வாழ்நாளில் எவ்வளவு தூரம் பயணித்தது என்பதை அறிய, அவுயிரினத்தின் மிகப் பெரிய தந்தத்திற்குள் இருக்கும் வேதியியலை விஞ்ஞானிகள் பகுப்பாய்வு செய்துள்ளனர்.
பனி யுகத்தில் வாழ்ந்த வூலி மம்மூத் விலங்கு பூமியை சுமார் இரு முறை சுற்றி வருவதற்கு சமமான தொலைவு பயணித்ததாக ஆராய்ச்சி காட்டுகிறது. அதாவது 70 ஆயிரம் கி.மீ நடந்த பனி யானைகளின் ராட்சத தந்தங்களின் ஆச்சர்ய வரலாறு பதிந்துள்ளது .
ப்ளீஸ்டோசீன் **(Pleistocene)** எனப்படும் வரலாற்றுக்கு முந்தைய குளிர் காலத்தில் வடக்கு அட்ச ரேகைகளில், இந்த வூலி மமூத்கள் வாழ்ந்து வந்தன.
இந்த பழங்கால உயிரினங்கள் எவ்வளவு நடமாடின என்பதை இந்த நவீன கால ஆராய்ச்சி வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. "இது பருவகாலத்துக்கு இடம்பெயர்ந்தவைகளா என தெளிவாகத் தெரியவில்லை" என்கிறார் அலாஸ்கா ஃபேர்பேங்க்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இந்த ஆய்வின் இணை முன்னணி எழுத்தாளர் முனைவர் மேத்திவ் வூலர்.
"அலாஸ்காவின் பல பகுதிகளை அதன் வாழ்நாளில் சில சமயங்களில் பார்வையிட்டுள்ளது அந்த மிகப் பெரிய உயிரினம். அலாஸ்கா என்கிற பகுதி எத்தனை பெரியது என நீங்கள் நினைக்கும் போது மிக ஆச்சரியமாக இருக்கிறது." என்கிறார் அவர்.
வூலி மமூத்தின் தந்தங்கள் மர வளையங்களைப் போல இருந்தன, மர வளையங்கள் அந்தந்த காலகட்டத்தின் தட்பவெப்ப சூழ்நிலையை பதிந்து வைத்திருப்பதைப் போல இந்த மமூத் யானைகளின் தந்தங்களின் அவைகளின் வாழ்க்கை வரலாறு பற்றிய தகவல்களைப் பதிவு செய்துள்ளன.
வூலி மமூத்கள் உயிருடன் இருந்தபோது சில ரசாயனக் கூறுகள் அதன் தந்தத்தில் சுரந்தன. அது அவ்விலங்குகள் எங்கு சென்றன என்பதை வரைபடத்தில் சுட்டிக் காட்டுகிறது.
இந்த இரண்டு விஷயங்களையும் ஒன்றோடொன்று இணைப்பதன் மூலம், ஆராய்ச்சியாளர்கள் 17 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அலாஸ்கா பகுதியில் வாழ்ந்த ஒரு ஆண் வூலி மம்மூத்தின் பயண வரலாற்றை ஆய்வு செய்தனர். அதன் எச்சங்கள் வட மாநிலத்தின் ப்ரூக்ஸ் மலைகளின் அருகே காணப்பட்டன.
"பிறந்த நாள் முதல் இறக்கும் நாள் வரை, அந்த உயிரினங்களிடம் ஒரு நாட்குறிப்பு உள்ளது, அது அதன் தந்தங்களில் எழுதப்பட்டுள்ளது" என அலாஸ்கா பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் இயக்குனர் மற்றும் இவ்வாய்வின் இணை ஆசிரியர் முனைவர் பேட் ட்ரூக்கன் மில்லர் கூறினார். மனிதனின் செயலைப் பற்றிய விவரிவான தினசரிக் குறிப்பைத்தான் அவனுடைய கழுத்தில் மாட்டியிருக்கிறோம் என்று குர்ஆனில் குறிப்பிடுகிறான்.

وَكُلَّ اِنۡسَانٍ اَلۡزَمۡنٰهُ طٰٓـئِرَهٗ فِىۡ عُنُقِهٖ وَنُخۡرِجُ لَهٗ يَوۡمَ الۡقِيٰمَةِ كِتٰبًا يَّلۡقٰٮهُ مَنۡشُوۡرًا
ஒவ்வொரு மனிதனின் செயலைப் பற்றிய (விரிவான தினசரிக் குறிப்பை அவனுடைய கழுத்தில் மாட்டியிருக்கிறோம். மறுமை நாளில் அதனை அவனுக்கு ஒரு புத்தகமாக எடுத்துக் கொடுப்போம். அவன் (அதனை) விரித்துப் பார்ப்பான். (அல்குர்ஆன் : 17:13)

ஆனால் இங்கு மமூத் யானைகளின் தந்தங்களில் அதன் வாழ்நாள் குறிப்பு எழுதப்பட்டு அதை விஞ்ஞானிகளால் படிக்க முடிகிறது என்பது வியப்பான விஷயமல்லவா ?
"பொதுவாக இயற்கை அன்னை எந்த ஒரு உயிரினத்துக்கும் வாழ்க்கையின் இத்தகைய வசதியான மற்றும் வாழ்நாள் முழுவதும் பதிவு செய்யும் வசதியை வழங்குவதில்லை." ஆனால் வூலி மமூத் உயிரினங்கள் தங்கள் தந்தங்களில் வாழ்நாள் முழுவதும் புதிய அடுக்குகளை சீராகச் சேர்த்தன. தந்தங்கள் நீள வாரியாகப் பிரிக்கப்பட்டபோது, இந்த வளர்ச்சிப் பட்டைகள் அடுக்கப்பட்ட ஐஸ்கிரீம் கூம்புகள் போல இருந்தன. அது அந்த உயிரினத்தின் இருப்புக்கான காலவரிசைப் பதிவை வழங்குகிறது என்கிறது விஞ்ஞானம் .
ஆனால் இறைவன் தன் படைப்பினங்களில் எந்த ஒரு மிகச் சிறிய படைப்பினத்தைப் பற்றிய செய்தியை தன் "லவ்ஹுல் மஹ்ஃபூள் " என்ற பதிவு புத்தகத்தில் தெளிவாக பதிந்துள்ளதாக இறைவன் .
وَمَا مِنۡ دَآ بَّةٍ فِى الۡاَرۡضِ وَلَا طٰٓـئِرٍ يَّطِيۡرُ بِجَنَاحَيۡهِ اِلَّاۤ اُمَمٌ اَمۡثَالُكُمۡ مَا فَرَّطۡنَا فِى الۡـكِتٰبِ مِنۡ شَىۡءٍ ثُمَّ اِلٰى رَبِّهِمۡ يُحۡشَرُوۡنَ

பூமியில் ஊர்ந்து திரியக் கூடியவைகளும், தன்னுடைய இரு இறக்கைகளால் (ஆகாயத்தில்) பறக்கக் கூடியவைகளும் உங்களைப் போன்ற (உயிருள்ள) படைப்புகளே (சமுதாயங்களே) அன்றி வேறில்லை. (இவைகளில்) ஒன்றையுமே (நம்முடைய பதிவுப்) புத்தகத்தில் (லவ்ஹுல் மஹ்ஃபூளில்) குறிப்பிடாது நாம் விட்டுவிடவில்லை. பின்னர் (ஒரு நாளில்) இவைகளும் தங்கள் இறைவனிடம் கொண்டு வரப்படும். (அல்குர்ஆன் : 6:38)

1.7 மீட்டர் நீளமான தந்தத்தில் உள்ள ஸ்ட்ரோன்டியம் மற்றும் ஆக்ஸிஜனின் வேதியியல் கூறுகளின் வெவ்வேறு வகைகள் அல்லது ஐசோடோப்புகளை ஆய்வு செய்வதன் மூலம் ஆராய்ச்சியாளர்கள் விலங்குகளின் பயணத்தை ஒன்றாக இணைத்தனர். அலாஸ்கா முழுவதும் ஐசோடோப்பு மாறுபாடுகளை முன்னறிவிக்கும் வரைபடங்களுடன் இவை பொருத்தப்பட்டன.

மமூத் விலங்குகள் தன் 28 ஆண்டு கால வாழ்நாளில் அலாஸ்கா நிலப்பரப்பில் 70 ஆயிரம் கிலோ மீட்டர் பயணித்திருப்பதாக கண்டறிந்தனர். பூமியின் சுற்றளவு 40 ஆயிரம் கிலோ மீட்டர் தான் என்பது கவனிக்கத்தக்கது.

இந்த அற்புத உயிரினங்களின் அழிவுக்கான தடயங்களை இந்த ஆய்வு வழங்குகிறது.

மிகவும் பரந்து விரிந்த விலங்குகளுக்கு, கடந்த பனி யுகத்தின் முடிவில் மம்மூத்களின் விருப்பமான புல்வெளி காடுகள் ஆக்கிரமிக்கப்பட்டது அந்த யானைக் கூட்டங்கள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கும்.

உணவுக்காக அந்த உயிரினங்கள் உலாவும் தூரத்தை அது மட்டுப்படுத்தியது. மேலும் அவை வேட்டையாடப்படும் அபாயத்தில் வைத்தது.

ஒரு சர்வதேச குழு இப்பணிகள் மற்றும் ஆராய்ச்சிகள் குறித்து ஓர் அறிவியல் சஞ்சிகையில் பிரசுரமாக்கியுள்ளது.


மமூத் யானைகளின் தந்தங்களில் அதன் வாழ்வியலின் செய்திகள் பதிந்திருக்கிறது என்றால் மனிதன் மரித்து மண்ணோடு மண்ணாக மக்கிப் போன பின் எது மிஞ்சப் போகிறது ? என்று மனிதன் எண்ணிக் கொள்ளலாம் ஆனால் இறைவனோ குர்ஆனில் ...

قَدْ عَلِمْنَا مَا تَنْقُصُ الْاَرْضُ مِنْهُمْ‌ ۚ وَعِنْدَنَا كِتٰبٌ حَفِيْظٌ

(மரணித்த) பின் அவர்களின் தேகத்தை மண் தின்று அழித்துக் கொண்டிருப்பதை நிச்சயமாக நாம் அறிவோம். (எனினும், நாம் விரும்பிய நேரத்தில் மரணித்த அவர்களை உயிர் கொடுத்து எழுப்பி விடுவோம்.) அன்றி, (அவர்களின் செயல்களைப் பற்றிய) பாதுகாக்கப்பட்ட பதிவுப் புத்தகம் நம்மிடத்தில் இருக்கின்றது. (அதில் ஒவ்வொன்றும் வரையப்பட்டுள்ளது.) (அல்குர்ஆன்:(50:4)

இயற்கையின் அதிசயங்கள் 3

இரும்பு மழையாகப் பெய்யும் ஒரு புதிய கோள் - விண்வெளி அதிசயம்



மழையையும் இறக்கினோம்-(78:14,6:99) இரும்பையும் இறக்கினோம்.-(57:25)

மேற்கண்ட வசனத்தில், இன்று பூமியில் நாம் காணும் இரும்பை இறக்கியதாக அல்லாஹ் கூறுகின்றான்.அரபியில் “**அன்ஸல்னா’ (Anzalna)** என்ற சொல்லுக்கு “இறக்குதல்” என்று பொருள். இந்த பொருளிலேயே மழையையும் இறக்கினோம் என்கிறான்.

வானில் எப்படி இரும்பு உருவானது ? விண்வெளியில் முக்கியமாகச் சொல்லக்கூடிய இரண்டு விதமான திடப்பொருட்கள் உண்டு. ஒன்று எரிந்து கொண்டிருக்கும் திடப்பொருள். மற்றது எரியாமல் இருக்கும் திடப்பொருள். எரியாமல் இருப்பவற்றை நாம் கோள்கள் என்கிறோம். நம் பூமியும் ஒரு கோள்தான். இவற்றுடன் துணைக் கோள்கள் என்று சொல்லப்படும் சந்திரன்களும் உண்டு.

ஆனால் எரிந்து கொண்டிருப்பவற்றை நட்சத்திரம் என்கிறோம். பூமிக்கு மிக அண்மையில் இருக்கும் நட்சத்திரம் நம் சூரியன்தான். சூரியன் ஒரு நட்சத்திரம் என்பதைப் பலர் சிந்திப்பதே இல்லை. நம் சூரியன், பால்வெளிமண்டலம் **(Milkyway Galaxy)** என்னும் நட்சத்திரக் கூட்டத்தில் ஒரு நட்சத்திரமாக இருக்கிறது. இந்தப் பால்வெளி மண்டலத்தில் மட்டும் 200 முதல் 400 பில்லியன் நட்சத்திரங்கள் உள்ளன என்று குத்துமதிப்பாகக் கணித்துள்ளனர்.

நட்சத்திரத்திரம் எரிவதற்கு அடிப்படைச் சக்தியாக இருப்பது ஹைட்ரஜன் (H). நட்சத்திரத்தின் உட்கருக்குள் **(Core)** இருக்கும் ஹைட்ரஜன் ‘நியூக்ளியர் பியூஸன்’(NuclearFusion**)** காரணமாக ஹீலியமாக (He) மாறும். இப்படி மாற்றமடையும் போது பிரமாண்டமான சக்தி வெளிவரும். இரண்டு அணுக்கருக்கள் ஒன்றாக இணைந்து, வேறொரு அணுவாக மாறுவதையே

'நியூக்கிளியர் பியூஸன்' என்கிறார்கள். தமிழில் 'அணுக்கருப் பிணைப்பு' என்று சொல்லலாம்.
ஹைட்ரஜன், ஹீலியமாக மாறும்போது உருவாகும் சக்தியால் ஏற்படும் கதிர்வீச்சையே ஒளியாகவும், வெப்பமாகவும் வெளியே அனுப்புகிறது நட்சத்திரம். ஒரு கட்டத்தில் உட்கருக்குள் இருக்கும் ஹைட்ரஜன் அனைத்தும் ஹீலியமாக மாறும் நிலை வரும். அப்போதும் 'அணுக்கருப் பிணைப்பு'
தொடர்ந்து நடைபெறுவதால் ஹீலியம், கார்பனாக(C) மாறத் தொடங்கும். ஹைட்ரஜன் எப்படி ஹீலியமாக மாறியதோ, அதேபோல ஹீலியமும், கார்பனாக மாற ஆரம்பிக்கும்.
இப்போதும் அதிகளவு சக்தி வெளிவரும். ஹைட்ரஜன்,ஹீலியமாக மாறுவதற்கு எட்டு மில்லியன் வருடங்கள் எடுக்கலாம். ஆனால், ஹீலியம் முழுவதும் கார்பனாக மாறுவதற்கு சுமார்
அரை மில்லியன் வருடங்களே போதுமானது. இத்துடன்
'அணுக்கருப் பிணைப்பு' முடிந்து விடுவதில்லை. தொடர்ந்து கார்பன் நியானாகவும்(Ne), நியான் ஆக்சிஜனாகவும் (O), ஆக்சிஜன் சிலிக்கானாகவும்(Si), சிலிக்கான் இரும்பாகவும்(Fe) படிப்படியாக மாறுகின்றன.
இன்று பூமியில் உள்ள இரும்பு பூர்வீக பூமிக்கு
சொந்தமானதல்ல. விண்வெளியில் இருந்தே இம்மண்ணுக்கு வந்தது என்றார்கள். இதற்கு உதாரணமாக எகிப்தை ஆண்ட பாரோ மன்னர்கள் வைத்திருந்த உலகின் முதல் இரும்பு ஆயுதம் விண்ணிலிருந்து வீழ்ந்த விண்கற்களில் இருந்த இரும்பின் மூலம் உண்டாக்கப்பட்டது என்றார்கள்.
புத்தம் புது பூமி வேண்டும், நித்தம் ஒரு வானம் வேண்டும்... தங்க மழை பெய்ய வேண்டும்" என்று ஒரு சினிமா பாடலை நீங்கள் கேட்டிருக்கலாம். அப்படி ஒரு புத்தம் புதிய கோள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதில் தங்க மழை எல்லாம் இல்லை. ஆனால், இரும்பு மழை பெய்கிறது என்பதை விண்வெளி வீரர்கள் வியந்து பார்த்திருக்கிறார்கள்.
இது ஹாலிவுட் திரைப்படம் அல்ல. நமக்கு தெரியாமல் தீவிரமாக செயல்படும் மற்றொரு உலகில் நடைபெறும் இயற்கை நிகழ்வு இது.
வாஸ்ப் 76பி என்று அறியப்படும் இந்த கோள், அதனுடைய நட்சத்திரத்தை சுற்றி வரும்போது, அதன் பகல் பகுதி வெப்பநிலை 2,400 டிகிரி செல்ஷியஸ் ஆக இருக்கிறது. இந்த வெப்பநிலை உலோகங்களை ஆவியாக்கும் தன்மை கொண்டது.
இரவு நேரப் பகுதியில் இந்தக் கோளின் வெப்பநிலை 1400 டிகிரியாக குறைந்துவிடுகிறது. இந்த வெப்பநிலையில், பகல் நேரத்தில் ஆவியான உலோகங்கள் இறுகி மழையாகப் பெய்கின்றன.
இது ஒரு வினோதமான சூழல் என்று ஜெனீவாவை சேர்ந்த டாக்டர் டேவிட் ஹெரேயின்ச் விளக்கம் தருகிறார்.

தண்ணீர் துளிகளுக்கு பதிலாக இரும்பு துளிகளின் சாரால் அடிப்பது எப்படி இருக்கும் என நினைத்து பாருங்கள் என்று பிபிசியிடம் பேசிய டாக்டர் டேவிட் ஹெரேயின்ச் தெரிவித்தார்.
நேச்சர் என்ற சஞ்சிகையில் இந்த கோள் குறித்த கண்டுபிடிப்புகளை சுவிஸ் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.
வாஸ்ப் - 76பி என்ற இந்த கோள் குறித்து முழு ஆய்வு மேற்கொள்ள ஐரோப்பிய தெற்கு ஆய்வகம் எக்ஸ்பிரசோ என்ற கருவியை சிலியில் பொருத்தி எப்படி பயன்படுத்தியது என்று விளக்குகிறது.
இந்த கோள் பூமியில் இருந்து 640 ஒளியாண்டு துரத்தில் உள்ளது. வாஸ்ப் 76பி தனது நட்சத்திரத்திற்கு மிக அருகில் உள்ளது. வாஸ்ப் 76பி தன்னை தானே சுற்றிக்கொள்ள 43 மணி நேரமாகிறது. இந்த கோள் எப்போதும் தனது நட்சத்திரத்தை ஒரு புரத்தில் இருந்து மட்டுமே பார்க்க முடியும். நம் பூமியின் நிலவும் இதையே தான் செய்கிறது, நிலவின் ஒரு புறத்தை மட்டுமே நாம் பார்க்க முடியும்.
உண்மையில் இந்த கோளில் நிலவும் அதி வெப்பத் தன்மையால் மேகங்கள் காணப்படுவதில்லை. வளிமண்டலத்தில் உள்ள அனைத்து மூலக்கூறுகளும் தனித்தனி அணுக்களாக சிதறுகின்றன.
இங்கு நிலவும் வெப்ப நிலை மாற்றங்களால் மணிக்கு 18,000 கிலோமீட்டர் வேகத்தில் கடுமையான காற்று வீசும் என டாக்டர் டேவிட் ஹெரேயின்ச் கூறுகிறார்.
எக்ஸ்பிரசோ ஸ்பெக்ட்ரோமீட்டரைப் பயன்படுத்தி கடுமையான இரும்பின் வெப்பநிலையை அங்கு கண்டுபிடித்துள்ளனர்.
இரவு நேரம் நிலவும் ஒரு புறத்தில் 1400 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலையில் இரும்பு ஆவி செறிவடைந்து மேகமாகவும், மழையாகவும், துளிகளாகவும் மாறுகிறது. மழையாகவும் துளிகளாகவும் வெளிவருபவை கோளின் ஆழமான பகுதிக்கு சென்று சேர்ந்தால் இந்த எக்ஸ்பிரஸோ கருவியால் அதை ஆராய முடியாது என்று ஹெரேயின்ச் கூறுகிறார்.
வியாழனை விட வாஸ்ப் 76பி இரண்டு மடங்கு பெரிய கோள். பிரிட்டனின் வாஸ்ப் தொலைநோக்கி திட்டம் நான்கு வருடங்களுக்கு முன்பு இந்த கோளை கண்டுபிடித்ததால் இந்த பெயர் வைக்கப்பட்டுள்ளது.
இந்த கோள் தனது நட்சத்திரத்திற்கு அருகில் இருந்து, அனைத்து விதமான இயற்பியல் ஆராய்ச்சிக்கு உகந்த நிலையில் உள்ளதாக டாக்டர் டேவிட் ஹெரேயின்ச் கூறுகிறார்.
இந்த நட்சத்திரத்தாலோ அல்லது நட்சத்திரத்தில் இருந்து வரும் கதிர்வீச்சாலோ வெப்பம் அதிகரித்து, இந்த கோள் அதி வெப்பச் சூழலை கொண்டுள்ளது.
ஆக வானிலுள்ள எல்லா கோள்களிலும் இரும்பு திருக்குர்ஆன் கூறுவது போல வானத்திலிருந்தே இறங்குகிறது
Rahmath Rajakumaran
வானிலிருந்து பூமிக்கு நான்கு பரக்கத்துகளை (மறைவான அருள்) இறக்கியருளியிருக்கின்றான்.
உப்பு , தண்ணீர் . நெருப்பு , இரும்பு
" இரும்பையும் நாம் இறக்கினோம் " குர்ஆன் (57 : 25)
இரவில் மொட்டை மாடியில் படுத்துக் கொண்டு வானத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தால் , பிரகாசமான ஒளிக்கோடுகள் தோன்றி மறைவதைப் பார்க்கலாம் . இவற்றை எரி நட்சத்திரம் Meteor என்பார்கள். ஆனால் இவை விண்மீன்கள் அல்ல என்பது 2000 ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்கர்களுக்கு தெரிந்திருக்கிறது .

ஏனெனில் எவ்வளவு எரிநட்சத்திரங்கள் விழுந்தாலும் வானிலுள்ள விண்மீன்களின் எண்ணிக்கை குறையவில்லை என்பதை அவர்கள் கண்டார்கள் .
பண்டைய காலத்து மக்கள் அவ்வாறு பூமியில் வந்து விழுந்த விண் எரிகற்களைச் சேகரித்தனர். அவை சின்னச் சின்ன இரும்பு கட்டிகளாக இருந்தன. கிருஸ்து பிறப்பதற்கு 3000 வருடங்களுக்கு முன்பே விண் எரிகற்களிலிருந்து எடுக்கப்பட்ட இரும்பைக் கொண்டு கருவிகள் செய்யப்பட்டதாக ஆய்வில் தெரிய வருகிறது.
விண்கற்கள் கூட்டங்கள் நிறைந்த வான்வெளியில் பூமி சுழன்று செல்லும் போது , பூமியில் விண்கற்களின் பொழிவுகள் அதிகமாக தோன்று
கின்றன .இந்த விண்கற்கள் வால் நட்சத்திரங்களிலிருந்து விடுதலைப் பெற்ற துண்டுகளாகவும் இருக்கின்றன. இரவு வானத்தை 1 மணி நேரத்திற்குள் 6 விண்கற்களாவது எரிந்து விழுவதை நீங்கள் காண்பீர்கள் .
கடல் பரப்பில் கடலுக்குள் மட்டுமே வருஷத்திற்கு 5 லட்சம் டன் இரும்பும் நிக்கலும் கலந்த விண்கற்கள் விழுவதாக அண்மைக்கால அறிவியல் புள்ளி விபரம் கூறுகிறது .
ஆமா ... வருஷத்திற்கு 5 லட்சம் டன் இரும்பும் நிக்கலும் விழுந்தால் , பூமியின் பாரம் கூடி தாங்காமல் வெடித்து விடாதா ?
" விடாது "
சொல்றேன். பூமியின் சொந்த எடையை எந்த தராசு மூலம் எடை போடுவது ?..
புவி ஈர்ப்பு விதி
F = G . m1. m2 / d (Square) படி
5.893 க்குப் பிறகு இருபத்தோரு சைபர்கள் போட்ட கிலோ கிராம் நம் பூமி .
ஒவ்வொரு வருஷம் 5 லட்சம் டன் இரும்பும் நிக்கல் கணக்கில் வந்தாலும் பூமியிலிருந்து எங்கே போகுது ..? விஞ்ஞானத்திற்கு தெரியவில்லை .
உங்களுக்குத் தெரியுமா ?
ஹஜ்ஜின் போது 40 லட்சம் ஹாஜிகள் 21 கற்கள் பொறிக்கி எடுக்கிறோமே, இந்த பொடிக் கற்கள் முஸ்தலிபாவிற்கு எங்கிருந்து வருகிறதோ ... அந்த இடத்திற்கு 5 லட்சம் டன் இரும்பும் நிக்கலும் இடம் மாற்றம் செய்யப்பட்டிருக்கலாம். யாருக்குத் தெரியும் ? இந்த இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு அல்லாஹ்வே அறிவான் . நான் சொல்ல என்ன இருக்கிறது ?
(குர்ஆன் கூறும் உலோகங்கள் என்ற தொடர் பதிவிலிருந்து ...)

இயற்கையின் அதிசயங்கள் 4

பாலைவனத்தில் கற்கள் நகரும் மர்மம் என்ன?



அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தின் தென் பகுதியில் ஓரிடத்தில் பாறைகள் தாமாக இடம் பெயர்ந்து செல்கின்றன. 100 ஆண்டுகளுக்கும் மேலாக இது பெரும் புதிராக இருந்து வந்துள்ளது. அவை இடம் பெயரும் மர்மத்துக்கு இப்போது விடை கண்டுபிடித்திருக்கிறார்கள்.
பாறைகள் இவ்விதம் இடம் பெயரும் இடத்தின் பெயர் "ரேஸ்டிராக் பிளாயா" என்பதாகும். இது மரணப் பள்ளத்தாக்கு எனப்படும் பாலைவனத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. பெயர் தான் ரேஸ்டிராக்கே தவிர இங்கு ரேஸ் எதுவும் நடப்பதில்லை.
ரேஸ்டிராக் பிளாயா பகுதி. ஒரே சம தரையாகஅமைந்துள்ளதைக் கவனிக்கவும்அதை ஒரு பாலைவனம் என்றும் சொல்லலாம். ஆனால் மணல் கிடையாது. என்றோ வற்றிப்போன ஏரியின் படுகை என்றும் வருணிக்கலாம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை செடி கொடி கிடையாது. புல் பூண்டு கிடையாது. விலங்குகளும் இல்லை. மனித நடமாட்டமும் கிடையாது.
ஆனால் இங்குமங்குமாக சிறிய பாறைகள் கிடக்கின்றன. வெடிப்பு விட்ட தரையில் அந்தப் பாறைகள் சட்டென்று கண்ணில் புலப்படும். பல பாறைகளின் எடை சுமார் 13 கிலோ. 300 கிலோ எடை கொண்ட பாறைகளும் உண்டு.
பல பாறைகள் நகர்ந்துள்ளதால் ஏற்பட்ட தடங்கள்
வானிலிருந்து எடுக்கப்பட்ட படம்.ஓரிடத்தில் கிடக்கின்ற பாறை பின்னர் பார்த்தால் இடம் மாறியிருக்கும். அந்தப் பாறை நகர்ந்து சென்ற தடம் தெரியும். இவை “கால் முளைத்த” பாறைகள்.ஒன்றல்ல பல பாறைகள் நகர்ந்து சென்ற தடம் தெளிவாகத் தெரிகிறது. தடத்தை வைத்துச் சொல்வதானால் சில பாறைகள் 1500 அடி அளவுக்கு நகர்ந்துள்ளன.

அந்தப் பாறைகளை யார் நகர்த்தியிருப்பார்கள் ? காற்றில் உருண்டு சென்றிருந்தால், இப்போது தெரிகின்ற தடம் ஏற்பட வாய்ப்பில்லை. யாராவது கயிற்றைக் கட்டி இழுத்துச் சென்றால் மட்டுமே பாறை நகர்ந்து சென்ற தடம் ஏற்பட முடியும்.
ஒரு பாறை எவ்வளவு தூரம் நகர்ந்து வந்துள்ளது என்பதைக் கவனிக்கவும்.அப்படி யாரேனும் இழுத்துச் சென்றிருந்தால் அவரது காலடித் தடமும் மண்ணில் பதிவாகியிருக்கும். ஆகவே பாறைகள் தானாகத் தான் நகர்ந்து சென்றிருக்க வேண்டும். அல்லது ஏதோ ஒன்று அவற்றை நகரச் செய்திருக்க வேண்டும்.
1900 ஆம் ஆண்டிலிருந்தே இந்த மர்மம் குறித்து பல்வேறு கருத்துகள் கூறப்பட்டு வந்துள்ளன. எதிலும் மர்மத்தைக் காண விரும்புகிறவர்களோ இது வேற்றுலகவாசியின் வேலையாக இருக்கலாம் என்று கூறினர்.
ஒரே நேர்கோட்டில் நகர்ந்து வந்துள்ள பாறை ஆனால் இந்தப் பாறைகள் நகருவதை கடந்த காலத்தில் யாருமே நேரில் கண்டதில்லை. காமிராவிலும் இது பதிவாகியது இல்லை.
இந்த நிலையில் தான் நிபுணர் ஜேம்ஸ் நாரிஸ் அங்கு தானியங்கி காமிராவைப் பொருத்தி விட்டு வந்தார். அது விட்டு விட்டு அவ்வப்போது படம் எடுக்கின்ற காமிராவாகும்.
அந்த காமிரா சரியாக செயல்படுகிறதா என்று சோதிக்க அண்மையில் அவர் ரேஸ்டிராக் பிளாயாவுக்குச் சென்றார். அவருடன் ரிச்சர்ட் நாரிஸும் சென்றார்.
அங்கு அவர்கள் ஒன்றல்ல சுமார் 60 பாறைகள் தாமாக நகர்வதைக் கண்ணால் கண்டனர். அவை நகர்ந்த போது லேசான சத்தமும் கேட்டது.பாறைகளை நகர்த்தியது வேறு எதுவுமல்ல. நீரில் மிதக்கின்ற பனிக்கட்டி வில்லைகள்தான். தண்ணீர் எங்கிருந்து வந்தது?
பாறைகள் எப்படி நகருகின்றன என்பதை பின்னர் ஜேம்ஸ் நாரிஸ் விவரித்தார்.
ஜோடியாக நகர்ந்து வந்துள்ள பாறைகள்பாறைகள் நகருவதில் பெரிய மர்மம் எதுவுமில்லை. அந்த இடத்தில் மழை என்பது அபூர்வம். வருஷத்தில் இரண்டு அங்குலம் மழை பெய்தால் உண்டு. குளிர் காலத்தில் இப்படி மழை பெய்தால் களிமண் பூமி என்பதால் இரண்டு மூன்று செண்டிமீட்டர் அளவுக்குத் தண்ணீர் தேங்கி நிற்கும்.
அது கடும் குளிர் வீசுகின்ற பகுதியாகும். ஆகவே தேங்கும் தண்ணீரின் மேற்புறம் உறைந்து போகும். உறைந்த பனிக்கட்டி சில்லு சில்லுகளாக நீரில் மிதக்கும். தேங்கும் தண்ணீர் குறைவு என்பதால் பாறைகளின் மேற்புறம் தண்ணீருக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்.
அந்தப் பகுதியில் குளிர்காலத்தில் தென்மேற்கிலிருந்து வட கிழக்கு நோக்கி மணிக்கு சுமார் 140 கிலோ மீட்டர் வேகத்தில் கடும் காற்று வீசும். இதன் விளைவாக மிதக்கும் பனிக்கட்டி சில்லுகள் பாறைகள் மீது மோதும். இவை மெல்லியவைதான். ஆனால் கெட்டியானவை.
தேங்கும் தண்ணீர் காரணமாக நீருக்கடியில் உள்ள களிமண் தரை சறுக்கிச் செல்வதற்கு உகந்த அளவில் இருக்கும். கடும் காற்று பனிக்கட்டி சில்லுகளைத் தாக்கும் போது அவை பாறை மீது மோத பாறைகள் சறுக்கியபடி நகருகின்றன. காற்று விட்டுவிட்டு அடிக்கும் போது ஒவ்வொரு தடவையும் பனிக்கட்டி சில்லுகள் மோதும் போது பாறை சில மில்லி மீட்டர் நகரலாம்.
பின்னர் வெயில் காரணமாக தண்ணீர் ஆவியாகி விடும். பாறைகள் நகர்ந்த இடம் காய்ந்து தெளிவான தடமாகத் தெரியும்.
குளிர்காலமாக இருக்க வேண்டும். மழை பெய்ய வேண்டும். மிதக்கும் பனிக்கட்டி சில்லுகள் இருக்கவேண்டும்.கடும் காற்று வீச வேண்டும். இப்படியாக பல நிலைமைகளும் ஒன்று சேரும் போது தான் பாறைகள் நகருகின்றன. மேலும் இந்தப் பகுதியானது சிறிது கூட மேடுபள்ளம் இன்றி நூல் பிடித்தது போல சமதரையாக இருப்பதும் பாறைகள் நகருவதற்குக் காரணமாக உள்ளது.
பாறைகள் நகரும் சூழ்னிலைகள் உண்டானாலும் அந்தத் தடவை மிகச் சிறிது தூரமே நகரலாம். வேறு சில சமயங்களில் அதிக தூரம் நகரலாம். அல்லது தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பாறைகள் அதே இடத்தில் காணப்படலாம். ஆகவே பாறைகள் இடம் பெயருவது என்றோ எப்போதோ நடைபெறுவதாக இருக்கிறது.ஆகவேதான் இது யார் கண்ணிலும் படாமல் இதுவரை மர்மமாக இருந்து வந்துள்ளது.
இதுவரை நகரும் பாறையைப் பற்றி விஞ்ஞானம் கூறியதைப் பார்த்தோம் . ஓடும் பாறையைப் பற்றி மெஞ்ஞானம் கூறுவதை கேளுங்கள் . சொல்றேன்.
இஸ்ரவேலர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தவர்களாக, நிர்வாணமாகவே குளிப்பார்கள். மூஸா(அலை) அவர்கள் தனித்தே குளிப்பார்கள்.
இதனால் 'அல்லாஹ்வின் மீது ஆணையாக மூஸா விரை வீக்கமுடையவர். எனவே அவர் நம்முடன் சேர்ந்து குளிப்பதில்லை' என இஸ்ரவேலர்கள் கூறினார்கள்.
ஒரு முறை மூஸா(அலை) அவர்கள் குளிப்பதற்காகச் சென்றபோது, தங்களின் ஆடைகளை ஒரு கல்லின் மீது வைத்துவிட்டுக் குளிக்கச் சென்றார்கள். அவர்களின் ஆடையோடு அந்தக்கல் ஓடிவிட்டது. உடனே மூஸா(அலை) அவர்கள் அதைத் தொடர்ந்து 'கல்லே! என்னுடைய ஆடை!' என்று சப்தமிட்டுச் சென்றார்கள்.
அப்போது, இஸ்ரவேலர்கள் மூஸா(அலை) அவர்களின் மர்மஸ்தலத்தைப் பார்த்துவிட்டு 'அல்லாஹ்வின் மீது ஆணையாக மூஸாவிற்கு எந்தக் குறையுமில்லை' என்று கூறினார்கள்.
மூஸா(அலை) அவர்கள் தங்களின் ஆடையை எடுத்துக் கொண்டு அந்தக் கல்லை அடிக்க ஆரம்பித்தார்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.
'அல்லாஹ்வின் மீது ஆணையாக மூஸா(அலை) அவர்கள் கல்லைக் கொண்டு அந்த கல்லின் மீது ஆறோ ஏழோ அடி அடித்தார்கள்' என அபூ ஹுரைரா(ரலி) கூறினார்.
ஸஹீஹ் புகாரி : 278.

இயற்கையின் அதிசயங்கள் 5

கற்சிலையாக மாறும் உயிரினங்கள்



வடக்கு தான்சானியாவில், “நெட்ரான் ஏரி” என்று அழைக்கப்படும் ஒரு ஏரி உள்ளது. அந்த ஏரியில் கால் வைக்கும் பறவைகள், விலங்குகள் என அனைத்தும் எல்லாம் கல்லாக மாறும்.
வடக்கு டான்சானியாவின் தி என்ட்ரான் ஏரியின் கடற்கரைக்கு நிக் பிராண்ட் என்ற புகைப்படக் கலைஞர் வந்த போது, அதிர்ச்சியடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஏரியின் கரையில் கால்நடைகள் மற்றும் பறவைகளின் சிலைகள் காணப்பட்டது. அந்த சிலைகள் உண்மையான இறந்த பறவைகளுக்கு சொந்தமானது. உண்மையில், ஏரி நீருக்குச் செல்லும் விலங்குகள் மற்றும் பறவைகள் சிறிது நேரத்தில் கற்களாக மாறுகின்றன்.
இதுகுறித்து பிராண்ட் கூறிய போது “ஏரியின் மிகவும் பிரதிபலிக்கும் தன்மை உயிரினங்களை தவறாக ஈர்த்து, வழிநடத்தியதை விட அவைகள் இறந்துவிட்டால் ,எப்படி உணர முடியும் என்பது யாருக்கும் நிச்சயமாகத் தெரியாது, இதன் விளைவாக விலங்குகள் தண்ணீரின் ஆபத்து தெரியாமலேயே விழுந்தன” என்று தெரிவித்துள்ளார்.
ஆனால் இதற்கு பின்னணியில் அறிவியல் காரணங்களும் இருக்கிறது.
அந்த தண்ணீரில் உப்பு மற்றும் சோடாவின் அளவு மிக அதிகமாக உள்ளது. இதுதான் இந்த பறவைகளின் இறந்த உடலைப் பாதுகாக்கிறது.
இந்த ஏரி நீரில் காரத்தின் அளவு ph9 முதல் pH 10.5 வரை, அதாவது அம்மோனியாவாக காரமானது. ஏரியின் வெப்பநிலையும் 60 டிகிரியை எட்டும்.
மேலும் அந்த ஏரியின் தண்ணீரில் எரிமலையின் சாம்பலும் கரைந்துள்ளது . இதுதான் எகிப்திய மம்மிகளைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்பட்டது என்றும் கருதப்படுகிறது.

.... x .... x .. ..

தாம் பிறந்த சமூகத்திற்கு அன்றி வேறு ஒரு சமூகத்திற்கு நபியாக வைக்கப்பட்டவர்கள் நபி லூத் (அலை) அவர்கள்.
ஸதூம் என்ற நகரமும் அதைச் சுற்றி நான்கு அழகிய நகரங்கள் கொண்ட பூமிக்கு நபியாக அனுப்பப்பட்டார்கள்
அங்குள்ள ஆண்கள் " லிவாத் ".என்னும் ஆண் புணர்ச்சியாளர்களாக (Homo sex) இருந்தனர்.மொத்தம் நான்கு லட்ச குடும்பத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் பதின்மர் இந்த கேடு கெட்ட செய்கைகளில் ஈடுபட்டனர் என்று முஜாஹிது (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். இப்போது அந்த பூமியை ஜோர்டான் என்றழைக்கப்படுகிறது .
அந்த 5 நகரங்களை அழிப்பதற்கு இறைவன் மலக்குமார்களை அழகான கவர்ச்சிகரமான இளைஞர்கள் கோலத்தில் லூத் (அலை) அவர்களிடம் விருந்தினர்களாக அனுப்பி வைத்தான் .
கடற்கரை ஓரங்களில் மிக அழகாக இருந்த அந்த நகரங்களை இறைவன் மலக்குமார்களை கொண்டு தலைகீழாகப் புரட்டினான். அதில் எந்த ஜீவராசிகளும் வாழமுடியாத மிகுந்த உப்பு கொண்ட சாக்கடலாக மாற்றினான் .
ஏன் இத்தனை இவ்வளவு உப்பு ?
லூத் நபியின் மனைவி வாலிஹா அக்கேடுகெட்ட மக்களுக்கு சாதமாக இருந்து, தன் வீட்டிற்கு அழகான இளைஞர்கள் வந்திருப்பதை வெளியே போய் சொல்வதற்கு, 'வந்திருக்கும் விருந்தினருக்கு விருந்து சமைக்க உப்பு இல்லாததால், உப்பு வாங்கி வருவதாக' - பொய் சொல்லி வெளியே வந்து, உப்பு சாக்கில் துப்புக் கொடுத்தாள். அதனால் சாக்கடலில் அத்தனை உப்பு .
அந்த நகரங்களை ஏன் புரட்டி போட்டு அழித்தான் ?
ஆண் புணர்ச்சியாளர்கள் ஓர் ஆணை புணரும் போது, புரட்டி போட்டு எப்படி நடந்து கொள்வார்களோ அப்படி அந்நகரங்களும் புரட்டப்பட்டது.
"(விருந்தினராக வந்த வானவர்கள்) கூறினார்கள்: 'மெய்யாகவே நாம் உம்முடைய இறைவனின் தூதர்களாகவே இருக்கின்றோம்; நிச்சயமாக அவர்கள் உம்மை வந்தடைய முடியாது; எனவே இரவின் ஒரு பகுதி இருக்கும்போதே உம் குடும்பத்துடன் (இவ்வூரை விட்டுச்) சென்றுவிடும்! உம்முடைய மனைவியைத் தவிர, உங்களில் யாரும் திரும்பியும் பார்க்க வேண்டாம். குர்ஆன் (11:81)

"திரும்பிப் பார்ப்பின் கல்லாய் சமைந்து விடுவீர்கள் " என்று மலக்குமார்கள் கூறியதாக பைபிளில் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இது திருக்குர்ஆனில் கூறப்படவில்லை.
வானவர் ஜிப்ரயில் (அலை) தம் சிறகை வீசினார்கள் . பெரும் சப்தத்துடன் நிலம் அதிர்ந்தது. அந்த சப்தத்தைக் கேட்டு லூத் (அலை) அவர்களின் மனைவி திரும்பிப் பார்த்து,
"என் இனத்தவரே...! என் இனத்தவரே...! "என்று அலறினாள். அடுத்தகணம் அவள் கல்லுருவானாள்.
அக் கற்சிலையிலிருந்து மாதந்தோறும் மாதவிடாய் வந்துகொண்டிருப்பதாக இமாம் ஸுஹைலி (ரஹ்) அவர்கள் கூறினார்கள் . (நபிமார்கள் வரலாறு - அப்துற் றஹீம்)
ஆனால் ' தப்ஸீரெ ஸாஹிதி ' யில் அவள் அங்கேயே உப்பினால் செய்யப்பட்ட கல் தூணாக மாறிவிட்டாள் என்று கூறப்பட்டுள்ளது.

இயற்கையின் அதிசயங்கள் 6

கற்களாக மாறிய மனிதர்கள்



அந்தக்கால மாயாஜால சினிமா படங்களை பார்த்திருப்பீர்கள் மனிதனைக் கல்லாக மாற்றும் காட்சிகள் சர்வ சாதாரணமாக வரும்.
நிஜமாகவே மனிதர்களை கல்லாக மாற்ற முடியுமா ? என்றால்
'முடியாது' என்றுதான் விஞ்ஞானம் சொல்லும். காரணம் மனிதன் அமீனோ ஆக்சைடுகளால் உருவானவன். கல், பாறை சிலிக்கான்களால் உருவாகியது என்று விஞ்ஞானம் விதிகள் பேசும் .
ஆனால் இயற்கையின் பேரழிவு மனிதர்களை கல்லாக மாற்றிய சம்பவம் இவ்வுலகில் நடந்திருக்கிறது.
இத்தாலியில் நேப்பிள்ஸ் **(Naples)** நகரத்திலிருந்து, தென் கிழக்குப் பகுதியில் சுமார் 23 கிலோமீட்டர் தொலைவில் அமைந்த பண்டைய நகரம் பாம்பெய் **(Pompeii),** ஹெர்குலானியம் **(Herculaneum)** என இரு அழகான நகரங்களின் அருகே மவுண்ட் வெசுவியஸ் **(Mount Vesuvius)** என்கிற எரிமலை இருக்கிறது.
கிபி 79-இல் இந்த வெசூவியஸ் எரிமலை வெடிப்பின் காரணமாக வெளியான எரிமலைச் சாம்பல் மற்றும் இறுகிய தீக்குழம்புகளினுள் அகப்பட்டு பொம்பெயி நகரம் 4 முதல் 6 மீட்டர் வரை புதையுண்டு போனது. 20 ஆயிரத்திற்கும் மேலானவர்கள் எரிமலை சாம்பலில் சிக்கி இருக்கலாம்
ஊரெங்கும் நெருப்பு குழம்பு வழிந்தோடியது. அந்த இரு நகரங்களையும் மூடி, வெளி உலகுக்கு இப்படி நகரங்கள் இருந்தன என்ற சுவடுக் கூட தெரியாமல் ஆக்கியது.


அதன் பின்னர் கிட்டத்தட்ட 18 ஆம் நூற்றாண்டளவிலான காலப்பகுதி வரையில் அதாவது 1738 ஆம் ஆண்டு தற்செயலாகக் கண்டறியப்படும் வரையில் இந்நகரம் தொலைந்து போயிருந்தது.
12 அடுக்குகளாக இருந்த மண் பாறை படிவங்களை தோண்டி எடுத்த போது, அங்கே மனிதர்கள், விலங்குகள், குழந்தைகள், பெண்கள்... என எல்லோருமே கல்லாக மாறி இருந்தனர். இன்னும் இத்தாலிய அவைகளை அருங்காட்சியகத்தில் அவைகளை வைக்கப்பட்டுள்ளன
அதன் பின்னர் நடந்த ஆய்வுகள் உரோமப் பேரரசு மிக உயர்வான நிலையிலிருந்த காலப்பகுதியில் மக்களின் வாழ்க்கை, பண்பாடுகள் எவ்வாறிருந்தன என்பது தொடர்பில் மிகக் கூடிய தகவல்களை அளித்துள்ளன.

மனிதர்கள் இறப்பிற்குப் பின் தங்கள் உடல்கள் அழியாமல் பாதுகாத்து வைத்திருந்தால் , மீண்டும் பிரிந்த உயிர் உடலுக்கு திரும்பும் என்ற நம்பிக்கையில் உடல் சிதையாமல் இருக்க, எகிப்து நாட்டில் அரசர்கள் முக்கிய பிரஜைகள் தங்களை மம்மிகளாக உருவாக்கினர்.

இப்படி மம்மிகளாக வடிவமைத்து,பாதுகாக்க சில இரசாயன தைலங்களும் எரிமலை சாம்பலும் தேவைப்பட்டன .
வடக்கு தான்சானியா நாட்டில் , “நெட்ரான் ஏரி” என்று அழைக்கப்படும் ஒரு ஏரி உள்ளது. அந்த ஏரியில் கால் வைக்கும் பறவைகள், விலங்குகள் என அனைத்தும் எல்லாம் கல்லாக மாறும். அந்த ஏரியின் தண்ணீரில் சில வேதியல் பொருட்களும் எரிமலையின் சாம்பலும் கரைந்துள்ளது என்பது கண்டுப் பிடிக்கப்பட்டுள்ளது (முந்தைய பதிவை பார்க்கவும்)
கற்கள் , இரும்பு போன்றவற்றிற்க்கு உயிர் இல்லை என்பது பொதுமக்களின் கருத்தாக இருப்பதால், தமது உடலையும் மரணத்திற்குப் பின் இரும்பாகவோ, கல்லாகவோ மாற்றிவிடலாம் என்று அதற்குரிய யுக்திகளை தேடி அலைகின்றனர்.
"உயிர் இல்லாதென நீங்கள் கருதுகிற கல்லாகவோ, இரும்பாகவோ நீங்கள் ஆகிவிடுங்கள். அப்படி நீங்கள் ஆனாலும் உங்களுக்கு மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படும் என்று குர்ஆன் கூறுகிறது.
قُلْ كُوْنُوْا حِجَارَةً اَوْ حَدِيْدًا
(நபியே!) நீர் கூறும்: “நீங்கள் கல்லாகவோ, இரும்பாகவோ ஆகுங்கள். (அல்குர்ஆன் : 17:50)
اَوْ خَلْقًا مِّمَّا يَكْبُرُ فِىْ صُدُوْرِكُمْ فَسَيَـقُوْلُوْنَ مَنْ يُّعِيْدُنَا قُلِ الَّذِىْ فَطَرَكُمْ اَوَّلَ مَرَّةٍ فَسَيُنْغِضُوْنَ اِلَيْكَ رُءُوْسَهُمْ وَيَقُوْلُوْنَ مَتٰى هُوَ قُلْ عَسٰٓى اَنْ يَّكُوْنَ قَرِيْبًا
“அல்லது மிகப் பெரிதென உங்கள் நெஞ்சங்களில் தோன்றும் வேறொரு படைப்பாய் ஆகுங்கள்;” (எப்படியானாலும் நீங்கள் நிச்சயமாக எழுப்பப்படுவீர்கள்).
“எங்களை எவன் (மறுமுறையும் உயிர் கொடுத்து) மீட்டுவான்?” என்று அவர்கள் கேட்பார்கள்.
“உங்களை எவன் முதலில் படைத்தானோ, அவன் தான்!” என்று (நபியே!) நீர் கூறும்;
அப்போது அவர்கள் தங்களுடைய சிரசுகளை உம் பக்கம் சாய்த்து, (பரிகாசமாக) அது எப்போது (நிகழும்)? என்று கேட்பார்கள்.
“அது வெகு சீக்கிரத்தில் ஏற்படலாம்” என்று கூறுவீராக! (அல்குர்ஆன்: 17:51)
பாம்பெய் , ஹெர்குலானியம் மக்களை கல்லாக இறைவனே மாற்றி, உடல் சிதையாமல் மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு உதாரணமாக இந்நிகழ்வுகளை அத்தாட்சியாக்கி உள்ளான் போலும் .
அடுத்து, எந்த நாட்டு மக்களை எங்கு எப்போது இரும்பாக இறைவன் மாற்றி இருக்கிறானோ என பயத்தோடு உலகின் நிகழ்வுகளை கவனம் செலுத்த வேண்டியதுள்ளது.
Rahmath Rajakumaran
யுனெஸ்கோ உலக பாரம்பரியக் களமான இது இப்போது ஆண்டுதோறும் கிட்டத்தட்ட இரண்டரை மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஒரு இத்தாலிய சுற்றுலாத் தலமாகக் காணப்படுகிறது.
யுனெசுக்கோ உலகப் பாரம்பரியக் களம் பொம்பெயி மாநகரமாக இருந்திருக்க வேண்டும் தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்
இலத்தீன் மொழியில் "பொம்பெயி" என்பது பலவும் எனப் பொருள் கொள்ளும். எனினும், “ஒசுக்கன் மொழியில் ஐந்து என்பதைக் குறிக்கும் பொம்பே என்பதிலிருந்தே இது தோன்றியிருக்கலாம். இச்சொல் பொம்பெயி நகரின் அமைவுக்கு அடிப்படையான ஐந்து சிறு கிராமங்கள் அல்லது அங்கு முதலில் குடியேறிய ஐந்து குடும்பங்கள் என்பதைக் குறிக்கலாம்.” என தியடோர் கிராவுசு குறிப்படுகிறார்.
தொல்லியல் ஆய்வுகள்
கி.பி 79-ல் வெசுவியஸ் மலையில் ஓர் எரிமலை சீற்றம் ஏற்பட்டது. அதில் வெளிப்பட்ட எரிமலைக் குழம்பில் பாம்பேய் நகரம் மூழ்கிப் போனது. அப்பகுதி இன்று அகழ்வாய்வாளர்களின் சொர்க்கமாக இருக்கிறது. டிசம்பர், 2020-இல் பொம்பெயி நகரத்தை அகழ்வாய்வு செய்த போது, 'ஃப்ரெஸ்கோஸ்' என்றழைக்கப்படும், ஈரமான சுண்ணாம்புக் கல் மீது வரையப்படும் ஒரு வகையான ஓவியங்கள் மற்றும் சுடுமண் பாத்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.மேலும் இந்நகத்தின் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியத்தில் காணப்படும் படங்கள் மூலம் இந்நகரத்தின் துரித உணவகத்தில் வழங்கப்பட்ட உணவுகளாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. பன்றி இறைச்சி, மீன், நத்தை, மாட்டிறைச்சி போன்ற இறைச்சிகள் பயன்படுத்தியதற்கான தடயங்கள் இந்த பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பாத்திரங்களில் காணப்படுகின்றன.
நவம்பர் 2020 மாத ஆய்வில் பாம்பேய் தொல்பொருள் ஆய்வில் எரிமலைச் சாம்பலில் கிடைத்த ரோமப் பேரரசின் ஆண்டான் - அடிமை உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.எரிமலைச் சாம்பலில் புதைந்து கிடக்கும் பாம்பேய் நகரத்தின் மூன்றில் ஒரு பகுதி, இன்னும் ஆராய்ச்சி செய்யப்படாமல் இருக்கிறது.
இத்தாலியில் பண்டைய ரோமப் பேரரசு கால நகரமான பாம்பேய்க்கு அருகில் ஒரு விழாக்கால தேரைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். நான்கு சக்கரங்களைக் கொண்ட இந்தத் தேர், பழங்கால குதிரை லாயத்துக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் குதிரை லாயத்தில் இருந்துதான் கடந்த 2018-ம் ஆண்டு மூன்று குதிரைகளின் எச்சங்களை வெளியே எடுத்தார்கள். பண்டைய பாம்பேய் நகரின் வடக்கு எல்லையில் உள்ள சிவிட்டா கைலியனா எனும் பழங்கால மாளிகையின் முற்றத்தில் இந்தத் தேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இயற்கையின் அதிசயங்கள் 7

(வெட்டவெளியில் காணாமல் போனவர்)



மொரிசியஸ் தீவில் யாரும் நம்ப முடியாத ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது.
1977 அக்டோபர் 17ஆம் நாள் ஜகதமுராரி என்னும் ஒரு விவசாயி மொரீஷியஸ் தீவின் புறநகர்ப் பகுதியில் வாழ்பவர். இவர் தன் பண்ணையை நோக்கி போய்க்கொண்டிருந்தார். இவர் வீட்டின் பக்கத்தில் குடியிருக்கும் ஜட்ஜ் வில்லியம்ஸன் என்பவர் இவரை ஒரு கப் டீ அருந்தி விட்டுப் போகும்படி அழைத்தார்.
ஜட்ஜின் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார் முராரி . ஜட்ஜும் , அவரது மனைவியும், கேர் , ஷப்னம் என்னும் பெயர் கொண்ட அவர் பிள்ளைகளும் முராரி நடந்து வருவதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். கொஞ்ச தூரம் நடந்து வந்த முராரி திடீரென்று மாயமாய் மறைந்து விட்டார்.
அவர் மறைவதற்கு அருகில் மரங்களோ புதர்களோ இல்லை. வெட்டவெளி. முராரி எங்கே போய்விட்டார் என்று உடனே எல்லோரும் ஓடிப்போய் பார்த்தார்கள். அவர் பூமிக்குள் புதைந்ததாகவும் தெரியவில்லை. இதுவரையில் அவர் எப்படி மறைந்தார் என்று யாருக்கும் புரியவில்லை.
அவர் உயிருடன் இந்த பிரபஞ்சவெளியில் இருக்கிறார். திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில் அவர் மனைவி தினமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். இறந்தவர்களுக்கான சடங்குகளைச் செய்ய மறுக்கிறார். கேட்டதற்கு, முராரி நிச்சயம் திரும்ப வருவார் என்கிறார்.
இது சாத்தியமா ? சாத்தியம் என்கிறது விஞ்ஞானம்.
" Through The Wormhole " - Morgan Freeman எழுதிய " புழுத்துளை வழியே " என்கிற புத்தகம் மிகவும் சுவாராசியமானது. மனித கற்பனைகளையெல்லாம் மீறிய சமாச்சாரங்கள் சரளமாக பேசப்படுகிறது .
புழுத்துளை இரண்டு இடங்களை இணைக்கும் ஒருவிதமான மாய பாலம் . அந்த இரண்டு இடங்களுக்கும் இடையே இருக்கும் தூரம், மனித மனதால் கற்பனையே செய்யமுடியாத ஒரு மிகப்பெரிய தூரமாகக் கூட இருக்கலாம். அல்லது அடுத்த பிரபஞ்சத்தைக் கூட தொடலாம். ஆனாலும் புழுத் துளை இருப்பது முற்றிலும் உண்மை .
இன்னும் சொல்லப்போனால்,ஸ்டீபன் ஹாக்கிங்கின் கருத்துப்படி தற்போது நம்மைச் சுற்றிலும் எக்கச்சக்கமான wormhole கள் என்னும் புழுத் துளைகள் இருந்து கொண்டே இருக்கின்றன என்கிறார் ஹாக்கிங். அப்படியென்றால் எளிதில் இதுபோன்று எங்கு வேண்டுமானாலும் செல்லலாமே ?
முடியாது . இங்குதான் பிரச்சனையே இருக்கிறது தற்போது இருக்கும் wormhole கள் அளவில் மிக மிகச் சிறியவை. எந்த அளவு என்றால், ஒரு சென்டிமீட்டரில், ட்ரில்லியனில் ட்ரில்லியனில் பில்லியன் பாக அளவே இவை இருக்கின்றன. இதை வைத்துக்கொண்டு எதுவுமே செய்யமுடியாது. இவ்வளவு சிறிய வஸ்துக்களுக்குள் எப்படி மனிதன் நுழைய முடியும்?
இவை எங்கே இருக்கின்றன? க்வாண்டம் மெகானிக்ஸில் " Quantum Foam " என்ற ஒரு பதம் உண்டு. அதாவது எந்தப் பொருளுக்குள்ளும் அடிப்படையாக இருக்கும் ஒரு துகள். சரி , இதனை எப்படி அளப்பது? மனிதர்களால் அளக்கக்கூடிய அளவைகளில் இதுவரை இருப்பதிலேயே மிகச் சிறிய அளவு ஒன்றை, Planck Length என்று அழைப்பார்கள். இதை எண்ணிக்கையில் சொல்லவேண்டும் என்றால், 0.00000000000000000000000000000000001 என்று அதனைக் குறிக்கலாம் (டெஸிமல் பாயிண்ட்டுக்குப் பின்னர் 34 ஸைஃபர்கள்). எனவே, இத்தனை சிறிய ஒரு வஸ்துவை நாம் wormhole ஆக உபயோகிக்க முடியாது. கூடவே, இவை உருவானவுடனே அழிந்துவிடுபவை.
இதனால்தான் – இப்படிப்பட்ட குழப்படிகள் நேரலாம் என்பதால்தான், காலப்பயணம் என்பது சாத்தியம் இல்லாத ஒன்று என்றும் விஞ்ஞானிகளால் சொல்லப்படுகிறது.
...ஆனால் மெஞ்ஞானத்தில் சாத்தியப்பட்டிருக்கிறது. அதாவது குவாண்டம் இயல் என்பது நுணுக்கத்திலும் நுணுக்கமான விஷயம் பற்றி விஞ்ஞானத்தால் இன்னும் முடியாவிட்டாலும் மெய்ஞ்ஞானம் அது பற்றி பேசுகிறது தெளிவாகப் பேசுகிறது.
ஜூனைதுல் பாக்தாதி (ரஹ்) அவர்களின் சீடர் ஈராக் தஜ்லா நதியில் சுபுஹ் தொழுகைக்கு பாங்கு கூறியதும் குளிக்கச் செல்கிறார் . ஆடையை கரையில் வைத்து விட்டு ஒரு முங்கு போட்டார் .அவ்வளவுதான் அவர் கண்டம் விட்டு கண்டம் தாண்டி வேறு ஒரு நாட்டில் உள்ள ஆற்றிலிருந்து வெளியேறுகிறார் . ரொம்ப காலமாக அங்கே வாழ்கிறார் . தொழுகிறார் .பல காலமாக நோன்பு நோற்கிறார் .

ஒருநாள் அங்கே யதார்த்தமாக குளிப்பதற்கு அங்குள்ள நதியில் ஒரு முங்கு போடுகிறார் அவ்வளவுதான் அவர் முன்பு குளித்த ஈராக் தஜ்லா நதியில் அதே நாளில் எழுகிறார் .அவர் கரையில் வைத்த துணி கூட அப்படியே இருந்தது. இன்னும் சுபுஹ் தொழகை கூட நடக்கவில்லை .உடனே குளித்து விட்டு தொழுகையில் கலந்து கொள்கிறார் .
இது பற்றி தன் ஷைகான ஜூனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்களிடம் கூறிய போது " சில சமயம் சாதகருக்கு கூட இப்படியான ஒரு அந்தஸ்து கிடைக்கிறது அதில் கொஞ்ச காலத்தில் பல காலம் வணங்கும் பாக்கியமும் வாய்ப்பும் கிடைக்கிறது .
இந்நிகழ்வு விஞ்ஞானத்தில் சாத்தியமாகிறதா ... என்றால் சாத்தியம்.
எங்கும் விரிந்த அண்டவெளியில் சதாசர்வ காலமும் வெற்றிடத்தில் அணுவுக்குள் அணுவின் நுண்துகள் தோன்றி மறைந்தபடி உள்ளன ஒன்றுமே இல்லாத சூன்யத்தில் இருந்து திடீரென்று ஒரு துகளும் அதன் எதிர் துகளும் ஒரே இடத்தில் தோன்றி ஒன்றுடன் ஒன்று கலந்து பின் ஒன்றை ஒன்று வெட்டிக் கொண்டும் ஒன்றுமே இல்லாத சமநிலையை அடைகிறது .இந்த சமநிலையில் "புழுத் துளை" (warmHole) ஏற்படுகிறது
பூமியில் குறுக்கு வழியில் பயணிப்பது போல் காலத்திலும் ஒரு குறுக்கு வழி உண்டு அதுதான் இந்த புழுத் துளை.
புழுத் துளை வழியாக இன்னொரு காலத்திற்குள் பிரவேசிக்கலாம் முன்பொரு காலத்தில் வாழ்ந்த மக்களோடு வாழலாம் . உங்களின் பாட்டனாரைக் கூட பார்க்கலாம் .
ஜூனைதுல் பாக்காத் சீடருக்கு இந்த புழுத்துளை வழியாக ஒரிரு நொடிப்பொழுதில் பயணத்திருக்கிறார் .மொரீஷியஸ் தீவின் முராரி ஒரு யுகப் பொழுது பயணிக்கிறரோ என்னவோ!
காலம் ஒரு மாய நதி. அது இரு கரைகள் இல்லாமல் கூட நகர்கிறது .சில சமயம் மண்ணிலிருந்து கிளம்பி விண்ணை நோக்கிக் கூட பாய்கிறது !

இயற்கையின் அதிசயங்கள் 8

சுழற்காற்று எனும் சூறாவளி



மேற்கிந்தியத்தீவுகளில் சூறாவளி (Hurricane) என்றும், ஐக்கிய அமெரிக்காவில் சுழன்றடிக்கும் சூறாவளி (Tornado) என்றும், ஜப்பான் சீன கடற்கரைப்பகுதிகளில் சூறாவளிப் புயல் (Typoon)என்றும், மேற்கு ஆஸ்திரேலியக் கடற்கரைப் பகுதிகளில் வில்லி வில்லி (Willy Willy) என்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் புயல் (Cyclone) எனப்படுகிறது.
சுழல் காற்று என்பது காற்றின் கொந்தளிப்பால் மேகத் துண்டுகளின் மீது மோதி சுழன்று வானத்திலிருந்து கீழே பூமிக்கு வருகிறது.
இடி மேகத்தின் அடிப்பாகத்தில் ஒரு முண்டு போல் உருவாகி கீழே இறங்கும் போது வளர்ந்து வடிகட்டும் புனல் வடிவை அடைகிறது.
ஆரம்பத்தில் இது தோன்றும் அறிகுறியிலிருந்து, இது சுழற் காற்றாக வளர்ச்சி அடைய மூன்று மணி நேரம் பிடிக்கிறதாம் மிக நுட்பமான கருவிகளைப் பயன்படுத்திபோது கூட ஒரு சுழல் காற்று உருவாவதற்கு 45 நொடிகளுக்கு முன்னதாக கூட கணிக்க முடிவதில்லையாம். இப்படி உருவான சுழல்காற்று தன் வால் பகுதியினால் நிலத்தை தொடும்போதுதான் அழிவை உண்டாக்குகிறது.
சாதாரணமாக ஒரு சுழல் காற்றின் இயல்பான குணம் அது சுழலும்போது எழுப்பும் உறுமல் ஒலியே ஆகும். 1000 சிங்கங்களின் கர்ஜனை போல் அதன் உறுமல் சப்தம் இருக்கும் என்கிறார்கள் அறிவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.
மனிதர்களால் செய்யப்படும் விளைவுகளால் செயற்கைச் சூழ்நிலையின் காரணமாகவும் சுழற்காற்றுகள் ஏற்படுவது உண்டு.1945 இல் இரண்டாவது உலகப்போரின் இறுதியில் அமெரிக்கா ஜப்பானில் ஹிரோஷிமா, நாகசாகி இடங்களில் அணுகுண்டு வெடித்தபோது, ஹிரோஷிமாவை ஒரு சுழல் காற்று பாதித்தது.
அணுகுண்டு வெடிப்புக்குப் பிறகு நகரங்களில் ஏற்பட்ட மிகுந்த வெப்பத்தால் அது உருவாகியது .அருகில் இருந்த நதியின் தண்ணீரை சுழற்காற்று மேலே தூக்கிக் கொண்டு சென்று அந்த உடனேயே நீராவியாக மாற்றி தண்ணீரை கீழே கொட்டி நெருப்பை அணைத்தது.


ஒரு சமயம் தில்லியில் சுழல்காற்று அடுத்த சமயம் ஒரு விஞ்ஞானி வழக்கத்திற்கு மாறாக அந்த இடத்தில் மிக அதிகமாக கதிர்வீச்சு இருப்பதை பதிவு செய்தார். இதற்குரிய காரணத்தை ஆய்வு செய்தபோது வானவெளிகளுக்கு அப்பால் அதிக

கதிர்வீச்சைப் பயன்படுத்தி பறக்கும், பறக்கும் தட்டின் மிக வேகமான நகர்வும் காரணமாகலாம் என்கிறார்.ஆக சுழற்காற்றுக்கும் அணுக்கதிர் வீச்சுக்கும் தொடர்பு இருக்கிறது
பம்பாயில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் டாக்டர் முக்கர்ஜி ஒரு நிகழ்ச்சியைக் கூறினார்.
"சுழல்காற்று ஓரிடத்தில் அடித்த சமயம். அதன் நகரும் பாதையிலிருந்து கடந்து போக இயலாததால் தரையில் படுத்துக் கிடந்த ஒருவரை அந்தச் சுழற்காற்று அவர் இருந்த இடத்திலிருந்து தரைக்கு மேலே தூக்கி வீசியதை நேருக்கு நேர் பார்த்ததாக கூறுகிறார் . பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த அவர் உண்மையில் சுழற்காற்றின் மையத்தை புனல் வடிவ அமைப்பின் கீழ் பாகத்தில் குறுகிய பகுதியில் வழியாக நேரில் பார்த்தாராம்.பலத்த காயங்களுடன் தப்பினர்.

அரபு பாலைவனத்தில் தென்மேற்கில் அர்ருப்உல் காலீ எனும் பகுதிக்கும் ஹலரமௌத் எனும் ஊருக்கும் மத்தியில் அமைந்துள்ள பகுதியைத்தான் மக்கள் "அஹ்காஃப் " என்று கூறுகின்றனர்.அம்மக்கள் ஆது சமுதாயத்தவர்கள் அவர்களுக்கு வந்த நபி ஹூது (அலை)
ஆது மக்கள் வாழ்ந்த பூமி மூன்று பாகங்களிலும் மலையால் சூழப்பட்டு இருந்தது. நான்காவது பாகத்தில், " நாங்கள் ஏழு லட்சம் பேர்களும் மலைபோன்று நின்று கொள்வோம். அதன் பின் காற்று வந்து, எங்கே நுழைந்து, எங்களை எப்படி அழிக்கப் போகிறது என்று எகத்தாளமாக அவர்களின் நபியாகிய ஹுூத் (அலை) அவர்களிடம் கூறினார்கள் ஆது மக்கள்.
அன்று ஷவ்வால் மாதத்தின் இறுதிப் புதனாக இருந்தது. மறு புதன் வரை காற்று 8 நாட்கள் தொடர்ந்து அடித்தது.
ஆது மக்கள் மீது வீசிய காற்று முதலில் மாட்டின் மூக்குத்துளை அளவிற்கு வெளிப்பட்டது . அப்பொழுது காற்றின் அதிபதியான வானவர் மீக்காயீல் (அலை) அவர்கள் இறைவனை நோக்கி," இந்த அளவு காற்று வீசினால் பூமி இடம் மாறிபின் முழுவதும் அழிந்து விடும் " .
எனவே காற்றை மோதிர வளைய அளவிற்கு வெளிப்படுமாறு இறைவன் பணித்தான். சில வரலாற்று ஆய்வாளர்கள் ஊசி துளை அளவு என்கிறார்கள்.
தெருவிலே சென்று கொண்டிருந்த கன்றுகாலிகளை வானிலே வெட்டுக்கிளியை போல் பறக்க விட்டு பின்னர் மலையில் மோதி கொன்றொழித்தது காற்று. தெருவிலே சென்ற ஆது மக்களையெல்லாம் வானில் பட்டம் போன்று பறக்க விட்டு சற்று பின் நிலத்தில் தூக்கியடித்து அழித்தொழித்தது காற்று .ஆது மக்கள் சுழற்காற்றால் அழிக்கப்பட்டதாக திருக்குர்ஆன் கூறுகிறது
அவர்கள் மீது, அதை ஏழு இரவுகளும், எட்டுப் பகல்களும் தொடர்ந்து வீசச் செய்தான்; எனவே அந்த சமூகத்தினரை, அடியுடன் சாய்ந்துவிட்ட ஈச்சமரங்களைப் போல் (பூமியில்) விழுந்து கிடப்பதை (அக்காலை நீர் இருந்திருந்தால்) பார்ப்பீர். (குர்ஆன் : 69:7)
சூறாவளியைப் பற்றி இன்பகரமானச் செய்தி,1940 ல் ஒரு சுழற்காற்றானது அடித்த வேகத்தில் பூமியின் அடியில் புதையுண்டிருந்த பணப்பெட்டியை வெளியில் தூக்கிக் கொண்டு வந்து, ருஷ்ய விவசாயின் மேல் வெள்ளி கோபக்குகளாக (ருஷ்ய நாணயங்களாக) பொழிந்தது.

இயற்கையின் அதிசயங்கள் 9

ஈர்ப்பு விசை



யானை முதல் பூனை வரை , நாம எல்லாரும் எப்படி நிலத்தில் நிலையாக நிற்கிறோம்? நடக்கிறோம்?
உலகம் உருண்டை. அது சுற்றிக்கொண்டிருப்பதாக இருந்தும் எப்படி நாம கீழே விழாமல் நிலையாக இருக்க முடிகிறது?
பூமியை விட்டு வெளியே பறந்து போய்விடாமல் எப்படியிருக்கிறோம்?
நிலா எப்படி பூமியைச் சரியாக 28 நாள்களில் சுற்றி வருகிறது? இது எல்லாவற்றுக்கும் ஒரே பதில் புவியீர்ப்பு விசை.

ஒரு பொருள் இன்னொரு பொருளை தன்னகத்தே தக்கவைக்க ஒரு சக்தியைப் பயன்படுத்தும். அதற்குப் பெயர்தான் விசை. ஒரு காந்தம் இரும்பு மேல் செலுத்தும் விசையைக் காந்த விசை என்று சொல்லுவோம். அதே இந்தப் பூமி அதன் மேலே இருக்கும் பொருள்கள் மேல் ஏற்படுத்தினால் அதற்குப் பெயர் புவிஈர்ப்பு விசை. அவ்வளவுதான்.
பூமிக்கு ஈர்ப்பு விசை இயற்கையிலேயே உள்ளது.எல்லா பொருட்களையும் தன்னை நோக்கி இழுக்கும். அதனால்தான் வானத்தை நோக்கிக் ஒரு பொருளைப் போட்டால்,அது பூமியில் விழுகிறது.
பூமியின் மேற்பரப்பில் கடல், ஏரி, குளங்கள் போன்ற பல நீர்நிலைகள் உள்ளன. அவை எதுவும் பூமியின் சுழற்சி வேகத்தில் சிதறி விடுவதில்லை. அவ்வாறு சிதற விடாமல் தடுப்பது இந்த புவியீர்ப்பு சக்திதான்.
பூமியின் ஈர்ப்பு சக்தி என்பது மிகவும் முக்கியமானது. அந்த ஈர்ப்பு சக்தியினால்தான் பூமியிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் எடை உண்டாகிறது.
இது உண்மையா ? பூமியின் ஈர்ப்பு சக்தி இல்லையென்றால், பொருள்களுக்கு எடை இருக்காதா என்ற ஐயப்பாடு எழலாம்.

உண்மைதான் ! பூமியின் ஈர்ப்பு சக்தியினாலேயே பொருள்களுக்கு எடை உண்டாகிறது. இந்த ஈர்ப்பு சக்தி பூமியின் ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் சென்று விட்டால் இருக்காது .வானத்தில் உயர்ந்து செல்ல செல்ல பொருளின் எடை குறைந்துவிடுகிறது. பூமிக்கு ஈர்ப்பு சக்தி இருப்பது போன்று சூரியனுக்கும் உள்ளது ஏனைய கிரகங்களுக்கும் உள்ளது அதனால் தான் வானவெளியில் ஒவ்வொரு கிரகங்களும் தத்தம் பாதையை விட்டு விலகாமல் ஒழுங்கான நிலையில் சூரியனைச் சுற்றி வருகின்றன.
اَلشَّمْسُ وَالْقَمَرُ بِحُسْبَانٍ
சூரியனும் சந்திரனும் (அவைகளுக்கு இறைவன் ஏற்படுத்திய) கணக்கின்படியே (செல்கின்றன). (அல்குர்ஆன் : 55:5)
இந்த ஈர்ப்பு சக்தி பூமியின் ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் சென்று விட்டால் இருக்காது .வானத்தில் உயர்ந்து செல்ல செல்ல பொருளின் எடை குறைந்துவிடுகிறது என்பது உண்மை. ஆனால் மஹஷர் வெளியில் மீஸான் தராசில் நன்மை,தீமை எடை போட அங்கே ஈர்ப்பு விசை கண்டிப்பாக இருக்கும்.
நன்மை தீமைகள் நிறுக்கப்படும்போது,சிலருக்கு இரண்டும் சமமாக இருக்கும் . காசை சுண்டி பூவா ? தலையா ? போட்டு பார்க்கும் போது காசு பூவையும் காட்டாமல் , தலையையும் காட்டாமல் நெட்டுக்கு நின்றால் எதை எடுத்துக் கொள்வது ?
இந்த மாதிரி நிலை மீஸானில் எடை போடும் போது , தராசின் முனைமுள் எந்தப் பக்கமும் சாயாமல் நட்ட நடுவில் நின்று விடும் .
அப்போது அவர்கள் தம்தம் நன்மை தட்டுக் கனப்பதற்காக ஒரேயொரு நன்மை இல்லாமல் தயங்குவார்கள் .
அல்லாஹுதஆலா அந்த ஒவ்வொருவரையும் பார்த்து...,
"ஜனங்களிடத்தில் போய் ஒரே ஒரு நன்மையைக் கேட்டு வாங்கு, அதைக் கொண்டு நான் உன்னை சுவர்க்கம் நுழைய செய்கிறேன் "
உடனே அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் போய்க் கேட்பார்கள்.
" ஒரே ஒரு நன்மை! .ஒரே ஒரு நன்மை !"
அப்போது எல்லோரும், "ஒரு சிறு நன்மையானாலும் அது எங்களுக்கு வேண்டியது . ஆகையால் தரமாட்டோம்" என்று சொல்லி விடுவார்கள் . பின்பு அங்கே ஒருவன் ஒரே ஒரு நன்மையைக் கேட்டு அலைபவர்களை பார்த்து , அவர்களில் ஒருவரைக் கூப்பிட்டு ...,
" என் பட்டோவையில் நான் செய்ததாக ஒரே நன்மைதான் உண்டு. அதைக் கொண்டு நான் என்ன சுவர்க்கமா செல்ல முடியும் ? ஆகையால் அதை ஹதியாவாக உனக்கு கொடுத்து விடுகிறேன் . எடுத்துக் கொள் .நீயாவது சுவர்க்கம் செல் "
உடனே அதைப் பெற்றுக் கொண்டு மீஸான் பக்கம் திரும்பி ஓடோடி வருவார் அவரிடம் அல்லாஹு தஆலா , " உனக்கு ஒரே ஒரு நன்மையை ஹதியாவாகக் கொடுத்தவனை அழைத்து வா " என்று கூறுவான் .
அவன் வந்ததும் ..,   அந்த ஒரே ஒரு நன்மையைக் கொடுத்தவனிடம் அல்லாஹு தஆலா : " என்னுடைய கொடை உன்னுடைய கொடையைப் பார்க்கிலும் மஹா பெரியது என்பதை நீயும் அறிந்து கொள்ள, ஒரே ஒரு நன்மையைக் கொடுத்த நீயும், அதை ஹதியாவாகப் பெற்ற பெற்ற அவனும் சுவர்க்கத்திற்குள் நுழையுங்கள் "

இயற்கையின் அதிசயங்கள் 10
(உலகின் அதிசய நீரூற்று - ஜம் ஜம்)



ஜம் ஜம் நீர் பசியைப் போக்கும்; நோயைக் குணப்படுத்தும்; பிரார்த்தனையை நிறைவேற்றும்!
மக்காவில் தெளிவான அத்தாட்சிகள் உள்ளன என்று இவ்வசனம் (3:97) கூறுகிறது.
இப்ராஹீம் நபி அவர்கள் தமது மனைவி ஹாஜர் அவர்களையும், மகன் இஸ்மாயீலையும் மக்கள் குடியிருக்காத வெட்ட வெளியில் இறைவனின் கட்டளைப்படி குடியமர்த்தினார்கள். குழந்தை இஸ்மாயீல் தண்ணீரின்றி தத்தளித்தபோது வானவர் ஜிப்ரீல் வந்து அந்த இடத்தில் அடித்து ஒரு நீரூற்றை ஏற்படுத்தினார். அது தான் ஜம்ஜம் எனும் கிணறாகும். அந்த இடம் தான் பின்னர் ஊராக வளர்ந்த மக்கா நகராகும்.
இந்தக் கிணறு மாபெரும் அற்புதமாகவும், இஸ்லாம் உண்மை மார்க்கம் என்பதை நிரூபிக்கும் சான்றாகவும் இருக்கிறது.
இந்தக் கிணறு 18 அடி அகலமும், 14 அடி நீளமும் கொண்டதாகும்.இந்தக் கிணற்றில் தண்ணீரின் ஆழம் எப்போதும் சுமார் ஐந்து அடியாகும்.
இந்தக் கிணற்றில் இருந்து ஒவ்வொரு விநாடியும் தண்ணீர் இறைக்கப்பட்டுக் கொண்டே உள்ளது. வருடத்தின் எல்லா நாட்களிலும் மக்கள் அங்கே குழுமுகிறார்கள். ஹஜ் காலத்திலும், ரமளான் மாதத்திலும் தினமும் சுமார் 30 லட்சம் மக்கள் அங்கே குழுமுகிறார்கள். அனைவருக்கும் இந்தக் கிணற்றில் இருந்து தான் குடிநீர் வினியோகிக்கப்படுகிறது
ஜம் ஜம் தண்ணீரின் வரலாறு நபி இஸ்மாயீல் (அலை) பிறந்த காலத்திலிருந்து தொடங்குகிறது. ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தோன்றி இன்று வரை சுரந்துகொண்டிருக்கும் ஊற்று அது. முதன்முதலாக அது பூமியில் பீறிட்டு வெளியாகி ஓடத் தொடங்கியபோது, இஸ்மாயீலின் தாய் ஹாஜர் (அலை) அவர்கள் ‘ஜம் ஜம்’ என்று சொல்லிக்கொண்டே அதை ஓட விடாமல் பாத்திக் கட்டித் தடுத்தார்கள். ஜம் ஜம் என்றால், 'நில் நில்' எனப் பொருள். அதுவே இதன் பெயராக ஆகிவிட்டது. பெருக்கெடுத்துச் சுரக்கும் அந்த ஊற்று நீரைத் தமது கைகளால் தடுத்து அணை கட்டினார் ஹாஜர். அது பின்னர் ஒரு கிணறாக மாறியது. இன்றும் அந்தக் கிணற்றிலிருந்து தொடர்ச்சியாக இயந்திரங்கள் மூலம் நீர் எடுக்கப்படுகிறது. லட்சக்கணக்கான மக்கள் அதைக் கேன்களில் எடுத்துக்கொண்டு உலகம் முழுதும் செல்கிறார்கள். கோடிக்கணக்கான மக்கள் அதைப் புனிதமாகப் பருகி இறையருளைத் தேடுகிறார்கள்.
ஹாஜர் (அலை) அந்த ஊற்றுக்குப் பாத்தி கட்டியபோது `மக்கா' எனும் நகரமே உருவாகி இருக்கவில்லை. மரம் செடிகொடிகளோ மனிதர்களோ இல்லாத பொட்டல் வெளிப் பாலைவனம் அது. பூமியின் முதல் இறையில்லமான கஃபா ஒரு மேடு போல் அங்கிருந்தது. அதற்கு அருகில்தான் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது மனைவி ஹாஜரையும் கைக்குழந்தை இஸ்மாயீலையும் இறைக்கட்டளைப்படி தன்னந்தனியே விட்டுச் சென்றார்கள்.
அவர் போன பிறகு கைவசம் இருந்த உணவும் தண்ணீரும் தீர்ந்துவிட்ட ஒரு சமயத்தில் குழந்தை அழுகின்றது. ஹாஜர் (அலை) தமக்கு அருகில் இருந்த ஸஃபா, மர்வா ஆகிய இரண்டு மலைக் குன்றுகள் மீதும் ஏறி இறங்கி, எங்காவது தண்ணீர் தென்படுகிறதா என்று தவிக்கிறார்கள். அந்தக் குன்றுக்கும் இந்தக் குன்றுக்குமாக ஏழு தடவை ஏறி இறங்கிவிட்டார்கள்.

குழந்தை இஸ்மாயீல் (அலை) அவர்கள் பசியில் துடித்தபடி கால்களை உதைத்துக்கொண்டு பாலைவன மணலில் கிடந்த அந்தத் தருணத்தில்தான் அவர்களின் கால்களுக்கு அடியிலிருந்து ஊற்றுப் பிறந்தது. இறை உதவி வந்துவிட்டது.
ஹாஜர் (அலை) அதைக் கண்டு மகிழ்ந்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியபடி அந்த ஊற்றை நோக்கி ஜம் ஜம் (நில் நில்) என்றவாறு பாத்தி கட்டினார்கள்.
`ஹாஜர் அப்போது அதைத் தடுத்து பாத்திக் கட்டாமல் விட்டிருந்தால், இந்த ஊற்று மறுமைநாள் வரை உலகம் முழுவதும் ஓடக்கூடிய ஆறாக ஆகியிருக்கும்’ என்று ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது. (ஸஹீஹுல் புகாரீ)
இந்தத் தண்ணீரின் சிறப்புகளை நபிமொழிகளில் அதிகம் காண முடிகிறது. மற்ற நீரெல்லாம் தாகம் தீர்ப்பதற்கே பயன்படும். ஆனால், ஜம் ஜம் பசியைப் போக்கும்; நோயைக் குணப்படுத்தும்; பிரார்த்தனை ஏற்கப்படக் காரணமாக அமையும்.
நபிகளார் (ஸல்) கூறினார்கள்: இந்தத் தண்ணீர் அருள் வளம் (பரக்கத்) நிரம்பியதாகவும் உணவாகவும் நோய்களுக்கு நிவாரணமாகவும் இருக்கின்றது.
அபூதர் (ரலி), ஸஹீஹ் முஸ்லிம் 6513, தயாலிஸி 459)
மற்றோர் அறிவிப்பில், ‘பூமியில் உள்ள எல்லா நீரை விடவும் இந்த நீர் சிறந்தது’ என்றும் கூறப்பட்டுள்ளது.
இப்னு அப்பாஸ் (ரலி), தப்ரானீ 11167, அஸ்ஸஹீஹா 1056)
நபித்தோழர் அபூதர் கிஃபாரீ (ரலி) கூறுகிறார்:

நான் மாதத்தின் முப்பது நாள்களும் ஜம் ஜம் நீரைத்தான் அருந்துவேன். நான் இந்த நீரைத் தவிர வேறு உணவு எதையும் உட்கொள்ள மாட்டேன். அதனால் நான் மிகவும் குண்டாகிவிட்டேன். என் வயிற்றில் சதை வைத்துவிட்டது. அதனால் என் வயிற்றில் பசியே உணராமலிருந்தேன்). (ஸஹீஹ் முஸ்லிம் 6513)
இதைப் பருகும்போது செய்யப்படும் பிரார்த்தனை ஏற்கப்படும் என்பதைப் பின்வரும் நபி மொழி உணர்த்துகிறது.
அதாவது, நீங்கள் அதனை நிவாரணத்துக்காகப் பருகினால் நிவாரணத்தைப் பெறுவீர்கள். நீங்கள் அதனை அல்லாஹ்விடமிருந்து பாதுகாவல் தேடுவதற்காகப் பருகினால், அல்லாஹ்விடமிருந்து பாதுகாவல் பெறுவீர்கள். நீங்கள் அதைத் தாகத்துக்காகப் பருகினால் தாகம் தீர்க்கப்படுவீர்கள்.
இப்னு அப்பாஸ் (ரலி), முஸ்தத்ரக் ஹாகிம் 473/1, லயீஃபு இப்னுமாஜா 4972)
நபியவர்கள் தோல் பைகளில் ஜம் ஜம் நீரை எடுத்துச்சென்று, அதை நோயாளிகளுக்கு அருந்தக் கொடுப்பவர்களாக, அந்த நோயாளிகள் மீது ஊற்றுபவர்களாக இருந்தார்கள்.
உர்வா இப்னுல் சுபைர் (ரலி), பைஹகீ 9768, அஸ்ஸஹீஹா 883)
இவ்வாறே அன்னை ஆயிஷாவும் இந்த நீரை எடுத்துச் செல்பவராக இருந்தார். அவரிடம் இது குறித்துக் கேட்கப்பட்டபோது, 'நபியவர்களும் இவ்வாறே எடுத்துச் செல்பவர்களாக இருந்தார்கள்' என்று கூறினார்.
(ஜாமிவுத் திர்மிதீ 963)

நபியவர்கள் இந்த நீரை மிகவும் விரும்புவார்கள். மதீனாவில் இருந்தபோது இந்த நீரைக் கேட்டு மக்காவுக்கு ஆள் அனுப்புவது அவர்களின் வழக்கம்.
சுஹைல் இப்னு அம்ருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார்கள், 'எனது இந்தக் கடிதம் உமக்கு இரவில் கிடைத்துவிட்டால், நீ பகல்பொழுதை அடைவதற்குள் ஜம் ஜம் நீரை அனுப்பிவிட வேண்டும். கடிதம் பகலில் கிடைத்தால், மாலைப்பொழுதை அடைவதற்குள் நீரை அனுப்பிவிட வேண்டும். தாமதம் செய்துவிடாதே' என்று குறிப்பிடுகிறார்.
சுஹைல் இரண்டு தண்ணீர்ப் பைகள் நிறைய நீரை நிரப்பி அவற்றை ஓர் ஒட்டகத்தில் வைத்து அனுப்பி வைத்தார். (பைஹகீ 202/5)
மேற்கண்ட ஹதீஸ்களிலிருந்து இந்த நீர் நோய்களுக்கு நிவாரணமாகக் கொடுக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளலாம். இந்த நீரை எந்த நோக்கத்துக்காக ஒருவர் குடிப்பாரோ அந்த நோக்கம் அவருக்கு நிறைவேறும்.
இந்த நீரின் சிறப்பு அதன் இடத்தோடு தொடர்புடையதல்ல. அதன் நீருக்கே உரியதாகும். இதனால்தான் நல்லோர்கள் ஹஜ்ஜிலிருந்து திரும்பும்போது நபியவர்களைப் பின்பற்றி இந்த நீரைத் தங்கள் ஊர்களுக்குக் கொண்டு செல்கிறார்கள்.
இந்த விஷயங்களுக்கு மட்டுமின்றி நோய்களுக்குக் குறிப்பான மருந்தாகவும் இந்த நீர் புகட்டப்படுகிறது. உதாரணமாக, நபியவர்கள் காய்ச்சலுக்கு மருந்தாக நீரைப் புகட்டியிருக்கிறார்கள்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'காய்ச்சல் நரகத்தின் மூச்சுக் காற்றாகும். எனவே, அதனைத் தண்ணீராலோ ஜம் ஜம் நீராலோ குளிர்ச்சியாக்குங்கள்'.
இப்னு அப்பாஸ் (ரலி), ஸஹீஹுல் புகாரீ 3261
ஜம் ஜம் நீரை அவர்மீது தெளிக்க வேண்டும், அல்லது அவரது ஆடையில் தெளித்துச் சிகிச்சை செய்ய வேண்டும்.
அஸ்மா பின்த் அபூபக்கர் (ரலி.) அவர்களிடம் காய்ச்சல் கண்ட பெண்மணி யாரேனும் கொண்டுவரப்பட்டால், அவருக்காகப் பிரார்த்தனை செய்வார். தண்ணீரை எடுத்து அப்பெண்ணின் ஆடையிலும் உடலிலும் ஊற்றுவார். அவர் கூறுவார், 'நபியவர்கள் தண்ணீர் மூலம் காய்ச்சலைக் குளிர்ச்சியடையச் செய்யுமாறு எங்களை ஏவினார்கள்'
(ஸஹீஹுல் புகாரீ 5724, ஸஹீஹ் முஸ்லிம் 2211) என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே இதன் மகத்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

இயற்கையின் அதிசயங்கள் 11

மாயத் தோற்றம்.



வெயில் காலங்களில் கானல் நீரை அடிக்கடி பார்த்திருப்பீர்கள். கானல் நீர் என்பது, நம் கண்கள் செய்யும் பிழையா, கற்பனை செய்யும் பிழையா என்றால் இரண்டுமில்லை. கானல் நீருக்குக் காரணம் இயற்பியல் நடத்தும் இயற்கையின் மாய விளையாட்டுதான்.
இந்தக் கானல் நீர் எப்படித் தோன்றுகிறது?

பொதுவாகப் பாலைவனங்களில் மட்டும்தான் கானல் நீர் தோன்றுவதாக நாம் நினைக்கிறோம். அப்படியல்ல; சூரியனின் வெப்பம் தகிக்கும் எல்லா இடங்களிலும் இந்தக் கானல் நீர் தோன்றும்.
வெப்பம் மிகுந்த தார்ச்சாலைகளில்கூடத் தண்ணீர் பரவி ஓடுவது போன்ற காட்சியை நீங்கள் பார்த்திருக்கலாம்.
தார்ச்சாலையில் ஏதோ தண்ணீர் லாரி தண்ணீரைக் கொட்டிச் சென்றிருக்கலாம் என்றுகூட நாம் நினைத்திருப்போம். அருகில் சென்று பார்க்கும்போதுதான் தெரியும், அத்தனையும் மாயம் என்று.
நல்ல மதிய வெயில் நேரத்தில் தார்ச்சாலையில் நடந்து செல்லும்போதும், வாகனங்களில் செல்லும்போதும்கூடத் தண்ணீர் ஓடுகிற (பொய்) தோற்றத்தைப் பார்க்க முடியும்.
சரி, இயற்கை நம்மை எப்படி இப்படி ஏமாற்றுகிறது?
தரையை ஒட்டிய பகுதியில் அழுத்தம் குறைவான காற்று அடுக்கும், இந்த அழுத்தம் குறைவான காற்று அடுக்கிற்கு மேலே அதிக அழுத்தமுள்ள காற்று அடுக்கும் உருவாகும்போது மணல் தரையானது கண்ணாடி மாதிரியான தன்மையைப் பெற்று விடுகிறது.
அதாவது அழுத்தம் குறைவான காற்றடுக்கின் மீது அதிக அழுத்தம் உள்ள காற்று அடுக்கு வரும்போது, இந்தக் கானல் நீர், தெரிகிறது. நாம் தரையைப் பார்க்கிற கோணமும், கானல் நீர் தோற்றத்திற்கு முக்கிய பங்கு வகிக்கிறது.
இப்படியும் சொல்லலாம், பொருட்களிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் தரையில் பட்டு வளை கோணத்திலேயே எதிரொளிக்கின்றன. நாம் பார்க்கிற கோணம் செங்குத்தாகவோ, நேர்க்கோட்டுக் கோணமாகவோ இருந்தால், கானல் நீர் தோன்றுகிறது.
தார்ச்சாலைகளில் கானல் நீர் காணப்படுவதற்கும், வெப்பமும், கோணமும்தான் காரணம். தார்ச்சாலைகள் கறுப்பாக இருப்பதால் அதிகமாகச் சூடாகின்றன. கறுப்பான பொருட்கள் அதிக வெப்பத்தை ஈர்க்கும் என்பது தெரிந்த விஷயம்தான்.
தார்ச்சாலைகளில் மேற்பரப்பில் அதிக வெப்பம் உருவாகிக் காற்றின் எடை குறைகிறது. இந்தக் குறைவான காற்று அடுக்கின் மேல் சற்றுக் கூடுதலான அழுத்தம் கொண்ட காற்று அடுக்கு உருவாகிறது. எனவே கானல் நீர் தோன்றுவதற்கான காற்றடுக்கு சூழல் தார்ச்சாலைகளில் அடிக்கடி உருவாகிவிடுகிறது.
மிக முக்கியமான விளக்கம் ஒன்று இங்கு தேவைப்படுகிறது.
கானல் நீர் தோன்றுவதற்குத் தரையை ஒட்டிய அடியடுக்கில் அழுத்தம் குறைந்த, எடை குறைந்த காற்று இருக்கிறது. இந்த அடுக்கிற்கு மேல்தான் எடை அதிகமான அழுத்தம் அதிகமான காற்று அடுக்கு இருக்கிறது. இது ஆச்சரியமான விஷயம்.
எடை அதிகமான காற்று எப்படி எடை குறைந்த காற்றுக்கு மேலே இருக்க முடியும்? நல்ல கேள்வி! முக்கியமான கேள்வி! காற்று இயங்கிக்கொண்டே இருக்கிறது. அடர்த்தி அதிகமாக இருக்கும் காற்று சூடாக்கப்பட்டு மேலே செல்வது என்பது தொடர்ச்சியாக, சுழற்சியாக நடந்துகொண்டே இருக்கிறது. எனவே பாலைவன மணல் மேற்பரப்பில், தார்ச்சாலைகளின் மேற்பரப்பில், கீழ் அடுக்கில் அடர்த்தி குறைவான காற்று குறைந்த அளவில் இருந்துகொண்டே இருக்கும்.
இப்போது புரிகிறதா? அதிகமான வெப்பம், காற்று அடுக்கில் ஏற்படுத்தும் அழுத்த மாறுபாடு, நாம் தரையைப் பார்க்கிற கோணம் ஆகியவைதான் கானல் நீருக்குக் காரணம்.
இது பற்றி குர்ஆனில் அல்லாஹ் ...
"செயல்களில் நஷ்டமடைந்தோரைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று கேட்பீராக!
இவ்வுலக வாழ்க்கையில் அவர்களின் முயற்சி வீணாகி விட்டது. அவர்களோ தாங்கள் அழகிய செயல் புரிவதாக நினைக்கின்றனர். அல்குர்ஆன் (18:103, 104)
இவர்கள் செய்கின்ற இந்த வணக்கங்களை கானல் நீர் என்று கீழ்கண்ட வசனம் கூறுகின்றது. இந்தக் கானல் நீரை தண்ணீராகக் காண்பவர்கள் மாபெரும் நஷ்டவாளிகள்!
وَالَّذِيْنَ كَفَرُوْۤا اَعْمَالُهُمْ كَسَرَابٍ بِقِيْعَةٍ يَّحْسَبُهُ الظَّمْاٰنُ مَآءً حَتّٰٓى اِذَا جَآءَهٗ لَمْ يَجِدْهُ شَيْـًٔـــا وَّ وَجَدَ اللّٰهَ عِنْدَهٗ فَوَفّٰٮهُ حِسَابَهٗ وَاللّٰهُ سَرِيْعُ الْحِسَابِ ۙ
அன்றியும், எவர்கள் இறை மறுப்பவராக இருக்கிறார்களோ, அவர்களுடைய செயல்கள் பாலைவனத்தில் (தோற்றமளிக்கும்) கானல் நீரைப் போலாகும்;
தாகித்தவன் அதைத் தண்ணீரென்றே எண்ணுகிறான் - (எது வரையெனில்) அதற்கு (அருகில்) அவன் வரும்பொழுது ஒரு பொருளையும் (அங்கே) காணமாட்டானே (அது வரை);
ஆனால், அங்கு அவன் அல்லாஹ் (அவனுக்கு விதித்திருக்கும் முடி)வை(யே) காண்கின்றான்; (அதன் படி அல்லாஹ்

இயற்கையின் அதிசயங்கள் 12

தவறாது சுழலும் பூமி



இந்த பூமி உருண்டை வடிவமானது. இது தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது; அதனால் ஏற்படுவதே இரவும் பகலும் .
ஒரு சமயம் சூரிய ஒளி ஒருபக்கமாக விழும் அந்த பகுதி வெளிச்சமாக இருக்கும் அதையே பகல் என்கிறோம்.
அதே சமயம் பூமியின் மறு பக்கத்தில் சூரிய ஒளி விழாது அதனால் அப்பக்கத்தில் இருட்டாக இருக்கும். அதையே இரவு என்கிறோம்.
இவ்வாறு உருண்டையாக இருப்பதால், ஒரு பக்கம் பகலாகும் மறுபக்கம் இரவாகும் இருக்கிறது.அத்துடன் பூமி தன்னைத்தானே சுழற்றி வருவதால் ஒளிபடும் பகுதியும் ஒளிப்படாத பகுதியும் மாறிமாறி ஏற்படுகிறது. இதனால் ஒரே நாளில் பகலும் இரவும் மாறி மாறி ஏற்படுகிறது.
நமது பூமியிலிருந்து சூரியனைப் பார்க்கும்போது, சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைகிறது போன்று தோன்றும். ஆனால் உண்மையில் சூரியன் நகரவில்லை. பூமிதான் மேற்கிலிருந்து கிழக்காக சுழன்று வருகிறது. இவ்வாறு சுழலும்போது பூமியின் ஒவ்வொரு பகுதியும் வெளிச்சத்திற்கு வருவதும், இருளுக்குச் செல்வதுமான அதிசயம் நிகழ்கிறது.
பூமியின் சுழற்சியின் தன்மையால் இன்னும் பல அதிசயங்களும் நிகழ்கின்றன.
பூமி நேராக இல்லை. அதன் அச்சில் 23.5 டிகிரிக்கு சாய்ந்த நிலையிலேயே சூரியனைச் சுற்றி வருகிறது.
இவ்வாறு சாய்ந்து இருப்பதால், பூமியின் வட துருவம் சூரியனை நோக்கிச் சாய்ந்திருக்கும். இதே நிலை ஆறு மாதங்கள் நீடிக்கும். அதாவது ஜூன் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை இருக்கும்.இந்த ஆறு மாதங்களிலும் பூமியில் வட துருவ பகுதியில் கோடை காலமாக இருக்கும்.
அப்பகுதியில் சூரியன் மறைவதே இல்லை. அந்த ஆறு மாதங்களும் பகலாகவே இருக்கும். இரவைக் காண முடியாது.
அதேசமயம் வட துருவத்திற்கு எதிரான தென்துருவம் சூரியனுக்கு எதிர்புறம் மறைந்திருக்கும். அப்பகுதியில் மேற்கூறிய ஆறு மாதங்கள் வரை இரவாகவே இருக்கும். குளிர்காலமாக இருக்கும்.ப கலைக் காண முடியாது.
அடுத்து டிசம்பர் முதல் மே மாதம் வரைக்குமான ஆறு மாதங்கள் தென் துருவம் சூரிய நோக்கியும், வடதுருவம் எதிர் பருவத்திலும் மாறியிருக்கும்.
அச்சமயம் தென்துருவம் கோடை காலமாக பகல் பொழுதாகவே இருக்கும். வடதுருவம் அதற்கு நேர்மாறாக இரவாகவே இருக்கும்.
பூமிக்கு இப்படியொரு நீண்ட பொழுதுகளை இறைவன் கியாமத் நாளின் போது ஏற்படுத்துவான் என்பதாக நபி மொழியும் கூறுகிறது .இதையே குர்ஆனில் ,
قُلْ اَرَءَيْتُمْ اِنْ جَعَلَ اللّٰهُ عَلَيْكُمُ النَّهَارَ سَرْمَدًا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ مَنْ اِلٰـهٌ غَيْرُ اللّٰهِ يَاْتِيْكُمْ بِلَيْلٍ تَسْكُنُوْنَ فِيْهِ اَفَلَا تُبْصِرُوْنَ
(பின்னும் நபியே!) நீங்கள் கேளுங்கள்: "பகலை இறுதி நாள் வரையில் உங்களுக்கு நீண்டிருக்கும்படி அல்லாஹ் செய்துவிட்டால், நீங்கள் இளைப்பாறக் கூடிய இரவை உங்களுக்குக் கொண்டு வரக்கூடிய இறைவன் அல்லாஹ்வையன்றி வேறொருவன் இருக்கின்றானா?" (இதனை) நீங்கள் (படிப்பினை பெறும் கண் கொண்டு) பார்க்க வேண்டாமா? (அல்குர்ஆன்: 28:72)
وَمِنْ رَّحْمَتِهٖ جَعَلَ لَـكُمُ الَّيْلَ وَالنَّهَارَ لِتَسْكُنُوْا فِيْهِ وَلِتَبْتَغُوْا مِنْ فَضْلِهٖ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ
(அவ்வாறின்றி) நீங்கள் இளைப்பாறுவதற்கு இரவையும் (பல இடங்களுக்குச் சென்று வாழ்க்கைக்குத் தேவையான) அவனுடைய அருளை நீங்கள் தேடிக்கொள்ளும் பொருட்டுப் பகலையும் உங்களுக்கு அவன் உற்பத்தி செய்திருப்பதற்கு அவன் கிருபைதான் காரணம். இதற்கு நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவீர்களாக! (அல்குர்ஆன்: 28:73)
வடதுருவம், தென்துருவம் தவிர பூமியின் இதர இடங்களில் கூட பகலும் இரவும் சம அளவில் இருப்பதில்லை. பூமியின் பூமத்திய ரேகை பகுதியில் மட்டுமே இரவும் பகலும் சமமாக இருக்கும்.
ஆனால் ஒவ்வோர் ஆண்டிலும் மார்ச் 21, செப்டம்பர் 21 ஆகிய நாட்களில் மட்டும் இரவும் பகலும் சம அளவில் இருக்கும்.
இயற்கையின் இந்த கால அளவை கணக்கிட்டுதான் வருடத்தில் ஒரு நாள் சூரிய ஒளியை ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள கட்டிடத்தில் விழும்படி செய்ய முடியுகிறது .அப்படி செய்யப்பட்டதுதான் கன்னியாகுமரியிலுள்ள மகாத்மா காந்தியின் மண்டபத்தின் அபூர்வ ஒளி

கன்னியகுமரியில் மகாத்மா காந்தியின் மண்டபம் 12 பிப்ரவரி 1948 ம் ஆண்டு மகாத்மா காந்தியின் அஸ்தி கடலில் கரைப்பதற்கு முன் வைக்கப்பட்டிருந்த இடத்தில் கட்டப்பட்டது ஆகும். இது ஒரிசா மாநில கட்டிடக்கலையைச் சார்ந்து கட்டப்பட்டது ஆகும்.
இந்த மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள துளை வழியாக காந்தியின் பிறந்த தினமான அக்டோபர் 2 அன்று அவரது அஸ்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் சூரிய கதிர்கள் விழுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தின் மத்திய கோபுரமானது காந்தி இறந்த போது அவருடைய வயதை குறிக்கும் வகையில் 79 அடியில் அமைக்கப்பட்டுள்ளது.
இது ஒன்று போதாதா பூமி நொடிப்பொழுதும் தவறாது சுழன்று கொண்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம்
وَسَخَّرَ لَكُمُ الشَّمْسَ وَالْقَمَرَ دَآئِبَيْنِ وَسَخَّرَ لَكُمُ الَّيْلَ وَالنَّهَارَ
(தவறாது) ஒழுங்காக நடைபெற்று வருமாறு சூரியனையும் சந்திரனையும் உங்களுக்குப் பயனளிக்கக் கூடிய விதத்தில் (படைத்து) அமைத்தான். (மாறி மாறி) வரக்கூடிய இரவு பகலையும் உங்களுக்காக (அமைத்து அதில்) பயனடைய வகை செய்தான். (அல்குர்ஆன்: 14:33)

இயற்கையின் அதிசயங்கள் 13

நீரூற்றுகள்



நாம் பல இடங்களில் நீர்வீழ்ச்சிகளைக் கண்டுள்ளோம். செங்குத்தான உயரமான பகுதியிலிருந்து மழைநீர் திரண்டுவிடும் இதையே அருவி என்றும் கூறுவர். இத்தகைய அருவிகள் பெரும்பாலும் மலைப்பகுதிகளில்தான் இருக்கும்.
நீர்வீழ்ச்சியில் மேலிருந்து நீர் திரண்டு விழுகிறது. இதற்கு மாறாக நிலத்திலிருந்து நீர் ஊற்றாக வெளியேறுவதும் உண்டு. இதையே கிணறு மற்றும் ஊற்றுநீர் ஆகும். இந்த நீர் குளிர்ச்சியாக இருக்கும்.
ஆனால் நிலத்திலிருந்து சூடான நீர் வெளியேறுவதை சில இடங்களில் காணமுடிகிறது. இதையே வெந்நீர் ஊற்று என்பர். இத்தகைய வெந்நீர் ஊற்றில் உலகப் புகழ்பெற்றது அமெரிக்காவில் வயோமிங் என்னும் பகுதியில் எல்லோஸ்டோன் தேசிய பூங்காவில் உள்ளது. இந்த வெந்நீர் ஊற்றுக்கு ஓல்டு பெய்த் புல் (old Faithful geyser) வெந்நீர் ஊற்றாகும் .
இந்த வெந்நீர் ஊற்று சுமார் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை 106 முதல் 185 அடி உயரத்திற்கு பீச்சுகிறது. ஐந்து நிமிடம் பீச்சியதும் அடங்கிவிடும். மீண்டும் ஒரு மணி நேரம் கழித்துதான் நீர் பீச்சும். இந்த வெப்ப நீர் ஊற்று 129 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் உள்ளது. ஒரு நாளைக்கு 3700 முதல் 4000 கேலன்கள் நீர் பீச்சப்படுகிறது .
அதே தேசிய பூங்காவில் இன்னொரு இடத்திலும் பொங்கும் நீரூற்று உள்ளது .இருந்தாலும் இது ஓல்ட் பெய்த் புல் நீரூற்றைப் போல் இடைவிடாது பொங்குவதில்லை. மூன்று வாரங்களுக்கு ஒரு முறை மட்டுமே பொங்குகிறது. இருந்தாலும் பொங்கும் வேகம் பிரமிக்கத்தக்க வகையில் உள்ளது. அது 240 அடி உயரத்திற்கு மேலே எழும்புகிறது.
அமெரிக்காவில் மட்டும் தான் இந்த அதிசய வெந்நீர் ஊற்றா ? இல்லை . பூமியில் சில இடங்களில் இயற்கையாகவே நீரூற்றுகளை காணலாம். அவற்றில் சில இடங்களில் மட்டும் ஊற்றுநீர் கொதித்துக் கொண்டிருக்கும்.
இத்தகைய வெந்நீர் ஊற்றுகளில் எரிமலைகள் அதிகமுள்ள பகுதிகளில் காணலாம். அமெரிக்காவை தவிர ஜப்பான், ஐஸ்லாந்து, நியூசிலாந்து , இத்தாலி ஆகிய இடங்களிலும் உள்ளன. நீருற்றுகளைப் பற்றி குர்ஆனில் ...
நபி மூஸா (அலை) அவர்களின் சமூகத்தினரான இஸ்ரவேலர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு வழிப்பட மறுத்ததனால், ' தீஹ் ' என்ற இடத்தை நாற்பது ஆண்டுகள் சுற்றவைத்து அவர்களைத் தண்டித்தான்.
இத்தண்டனைக் காலத்தில் நீர்த் தட்டுப்பாடு அவர்களுக்கு ஏற்பட்டது. நபியவர்களிடம் சென்று முறையிட்டனர். தங்களிடமுள்ள கைத் தடியால் பாறையைத் தட்டினார்கள். அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுக்கள் ஒலித்தோடின.
அப்போது இஸ்ரவேலர்கள் மத்தியில் பன்னிரண்டு கோத்திரத்தினர் காணப்பட்டனர். ஒவ்வொருவரும் ஒரு நீர் நிலையை தனதாக்கிக் கொண்டனர். இந் நிகழ்வை திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.
“மூஸா தம் கூட்டத்தவருக்கு நீர் புகட்டத் தேடிய போது நாம் (அவரிடம்) நீர் உம்முடைய (கைத்) தடியால் இக்கல்லில் அடிப்பீராக! “எனக் கூறினோம். (அவரடித்தார்) உடனே அதிலிருந்து 12 ஊற்றுக்கள் ஒலித்தோடின. ஒவ்வொரு கூட்டத்தினரும் தாங்கள், அருந்தும் (நீர்த்) துறையை அறிந்து கொண்டனர். (அல்குர்ஆன் - 02 :60)
"வாதி அர்பையின் " என்று அறியப்படும் இந்த பள்ளத்தாக்கில் இந்த கல்லில்தான் மூஸா (அலை) அவர்கள் அடித்தார்கள். அந்த ஊற்றுக்களில் நீர் வடிந்த அடையாளங்கள் இன்றும் காணலாம்
இந்தியாவில் இமயமலையிலுள்ள பத்திரிநாத் ஆலயம் அருகிலும் வெந்நீர் ஊற்றுகள் உள்ளது.

இந்த அதிசயத் தக்க வெந்நீர் ஊற்று ஏற்படுவதற்கு பூமியே காரணமாகிறது என்கிறது விஞ்ஞானம் .பூமியின் உட்பாகம் வெப்பம் மிகுந்திருக்கும். அதனால் அவ்விடத்தில் உள்ள பாறைகள் கூட உருகி குழம்பாகவே இருக்கும்.
எரிமலைகள் அதிகமுள்ள இடங்களில் இப்பாறைக் குழம்பு தலைக்குக் கீழே மிக அருகில் இருக்கும்.
அவ்விடங்களில் அதன் மேற்புறத்தில் சேரும் தண்ணீர் கொதித்து ஆவியாகும் .அவ்வாறு வெளியேறும் ஆவியின் அழுத்தத்தினால் அங்கு இருக்கக்கூடிய துளை அல்லது வெடிப்பின் வழியாக நிலத்திற்கு மேல் நீர் பீறிட்டு வரும்.
அங்கு நீர் உள்ளவரை வரும் . அதன்பின் நின்று விடும் மீண்டும் நீர் சேர்ந்ததும் பீரிட்டு வரும்.
நீர் வீழ்ச்சியில் நீராடுவது போன்று குளிர்ந்த நீரூற்றிலும் நீராடுவர். இந்த நீரூற்று நீரில் சமையல் செய்வதும் உண்டு. .
பூமியிலிருந்து வெளிவரும் இந்நீர் ஊற்றுகளில் தாது உப்புகள் கலந்து உள்ளன. பல நோய்களை குணமாக்க இது பயன்படும்.
ஐயூப் (அலை , அவர்கள் நோய்வாய்ப்பட்டு படுத்திருக்கும்போது, ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களின் கையை பிடித்து தூக்கி, " அல்லாஹ்வின் உத்திரவை கொண்டு எழுந்து நில்லும் " என்று கூறினார்.

أُرْكُضْ بِرِجْلِكَ هٰذَا مُغْتَسَلٌ بَارِدٌ وَّشَرَابٌ
“உம்முடைய காலால் (பூமியைத்) தட்டும்” (அவ்வாறு தட்டவே ஒரு நீரூற்றுப் பொங்கி வந்ததும்) “இதோ குளிர்ச்சியான குளிக்குமிடமும், பானமும் (உமக்கு) இருக்கின்றன” (என்று சொன்னோம்). (அல்குர்ஆன் :38:42)
அவ்விதமே அவர்கள் எழுந்து நின்றனர் பின்னர் அவர்களை நோக்கி, " உம்முடைய வலக்காலை மண்ணிலே அடியும் "என்று கூறினார் .அவ்விதமே அவர்கள் அடித்தனர். அவர்களின் காலில் கீழிருந்து ஒரு வெந்நீர் ஊற்று தோன்றியது. அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்களை நோக்கி, " இதோ நீர் குளிப்பதற்கான நீர் இதில் குளித்து தூய்மை பெறும் "என்ற இறைச்செய்தியை கூறினர்.
அவ்விதமே நபியவர்கள் அதிலே குளித்தார்கள். அதன்பின் 40 அடி நடந்து சென்றதும், "உம்முடைய இடது காலை மண்ணில் அடியும்!" என்று கூறினார் ஜிப்ரீல் (அலை) அவர்கள்.
அவ்விதமே நபியவர்களும் அடிக்க, அவர்களின் காலின் கீழிருந்து குளிர் நீரூற்று கிளம்பியது. அந்த தண்ணீரை கையினால் அள்ளி தம் வயிறு நிரம்ப அருந்தினார்கள்.
என்ன வியப்பு ! அல்லாஹ்வின் பேரருளால் நபியவர்களின் உடல் உள்ளும் புறமும் புடம்போட்ட பொன்போல் பொலிற்று விளங்கியது.
சிரியாவில் உர்துன் மாநிலத்தில் நாபா என்னும் ஊருக்கு அருகில் இந்த நீரூற்றுகள் உள்ளது என்றும், அதன் அருகில் ஐயூப் அவர்களின் பள்ளியும் உள்ளது என்றும் மஸ்வூதி கூறுகிறார் .
"அய்னே ஐயூப்" என்ற பெயருடன் அந்த நீர் சுனைகள் இன்னும் இருப்பதாக இஸ்லாமிய கலைக்களஞ்சியம் கூறுகிறது. அதில் நோயாளர்கள் வந்து குளித்து நோய் நீங்க பெறுவதாக ரௌஸதுஸ் ஸபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயற்கையின் அதிசயங்கள் 14
வானவில்லின் வர்ணங்கள்



وَمَا ذَرَاَ لَـكُمْ فِى الْاَرْضِ مُخْتَلِفًا اَلْوَانُهٗ اِنَّ فِىْ ذٰ لِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّذَّكَّرُوْنَ
இன்னும், பூமியில் அவன் படைத்திருப்பன பல விதமான நிறங்களையுடைய (செடி கொடிகள், பிராணிகள், பறவைகள், போன்ற)வையுமாகும்; நிச்சயமாக இதில் (அல்லாஹ்வின் அருள் கொடைகளை நன்றியுடன்) நினைவு கூறும் மக்களுக்கு(த் தக்க) அத்தாட்சியுள்ளது. (அல்குர்ஆன் : 16:13)
தன் படைப்புகளுக்கு பலதரப்பட்ட வர்ணங்களை கொடுத்திருந்தாலும் அதிலும் சிறப்புக்குரியது வானவில்லாகும் .
மழைத் துளிகளின் உள்ளே சூரிய ஒளிக்கதிர்கள் ஊடுருவிச் செல்லும்போது வானவில் தோன்றுகிறது. வானவில்லில், ஊதா (Violet), கருநீலம் (Indigo), நீலம் (Blue), பச்சை (Green), மஞ்சள் (Yellow), ஆரஞ்சு (Orange), சிவப்பு (Red) ஆகிய ஏழு நிறங்கள் உள்ளன.
இதை நினைவில் வைத்துக் கொள்ளச் சுருக்கமாக 'விப்ஜியார்' (VIBGYOR) என்கிறோம்.
வானவில்லில் ஏழு நிறங்கள் உள்ளன என்பதைக் கண்டுபிடித்தவர் ஐசக் நியூட்டன் (Isaac Newton).
அடிப்படை நிறங்கள் ஏழு என விஞ்ஞானம் கூறுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அல்குர்ஆன் இதனை சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளது.

அரபு மொழியில் நிறத்தைக்கு குறிக்க “லவ்ன்” என்ற பதமும் அதன் பன்மை வடித்தில் நிறங்கள் என்பதைக் குறிக்க “அல்வான்” என்றும் பயன்படுத்தப்படுகின்றது. அல்குர்ஆனில் நிறங்கள் “அல்வான்” என மொத்தமாக ஏழு தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
வானவில் எப்போதும் ஏழு நிறங்களோடுதான் தோன்றும் என்பதில்லை. காலை, மாலை வேளைகளில் தோன்றும் வானவில்லில் மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு நிறங்கள் மட்டுமே தோன்றும். ஊதா, கருநீலம், நீலம், பச்சை ஆகிய நிறங்கள் தோன்றாது.

பன்னிரண்டு வெவ்வேறு வகையிலான வானவில்கள் இருப்பதாக சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
ஃபிரான்ஸ் நாட்டு வானிலை ஆய்வு மையத்தைச் (நேஷனல் மீடியோரோலாஜிகல் ரிசர்ச் சென்டர் - National Meteorological Research Center) சேர்ந்த 'ஜீயான் ரிகார்' (Jean Ricard) என்ற வளி மண்டல அறிவியலாளர் (Atmospheric Scientist) இதைக் கண்டுபிடித்து இருக்கிறார்.
வானவில்லில் நிறங்கள் தெளிவாகத் தெரிவது மழைத் துளிகளின் அளவைப் பொறுத்தது. அதன் நிறங்களை நிர்ணயிப்பதில் பெரும்பங்கு வகிப்பது தொடுவானத்துக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தூரம்தான்.
சூரியன் தொடுவானத்துக்கு மிகவும் அருகில் இருக்கும்போது தோன்றும் வானவில்லில் சிவப்பு நிறம் மட்டுமே காணப்படும். தொடுவானத்திலிருந்து சூரியன் சற்று மேலே, எழுபது டிகிரி கோணத்தில் இருக்கும்போது தோன்றும் வானவில்லில் சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள் ஆகிய மூன்று நிறங்களும் தோன்றுகின்றன.

சில நேரம் வானவில்லின் அருகிலேயே சற்று மங்கிய நிலையில் இன்னொரு வானவில் இருக்கும்.
ஒளியானது மழைதுளியினுள் நுழைந்து வெளியேறும் முன்பு இரண்டு முறை பிரதிபலிப்படையும் போது இரட்டை வான வில்லானது உண்டாகிறது.
மங்கிய நிலையில் தெரியும் இரண்டாவது வானவில்லின் நிறங்கள், பளிச்சென்று தெரியும் வானவில்லின், நிறவரிசையின் தலைகீழ் வரிசையாக இருக்கும்.
இரண்டாவதாக உருவாகிய வானவில்லில் ஊதா நிறம் வெளியேயும், சிவப்பு நிறம் உட்புறமும் இருக்கிறது. அதாவது தண்ணீரில் நம்மை நாமே பார்ப்பதுபோல.
வானவில் அரை வட்டமல்ல. முழுவட்டம்தான். அரைவட்டமாக இருப்பதே இவ்வளவு பெரிதாகத் தெரிகிறதே, முழுவட்ட மென்றால் எவ்வளவு பெரிதாக இருக்கும் என்று எண்ணுகிறீர்களா? அதைப்பார்த்தால் தெரிந்துவிடுகிறது. அவ்வளவுதான்.
வானவில்லை முழுவட்டமாகப் பார்க்க முடியுமா?
நிச்சயமாக முடியும். வானவில் தோன்றுகிற சூழலில், விமானத்தில் பயணம் செய்தபடியே பார்த்தால், வானவில் பெரி...ய்ய முழுவட்டமாகத் தெரியும்.
ஒருவர் பார்க்கும் வானவில்லும் அருகில் இருப்பவர் பார்க்கும் வானவில்லும் வேறு வேறானவை என்பது உங்களுக்குத் தெரியுமா ?
ஏனெனில் ஒவ்வொரு மழைத்துளியும் சூரிய ஒளியைச் சிதறச் செய்து வானவில்லை உண்டாக்கக் கூடியவை.
எனவே நாம் பார்க்கும் மழைத்துளியால் சிதறடிக்கப்பட்ட வானவில் வேறு. அருகில் இருப்பவர் பார்க்கும் மழைத்துளியால் சிறதறடிக்கப்பட்ட வானவில் வேறு. ஆக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வானவில்.
" நான் பார்த்த வானவில்லை நீ பார்க்கவில்லை.
நீ பார்த்த வானவில்லை நான் பார்க்கவில்லை "
சூரியன் அடிவானில் இருந்து மழைத்துளி காற்றில் இருந்தால் வானில் உயரத்தில் வானவில் தோன்றும். சூரியன் உயரத்தில் இருந்து மழைத்துளி காற்றில் இருக்கும்போது வானவில் அடிவானில் தோன்றும்.
நம்மால் வானவில்லை தொட முடியாது. ஏனெனில் அது பிரதி பிம்பம். ஆகவே அதனைக் காணத்தான் முடியும்.

வெப்பமண்டலங்களில் நீர்நிலைகளின் அருகில் வானவில்லை அடிக்கடிக் காணலாம்.
சூரிய குடும்பத்தில் புவியில் மட்டுமே வானவில்லானது தோன்றுகிறது. ஹவாய் தீவுகளே உலகில் அதிக வானவில் தோன்றும் இடமாகும்.
பொதுவாக வண்ணங்களைப் பற்றி...
நபியவர்கள் வெள்ளை நிறத்தை அதிகம் விரும்பினார்கள், கருப்பு நிறத்தையும் காவி நிறத்தையும் தவிர்ந்துகொள்ளுமாறு கூறினார்கள்.
விஞ்ஞானம் அடிப்படையில் 7 நிறங்கள் உள்ளதாகக் கூறுகிறது. அல்குர்ஆன் நிறம் என்ற வார்த்தையை 7 இடங்களில் பயன்படுத்தியுள்ளது.

சுவனம் பசுமையானது என்று கூறும் இஸ்லாம் அதன் நிறமான பச்சை நிறம் அல்குர்ஆனில் 8 இடங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. நபியவர்கள் சுவனத்தின் வாயில்கள் 8 என்றும் கூறியுள்ளார்கள்.
அதேபோன்று கருப்பு நிறம் அல்குர்ஆனில் 7 இடங்களில் வந்துள்ளது. நரகின் நிறமும் கருப்பு என்பதாக நபியவர்கள் கூறினார்கள். அதன் வாயில்களின் எண்ணிக்கையும் 7 என்று அல்குர்ஆன் கூறுகின்றது.
மஞ்சள் நிறம் 5 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அல்குர்ஆனில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள நிறம் வெள்ளையாகும்.
صِبْغَةَ اللّٰهِ ‌ وَمَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ صِبْغَةً وَّنَحْنُ لَهٗ عٰبِدُوْنَ
“(இதுவே) அல்லாஹ்வின் வர்ணம் (ஞான ஸ்னானம்) ஆகும்; வர்ணம் கொடுப்பதில் அல்லாஹ்வைவிட அழகானவன் யார்? அவனையே நாங்கள் வணங்குகிறோம்” (எனக் கூறுவீர்களாக). (அல்குர்ஆன் : 2:138)

இயற்கையின் அதிசயங்கள் 15

பூகம்பம்



உலகில் முதல் முறையாக 'பூமராங் பூகம்பம்' என்ற புதிய நிகழ்வை கடலுக்கடியில் விஞ்ஞானிகள் நிலநடுக்க அளவைமானி தரவு மூலம் கண்டுப்பிடித்து அதிர்ச்சி அடைந்துள்ளனர்.
2016-ம் ஆண்டு அட்லாண்டிக் கடலில் மேற்கு ஆப்பிரிக்காவின் லைபீரியா பகுதிக்கு அருகே கடலின் அடி தரையில் அதிசய பூகம்பம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 7.2 ஆக இருந்தது.
இந்த பூகம்பத்தின் விசேடங்களை தென் அமெரிக்க மற்றும் ஆப்ரிக்க டெக்டானிக் பிளேட்களை ஆராய்ந்த போது முதலில் நிலநடுக்க அதிர்வலை வடகிழக்கு நோக்கி விரைவுகதியில் சென்றது, ஆனால் திடீரென திரும்பிய பூகம்ப அதிர்வலை எங்கு உருவானதோ அதே இடத்துக்கு அதே வேகத்தில் வந்தது தெரியவந்துள்ளது.

வெளியேறிய அலை மீண்டும் எந்த ஒரு புற தாக்கமும் இன்றி தான் தோன்றிய இடத்துக்கே திரும்பியதால் இதற்கு 'பூமராங் பூகம்பம்' என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.
அதிர்வலை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு வேகமாகச் செல்லும் போதே பயங்கர சேதங்களை ஏற்படுத்தும் இந்நிலையில் உருவான இடத்திலிருந்து ஒரு திசை நோக்கிச் செல்லும் அதிர்வலை மீண்டும் உருவான இடத்துக்கே திரும்பும் பூமராங் பூகம்பம் நிலப்பகுதியை ஒட்டி உருவானால் கற்பனைக்கு எட்டாத சேதங்களை ஏற்படுத்தும் என்று விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்தனர்.
பொதுவாக பூகம்பங்களில் ஆற்றல் வெளிப்பாட்டு அதிர்வலை நாம் பேப்பரை குறுக்காக நறுக்குவது போல் ஒரேதிசையில்தான் செல்லும், ஆனால் இந்த பூகம்பத்தினால் உருவான தூசி மண்டலம் நேராக பயணித்து பிறகு உருவான இடத்திற்கே மீண்டும் வந்தது. இது பூமராங் பூகம்பம். இது அடிக்கடி ஏற்படுமா அல்லது அரிதான நிகழ்வா என்பதெல்லாம் ஆராயப்பட்டு வருகின்றன.
நியூயார்க்கிலிருந்து லண்டன் செல்லும் தூரத்தை இந்த அதிர்வலை வேகம் 18.5 நிமிடங்களில் கடக்கக் கூடிய வேகம் கொண்டது என்கின்றனர் விஞ்ஞானிகள்.
ஏற்கெனவே கூம்பு வடிவத்தில் செல்லும் அதியாற்றல் அதிர்வலைகளால்தான் மேற்பரப்புகளில் அனைத்தும் தூக்கிப் போடப்பட்டு கடும் சேதம் ஏற்படுகிறது, இதில் போன வழியே அதே பாணியில் அது திரும்பி வந்தால் என்ன ஆகும் என்று விஞ்ஞானிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.
இது குறித்த ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பூகம்பங்கள் ஒவ்வொன்றும் மிகவும் சிக்கலானவை என்பது வழக்கம்தானே தவிர அரிதானது அல்ல என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.
இமாலயத்தில் ரிக்டர் அளவுகோலுக்கும் எட்டாத பூகம்பங்கள் நிகழ்வது போல் இதுவும் ஒரு புது நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.

பூகம்பம் ஏற்படுவதற்குரிய ஆயிரம் காரணங்களை விஞ்ஞானிகள் சொன்னாலும் இறைவன் சொல்லும் காரணம் இதோ :
ஹழ்ரத் ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மத்யனைச் சார்ந்தவர்கள். இவர்களது வமிசவழி நபி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது இரண்டாவது தலைமுறையோடு தொடர்பு கொண்டது.
'மத்யன்' என்பது ஒரு நகரின் பெயராகும். மத்யன் இப்னு இப்றாஹிம் என்பவரால் இது நிர்ணயிக்கப்பட்டது. மத்யன் என்ற சமுதாயத்தினரை நேர்வழிப்படுத்த அல்லாஹ் ஹழ்ரத் ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நியமனம் செய்தான்.
'ஐக்கா' என்பது ஒரு காட்டின் பெயராகும். இதில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களைச் சார்ந்தவர்களாக ஹழ்ரத் ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இருந்தார்கள்.
மத்யன்வாசிகள் அனைவரும் இறைமறுப்பாளர்களாக இருந்தார்கள். அளவையிலும், நிறுவையிலும் மோசடி செய்பவர்களாகவே இவர்கள் இருந்தனர். வீதிகளில் அமர்ந்து கொண்டு சாமான்களை வாங்க வருபவர்களை இடைமறித்து ஹழ்ரத் சுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்திக்க வேண்டாம் என்றும் அவர்களது உபதேசங்களுக்குச் செவிமடுக்க வேண்டாமென்றும் கூறி வந்தனர்.
ஹழ்ரத் சுஐபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அந்த மக்களுக்கு விக்கிரக ஆதாதனை செய்ய வேண்டாமென்றும், அளவையிலும், நிறுவையிலும் மோசடி செய்ய வேண்டாம் என்றும் தடுத்துக் கூறி, தாம் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்த நபியென்றும், தம் பேரில் விசுவாசம் கொண்டு அல்லாஹ்வை மட்டும் வணங்கி வரவேண்டும் என்றும் போதித்து வந்தார்கள்.

ஆனால் அந்த மக்களோ இவர்களது பேச்சுக்கோ, போதனைக்கோ செவி சாய்க்காது இவர்களைக் கேலி செய்ததோடு, இவர்களையும் இவர்களை பின்பற்றுபவர்களையும் ஊரை விட்டு வெளியேற்றப் போவதாகவும் பயமுறுத்தினார்கள்.


ஆனால் நபி அவர்கள் கொஞ்சம் கூட அஞ்சாது, பகல் முழுவதும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை எடுத்துரைப்பதிலும் பாவச் செயல்களை விட்டு விலகுமாறு வேண்டுவதையும், இரவில் அவர்கள் வணக்கங்களில் ஈடுபடுவதிலும் தங்களுடைய நேரங்களை செலவழித்தார்கள்.
அந்த மக்கள் ஷுஐப் நபி அவர்களின் வணக்க முறைகளை கேலி செய்து எங்கள் மூதாதையர்கள் செய்து வந்த வணக்கவழிபாடுகளை நாங்கள் விட்டுவிடுவோம் என்று நினைத்து விடாதீர்கள் என்றனர்.
நபியவர்கள் எவ்வளவோ நல்லுபதேசங்கள் செய்தும் அவர்கள் திருந்துவதாக தெரியவில்லை. நபியவர்களின் முயற்சிகள் பயனற்றுப் போய்விட்டன.
ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முன்தோன்றி, 'இந்த மக்கள் திருந்த மாட்டார்கள்.எனவே இவர்களை அழித்துவிட அல்லாஹ் முடிவு செய்து விட்டான். ஆகவே தாங்கள் தங்கள் மீது விசுவாசம் கொண்ட முஸ்லிம்களையும், தங்களின் உபதேசத்திற்குக் கட்டுப்பட்ட உற்றர் உறவினர்களையும் அழைத்துக் கொண்டு இந்த ஊரை விட்டு வெளியேறி விடுங்கள்.நாளை விடிவதற்கு முன்னதாகவே அல்லாஹ்வின் வேதனை இவ்வூரார் மீது இறங்கி இவர்கள் அனைவரும் அழிந்து போய் விடுவார்கள்' என்று கூறினார்கள்.


உடனே ஹழ்ரத் சுஐபு அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அவர்களைச் சார்ந்தோரும் ஊரை விட்டு வெளியேறினார்கள்.
பொழுது இன்னும் சரியாகப் புலரவில்லை. அந்த ஊர்வாசிகள் தத்தம் படுக்கைகளை விட்டுக்கூட எழுந்திருக்கவில்லை.
அவர்கள் நித்திரையில் இருக்கக் கூடிய நிலையிலேயே ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அந்த ஊருக்கு நேர் மேலாக ஆகாயத்திலிருந்தவாறு ஒரு பயங்கரமான குரல் எழுப்பினார்கள்.
அவ்வளவுதான். அந்த ஊர் இருந்த பகுதியின் பூமியில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. இடியோசை போன்று இருந்த அந்த ஓசையின் அதிர்ச்சியின் காரணமாக அந்த ஊர் மக்கள் அனைவருமே மடிந்து போனார்கள்.
இரவில் தூங்கிய அவர்களில் யாருமே காலையில் எழுந்திருக்கவில்லை. மத்யன் வாசிகளின் நிலை இறுதியில் இப்படிப் பரிதாபமான முடிவைக் கண்டது. இதைப் பற்றி அல்லாஹ் தனது திருமறையில்:

وَلَمَّا جَآءَ اَمْرُنَا نَجَّيْنَا شُعَيْبًا وَّالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ بِرَحْمَةٍ مِّنَّا وَاَخَذَتِ الَّذِيْنَ ظَلَمُوا الصَّيْحَةُ فَاَصْبَحُوْا فِىْ دِيَارِهِمْ جٰثِمِيْنَۙ
(தண்டனைக்குரிய) நம் கட்டளை வந்த போது, ஷுஐபையும் அவருடன் ஈமான் கொண்டவர்களையும் நமது ரஹ்மத்தை கொண்டு நாம் காப்பாற்றினோம்; அநியாயம் செய்தவர்களை (பேரிடியின்) முழக்கம் பிடித்துக் கொண்டது; அவர்கள் தம் வீடுகளில் இருந்தவாறே காலையில் (இறந்து) கிடந்தனர். (அல்குர்ஆன்: 11:94)
كَاَنْ لَّمْ يَغْنَوْا فِيْهَا اَلَا بُعْدًا لِّمَدْيَنَ كَمَا بَعِدَتْ ثَمُوْدُ
அவ்வீடுகளில் அவர்கள் (ஒரு காலத்திலும்) வாழ்ந்திராதவர்கள் போல் ஆகிவிட்டனர். தெரிந்து கொள்ளுங்கள்: ஸமூது (கூட்டத்தார் சாபக்கேட்டினால்) நாசமானது போன்று, மத்யனுக்கும் நாசம்தான்!
(அல்குர்ஆன்: 11:95)

இயற்கையின் அதிசயங்கள் 16

(த்ரீ கோர்ஜஸ் அணையும், அல் அரிம் அணையும்)





பூமி சுற்றும் வேகத்தைக் குறைக்கும் உலகின் மிகப்பெரிய சீனா அணை .
உலகின் மிகப்பெரிய அணையான சீனாவின் த்ரீ கோர்ஜஸ் அணை வெள்ளத்தால் உடைந்து மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த அணையின் நீளம் 2.2 கி.மீ. உயரம் 185 மீ. இந்த அணையின் கொள்ளளவு 39.3 கன கி.மீ. 2,250 கோடி டாலர் செலவில் 17 ஆண்டுகள் 40,000த்திற்கும் மேற்பட்டோர் பணி செய்து இந்த அணையைக் கட்டி முடிந்தனர்.
இப்போது இந்த அணையால் பல நகரங்கள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சீனாவில் கடந்த ஒரு மாதமாக கனமழை பெய்து வருவதால் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.
த்ரீ கோர்ஜஸ் அணையில் வழக்கமான நீர்மட்ட அளவை விட பல மடங்கு நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் அணைக்கு வரும் நீர் அப்படியே திறக்கப்பட்டுள்ளது. எனினும் அணை உடையும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளதால் பல லட்சக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.
இந்த அணையைப் பற்றிய இன்னொரு தகவல் வியப்பளிக்கக் கூடியது. த்ரீ கோர்ஜஸ் அணை கட்டப்பட்டதால் ஒரே இடத்தில் மிக அதிகமான அளவு தண்ணீர் தேங்குவதால் பூமியின் வேகம் 0.06 மில்லி செகண்ட் குறைந்தது என நாசா உள்ளிட்ட விஞ்ஞானிகளின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
ஒரு பொருள் நிலையாகவோ, இயக்கத்திலோ இருக்கும்போது அதன் நிலையை மாற்றும்படி விசையைச் செலுத்தினால், அந்த விசையை அப்பொருள் எதிர்க்கும். இது இயற்பியலில் நேரியல் மந்தநிலை (Linear Inertia) எனப்படுகிறது.

பொருட்களின் சடத்துவ திருப்புத் திறனைப் பொறுத்து (Moment of Inertia) இயங்கும் வேகம் மாறுபடும். புவி சுழலும்போது புவிப் பெருந்திரள் (Mass) அச்சுக்கு அருகில் சுழலும்போது வேகமாகவும், புவிப் பெருந்திரள் அச்சை விட்டு தள்ளிச் சுழலும்போது மெதுவாகவும் சுழலும்.
மிகப்பெரியதான த்ரீ கோர்ஜஸ் அணையில் நிறைந்துள்ள நீரின் நிறை 40 லட்சம் கோடி கிலோகிராம் என்பதாலும், இந்த அணை கடல் மட்டத்திலிருந்து 181 மீட்டர் உயரத்தில் இருப்பதாலும் பூமியின் Moment of Inertia அதிகமாகி புவி சுழலும் வேகம் 0.06 மில்லி செகண்ட் குறைவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
பூமியின் நிறையோடு ஒப்பிடுகையில் இந்த அணை நீரின் நிறை மிகக் குறைவானது என்பதால் இதனால் பெரிய மாறுதல் எதுவும் நிகழ்வதில்லை. பல்வேறு காரணிகளால் புவி சுழலும் வேகம் மாறுபாடுகளைச் சந்திக்கும் என்பதால் இதனால் பாதிப்பு எதுவுமில்லை எனவும் சீன விஞ்ஞானிகளால் விளக்கப்பட்டுள்ளது.
திருக்குர்ஆனிலும் ஓர் அணைக்கட்டு உடைந்து போனது பற்றிய உண்மை வரலாற்றை கூறுகிறது .
ஏமன் நாட்டின் தலைநகரான ஸன்யாவில் இருந்து 55 மைல் வடகிழக்கில் "ஸபா " என்னும் நகர் உள்ளது . இங்கு அரசாட்சி செய்த அரசர்களில் சிலர் ஏக தெய்வக் கொள்கை உடையவர்களும், சிலர் இணை வைத்து வணங்குபவர்களும் இருந்தனர் .
இந்த ஸபா நகரில்தான் சூரத்து நம்லில் கூறப்படும் பல்கீஸ் அரசி வாழ்ந்த ஊர். ஞாபகமிருக்கா ?

மழைத் தண்ணீரை தேக்குவதற்காக உறுதியான அணைக்கட்டு ஒன்றை இவர்களில் ஆட்சி செய்த ஓர் அரசர் கட்டினார் . இது பல மைல் நீளம் உள்ள அணைக்கட்டு இவ்வணையில் இருந்து பல நதிகளையும் 12 வாய்க்கால் களையும் வெட்டி விவசாயம் ,தோட்டம் இவைகளுக்கு தண்ணீர் பாயுமாறு செய்யப்பட்டிருந்தது .
நகரின் எப்புறம் நோக்கினும் அங்குள்ள ஒவ்வொரு வீதியின் இருபுறமும் வனப்புமிக்க தோட்டங்களும் பல தோற்றத்தோடு கூடிய நந்தனமும் விவசாய நிலங்களும் காட்சியளித்தன
அவ்வூரில் உள்ளவர்கள் தங்கள் பக்கத்து தெருக்களுக்கு செல்லும்போது தலையில் வெறும் கூடையை வைத்துக் கொண்டு தோட்டத்தின் ஊடே செல்லும் போது, மரத்தின் பழங்கள் உதிர்ந்து கூடையில் விழுந்து நிறைந்து விடும். அந்த அளவிற்கு செழிப்பான நகரம் .
அவ்வூர் காற்று ஒரு வித்தியாசமானது. அது கொசு,புழு முதலியவைகளும் பாம்பு, தேள் போன்ற விஷ ஜந்துக்கள் இவ்வூரில் வாழமுடியாது. இதனால் பழம் மற்றும் உணவுப் பொருட்கள் பூச்சிகளின் தொந்தரவால் கெட்டுப்போகாது .
சரி ஸபாவுக்கு வருவோம். ஸபா வாசிகளுக்கு விவசாயம் மற்றும் பழம் உணவுப் பொருட்களை கொண்டு இறைவன் நிரம்ப அருள் செய்திருந்தான். இம்மக்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தாமல் புறக்கணித்தனர். ஏமன் தேசத்து 13 ஊர்களில் இருந்து 13 நபிமார்களை இறைவன் ஸபாக்கு அனுப்பினான்.
நபிமார்களை இம்மக்கள் பொய்ப்பித்து " எவ்வித அருட்கொடையையும் எங்கள்மீது இருப்பதாக நாங்கள் அறியவில்லை. இத்தனை சுக போகங்கள் அனைத்தும் தங்களது சுய முயற்சியால் ஏற்பட்டது" என்று கூறி, "உங்களது இறைவனுக்கு இயலுமானால், எங்களுக்கு உரிய அந்த அருட்கொடையை தடுத்து கொள்ளுமாறு கூறுங்கள் " என்றனர்.

இறைவனும் அவர்கள் விட்ட சவாலை ஏற்றுக்கொண்டு, பூனை அளவு பெரிய பெரிய எலிகளை கொண்டு எந்த அணையால் செழிப்பானதோ அந்த அணையின் அடித்தளத்தில் துவாரங்களைப் போட வைத்தான் .
அணையில் மழை பொழிந்து .நீர் நிறைந்தது . இரண்டு மலைகளுக்கு இடையில் அமைந்த அவர்களது ஊர் அணை உடைந்து, அம்மக்களையும் அவர்களது தோட்டங்களையும் நீரில் மூழ்கடித்தோம் என்கிறான் இறைவன் .
சிலர் மலை ஏறி தப்பினாலும், அவர்கள் சிதறி நாலாபக்கமும் ஓடினார்கள். மலைமீது ஏற முடியாதவர்களை வெள்ளம் அடித்துக் கொண்டு போயிற்று இதையே குர்ஆனில் அல்லாஹ்


فَاَعْرَضُوْا فَاَرْسَلْنَا عَلَيْهِمْ سَيْلَ الْعَرِمِ وَبَدَّلْنٰهُمْ بِجَنَّتَيْهِمْ جَنَّتَيْنِ ذَوَاتَىْ اُكُلٍ خَمْطٍ وَّاَثْلٍ وَّشَىْءٍ مِّنْ سِدْرٍ قَلِيْلٍ
ஆனால் அவர்கள் (இப்போதனையைப்) புறக்கணித்தார்கள்; ஆகவே, அல் அரிம் (என்னும் பெரும் அணையை உடைக்கும்) கடும் பிரவாகத்தை அவர்கள் மீது அனுப்பினோம்,
இன்னும் (சுவை மிக்க கனிகளைக் கொண்ட) அவர்களுடைய இரு தோப்புகளை கசப்பும் புளிப்புமுள்ள பழங்களுடைய மரங்களும், சில இலந்தை மரங்களும் உடைய இரு தோட்டங்களாக மாற்றினோம். (அல்குர்ஆன் : 34:16)

சுவையான உன்னதமான கனிகளை உடைய சோலைகள் ஒரு பெருவெள்ளம் ஏற்பட்டதால் நீரால் அழிந்து, தித்திப்பான சுவையுடைய பலதரப்பட்ட பழமரங்கள் சாதாரண கசப்பும் ,புளிப்பும் கொண்ட இழந்தை மரங்களாக மாற்றப்பட்டுவிட்டது என்பது விஞ்ஞான ரீதியாக பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.
காரணம் ஆப்பிள் ஆரஞ்சு மாதுளை அல்லது மாங்கனி எதுவானாலும் நீரால் அழிந்த பின்னர் அவைகள் துளிர்க்குமே தவிர கசப்பும்,புளிப்பும் கொண்ட இழந்தை பழங்களாக அவை மாறுமா ? ஆனால் ஸபாவில் மாறி விட்டது .
இருந்தாலும், ஜெர்மன் நாட்டு தோட்டக்கலை வல்லுநர்கள் ஆய்வு செய்து இம்மண்ணின் மூலமரபணு கூட மாற்றம் செய்யப்பட்டு விட்டது என்று கருத்து தெரிவித்தார்கள் .
எமன் நாட்டில் உள்ள இந்த ஸபா நகரத்திற்கு பிரஞ்சு நாட்டின் பிரபல வரலாற்று ஆசிரியரான மாராப் என்பவர் சென்று ,தோட்டங்களை கண்டு, அதன் கனிகளை சுவைத்து பார்த்து அது திருமறைக் குர்ஆனில் விவரிக்கப்பட்டுள்ளது போலவே புளிப்பும்,கசப்புமாக இருக்கின்றது என்பதை தமது சரித்திர நூலில் வியந்து எழுதியுள்ளார் .
ரஹ்மத் ராஜகுமாரன்

Rahmath Rajakumaran
கிமு 600 முதல், சீனாவிக் 1,500 க்கும் மேற்பட்ட வெள்ளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு “சீனாவின் துக்கம்” அதாவது China's sorrow என்ற பெயர் உள்ளது. குறிப்பாக யாஞ்சி நதி 6,300 கிமி நீளமுள்ள இந்த நதி சீனாவின் மிகப்பெரிய நதி, உலக அளவில் 3 வது பெரிய நதி. அதாவது உலகின் பெரிய நதியான நைல் நதியை விட 350 கிமி சிறியது.
இந்த ஆற்றில் வெள்ளப்பெருக்கு என்பது அதிக அளவில் ஏற்படகூடும். 1931 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் நான்கரை லட்சம் மக்கள் உழிரிழந்தனர்,
இதனை கட்டி முடிக்க 5 லட்சத்தி 10 ஆயிரம் டன் இரும்பு மற்றும் 280 லட்ச க்யூபிக் மீட்டர் கான்கிரீட் பயன்பட்டது. த்ரீ கோர்ஜஸ் அணை 1 லட்ச விவசாய நிலங்களையும், 1 லட்சத்தில் 50 ஆயிரம் ஏக்கர் நில பரப்பை முழ்கடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
இந்த அணை கிட்டத்தட்ட 10 லட்சம் டன் ப்ளாஸ்டிக் குப்பைகள் கடலில் கலக்காமல் பாதுகாத்துள்ளது. யாங்சே ஆறு ஒரு மிகச்சிறந்த நீர் வழி போக்குவரத்து ஆதாரம் என்பதால் அணை கட்டினால் அந்த போக்குவரத்து பாதிக்கப்பட கூடாது என்பதற்காக சுமார் 3,000 டன் எடையுள்ள சரக்கு கப்பலையே தண்ணீரோடு சேர்த்து தூக்கி அணையின் அந்த பக்கம் வரை கொண்டு செல்ல லிஃப்ட் போன்ற அமைப்பையும் கட்டி முடித்துள்ளனர். இந்த லிஃப்ட் மூலமாக கப்பல் செல்வதற்கு சுமார் 4 - 6 மணி நேரம் ஆகும்.
இந்த அணை உலகிலேயே அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இடம். இந்த அணை அமெரிக்காவின் ஹூவர் அணையை விட பெரியது. அதேபோல ஹூவர் அணையை விட 10 மடங்கு அதிக மின் உற்பத்தி செய்யக்கூடியது. இந்த அணை மொத்தம் 32 ஜெனரேட்டர் உள்ளது. இந்த ஜெனரேட்டரும் ஒரு பெரிய அணு உலைக்கு சமமானது. இந்த அணையில் வருடத்திற்கு 85 கோடி மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.
அதாவது சீனாவில் மின்சார தேவையைவிட 10 மடங்கு அதிகமாகவே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே தான் சீனாவில் அனைத்து கிரமங்களுக்கும் கூட குறைந்த விலையில் மின்சார சேவை வழங்கப்பட்டுள்ளது. இப்போது இந்த அணையால் பல நகரங்கள் முழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆம், அணை அமைந்துள்ள யாங்சே நதி உள்ளிட்ட 400க்கும் மேற்பட்ட நதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.
த்ரீ கோர்ஜஸ் அணையில் வழக்கமான அளவை விட பல மடங்கு நீர்மட்டம் உயந்துள்ளது. இதனால் அணைக்கு வரும் நீர் அப்படியே திறக்கப்பட்டுள்ளது. இதனால் யாங்சி நதியில் அபாய கட்டத்தை தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அணையின் பாதுகாப்பு அளவை தண்ணீர் நீர் மட்டம் எட்டியதாலும் இன்னும் பல நாட்களுக்கு மழை நீடிக்கும் என்பதாலும் அணையே உடையும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளதால் கிட்டத்தட்ட 38 மில்லியன் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்த அணை உடையும் பட்சத்தில் வுகான் மற்றும் அதனை சுற்றியுள்ள தொழில்துறை நகரங்கள் பல நீரில் மூழ்கும் என்பதுதான் தற்போது சீனாவுக்கு பெரும் தலைவலியாக மாறியுள்ளது.

இயற்கையின் அதிசயங்கள் 17

காஸ்மிக் கதிர்கள்



சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு விஞ்ஞானிகள் ஒரு அதிசய நிகழ்ச்சியை கண்டனர். இறுக மூடப்பட்ட ஒரு கண்ணாடி குழாய்க்குள் இருந்த காற்றில் சிறிதளவும் மின் இயக்கத்தை அவர்கள் கண்டனர். கண்ணாடி குழாயை சுற்றிலும் அடைப்புகளை வைத்தனர். அப்போதும் கூட கண்ணாடி குழாயினுள் காற்றில் மின் இயக்கம் தென்பட்டது. இந்த மின் இயக்கத்திற்கு காரணம் என்ன ?

பல ஆய்வுக்குப் பிறகு அண்டவெளி கதிர்களான காஸ்மிக் கதிர்கள் எனக் கண்டனர். இந்த மர்ம கதிர்கள் எங்கிருந்து வந்து கொண்டிருக்கிறது ?

வானத்திற்கும் பூமிக்கும் மத்தியில் இக்கதிர்கள் ஆக்கிரமிக்கின்றன என்று விஞ்ஞானிகள் ஆய்வுகள் நடத்தி பூமியிலிருந்தோ, அதன் கடலிலிருந்தோ, சூரியனிலிருந்து கூட வரவில்லை. சூரிய மண்ட வெளிக்கும் அப்பால் இருந்து வருகிறது என்பதை கண்டனர்.

இக்கதிர்களில் அணுத்துகள்களே நிறைந்துள்ளன. அவை பூமியின் வாயு மண்டலத்திற்கு மேலே விண்வெளியில் பயணம் செய்து கொண்டிருக்கின்றன. அவற்றின் வேகம் ஏறக்குறைய ஒளியின் வேகத்திற்கு சமமாக உள்ளது. அவை நமது பூமியை அணுகி காற்றுமண்டலத்தில் புகுந்து காற்று மண்டலத்தின் அணுத்துகள்களோடு மோதுகின்றன.

இந்த மோதலின் விளைவாக புதிய துகள்கள் பிறக்கின்றன. இப்புதிய துகள்கள் மேலும் வேகமாக அடிப்படை துகள் பிரயாணம் செய்த திக்கிலேயே சென்று, மற்ற அணுக்களுடன் மோதி, புதிய புதிய துகள்களை சிருஷ்டித்துக் கொண்டே இருக்கின்றன. இவை "இரண்டாந்தர காஸ்மிக் கதிர்கள் " என்று அழைக்கப்படுகின்றன. அவையும் தமது பங்குக்கு மற்ற அணுத்துகள்களுடன் மோதி மேலும் புதிய புதிய துகள்களை சிருஷ்டித்துக் கொண்டே இருக்கின்றன.

அண்டக் கதிர்கள் (Cosmic rays) வெட்ட பெருவெளியிலிருந்து வரக்கூடிய அண்டக்கதிர்கள் வெள்ளம் போல் வருகின்றன. இவைதான் பூமியின் தட்ப வெப்ப நிலையை நிர்ணயிக்கிறது. சூரியனின் பங்குதான் அதிகம் என நினைக்கலாம். ஆனால் தட்பவெப்ப நிலையை நிர்ணயிப்பதில் அண்டக்கதிர்கள் பெருமளவு உதவுகிறது.

அண்டக்கதிர்கள் காற்றின் மூலப் பொருட்களுடன் மோதும்போது அளவுகடந்த அயனிகள் உண்டாகின்றன. அயனிகள் வளிமண்டலத்தின் தன்மையை மாற்றுகிறது.

செரிவூட்டப்பட்ட அயனிகளில் நேரயனிகளும் (positive ions) மாறயனிகளும் (negative ions) ஒரு விகிதத்தில் ஏற்படும். இந்த விகிதாசாரம் மாறும் தன்மையைப் பொறுத்தது உயிரினங்களின் வாழ்க்கை அமைகிறது.

அத்துடன் மாறயனி உயிரினங்களின் மன வளர்ச்சிக்கு உதவுகிறது.இந்த மாறயனிகள்தான் பிரபஞ்ச செய்தியாகும்.

ஆக்சிஜன் உடல் சக்திக்கு மட்டுமே உதவக்கூடியது. மாரயனிகள்தான் மனநிலையைத் தூண்டவும் மற்ற நடவடிக்கைக்கான உந்து சக்தியாகவும் இருக்கிறது.

தட்பவெப்ப நிலைக்கு உதவிசெய்வதோடு முக்கியமாக பூமியின் மேல் அடுக்கு வளிமண்டலத்தில் ஏற்படக்கூடிய நிகழ்வுகளின் காரணமாக பெரு வெளியிலிருந்து வரக்கூடிய இந்த கதிர்களால் ஏற்படும் ஆற்றல் அளவிடற்கறியது.

இறைவன் குர்ஆனில் வானத்திற்கும்,பூமிக்கும் மத்தியில் நடப்பதைக் குறித்து அநேக வசனங்களில் பேசுகிறான்.

وَمَا خَلَقْنَا السَّمَآءَ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَا بَاطِلًا ‌ ذٰ لِكَ ظَنُّ الَّذِيْنَ كَفَرُوْا فَوَيْلٌ لِّلَّذِيْنَ كَفَرُوْا مِنَ النَّارِ

மேலும், வானத்தையும், பூமியையும், இவ்விரண்டிற்குமிடையே உள்ளவற்றையும் வீணுக்காக நாம் படைக்கவில்லை. இது (வீணென்பது) காஃபிர்களின் எண்ணமாகும்; காஃபிர்களுக்கு (நரக) நெருப்பின் கேடுதான் உண்டு. (அல்குர்ஆன் : 38:27)

وَمَا خَلَقْنَا السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَا لٰعِبِيْنَ

மேலும், வானங்களையும் பூமியையும் இவ்விரண்டிற்கும் இடையே உள்ளவற்றையும் விளையாட்டிற்காக நாம் படைக்கவில்லை. (அல்குர்ஆன்: 44:38)

رَّبُّ السَّمٰوٰتِ والْاَرْضِ وَمَا بَيْنَهُمَا فَاعْبُدْهُ وَاصْطَبِرْ لِعِبَادَتِهٖ هَلْ تَعْلَمُ لَهٗ سَمِيًّا

வானங்களையும், பூமியையும், இவற்றிற்கு மத்தியில் உள்ளவைகளையும் படைத்து வளர்ப்பவனும் அவனே! (அல்குர்ஆன் : 19:65)

وَمَا خَلَقْنَا السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَاۤ اِلَّا بِالْحَقِّ وَاِنَّ السَّاعَةَ لَاٰتِيَةٌ فَاصْفَحِ الصَّفْحَ الْجَمِيْلَ_

வானங்களையும் பூமியையும், இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் தக்க காரணமின்றி நாம் படைக்கவில்லை. (அல்குர்ஆன் : 15:85)

அல்லாஹ்வே அறிவான்.

இயற்கையின் அதிசயங்கள் 18

பெர்முடாவின் விலகாத மர்மங்கள்..!



இயற்கை எப்போதும் பல கண்டுபிடிக்க முடியாத மர்மங்களையும், எண்ணிலடங்கா ஆச்சரியங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

அறிவியல் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி மனிதனின் நாகரீகத்தை அடுத்தடுத்த பரிமாணங்களுக்கு கொண்டு சென்றாலும், இயற்கை நமக்களிக்கும் சாவால்களை மட்டும் மனிதனின் தொழில்நுட்பத்தால் அவ்வளவு எளிதாக கண்டுபிடிக்க இயலவில்லை.இந்த பூமியில் இயற்கை நமக்களித்துள்ள பல சிக்கல்கள் இன்றும் தீர்க்கப் படாதவையாகவே உள்ளன.

அப்படி இன்றளவும் தன்னிடம் பல மர்மங்களை கொண்டுள்ளதுதான் பெர்முடா முக்கோணம் (BERMUDA TRIANGLE).

வட அமெரிக்காவின் கிழக்கே பனாமா கால்வாயில் அருகே உள்ளது பெர்முடா தீவு, இந்த தீவை ஒட்டி வட அட்லாண்ட்டிக் கடல் பகுதியில் அமைத்துள்ள புளோரிடா, பெர்முடா மற்றும் புவேர்ட்டோ ரிக்கோ (Puerto Rico) ஆகிய மூன்று இடங்களை உள்ளடக்கிய பகுதி தான் பல நூற்றாண்டு காலமாக பல்வேறு அமானுஷ்ய கதைகளுக்கு சொந்தமான பெர்முடா முக்கோணம் என அழைக்கப்படுகிறது.

இந்த மர்மமான பெர்முடா முக்கோணத்தை பற்றிய பல அனுபவங்களை, கதைகளாகவும், குறிப்புகளாகவும், புத்தகங்களாகவும் பலர் எழுதி வைத்துள்ளனர்.

அந்தவகையில் இந்த மர்ம இடத்தை பற்றி மக்களுக்கு முதலில் தெரியப்படுத்தியவர் கடற்பயணி கொலம்பஸ். 15-ம் நூற்றாண்டில் அவர் கடல் வழியாக பயணம் மேற்கொண்டிருந்தார் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அவரின் படகு சென்ற போது, அவர் வைத்திருந்த திசைகாட்டி செயல்படாமல் போனது, மேலும்

அந்த பகுதியில் கடலும் மிகவும் சீற்றத்துடன் காணப்பட்டது குறித்து தன்னுடைய பயணக் குறிப்பிலும் கொலம்பஸ் எழுதியிருக்கிறார்.

அதன் பிறகு 1800 களில் மேரி செலஸ்டி எனும் கப்பல் காணாமல் போனது. அதைத் தொடர்ந்து 1918-ம் ஆண்டு ‘யு.எஸ்.எஸ் சைக்ளோப்ஸ்’ என்கிற கப்பலும் சில நூறு பயணிகளுடன் காணாமல் போனது.

1945-ம் ஆண்டு பிளைட் 19 வகையைச் சேர்ந்த 5 ராணுவ விமானங்கள் அந்தப் பகுதியில் பறக்கும்போது காணாமல் போயின. 1949-ல் ஜமைக்கா நாட்டுக்குச் சொந்தமான பயணிகள் விமானம் 39 பயணிகளுடன் மாயமானது.

இப்படி நூற்றுக்கும் மேற்பட்ட சம்பவங்கள் அந்தப் பகுதியில் நிகழ்ந்ததாகப் பதிவாகி இருப்பதால் அது மர்மப் பிரதேசமாகவே திகழ்கிறது.

மேலும் இப்படி தொடர்ச்சியாக நடக்கும் மர்மமான நிகழ்வுகள் ஏன் நடக்கின்றன என்பதற்கான காரணங்களும் மர்மமானதாகவே உள்ளன.

அந்த பகுதியை சுற்றி வசிக்கும் மக்களின் நம்பிக்கையை பொருத்தமட்டில் பெர்முடா முக்கோணம் அமைந்துள்ள பகுதியில் இதற்கு முன்பு "அட்லாண்டிஸ்" எனும் கடவுள்கள் வாழ்ந்த நகரம் இருந்ததாகவும், பின் அந்த நகரம் கடலுக்கு அடியில் மூழ்கியதாகவும், அங்கு வாழ்ந்த மக்கள் தான் இன்று இந்த சம்பவங்களுக்கு காரணமாக உள்ளதாக கருதுகிறார்கள்.

ஆனால் பின்னர் நடந்த ஆராய்சிகள் மூலம் அங்கு இருப்பது காணாமல் போன கப்பல்களில் இருந்த பொருட்களாக இருக்கலாம் என கூறப்பட்டது.

ஆனால் அறிவியலின் கூற்றுப்படி இந்த பெர்முடா முக்கோணம் எனப்படுகின்ற பகுதியில் காற்றின் வேகம் எப்போதும் அதிகப்படியான வேகத்தில் இருப்பதாகவும், அதனால் அங்கு காற்று ஏற்படுத்தும் அதிகப்படியான அழுத்தம் காரணமாக அங்குள்ள மேகங்கள் அருங்கோண வடிவில் சுழல்வதாலும், கடலின் சீற்றமும் அதிகமாக இருப்பதால் தான் இங்கு செல்லும் கப்பல்களும், விமானங்களும் காணாமல் போவதாக சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.

எதுவாக இருந்தாலும் இயற்கை மனிதனுக்கு எப்போதும் மர்மங்களையும், ஆச்சர்யங்களையும், நன்மைகளையும் அளித்துக் கொண்டே இருக்கும், இயற்கை சார்ந்து அதை பாதிக்காமல் இருந்தால், இயற்கை நமக்கு நன்மைகளை மட்டுமே அளிக்கும்.

பெர்மிடாவைப் பற்றி படிக்கும் போதெல்லாம் இந்த வசனம்தான் என் நினைவுக்கு வருகிறது

ظَهَرَ الْفَسَادُ فِى الْبَرِّ وَالْبَحْرِ بِمَا كَسَبَتْ اَيْدِى النَّاسِ لِيُذِيْقَهُمْ بَعْضَ الَّذِىْ عَمِلُوْا لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ

மனிதர்களின் கைகள் தேடிக்கொண்டதன் காரணமாகக் கடலிலும் தரையிலும் அழிவு வேலைகள் (அதிகமாகப்) பரவி விட்டன. அதிலிருந்து அவர்கள் விலகிக் கொள்வதற்காக, அவர்களின் தீய செயல்களில் சிலவற்றின் தண்டனையை அவர்கள் (இம்மையிலும்) சுவைக்கும்படி அவன் செய்ய வேண்டியதாகிறது. (அல்குர்ஆன் : 30:41)

இயற்கையின் அதிசயங்கள் 19

பூமி சுற்றுவதை நிறுத்தினால் ஏற்படும் 7 வினோத நிகழ்வுகளும் , குர்ஆனின் முன்னறிவிப்புகளும்



நாம் வாழும் இந்த பூமியானது 365 நாட்களும் தன்னைத் தானே சுற்றிக் கொண்டும் சூரியனைச் சுற்றி வருவதால் தான் இரவு பகல் ஏற்படுகிறது என்று எல்லோருக்குமே தெரிந்த விஷயம்.
ஆனால் இந்த பூமி திடிரென்று சுற்றுவது நிறுத்தி விட்டால், என்ன நடக்கும் என்று என்றாவது கற்பனை செய்ததுண்டா? ஒருவேளை அப்படி நடந்தால் என்னவாகும் என்று பார்க்கலாம். பூமி சுற்றுவதை நிறுத்தினால் ஏற்படும் 7 வினோத நிகழ்வுகள் உண்டாகும் என்று விஞ்ஞானம் பல ஆய்வுகள் செய்து கூறியுள்ளது.

1) மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சுமார் 1670 கி.மி வேகத்தில் சுற்றும் பூமியானது திடிரென்று சுழற்சியை நிறுத்தும் பொழுது பூமியுடன் உறுதியாகப் பிணைக்கப்படாத அத்தனைப் பொருட்களும் உயிரினங்களும் கிழக்கு நோக்கி வீசி எறியப்படும்.
يَوْمَ تَرْجُفُ الْاَرْضُ وَالْجِبَالُ وَكَانَتِ الْجِبَالُ كَثِيْبًا مَّهِيْلًا
அந்நாளில், பூமியும் மலைகளும் ஆட்டம் கொடுத்து (ஒன்றோடொன்று மோதி) மலைகள் சிதறுண்ட மண் குவியல்களாகி விடும். (அல்குர்ஆன் : 73:14)

2) கடல் நீரும் பூமியுடன் உறுதியாகப் பிணைக்கப் பட்டிருக்கவில்லை எனவே பூமி சுழற்சியை நிறுத்தும் பொழுது அதிக அளவிலான தொடர்ச்சியான பூகம்பகங்களும் சுனாமி ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு. இதனால் நிலத்தில் வாழும் ஒரு உயிர் கூட மிஞ்ச முடியாது.
وَاِذَا الْبِحَارُ فُجِّرَتْۙ கடல்கள் பிளக்கப்பட்டுவிட்டால், (அல்குர்ஆன் : 82:3)
تَتْبَعُهَا الرَّادِفَةُ (மென்மேலும்) அதனைத் தொடர்ந்து (பல பூகம்ப அதிர்ச்சிகள்) வரும் (நாளில் உலகம் முடிவுற்றே தீரும்). (அல்குர்ஆன் : 79:7)

3) பூமி தன்னைத் தானே சுற்றுவது நிறுத்திய போதிலும் சூரியனைச் சுற்றிக் கொண்டு தான் இருக்கும் எனவே வருடத்தில் 6 மாதங்கள் இருளிலும் மீதி ஆறு மாதங்கள் முற்றிலுமாக ஒளியிலும் காணப்படும். தொடர்ந்து 6 மாதங்கள் சூரியனை நோக்கி இருக்கும் பகுதிகளில் அதிக அளவிலான வெப்பம் இருக்கும்.
قُلْ اَرَءَيْتُمْ اِنْ جَعَلَ اللّٰهُ عَلَيْكُمُ النَّهَارَ سَرْمَدًا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ مَنْ اِلٰـهٌ غَيْرُ اللّٰهِ يَاْتِيْكُمْ بِلَيْلٍ تَسْكُنُوْنَ فِيْهِ اَفَلَا تُبْصِرُوْنَ
“கியாம நாள்வரை உங்கள் மீது அல்லாஹ் பகலை நிரந்தரமாக இருக்கும்படிச் செய்து விட்டால், நீங்கள் அதில் ஓய்வு பெறும் பொருட்டு உங்களுக்கு இரவைக் கொண்டு வரக்கூடியவன் அல்லாஹ்வையன்றி நாயன் உண்டா என்பதை நீங்கள் (சிந்தித்துப்) பார்த்தீர்களா? (இவ்வுண்மையை) நீங்கள் நோக்க வேண்டாமா?” என்று கூறுவீராக! (அல்குர்ஆன்: 28:72)

4) இதனால் இருளில் உள்ள 6 மாதங்கள் பனிப் பிரதேசமாகவும் மீதி 6 மாதம் ஒளியில் உள்ளவை பாலைவனமாகவும் மாறி விடும். இந்த மாற்றத்தைத் தாங்காமல் நுண்ணுயிர்கள் கூட முற்றிலுமாக அழிந்து விடும்.
وَاٰيَةٌ لَّهُمُ الَّيْلُ نَسْلَخُ مِنْهُ النَّهَارَ فَاِذَا هُمْ مُّظْلِمُوْنَۙ
இரவும் இவர்களுக்கோர் அத்தாட்சியாகும். அதிலிருந்தே நாம் பகலை வெளிப்படுத்துகின்றோம். இல்லையென்றால் இவர்கள் இருளில்தான் தங்கிவிடுவார்கள். (அல்குர்ஆன்: 36:37)

5) சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைவதற்குப் பதிலாக மேற்கில் தோன்றி கிழக்கில் மறையும். இதுமட்டுமல்லாமல் இந்த வினோத நிகழ்வு ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே நிகழும்.
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
சூரியன் மேற்கிலிருந்து உதிப்பதற்கு (யுகமுடிவுக்கு)முன் யார் பாவமன்னிப்புக் கோரித் திருந்திவிடுகிறாரோ அவருடைய பாவமன்னிப்புக் கோரிக்கையை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான அபூஹுரைரா (ரலி) முஸ்லிம் : 5236.

6) பூமி சுழற்சியை நிறுத்தும் பொழுது வளி மண்டலத்தில் ஏற்படும் மாற்றத்தினால் வீசும் காற்றின் வேகமானது ஒரு மிகப் பெரிய அணுகுண்டு வெடிப்பினை விட பல மடங்கு அதிகமாக இருக்கும். இதனால் மிகப் பெரிய கட்டிடங்கள் கூட இருக்கும் இடம் தெரியாமல் அழிந்து விடும்.
وَالذّٰرِيٰتِ ذَرْوًا ۙ (கடல் நீரை ஆவியாக்கிச் சிதறடிக்கும்) சூறாவளிகள் மீதும்,
(அல்குர்ஆன்: 51:1)

7) பூமி தன்னைத் தானே சுற்றுவதை நிறுத்தும் அடுத்த நொடியே பூமியைச் சுற்றியுள்ள பாதுகாப்பு காந்த மண்டலம் செயல் இழந்து போய் விடும். இதனால் சூரியனில் இருந்து வெளி வரும் கதிர்கள் மீதம் உள்ள உயிர்களையும் அழித்து விடும். அதுமட்டுமில்லாமல் centrifugal force எனப்படும் மையவிலக்கு விசையால் பூமத்திய ரேகையில் நிலம் சிறிய அளவில் தொடர்ச்சியாக வீக்கமடைந்து காணப்படும். பின்னர் சிறிது காலத்திற்குப் பின்னர் அந்தப் பகுதி மீண்டும் தட்டையாக மாறும் என்று கூறப்படுகிறது.
மேலும் புவி ஈர்ப்பு விசை அதிகம் இருக்கக் கூடிய துருவப் பகுதிகளை நோக்கி கடல் நகரும் என்றும் நிலப்பகுதி பூமத்திய ரேகை பகுதியில் ஒரே கண்டமாக ஒன்றாகி விடும் என்றும் கூறப்படுகிறது.
وَاِذَا الْبِحَارُ سُجِّرَتْ ۙ
கடல் நீர் நெருப்பாக மாற்றப்படும்போது. (இவ்வாறு உலகம் முடிவுபெற்று, விசாரணைக் காலம் ஏற்படும்) (குர்ஆன் : 81:6)
இவற்றையெல்லாம் மிஞ்சும் வகையில் பூமியின் காந்த விசை சிறுகச் சிறுக வலுவிழந்து ஒரு கட்டத்தில் மறைந்து போகும் நிலை உருவாகும். இதன் விளைவாக காஸ்மிக் கதிர்கள் அதிக அளவில் பூமியைத் தாக்கக் கூடும் இதன் மூலம் பூமியில் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத சூழல் ஏற்பட்டு பூமி முற்றிலுமாக அழிந்து போகும் நிலை ஏற்படும்.

இயற்கையின் அதிசயங்கள் 20

நெருப்புச் சுறாவளிகள் (FIREWHIRLS)



நெருப்புச் சுறாவளிகள் என்பது சூராவளி சுழலும் போது அதன் உராய்வினால் காய்ந்த இழை தழைகள் கருகி நெருப்பு உண்டாகிறது.
இந்த நெருப்புச் ஜுவாலைகளை சூராவளி தன்னுள் இழுத்தபடியே பிற இடங்களுக்கு பரவி நாசத்தை ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ளன. இவைகள் பெரும்பாலும் விவசாய நிலங்கள் மற்றும் காடுகள் உள்ள பகுதிகளில் பேரிழப்பை ஏற்படுத்திவிடுகின்றன.
இந்த நெருப்புச் சூராவளிகள் 1923ம் ஆண்டு ஜப்பான் நாட்டில் உள்ள டோக்கியோவின் Hifukusho-Ato என்ற கிராமத்தில் சுமார் 38,000த்திற்கும் மேற்பட்ட மனிதர்களை வெறும் 15 நிமிட இடைவெளியில் நெருப்பினால் பொசுக்கி அழித்துள்ளது.
இவைகள் பெரும்பாலும் 10 முதல் 50 மீட்டர் அகல உயரமும் 10 அடி அகலம் கொண்டதாகவும் காணப்படும். இச்சுறாவளிகள் சூழன்றடிக்கும் போது காற்றின் வேகம் மணிக்கு 160 கி.மீ என்ற வேகத்தில் காணப்படும். 49 அடி உயரமுள்ள மரத்தை கூட சில வினாடிகளில் அழித்துவிடும்.
அல்லாஹ் அருள்மறையில் விவரிக்கும் நெருப்பு சூராவளியின் தாக்கம் பற்றி...
"உங்களில் யாராவது ஒருவர் இதை விரும்புவாரா? – அதாவது அவரிடம் பேரீச்ச மரங்களும், திராட்சைக் கொடிகளும் கொண்ட ஒரு தோட்டம் இருக்கிறது. அதன் கீழே நீரோடைகள் (ஒலித்து) ஓடுகின்றன. அதில் அவருக்கு எல்லா வகையான கனி வர்க்கங்களும் உள்ளன. (அப்பொழுது) அவருக்கு வயோதிகம் வந்துவிடுகிறது. அவருக்கு (வலுவில்லாத,) பலஹீனமான சிறு குழந்தைகள் தாம் இருக்கின்றன – இந்நிலையில் நெருப்புடன் கூடிய ஒரு சூறாவளிக் காற்று, அ(ந்தத் தோட்டத்)தை எரித்து(ச் சாம்பலாக்கி) விடுகின்றது. (இதையவர் விரும்புவாரா?) நீங்கள் சிந்தனை செய்யும் பொருட்டு அல்லாஹ் (தன்) அத்தாட்சிகளை உங்களுக்குத் தெளிவாக விளக்குகின்றான்" (அல்குர்ஆன் 2:266)

அதேபோல் ஐக்காவாசிகளையும் நேர்வழிப்படுத்தவும் நபி ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களையே அனுப்பி வைத்தான். ஐக்காவாசிகள்; மத்யன்வாசிகள் எடையைக் குறைத்து, மோசம் செய்து வியாபாரம் செய்தனர் . ஆனால் ஐக்காவாசிகள் ஒரு மடங்கு மேலவே இருந்தார்கள்.

ஐக்காவாசிகள் உருவ வழிபாட்டை மேற்கொண்டதோடு அளவில் மோசம் செய்யவும், நல்ல காசு வாங்கிக்கொண்டு செல்லா காசு கொடுக்கவும் ,காசை குறைவாக கொடுத்து ஏமாற்றவும் , தங்கம், வெள்ளி நாணயங்களின் ஓரங்களை வெட்டி எடுத்துக்கொண்டு, குறைபட்ட அந்த நாணயங்களைச் செலவாணியில் விடவும் செய்வதே தங்களின் வழக்கமாகக் கொண்டிருந்தனர் .
ஷாம் - மிஸ்ர் வழியில் அமர்ந்து, மக்களிடமிருந்து சுங்கம் வசூலிப்பது, பதுங்கிருந்து வழிப்போக்கர்களைக் கொள்ளையடிப்பது, உணவுப் பொருட்களை பதுக்கி வைத்து பஞ்சத்தை ஏற்படுத்தி அநியாய விலைக்கு விற்பது போன்ற கேடுகெட்ட செயலை செய்து கொண்டிருந்தனர்.

நபி ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் போதனையைக் கேட்டு அவர்களில் ஒருவர் கூட முஸ்லிம் ஆகவில்லை. மேலும் நபியைக் கேலி செய்தனர். நீர் சொல்லும் உமது கடவுளுக்கு சக்தியிருக்குமானால், வானத்திலிருந்து ஏதேனும் வேதனையை இறக்கச் சொல்லும் பார்க்கலாம் என்று ஆணவத்துடன் பேசினர்.
ஷுஐப் நபி அவர்கள் அவர்களை "அல்லாஹ்வை குறைவாக மதிப்பிடாதீர்கள். அவன் உங்களது ஒவ்வொரு சொல்லையும், செயலையும் உற்றுநோக்கியவனாகவே இருக்கிறான். அவனது ஆட்சியில் தாமதமுண்டு. ஆனால் தவறிருக்காது. நீங்கள் செய்துவரும் அக்கிரமங்களுக்கு கண்டிப்பாக தண்டனை உங்களுக்கு உண்டு. அதில் சந்தேகமில்லை'' என்றுகூறினார்கள்.
ஐக்கா வாசிகள் அதைப் பொருட்படுத்தவில்லை. மேலும் நபியவர்களை கேலி செய்வதிலும் அவர்களது உபதேசங்களுக்கு மாறு செய்வதிலுமே திளைத்திருந்தார்கள்.
இறுதியில் அல்லாஹ்வின் கோபப்பார்வை ஐக்காவாசிகள் மீது பட ஆரம்பித்தது. ஏழு நாட்கள் வரை அப்பகுதியில் கடுமையான உஷ்ணம் தகிக்கவாரம்பித்தது. குளம், குட்டை, கிணறு எல்லாமே ஒரேயடியாக வறண்டு போய் விட்டன. குடிப்பதற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்க் கூட கிட்டாது மக்கள் தவியாய்த் தவிக்க ஆரம்பித்தனர்.

அனல் காற்றின் கொடுமையைத் தாளமாட்டாது, வீட்டிலிருந்தவர்கள் எல்லாம் தத்தம் வீடுகளை விட்டு வெளியேறி, காடுகளில் வந்து மரங்களின் நிழலில் தங்கத் தொடங்கினர். அவர்களது மூளைகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டுப் போயின.
இத்தகைய சூழ்நிலையில்தான் வானத்தில் ஒரு கருமேகம் தோன்றியது. அத்தோடு ஜிலுஜிலுவென்று தென்றல் காற்றும் வீசத் தொடங்கியது. அவ்வளவுதான்! அவர்கள் அத்தனைப் பேர் அகங்களும் முகங்களும் மகிழ்ச்சியால் ஒரேடியாக மலர்ந்து போயின. ஆடிப்பாடி களியாட்டம் புரியத் தொடங்கினர்.
ஆனால் கருமேகத்திலிருந்து வெளியான தீச்சுவாலை ஒருசில மணி நேரங்களில் ஐக்காவாசிகள் அனைவரையும் பஸ்பம் ஆக்கிவிட்டது.

இந்த அழிவு ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மனதை பெரிதும் பாதித்தது. நபி அவர்கள் மனம் வெதும்பிப் போனார்கள். நமது போதனைகளை கேட்காது அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகிப் போய் அழிந்து விட்டார்களே என்று நினைத்து நினைத்து அழுது அழுது அவர்களது பார்வையும் மங்கி விட்டது.
ஹழ்ரத் ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இரண்டு புதல்விகள் இருந்தனர். அந்த மகள்களோடு கண்பார்வையும் இழந்த நிலையில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் போதுதான் ஹழ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

வந்தவர்கள் நபி என்பதை அறிந்ததும் தமது புதல்விகளில் ஒருவரை அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து விட்டார்கள். அதன்பிறகு 7 வருடங்கள் 4 மாதங்கள் வரை வாழ்ந்தார்கள். தம்முடைய 254 ஆவது வயதில் வபாத்தானார்கள். அன்னாரின் திருவுடல் மக்காவில் ஸபா - மர்வா மலைகளுக்கிடையில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.
("இயற்கையின் அதிசயங்கள் " என்கிற இத்தொடர் பதிவுகள் இத்துடன் நிறைவு பெறுகிறது)

தகவல் பரிமாற்றம் 1

குகை சொல்லும் தகவல்கள்



இயற்கை காட்டிய வழிமுறையின் அடிப்படையில், மனிதனின் ஆறாம் அறிவை பயன்படுத்தி, அறிவியல் மூலம் பெற்றுள்ள தகவல்களை , பல்வேறு வழிகளில் பயன்படுத்தி தொடர்பு கொள்ளும் முறையை தகவல் தொடர்பு வழிமுறைகளாகும்.

குகைகளை வீடாக பயன்படுத்திய காலம் முதல் விண்ணிலே வீடமைத்து வாழும் வழிமுறைகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலம் வரையிலும் மட்டுமல்லாது, நிலவில் குடியேறிய பிறகும்கூட மனித குலத்தின் அடிப்படைத் தேவையாகத் திகழப்போவது தகவல் தொடர்பு என்பதுவே.
அறிவியல் சார்ந்த வாழ்க்கைக்கு மட்டுமல்லாது, எளிமையான வாழ்க்கைக்கும் இந்தத் தகவல் தொடர்பு என்பதே அடிப்படையாகும்.

இதனை முழுமையாக அறிந்து கொண்டால் மட்டுமே இதுபற்றி நாம் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். இதில் “தகவல்” – ”தொடர்பு” என்ற இரண்டு சொற்கள் இணைந்துள்ளன. தகவல் என்றால் 'பிறர் அறியும் வகையில் வெளிப்படுத்தப்படும் செய்தி' என்று பொருளாகும். " தொடர்பு "என்றால் 'இரு இடங்களை இணைப்பது; இணைப்பு' என்று பொருளாகும்.
அதாவது இரண்டு இடங்களை இணைத்து, அங்குள்ளவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்திகளை வெளிப்படுத்தும் வழிமுறை மற்றும் அதற்கான கருவிகளுக்குத் தகவல் தொடர்பு என்ற தொழில்நுட்பச் சொல்லைப் பயன்படுத்துகின்றோம்.

குறிப்பிட்ட காலகட்டத்தில்தான் துவங்கியது என்று உறுதியாகக் கூறமுடியாதவற்றுள் தகவல் தொடர்பின் துவக்கமும் அடங்குகிறது. மனிதகுலத்தில் பேச்சும் எழுத்தும் துவங்குவதற்கு முன்பாகவே தகவல் பரிமாற்றம் துவங்கிவிட்டது என்றே ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
அச்சு மற்றும் தகவல் தொடர்பின் துவக்கம் என்று கருதப்படுவது, கற்கால மனிதர்கள் வரைந்து வைத்துள்ள குகைச் சித்திரங்களாகும். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக 15 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையிலான வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் மனிதன் நாகரீகம் எதுவும் அடையவில்லை ஆனால் தகவல் தொடர்பு துவங்கி விட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தான் அறிந்த ஒன்றை அல்லது பார்த்த ஒன்றை, அருகில் அல்லது தொலைவில் அல்லது இனிமேல் வரப்போகும் நபர்களுக்குத் தெரிவிப்பதற்காக வரையப்பட்டவையே குகை ஓவியங்கள் ஆகும். அதிசயிக்கத்தக்க அளவிற்கு அறிவியல் வளர்ச்சியும், கண்டுபிடிப்புகளும் உள்ள இந்த நாட்களிலும், ஆராய்ச்சியாளர்களை வியப்பில் ஆழ்த்துகின்றவைகளாகவும் இந்தக் குகைச் சித்திரங்கள் உள்ளன.
இறைநம்பிக்கை கொண்ட ஏழு இளைஞர்கள் சிலை வணக்கக் காரரான அப்ரூஸ் நாட்டை ஆண்ட தக்யானூஸ் மன்னனின் வன்முறையிலிருந்து தப்பிக்கவும் , தங்களின் இறைநம்பிக்கையைக் காத்துக்கொள்ளவும் முடிவெடுத்து ஊரைத் துறந்து மலைப்பகுதிக்குச் சென்றுவிட்டனர்.
மலையில் ஒரு குகை இருந்தது. புகலிடம் தேடிக் குகைக்குள் நுழைந்தவர்கள் தம்மைக் காத்தருளும்படி நெஞ்சுருக இறைவனிடம் வேண்டினார்கள். குகையில் போதிய இட வசதி இருந்தது. இளைஞர்களுடன் அவர்களின் செல்லப் பிராணியான நாயும் இருந்தது.
அதிகாலையில் சூரியன் உதிக்கும்போது, அதன் கதிர்கள் குகையை விட்டு விலகி வலதுபுறமாகப் பாயும். மாலையில் மறையும்போது குகையைக் கடந்து இடதுபுறமாகத் தாழும். இத்தகைய அமைப்பில் மலைக்குகை அமைந்திருந்தது.

இந்த சூரிய ஒளி வலம் இடம் தகவல்களால் அந்த குகை இருக்கும் முகவரியை இறைவன் சொல்லியுள்ளான். சூரிய ஒளி உதிக்கும் போது வலது புறம் என்றும் மறையும் போது இடதுபுறம் என்றும் குறிப்பிடப்படும் குகை உலகில் வேறு எங்கும் இல்லை. இக்குகை ஜோர்டான் நாட்டு தலைநகரம் அம்மானுக்கு அருகில் ரக்கீம் என்ற இடத்தில் மட்டுமே இருக்கிறது.

குகைக்குள் சென்ற இளைஞர்கள் களைப்பில் படுத்தனர். ஆழ்ந்த உறக்கம் அவர்களைப் பற்றிக்கொண்டது. குகை வாயிலில் நாய் படுத்துக் கொண்டது.

ஆழ்நிலை உறக்கம் அது. துயில் கலையாமல், உணவும், நீரும் இல்லாமல் வலப்புறம், இடப்புறம் என்று மாறி மாறிப் புரண்டு தூக்கத்தில் பல்லாண்டுகள் லயித்திருந்தார்கள்.
தக்யானூஸ் என்கிற மன்னன் இவர்களைத் தேடி இம்மலைக்கு வந்து சேர்த்தான் .தன் கஸானாவின் அதிகாரியாகிய மார்னூஸ் என்பவரை அக்குகையினுள் அனுப்பி வைத்தான்.
அவர் அவர்கள் அனைவரும் இறந்து போனதாக மன்னனிடம் கூறுகிறார் .மன்னன் குகையின் வாயிலை கல்லும் சுண்ணாம்புக் கொண்டும் அடைக்க சொல்கிறான் .
அதிகாரி மார்னூஸ் குகைத் தோழர்களின் பெயர்களையும், குடும்பத்தின் குறிப்புகளையும், அப்ரூஸ் பட்டணத்தை விட்டு வெளியேறிய வருஷம் தேதியையும் விவரமாக எழுதி மலைக்குகையின் வாயில் பதிக்கிறார் .

" ஆசியா மைனான் மேற்கு கரையில் உள்ள ஸர்மீர்னாவுக்கு 50 மைல் தெற்கே உள்ள இபிஸியஸ் (Ephesus) நகரத்திலுள்ள
1) மகஸல்மீனா, 2) எம்லீகா, 3) ஸப்பீதா, 4) மர்தூனஸ்,
5) யப்பூனஸ், 6) ஸார்ப்யூனஸ் 7) கஷ்பைத்தூனஸ் ஆகிய 7 வாலிபர்கள் சுமார் 20 வயது இவர்கள் ஏக இறைவனை வழிபட்டு வந்தனர் " - என்பதாக குகையின் வாயில் பதித்தார்.
இதற்கிடையில், ஊரில் இறைநம்பிக்கை கொண்ட ஆட்சி, அதிகாரம் என்று பல மாற்றங்கள் நடந்துவிட்டன.
குகையில் உறங்கிக் கொண்டிருந்த இளைஞர்களின் உறக்கம் கலைந்தது. கொட்டாவி விட்டுக்கொண்டே ஒருவர், “சரியான தூக்கம்” என்றார்.”நாம் எவ்வளவு நாட்கள் உறங்கியிருப்போம் ?” என்று அடுத்தவர் கேட்டார்.


“என்ன. ஒரு நாள் அல்லது அதைவிடக் குறைவான நேரமாகத்தான் இருக்கும்!” என்றார் இன்னொருவர்.
“சரி. சரி.. சர்ச்சையை விடுங்கள்! நாம் எத்தனை நாள் உறங்கினோம் என்பதை எல்லாம் வல்ல இறைவன் நன்கறிவான். பசி வயிற்றைக் கிள்ளுகிறது. அதனால், ஒருவர் ஊருக்குள் சென்று சாப்பிட ஏதாவது வாங்கி வாருங்கள். யாராவது அடையாளம் கண்டுவிடப் போகிறார்கள் எச்சரிக்கை!” என்று தம் ஊரார் குறித்த பயம் விலகாமலேயே அவர் சொன்னார்.

மாறிய காலத்தில் இளைஞர்களில் ஒருவர் ஊருக்குள் சென்றார். கடைவீதி வித்தியாசமாக இருந்தது. பரிச்சயமானவர்கள் யாரும் தென்படவில்லை. இதுவும் அவருக்கு வியப்பாக இருந்தது. ஒரு கடைக்குள் சென்றவர் தேவையான உணவுப் பொருட்களைக் கேட்டு வாங்கினார். அதற்கான காசை நீட்டினார். அதைப் பெற்றுக் கொண்ட கடைக்காரரின் முகம் மாறியது. அவர் இளைஞரை மேலும் கீழும் பார்த்தார். நாணயத்தை உருட்டி உருட்டிச் சோதித்தார். மெல்ல சிரித்தார்.
இளைஞருக்கு ஒன்றும் புரியவில்லை. முந்நூறு ஆண்டுகள் காலம் கடந்து, ரோம் நகரின் அங்காடியில், பழங்கால நாணயத்தையல்லவா அவர் நீட்டியிருந்தார்!
கடைக்காரர் இளைஞரின் கையைப் பிடித்துக்கொண்டு, “செல்லாக்காசைக் கொடுத்து என்னை ஏமாற்றவா பார்க்கிறாய்? "
" நானாவது ஏமாறுவதாவது! இந்த நாணயம் உனக்கு எப்படிக் கிடைத்தது? நிச்சயம் ஏதாவது புதையல்தான் உனக்குக் கிடைத்திருக்க வேண்டும். என்னுடன் வா.. அரசாங்க அதிகாரியிடம் செல்வோம்!” என்று மிரட்டினார்.

“அய்யா! நான் நேற்றுதான் இந்த ஊரிலிருந்து சென்றேன். அப்போது நான் வைத்திருந்த நாணயம் இது. அதற்குள் செல்லாக் காசாகிவிட்டது என்றால் எப்படி? பல நூறு ஆண்டுகளுக்கு முந்தையது என்று வேறு சொல்கிறீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. குழப்பமாக இருக்கிறது” என்றார் அந்த இளைஞர்.
“உனக்கு ஒன்றும் புரியாதுதான்! விசாரிக்க வேண்டிய முறைப்படி விசாரித்தால் எல்லா உண்மையும் வெளிப்பட்டுவிடும்” .
விசாரணையின் முடிவில் கொடுங்கோலர்களிடமிருந்து தங்கள் இறைநம்பிக்கையைப் பாதுகாத்துக்கொள்ள ஊர்துறந்து ஒரு குகையில் தஞ்சமடைந்ததாக அந்த இளைஞர் அரசனிடம் சொன்னார். அச்சம்பவத்தை ஊராரும் தங்கள் மூதாதையரிடமிருந்து கேள்விப்பட்டிருந்தார்கள்.
இளைஞர்கள் தங்கிய குகைக்கு முன்னால் பதிக்கப்பட்டிருந்த தகவல்களை ஊரார்கள் கண்டு அனைவரும் வியப்படைந்தார்கள்.
“முந்நூறு ஆண்டுகளா நாம் உறங்கிக் கிடந்தோம்!” என்று அந்த இளைஞர்களும் வியப்பில் ஆழ்ந்தனர். குகைக்கு வெளியே திரளாய் நின்றிருந்த மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள். இறைவனை துதித்தவாறு மீண்டும் படுத்துக்கொண்டார்கள். அந்த நிமிடமே அவர்களின் உயிரும் பிரிந்தது.
இம்மையில் மாண்டவர், மறுமையில் மீண்டெழுவது குறித்த விவாதத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அதற்கான உதாரணத்தை நேரில் கண்டார்கள்.
18-வது சூரா கஹ்ப் முழுவதுமே ஏகப்பட்ட தகவல்களால் இறக்கியருளப்பட்டிருக்கிறது என்பதை குர்ஆன் ஆய்வாளர்கள் கண்டு பிரமிக்கின்றனர்.

தகவல் பரிமாற்றம் 2

சுவடிகள் சொல்லும் தகவல்கள்



சொற்கள் வரிவடிவம் பெற்று எழுத்துக்கள் உருவாகியதும், தகவல் தொடர்பில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஏடுகள்கள் எழுதப்பட்டன. அன்றைய நாட்களில், அந்தந்தப் பகுதிகளில் கிடைத்த துணி, ஓலை, தோல், மரத்துண்டு போன்ற தளங்களில் எழுத்துக்கள் எழுதப்பட்டு மற்றவர்களுக்கு தகவல்கள் அனுப்பப்பட்டன.
சூரா கஹ்ப் அத்தியாயத்தில் குகைவாசிகள் என்று மட்டும் குறிப்பிட்டால் போதும். ஆனால் குகைவாசிகள் மற்றும் ஏட்டுக்குரியவர்கள் (சுவடிக்கு உரியவர்கள்) என்றும் அல்லாஹ் கூறுகிறான். குர்ஆன் (18:9)
அப்படியானால் ஒரு சுவடி இவர்களது வரலாற்றுடன் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். ஏதோ ஓர் ஏட்டை அவர்கள் வைத்திருந்தார்கள் என்பதற்காக மட்டும் இவ்வாறு நிச்சயமாகக் கூறப்பட்டிருக்காது. "அந்த ஏடு" என்று குறிப்பிட்டுச் சொல்வதென்றால்,அது ஒரு முக்கியமான ஏடாக இருக்க வேண்டும்.

அந்த ஏடு ஒரு காலத்தில் கண்டெடுக்கப்பட்டு மக்களுக்கு அதில் உள்ள தகவல் உண்மைகள் தெரிய வேண்டும் என்பதற்காகவே "**அந்த ஏட்டுக்குரியவர்கள்"** என்று அல்லாஹ் கூறியிருக்க முடியும். அந்த ஏடு யாருக்குமே கிடைக்காது என்றால் "அந்த ஏடு" என்று முக்கியத்துவப்படுத்தி இறைவன் கூறியிருக்க மாட்டான்.
அது என்ன சுவடி? அது என்ன ஏடு என்பதெல்லாம் பல வருடங்களாக உலகத்திற்குத் தெரியவில்லை. ஆனால் அந்த ஏடுகளில் இருந்த செய்திகள் இப்போது அம்பலமாகியுள்ளன.
"சாவுக்கடல் சாசனச் சுருள்கள்" என்ற தலைப்பில் **1998**ஆம் ஆண்டு ஒரு மாதத்தில் பல தடவை பி.பி.சி. தொலைக் காட்சியில் ஒரு மணி நேர நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பப்பட்டது. அதில் சொல்லப்பட்ட செய்திகள் கேட்போர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவதாக இருந்தது. இந்த நிகழ்ச்சியின் முதல் ஒளிபரப்பு 1993ஆம் ஆண்டிலேயே காட்டப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.
1947ஆம் ஆண்டு ஒரு நாள் ஆடு மேய்க்கும் ஓர் அரபுச் சிறுவன், காணாமல் போன தனது ஆட்டுக்குட்டி ஒன்றைத் தேடி சாவுக்கடலை ஒட்டிய ஜோர்டான் நாட்டு மலைப் பகுதிகளில் தேடி அலைந்தான். அந்த மலைப் பகுதி "கும்ரான் மலைப் பகுதி" என்று அழைக்கப்படுகிறது.

ஆட்டுக் குட்டியைத் தேடிய சிறுவன் அங்கிருந்த குகைக்குள் பார்த்த போது, மண் பாண்டங்களில் சுருட்டி நிரப்பி வைக்கப்பட்ட தோல் ஆவணங்களைக் கண்டிருக்கின்றான். அவைகளில் சிலவற்றை எடுத்து வந்து செருப்புத் தொழிலாளியான தன் தந்தையிடம் கொடுக்க, மறு நாள் தந்தையும், மகனும் சேர்ந்து குகைக்குள் இருந்த அனைத்துச் சுருள்களையும் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.
அந்தப் பழைய தோல்களைத் தமது செருப்புத் தொழிலுக்குப் பயன்படுத்த எண்ணிய அந்தச் சிறுவனின் தந்தை தோல்களில் ஹிப்ரு மொழியில் எழுதப்பட்டிருந்த வார்த்தைகளின் பொருள் புரியாமல், அதை அப்பொழுது ஜோர்டான் மன்னர் ஆட்சியின் கீழிருந்த கிழக்கு ஜெருஸலத்தைச் சேர்ந்த ஒரு பழைய புத்தகக் கடைக்காரரிடம் காண்பித்திருக்கிறார்.

ஓரளவு ஹிப்ரு மொழியறிந்த அந்தக் கடைக்காரர் அந்தச் சுருள்கள் பழங்காலச் செய்திகளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று கருதி, ஒரு சில தீனார்களுக்கு அத்தனை சுருள்களையும் அந்த செருப்புத் தொழிலாளியிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டார்.
கிறித்தவரான அந்தப் புத்தகக் கடைக்காரர் அந்தச் சுருள்களை அந்நகரில் இருந்த கிறித்தவ ஆலயத்தில் ஒப்படைத்து விட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் சுருள்கள் கண்டெடுக்கப்பட்ட விஷயம் வெளிப்பட்டது. அதில் உள்ள செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கு யூதர்களும், முஸ்லிம்களும் ஆர்வம் காட்டினர்.
அப்போது ஜோர்டானை ஆட்சி செய்த மன்னர் ஹுசைன், "அந்தச் சாசனச் சுருள்கள் முஸ்லிம், யூத, கிறித்தவர்கள் அடங்கிய ஒரு குழுவிடம் பொதுவாக ஒப்படைக்கப்பட்டு அவை ஆராயப்பட வேண்டும்" என்று விண்ணப்பித்தார்.

ஆனால் கிறித்தவப் பாதிரியார்கள், "அது தனியார் சொத்து" என்று வாதிட்டு அதைப் பொதுவில் வைக்க மறுத்து விட்டனர். கிறித்தவர்களில் பல பொதுப்படைவாதிகளான அறிஞர்களுக்கும் கூட அவற்றைப் படிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.
இடைப்பட்ட ஐந்தாண்டு காலங்களில் ஜெருஸலத்தில் இருந்த பாதிரிமார்கள் சில குழுக்களை ஏற்படுத்தி கும்ரான் மலைப் பகுதிகளில் இருந்த குகைகளில் தேடியலைந்து அங்கிருந்த மிச்சமீதி சாசனச் சுருள்கள் அனைத்தையும் தங்கள் கைவசம் கொண்டு வந்து விட்டனர்.
1952ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அனைத்துச் சுருள்களும் கிறித்தவப் பாதிரிமார்கள் கையில் போய்ச் சேர்ந்து விட்டன. பதினைந்தாயிரம் (Manuscripts) கையெழுத்துப் பிரதிகள் இவ்வகையில் இருப்பதாக தற்பொழுது கணக்கிட்டு உள்ளனர்.

கடந்த ஐம்பதாண்டுகளுக்கு மேல் அந்த சாசனச் சுருள்களில் அடங்கிய செய்திகளை, ஒரு குறிப்பிட்ட கிறித்தவப் பாதிரிகள் அடங்கிய குழு இருட்டடிப்பு செய்து வந்தது.
பல கிறித்தவ அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் அதைப் படிப்பதற்கு ஆர்வம் கொண்டு கேட்ட போதெல்லாம், அவர்களுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டது.
சாசனச் சுருள்களைக் கைவசம் கொண்ட குழுவில் ஒருவர் இறக்க நேரிட்டால் அவருக்குப் பதில் அக்குழுவில் உள்ள மற்றவர்களால் சிபாரிசு செய்து, வேறொரு பாதிரியார் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவருக்கு மட்டுமே அதைப் படிப்பதற்கு உரிமை வழங்கப்பட்டு வந்தது.
இவ்விதமாகவே இவ்வளவு காலமும் அந்தச் சாசனச் சுருள்களின் செய்திகள் ரகசியமாக வைக்கப்பட்டு வந்தன. இந்த இரகசியக் காப்பில் போப்பாண்டவரின் வாட்டிகன் சபை முன்னணியில் இருந்தது.
தோலில் பதிந்த அந்தப் பழங்காலச் சாசனம் அழிந்து விடும் நிலையைக் கண்ட அதன் ரகசியக் காப்பாளர்கள் அச்சாசனங்களை மைக்ரோ பிலிம் Microfilm (நுண்ணிய படச்சுருள்) எடுத்தார்கள்.
அதன் ஒரு செட் போட்டோ காப்பிகள் அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருக்கும் ஒரு நூலகத்துக்குப் பாதுகாப்புக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு அந்த நூலகத்துக்குத் தலைவராக ஐஸ்மேன் என்ற அறிஞர் நியமிக்கப்பட்டார். அவர் முன்பே அந்த சாசனச் சுருள்களைப் படிப்பதற்கு ஆர்வம் காட்டி, அதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டவர்.
இப்போது தனது அதிகாரத்தில் உள்ள நூலகத்தில் இருந்து சாசனச் சுருள்களின் நுண்ணிய போட்டோக்களைப் பெரிய அளவில் போட்டோ எடுக்கச் செய்து அவற்றைப் படித்தார்.
அவற்றைப் படித்த போது தமக்கு வியப்பு ஏற்பட்டதாக வாக்குமூலம் அளிக்கின்றார். இத்தனை காலமும் கிறித்தவசபை அந்த சாசனச் சுருள்களை மற்றவர்களுக்குக் காட்டாமல் இருந்ததன் உள்நோக்கம் என்ன என்பதையும் புரிந்து கொண்டதாகக் கூறுகின்றார்.

மைக்கேல் வைஸ் என்னும் சிகாகோ பல்கலைக் கழக ஹிப்ரு மொழிப் பேராசிரியர் ஒருவரின் உதவியைக் கொண்டு அந்த சாசனச் சுருள்களில் பதினைந்தாயிரத்தில் முக்கியமானது என்று அவர் கருதிய 100 (கையெழுத்துப் பிரதி)களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து வெளியிட்டார்.
அந்தப் புத்தக வெளியீடு கிறித்தவ உலகத்தை உலுக்கியது என்றும், குறிப்பாக கிறித்தவ மத ஆலயங்கள் பேரதிர்ச்சியில் உறைந்து போயின என்றும் அந்த டாக்குமென்டரியின் செய்தியாளர் கூறுகின்றார்.
மேற்கத்திய மக்களின் மத நம்பிக்கையைத் தகர்ப்பதாக அந்தப் புத்தக வெளியீடு இருந்தது என்றும், ஆகவே அந்த இரு அறிஞர்களும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற அச்சம் இருந்தது என்றும் அதன் செய்தியாளர் குறிப்பிடுகிறார்.
அப்படி எது நடந்தாலும் அதைத் தாங்கள் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், இதற்கு அஞ்சி ஒரு மிகப் பெரும் பேருண்மையை உலகத்திலிருந்து தாங்கள் மறைக்க விரும்பவில்லை என்றும் அவ்விரு அறிஞர்களும் வெளிப்படையாகக் கூறுவதையும் அந்தத் தொலைக்காட்சி டாக்குமெண்டரி பதிவு செய்து காட்டுகின்றது.

கிறித்தவ மத ஆலயங்களில் இப்போது ஏசுவின் பெயரால் செய்யப்படும் மதச் சடங்குகளும், வழிபாடுகளும் ஆரம்ப கிறித்தவர்களிடையே நடைபெறவில்லை என்பதையே சாசனச் சுருள்கள் நிரூபிக்கின்றன.
இந்தச் சடங்குகளுக்கும், ஏசுவின் பிரச்சாரத்திற்கும், கொள்கை கோட்பாடுகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவை அனைத்தும் "பவுல்" என்பவரால் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை.
மொத்தத்தில் இப்போது ஏசுவின் பெயரால் சொல்லப்படும் அனைத்து கிறித்தவக் கொள்கைகளும் பொய்யானவை. அவற்றை ஏசுவிற்கு அடுத்த தலைமுறையில் வாழ்ந்த உண்மையாளர்களின் வாழ்வில் காண முடியவில்லை.
மேற்கண்டவாறு அறிஞர் ஐஸ்மேன் கூறும் போது, ஒரு யூதரிடம் அவற்றைப் பற்றி வாதம் செய்கையில், ஏகத்துவம் கூறும் இஸ்லாத்தை உறுதிப்படுத்துகிறது என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். அவ்விடத்தில் அந்த வாதம் நிறுத்தப்பட்டு மறு காட்சி காட்டப்படுகின்றது.
இதே முறையில் மைக்கேல் வைஸ் என்ற அறிஞரும் பேசும் போது, அது ஏகத்துவத்தை போதிக்கும் இஸ்லாத்தை உறுதிப்படுத்துகின்றது என்று கூறுகிறார். இங்கும் காட்சி மாற்றப்படுகின்றது.
ஆகவே இந்தச் சாசனச் சுருள்கள் எந்த வகையில் குர்ஆனையும், இஸ்லாத்தையும் உண்மைப்படுத்துகின்றன என அவர்கள் கூறுகிறார்கள் என்பதைப் பார்வையாளர்கள் அறிய முடியவில்லை.

அந்தச் செய்தியிலிருந்து நாம் ஆச்சரியமான ஓர் உண்மையைத் தெரிந்து கொள்கிறோம்.

ஈஸா (அலை) அவர்களுக்கு இறைவன் இஞ்ஜீல் எனும் வேதத்தை வழங்கியதாகத் திருக்குர்ஆன் பல இடங்களில் கூறுகின்றது. ஆனால் கிறித்தவ சமுதாயத்திடம் அந்த வேதம் நிச்சயமாக இல்லை எனலாம்.
ஏனெனில் பைபிளின் புதிய ஏற்பாடு என்பது இயேசுவுக்குக் கடவுள் வழங்கியதன்று. மாறாக ஏசுவைப் பற்றி மற்றவர்கள் எழுதிய குறிப்புகள் தான் புதிய ஏற்பாடு.
"ராஜ்ஜியத்தின் சுவிஷேசத்தை இயேசு பிரசங்கித்தார்" என்று பைபிளில் கூறப்பட்டுள்ளது. (பார்க்க: மத்தேயு 4:23, மாற்கு 1:14)
எந்த இறை வேதத்தை மறைத்தார்களோ அதைத் தான் இயேசுவின் வழி வந்த நல்ல மனிதர்கள் தங்களுடன் எடுத்துச் சென்று குகையில் தங்கினார்கள் என்று முடிவு செய்யப் போதுமான காரணம் இருக்கிறது.
"குர்ஆனை ஒத்திருக்கின்றது" என்பது தான் அந்தச் சுருள்களைப் படித்த கிறித்தவ அறிஞர்களின் கருத்தாகும்.
இஞ்ஜீல் எனும் வேதத்தைக் திருக்குர்ஆன் மெய்ப்பிப்பதாக திருக்குர்ஆனும் பல இடங்களில் குறிப்பிடுகின்றது.
அதை வாசித்த பாதிரியார்கள் திட்டமிட்டு மறைத்ததும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகின்றது.
மனிதர்களால் எழுதப்பட்ட ஏட்டுக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளித்து இறைவன் கூறியிருக்க மாட்டான் என்பதும் இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

தகவல் பரிமாற்றம் 3

ஒலி வழித் தகவல்கள்



தகவல் தொடர்பிற்கு அந்த நாட்களில் சில வழிமுறைகளும் கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் முதல் நிலையில் உள்ளது தோல் கருவிகளால் ஒலி எழுப்பப்பட்டு செய்யப்பட்ட தகவல் பரிமாற்றமாகும்.
இன்று பயன்பாட்டில் உள்ள பேரிகைகள், மத்தளங்கள் , நவரா போன்ற தோல் கருவிகளால் ஒலி எழுப்பப்பட்டது. மகிழ்ச்சி, ஆபத்து, போர், வரவேற்பு போன்ற நேரங்களிலெல்லாம் அந்த நிகழ்விற்கு ஏற்ற ஒலிகளை எழுப்ப இந்தத் தோல் கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் யுத்த காலங்களில் எழுப்பப்படும் போர் முரசு பிரசித்திப்பெற்றது.
தமிழ்நாட்டில், குறுநில மன்னராக இருந்த வீரபாண்டிய கட்டபொம்மன் இதுபோன்ற ஒரு வசதியை பயன்படுத்தியுள்ளதாக வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர்.
தனது நகரான பாஞ்சாலங்குறிச்சிக்கும், தான் வணங்கிய முருகக் கடவுளின் ஊரான திருச்செந்தூருக்கும் இடையே பெரிய மணிகளை நிறுவியுள்ளார்.
திருச்செந்தூர் கோவிலில் பூசை செய்யப்படும் நேரத்தில் மணியடிக்கப்படுகிறது. அந்த ஒலியைக் கேட்டு வரிசையாக உள்ள மணிகளை ஒலிக்கச் செய்துள்ளனர். அவற்றின் தொடர்ச்சியாக பாஞ்சாலங்குறிச்சியில் மணி ஒலி எழுப்பப்பட்டுள்ளது.

கோவில் பூசையை அறிந்து கட்டபொம்மன், தனது பூசைகளைச் செய்துள்ளார். கோவில் பூசை பற்றிய தகவல் மணி ஒலி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இன்றும் கோவில்களிலும், தேவாலயங்களில், மசூதிகளிலும் எழுப்பப்படும் ஒலி, ஊர்முழுக்கக் கேட்கிறது அல்லவா?
கோவிலுக்கு வரமுடியாதவர்கள் அந்த நேரத்தில், இருந்த இடத்திலிருந்தே இறைவனை வழிபடவும் தகவல் தொடர்பு வழிமுறை கையாளப்படுகிறது.
மாநபி (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வந்து குன்றுகள் சூழ்ந்த அந்த பாலைவன நகரில் பரவலாக பல்வேறு பகுதிகளில் குடியேறினர். குடிசைகள் கட்டி வாழ்ந்தனர்.
அவர்கள் தொழுகை நேரம் அறிந்து கூடி தொழ கூடுவதற்கு ஏற்பாடு செய்ய நிர்ப்பந்தம் உண்டானது. நபி (ஸல்) அவர்கள் தோழர்களிடம் ஆலோசனை சேட்டார்கள்.
சில தோழர்கள் கொடியை நட்டு தொழுகை நேரத்தை நினைவு படுத்தலாம் என்றனர். கொடி நடப்பட்டிருப்பதைத் தேடி வந்து பார்ப்பது எளிதன்று என்று ஏற்கபடவில்லை.
மணியடித்து அறிவிக்க சொன்ன ஆலோசனையும் கிறித்துவத்தில் கடைபிடிக்கப்படுவதால் நடைமுறையில் குழப்பம் ஏற்படுத்தும் என்று ஏற்கப்படவில்லை.
சிலர் கொம்பு வைத்து குழலூதுவது போல் சங்கு ஊத உரைத்தனர். யூத முறை என்பதால் இதுவும் ஏற்படையதல்ல என்று தள்ளப்பட்டது.
நெருப்பு மூட்டி நினைவுபடுத்துவது மஜூஸிகளின் வழக்கம் என்பதால் நிராகரிக்கப்பட்டது.

கைகளைத் தட்டி ஓசை எழுப்பி, அதன் மூலம் மக்களைத் தொழுகைக்கு அழைக்கலாமே என்றொரு யோசைனையும் பிறந்தது.

ஒருநாள் இரவு நபித்தோழர்களில் ஒருவரான அப்துல்லா பின் ஜைத் (ரலி) அவர்கள், தொழுகைக்கு மக்களை எப்படி அழைப்பது என்பது பற்றியதொரு கனவைக் காண்கின்றார்கள், அதனை இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் :
" எனது கனவில் இறையச்சமுள்ள மனிதர் ஒருவர் பச்சை ஆடைகளை அணிந்த நிலையில் தோன்றினார். அவரது கையில் கைக்கொட்டு ஒன்றை வைத்திருந்தார். நான் அந்த கைக்கொட்டை எனக்குத் தருமாறு கேட்டேன்.
அதற்கு அவர் எதற்காக அதனைக் கேட்கின்றீர்கள் என்று என்னிடம் கேட்டார்,
அதற்கு நான் முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைப்பதற்காக எனக்கு இது தேவைப்படுகின்றது என்று கூறினேன்.
அதற்கு அந்த மனிதர், தொழுகைக்கு அழைக்கும் நோக்கத்திற்கு இது பயன்படாது என்று கூறினார்.
அதற்கு நான், பின் எந்த முறையில்தான் மக்களை தொழுகைக்கு அழைப்பது என்று கேட்டேன்.
அதற்கு அந்த மனிதர், பள்ளியின் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் நின்று கொண்டு, உரத்த சப்தமிட்டு, அல்லாஹ் மிகப் பெரியவன் (அல்லாஹு அக்பர்) என்றும், இன்னும் நான் அல்லாஹ்வைத் தவிர வணக்கதிற்குரிய இறைவன் வேறு இல்லை என்றும், தொழுகைக்கு வாருங்கள் என்றும் கூறி மக்களைத் தொழுகைக்கு அழையுங்கள் என்று கூறினார்"".
அப்துல்லா பின் ஜைத் (ரலி) அவர்கள் கூறிய வண்ணம், மக்களைத் தொழுகைக்கு அழைக்குமாறு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.
தொழுகைக்கான நேரம் வந்ததும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களை அழைத்து, அப்துல்லா பின் ஜைத் (ரலி) அவர்கள் கூறியவாறு, மக்களைத் தொழுகைக்கு அழைக்குமாறு கூறினார்கள்.
உமர் (ரலி) அவர்களும் இந்தப் புதிய பாங்கின் ஓசையைத் தனது வீட்டிலிருந்து செவிமடுத்து விட்டு, தனது ஆடை இழுபட பள்ளியை நோக்கி விரைந்து வந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வருவதற்காக சற்று தாமதித்த உமர்(ரலி) அவர்கள், 'இறைத்தூதர் (ஸல்) அவர்களே...! இவ்வாறு மக்களை பாங்கின் மூலம் அழைக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது" என்று வினவினார்கள்.
அப்துல்லா பின் ஸைத் (ரலி) அவர்களின் கனவுதான், இந்த மாதிரியான முறையைப் பின்பற்றி மக்களைத் தொழுகைக்கு அழைக்க வேண்டும் என்ற உதிப்பைத் தந்தது, அதனை நானும் ஏற்றுக் கொண்டு, அவ்வாறே மக்களைத் தொழுகைக்கு அழைப்பு விடுக்குமாறு கேட்டுக் கொண்டேன்" என்றார்கள்
"நானும் இதே போன்றதொரு கனவைத் தான் கண்டேன், ஆனால் அப்துல்லா பின் ஸைத் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தில் என்னை முந்திக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் கண்ட கனவிற்கும் நான் கண்ட கனவிற்கு ஒரு வித்தியாசம் இருக்கின்றது என்று கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அந்த வித்தியாசம் என்ன என்று கூறுங்கள் என்று கேட்டுக் கொண்டதும், உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள் :
அப்துல்லா பின் ஸைத் (ரலி) அவர்களின் கூற்றுப்படி, "அல்லாஹ்வைத் தவிர வணங்கத்தக்க இறைவன் வேறு ஒருவன் இல்லை"என்று நான் சாட்சி கூறுகின்றேன், என்ற வாசகத்துடன், இன்னும் நான் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தூதர் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன்", என்ற வாசகத்தையும் நான் செவிமடுத்தேன் என்று கூறினார்கள்.
இதற்குப் பின், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களை அழைத்து, பாங்குடன் மேற்கண்ட "நான் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தூதர்" என்றும் நான் சாட்சி கூறுகின்றேன், என்றும் சேர்த்துக் கூறுமாறு கேட்டுக் கொண்டார்கள்.
பின்னர், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அப்துல்லா பின் ஸைத் (ரலி) மற்றும் உமர்(ரலி) அவர்களின் பக்கம் திரும்பி, "இறைவனுக்கே எல்லாப் புகழும். என்னைப் பின்பற்றும் என்னுடைய சத்தியத் தோழர்களுக்கு அல்லாஹ் கனவின் வழியாக உண்மையை அருள் செய்கின்றான்"என்று கூறினார்கள்.

தகவல் பரிமாற்றம் 4

பறவைகள் மூலம் கடிதத் தகவல்கள்



கடிதப் போக்குவரத்தில் முற்கால அரசர்கள் பயன்படுத்திய சிறப்பான தகவல் தொடர்பு சாதனம் புறாக்கள் ஆகும். இந்த அமைதிப் பறவையின் காலில் கட்டப்பட்டு அனுப்பப்படும் கடிதம், குறித்த நபருக்கு விரைவாகக் கொண்டு சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. இன்றும் இந்த புறாக்களைப் பயிற்றுவிப்பவர்கள் இந்தியாவில் உள்ளனர். சரியான வழியை கண்டுபிடித்து புறப்பட்ட இடத்திற்கு இந்தப் பறவைகள் வந்து சேர்வது இயற்கையின் விந்தைக்குரிய செயல்பாடுகளில் ஒன்றாகும்.

புறாவின் கால்களில் கடிதங்களைக் கட்டி அனுப்பும் அஞ்சல் சேவை உலகிலேயே இப்போது இந்தியாவின் ஒடிஷா மாநிலத்தில் மட்டும்தான் தொடர்கிறது. ஒடிஷா காவல்துறையில் இன்னமும் 50 புறாக்களுக்குத் தகுந்த பயிற்சியும், உணவும் அளித்து இதற்காகவே வளர்த்துவருகின்றனர்.

இந்த அரிய, பழங்காலக் கடிதப் போக்குவரத்து சேவையைக் கொண்டாடும் விதத்தில் கடந்த ஏப்ரல் 14-ல் புவனேஸ்வரத்திலிருந்து கட்டாக் நகருக்கு தகவல்களை அனுப்பினர். 25 கிலோ மீட்டர் தொலைவை 20 நிமிடங்களில் கடந்து, பார்வையாளர்களுக்கு உற்சாகம் ஊட்டின புறாக்கள். கலை, கலாச்சாரப் பாரம்பரியத்தைக் காப்பதற்கான இந்திய தேசிய அறக்கட்டளை இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடுசெய்திருந்தது.

தகவல் தொழில்நுட்பம் நவீனமடைந்துவிட்ட இக்காலத்தில் மின்னஞ்சல் சேவை உள்ளிட்ட எல்லாவித சாதனங்களும் விரல் நுனியில் காரியங்களைச் சாதிப்பதால் புறா விடு தூது பொதுவாக வழக்கொழிந்துவிட்டது.

இருந்தாலும், ஒடிஷா மாநிலத்தில் இந்தப் பாரம்பரியத்தை அறுத்து எறிய மனமில்லாமல் இன்னமும் தொடர்கிறார்கள். பெரிய புயல், சூறாவளி அல்லது அதுபோன்ற இயற்கைப் பேரிடர்களின்போது மின்சாரம் தடைபட்டால் விரைவாகவும் நிச்சயமாகவும் தகவல்களைக் கொண்டுபோய்ச் சேர்க்க புறாக்கள்தான் பயன்படுகின்றன.

ஒடிஷா காவல்துறையில் 1946-ல் 200 புறாக்களுடன் இந்த சேவை தொடங்கப்பட்டது. அதற்கும் முன்னால் இந்தப் புறாக்கள் ராணுவத்தின் அஞ்சல் சேவைப் பிரிவில் செயல்பட்டன. இவை யாரோ-யாருக்கோ எழுதிய கடிதங்களைக் கொண்டுபோய்க் கொடுக்காது. ஒரு ராணுவப் பாசறையிலிருந்து இன்னொரு பாசறைக்கோ, தலைமையிடத்துக்கோ அனுப்பும் ரகசியச் செய்திகளை வழி மாறாமல் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

இப்போதும் காவல்துறையினர் தங்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றத்துக்கு மட்டுமே இதை அடையாளத்துக்குப் பயன்படுத்துகின்றனர். வாகனங்களால் போக முடியாத வழிகளில்கூட இவை பறந்து செல்லும்.

முதலில் கோராபுட் மாவட்டத்தில்தான் இச்சேவை தொடங்கியது. பெல்ஜியம் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு பிறகு உள்நாட்டு இனங்களுடன் கலப்பினமாக்கப்பட்ட 700 புறாக்கள் இச்சேவையில் பயிற்சி பெற்றன.

எளிதில் அணுகமுடியாத தொலைதூரத்தில் இருந்த காவல் நிலையங்களுக்குத் தகவல் அனுப்ப இவைதான் பெரிதும் பயன்பட்டன. 1999-ல் பெரு வெள்ளம் ஏற்பட்டபோதும் புயல் வந்தபோதும் இந்தப் புறாக்கள் மிகவும் துடிப்பாகச் செயல்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதாலும் தகவல் தொடர்பு கோபுரங்கள் செயலிழந்ததாலும் ஏற்பட்ட தகவல் தொடர்பு இடைவெளியைப் புறா படைதான் இட்டு நிரப்பியது.

1982-ல் பங்கி என்ற சிறு நகரம் வெள்ளத்தால் சூழப்பட்டபோது அங்கிருந்த நிலைமையைக் காவல் துறை மூலம் பெற்றுவர இந்தப் புறாக்கள்தான் அனுப்பப்பட்டன. இந்தப் புறாக்கள் வெறும் தகவல்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் தூது வேலையைத்தான் செய்தன என்று நினைக்க வேண்டாம். சில குற்றவாளிகளை அவர்களுக்குத் தெரியாமலேயே பின்தொடர்ந்து கண்காணித்து பிடித்தும் கொடுத்துள்ளன!

புறாவின் கால்களில் கடிதங்களைக் கட்டி அனுப்பும் அஞ்சல் சேவை உலகிலேயே இப்போது இந்தியாவின் ஒடிஷா மாநிலத்தில் மட்டும்தான் தொடர்கிறது. ஒடிஷா காவல்துறையில் இன்னமும் 50 புறாக்களுக்குத் தகுந்த பயிற்சியும், உணவும் அளித்து இதற்காகவே வளர்த்துவருகின்றனர்.


இந்த அரிய, பழங்காலக் கடிதப் போக்குவரத்து சேவையைக் கொண்டாடும் விதத்தில் கடந்த ஏப்ரல் 14-ல் புவனேஸ்வரத்திலிருந்து கட்டாக் நகருக்கு தகவல்களை அனுப்பினர். 25 கிலோ மீட்டர் தொலைவை 20 நிமிடங்களில் கடந்து, பார்வையாளர்களுக்கு உற்சாகம் ஊட்டின புறாக்கள். கலை, கலாச்சாரப் பாரம்பரியத்தைக் காப்பதற்கான இந்திய தேசிய அறக்கட்டளை இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடுசெய்திருந்தது.

தகவல் தொழில்நுட்பம் நவீனமடைந்துவிட்ட இக்காலத்தில் மின்னஞ்சல் சேவை உள்ளிட்ட எல்லாவித சாதனங்களும் விரல் நுனியில் காரியங்களைச் சாதிப்பதால் புறா விடு தூது பொதுவாக வழக்கொழிந்துவிட்டது.
இருந்தாலும், ஒடிஷா மாநிலத்தில் இந்தப் பாரம்பரியத்தை அறுத்து எறிய மனமில்லாமல் இன்னமும் தொடர்கிறார்கள். பெரிய புயல், சூறாவளி அல்லது அதுபோன்ற இயற்கைப் பேரிடர்களின்போது மின்சாரம் தடைபட்டால் விரைவாகவும் நிச்சயமாகவும் தகவல்களைக் கொண்டுபோய்ச் சேர்க்க புறாக்கள்தான் பயன்படுகின்றன.
ஒடிஷா காவல்துறையில் 1946-ல் 200 புறாக்களுடன் இந்த சேவை தொடங்கப்பட்டது. அதற்கும் முன்னால் இந்தப் புறாக்கள் ராணுவத்தின் அஞ்சல் சேவைப் பிரிவில் செயல்பட்டன. இவை யாரோ-யாருக்கோ எழுதிய கடிதங்களைக் கொண்டுபோய்க் கொடுக்காது. ஒரு ராணுவப் பாசறையிலிருந்து இன்னொரு பாசறைக்கோ, தலைமையிடத்துக்கோ அனுப்பும் ரகசியச் செய்திகளை வழி மாறாமல் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

இப்போதும் காவல்துறையினர் தங்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றத்துக்கு மட்டுமே இதை அடையாளத்துக்குப் பயன்படுத்துகின்றனர். வாகனங்களால் போக முடியாத வழிகளில்கூட இவை பறந்து செல்லும்.
முதலில் கோராபுட் மாவட்டத்தில்தான் இச்சேவை தொடங்கியது. பெல்ஜியம் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு பிறகு உள்நாட்டு இனங்களுடன் கலப்பினமாக்கப்பட்ட 700 புறாக்கள் இச்சேவையில் பயிற்சி பெற்றன.
எளிதில் அணுகமுடியாத தொலைதூரத்தில் இருந்த காவல் நிலையங்களுக்குத் தகவல் அனுப்ப இவைதான் பெரிதும் பயன்பட்டன. 1999-ல் பெரு வெள்ளம் ஏற்பட்டபோதும் புயல் வந்தபோதும் இந்தப் புறாக்கள் மிகவும் துடிப்பாகச் செயல்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதாலும் தகவல் தொடர்பு கோபுரங்கள் செயலிழந்ததாலும் ஏற்பட்ட தகவல் தொடர்பு இடைவெளியைப் புறா படைதான் இட்டு நிரப்பியது.
1982-ல் பங்கி என்ற சிறு நகரம் வெள்ளத்தால் சூழப்பட்டபோது அங்கிருந்த நிலைமையைக் காவல் துறை மூலம் பெற்றுவர இந்தப் புறாக்கள்தான் அனுப்பப்பட்டன. இந்தப் புறாக்கள் வெறும் தகவல்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் தூது வேலையைத்தான் செய்தன என்று நினைக்க வேண்டாம். சில குற்றவாளிகளை அவர்களுக்குத் தெரியாமலேயே பின்தொடர்ந்து கண்காணித்து பிடித்தும் கொடுத்துள்ளன!
குர்ஆனில் நபி சுலைமான் (அலை) அவர்கள் பறவை விடு தூதாக ஹுத் ஹுத் பறவை அனுப்பியதாக ....
ஸபா நாட்டு அரசிக்கு ஸுலைமான் (அலை) அவர்கள் இஸ்லாமிய அழைப்பை ஏந்திய கடிதத்தை ஹுத் ஹுத் என்ற கொண்டாலாத்தி பறவையிடம் கொடுத்து அனுப்பினார்கள்.
அது கொண்டு சென்று அரசியின் மாளிகையில் கொண்டு போட்டது. அதைப் பிரித்துப் படித்து விட்டு அந்த அரசி உடனடியாக தம் அரசவைக் கூட்டத்தைக் கூட்டி தம் அரசவைப் பிரதானிகளிடம் விவாதிக்க ஆரம்பித்த போது...
" அரசவைப் பிரமுகர்களே! மிக முக்கியமான, கண்ணியம் நிறைந்த கடிதம் ஒன்று என்னிடம் போடப்பட்டுள்ளது. அது ஸுலைமான் என்பவரிடமிருந்து வந்துள்ளது. மேலும், அருளாளன் அன்பாளன் அல்லாஹ்வின் திருப்பெயரால் அது தொடங்கப்பட்டுள்ளது. எனக்கு எதிராக நீங்கள் ஆணவத்துடன் நடந்து கொள்ளாதீர்கள். முஸ்லிம்களாய் – பணிந்தவர்களாய் என்னிடம் வரவேண்டும்" எனும் வாசகம் அதில் உள்ளது."
சமுதாயத்தலைவர்களே! என்னுடைய இந்த விவகாரத்தில் நீங்கள் எனக்கு நல்லதொரு ஆலோசனையை வழங்க வேண்டும்!" (குர்ஆன்: 27:27-32) என்று கூறினார்.

தகவல் பரிமாற்றம் 5

கல்வெட்டுக் கூறும் தகவல்கள்



பண்டைக் காலத்தில் நீண்ட காலம் அழியாதிருக்க வேண்டும் எனக் கருதப்பட்ட செய்திகள் கற்களில் வெட்டப்பட்டன. இவ்வாறு கல்லில் பொறிக்கப்பட்ட செய்தியே கல்வெட்டு எனப்படுகின்றது. பெரும்பாலும், மன்னர்களின் ஆணைகள், அவர்கள் செய்த பணிகள் போன்றவை கல்வெட்டுக்களாகப் பொறிக்கப்பட்டன. இவை தவிர வீரர்கள், பிரபுக்கள், அதிகாரிகள் போன்றோர் தொடர்பிலும், முக்கிய நிகழ்வுகள் தொடர்பிலும் கல்வெட்டுக்கள் உள்ளன.

கல்வெட்டுக்கள், பெரும்பாலும் பொதுமக்கள் பார்ப்பதற்காக வெட்டப்படுவதால் இவை பொது இடங்களிலேயே அதிகம் காணப்படுகின்றன. கோயில்கள், குகைகள், பொது மண்டபங்கள், வெற்றித் தூண்கள், நடுகற்கள் எனப்படும் இறந்தோர் நினைவுக் கற்கள் என்பவற்றில் கல்வெட்டுக்களைக் காணலாம்.
கல்வெட்டுப் பொறிக்கும் வழக்கம் உலகின் பல பகுதிகளிலும் காணப்பட்டுள்ளது. தொல்லியல் ஆய்வுகள் இறந்துபட்ட அல்லது இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்வேறு மொழிகளிலுமான கல்வெட்டுக்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளன. கல்வெட்டுக்கள் பல ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கக் கூடியவை ஆதலால், மிகப் பழங்கால வரலாற்றுச் செய்திகள், நிகழ்வுகளுக்கான நம்பகமான சான்றுகளாக இவை திகழ்கின்றன. பல கல்வெட்டுக்கள் ஒரு மொழியில் மட்டுமன்றி, ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளிலும் ஒரே செய்தியைக் குறிக்கும்படி அமைந்துள்ளன.

இத்தகைய கல்வெட்டுக்கள் வழக்கொழிந்து மறக்கப்பட்டுவிட்ட மொழிகள் பலவற்றை வாசித்து அறியவும் அவற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் உதவுகின்றன.
பண்டை எகிப்திய மொழி இவ்வாறு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டதே. பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த கல்வெட்டுக்களை ஆய்வு செய்வதன் மூலம் எழுத்துக்களின் படிமுறை வளர்ச்சிகளையும் அறிந்துகொள்ள முடிகிறது.
எகிப்து நாட்டில் ஏழு வருடம் தொடர் பஞ்சம் ஏற்பட்டதையும், அப்பஞ்சத்திலிருந்து மக்களை பாதுகாக்க நபி யூசுப் (அலை) அவர்கள் செய்த யுக்தியையும் திருக்குர்ஆனில் இறைவன் பதிவு செய்துள்ளான் .
قَالَ تَزْرَعُوْنَ سَبْعَ سِنِيْنَ دَاَبًا فَمَا حَصَدْتُّمْ فَذَرُوْهُ فِىْ سُنْۢبُلِهٖۤ اِلَّا قَلِيْلًا مِّمَّا تَاْكُلُوْنَ
“நீங்கள் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு (நல்லபடியாக) விவசாயம் செய்வீர்கள்; பிறகு நீங்கள் அறுவடை செய்த - (விளைச்ச)லில், நீங்கள் உண்பதற்கு வேண்டிய ஒரு சிறிய அளவைத்தவிர, அதனை அதற்குரிய கதிர்களிலேயே விட்டு வையுங்கள்.
ثُمَّ يَاْتِىْ مِنْۢ بَعْدِ ذٰلِكَ سَبْعٌ شِدَادٌ يَّاْكُلْنَ مَا قَدَّمْتُمْ لَهُنَّ اِلَّا قَلِيْلًا مِّمَّا تُحْصِنُوْنَ
“பின்னும், அதற்கப்பால் கடினமான (பஞ்சத்தையுடை வருடங்கள்) ஏழு வரும்; நீங்கள் பஞ்சமான ஆண்டுகளுக்காக பத்திரப்படுத்தி முன்னமேயே வைத்திருப்பதில் சொற்ப (அளவை)த் தவிர மற்றதை அவை (அந்த பஞ்ச ஆண்டுகள்) தின்றுவிடும்.
ثُمَّ يَاْتِىْ مِنْۢ بَعْدِ ذٰلِكَ عَامٌ فِيْهِ يُغَاثُ النَّاسُ وَفِيْهِ يَعْصِرُوْنَ
பின்னும், அதற்கப்பால் ஓராண்டு வரும், அதில் மக்களுக்கு நல்ல மழை பெய்யும்; அதில் (விளையும் கனிகளிலிருந்து) அவர்கள் பழரசங்கள் பிழிந்து (சுகமாக) இருப்பார்கள்” என்று கூறினார்.
(அல்குர்ஆன்: 12:47 -49)
எகிப்தில் ஏற்பட்ட இந்த ஏழு ஆண்டு பஞ்சம் உண்மை தான் என்பதற்கான சான்று இன்றும் இருந்து வருகிறது அக்காலத்தில் வாழ்ந்த அரசி கருங்கல் ஒன்றில் ஹிப்ரு மொழியில் எழுதிய கல்வெட்டு இன்றும் லண்டன் பொருட்காட்சி சாலையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அக்கல்வெட்டில், எகிப்தில் ஏற்பட்ட ஏழாண்டு பஞ்சம் பற்றியும், நபியவர்கள் சமயோஜிதமாக சமாளித்து கடந்த விபரத்தையும் தெளிவாக பொறிக்கப்பட்டுள்ளது.
ரஹ்மத் ராஜகுமாரன்

தகவல் பரிமாற்றம் 6

கடிதங்கள் மூலம் தகவல்கள்.



நாட்கள் மாறி, நவீன தொழில்நுட்பங்கள் உருவாக்கிக் கொடுத்த காகிதம் புழக்கத்திற்கு வந்தது. கடிதங்கள் எழுதும் பழக்கம் துவங்கியது. எழுதுபவரிடமிருந்து கடிதங்களைப் பெற்று உரிய நபரிடம் கொண்டு சேர்க்கும் அஞ்சல் சேவை உருவாக்கப்பட்டது;.
இதற்கான கட்டணங்களை பெறுவதற்கு பல்வேறு முறைகள் முயற்சிக்கப்பட்டன. இறுதியாக இன்றைய நாட்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற தபால் தலை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. உலகிற்கு இதனை அறிமுகப்படுத்தியவர்கள் தாங்களே என்பதால், இன்றும் தபால் தலையில் இங்கிலாந்து நாட்டின் பெயர் கொடுக்கப்படுவதில்லை. நாட்டின் பெயர் இல்லாத தபால் தலை ஒன்றைக் கண்டால் அது இங்கிலாந்து நாட்டினுடையது என்பதை அறிந்து கொள்ளலாம்.
ஓரிடத்தில் சேகரிக்கப்படும் கடிதங்களை மற்றொரு இடத்திற்கு, நாட்டிற்குக் கொண்டு செல்ல, குதிரைகள், உந்து வண்டிகள், கப்பல்கள், புகை வண்டிகள் என்று எல்லாவிதமான போக்குவரத்து முறைகளும் பயன்படுத்தப்பட்டன. நவீன மின்னணுச் சாதனங்கள், தொலை தொடர்பிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பிறகும் இந்தக் கடிதப் போக்குவரத்து இன்றும் உலகளவில் நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் பிரசித்தமான ஒற்றர் மூலம் அனுப்பப்பட்ட ரகசிய கடிதம்
மக்காவை நோக்கி இஸ்லாமியப் படை வருகிறது என்ற செய்தி இரகசியமாக இருக்க வேண்டும். மக்காவிற்குள் திடீரென நுழையும் வரை ஒற்றர்கள் மூலம் குறைஷிகளுக்கு இச்செய்தி தெரியாமல் இருக்க வேண்டுமென்று பார்த்துக் கொண்டார்கள் நபி(ஸல்) அவர்கள்.
அலீ (பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் அறிவித்தார்.
இறைத்தூதர்(ஸல்) அவர்கள் குதிரை வீரர்களான என்னையும், அபூ மர்ஸத் (கினாஸ் இப்னு ஹுஸைன்) அவர்களையும், ஸுபைர் இப்னு அவ்வாம் அவர்களையும், 'நீங்கள் 'ரவ்ளத்து காக்' என்னுமிடம் வரை செல்லுங்கள்; ஏனெனில், அங்கு (ஒட்டகச் சிவிகையில் இணைவைப்பவர்களில் ஒருத்தி இருக்கிறாள். இணைவைப்பவர்(களின் தலைவர்)களுக்கு ஹாதிப் இப்னு அபீ பல்தஆ அனுப்பியுள்ள (நம்முடைய ரகசியத் திட்டங்களைத் தெரிவிக்கும்) கடிதம் ஒன்று அவளிடம் இருக்கும்; (அவளிடமிருந்து கடிதத்தைக் கைப்பற்றி வாருங்கள்)' என்று கூறினார்கள்.
(பிறகு நாங்கள் புறப்பட்டுப் போனோம்.) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் அந்தப் பெண் தன்னுடைய ஒட்டகத்தில் சென்று கொண்டிருக்க, அவளை நாங்கள் அடைந்தோம். அவளிடம், 'கடிதம் (எங்கே? அதை எடு)' என்று கேட்டோம்.

அவள், 'எம்மிடம் கடிதம் எதுவுமில்லை' என்று பதிலளித்தாள். (அவள் அமர்ந்திருந்த) ஒட்டகத்தை நாங்கள் படுக்க வைத்து (அந்தக் கடிதத்தைத்) தேடினோம். எந்தக் கடிதத்தையும் நாங்கள் காணவில்லை. அப்போது, 'இறைத்தூதர்(ஸல்) அவர்கள் பொய் சொல்லமாட்டார்கள். ஒன்று, நீயாக கடிதத்தை எடு(த்துக் கொடு); அல்லது உன்னை(ச் சோதிப்பதற்காக உன்னுடைய ஆடையை) நாங்கள் கழற்ற வேண்டியிருக்கும்' என்று நாங்கள் சொன்னோம்.
விடாப் பிடியாக (நாங்கள்) இருப்பதை அவள் கண்டபோது, (கூந்தல் நீண்டு தொங்கும்) தன்னுடைய இடுப்புப் பகுதிக்கு அவள் கையைக் கொண்டு சென்றாள். அவள் ஒரு துணியை இடுப்பில் கட்டியிருந்தாள். (அங்கிருந்து) அ(ந்தக் கடிதத்)தை வெளியில் எடுத்தாள். அந்தக் கடிதத்துடன் இறைத்தூதர்(ஸல்) அவர்களை நோக்கி நடந்தோம்.
நபி(ஸல்) அவர்களின் முன்பு ஹாதிப் இழுத்து வரப்பட்டார். உமர்(ரலி), “ஹாதிப் துரோகமிழைத்துவிட்டார், ஆணையிடுங்கள் அவருடைய கழுத்தைக் கொய்துவிடுகிறேன்” என்று கூறினார். மிகப் பொறுமையுடன் நபி(ஸல்) அவர்கள் ஹாதிப்பை பார்த்து “ஏன் இப்படிச் செய்தீர்கள்?” என்று கேட்டார்கள்.
அதற்கு ஹாதிப் “நான் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் விசுவாசமில்லாதவனாக நடந்து கொள்ள வேண்டுமென்று இப்படிச் செய்யவில்லை. இணைவைப்பாளர்களுக்கு நான் செய்யும் இந்த உதவியால் எனக்கு அங்கு செல்வாக்கு கிடைக்கும், அதன் மூலம் மக்காவிலிருக்கும் என் மனைவியும் மக்களும் பாதுகாக்கப்படுவார்கள் என்று நம்பியே இக்காரியத்தைப் புரிந்தேன்.
நான் மக்காவில் வாழ்ந்தேனே தவிர நான் குறைஷியல்ல, என் குடும்பத்தைப் பாதுகாக்க எனக்கு அங்கு எந்தக் குறைஷி உறவினரும் இல்லை. உங்களுடைய தோழர்கள் அனைவருக்குமே மக்காவில் அவர்களின் குடும்பத்தையும் அவர்களின் செல்வத்தையும் பாதுகாப்பதற்கு அங்கு அவர்களது மற்ற உறவினர்கள் இருக்கின்றார்கள். எனக்கு அப்படி யாரும் அங்கில்லை” என்று கூறினார்.
இதைக் கேட்ட நபி(ஸல்) அவர்கள், “இவர் உண்மையைத்தான் சொல்கிறார் என்று நான் நம்புகிறேன்” என்று கூறினார்கள்.
இருப்பினும் கோபத்தில் கொந்தளித்த உமர்(ரலி), “இவர் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் இறைநம்பிக்கையாளர்களுக்கும் துரோகமிழைத்துவிட்டார், என்னை விடுங்கள், இவரின் கழுத்தைக் கொய்து விடுகிறேன்” என்று மீண்டும் கூறினார்கள்.
அப்போது நபி(ஸல்) அவர்கள், “இவர் பத்ருப் போரில் பங்கெடுத்தவர். பத்ரில் பங்கெடுத்தவர்களை நோக்கி அல்லாஹ், 'நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள். உங்கள் பாவங்களை நான் மன்னித்துவிட்டேன். உங்களுக்குச் சொர்க்கம் உறுதியாகிவிட்டது' என்று கூறியிருக்கிறான். உமரே! இவர் பத்ரில் கலந்து கொண்டவர் என்பது உனக்குத் தெரியுமா?” என்றார்கள்.
இதைக் கேட்ட உமர்(ரலி) ஸ்தம்பித்து நின்றார்கள். அவர்களின் கண்கள் கண்ணீர் உகுத்துக் கொண்டிருக்க, 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்' என்று கூறினார்கள். நபி(ஸல்) அவர்கள் ஹாதிப்பை மன்னித்து விடுவித்தார்கள்.
ஒற்றர்கள் வழியாகச் செய்தி செல்வதை அல்லாஹ் தடுத்துவிட்டான். குறைஷிகளுக்கு எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. முஸ்லிம்கள் போருக்கு தயாராகி மக்காவிற்குப் புறப்பட்டனர். ஸஹீஹ் புகாரி 3983

தகவல் பரிமாற்றம் 7

(தகவல்கள் உயிர்நாடி)



ஓர் ஆராய்ச்சி நடந்தது.
மொத்தம் மூன்று நாய்க்குட்டிகளை கொண்டுவந்தார்கள். மூன்று நாய்க்குட்டிகளையும் வெவ்வேறு தொட்டிலில் படுக்க வைத்தார்கள். தொட்டிலுக்குள் குட்டிகளை படுக்க வைத்துவிட்டு மூடிவிடவேண்டும். காற்று உள்ளே போவதற்கு தனி குழாய் உண்டு. மேலும் இரண்டு குழாய்கள் ஒன்று உணவு , மற்றொன்று தண்ணீருக்காக பொருத்தப்பட்டுள்ளன.
ஆராய்ச்சி இதுதான் ! தொட்டிலுக்குள் நாய் குட்டிகளை படுக்க வைத்து விட்டு, தொட்டிலை மூட விடவேண்டும்.
வேளாவேளைக்கு உணவு, காற்று, தண்ணீர் இவைகளை தவிர நாய்க்குட்டிகளுக்கு வேறு எதுவும் தேவைப்படுமா ?
இதுதான் அவர்கள் கண்டுபிடிக்க விரும்பினார்கள். ஆராய்ச்சியின் முடிவு அவர்களை அதிர்ச்சியடைய வைத்தது.
முதலில் ஆராய்ச்சி விவரங்கள். முடிவு பிறகு !
நாய்க்குட்டிகள் படுத்து இருக்கும் மூன்று தொட்டில்களையும் மூன்று குழுக்கள் கண்காணிக்க வேண்டும். மூன்று குழுக்கள் என்ன செய்ய வேண்டும் என்று விளக்கினார்கள்.
முதல் குழு,தொட்டிலை எப்போது வேண்டுமானாலும் திறந்து நாய் குட்டியை வெளியே தூக்கி தடவி கொடுக்கலாம். மெலிதாக வருடி விடலாம் . ஆசை தீர கொஞ்சலாம். முடிந்த பின் மீண்டும் குட்டியை தொட்டிலுக்குள் வைத்து மூடி விட வேண்டும். இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை இப்படி செய்ய வேண்டும்.
இரண்டாவது குழு, இரண்டாவது தொட்டிலை திறந்து குட்டியை தூக்கவேண்டும். கொஞ்சம் கூடாது .மாறாக ஒவ்வொரு முறையையும் நாய்க்குட்டியை லேசாக துன்புறுத்த வேண்டும். லேசாக அடிக்கவேண்டும்.
மூன்றாவது குழு, மூன்றாவது தொட்டியை திறக்கக்கூடாது அந்த நாய்க்குட்டிக்கு யாரிடமும் எந்த தொடர்பும் இருக்கக் கூடாது.
சில நாட்கள் கழிந்தன. ஆராய்ச்சி முடிவை தெரிந்து கொள்ள வேண்டிய நாள் வந்தது.
முதல் தொட்டிலை திறந்தார்கள். வெளியே வந்த நாய் ஆரோக்கியமாக இருந்தது. மகிழ்ச்சியுடன் வாலை ஆடிக்கொண்டிருந்தது.
இரண்டாவது தொட்டிலை திறந்தார்கள். அதிலிருந்த நாய்க்குட்டியின் கண்களில் கொஞ்சம் பயம். கொஞ்சம் வன்மம் தெரிந்தது. தொட்டிலின் மூடியை திறக்கப்படுகிறது என்று தெரிந்ததும் உள்ளே கொஞ்சம் பதுங்கிவிட்டு பிறகு திடீரென்று மூடியைத் திறந்தவரின் கையை கடிக்க முயன்றது.
மூன்றாவது தொட்டிலை நெருங்கினார்கள்.
அனைவருக்கும் இந்த நாய்க்குட்டியைப் பார்க்கவேண்டும் போல் இருந்தது. ஏனென்றால் அவர்கள் அந்த நாய்க்குட்டியை நீண்ட நாட்களாக பார்த்ததே இல்லை. அது எப்படி இருக்கும் என்றும் ஒருவருக்கும் தெரியாது மகிழ்ச்சியாக..? சோகமாகவா..? மிகுந்த ஆர்வத்துடன் தொட்டிலைத் திறந்தார்கள்.
உள்ளே அந்த நாய் செத்து கிடந்தது.
ஆராய்ச்சியாளர்களுக்கு அதிர்ச்சி. இதே ஆராய்ச்சியில் வேறு பல நாய்க்குட்டிகளை வைத்து செய்து பார்த்தார்கள். முடிவுகள் மாறுபடவில்லை. மூன்றாவது தொட்டிலில் வைக்கப்பட்ட நாய் குட்டிகள் அனைத்தும் செத்துப் போயின. நாய்க்குட்டிக்குப் பதிலாக பூனைக்குட்டிகளை பயன்படுத்தி பார்த்தார்கள்.
அதே முடிவுதான் !
மற்ற இரண்டு நாய் குட்டிகளுக்கு கிடைத்த அதே ஆகாரம் தான் இதற்கும் கிடைத்தது .எனில், இந்த குட்டி ஏன் இறந்தது ?
மூடிய தொட்டில் மூடியபடியே இருந்ததுதான் இதற்குக் காரணம்.
அந்தப் பரிதாபகரமான குட்டி - யாரையும் பார்க்கவில்லை, யாருடனும் பேசவில்லை. உறவாட வில்லை . அதனால் இறந்துவிட்டது.
ஆக, தொடர்பு கொள்வது மிக மிக முக்கியமானது என்பது தெரிய வருகிறது. இல்லையா ?
சரி, நாய்க்குட்டிகளை வைத்து செய்த இந்த ஆராய்ச்சிக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் ?
ஒரு விஷயம் அனாதை இல்லங்களில் குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகம் .
ஜீவராசிகள், பறவைகள் மற்றும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அத்தனை பேருக்குமே தகவல் பரிமாற்றம் இன்றியமையாதது. இது ஒரு சேவை மட்டுமல்ல மனிதர்களின் உயிர் நாடியும் கூட !
சுவர்க்கத்தில் எல்லா வசதிகளும், சந்தோஷங்கள் இருக்கும் கூடவே சாந்தியும் சமாதானமும் கொண்ட நல்ல தகவல்களும் இருந்து கொண்டே இருக்கும் .

اِلَّا قِيْلًا سَلٰمًا سَلٰمًا
“ஸலாம், ஸலாம்” என்னும் சொல்லையே (செவியுறுவார்கள்).
(அல்குர்ஆன்: 56:26)
وَاُدْخِلَ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا بِاِذْنِ رَبِّهِمْ تَحِيَّتُهُمْ فِيْهَا سَلٰمٌ
-அங்கு அவர்களுடைய காணிக்கையாவது “ஸலாமுன் (சாந்தியும் சமாதானமும் உண்டாகுக!”) என்பதாகும். (அல்குர்ஆன் : 14:23)
தகவல்கள் உயிர்நாடி.


தகவல் பரிமாற்றம் 8

(நாலாவது ஒன்று)



மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, வீடு பொதுவாக இந்த மூன்றையும் தான் சொல்வார்கள். நான்காவதாக ஒரு தேவை இருக்கிறது .அது பேசுவதும் கேட்பதும். அதாவது தொடர்பு கொள்ளுதல்.
இந்த பேசுவதும், கேட்பதும்தானே என்று சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. அது நம் மனநிலையை மாற்றியமைக்கும் வல்லமை கொண்டது.உயிர் வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிப்பது .
நம்ம ஊரில் பிரபல ஓவியர் ஒருவர், ஆஸ்திரேலியாவில் இருக்கும் தமது மகன் வீட்டுக்கு போனார். பிரம்மாண்டமான நாடு, பெரிய வீடு, தேவைப்படும் அத்தனை வசதிகளும் கிடைக்கும். ஆனால் , சில நாட்களிலேயே அவர் தன் மகனிடம் நச்சரிக்க ஆரம்பித்து விட்டார்.
" நான் திரும்ப ஊருக்கு போறேன்பா "
மகனுக்கு புரியவில்லை .
" அதுக்குள்ள என்னப்பா அவசரம்? "
" இல்லப்பா எனக்கென்னவோ ஊருக்கு போகணும் போல இருக்கு "
" வேளாவேளைக்கு நல்ல சாப்பாடு. உங்களுக்குன்னு தனி ரூம் , ஏசி ,கம்ப்யூட்டர், இன்டர்நெட், கார் இப்படி சகல சௌகரிங்களும் இங்கே இருக்கிறது. இதை எல்லாத்தையும் விட்டுவிட்டு, கிராமத்திற்கு போறேன்னு ஏம்ப்பா அடம் பிடிக்கிறீங்க ?"
அவர் பிரச்சினை என்னவென்று பிறகுதான் மகனுக்கு புரிந்தது.
பேசுவதற்கு ஆள் இல்லை . வீடு, ஏசி, கார் எல்லாம் இருந்து என்ன பிரயோஜனம் ? மனம் விட்டுப் பேச யாரும் இல்லை.
ஏரோபிளேன் பிடித்து, இந்தியா வந்து, ஏர்போர்ட்டில் இருந்து பஸ் பிடித்து, கூட்டத்தில் வியர்வை பொங்க, வீட்டிற்கு வந்து சேர்ந்த உடன் தான் அவருக்கு 'அப்பாடா 'என்று உயிரே வந்தது.
அதே மாதிரி வயோகத்தில் மனைவி இழந்த கணவரும் சொற்ப நாளிலே மனநிலை பாதிக்கப்படுகிறார்கள். சீக்கிரமே மரணத்தின் விளிம்பிற்கு வந்து சேருகிறார்கள் என்பதாக ஓர் உளவியல் ஆய்வு கூறுகிறது .
" பேச்சு துணைக்கு நபரில்லை.
பேசுவதற்கே பிடிக்கவில்லை..
துவளும்போது தூக்க ஆளில்லை..
அழும்போது உன் ஆறுதல் அருகிலில்லை;
சிரித்தப்படி மிரட்ட நீயில்லை..
உண்ண சொல்லி கெஞ்ச அரவமில்லை..
ஏன் முந்தி சென்றாய் எனை நீ..!
#வயோதிகம்..
பேசுவதும், கேட்பதும்தானே என்று சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. அது நம் மனநிலையை மாற்றியமைக்கும் வல்லமை கொண்டது .உயிர் வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிப்பது.

தகவல் பரிமாற்றம் 9
(மனிதனை உற்பத்தி செய்யும் தகவல்கள்)



மனித உடலின் ஒவ்வொரு அங்கமும் எப்படி உருவாகிறது என்ற தகவல்கள் அவனுடைய செல் என்னும் உயிரணுவில் செய்தியாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது, பேப்பர் பென்சிலால் அல்ல ; குரோமோசோம்கள் என்னும் மிக நீண்ட கூட்டணு கட்டமைப்பில் அந்த ரகசியம் பொதிந்து இருக்கிறது .
இந்த உருவாக்கும் தகவல் புத்தகத்தைப் படித்தால் எப்படி இருக்கும் ? சுவாரஸ்யமில்லாத ATGCCAGGCCAGGAC இப்படியே 300 கோடி எழுத்துக்கள். இதில் இந்த தகவலை வைத்து தலைகால் புரிந்துகொண்டு,என்னத்தைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்று நீங்கள் வியக்கலாம். இதில் ஒவ்வொரு எழுத்தும் ஒரு கூட்டணுயைக் குறிக்கிறது .
அடினைன் (A) தயோமைன் (T) சைட்டோசைன் (C) குவானின் (G) என்ற 4 புரோட்டீன்களால் அடுக்கப்பட்டு ஒவ்வொரு உடல் அங்கமும் படைக்கப்பட்டிருக்கிறது
டி.என்.ஏ என்பது என்ன ?
ஒரு மனிதனை படைப்பதற்கான செய்முறைக் குறிப்புகள் . அது எப்படி எழுதப்பட்டிருக்கிறது ? நான் சற்று முன் சொன்ன மாதிரி ATCG என்ற நான்கெழுத்து சரங்களாக.
இதை சற்று புரியும்படி சொல்றேன் .
நம் உடம்பு ஒரு மிகப் பெரிய கட்டடம் என்று வைத்துக் கொண்டு இந்தப் படிமத்தை கொஞ்சம் தொடரலாம் .
உடம்பெனும் கட்டிடத்தில் எத்தனையோ அறைகள் இருக்கின்றன . ஒவ்வொரு அறையிலும் ஒரு புத்தக அலமாரி இருக்கிறது . அந்த புத்தக அலமாரி ஒவ்வொன்றிலும் பல பாகங்கள் கொண்ட ஒரு புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது .
அந்தப் புத்தகத்தின் உள்ளடக்கம் என்ன? முழுக் கட்டடத்தை உருவாக்கும் திட்டம் , அதற்கான செயல் முறைகள் ஒவ்வொரு அறையிலும் ஒரே புத்தகத்தின் ஒரு செட் பிரதிகள் .
இதில் மனிதன் கட்டிடம், அறைகள் அவன் செல்கள் , அலமாரி ஒரு செல்லின் உட்கரு அதாவது நியூக்ளியஸ்..., புத்தகம் டி.என்.ஏ புத்தகம் 46 பாகங்கள் கொண்டது .இந்த பாகங்களைத்தான் குரோமோசோம்கள் என்று சொல்கிறோம் மொத்தம் 23 ஜோடிகள் 46 குரோமோசோம்கள் மைக்ரோஸ்கோப் நுண்ணோக்கி வழியாகப் பார்த்தால் நீண்ட நூலேணி போல் தெரிகிறது .
மனிதன் - கட்டிடம்
செல்கள் - அறைகள்
செல்லின் உட்கரு நியூக்ளிஸ் _ அலமாரி
டி.என்.ஏ - புத்தகம்
குரோமோஸோம்கள் - புத்தகத்தின் அத்தியாயங்கள்
ஜீன்கள் - பல்லாயிரக்கணக்கான கதைகள்.
எக்ஸான் - கதையின் ஒவ்வொரு பாரா
இன்ட்ரான்கள் - கதையின் இடையே விளம்பரம்
கோடான்கள் - ஒவ்வொரு பாராவின் தடித்த எழுத்துக்கள்
பேஸ் _ எழுத்து ATCG - இந்த 4 எழுத்துக்கள்தான் திரும்ப திரும்ப வரும். ஆனால் இதில் 3 எழுத்துக்கள் சேர்ந்து ஒரு வார்த்தையாகிறது .
நமது வாழ்க்கை புத்தகம் 100 கோடி வார்த்தைகளால் எழுதப்பட்டிருக்கிறது.
இதில் ஆச்சரியம் என்னவென்றால் இந்த வார்த்தைகள் தக்க சமயத்தில் தன்னைத்தானே பிரதியெடுத்துக் கொள்ளும். தன்னைத்தானே படிக்கவும் செய்யும் .
(உ-ம்) சமையல் செய்வது எப்படி ?
என்ற புத்தகம் அந்த அலமாரியில் இருப்பதாக வைத்துக்கொள்வோம் .

சமைப்பதற்குரிய சமையல் பொருட்களும் அதே அலமாரியில் வைக்கப்பட்டு தக்க சமயத்தில் அதுவாக சமைக்கப்பட்டும் விடும் (!)
"ஒரே புத்தகத்தின் பிரதிகளை ஒவ்வொரு அறையிலும் வைத்தவர் யார்? அந்த புத்தகத்தை எழுதியவர் யார்? " என்ற கேள்வி உடனே உங்களுக்கு எழும்
இதற்கு பதில் ஸாரி ..யாரும் இல்லை அவை இயற்கையின் தேர்ந்தெடுப்பு என்கிற முறைகளின்படி மெல்ல மெல்ல உருவானதுதான் என்கிறது அதி நவீன விஞ்ஞானம் .
ஆனால் குர்ஆனில் அல்லாஹ்....
பிறகு அவனது சந்ததிகளை அற்பமான நீரின் சத்திலிருந்து உருவாக்கினான்.(குர்ஆன் 32:8)
மேற்கண்ட இந்த வசனத்தின் மூலம் நாம் அறியக்கூடிய ஆத்மீக இரகசியம் இதுதான் அற்பமான நீரின் சத்து அதாவது மரபணு ஜீன்கள் என்பதே!

எனவே ஆதம் நபி படைக்கப்பட்ட போதே உலக அழிவு நாள் வரை பிறக்கப்போகும் அனைத்து உயிர்களும் மரபணு ஜீன்கள் முதல் மனிதர் படைக்கப்படும்போதே அல்லாஹ் படைத்துவிட்டான்.
இன்று ஒரு குழந்தை பிறக்கும் போது அதற்குரிய உயிரை வானவர்கள் மூலமாக கர்ப்பக் கோளரைகளில் வந்து சேர்ந்து விடுகிறது ஆதாரம் இதோ!
உங்களில் ஒருவரின் கரு தம் தாயின் வயிற்றில் நாற்பது (40 நாட்கள்) பகல் அல்லது இரவு சேமிக்கப்படுகிறது.
பிறகு அதைப் போன்றே (40 நாட்கள்) அது (அட்டைப் பூச்சி போன்று கருப்பையின் சுவரைப் பற்றிப் பிடித்துக் தொங்கும்) ஒரு கருக் கட்டியாக மாறுகிறது.
பிறகு அதைப் போன்றே (மேலும் 40 நாட்கள் மெல்லப்பட்ட சக்கை போன்று) ஒரு சதைப் பிண்டமாக மாறுகிறது.
பிறகு அதனிடம் ஒரு வானவர் அனுப்பப்படுகிறார். அந்த வானவருக்கும் நான்கு கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன.
அவர் (கருவாக இருக்கும்) அந்த மனிதனின் வாழ்வாதாரத்தையும், அவனுடைய வாழ்நாளையும், செயல்பாட்டையும், அவன் (இறுதிக் கட்டத்தில்) துர்பாக்கியசாலியா அல்லது நற்பாக்கியசாலியா என்பதையும் (இறைவனின் கட்டளைப்படி) பதிவு செய்கிறார்.
செல்லில் தகவலாக எழுதப்பட்டிருந்த மனிதன் பின் சதைப் பிண்டமாக உருமாறி மனிதனாக சர்வ லட்சணத்தோடு இந்த பூமிக்கு வருகிறான். எல்லாமே இறைவன் எழுதி வைத்த மனித உருவாக்கத்தின் தகவல்களே !

தகவல் பரிமாற்றம் 10


("யாராவது இருக்கீங்களா?")

வாயேஜர் 1 (Voyager 1) என்பது ஐக்கிய அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தினால் 1977 செப்டம்பர் 5 இல் சூரியக் குடும்பத்தின் வெளிப்புறத்தை ஆராய்வதற்காக ஏவப்பட்ட ஓர் ஆளில்லா விண்கலம் ஆகும்.

அதற்கு துணை விண்கலமாக 16 நாட்களுக்குப் பிறகு "வாயேஜர்-2" விண்ணில் செலுத்தப்பட்டது 722 கிலோகிராம் எடையுள்ள இந்த விண்கலம் 8 செப்டம்பர் 2021 வரை 44 ஆண்டுகள் 3 நாட்கள் காலத்தை விண்வெளியில் நிறைவு செய்துள்ளது.
பிரபஞ்சவிஞ்ஞானி கார்ள் சேகன் (Carl Sagan) போன்றவர்கள் விண்கங்களை விண்வெளியில் நெடுந்தூரம் செல்ல அனுப்பும் போது வேற்று கிரகவாசிகள் பிரபஞ்சத்தில் இருந்தால், அவர்களுக்கு எப்படி நம்மைப் பற்றிய தகவல்கள் தருவது என்று யோசித்தார்கள்.
ஒரு 100 கோடி வருடம் தாங்கக் கூடிய தங்க முலாம் தகட்டில் , குறியீடாக பிரபஞ்சத்தில் நம் பூமியின் இடம் இதிலிருந்து கிளம்பும் விண்கலம் மற்றும் நம் உலகத்தின் அத்தனை வித சங்கீதங்களுக்கும் ஒரு சாம்பிள். இதில் இந்திய ராகம் ஒன்று உள்ளது .
இந்த வாயேஜர் 1, 2 சூரிய மண்டலத்தை தாண்டி 1800 கோடி கி.மீக்கும் மேலாக இன்னும் பயணிக்கிறது .
விஞ்ஞானிகளும் பிரபஞ்சத்திலுள்ள எண்ணிலடங்கா கோலங்களில் நம் பூமியை போன்று தட்ப வெப்ப நிலையை பெற்றுள்ள கோலங்கள் எத்தனை எத்தனையோ உள்ளன என்றும் அவற்றிலெல்லாம் நிச்சயம் மனித உற்பத்தி தோன்றியிருக்க வேண்டும் என்றும், அதில் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்றும் கூறுகின்றனர்.
وَلَقَدْ خَلَقْنَا فَوْقَكُمْ سَبْعَ طَرَآئِقَ وَمَا كُنَّا عَنِ الْخَلْقِ غٰفِلِيْنَ
(மனிதர்களே! இவ்வாறு நாம் உங்களை மட்டுமா படைத்திருக்கிறோம்?) நிச்சயமாக உங்களுக்கு மேலுள்ள ஏழு வானங்களையும் நாமே படைத்தோம். (அவை ஒவ்வொன்றிலும் உங்களைப் போன்ற எத்தனையோ படைப்புகள் இருக்கின்றன. இவைகளைப் படைத்து இருப்பதுடன்) இப்படைப்புக(ளுக்கு வேண்டியவைக)ளைப் பற்றி நாம் பராமுகமாகவும் இருக்கவில்லை. (அவைகளுக்கு வேண்டியவை அனைத்தையும் முழுமையாக நாம் படைத்தும் இருக்கிறோம்.) (அல்குர்ஆன்: 23:17)

தகவல் பரிமாற்றம் 11

(பூமி முகவரிக்கு தடங்காட்டி)



உங்களது நண்பரோ அல்லது உங்கள் காதலியாக கூட இருக்கலாம் உங்களை அவர் ஒரு அட்ரஸ்க்கு வரச் சொல்கிறார் என்றால், நம்மில் பல பேருக்கு அதுக்கு போகும் வழி தெரிவதில்லை.

நாம் செல்லும் வழியில் பல பேரிடம் வழியை கேட்பதுண்டு அதில் ஒரு சிலர் நீங்கள் போகும் வழி பின்னே என்பார்கள்; மேலும் சிலர் முன்னே என்பார்கள்; மேலும் சிலர் நீங்கள் தவரான வழியில் வந்து விட்டிர்கள் என்று கூறுவார்கள். இந்த பிரச்சினையிலிருந்து எப்படி நல்ல வழியை தெரிந்து கொள்வது மற்றும் நீங்கள் யாரிடமும் கேட்க்காமல் எப்படி அந்த முகவரிக்கு சரியாக போவது ?

இன்று நீங்கள் செல்லும் அட்ரஸுக்கு சரியான வழியை எப்படி தெரிந்து கொள்வது ? வாருங்கள் பார்ப்போம்..!

ஸ்டேப் 1 :- முதலில் உங்கள் போனில் லொகேஷன் ஆன் செய்ய வேண்டும்.

ஸ்டேப் 2 :- லொகேஷன் ஆன் செய்த பிறகு உங்கள் போனில் கூகுள் மேப் ஆப் ஓபன் செய்யுங்கள், அதன் பிறகு நீங்கள் செல்லும் வழியை அங்கு டைப் அல்லது மைக் மூலம் இடத்தின் பெயரை சொல்லுங்கள்.

ஸ்டேப் 3:- பெயரை சொல்லி முடித்ததும் கூகுள் மேப் உங்களுக்கு ப்ளூ கலரில் நீங்கள் செல்லும் வழிக்கு வழியை காட்டுவதன் மட்டுமில்லாமல் எவ்வளவு ட்ராபிக் இருப்பது என்பதையும் உங்களுக்கு காண்பிக்கும்.

ஸ்டேப் 4:- இன்டர்நெட் இல்லை என்றல் கவலை பட வேண்டாம் இந்த ஆப் நீங்கள் ஆப்லைனிலும் பயன்படுத்தலாம்

ஸ்டேப் 5:- இந்த கூகுள் ஆப் மூலம் கேப் புக்கிங் செய்து கொள்ளலாம் இதனுடன் நீங்கள் செல்லும் வழிக்கு எவ்வளவு சார்ஜ் ஆகும் என்பதையும் நீங்கள் பார்க்க முடியும்.

இதனுடன் உங்களுக்கு மற்றும் ஒரு ஈஸியான வழியை தெரிந்து கொள்ள நாம் அனைவரும் இப்பொழுது ஆண்ட்ராய்டு போன் பயன் படுத்துகிறோம். அந்த வகையில் தங்கள் நண்பர் அல்லது காதலி எந்த இடத்தில் இருக்கிறார் என்ற வழியை தெரிந்து கொள்ள என்ன செய்யவேண்டும் வாருங்கள் பார்ப்போம்.

ஸ்டேப் 6::- உங்கள் நண்பர்/காதலி மொபைலில் லொகேஷன் ஆன் செய்ய சொல்லுங்கள் பிறகு நீங்கள் வாட்ஸ் ஆப் சாட் மூலம் அட்டாச் பைல் க்ளிக் செய்வதன் மூலம் லொகேஷன் மேப் இருக்கும். அதை லைவ் லொகேஷன் ஷேரிங்கில் க்ளிக் செய்வதன் மூலம் அவர் எங்கு இருக்கிறார் என்பதை கூகுள் மேப்பில் போட்டோ உடன் காண்பிக்கும்

ஸ்டேப் 7:- அதன் மூலம் அவர் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் அவர் சரியான வழியில் தான் வருகிறார்களா என்பதை நீங்கள் எளிதாக தெரிந்து கொள்ளலாம். அது மட்டுமில்லாமல் அவர் இருக்கும் வழியில் நீங்கள் எளிதாக போக முடியும்.

சரி, இந்த தடங்காட்டி எப்படி இயங்குகிறது ?

தடங்காட்டி (Global Positioning System - GPS) என்பது உலகத்தில் ஓரிடத்தைத் துல்லியமாக வானில் இருந்து அறியும் ஓர் கருவியும் திட்ட அமைப்பும் ஆகும்.

உலகைச் சுற்றி பல செயற்கைத் துணைக்கோள்களை நிறுவி, அதன் உதவியால், வானொலி மின்காந்த அலைகளை வானில் இருந்து வாங்கியும் செலுத்தியும், புவியில் ஓர் இடத்தில் ஓர் உணர்கருவி இருப்பதைத் துல்லியமாக அறியப் பயன்படும் கருவி அல்லது அமைப்பு ஆகும்.

இது அமெரிக்காவின் பாதுகாப்பு துறையால் முதன் முதலில் உருவாக்கப்பட்டு, அமெரிக்காவின் வானூர்திப் படையின் 50 -வது விண்வெளிப் பிரிவால் நிர்வகிக்கப்படுகிறது. இது மட்டும் தான் உலகத்தில் முழுதும் இயங்கக்கூடிய பயனுடைய உலக இடங்காண் செயற்கைத் துணைக்கோள்கள் அமைப்பு (global navigation satellite system - GNSS) ஆகும்.

இதை யாராலும் எங்கேயும் எளிதில் பயன்படுத்தமுடியும். இது ஊடுருவுதல் பயன்பாட்டுக்காக பொதுமக்களிடையே பயன்படுத்தப்படுகிறது.

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் தேதியிலிருந்து இவை உலகம் முழுதும் இயங்கக்கூடியவையாக மாறின. புவியிடங்காட்டி உலகம் முழுதும் ஊடுருவலுக்கு ஒரு பயனுடைய கருவியாக குறிப்பாக நில வரைபடங்களை உருவாக்குவதற்கும், நில அளவை தொடர்பானவற்றுக்கும், வழியைப் பின்தொடர்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதுடன், தெளிவான நேரக்குறிப்பிற்காக பல பயன்பாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இது நிலநடுக்கம் பற்றிய ஆய்வுகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

மேப் எப்படி இயங்குகிறது கூகுள் மேப் என்பது , நம்முடைய ஆண்டிராய்டு, ஆப்பிள் போன்களில் உள்ள ஜிபிஎஸ் உதவியுடன் இயங்க கூடியது. இந்த ஜிபிஎஸ் தான் நம்முடைய இருப்பிடத்தை செயற்கைகோள் உதவியுடன் கண்டுபிடிக்கும். இதை வைத்து மேப் உதவியுடன் நாம் வெவ்வேறு இடங்களுக்கு செல்வது, டாக்சி புக் செய்வது என நிறைய பணிகளை செய்யலாம்.
இதை ஆப் செய்தும் வைக்க முடியும். அதாவது நம்முடைய போனில், கூகுள் லொகேஷன் ஹிஸ்டரி என்ற ஆப்ஷனை நிறுத்தி வைத்தால், கூகுளால் நாம் செல்லும் இடங்களை கண்டுபிடிக்க முடியாது. கூகுளுக்கு நாம் எங்கே செல்கிறோம் என்ற விவரம் எதுவும் தெரியாது.

ஆனால் கூகுள் இங்குதான் தவறு ஒன்றை செய்துள்ளது. அதாவது இந்த லொகேஷன் ஹிஸ்டரியை நிறுத்திய பின்பும் கூட கூகுள் மக்களின் இடங்களை கண்காணித்து உள்ளது. தொடர்ந்து மக்களின் விவரங்களை சேகரித்து வந்துள்ளது. நாம் எங்கே எல்லாம் செல்கிறோம் என்று நம்முடைய அனுமதி இல்லாமலே கண்காணித்து வந்துள்ளது.
இதன் நிலையில் கலிபோர்னியா நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. கூகுள் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கேட்டு, வழக்கு தொடுத்துள்ளனர்.

هُوَ الَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ فِىْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ يَعْلَمُ مَا يَلِجُ فِى الْاَرْضِ وَمَا يَخْرُجُ مِنْهَا وَمَا يَنْزِلُ مِنَ السَّمَآءِ وَمَا يَعْرُجُ فِيْهَا وَهُوَ مَعَكُمْ اَيْنَ مَا كُنْتُمْ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ
அவன் தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்; பின்னர் அர்ஷின் மீது அமைந்தான். பூமிக்குள் நுழைவதையும், அதிலிருந்து வெளியாவதையும்; வானத்திலிருந்து இறங்குவதையும், அதில் ஏறுவதையும் அவன் நன்கறிகிறான்; நீங்கள் எங்கிருந்து போதிலும் அவன் உங்களுடனே இருக்கிறான் - அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்வதை உற்று நோக்கியவனாக இருக்கிறான்.
(அல்குர்ஆன்: 57:4)

தகவல் பரிமாற்றம் 1 முதல் 6 பதிவுகள் வரலாற்று தகவல்களாக பதிந்திருந்தேன்..
7 முதல் 11 வரை நவீன விஞ்ஞானம் சார்ந்த பதிவுகளாக வெளியிட்டேன்.
இன்னும் இதன் அடுத்த கட்டமாக நவீன விஞ்ஞானத்தின் தகவல்களில் மனித மூளை. இன்டர்நெட் , வேற்று கிரகவாசியான ஏலியன் குறித்து பூமியில் அவர்கள் கொடுத்த, இன்றும் கொடுத்துக் கொண்டிருக்கிற தகவல்கள்..... என்று பதிவின் தளங்கள் விண்ணை தாண்டி உள்ள விஷயங்களை பதிய நினைத்தேன் .
அதற்குள் நண்பர் ஆர்வமாக சுற்றுப்புற சூழல் தகவல்களை குறித்து எழுதச் சொன்னார்.
"அதுவும் எழுத உள்ளேன்" என்றேன்.
உடனே நண்பர், "சுற்றுப்புற சூழலில் எது குறித்து எழுதுவீர்கள்" என்று கேட்க ..
1) தேனீக்கள் கூறும் தகவல் பரிபாஷை,
2) கடந்த காலத்தின் சூழல் சொல்லும் மர வளையங்களின் தகவல்கள்
3) கடலின் ரகசியத்தை சொல்லும் திமிலங்கலத்தின் கோரஸ் பாடலின் தகவல்கள்
4) காட்டின் எதிராளியைக் குறித்து மற்ற விலங்குகளுக்கு கூறும் ஆட்காட்டி குருவியின் தகவல்கள்
5) ஆற்று வெள்ளம் வருவது குறித்து தவளையின் பரிபாஷை பாடலின் தகவல்
6) பூகம்பத்தின் முனங்களின் தகவல்கள் ... இப்படி நிறைய பதிவுகள் டைரியில் குறிப்புகளாக இருக்கிறது என்றேன்.
விழுப்புர நண்பர் ஆர்வத்தில் 40 நிமிடம் வரை தனதாக்கி கொண்டார் - ர.ரா

தகவல் பரிமாற்றம் 12

பயிர் வட்டங்கள் யார் போட்ட கோலங்கள் ?



2012 வரை தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த பயிர் வட்டங்கள் (Crop Circles) ஒரு சுவாரசியமான மர்மங்கள். விளைந்திருக்கும் பயிரில் ஒரே இரவில் ஏதோவொரு அமானுஷ்ய சக்தி இதுபோன்ற உருவங்களை உருவாக்கிச் செல்வதாய் சொல்லப்படும் சேதிகள் நீள்கின்றன. இந்த பயிர் வட்டங்கள் நமக்கு என்ன சொல்ல வருகிறது என்பது இதுவரை தெரியவில்லை

நம் இந்தியா உட்பட உலகின் பல நாடுகளில் இந்த பயிர் வட்டங்கள் தோன்றியிருக்கும் போதும் கிட்டத்தட்ட 80 சதவீதத்திற்கும் அதிகம் பதியப்பட்டிருப்பது இங்கிலாந்தில்தான். இங்கிலாந்திற்குத்தான் அதிகமான தகவல்கள் சொல்ல வேண்டியதிருக்கிதோ என்னவோ ?

பெரும்பாலான வரையப்படும் உருவங்கள் ஒரே இரவில் மனிதர்கள் உருவாக்க சாத்தியமேயில்லாத முறையில் உருவாக்கப்பட்டிருப்பது இதன் மர்மத்தை மேலும் கூட்டுகிறது.
இரவுப்பொழுதில் வெளிச்சம் இல்லாமல் சுற்றியிருக்கும் பயிருக்கு எந்தவொரு சிறு சேதமும் இல்லாமல் , எந்தவொரு வாகனமோ, மனிதக்காலடியோ, இல்லை இயந்திரத்தின் தடயமோ இல்லாமல் இப்படிப்பட்ட படைப்புகள் உருவாக்கப்படுவது மனித சக்திக்கு அப்பாற்பட்ட மர்மத்திலும் மர்மமே.
அதுவும் சில ஆராய்ச்சிகளில் இந்த பயிர்வட்டங்கள் உருவாக்கப்பட்ட இடத்தின் மண் மட்டும் பாறைப்படிவம் போல மாறியிருப்பது மர்மத்தின் இன்னொரு உச்சம்.
ஏனென்றால் ஒரு சாதாரண மண் இறுகிப் பாறைபடிவம் போல மாறவேண்டுமென்றால் அதற்கு இயற்கையாய் 1000 ஆண்டுகளுக்கு மேல் தேவைப்படும். இப்படி ஒரே இரவில் பாறைப்படிவம் போல மாற வேண்டுமானால் கிட்டத்தட்ட 8000 டிகிரி வெப்பத்தில் மண்ணை சூடுபடுத்தவேண்டும். அவ்வாறு வெப்பம் உண்டாக்கப்படும் பட்சத்தில் அந்த இடமே சின்ன புல் பூண்டு கூட இல்லாமல் பஸ்பமாகிவிடும்.
மேலும் இதேப்போன்ற பயிர் வட்டங்களை பல மனிதர்களைக் கொண்டு உருவாக்க நடந்த ஆராய்ச்சிகளின் முடிவில் ஒரு சாதாரணமாக வரையும் உருவத்தை பகல் வெளிச்சத்தில் உருவாக்கவே 5 நாட்களுக்கும் மேல் ஆகியிருக்கிறது.

அதைவிட முக்கிய விஷயம் மனிதர்களைக்கொண்டு இந்த முயற்சியைச் செய்தபோது பயிர்கள் நிறைய சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. மனிதர்களின் சேற்றுக் காலடித்தடங்கள் பயிர்களில் பதிந்திருக்கின்றன. ஆனால் உண்மையான பயிர்வட்டங்களில் பயிர்கள் மடக்கப்பட்டிருந்தாலும், வளைக்கப்பட்டிருந்தாலும் இதுவரை ஒரு பயிர்கூட சேதப்பட்டிருக்கவில்லை என்பது கூடுதல் ஆச்சர்யம்.
இந்தப் பயிர் வட்டங்கள் இரவு நேரத்தில் வானத்திலிருந்து வரும் ஓர் ஒளிக்கற்றையால் உருவாக்கப்படுவதாகவும், வேற்றுக்கிரக வாசிகளின் வாகனம் இறங்கிச் சென்ற தடையங்களே இந்தப்பயிர் வட்டங்கள் என்றும் கூறப்படுகிறது .

இந்தப்பயிர் வட்டங்களுக்குள் செல்லும் மிருகங்கள் மிரண்டு ஓடுவதாகவும், இந்தப்பயிர் வட்டங்களுக்குள் கடிகாரம் வேகமாகவும், சிலது மெதுவாகவும் மாறி மாறிச் சுற்றுவதாகவும், சில மனிதர்களுக்கு இந்தப்பயிர் வட்டங்களுக்குள் நுழையும்போது தலைச்சுற்றல் வாந்தி போன்ற அறிகுறிகள் தோன்றுவதாகவும், சில மனிதர்களுக்கு இந்தப்பயிர் வட்டத்துக்குள் நுழைந்ததும் தங்கள் உடம்பிலிருந்த நோய்கள் சரியானதாகவும் வித விதமான மர்மக்கதைகள் நமக்கு மயக்கத்தையே வர வைக்கின்றன.
எனினும் வெறும் காகிதத்திலேயே வரையச் சிரமப்படும் பல டிசைன்கள், பயிர்களில் சேதமில்லாமல் உருவாகியிருப்பது மர்மமான ஆச்சர்யம்தான்.
وَلَقَدْ خَلَقْنَا فَوْقَكُمْ سَبْعَ طَرَآئِقَ وَمَا كُنَّا عَنِ الْخَـلْقِ غٰفِلِيْنَ
(மனிதர்களே! இவ்வாறு நாம் உங்களை மட்டுமா படைத்திருக்கிறோம்?) நிச்சயமாக உங்களுக்கு மேலுள்ள ஏழு வானங்களையும் நாமே படைத்தோம். (அவை ஒவ்வொன்றிலும் உங்களைப் போன்ற எத்தனையோ படைப்புகள் இருக்கின்றன. இவைகளைப் படைத்து இருப்பதுடன்) இப்படைப்புக(ளுக்கு வேண்டியவைக)ளைப் பற்றி நாம் பராமுகமாகவும் இருக்கவில்லை. (அவைகளுக்கு வேண்டியவை அனைத்தையும் முழுமையாக நாம் படைத்தும் இருக்கிறோம்.) (அல்குர்ஆன் : 23:17)
பயிர் வட்டங்கள் பற்றிய மேலும் பல சுவாரசியத் தகவல்களுக்கும், நிறைய புகைப்படங்களுக்கும் இந்த வெப்சைட்டில் பார்க்கவும்...http://davidpratt.info/cropcirc1.htm
இதனால் வரைந்தவர்கள் சொல்ல வரும் தகவல்கள் என்ன ?
தெரியவில்லை .

தகவல் பரிமாற்றம் 13 நாஸ்கா பாலைவனக் கோடுகள் சொல்லும் தகவல் என்ன ?




நேர் கோட்டில் ஏதாவது இருந்தால் அதனை பார்த்து பிரம்மிப்பு அடையாதவர்கள் இருக்கமாட்டார்கள். நடுவானில் பறந்து கொண்டிருக்கும் பொழுது மரங்களோ, கட்டடங்களோ ஒரே சீராக இருப்பதை பார்த்தாலே நம் மனதிற்குள் ஒரு சிறு மகிழ்ச்சி உருவாகிவிடும்.
வலுவான தொழில்நுட்பங்கள் கொண்ட தற்பொழுதைய காலகட்டத்தில் இது போல் நேர் கோட்டில் கட்டடங்களோ சாலைகளோ கட்டுவது என்பது மிகவும் எளிது. ஆனால், எந்தவித தொழில்நுட்ப வளர்ச்சியும் இல்லாத அந்த காலத்தில் இதுபோல் நேர்கோட்டில் மிகப்பிரம்மாண்டமான கோடுகளை வடிவமைத்திருப்பது ஆராய்ச்சியாளர்களிடையே மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. எதற்காக இந்த கோடுகள் ? அது என்ன தகவல்களை சொல்கிறது.யாருக்குமே தெரியவில்லை.
பெருவின் தலைநகர் லிமாவின் தெற்கே 400 கி.மீ தொலைவிலுள்ள நாஸ்கா பாலைவனத்தில் சுமார் 450 கி.மீ சுற்றளவில் வடிவமைக்கப்பட்டுள்ளதுதான் இந்த நாஸ்கா கோடுகள். 450 கி.மீ சுற்றளவு (! ?)
சுமார் ஒரு அடி ஆழக் கோடுகள் அருகில் இருந்து பார்த்தால், நீண்ட பாதை போல மட்டுமே காட்சியளிக்கும் இந்த கோடுகளை வானத்தில் இருந்து பார்த்தால் மிக பிரம்மாண்டமான பறவைகள் போலவோ, குரங்கு போலவோ சிலந்தி போலவோ, தேன் சிட்டு போலவோ காட்சியளிக்கும். இப்படியே சுமார் 15, 000 மேற்பட்ட உருவங்கள் (! ?)

எதனால் இதுபோன்ற கோடுகள் உருவாக்கப்பட்டன? அந்த காலத்திலேயே எப்படி இதுபோன்ற நேர் கோடுகளை வடிவமைப்பது சாத்தியம் என்பது போன்ற பல்வேறு மர்மங்களும் தேடுதல்களும் இந்த நாஸ்கா கோடுகளின் பின்னால் இருந்த வண்ணம் இருக்கிறது.
பெரு நாட்டை சேர்ந்த தொல்பொருள் வல்லுநர் ஒருவரால் 1926ம் ஆண்டு இதுபோன்ற பிரம்மாண்ட கோடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், 1930ம் ஆண்டில் விமானத்தில் பயணித்துக்கொண்டிருந்த சில மக்களே இந்த நாஸ்கா கோடுகளை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தனர்.
நாஸ்கா கோடுகள், கி.மு. 700களில் நாஸ்கா மக்களால் கட்டப்பட்டது என அறிவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். நாஸ்கா பகுதியில் உள்ள பாறைகள் ஒருவிதமான இரும்புத்துருவின் வண்ணத்தில் இருப்பதால், அதன் மேற்பரப்பை அகற்றினால், பழுப்பு நிறத்தில் இருக்கும் மண் தெரியும். அப்படி உருவாக்கப்பட்டவை தான் இந்த நாஸ்கா கோடுகள்.
வெள்ளம், சூறாவளி என பல இயற்கை பேரிடர்கள் வந்தபொழுதும், சுமார் 2000 ஆண்டுகள் இந்த கோடுகள் நிலைத்திருப்பது மிக ஆச்சரியமான ஒன்று.
வேற்றுகிரக விண்கலங்கள் தரையிரங்க வரையப்பட்ட விமான ஓடுதளங்கள் , பாலைவனத்தில் நீர் இருக்கும் இடங்களை சுட்டிக் காட்டுவதற்காக குறிக்கப்பட்ட வரைபடங்கள் , மிகப் பெரிய வானவியல் நாள்காட்டி மற்றும் நட்சத்திர மண்டலங்களின் ஒட்டு மொத்த வடிவங்கள் என்பன போன்ற பற்பல தகவல்கள், பல யுகங்கள்... உங்களின் யுகங்களையும் தெரிவித்தால், நாஸ்கா ஆய்வாளர்களுக்கு பிரயோஜனப்படும் .
என்ன வரைய வேண்டும் எங்கே வரைய வேண்டும் அவை சூரியனை மையப்படுத்தி வரைய வேண்டும் என்பதெல்லாம் குறித்து தெளிவான திட்டமிடல் இருந்திருக்கிறது
திட்ட வரைபடமோ திட்ட மாதிரியோ கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக தாங்கள் நினைத்தை சாதித்திருக்கிறார்கள் என்பது மேரி ரெய்சேவின் விளக்கம். சாதித்தவர்கள் யார் ? தகவல் இதுவரை இல்லை.
இந்த பெண்மணியின் பெரு முயற்சியால் நாஸ்கா பாலைவனத்தைப் பற்றி உலகம் அறிந்து கொள்ள முடிந்தது
1995 ல் யுனெஸ்கோ அறித்தத்தது
குரங்கு உருவத்திற்கும் தனக்கும்

ஓர் ஒற்றுமை இருப்பதைக் கண்டு அதிசயித்தார்
மேரி ரெய்சே ஒரு விபததில் தன் கைவிரல் ஒன்றை இழந்தவர்
குரங்குக்கும் ஒன்பது கைவிரல்களே இருந்தன
தளர்ந்த வயதில் கூட எந்நேரமும் துடப்பத்தோடு அலைந்தார் கோடுகளை சுத்தப்படுத்திக் கொண்டே இருப்பார்
அவர் அடிக்கடி வானத்தைப் பார்த்தும் காற்று வெளிதனிலும் விநோத மொழியில் பேசிக்கொண்டே இருப்பார். அது என்ன மொழி என்று அவர் தெரிவிக்க மறுக்கிறார் . அதே நேரத்தில் நாஸ்கா மக்களிடம் நாஸ்கா மொழியில் பேசிக்கொள்வார்.
சிலர் இவரை சூனியக்காரி என்றும் வேற்றுகிரகவாசிகளின் தோழி என்றும் அழைக்கிறார்கள் .
இந்த கோடுகளில் நிறைந்துள்ள ஆச்சரியங்களும் மர்மங்களும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. பெர்முடா முக்கோணம் போன்ற மர்மங்கள் நிறைந்த இந்த உலகத்தில், இந்த நாஸ்கா கோடுகளும் விடை தெரியாத மர்மமாகவே இன்னும் இருந்து கொண்டேயிருக்கிறது.
உங்கள் சிந்தனைக்கு நாஸ்கா பாலைவனக் கோடுகளுக்கும் ஜின்களுக்கும் தொடர்பு இருக்குமா ?
இமாம் இப்னு அப்துல் பர்ரு என்பவர் பின்வருமாறு கூறுகின்றார். ஜின்களில் பல தரத்தினர் இருப்பதாக மொழி வல்லுனர்கள் கூறுகின்றனர். மனிதர்களுடன் சேர்ந்து வாழ்பவைக்கு 'ஆமிர் ' என்றும், சிறு பிள்ளைகளுடன் சேட்டை செய்பவைகளை 'அர்வாஹ் ஆவிகள் ' என்றும் அவற்றில் கீழ்த்தரமான அசிங்கமானவைகளை “ஷைத்தான்” என்றும், அதி ஆற்றல் கொண்டவைகளை “இப்ரீத்” என்றும் கூறப்படும்.
ஆதாரம் : உகாமுல் மர்ஜான் பக்கம் 08
وَإِذْ قُلْنَا لِلْمَلَائِكَةِ اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوا إِلَّا إِبْلِيسَ كَانَ مِنَ الْجِنِّ
(இப்லிஸாகிய) அவன் ஜின் இனத்தை சேர்ந்தவனவான்.
(அல் குர்ஆன் 18:50)
ஜின்கள் மூன்று பிரிவினராக இருப்தாக றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கூறியுள்ளார்கள்.
முதல் வகையினர் காற்றில் சஞ்சரிப்பவர்கள். இரண்டாவது வகையினர், பாம்பு, நாய் போன்றவற்றின் உருவில் இருப்பவர்கள். மூன்றாவது வகையினர் ஷரீஅத்தைப் பேணி நடப்பவர்கள். ஆதாரம் : தப்றானி, ஹாகீம்
மற்றொரு அறிவிப்பில்...
ஜின்கள் மூன்றுவகைப்படும் என்று நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்கூறியுள்ளார்கள்.
1) பாம்பு வடிவில் உள்ளவைகள். 2) (கண்ணுக்கு புலப்படாமல்) பூமியில் வாழ்பவை 3) ஆகாயத்தில் பறப்பவை. (அபூ தஅல்பா ரலியல்லாஹு அன்ஹு, ஹாக்கிம்)
அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்
ஜின்கள் மனித உருவிலும் மிருகங்களின் உருவிலும் தோன்றும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. இதனால் அவை பாம்பு, தேள், ஒட்டகம், மாடு, ஆடு, கழுதை, குதிரை, குரங்கு குருவிகள் (பூனை, நாய்) உள்ளிட்ட உருவில் தோன்றுகின்றனர். ஆதாரம் :மஜ்முஉல் பதாவா பாகம் -19, பக்கம் – 44

தகவல் பரிமாற்றம் 14

கனவுகள் கூறும் தகவல்கள்



" The interpretation of Dreams " _ கனவுகளின் விளக்கம் என்று 1900-ல் சிக்மண்ட் ஃப்ராய்டு என்ற உளவியல் அறிஞர் புத்தகம் எழுதினார். நவீன உளவியாளர்கள் ஃப்ராய்டு சொன்ன சில காரணங்களுடன் ஒத்துப் போவதில்லை. உதாரணமாக அவர் நம் எல்லாச் செயல்களுக்கும் செக்ஸ்தான் அடிப்படை என்றார். தப்பு

நம் கனவுகளை தின வாழ்வில் நிறைவேற்ற முடியாத உள்மன இச்சைகள் என்றார். இதுவும் தப்பு .

அவருடைய மிகப்பெரிய புரட்சிகரமான சித்தாந்தம் "இடீபஸ் காம்ப்ளெக்ஸில் - ''எல்லா இளைஞர்களுக்கும் தகப்பனைத் துரத்திவிட்டு, தாயே மணந்து கொள்ளும் இச்சையும் , எல்லா பெண்களுக்கும் தாயை துரத்திவிட்டு தந்தையோடு படுத்துக்கொள்ளும் இச்சையும் உள்மனத்தில் உண்டு"என்றார்

இது தப்போ தப்பு.

ஃப்ராய்டு சொன்னது எல்லாம் வழக்கொழிந்து போய் நவீன விஞ்ஞானம் ந்யூரோ ஃபார்மகாலஜி (Neuro Pharmocology) என்னும் புதிய இயலுக்குக்கு மாறிவிட்டது .இந்த புதிய விஞ்ஞான இயல் இஸ்லாத்தின் கனவுக் கோட்பாட்டோடு அப்படியே ஒத்துப் போகிறது.

மனித வாழ்க்கையில் கனவுகள் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது என்றால் அது மிகையல்ல. அந்த அடியிப்படையில் அல்குர்ஆன் தலைமை விரிவுரையாளர் மற்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்பு தோழர் ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் குர்ஆனின் 39:42 ஆவது வசனத்திற்கு கீழ் கண்டவாறு விளக்கம் தருகிறார்கள்.

'ஒவ்வொரு மனிதனுக்கும் நஃப்ஸ் (ஆத்மா)வும்,ரூஹ் (உயிர்) வும் உள்ளன. நஃப்ஸில் உணரும் தன்மையும் அறிவும் உள்ளன. ரூஹில் அசையும் தன்மையும் மூச்சு வாங்கும் தன்மையும் உள்ளன.

மனிதன் தூங்கும் போது அல்லாஹ் நஃப்ஸை மட்டுமே கைப்பற்றுகிறான். ரூஹை கைப்பற்றுவதில்லை. ரூஹ் தனது அசையும் தன்மையால் அந்நேரத்தில் சுற்றித் திரிகிறது. அப்பொழுது அந்த ரூஹிற்கு மற்ற ரூஹ்களுடன் நடைபெறும் சம்பாஷனைகள் மற்றும் நிகழ்ச்சிகளே கனவுகளாகும். (நூல் : குர்துபி)

இன்றைய விஞ்ஞானம் கனவைப் பற்றி அது நம் நினைவுகள் மற்றும் சிந்தனைகளின் பிம்பங்கள் என்றும் நாம் தூங்கும் சமயம் நமது மூளை மிகக் குறைந்த அளவில் வேலை செய்யும் போது அதில் தோன்றும் சில படக்காட்சிகள் என்றும் பல விதமான கருத்துக்கள் கூறுகின்றது.

அடிப்படையில் கனவிற்கும் அர்த்தமுண்டு. அது நிறைய தகவல்களை தருகிறது .எல்லோருக்குமே சகஜமாக கனவு வரத்தானே செய்கிறது என்று கனவை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. கனவிற்கும் பலவிதமான அர்த்தங்கள் உண்டு. அவை அத்தனையும் கனவு கண்ட மனிதருக்குரிய தகவல்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களிடம், "நீங்கள் யாரேனும் கனவு கண்டீர்களா? "என்று கேட்டு அதற்கு விளக்கம் கூறுபவர்களாக இருந்தார்கள். நூல்: புகாரி 7047, முஸ்லிம் 4572

மேலும் சில முக்கிய நபர்கள் இஸ்லாத்தில் நுழைவதற்கும் கனவு காரணமாக அமைந்துள்ளது. ஹள்ரத் முஹம்மது இப்னு அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். "ஹள்ரத் காலித் இப்னு ஸஈத் (ரலி) அவர்கள் இஸ்லாத்தில் நுழைவதற்கு அவர்கள் கண்ட ஒரு கனவே காரணமாக அமைந்தது. அவர்கள் கண்ட கனவு இதுதான்.

அவர் நரகத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறார். அவரது தந்தை அவரை நரகில் தள்ள முயற்சிக்கிறார். அதைக் கண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர் நரகில் விழாதவாறு அவரின் இடுப்பை பிடித்துக் கொள்கிறார்கள்.

இதற்குப் பிறகு திடுக்கிட்டு விழித்த ஹள்ரத் காலித் இப்னு ஸஈத் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இந்த கனவு உண்மையானதுதான்' என்று கூறிக் கொண்டு ஹள்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்தித்து நடந்ததைக் கூறினார்கள்.

அதற்கு 'உனக்கு நல்லதே நடக்கட்டுமாக! இதோ, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்துள்ளார்கள். அவர்களை நீ பின்பற்றி அவர்களுடன் புனித இஸ்லாத்தில் இணைந்து விடு! நீ நரகில் விழாமல் அவர்கள் உன்னை பாதுகாப்பார்கள். ஆனால் உனது தந்தையோ நரகில் விழுந்து விட்டார்' என்று பதில் கூறினார்கள்.

அதன் பிறகு அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.
நூல்: முஸ்தத்ரக், ஹாகிம்
அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் நற்செய்தியாகும் (நமக்கு நல்லது நடப்பதைப் போன்ற நிகழ்வுகள் மற்றும் நாம் விரும்பும் நிகழ்வுகளை கனவுகளாக காணுவதாகும்)
இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்" நல்ல மனிதர் காணும் நல்ல (உண்மையான) கனவு, நபித்துவத்தின் நாற்பத்தாறு பாகங்களில் ஒன்றாகும். என அனஸ் இப்னு மாலிக் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்கள்.(புகாரி 6983)
"உங்களில் எவரேனும் தனக்கு பிடித்தமானதை கனவில் கண்டால் நிச்சயமாக அது அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்ததாகும். எனவே அவர் அல்லாஹ்வைப் புகழட்டும். மேலும் அதை அவர் யாரிடமேனும் கூறட்டும்" என்றும்
வேறு அறிவிப்பில் "அவர் அந்த கனவை தன்னை விரும்பக் கூடிய, (தனக்கு நல்லதையே நாடக்கூடிய) அறிஞரான (இறையச்சம் முடையவர்களில்) ஒருவரிடம் கூறட்டும்' அறிவிப்பவர்: அபூஸயீத் அல்குத்ரீ (ரலி)(புகாரி 6984, 6985)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹள்ரத் அபூ கதாதா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். "நல்ல கனவு அல்லாஹ்வின் புறத்திலிருந்து வருவதாகும். கெட்ட கனவு ஷைத்தான் புறத்திலிருந்து வருவதாகும். எனவே உங்களில் ஒருவர் தனக்கு பிடிக்காத கெட்ட கனவு கண்டால் அவர் தனது இடது புறமாக (எச்சில் வராதவாறு) மூன்று முறை துப்பிக் கொள்ளட்டும். மேலும் ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடிக்கொள்ளட்டும். (அப்படி செய்தால்) அந்த கனவால் அவருக்கு எந்த இடைஞ்சலும் ஏற்படாது. (நூல் : புகாரி 6985, 6995, 7005, 7044, 7045 முஸ்லிம் 4551, 4552, 4554)
இப்னு ஸீரீன் ரஹ் இவரது முழுப் பெயர் அபூபக்கர் முஹம்மது இப்னு ஸீரின் பஸராவைச் சேர்ந்தவர்
நபி யூசுஃப் அலை அவர்களுக்குப் பிறகு கனவுக்கலைக்கு பெருமை சேர்த்தவர் . இவர்தான்
நண்பர்களுடன் இப்னு ஸீரீன் உரையாடிக் கொண்டு இருக்கும் போது ஒருவன் , " நான் ஒரு முட்டையை உடைத்து அதிலுள்ள வெள்ளைக் கருவை மட்டும் எடுத்துக் கொண்டு மஞ்சள் கருவை வீசுவது போல் கனவு கண்டேன் " என்றான்

" நீதான் அந்தக் கனவைக் கண்டாய் என்று இறைவன் மீது ஆணை இட்டுக் கூறு "
அவ்விதமே ஆணையிட்டான் உடனே சுற்றி உள்ள நண்பர்களிடம் இப்னு ஸீரீன் " இதோ இவன் கபரை தோண்டி கஃபன் துணி திருடும் திருடன் இவனை பிடித்து சுல்தானிடம் கொண்டு செல்லுங்கள் என்று கூற கனவு கண்டவன் திடுக்கிட்டு தன் தவறை ஒப்புக் கொண்டு , தான் இனிமேல் அச் செயலை செய்வதில்லை என்று சத்தியம் செய்தான் பின்பு மன்னிப்புக் கேட்டுச் சென்றான்.
இவன் கண்ட கனவில் மற்றவர்களுக்கு எச்சரிக்கை தகவல்கள் இருக்கிறதல்லவா ?
ஒரு நாள் இப்னு ஸீரீன் ரஹ் உடைய அடிமைப் பெண் இவர்களிடம் தாம் விண்ணிலே உயர்ந்து உயர்ந்து சென்று இறுதியில் " ஜஹ்ரா " என்ற விண்மீனை அடைந்து விட்டதாகவும் அப்போது அந்த விண்மீனியிலிருந்து ஒருவர் அதனை உன் எஜமானர் இப்னு ஸீரீனிடம் போய்ச் சொல்லுமாறு சொன்னதாகவும் கூறியபோது, அது கேட்டு ஸீரீன் (ரஹ்) அதிர்ந்து போனார்கள்.
" நீ கண்ட கனவு எனக்குரிய தகவல்கள் இருக்கிறது"
அடிமைப் பெண் அவரிடம்: " எஜமானரே ! இதை விட பயங்கரமான கியாமத் நாளைப் பற்றிய கனவெல்லாம் கண்டு சொன்ன போது கூட தாங்கள் பதறாமல் விளக்கம் சொன்னீர்கள். ஒரு அழகான நட்சத்திரத்தை நான் அடைந்த கனவில் நீங்கள் ஏன் பதறுகிறீர்கள் . ?
அதற்கு இப்னு ஸீரீன் (ரஹ்) அவர்கள் " என்னுடைய முடிவு நாள் மிக நெருங்கி விட்டது வரும் ஜும்மாவுக்குள் நான் இறந்து விடுவேன் " என்று கூறினார்கள்
ஜும்மா தொழுகைக்கு முன் பஸ்ராவில் இறந்து போனார்கள்.
கனவுகளெல்லாம் கண்டவருக்குரிய தகவல்கள்.

தகவல் பரிமாற்றம் 15

(விரல் ரேகை தகவல்கள் _Unique Identification Data)



கிபி 700 புராதன அஸீரியாவில் விரல் ரேகைகளின் தகவல் மூலம் அடையாளம் கண்டுபிடிக்கும் முறையை பயன்படுத்தி இருக்கிறார்கள்.
சீனாவில் போலீஸ் 13ஆம் நூற்றாண்டிலிருந்து விரல் ரேகை தகவல் முறை உபயோகிக்கிறது.
இந்தியாவின் சர் வில்லியம் ஹெர்ஷல் என்ற ஐ சி எஸ் ஆபிஸர் 1858 இல் ஆள்மாறாட்ட தவிர்ப்பதற்காக விரல் ரேகை தகவல் முறையை பயன் படுத்தியதாக தெரிகிறது.
ஆனால் இந்த முறை ஒழுங்குபடுத்தி குற்றவாளிகளை கண்டுபிடிக்கும்படி வழி செய்தவர் சர் பிரான்சிஸ் கால்டன் என்பவராவர். இங்கிலாந்தில் சட்டப்படி இந்த முறை நடைமுறைக்கு வந்தது.

.
1895 இல் கார்டனின் முறையை சர் எட்வர்ட் ஹென்றி என்பவர் சற்றே மாற்றினார். இம்முறைதான் இன்றும் உலகெங்கும் பிரபலம் .
அல்லாஹ் படைத்த மனித மிருக தாவர வர்க்கங்கள் அனைத்தும் பிரத்தியேக தனித்தனி அங்க அடையாளங்களுடனேயே சிருஷ்டித்துள்ளான்.
நமது பார்வைக்கு ஒன்றுபோல் இவை தெரிந்தாலும் ஒவ்வொரு ஜீவனும் தனித்த அடையாளங்களுடனே படைக்கப்பட்டுள்ளன இந்த அடையாளங்கள் இருப்பதால்தான் பறவைகள் விலங்குகள் தங்கள் இணைகளை அறிந்து ஒரு கூட்டமாக சமுதாயமாக வாழுகின்றன
"பூமியில் ஊர்ந்து திரியும் பிராணிகளும் தம் இரு இறக்கைகளால் பறக்கும் பறவைகளும் உங்களைப்போன்ற இனமேயன்றி வேறில்லை; இன்னும் அவையாவும் அவற்றின் இறைவனிடம் ஒன்று சேர்க்கப்படும் -அல் குர்ஆன்-(6:38)

அந்த அல்லாஹ்தான் படைப்புக்கான திட்டம் வகுப்பவனும் அதனைச் செயல்படுத்துபவனும் அதற்கேற்ப வடிவம் அமைப்பவனுமாவான் -அல்குர்ஆன் (59:24)
மனிதர்களும் பல்வேறு உருவ அளவிலும் பல நிறங்களிலும் முகத்தோற்றத்திலும் தங்களுக்கிடையில் அடையாளம் காண்பதற்காகவே இப்படி வித்தியாசமாகப் அல்லாஹ் படைத்திருக்கின்றான் குறிப்பாக முக அடையாளமே நடைமுறையில் பெரிதும் பயன்படுகிறது. ஆனால் போர் விபத்து மற்றும் கலவர சண்டையில் உடல் உறுப்புகளை இழப்பவர்களை அடையாளம் காண்பது மிகவும் கடினம்.
நபி (ஸல்) அவர்களுடன் உஹதுப் போரில் பங்குகொண்ட நபித்தோழர்,அனஸ் இப்னு நள்ர் (ரலி) அவர்கள் கடுமையாக போரிட்டு ஷஹீதானர். அவர் உடல் முழுவதும் சிதைந்து போனதால் அடையாளம் அறியப்படாத நிலையில் கொல்லப்பட்டார். அவரின் உடலில் வாளால் வெட்டப்பட்டும்,ஈட்டியால் குத்தப்பட்டும்,அம்பால் துளைக்கப்பட்டும் எண்பதுக்கும் மேற்பட்ட காயங்கள் இருந்தன. அவரை அவரின் சகோதரி மச்சத்தை வைத்தோ.. அல்லது அவரின் கைவிரல் நுனிகளை வைத்தோ அடையாளம் கண்டு கொண்டார். (புகாரி : 4048)
விரல் ரேகையைப் பற்றி குர்ஆனில் அல்லாஹ்...
“ஆம்! அவனுடைய விரலின் நுனியைக் கூட மிக துல்லியமாக அமைப்பதற்கு நாம் ஆற்றல் பெற்றுள்ளோம்” (75:4)
விரல்நுனி ரேகையில் அல்லாஹ்வின் ஆதார் அடையாளம் (Unique Identification Data)
நமது தோற்றம் நாளுக்கு நாள் மாறக்கூடியது.பத்து வயதில் இருப்பது போல் இருபது வயதில் இருப்பதில்லை.நாற்பது வயதில், அறுபது வயதில் அல்லது என்பது வயதில் நமது உடல் உறுப்பு, முக அடையாளங்கள் மாறிக்கொண்டே இருக்கும்.
ஆனால் இரண்டு வயது குழந்தையின் விரல் ரேகைதான், அந்தக் குழந்தை என்பது வயதான முதியவராக மாறிய போதும் அதே ரேகைதான் இருக்கும்.விரல் நுனி ரேகை அமைப்பு கொஞ்சம் கூட மாறுவதில்லை.எனவேதான் தடய அறிவியல் துறை விரல் ரேகை நிபுணர்கள், இதை “ கடவுள் கொடுத்த முத்திரை ” என்று (A Seal given by God) வர்ணிக்கிறார்கள்.இது அல்லாஹ் அடியானுக்கு வைத்த முத்திரை.
தாயின் கர்ப்பத்தில் 10 வது வாரத்தில் இதயத்தால் பம்ப் செய்யப்படும் இரத்தம் உடலெங்கும் பரவி விரல் நுனி வரை வந்து திரும்பும் தடயமே விரல் ரேகையாக மாறுகிறது. விரல்களில் 17 வது வாரத்திற்குள் விரல் ரேகைகள் பதியப்பட்டு முடிந்து விடும்.பிறகு அதன் ஆயுள் வரை மாறுவதில்லை.
இதிலும் ஆச்சரியம்,ஒத்த உருவமுள்ள இரட்டைக் குழந்தைகள் விரல் ரேகைகளும் ஒன்றுபோல் இருப்பதில்லை.இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சியில் உருவான குளோனிங் முறையில் அச்சு அசலாக தாயைப்போல சேய் பிறந்தாலும் பிறக்கும் குழந்தையின் விரல் ரேகை ஒன்று போல் இருக்காது. காரணம் விரல் ரேகையை டிஎன்ஏ என்னும் மரபணு ஜீன்களால் உருவாவதில்லை. தாயின் கர்பத்தில்தான் ரேகைகள் இயற்கையாகவே தீர்மானிக்கப்படுகின்றன.
மனிதன் மரணம் அடையக்கூடியவன் தான். இருந்தும் மறுமை நாளில் அவன் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவான். அப்போது அவனது நன்மைகள், தீமைகளுக்கு ஏற்ப அவனுக்கு சொர்க்கம் அல்லது நரகம் பரிசாக வழங்கப்படும்.
‘இறந்த பிறகு அடக்கம் செய்யப்படும் மனித உடல் சில மாதங்களில் மண்ணோடு மண்ணாக மட்கிப்போகும். அப்படிப்பட்ட மனிதன் மீண்டும் எப்படி உருவாக்கப்படுவான்’ என்ற கேள்வி ஆதி தொட்டு இன்றுவரை நிலைத்திருக்கின்ற ஒன்று.
அருள்மறை திருக்குர்ஆன் இதற்கு இவ்வாறு பதிலுரைக்கின்றது:
“இறந்து, உக்கி மண்ணாய் போன அவனுடைய எலும்புகளை நாம் ஒன்று சேர்க்க மாட்டோம் என்று மனிதன் எண்ணிக்கொண்டிருக்கின்றானா?” குர்ஆன் (75:3).
அல்லாஹ்வின் தூதர் அருமை நாயகம் நபிகள் நாயகம் அவர்கள் சொன்னார்கள்:
“மனிதனின் உடலில் எலும்பு ஒன்று உள்ளது. அதை பூமி ஒருபோதும் புசிக்காது. அதை வைத்தே மீண்டும் மறுமையில் அவன் படைக்கப்படுவான்”.
அப்போது அருகில் இருந்த தோழர்கள் கேட்டனர் ’அது எந்த எலும்பு என்று எங்களுக்கு விளக்கிச் சொல்ல முடியுமா?’

அதற்கு நபிகளார் பதில் அளிக்கும்போது, ‘உள்வால் எலும்பின் நுனி’ என்றார்கள். (முஸ்லிம்-5662)
இந்த உள்வால் எலும்பின்

நுனியில்தான் ஒவ்வொரு மனிதனின் படைப்பின் ரகசியத் தகவல்கள் பொதிந்திருக்கிறது.
ஜெர்மன் விஞ்ஞானி ஹான்ஸ் ஸ்பீமேன் என்பவர் உள்வால் எலும்பு நுனி குறித்து தீவிரமாக ஆராய்ந்தார். அதனை பல ஆயிரம் டிகிரி வெப்பத்தில் எரிக்கவும், வீரியம் மிக்க அமிலங்களின் கலவை கொண்டு அதனை கரைக்கவும் முயற்சி செய்தார். அதில் சிறு மாறுதலைக் கூட அவரால் செய்ய முடியவில்லை. ஆராய்ச்சியின் முடிவாய் திருக்குர்ஆன் வார்த்தைகளை உண்மைபடுத்தி உலகிற்கு அறிவித்தார்.

எனவே அத்தகைய சிறப்பு மிக்க படைப்பாக நம்மை உருவாக்கிய ஏக இறைவன் அல்லாஹ்வை வணங்கி, அவன் காட்டிய வழியில் நடந்து இம்மையிலும், மறுமையிலும் இறைவனின் திருப்பொருத்தத்தை பெற நாம் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். இதுவே நம்மை படைத்த இறைவனுக்கு நாம் செலுத்தும் நன்றியாகும்.

தகவல் பரிமாற்றம் 16

(காந்தத்தின் திசைகளால் தகவல் பரிமாற்றம்)



காந்தம் எப்படி உருவாகிறது ?
காந்த சக்தி என்பதே பொருள்களின் ஆதாரமான மின் அமைப்பால் ஏற்படுவது. எல்லாப் பொருள்களும் அணுக் கட்டடத்துக்குள் போனால் உட்கருவும் அதைச் சுற்றிக் கொண்டிருக்கும் எலக்ட்ரான்களுமாக அமைந்திருக்கின்றன.
எலக்ட்ரான் என்பது ஒரு சின்ன மின் துகள். இது சுழலும்போது அதன் விளைவாக காந்தசக்தி ஏற்பட்டுத்தான் ஆக வேண்டும். இது இயற்கையின் நியதி.
மின் சக்தியும், காந்த சக்தியும் இணைபிரியாதவை. எங்கெங்கே மின்சாரம் நகர்கிறதோ அங்கங்கே காந்த சக்தியும் ஏற்படுகிறது. இவ்வாறாக அணு கட்டடத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எலக்ட்ரான்கள், சுற்றிக் கொண்டிருக்கும் அச்சை நோக்கி ஒரு காந்த சக்தியை ஏற்படுத்துகின்றன.
எலக்ட்ரான்கள் உட்கருவை சுற்றுவது மட்டுமின்றி தமக்குத்தாமே வேறு சுற்றிக் கொள்கின்றன. இதை 'ஸ்பின்' என்பார்கள்.இந்தத் தனக்குத்தான் சுழற்ச்சியாலும், காந்தசக்தி விளைவுகள் உண்டு.
இவ்விரு காந்த சக்திகள் ஒத்துப்போகும்போது, ஒரே திசையை திசையை நோக்கி இருக்கும் போது, அதுவும்இணையாக இருக்கும் போது, இந்த மின்காந்த விளைவு கோஷ்டியாக சேர்ந்து கொண்டு அந்த அணுவே ஒரு குட்டி காந்தமாக்கி விடுகிறது.

பூமி ஒரு மஹா காந்தம். பூமிக்கு எப்படி காந்த சக்தி வந்தது என்பதைப் பற்றி இன்னும் ஆராய்ச்சி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். பூமியின் சுழற்சியினால் இது ஏற்படுகிறது என்கிறார்கள்.
இல்லை..இல்லை...பூமியைச் சூழ்ந்திருக்கும் அயன மண்டலத்தின் அயான்களின் விளைவுதான் என்கிறார்கள். இன்னும் தீர்மானமாக தெரியவில்லை.இருந்தும் பூமிக்கு வடக்கு தெற்காக ஒரு காந்த சக்தி இருக்கிறது.
குட்டி காந்தத்தை தொங்கவிடும் போது பூமியின் வடக்கு தெற்கான காந்தத்துடன் இணையாக இருந்தால்தான் இரண்டுக்கும் பிணக்கம் குறைவாக இருக்கும். திரும்ப முயற்சித்தால் பூமியின் காந்தம் 'எங்கே நகர்கிறாய் ? என்று அதை இழுத்து நேராக்கும்.
எனவே பூமியின் வட துருவத்தை நோக்கும் முனையை காந்தத்தின் வட துருவம் என்றும், எதிர்முனையைத் தென்துருவம் என்றும் சொல்கிறார்கள். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் , பூமி ஒரு தலைகீழ் காந்தம் என்று தெரியவரும். எல்லாமே எலக்ட்ரான்களின் சுழற்சியால்தான் நடைபெறுகிறது .
பூமியின் காந்த சக்தியைப் பற்றி குர்ஆன்..
''பூமியைத் தொட்டிலாகவும், மலைகளை முளைகளாகவும் நாம் ஆக்கவில்லையா?'' (குர்ஆன்–78:6).
''அவனே பூமியை உங்களுக்குத் தொட்டிலாக அமைத்தான். நீங்கள் வழிகளை அடைவதற்காக அதில் பல பாதைகளை அமைத்தான்'' (குர்ஆன்–43:10).
நாம் ஒரு கயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டு அதன் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு சுழற்றினால் என்ன நிகழும்? கயிற்றில் கட்டப்பட்டுள்ள கல் வட்ட வடிவத்தில் நம்மைச் சுற்றி சுழன்று கொண்டிருக்கும் அல்லவா? கயிற்றின் வழியே இது நம்முடன் ஒரு ஆற்றலால் பிணைக்கப்பட்டுள்ளது. இதனை 'ஈர்ப்பு ஆற்றல்' என்று அழைக்கிறோம்.
மேலே குறிப்பிட்டதைப் போல பூமியின் மையத்தில் செயல்படும் ஈர்ப்பு ஆற்றலே, பூமியின் மேற்பரப்பில் உள்ள அனைத்தையும் பிடித்து வைத்துள்ளது. இந்த ஈர்ப்பு ஆற்றல் இல்லாது போனால் நாம் விண்ணிற்கு வீசி எறியப்பட்டிருப்போம்.

பூமி, சூரியனால் ஈர்க்கப்பட்டு, சூரியனை விட்டு விலகாமல், ரங்கராட்டினம் போல சுற்றி சுற்றி வருகிறது.

மேற்கண்ட வசனத்தில் இந்தப் பூமியைத் தொட்டிலாக அமைத்திருப்பதாக இறைவன் கூறுவதன் மூலம், புவி ஈர்ப்பு விசை அதாவது பூமிக் காந்தம் பற்றிய கருத்து இங்கே மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது என்று கொள்ளலாம்.
காந்த சக்தியின் தகவல்களால் திசைகாட்டும் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டது . பூமியின் காந்த முனைகளுக்கு சார்பாக வடக்கு - தெற்கு திசையைக் காட்டும் உபகரணமாகும். திசைகாட்டியை முதன்முதலில் கண்டுபிடித்தவர் அலெக்சாண்டர் நெக்காம் என்ற துறவியாவார்.
திசைகாட்டி கருவியில் 1. நிலத்திசைகாட்டி, 2.கடல் திசைகாட்டி, 3.வானூர்தி திசைகாட்டி என மூன்று வகையுள்ளது.
பறவைகள் தங்களது இடம்பெயர்ச்சிக்கு குறைந்தது இரண்டு அச்சுகளாகிய அட்ச ரேகையையும், தீர்க்க ரேகையையும் பயன்படுத்துகின்றன எனப் புதிய ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இதிலிருந்து பறவைகள் எவ்வாறு அட்ச ரேகைகளைக் கண்டறிகின்றன என்பது தெரியவில்லை.
ஆனால் தீர்க்க ரேகை என்பது வடக்கு தெற்கு திசைகளில் செல்கிறது. இதை நடுப்பகலில் உள்ள சூரியனின் இருப்பிடத்தை வைத்தோ அல்லது பூமியின் காந்தப்புலத்தை வைத்தோ எளிதில் கண்டறியலாம் என்று ஆய்வாளர் சென்ஸ்டவ் விளக்கியுள்ளார்.பறவைகள் இவ்வாறு புவி காந்தயீர்ப்பு மற்றும் காந்த விலக்கு விசை மூலம் திசைகளை மாற்றி கொள்கிறது.
மூன்றாவதாக வானத்தில் உள்ள நட்சத்திரத்தின் அடிப்படையில் இடம்பெயரும் பறவைகள், அவை செல்ல வேண்டிய இடத்தில் தீர்க்கரேகையை அறிந்து இடம் பெயருகின்றன என்பர்.

وَعَلٰمٰتٍ وَبِالنَّجْمِ هُمْ يَهْتَدُوْنَ
(பகலில் திசைகளை அறிவிக்கக்கூடிய மலைகள் போன்ற) அடையாளங்களைக் கொண்டும் (இரவில்) நட்சத்திரங்களைக் கொண்டும் (பயணிகள்) தங்கள் வழியை அறிந்து கொள்கின்றனர். (அல்குர்ஆன் : 16:16)
புவி ஈர்ப்பு காந்தத்தைக் கொண்டு புறா தன் பயணத்திற்கு GPS தத்துவத்தை இயற்கையாக பயன்படுத்தி வருவதை ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர் .
கிப்லா என்றால் என்ன?
கிப்லா என்பது சவூதி அரேபியாவின் மக்காவில் அமைந்துள்ள அல்-மஸ்ஜித் அல்-ஹரம் பள்ளிவாசலில் உள்ள கஃபாவை நோக்கிய நிலையான திசையாகும். உலகில் எப்பகுதியில் இருந்தாலும் இஸ்லாமியர்கள் அனைவரும் இந்தத் திசையை நோக்கியே தொழுகை செய்வர்.
கிப்லாவை எப்படிக் கணக்கிடுகிறோம்?
கஃபாவின் இருப்பிடத்தையும்- (அட்சரேகை 21.4224779, தீர்க்கரேகை 39.8251832) - உங்களின் தற்போதைய இருப்பிடத்தையும் (GPS அல்லது நீங்களே செட் பண்ணியது) பயன்படுத்தி, உலகில் அமைந்துள்ள இரண்டு புள்ளிகளுக்கு இடையேயான நேர் வழியைக் கண்டறிவோம். இது பெரு வட்டத்தின் தொலைவு எனவும் அழைக்கப்படுகிறது.
கஃபாவின் திசையை கண்டறிய பறவைகள் போலவே அட்ச ரேகையையும், தீர்க்க ரேகையையும் பயன்படுத்துகின்றோம் . ஹேவர்சைன் சூத்திரத்தைப் பயன்படுத்தி, இது கணக்கிடப்படுகிறது.(ஹேவர்சைன் சூத்திரம் சொன்னால் அது உங்களுக்கு போரடிக்கும். அதனால் தவிர்த்துள்ளேன்) தட்டையான வரைபடத்தில் பார்க்கும் போது, பூமியின் வளைவு காரணமாக சில நேரங்களில் நேர்க்கோடு வளைந்து காணப்படலாம்.
கிப்லா ஃபைண்டர் உங்கள் சாதனத்தின் திசைகாட்டியைப் பயன்படுத்தி செயல்படுகிறது. முடிந்த வரை திசையின் துல்லியத்தை உறுதிப்படுத்த, திசைகாட்டியைப் பயன்படுத்தும் முன் அதைச் சீரமைக்குமாறு பரிந்துரைக்கிறோம்.
இத்தனை விஷயங்களும் காந்தம் தரும் தகவல்களால்தான் என்றால், அது மிகையாது.

தகவல் பரிமாற்றம் 17

எங்கே மறைந்து போனது அந்த வான சாஸ்திரம் ?


வானத்தில் நட்சத்திரங்கள் முன்னறிவிப்பு செய்து கொடுத்த தகவல்களின் விளக்கத்தை யூகிக்கும் திறமையும் கொடுத்த வல்ல நாயன் அவனுக்கே எல்லாப் புகழும்
இந்த வான சாஸ்திரத்தை பூமிக்கு கொண்டு வந்தவர் நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகும். ஒருநாள் இவர் வெயில் கடுமையாக இருந்தது அதன் வெப்பம் தாளாது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் பெரிதும் துயருற்றார்கள் . சூரியனிலிருந்து இவ்வளவு தொலைவு பூமியிலிருந்தும் இங்குள்ள மக்களுக்கு இவ்வளவு வெப்பமாக இருக்கிறது. அந்த சூரியனை சுமக்கும் அந்த வானவருக்கு அதன் வெப்பத்தை எவ்வாறு பொறுத்துக் கொள்வார் ? இறைவனை அவரின் துன்பத்தை இலகுவாய் ஆக்குவாயாக !
அந்த உடனே சூரியனின் வெப்பம் குறைக்கப்பட்டது .அந்த வானவர் சந்தோஷப்பட்டு இத்ரீஸ் (அலை) அவர்களை காண பூமிக்கு வந்து , நபியவர்களை வானலோகத்திற்கு
அழைத்து சென்று மலக்குகள் பார்வையிடும் ஸிர்ருல் மலக்கூத்து என்கிற பிரபஞ்சங்கள் இரகசிய
கிதாபை படிக்க கொடுத்தும் சூரியனுடைய கோள்கள் சுற்றி வரும் பாதைகளில் அந்தந்த கிரகங்களோடு அவரையும் பயணிக்க செய்தார்கள்
இப்படி சனிக்கோளுடன் சேர்ந்து 30 ஆண்டுகள் விண்ணிலே பயணித்து வந்தார்கள் ஆகையால் இவர்களால் தன்னால் நேரில் கண்ட நட்சத்திரத்திரங்களைப் பற்றியும் கிதாபு ஸிர்ருல் மலக்கூத்து என்கிற பிரபஞ்சங்கள் இரகசிய
கிதாபை ஒன்றாக சேர்த்து வான சாஸ்திரத்தை இவர்கள் தொகுத்து பூமிக்கு கொடுத்தார்கள்
தொடு குறி சாஸ்திரம், கிளி ஜோஸ்யம், பங்கஜா லாட்ஜ் பாமிஸ்ட் , "கிரகம் பாடாய் படுத்தும் " என்று சொல்லும் "பாலத்து ஜோஸ்யர்கள் " போன்ற வியாபாரக்காரர்களை எல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, இந்த சாஸ்திரத்தின் அடிப்படைச் சிந்தனையை யோசித்து பார்த்தால் , வசீகரமாகத்தான் இருக்கிறது.
அந்த சிந்தனை என்ன?
ஒரு குழந்தை பிறக்கும் போது, அதன் முதல் மூச்சு, வடிவம் பெற்று அது உலகத்தில் ஓர் உயிராய் பிரவேசிக்கும் போது, இந்த பிரபஞ்சவெளியிலும் ஒரு பிரத்தியேகமான நிகழ்ச்சி நிகழ்கிறது என்கிறார்கள்.
ஏதோ ஒரு நட்சத்திரம் ஒரு குறிப்பிட்ட நிலையில் உச்சம் பெறுகிறது. இந்த நட்சத்திரம் மற்றும் கிரகங்களின் நிலை இதெல்லாம் பிறந்த உயிருக்கு தொடர்புபடுத்தி நிறைய நிறைய கணிக்கிறார்கள் .
இதெல்லாம் நிஜமாலுமா ..? என்று நீங்கள் கேட்பது புரிகிறது. சொல்றேன்

பைலபூஸ் மன்னர் கிரேக்க அரச குமாரி கிலாயா மணக்கிறர் .சிற்றரசர் மல்கான் என்பவரை அவள் தங்கை அல்காவை மணக்கிறார் .பைலபூஸ் 40 ஆண்டு காலமாக சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு வானத்தைப் பார்த்து கோள்கள் நட்சத்திரங்கள் ஆகியற்றின் அமைப்புகளையும் ஆராயும் வழக்கம் அவருக்கு உண்டு. அந்தந்த நட்சத்திரங்கள் உச்ச நிலை அடையும் பொழுது வீடு கூடி மல்கான் என்பவருக்கு கிள்று (அலை) அவர்களும், பைலயூஸ் மன்னருக்கு துல்கர்னைன் (அலை) பெற்றெடுத்தார்கள் .
''நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் நட்சத்திரங்களை கூர்ந்துப்பார்த்தார் " குர்ஆன் (37 : 88) " இலா "என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருந்தால் "கூர்ந்து " என்று அர்த்தம் வரும். எனவே நட்சத்திரக் கலையை பயின்றார். மேற்கண்ட வசனத்தைத் தொடர்ந்து இப்ராஹிம் (அலை) அவர்கள்
" பின்னர் நட்சத்திரங்களைக் கூர்ந்து பார்த்து. நிச்சயமாக எனக்கு ஒரு நோய் ஏற்படும் போல் இருக்கின்றது " என்று கூறவே குர்ஆன் (37 : 88,89)
"எந்த நபியுடைய ஜென்ம நட்சத்திரம் விண்ணில் அவர் பிறப்பதற்கு முன் தோன்றாமல் இருந்ததில்லை "
இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்


நபி மூஸா (அலை) அவர்கள் பிறப்பதற்கு முன்னதாக பிர்அவ்னின் அரண்மனையில் உள்ள வான சாஸ்திரிகள் வானில் ஜென்ம நட்சத்திரம் தோன்றி விட்டது இது ஓர் அவதாரப் புருஷன் பனி இஸ்ரவேலர்களில் பிறந்தற்குரிய அறிகுறி என்று கணித்ததும் ,

ஒரு லட்சத்திறகும் அதிகமான பிறந்த ஆண் குழந்தைகளின் தலை சீவப்பட்டது . அக்கால வான இயல் வல்லுநர் கணித்ததில் தவறெதும் உண்டா ? மூஸா (அலை) பிறக்காமலா போனார்கள் ? பிறந்தார்கள் அல்லவா ? குர்ஆன் (20 : 39) (28 : 07)
இது போன்றே நபி ஈஸா (அலை) அவர்கள் பிறக்கும் போது மூன்று வான இயல் வல்லுநர்கள் ஜென்ம நட்சத்திரம் வானில் தோன்றியதை கண்டு, பைத்துல் முகத்தஸ் வந்து சேர்ந்து இஸ்ரவேலர்களின் அரசர் பிறந்து விட்டாரா என்று ஐரதூஸ் மன்னனிடம் கேட்க, பின் விசாரித்தில் மாட்டுத் தொழுவத்தில் மாநபி ஈஸா (அலை) அவர்கள் பிறந்தது உண்மைதானே.?

"பதினோரு நட்சத்திரங்களும். சூரியனும், சந்திரனும் எனக்கு தலை வணங்கக் கண்டேன்" குர்ஆன் (12 : 04) என்று சிறுவர் நபி யூசுப் (அலை) கனவில் கண்ட நட்சத்திரங்கள் தன்னுடைய சகோதரர்கள் என்பதை தந்தை நபி யாகூப் (அலை) அவர்கள் அறிவிக்கவில்லையா ?
ரோமபுரி ஹெர்குலிஸ் மன்னர் "இன்றிரவு நான் நட்சத்திர மண்டலத்தை ஆராய்ந்தபோது, "விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களின் மன்னர் தோன்றிவிட்டதாக ஜென்ம நட்சத்திரத்தின் மூலம் அறிந்தேன்" என்று கூறி அண்ணலெம் பெருமானார் நபி முஸ்தபா (ஸல்) அவர்களின் பிறப்பை பதிவு செய்யவில்லையா ? புகாரி பாகம் 1 - ஹதீஸ் 07
வான் நட்சத்திரங்கள் இன்றைக்கும் பல தகவல்களை வாரி இறைத்துக் கொண்டேதான் இருக்கிறது .அந்த தகவல்களைப் புரிந்து பூமியில் சொல்லத்தான் யாருமே இல்லை .
(வான சாஸ்திர சிறப்பு சொற்பொழிவு Copy link)
https://m.facebook.com/story.php?story_fbid=2615474468711892&id=100007480923921

தகவல் பரிமாற்றம் 18

மழை வரும் தகவல்கள்



தமிழ் இலக்கியம் போல உலகில் எந்த இலக்கியமும் வாழ்க்கையை பிரதிபலிக்காது என்று சொல்லுவார்கள் அறிஞர் பெருமக்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு பொழுதையும் தமிழ் இலக்கியம் பாடல்களாக பாடி தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு படைத்த பெருமை தமிழ் இலக்கியத்திற்கு உண்டு .
சின்ன வயதில் படித்தது, அநேகமாய் உங்களுக்கும் தெரிந்திருக்கும், மழை அறிகுறிகள் பற்றிய தகவலை தரும் தமிழ் இலக்கிய பாடல்
ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி மலையாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்றும் இன்றும் கொம்புசுற்றிக்
காற்றடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித்தவளை
கூப்பிடுதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்று அடைக்குதே - மழை
தேடி ஒருகோடி வானம்
பாடியாடுதே
போற்று திருமால் அழகர்க்கு
ஏற்றமாம் பண்ணைச் சேரி
பள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்

துள்ளிக் கொள்வோமே
(முக்கூடற்பள்ளு – 30)
நூல்: முக்கூடற்பள்ளு (#35)
பாடியவர்: தெரியவில்லை
சூழல்: மழை வரும் நேரம், பள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆனந்தமாகப் பாடும் 'சிந்து' வகைப் பாடல்
(இந்த எளிய பாடலுக்கு உரை அவசியமில்லை. எனினும் ஒரு சாத்திரத்துக்காக இது!)
ஆற்றில் நாளை வெள்ளம் வரப்போகிறது, அதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிகின்றன.
மலையாள / கேரள நாடு இருக்கிற பக்கத்திலிருந்தும், இலங்கை / ஈழ நாடு இருக்கிற பக்கத்திலிருந்தும் மின்னல்கள் சூழ்ந்து மின்னுகின்றன.
நேற்றும் இன்றும் காற்று பலமாகச் சுழன்று அடிக்கிறது. மரங்களை ஆட்டிவைக்கிறது.
கிணற்றுத் தண்ணீரில் இருக்கும் சொறித்தவளை சத்தமிட்டு மழை வரப்போகும் செய்தியைச் சொல்கிறது.
மழை வந்து வெள்ளம் நிரம்பினால் சேற்றில் வாழும் நண்டு என்ன ஆகும்? அதற்காக அந்த நண்டு முன்னெச்சரிக்கையாக அந்தச் சேற்று மணலைக் கொண்டே தன்னுடைய வளையின் வாசலை அடைக்கிறது.
மழையைத் தேடி ஒரு கோடி வானம்பாடிகள் விண்ணில் பாடிப் பறக்கின்றன.
எல்லோரும் போற்றி வழிபடுகிற அழகர் திருமால். அவருக்குப் பிடித்தமான பள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம்.
பண்ணையில் வேலை செய்கிற, சேரியில் வாழ்கிற பள்ளர்களாகிய நாம் அனைவரும் மழையை வரவேற்றுப் பாடுவோம், துள்ளி ஆடுவோம் என்று பாடல் பொருள் விரிகிறது .
ஆற்றில் வெள்ளம் வருவதையும் அதனால் முன்னேற்பாடான சுற்றுச் சுழல் பற்றிய தகவல் தெரிவிக்கிறது இப்பாடல் .

தகவல் பரிமாற்றம் 19


இரவு ஏன் இருட்டாக இருக்கிறது ?

இப்படி ஒரு சந்தேகம் ஜெ.பி.எல். டிசேசாக்ஸ் (J.P.L Ducheneaux) என்ற சுவிட்சர்லாந்து அறிஞர் ஒருவர் விஞ்ஞானிகளிடம் கேட்டார்.
இதென்ன பெரிய கேள்வி ?
இரவில் சூரியன் இல்லை. அதனால் இருட்டாக இருக்கிறது என்று நாம் பதில் சொல்லி இருப்போம். ஆனால் விஞ்ஞானிகள் கொடுத்த விளக்கம் என்ன தெரியுமா ?
வானிலுள்ள நட்சத்திரங்கள் எல்லாம் தானாக ஒளிரக் கூடியது ! நம்ம சூரியனும் ஒரு நட்சத்திரம்தான். அதுவும் தானாக ஒளிரும் சக்தி இருக்கிறது . நமக்குத் தேவையான ஒளியையும், வெப்பத்தையும் பகலில் கொடுக்கிறது .
ஆனால் சூரியன் மேற்புறத்தின் வெப்பம் 6000 டிகிரி செல்சியஸ் , சூரியனின் நடுவில் 20,000 டிகிரி செல்சியஸ் பூமிக்குத் தேவையான வெப்பத்தையும் ஒளியையும் பெறுவதற்கு நம்ம பூமிதான் 149,600 ,000 கிலோ மீட்டர் தூரத்தில் சூரியனிலிருந்து விலகி இருக்கிறது.
இதே சூரியன் மறுமை நாளில் சூரியன் மக்களுக்கு அருகில் ஒரு மைல் தொலைவில் நெருங்கி வரும். அப்போது மக்கள் தங்களின் செயல்களுக்கேற்றவாறு வியர்வையில் மூழ்குவார்கள். சிலரது வியர்வை கணுக்கால் வரையிலும், சிலரது வியர்வை முழங்கால்கள் வரையிலும், சிலரது வியர்வை இடுப்பு வரையிலும், சிலரது வியர்வை வாய் வரையிலும் எட்டிவிடும்.
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
மறுமைநாளில் மனிதர்களுக்கு (அவர்களின் தலைக்கருகில் நெருங்கி வரும் சூரியனால்) வியர்வை ஏற்படும். அவர்களின் வியர்வை தரையினுள் எழுபது முழம் வரை சென்று, (தரைக்கு மேல்) அவர்களின் வாயை அடைந்து, இறுதியில் அவர்களின் காதையும் அடையும். அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி-6532
இரவில் ஏகப்பட்ட நட்சத்திரம் வானில் இருக்கிறது. இவைகள் ஒவ்வொன்றும் நம்ம சூரியனை விடவும் பெரியது.அப்படி என்றால் பகலில் இருப்பதை விட அதிகமான வெளிச்சம் இரவில் இருக்க வேண்டுமே ! ஏன் இல்லை ?
நட்சத்திரங்கள் எல்லாம் பூமியில் இருந்து வெகு தூரத்திற்கு அப்பால் இருக்கிறது. அது மட்டுமல்ல அதில் இருந்து வருகிற ஒளி ஆற்றல் மாறுபடுகிறது.
எப்படி மாறுபடுகிறது ?
பூமிக்கும் நட்சத்திரங்களுக்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவோ அந்த தூரத்தின் வர்க்கத்தோட தலைகீழ் விகிதத்தில் மாறுபடுகிறது. அதனால் இடைப்பட்ட தூரம் அதிகரிக்க அதிகரிக்க நட்சத்திரத்தில் இருந்து பூமிக்கு வந்து சேர்கிற ஒளியின் அளவு குறைந்து போய்விடுகிறது. இது பற்றி பத்தாவது வகுப்பு படிச்ச பையன் தெளிவாக சொல்வான் .
.
சரி, சூரியனில் இருந்து வந்து சேருகிற வெளிச்சத்தில் பத்து லட்சத்தில் ஒரு பங்கு வெளிச்சம்தான் ஒரு நட்சத்திரத்தில் இருந்து இங்கே வருவதாக வைத்துக்கொள்வோம். அப்படியென்றால் 10 லட்சம் நட்சத்திரங்களிடருந்து பூமிக்கு வருகிற மொத்த வெளிச்சத்தையும் கூட்டினால் ஒரு சூரியனிடம் இருந்து வருகிற அளவுக்கு வெளிச்சம் இருக்க வேண்டுமே ...இந்த கணக்குப்படி பார்த்தால் இரவு பகலைவிட வெளிச்சமாக இருக்க வேண்டும் அல்லவா ? நல்ல கேள்வி .
இப்போ மறுபடியும் முதல் கேள்வியை யோசித்துப்பாருங்கள் இரவு ஏன் இருட்டாக இருக்கிறது ?
ஒரு சின்ன செயல்முறை : ஒரு காகிதத்தை குழாய் மாதிரி சுருட்டி 5 அல்லது 6 அங்குலம் நீளம் இருக்கட்டும் .இரவில் ஒரு இருட்டான பகுதியில் நில்லுங்கள் ! வெளிச்சமான பகுதியிலே உள்ள ஒரு சுவரை அந்த காகிதகுழாய் மூலம் பாருங்கள் !

முதலில் கொஞ்சம் பக்கத்திலிருந்து பார்த்து விட்டு , அதன் பின் ஒரு பத்து அடி தூரம் பின்னாடி நகர்ந்து போய் நின்று மறுபடியும் பாருங்கள் .
முதலில் பார்த்த போது சுவரில் ஒரு சிறு பகுதி ஒளிவட்டமாக தெரியும் .பின்னால் போய் நின்று பார்த்த போது அதிகமான சுவர் பரப்பு தெரியும். ஆனால் வெளிச்சம் குறைவாக இருக்கும். உண்மையில் இந்த வெளிச்சம் குறைவு சுவர் பரப்பு அதிகரிக்கிறதை சரிக்கட்டுகிறது . இப்படித்தான் வானில் உள்ள நட்சத்திரங்களின் ஒளி குறைவாக தெரிகிறது .
எனவே இரவு இருட்டாக இருப்பதற்கு இதுவும் காரணங்களாகும் .
இறைவனிடம் ஏன் பகலை வெளிச்சமாகவும், இரவை இருட்டாகவும் படைத்தற்கு அவன் சொல்லும் காரணம் :
وَهُوَ الَّذِىْ جَعَلَ لَـكُمُ الَّيْلَ لِبَاسًا وَّالنَّوْمَ سُبَاتًا وَّجَعَلَ النَّهَارَ نُشُوْرًا
அவன்தான் உங்களுக்கு இரவைப் போர்வையாகவும், ஓய்வளிக்கக் கூடியதாகவும், பகலை (உங்கள்) நடமாட்டத்திற்காக (பிரகாசமாக)வும் ஆக்கினான்.
(குர்ஆன்: 25:47)
وَسَخَّرَ لَـكُمُ الَّيْلَ وَالنَّهَارَ ۙ وَالشَّمْسَ وَالْقَمَرَ ‌ؕ وَالنُّجُوْمُ مُسَخَّرٰتٌ ۢ بِاَمْرِهٖ ‌ؕ اِنَّ فِىْ ذٰ لِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ۙ
அவனே இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்களுக்காக (படைத்துத்) தன் அதிகாரத்துக்குள் வைத்திருக்கிறான். (அவ்வாறே) நட்சத்திரங்கள் அனைத்தும் அவனுடைய கட்டளைக்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன. நிச்சயமாக இதிலும் சிந்தித்து அறியக்கூடிய மக்களுக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (அல்குர்ஆன் : 16:12)

தகவல் பரிமாற்றம் 20

வயிற்றுக்குள் ஒரு பயணம்




நமக்கு பல தகவல்கள் வந்து கொண்டே இருக்கும் .அதில் சில தகவல் நம் பகுத்தறிவை பதம் பார்க்கும். அப்படிப்பட்ட சில தகவல்களை பார்ப்போம் .
சில நத்தைகள் உயிரோடு மீன் வயிற்றுக்குள் போய்விடும் மறுபடி உயிரோடு வெளியே வந்துவிடும் .நண்டு, நத்தை, லாப்ஸ்டர் இந்த வகை உயிரினங்களுக்கு ஓடு உறுதியாக இருக்கிறது. காரணம் எதிரிகள் கடிச்சா தப்பிக்கத்தான்.
கடலில் உள்ள சில வகை நத்தைகளை சில வகை மீன்கள் அப்படியே முழுங்கி விடும். அந்த நத்தைக்கெல்லாம் இயற்கை ஒரு வசதியை பண்ணி கொடுத்திருக்கிறது .அதாவது அந்த நத்தை ஓடுகளில் ஒரு கதவு இருக்கிறது. இந்த கடல் நத்தை ஓர் மீன் வயிற்றுக்குள் போனதும் அந்த கதவு உடனே கெட்டியாக மூடிக்கொள்ளும் .
மீனின் ஜீரண நீர் நத்தையின் ஓட்டில் சேதம் இருந்தால் அதன் வழியே துளைத்து உள்ளே சென்று நத்தையை பஸ்பமாகிவிடும் .எவ்வித சேதமும் இல்லாத ஓட்டுடன் கூடிய நத்தையை மீனின் ஜீரண நீர் ஒன்றும் செய்ய முடியாது. மேலும் மீனின் ஜீரணபாதை வழியாக பயணம் செய்து உயிருடன் வெளியே வந்துவிடும். நத்தை அதுவா நகர்ந்து போய் எந்தக் காலத்தில் போய்ச் சேர்றது. இப்படி மீன் ஏதாவது விழுங்கி தொலை தூரத்திற்கு கொண்டு சென்றால்தான் உண்டு.
இந்த ஆச்சரியமான இந்த விஷயத்தை அமெரிக்க ஆராய்ச்சியாளர் Stephen F Norton என்பவர் கண்டு பிடித்திருக்கிறார்.
நபி யூனுஸ் (அலை) - யோனா (Jonah) கி.மு 8 நூற்றாண்டில் ஈராக்கிலுள்ள நைனுவா நகருக்கு அதுவும் ஒரு இலட்சம் பேர் கொண்ட ஒரு சமூகத்திற்கு அவர்கள் நபியாக அனுப்பப்பட்டார்கள் .
அந்த மக்கள் சிலைகளை வணங்கி வந்தனர். யூனுஸ் நபி சிலை வணக்கம் கூடாது அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்று போதித்தார்கள் . அந்த மக்கள் நபியின் போதனையை ஏற்கவில்லை. எனவே, உங்களுக்கு அழிவு வரும் என்று எச்சரித்து விட்டு, ஊரை விட்டும் யூனுஸ் நபி அவர்கள் வெளியேறிவிட்டார்கள்
ஒரு நபி தனது நைனுவா ஊரை விட்டும் வெளியேறுவதென்றால், அல்லாஹ்வின் கட்டளை வர வேண்டும். யூனுஸ் நபி அவர்கள் தனது சுய முடிவில் சென்றார்கள்
ஒரு கடல்கரையில் கப்பல் நின்றிருந்தது. அதில் மக்கள் நிறைந்திருந்தனர். இவர் போய் அந்தக் கப்பலில் நபியவர்கள் ஏறிக் கொண்டார்கள் .கப்பல் கடலில் பயணித்தது. இடை நடுவில் கப்பல் அலை மோத ஆரம்பித்தது. இவ்வாறு ஆபத்து வந்ததால் கப்பலில் உள்ளவர்களின் பெயர்களை எழுதி சீட்டுக் குலுக்கி யாருடைய பெயர் வருகின்றதோ அவரைக் கடலில் குதிக்கச் சொல்வது அவர்களது மரபாகும்.
இந்த அடிப்படையில் சீட்டுக் குலுக்கிய போது யூனுஸ் நபி அவர்களின் பெயர்தான் வந்தது. அவர்கள் கடலில் குதித்தார்கள்

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. மிகப் பிரம்மாண்டமான ஒரு மீன் யூனுஸ் நபி அவர்களை விழுங்கிக் கொண்டது. யூனுஸ் நபியவர்கள் மீனின் வயிற்றுக்குள் சென்றார்கள். தான் சோதிக்கப்படுவதை அறிந்தும் கொண்டார்கள் அவர் மீன் வயிற்றில் இருந்து கொண்டு,
உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை. நீ தூய்மையானவன். நான் அநீதமிளைத்தோரில் ஆகிவிட்டேன்! (குர்ஆன் 21:87) என்று பிரார்த்தித்தார்.
பிற வேதங்களில் யூனுஸ் நபி மூன்று நாட்கள் மீன் வயிற்றில் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டாலும், குர்ஆனில் அவர் எத்தனை நாட்கள் மீன் வயிற்றில் இருந்தார்கள் என்று சொல்லப்படவில்லை. மாறாக அவர் நீண்ட காலம் இருந்துள்ளார்கள் என்பதை குர்ஆனில் இருந்து அறிய இயலும்.
மனிதனை விழுங்கும் அளவுக்கு பெரிய மீன் ஆழமுள்ள கடல் பகுதியிலேயே இருக்கும். மேலும் கடலின் பல பாகங்களுக்கு சென்று வரக்கூடிய அம்மீன் நபியவர்களைக் நைனுவா கரையிலேயே கொண்டுவந்து உமிழ்ந்துள்ளது.

மீன் வயிற்றில் இருந்து நோய்வாய்ப்பட்ட நிலையிலேயே அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார். நிச்சயமாக இது குறுகிய நேரத்தில் நடந்த நிகழ்வல்ல. இது ஒரு அற்புத நிகழ்வே...
மீன் வயிற்றில் மனிதன் சுவாசிக்கக் காற்று இருக்காது. மனிதனால் காற்றிலிருந்து 15% ஆக்சிஜனை மட்டுமே உள்ளிழுக்க இயலும். ஆனால் திமிங்கலத்தால் 90% ஆக்சிஜனை உள்ளிழுக்க முடியும். மீனின் வயிற்று தசைகளில் மயோக்ளோபின் எனும் செல்களில் அந்த ஆக்சிஜன் சேமிக்கப்பட்டிருக்கும்.
மேலும் உணவை உட்கொண்ட உடனேயே திமிங்கலத்தின் வயிறு செரிமான வேலைகளை துவங்கிவிடும். திமிங்கலம் உணவை மென்று விழுங்காது. அப்படியே முழுமையாக விழுங்கி விடும்.
எனவே வயிற்றின் முதல் பகுதியில் இருக்கும் சக்தி வாய்ந்த தசைகள் மெல்லும் வேலையை செய்யும். மனிதனை திமிங்கலம் விழுங்கினால் சற்று நேரத்தில் வயிற்றின் முதல் பகுதியில் மனிதனது எலும்புகள் உடைக்கப்படும். அடுத்த இரண்டாம் கட்டமாக செரிமானத்திற்கான அமிலங்கள் சுரக்கப்பட்டு அந்த அமிலத்தில் மனிதன் அழிந்துவிடுவான்.
ஆக மீன்களின் வயிற்றில் சில நாட்கள் என்ன சில மணி நேரங்கள் கூட மனிதனால் உயிரோடு இருக்க இயலாது.
அல்லாஹ் அவரது பிரார்த்தனையை அங்கீகரித்தான். மீன் அவரை கரையில் துப்பியது. அவர் கடற்கரையில் பலவீனமான நிலையில் இருக்கும் போது அல்லாஹ் சுரைக்காய் கொடியை வளரச் செய்து அவருக்கு நிழல் கொடுத்தான்.
யூனுஸ் நபியின் மக்கள் வேதனையின் அடையாளத்தைக் கண்டு அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டனர். அவர்களின் ஈமானும் தவ்பாவும் அவர்களைப் பாதுகாத்தது. யூனுஸ் நபி அவர்களும் சோதனையில் இருந்து மீண்டு கொண்டார்கள்
ரஹ்மத் ராஜகுமாரன் .
("தகவல் பரிமாற்றம்" தொடர் பதிவு இத்துடன் நிறைவு பெறுகிறது)

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 1

(கணிதத்தின் அறிமுகம்)



கணிதம் அறிவியல் மொழியாக அழைக்கப்படுகிறது. இத்தாலிய வானியலாளரும் இயற்பியலாளருமான கலிலியோ கலீலி மேற்கோள் காட்டி, " கணிதம் என்பது கடவுள் பிரபஞ்சத்தை எழுதியுள்ள மொழியாகும் " என்கிறார்.
(ஆகவே இச்சொற்றொடரை இத்தொடர் பதிவுக்கு தலைப்பாக்கினேன்)

அது உண்மைதான் என்பதற்கு இறைவனால் மனித குலத்திற்கு அருளப்பட்ட குர்ஆனிலும் , அவன் செய்ய சொல்லும் வழிபாடு மற்றும் செயல்முறைகளிலும் கணிதமே மிகைத்திருப்பதைச் சுட்டிக் காட்டவே இத்தொடர் பதிவில் உங்களுக்கு சொல்லிக் காட்ட இருக்கிறேன் .

தலை சிறந்த தத்துவ ஞானியும், கணிதப் பேராசிரியராகவும் சமூகப் போராளியாகவும் திகழ்ந்த பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கூறுவார்: " கணிதம் உண்மையைக் கூறுவது மட்டுமல்ல, அளவிலா அழகு படைத்தது, ஓர் ஒப்புயர்வற்ற சிற்பம் போல கணிதம் அழகுமிக்கது"
ராமானுஜனின் இங்கிலாந்து சக கணித அறிஞர் ஹார்டி சொன்னார்: "கணிதம் அழகின் உருவம். அழகிலா கணிதம் என்று ஒன்றில்லை "
" கடவுள் வடிவியலின் (Geometry) நிரந்தர நிபுணர் " என்கிறார் பிளாட்டோ.
"எண்களே கடவுள்" என்கிறார்கள் பிதாகரஸ்வாதிகள் கணிதத்தை மதமாக்கினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கணிதமேதை கார்ல் கஸ்டவ் என்பவர் இன்னும் ஒரு படி மேலே போய் "கடவுள் பயன்படுத்தும் ஒரே மொழி கணிதம் " என அறிவித்தார். அது சரிதானோ என்கிறது இவ்வாய்வு .
ஆங்கிலேயே இயற்பியலாளர் சர். ஜேம்ஸ் ஜீன்ஸ் இறுதியாக "இந்த பிரபஞ்சத்தை வடிவமைத்தது ஒரு கச்சிதமான தூய கணிதவியலாளர் தான் என்பது நிச்சயம் ஆகிவிட்டது "
மேற்கூறப்பட்ட அறிஞர்களான பிளாட்டோ,பிதாகரஸ்வாதிகள், கார்ல் கஸ்டவ் , சர் .ஜேம்ஸ் ஜீன்ஸ் ஆகியோர்களின் சொற்றொடர்களை ஒருங்கே இணைத்தால், குர்ஆன் கூறுவது

اَللّٰهُ الَّذِىْ رَفَعَ السَّمٰوٰتِ بِغَيْرِ عَمَدٍ تَرَوْنَهَا ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ كُلٌّ يَّجْرِىْ لِاَجَلٍ مُّسَمًّى يُدَبِّرُ الْاَمْرَ يُفَصِّلُ الْاٰيٰتِ لَعَلَّكُمْ بِلِقَآءِ رَبِّكُمْ تُوْقِنُوْنَ
வானங்களை தூணின்றியே உயர்த்தியவன் அல்லாஹ்வே! அதனை நீங்கள் (உங்கள் கண்களால்) காண்கிறீர்கள். அன்றி, அர்ஷின் மீது அவன் (தன் மகிமைக்கு தக்கவாறு) உயர்ந்து விட்டான்.
அவனே சூரியனையும் சந்திரனையும் தன் அதிகாரத் திற்குள் வைத்திருக்கின்றான். (இவை) ஒவ்வொன்றும் (அவற்றிற்குக்) குறிப்பிட்ட கால திட்டப்படி நடந்து வருகிறது. (அவற்றில் நடைபெறும்) சலக காரியங்களையும் அவனே திட்டமிடுகின்றான். நீங்கள் (இறந்த பின்னர் உயிர்பெற்று) உங்கள் இறைவனைச் சந்திப்பதை உறுதி கொள்வதற்காக (தன்னுடைய) வசனங்களை (இவ்வாறு உங்களுக்கு) விவரித்து அறிவிக்கிறான். (அல்குர்ஆன் : 13:2)
அறிவியலின் மகாராணி என்றால் அது கணிதத்தை மட்டுமே குறிக்கும். கணிதம் இன்றி ஒரு செயல்பாடும் செய்ய முடியாது. எதைச் செய்தாலும், அதன் பின்னணியில் கணிதம் இருக்கும். மனிதன் முதலில் அறிந்துகொள்ள முயன்றது கணிதவியல் முறைதான்.
சூரியன் எப்போது உதிக்கிறது, இரவு எப்போது வரும் என்பதை அடிப்படையாக இஸ்லாமிய தொழுகை நேரங்கள் வகுக்கப்படுகின்றன .
சந்திரனின் நடவடிக்கையைக் கொண்டு மாதக் கணக்கையும் இஸ்லாம் கணக்கிடுவது கணித அடிப்படையில்தானே ..

فَالِقُ الْاِصْبَاحِ وَ جَعَلَ الَّيْلَ سَكَنًا وَّالشَّمْسَ وَالْقَمَرَ حُسْبَانًا ذٰلِكَ تَقْدِيْرُ الْعَزِيْزِ الْعَلِيْمِ
அவனே (பொழுதை) விடியச் செய்பவன். அவனே (நித்திரை செய்து நீங்கள்) சுகமடைவதற்காக இரவை ஆக்கினான். (நீங்கள் காலத்தின்) கணக்கை அறிவதற்காக சந்திரனையும் சூரியனையும் ஆக்கினான். இவை அனைத்தும் மிகைத்தவனும், மிக்க அறிந்தவனும் ஆகிய அல்லாஹ்வுடைய ஏற்பாடாகும்.(அல்குர்ஆன் : 6:96)

எவ்வளவு வேகத்தில் கல் வீசி, எந்த விலங்கை எப்படி கொல்லலாம் என்று ஆதிவாசிகள் உணவைத் தேடும் கணக்கை தொடர்ந்து, குடும்பத்தில் எத்தனை பேருக்கு இவ்வளவு உணவுப் பொருள் தேவை என்பதையெல்லாம் கணிப்பது கணிதம் தொடர்பான தகவல்கள்தானே..!
மனிதகுல நாகரிகத்துக்கு முன்பே, உயிர் உருவாக்கத்திற்கான காலம் கணிக்க, மாதவிடாய் நாட்கள் கணிக்க, மகப்பேறு காலம் அறிய கணிதம் தேவை ஏற்பட்டது. பிறந்த குழந்தைக்கு பாலூட்டும் காலம் 2 வருடம் என்று வரையறுத்ததும், இவை யாவும் கணிதம்தானே ..
இத்தா எண்ணிக்கை ,கணிப்பு ,(இடைக்கால காத்திருப்பு காலம்) என்பது சொல்லருத்தம் விவாகரத்துப் பெற்ற இஸ்லாமிய பெண் அல்லது கணவனை இழந்த இஸ்லாமிய பெண் குறிப்பிட்ட காலம் திருமணஞ் செய்யாமல் காத்திருக்கும் இடைக்காலத்தைக் குறிக்கின்றது.
கணவன் இறந்துவிட்டாலோ, கணவனால் விவாகரத்துச் செய்யப்பட்டாலோ மனைவி கர்ப்பமாக இருக்கிறாளா, இல்லையா என்பதை அறிய இத்தகைய இடைக்கால காத்திருப்பு காலம் கணிக்க பயன்படுகிறது.

கணவன் மரணித்த பெண்கள் கர்ப்பிணிகள் அல்ல என்றால் 4 மாதங்களும், 10 நாட்களும் இத்தா இருக்க வேண்டும். இந்தக் காலம் பிறைக் கணக்கின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும்.
கர்ப்பிணியாக இருந்தால்,“கர்ப்பிணிகளின் (இத்தாக்)காலம் அவர்கள் தமது குழந்தைகளைப் பெற்றுப் பிரசவிக்கும் வரையிலாகும்..” (65:3),(65:4) என்கிறது திருக்குர்ஆன் வசனம். இதெல்லாம் கணித அடிப்படையிலான வேத வசனங்கள்தானே ..


திருவள்ளுவர் தந்த குரலில் ‘’எண்ணென்ப ஏனை எழுத்தென்ப’’ என்று கணிதத்தின் முக்கியத்துவத்தை ஒன்று முதல் கோடி எண்கள் வரை வகைப்படுத்தியுள்ளார்.
சிறுவர்கள் விளையாடும் பிசினஸ், ஸ்டாம்ப், பல்லாங்குழி, பரமபதம் இவையெல்லாம் கூட்டல், கழித்தல், பெருக்கல்களை கற்றுக் கொடுக்கும் கணித புதிர் விளையாட்டுகள் விடை தெரியாதவற்றை விடை காண வழிவகுக்கின்றன. இது வாழ்க்கையின் புரியாத புதிர்களை கண்டடைய வைக்கிறது.

பரமபதம் என்பது கடல் சோவிகளைப் பயன்படுத்தி தாய விளையாட்டு ஆடுவது.தற்காலத்தில் அது ஏணியும், பாம்பும் கொண்ட ஒரு பாரம்பரிய பலகை விளையாட்டு. இரண்டுக்கு மேற்பட்டோர் விளையாடும் இவ்விளையாட்டில் பலகை சதுரக் கட்டங்களைக் கொண்டதாக இருக்கும்.
இவ்விளையாட்டு பண்டைய இந்தியாவில் கி.மு இரண்டாம் நூற்றாண்டளவில் விளையாடப்பட்டது. 1892 அளவில் இங்கிலாந்தில் அறிமுகமானது.

இவ்விளையாட்டு கூறும் வாழ்வியல் தத்துவம் நல்வினைகளதும், தீவினைகளதும் விதிப்பேறுகளைக் கொண்டது என்பதை குழந்தைகளுக்கு விளக்குவதாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை யார் அறிவர் ?
தாயக்கட்டை விளையாட்டை உம்மு பாத்திமா (ரலி) அவர்கள் விளையாடியதாக வரலாற்றில் காண முடிகிறது .
சரியான முறையில் புரிந்து கொண்டு, தெரிந்ததை கொண்டு தெரியாததை அறிவுப்பூர்வமாக யோசித்தாலே விடைகளை கண்டறிந்து விடலாம். மூளைக்கு வேலை கொடுக்கவும், மனதை மகிழ்ச்சி படுத்தவும் புதிர் கணக்குகள் விளையாட்டாக மட்டுமல்ல;வினையாகவும் பயன்படுத்தப்படுகின்றன.
கணிதம் இன்றி ஒரு செயல்பாடும் செய்ய முடியாது. எதைச் செய்தாலும், அதன் பின்னணியில் கணிதம் இருக்கும். மனிதன் முதலில் அறிந்துகொள்ள முயன்றது கணிதவியல் முறைதான்.

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 2

(தொழுகையின் நேரங்கள் கணக்கிடுதல்)



இஸ்லாத்தின் முக்கியக் கடமைகளில் ஒன்றான ஐவேளைத் தொழுகையை அதற்கென குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றுவது கடமையாகும்.
"நம்பிக்கை கொண்டோர் மீது தொழுகை நேரம் குறிக்கப்பட்ட கடமையாகவுள்ளது" அல்குர்ஆன் (4:103)
தொழுகை நேரங்கள் இக்காலத்தில் இருப்பது போல கடிகாரங்கள் கண்டுப்பிடிக்காத காலம் . அக்காலத்தில் ஒவ்வொரு பொழுது தொழுகை நேரங்களை கீழ்க்கண்ட வழிகளில்தான் நிறைவேற்றினார்கள்
தொழுகை நேரங்கள் தொடர்பான ஹதீஸ்கள் பின்வருமாறு
ஃபஜ்ர் :-
அடிவானம் வெளுக்கும் பொது; நஸாயி 529
அடிவானம் வெளுத்து நட்சத்திரங்கள் பிரகாசிக்கும்போது; நஸாயி 514
லுஹ்ர் :-
சூரியன் சாய்ந்தபின் ; திர்மிதி 151
நிழல் செருப்பின் வார் அளவுக்கு வரும்போது ; திர்மிதி 149
அஸ்ர் :-
நிழல் ஒரு மடங்கு வரும்போது ; திர்மிதி 149
நிழல் ஒரு மடங்கு + செருப்பின் வார் அளவுக்கு வரும்போது ; நஸாயி 529
நிழலின் நீளம் கோடையில் மூன்று முதல் ஐந்தடி வரை. குளிர் காலத்தில் ஐந்து முதல் ஏழடி வரை ; நஸாயி 507
சூரியன் பொன்னிறமாகும் வரை அசர் தொழுகையின் நேரமுள்ளது.; அபு தாவூத் 396
நிழல் இருமடங்கு வரும் வரை அஸ்ர் தொழுகையின் நேரமுள்ளது. ; திர்மிதி 149
மக்ரிப் :-
சூரியன் மறைந்த பின் ; திர்மிதி 149

அடிவானத்தின் செம்மை மறையும் வரை மக்ரிபின் நேரம் உள்ளது ; நஸாயி 529
நட்சத்திரங்கள் பிரகாசிக்கும் வரை ; அபு தாவூத் 418
இஷா :-
அடிவானத்தின் செம்மை மறைந்த பின் ; நஸாயி 529
இரவின் மூன்றில் முதல் பகுதியில் ; நஸாயி 529
மூன்றாம் பிறை மறைந்தபின் ; அபு தாவூத் 419
மேற்கண்ட ஹதீஸ்களில் ஒரு தொழுகை நேரத்திற்கே வெவ்வேறு கால வரையரையரைகளை நபி ஸல் காட்டிதந்துள்ளர்கள். ஒன்று ஆரம்ப நேரம் மற்றொன்று இறுதி நேரம் என்று வைத்துகொண்டாலும் ஆரம்ப நேரத்திற்கே பல வரையறைகளை கற்று தந்துள்ளதை காணலாம்.
குறிப்பாக இவர்கள் குச்சியை நட்டு நிழலை பார்த்துதான் ரசூலுல்லாஹ் தொழுதார்கள் என்று சொல்லும் அஸ்ர் தொழுகை நேரத்தை பாருங்கள். ஒரு முறை சூரியனின் நிழல் உயராத போதே அஸ்ர் தொழுதிருக்கிறார்கள். ஒரு முறை ஒரு மடங்கு நிழல் வரும்போது அஸ்ர் தொழுதிருக்கிறார்கள்.
மற்றொரு முறை ஒருமடங்கு நிழலுக்கு அதிகமாக செருப்பின் வார் அளவுக்கு நிழல் வந்தபின் அஸ்ர் தொழுதிருக்கிறார்கள்.
பல ஹதீஸ்களில் அஸ்ர் தொழுகைக்கான நேரத்தை பற்றி சொல்லப்படும்போது நிழல் பற்றிய பேச்சே இல்லை.

இஷா தொழுகை நேரத்தை பற்றிய ஹதீஸ்களை கவனிக்கவும். இவற்றையெல்லாம் அலசும்போது காலத்தை அறிந்து கொள்ள சில அழகிய யுக்திகளை நபி ஸல் காட்டிதந்தார்கள் என்பது மட்டுமே தெளிவாகிறது. அவற்றை கண்ணால் பார்த்து ஊர்ஜிதப்படுதிய பின்தான் தொழ வேண்டும் என்ற எந்த கட்டளையும் இல்லை.
நாம் இன்று அவற்றை கணிதமாக மாற்றி பயன்படுத்துகிறோம். அவ்வளவுதான். மாறாக சூரியன் இப்படி இருப்பதை பார்த்து உறுதி செய்தபின்தான் தொழவேண்டும் அல்லது இரண்டு நீதமான் சாட்சிகள் இருந்தால் மட்டுமே மற்றவர் தொழுகை நேரத்தை பார்த்த அறிவிப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது போல் எந்த கட்டளையும் இல்லை.
மேலும் நிழலை வைத்து நேரத்தை அறிந்துகொள்வதென்பது ஒரு விஞ்ஞான யுக்தியாகும். அதற்கு பெயர் நிழல் கடிகாரம். நிழல் கடிகாரத்தில் தொழுகை நேரங்கள் மாறாது.
அதாவது நிழல் கடிகாரத்தில் லுஹ்ர் தொழுகை வருடத்தின் எல்லா நாட்களிலும் 12மணிக்கு வரும். சூரிய உதயம் காலை 6 மணிக்கும் சூரிய மறைவு மாலை 6 மணிக்கும் நிகழும். இது வருடத்தின் எந்த நாளிலும் மாறாது.

நிழல் கடிகாரம் காட்டும் நேரத்திற்கு பெயர் true solar time “உண்மையான சூரிய நேரம்”. இன்று நாம் பயன்படுத்தும் கடிகாரங்கள் காட்டும் நேரம் mean solar time சராசரி சூரிய நேரம்.
நமது தொழுகை நேரக் கணக்கீடுகள் உண்மை சூரிய நேரத்திலேயே உள்ளன. ஆனால் அந்த கணக்கீட்டின் வெளிப்பாடுகளை நம் கடிகாரத்தை பார்த்து பயன்படுத்த இயலாது.
எனவே உண்மை சூரிய நேரத்தில் இருக்கும் தொழுகை நேரங்களை நாம் பயன்படுத்தும் கடிகாரங்கள் காட்டும் சராசரி சூரிய நேரத்திற்கு மாற்றினால் மட்டுமே கடிகாரத்தை பார்த்து நம்மால் தொழுகை நேரங்களை செயல்படுத்த இயலும். எனவே எல்லா தொழுகை நேரக்கணக்குகளும் அதை வெளியீடை கடிகார நேரத்திற்கு மாற்றியே தருகின்றன.

குச்சியை நட்டு நிழலைப் பார்த்து தொழவேண்டியதுதானே?
நிழலை பார்த்து நேரத்தை அறிவதென்பது மிகப்பெரிய வானியல் கலை. அந்த வானியலை நபிகளார் அறிந்திருந்தார்கள். அவர்கள் நிழலைக்கொண்டு நேரத்தை கணக்கிட்டார்கள்.
தொழுகை நேரங்களை நாசாதான் உருவாக்கித் தந்ததா?
வரலாறுகளைப்படித்தால் நவீன விஞ்ஞானத்திற்கு வித்திட்டது கவாரிஸ்மி & பிரூணி போன்ற முஸ்லிம் விஞ்ஞானிகள் என்பது தெரியும்.
டாலமி, இந்திய மற்றும் கிரேக்க விஞ்ஞான குறிப்புகளை மேம்படுத்தியும் புதிய விண்ணியல் கோட்பாடுகளையும், வழிமுறைகளையும் சூத்திரங்களையும் கண்டுபிடித்தவர்கள் முஸ்லிம் விஞ்ஞானிகள்தாம்.
ஃபஜ்ர் கோணம் 18டிகிரி என்பதை உலகில் முதன் முதலில் கூறியது பிரூணிதான். அவர்தான் உலகில் முதன் முதலில் பெரும்பான்மையான நகரங்களின் (Geo-coordinates) புவியியல் அளக்கூறுகளை அறிந்து வைத்திருந்தார்.

கிப்லா கணக்கிடுவதை அல் பிரூணிக்கு முன்பிருந்தவர்களே கண்டு பிடித்துவிட்டனர். அதை முக்கோணவியலின் உதவியுடன் இன்று நாம் பயன்படுத்தும் பார்முலாவாக மாற்றியது பிரூணிதான்.
நூற்றாண்டுகளுக்கு முன்பே முஸ்லிம்கள் ரசூலு (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த தொழுகை நேரங்களை அறிந்து கொள்ளும் முறைகளை கணிதமாக மாற்றிவிட்டனர். மிக அழகிய நிழல் கடிகாரங்களையும் வடிவமைத்தனர்.
முஸ்லிம் விஞ்ஞானிகள் ஒவ்வொரு கால கட்டத்திலும் தொழுகை நேரங்களை இஸ்லாத்திற்கு உட்பட்டு கணக்கிடும் முறைகளை மேம்படுத்தியே வந்திருக்கிறார்கள். அந்த வகையில் இன்று நமது கையில் இருக்கும் தொழுகை நேரக்கணக்கை கண்டு பிடித்தவர்கள் கிறித்தவர்கள் அல்லது யூதர்கள் என்று யாராலும் உரிமை கொண்டாட முடியாது.
தொழுகை நேரக்கணக்காயினும் அல்லது வேறு எந்த கணக்காக இருந்தாலும் அதில் முஸ்லிம்களின் பங்களிப்பும் பெரிய அளவில் இருக்கிறது. அப்படியே அது முஸ்லிம் அல்லாதவர்களின் கண்டு பிடிப்புகளாக இருந்தாலும் அதை குர்ஆன் ஹதீஸ்க்கு மாற்றமில்லாத வகையில் பயன்படுத்துவதில் எந்த தவறும் இல்லை.
படங்களை பார்வையிடவும்

இது துனிசியாவின் அல் உக்பா பள்ளியில் இருக்கும் தொழுகை நேரங்களை காட்டும் அழகிய நிழல் கடிகாரம்.

இது இஸ்தான்புல் நகரில் உள்ள மிஹ்ரிமா மஸ்ஜிதில் உள்ள ஒரு நிழல் கடிகாரம். இது நேரத்தை மட்டுமல்லாமல் ஆண்டுகளின் எண்ணிக்கையையும் நேரடியாக காட்டவல்லது.
பிரபஞ்சம் தொழுகையின் நேரங்களை நிழல்களைக் கொண்டு கணக்கிடும் கணிதத்தின் மூலம் எப்படியெல்லாம் பேசுகிறது என்பதை கவனித்தீர்களா ?

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 3

(இஸ்லாமிய சொத்து பங்கீடு)



" நான் அறிவு என்னும் பட்டினம். அலீ அதன் தலைவாயில்'' என்று போற்றி புகழ்ந்து உரைத்த புண்ணிய நபி (ஸல்) அவர்களின் கண்ணியம் காக்கும் வண்ணம் மென்மையான நாவினால் பொன்னான மொழிகளைப் பொழியும் நாவுடைய ஆய்வாளராக விளங்கினார் அலீ (ரலி) அவர்கள் .
முதற்கலிபா அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆட்சியில் மாட்சிமையுடைய குர்ஆனின் அத்தியாயங்களை அறிவிக்கப்பட்ட காலமுறையில் வரிசைப்படுத்தியவர்கள் அலீ (ரலி) அவர்கள் .
மேலும் அலீ (ரலி) அவர்கள் அரபி மொழிக்கு இலக்கணம் வகுத்தவர்கள். அதனால் அலீ (ரலி) "அரபி இலக்கணத்தின் தந்தை " என்று அழைக்கப்பட்டார்கள்.

அலீ (ரலி) அவர்களிடம் அரபி இலக்கணம் கற்ற அபுல் அஸ்வத்து அலீ வேண்டியபடி இலக்கண விதிகளை எழுதி கொடுத்தார்கள் . அதுவே அரபி இலக்கணத்தின் ஆரம்பம்.
திருக்குர்ஆனின் ஞானத்திலும் , கணிதத்திலும் மிகச் சிறப்பாக தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக ஒரு நிகழ்வை வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.


கேள்வி: என் உடன் பிறந்தவன் இறந்து விட்டான். அறுநூறு திர்ஹங்கள் அவனின் சொத்து. அவனின் தங்கையாகிய எனக்குரிய பங்கு ஒரு திர்ஹம் தானா?
அக்குடும்ப உறுப்பினர்களை அலீ (ரலி) அறிந்திருந்தார்கள் அதாவது இறந்தவருக்கு இரண்டு பெண் மக்களும் , தாயும், ஒரு மனைவியும் , பன்னிரண்டு சகோதரர்களும் , ஒரு தங்கையும் உண்டு. அந்த தங்கைதான் அலீ (ரலி) அவர்களிடம் அண்ணனின் சொத்து விபரத்தில் தனக்குறிய பங்கைப் பற்றி கேட்டறிந்தாள்.
பதில்: உன் உடன் பிறந்தவன் அறுநூறு திர்ஹம்களையும் இரு பெண் மக்களையும் , தன் தாயையும் , மனைவியையும் , பன்னிரண்டு சகோதரர்களையும் , உன்னையும் விட்டுச் சென்றான் .
அந்த அறுநூறு திர்ஹம்களில் இரண்டு பெண் மக்களுக்கும் அல்லாஹ் சொல்லியபடி நானூறும் , தாய்க்கு நூறும் , மனைவிக்கு எழுபத்தைந்தும் , சகோதரர்கள் பன்னிரண்டு பேர்களுக்கும் இருபத்து நான்கும் , உனக்கு ஒரு திர்ஹம் வருகின்றன " என்றார்கள்.

அலீ (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் படி பங்கீடு செய்ததற்கு கீழ்க்கண்ட வசனத்தை ஆதாரமாக கையாண்டார்கள்.
يَسْتَفْتُوْنَكَ قُلِ اللّٰهُ يُفْتِيْكُمْ فِى الْكَلٰلَةِ اِنِ امْرُؤٌا هَلَكَ لَيْسَ لَهٗ وَلَدٌ وَّلَهٗۤ اُخْتٌ فَلَهَا نِصْفُ مَا تَرَكَ وَهُوَ يَرِثُهَاۤ اِنْ لَّمْ يَكُنْ لَّهَا وَلَدٌ فَاِنْ كَانَتَا اثْنَتَيْنِ فَلَهُمَا الثُّلُثٰنِ مِمَّا تَرَكَ وَاِنْ كَانُوْۤا اِخْوَةً رِّجَالًا وَّنِسَآءً فَلِلذَّكَرِ مِثْلُ حَظِّ الْاُنْثَيَيْنِ يُبَيِّنُ اللّٰهُ لَـكُمْ اَنْ تَضِلُّوْا وَاللّٰهُ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ
(நபியே!) கலாலா (தகப்பன், தாய், பாட்டன், பிள்ளை, பேரன் ஆகிய வாரிசுகள் இல்லாத சொத்து) பற்றிய மார்க்கக் கட்டளையை அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும்:
அல்லாஹ் உங்களுக்கு (இவ்வாறு) கட்டளையிடுகிறான்; ஒரு மனிதன் இறந்துவிட்டால், அவனுக்கு மக்கள் இல்லாமலிருந்து ஒரு சகோதரி மட்டும் இருந்தால், அவளுக்கு அவன் விட்டுச் சென்றதிலிருந்து சரி பாதி பங்கு உண்டு.

இதற்கு மாறாக ஒரு பெண் இறந்து விட்டால், அவளுக்கு மக்கள் யாரும் இல்லாதிருந்தால், (அவளுடைய சகோதரனாகிய) அவன் அவள் சொத்து முழுமைக்கும் வாரிசு ஆவான்;
இரு சகோதரிகள் இருந்தால், அவன் விட்டுச் சென்ற சொத்தில் மூன்றில் இரண்டு பாகத்தை அடைவார்கள்;

அவளுக்கு உடன் பிறந்தவர்கள் ஆண்களும் பெண்களுமாக இருந்தால், இரண்டு பெண்களுக்குரிய பாகம் ஓர் ஆணுக்கு உண்டு - நீங்கள் வழி தவறாமல் இருப்பதற்காகவே அல்லாஹ் உங்களுக்கு (இவ்விதிகளை) விளக்கி வைக்கிறான்; அல்லாஹ் யாவற்றையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் : 4:176)
பொருளாதாரத்தைப் பற்றி பிரபஞ்சம் மொழிந்தது என்னவோ நீதமான கணிதமாகவே இருக்கிறது என்பதை நீங்கள் இப்போது அறிந்திருப்பீர்கள்.

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 4
(சந்திரனின் மாறுபட்ட வடிவங்கள் சொல்லித் தரும் பாடங்கள்)



وَالْقَمَرَ قَدَّرْنٰهُ مَنَازِلَ حَتّٰى عَادَ كَالْعُرْجُوْنِ الْقَدِيْمِ
(உலர்ந்து வளைந்த) பழைய பேரீச்ச மடலைப் போல் (பிறையாக) ஆகும் வரையில் சந்திரனுக்கு நாம் பல நிலைகளை ஏற்படுத்தி இருக்கின்றோம். (அல்குர்ஆன் : 36:39)
வானம் மண்டத்திலுள்ள 12 ராசிகளும் 28 பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 28 பாகங்களுக்கும் 28 நட்சத்திரங்கள் இருக்கின்றன .

சந்திரன் ஒவ்வொரு நாளும் ஒரு பாகத்தில் இருக்கும் இவ்வாறு ஒவ்வொரு பாகங்களையும் அது கடந்து கடைசி பாகத்துக்கு வரும்போது சந்திரன் மிக நுட்பமாக வளைந்து மெலிந்து காணப்படுகிறது .இதை பார்ப்பதற்கு பழைய பேரீத்தம் மட்டைபோல் வளைந்து இருப்பது போல் ஆகி விடுகிறது.
அந்த மாதம் 30ம் தேதியுள்ளதாக இருந்தால், இரண்டு நாள் சந்திரன் கண்ணுக்குத் தெரியாது. இருபத்தி ஒன்பது தேதி உள்ளதாக இருந்தால், சந்திரன் ஒருநாள் கண்ணுக்கு தெரியாமல் இருக்கும் .
வருடத்தில் ஒரு மாதம் 30ம் தேதி உள்ளதாகவும்,இன்னொரு வருடத்தில் அதே மாதம் 29 தேதி உள்ளதாகவும் வரும்.

ஒவ்வொரு நாளும் சந்திரனின் நிலை குறித்து கிராபிக்கல் படமாக வரைந்தால், அதன் மொத்த நிலை பரபோலா (பரவளையம்) என்ற வடிவியல் கணிதத்தின் வரைபடத்தை தருகிறது (வரைபடத்தை பார்க்கவும்)
சந்திரன் தரக்கூடிய இந்த பரபோலா கணிதம் நமக்கு என்ன சேதியை தரப்போகிறது என்று நீங்கள் நினைக்கலாம். அதற்கு முன் பரபோலா கணித வரலாற்றை முதலில் ஆய்வோம்.
அப்போலினஸ் என்பவர்தான் Parabolo (பரவளையம்) பற்றி நுட்பத்தை உலகறியச் செய்தவர். யார் இந்த அப்போலினஸ் ?
யூக்ளிட் கிமு 300 -ல் பிறந்தவர். யூக்ளிட் எழுதிய "எலிமெண்ட்ஸ்" என்ற தூய கணித நூலை எழுதினார். இந்த எலிமெண்ட்ஸ் நூலைப் பின்பற்றி, அப்போலினஸ் கூம்புகளைப் பற்றிய வடிவ ஆராய்ச்சி மூலம் "கோனிக்ஸ்" (conics) என்ற நூலை எழுதினார். அவரது கோனிக்ஸ் புத்தகத்தில் கூம்புகளை கோன் (கோன் ஐஸ் என்கிறோம் அல்லவா ? அந்த கோன்) கோன் என்று அவர் அழைத்ததற்கு ,அவர் அவற்றை ஒரு சம பரப்பில் இரண்டு நேர்கோடுகள் வெட்டிக்கொள்வதான வடிவமாக பார்த்ததே காரணம். உடனே அவர் கூம்பு வடிவத்தை ஒவ்வொரு விதமாக வெட்டிய அவைகள் வட்டம் (Circle), நீள் வட்டம் (Ellipse), பரவளையம் (parabola) , அதி பரவளையம் (Hyberbola) என்று வரைபட இயல் தனது புதிய பல வடிவங்களை பெற்றது . இந்த கூம்பு களிடமிருந்து கிடைத்த பல வடிவங்கள் தூய கணிதத்தின் எல்லையை விரிவு படுத்தின.

மேற்கண்ட வடிவங்கள் இல்லாமல், பிற்காலத்தில் பல புதிய கணித துறைகள் தோன்றியிருக்க முடியாது. கூம்புகளின் மூலம் அப்போலினஸ் காட்டிய வடிவங்களே வான் வெளிச் சுற்றுப்பாதைகளாகவும் , கோள்களுக்கு இடையிலான ஈர்ப்பு விசைக்கு மூலமாகவும் அமைந்தன. இன்றைய ராக்கெட் செலுத்தும் பாதைகளை கணிக்கக் கூடியதாகவும் மேற்கண்ட வரைபட இயல் பயன்படக் கூடிய வடிவ கணித கோட்பாடுகள் நிறுவியவர் அப்போலினஸ்.

பரபோலாவின் பயன்கள்
ஒரு பரவளையம் என்பது நீட்டிக்கப்பட்ட U- வடிவ வடிவியல் வடிவமாகும். ஒரு கூம்பு குறுக்கு வெட்டு மூலம் இதை செய்ய முடியும். ஒரு பரபோலாவின் கணித சமன்பாடு ஒரு xy அச்சில்
y = x 2 என குறிப்பிடப்படுவதை மெனெக்மஸ் தீர்மானித்தார்.
பரபோலாஸ், உண்மையில், எல்லா இடங்களிலும், இயற்கையிலும், மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்களிலும் காணப்படலாம். ஒரு நீரூற்றைக் கவனியுங்கள். நீரூற்று மூலம் காற்றில் பறந்து நீர் மீண்டும் ஒரு பரவளைய பாதையில் விழுகிறது.
காற்றில் வீசப்பட்ட ஒரு பேஸ் பாலோ,கிரிக்கெட் பந்தோ ஒரு பரவளைய பாதையில் செல்கிறது என்பதை கலிலியோ நிரூபித்திருந்தார்.
மேலும், ரோலர் கோஸ்டரில் சவாரி செய்யும் எவரும் பாதையின் பரவளையங்களால் உருவாக்கப்பட்ட உயர்வு மற்றும் வீழ்ச்சியை நன்கு அறிந்திருப்பார்கள். அது சந்திரன் நிலை குறித்த வரை படத்தை கவனியுங்கள் .
அதி நவீன கட்டிடக்கலை மற்றும் பொறியியல் திட்டங்கள் கூட பரவளையங்களின் பயன்பாட்டை நன்கு வெளிப்படுத்துகின்றன.
பரவளைய வடிவங்களை 1962 ஆம் ஆண்டில் லண்டனில் கட்டப்பட்ட தி பரபோலா என்ற கட்டமைப்பில் காணலாம், இது ஒரு செப்பு கூரையை பரவளைய மற்றும் ஹைபர்போலிக் கோடுகளுடன் கொண்டுள்ளது.
கலிபோர்னியாவின் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள புகழ்பெற்ற கோல்டன் கேட் பாலம் அதன் பக்க இடைவெளிகள் அல்லது கோபுரங்களின் ஒவ்வொரு பக்கத்திலும் பரவளையங்களைக் கொண்டுள்ளது. இன்னும் அநேக நாடுகளில் அதிநவீன கட்டிடங்கள் பரபோலா யுக்தியை பயன்படுத்துகின்றன.
ஒளியை மையப்படுத்த பரவளைய யுக்திகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. நவீன கண்ணாடி கட்டிடங்களில் பரபோலாவின் யுக்திகள் பயன்படுத்தப்படுகின்றன.
பல நூற்றாண்டுகளாக, கலங்கரை விளக்கங்கள் பல மாறுபாடுகளையும், அவை உமிழக்கூடிய ஒளியின் மேம்பாடுகளையும் சந்தித்தன. தட்டையான மேற்பரப்புகள் கடற்படையினருக்கு ஒளியை சிதறடித்தன. ஆனால் கோள பிரதிபலிப்புகள் பிரகாசத்தை அதிகரித்தன, ஆனால் ஒரு சக்திவாய்ந்த ஒளிக்கற்றை கொடுக்க முடியவில்லை.
இதற்கு ஒரே தீர்வாக பரபோலா வடிவ பிரதிபலிப்புகளை பயன்படுத்தும் போது நீண்ட தூரத்திற்கு காணக்கூடிய ஒரு கற்றைக்கு ஒளியை மையப்படுத்த உதவியது.

1738 ஆம் ஆண்டில் ஸ்வீடனில் கட்டப்பட்ட கலங்கரை விளக்கம், பரவளையத்தின் யுக்தியை பயன்படுத்தி ஒளியை நீண்ட தூரத்திற்கு பாய்ச்ச முடிந்தது .
இதே யுக்தியை ஹெட்லைட்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. 1940 கள் முதல் 1980 கள் வரை சீல் செய்யப்பட்ட பீம் கண்ணாடி ஆட்டோமொபைல் ஹெட்லைட்கள் பரவளைய பிரதிபலிப்பு கண்ணாடி லென்ஸ்களையும், பல்புகளிலிருந்து வெளிவரும் ஒளியின் ஒளிகளைக் குவிப்பதற்குப் பயன்படுத்தின,
ஒளியைக் குவிப்பதற்கு பரவளைய பிரதிபலிப்புகளை
இப்போது சூரிய மின்சக்தி தொழிலுக்கு உதவுகிறது. தட்டையான ஒளிமின்னழுத்த அமைப்புகள் சூரியனின் ஒளி மற்றும் இலவச எலக்ட்ரான்களை உறிஞ்சுகின்றன, ஆனால் அதை குவிப்பதில்லை. ஒரு வளைந்த ஒளிமின்னழுத்த கண்ணாடி, சூரிய சக்தியை மிகவும் திறமையாக குவிக்கும்.
சூரிய ஒளி பரவளைய கண்ணாடியின் வடிவத்தால் இது மிக அதிக வெப்பத்தை உருவாக்குகிறது. இது ஒவ்வொரு கண்ணாடியின் தொட்டியிலும் செயற்கை எண்ணெயின் குழாய்களை வெப்பப்படுத்துகிறது, பின்னர் அவை சக்திக்கு நீராவியை உருவாக்க முடிகிறது ,

ராக்கெட் ஏவுதலின் போது அது ஒரு பரவளைய பாதையை பின்பற்றுகிறது. இந்த பரவளையப் பாதை விண்வெளிப் பயணத்தில் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில், விமானங்கள் பரவளையங்களில் பறப்பதன் மூலம் பூஜ்ஜிய மற்றும் உயர் ஈர்ப்பு சூழலை உருவாக்க முடியும்.
செயற்கைக்கோள் டிஷ் மற்றும் ரேடியோ அலைகளின் பிரதிபலிப்பு ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது
ஒளியை வளைக்கக்கூடிய வகைக்கு எலக்ட்ரான்கள் பயன்படுத்தப்படுகின்றன. எலக்ட்ரான்களின் விட்டங்களை ஹாலோகிராபிக் படம் மூலம் அனுப்ப மற்றும் ஒரு பரவளைய பாணியில் தடைகளை சுற்றி வளைக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த விட்டங்கள் இமேஜிங்கில் பயனுள்ளதாக இருக்கிறது. இது மிகப் பெரிய அதிநவீன விஞ்ஞான யுக்திகள் .

விண்வெளிப் பயணம் மற்றும் கார் ஹெட்லைட்கள் முதல் பாலங்கள் மற்றும் பொழுதுபோக்கு பூங்காக்கள் வரை எல்லா இடங்களிலும் பரவளையங்களைக் காணலாம். ஒரு பரபோலா ஒரு நேர்த்தியான வடிவியல் வடிவம் மட்டுமல்ல, அதன் செயல்பாட்டு திறன் மனிதகுலத்திற்கு பல வழிகளில் உதவுகிறது.

هُوَ الَّذِىْ جَعَلَ الشَّمْسَ ضِيَآءً وَّالْقَمَرَ نُوْرًا وَّقَدَّرَهٗ مَنَازِلَ لِتَعْلَمُوْا عَدَدَ السِّنِيْنَ وَالْحِسَابَ مَا خَلَقَ اللّٰهُ ذٰلِكَ اِلَّا بِالْحَقِّ يُفَصِّلُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّعْلَمُوْنَ
அவன்தான் சூரியனைச் (சுடர்விடும்) பிரகாசமாகவும், சந்திரனை ஒளிவுள்ளதாகவும் ஆக்கினான். ஆண்டுகளின் எண்ணிக்கையையும், காலக்கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு(ச் சந்திரனாகிய) அதற்கு மாறி மாறி வரும் பல படித்தரங்களை உண்டாக்கினான்; அல்லாஹ் உண்மை(யாக தக்க காரணம்) கொண்டேயல்லாது இவற்றைப் படைக்கவில்லை - அவன் (இவ்வாறு) அறிவுள்ள மக்களுக்குத் தன் அத்தாட்சிகளை விவரிக்கின்றான்.(அல்குர்ஆன் : 10:5)

சந்திரனின் மாறுபட்ட வடிவத்தில் உண்டாகும் பரபோலா வடிவியல் கணிதம் பிரபஞ்சத்தின் மொழியாக அது விஞ்ஞானத்துடன் எப்போதுமே பேசிக் கொண்டே இருக்கிறது.

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 6

(மரண சாசனத்தின் மூலம் சொத்துக்கள் பங்கீடு செய்யும் சட்டத்தை இஸ்லாம் ரத்து செய்தது. ஏன்)



சொத்துப் பங்கீடு பற்றி பலரும் இஸ்லாத்தின்மீது விமர்சனங்களை வைக்கின்றார்கள். எனவே இது பற்றிய விபரத்தை நாம் தெளிவாக புரிந்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளோம்.

நபி (ஸல்)அவர்கள் வாழ்ந்த அன்றைய சமூக சூழலில் ஆண்கள் சகல விதங்களிலும் பெண்களை அடக்கியாண்டு உரிமைகளைப் பறித்துக் கொண்டிருந்தார்கள். "பலமுள்ளவன் தான் சரியானவன்" என்ற தத்துவத்தின் அடிப்படையில் தகப்பனோ,சகோதரனோ விட்டுச் செல்லும் சொத்துக்களில் பெண்களுக்குரிய பங்கினை வழங்காது பலாத்காரமாகச் சூறையாடிக் கொண்டுமிருந்தார்கள்.
தந்தையைப் பறிகொடுத்து விட்டு தவிக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும், கணவனை இழந்துவிட்டு கண்ணீரோடு வாழும் விதவைப் பெண்களுக்கும் அச்சொத்திலிருந்து எதுவும் கிடைக்க மாட்டாது.
இவர்கள் அடுத்தவர்களிடத்தில் கையேந்தி மற்றவர்களின் தயவில் வாழக்கூடிய பரிதாபகரமான நிலை காணப்பட்டது.
இந்நிலையில் இக்கொடுமைக்கு ஆரம்ப கட்டத் தீர்வாக அல்லாஹ் பின்வரும் வசனத்தை அருளினான்.
"உங்களில் ஒருவருக்கு மரணம் நெருங்கும் போது அவர் ஏதேனும் செல்வத்தை விட்டுச் செல்வாராயின் அவர் பெற்றோருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் நல்ல முறையில் (மரண சாசனம்) வஸீய்யத் செய்வது உங்கள் மீது விதியாக்கப்பட்டுள்ளது. பயபக்தியாளர்களுக்கு இது கடமையாகும்.
எவர் அ(ம்மரணசாசனத்)தை செவியேற்ற பின்பும் அதை மாற்றி விடுகின்றாரோ அதன் குற்றம் அதை மாற்றியவர்களையே சாரும். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் செவியுறுபவன் நன்கறிந்தவன்.
ஆனால் வஸீய்யத் செயபவரிடம் அநீதத்தையோ பாவத்தையோ எவரேனும் அஞ்சி (சம்பந்தப்பட்ட) அவர்களுக்கிடையே (வஸீய்யத்தை சீர்செய்து) சமாதானம் செய்தால், அவர் மீது குற்றமில்லை. நிச்சமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன் நிகரற்ற அன்புடையவன்.
(அல்குர்ஆன் 2:180-182)

இதனடிப்படையில் சொத்துக்களை விட்டுச் செல்பவர் தன்னுடைய பெற்றோர் மனைவி பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு அச்சொத்திலிருந்து பங்கு கிடைக்கக்கூடியதாக மரண சாசனம் செய்யவேண்டும். அதன் பத்திரமும் எழுதப்பட வேண்டும் என்ற சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. மரண சாசனத்தில் அநீதி காணப்படுமானால், அதனை சீர்படுத்துவதற்கும் உரிமை வழங்கப்பட்டது.
மரணசாசனம் தெரிவிக்க ஏதேனும் பொருளைப் பெற்றுள்ள எந்த முஸ்லிமுக்கும் அவர் தமது மரண சாசனத்தை எழுதி வைக்காமல், இரண்டு இரவுகளைக் கழிப்பதற்குக் கூட அனுமதியில்லை என நபி முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத்(ரழி) (நூல்:புகாரி)

இதன் மூலம் பெண்களுக்கும் நியாயமாக பங்கீடு கிடைக்க வழி காட்டப்பட்டது.
இச்சட்டம் நடைமுறையில் இருந்த காலகட்டத்தில் ஸஅத் இப்னு ரபீஃஆ(ரழி) என்பவரின் மனைவி தனது இரு பெண் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! இதோ இவ்விருவரும் ஸஃத் இப்னு ரபீஆவின் புதல்வியர்கள். இவர்களுடைய தந்தை உங்களுடன் உஹது யுத்தத்திலே பங்குகொண்டு கொல்லப்பட்டு விட்டார்.

இவர்களுடைய தந்தையின் சகோதரர் இவர்களுடைய முழுச் சொத்தையும் எடுத்துக் கொண்டார். இவர்களுக்காக எதையும் விட்டுச் செல்லவில்லை. இவர்களுக்கென சொத்து எதுவும் இல்லையென்றால், அவர்களைத் மணம் முடித்துக் கொடுக்கவும் முடியாது" என்று முறையிட்டார்.
இந்த முறைப்பாட்டை செவியேற்ற நபி(ஸல்) அவர்கள், நிச்சயமாக அல்லாஹ் இதற்கோர் தீர்வை வழங்குவான் எனக் கூறினார்கள். இச்சந்தர்ப்பத்தில் இப்பெண்மணியின் முறையீட்டிற்குப் பதில் கூறுமுகமாக பின்வரும் சட்டம் அருளப்பட்டது.

1) இரு பெண்களுக்குரிய பங்கு போன்றது ஒரு ஆணுக்குண்டு என உங்கள் பிள்ளைகள் விஷயத்தில் அல்லாஹ் உங்களுக்கு (சொத்துப் பங்கிடும் முறைப்பற்றி) கட்டளையிடுகின்றான்.
– (இறந்தவர் விட்டுச்செல்லும் சொத்துக்கு ஆண்பிள்ளை இல்லாமல்) இரண்டு பெண்கள் அதற்கு மேற்பட்டவர்கள் இருந்தால், அவர் விட்டுச்சென்றதில் மூன்றில் இருபங்கு (2/3) அப் பெண்களுக்குண்டு.
– ஒரே ஒருபெண் மட்டும் இருந்தால், அவளுக்கு அதில் அரைவாசிப் (1/2 பங்கு) உரியது.
2) இறந்தவருக்குப் பிள்ளை இருப்பின், அவர் விட்டுச் சென்றதில் (அவருடைய) தாய், தந்தைக்கு ஆறில் ஒரு (1/6) பங்குண்டு.
– அவருக்கு பிள்ளை இல்லாமல், அவரது பெற்றோரே அவருக்கு வாரிசாக இருப்பின் அவரது தாய்க்கு மூன்றில் ஒரு (1/3)பங்குண்டு. (மீதி தந்தைக்குரியது)
– இறந்தவருக்கு (பிள்ளைகள் இல்லாமல்) சகோதரர்கள் இருப்பின் அவரது தாய்க்கு ஆறில் ஒரு (1/6)பங்குண்டு.
– (இவ்வாறு பங்கீடு செய்வது) அவர் செய்த மரணசாசனம் அல்லது அவரது கடன் ஆகியவற்றை நிறைவேற்றிய பின்னரேயாகும்.
– (சொத்துப் பங்கீடு பெறுவதில்) உங்கள் பெற்றோர், மற்றும் பிள்ளைகளில் உங்களுக்கு அதிகமாக பயனளிப்பதில் மிக நெருக்கமானவர்கள் யார் ? என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.
“இவை அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டவையாகும். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 4:11)
3). (இறந்துபோன) உங்கள் மனைவியருக்கு பிள்ளை இல்லையெனில் அம்மனைவியர் விட்டுச் சென்றதில் (கணவராகிய) உங்களுக்கு அரைவாசி (1/2) உண்டு.
– அவர்களுக்கு பிள்ளை இருப்பின், அவர்கள் விட்டுச் சென்றதில் (கணவராகிய) உங்களுக்கு நாலில் ஒரு (1/4) பங்குண்டு. (இது) அவர்கள் செய்த மரணசாசனம் அல்லது கடன் என்பவற்றை நிறைவேற்றிய பின்னரேயாகும.
– உங்களுக்கு (கணவனாகிய நீங்கள் இறந்த பின்) பிள்ளை இல்லையெனில், நீங்கள் விட்டுச்சென்றதில் (மனைவியர்களான) அவர்களுக்கு நாலில் ஒரு(1/4)பங்குண்டு.
– உங்களுக்கு பிள்ளை இருப்பின், நீங்கள் விட்டுச் சென்றதில் (மனைவியர்களான) அவர்களுக்கு எட்டில் ஒரு (1/8) பங்குண்டு. (இது) நீங்கள் செய்த மரண சாசனம் அல்லது கடன் என்பவற்றை நிறைவேற்றிய பின்னரேயாகும்.
4. (பெற்றோர் பிள்ளைகள் ஆகிய) வாரிசுகள் இல்லாத ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ மரணித்து அவருக்கு ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி இருந்தால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு (1/6) பங்குண்டு. அவர்கள் இதை விட அதிகமாக இருந்தால், மூன்றில் ஒரு (1/3) பங்கில் அவர்கள் பங்குதாரர்களாவார்கள்.
(இது) பாதிப்பு அற்றவிதத்தில் செய்யப்பட்ட மரணசாசனத்தையும், அல்லது கடனையும் நிறைவேற்றிய பின்னரேயாகும். இது அல்லாஹ்விடமிருந்துள்ள கட்டளையாகும். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனும் சகிப்புத்தன்மையுடையவனு மாவான். (அல்குர்ஆன் 4:12)
இவ்வசனம் அருளப்பட்டதும் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் ஸஃத் இப்னு ரபீஃஆவின் சகோதரரை வரவழைத்து அவர் எடுத்துச் சென்ற சொத்தை பின்வருமாறு பங்கீடு செய்தார்கள்.
இரு பெண் பிள்ளைகளுக்கும் (தலா ஒருவருக்கு 1/3 என்ற பங்கு வீதத்தில்) 2/3 பங்குகளும், இவர்களின் தாய்க்கு எட்டில் ஒருபங்கும் (1/8) பங்கும் மீதியை ஸஃத் (ரழி) அவர்களின் சகோதரர்களுக்கும் கொடுத்தார்கள்.
(நூல்: அஹ்மத், அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா)

தனக்கும் தனது பெண் பிள்ளைகளுக்கும் சொத்துரிமை விவகாரத்தில் உரிய பங்கு கிடைக்கவில்லையென்று ஒரு பெண்மணி நீதி கேட்டு வந்தபோது, அப்பெண்மணிக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கவே வாரிசுரிமைச் சட்டம் அருளப்பட்டது.
மகன், மகள், சகோதர சகோதரி, மனைவி, தாய் தந்தை ஆகியோருக்கு இச்சட்டத்தின் மூலம் சொத்துக்களில் பங்கு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.
இதைவிட பெண்ணுக்குரிய அந்தஸ்த்தும் உரிமையும் வேறு எங்கும் எந்த மதத்திலும் கோட்பாட்டிலும் காண முடியாது.


இவ்வாரிசுரிமைச் சட்டம் அருளப்பட்டபின் மரண சாசனத்தின் மூலம் சொத்துக்கள் பங்கீடு செய்யும் சட்டம் ரத்துச் செய்யப்பட்டதோடு வாரிசுகளுக்கு சொத்துக்கள் சம்பந்தமாக மரணசாசனம் செய்யவோ எழுதவோ அல்லது சிபாரிசு செய்யவோ தடுக்கப்பட்டது.
வாரிசுகளுக்கு எத்தனை வீதம் பங்கு கொடுக்க வேண்டும்; என்று அல்லாஹ் விபரித்துக் கூறியுள்ளானோ அதே அடிப்படையிலும் இத்திருமறைக் குர்ஆனுக்கு விளக்கவுரையாக நபி முஹம்மது (ஸல்) அவர்கள் எப்படிச் செயல்படுத்தி, பங்குவைத்துக் காட்டினார்களோ அதே அடிப்படையிலும்தான் உலகம் அழியும் வரை பங்கீடு செய்யப்பட வேண்டும். இதில் எவரும் மாற்றம் செய்ய முடியாது.
இதனால் மரண சாசனத்தின் மூலம் சொத்துக்கள் பங்கீடு செய்யும் சட்டத்தை குர்ஆன் ரத்து செய்தது.
ஆமாம். சொத்துப் பங்கீடு பெறுவதில் உங்கள் பெற்றோர், மற்றும் பிள்ளைகளில் உங்களுக்கு அதிகமாக பயனளிப்பதில் மிக நெருக்கமானவர்கள் யார் ? என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். ஆனால் அல்லாஹ் நன்கறிவான்.
உங்களின் பொருளாதாரத்தில் உங்கள் உறவுகளுக்கு பாத்தியப்பட்டதைப் பற்றி பிரபஞ்சம் கணக்கீடாக கணித்து கூறியது எத்துணை நீதமான பங்கீடாக இருக்கிறது என்பதை நீங்கள் இப்போது அறிந்திருப்பீர்கள்.

Rahmath Rajakumaran

உங்கள் சந்ததியில் (ஆணும், பெண்ணும் இருந்தால்) ஒரு ஆணுக்கு இரு பெண்களுக்குரியது போன்ற பாகம் உண்டென்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான்.
அதாவது ஆணுக்கு இரு பாகம் , பெண்ணுக்கு ஒரு பாகம் ஏன் ?
இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை அமைப்பில் பெண்ணை விட ஆணுக்கே பொருளாதாரச் சுமை அதிகம். ஒரு பெண் பிறந்த வீட்டில் இருக்கும் வரை , அவளுடைய பெற்றோரின் பொறுப்பிலும் பாதுகாப்பிலும் இருக்கிறாள். தந்தை அல்லது சகோதரர்களின் பராமரிப்பில் அவள் வளர்கிறாள். எனவே பொருளாதாரத்தைத் தேடும் சுமை அப்போது பெண்ணுக்கு இல்லை. திருமணமாகிப் புகுந்த வீட்டிற்கு ஒரு பெண் சென்றால், அங்கே கணவனின் முழுப்பொறுப்பிலும் , பராமரிப்பிலும் வந்து விடுகிறாள். அங்கும் அவளுக்குப் பொருளாதாரத்தைத் தேடும் சுமை இருக்காது. இது ஓர் ஆணின் பாதி சுமையாகத்தான் இருக்கும்.
அதே நேரத்தில் ,ஓர் ஆண் தந்தையாக, சகோதரனாக , கணவனாக இருந்து தனது பொறுப்பில் உள்ள அனைவரையும் கவனித்தாக வேண்டும் அனைவரின் பொருளாதாரத் தேவைகளையும் பூர்த்தி செய்தாக வேண்டும் .ஆகவே ஆண்தான் பொருளாதாரத் தேவை அதிகமுள்ளவனாக இருக்கிறான் . அவனுக்கு இரு பாகங்கள் அளிப்பது மிகப் பொருத்தமானதும் அவசியமானதும் கூட .
இறைவன் வகுத்த பங்கு விகிதாச்சாரத்தை கணக்கிட்டால் , அது அந்த சொத்தின் பங்குதாரர் அந்த குடும்பத்திற்கு ஆற்றவேண்டிய கடமையையும் , அவர் எடுத்துக் கொள்ளும் உரிமையையும் பொருளாதார ரீதியில் அது சமமாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு வல்ல ரஹ்மான் அந்த பங்கீட்டு முறையை வேதமாக ஆக்கியுள்ளான் .

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 7

(பூமியின் சுற்றளவை சொன்ன நிழல்)



இன்றைய தேதிக்கு பூமியின் சுற்றளவு சராசரியாக 40,075 கி.மீ. என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் காலத் தொழில் நுட்பங்களைக் கொண்டு இதை அளந்து சொல்வது பெரிய காரியம் இல்லை. ஆனால், சுமார் 2,250 வருடங்களுக்கு முன்னர், ஓர் அறிஞர் பூமியின் சுற்றளவை ஏறத்தாழ சரியாகக் கணித்துச் சொன்னார்! 40,000 கி.மீ என்று.
அவர் பெயர் எரொடொஸ்தேனஸ் (Eratosthenes).

கிரேக்க மாமன்னர் அலெக்சாண்டர் உருவாக்கிய, அலெக்ஸாண்ட்ரியா நகரில் வாழ்ந்த அறிஞர் இவர். இவரால் எப்படி பூமியின் சுற்றளவைக் கணிக்க முடிந்தது ? சொல்றேன்.
ஒரு வருடத்தில் ஒரு நாளில் மட்டும் பகல் மிகவும் நீண்டதாக இருக்கும். ஆங்கிலத்தில் அந்த நாளை, சம்மர் சோல்ஸ்டைஸ் (Summer Solstice) என்பர். தமிழில் 'கோடை சந்தி' என்று சொல்லப்படுகிறது. ஜூன் 20, 21, 22 ஆகிய மூன்று நாட்களில், ஏதாவது ஒரு நாளில் இது நிகழும்.
சியேன் (Syene) என்ற எகிப்திய நகரம், அலெக்சாண்ட்ரியாவில் இருந்து சுமார் 800 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அந்த நகரில் கோடை சந்தி அன்று நிகழ்ந்த அதிசயத்தைப் பற்றி, சியேனில் இருந்து அலெக்சாண்ட்ரியா வந்த வணிகர்கள் பேசிக்கொண்டார்கள்.
அன்றைய தினத்தில் உச்சி வெயில் நேரத்தில், நிழல் தரையில் விழவில்லையாம்; மேலும் நகரத்தின் ஆழமான கிணற்றின் அடி ஆழத்தில் இருந்த நீர், சூரிய ஒளியால் ஜொலித்ததாம். இதுதான் அந்த அதிசயம். சூரிய ஒளி செங்குத்தாக விழும் போது அடி அழமான கிணற்றின் நீர் ஜொலிக்கத்தானே செய்யும்.
எரொடொஸ்தேனஸ், சியேனில் அன்று சூரியக் கதிர்கள் நேர் செங்குத்தாக விழுந்ததால், இது நிகழ்ந்தது என்பதைப் புரிந்துகொண்டார்.
அதே நாளில், அலெக்ஸாண்ட்ரியாவின் உயரமான தூண் ஒன்று, மிகவும் குட்டையான நிழலை ஏற்படுத்தியதைக் கண்டார். ஆக அலெக்ஸாண்ட்ரியாவில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக விழவில்லை. தூணின் உயரத்தையும், அதன் நிழலின் உயரத்தையும் கணக்கிட்டு, அலெக்ஸாண்ட்ரியாவில் அன்று சூரியக் கதிர்கள் 7 டிகிரி சாய்வாக விழுந்ததைக் கணக்கிட்டார்.
அடேயப்பா.. எவ்வளவு அழகான உண்மை !

இதில் இருந்து அலெக்ஸாண்ட்ரியாவும், சியேனும் பூமியின் மையப்புள்ளியில் இருந்து 7 டிகிரி கோணத்தில் விலகி இருக்கிறது என்பதைக் கண்டறிந்தார்.

ஒரு வட்டத்தின் மொத்த கோணமான 360 டிகிரியில்,7 டிகிரி என்பது 50ல் ஒரு பங்கு சரியா ? பூமியின் வட்டவடிமான உருண்டை தானே ...இரண்டு நகரங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 800 கி.மீ எனில், பூமியின் மொத்த சுற்றளவு 800 கி.மீ x 50 = 40,000 கி.மீ. ஏறத்தாழ துல்லியமான மதிப்பீடு இது! உலகின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பாக இது இன்றளவிலும் குறிப்பிடப்படுகிறது.

اَوَلَمْ يَرَوْا اِلٰى مَا خَلَقَ اللّٰهُ مِنْ شَىْءٍ يَّتَفَيَّؤُا ظِلٰلُهٗ عَنِ الْيَمِيْنِ وَالشَّمَآئِلِ سُجَّدًا لِّلّٰهِ وَهُمْ دٰخِرُوْنَ
அல்லாஹ் படைத்திருப்பவற்றில் ஒன்றையுமே இவர்கள் பார்க்கவில்லையா? அவற்றின் நிழல்கள் வலமும், இடமுமாக சாய்வதெல்லாம் அல்லாஹ்வை மிக்க தாழ்மையாகச் சிரம் பணிந்து வணங்குவதுதான். (அல்குர்ஆன் : 16:48)

அட , நம்மைச் சுற்றியும் தினமும் நிழல்கள் வலமும் , இடமுமாக சாய்ந்து வரத்தானே செய்கிறது... **எரொடொஸ்தேனஸ் க்கு மட்டும் ஜூன் 21** நீண்ட பகல் என்பதை உணரமுடிகிறது

அன்றைய தினத்தில் சூரியன் நடுவானில் உச்சியில் இருக்கும்போது நிழல் தரையில் விழாது என்பதை இறைவன் அவருக்கு அந்த ஞானத்தைக் கொடுத்து,சியேன் என்ற நகரம் அலெக்சாண்டர் இருந்து 800 கிலோ மீட்டர் தூரம்.
உடனே அலெக்சாண்டரியாவின் உயரமான தூணின் நிழல் குட்டையாக விழ , இரண்டையும் அளந்து கணித்து, அந்த சின்ன நிழல் பூமியின் சுற்றளவை சொல்கிறது, 40 ஆயிரம் கிலோ மீட்டர் என்று !
நாம் நினைத்துக் கொண்டோம் ' நிழல்கள் வலமும், இடமும் சாய்வது இறைவனை மிக்க தாழ்மையாக வணங்குகிறது' என்று. அது சரிதான். இருந்தாலும் அந்த நிழல் தான் வணங்கும் வணக்கத்தின் மூலம் நமக்கு ஒரு சேதியையும் அது சேர்த்துக் சொல்லிக் கொண்டேயிருக்கிறது '' உங்களுடைய பூமியின் சுற்றளவு 40 ஆயிரம் கிலோ மீட்டர் "

நிழல்கள் பல சேதிகளை இன்னும் நம்மிடம் சொல்லிக் கொண்டேதான் இருக்கிறது ! நாம்தான் அதை கேட்கிற மூடில் இல்லை.

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 8

(ஒளியின் வேகத்தை துல்லியமாக எவ்வாறு கண்டறிந்தார்கள்?)



ஒளி ஒரு குறிப்பிட்ட விரைவில்தான் (finite speed) பயணிக்கிறதா அல்லது அது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எவ்வளவு தொலைவு என்றாலும் உடனடியாக நகர்ந்துவிடுகிறதா (instantaneous / infinite speed) என்ற வினா பண்டைய கிரேக்கத்தில் சுமார். கி.மு. 500 வாக்கிலேயே தொடங்கிவிட்டது!
கலிலியோ கலீலி தொலைவில் ஒரு விளக்கை வைத்து, அதனை சட்டெனச் திறந்து மூடி, அதைக் காண்பவரின் கால இடைவெளியை அளப்பதன் மூலம் ஒளியின் விரைவை அளக்க முயன்றார். அவரால் முடியவில்லை!

இத்தாலி ஆய்வு கல்விக்கழகம் என்ற அமைப்பு கலிலியோவின் ஆய்வைச் செய்து பார்க்க முயன்று சுமார் ஒரு மைல் தொலைவில் (~1.6 கிலோமீட்டர்) விளக்கை வைத்துச் சோதனை செய்தனர். அவர்களாலும் ஒளியின் வேகத்தை அளக்க இயலவில்லை!
அந்தத் தொலைவைக் கடக்க ஒளிக்கு வெறும் 11 மைக்ரோ நொடிகளே ஆகும்! இவ்வளவு குறுகிய கால இடைவெளியை நம்மால் உணர இயலாது!
1676-இல் டென்மார்க் வானியலாளர் ரோமர் (Ole Christensen Rømer) என்பவர் வியாழக் கோளின் துணைக்கோளான "ஐயோ"வின் (Io) கிரகணங்களைக் கொண்டு ஒளியின் விரைவை அளந்து, ஒளியானது புவியின் விட்டத்தைக் கடக்க 22 நிமிடங்கள் ஆகும் என்று அவர் கணித்தார்.
இதன் மூலம் ஒளியின் விரைவு 2,20,000 கி.மீ/நொடி என்று வரும். இம்மதிப்பு தற்போது நமக்குத் தெரியும் துல்லியமான மதிப்பைவிட 26% குறைவு!
1729-இல் ஜேம்ஸ் பிராட்லி (James Bradley) என்ற ஆங்கில வானியலாளர் ‘ஒளிப் பிறழ்ச்சி’ (aberration of light) என்ற விளைவைக் கண்டறிந்தார். அதாவது, விண்ணில் நாம் காணும் விண்மீன்களின் இருப்பிடம் புவியின் நகர்வினால் இடம்பெயர்ந்து

தெரிகின்றன என்பதே இவ்விளைவு. இதன் மூலம் இவர் ஒளியானது புவியைவிட 10,201 மடங்கு விரைந்து செல்கிறது என்று கணித்தார்.
இதன் மூலம் நாம் அறியும் ஒளியின் விரைவு ஓரளவு துல்லியமானது! பிராட்லியின் கணக்குப்படி ஒளியின் விரைவு 3,01,000 கி.மீ/நொடி; இம்மதிப்பு துல்லியமான மதிப்பைவிட வெறும் 0.40% -தான் கூடுதல்!
1849-இல் கிப்போலைட் பியாசோ (Hippolyte Fizeau) என்ற பிரெஞ்சு இயற்பியலாளர் 'பியாசோ சோதனை' என்ற முறையை வடிவமைத்தார்.

இதில் ஒரு ஒளிக்கற்றையை ஒரு பல்சக்கரத்தின் (பல் இடுக்கு) வழியாக அனுப்பி, தொலைவில் இருக்கும் ஒரு கண்ணாடியில் பிரதிபலித்து, மீண்டும் பல்சக்கரத்தின் (இன்னொரு இடுக்கு) வழியாக வரவைக்க வேண்டும். பல்சக்கரம் சுழன்றுகொண்டிருக்கும்.
பல்சக்கரத்தின் ஒரு இடுக்கு வழியாகச் செல்லும் ஒளி சென்று, கண்ணாடியில் பிரதிபலித்து, மீண்டும் வருவதற்குள் பல்சக்கரத்தின் மற்றொரு இடுக்கு ஒளியின் பாதையில் வந்திருந்தால் மட்டுமே ஒளி சக்கரத்தைத் தாண்டி நம் கண்ணுக்குத் தெரியும். இல்லையேல் அது சக்கரத்தின் பல்லில் பட்டுச் சிதறிவிடும்.

இச்சோதனையில் சக்கரத்திற்கும் கண்ணாடிக்கும் உள்ள தொலைவையும், ஒளி கண்ணுக்குத் தெரியும் வகையில் சுழல வேண்டிய சக்கரத்தின் சுழல்வேகத்தையும் கொண்டு ஒளியின் வேகத்தைக் கணிக்கலாம்.
இம்முறையில் பியாசோ ஒளியின் விரைவை 3,15,000 கி.மீ/நொடி என்று கணித்தார். இது துல்லிய மதிப்பைவிட 5.1% கூடுதல்!
1862-இல், பியாசோவின் நண்பரான மற்றொரு பிரெஞ்சு இயற்பியலாளர் இலியான் போக்கா (Léon Foucault) என்பவர் பியாசோவின் அமைப்பைச் சற்று மாற்றி வடிவமைத்தர்.
போக்காவின் அமைப்பில் ஒரு சுழலும் கண்ணாடி இருக்கும்.

S என்ற இடுக்கிலிருந்து வெளிப்படும் ஒளிக்கீற்று R என்ற கண்ணாடியில் பட்டு பிரதிபலித்து M என்ற பரவளைய கண்ணாடியில் (parabolic mirror) பட்டு மீண்டும் R கண்ணாடியில் பட்டு பிரதிபலித்து S இடத்திற்கே வரும். அதாவது, S-இன் பிம்பம் மீண்டும் அதனிடத்திலேயே உருவாகும்.
போக்கா ஒளியின் விரைவை 2,98,000 என்று கணித்தார். இது துல்லிய மதிப்பைவிட 0.6 % குறைவு!
1856-இல் வில்கெம் எடுவர்டு வெபர் (Wilhelm Eduard Weber) மற்றும் அரடால்பு கோராச் (Rudolf Kohlrausch) ஆகிய ஜெர்மானிய இயற்பியலாளர்கள் பியாசோ கண்டறிந்திருந்த ஒளியின் விரைவும் மதிப்பில் ஒத்துப்போவதையும் அவர்கள் கவனித்தனர்.

1860-இல் ஜேம்ஸ் கிளர்க்கு மேக்ஸ்வெல் (James Clerk Maxwell) என்ற ஸ்காட்லாந்து (Scotland) அறிவியலாளர் மின்-காந்த அலைகள் வெற்றிடத்தில் செல்லும் விரைவைக் கணக்கிட்டு அது வெபர்-கோராச் விகிதம்தான் என்று நிறுவினார். இதன் மூலம் ஒளி என்பதும் மின்காந்த அலைதான் என்று முன்மொழிந்தார்.
1869-இல் ஆல்பர்டு மைக்கல்சன் (Albert A. Michelson) என்ற அமெரிக்க இயற்பியலாளர் போக்காவின் சுழலும் கண்ணாடி முறையை மேம்படுத்தி ஒளியின் விரைவைத் துல்லியமாகக் கணிக்க முனைந்தார்.
1906-இல் எட்வர்டு ரோசா (Edward B. Rosa) என்ற அமெரிக்க இயற்பியலாளர் நிலைமின் மற்றும் நிலைகாந்த மாறிலிகளின் மதிப்புகள் மூலம் மேலும் துல்லியமாக ஒளியின் விரைவை அளந்தார் (2,99,710±30 கி.மீ/நொடி).

1920-இல் மைக்கல்சன் ஒரு மேம்பட்ட சோதனை முறையைக் கையாண்டார். அவர் கலிபோர்னியா மாகாணத்தின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள மவுண்ட் வில்சன் வானாய்வு கூடத்திலிருந்து சுமார் 22 மைல் (~35.4 கி.மீ.) தொலைவில் உள்ள சான் ஆண்டானியோ என்ற குன்றில் பரவளைய கண்ணாடியைப் பொருத்திச் சோதனை செய்தார்.
ஆனால் 1924-இல் குன்றுகளுக்கு (அதாவது, கண்ணாடிகளுக்கு !) இடையிலான தொலைவைத் துல்லியமாக அளந்ததன் மூலம் 1926-இல் ஒளியின் விரைவை மேலும் துல்லியமாகக் கணக்கிட்டார் (2,99,796±4 கி.மீ./நொடி).

1950-ல் லூயி எசுசன் (Louis Essen) என்ற ஆங்கில இயற்பியலாளர் ஒளியின் விரைவை 2,99,792.5±1 கி.மீ/நொடி என்று கணித்தார். (இது நூறாயிரத்தில் 0.14 பங்கு கூடுதல்!)
பின்னர் குறுக்கீட்டுமுறை (interferometry) என்ற முறை கையாளப்பட்டது.
ஒத்திணக்கம் (coherence) உள்ள இரண்டு அலைகள் குறுக்கிடும்போது அவற்றின் பயணத் தொலைவிற்கு ஏற்ப சேர்ந்தும் (constructive interference) அழிந்தும் (destructive interference) இணையும்.
குறிக்கீட்டுமுறையில் ஒரே அலைக்கீற்றை இரண்டாகப் பிரித்து அந்த இரு கீற்றுகளையும் செங்குத்தான திசைகளில் செலுத்திப் பின் மீண்டும் ஒரே புள்ளியில் இணையச் செய்வர். அவ்வாறு வந்து இணையும் கீற்றுகளுக்கிடையில் குறுக்கீட்டுவிளைவு நடக்கும்.
இவற்றில் ஏதேனும் ஒரு கீற்றின் பயணத் தொலைவு மாறினால் அதனால குறிக்கீட்டுவிளைவின் உருப்படிவம் பெயரும் (shift). பயணத் தொலைவு மாற்றத்தையும் (path difference) உருப்படிவ பெயர்வையும் (shift) அளப்பதன் மூலம் நாம் அலையின் அலைநீளத்தை கணக்கிடலாம். இதைக் கொண்டும் அவ்வலையின் அதிர்வெண்ணைக் கொண்டும் அலையின் விரைவை அளக்கலாம்.
இம்முறையில் முதலில் ரேடியோ அலைகள் பயன்படுத்தப்பட்டன. தற்போது சீரொளிகள் (Lasers) பயன்படுத்தப்பட்டு ஒளியின் விரைவு துல்லியமாகக் கணக்கிடப்படுகிறது.

1972-இல் இம்முறையைப் பயன்படுத்தி அமெரிக்காவின் தேசிய தரநிலைகள் செயலகத்தின் (US National Bureau of Standards) குழு ஒன்று ஒளியின் விரைவை 2,99,792,456.2±1.1 மீ/நொடி என்று கணக்கிட்டனர். இது இதற்கு முந்தைய ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பைவிட 100 மடங்கு உறுதியானதாகும்.
இன்றைய நிலையில், உலகளாவிய அளவில், ஒளியின் விரைவு 2,99,792,458 மீ/நொடி என்ற துல்லியமான மதிப்பாகக் கொள்ளப்படுகிறது.

ஒளி ஒரு நொடிக்கு ~ 3 லட்சம் கி.மீ வேகத்தில் பயணிக்கிறது .
சூரியனின் கதிர் நமது கிரகமான பூமியை வந்தடைய சுமார் 8 நிமிடங்கள் 20 வினாடிகள் ஆகும். ஏனென்றால் ஒளியின் வேகம் வினாடிக்கு 3,00,000 கிலோமீட்டர்.
ஒளியின் வேகத்தை வைத்து பூமி சுற்றுப்பாதை நீள்வட்டம் என்பதால் ஜனவரி 2 க்கு, பூமி சூரியனிடமிருந்து சுமார் 147 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் இருக்கும். எனினும், ஜூலை மாதம் 152,6 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் இருக்கும்.

வெப்பநிலை மற்றும் கிரகத்தை அடையும் கதிர்வீச்சின் அளவு ஆகியவற்றில் இது நம்மை பாதிக்காது என்றாலும் இந்த தூரம் மிகவும் கவனிக்கத்தக்கது.
" (இறைவன் ஒளியினால்) படைக்கப்பட்ட மலக்குகளைத் தன்னுடைய தூதைக் கொண்டு போகிறவர்களாகவும் ஆக்கினான். அவர்கள் இரண்டிரண்டு, மும்மூன்று, நான்கு நான்கு இறக்கைகள் உடையவர்களாக இருக்கின்றனர். அவன் விரும்பியதைத் தன் படைப்பில் பின்னும் அதிகரிப்பான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றலுடையவன். (அல்குர்ஆன் : 35:1) மலக்கு ஜிப்ரயீல் (அலை) அவர்களுக்கு 600 இறக்கைகள் உண்டு .
ஒளியினால் படைக்கப்பட்ட மலக்குமார்களின் இறக்கைகளின் எண்ணிக்கைக்கும், மலக்குமார்கள் பறக்கும் வேகத்திற்கும் ஏதேனும் வித்தியாசம் இருக்குமா ? அல்லாஹ்வே அறிவான்.
...இப்படியாக பிரபஞ்சம் ஒளியை மொழியாகக் கொண்டு கணித ரீதியில் அதன் வேகம் ஒரு நொடிக்கு 3 லட்சம் கி.மீ என்று பேசியதைக் கண்டோம். அது இன்னும் நம்மிடையே எதை எதையோ பேசிக் கொண்டேதான் இருக்கிறது .

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 9

(" பூமியே உன் வயது என்ன ? ")



இந்த பூமி தோன்றி எவ்வளவு காலம் ஆகிறது?
"சுமார் இருநூறு கோடி ஆண்டுகள் முன்பு இந்த பூமி தோன்றியிருக்க வேண்டும்" என்று அறிவியல் அறிஞர்கள் சொல்கிறார்கள்.
"எந்த அடிப்படையில் அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்?"
இயற்கையில் நடைபெறும் ரசவாதம் இருக்கிறதே! அதன் அடிப்படையில்தான் அவர்கள் இவ்வாறு சொல்கிறார்கள். எப்படி ? ரசவாதத்தைச் சொல்றேன்.
யூரேனியம் என்பது ஓர் உலோகம். தோரியம் என்பது மற்றோர் உலோகம். இவை இரண்டும் ஈயமாக மாறுகின்றன. இப்படி மாறியுள்ள ஈயத்தின் அளவைக் கொண்டு பூமியின் வயதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் அறிவியல் அறிஞர்கள்.

உலகத்திலே மொத்தம் எவ்வளவு ஈயம் இருக்கிறது ? இவ்வளவு ஈயமும் ஏற்பட எவ்வளவு காலம் ஆகும் ?
எல்லாத்திற்கும் இந்த பிரபஞ்சம் கணக்கு வழக்கு வச்சுதான் விஞ்ஞானிகளிடம் பேசுகிறது . இதோ..புவி இயல் அறிஞர்கள் போட்ட கணக்கு.
ஓர் ஆண்டுக் காலத்திலே ஒரு கிராம் யூரேனியத்திலிருந்து 1/7, 600,000,000 கிராம் ஈயம் கிடைக்கிறது.
ஒரு கிராம் தோரியத்திலிருந்து ஒரு வருஷ காலத்தில் 1/28, 000,000,000 கிராம் ஈயம் கிடைக்கிறது.
இதைக் கொண்டு கணக்குப் பார்த்ததில் என்ன தெரிந்தது? உலகத்திலே மிகப் பழமையான ஈயப் பாறை எதுவோ அதன் வயது தெரிந்தது. அதாவது அந்த ஈயப் பாறையின் வயது நூற்று எண்பத்து ஐந்து கோடி வருஷங்கள் என்று தெரிந்தது.

இந்த அளவில் நின்றார்களா புவி இயல் அறிஞர்கள்? இல்லை. மேலும் சோதிக்கத் தொடங்கினார்கள். கடல்களின் வயது என்ன என்று கண்டுபிடிக்க முற்பட்டார்கள்.
இந்த பூமி இருக்கிறதே! இதன் முக்கால் பகுதி கடல். கால் பகுதி தான் நிலம். முதல்ல கடல் , அப்புறமா நிலம்
கடலின் வயதைக் கண்டுபிடிப்பது எப்படி? கடலிலே உள்ள உப்புதான் அதன் வயதைக் காட்டியது. கடலிலே உப்பு ஏது? எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது?
ஆறுகள் கொண்டு வந்தன.
வானத்திலிருந்து பொழிகிறது மழை. அம்மழை நீரை ஏந்திக் கீழே இறக்கி விடுகின்றன மலைகள்.
மழை நீர் என்ன செய்கிறது? வானத்திலிருந்து பூமிக்கும் பூமிக்குள்ளும் இறங்கியது
மழை, மலைபாறைகளை உருட்டிக் கொண்டு ஓடுகிறது. குதிக்கிறது. 'இடி இடி' என்று சிரிக்கிறது. கீழே இறங்குகிறது. பூமியைத் தோண்டுகிறது. மண்ணை வாரிக் கொண்டு ஓடுகிறது. மண்ணைக் கரைத்துக் எடுத்துக் கொண்டு போய் கடலில் கொட்டுகிறது. மண்ணிலே உப்பும் இருக்கிறது. அந்த உப்பு, நீரிலே கரைந்து விடுகிறது மண் மட்டும் கரையாதிருக்கிறது. இவ்விதம் ஆறுகளினாலே கொண்டு கொட்டப்பட்ட மண் கடலுக்கடியில் போய் விழுகிறது. உப்பு, நீரில் கரைந்து விடுகிறது.

சூரிய வெப்பத்தினாலே, கடல் நீர் ஆவியாக மாறுகிறது. ஆவி, மழையாகப் பொழிகிறது. மழை நீர் ஆறாக உருக் கொள்கிறது; ஆறுகள் மூலம் மீண்டும் கடலை அடைகிறது. இந்த நிகழ்ச்சி ஓய்வில்லாமல் நடந்து கொண்டே இருக்கிறது. இருக்கட்டும். இதனால் ஆறுகள் கடலில் கொண்டு போய் கொட்டும் உப்பு அதிகரிக்கிறது. அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. உலகம் தோன்றிய நாள் முதல் கடல் நீர் அப்படியே இருக்கிறது. உப்பு மட்டும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதனால் தான் கடல் நீர் உப்பாயிருக்கிறது.
உலகத்தில் உள்ள ஆறுகள் எல்லாமாகச் சேர்ந்து மொத்தம் நாற்பது கோடி டன் உப்பை ஆண்டு தோறும் கடலில் கொட்டி வருகிறது.

இந்தக் கணக்குப்படி பார்த்தால் என்ன தெரிகிறது? கடலின் வயது தெரிகிறது. அதாவது கடல்கள் தோன்றி எவ்வளவு காலம் ஆகிறது என்று தெரிகிறது. சுமார் இரு நூறு கோடி
.... இப்படி விஞ்ஞானிகள் கூட்டம் கூட்டமான ஈசல்களைப் போல கணக்குகளைப் பறக்க விட்டு, பின் விடிந்ததும் அத்தனையும் வாரி எடுத்து ஒற்றை வரியில் சொன்னார்கள்
" பூமியின் வயது இரு நூறு கோடி ஆண்டுகள்"
இது இருக்கட்டும் .பூமியைப் படைத்த படைப்பாளனான அல்லாஹ் தன் திருமுறையில் கூறுவதையும் சொல்றேன் .
" தேவன் 6 நாட்களில் பிரபஞ்சத்தைப் படைத்து ஏழாவது நாளில் ஓய்வெடுத்தான் " என்கிறது பைபிள் ஆதியாகாமம்
"நிச்சயமாக நாம்தாம் வானங்களையும் பூமியையும் அதற்கு மத்தியிலுள்ளவைகளையும் 6 நாட்களில் படைத்தோம் அதனால் நமக்கு யாதொரு களைப்பும் ஏற்படவில்லை" என்கிறது குர்ஆன் (50 : 33)
"வானத்தில் இருந்து பூமி வரையிலுள்ள ஒவ்வொரு காரியத்தையும் அவனே ஒழுங்குபடுத்துகின்றான் நீங்கள் எண்ணுகிற கணக்கின்படி 1000 ஆண்டுகளுக்குச் சமமான ஒரு நாளொன்று அவனிடம் சென்று விடும் "குர்ஆன் (32: 05)
ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்குச் சமமான அந்நாளில் மலக்கு ஜிப்ரீல் ஆகிய பரிசுத்த ஆவியும் சென்று ஏறுவார்கள்" குர்ஆன் (70 : 04)
மேலே மேற்கொள் காட்டப்பட்ட குர்ஆன் வசனங்களில் இருந்து "யௌம்" என்ற வார்த்தை 1000 ஆண்டுகளையும் குறிக்கும், அதே நேரத்தில் 50ஆயிரம் ஆண்டுகளையும் குறிக்கும், அதே நேரத்தில் ஒரு நாளையும் குறிக்கும் எனவே இப் பதத்திற்கு தகுந்தாற் போல் கால அளவை நிர்ணயிக்க வேண்டும்
திருக்குர்ஆன் விரிவுரையாளர் யூசுஃப் அலி " யௌம் "என்ற வார்த்தை மிக நீண்ட கால அளவு அதை யுகங்கள், யுகாந்திரங்கள் Aeons என்று பொருள் கொள்ள வேண்டும் என்கிறார் .
குர்ஆன் கூறும் நாட்களுக்குப் பதில் ஆறு யுகங்கள் என்றே பொருள் வேண்டும் என்கிறார் மாரிஸ் புகைல்
"நீர் கூறும் இவ்வளவு பெரிய பூமியை இரண்டே நாட்களில் படைத்தவனை நீங்கள் நிராகரித்து விட்டு மற்றவைகளை அவனுக்கு இணையாக்கின்றீர்களா ? இதில் வசிப்போருக்கு வேண்டிய ஆகாரத்தையும் நான்கு நாட்களுக்குள் திட்டமிட்டான் பின்னர் இரண்டு நாட்களில் ஏழு வானங்களாகத் திட்டமிட்டு ஒவ்வொரு வானத்திற்கும் அதனதன் கடமையை அறிவித்தான் " குர்ஆன் (41 : 09 10 11 12)

இங்கு மேற்கோள் காட்டப்பட்ட வசனங்களிலுள்ள "நாள்" என்ற சொல்லுக்குப் பதிலாக யுகங்கள் என்ற சொல்லைப் போட்டு வாசித்து பாருங்கள் மிக துல்லியமாக விஞ்ஞான உண்மை இதனை தெரிவிக்கிறது .
இவ்வுண்மையை 1400 ஆண்டுகளுக்கு குர்ஆன் சொல்லிற்று. இதுதானே இந்த பிரபஞ்சம் பேசிய கணிதமாக இருக்கும் என்பதை நினைக்கும் போது மெய் சிலிர்க்கிறது.

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 10

(மழை சொல்லும் கணக்கு)



மழையின்மைக்கு மனிதன் கூறும் காரணங்களாவன: ஓசோனில் ஓட்டை... புவி வெப்பம் அதிகரித்தல்.. பனி மலைகள் உருகுதல். மழை பொழியாமல் இருப்பதற்கு இன்றைய விஞ்ஞானமும் இவ்வாறு பல காரணங்களைக் கூறலாம். உண்மைதான். ஆயினும், இஸ்லாம் இன்னொரு கோணத்தில் இதனைப் பார்க்கிறது. ஆம், மனிதன் செய்யும் பாவங்களும் பிழைகளும்கூட மழை பெய்யாமல் இருப்பதற்கான முக்கியக் காரணம் என்று இஸ்லாம் கூறுகின்றது.
நல்லவன் ஒருவன் இந்தப் பூமியில் வாழ்கின்றான் என்றால் அவனால் சக மனிதன் நலம்பெறுவதுடன், ஏனைய உயிரினங்களும் நலம் பெறுகின்றன.
அதேநேரம் தீயவன் ஒருவன் இருக்கின்றான் என்றால், அவனால் பாதிப்படைவது சக மனிதன் மட்டு மல்ல.. மாறாக, அவன் வாழும்பகுதி, கால்நடைகள், ஏன் மரங்கள்கூட பாதிப்படைகின்றன என்று நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைக்கடந்து ஒரு பிரேதம் (ஜனாஸா) கொண்டுசெல்லப்பட்டது. அப்போது நபிகளார் (ஸல்), (இவர்) ஓய்வு பெற்றவராவார்; அல்லது (பிறருக்கு) ஓய்வு அளித்தவராவார் என்று சொன்னார்கள்.
மக்கள், “இறைத்தூதர் தூதர் அவர்களே! ஓய்வு பெற்றவர்; ஓய்வு அளித்தவர் என்றால் என்ன?” என்று கேட்டார்கள்.
நபி (ஸல்) அவர்கள், “இறைநம்பிக்கை கொண்ட அடியார் (இறக்கும்போது) இவ்வுலகத்தின் துன்பத்திலிருந்தும் தொல்லையில் இருந்தும் நிம்மதிபெற்று இறையருளை நோக்கிச் செல்கிறார்.
பாவியான அடியான் (இறக்கும்போது) அவனி(ன் தொல்லைகளி)டமிருந்து மற்ற அடியார்கள், நாடு நகரங்கள், மரங்கள் மற்றும் கால்நடைகள் ஆகியன நிம்மதி பெறுகின்றன” என்று சொன்னார்கள். (புகாரி, முஸ்லிம்)
தீயவன் ஒருவன் உலகில் உயிர் வாழ்கின்றான் என்றால் அவன் தீயவனாக இருப்பதன் பாதிப்பு அவனுக்கு மட்டுமல்ல. மாறாக, அவன் வாழும் பகுதியில் இருக்கும் கால்நடைகள், மரம் செடிகொடிகள்கூட பாதிப்புக்கு உள்ளாகின்றன. ஆன்மிக ரீதியாகப் பார்க்கும்போது அவனது பாவத்தின் காரணத்தால் மழை தடுக்கப்படுகிறது என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

அதேவேளை, உலகிய ரீதியாகப் பார்க்கும்போது மழைக்குக் காரணமாக அமையும் மரம் செடி கொடிகளை அவன் அழிக்கின்றான் என்பது இந்த நபி மொழியின் இன்னொரு கோணம் ஆகும். எனவேதான், ‘கெட்டவன் இறக்கும்போது படைப்பினங்கள் அனைத்தும் நிம்மதி பெறுகின்றன’ என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

اِنَّ اللّٰهَ عِنْدَهٗ عِلْمُ السَّاعَةِ وَيُنَزِّلُ الْغَيْثَ وَيَعْلَمُ مَا فِى الْاَرْحَامِ وَمَا تَدْرِىْ نَفْسٌ مَّاذَا تَكْسِبُ غَدًا وَّمَا تَدْرِىْ نَـفْسٌ بِاَىِّ اَرْضٍ تَمُوْتُ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ
நிச்சயமாக (உலக முடிவு) காலத்தைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடத்தில் (மட்டும்)தான் இருக்கிறது.
அவனே மழையை இறக்கி வைக்கிறான்.
அவனே கர்ப்பங்களில் தரிப்பதையும் அறிவான்.
(அவனைத் தவிர) எவரும் நாளைக்கு அவர் என்ன செய்வார் என்பதை அறியமாட்டார்.
எந்தப் பூமியில் இறப்பார் என்பதையும் (அவனைத் தவிர) எவரும் அறியமாட்டார். நிச்சயமாக அல்லாஹ்தான் (இவைகளை) நன்கறிந்தவனும் தெரிந்தவனுமாக இருக்கிறான். (அல்குர்ஆன் : 31:34)
1) யுக முடிவு நேரத்தைப் பற்றிய ஞானம்:
நபி(ஸல்) அவர்கள் யுக முடிவு நேரம் எப்பொழுது நிகழும் என்பது குறித்து, ஒரு விஷயம் கூட மக்களுக்கு எடுத்துச் சொல்லவில்லை.எனினும் அதன் அறிகுறிகளை மட்டுமே அதுவும் அல்லாஹ்வின் அறிவிப்பின்படி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
2) மழையைப் பற்றிய ஞானம்:
அது எப்பொழுது வரும், எவ்வளவு பெய்யும், எவ்விடங்களிலெல்லாம் பெய்யும், அதனால் மக்களுக்கு நலமா, இடரா முதலியவற்றின் முழுமையான ஞானம்.
3) கர்ப்பத்திலுள்ளவைப் பற்றிய ஞானம்:
முழுமைப் பிரசவமா, அரைகுறைப் பிரசவமா, அது பெற்றோருக்கு இணக்கமானதா, விரோதமானதா, உயிருடன் பிறக்குமா. மரித்துப் பிறக்குமா முதலியவற்றின் ஞானம்.
4) நாளை ஒருவர் தாம் என்ன செய்வார் என்பது பற்றிய ஞானம்:
ஒருவரது நாளையத் திட்டம் நிறைவேறுமா, நிறைவேறாதா, வீட்டிலிருந்து புறப்படுபவர் மீண்டும் அதில் வந்து புகுவாரா, புக மாட்டாரா, நாளையத் தொழில் லாபமா, நஷ்டமா முதலியவைப் பற்றிய ஞானம்.

5) எவருக்கு எவ்விடத்தில் (எவ்விதத்தில்) மரணம் ஏற்படும் என்பது பற்றிய ஞானம்:
ஒருவரின் மரணம் சொந்த ஊரிலா, அல்லது வந்த ஊரிலா, அல்லது எந்த ஊரில் என்பதும், தரையிலா, கடலிலா, ஆகாயத்திலா என்பதும், ஓரிடத்தில் தங்கியிருக்கையிலா, பிரயாணம் செய்கையிலா, நல்ல மரணமா, தீய மரணமா, சாதாரண மரணமா, திடீர் மரணமா என்பன போன்றவைப் பற்றிய ஞானம்.
மேற்காணும் குறிப்பிட்ட ஐந்து விஷயங்கள் பற்றிய ஆய்வு, அந்த ரப்புல் ஆலமீன் ஒருவனைத் தவிர வேறு யாராலும் அறிய முடியாது
ஆனால் பெய்த மழையின் அளவை விஞ்ஞான ரீதியில் மழை மானி கருவியால் அளவிட முடியும் .
மழையையோ அல்லது பனியையோ சாதாரண மழைமானி மூலம் அளவிடலாம். அஃது 100மிமீ (4 அங்குலம் பிளாஸ்டிக்) அல்லது 200மிமீ (8அங்குலம் உலோகம்) என்ற அளவுகளில் இருக்கும்.
சாதாரண மழை மானி ஆடி அல்லது உலோகத்தால் ஆன இரண்டு நீளுருளைகளையும் ஒரு புனலையும் கொண்டது. உட்புற உருளை 0மிமீ முதல் 25மிமீ (0.98 அங்குலம்) வரை அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும்.
உட்புற உருளையின் மேல் உள்ள புனல் மழை நீரை அந்த உருளைக்குள் செலுத்துமாறு அமைக்கபட்டிருக்கும். உட்புற உருளை நிறைந்தபின் மழை நீர் மேற்புற உருளையில் சேகரிக்கப்படும்.
அளவிடும் முறை

பொதுவாக ஒவ்வொரு 24 மணிநேரத்திற்கும் மழை அளவிடப்படும். எனவே மழையை அளவிடும்முன் நேரத்தை குறித்துக்கொள்வது அவசியம்.
மழைமானியை ஒரு பொதுவான, இடர்பாடுகள் இல்லாத இடத்தில் மழை பெய்யும் நேரத்தில் திறந்து வைக்கவும். சரியாக 24 மணிநேரத்திற்கு பிறகு மானியில் உள்ள நீரின் அளவை மில்லி லிட்டர் அளவில் எடுக்கவேண்டும்.

நீர் ஒரு திரவம் என்பதால் மில்லி லிட்டர் என்ற அளவைவிட லிட்டர் என்ற அளவில் மாற்றினால் தெளிவாக இருக்கும். மழையை அளவிடும் SI அலகு மில்லி லிட்டர் ஆகும்.
“ ஒரு மில்லிமீட்டர் மழை அளவு என்பது ஒரு லிட்டர் / ஒரு சதுர மீட்டருக்கு சமம். ”
எனவே, 10மிமீ மழை என்று பதிவானால், அதை 10 லிட்டர் / சதுர மீட்டர் என்று எடுத்துகொள்ளவும்.
ஒரு ஊரில் எவ்வளவு மழை பெய்துள்ளது என கணக்கிட, அந்த ஊரின் பரப்பளவு (சதுர மீட்டரில்) தெரிந்திருக்க வேண்டும்.
சென்னையின் பரப்பளவு 174 சதுர கிலோமீட்டர் (174 x 10,00,000 சதுர மீட்டர்). எனவே சென்னையில் 1mm மழை என்பது 17,40,00,000 லிட்டர் மழை பெய்ததாகக்கொள்ளலாம்.
இப்படித்தான் இந்த பிரபஞ்சம் மழை பெய்யும் கணிதத்தை சொல்லிக் கொடுக்கிறது

(தற்சமயம் எங்களூர் மேலப்பாளையத்தில் செம மழை பெய்ந்து, வெள்ளக்காடாகி, உடனேயே அடுத்த மழைக்கும் தயாராகிக் கொண்டிருக்கிறது)


பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 11
(வானம் வசப்பட்டது)

1903 ஆம் ஆண்டு, கோன்ஸ்டாண்டின் ட்சியோல்கோவ்ஸ்கை (1857–1935), தி எக்ச்ப்லோறேஷன் ஆப் காஸ்மிக் ஸ்பேஸ் பை மீன்ஸ் ஆப் ரியாக்க்ஷன் டிவைசஸ் என்ற ஆய்வறிக்கை நூலை ரஷ்ய மொழியில்: Исследование мировых пространств реактивными приборами) பதிப்பித்தார்.
இது ஏவுகணையைக்கொண்டு எவ்வாறு விண்கலங்களை ஏவலாம் என்பதைப்பற்றி வெளிவந்த முதல் புத்தகமாகும்.
இந்நூல் விண்வெளிக்கு மனிதன் செல்லவும், அங்கு அவனது செயல்கள் உணரப்படவும் ஒரு திட்டமாக விளங்கியது. அவர் ஒரு விண்வெளி நிலையத்தை கற்பனையாக மிக விவரமாக உண்டாக்கி, அதனது நிலையான புவி கோளப் பாதையையும் கணக்கிட்டுள்ளார். பிரபஞ்சம் எவ்வளவு அழகாக கணித ரீதியில் கோட்பாடாக பேசியிருக்கிறது . பார்த்தீர்களா ?
அவர் விண்வெளி எவ்வாறு அறிவியல் பரிசோதனைகளுக்கு உதவி புரிகிறது என்பதைப்பற்றியும் விளக்கியுள்ளார். இந்த நூல் ட்சியோல்கோவ்ஸ்கை குறிப்பிட்ட ஒரே இடத்தில் புவியை சார்ந்து இருக்கும் செயற்கைக்கோள்களைப்பற்றி விவரிப்பதுடன், பூமியுடன் அவை எப்படி தகவல்களை பரிமாறுகின்றன என்பதைப்பற்றியும் குறிப்பிடுகின்றது.
"இவை பெரியளவில் தொலைத்தொடர்பு கருவிகளாக பயன்படுத்தப்படலாம்" என்றும் இந்த நூல் குறிப்பிடுகின்றது.
அவர் கோளப்பாதையில் சுற்றிவரும் விண்கலங்களின் இராணுவ மற்றும் அமைதித்துவ முக்கியத்துவங்களை விளக்கியுள்ளார்.
(...ஆனால் இஸ்ரேலில் கன்ட்ரோல் ரூமில் உட்கார்ந்து கொண்டே ராக்கெட் ஏவுகணைகளை ஏவி காசாவில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி, ஹமாஸ் அமைப்பினர் 200-க்கும் மேற்பட்டவர்களை கொன்றொழிக்கவும் முடிகிறது) இதற்கெல்லாம் காரணம் வானவெளி சொல்லும் கணக்கு வழக்குகள்தான்.
இந்த செயற்கை கோள் மூலமாக வானில் உள்ள மழை மேகங்கள் , புயல் காற்றுகளை மிக எளிதாக சாட்டிலைட் மூலமாக கணக்கிட முடிகிறது .
இன்று விண்ணில் வலம் வரும் மிகப்பெரிய செயற்கைக்கோள் "சர்வதேச விண்வெளி" நிலையம்மாகும். அதிநவீன விஞ்ஞானம் பெற்றெடுத்த அற்புத குழந்தை இது .
وَلَوْ فَتَحْنَا عَلَيْهِمْ بَابًا مِّنَ السَّمَآءِ فَظَلُّوْا فِيْهِ يَعْرُجُوْنَۙ

இவர்களுக்காக நாம் வானத்திலிருந்து ஒரு வாயிலைத் திறந்து விட்டு, அவர்கள் அதில் (நாள் முழுதும் தொடர்ந்து) ஏறிக் கொண்டிருந்தாலும் (அவர்கள் ஈமான் கொள்ள மாட்டார்கள்). (அல்குர்ஆன் : 15:14)
அவர்கள் இறைவன் மீது ஈமான் கொள்ளாவிட்டாலும், இறைவன் படைத்த படைப்புகளின் சூட்சமத்தை மிக எளிதாக வசப்படுத்திக் கொள்கின்றனர் .
இந்த செயற்கை கோள்கள் மூலமாக வானம் மட்டும் அல்ல பூமியும்வசப்பட்டே இருக்கிறது உட்கார்ந்த இடத்திலே இருந்து பூமியின் அடி ஆழம் வரை மனிதனால் உற்றுப் பார்த்து துளாவ முடிகிறது .
ஆம் . வானம் மனிதனுக்கு வசப்பட்டிருக்கிறது .
https://m.facebook.com/story.php?story_fbid=2303613983231277&id=100007480923921

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 12

பூமி சொல்லும் கணிதம்



வானைத் தொடும் அளவுக்கு உயர்ந்த பல மாடிக்கட்டிடங்கள் பெரிய பெரிய நகரங்களில் கட்டப்பட்டுள்ளன. பூமியின் மேற்பரப்பு உறுதியாகவும், அசையாமலும் இருப்பதால்
நமது பூமியின் மேற்பரப்பு ஆடாமல் அசையாமல் உறுதியாக இருப்பதாகக் கருதுகிறோம்.
திடீரென கட்டிடங்கள் குலுங்குவதும், கட்டிடங்களில் இருப்பவர்கள் ஏதோ படகில் நகர்வதுப் போல் உணர்வதும் , பின் அத்தனையும் சீட்டுக்கட்டுப் போல நொறுங்கி விழுவதும் பூகம்பத்தின் விளையாட்டு .
اِذَا زُلْزِلَتِ الْاَرْضُ زِلْزَالَهَا ۙ
பூமி பெரும் அதிர்ச்சியாக - அதிர்ச்சி அடையும் போது-
وَاَخْرَجَتِ الْاَرْضُ اَثْقَالَهَا ۙ
இன்னும், பூமி தன் சுமைகளை வெளிப்படுத்தும் போது-
وَقَالَ الْاِنْسَانُ مَا لَهَا
“அதற்கு என்ன நேர்ந்தது?” என்று மனிதன் கேட்கும் போது-
يَوْمَئِذٍ تُحَدِّثُ اَخْبَارَهَا ۙ
அந்நாளில், அது தன் செய்திகளை அறிவிக்கும்.
بِاَنَّ رَبَّكَ اَوْحٰى لَهَا
(அவ்வாறு அறிவிக்குமாறு) உம்முடைய இறைவன் அதற்கு வஹீ மூலம் அறிவித்ததனால் (இவ்வாறெல்லாம் நடந்து கொள்கிறது) (அல்குர்ஆன் : 99: 1_ 5)
2004ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் இந்தோனேஷியாவில் ஏற்பட நிலநடுக்கம் மற்றும் அதனைத் தொடர்ந்து உண்டான சுனாமி அலைகளின் தாக்குதலுக்கு 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பலியாயினர்.
2001ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் காலை நாம் குடியரசு தின விழாக் கொண்டாட்டங்களைத் துவக்க இருந்த சமயத்தில், "உங்க ஆட்டமெல்லாம் குளோஸ்"ன்னு குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 20,000 க்கும் மேற்பட்டோர் உயிரழந்தனர். 4,00,000 வீடுகள் இடிந்து விழுந்தன.

1993ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் நாள் அதிகாலை அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது மகாராஷ்டிர மாநிலம் லாத்தூர் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10,000 பேருக்கு மேல் இடிபாடுகளுக்கு இடையே சிக்கி உயிரழந்தனர். 30,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.
இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பெரிய அளவிலான நிலநடுக் கங்களைத் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. இதனால் ஏராளமான அளவில் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதங்கள் உண்டாகின்றன.
ஆகபூமியின் மேற்பகுதியில் அவ்வப்போது திடீரென நில அதிர்வுகள் ஏற்பட்டு பூமி ஆட்டம் காணும் நிகழ்வே நிலநடுக்கம் அல்லது பூகம்பம் எனப்படும்.

பெரிய அளவில் முதல் நிலநடுக்கம் ஏற்பட்ட பின் சிறு அளவிலான அதிர்வுகள் நெடுநாள் வரை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கும். இவை பின் அதிர்வுகள் எனப்படும்.

பூமிக்கு அடியிலுள்ள பாறைகள், கனிம தாதுப்பொருட்கள் அனைத்தும் உருகி, பாகுபோன்ற நிலையில் உள்ளன. பூமியின் மேல் அடுக்கு இதன்மீது மிதந்தவாறு, தொடர்ந்து அசைந்து கொண்டே உள்ளது. பூமியின்மேல் அடுக்கு பூமித்தட்டு என்றும் அழைக்கப்படும்.


பூமித்தட்டில் ஆங்காங்கே பிளவுகள் காணப்படுகின்றன. இப்பிளவுகளின் விளிம்பு எல்லையை ஒட்டி பூமித்தட்டுகள் அசைந்தவாறு நகர்ந்து கொண்டுள்ளன.
ஒருசிறு மூங்கில்குச்சியை இருகைகளிலும் பிடித்துக்
கொண்டு வளைத்தால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அது
வளைந்து கொடுக்கும். அதன்பின்னர் நாம் கொடுக்கும் அழுத்தம் தாளமாட்டாமல், குச்சி இரண்டாக உ டைந்துவிடும். அதே போலத்தான் பூமித்தட்டுக்களின் இயக்கத்திலும் நிகழ்கின்றது.
குளத்து நீரில் கல்லைப் போட்டால் நீரில் கல் விழுந்த இடத்திலிருந்து அலைகள் உருவாகி வட்ட வடிவில் பரவி செல்வதைக் காணலாம். இவ்வாறுதான் நில நடுக்கத்தின் அதிர்வு அலைகளும் பரவிச் செல்கின்றன
நில அதிர்வுமானி (Seismograph) என்ற கருவியின் மூலம் நிலநடுக்கத்தின் போது ஏற்படும் அதிர்வலைகள் பதிவு செய்யப்படுகின்றன. நம்மால் உணர இயலாத மிகவும் துல்லியமான அதிர்வுகளையும் இக்கருவி கணக்கிட்டு பதிக்கிறது.
இந்த சிறு அதிர்வலைகள் கூறும் சேதிகளை பூமியில் உள்ள ஜீவராசிகள் உணர்ந்து இடம்பெயர்கின்றன. இதில் பாம்பு , எலிகள் , மனிதன் கட்டிப்போடாத விலங்குகள் எல்லாம் தப்பியோடி விடுகின்றன. அதிர்வுமானி பேசும் சிறு சிறு பரிபாஷைகள் புரியாத மனிதர்கள்தான் மாநகராட்சி அடிச்சிப் போட்ட நாய் மாதிரி பிணங்களாகின்றார்கள் .

நில நடுக்க அதிர்வலைகள் இக்கருவியினால் உணரப்பட்டு மின் அலைகளாக மாற்றப்படும்.பின்னர் இவை மின் கருவியில் பதிவு செய்யப்படும். கணிணியின் உதவிகொண்டு இப்பதிவுகளை ஆய்வு செய்தால் நிலநடுக்கம் ஏற்பட்ட இடம், ஏற்பட்ட நேரம், நிலநடுக்க சக்தியின் அளவு ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம். இதற்கு குறைந்தது மூன்று வெவ்வேறு இடங்களில் செய்யப்பட்ட பதிவுகள் தேவைப்ப டும்.
நிலநடுக்கம் எந்த அளவு சக்தி வாய்ந்தது என்பது அது வெளியிடும் ஆற்றலைப் பொறுத்து மதிப்பீடு செய்யப்படுகின்றது. இதை ரிக்டர் அளவு கோல் ஆகும்.
அமெரிக்கா வைச் சேர்ந்த சார்லஸ் ரிக்டர் என்ற புவி அறிவியல் ஆய்வாளர் 1935 ஆம் ஆண்டு இந்த அளவுகோல் முறையைக் கண்டறிந்து நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.
இதன் வரையறை 1லிருந்து 10 வகை மதிப்புடையதாக உள்ளது. ரிக்டர் அளவுகோலில் 1 என்பது குறைந்த சக்திகொண்ட நில நடுக்கத்தைக் குறிக்கும். இதை நாம் உணர இயலாதளவுக்கு மிகவும் குறைவாக இருக்கும். அதிகபட்சமாக 9.3 ரிக்டர் வரை நிலநடுக்கங்கள்பதிவு செய்யப்பட்டுள்ளன• இது தீவிரமான நில நடுக்கத்தைக் குறிக்கும்.

2004 ம் ஆண்டு டிசம்பர் 26ஆம் நாள் இந்தோனேஷியாவில் நிலநடுக்கம் மற்றும் அதனைத் தொடர்ந்து ராட்சத அளவில் சுனாமி அலைகள் ஏற்பட்டன அல்லவா ? இவற்றின் பாதிப்புகளால் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது நாம் அறிந்ததே !
ரிக்டர் அளவுகோலில் இந் நில நடுக்கத்தின் சக்தி 9 எண்
கொண்டதாக பதிவுசெய்யப்பட்டது. இதன்சக்தி 1500 ஹிரோஷிமா அணு குண்டுகளுக்கு சமமானதாகும். எனவே இதன் தீவிரத்தன்மையை நீங்களே கற்பனை செய்து பார்க்கலாம்.
மனிதன் உருவாக்கிய நில அதிர்வுமானி (Seismograph) கூறும் கணித வரைபடத்தின் நுட்ப சேதிகளைக் கூட முழுமையாக மனிதனால் புரிந்து கொள்ள முடியாததுதான் மிகப் பெரிய சோகம்.

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 13

சந்திர காலண்டர்



காலண்டர் முதன் முதலில் பண்டை காலத்து மனிதர்கள் (bronze age) இரவு பகல் மாறிவருவதை வைத்து நாட்களை வகைப் படுத்தினாலும், சந்திரனின் சுழற்சியை வைத்து மாதங்களை எலும்புகளில் குறித்து வந்தார்கள் என்று அறியமுடிகிறது.

சந்திரக் காலண்டரை முறையாகப் பயன்பாட்டுக்கு முதலில் கொண்டுவந்தது மெஸபடோமியர்கள் (கி.மு.2800) என்றும் பண்டைய எகிப்தியர்கள் என்றும், ரோமானியர்கள் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.
சந்திரன் ஒருமுறை பூமியைச் சுற்றிவர எடுத்துக் கொள்ளும் காலம் 27.321582 நாட்கள்(27D 7Hr 43.1Min) என்று கணக்கிடப்பட்டுள்ளது.
...என்றாலும் பூமியுடைய சுழற்சி, பூமியின் சுற்றுப்பாதை இவைகளினால் சந்திரன் ஒரு முழு சுற்று பெற (The synodic month) 29.530589 நாட்கள் (29D 12Hr 44min 2.9 s) ஆகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு வருடம் முழுமைபெற அது எடுத்துக்கொள்ளும் காலம் 354.375 நாட்கள். இதெல்லாம் வானவியல் கணக்கு, இது நமக்கு தேவையில்லை.

ஒரு பிறைக்கும் மறு பிறைக்கும் இடைப்பட்ட காலம் சரியாக 29/30 நாட்கள் வராததால், ஒரு மாதம் 29 ஆகவும் மறு மாதம் 30 ஆகவும் கணக்கிடப்படுகிறது. ஆக ஒரு வருடத்துக்கு 354 அல்லது 355 நாட்களைக் கொண்டுள்ளது.
நபி பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்துக்கு முன்பிருந்தே சந்திரக் காலண்டரை அரேபியர்கள் பின்பற்றி வந்துள்ளனர். அந்த அடிப்படையிலேயே ஹஜ் உள்பட அவர்களுடைய எல்லா செயல்களும் நடைபெற்று வந்தன. இதில் எந்த மாற்றம் ஏற்படாமல் இஸ்லாத்தின் எல்லா செயல்களும் இறை உத்திரவுகளும் அமையப் பெற்றுள்ளன.
பெருமானார் (ஸல்) அவர்களும் அப்படித்தான் செயல்பட்டு வந்தார்கள். இன்று வரை அனைத்து முஸ்லிம்களும் மார்க்க சம்பந்தப்பட்ட அனைத்துக் காரியங்களையும் ஹிஜ்ரி காலண்டரை பின்பற்றியே செயல்பட்டு வருகிறார்கள்.

ஒரு முறை நபி(ஸல்) அவர்களிடம் சில யூதர்கள் வந்து,
" முஹம்மதே, குகை மனிதர்கள் 300 ஆண்டுகள் இருந்ததாக இன்ஜீல் கூறுகிறது. உங்கள் குர்ஆனில் 300 ம் பின் ஒரு 9 வருடங்கள் இருந்ததாக கூறப்படுகிறது. குர்ஆன் அல்லாஹ் இறக்கியதாக சொல்கிறீர்கள்.
இன்ஜீலும் அல்லாஹ் இறக்கியிருக்கும்போது உங்களுக்கு ஒரு மாதிரியாகவும் எங்களுக்கு ஒரு மாதிரியாகவும் எப்படி சொல்ல முடியும்? இதில் எது உண்மை? என்ற வினாவை வைத்தனர்.
அப்போது அருகிலிருந்த அலி (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அனுமதிபெற்று,
“சூரியனைப் படைத்தவனும் அல்லாஹ்தான் சந்திரனைப் படைத்தவனும் அல்லாஹ்தான், உங்களுக்கு சூரிய கணக்குப்படி சொல்லியிருக்கிறான். எங்களுக்கு சந்திர கணக்குப்படி சொல்லியிருக்கிறான்” என யாருடைய மனமும் புண்படாதவாறு சரியான விளக்கத்தை அளித்தார்கள்.
ஒரு சர்ச்சைக்குரிய விஷயத்தை மிக எளிமையாக பதிலுரைத்து தெளிவுபடுத்தியுள்ளார்கள் அலி (ரலி) அவர்கள்.
ஹிஜ்ரி காலண்டர் முஸ்லிம்களிடமிருந்து அந்நியமாக்கவும் மறக்கடிக்கவும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.
இப்போதுள்ளவர்களில் குறிப்பாக பெண்கள் அரபி மாசத்தை சரிவர புரிந்து வைத்திருந்தாலும், வயதானப் பெண்களுக்கு மாதங்களின் பெயர் தெரியாவிட்டாலும், அந்தந்த பகுதியில் நடக்கும் கந்தூரியை வைத்து மாதங்களின் பெயர்களைத் அறிந்து வைத்திருந்தார்கள்.
1) முஹர்ரம் – ஆஷுரா மாசம்
2) சஃபர் – அப்பா கந்தூரி(சதக்கத்துல்லாஹ் அப்பா கந்தூரி)/சபர் மாசம்
3) ரபியுல் அவ்வல் – ரசூலுல்லாஹ் மவுலிது மாசம்
4) ரபியுல் ஆகிர் – முஹைதீன் ஆண்டவர் மாசம்
5) ஜமாத்துல் அவ்வல் – முத்துப்பேட்டை கந்தூரி மாசம்
6) ஜமாத்துல் ஆகிர் – நாகூர் கந்தூரி மாசம்

7) ரஜப் – மெஹ்ராஜ் மாசம் / அஜ்மீர் காஜா மாசம்
😎ஷஹ்பான் – பராத்து /வராத்து மாசம்
9) ரமலான் – நோன்பு மாசம்
10) ஷவ்வால் – நோன்புப் பெருநாள் மாசம்
11) துல் கஃதா – ஏர்வாடி கந்தூரி மாசம்
12) துல் ஹஜ்ஜு – ஹஜ்ஜுப் பெருநாள் மாசம்
இம்மாதங்களை வைத்து அந்தந்த மாதங்களில் ஹத்தம் ஃபாத்திஹா ஓதி இரண்டுமூன்று ஏழைகளுக்கு சோறு கொடுத்துவந்தார்கள். வஹாபிசம் வந்தபிறகு இது மறையத் தொடங்கியுள்ளதால் ஏழைகளுக்கு கிடைத்துக்கொண்டிருந்த இறைச்சிக் கறி நெய் சோறு கிடைக்காமல் போனது.


தாய்மார்களின் கர்ப்பம் கூட மேற்கண்ட மாத பெயர்களில் கணக்கிட்டார்கள் . கர்ப்பம் என்பது கர்ப்பமுறுதலில் இருந்து குழந்தைப்பேறு வரை உள்ள காலகட்டம் ஆகும். கருமுட்டை விந்தணுவால் சினைப்படுத்தப்பட்ட பின் அது கருப்பையின் உட்புறத்தில் பதியமாகி நஞ்சுக்கொடியாகவும் முளையமாகவும் (முதிராக்கரு) பின் முதிர்கருவாகவும் உருவாகிறது.

கர்ப்ப காலம் பெண்ணின் இறுதி மாதவிடாயின் முதல் நாளில் தொடங்கி, பொதுவாக 40 வாரங்கள் நீடிக்கின்றன. 40 வாரம் என்பது 280 நாட்கள். சந்திர கணக்கின்படி 28 நாட்கள் கொண்ட பத்து மாதம்.
‘சந்திரனின் வளர்பிறையையும் தேய்பிறையையும் முறையாக தொடர்ந்து பார்க்கக் கூடிய ஒருவரால் அதன் தோற்றத்தை வைத்தே தேதியை கூறிவிட முடியும் எனும் அளவிற்கு எளிதான நாட்காட்டி அது.
படகோட்டிகளும் விவசாயிகளும் இன்றும் இதற்கு சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட எளிதான சந்திரக் காலண்டர் இன்று முஸ்லிம்களிடம் அந்நியமாகி வருவது பெரும் வேதனைக்குரியதும் ஆபத்தானதுமாகும்’

கடல் ஆமைகளின் ஓட்டில் சந்திர காலண்டரை இறைவன் பதித்து , பிரபஞ்சம் படைக்கப்பட்ட நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை 12தான் என்பதை தன் திருக்குர்ஆனிலும் பதித்தான் .
اِنَّ عِدَّةَ الشُّهُوْرِ عِنْدَ اللّٰهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِىْ كِتٰبِ اللّٰهِ يَوْمَ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ مِنْهَاۤ اَرْبَعَةٌ حُرُمٌ ذٰ لِكَ الدِّيْنُ الْقَيِّمُ ۙ فَلَا تَظْلِمُوْا فِيْهِنَّ اَنْفُسَكُمْ وَقَاتِلُوا الْمُشْرِكِيْنَ كَاۤفَّةً كَمَا يُقَاتِلُوْنَكُمْ كَاۤفَّةً وَاعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ مَعَ الْمُتَّقِيْنَ
நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை (ஓர் ஆண்டுக்கு) பன்னிரண்டுதான். (இவ்வாறே) வானங்களையும், பூமியையும் படைத்த நாளிலிருந்து அல்லாஹ்வின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.(அல்குர்ஆன் : 9:36)

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 14

(மூன்றாம் விதி)



நியூட்டனின் மூன்றாவது விதியானது "ஒவ்வொரு வினைக்கும் (action) அதற்கு இணையான எதிர் வினை (reaction) உண்டு." என்று கூறுகின்றது. ஐசக் நியூட்டன் தான் 1687 ஆம் ஆண்டில் இலத்தீன் மொழியில் எழுதிய 'பிரின்சிப்பியா மாத்தமாட்டிக்கா' என்னும் நூலில் இந்த விதி கூறுகிறார்

"எல்லா விசைகளும் இரட்டையாக உள்ளன, அவ்விரு விசைகளும் அளவில் இணையாகவும், திசையில் எதிரெதிராகவும் இருக்கும் "
தமிழில் திருவள்ளுவர் இந்த விசைகளை வினையாக உருவகப்படுத்தி , "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா பிற்பகல் தாமே வரும் " என்கிறார்

முற்பகலில் மற்றவருக்கு துன்பமானவற்றைச் செய்தால், அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில் துன்பங்கள் தாமாக வந்து சேரும்.
பத்தாம் நூற்றாண்டில் சீனத்துவ தத்துவத்தில் " யின் - யாங் " என்கிற தத்துவம் மிகப் பெரிய தத்துவ தாக்கத்தை ஏற்படுத்தியது.(குர்ஆன் ஆறாம் நூற்றாண்டிலேயே அருளப்பட்டது என்பதை கவனிக்கவும்)
" யின் - யாங் " தத்துவம் என்பது எதிர்மறைகளைப் பற்றி அவதானிப்பது.அதாவது உலகின் ஆதார உண்மையில் "யின் - யாங் " என்கிற எதிர்மறை சிந்தனை இருக்கிறது .அதுதான் உண்மையின் இரு வேறு வடிவங்கள் .
"யன் - யாங் " என்பது உண்மையின் இரட்டை நிலையின் குறியீடு .சீனர்கள் யின், யாங் என்று இருவித சக்திகளைச் சொல்கிறார்கள். இதைப்பற்றிய படத்தைப் பாருங்கள். இதுதான் பிரபஞ்சத்தின் சக்தியைக் காட்டும் ஓர் அடையாளக் குறியாகக் குறிப்பிடுகிறார்கள்.
வெளியில் உள்ள வட்டம் உலகிலுள்ள அனைத்தையும் குறிப்பிடுகிறது. கருப்பும் வெள்ளையும் இரண்டு விதமான சக்திகளைக் குறிக்கிறது.
“யின்'' எனும் கருப்பு நிறமும் "யாங் " எனும் வெள்ளை நிறமும் சேர்ந்துதான் உலகின் பல செயல்களும் சரிவர நடக்கக் காரணம் என்று சொல்லப்படுகிறது.
கருப்பும், வெள்ளையும் ஒன்றுக்கொண்டு மாறுபாடானதல்ல. ஒன்றைச் சார்ந்துதான் மற்றொன்றின் செயல்பாடுகள் நடந்து வருகின்றன. இப்புவியில் உள்ள அனைத்திலும் இவ்விருவித சக்திகளும் அடங்கியுள்ளன.
உதாரணமாக வெளிச்சம் என்பதை அறியவேண்டுமாயின், இருட்டும் இருக்கத்தானே வேண்டும்? இல்லையெனில் வெளிச்சம் என்று ஒன்றைத் தனியாக எப்படி அறிய முடியும்?
சூரியன் X சந்திரன்
வான் x பூமி
நன்மை X தீமை.
அழகு X குரூரம்,
நிஜம் X பொய்,
ஆண் X பெண்,
இரவு X பகல் ,
சந்தோஷம் X துக்கம்
இடது X வலது....... சொல்விக் கொண்டே போகலாம் .
அட , கம்ப்யூட்டர் ஆதாரமாக இந்த இரட்டை - பைனரி (0, 1) வடிவத்தில்தான் கணக்கே போடுகிறது.
" யின் - யாங் "குறிப்பிட ஒரு வட்டத்தை கருப்பு - வெள்ளையாக இரண்டு பகுதிகளாக பிரித்து அதற்கு வடிவம் கொடுத்தார்கள் கொரிய தேசத்துதேசியக் கொடியில் இந்த வட்டம் இருக்கிறது .
இந்த வடிவத்தின் இரு பகுதிகளும் முழுவதும் கருப்போ வெளுப்போ இல்லை. வெண் பகுதியில் ஒரு கருப்புப் புள்ளியும் .கருப்புப் பகுதியில் ஒரு வெண்புள்ளியும் உள்ளது.
ஒவ்வொரு நல்ல காரியத்திலும் கொஞ்சம் கெடுதல் இருக்கத்தான் இருக்கிறது. ஒவ்வொரு அழகிலும் சிறிது அழுக்கு, ஒவ்வொரு குரூரத்திலும் சிறிது அழகு .
'அழகு' என்று நாம் பிரித்துப் பார்க்கும் போதுதான் அவலட்சணத்தை சிருஷ்டிக்கிறோம்
உண்மையை கேட்கும் போதுதான் இதில் பொய்யின் பங்கு எவ்வளவு சிந்திக்கிறோம் .
இந்த எதிர்மறையெல்லாம் கடந்து சிந்திக்கும் போது இவையெல்லாம் தனிப்பட்ட அனுமானங்கள் அல்ல , எல்லாமே ஒரே நித்தியத்தின் இரண்டு பக்கங்கள் . ஒரே முழுமையின் இரண்டு வர்ணனைகள் என்பதே .
இந்த முரண்பாடுகளின்படி, இந்த இடத்தில் ‘ஒரு வினை’ என்பதை நாம் முதலில் ‘துன்பமாக’ எடுத்துக் கொண்டாலும் சரிதான்; அதன் எதிர்வினை இன்பமாகத் திரும்பவும் வாய்ப்பிருக்கிறதுதான்.
ஆனால், நாம் உலகியலின்படி பார்த்தோம் என்றால் மனிதன் துன்பத்தைவிட இன்பத்தையே அதிகம் விரும்புகிறான். அவனது துன்பங்கள்கூட இன்பம் தேடும் முயற்சியில்தான் விளைகின்றன. எனவே ‘வினை’ என்பதை நேர்மறையாகவும், ‘எதிர்வினை’ என்பதை எதிர்மறையாகவும் எடுத்துக் கொள்ளலாம்.
திருக்குர்ஆனிலும் மனித வாழ்வின் நித்தியத்தை சொல்லும் போது துன்பத்துடன் இன்பம் இருக்கிறது என்கிறான் இறைவன்.
فَاِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ۙ
ஆதலின் நிச்சயமாகத் துன்பத்துடன் இன்பம் இருக்கிறது.
اِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا
நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது.
(அல்குர்ஆன் : 94:5 ,6)
மேலும் இறைவன் இந்த எதிர்மறைகளை மிகத் துல்லியமாக கணக்கிட்டு தன்னுடைய திருக்குர்ஆனில் அருளியுள்ளான்
வானவர்கள் - 68 x சைத்தான் - 68
இப்லீஸ் _11 x இறை உதவி - 11
செயல் (ஃபஅல) - 108 X கூலி (அஜ்ரு) _108
துன்பம் (ஷித்தத்) - 102 X பொறுமை - (ஸப்ரு) 102
நஃபா (பயன்படும் தன்மை) -50 X ஃபசாத் (குழப்பம்) - 50
ஹர் (வெப்பம்) -14 X பர்த் (தட்பம்) -14
துன்யா - 115 X மறுமை - 115
களிமண் (தீன்) - 12 X இந்திரியம் (நுத்பா) - 12
வாழ்வு (ஹயாத்) - 145 X இறப்பு (மௌத்) - 145

நன்மை (ஸாலிஹாத்) -167 X தீமை (ஸய்யீஅத்) - 167
துன்பம் (முஸீபத்) - 75 X நன்றி (ஷுக்ரு) - 75
இவைகள் மட்டுமல்ல குர்ஆனின் எல்லா வார்த்தைகளுமே நேர்ரெதிரே சமன் செய்யப்பட்டுத்தான் அருளப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அதனால்தான் குர்ஆனுக்கு " பிரிதறியக் கூடிய வேதம்" என்ற பெயரும் உண்டு.
இன்னும் பிரபஞ்சத்தின் எல்லா அம்சங்களுமே நேர் எதிராக மிக துல்லியமாக கணக்கிட்டுதான் நம்மோடு பேசப்படுகிறது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டாமா ? இவை அனைத்தையுமே ஒன்று கூட விடாமல் தன் திருமறையில் எடுத்தியம்யிருப்பதை...
اَفَلَا يَتَدَبَّرُوْنَ الْقُرْاٰنَ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللّٰهِ لَوَجَدُوْا فِيْهِ اخْتِلَافًا كَثِيْرًا
இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் பல (தவறுகளையும்) முரண்பாடுகளை(யும்) அவர்கள் காண்பார்கள். (அல்குர்ஆன் : 4:82)

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 15

(மின்னல்)



மின்னல் எப்படி உருவாகிறது? என்ற கேள்விக்கு பலர் விடையளிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையா? இல்லையா? என்பது குறித்து அறிவியல் சொல்லும் காரணங்களை பார்க்கலாம்.

முதன் முதலாக அமெரிக்காவைச் சேர்ந்த அறிவியலாளர் பெஞ்சமின் பிராங்கிளின் மின்னல் எப்படி உருவாகிறது? என்பதையும், அதில் மின்சாரம் இருக்கிறது என்பதையும் நிறுவ முயன்றார்.
அதற்காக மழைபெய்யும் போது பட்டம் ஒன்றை செய்து அதனுடன் உலோக கம்பியை இணைந்து பரிசோதனை மேற்கொண்டார். அப்போது, மின்னல் அடிக்கும்போது உலோக கம்பி வழியே அதிர்வை உணர்ந்த அவர், மின்சாரம் இருகிறது என்பதை உறுதி செய்தார். மின்சாரம் பலமாக அவரை பலமாக தாக்கியதா என்பது குறித்து தகவல் இல்லை .

குளிர்ச்சியான மற்றும் வெப்பமான காற்று மேகக்கூட்டங்களில் இருக்கும். இரண்டும் ஒன்றோடொன்று சந்திக்கும்போது வெப்பக் காற்று மேலே சென்று இடியை உருவாக்கும் மேகங்களை உருவாக்குகிறது.
குளிர்ச்சியான காற்று பனிப்படிகங்களாக மேகத்தில் இருக்கும். பேட்டரியைப்போல் பிளஸ்(+) மற்றும் மைனஸ்(-) முனைகளைப் பெற்றிக்கும் அந்தக் மேகக் கூட்டங்கள், மழைக்காலத்தில் காற்று வேகமாக அடிக்கும்போது ஒன்றோடொன்று உரசிக்கொள்ளும்.
“(உங்களுக்கு) பயத்தையும், ஆதரவையும் தரக்கூடிய மின்னலை அவனே உங்கள் முன் பிரகாசிக்கச் செய்கிறான். (மழையை) சுமந்த பளுவான மேகங்களையும் அவனே உண்டாக்குகிறான்.’’ அல்குர்ஆன் 13:12
மேல் பகுதியில் இருக்கும் நேர்மறை ஆற்றல், கீழ் பகுதியில் இருக்கும் எதிர்மறை முனைக்கு ஆற்றலைக் கடத்தும்போது மின்னல் வெளிப்படுகிறது. இந்த நிகழ்வின்போது உருவாகும் சூடான காற்று பலத்த சத்தத்துடன் இடியை உருவாக்குகிறது.
அப்போது திறந்தவெளியில் இருக்கக்கூடாது. மரங்களுக்கு அடியில் நிற்கக்கூடாது. ஏனென்றால் பச்சை மரங்கள் மின்கடத்தியாக இருப்பதால், மின்சாரம் அதன்வழியே நிலத்தில் இறங்கும்.
மழை பெய்யும்போது நீச்சல் அடித்துக்கொண்டிருந்தால், நீரில் இருந்து வெளியேறிவிட வேண்டும். மழை வருவதற்கு சிறிது நேரம் இருப்பதாக கருதினாலும், மின்னல் முன்கூட்டியே வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன.கட்டடங்களுக்குள் இருப்பது பாதுகாப்பானது.
வீட்டில் இருக்கும் மின்சாதனங்களை உடனடியாக ஆஃப் செய்துவிடுவது பாதுகாப்பானது. குறிப்பாக, மொபைல் போன் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இரும்பு உள்ளிட்ட பொருட்களை இடி இடிக்கும்போது எடுத்துச் செல்ல வேண்டாம்.


மழைக்காக பயன்படுத்தும் குடை கூட ஆபத்தானது. ஆய்வாளர்களின் கூற்றுப்படி, நம் கண்களுக்கு ஒரே ஒருமுறை மட்டும் மின்னல் தெரியலாம். ஆனால், அவை நொடிப்பொழுதில் தொடர்ச்சியாக 25 முறைவரை கூட மின்னும் என கூறுகின்றனர். இதனால் ஏற்படும் இடி மிகவும் பயங்கரமானதாக இருக்கும், கண்ணிமைக்கும் நேரத்தில் அவற்றின் செயல்பாடு முடியும் என எச்சரிக்கின்றனர்.
இவ்வாறு காற்று வழியே மின்னூட்டம் பாயும் பொழுது மின்பொறியாய் (தீப் பொறிகளாக) ஒளி விடுகிறது. ஒளிக் கீற்று போல் ஒளி இழைகளாய் தெரியும் பகுதியில் காற்று மின்மயமாக்கப்படுகிறது. ((Ionised) மின்னலின் போது சுமார் 300000c வெப்பம் ஏற்படுகிறது.இவ்வெப்பம் சூரியனின் மேல் பகுதியில் உள்ள வெப்பத்தைப் போன்று மூன்று மடங்கு.

நமது காற்று மண்டலத்தில் 78% நைட்ரஜன் வாயு உள்ளது. சுமார் 21% ஆக்ஸிஜன் உள்ளது. மின்னலின் போது ஏற்படும் வெப்பமானது காற்றில் உள்ள நைட்ரஜனில் கடினமான அணுக்களை உடைத்து ஆக்சிஜனுடன் சேர்ந்து நைட்ரஜன் சேர்மங்களான அமோனியா, நைட்ரேட், நைட்ரஸ் ஆக்ஸைடாக மாற்றுகிறது.
இவை உயிர் உள்ள தாவரங்கள், மிருகங்கள், மனிதர்களுக்குத் தேவையான அமினோ அமிலம், புரோட்டின், டி.என்.ஏ. உற்பத்திக்கு மிக அவசியமான ஒன்றாகும்.
இப்படி மின்னலினால் உண்டாகும் இயற்கை உரமான அமோனியா நைட்ரேட்கள் வருடத்திற்கு 10 மில்லியன் மெட்ரிக் டன்னாக உள்ளது என்று ஆய்வுகள் கூறுகின்றன. இந்த இயற்கை உரங்கள் மழை நீரில் கலந்து பயிர்கள் தாவரங்களில் சேர்ந்து நல்ல விளைச்சலைக் கொடுத்து நமக்கு ஆதரவாக உள்ளது.
“(உங்களுக்கு) பயத்தையும், ஆதரவையும் தரக்கூடிய மின்னலை அவனே உங்கள் முன் பிரகாசிக்கச் செய்கிறான்.
குர்ஆன் (13:12)
மின்னலைப் பற்றி படிக்கும் அறிவியல் ஃபுல்மினாலஜி ஆகும்.
மின்னலால் உண்டாகும் பயம் பேரச்சம் ஆஸ்ராஃபோபியா என்று அழைக்கப்படுகிறது.
இடியினால் உண்டாகும் பயத்திற்கு பரான்டோஃபியா என்பதாகும்.

(பிரபஞ்சத்தின் மொழி கணிதம் இத்துடன் நிறைவு பெறுகிறது)

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 1

(விஞ்ஞானத்தின் விளிம்பும், மெஞ்ஞானத்தின் விரிபும்)



நாம் வாழும் உலகத்தைப் பற்றிய உண்மைகளை விளக்குவதே விஞ்ஞானத்தின் குறிக்கோளாகும் .
" விளக்கம் " என்ற சொல் உண்மைப் பொருளைக் கண்டறிய முன்னேறும் ஒவ்வொரு படியிலும் சுருங்கிக் கொண்டே வருகிறது .அதாவது , உண்மையை அதிகமாக அறிய, அறிய அதை விளக்கிச் சொல்வது கடினமாகிக் கொண்டே போகிறது . மின்சாரம் , காந்தம் , ஈர்ப்பு சக்தி போன்ற பதங்களை விஞ்ஞானம் உண்மையில் விளக்க முடியாது . அந்த இயற்கைச் சக்திகளை முன்கூட்டியறியவோ , அச்சக்திகளின் இயக்கங்களை அளந்து சொல்லவோதான் விஞ்ஞான அறிவு பயன்படுகிறதே தவிர , அச்சக்திகளின் ஆரம்பம் என்ன என்பதைப் பற்றியோ , அவற்றின் கடைசி நிலை என்ன என்பதைப் பற்றியோ விஞ்ஞான அறிவால் ஒன்றும் கூறமுடியவில்லை .

தற்கால விஞ்ஞான ஆய்வாளர்களின் பெரும்பாலோர் அந்த மாயாஜால இயற்கைச் சக்திகள் ' உண்மையில் என்ன ' என்பதைக் கண்டு பிடிக்கவே முடியாது என்று அவ்வாராய்ச்சி எண்ணத்தையே ஒதுக்கி தள்ளிவிட்டார்கள் .
பெர்ட்ரண்டு ரஸ்ஸல் என்னும் அறிஞர், மின்சாரம் என்றால் என்ன என்பதற்கு , "மின்சாரம் என்பது ஸெயிண்ட் பால்ஸ் கதீட்ரல் மாதா கோயிலைப் போல் ஒரு பொருள் அன்று .
மின்சாரத்தில் பொருள்கள் இவ்வாறு இயங்கும். பொருள்களில் மின்சக்தியைச் செலுத்தினால் அவை இம்மாதிரியான மாறுதலையடையும் , இந்த இந்த சந்தர்ப்பங்களில் பொருள்களில் மின்சக்தியைப் பாயவிட முடியும் , என்பது போன்ற விஷயங்களை நாம் பிறருக்குச் சொல்லத்தான் முடியுமே தவிர , ' மின்சாரம் ' என்பது என்ன என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லவே முடியாது " .
இவ்வாறு, விஞ்ஞான அறிவு " எப்படி ? " என்ற கேள்விக்கே பதில் கொடுத்தது ; ஆனால் " ஏன் ? " என்ற கேள்விக்கு அது பதில் கொடுக்க முடியவில்லை.
அரிஸ்டாடில் என்ற கிரேக்க தத்துவஞானி , இயற்கைச் சக்திகளால் ஏற்படும் பிரச்சனைகளில் " எப்படி " என்ற கேள்விக்கு மாத்திரம் பதில் கொடுக்க முற்பட்டார் . ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் துவங்கிய அவருடைய முயற்சியின் லட்சியம் இயற்கைப் பிரச்னைகளின் "ஏன்" என்ற கேள்விக்குப் இன்னும் பதில் யாராலும் கொடுக்க முடியவில்லை .

விஞ்ஞானம் என்பது முழுமையான ஞானம் அல்ல... அது ஒரு விதமான சிந்திக்கும் முறை. மேகங்களைப் பற்றி , மழை பொழிவதைப் பற்றி, குழந்தைப் பிறப்பதைப் பற்றி , நேற்று சாப்பிட்ட சோறு , இன்று எப்படித் தண்ணீர் குழாய் பைப் அடிக்கத் தெம்பாக மாறுகிறது என்பது பற்றியெல்லாம் சிந்திக்க வைத்து, பரிசோதனைகள் மூலம் பதில் கண்டுபிடிப்பதுதான் அதன் குறிக்கோள்.
விஞ்ஞானம் சில 'ஏன் 'களுக்கு பதில் சொன்னாலும் , பல 'ஏன் 'களுக்கு அதனிடம் பதில் இல்லை. உதாரணமாக.. சூரியன் ஏன் வட்ட வடிவில் இருக்கிறது ஏன் முக்கோண வடிவத்தில் இருக்கக் கூடாது ? பதில் சொல்ல முடியாது . 'எப்படி' என்று கண்டுபிடிப்பதில்தான் விஞ்ஞானத்துக்கு ஆதாரமான பூரிப்பு ஏற்படுகிறது!
ஆகவே , நம்மால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளவே முடியாது.பால் வீதி (Milky Way) என்றழைக்கப்படும் நம்முடைய கேலக்ஸியில் மட்டுமே கோடிக்கணக்கில் நட்சத்திரங்களும் , கிரகங்களும் இருக்கின்றன. இப்படிக் கோடிக்கணக்கான கேலக்ஸிகள் இருக்கின்றன ! இவையெல்லாம் அறிவது மனிதனின் நேற்றைய _ இன்றைய _ நாளைய ஏன் , மனிதனின் ஒட்டு மொத்தமான சரித்திர காலத்தில் கூடச் சாத்தியமில்லை.
" வானங்களையும், பூமியையும், இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் வீணுக்காக நாம் படைக்கவில்லை" குர்ஆன்: 38:27


ஆனால் மெஞ்ஞானிகள் படைப்புகளைப் பற்றிய சிந்தனையில் மிக எளிதாக கடந்து செல்கிறார்கள்
"மவ்ஜூதாத்" என்ற சொல் சிருஷ்டிகள் அனைத்தையும் உள்வாங்கிய ஒரு சொல்லாகும்.
இவையாவும் "வுஜூத்" உள்ளமையின் புறத்தால் அல்லாஹ் தானானவைகளேயாகும். (அவனுக்கு வேறானவை அல்ல) எனினும் தனித்தனியாகக் குறிப்பிடும் போது அல்லாஹ் அல்லாதது சிருஷ்டி எனப்படும். அவைகள் கூட அவனின் வெளிப்படையாகும்.
"ஙெய்ரிய்யத்" வேறு என்பது கூட வெளிப்படையான கவனிப்பைக் கொண்டதேயாகும். எனினும் எதார்த்தத்தில் சிருஷ்டிகள் யாவும் அல்லாஹ்தானானவையாகும்.
குமிழி, அலை, பனிக்கட்டி (ஐஸ்), என்பன போன்று. இவை மூன்றும் எதார்த்தத்தில் நீரையன்றி அதற்கு வேறானதல்ல. எனினும் தனித்தனி குறிப்பை கவனித்து நீருக்கு வேறானவைதான்.
"ஸறாப்" கானல் நீர் போன்றுமாகும். கானல் நீர் எதார்த்தத்தில் ஆகாயம் தானானதேயன்றி அதற்கு வேறானதல்ல. எனினும் வெளிப்படைக் குறிப்பு என்ற வகையில் அது ஆகாயத்திற்கு வேறானதே. கானல் நீர் என்பது எதார்த்தத்தில் ஆகாயத்தின் வெளிப்பாடுதான்.
இதன் சுருக்கம் என்னவெனில் படைப்புகளும் – பிரபஞ்சம் யாவும் – "வுஜூத்" உடைய புறத்தால் அதாவது உள்ளமை என்ற அடிப்படையில் "அல்லாஹ்"தான். ஆயினும் "தஅய்யுன்" குறிப்பு என்ற வகையில் அது வேறானதேயாகும். வேறு என்பது கூட கணிப்பின் படியேதான். எதார்த்தம் என்னவெனில் பிரபஞ்சம் எல்லாம் அல்லாஹ்தான். குமுழி, அலை, ஐஸ் என்பன போன்று. இவையாவும் நீரேயன்றி வேறல்ல. இவ்வாறுதான் கானல் என்பதுமாகும்.
மேற்கண்ட கருத்தின்படி சிருஷ்டி என்று சொல்லப்படுகின்ற எதுவாயினும் அது அல்லாஹ்வின் "வுஜூத்" உள்ளமைக்கு வேறானதே இல்லை.

அலை என்பது நீர்தானேயன்றி அதற்கு வேறானதல்ல. குமிழி என்பதும் இவ்வாறுதான். அது நீருக்கு வேறானதல்ல. ஐஸ்கட்டி என்பதும் இவ்வாறுதான். அது நீருக்கு வேறானதல்ல. "ஸறாப்" எனும் கானல் நீரும் இவ்வாறுதான். அது ஆகாயத்திற்கு வேறானதல்ல.
சகல படைப்புகளுக்கும் மூலம் – கரு – என்பது அல்லாஹ்வின் "வுஜூத்" என்ற உள்ளமைதான் வேறொன்றல்ல.
மோதிரத்துக்கு தங்கம் மூலம் என்றால் மோதிரம் என்பது தங்கம் தானானதேயன்றி அதற்கு வேறானதல்ல. அலைக்கு நீர் மூலம் என்றால் அலை என்பது நீர் தானானதேயன்றி அதற்கு வேறானதல்ல. நூலுக்கு பஞ்சு மூலம் என்றால் நூல் என்பது பஞ்சு தானானதேயன்றி அதற்கு வேறானதல்ல.
இந்த "வஹ்தத்துல் வுஜூத்" ஞானம் பற்றிக் கூறிய தற்கலைவாழ் அற்புத வலிய்யுல்லாஹ் பீர் முஹம்மது றஹ்மதுல்லாஹ் அவர்கள் பாடியுள்ளார்கள்.

மண்ணால ஆனதெல்லாம் மண் எடுத்த கோலமது
மண்ணையன்றி வேறுள்ளதோ யா ஹய்யு யாகையூமே!
பொன்னால ஆனதெல்லாம் பொன் எடுத்த கோலமது
பொன்னையன்றி வேறுள்ளதோ யா ஹய்யு யாகையூமே!
பஞ்சால ஆனதெல்லாம் பஞ்செடுத்த கோலமது
பஞ்சையன்றி வேறுள்ளதோ யா ஹய்யு யாகையூமே!

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 2

(ஒளியும், நிழலும்)



ஒளி என்பது ஓர் இயற்கைச் சக்தி. பிரபஞ்ச வெளியெங்கும் இச்சக்தி சஞ்சாரம் செய்கின்றது. மற்ற இயற்கை சக்திகளைப் போல இதுவும் அலை வடிவங்களாகவே சஞ்சரிக்கின்றது என்ற கொள்கை இன்னும் இருந்து வருகிறது
இக்கொள்கைக்கு தக்க முகாந்திரங்களும் கண்கூடாகக் காட்டப்படுகின்றன. ஒளிக்கதிர்கள் ஒளிப்புகாத ஏதேனும் ஒரு பொருளின் மேல் விழுந்தால் , அப்பொருளின் பின்புறத்தில் அதன் நிழல் ஏற்படுகின்றது.
ஒளி அலைகள் அப்பொருளை ஊடுருவிச் செல்ல முடியாதாகையால் அப்பொருளின் பின்புறத்தில் ஒளிக்கதிர்கள் படாத இருண்ட இடம் உண்டாகிறது. இதே நிழல் என்று கூறுகிறோம்.
இதே ஒளிக்கதிர்களின் மத்தியில் ஒரு மெல்லிய கம்பியை வைத்தால் , அந்தக் கம்பியில் நிழல் ஏற்படுவதில்லை . ஏன் ?
ஒரு பெரிய ஆறு ஓடி வருகிறது. அது ஓடிவரும் இடத்தில் மேடான ஒரு பிரதேசம் குறுக்கிடுகின்றது. ஆறு அவ்விடத்தில் பிரிந்து இரண்டாகச் சென்று விடுகின்றது. அதே ஆற்றின் மத்தியில் ஒரு சிறிய திட்டு குறுக்கிடுகின்றது. ஆற்றின் நீர் அலைகள் அத்திட்டில் விலகி மறுபடியும் ஒன்று சேர்ந்து விடுகின்றன !
இதேபோல் ஒளி அலைகள் குறுக்கிடும் மிகச்சிறிய பொருள்களை அவ்வலைகள் தாண்டி மறுபடியும் ஒன்றுகூடி விடுகின்றன. ஆகையால் அச்சிறு பொருளின் நிழல் ஏற்படவில்லை !
பெரிய வட்ட வடிவமான தகட்டின் மேல் ஒளிக்கதிர்கள் படும்போது அத்தகட்டின் நிழல் தகட்டின் பின்புறத்தில் ஏற்படுகின்றது. அதே தகட்டை கொஞ்சம் கொஞ்சமாக சிறிதாக்கிக் கொண்டே வந்தால் அச்சிறிய தகட்டின் நிழல் நல்ல கரிய நிழலாய் இல்லாமல் ஒளியும், இருளும் கலந்த கலப்பாகத் தென்படும் !
இதிலிருந்து ஒளிக்கதிர்கள் அலைகளாகத்தான் சஞ்சரிக்கின்றன என்ற முடிவுக்கு வந்து விடலாம்.
"அல்லாஹ் படைத்தவற்றில் முதலாவது என்னுடைய பேரொளியாகும் அப் பேரொளி யில் இருந்தே இறைவன் தன் படைப்புகள் அத்தனையும் படைத்தான் எனவே தான் " லவ்லாகலமா ஹலக துல் அஃ ப்லாக " (நீர் இல்லையானின் வானங்களைப் படைத் திருக்க மாட்டேன்) என்ற திரு வசனமும் வழங்கி வருகிறது " என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் - ஹதீது குத்ஸு
நபி ஸல்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எம்மைப் போன்ற சாதாரண மனிதர் கிடையாது மாறாக மனித புனிதர் அதாவது பஷராகவும் (மனிதராகவும்) யதார்த்தத்தில் நூராகவும் (ஒளியாகவும்) திகழ்கிறார்கள். அதிலும் பஷரை விட நூர் மிகைத்து விட்ட காரணத்தினால் அவர்களின் திருமேனிக்கு நிழலில்லை என்பது உலக அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்ட குறிப்பாக சத்திய கொள்கை அஹ்லுஸ் ஸுன்னாஹ் வல் ஜமாஅத் அகீதாவின் அடிப்படையில் ஓர் உண்மையாகும்.
நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தோற்றம் ஒளியாக இருப்பதாக அல்லாஹுத்தஆலா திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.
இதனை “அல்லாஹுத்தஆலா முதன் முதலில் எனது ஒளியைத்தான் படைத்தான்" என்று கூறி தனது அகமியத்தை வெளிப்படுத்திக் காட்டினார்கள்.
நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஹகீகத் ஒளியாய் இருப்பதனால் அவர்களின் திரு உடலுக்கு நிழல் விழுவதில்லை. இதனைப் பல்வேறு ஹதீதுகள், இமாம்களின் கருத்துக்கள் மூலம் கீழே தெரியவருகின்றன.
அன்னை ஆயிஷா ஸித்தீகா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது முனாபிக்குகள் படுதூறு கட்டிப்பேசினர். அப்போது முக்கிய ஸஹாபாக்களிடம் அம்மணி ஆயிஷா நாயகியைப் பற்றி கருத்துக் கேட்டார்கள்.

அன்னையரின் பரிசுத்தத்தை அவர்கள் அனைவரும் பறைசாற்றினர். இச்சந்தர்ப்பத்தில் ஹஜரத் உதுமான் ஙனி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.
"மற்றவர் பாதம் உங்கள் நிழலிலும் படக்கூடாது என்பதற்காக உங்கள் நிழலை பூமியில் விழுவதை அல்லாஹுத்தஆலா தடுத்தான். அப்படியிருக்க அசிங்கத்தை உங்களுடன் சேர்ப்பானா?" என்று கேட்டார்கள்.
நூல்: தப்ஸீர் மதாரிக், பாகம் - 01, பக்கம் - 10304
ஆனால் இறைநேசர்களாகிய அவுலியாக்களை நிழல் என்றே இறைவன் குறிப்பிடுகின்றான்
நபிகள் நாயகம் ﷺ அவர்களின் தீனை உலகெங்கும் கொண்டு சென்றவர்கள் அவுலியா என்ற இவர்களே .இவர்களே நபிகள் நாயகம் ﷺ அவர்களின் உண்மை வாரிசுகள்.பிரதிநிதிகள்.
"உமது இறைவன் புவியில் நிழலை எவ்வாறு பரப்பியிருக்கின்றான் என்பதை நீர் பார்க்கவில்லையா"
- குர்ஆன் (25 : 45) எனவும் ,
"பூமியை நாம் விரிப்பாக்கி அதில் மலைகளை முளைகளாய் ஆக்கவில்லையா ? - குர்ஆன் (78 : 6, 7) இதில் நிழல் (ளில்லு) எனவும் மலை (ஜிபால்) எனவும் குர்ஆனில் கூறுவது இந்த அவுலியாக்களைப் பற்றிய குறிப்பே ஆகும் .
(ரூஹுல் பயான் 4 வது பாகம் 199 பக், 10-வது பாகம் பக் 293)
இப்போது ஒளியையும், நிழலையும் பற்றிய கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு இக்கட்டுரையின் ஆரம்ப தளத்தை மீண்டும் படித்துப் பாருங்கள் .ஒரு புத்தொளியை நீங்கள் பெறுவீர்கள் .

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 3

(கடவுளா.? கணித விதிகளா.. ?)

ஒவ்வொரு மனிதனின் மன உணர்விலும் நுட்பமானதோர் ஒழுங்கு காணப்படுகின்றது. மன உணர்வுகளில் ஏற்படும் அந்த ஒழுங்கின் அர்த்தம் என்ன ?
பிரபஞ்சத்தைப் பற்றிய அடிப்படை உண்மை ஒன்று உண்டு என்பதை தெரிவிக்கும் நுட்ப உணர்ச்சியாக அது இருக்குமோ ?
புலன்களால் பொருள்களை உணரும்போது ஏற்படும் அபிப்பிராயப் பேதங்களைத்தும் மேல்தளத்தில் உண்டாகின்றன.
அவ்வுணவுகளின் அடித்தளத்தில் பொருள்களுடைய உண்மைத்தன்மையின் தெளிவற்ற உருவத்தையாவது ஆராயும் மனம் அறியாமல் இருக்க முடியாது.
பெர்க்கலே, டெகார்ட்டே, ஸ்பைனோஸா போன்ற தத்துவ ஞானிகள் இயற்கையின் இயக்க ஒழுங்கிற்கு காரணம் கடவுளை சார்ந்தது என்கிறார்கள்.
பௌதிக தத்துவ நிபுணர்கள் (விஞ்ஞானிகள்) இயற்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க கடவுளைக் காரணம் காட்ட முற்படாமல் கணித விதிகளை நம்பியிருக்கிறார்கள்.
கணித விதிகளின்படிதான் இந்த மாய பிரபஞ்சத்தின் மர்ம இயக்கங்கள் நடைபெறுவதாகத் திருந்தக் கூறினாலும், எல்லாக் காலங்களிலும், எல்லா சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் பிரபஞ்ச இயக்கங்கள் விதிகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு தெய்வீக சக்தியால்தான் நடைபெறுகின்றன என்ற முடிவுக்கு வரவேண்டிய நிர்பந்தம் தற்கால விஞ்ஞானிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.
ஐன்ஸ்டீன் போன்ற தத்துவ அறிஞர்கள் கணித சுத்தமான சாம்யங்களின் மூலம் இயற்கை விதிகளைக் கண்டறிய முடிவதற்குக் காரணம், இப்பிரபஞ்சம் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஓர் ஒழுங்கின் அடிப்படையில் இயங்கிக் கொண்டு இருப்பதே ஆகும்.
ஆனால் இயற்கையே ஊடுருவிப் பார்க்கும் கணித முறைகள் அதிகரிக்க அதிகரிக்க, பிரபஞ்சத்தை ஆராயும் மனிதனின் பிரமிப்பு அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்த பிரமிப்பு படைத்த பிரம்மனின் சக்தியை இவர்களுக்கு அறிவுறுத்துகிறது.


وَلَٮِٕنْ سَاَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ لَيَقُوْلُنَّ اللّٰهُ ۚ فَاَنّٰى يُؤْفَكُوْنَ
மேலும், (நபியே!) "நீர் இவர்களிடத்தில் வானங்களையும், பூமியையும் படைத்துச் சூரியனையும் சந்திரனையும் (தன் அதிகாரத்தில்) வசப்படுத்திருப்பவன் யார்?" என்று கேட்டால், "அல்லாஹ்" என்றே இவர்கள் திட்டமாக கூறுவார்கள்; அவ்வாறாயின் அவர்கள் (உண்மையை விட்டு) எங்கே திருப்பப்படுகிறார்கள்? (குர்ஆன் : 29:61)
பிரம்மாண்டத்திருக்கும் பரமாணுக்கும் இடையில் இருப்பவன் மனிதன் என்பது தெளிவு.
பிரபஞ்ச சிருஷ்டியில் மிகப்பெரியதாக தோற்றமளிப்பது சிவப்பு நிறமாக காட்சியளிக்கும் ராட்சத நட்சத்திரங்கள், மிக மிகச் சிறியதாக காணப்படுவது மின் அணுக்கள்.
பிரபஞ்சத்தின் மிகப்பெரிய ராட்சத நட்சத்திரத்திற்கும் மிகச்சிறிய மின் அணுவுக்கும் ஏறக்குறைய நடு மையத்தில் பிரபஞ்சத்தின் பிரிதொரு சிருஷ்டியான மனிதன் இருக்கிறான்.
தன்னுடைய புலன்களால் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் இம்மனிதனுக்கு இயற்கையின் முக்கியமான மர்மங்கள் பிரபஞ்சத்தின் மிகப்பெரிய சிருஷ்டிலும் மிகச் சிறிய சிருஷ்டியிலும் மறைந்து கிடப்பதில் ஆச்சரியமில்லை.
உண்மைத் தத்துவத்தின் எல்லைக் கோடுகளாக அமைந்திருக்கும் பிரம்மாண்டத்தையும், பரமாணுயும் விவரிக்க இயலாத நிலையில் வெறும் கணித ரீதியான சாம்ய சம்பந்தங்களைக் கொண்டு மாத்திரம் விஞ்ஞானிகளால் தர்க்கம் செய்து திருப்தி அடைந்து விட முடியாது.
وَلَٮِٕنْ سَاَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ لَيَقُوْلُنَّ اللّٰهُ ؕ قُلِ الْحَمْدُ لِلّٰهِ ؕ بَلْ اَكْثَرُهُمْ لَا يَعْلَمُوْنَ

“வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்? என்று அவர்களிடம் நீர் கேட்பீராயின் அவர்கள், “அல்லாஹ்” என்றே நிச்சயமாக சொல்லுவார்கள்; அல்ஹம்து லில்லாஹ் - எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே” என்று நீர் கூறுவீராக; எனினும், அவர்களில் பெரும்பாலோர் அறியமாட்டார்கள்.
(குர்ஆன் : 31:25)

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 4
(அனந்த கோடி உண்மைகள்)
சூரியனின் ஒளி வெள்ளொளி என்று நம்புகிறோம் முப்பட்டை கண்ணாடி வழியே சூரிய கதிரை செலுத்தும் போது அது வெவ்வேறு கலராக பிரிந்ததும் சூரிய ஒளியில் 7 கதிர்கள் இருக்கின்றன என்கிறோம்
உண்மையில் சூரிய ஒளியில் அல்ட்ரா ரெட் அல்ட்ரா புளு மற்றும் X ரே கதிர் போன்றவை இருக்கின்றன
நம் கண்கள் 0. 00004 cm இலிருந்து 0.00007 cm வரை உள்ள அலை நீளத்தைதான் காணமுடியும் இதற்கு மேலுள்ள கீழுள்ள அலைகளை நம் காணமுடியாது
ஆனால் பூச்சிகளின் கண்களுக்கு அல்ட்ரா கதிர்கள் தெரியும்
இதனால் நாமும் பூச்சியும் ஒரே பொருளைக் காணும் போது வேறுபட்ட உண்மைகளை காண்கிறோம் ஆனால் இரண்டும் இரண்டு உண்மைகள்
அப்படியெனில் பார்க்கப்பட்ட பொருளின் உண்மை என்ன என்பது அந்தப் பொருளைப் படைத்த இறைவனுக்குத்தான் தெரியும்
சேவலின் கண்களுக்கு மலக்குமார்கள் தெரிந்து அது கூவதும்
ககழுதையின் கண்களுக்கு சைத்தான்கள் தெரிந்து அவைகள் கத்துவதும்
இரண்டும் பார்வைகள் இரண்டும் உண்மைகள்
சப்தங்களில் மிக மோசமான சப்தம் கழுதையின் சப்தம் . . குர்ஆன் 31 : 19
மோசமான சப்தத்திற்கு காரணம் யார் காரணம் ?
சிம்பன்சி குரங்கை தவிர மற்ற விலங்குகளுக்கு நிறக் குருடு உண்டு விலங்குகள் எல்லாம் இந்த உலகத்தை பிளாக் அன்ட் வொயிட்தான் பாக்கிறது
நாம் காணும் கலர்கள் அவைகளுக்கு தடை செய்யப்படடிருக்கிறது
ஒரு பொருளைப் பற்றி எண்ணங்கள் ஜீவராசிகளுக்கிடையில் பற்பல உண்மைகளை தெரிவிக்கிறது
உண்மையில் அந்த பொருளைப் படைத்த இறைவனைத் தவிர யாராலும் சொல்ல முடியாது
மூஸா உம் கையில் இருப்பது என்ன ?
கம்பு இதை வைத்து ஆடுகளுக்கு இலைகளைப் பறிப்பேன் இந்தக் கம்பில் சாய்ந்து இளைப்பாறுவேன்
கீழே எறியும் என்று இறைவன் சொன்னதும் அது பெரிய பாம்பாக மாறியது . . . . குர்ஆன் 20 : 18
முஸாவின் அஸா உண்மையில் கம்பா . ? பாம்பா . . ?
ஆக நாம் இந்த உலகத்தை யானையை குருடர்கள் பார்த்த மாதிரிதான் பார்க்கிறோம்
இதில் ஜீவராசிகளுக்கு ஒரு உண்மை நமக்கு வேறு ஒரு உண்மை
இப்படி இந்தப் பிரபஞ்சத்தில் அனந்த கோடி உண்மைகள் இருக்கிறது
விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 5
(ஒப்புமை விளக்கம்)
ஒரு கப்பல் கடலில் மிதந்து கொண்டிருக்கிறது கப்பலின் ஓர் அறையில் சிலர் சதுரங்கம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள் சதுரங்கக் காய்கள் சதுரங்கப் பலகையின்மேல் வைக்கப்பட்டிருக்கின்றன.
காய்களை நகர்த்தாமல்,சதுரங்கப் பலகையை அப்படியே எடுத்து வேறு ஒரு அறையில் கொண்டு போய் வைத்து விடுகிறார்கள்.
இப்போது சதுரங்கப் பலகையைப் பொறுத்தவரை காய்கள் இருந்த இடத்தில்தான் இருக்கின்றன. ஆனால் உண்மையில் அவை ஓர் அறையில் இருந்து மற்றொரு அறைக்கு நகர்ந்து சென்றிருக்கின்றன.
சதுரங்கப் பலகை அதே அறையில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த அறையைப் பொருத்தவரையில் , சதுரங்க பலகை இருந்த இடத்தில்தான் இருக்கிறது. ஆனால் கப்பலோ நகர்ந்து கொண்டு இருக்கிறதே ! அப்போது கப்பலுக்குள் இருக்கும் சதுரங்கப் பலகையும் நகர்ந்து சென்று கொண்டுதானே இருக்க வேண்டும்!
கப்பல் ஒரு துறைமுகத்தில் நின்று கொண்டிருப்பதாகவே வைத்துக் கொள்வோம். கடலைப் பொருத்தவரை பூமியைப் பொருத்தவரை அந்தக் கப்பல் இருந்த இடத்தில்தான் உள்ளது. ஆனால் பூமியே நகர்ந்து கொண்டிருக்கிறதே ! அப்போது அந்த பூமியின் மேலுள்ள கப்பலும் நகர்ந்து கொண்டுதானே இருக்க வேண்டும் !
சதுரங்கப் பலகையைப் பொறுத்தவரை நகர்ந்தவையே
கப்பலைப் பொறுத்தவரை நகராத சதுரங்கப் பலகை , கடலையும் , பூமியையும் பொறுத்தவரை நகர்ந்து கொண்டுதானிருக்கிறது.
கடலைப் பொறுத்தவரை நகராத கப்பல் வான வீதிகளில் திரியும் பிரபஞ்சப் பொருள்களைப் பொறுத்தவரை நகர்ந்து கொண்டிருப்பதாகத்தான் கருத வேண்டும்.
இந்த சுவாரசியமான சிந்தனையை ஜான் லாக் என்னும் தத்துவ ஞானி 300 ஆண்டுகளுக்கு முன் தமது புத்தகத்தில் எழுதியுள்ளார். (மீள்)

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 6

(புலன்களின் அறிவால் கட்டுப்பட்ட மனிதன்)



நம் கண்கள் வீசும் ஒளியை முழுமையாக பார்த்து விட முடியாது. 0.00004 cm லிருந்து 0.00007 cm வரைதான் பார்க்க முடியும். இந்த அளவுகோலுக்கு மேலும்,கீழும் உள்ள ஒளி கிரணங்கள் வீசும் உண்மை மனிதனுக்குத் தெரியவே தெரியாது . ஆகவே நம் பார்வை குறைபாடுள்ளது .

அதைப்போலவே நம் காது 20 Hz லிருந்து 20 கிலோ Hz வரைதான் கேட்க முடியும். இந்த அளவீட்டிற்கு மேலும் கீழும் உள்ள சப்தங்களில் உள்ள உண்மை மனிதனுக்கு தெரியாது.

இது மாதிரி நம் ஒவ்வொரு புலன்களும் ஒரு எல்லைக்குள் கட்டுப்பட்டு இருக்கும்போது, இந்த பிரபஞ்ச வெளியில் வெளிப்படும் முழு உண்மை அது பற்றிய ஞானம் நமக்கு தெரியவே தெரியாது .

அணுக் கதிரியக்கத்தால் ஏற்படும் ஒளியும், அக்கதிரியக்கம் காரணமாக ஆகாச வெளியில் ஏற்படும் ஒளியின் சஞ்சாரமும் அவைகள் படைக்கப்பட்ட பொழுதிலிருந்து இன்னும் வரை இயற்கையின் மர்மமாக மனிதனுக்கு இருக்கிறது.

அடிப்படையில் மூக்கு ஏழு வகையான வாசனைகளை நுகரக் கூடியதாக மூக்கின் நரம்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளது கற்பூர வாசனை, பெப்பர் மிண்ட் வாசனை, மலர்களின் வாசனை, மஸ்க் என்னும் அரபு நாட்டு அத்தர் வாசனை, ஈதர் அல்லது பெட்ரோல் வாசனை, அழுகிய முட்டை வாசனை, காட்டமான அமில வாசனை.. இந்த ஏழு வாகனைகளின் கலப்புகளால் நம்மால் .பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வாசனைகளை உணர முடிகிறது

இந்த பத்தாயிரம் வாசனைகளில் ....

மரம் எரிவது, இலை எரிவது, முடி எரிவது

கூவம் என்னும் சாக்கடை , மீன் நாற்றம், வாய் துர்நாற்றம் , சேவிங் சோப், கருவாடு, வியர்வை, மல்லிகை

ஆனால் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாசனைகள் இருக்கிறது . நாய் , பூனை போன்றவை மனிதர்களை விட அதிகமான வாசனைகளை மோப்பம் பிடிக்கக் கூடியது.

புலன்களின் கட்டுப்பட்ட தன்மையில் உள்ள மனிதனால் இனிப்பும் கசப்பும், குளிர்ச்சியும் உஷ்ணமும் , பச்சையும் சிவப்பும் ஒருவனுடைய அபிப்பிராயங்களே தவிர உண்மையானவை அல்ல .

புலன்களால் அறிய முற்படும் மனிதனுக்குத்தான் நிறம், ருசி , வாசனை , சப்தம் என்ற பேதங்கள் ஏற்படுகின்றனவே தவிர அறியப்படும் பொருளுக்கு இப்பேதங்கள் எவையும் இல்லை.

இத்தனையும் உள்ள உண்மையினை அதைப் படைத்தவனைத் தவிர யாரும் அறிந்து கொள்ள முடியாது.

இதைதான் மலக்குகள் " நீ எங்களுக்கு அறிவித்ததைத் தவிர வேறொன்றையும் நாங்கள் அறியமாட்டோம். நீ மிக்க அறிந்தவனும், ஞானம் உடையவனாகவும் இருக்கின்றாய் ". எனக் கூறினார்கள். திருக்குர்ஆன் 2 : 32

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 7

(சீரற்ற இயக்கத்திலிருந்தும் படிப்பினை)



அமைதியாக ஒரே வேகத்தில் சீராக சென்று கொண்டிருக்கும் ஒரு ரெயில் வண்டியினுள் கதவுகளையெல்லாம் அடைத்துக் கொண்டு உட்கார்ந்து இருக்கும் ஒருவனுக்கு அந்த ரெயில் வண்டி ஓடிக் கொண்டிருக்கிறதா அல்லது நின்று கொண்டு இருக்கிறதா என்பது தெரிய நியாயமில்லை.
உள்ளே உட்கார்ந்து கொண்டு என்ன பதில் சோதனைகள் செய்தாலும் அந்த ரெயில் வண்டியின் வேகத்தை அவனால் கண்டுபிடிக்க முடியாது.
அதே சமயத்தில் சீரான வேகத்தில் சென்று கொண்டிருக்கும் இந்த ரெயில் வண்டியின் டிரைவர் திடீரென்று பிரேக் போட்டார் என்றால், உள்ளே உட்கார்ந்து கொண்டு இருப்பவன் பின்னோக்கி குப்புற விழுவான்.
அப்பொழுது அவன் அந்த ரெயில் வண்டி அந்த நேரம் வரையில் இயங்கிக் கொண்டிருந்ததையும் உணர்ந்து விடுவான்.
அல்லது அந்த ரெயில் வண்டி நேராகச் சென்று கொண்டிருப்பதை விட்டு ஒரு வளைவில் வேகமாக திரும்புமானால், ரெயில் வண்டி வெளிப்பக்கம் நோக்கிச் சாய்வதிலிருந்து உள்ளே இருக்கும் மனிதன் அதன் இயக்கத்தை உணர்ந்து கொள்ள முடியும்.


எனவே, பிரபஞ்சத்தில் உதாரணமாக நமது பூமி மாத்திரம் சீராக இயங்கிக் கொண்டிருப்பதாக வைத்துக்கொண்டால், பூமியில் வாழும் நமக்கு அதன் இயக்கம் தெரியாது;
அதேசமயத்தில், பூமியின் இயக்கத்தில் திடீரென்று ஒரு மாறுதல் ஏற்படுமாயின், உடனே நமக்கு அதன் இயக்கம் புலனாகிவிடும்.
இதிலிருந்து, நாம் ஒரு பொருளின் இயக்கத்தை அதிலிருந்து கொண்டே அறிய வேண்டுமானால், அப்பொருளின் இயக்கத்தில் ஒரு திடீர் மாறுதல் ஏற்பட வேண்டும் என்பது புலனாகிறது.
ஆகையால் ஒரு சீரான இயக்கத்தை நிர்ணயிக்க அதில் ஏற்படும் சீரற்ற திடீர் மாறுதல் தேவைப்படுகின்றது. இந்தச் சீரற்ற மாறுதலைக் கொண்டு சீரற்ற இயக்கத்தை நிர்ணயம் செய்யமுடிந்தால், அந்த சீரற்ற இயக்கம் ஒரு தனிப்பட்ட அளவுக் கொள்கை நிலையை அடைந்துவிடுகிறது.
இவ்வாறு தனித்து இயங்கும் ஒரு பொருளின் தனிப்பட்டதோர் இயக்கத்தைச் சூன்யமாக உள்ள பரந்த வெளியின் மூலம் பிரித்து அறியலாம் என்பதும் புலனாகிறது.
பிரபஞ்ச வெளி என்பது ஒன்றுமில்லாத சூன்யம் என்றும், இயக்கம் என்பது எப்போதும் சார்புள்ளதோர் கொள்கை என்றும் நிலைநாட்டிய ஐன்ஸ்டீனுக்கு இந்தச் சீரற்ற இயக்கத்தில் காணப்படும் ஒருமைப்பாடு, மிகுந்த குழப்பத்தை உண்டாக்கியது.

தமது விசேஷ ஒப்புமை தத்துவத்தில், சீராக இயங்கும் பிரபஞ்ச பொருள்களில் இயற்கை விதிகள் எல்லாம் ஒரே மாதிரியானவை என்ற கொள்கை அடிப்படையாக நிற்கின்றது.
மேலும் ஐன்ஸ்டைனின் பிரபஞ்ச இயக்கத்தில் உள்ள ஒருமைப்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். சீரற்ற இயக்கத்தை உடைய நிலையில் எந்த அமைப்பின் இயற்கை விதிகளும் ஏனைய சீரான இயக்கங்களுடைய அமைப்புகளின் இயற்கை விதிகளுக்குப் புறம்பாகத்தானே இருக்கும் ?
ஐன்ஸ்டின் இக்கூற்றை ஒத்துக்கொள்ள தயாராக இல்லை. தமது பொது ஒப்புமை தத்துவத்திற்கு அடிப்படையாக அவர் பின்வரும் கொள்கையை வெளியிட்டார்.
"பிரபஞ்சத்தில் இயங்கும் எந்த அமைப்புகளின் இயக்க நிலைகள் எவ்வாறு மாறுபட்டிருப்பினும்,அவற்றின் இயக்க விதிகள் எல்லாவற்றுக்கும் ஒன்றே "
உதாரணமாக, கடல் என்றால் அலை அடிக்கும். கடலில் புயல் கூட மையங்கொண்டு சுனாமி அலை கூட வரலாம். இதெல்லாம் சீரான இயக்கம்தான்.

ஆனால் அதேக் கடல் இரண்டாக பிளந்தால், சீரான இயக்கத்திற்கு மாற்றமான சீரற்ற இயக்கம்தானே ? இது பற்றி குர்ஆனில் இறைவன்...
பிறகு, சூரியன் உதிக்கும் நேரத்தில் (ஃபிர்அவ்னின் கூட்டத்தார்) இவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.
இவ்விரு கூட்டத்தினரும் ஒருவரையொருவர் கண்டபோது: “நிச்சயமாக நாம் பிடிபட்டோம்” என்று மூஸாவின் தோழர்கள் கூறினர்.
அதற்கு (மூஸா), “ஒருக்காலும் இல்லை! நிச்சயமாக என் இறைவன் என்னுடன் இருக்கிறான். எனக்கு சீக்கிரமே அவன் வழி காட்டுவான்” என்று கூறினார்;.
"உம் கைத்தடியினால் இந்தக் கடலை நீர் அடியும்” என்று மூஸாவுக்கு வஹீ அறிவித்தோம். (அவ்வாறு அடித்ததும் கடல்) பிளந்தது; (பிளவுண்ட) ஒவ்வொரு பகுதியும் பெரும் மலை போன்று ஆகிவிட்டது.
(பின் தொடர்ந்து வந்த) மற்றவர்களையும் நாம்தான் நெருங்கச் செய்தோம்.
மேலும், நாம் மூஸாவையும், அவருடன் இருந்த அனைவரையும் காப்பற்றினோம்.
பிறகு, மற்றவர்களை (ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை) நாம் மூழ்கடித்து விட்டோம்.
நிச்சயமாக இதிலே அத்தாட்சி இருக்கிறது; எனினும் அவர்களில் பெரும் பாலோர் நம்பிக்கை கொள்பவர்களாக இல்லை.
(குர்ஆன் : 26: 60-67)
"பிரபஞ்சத்தில் இயங்கும் எந்த அமைப்புகளின் இயக்க நிலைகள் எவ்வாறு மாறுபட்டிருப்பினும் அவற்றின் இயக்க விதிகள் எல்லாவற்றுக்கும் ஒன்றே "
சீரற்ற இயக்க விதிகளும் கூட இறைவன் விதித்த விதியாகும்

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 8

(மனமும், புலனறிவும்)



லீப்னிட்ஸ் என்பவர் ஜெர்மானிய தேசத்து விஞ்ஞானி , வெளிச்சம் , நிறம், வெப்பம் முதலிய குணங்கள் மாத்திரமின்றிப் பொருளின் உருவம் , இயக்கம் முதலியவை வெறும் தோற்றமே என்பது இவருடைய கொள்கை.
ஏனெனில் வெளிச்சம், வெப்பம், நிறம், வெப்பம் , நிறம், உருவம் , இயக்கம் இன்னும் பொருளின் மற்றெல்லாக் குணங்களும் மனிதனுடைய புலன்களின் அறிவாலேயே ஏற்படுகின்றன; மனிதப் புலன் அறிவுக்கும் அப்பால் அப்பொருள் பொருளே அல்ல !

ஒரு "பொருள் " என்று நாம் குறிப்பிடுவது அப்பொருளினுடைய குணங்களின் கூட்டுத்தொகை . அக்குணங்களை உணருவது நம்புலன்கள். நம் புலன்களை இயக்குவது நம் மனம். ஆகவே நம் மனம்தான் வெளிப் பொருளைப் பற்றிய குணங்களின் இருப்பிடம் .
சக்தியும், பொருளும் , அணுவும் , அண்டமும் நிறைந்து காணப்படும் இப்பரந்த பிரபஞ்சம் முழுவதும் நம் மனத்தால் உண்டாக்கிய சிருஷ்டி ! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் மனோ விகாரத்தைக் களைந்து விட்டு நோக்கினால் , இப்பிரபஞ்சம் இல்லை - அது ஒன்றுமில்லாத ஒரு சூன்ய வெளி !
பெர்க்கலே என்கிற விஞ்ஞானி, "மண்ணுலகிலும், விண்ணுலகிலும் நிறைந்து கிடப்பதாகத் தோன்றும் அத்தனைப் பொருள்களுக்கும் , என்னுடைய மனமே,உருவம் கொடுக்கிறது .என்னால் , என் மனத்தால் அவை உணரப்படாத வரையில் அவற்றின் உருவங்கள் அனைத்தும் அருவமே " என்கிறார்
ஆல்பர்ட் ஐன்ஸ்டின் , " பொருள்களின் நிறத்தையும் , உருவத்தையும் எவ்வாறு மனத்தின் உணர்வாக நாம் கருதுகிறோமோ அதே மாதிரியான மன உணர்வுதான் காலமும் , இந்த பரந்த வெளியும்.
இந்த பரந்தவெளியை நாம் உணர்வது எப்போது ...? இப் பரந்த வெளியில் உள்ள பொருள்களின் அமைப்பை நாம் உணரும் போதுதானே இப் பரந்த வெளியையும் உணருகிறோம் ? அதே வகையில் பொருள்களில் ஏற்படும் நிகழ்ச்சிகளை வரிசைப் பிரகாரம் அளக்க முற்படும்போதுதானே காலத்தை உணருகிறோம் .

"காலம் " என்பதும் நம் மனத்தின் உணர்வே. சுதந்திரமான ,தனிப்பட்டதோர் நிலை பரந்த வெளிக்கும் இல்லை, காலத்திற்கும் இல்லை .
பொருள்கள் அடங்கியுள்ள அண்டமே இப் பரந்த வெளி . பொருள்களில் ஏற்படும் நிகழ்ச்சிக் குறிப்புகள் காலப் பிரமாணத்தால் கணக்கிடப்படுகின்றன . ஆகையால் பரந்தர வெளியும், காலமும் பொருளின் அடிப்படையில் எழுந்தவை. பொருளைப் பற்றிய உணர்வு நம் மனத்தால் உண்டாகிறது .ஆகவே பொருளின் அடிப்படையில் எழுந்த பரந்த வெளியும், காலமும் மனத்தின் உணர்வால் உண்டாகின்றன என்று நான் சொல்வதில் உங்களுக்கு அபிப்பிராயபேதம் இருக்க நியாயமில்லையே !
அணுவும், அண்டமும், பொருளும், பிரபஞ்சமும் , காலமும் வெளியும் நம் மனத்தின் உணர்வால் எழுந்த மகத்தானதொரு மாய மாளிகை !
நம் புலன்களின் அறிவால் கட்டுப்படுத்தப்பட்ட நமது மனத்தின் உணர்வுக்கும் அப்பால் சென்று விட்டால்.., அணுவும் இல்லை அண்டமும் இல்லை ,பொருளும் இல்லை இப் பிரபஞ்சமும் இல்லை. காலமும் இல்லை இப் பரந்த வெளியும் இல்லை.
" இறைவனே ! நீ எதற்காக படைப்பினங்களைப் படைத்தாய் ?" என்று தாவூத் (அலை) அவர்கள் இறைவனிடம் கேட்டதற்கு ,
" நீ இருப்பது என்னால் வெளிப்பட்டது .
நான் இருப்பது உன்னால் உண்டாக்கப்பட்டது .
என்னாலேயன்றி நீ வெளியாக்கப்பட்டிருக்க மாட்டாய்.
உன்னாலேயன்றி நான் உண்டாக்கப்பட்டிருக்க மாட்டேன் "
(மீள் பதிவு)

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 9

(பிரபஞ்ச மனம்)

இயற்கை எதை எல்லாம் உணர்ந்ததோ; அதுவே இன்றைய இப்போதைய பிரபஞ்சம். இயற்கை உணர்ந்த அனைத்தும் பிரபஞ்ச அணுவில் புதைந்து கிடக்கிறது. அதுவே பிரபஞ்ச மனது.
பிரபஞ்சம் இயங்கும் விதம் அந்த பதிவுகளை பொருத்ததே ஆகும். பிரபஞ்ச மனதின் மேம்பட்ட பரிணாம வளர்ச்சியே மனித மனம். இயற்கை எதை உணர்கிறதோ அதை நம் மனது வடிவமைக்கிறது.
நம் உடல் பஞ்ச பூதங்களால் கட்டமைக்கப்பட்டது. எனவே நாமும் இயற்கைதான். நாம் எதை உணர்கிறோமோ அது மனதால் வடிவமைக்கப்படுகிறது.
மனிதன் ஒரு சிறிய பிரபஞ்சம்; அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில்...பிரபஞ்ச மனம் இயற்கையை கட்டுப்படுத்த மனித மனமாக, பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. அவ்வளவுதான்.
மனித மனம் இப்படி பல்வேறு மாயையில் சிக்குண்டு சுயநலம் கொள்ளும் என்று தெரிந்திருந்தால், பிரபஞ்ச மனம் பரிணாம வளர்ச்சியே அடைந்திருக்காது.
கவனம் குவியும் இடத்தில் சக்தி பாயும், எதை பாவிக்கிறாயோ அது அப்படியே ஆகும்.
நாளை நடக்கப்போகும் விபத்து, என்றோ ஏற்பட்ட நிகழ்ச்சியின் தாக்கமே.
மனது எண்ணங்களை உருவாக்கி, உடல் அணுக்களை குறிப்பிட்ட அலைவரிசையில் அதிரச் செய்து, பிரபஞ்ச அணுக்களின் தன்மையை மாற்றி தனக்கு தேவையானதை வடிவமைத்துக் கொள்கிறது.
இதிலிருந்து மனிதன் தான் இயற்கையால் கட்சிதமாக வடிவமைக்கப்பட்ட மேம்பட்ட சக்தி என்பதை உணர்ந்துகொள்ளலாம்.
மனக் கட்டுப்பாடு பற்றி நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த பின்வரும் பிரார்த்தனை
“அல்லாஹ்வே! உன் அருளை நான் வேண்டுகிறேன். கண்சிமிட்டும் நேரம்கூட என்னை என் மனதில் கட்டுப்பாட்டில் விட்டுவிடாதே. என் விவகாரங்கள் அனைத்தையும் சீர்படுத்துவாயாக. உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை”
“உள்ளங்களைப் புரட்டக்கூடியவனே ! என் உள்ளத்தை உன் மார்க்கத்தின் மீது நிலைபெறச் செய்வாயாக” இதுவும் நபியவர்கள் அடிக்கடி கேட்ட பிரார்த்தனைகளுள் ஒன்று.
மனித மனம் தடுமாறக்கூடியது. அது எந்தவொன்றுக்கும் மிக இலகுவாக அடிமையாகிவிடும். அறிவு ஆலோசனை மட்டுமே அளிக்கக்கூடியது. கட்டுப்படுத்தும் ஆற்றல் அதற்கு இல்லை.
மனம் அந்த ஆலோசனையை ஏற்கலாம். ஏற்காமல் நிராகரிக்கவும் செய்யலாம். அந்த அறிவைக் கொண்டே தன் நிலைக்கு ஆதரவாக வாதாடவும் செய்யலாம்.
மனதின் நிலையற்ற தன்மையை மனிதன் உணர வேண்டும். அது எப்போது வேண்டுமானாலும் காதலில் வீழ்ந்துவிடலாம், சிற்றின்பப் பாவத்தில் மூழ்கிவிடலாம். ஒன்றில் அது நிலைபெற்றுவிட்டால் எதிர்ப்புகளையோ வசைகளையோ இழிவுபடுத்தல்களையோ அது கொஞ்சம் கூட பொருட்படுத்தாது .
அவற்றை தன் நோக்கத்தை நிறைவேற்றுவதன் பாதையில் கிடக்கும் தடைக்கற்களாகக் கருதி, அது முன்னேறிக் கொண்டே செல்லும். அதன் பாதையில் தன் உயிரையே இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட மனமது பின்வாங்காது.

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 10

(ஆதிமூல சக்தி)



பழம்பெரும் கிரேக்கர்கள் காலத்தில் இருந்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரையில் மின்சாரமும், காந்தமும் தனித்தனியானவை என்று கருதப்பட்டு வந்தன.

19- வது நூற்றாண்டில் ஆர்ஸ்டெட் , ஃபாரடே போன்ற விஞ்ஞான மேதைகளின் பரிசோதனைகள் மூலம் ஒரு மின்னோட்டத்தைச் சுற்றி எப்போதும் ஒரு காந்த பிரதேசம் வியாபித்துக் கொண்டே இருக்கும் என்ற உண்மையும், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒரு காந்த பிரதேசத்திலிருக்கும் சக்தியின் மூலம் மின்சக்தியைத் தூண்டி ஒரு மின்னோட்டத்தை உண்டுபண்ண முடியும் என்கிற உண்மையும் வெளிப்பட்டன.

அப்போதிலிருந்து மின்சக்திக்கும், காந்த சக்திக்கும் உள்ள ஒற்றுமையும், ஒருமைப்பாடும் புலப்பட ஆரம்பித்தன. அந்த உண்மைகளிலிருந்து மின்காந்தப் பிரதேசம் என்பது என்ன என்ற விஷயம் புலனாயிற்று.

மின்காந்த பிரதேசத்தின் மூலம் ஒளி அலைகளும், (ஒலி) ரேடியோ அலைகளும் , மின்காந்த அதிர்ச்சிகளும் அகண்ட வெளியில் பரவுகின்றன என்ற உண்மையும் வெளிப்பட்டது. ஆக மின்சக்தியும், காந்த சக்தியும் ஒரே சக்தியாக கருதலாம்.

ஆகர்ஷண சக்தி (**Gravitational Force**) , மூலக்கூறுகளில் (**Molecules**) அணுக்களைச் சேர்த்து இணைத்து வைக்கும் ரசாயன சக்தி, பொருள்களில் பெரிய துகள்களைக் கவர்ந்து கட்டிப்பிடிக்கும் சக்தி **(Cohesive Force),** பொருள்கள் தங்களுடைய உருவங்களைப் பாதுகாக்க பயன்படும் சுருங்கி விரியும் தன்மை, இவையெல்லாம் மின்காந்த சக்தியின் அடிப்படையில் ஏற்பட்டவை.

ஆகர்ஷண சக்தி (**Gravitational Force**) **,** ஒன்றே இந்த மின் காந்த சக்திக்கு அப்பாற்பட்டதாகக் காணப்படுகிறது. ஆகர்ஷண சக்தியைத் தவிர மேலே குறிப்பிட்ட சக்திகள் அனைத்தும் மின் காந்த சக்தியின் அடிப்படையில் எழுந்தவை.

பொருள்கள் அணுக்களால் ஆனவை. அணுக்களில் மின்சக்தி வாய்ந்த துகள்கள் உள்ளன. பொருட்கள் ஒன்றுக்கொன்று உறவாடும் போது ஏற்படும் சக்திகளே மேலே குறிப்பிட்ட சக்திகள். மின்துகள்களால் ஆன அணுக்களைக் கொண்ட பொருள்கள் உறவாடும் போது ஏற்படும் அச்சக்தின் மின் காந்த சக்தியின் அடிப்படையில் தானே உண்டாயிருக்க வேண்டும் ?

இது ஒருபுறமிருக்க, இதுநாள்வரையில் சம்பந்தமற்றதாகக் கருதப்பட்டு வந்த மின்காந்த சக்திக்கும், ஆகர்ஷண சக்திக்கும் உள்ள ஒற்றுமைகள் பிரமிக்கத் தக்கவை. பூமியும் மற்ற கிரகங்களும் சூரியனுடைய ஆகர்ஷண சக்திப் பிரதேசத்தில் சுற்றிச்சுழன்று வருகின்றன.

அணுவில் இருக்கும் எலக்ட்ரான்கள் என்று சொல்லப்படும் மின்துகள்கள் மின்காந்தப் பிரதேசத்தில் அணுவின் உட்கருவைச் சுற்றி வட்டமிடுகின்றன. அணுவில் அண்டம் !

ஆகர்ஷண சக்திப் பிரதேசத்தில் அண்டத்தின் இயக்கம், மின்காந்த பிரதேசத்தில் அணுவின் இயக்கம் !

1949-ல் ஐன்ஸ்டீன் ஐக்கிய வெளித்தத்துவத்தை வெளியிட்டார். அதன் விளைவாக எண்ணிலடங்காத நட்சத்திர மண்டலங்கள் பவனிவரும் எல்லையற்ற ஆகாச வெளியில் உணரப்படும் ஆகர்ஷண சக்தியையும், கண்ணுக்கு புலப்படாத நுண்ணிய அளவில் உணரப்படும் பயங்கர மின்காந்த சக்தியையும் ஒரே தத்துவத்தில் அடக்க முடிந்துவிட்டது !

இடையூறாத கணித ஆராய்ச்சிகளின் மூலமும் பரிசோதனைகளின் மூலமும் இந்த ஐக்கிய வெளிதத்துவத்தின் மகத்தான லட்சியத்தை அறிந்துகொள்ளப் பல ஆண்டுகள் ஆகலாம். அத்தத்துவம் நமக்கு காட்டும் அகண்டமான பிரபஞ்சப் படத்தில், பிரம்மாண்டத்திற்கும் பரமாணுக்கும் இடையில் உள்ள ஆழங்காண முடியாத இடைவெளியை இணைத்து விடும் பாலத்தை நாம் இப்போது காண்கிறோம்.

சிக்கலான இப்பிரபஞ்சத்தை வேற்றுமையற்ற, கலப்பில்லாத ஒரே சக்தியின் அல்லது பொருளின் அற்புத உருவமாக பார்க்கிறோம்.
பரந்த வானவெளியில் ஊர்ந்து செல்லும் பிரபஞ்சத் தீவுகள் என்று சொல்லப்படும் நட்சத்திரக் கூட்டங்களின் இயக்கமும், பிரமிக்கத்தக்க வேகத்துடன் பறந்து கொண்டிருக்கும் மின் அணுக்கள் உடைய அணுவில் காணப்படும் பயங்கர இயக்கமும், ஆதிமூல சக்தியின் வெவ்வேறு அமைப்புகளின் மாறுபட்ட தோற்றங்களே என்னும் உண்மை இப்போதுதான் விஞ்ஞானத்திற்கு புலப்பட்டிருக்கிறது.
இந்த ஆதிமூல சக்தியின் கட்டுப்பாட்டில்தான் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவும் இயங்கிக் கொண்டிருப்பதை ஐக்கிய வெளித் தத்துவத்தின் நிருபணத்தின் மூலம் விஞ்ஞான உலகம் கண்டுகொண்டது .
ثُمَّ اسْتَوٰۤى اِلَى السَّمَآءِ وَهِىَ دُخَانٌ فَقَالَ لَهَا وَلِلْاَرْضِ ائْتِيَا طَوْعًا اَوْ كَرْهًا قَالَتَاۤ اَتَيْنَا طَآٮِٕعِيْنَ
பின்னர், வானத்தைப் படைக்கக் கருதினான். அது ஒருவகை புகைதான். அதனையும் பூமியையும் அவன் நோக்கி "நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி (வழிபட்டு) என்னிடம் வாருங்கள்" என்று கூறினான். அதற்கு அவைகள், "இதோ நாங்கள் விருப்பத்துடனேயே வந்தோம்" என்று கூறின. (குர்ஆன் : 41:11)

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 11

(வானமும் , தராசும்)



"அவனை வானத்தை உயர்த்தினான்; மேலும் தராசை அமைத்தான். ஆகவே நீங்கள் நிலுவையில் கூட்டியோ குறைத்தோ வரம்புமீறாதீர்கள் . நீங்கள் நீதமாக நிறுங்கள் . எடையைக் குறைத்து விடாதீர்கள் . படைப்புகள் வசித்திருக்க வசதியாகத்தான் பூமியை அமைத்தான். குர்ஆன் (55 : 7- 10)
வானத்திற்கும் தராசிற்கும் அப்படி என்ன தொடர்பு ?
ஐசக் நியூட்டன் அவர்களின் புகழ் வாய்ந்த கண்டுபிடிப்பாகிய அகிலத்தின் ஈர்ப்பாற்றல் (The law of Universal Gravitation) விதி “பேரண்டத்திலுள்ள பொருட்களின் துகள்கள் ஒவ்வொன்றும் மற்ற பொருட்களின் துகள்கள் ஒவ்வொன்றையும் அவைகளின் பொருண்மையின் மதிப்பிற்கு நேர் விகிதத்திலும் அப்பொருட்களின் மையங்களுக்கு இடையிலுள்ள தூரங்களுக்கு எதிரிடையான வர்க்க விகிதத்திலும் ஈர்க்கின்றன.
இதைச் சற்று எளிதாகக் கூறினால் பொருட்களுக்கு இடையிலுள்ள தூரம் கூடும்போது, அவைகளுக்கு இடையிலுள்ள ஈர்ப்பாற்றல் குறைந்து கொண்டே வரும் என்பது ஈர்ப்பாற்றலின் விதியாகும்.
எனவே பூமியிலிருந்து ஒரு பொருள் தூரமாக (அல்லது உயரமாக) எடுத்துச் செல்லும்போது பூமியின் ஈர்ப்பு விசையின் செயற்பாடு அப்பொருளின் மீது குறைந்து கொண்டே வந்து முடிவில் அடையாளம் தெரியாத அளவிற்கு குறைந்துவிடும்.

பூமியிலிருந்து மேலே செல்லச் செல்ல புவியின் பூமியின் ஈர்ப்பு குறைகிறது. ஒரு கிலோகிராம் (1000 கிராம்) எடையுள்ள ஒரு பொருள், 6400 கிலோமீட்டர் உயரத்திற்கு அதாவது பூமியின் மையத்தில் இருந்து பூமியின் ஆரத்தை (3200 கிலோமீட்டர்) போல் இரண்டு மடங்கு அளவு உயரத்துக்கு தூக்க முடியுமானால், அந்த இடத்தில் ஈர்ப்பு சக்தி இரண்டு ஸ்கொயர் = 4 ; நான்கு மடங்கு பலவீனமாகி விடுகிறது. 1000/4 = 250 கிராம் .அப்போது 1000 கிராம் எடையுள்ள பொருள் வெறும் 250 கிராம்தான் காண்பிக்கும் .
அதே பொருளை பூமியின் மேற்பரப்பிலிருந்து அதாவது பூமியின் ஆரத்தைப் போல் மூன்று மடங்கு (3200 x 3) = 9600 கிலோ மீட்டர் உயரத்தில் வைத்து நிறுத்தால், 3 ஸ்கொயர் = 9
1000 / 9 = 111 கிராம்தான் இருக்கும்.
பூமியின் ஆரத்தைப் போல் நான்கு மடங்கு 3200 x 4 = அதாவது 12.800 கிலோ மீட்டர் உயரத்தில் வைத்து நிறுத்தால், 1000 கிராம் எடையை நிறுத்தால் 4 ஸ்கொயர் = 16 அதாவது1000 / 16 = 6 2.5 கிராம்தான் இருக்கும் .

அடுத்து பூமியில் இருந்து 36 ஆயிரத்து 290 கிலோ மீட்டர் உயரத்தில் பூமத்திய ரேகைக்கு மேலே பூமியோடு உடன் சுற்றும் பாதையில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம் உள்ளது அதில் சுனிதா வில்லியம்ஸ் என்கிற இந்திய வம்சாவளி பெண் இரண்டாவது முறையாக அங்கு சென்றுள்ளார். விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை ஒட்டி விண்வெளி காலனிகளை அமைக்கலாம் என்ற ஆய்வு நடைபெறுகிறது .
சர்வதேச விண்வெளி மையம் பூமியில் இருந்து 36,290 கிலோமீட்டர் அதாவது 36,290 / 3200 = 11 மடங்கு 36,290

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 12

(அந்த நிலா)



நிலவில் மனிதன் முதன்முதலாக கால்பதித்து 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. நிலவை ஆய்வு செய்யும் இந்தியாவின் சந்திராயன்-2 விண்ணில் ஏவப்பட்டது.
ஒட்டுமொத்த அண்டவெளியில் நமது பூமிக்கு மிக அருகில் இருக்கும் விண்பொருள் நிலாதான். ஆனால் நிலவைப் பற்றி நாம் அறிந்துள்ளவை மிகக் குறைவே. வேண்டுமானால், உங்கள் சுற்றத்தில் இந்த உரையாடலை நிகழ்த்திப் பாருங்கள்:
“தரை தளத்திலிருந்து மொட்டை மாடியை எப்படிப் பார்ப்பீர்கள்?”
“அண்ணாந்து பார்ப்போம்”
“மொட்டை மாடியிலிருந்து தரைத் தளத்தை பார்க்கும் போது?”
“குனிந்து பார்ப்போம்”
“இங்கிருந்து நிலவை எப்படிப் பார்ப்பீர்கள்?”
“அண்ணாந்து பார்ப்போம்”
“நிலவிலிருந்து பூமியை எப்படிப் பார்ப்பீர்கள்?”
இந்தக் கேள்விக்கு “குனிந்து” என்று நம்மில் பெரும்பாலானோர் தவறாக பதிலளிப்போம்.
அப்படியானால், இந்த பூமி உருண்டையில் இந்தியாவில் நாம் நேராக நிற்கும் போது , அமெரிக்கர்கள் தலைகீழாகவா நடக்கிறார்கள் ? இல்லையே. அங்குள்ள அட்லாண்டிக் கடல் தலை குப்புறவா கவிழ்ந்து விட்டது ? இல்லையே இது எப்படி ?

விண்வெளியில் மேல்-கீழ் என்ற பாகுபாடு இல்லைவே இல்லை. உள்ளபடியே " செங்குத்து " (Vertical) சித்தாந்தம் அண்ட வெளிக்கு அறவே பொருந்தாது. அங்கே ஒவ்வொரு கோளகத்தில் ஒவ்வொரு எதிரெதிர் விட்டப்புள்ளிகளும் ஒன்றுக்கொன்று செங்குத்தானவை.
பூமியில் நம் தலை உச்சிக்கு நேர்மேலே தெரியும் சந்திரன் .சந்திரனில் நீங்கள் நின்று அண்ணாந்து நோக்கினால்தான் பூமி தெரியும்.
பூமியும் சந்திரனும் மற்ற கோள்களும் மேசை மாதிரியோ அல்லது தோசை மாதிரியோ தட்டையான பரப்பு உடையவை அல்ல. மேல் பாகம் , கீழ் பாகம் என்ற பாகு பேதம் அவற்றுக்குக் கிடையவே கிடையாது
நிலா கோள வடிவிலானது என்று அறிந்திருந்தும் கூட நமது பார்வைக் கோணத்தில் வட்ட வடிவிலான தட்டாக மூளையில் பதிவுபெற்றிருப்பதே இதற்கு காரணம்.
நிலவானது பூமியை வட்டப்பாதையில் சுற்றவில்லை; நீள்வட்ட பாதையில் சுற்றிவருகிறது. ஒருமுறை நமக்கு அருகிலும் மற்றொரு முறை தொலைவிலுமாக பூமியிலிருந்து அதன் தொலைவு மாறிக்கொண்டே இருக்கிறது. அதனாலேயே சில முழுநிலவு நாட்களில் நிலா பெரிதாகவும் சில நாட்களில் சிறிதாகவும் தெரிகிறது.

நிலா பூமிக்கு மிக அருகில் இருக்கும் போது அதன் தொலைவு 3 இலட்சத்து 56 ஆயிரம் கிலோமீட்டராகவும் , தொலைவிலிருக்கும் போது 4 இலட்சத்து 6 ஆயிரம் கிலோமீட்டராகவும், சராசரியாக 3 இலட்சத்து 84 ஆயிரம் கிலோமீட்டராகவும் உள்ளது.

கன்னியாகுமரிலிருந்து காஷ்மீர்-கார்கிலுக்கு கழுகு பறப்பதைப் போல் நேர்கோட்டுப் பாதையில் மணிக்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் சென்றால் சுமார் 30 மணிநேரம் பிடிக்கும்.
இதே100 கிலோமீட்டர் வேகத்தில் நிலவிற்கு சென்றால் 3840 மணிநேரம் அதாவது 160 நாட்கள் பிடிக்கும். அதாவது கன்னியாகுமரிலிருந்து காஷ்மீர் கார்கிலுக்கு 64 முறை போய் வரும் நேரம்.
ஆனால் அப்பல்லோ-11 விண்கலத்தில் சென்ற நீல் ஆம்ஸ்ட்ராங்கும், பஸ் ஆல்ட்ரினும் 3 நாட்கள் 4 மணிநேரத்தில் சென்றடைந்தனர். இதுவரை 12 மனிதர்கள் மட்டுமே நிலவில் கால் பதித்துள்ளனர்.
சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய 4 நாடுகள் மட்டுமே நிலவில் ஆய்வுக்கலத்தை இறக்கியுள்ளன.
இந்தியாவின் சந்திராயன்-2, நிலவை ஆராய்கிறது.
நிலா ஒரு முறை பூமியை சுற்றி வருவதற்குள் பூமி தோராயமாக 28 முறை தன்னைத் தானே சுழன்றிருக்கும். அதாவது, 28 நாட்கள்.
நிலா சூரியனின் திசையில் இருக்கும் போது அது இரவில் தெரிவதில்லை. சூரியனுக்கு எதிர்த்திசையில் இருக்கும்போது இரவில் தெரிகிறது. இந்த சுழற்சியின் நிகழ்வுகளே புதுநிலவு (அமாவாசை), முழுநிலவு (பௌர்ணமி).
நீல் ஆம்ஸ்ட்ராங்கும், பஸ் ஆல்ட்ரினும் நிலவில் காலடித் தடத்தை மட்டும் விட்டுவிட்டு வரவில்லை. எதிரொளிப்பான் ஒன்றையும் நிலவில் விட்டுவிட்டு வந்துள்ளனர்.
அந்த பிரதிபலிப்பானை குறிவைத்து ஒரு லேசர் ஒளிக்கற்றை அனுப்பப்படுகிறது. ஒளி கற்றை பிரதிபலிப்பானில் பட்டு திரும்பிவர எடுக்கும் நேரத்தைக் கொண்டு பூமி நிலவிற்கிடையிலான தொலைவு அளக்கப்பட்டு வருகிறது.
ஒவ்வொரு ஆண்டும் நிலா, பூமியை விட்டு 4 மில்லி மீட்டர் – அதாவது நம் நகக்கண் அளவு விலகிச் செல்கிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு 4 மீட்டர். பத்து லட்சம் ஆண்டுகளுக்கு 4 கிலோ மீட்டர் நகரும்.
இதற்கு காரணம் நியூட்டனின் மூன்றாம் விதி. நிலவின் ஈர்ப்பு விசை பூமியிலுள்ள கடல் மற்றும் நீர்பரப்புகளில் அலைகள் ஏற்பட காரணமாக உள்ளது. இவ்வலைகள் நிலவின் மீது எதிர்விசையை – விலக்கு விசையை உண்டாக்குகின்றன.

இந்த விகிதத்தில் நிலா விலகிச் சென்றால், அது முழு நிறைவாக சூரியனை மறைத்து – முழு நிறைவான சூரிய கிரகணம் ஏற்படாது; நமது கடல்கள் அலைகளின்றியும் போகலாம்; இது பூமியின் பல்லுயிர் சூழலை பாதிக்கும்.
ஆனால் இது ஏற்படுவதற்கு சுமார் 50 கோடி ஆண்டுகள் பிடிக்கும். அன்று நிலா சுமார் இரண்டாயிரம் கி.மீட்டர்கள் நகர்ந்திருக்கக் கூடும். அன்று நமது புதுநிலவு – முழுநிலவு (அமாவாசை-பௌணர்மி) இடையினான நாட்கள் அதிகரித்திருக்கவும் கூடும் என்பதாக விஞ்ஞானம் கூறுகிறது
...ஆனால் நபி (ஸல்) அவர்கள் அந்த நிலவையே இரண்டு துண்டாகப் பிளந்து , பின் இரண்டு துண்டடையும் சேர்த்தார்கள். இதனால் பூமியில் எவ்வித மாற்றமும், எந்த ஆபத்துக்களும் நிகழவில்லை .
நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதற்கு 5 ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் அபுஜஹில் , அல் ஆசிப், வலீது இப்னு முஹைரா, அஸ்வத் இப்னு முத்தாப், நழ்ர் இப்னு ஹாரிஸ் இவர்கள் அத்தனை பேரும் நபி (ஸல்) அவர்களின் அற்புதங்களைப் பற்றி, வேதங்கள் தெரிந்த ஒரு யூதனிடம் வினவுகின்றனர்.
அவன் , "முஹம்மதுடைய மாயங்கள், சித்து விளையாட்டுகள் மண்ணில்தான் பலிக்கும் . விண்ணில் முடியாது.
உடனே அபுஜஹில் தலைமையில் இக்கூட்டம் " மினா " என்ற இடத்தில் நபி (ஸல்) அவர்களை சந்தித்து . "இன்று முழு பௌர்ணமி நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்றால், இந்த முழு நிலவை இரண்டாக பிளக்க வேண்டும்.
நபி (ஸல்) அவர்கள் தங்கள் ஆள்காட்டி விரலினால் சந்திரனை இரண்டாகப் பிளக்கச் செய்தார்கள்
அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவித்தார்
இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்தில் சந்திரன் இரண்டு துண்டுகளாகப் பிளந்தது. (பிளவுண்ட சந்திரனின்) ஒரு துண்டு மலைக்கு மேலேயும் மற்றொரு துண்டு மலைக்குக் கீழேயும் சென்றது. அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் நீங்கள் சாட்சியாக இருங்கள். என்று கூறினார்கள்.
ஸஹீஹ் புகாரி : 4864.


சந்திரன் இரண்டாக பிளந்தது .பின் நபி (ஸல்) அவர்கள் அதே ஆள்காட்டி விரலாலேயே பிளந்த சந்திரனையும் சேர்த்தும் வைத்தார்கள். நிலா பிளந்து பின் சேர்த்திருப்பதையும் அதே விஞ்ஞானம்தான் கண்டு பிடித்திருக்கிறது.
சேரமான் பெருமாள் பாஸ்கர ரவி வர்மா என்ற சேர நாட்டு மன்னர் கி.பி ஆறாம் நூற்றாண்டில் சேர நாட்டை ஆண்டு வந்தார்.

அவர் ஒரு நாள் இரவு வானில் நிலவு இரண்டாக பிளந்து மறுபடியும் ஒன்று சேர்வதை கண்டார். இதை பற்றி விசாரிக்கும் பொழுது அங்கு வியாபார நோக்கமாக வந்த அராபியர் கூட்டம் மூலம் நபி (ஸல்) அவர்களைப் பற்றியும், இஸ்லாம் மதத்தை பற்றியும் கேள்விப்பட்டனர்.
மேலும் அவர்கள் கூறிய செய்திகளிலால் ஈர்க்கப்பட்ட சேரமான் பெருமாள், அந்த அரபியார் கூட்டத்துடனேயே மெக்காவிற்கு சென்று நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தார். அதன் பிறகு இஸ்லாம் மதத்தை ஏற்ற சேரமான் பெருமாள் தாஜுதீன் எனவும் பெயர் மாற்றம் பெற்றார் என்பதாக இந்திய மாநிலமான கேரள முசுலிம்கள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது .

1969 -ல் அப்பல்லோ 10 செயற்கைக் கோள் அனுப்பிய நிலவின் மேற்பரப்பு புகைப்படத்தில் நிலவு பிளந்ததற்கான அடையாளம் கண்டறியப்பட்டது.

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 13

(ஷிஃரா நட்சத்திரம்)



எங்கோ இருக்கக் கூடிய நட்சத்திரங்கள் பூமியில் வாழும் மனிதர்களின் வாழ்வாதரத்தை மாற்றியமைக்கும் என்கிறார்கள் ஜோதிடர்கள் .
இன்னும் ஒரு படி மேலே போய் அந்த நட்சத்திரங்களே தம்முடைய வணக்கத்திற்குரிய கடவுளாக மதிக்கப்பட்டு அதனை 4500 வருடங்களுக்கு முன்பே ஆது சமுதாயத்தனர் வணங்கவும் செய்திருக்கிறார்கள் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா ?
இன்று தென் ஆப்பிரிக்க மாலியில் "டோகான்" என்னும் பழங்குடி மக்கள் சிரியஸ் பி (ஷிஃரா) என்னும் சிரியஸ் பி நட்சத்திரத்தைப் பற்றி நிறைய சொல்கிறார்கள் நாட்டுப்புற பாடல்களில் நிறைய விஞ்ஞானக் குறிப்புகளோடு காலம் காலமாக பாடி வருகிறார்கள் .
டோகான் பழங்குடி மக்கள் பிரபஞ்சத்தை ஒரு தாளில் வரைந்து ஷிஃரா என்கிற சிரியஸ் நட்சத்திரத்தின் போக்குப் பற்றி நவீன வான இயல் சொல்வதை அப்படியே அதில் தெளிவாக குறிப்பிடுகின்றனர் . வியப்பாக இருக்கிறதல்லவா ? இது எப்படி முடியும் ?
இதில் விந்தை இந்த நட்சத்திரம் இரவில் நம் கண்ணுக்குத் தெரியாது. வான இயலின் நவீன நாட்களில்தான் மிகவும் சக்தி வாய்ந்த டெலஸ்கோப்புகள் மூலம் அது கண்டு பிடிக்கப்பட்டது.
மேற்கத்திய வான இயலின் அறிவு இல்லாமல் அந்த டோகான் பழங்குடியினருக்கு எப்படி தெரிந்திருக்க முடியும் என்று ஒரு சாரார் கேட்கின்றனர்.
இவர்களுக்கு ஷிஃரா நட்சத்திரத்தைப் பற்றிய விபரம் விண்வெளி மனிதர்களிடமிருந்து ஆது மக்களுக்கு வந்திருக்க வேண்டும் என்று இன்னோர் சாரார் சொல்கின்றனர் .

وَاَنَّهٗ هُوَ رَبُّ الشِّعْرٰىۙ

(இணைவைப்பவர்களே! நீங்கள் வணங்கும்) "ஷிஃரா" என்னும் நட்சத்திரத்தின் இறைவனும் நிச்சயமாக அவன்தான். (அல்குர்ஆன் : 53:49)

وَاَنَّهٗۤ اَهْلَكَ عَادَا ۨالْاُوْلٰىۙ

(அந்த நட்சத்திரத்தை வணங்கிக் கொண்டிருந்த) முந்திய ஆது என்னும் மக்களை அழித்தவனும் நிச்சயமாக அவன்தான். (அல்குர்ஆன் : 53:50)

ஆதுக் கூட்டம் அழியும் போதே கூடவே ஷிஃரா நட்சத்திரத்தைப் பற்றி அறிவும் அவர்களுடன் அழிந்திருக்க வேண்டும் அவர்களில் தப்பிப் பிழைத்திருப்பவர்களை நீங்கள் காண்கின்றீர்களா ? என்று இறைவனே கேட்கிறான்

ஆனால் நபிஸல் அவர்கள் காலத்தில் வாழ்ந்த அரபிய குஸாஆ கோத்திரத்தார் அதன் போக்குப் பற்றி அறிந்து இருக்கிறார்கள். ஷிஃரா நட்சத்திரத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் முன்னோர்களின் வணக்க வழிபாட்டிலிலும் ஷிஃரா குறுக்கிட்டுள்ளது . இது பெரிய சேதி இருந்தாலும் சுருக்கிச் சொல்றேன் .
ஷிஃரா நட்த்திரம் செவ்வாய் கிரகத்திற்கு பின்னால் தோன்றும். அரபியர்கள் இது மூன்று நட்சத்திரங்கள் சேர்ந்தது , சுஹைல் , அபூர் , குமைஸாஉ என்று 3 சகோதரிகள் .
இதில் சுஹைல் யமன் பக்கமாக நழுவி அங்குள்ள மக்களுக்கு அருள்பாலிக்கப் போய்விட்டது . அதனைத் தேடிக்கொண்டு போன அபூர் நட்சத்திரம் அதனை கண்டு கொண்டது .ஆனால் பாருங்கள் , குமைஸாஉ நட்சத்திரம் இருந்த இடத்திலேயே இருந்து அபூரைக் காணாமல் அழுது குருடாகி விட்டது .இதனால் அது பிரகாசம் குன்றி மங்கிவிட்டது . மூன்று நடசத்திரத்தை ஷிஃரா என்றே அழைக்கின்றனர் .
அபூர் நட்சத்திரத்தை " ஷிஃரா யமானிய்யா " (அதாவது யமன் நாட்டைச் சார்ந்த ஷிஃரா) குமைஸாஉ நட்சத்திரத்தை "ஷிஃரா ஷாமிய்யா" (அதாவது ஷாம் நாட்டைச் சார்ந்த ஷிஃரா)
தென் ஆப்பிரிக்க மாலியில் "டோகான்" என்னும் பழங்குடி மக்கள் நாட்டுப்புற பாடல்களாக பாடக் கூடிய ஷிஃரா நட்சத்திரத்தை , குஜாஆ கோத்திரத்திரர் கதைகளாக கதைக்கிறார்கள் .


குஜாஆ கோத்திரத்திலுள்ள "அபூ கப்ஸா "என்ற தலைவர்தான் இதனை வணங்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார் . குறைஷியர் சிலைகளை வணங்கக் கூடியவர்கள் .அபூகப்ஸா , சிலைகளை வணங்காமல் நட்சத்திரத்தை வணங்கியதால் அபூகப்ஸா மீது குறைஷியர்களுக்கு வருத்தம் .
நபி (ஸல்) அவர்கள் குறைஷியரின் சிலை வணக்கத்தை எதிர்த்ததால் , நபியவர்களையும் "அபூகப்ஸா "என்றே அழைக்கலாயினர் . பின் யார் சிலை வணக்கத்தை எதிர்த்தாலும் அவர்களுக்கு "அபூகப்ஸா "என்றே அழைக்கலாயினர் . உண்மையில் இதே அபூகப்ஸாவின் வமிசத்தைச் சேர்ந்தவர்தான் அப்துல் முத்தலிபு. இவரின் தாயார் அபூகப்ஸாவின் வம்சத்தில் பிறந்தவர் .

ஆனால் நபி (ஸல்) சிலை வணக்கக் காரர்களான குறைஷியர்களை எதிர்ப்பது போன்ற தாய் வழி வம்சத்தார்களான ஷிஃரா நட்சத்திரத்தை வணங்குபவர்களையும் எதிர்த்தார்கள். இது இருக்கட்டும்.
காரல் சாகன் கார்னெல் பல்கலைக்கழகத்தின் வான இயல் நிபுணர் அவர் கூறும் போது, " ஷிஃரா நம் சூரியனை விட ஒன்னறை மடங்கு பெரியது . இந்த ஷிஃரா சூரியனை சுற்றி வரக்கூடிய கிரகங்களில் ஒன்றில் வேற்று கிரக மனிதர்கள் வாழலாம் அவர்கள் விண்வெளிப் பற்றி நிரம்ப அறிவு நம்மை விட அதிகம் பெற்று இருக்கலாம். அவர்கள் ஒவ்வொரு கால கட்டத்தில் அதாவது ஆது வாழும் காலம் முதல் அரபியர்களான குஸாஆ கோத்திரத்தார்கள் வாழும் காலம் வரை ஏன் இன்று வரை கூட நம் மக்களோடு மக்களாக கலந்து ஷிஃரா பற்றிய சேதியை சொல்லி வரலாம்" என்கிறார் .

இது பற்றி "காஸ்மிக் கனெக்ஷன் " என்ற ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்
மக்ரியா என்னும் பிரிட்டிஷ் விண்வெளி விஞ்ஞானி "டோகான் பழங்குடி மக்கள் பாலைவனத்தில் ஏற்படும் கானல் நீர் பிம்பத்தில் மிராஜ் ரூபத்தில் ஷிஃராவை பார்க்கிறார்கள் என்றும்,அதிலும் ஷிஃரா நட்சத்திர கிரக மக்கள் பற்றி தன் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார் .
செவ்வாய் கிரகத்தை வெறுங் கண்ணால் பார்க்க முடியும் .அப்படி பார்க்கும் போது வெளிச்சம் குறைவாக அதன் பக்கத்தில் 2 நட்சத்திரங்கள் தெரியுமாம் . அந்த நட்சத்திரத்தில் உள்ள ஏதோ ஒரு கிரகத்தில் மனிதர்கள் வாழ்கிறார்களாம் . அவர்கள் ஆது மாதிரி உயரமான பலசாலிகளாக இருந்து , நம்மை விட அதிகமாக மின்காந்த அலைவரிசைப் பயன் படுத்தி , உங்க செல்போனுக்கு message கூட அனுப்பலாம்.
(மீள் பதிவு)

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 14

குர்ஆன் கூறும் பெருவெடிப்புக் கோட்பாடும்,]



பேரழிவுக் கோட்பாடும் - BIG BANG TO BIG RIP

அகில உலகத்தாரின் இறுதி வேதமான அல்குர்ஆனில் ஒரே அத்தியாயத்தில் -அல் அன்பியா 21வது அத்தியாயத்தில்.. இருவேறு வசனங்களில் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னால் நடந்து முடிந்த, நாம் காணும் இப்பிரபஞ்சம் அமைவதற்கு காரணமாய் அமைந்த பெரு வெடிப்பு நிகழ்வையும், எதிர்காலத்தில் இதே பிரபஞ்சத்துக்கு நேரவுள்ள பேரழிவு நிகழ்வையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெருவெடிப்புக் கோட்பாட்டைப் பற்றி திருக்குர்ஆன் :

"வானங்களும், பூமியும் இணைந்திருந்தன என்பதையும், அவ்விரண்டையும் நாமே பிரித்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொரு பொருளையும் தண்ணீரிலிருந்து அமைத்தோம் என்பதையும், (நம்மை) மறுப்போர் சிந்திக்க வேண்டாமா? அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டாமா?" (குர்ஆன் 21:30)

பேரழிவுக் கோட்பாட்டைப் பற்றி திருக்குர்ஆன் :

"எழுதப்பட்ட ஏடுகளைச் சுருட்டுவது போல் வானத்தை நாம் சுருட்டும் நாளில் முதல் படைப்பை நாம் துவக்கியது போல் அதை மீண்டும் நிறுவுவோம். இது நமது வாக்குறுதி. நாம் (எதையும்) செய்வோராவோம் " குர்ஆன் (21: 104)

நாம் வாழும் பூமி உட்பட இப்பிரபஞ்சம் முழுவதற்கும் நிகழவிருக்கும் பேரழிவையும், பின் பெருவெடிப்புக்கு முன்பு இருந்த இயல்பு நிலையில் பிரபஞ்சம் மீட்டப்படும் என்பதையும் பின் வரும் வசனம் தெளிவாக எச்சரிப்பதானது, விஞ்ஞான உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

மானிடம் படைக்கப்படுவதற்கு 13 பில்லியன் வருடங்களுக்கு முன் நிகழ்ந்ததாகக் கருதப்படும் பெருவெடிப்பு நிகழ்வை இறுதி வேதம் அல்குர்ஆன், படிப்பினைதரும் ஒரு தகவலாக மாத்திரமாகவும், இறைவனின் தூது செய்தியை நிராகரிப்பவர்களுக்கு ஒரு அத்தாட்சியாகவும் ஒரு வசனத்தில் கூறிக் காட்டுகின்றான்.

அதேவேளை பேரழிவு தரும் யுக அழிவு தின நிகழ்வுடன் மனித குலம் நேரடியாக தொடர்பு கொள்ளப்படுவதாலும், அதன் பின் குர்ஆன் கூறும் மறு உலக வாழ்வின் துவக்கமான நீதி விசாரணைகள், நீதமான தீர்ப்புக்கள், பெருபேறுகள் வழங்கப்படல், சொர்க்கம், நரகம் எனும் மாபெறும் இறுதி தங்குமிடங்கள் வழங்கப்படுதல் என மனிதனின் இறுதி முடிவை தீர்மானிக்கும் மாபெரும் நிகழ்வு என்பதாலும், பெருவெடிப்புக் கோட்பாட்டிற்குக் கொடுக்கப்படாத முக்கியத்துவத்தை அல்குர்ஆனில் பேரழிவுக் கோட்பாட்டிற்குக் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

யுக முடிவு நாளின் அனர்த்தங்களையும், அகோரங்களையும் எச்சரிக்காத இறை வேதங்களும், இறை தூதர்களும் சொல்லாமல் இருந்ததில்லை. யுக அழிவு நாளின் திடுக்கிடும் அகோரக் காட்சிகளை கண்முன் நடப்பது போல் காட்சிப்படுத்துவதில் திருக்குர்ஆனுக்கு நிகர் அது மாத்திரம்தான்.

வானம், பூமி, சூரியன், விண்கோள்கள், கடல்கள், மலைகள்,பூமியில் வாழும் மனிதர்கள் மற்றும் உயிரினங்கள், தாவரங்கள் உட்பட பிரபஞ்சம் அனைத்தும் ஒரு நாள் அழிக்கப்படும். அந்நாளில் இறைவன் மட்டுமே நிலைத்திருப்பான் என்றும், இப்பேரழிவுத் தக்க தருணத்தில் நடந்தே தீரும் என்பதும் அல்குர்ஆனின் முதல் தர எச்சரிக்கையாக உள்ளதை அதன் வசனங்கள் உறுதிப்படுத்துகிறது. இப்பேரழிவுக் கோட்பாடு பற்றிய எச்சரிக்கையானது, அல்குர்ஆனின் உயிர் மூச்சு என்றுதான் கூற வேண்டும்.

இந்த இரு கோட்பாடுகளைப் பற்றி விஞ்ஞான உலகம்

பெருவெடிப்புக் கோட்பாட்டை விஞ்ஞான உலகம் பல ஆண்டுகளுக்கு முன்பே நிரூபித்திருப்தை நாம் அறிந்துள்ளோம். ஆனால் சமீப காலங்களில் நடந்த ஆய்வுகளின் அடிப்படையில்தான் பேரழிவுக் கோட்பாட்டையும் நிரூபித்துள்ளது.

அமெரிக்காவின் தினீஷி மாநிலத்தில் அமைந்துள்ள பென்தர்பிலீத் பல்கலைக் கழகத்தின் ஆய்வுக் குழு ஒன்று பேரழிவுக் கோட்பாடு நடக்கவிருக்கும் சாத்தியங்களை உறுதிப்படுத்தியுள்ளது.
சுமார் 13 பில்லியன் வருடங்களுக்கு முன் நிகழ்ந்ததாகக் கருதப்படும் பெருவெடிப்புச் சம்பவம் தொட்டு, இன்று வரை விரிவடைந்து கொண்டே செல்லும் பிரபஞ்சமானது, இறுதியில் மாபெரும் பேரழிவை ஒரு நாள் சந்திக்கும்.
கற்பனை செய்ய முடியாத இப்பேரழிவின் விளைவாக பிரபஞ்சம் யாவும் துகள் துகளாக மாறி,அனைத்து உயிரினங்களும் அழிந்து, உயிரற்ற சமாதியாக பிரபஞ்சம் மாறிவிடும் என்றும், பெருவெடிப்புக்கு முன்பிருந்த நிலைக்கே மீண்டும் இப்பிரபஞ்சம்யாவும் திரும்பிவிடும் என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.
மேற்படி ஆய்வுக் குழுவின் தலைவர் பேராசிரியர் மெர்ஸிலோ கூறுகையில் "நாம் வசிக்கும் உலகம் உட்பட பிரபஞ்சம்யாவும் ஒன்றிணைந்த ஒரு மாபெரும் விண்கோள்களின் சங்கமமாகவும், குழுமமாகவும் இருந்தது.
பின் கதிர்வீச்சுக்களின் அதிர்வு காரணமாகவும், எரி வாயுக்களின் அழுத்தம் காரணமாகவும் பெரு வெடிப்பு ஏற்பட்டது. பின் கோள் மண்டலங்களாகவும், நட்சத்திரங்களாகவும்,சூரிய குடும்பங்களாகவும் இன்று வரை பால் வெளியில் விரிவடைந்து கொண்டுதான் இருக்கிறது.

وَ السَّمَآءَ بَنَيۡنٰهَا بِاَيۡىدٍ وَّاِنَّا لَمُوۡسِعُوۡنَ
(எவருடைய உதவியுமின்றி) நம்முடைய சக்தியைக் கொண்டே வானத்தை அமைத்தோம். நிச்சயமாக நாம் (அதனை அவர்களின் அறிவிற்கெல்லாம் எட்டாதவாறு) மிக்க விசால மாக்கியும் வைத்திருக்கின்றோம்.
(அல்குர்ஆன் : 51:47)
பின் ஒரு நாள் கோள் மண்டலங்களுக்கிடையில் மாபெரும் மோதல் உருவெடுத்து, அதன் விளைவாக கோள் மணடலங்கள் சுருங்கும் நிலையை அடையும்.
பின் அதன் இயல்பு நிலையை நோக்கி நகர ஆரம்பித்து இறுதியில் மாபெரும் பிரபஞ்ச சிதைவு ஏற்படுவதோடு, புவியில் உள்ள அனைத்து உயிரினங்களும் மறிப்பதோடு, பிபஞ்சத்தில் வெறும் ஃபோட்டான் (photon) எனப்படும் துகள்களாகவும், மறித்துப் போன நியூட்ரான்கள், எலக்ட்ரான்கள் எனப்படும் ஒளித் துகள்களாகவுமே பிரபஞ்சம் காணப்படும்.
பின் அந்த துகள்களால் மீண்டும் புதியதோர் யுகம் உருவெடுக்குமா? இல்லையா? என்பதை யாரும் அறிந்திட முடியாது என்று அவரது ஊகத்தையும் ஆய்வறிக்கையில் கூறுகிறார்.
பேரழிவுச் சம்பவம் எப்போது நடக்கும்?

பிரபஞ்சம் எதிர் நோக்கும் மாபெரும் யுக முடிவு எப்போது நடக்கும் என்பது பற்றிய ஞானம் பிரபஞ்சத்தைப் படைத்த மாபெரும் சக்தியான ஏக இறைவனிடம் மாத்திரமே உள்ளது என்பதை திருக்குர்ஆன் உருதிப்படுத்துகிறது. முஸ்லிம்களின் உறுதியான நம்பிக்கையும் அதுதான்.
உலகையே அதிர வைக்கும் பேரழிவு நாளை மனித குலத்தின் நண்மைக்காக ஏக இறைவன் குறித்த நேரம் வரைக்கும் மறைத்து வைத்திருப்பதும், பின் தவணை வரும்போது பேரழிவு நடந்தே தீரும் என்பதுதான் உண்மை.
(யுகமுடிவு நேரம் எப்போது வரும்?" என்று (முஹம்மதே!) உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். "இது பற்றிய ஞானம் என் இறைவனிடமே உள்ளது. அதற்குரிய நேரத்தில் அவனைத் தவிர யாரும் அதை வெளிப்படுத்த முடியாது. வானங்களிலும், பூமியிலும் அது மகத்தானதாக அமையும். அது உங்களிடம் திடீரென்று தான் வரும்" என்று கூறுவீராக! இது பற்றி நீர் நன்கு அறிந்தவர் போல் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். "இது பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே உள்ளது" என்று கூறுவீராக! எனினும் மனிதர்களில் அதிகமானோர் அறிந்து கொள்வதில்லை. [அல்குர்ஆன் 7: 187]
எனினும் மேற்படி ஆய்வுக் குழுவின் அனுமானங்களின்படி தற்போதிலிருந்து சுமார் 22 பில்லியன் வருடங்களுக்குள் அந்த மாபெரும் அழிவை பிரபஞ்சம் சந்திக்க நேரிடலாம் என தங்களின் ஊகங்களை வெளியுட்டுள்ளனர்.
.
இஸ்லாம் கூறும் மறு உலக வாழ்கை

மனித விஞ்ஞானத்தால் பிரபஞ்சத்துக்குள் உட்பட்ட அம்சங்களைத்தான் ஆய்வு செய்யமுடியும். பிரபஞ்ச அழிவின் பின் புதியதோர் யுகம் பிறக்கும் என்பதை இப்பிரஞ்சத்தை நிர்வகிக்கும் சக்தியான நிகரற்ற இறைவனின் வேத வசனங்களை வைத்துத்தான் நாம் முடிவு செய்ய வேண்டும்.
மறு யுக வாழ்கை எனும் அந்த நிரந்தர யுகத்தைப் பற்றியும், அதற்காக மனித குலம் தயாராக வேண்டும் என்பதும், அதில்தான் மனிதனின் நம்பிக்கைகள், நல்லறங்களுக்கேற்ப சொர்க்கம், நரகம் எனும் நிரந்தர சன்மானங்கள் வழங்கப்படும் என்பதுதான் இறுதி வேதம் அல்குர்ஆனின் அடிப்படைப் போதனையாக உள்ளது.
இந்த மாபெரும் பிரபஞ்ச அழிவின் பின்தான் முழு மனித சமூகமும் மீண்டும் எழுப்பப்பட்டு, விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு, ஏக தெய்வ விசுவாசம் கொண்டு அதன்படி வாழ்ந்தவர்களுக்கு பேரின்பம் நிறைந்த சொர்க்கமும், நிராகரிப்பாளர்களுக்கும், இணைவைப்பாளர்களுக்கும் துன்புறுத்தும் நரகமும் பரிசுகளாக வழங்கப்படும் என குர்ஆன் கூறுகிறது.
ஆணோ, பெண்ணோ நம்பிக்கை கொண்டு, நல்லறம் செய்தால் அவரை மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச் செய்வோம்.
அந்நாளில் மக்கள் தமது செயல்களைக் காண்பதற்காகப் பல பிரிவினர்களாக ஆவார்கள்.
"அணு அளவு நன்மை செய்தவர் அதைக் காண்பார். "
"அணு அளவு தீமை செய்தவர் அதைக் காண்பார்.
[குர்ஆன் 99: 6.7,8]

ஸூர் ஊதப்படும். அல்லாஹ் நாடியோரைத் தவிர வானங்களிலும், பூமியிலும் இருப்போர் அப்போது மூர்ச்சையாவார்கள். பின்னர் மீண்டும் ஒரு முறை அது ஊதப்படும். உடனே அவர்கள் எழுந்து பார்ப்பார்கள். "
"பூமி தனது இறைவனின் ஒளியால் பிரகாசிக்கும். (பதிவுப்) புத்தகம் (முன்) வைக்கப்படும். நபிமார்களும் சாட்சிகளும் கொண்டு வரப்படுவார்கள். அவர்களிடையே நியாயமாகத் தீர்ப்பு வழங்கப்படும். அவர்கள் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள். "
"ஒவ்வொருவருக்கும் அவர்கள் செய்தவை முழுமையாக வழங்கப்படும். அவர்கள் செய்வதை அவன் நன்கு அறிந்தவன். [அல்குர்ஆன் 39: 68-70]
பிரபஞ்சம் படைக்கப்பட்டதிலிருந்து அதன் முடிவு வரை இத்தனை தெள்ளத்தெளிவாக குர்ஆனைத் தவிர எந்த வேதமும் சொல்லியதில்லை .

விஞ்'ஞானம்' என்னும் அறிவியல் 15

இமாம் மஹ்தி (அலை) அவர்கள்



இமாம் மஹ்தி (அலை) அவர்கள் மறுமையின் அடையாளங்களில் ஒன்றாக இருக்கின்றார்கள். அவர்கள் நபி ஈஸா அலை அவர்கள் இவ்வுலகில் இறங்கு முன்பு இவ்வுலகிற்கு வருகை தருவார்கள் என ஹதீஸ்கள் சான்று பகர்கின்றன.
இமாம் மஹ்தி (அலை) அவர்கள் இறுதித் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வழித்தோன்றல் என்பதையும், இமாம் மஹ்தி (அலை) அவர்களின் இறுதி நாளின் சமீபமாக அவரின் வருகையினால் மனித சமூகம் தனது யதார்த்தமான வாழ்வை அடைந்து கொள்ளும் என்பதையும் ஹதீஸ்கள் அறிவிக்கின்றன.
என் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், அரபிகளை ஆட்சி செய்யும் வரை இவ்வுலகம் முடியாது. அவரது பெயர் என் பெயரை ஒத்ததாகும். (இப்னு மஸ்ஊத் (ரலி) திர்மிதி, அபூதாவூத்)
என் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஆட்சியமைப்பார். அவர் பெயர் என் பெயரை ஒத்திருக்கும். (இப்னு மஸ்ஊத் (ரலி) திர்மிதி)
இவ்வுலகில், ஒருநாள் மட்டுமே எஞ்சியிருந்தால் என் குடும்பத்தைச் சேர்ந்த அவர் ஆள்வதற்காக அந்த நாளை அல்லாஹ் நீட்டுவான். (நூல்கள்: திர்மிதி 2332, இப்னுமாஜா
4085)
நபி ஈஸா (அலை) அவர்கள் உலகில் தரிசனம் பெற்ற பின்னரே இமாம் மஹ்தி (அலை) அவர்கள் இறையடி சேர்வார்கள். அவ்வாறு வெளிப்படும் போது இவர் தான் இமாம் மஹ்தி (அலை) என்று அப்போது வாழும் மக்கள் சாதாரணமாகவே சிரமம் இன்றி புரிந்து கொள்வார்கள்
காரணம் இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களால் அழிவு நாளின் அடையாளமாக முன்னறிவிப்பு செய்யப்பட்ட எந்த ஒன்றும் மனித சமுதாயம் அனைவரும் சுயமாக ஆய்வு செய்து தான் கண்டு பிடிக்க இயலும் என்ற நிலையில் இறைவனால் ஏற்படுத்த படவில்லை
என் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அரபுகளை ஆட்சி செய்யும் வரை இவ்வுலகம் முடியாது.அவரது பெயர் என் பெயரை ஒத்ததாகும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அறிவிப்பவர்: இப்னு மஸ்வூது (ரலி), நூல்கள்: திர்மிதி 2331, அபூதாவூது 4269)
அவரது தந்தையின் பெயர் எனது தந்தையின் பெயரை ஒத்திருக்கும்...' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி), நூல்: அபூதாவூது 4269)
அவர் ஏழு வருடங்கள் ஆட்சி செய்வார்' என்று என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அறிவிப்பாளர். அபூஸயீத் அல்குத்ரீ
(ரலி), நூல்: அபூதாவூது 4272)

போரும் கொடுங்கோன்மையும் நிரம்பி இருக்கும் இப்பூமியில் அமைதியையும் நீதியையும் நிலை நிறுத்துவார்.அவர் ஏழு வருடங்கள் ஆட்சி செய்வார்' என்று என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அறிவிப்பாளர்: அபூஸயீத் அல்குத்ரீ (ரலி), நூல்: அபூதாவூது 4272)
முஸ்லிம்களின் மார்க்க அறியாமையை பயன்படுத்தியே பல கயவர்கள் தங்களை இமாம் மஹ்தி என்றும் ஈஸா நபி நான் தான் என்றும் வாதிட்டுள்ளனர்
அதற்கு காரணம் முன்னறிவிப்பு தொடர்பான ஹதீஸ்களை மக்கள் அறிந்து வைக்காமல் இருப்பதும் முன்னறிவிப்பு தொடர்பான சில ஹதீஸ்களை மறைப்பதும் தான் மூல காரணம்
ஆனால் நபியவர்களின் வழிகாட்டல் குழப்பத்திற்கு அப்பாற்பட்டது
இமாம் மஹ்தி (அலை) அவர்களை பற்றி குறிப்பிட்டுள்ள இன்னும் சில ஹதீஸ்கள் பொய்யர்களை தோலுரிக்கும் விதமாக அமைந்துள்ளது
இமாம் மஹ்தி என்று வாதிடுவோர் எந்த பரம்பறை ? மஹ்தீ எனது குடும்பத்தைச் சேர்ந்தவராவார் பாத்திமாவின் சந்ததிகளில் உள்ளவராவார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ?(அறிவிப்பவர்: உம்முஸல்மா (ரலி), நூல்: அபூதாவூது 4271)
மஹ்தீ எனது சந்ததியைச் சேர்ந்தவராவார், அவர் படர்ந்த நெற்றியையும் எடுப்பான மூக்கையும் உடையவராவார்
போரும் கொடுங்கோன்மையும் நிரம்பி இருக்கும் இப்பூமியில் அமைதியையும் நீதியையும் நிலை நிறுத்துவார்
அவர் ஏழு வருடங்கள் ஆட்சி செய்வார்' என்று என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அறிவிப்பாளர்: அபூஸயீத் அல்குத்ரீ (ரலி), நூல்: அபூதாவூது 4272)

உயரமானவராக இருக்க மாட்டார்கள்' என்பது நபிமொழி
(அறிவிப்பாளர்: அபூஸயீது அல்குத்ரீ (ரலி), நூல்: இப்னுமாஜா 4083)
இவ்வுலகின் ஒரு நாள் மட்டும் மீதமிருந்தால், எனது குடும்பத்திலிருந்து ஒரு மனிதரை அல்லாஹ் எழச் செய்வான் போர்களால் நிரம்பி இருக்கும் இந்த பூமியில் அவர் நீதியை நிலை நிறுத்துவார்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அறிவிப்பவர்: அலி (ரலி) நூல்: அபூதாவூது 4270)

இவ்வுலகின் ஒரு நாள் மட்டும் மீதமிருந்தால்' என்ற வார்த்தைகளும் உலக முடிவுக்கு மிக நெருக்கமாக மட்டுமே இமாம் மஹ்தி(அலை) அவர்கள் வருவார் என்று தெளிவாக தெரிகிறது
1- இஸ்லாமிய ஆட்சியாளராக வருகை தருவார்
2- மக்களுக்கு செல்வத்தை வாரி வழங்கும் அளவு அரசாங்கத்தை வளப்படுத்தி இருப்பார்
3- பாத்திமா(ரலி) அவர்களின் பரம்பறையாகவே இருப்பார்
4-தன்னை நபி என்று வாதிட மாட்டார்
5- குர்ஆன் சுன்னாவை மட்டுமே கடைபிடிப்பார்
6- உலகம் முழுதும் போர்களமாக உள்ள சூழலில் தான் வருகை தருவார்
தன்னை மஹ்தி என்று வாதிட்ட காதியானிகளின் தலைவன் பொய்யன் மிர்ஷா குலாம் அஹ்மத் என்பவன் இதில் எந்த தகுதிகளையும் பெறவில்லை
மாறாக தன்னை நபி என்று வாதிட்டு புது கொள்கையை உருவாக்கி புது ஷரீஅத்தை உருவாக்கியவன் ஆவான்
இது மஹ்தியின் நூற்றாண்டு என்று சொல்வதற்கு காரணம்
1. குராசான் பகுதி கறுப்பு கொடி வந்தால் மஹ்தியை எதிர்பார்க்க வேண்டும். Ref: Ibn majah hadhis # 4222.
2. கருப்பு கொடி ஜெரூசலம் வந்து சேரும்வரை எந்த சக்தியும் அவர்களை தடுக்க முடியாது என்ற ஹதீஸ். அப்படி என்றால் ஜெருசலம் முஸ்லிம்களிடமிருந்து பறிக்கபடும்போது இது நடக்கும். Ref: Thirmidhi hadhis #2438.
3. ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒரு மாற்றம் அல்லது முன்னேற்றம் நிகழும். அதனால் போன நூற்றாண்டில் கருப்புகொடி வந்தது இந்த நூற்றாண்டில் மஹ்தி அலை வரலாம். Ref Abudawood hadhis # 4291
4. 2050 ல் இஸ்லாம் அதிகரித்துவிடும் என்ற கணிப்பு உள்ளது. மஹ்தி அலை வருவதற்கு முன் ரோமர்கள்தான் அதிகம் இருப்பார்கள் ஹதீஸ். Ref Muslim hadhis # 7462
5. தபரியா ,ஜூஹ்ர் , யூப்ரிட்டஸ் நீர் நிலைகள் போன நூற்றாண்டு வரை நீர் அதிகம் இருந்தது. இந்த நூற்றாண்டு ஆரம்பத்திலேயே 80% வற்றிவிட்டது. Ref: muslim 7573 &7454
6. பைசன் தோட்டம் பழங்கள் கொடுக்காது. இப்போது அது சுற்றுலா நகரமாக மாறிகொண்டிருக்கிறது. Ref: Muslim hadhis 7573
7. சிரியாவில் பெண்கள் குழந்தைகள் என்று பார்க்காமல் கொல்லும் ஒருவன் (குறைஷி வம்சத்தை சேர்ந்தவன்) மஹ்தி அலை வருவதற்கு முன் தோன்றுவான். Ref mustadark Al hakim & Abu dawood hadhis # 4273
8. டமாஸ்கஸ் உம்யுன் என்ற இடத்தை தவிர மற்ற அனைத்து சிரியா பகுதிகளும் மஹ்தி அவருமுன் ரோமர்கள் கட்டுபாடிற்கு சென்றிடும். Ref Abu dawood book 42, hadhis #43
9. தஜ்ஜால் வருமுன் மழை மற்றும் பூமி நீர்மட்டம் குறந்து விவசாயம் அழியும். Ref Ibn majah hadhis 4215
10. ஈராக் சிரியா அழிவில் இருக்கும் அதன்பின் மஹ்தி அலை வருவார்கள் ref Muslim hadhis # 7499.
இமாம் மஹ்தி அலைஹிவஸ்ஸல்லம் அவர்களின் காலம் சம்மந்தமாக ஹதீஸில் கூறப்பட்ட சில சம்பவங்கள் (போர்கள்).
1. குராசான்:-

இது அஃப்கானிஸ்தான் மற்றும் அதை சுற்றியுள்ள நாடுகளின் சில பகுதிகள். இங்கிருந்து கருப்புகொடி கூட்டம் வரும் அந்த கூட்டம் ஜெருசலத்தை அடையும் வரை எந்த சக்தியாலும் அவர்களை தடுக்க முடியாது. அவர்களிலிருந்து மஹ்தி வெளிபடுவார்கள். (Ref: இப்னுமாஜா 4222. 4220)

2. மக்கா மதீனா:

மஹ்தியின் அறிமுகம்

இங்குதான் மஹ்தி அவர்கள் தம் 40 ஆம் வயதில் மதீனாவிலிருந்து மக்காவிற்கு செல்வார்கள். ரமலானில் வானிலிருந்து பெரும் சப்தம் ஏற்படும் 70,000 பேர் மடிவார்கள், 70,000 பேர் செவிடாவார்கள். ஷவ்வாலில் புறச்சியேர்ப்படும், துல்காய்தாவில் ஹஜ் யாத்திரையாளர்கள் சூரையாடப்படுவார்கள். அது ஹஜ் மாதமாகும் மினாவில் சில இனத்தாரிடையே சண்டை நடக்கும் ஜும்ராத் வரை இரத்தங்கள் ஓடும்.(ref : Hammad book kithab Al fitn)

அரஃபாவில் தொழவைக்க இமாம் இருக்க மாட்டார் அந்த சமையம் காபத்துல்லாஹ்வில் மக்கள் மக்காமே இப்றாஹீமுக்கும் ஹஜ்ருல் அஸ்வத்துக்கும் இடையே ஒரு மனிதரை கண்டு பையத் செய்வார்கள்.

அப்போது மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையே உள்ள பைதா என்ற இடத்தில் இவரை எதிர்க்க டமாஸ்கஸிலிருந்து குறைஷி வம்சம் சேர்ந்த கொடுங்கோளன் (பெண்களையும் குழந்தைகளையும் விட்டுவைகாமல் கொல்பவன்) இவன் அனுப்பும் ராணுவம் பூமிக்குள் புதையும். அப்போதுதான் அந்த மனிதர் மஹ்தி என்று அனைவரும் அடையாளம் காணுவார்கள். அதன்பின்

ஈராக் சிரியாவிலிருந்து கூட்டம் கூட்டமாக வந்து மஹ்திக்கு பையத் செய்வார்கள்.

முஹறம் மாதத்தின் ஆரம்பம் இந்த உம்மத்திற்கு கடும் துன்பமாக இருக்கும் மக்கள் அதிகம் கொல்லப்படுவார்கள், முஹறம் முடிவில் துன்பம் நீங்கிவிடும். (ref: tabrani),

மஹ்தியை எதிர்த்து குறைஷி வம்சத்தை சேர்ந்த அவன் (டமாஸ்கஸை சேர்ந்தவன்) போர் தொடுப்பான். அல்லாஹ் மஹ்திக்கு வெற்றியை வழங்குவான். அதன்பின் மஹ்தி (அலை)

மதீனாவில் 7 அல்லது 9 ஆண்டுகள் கிலாபத் (நபி வழியில்) ஆட்சி புரிவார்கள் பூமி செழிப்பாகும்.

(Ref: Abu dawood 4273. & Mustathar Al hakim.)

3. தயாலாம்:

ஈரானில் வடக்கே உள்ள ஒருஇடம் அதையும் துர்க்கியையும் மஹ்தி அவர்கள் தனக்கு உடமையாக்கி கொள்வார்கள்.(Ref Ibn majah 2884 book 24)

4.ஆமாக் மற்றும் டாபிக்

(அமாக் துர்க்கியின் தெற்கு பகுதியில் உள்ளது)மற்றும் டாபிக் (சிரியாவின் மேற்கு பகுதியில் உள்ளது).

இங்கு (இல்லுமினாட்டிகளான) ரோமர்களுக்கு எதிராக போர் செய்ய மதீனாவிலிருந்து படை செல்லும்.

(ரேமர்கள் :இஸ்ஹாக் அலை , மகன் ஏசா அவர்களின் வம்சத்தில் வந்தவர்கள் ரோமர்கள்).

இது மஹ்தி அவர்கள் காஃபிர்களுக்கு எதிராக செய்யும் முதல் போர். மிக பிரம்மாண்டமான போர். 80 கொடிகளின் கீழ் ரோம படை இருக்கும் , ஒவ்வொரு கொடி படையிலும் 12,000 பேர் இருப்பார்கள். அந்த மதீனா படையில் நூற்றுக்கு 99 பேர் ஷஹீத் ஆவார்கள். ஒரு பிரிவினர் புறமுதுகிட்டு ஓடும். அல்லாஹ் அவர்களை மன்னிக்க மாட்டான். ஒரு பிரிவினருக்கு அல்லாஹ் வெற்றியை தருவான். இந்த போருக்கும் கான்ஸ்டாட்டினோபல் வெற்றிக்கும் இடைப்பட்ட காலம் 6 வருடங்கள். (ref Muslim book 55: 7460, Abudawood book 39: 6)

5.கான்ஸ்டாட்டினோபல் வெற்றி :

இது துர்க்கியை குறிக்கும்.

இங்கு ஆயுதம் இன்றி போரில் வெற்றி கிடைக்கும்.

70,000 பனி இஸ்ஹாஃக் சந்ததியினர் (ரோமர்கள், யூதர்கள் மற்றும் மற்ற இஸ்ரவேலர்கள்). ஒன்றுகூடி மஹ்தியை எதிர்ப்பார்கள். ஆனால் மஹ்தி படை ஆயுதம் ஏந்தி போரிடாமல் கலிமா தக்பீர் "லாயிலாஹா இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர்" என்று சொல்வார்கள் ஒரு பகுதி வீழ்ந்துவிடும். மறுமுறை சொல்வார்கள் படையின் மறுபகுதி வீழும். மற்றொரு முறை சொல்வார்கள் வாசல் திறந்துவிடும் வெற்றிகிடைத்துவிடும். தஜ்ஜால் வருகைக்கு 7 மாதங்களுக்கு முன் இந்த வல்லமைமிக்க வெற்றி கிடைக்கும். (Muslim book 55:7517, 7460, Abudawood book 39: 5).

6. மஹ்தி அவர்களுடன் ஹிந்துஸ்தானிலிருந்து ஒரு படை ஜெருசலம் போகும்போது ஈசா அலை அவர்களை சந்திக்கும். (Musnad, hammad.(kithab Al fitan).

7. டமாஸ்கஸ்:

இது சிரியாவின் தலைநகரம். இங்குதான் ஈசா அலை அவர்களின் வருகை இருக்கும். ஈசா அலை அவர்களுடன் மஹ்தி தஜ்ஜால் படையை எதிர் கொள்ள தயாராக இருப்பார்கள். ஈசா அலை அவர்களின் மூச்சுக்காற்றை சுவாசிக்கும் எந்த இறைமறுப்பாளனும் உயிருடன் இருக்க மாட்டான். தஜ்ஜாலை பாலஸ்தீன் (இஸ்ரேலில்) லுது என்ற இடத்தில் ஈசா அலை அவர்கள் கொல்வார்கள். (Ref: Muslim book 55 : 7460, 7559)

ஹழ்ரத் மஹ்தீ (அலை) அவர்கள் வெளிப்படுவதிலிருந்து, சூர் ஊதப்படும் வரை ஏற்படும் அடையாளங்கள் பெரிய அடையாளங்கள் என்று கூறப்படும்.

பெரிய அடையாளங்கள் பத்தாகும்.

1) ஹழ்ரத் மஹ்தீ (அலை) அவர்கள் வெளிப்படுதல்.
2) தஜ்ஜால் வெளியாகுதல்.
3) ஹழ்ரத் ஈஸா (அலை) அவர்கள், வானத்திலிருந்து இறங்குதல்.
4) யாஜுஜ் மாஜுஜ் கூட்டத்தினர் வெளியாகுதல்.
5) மூன்று பெரும் பூகம்பங்கள் உண்டாகும். அவற்றில் ஒன்று கிழக்கிலும், இன்னொன்று மேற்கிலும், மற்றொன்று அரபு தேசத்திலும் ஏற்படும்.
6) வானில் இருந்து புகை மூட்டப்ப்படும். புகை கிளம்பும்.
7) சூரியன் மேற்கிலிருந்து உதயமாகும்.
😎"தாப்பத்துல் அர்மூ" எனும் ஒரு அதிசய ஆச்சர்யமான பிராணி பூமியிலிருந்து புறப்படும்.
9) யமன் தேசத்திலிருந்து நெருப்பு வெளியாகுதல்.
10) நறுமணமுள்ள ஒரு காற்று வீசுதல். அதனால் முஃமின்கள் அனைவரும் இறந்துவிடுவார்.
இந்த அடையாளங்கள் அனைத்தும் வந்த பின்னர் கியாமத் நாள் திடீரென்று ஏற்படும். (அபூ சுரைஹா(ரழி) முஸ்லிம்:7468).
இந்த பத்து அடையாளங்களில் மூன்று அடையாளங்கள் மிகவும் முக்கியமானவை. அந்த அடையாளங்கள் ஏற்படும் முன் ஒருவர் ஈமான் கொண்டால் மட்டுமே அதனால் பயன்கிட்டும். அந்த அடையாளங்கள் ஏற்பட்ட பின் ஈமான் கொண்டால், அந்த ஈமானுக்கு இறைவனிடம் மதிப்பே இருக்காது. அவற்றில் ஒரு அடையாள மாகவும் முஹம்மது நபி (ஸல்லல்லாஹூ) அவர்கள் தஜ்ஜாலை குறிப்பிட்டார்கள்.
1) சூரியன் மேற்கில் உதிப்பது.
2) தஜ்ஜால்.
3)அதிசயப் பிராணி.
ஆகிய மூன்று அடையாளங்கள் தோன்றி விடுமானால், அவற்றுக்கு முன்பே ஈமான் கொண்டிருந்தாலே தவிர, எவருக்கும் அவரது ஈமான் பயனளிக்காது என்று முஹம்மது நபி (ஸல்லல்லாஹூ) அவர்கள் கூறினார்கள் (முஸ்லிம், இப்னுமாஜா)

அறிவு என்னும் அற்புதம் 1
(அறிவு - பர்ளு கிபாயா)

அறிவு பாராட்டப்படுவது போல், பிறருக்கு அறிவுறுத்துவதும் பாராட்டப்படுகிறது. கல்விக்கு பெருமை கொடுத்த இஸ்லாம் கற்பிக்கும் அறிஞர்களுக்கும் பெருமை கொடுத்திருக்கிறது

இஸ்லாம் பொதுவாக கல்விக்கும் கல்வியாளர்களுக்கும் அதிகமான முக்கியத்துவமளித்த மார்க்கமாகும். சிந்திப்பது, ஆராய்ச்சி செய்வது, கற்பது, வாசிப்பது போன்ற செயற்பாடுகளை அது ஒரு வாஜிபாகவே கருதுகின்றது.

குர்ஆனின் முதல் வசனம் ஓதுவீராக! வாசிப்பீராக! என்ற பொருள்களைத் தரும் 'இக்ரஃ' எனும் சொல்லாகும்.பேனாவின் மீது சத்தியமாக! என்று இன்னுமொரு மக்கீ வசனம் ஆரம்பிப்பதிலிருந்தும் இந்த உண்மையைப் புரியமுடியும்.

அறிவு தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமை.
(இப்னு மாஜா)

(நபியே) இவர்களுடைய அறிவு பறந்து விடக்கூடிய நாளை இவர்கள் சந்திக்கும் வரையில் நீங்கள் இவர்களை விட்டு விடுங்கள் குர்ஆன் (52:45)

'அறிவு (உலகிலிருந்து) உயர்த்தப்படுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்'(புகாரீ,முஸ்லிம்) போன்ற ஹதீஸ்களும் அறிவின் முக்கியத்துவத்துக்கான சான்றுகளாகும்.

இறைவன் கூறுகிறான் : "உங்களில் நம்பிக்கை கொண்டவர்களுக்கும், அறிவு பெற்றவர்களுக்கும் இறைவன் பல படித்தரங்களைக் கொடுக்கிறான்"

"நம்பிக்கையாளர்களை விட அறிஞர்கள் உயர்ந்தவர்கள். இவ்விரு சாராருக்கும் இடையே உள்ள தூரம் மிக நீளமானது என்பது இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கருத்து

இதோ மனிதனைப் பார்த்து இறைவன் கேட்கிறான் : "அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாக முடியுமா ?குர்ஆன் (39 : 9)

"இறைவனுக்கு அஞ்கிறவர்கள் அறிஞர்களே !" என்னும் கருத்து திருக்குர்ஆனில் வேறு ஒரு இடத்தில் காணப்படுகிறது

"மானிடர்களே உங்கள் மானத்தை மறைத்துக் கொள்வதற்கு நாம் உடைகளை கொடுத்தோம் " என்ற இறை வசனத்தில் ' உடை ' என்பது ஒரு குறியீடு. உடை என்னும் வார்த்தை அறிவையே குறிக்கிறது.

அது அறியாமை என்னும் அவமானம் ஏற்படாதபடி தடுக்கிறது. மனிதனுக்கு உடையினால் பெருமை கிடைப்பது போல அறிவினாலும் பெருமை கிடைக்கிறது

எனவே, மனித சமூகத்தின் ஈருலக விமோசனத்துக்குத் தேவையானது என கருதப்படும் எந்தவொரு அறிவும் பயனுள்ளதாகவே அமையும்.

அது மார்க்கத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டதாகவோ உலக விவகாரங்களுடன் நேரடியாக சம்பந்தப்பட்டதாகவோ அமைந்திருந்தாலும் சரியே. அந்த அனைத்து கல்வி ஞானங்களிலும் ஈடுபடுவதும், கற்பதும், கற்பிப்பதும் தவிர்க்க முடியாத 'பர்ளு கிபாயா' வாக அமையும்.

அந்தவகையில், குர்ஆன், சுன்னா, பிக்ஹ், அகீதா, ஸீரா போன்ற மார்க்கத்துடன் நேரடியாகத் தொடர்பான துறைகளில் நிபுணத்துவம் மிக்க உலமாக்களை உருவாக்குவது போலவே,

மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்ட அறிஞர்கள், தொழிநுட்பவியலாளர்கள், விஞ்ஞானிகள், ஊடகவியலாளர்கள் போன்ற உலக விவகாரங்களோடு தொடர்பான அறிவுகளில் ஆழமான அறிவு கொண்டவர்களை உருவாக்குவதும் 'பர்ளு கிபாயா'வாகவே கருதப்படும்.

மருத்துவம், விவசாயம், பொறியியல், கணிதம், தொழிநுட்பம், தகவல் தொழிநுட்பம், தாவரவியல், விலங்கியல், வானவியல், புவியியல், வர்த்தகம், நிதியியல், உளவியல் போன்ற இன்னோரன்ன உலக அறிவுகள் மனித வாழ்வின் இயக்கத்துக்கு இன்றியமையாதவைகளாகும்.

உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு போன்ற மனித அடிப்படைத் தேவைகளை சிறப்பாக அமைத்துக்கொள்ளவும் அறிவீனம், வறுமை, நோய் போன்றவற்றை இயன்றவரை தவிர்க்கவும், பொருளாதார ரீதியாக, நாகரீக ரீதியாக முன்னிலை பெறவும் சுயகௌரவத்தோடு வாழவும் இந்த கலாஞானங்கள் அவசியப்படுகின்றன.

மார்க்கக்கல்வி என்று மக்களால் அடையாளப்படுத்தப்படும் கலாஞானங்களைப் பொறுத்தவரையில் கூட அவற்றைப் படிப்பதும் 'பர்ளு கிபாயா'வாகும். ஏனெனில்,மார்க்கக் கல்வி மனித வாழ்வுக்கு இன்றியமையாததாகும்.

மார்க்கக்கல்வி மூலம் ஒருவர் தான் யார்? தன்னைச் சூழவுள்ள பிரபஞ்சம் ஏன் படைக்கப்பட்டது? தனது வாழ்வின் இலட்சியம் யாது? தன்னைப் படைத்தவன் யார்? போன்ற அடிப்படையான கேள்விகளுக்கு விடையைப் பெற்றுக் கொள்கிறார்.

அவருக்கு உலகக் கல்விகளில் இவற்றுக்கான விடைகள் கிடைக்கமாட்டாது. மனிதனின் உரிமைகள், கடமைகள் யாவை என்பதை மார்க்கக் கல்வியின் மூலமே அறிய முடியும். குப்ர், ஷிர்க், நிபாக், பெரும்பாவங்கள், நன்மை, தீமை, ஒழுக்க விழுமியங்கள் போன்றவற்றை அறிவதற்கும் மார்க்கக் கல்வியே துணை செய்கிறது

அந்தவகையில், மார்க்கக் கல்வியை கற்பது ஒரு வாஜிபாகவும் மாறுகிறது. இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய இமாம்களான தபரீ, குர்துபீ, புகாரி, முஸ்லிம், மாலிக், ஷாபி, அபூஹனீபா, அஹ்மத் போன்ற ஆயிரக்கணக்கான மேதைகள் சன்மார்க்கப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்து அறிவுப் பணியைத் தம் வாழ்வின் அச்சாணியாக அமைத்ததால்தான் நாம் இன்றும்கூட முஸ்லிம்களாக வாழ்ந்து வருகிறோம்.

இந்த மார்க்கக் கல்வியைக் கற்பதற்காக ஒரு குழுவினர் தம்மை அர்ப்பணிப்பது அவசியம் என்ற கருத்து பின்வரும் குர்ஆன் வசனத்திலிருந்து தெரிய வருகிறது:

وَمَا كَانَ الْمُؤْمِنُوْنَ لِيَنْفِرُوْا كَآفَّةً فَلَوْلَا نَفَرَ مِنْ كُلِّ فِرْقَةٍ مِّنْهُمْ طَآٮِٕفَةٌ لِّيَـتَفَقَّهُوْا فِى الدِّيْنِ وَ لِيُنْذِرُوْا قَوْمَهُمْ اِذَا رَجَعُوْۤا اِلَيْهِمْ لَعَلَّهُمْ يَحْذَرُوْنَ

'விசுவாசிகள் அனைவருமே (மதீனாவிலிருந்து) யுத்தத்திற்காகச் செல்ல வேண்டியதில்லை. அவர்களது ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு சாரார் மார்க்கத்தில் ஆழமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வெளியேறிச் சென்றிருக்கக்கூடாதா?

அவர்களது சமூகத்தவர்கள் (ஜிஹாதிலிருந்து) அவர்களிடம் திரும்பி வந்தவுடன் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக இவ்வாறு செய்திருக்கலாமல்லவா? (இதன் மூலம்) அவர்கள் (அந்த அவர்களது சமூகம்;) எச்சரிக்கையாக நடந்துகொள்ளலாம் குர்ஆன் (9:122)

மேற்படி வசனம் இறக்கப்பட்ட சந்தர்ப்பம் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். அறப்போரில் பங்கெடுப்பதன் சிறப்புக்கள் பற்றி அதிகமாக அறிந்த நபித்தோழர்கள் அதற்காகச் செல்வதற்கு போட்டி போட்டதுடன் நபி(ஸல்) அவர்களை மதீனாவில் தனியாக விட்டுவிட்டு அதற்குப் போகவும் முயற்சித்தனர்.

எனவே, யுத்தத்திற்காக ஒரு குழுவினர் செல்ல பிறிதொரு குழுவினர் மதீனாவில் தங்கியிருந்து, நபி(ஸல்) அவர்கள் கூறும் ஹதீஸ்களை செவிமடுத்து, ஜிஹாதுக்காகச் சென்றவர்கள் திரும்பி வந்தவுடன் அவர்களுக்கு அவற்றை எத்திவைக்கும்படி கட்டளையிடும் மேற்படி வசனம் இறக்கப்பட்டது.

அறிவு பாராட்டப்படுவது போல், பிறருக்கு அறிவுறுத்துவதும் பாராட்டப்படுகிறது. கல்விக்கு பெருமை கொடுத்த இஸ்லாம் கற்பிக்கும் அறிஞர்களுக்கும் பெருமை கொடுத்திருக்கிறது

____

அறிவு'-ஆம், அது நாம் வானுலகு ஏறுதற்குரியவனின் சிறகு. -ஷேக்ஸ்பியர்

____

அறிவு என்னும் அற்புதம் 2

(அறிவு - மார்க்கத் தூண்)

படைப்பினங்கள் அனைத்துமே அறிஞனுக்குப் பிரார்த்திக்கின்றன "என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது மிகப்பெரும் பேறு என்பதை நான் சொல்லித்தானா நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்?

"அறிவு என்பது மனிதனின் சிறப்பைப் பல மடங்கு உயர்த்துகிறது" என்பதும் நபி (ஸல்) அவர்களின் கருத்துத்தான்

"வஞ்சகனிடம் உண்மையான அறிவு இருக்க முடியாது" என்பதும் நபி (ஸல்) அவர்கள் கூறியதுதான்.

இதைப் படிக்கும் நீங்கள், 'அறிஞர்களில் சிலர் வஞ்சகத்துடன் செயல்படுகிறர்களே?" என்று கேட்காதீர்கள். அவர்களுக்கு அறிஞர்கள் என்று பெயரிடப்பட்டாலும், உண்மையில் அவர்கள் அறிஞர்கள் அல்லர். அறிஞர்களுக்கு எது இருக்க வேண்டுமோ அது அவர்களுக்குக் கிடையவே கிடையாது.

எனவே உண்மையளவில் அவர்களை அறிஞர்கள் என்று குறிப்பிட முடியாது. இம்மையை விட மறுமை சிறந்தது என்பதை உணர்ந்து அதற்குத் தகுந்தபடி

செயலாற்றாதவர்களை நம்மால் அறிஞர்கள் என்று குறிப்பிட முடியாது. இந்தப் புனித உணர்வு வலுவடைந்து விட்டால் அப்புறம் வஞ்சகத்துக்கே இடம் இல்லாமற் போய்விடும்.

“நம்பிக்கை என்பது நிர்வாணமானது. அதற்கு ஆடை போன்றது இறையச்சம். அதிலிருந்து உருப்பெறும் பயன் அறிவு” என்பதும் அறிவை உயர்த்திக் காட்டும் நபி (ஸல்) அவர்களின் கருத்துத்தான்.

“நபித்துவத்தின் படித்தரத்திற்கு அருகிலிருப்பது அறிவு'' என்று பெருமானார் (ஸல்) மற்றோரிடத்தில் கூறியிருக்கிறார்கள்.

இதற்குரிய காரணத்தையும் அவர்கள் விளக்கி இருக்கிறார்கள்:

"திருத்தூதர்கள் கொண்டு வந்த அறிவுக்கு அறிஞர்களே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்."

அடுத்து வரும் நபி (ஸல்) அவர்களின் கருத்து அறிஞனின் சிறப்புக்குச் சரியாக விளக்கம் கொடுக்கிறது: "அறிஞனின் மரணத்தை விடச் சமுதாயத்தின் மரணம் சாதாரணமானது.

இதோ மீண்டும் பேசுகிறார்கள்: "வெள்ளி- தங்கச் சுரங்கங்களைப் போன்றவர்கள் மனிதர்கள். இஸ்லாத்திற்கு முன்னர்ச் சிறந்து விளங்கியவர்கள் இன்றைக்கும் சிறப்பிற்குரியவர்களே. ஆனால், அவர்கள் மார்க்கத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்."

"தியாகிகளின் உதிரமும் அறிஞர்களின் பேனாவிலிருந்து இறங்கிய சாயமும் ஒன்று" என்ற கருத்துப்படும்படி பெருமானார் மற்றொரு சமயம் பேசியிருக்கிறார்கள்.

அடுத்து வருவது பிறிதொரு சமயம் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து உதிர்ந்த கருத்து.

“ஒருவன் மார்க்க ஞானம் பெற்றுவிட்டால் போதுமானது, அவனுடைய காரியங்களையெல்லாம் இறைவன் முடித்துக் கொடுப்பான்.'

"மண்ணகத்துக்கு இறைவனின் பிரதிநிதி அறிஞன்.”

"என் சமுதாயத்தில் இரண்டு சாரார் இருக்கிறார்கள். அவர்கள் சீராக நடந்து கொண்டால் மக்கள் அனைவரும் சீர்பட்டு விடுவார்கள். அவர்கள் சீர்கேடான வழியில் இறங்கினால் மக்கள் அனைவரும சீர்கேட்டில் இறங்கிவிடுவார்கள்.
அறிஞர்கள், அரசியல் அதிகாரிகள்.” -

அறிஞர்களுக்கு இருக்கும் பொறுப்பு இங்குத் தெளிவு படுத்தப்படுகிறது. அரசியல் அதிகாரிகள் ஒரு விதத்தில் பொறுப்பாளிகளாக இருந்தால், வேறொரு விதத்தில் அறிஞர்கள் பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள் என்பது கருத்து.

'என்னுடைய அறிவில் முன்னேற்றம் ஏற்படாதபடி ஒருநாள் கழிந்துவிட்டால் அந்த நாளில் மங்களத் தன்மை கிடையாது.

"நமது மார்க்கத்திற்கு தூண் போன்றது அறிவு.''

தான் தானாகவே இருக்க அறிவதே உலகில் பெரிய விஷயம்.
-மான்டெய்ன்

அறிவு என்னும் அற்புதம் 3

(அறிஞர்களோ அரசர்களையே ஆள்கிறார்கள்)

அறிவைப் பற்றி பெருமானாரின் மருமகனாரான அலீ(ரலி) அவர்கள் அறிவுரை கொடுக்கிறார்கள்.

"பணத்தைவிட அறிவு சிறந்தது. ஏனெனில், பணத்தை நீ பாதுகாக்க வேண்டும்; ஆனால் அறிவு உனக்குப் பாதுகாப்பு அளிக்கும். எனவே அறிவு என்பது அதிகாரிக்கு நிகரான ஒன்று. அதற்கு முன்னால் பணம் அடிமையின் நிலையில்தான் இருக்கிறது. செலவு செய்தால் குறையக்கூடியது பணம் செலவு செய்யச் செய்யப் பெருகக் கூடியது அறிவு. எனவே பணத்தை விட அறிவு எல்லா விதத்திலும் சிறந்தது.

அபுல் அஸ்வத் கூறுகிறார்: "அறிவைவிடச் சிறந்தது. எதுவுமில்லை. அரசர்கள் மக்களை ஆள்கிறார்கள். அறிஞர்களோ அரசர்களையே ஆள்கிறார்கள்."

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் : அறிவு, பணம், ஆட்சி இந்த மூன்றில் எது வேண்டும் என்று நபி சுலைமான் (அலை) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அறிவையே தேர்ந்தெடுத்தார்கள். எனவே அவர்களுக்கு அறிவுடன் பணமும் ஆட்சியும் கொடுக்கப்பட்டன.

“மனிதன் என்றால் யார்?” என்ற வினாவுக்கு அறிஞர் இப்னு முபாரக் (ரஹ்) , "விஷயம் தெரிந்தவன்” என்று விடையளித்தார்.

இப்னு முபாரக் (ரஹ்) அவர்களின் கருத்தில் மிகப் பெரும் உண்மை ஒன்று மறைந்திருக்கிறது. மனிதனுக்கும் மிருகத்துக்குமிடையிலுள்ள திரைதான் அறிவு என்பதை அவர் நாசூக்காகச் சுட்டிக் காட்டுகிறார்.

மற்ற அனைத்தையும்விட மனிதன் உயர்ந்தவன் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. இந்த உயர்வு அவனுக்கு எதனால் கிடைத்தது? பருத்த உடலும், வலிமை பொருந்திய கரங்களும் அவனுக்கு இருக்கின்றன என்பதுதான் காரணமா? இருக்கமுடியாது.

ஏனெனில் அவனைவிட ஒட்டகமும் யானையும் பலத்தில் சிறந்தவை. ஒருகால் அவனுடைய வீரம்தான் காரணமோ? இதுவும் சரியில்லை. வனவிலங்குகள் அவனைவிட வீரத்தில் சிறந்து விளங்குகின்றன. அவன் செய்யத்துணியாத பல காரியங்களை அவை தினம் செய்கின்றன.

சமயோஜிதம் புத்திசாலித்தனம் மனிதனுக்கு இருக்கிறது என்றால்,மனிதனை காட்டிலும் பூனைக்கு தன் குட்டியை பாதுகாப்பதில் சமயோஜிதம் அதன் சக்திக்கு மீறி இருக்கிறது

இவற்றில் எதுவும் சரியான காரணமல்ல. அவன் பெற்றிருக்கும் அறிவினால்தான் அவனுக்குப் பெருமை கிடைக்கிறது. இதற்காகவே அவன் படைக்கப்பட்டிருக்கிறான்.

'ஒரு மனிதனுக்கு அறிவு கிடைத்துவிட்டால் வேறு எதுவுமே கிடைக்க வேண்டியதில்லை. ஒரு மனிதனுக்கு அது கிடைக்கவில்லை என்றால் வேறு எது கிடைத்தாலும் பிரயோசனமில்லை" என்கிறார் ஓர் அறிஞர்.

அறிஞர் முசிலி (ரஹ்) அவர்கள் இங்குத் தர்க்க ரீதியாக ஓர் உண்மையை விளக்குகிறார்.

நோயாளி ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு உணவோ தண்ணீரோ மருந்தோ கொடுக்கப் படவில்லை என்றால் அவன் இறந்து விடுவானல்லவா?” என்று கேட்டார் தமது நண்பர்களிடம்.

''ஆம்!” என்று தலையசைத்தார்கள் நண்பர்கள்.

அறிஞர் நேரடியாகப் பிரச்சனைக்கு வந்தார். “மனிதனின் உடல் நிலையைப் போன்றதுதான் அவன் உள்ளமும். அதற்குத் தொடர்ந்து அறிவு கிடைக்க வேண்டும். இல்லையேல் அது விரைவில் தன்னுடைய ஆற்றல்களை எல்லாம் இழந்துவிடும்."

இந்தக் கூற்று மறுக்க முடியாதது மட்டுமல்ல, மணியான அறிவுரையும்கூட. மனிதனின் சிறப்புக்கு அவன் பெற்றிருக்கும் அறிவே அடிப்படைக் காரணம் என்று நான் குறிப்பிட்டேனல்லவா?

அறிவு மனிதனின் உள்ளத்தில் தோன்றுகிறது. எனவே மனிதனின் உள்ளத்திற்கு எப்போதும் அறிவு கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். இல்லையேல் அது நோயுற்றுவிடும்.

இந்த நிலைமை ஒரு மனிதனுக்கு ஏற்படும்போது அதனை அவனாலேயே உணர்ந்து கொள்ள முடியாது. மக்களில் பலர் இதே நிலையில்தான் இருக்கிறார்கள். அவர்கள் தமது எதிர்காலத்தை எண்ணியும் பார்க்காமல் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். மரணம் வரும்போதுதான் அவர்களுக்குத் தெளிவு பிறக்கும். அனைவரையும் இறைவன் காப்பாற்றுவானாக!

அறிவின் சிறப்புக்கு அறிஞர் ஹஸன் (ரஹ்) விரிவுரை கொடுக்கிறார்: "தியாகிகளின் உதிரமும் அறிஞர்களின் பேனாச் சாயமும் நிறுக்கப்பட்டால், முன்னதைவிடப் பின்னதே சிறந்து விளங்கும்.'

'இறைவனே! எங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நல்லது செய்வாயாக!" என்ற பிரார்த்தனை உங்கள் மனத்தைக் கவர்ந்திருக்கலாம். இதில் 'நல்லது' எனும் வார்த்தைக்கு 'அறிவு' என்று பொருள் கொடுக்கிறார் ஞானி ஹஸன்(ரஹ்) மீண்டும் கூறுகிறார்:

"இம்மையைப் பொறுத்த மட்டில் நல்லது என்றால் அறிவையும் இறை வணக்கத்தையும் குறிக்கும். மறுமையைப் பொறுத்த மட்டில் நல்லது என்றால் சுவர்க்க வாழ்வு என்று அர்த்தம்.

சுபைர் பின் அபூபக்ருக்கு (ரலி)அவருடைய தந்தையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அடியில் இடம் பெறும் கருத்து அந்தக் கடிதத்தில் ஒரு பகுதி:

]

"உனக்கு எப்போதும் அறிவு தேவை. இதனை நீ அலட்சியம் செய்துவிட முடியாது. நீ அறிவு பெற்றுவிட்டால், உனக்குத் தேவை ஏற்படும்போது அது செல்வத்தைப் போல் பயன்படும். இது வறுமையின்போது ஏற்படும் நிலை. செல்வம் வந்துவிட்டால் உன் அறிவு உனக்கு அழகைக் கொடுக்கும்.”

இதோ அறிஞர் லுக்மான் (அலை) தமது குமாரனுக்கு அறிவுரை கூறுகிறார். இது உங்களுக்கும் எனக்கும் அறிவுரைதான்: “என் அன்பு மகனே! அறிஞர்களுடன் நெருங்கிப் பழகு. அவர்களிடம் அறிவு இருக்கிறது. அது உன் உள்ளத்தில் புத்துயிரைத் திணிக்கக் கூடும்.

- இப்படி அறிவுக்குக் கிடைத்திருக்கும் ஆதரவுக் கருத்துக்கள் எண்ணற்றவை.
____

நூல் அறிவு பேசும் ; மெய்யறிவு கேட்கும்
- ஹோம்ஸ்

அறிவு என்னும் அற்புதம் 4

(குர்ஆன் கூறும் கல்வியறிவு)

அண்ணலாருக்கு இறங்கிய முதல் வசனமே "இக்ரா" ஓதுவீராக".

கல்வியின் மூல ஆதாரம் (Fountain) திருக்குர்ஆன்தான். "அளவிலாக் கருணையுள்ள இறைவன் இந்தக் குர்ஆனை கற்றுத் தந்தான்" (55:1-2)

வாழ்க்கையின் நோக்கமும் அதனை அடையும் வழிமுறைகளுக்கான அடிப்படை கல்வியை பெறுவது ஒவ்வொரு ஆண், பெண் மீது கட்டாய கடமை.

இறைவன் நமக்களித்த அருட்கொடைகளில் மிகப்பெரும் அருட்கொடை கல்வியாகும். முதல் மனிதரான ஆதம் நபி(அலை) அவர்களை அல்லாஹ் படைத்தவுடன் மலக்குகளை அவருக்கு சஜ்தா செய்யச் சொன்னான்.

மலக்குகள் அந்த மனிதப் படைப்பின் சிறப்பை அறிய விரும்பிய போது எல்லா பொருட்களின் பெயர்களையும் சொல்லும்படி அல்லாஹ் ஏவினான். அவரும் அந்தப் பெயர்கள் அத்தனையையும் கூறினார்கள் .

ஆக மனிதனைப் படைக்கும்போதே அவனுக்குக் கல்வியையும் கொடுத்து அல்லாஹ் படைத்தான். அப்படிப்பட்ட கல்வி ஞானத்தைக் கொடுத்துதான் தன் பிரதிநிதியாக மனிதனை இந்த உலகில் அனுப்பியிருக்கிறான்.

இந்தப் பரந்து, விரிந்த உலகில் மனிதனுக்கு என்னென்ன தேவையோ அவை அத்தனையும்; இறைவன் முழுமையாக கொடுத்திருக்கிறான். அது போலவே அறிவாற்றலையும் அவனுக்கு வழங்கியிருக்கிறான்.

ஒரு கொள்கை கோட்பாட்டில் ஒருவன் நிலைத்து நிற்க வேண்டுமென்றால் அதைப்பற்றிய முழுமையான அறிவு அவனுக்கு வேண்டும். இல்லையென்றால் ஏதாவது ஓர் இக்கட்டான சூழ்நிலையில் அதை விட்டும் அவன் விலகிவிடநேரிடும். ஏனெனில் தெரியாத ஒரு விசயத்தில் மனிதன் இருப்பதற்கு சக்தி பெறமாட்டான்.

திருக்குர்ஆனில் மூஸா நபியைப் பார்த்து கிள்ரு அவர்கள் கேட்பதாக ஒரு வசனத்தை அல்லாஹ் கூறுகிறான். "மேலும் உமக்கு சரியாகத் தெரியாத விசயத்தில் எவ்வாறு உம்மால் பொறுமையாய் நிலைத்திருக்க முடியும்".(18:68). ஆக அறிவு ஞானம் இல்லாத ஒன்றில் நிலைத்து நிற்கவோ, சரிவர இயங்கவோ முடியாது.

கல்வியறிவு என்பது மனிதனை மனிதனாக, மனித
நேயமுள்ளவனாக, சீரான நேரான வளர்ச்சி பெற்றவனாக அவனை மாற்ற வேண்டும். அவனுடைய ஆளுமையை வெளிக் கொண்டு வரவேண்டும். அந்த ஆளுமை ஈமானில் தோய்த்து எடுக்கப்பட்டதாயிருக்க வேண்டும்.

அல்லாமல் வெறுமனே பொருள் சம்பாதிப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட கல்வியாக இருக்கக் கூடாது. நாம் கற்கும் கல்வி ஆன்மிகத்தையும், அறிவையும் ஒருங்கே பெற்றுத் தரவேண்டும்.

அடுத்தவரை அழிப்பதற்கு இந்தக் கல்வி பயன்படாமல் அவர்களுக்கு உதவுவதற்குப் பயன்படவேண்டும். ஆக்கப்பூர்வமானப் பணிகளுக்கு பயன்பட வேண்டுமே தவிர அழிபாதைக்கு இட்டுச் செல்லக்கூடாது.

கல்வியில் உலகக்கல்வி என்றும், மார்க்கக்கல்வி என்றும் எந்தப் பிரிவினையும் கிடையாது. நபி(ஸல்) அவர்கள் இறைவனிடம் பயனற்ற கல்வியை விட்டும் பாதுகாப்பு தேடினார்கள் என்ற அடிப்படையில் பயனுள்ள கல்வி, பயனற்ற கல்வி என்று வேண்டுமானால் பிரித்துக் கொள்ளலாம்.

எல்லாக் கல்வி ஞானமும் இறைவனிடமிருந்து வந்தவைதாம். இறைவன்தான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஞானத்தைக் கொடுக்கின்றான். எனவே எல்லாவிதமான பயனுள்ள கல்வியையும் கற்பதற்கு முயலவேண்டும். இதுபோன்ற பயனுள்ள கல்வியைக் கற்பதற்கு முயலாமல் அதில் பொடுபோக்காக இருந்த காரணத்தினால்தான் இன்றும் முஸ்லிம் சமுதாயம் முன்னேறாமல் இருக்கின்றது.

இன்றைய உலகில் மக்கள் கல்விநிலையில் பல பிரிவுகளாக உள்ளனர். ஒரு பிரிவினர் முழுமையான அறியாமையில் இருக்கிறார்கள். அறிவைத் தேடவேண்டும் என்ற சிந்தனையே இல்லாமல் இருக்கிறார்கள். மற்றொரு பிரிவினருக்கு அறிவு ஞானம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் அதைப் புறக்கணித்து விடுகிறார்கள்.

அல்லாஹ் குர்ஆனில் "அவர்களின் இறைத்தூதர்கள் அவர்களிடம் தெளிவான சான்றுகளைக் கொண்டு வந்தபோது தங்களிடம் என்ன ஞானம் இருந்ததோ அதிலேயே அவர்கள் மகிழ்ந்து போயிருந்தார்கள்".(40:83) எனக் கூறுகிறான்.

இந்த நிலைமை இன்று முஸ்லிம்களிடமும் இருக்கிறது. முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் தங்கள் நாடுகளில் கொண்டு வரும் மேனாட்டுச் சட்ட திட்டங்கள், முற்றிலும் இஸ்லாத்திற்கு எதிரான பொருளாதாரத் திட்டங்கள், நாடு முன்னேற வேண்டுமானால் இஸ்லாமியச் சட்டங்களைக் கைவிட்டு மேலை நாடுகளின் சட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்ற இவர்களின் சிந்தனை. இவர்கள்தாம் குர்ஆன், ஹதீஸ் எனும் ஞானம் கொடுக்கப்பட்டும் அதைப் புறக்கணித்து விட்டவர்கள்.

மக்களின் இன்னோர் பிரிவினரும் உண்டு. ஒருவருக்கு ஒருவர் தர்கித்துக் கொண்டு தாங்கள் சொல்வது மட்டும்தான் சரி மற்றவையெல்லாம் தவறு என்ற சிந்தனையில் இருக்கிறார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: "மனிதர்களில் சிலர் இவ்வாறு இருக்கிறார்கள். அவர்கள் ஞானம் இல்லாமல் அல்லாஹ்வைப் பற்றி தர்க்கம் செய்கிறார்கள். மூர்க்கத்தனம் கொண்ட ஒவ்வொரு ஷைத்தானையும் பின்பற்றுகிறார்கள்."
குர்ஆன் (22:03) ஆக இப்படியும் ஒரு பிரிவினர் மனித சமுதாயத்தில் எல்லா காலகட்டத்திலும் இருந்து வருகிறார்கள்.

மற்றோர் பிரிவினரும் உண்டு. இவர்கள் உண்மையான சத்தியத்தைத் தேடுகிறோம் என்ற பெயரில் அசத்தியத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள். இருளிலே சென்று சத்தியத்தின் ஒளியைத் தேடுகிறார்கள்.

இறுதியாக யூகத்தின் அடிப்படையில் தம் மனம் சொல்கின்றபடி ஒரு கொள்கையில் சென்று விடுகிறார்கள். இவர்களைப் பற்றியும் அல்லாஹ் சொல்கிறான். "நீங்கள் கற்பனையின் அடிப்படையிலேயே செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்".(6:148). எனவே இவர்கள் தாங்களாகவே ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு அதிலேயே சென்று கொண்டிருக்கிறார்கள்.

இவர்களல்லாமல் மேலும் ஒரு பிரிவினர் உண்டு. இவர்கள் உண்மையிலேயே அறிவு ஞானம் பெற்றவர்கள். அறிவு ஞானம் பெற்றவர்கள் அதிக நன்மை பெற்றவராவார்கள்.

அல்லாஹ் கூறுகிறான், "தான் நாடுகின்றவர்களுக்கு அல்லாஹ் ஞானத்தை வழங்குகிறான். எவருக்கு ஞானம் வழங்கப்படுகிறதோ அவர்(மெய்யாகவே) எராளமான நன்மைகள் வழங்கப்பட்டவராவார். (இவற்றிலிருந்து) நல்லறிவுடையோர் தவிர வேறெவரும் சிந்தித்துப் படிப்பினை பெறமாட்டார்கள்." குர்ஆன் (2-269)

எனவே அல்லாஹ்விடமிருந்துதான் ஞானம் கிடைக்கிறது. அவனிடம் பெறப்படும் அறிவு ஞானம் மட்டுமே சரியானது, நிலையானது. அப்படியான அறிவு ஞானம் பெற்றவர் உண்மையிலேயே அதிக நன்மைகள் பெற்றவராவார். எனவே அறிவு ஞானம் என்பது கட்டாயமாகப் பெறவேண்டிய ஒன்றாகும்.

கல்வியறிவு இல்லாதவர்கள் குருடர்களைப் போலத்தான். அல்லாஹ் சொல்கிறான், "மேலும் பார்வையற்றவனும், பார்வையுள்ளவனும் சமமாக முடியாது".(40:58)

இந்த வசனத்தில் அறிவு ஞானம் இல்லாதவரையே பார்வையற்றவர் எனச் சொல்லப்படுகிறது.எனவே கண்டிப்பாகக் கல்வி ஞானம் நமக்கு வேண்டும்.

அறிவு ஞானத்தைக் கட்டாயமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அதைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் அதிகம் வலியுறுத்தியுள்ளார்கள்.

"இரவின் ஒரு சிறுபகுதியில் கல்வி கற்பது, இரவு முழுவதும் விழித்திருந்து இறைவணக்கம் புரிவதை விடச் சிறந்ததாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.(நூல்: மிஷ்காத், அறிவிப்பவர் இப்னு அப்பாஸ்(ரலி))

"அறிவு நுட்பம் என்பது அறிவாளியின் கை விட்டுப்போன பொருளாகும். அதை எங்கு கண்டாலும் அதை பெற்றிட அவர் உரிமையுள்ளவராவார்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: திர்மிதி, அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி).

மேலும் கூறினார்கள், "இறைவன் ஒருவனுக்கு நல்லதை நாடிவிட்டால் அவனுக்கு தீனை(வாழ்க்கை நெறியை)ப் புரிந்து கொள்ளும் கல்வியை அவனுக்கு கொடுக்கிறான்". (நூல்: புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர்: முஆவியா(ரலி).

"எவரொருவர் கல்வியைத் தேடிச் செல்கிறாரோ அவருக்கு சொர்க்கம் செல்லும் பாதையை அல்லாஹ் லேசாக்கிவிடுகிறான்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்:முஸ்லிம், அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி).

மேலும் மற்றொரு அறிவிப்பில், "கல்வியைத் தேடி எவர் செல்கிறாரோ அவருக்கு சுவனத்திற்குச் செல்லும் பாதையை அல்லாஹ் லேசாக்குகிறான். மேலும் அவருக்காக வானவர்கள் இறைஞ்சுகிறார்கள். அவர்களின் இறக்கைகளை பணிக்கிறார்கள். சுவனவாசிகள் அவருக்காகப் பிரார்த்திக்கிறார்கள் கடலில் வாழம் மீன்கள் உள்பட அவருக்காக பாவமன்னிப்பு தேடுகின்றன". (அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: திர்மிதி)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், "இறைவனின் ஞானம் இந்த பூமியில் மழையைப் போல பொழிகின்றது. மழை நீரை பெற்றுக் கொள்ளும் ஒரு பூமி மிகக் கடினமுடையதாக, பாறைபாங்கானதாக உள்ளது. எனவே அது அந்த நீரை தன்னுள் எடுத்துக் கொள்ளாது, அதை தன் மேல் தேக்கியும் வைத்திருக்காது, எனவே அந்த நீர் நேராகக் கடலில் சென்று கலந்து விடும்.

மற்றொரு பூமி தன்னுள் அந்த நீரை எடுத்துக் கொள்ளாமல் அப்படியே தன்மேல் தேக்கி வைத்துக்கொள்ளும். அந்த நீரிலிருந்து அதைச் சுற்றியுள்ள தாவரங்கள், கால்நடைகள், மனிதர்கள், பயன்பெறுகின்றனர்.

மூன்றாவது பூமி வளமான பூமி! அது தன்னுள் அந்த நீரை எடுத்துக்கொண்டு அதன் மூலம் புற்பூண்டுகளையும், மரம், செடி, கொடிகளையும் முளைக்கச் செய்து மற்றவர்களுக்கு அது பலாபலன்களைக் கொடுக்கிறது. இது போலவே மூன்று விதமான மனிதர்கள் உள்ளனர்.

முதல் வகையினர்: கல்வி ஞானத்தைப் தாங்களும் பெற்றுக் கொள்வதில்லை. மற்றவர்களுக்கும் இவர்களால் பயன் இல்லை.

இரண்டாம் வகையினர்: கல்வி ஞானத்தைப் பெற்றிருந்தும் தாம் பயன் அடையாமல்; மற்றவர்களுக்குப் பயன் தருபவர்கள்.

மூன்றாவது வகையினர்: இவர்கள் கல்வி ஞானத்தின் மூலம் தாங்களும் பயன் பெறுவார்கள். மற்றவர்களுக்கும் பயன் அளிப்பார்கள்".

ஆக நாம் இந்த மூன்றாவது பிரிவினர்களாக இருக்கவேண்டும். நாமும் பலன் பெற வேண்டும். நம் மூலம் மற்றவர்களும் பலன் பெறவேண்டும். நாம் இப்போது இது போன்ற கல்வியை யாரிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும்?

அல்லாஹ் கூறுகின்றான்: "நம் வேதவசனங்களை ஓதி உணர்த்துபவரும், உங்க(ள் வாழ்க்கை நடைமுறைக)ளைத் தூய்மைப்படுத்துபவரும், உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்பிப்பவரும், நீங்கள் அறியாதவற்றை உங்களுக்குக் கற்றுக்கொடுப்பவருமான ஒரு தூதரை உங்களிலிருந்தே உங்களிடம் அனுப்பிவைத்த போது நீங்கள் பெற்ற அருட்கொடையைப் போன்றதாகும் இந்தக் கொடை". குர்ஆன் (2:151)

நாம் பெற வேண்டிய ஞானத்தைப் பெற்றுக் கொள்ளும் முதல்வழி நபி(ஸல்) அவர்கள்தான். அவர்கள் சொல்லித் தந்த விசயங்கள், நடைமுறைப் படுத்தியவை எல்லாவற்றையும் அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே நாம் செய்ய வேண்டியது, வஹியின் முலம் நபி(ஸல்) அவர்கள் எவற்றைப் பெற்றார்களோ அவற்றைக் கற்றுக் கொள்ள நாம் முயலவேண்டும். இறைவனிடம் அதிகமாக துஆச் செய்யவேண்டும்.

"என் இறைவனே! எனக்கு அதிகமான ஞானத்தை வழங்குவாயாக என்றும் இறைஞ்சுவீராக" (20:-114) என அல்லாஹ் சொல்வது போல் நாம் பிரார்த்தனை புரிய வேண்டும்.

உண்மை ஞானம் கண் முன் இருப்பதைக் காண்பதன்று, பின் வருவதை முன் அறிவதாகும்.-டெரன்ஸ்

அறிவு என்னும் அற்புதம் 5

(அறிவு என்பது ஒரு பொதுச் சொத்து)

அறிவு என்பது ஒரு பொதுச் சொத்து. அது பொது மக்கள் அனைவருக்கும் பயன்பட வேண்டும். அதனைத் தனிப்பட்ட உரிமை எனக் கருதுவது தவறு. தவறு செய்கிறவர்களுக்கு விசாரணை இருக்கத்தான் செய்யும்.

'அறிவையும் வேதத்தையும் கற்றுக் கொடுப்பார்கள்" என்று இறைவனே பாராட்டுகிறான்.

நபிதோழர் முஆது (ரலி) அவர்களைப் பெருமானார் யமன் தேசத்துக்கு அனுப்பியபோது, இப்படிக் கூறினார்கள். "உம்மால் ஒரே மனிதன் நேர்வழிக்குத் திரும்பிவிட்டால் போதுமானது. உலகிலுள்ள அனைத்தையும்விட இது மேலானது.

தீய வழியில் சென்று கொண்டிருப்பவர்களைத் திருத்த வேண்டுமானால் போதனை செய்துதான் ஆக வேண்டும்.

"மக்களுக்குக் கற்றுக் கொடுக்கும் எண்ணத்துடன் ஒருவன் ஒரே ஒரு பாடத்தைப் படித்துக் கொண்டாலும் போதும், அவனுக்கு எழுபது மேதைகளின் அந்தஸ்து கிடைக்கும்." இதுவும் நபி (ஸல்) அவர்களின் கருத்துத்தான்.

"கல்வி பெற்ற ஒருவன் அதனை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்து அதன்படி தானும் நடந்து கொண்டால், அவன் மிக உயர்ந்த கண்ணியத்துக்குத் தகுதியுள்ளவன்" என்று ஈஸா நபி கூறுகிறார்கள்.

'அன்பளிப்புகளில் சிறந்தது அறிவு" என்று மற்றோரிடத்தில் பெருமானார் கூறியிருக்கிறார்கள்.

ஒரு சமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். எதிரில் இரண்டு கூட்டங்கள் காணப்பட்டன. ஒரு சாரார் இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். மறுசாரார் அறிவுப் பாதையில் ஈடுபட்டிருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கருத்தைச் சுத்தமாகத் தெரிவித்தார்கள்: "இவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றார்கள்.இவர்களின் பிரார்த்தனையை இறைவன் நிறைவேற்றித்தான் ஆக வேண்டும் என்று சொல்ல முடியாது. நிறைவேற்றுவதும் நிறைவேற்றாமல் இருப்பதும் இறைவனின் உரிமைகள். அவன் விரும்பினால் நிறைவேற்றலாம்; இல்லையேல் பிரார்த் தனையைப் புறக்கணிக்கலாம்...

அதோ பாருங்கள். அவர்கள் அறிவுக்காக நேரத்தைச் செலவிடுகிறார்கள். இந்த வேலைக்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்" - இப்படிக் கூறிய பெருமானார் பின்னவர்களுடன் உட்கார்ந்து கொண்டார்கள்.

"மக்களின் அறியாமையைத் துடைக்க முயற்சி செய்கிறவனுக்கு எல்லாப் பொருள்களும் பிரார்த்தனை செய்கின்றன" என்பது நபிதோழர் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கருத்து.

"அறிஞர்கள் இல்லையேல் மற்றவர்கள் அனைவரும் மிருகங்களின் நிலையிலேயே இருப்பார்கள்" என்று கூறுகிறார் அறிஞர் ஹஸன் (ரஹ்) .

அதாவது அடித்தளத்தில் கிடக்கும் மனிதர்களை அறிஞர்களே தமது போதனையினால் உண்மையான மனிதர்களாக மாற்றுகிறார்கள் என்பது கருத்து.

புகழ்பெற்ற முதுமொழியொன்று அடுத்து இடம் பெறுகிறது: "தெரியாதவர்களுக்குக் கற்றுக் கொடு; தெரிந்தவர்களிடம் கற்றுக்கொள். இப்படி நீ நடந்து கொண்டால் உனக்குத் தெரியாததைத் தெரிந்து கொள்ளலாம்; தெரிந்ததைப் பசுமைப்படுத்திக் கொள்ளலாம்.'

நன்மைக்கு வழி வகுப்பவன் இறைவன் ஒருவனே.

நீ எண்ணுவது எல்லோருக்கும் சொந்தம், நீ உணர்வதே உனக்குச் சொந்தம். - ஷில்லர்

அறிவு என்னும் அற்புதம் 6

(சீன சென்றேனும் சீர் கல்வியைக் கற்றுக் கொள்)

"சீன சென்றேனும் சீர் கல்வியைக் கற்றுக் கொள்" - நபிமொழி
நபிகளாரின் காலத்தில் சீனா தேசத்தில் எந்த மத்ரஸாவும் இருக்கவில்லை ; இறைதூதர்களும் இருக்கவில்லை. எனில் அங்கே சென்று அறிவு பெறுவது என்பதன் அர்த்தம் என்ன?

சீன மொழி சாதாரணமாக ஒரு எழுத்துக்கு ஒரு பொருள் இருக்கிறது. எனவே ஒரு பொருளுக்கு ஒரு எழுத்து இருக்கிறது. அதனால் எழுத்துக்கள் எண் மொத்தம் 50,000 க்கும் மேலாக உள்ளது.

சீன எழுத்துக்கள் (漢字), சீன மொழியில் ஹான்சு (Hànzì), கொரிய மொழியில் ஹான்ஜா (Hanja), ஜப்பானிய மொழியில் கன்ஜி (Kanji) பண்டைய காலத்தில் சீனாவில் ஆக்கப்பட்ட எழுத்துக்கள் ஆகும்.

தொடக்கத்தில் சீன மொழியை எழுதுவதற்காகப் பயன்பட்டது. ஆனால் பின்னர் கொரியா, ஜப்பான், வியத்னாம் முதலிய வெளிநாடுகளில் சிறிது மாற்றி அமைக்கப்பட்டு பயன்பட்டு வந்தது.

இந்த நாடுகள் சாதாரணமாக "ஹன் எழுத்து எல்லை" என்று அடிக்கடி அழைக்கப்பட்டுள்ளன. இந்த நாடுகளுள் சீனாவைத் தவிர பிற நாடுகளிலும் ஒவ்வொரு பண்பாட்டிற்கு உரிய புதிய ஹன்ஜி எழுத்துக்கள் சில ஆக்கப்பட்டன.

சீனத்தின் எழுத்து இரண்டு பிரிவுகளைக் கொண்டது. மரபுவழி எழுத்து முறை, எளிமைப்படுத்தப்பட்ட எழுத்து முறை. எளிமைப்படுத்தப்பட்ட எழுத்து முறையே இன்று சீனாவில் நியமப்படுத்தப்பட்டுள்ளது. இது நியம மாண்டரின் பேச்சை அடிப்படையாகக் கொண்டது.

சீனப் பேச்சு மொழி இடத்துக்கிடம் வேறுபடும். ஒரு நிலப்பகுதியில் இருக்கும் மக்களின் பேச்சு மொழி வேற்று நிலப்பகுதி மக்களின் பேச்சு மொழியை விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கலாம். அப்படி இருக்கையில் அதை வேறு மொழியாகவும் வகைப்படுத்தும் முறையும் இருக்கின்றது.

பேச்சிலும் எழுத்திலும் சீனம் பல வடிவங்களைக் கொண்டிருக்கின்றது.பேச்சில் பல வட்டார மொழிகள் உண்டு. இவற்றைப் பேசுபவர்கள் ஒருவரை ஒருவர் இலகுவில் புரிந்து கொள்ள மாட்டர்கள் எனலாம்.

இவை வட்டார மொழிகளா தனி மொழிகளா என்பது சர்ச்சைக்குரிய விடயமாகும். மரபு நோக்கில் ஏழு வட்டார மொழிகள் உள்ளன. அண்மையில் மேலும் மூன்று வட்டார மொழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றுள் நியமப்படுத்தப்பட்ட மாண்டரின் சீனாவின் அதிகாரப்பூர்வப் பேச்சு மொழியாகும். இது பெய்ச்சிங்கில் பேசப்படும் மாண்டரின் வட்டார மொழியின் ஒரு பிரிவு ஆகும்.
பெரும்பான்மையான சீன மக்கள் இதையே பேசுகின்றார்கள்.

'இலகு படுத்துங்கள், கஷ்டப்படுத்தாதீர்கள். ஆசையூட்டுங்கள், வெறுப்படையச் செய்யாதீர்கள்' (புகாரி , முஸ்லிம்)

சீனாவிற்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான தூரம்
சீனாவிற்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான மொத்த நேர்கோட்டு தூரம் 6,595 கிமீ .இது ஒரு நேர் கோடு தூரம்,

சீனாவிற்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான உண்மையான பயண தூரம் அதிகமாக இருக்கலாம் அல்லது சாலையின் வளைவு காரணமாக மாறுபடலாம்.

பூமியின் மத்தியில் அதன் சுற்றளவு 40,0607 கி.மீ . சவூதி அரேபியாவிலிருந்து சீனா, பூமியின் சுற்றளவு 6-ல் ஒரு பங்கு உள்ளது.

'ஒருவர் அறிவைத் தேடி ஒரு பாதையில் சென்றால், அல்லாஹ் அதனைக் கொண்டு அவருக்கு சுவனம் செல்லும் ஒரு பாதையை இலகுபடுத்திக் கொடுக்கின்றான்.' (முஸ்லிம்)

சீன மொழி கற்பதற்கு கடினமானது. அடுத்து சவூதியிலிருந்து சீன நாடு அக்காலத்தில் கடினமான பாதைகள் கொண்ட தொலைதூரப்பயணம். இருப்பினும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் தத்துவத்தில் மேம்பட்டு சிறந்து விளங்கியது .

...இது பற்றி ஆயத்துல்லாஹ் முதஹ்ஹரி கூறியது போன்று விஞ்ஞானத்தினதும், தொழில் நுட்பத்தினதும், தத்துவத்தினதும் அறிவு தான். ஏனெனில் அது தான் அப்போது சீனா தேசத்தில் இருந்தது.

உண்மையில் குர்ஆனிய உலக நாகரீகக் கண்ணோட்டத்தின் படி அறிவு என்பது பிளவுபடாதது. அனைத்து அறிவுகளினதும் மூலம் பிரபஞ்சத்தின் தலைவனான இறைவனே. இந்த தெளிவு எமது முஸ்லிம் அறிஞர்களுக்கு இருந்ததனால் தான் அவர்கள் கிரேக்க தத்துவத்தையும், பாரசீக மெய்யியலையும், இந்திய கணிதத்தையும் அரபியில் கொண்டு வந்தார்கள்.

அவற்றை அகவயப்படுத்திக் கொண்டு அல் குர்ஆனிய உலக நாகரீக கண்ணோட்டத்திற்கு முரண்படாமல் வார்த்து வளர்த்து எடுத்தார்கள்.

அல் குர்ஆன், ஸுன்னாவை போலவே இயற்கையும் இறைவனை காட்டும் மூலங்களில் ஒன்று தான். இதனால் தான் 'அல் குர்ஆன் பேசும் பிரபஞ்சம் ; பிரபஞ்சம் மௌன அல் குர்ஆன்' என்று கூறினார், ஷெய்க் அல் கஸ்ஸாலி.

பாரியதொரு கலாசார, விஞ்ஞான இயக்கத்தை இஸ்லாம் உலகிற்கு வழங்கியது. பல நூற்றாண்டுகளாக அதுவே கல்வி, அறிவியல், கலாசார, பண்பாட்டு துறைகளில் கொடி கட்டிப் பறந்தது. இப்னு சீனா, அல் பிரூனி, இமாம் கஸ்ஸாலி ஒமர் கைய்யாம் போன்ற மகத்தான இஸ்லாமியக் கற்றறிவாளர்களை அதுவே உருவாக்கியது.

எனவே நபிகளார் (ஸல்) அவர்கள் "சீன சென்றேனும் சீர் கல்வியைக் கற்றுக் கொள்" என்று சொல்லி இருக்கலாம்.

'முஃமின் தேனீயைப் போன்றவனாவான். அது நல்லதைச் சாப்பிடும், நல்லதையே வெளியேற்றும். அது ஒரு கொடியில் அமர்ந்தாலும் அதனை முறித்து விடாது.'
(அத்தபரானி, அல் பஸ்ஸார்)

என் இறைவா! எனக்கு கல்வியை அதிகப்படுத்து' எனக் கூறுவீராக! -குர்ஆன் 20:114

கல்வி ஞானத்தை அதிகப்படுத்தச் சொல்லி நாம் இறைவனிடம் கேட்க வேண்டும் என்று இறைவன் கட்டளையிடுகிறான்.

"அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா?' என்று கேட்பீராக! அறிவுடையோர்தான் நல்லறிவு பெறுவார்கள்.-குர்ஆன் 39:9..

'தன்னை மறந்துவிட்டுப் பிற மனிதர்களுக்குப் போதிக்கும் மனிதன், பிறருக்கு ஒளியைக் கொடுத்து, தன்னை எரித்துக் கொள்ளும் திரியைப் போன்றவனாவான்.'

'கல்வியூட்டுங்கள், கடுமையாக நடத்தாதீர்கள், கல்வியூட்டுபவன் கடுமையாக நடப்பவனைவிடச் சிறந்தவன்.' (அல்-பைஹகீ - ஷுஅபுல் ஈமான்)

எதை நாம் அறியவில்லையோ அது நம்முடைய தன்று. -கதே

அறிவு என்னும் அற்புதம் 7

(தேடும் கல்வி)

'கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபுதர்(ரலி) நூல்கள்: அபுதாவூத், திர்மதீ, இப்னுமாஜா, இப்னு ஹிப்பான்.)

கல்வியை தேடும் வழியில் ஒருவன் நடந்தால் அவனுக்கு அல்லாஹ் சுவர்க்கத்திற்கு செல்லும் வழியாக அதை ஆக்குகின்றான்.

மலக்குகள், கல்வியை தேடுபவனை திருப்தியுற்று தங்களின் இறக்கைகளை தாழ்த்துகின்றனர்.

ஒருவர் கல்வியை எடுத்துக்கொண்டால் அவர் மாபெரும் பாக்கியத்தை எடுத்துக்கொண்டவராவார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(ஹதீஸ் சுருக்கம். அறிவிப்பவர்: அபுதர்(ரலி) நூல்கள்: அபுதாவூத், திர்மதீ, இப்னுமாஜா, இப்னு ஹிப்பான்.)

நபி(ஸல்) அவர்கள் பள்ளியில், தங்களின் சிவப்புநிறப் போர்வையில் சாய்ந்து அமர்ந்திருக்கும் போது..
அவர்களிடம் நான் :

'இறைத்தூதர் அவர்களே! நான் கல்வியை தேடி வந்துள்ளேன் எனக் கூறினேன்.

உடனே நபி(ஸல்) அவர்கள், கல்வியை தேடுபவனுக்கு என் வாழ்த்துக்கள். கல்வியை தேடுபவனுக்கு மலக்குகள் தங்களின் இறக்கைகளால் சூழ்கிறார்கள். கல்வியைத் தேடி அவர் வந்ததற்காக அவர் மீது பிரியம் கொண்டவர்களாக, பூமியிலிருந்து வானத்தை அடையும்வரை அவர்கள் ஒருவர் மீது ஒருவராக ஏறுகிறார்கள் என்ற கூறினார்கள்.
(அறிவிப்பவர்: ஸப்வான் இப்னு அஸ்ஸால் அல் முராதீ(ரலி) நூல்கள்: அஹ்மத், தப்ரானி, இப்னு ஹிப்பான், ஹாகிம்.)

நபி(ஸல்)கூறினார்கள், அறிஞர்களை மட்டம் தட்டவோ, அறிவிலிகளிடம் பெருமையடிக்கவோ, மக்களின் கவனத்தை தன் பக்கம் ஈர்க்கவோ கல்வியை ஒருவன் தேடினால் அவனை அல்லாஹ் நரகில் நுழையச் செய்வான்.

(அறிவிப்பவர்: கஃப் இப்னு மாலிக்(ரலி) நூல்கள்: திர்மிதீ, ஹாகிம், பைஹகீ)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், மிஃராஜின் போது, நான் சிலர் பக்கம் சென்றேன். அவர்களின் உதடுகள் நெருப்பிலான கத்தரியால் கத்தரிக்கப்பட்டுக் கொண்டு இருந்தது.

'ஜிப்ரீலே! யார் இவர்கள்? என்று கேட்டேன்.

இவர்கள் தான் 'தாங்கள் செய்யாததை (பிறருக்கு) கூறிக்கொண்டிருந்த உமது சமுதாயத்தின் பேச்சாளர்கள்' என்று (ஜிப்ரீல் அலை அவர்கள்) கூறினார்.
(அறிவிப்பவர்: உஸாமா இப்னு ஸைது(ரலி) நூல்கள்: புகாரீ, முஸ்லிம்.)

மேலும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், கடலில் வியாபாரம் பெருகும் அளவுக்கு, இறைவழியில் குதிரைகள் புறப்படும் அளவுக்கு இஸ்லாம் வெளியாகும். பின்பு எங்களைவிட படித்தவர் உண்டா? அறிந்தவர் உண்டா? மார்க்க சட்டங்களை புரிந்தவர் எவரும் உண்டா? என்று கூறி குர்ஆனை ஓதும் சில கூட்டம் வெளியாகும் என்று கூறிவிட்டு,

அவர்களிடம் நற்செயல்கள் உண்டா? என தம் தோழர்களை பார்த்து நபி(ஸல்) கேட்டார்கள்.

அதற்கு அவர்கள் அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிந்தவர்கள் என்று சொன்னார்கள்.

அவர்களும் இந்த சமுதாயத்தை சார்ந்தவர்கள்தான். (எனினும்) அவர்களே நரகத்தின் விறகுகள் என்று நபி(ஸல்)கூறினார்கள்.
(அறிவிப்பவர்: உமர் இப்னு கத்தாப்(ரலி) நூல்: தப்ரானி,பஸ்ஸார்)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நரைத்த முஸ்லிமுக்கு மதிப்பளிப்பதும், குர்ஆனை சுமந்து அதில் வரம்பு மீறாத புறக்கணிக்காதவர்களுக்கு மதிப்பளிப்பதும் அல்லாஹ்விடத்தில் மதிப்புள்ளதாகும்.
அபூ மூஸா(ரலி) நூல்: அபூதாவூத்

மறுமையில் என் இரட்சகன் மக்கள் மத்தியில் என்னை அழைக்கும் போது,

இரட்சகனே! நான் கட்டுப்பட்டேன் என்று நான் கூறியவுடன்,

'நீ அறிந்ததில் எதைச் செய்தாய் என்று? என் இரட்சகன் கேட்பதையே நான் மிகவும் அஞ்சுகிறேன் என்று அபூதர்(ரலி) கூறுவார்கள் என லுக்மான் இப்னு ஆமிர்(ரலி) கூறியுள்ளார்கள். (நூல்: பைஹகீ)

அறிவு என்னும் அற்புதம் 8

(இரண்டு அறிஞர்களும், மூன்று வானவர்களும்)

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

"உங்களுக்கு முன் வாழ்ந்தவர்களில் ஒரு மனிதர் இருந்தார். அவர் தொண்ணூற்று ஒன்பது மனிதர்களைக் கொன்றுவிட்டிருந்தார்.

பிறகு அவர் அக்கால மக்களில் நன்கறிந்த அறிஞர் யார் என விசாரித்தார். அவருக்கு ஒரு வணக்கசாலி காட்டப்பட்டார். அவர் அந்தப் வணக்கசாலியிடம் சென்று,

“நான் தொண்ணூற்று ஒன்பது மனிதர்களைக் கொன்றுவிட்டேன். எனக்குப் பாவமன்னிப்புக் கிடைக்குமா?” என்று கேட்டார்.

அந்தப் வணக்கசாலி, “கிடைக்காது” என்று கூறவே, அவரையும் அந்த மனிதர் கொன்று, எண்ணிக்கையை நூறாக முழுமையாக்கிவிட்டார்.

பிறகு மீண்டும் அக்கால மக்களில் மார்க்கத்தை நன்கறிந்த அறிஞரைப் பற்றி அவர் விசாரித்தார். அப்போது மார்க்க அறிஞர் ஒருவர் அவருக்குக் காட்டப்பட்டார். (அவரிடம் சென்று) அந்த மனிதர்,

“நான் நூறு கொலைகள் செய்துவிட்டேன். எனக்குப் பாவமன்னிப்புக் கிடைக்குமா?” என்று கேட்டார்.

அதற்கு அந்த அறிஞர்,

“ஆம் (கிடைக்கும்). இறைவனுக்கும்,பாவமன்னிப்புக் கோரிக்கைக்கும் இடையே யார் குறுக்கே வந்து நிற்க முடியும்? நீ (நல்லோர் வாழும்) இன்ன ஊருக்குப் போ. அங்கு மக்கள் சிலர் இருப்பார்கள். அவர்கள் இறைவனை வழிபட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களுடன் சேர்ந்து நீயும் இறைவனை வழிபடு. நீ உனது ஊருக்குத் திரும்பிச் செல்லாதே! ஏனெனில், அது தீய ஊராகும்”என்று சொன்னார்.

அவ்வாறே, அந்த மனிதர் (நல்லோர் வாழும்) அந்த ஊரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது, பாதி வழியில் இறந்துவிட்டார்.

அப்போது இறையருளைக் கொண்டுவரும் வானவர்களும், இறை தண்டனைகளை நிறைவேற்றும் வானவர்களும் அவர் விஷயத்தில் (அவரை யார் அழைத்துச் செல்வது) என்று சர்ச்சை செய்துகொண்டனர்.

அப்போது அருளின் வானவர்கள், “இவர் பாவமன்னிப்புக் கோரி பாவத்திலிருந்து மீண்டு தமது உள்ளத்தால் இறைவனை நோக்கி வந்துகொண்டிருந்தார்” என்று கூறினர்.

தண்டனையின் வானவர்கள், “இவர் சிறிதும் நன்மைகளைச் செய்யாதவர்” என்று கூறினர்.

அப்போது மற்றொரு வானவர் மனிதத் தோற்றத்தில் அங்கு வந்தார். அவரை அவ்விரு வானவர்களும் நடுவராக வைத்துக்கொண்டனர்.

அப்போது அந்த வானவர், “இவ்விரு ஊர்களுக்கு இடையிலுள்ள தூரத்தைக் கணக்கெடுங்கள். அவற்றில் எந்த ஊருக்கு மிக அருகில் அவரது உடல் இருக்கிறதோ அந்த ஊருக்குரியவராகவே அவர் இருப்பார்”என்று சொன்னார்.

அவ்வாறே கணக்கெடுத்தபோது, (அவர் வசித்துவந்த ஊரைவிட) அவர் நாடிவந்த ஊரே அவருக்கு மிகவும் சமீபமாக இருப்பதைக் கண்டனர். ஆகவே, அவரை அருளின் வானவர்கள் கைப்பற்றிக்கொண்டனர்.

இதை அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் : 5339.
____

மனோ விகாரங்களே வாழ்வாகிய கப்பலைச் செலுத்தும் காற்று. அறிவே அதை நடத்தும் சுக்கான்.
காற்றின்றேல் கப்பல் நின்றுவிடும்.
சுக்கானின்றேல் தரை தட்டிவிடும் -ஷூல்ஜ்
____

அறிவு என்னும் அற்புதம் 9

(காணாமல் போன அடிமை)

இமாம் ஷாபீஈ (ரஹ்) அவர்கள் ஓரிரவு ஜாமிஆ மஸ்ஜித்தில் தங்கியிருக்கும் போது, ஒரு மனிதர் அங்கு வந்து உறங்குபவர்களுடையே ஒருவரைத் தேடினார்.

இமாம் ஷாபீஈ (ரஹ்) அவர்கள் பக்கத்திலுள்ளவரை அழைத்து , "நீர் சென்று ஒரு கண் மட்டும் தெரியக்கூடிய உனது நீக்ரோ அடிமை தப்பியோடி விட்டாரே அவரையா நீங்கள் தேடுகிறிர்கள் ? என்று கேள் ".

அவரும் அவரிடம் கேட்க, "ஆமாம். இவ்வளவு துல்லியமாக அடையாளங்களை கூறும் உமக்கு அவன் இருப்பிடம் தெரியுமா.. ?

அவரை இமாம் அவர்களிடம் அழைத்து வர, இமாமவர்களிடம் கேட்டதற்கு , "சிறைக்கூடம் சென்று தேடிப்பார். அங்கு அந்த அடிமை இருப்பார் ".

அதே மாதிரி அந்த அடிமை அங்கேயே இருந்தார் . "எப்படி உங்களால் சொல்ல முடிந்தது ?"

"அவசரமாக அவர் மஸ்ஜிதினுள் நுழைந்ததும் யாரோ ஒருவரைத் தேடுகிறார் என்பதை அவரது அங்க அவயங்களின் பரபரப்பில் இருந்து உணர்ந்து கொண்டேன்.

மஸ்ஜித் நுழைந்ததும் நீக்ரோ அடிமைகள் உறங்குமிடத்திற்கு சென்று தேடினார் . ஆகையால் அவரது அடிமை நீக்ரோ என்பது தெரிந்தது

அவர் தேடுபவரின் முகத்தில் வலது கண்ணை உற்றுப் பார்த்து தேடியதில் , அவரின் அடிமைக்கு வலது கண் ஊனம் என்பது தெரிய வந்தது .

என் அனுபவத்தில் தப்பியோடும் அடிமை செலவுக்காக பணத்தையோ பசிக்காக உணவையோ திருடுவார்கள். அது கள்ளத்தொழிலை செய்து வரும் கன்வனைப் போல் அல்லாமல் கிடைத்ததும் திருடுவார்கள் அடிமைகள். ஆகையால் எளிதில் பிடிபடுவார்கள்.

அடிமைகள் திருடினால் சிறைச்சாலையில் அடைப்பார்கள் " என்று இமாம் ஷாபீஈ (ரஹ்) கூறினார் .

கண் பார்வை மூலம் சிறந்த பொருளை எடுப்பது போல பகுத்தறிவு மூலம் சிறந்த கருத்துகளை அறியலாம்!
- அரிஸ்டாட்டில்

அறிவு என்னும் அற்புதம் 10

(காணாமல் போன ஒட்டகம்)

வளமான நாட்டில் எந்தவொரு பிரச்சனையும் இல்லாதிருந்த காலத்தில் வியாபாரி ஒருவனின் ஒட்டகம் காணாமல் போனது. பல நாட்கள் தேடியும் கிடைக்கவில்லை.

ஒரு நாள் ஒட்டகத்தைத் தேடிச் சென்ற வியாபாரி வழியில் நால்வரைச் சந்தித்தான். "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நாங்கள் பெருத்த துயரத்தில் இருக்கிறோம். நாங்கள் எங்கள் நாட்டில் மந்திரிகளாக இருந்தோம். மக்கள் நலனில் அக்கறை கொள்ளாமல் கொடுங்கோல் ஆட்சி செலுத்தும் அரசனை விட்டு, வேறு இடம் தேடிச் சென்று கொண்டிருக்கிறோம்" என்றார் ஒருவர்.

"அப்படியா?" என்றான் வியாபாரி வருத்தத்துடன்.

"ஆமாம்.. நீங்கள்?" என்று கேட்டார் மற்றொருவர்.

"என்னுடைய காணாமல் போன ஒட்டகத்தைத் தேடிச் செல்கிறேன்" என்றான் ஆதங்கத்துடன்.

அதைக் கேட்டதும் நால்வரும் கூடிப் பேசினர்.

அவர்கள் பேசிக் கொள்வதைப் பொறுக்காமல், "நீங்கள் என் ஒட்டகத்தைப் பார்த்தீர்களா?" என்று ஆவலுடன் கேட்டான்.

உடனே முதல் நபர், "உங்களிடம் ஒன்றைக் கேட்க வேண்டும்" என்றார்.

"என்ன?"

"உங்கள் ஒட்டகம் முடமா?"

"ஆமாம்.. ஒட்டகத்தை எங்காவது பார்த்தீர்களா?"

ஒன்றும் கூறாமல் அமைதியானார் முதல் நபர்.

இரண்டாம் நபர் "ஒட்டகத்திற்கு ஒரு பக்கக் கண் பார்வை கிடையாதா?" என்று ஆரம்பித்தார்.

"ஆமாம்.. ஆமாம்.. ஒட்டகத்தை எங்காவது பார்த்தீர்களா?"

ஒன்றும் கூறாமல் அமைதியானார் இரண்டாம் நபர்.

அடுத்து மூன்றாவது நபர் "உங்கள் ஒட்டகத்தின் வால் சற்றே நீளம் குறைந்ததா?" என்று கேட்டார்.

"போதும்.. போதும்.. என்னைக் கேலி செய்தது. முதலில் ஒட்டகத்தை எங்கு பார்த்தீர்கள் என்று சொல்லுங்கள்?" என்றான் வியாபாரி கோபத்துடன்.

ஒன்றும் கூறாமல் அமைதியானார் மூன்றாம் நபர்.

நான்காம் நபர் அடுத்ததாக, "ஒட்டகத்திற்கு இருமல் போன்ற உபதை இருந்ததா?" என்று ஆரம்பித்தார்.

வியாபாரி பன்மடங்கு கோபத்துடன், "ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்.. ஒட்டகத்தை எங்கே பார்த்தீர்கள் என்று சொல்கிறீர்களா.. இல்லையா?" என்று கத்தினான்.

முதல் நபர், "எங்களை மன்னியுங்கள். நாங்கள் யாரும்; ஒட்டகத்தைப் பார்க்கவில்லை" என்று சொன்னதுதான்,

உடனே வியாபாரி, "என்ன விளையாடுகிறீர்களா? ஒட்டகத்தை எங்கே ஒளித்து வைத்திருக்கிறீர்கள்?" என்று மேலும் கோபத்துடன் கேட்டான்.

"நாங்கள் யாருமே உண்மையில் ஒட்டகத்தைப் பார்க்கவில்லை" என்றார் உறுதியுடன் இரண்டாம் நபர்.

"என்ன கதை அளக்கிறீர்கள்? ஒட்டகத்தைப் பற்றி இத்தனை விவரங்கள் தெரிந்து கொண்டு, பார்க்கவில்லையென்று சொன்னால் யாராவது நம்புவார்களா? நீங்கள் பொய் சொல்கிறீர்கள். வாருங்கள்.எங்கள் அரசரிடம். அவரே தீர்ப்புச் சொல்லட்டும்.." என்று நால்வரையும் அரசரிடம் அழைத்துச் சென்றான்.

வியாபாரி நடந்த விவரங்கள் அனைத்தையும் அரசரிடம் கூறி நீதி சொல்லும்படி வேண்டி நின்றான்.

அரசனிடம் நால்வருமே, ஒட்டகத்தை ஒளித்து வைக்கவில்லை என்று உறுதி அளித்ததால், "அப்படியென்றால் ஒட்டகம் பற்றிய விவரங்கள் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார்.

முதல் நபர், "அரசே ! நான் முதலில் ஒட்டகத்தின் கால் தடத்தைக் கண்ட போது, ஒரு பாதச்சுவடு மட்டும் மற்றவற்றை விட ஆழமாக இருந்ததால், ஒரு கால் முடமாக இருக்கலாம் என்று எண்ணினேன். அதையே சொன்னேன்" என்று கூறினார்.

அடுத்து, இரண்மாவது நபர், "நான் வழியில் ஒரு பக்கமாக இருக்கும் மரங்களில் மட்டும் இலைகள் உண்ணப்பட்டு இருப்பதைக் கண்டேன். மறுபக்கம் பழங்கள் காய்த்துத் தொங்கியும் உண்ணப்படாமல் இருப்பதைக் கண்டேன். அதனால் ஒரு பக்கப் பார்வை இல்லாது இருக்கலாம் என்று எண்ணினேன்" என்று கூறினார்.

"நான் வரும் போது, வழியில் சிறு சிறு இரத்தத் துளிகள் இருக்கக் கண்டேன். ஒட்டகத்தைப் பூச்சிகள் கடித்து காயம் ஏற்பட்டு இரத்தம் சிந்தி இருக்கலாம். அதைத் தடுக்கும் விதத்தில், அவற்றை ஓட்டும் வகையில் நீளமான வால் இல்லாது இருக்கலாம் என்று எண்ணினேன்" என்றார் மூன்றாவது நபர்.

"நாங்கள் வந்த பாதையில், ஒட்டகம் நடந்த பாதச் சுவட்டில் பின்னங் கால்கள் நிலத்தில் அதிகமாகப் படியாமல் இருந்தன. அதனால் ஒட்டகத்திற்கு உடல் நலக் குறைவு இருக்கலாம் என்று எண்ணினேன்" என்று தன் கூற்றிற்கு காரணத்தை விளக்கினார் நான்காம் நபர்.

நால்வரின் அறிவார்ந்த சொற்களைக் கேட்ட அரசர்,

"அப்படியா.. வியாபாரியே இந்த நான்கு புத்திசாலிகளை அழைத்து வந்ததற்கு நன்றி. ஒட்டகத்திற்கான விலையை நான் தருகிறேன்" என்று வியாபாரியி;டம் கூறி விட்டு,

நால்வரிடமும், "நீங்கள் நால்வரும் எங்கள் நாட்டிலேயே தங்கலாம். கூர்ந்து நோக்கும் தன்மையும், புத்திச் சாதுர்யமும் மிக்க நீங்கள் எங்கள் அவையில் மந்திரிகளாக இருந்தால் நன்றாக இருக்கும்" என்று கேட்டுக் கொண்டார்.

நால்வரும் அதற்கு உடன் ஒப்புக்கொண்டு, அரசர் அவையில் பணியில் சேர்ந்து நாட்டை மேலும் சிறக்கச் செய்தனர்.

முடியுமானால் பிறரைவிட அறிவாளியாயிரு.
ஆனால் அதை அவர்களிடம் கூறாதே . செஸ்டர்பீல்டு

அறிவு என்னும் அற்புதம் 11

(பேரறிஞர்கள் வரலாறு : இமாம் புகாரி ரஹ்)

பெயர் : அபூ அப்தில்லாஹ் முகம்மது பின் இஸ்மாயில் அல் புகாரி

புகாரா என்ற ஊரைச் சேர்ந்தவர். இந்த ஊரின் பெயரே இவர்களது பெயராக அழைக்கப்பெற்றது.

16 வருடங்கள் கடின உழைப்பால் தொகுத்த ஹதீஸ் தொகுப்பு நூல் புகாரி.

ஸிஹாய் ஸித்தா (ஸஹீஹான நூல்கள்) என்று ஆறு நூல்கள் அழைக்கப்பட்டன .

1.ஸஹீஹ் புகாரி
2.ஸஹீஹ் முஸ்லிம்,
3.திர்மிதி,
4.அபூதாவூத்
5.நஸாயீ,
6.இப்னு மாஜா.

இதில் மிகவும் பிரபல்யமான நூல் புகாரி

இமாம் அவர்களின் தாய் தந்தை இஸ்லாத்தில் மிகவும் பற்று உள்ளவர்களாக இருந்தார்கள். இதனால் இவர்களையும் இஸ்லாமிய பற்று உள்ளவர்களாக வளர்த்தார்கள்.

சிறு வயதாக இருக்கும் பொழுது தந்தையை இழந்தார்கள். தாய் இவர்களை மார்க்கப் பற்றுள்ளவர்களாக, இல்முடையவர்களாக வளர்த்தெடுத்தார்கள்.

சிறு வயதிலேயே கண் தெரியாதவராக இருந்தார்கள் . இவர்கள் தாயின் துஆவினால் அல்லாஹ் இவர்களுக்கு கண்பார்வையை கொடுத்தான்.

இவர்களுடைய தந்தை இஸ்மாயில் (ரஹி) அவர்கள் ஒரு ஹதீஸ் கலை அறிஞர். இமாம் மாலிக் (ரஹி) அவர்களின் மாணவர் .

கண்பார்வை இவர்களுக்கு வந்த பிறகு அல்லாஹ் இவர்களுக்கு மனனம் செய்யும் ஆற்றலையும் அருளினான்.

10 வயதிலேயே குர் ஆனை மனனம் செய்தார்கள். ஷுயூஹுள் முஹத்தீஸீன்களிடம் (ஹதீஸ் கலை அறிஞர்கள்) புகாரா ஊரிலேயே ஹதீஸ்களை கற்றுத்தேர்ந்தார்.

முஹம்மது இப்னு அபீ ஹாத்திம் (ரஹி) அவர்கள் புகாரி அவர்களிடம், "உங்களுக்கு எப்படி இந்த ஹதீஸ் கலையில் ஆர்வம் வந்தது" ?

அதற்கு அவர்கள் சிறு வயதிலேயே குர்ஆனையும், ஹதீஸ்களையும் படிக்க ஆரம்பித்து விட்டதனால் அப்பொழுதிலிருந்தே ஆர்வம் வந்துவிட்டது என்று கூறினார்கள்.

ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் பள்ளிக்கூடமாக தாய் தான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தாயாக இவர்கள் தாய் சிறு வயதிலேயே இவர்களுக்கு கல்வி ஆர்வத்தை மூட்டி வளர்த்தார்கள்.

இவர்களது தாய் ஹஜ் செய்வதற்காகவும், மகன் மக்காவிலுள்ள அறிஞர்களிடம் கல்வி கற்பதற்காகவும், இவர்களது மகன் புகாரி, அஹ்மது அவர்களை அழைத்துக்கொண்டு ஹஜ் செய்கிறார்கள்.

இமாம் புகாரி(ரஹி) அவர்கள் படிப்பின் மீது உள்ள ஆர்வத்தினால் தன் தாயிடம், இங்கேயே நான் தங்கி படிக்கிறேன் என்று கூறுகிறார்கள். அதற்கு அவர்கள் தாயும் சம்மதிக்கிறார்கள்.

கல்வி பயணத்தை மக்காவில் ஆரம்பித்து மதீனா , ஹிஜாஸ் போன்ற ஊர்களுக்கு சென்று கல்வி கற்றார்கள்.

14 ஆயிரம் மைல்கள் தூரம் அலைந்து கல்வியைத் தேடி கற்றார்கள்.

6 லட்சம் ஹதீஸ்களை மனனம் செய்துள்ளார்கள். இதில் 3 லட்சம் ஹதீஸ்கள் அறிவிப்பாளர்கள் தொடருடன் மனனம் செய்துள்ளார்கள்.

ஸஹீஹுல் புகாரி என்ற கிரந்தத்தில் இவர்கள் மனனம் செய்துள்ள அனைத்து ஹதீஸ்களும் இடம் பெறவில்லை.

புகாரி தமிழில், ஏழு பகுதிகளைக் கொண்ட புத்தகமாக பல்வேறு தலைப்புகளின் கீழ் ஏழாயிரம் ஹதீஸ்களுடன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் இவர்களுக்கு வழங்கிய இல்முடைய அருட்கொடையினால் இப்படிப்பட்ட சிறப்புமிக்க நூல் உருவாயிற்று

இமாம் புகாரி அவர்கள் 1080 இமாம்களிடம் கல்வியை கற்று உள்ளார்கள்.

இன்றைக்கு அல்லாஹ்வின் மாபெரும் கிருபையால் வீட்டிலிருந்தே கல்வியை கற்று வருகின்றோம். ஆனால் அன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு ஹதீஸ் கற்பதற்கும் பல மைல் தூரம் , பலநாட்கள் கஷ்டப்பட்டு பயணம் செய்து கல்வியை அன்றைய கால அறிஞர்கள் கற்றார்கள்.

புகாரி அவர்கள் 16 வயதிலேயே மற்ற ஆலிம்களின் புத்தகங்களை மனனம் செய்துள்ளார்கள்.

படிப்பினை:

இன்றைய காலகட்டத்தில் கணவனை இழந்த தாய்மார்களில் சில பேர் தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள் அல்லது ஒழுக்கம் உள்ளவர்களாக வளர்க்க முடியாமல் தடுமாறுகிறார்கள்.

ஆனால் புகாரி (ரஹி) அவர்களின் தாய் எவ்வளவு பொறுப்புடன் தங்கள் குழந்தைக்கு மார்க்கப்பற்றுடன் சிறந்த முறையில் வளர்த்தார்கள்.

குழந்தைக்கு ஏதாவது வாங்கித் தருவது என்றால் இன்றைக்கு அதனுடைய கஷ்டம் தெரியாமல் வாங்கித் தந்து விடுகிறோம் . அதனுடைய வெகுமதியும் அவர்களுக்கு தெரிவதில்லை. அதனால் பல தீமைகளும் ஏற்படுகின்றன.

இன்றைக்கு குழந்தைகளுக்கு செல்போன்களை வாங்கிக் கொடுத்து கேட்க கூடாத , பார்க்கக் கூடாத விஷயங்களை பார்ப்பது, ஒழுக்கமில்லாமல் பேசுவது போன்ற கெட்ட குணங்களை கொண்டவர்களாக வளர்கிறார்கள்.

இந்த நிலைமைக்கு காரணம் பெற்றோர்கள்தான் எனவே ஒரு குழந்தையை நல்ல முறையில் வளர்க்க கூடிய பொறுப்பாளியாக தாய் இருக்கிறார்கள். எனவே அதை தாய்மார்கள் உணர்ந்து ஆரம்ப காலத்திலேயே கவனத்துடன் மார்க்க கல்வியை கொடுத்து வளர்க்க வேண்டும்.

நாம் ஆரம்ப காலகட்டத்தில் நல்ல முறையில் வளர்த்தால் தான் பருவ வயதை அடையும் பொழுது நல்ல குழந்தைகளாக உருவெடுப்பார்கள்.

இமாம் புகாரி (ரஹி) அவர்கள் பதினெட்டு, இருபது வயதில் முழுமூச்சுடன் கல்வியை கற்றார்கள். ஆனால் இன்றைக்கு குழந்தைகள் இந்த வயதில் கெட்டுப் போகக் கூடியவர் களாக, அவர்களின் பேச்சை பெற்றோர்கள் கேட்கும் அவல நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

புகாரி அவர்களின் தாய் போல் நாமும் ஒழுக்கமுடன் குழந்தைகளை வளர்க்க வேண்டும்.

புகாரி அவர்கள் ஒரு பக்கத்தை பார்த்தால் அதை உடனே மனனம் செய்யும் ஆற்றல் பெற்றவர்களாக திகழ்ந்தார்கள்.

இமாம் புகாரி (ரஹி) அவர்கள், ஹாஷித் இப்னு இஸ்மாயில்(ரஹி) இவர்களெல்லாம் நண்பர்கள்.

இவர்களின் நண்பர்கள் எல்லாம் மார்க்க அறிஞர்களிடம் கல்வியைக் கற்று அதை எழுதும் பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். ஆனால் இமாம் புகாரி அவர்கள் எதையும் எழுதாமல் பாடத்தை கவனிக்க மட்டும் செய்தார்கள்.

ஒருநாள் ஹாஷித்(ரஹி) அவர்கள் இமாம் புகாரி இமாமிடம் "நாங்கள் எல்லாம் கற்பதை எழுதுகிறோம் ஆனால் நீ எதையும் எழுதாமல் உன் காலத்தை வீணாக்கிறாயா?" என்றார்கள் அதற்கு புகாரி அவர்கள் அமைதியாக இருந்து விடுகிறார்கள் .

இது மாதிரியான கேள்விகளை அவர்களது நண்பர்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஒரு நாள் இமாம் புகாரி அவர்கள் நீங்கள் எழுதியதை கொண்டு வாருங்கள் என்றார்கள். அதில் மொத்தம் 18 ஆயிரம் ஹதீஸ்கள் எழுதப்பட்டிருந்தன அவற்றை சற்றும் தயங்காமல் மனனமாக எதையும் பார்க்காமல் ஒப்புவித்தாரகள்.

ஹாஷித்(ரஹி) அவர்கள் கூறுகிறார்கள் இமாம் புகாரி அவர்கள் ஒப்புவித்ததைக் கொண்டு எங்களின் எழுத்துப் பிழைகளை நாங்கள் திருத்தி கொண்டோம். என்று சொல்லும் அளவிற்கு அல்லாஹ் அவர்களுக்கு மனனம் செய்யும் ஆற்றலை தந்திருந்தான்

புகாரி (ரஹ்) அவர்களின் ஆற்றலை சோதிப்பதற்காக பாக்தாத் நகரில் 10 இமாம்கள் 100 ஹதீஸ்களை எடுத்து அதன் அறிவிப்பாளர் தொடரில் மாற்றம் செய்து கேள்விகள் கேட்டார்கள்.

அதற்கு இமாம் புகாரி அவர்கள் தெரியாது என்று பதிலையே எல்லா கேள்விகளுக்கும் கூறினார்கள். இதை கவனித்த மக்கள் இவர்களுக்கு எதுவும் தெரியாது என்று எண்ணிக் கொண்டார்கள்.

ஆனால் இமாம்களுக்கு தெரிந்துவிட்டது . இவர் நாம் தவறான கேள்விகளைக் கேட்கிறோம் என்பதை அறிந்துகொண்டு இப்படி பதில் கூறுகிறார்கள் என்று , இவர்களின் ஆற்றலை புரிந்து கொண்டார்கள்.

இறுதியில் புகாரி (ரஹி) அவர்கள் அந்த நூறு ஹதீஸ்களையும் சரியான அறிவிப்பாளர் தொடருடன் சொன்னார்கள் என்பதை இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் அல்லாஹ் இவர்களுக்கு கொடுத்த மிகப்பெரிய ஆற்றல் இது என்று வியப்படைந்து கூறினார்கள்.

இமாம் புகாரி (ரஹி)அவர்கள் கற்ற கல்வியை தன் வாழ்நாளில் அமல்படுத்தினார்கள். தன் வாழ்நாளில் யாரையும் தவறாக விமர்சனம் செய்ததில்லை . கொள்கை ரீதியாக மாறுபட்டு சிலர் இருந்தவர்கள் கொள்கையை மட்டுமே பேசுவார்கள்.

இமாம் புகாரி(ரஹி) அவர்களின் ஹதீஸ்களை வழிகெட்ட கூட்டத்தினர் இது ஸஹீஹ் இது ளயீப் என்று சாதாரணமாக விமர்சிப்பதும் மற்றும் அவர்களை கண்ணியக் குறைவாக பேசுவதும் இன்றைய காலகட்டத்தில் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது.

யாரையும் விமர்சிக்காமல் இருப்பதற்கு இமாம் புகாரி(ரஹி) கூறுகிறார்கள் : புறம் பேசக்கூடாது அல்லாஹ் அதை ஹராமாக்கியுள்ளான் என்பதை நான் எப்பொழுது தெரிந்து கொண்டேனோ அன்றில் இருந்தே நான் பேசுவதில்லை என்று கூறினார்கள்.

இன்றைக்கு நாம் இன்னொருவருடன் சேர்ந்து விட்டால் சர்வசாதாரணமாக புறம் பேசி விடுகிறோம். ஆனால் அல்லாஹ் கூறுகிறான் புறம் பேசுவது தன் சகோதரனின் மாமிசத்தை சாப்பிடுவது போன்றதாகும் இப்படிப்பட்ட மோசமான விஷயத்திலிருந்து நம்மை நாம் பாதுகாக்க வேண்டும்.

இமாம் புகாரி (ரஹி) அவர்கள் தன் வாழ்வாதாரத்திற்காக மற்றும் கல்விக்காக யாரிடமும் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் இருந்தார்கள். அல்லாஹ் அவர்களை கண்ணியப் படுத்தினான். அவர்கள் வியாபாரம் செய்தும் தங்கள் குடும்பத்தின் ஒத்துழைப்பாலும் தங்கள் தேவையை நிறைவேற்றிக் கொண்டார்கள்.

இமாம் புகாரி (ரஹி) அவர்கள் ஒரு சமயம் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவருடன் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவருடன் நட்பு ஏற்பட்டு தன்னிடம் பத்தாயிரம் தங்க காசுகள் இருக்கின்றது என்று சொல்லிவிடுகிறார்கள்.

இதை தெரிந்து கொண்ட அந்த மனிதர் ஒரு சூழ்ச்சி செய்கிறார் அதாவது, தன்னிடமிருக்கும் பத்தாயிரம் காசுகள் தொலைந்துவிட்டது என்று கூறுகிறார்.

உடனே அந்த கப்பலில் இருப்பவர்கள் அதை அனைவரிடமும் சோதனை செய்து பார்க்கிறார்கள் . இந்த சூழ்ச்சியை தெரிந்து கொண்ட இமாம் புகாரி (ரஹி)அவர்கள் அந்த பத்தாயிரம் தங்கக் காசுகளையும் ஒரு துணியில் கட்டி கடலில் எறிந்து விடுகிறார்கள்.

கப்பலை விட்டு இறங்கியதும் அந்த மனிதர் இமாம் புகாரி (ரஹி) அவர்களிடம் கேட்கிறார்கள் அந்த தங்ககாசுகளை என்ன செய்தீர்கள்? என்று

அதற்கு அவர்கள் நான் அதை கடலில் எறிந்து விட்டேன் என்றார் ,

ஏன் இப்படி செய்தீர்கள் அது உங்களுக்கும் பயன்படாமல் எனக்கும் பயன்படாமல் போய்விட்டதே ? என்றார்கள்.

அதற்கு இமாம் புகாரி ஒருவேளை அந்த காசு என்னிடமிருந்து நான் திருடன் என்று சொல்லிவிட்டால் நான் என் வாழ்நாளினை அர்ப்பணம் செய்து திரட்டி வந்த ஹதீஸ்களுக்கு களங்கம் ஏற்பட்டுவிடும் அதனால் அப்படி செய்தேன் என்றார்கள்.

ஹதீஸ்களை பாதுகாக்க அதனுடைய உண்மைத் தன்மைக்கு எந்த பாதிப்பும் வராமல் இருப்பதற்காக கண்ணும் கருத்துமாக அவர்கள் செயல்பட்டார்கள்.

இபாதத்திலும் சிறந்து விளங்கினார்கள். ரமலான் மாதத்தில் மூன்று நாட்களுக்கு ஒரு முறை குர்ஆனை ஓதி முடிப்பார்கள். கியாமுல் லைல் முழுக்க தொழக்கூடியவர்களாக இருப்பார்கள்.

இமாம் புகாரி அவர்கள் இரவு தூங்கும் பொழுது திடீர், திடீரென்று எழுந்து எழுதுவார்கள். இதைப்பற்றி அவர்களிடம் கேட்டபோது "ஹதீஸ்களின் அறிவிப்பாளர்கள் பற்றிய குறிப்பு எனது ஞாபகத்திற்கு வரும் அதை எழுதிக் கொள்வேன்" என்று கூறினார்கள்.

எனவே தூக்கத்தில் கூட ஹதீஸ் கலையில் அவர்களுக்கு இருந்த ஆர்வமும், பற்றும் இதன் மூலம் அறிய முடிகின்றது.

இமாம் புகாரி (ரஹி) அவர்கள் ஃபிக்ஹ் , ஹதீஸ், அகீதா என 3 துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்துள்ளார்கள்.

ஸஹீஹுல் புகாரியில் ஒரு ஹதீஸை சேர்ப்பதற்கு முன் இரண்டு ரகஅத் தொழுது விட்டு மற்றும் மூன்று முறை இமாம்களிடம் அந்த ஹதீஸை கொடுத்து சரி பார்த்துவிட்டு தான் சேர்ப்பார்கள்.

தங்கள் வாழ்நாளை மார்க்கத்திற்காக செலவழித்து தியாகம் செய்துள்ளார்கள்.

அல்லாஹ் தன் மார்க்கத்தை நிலை நாட்டுவதற்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்தான் என்றால் அவர்களுக்கு எல்லா ஆற்றலையும் கொடுத்து சிறப்பிப்பான் என்பதே இவர்களின் மூலம் நாம் அறிய முடிகின்றது.

எனவே நாமும் இமாம் புகாரி அவர்களைப் போல் கல்வியை கற்று அதை அமல்படுத்த கூடியவர்களாக இருக்க அல்லாஹ்விடம் ஆதரவு வைப்போம்.

.அறிவு என்னும் அற்புதம் 12

(பேரறிஞர்கள் வரலாறு : அறிவியல் புரட்சி செய்த ஐசக் நியூட்டன்)

உலகில் வாழ்ந்த விஞ்ஞானிகளில் மிகவும் செல்வாக்கு பெற்றவரும், அறிவியல் புரட்சியில் முக்கிய பங்காற்றிய ஒருவராகவும், விஞ்ஞானிகளுக்கு எல்லாம் விஞ்ஞானியாகவும் திகழ்ந்தவர் சர் ஐசக் நியூட்டன்.

இங்கிலாந்து நாட்டில் விவசாய குடும்பத்தில் பிறந்த நியூட்டன் பள்ளி படிப்பை படிப்பதற்கே மிகவும் சிரமப்பட்டார். சிறுவயதில் இருந்தே அறிவியல் ஆர்வம் கொண்டவராக திகழ்ந்த நியூட்டன், தண்ணீரில் வேலை செய்யும் கடிகாரத்தை அப்போதே கண்டுபிடித்தார்.

விடாது துரத்திய ஏழ்மையின் காரணமாக 14 வயதிலேயே பள்ளி படிப்பை தொடர முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது அவருடைய மாமா நியூட்டனின் கல்வி ஆசை நிறைவேற உறுதுணையாக இருந்து உதவினார். அதன் மூலம் பள்ளி படிப்பை முடித்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உள்ள டிரினிட்டி கல்லூரியில் இளங்கலை பட்டம் பெற்றார்.

இளங்கலை பட்டம் பெற்ற இரண்டு ஆண்டுகளில் அவரது அறிவியல் சிந்தனை பல கோணங்களில் சிந்திக்க வைத்தது. நவீன கணிதத்தின் பல்வேறு பிரிவுகளை அவர் கண்டுபிடித்தார். பைனாமியல் தியரம் மற்றும் கால்க்குலஸ் எனும் நவீன கணிதத்தின் பிரிவுகளை கண்டறிந்தார்.

ஒரு முறை தோட்டத்தில் நடந்து செல்லும் போது ஆப்பிள் பழம் மரத்தில் இருந்து விழுவதை கண்டார். எல்லா காலகட்டத்திலும் வாழ்ந்த மனிதர்கள் பார்த்திருக்கும் காட்சிதான் அது. ஆனால் அது இயற்கை என்று எண்ணிவிட்டு செல்வார்கள். ஆனால் நியூட்டனோ அதை பற்றி சிந்தித்தார்.

ஏதோ ஒரு கண்ணுக்கு தெரியாத சக்திதான் ஆப்பிள் பழத்தை புவியை நோக்கி விழ செய்கிறது என்று கருதினார். விளைவு, புவி ஈர்ப்பு சக்தி என்ற ஒன்று இருப்பதால் தான், பொருட்கள் அனைத்தும் கீழே விழுகிறது என்பதை கண்டுபிடித்தார். இது அவருடைய கண்டுபிடிப்புகளில் மகத்தான சாதனையாகும்.

அதன் பிறகு நியூட்டனுக்கு டிரினிட்டி கல்லூரியில் கவுரவ பொறுப்பு வழங்கப்பட்டது. பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். அதன் விளைவு தொலைநோக்கிகளை கண்டுபிடித்தார்.

இன்று பயன்படுத்தப்படும் பல்வேறு நவீன தொலைநோக்கிகள் அனைத்துமே நியூட்டனின் தொலைநோக்கியை அடிப்படையாக கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

டிரினிட்டி கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றும்போது உலக புகழ்பெற்ற ராயல் சொசைட்டியில் உறுப்பினராக சேர்க்கப்பட்டார்.

வண்ணங்கள் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது ஒரு கண்ணை மூடிக்கொண்டு மறுகண்ணை பார்க்கும் போது திடீரென்று வண்ணங்கள் மாற தொடங்கின.

அது மட்டுமல்ல, தனது ஆராய்ச்சிக்காக தன் கண்ணால் வண்ணங்களை பார்க்கும் போது மாற்றம் தெரிகிறதா? என்று அடிக்கடி சோதித்து கொண்டார். அதனால் கண்ணில் பாதிப்பு ஏற்பட்டு பல நாட்கள் சிகிச்சை எடுக்க வேண்டிய நிலை வந்தது.

ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர்வினை உண்டு என்பதை நிரூபித்தார். இது நியூட்டன் விதி என்று அழைக்கப்படுகிறது.

21 முதல் 27 வயது வரை நிறைய கண்டுபிடிப்புகளை உருவாக்கினார். அதன் பிறகு 1703-ல் ராயல் சொசைட்டியின் தலைவராக நியூட்டன் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1705-ம் ஆண்டு இங்கிலாந்து ராணி, நியூட்டனின் ஆராய்ச்சிகளை அறிந்து வியந்தார். அவருக்கு, “சர்” பட்டம் வழங்கி கவுரவப்படுத்தினார்.

அதன் பிறகு தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த நியூட்டன், தூக்கமின்மை, நரம்பு தளர்ச்சி போன்ற நோய்களால் அவதிப்பட்டார். 1727-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந்தேதி நியூட்டன் இறந்தார்.

அவருக்கு போப் எழுதிய இரங்கில் குறிப்பு மிகவும் முக்கியமானது. அதில் ‘இயற்கையும் அதன் விதிகளும் இருளில் கிடந்தன. கடவுள் நியூட்டன் பிறக்கட்டும் என்றார். ஒளி பிறந்தது’ என குறிப்பிட்டு இருந்தார். இந்த வாசகம் நியூட்டன் பிறந்த அறையில் பொறிக்கப்பட்டுள்ளது.

நியூட்டன் பிறவியில் ஒரு மேதை. அதனால்தான் அவரால் இயற்கையின் விதிகளை கண்டுபிடித்து சொல்ல முடிந்தது. அத்தகைய மாமேதையின் சாதனைகள் மகத்தானவை, போற்றப்படக் கூடியவை என்றால் மிகையாகாது.

அப்போது வழக்கத்தில் இருந்த ஜூலியன் நாட்காட்டியின் படி அவர் 1642-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ந்தேதி பிறந்தார். கிரிகோரியன் நாட்காட்டியின்படி அவருடைய பிறந்த நாள் 4-1-1643 ஆகும்.

கணித கால்குலஸ்ஸின் அடிப்படையை கண்டுபிடித்தவர் மனித சரித்திரத்திலேயே மிகப்பெரிய விஞ்ஞானி என்று கருதப்படுபவர் சர் ஐசக் நியூட்டன் தன் அந்திம காலத்தில் சொன்னார் :

" நான் கடற்கரையில் விளையாடும் ஒரு சிறுவன் இங்கே ஒரு கூலாங்கல் ,அங்கே ஒரு அழகான சங்கு என்று கண்டுபிடித்து பெருமிதப்பட்டுக் கொண்டிருக்கையில் எதிரே ' உண்மை ' என்ற மாபெரும் சமுத்திரம் என்னும் கண்டறியப்படாமலேயே பரவிக் கிடக்கிறது."

இப்படி சொன்னதால்தான் இவரை அறிவியல் மேதை என்கிறார்கள்

அறிவு என்னும் அற்புதம் 13

(பேரறிஞர்கள் வரலாறு : இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு)

அபூ ஹாமித் முஹம்மத் பின் முஹம்மத் பின் தாவுஸ் அஹ்மத் அத்தூஸி என்பதே இமாம் கஸ்ஸாலியின் முழுப் பெயர் ஆகும். எனினும் அவர் கஸ்ஸாலி என்றே அழைக்கப்பட்டார்.

தற்காலத்தில் குராசான் பகுதியிலுள்ள மஷ்ஹத் என்று அழைக்கப்படுவதும் அன்று தூஸ் என்று அழைக்கப்பட்டதுமான பிரதேசத்துக்கு அருகேயுள்ள தப்ரானில் உள்ள கஸ்ஸால் எனும் கிராமத்தில் ஹிஜ்ரி 450/கி.பி.1059 இல் பிறந்தார்.

அவரது தந்தை ஆழ்ந்த இறை பக்தியுடையவர். தனது கையால் உழைத்துப் பெற்ற உணவை மட்டுமே உட்கொண்டார். இறை நேசர்களுடன் தனது நோக்கத்தைக் கழித்தார். எனினும் கஸ்ஸாலியின் இளமைப் பருவத்தில் இறையடி எய்தினார்.

அவர் இறக்க முன் கஸ்ஸாலியையும் அவரது சகோதரரையும் வளர்க்கும் பொறுப்பை அவரது நண்பர்களில் ஒருவரான இறைநேசர் (சூபி) ஒருவரிடம் ஒப்படைத்திருந்தார். அவரின் மேற்பார்வையிலேயே கஸ்ஸாலி வளர்ந்தார்.

கஸ்ஸாலி இளமையில் தூஸ் நகரில் வாழ்ந்த சேஃ அஹ்மத் இப்னு முஹம்மத் அல் றஸ்கானி அல்தூஸி என்பவரிடம் ஆரம்பக்கல்வியைக் கற்றார். ஆதன் பின் ஜூர்ஜான் எனும் நகரில் வாழ்ந்த அபூ நஸ்மர் இஸ்மாயில் என்பவரிடம் கல்வி பயின்றார்.

அதன்பின் தூஸ் நகருக்குத் திரும்பி வந்து யூஸூப் அந்நப்பாஸ் அத்தூஸி என்பவரிடம் சூபிசக்கலையைப் பயின்றார். தனது இருபதாவது வயதில் நிசாபூரில் இருந்த நிழாமிய்யாக் கல்லூரியில் சேர்த்து இமாம் அல் ஹரமைன் என்றழைக்கப்பட்டு வரும் அஷ்அரிக் கோட்பாட்டாளருமான அபூ அல் மஆலி அல் ஜூவைரி என்பவரிடம் கல்வி பயின்றார்.

அக்கல்லூரியில் சமய இயல், ஷரீஆ, தத்துவ இயல், தர்க்கவியல் இயற்கை விஞ்ஞானம் தஸவ்வுப் முதலாம் பாடங்களைப் பயின்றார்.

மாணவர்கள் சுயமாக சிந்தித்து கருத்துக்களைக் கலந்துரையாடவும் விவாத அரங்குகளில் தத்தம் கருத்துக்களை தர்க்க ரீதியாக முன்வைக்கவும் இமாம் அல்ஹரமைன் வாய்ப்பளித்து ஊக்குவித்தார். இவ்வாய்ப்பை இளைஞர் கஸ்ஸாலி பயன்படுத்தித் தன் ஆளுமையை வளர்த்துக் கொண்டார்.

அவரது திறமைகளை அவதானித்த இமாம் அல் ஹரமைன் அவரை அறிவுக் கடல் என்று பாராட்டினார். தான் கல்வி கற்ற அதே கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் வாய்ப்பையும் பெற்றார்.

நிசாப்பூரில் மாணவராக இருக்கும் போதே அபூ அலி அல் பழில் அல் பாமிதி எனும் சூபி அறிஞரிடம் சூபிசக் கலையைப் பயின்றதுடன் சூபிசப் பயிற்சிகளும் ஈடுபட்டிருந்தார்.

கஸ்ஸாலியின் இருபத்தி எட்டாவது வயதில் அவரது ஆசிரியரான இமாம் அல் ஹரமைனும் ஆன்மீக வழிகாட்டியாக செயற்பட்ட அல்பாமிதியும் காலமாயினர். இக்காலப் பகுதியில் இமாம் கஸ்ஸாலியின் புகழ் நாலாபுறமும் பரவியிருந்தது.

இதனால் செல்ஜூக் ஆட்சியாளர்களின் பிரதம அமைச்சராக கடமையாற்றிய நிதாமுல் முல்க் பக்தாதுக்கு வருமாறு அவருக்கு அழைப்புவிடுத்தார். இவ்வழைப்பை ஏற்று அங்கு சென்ற இமாம் கஸ்ஸாலி செல்ஜூக் அரசவையிலும் கல்வி அரங்குகளிலும் கலந்துகொண்டு தனது திறமையை வெளிப்படுத்தினார்.

இதன் மூலம் அவரது ஆற்றலைப் புரிந்துகொண்ட பிரதமர் நிதாமுல் முல்கி பக்தாத் நிதாமிய்யாக் கல்லூரியின் சமய இயல் துறையின் தலைவராக இமாம் கஸ்ஸாலி அவர்களை கி.பி.1091 இல் நியமித்தார். இதன் மூலம் அன்றைய சமூகத்தில் நிலவிய

கல்வித்துறையின் உச்ச பதவியையும் அரச மட்டத்தில் செல்வாக்கையும் பெற்றார். இதனால் முஸ்லிம் சமூகத்திலும் அவர் பெரும் செல்வாக்கையும் பெற்றார்.

செல்ஜூக் மன்னன் மலிக்ஷா, அவரது பிரதம அமைச்சர் நிதாமுல் முல்க், பாரசீகத்தின் ஏனைய சிற்றரசுகளின் தலைவர்கள் போன்றோர் அவரைப் பெரிதும் மதித்தனர். முஸ்லிம் ஆட்சியாளர்களிடையே ஏற்பட்ட பிரச்சினைகளின் போதெல்லாம் சமாதானத் தூதுவராக சென்று சிறப்புப் பணிபுரிந்தார்.

இஸ்லாமிய சட்டவியல், சமய இயல், தத்துவ இயல் மெய்ஞ்ஞானவியல் ஒழுக்கவியல் முதலாம் துறைகளில் ஆழமான அறிவுடையவராக இருந்தார். இதன் மூலம் முஸ்லிம் உலகின் புகழ்மிகு முதல் மனிதராக கணிக்கப்பட்டார். ஆட்சியாளர்களதும் அறிஞர்களதும் பாராட்டை அவர் ஏககாலத்தில் பெற்றுக்கொண்டார்.

இதனால் 'ஹஜ்ஜதுல் இஸ்லாம்' ஸைனுள் ஆப்தீன், 'முஜத்தித்' என்றெல்லாம் பட்டம் சூட்டி கௌரவித்தனர். இவ்வாறெல்லாம் அவர் புகழ் ஏணியின் உச்சத்தை அடைந்திருந்த போதும் அவரின் உள்ளம் அறிவியல் ரீதியானதும், ஆன்மீக ரீதியானதுமான உளக்கிளர்ச்சி ஒன்றுக்கு ஆளாகியது.

இயல்பாகவே அவரிடம் இருந்த விமர்சன ரீதியாக நோக்கும் மனப்பாங்கும் பல்வேறு துறைகளிலும் அவர் பெற்றிருந்த ஆழமான அறிவும் அன்றைய முஸ்லிம் சமூகத்தின் உண்மை நிலையைப் புலப்படுத்தின. இது அவரது உளக் கிளர்சிக்குக் காரணமாகியது.

கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆட்சி செய்த குலபாஉர்ராசிதீன்களின் பண்பில் இருந்து ஆட்சியாளர்கள் விலகி கோத்திர உணர்வின் வழி ஆட்சி செய்து கொண்டிருந்தனர். அவர்கள் சொகுசு வாழ்க்கையில் மூழ்கியிருந்து மட்டுமன்றி இஸ்லாமிய அறிவிலும் குன்றியிருந்தனர். தகுதியானவர்களைத் தேர்ந்து எடுத்து பதவிகளில் நியமிக்கும் ஆற்றலும் அவர்களுக்கு இருக்கவில்லை.

கஸ்ஸாலி வாழ்ந்த காலத்து முஸ்லிம் சமூகம் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் ஸஹாபாக்களும் அமைத்துக் கொடுத்த சமூகத்தில் இருந்து வெகுதூரம் விலகி இருந்தது. சமய உட்பிரிவுகளும் அவற்றிற்கிடையே முரண்பாடுகளும் பிளவுகளும் தோன்றியிருந்தன.

பகுத்தறிவுக்கு முதன்மை கொடுத்த கிரேக்க தத்துவ இயலை அதன் அடிவருடிகள் முஸ்லிம்களிடையே தீவிரமாகப் பரப்பினர். அதனால் சமய நம்பிக்கையின் அடிப்படையே தகர்த்துவிடக் கூடியளவு முஸ்லிம்களிடையே அது ஊடுறுவியது. அக்கால முஸ்லிம் அறிஞர்களால் கிரேக்க தத்துவக் கலையின் படை எடுப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

சுமூகத்தின் பண்பாட்டுத்துறையும் வீழ்ச்சியடைந்திருந்தது. பலதரத்து மக்களும் குர்ஆன், சுன்னா கூறும் வழிகாட்டலை அலட்சியப்படுத்தினர். ஒரு முன்மாதிரியாக இருந்த முஸ்லிம் சமூகம் அவரது காலத்தில் பிற கலாசாரத் தாக்கங்களில் சிக்குண்டு நடுவழி பிறழ்ந்திருந்தது.

பிற கலாசாரச் செல்வாக்கின் காரணமாக முஃதஸிலா போன்ற பதினைந்துக்கும் மேற்பட்ட சிந்தனைக் குழுக்களும் நூற்றுக்கும் மேற்பட்ட அவற்றின் உபகுழுக்களும் சமூகத்தில் நிலவின. அவற்றில் சிலவற்றின் தீவிரப் போக்கு காரணமாக சமூகத்தில் அமைதி குலைந்திருந்தது.

கிலாபத் பல சிற்றரசுகளாக சிதைவடைந்து கலீபா செல்வாக்கிழந்து நடைப்பிணமாக செயற்பட்டார். மாசுபடிந்த இச்சமூகமும், குலபாஉர்ராசிதூன்கள் காலத்துச் சிறப்புற்றோங்கிய முஸ்லிம் சமூகமும் அறிஞரான இமாம் கஸ்ஸாலியின் கண்முன் நிலழாடின.

அதன் விளைவாகவே பெயரையும் புகழையும் தந்த நிதாமிய்யாக் கல்லூரியின் பேராசிரியர் பதவியையும் சமூக அரசியல் ,ஈடுபாட்டையும் உதறித்தள்ளிவிட்டு பதினொரு வருடங்களாக சமூகத்தில் இருந்து ஒதுங்கி தனித்து வாழ்ந்தார்.

சமூகத்தை விட்டு ஒதுங்கி வாழத்தான் எடுத்த முடிவுபற்றி அவர் தனது 'அல் முன்கீத் மினல்லைய்ல்' (பிழையில் இருந்து விடுதலை) எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'நான் போதனாசிரியராக இருந்து போதனை செய்து வருவதில் இருந்த நோக்கத்தைக் கவனித்தேன். அது அல்லாஹ்வின் அருள் பெறும் நோக்கமாக மட்டுமன்றி உலகில் செல்வாக்கு மிக்க ஸ்தானத்தையும் பெருமையையும் புகழையும் பெற வேண்டுமென்ற நாட்டமாய் இருப்பதை கண்டேன். சரிந்து கொண்டிருக்கும் ஒரு மண்மேட்டின் சிகரத்தில் நான் நிற்பதையும், நான் உடனே திருத்திக் கொள்ளாவிடின் நரக நெருப்பில் விழலாம் என்பதையும் திண்ணமாகக் கண்டேன்.

இதுபற்றி தொடர்படியாக யோசனை செய்தேன். பக்தாதை விட்டு உடனே நீங்கி இந்தத் தடைகளை அகற்றிக் கொள்ளலாம் என்று ஒரு நாள் முடிவு கட்டுவேன். மறுநாளோ என் முடிவைக் கைவிடுவேன். ஒரு காலை முன்வைப்பேன். மறுகாலைப் பின்வைப்பேன்..... இத்தகையவிதமாய் உலக ஆசாபாச எண்ணங்களுக்கும் அமர வாழ்வு பற்றிய எண்ணங்களுக்குமிடையே அகப்பட்டு அலைக்கழிக்கப்பட்டேன்.

அல்லாஹ் என் நாவை உலர வைத்துவிட்டான். இதனால் விரிவுரை நிகழ்த்த இயலாது போயிற்று.என் மாணவர்களுக்கு போதனை புரிய இயலாதபடியாகிவிட்டது. இத்துடன் உண்ட சாப்பாட்டை அஜமிக்கச் செய்யவும் இயலாது போயிற்று. ஏன் உடல் நிலை மோசமாயிற்று. இதைக் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை வைத்தியர்கள் இழந்தனர்.

இந்தக் கோளாறு மனோவியா கூலத்தால் உண்டாகியுள்ளது. அதனால் உடல் நிலை கெட்டிருக்கிறது. அந்த மனோவியா கூலம் அகன்றாலே உடல் நலம் பெறும் என்று அவர்கள் கூறிவிட்டனர். (இதன்மூலம்) என் பதவியையும் செல்வத்தையும், குழந்தைகளையும், நண்பர்களையும் விட்டு மனம் திரும்புவதை அவன் அல்லாஹ் எனக்கு இலகுவானதாக்கினான்.'

ஹிஜ்ரி 488 துல்கஃதா கி.பி. 1095 நவம்பர் மாதத்தில் பக்தாதைவிட்டு டமஸ்கஸ் சென்று அங்கு இரு வருடங்களைக் கழித்தார். அதன் பின் பைதுல் முகத்திஸிலும் மக்காவிலும், மதீனாவிலும் சில காலங்களைக் கழித்தார். அக்காலப்பகுதியில் அவர் அனுஷ்டித்த ஆன்மீகப் பயிற்சிகளால் பக்குவ நிலை அடைந்தார். அதன் பின்பே கி.பி. 1105 இல் நிசாபூருக்கு மீண்டும் திரும்பி வந்தார்.

பதினொரு வருடங்களை மெய்ஞ்ஞான அனுஷ்டானத்தில் கழித்த இமாம் அவர்கள் பக்தாதுக்குத் திரும்பி வருவதற்கும் பின்வருவன காரணங்களாய் அமைந்தன. முஸ்லிம்களின் ஈமான் பலவீனமடைந்திருந்தது. முஸ்லிம்களின் வணக்க வழிபாடும் உயிரோட்டமற்றிருந்தது. அதனால் இச்சமூகத்தை மீட்டெடுக்க முயற்சிப்பது அவசியம் என்று அவர் கருதினார்.

இக்கருத்தை சமய சிந்தனையையுடைய அவரது நண்பர்களும் ஆதரித்து எதிரான சக்திகளை எதிர்த்துப் போராட முன்வருமாறு ஆட்சியாளர்களும் அவரைக் கோரினார். இதனால் அவர் தனிமை வாழ்வைத் துறந்து கி.பி. 1105இல் மீண்டும் சமூக வாழ்வில் புகுந்தார்.

நிகாபூரில் தன் சிந்தனை வழியிலான கல்விப் போதனையை மேற்கொள்வதற்காக ஒரு பாடசாலையை நிறுவி அங்கு பாடபோதனை நடத்தினார். கலீபாவும் செல்ஜூக் ஆட்சியாளர்களும் பக்தாதுக்கு வந்து நிசாமிய்யாக் கல்லூரியின் சமய துறைப் பேராசிரியர் பதவியை ஏற்குமாறு அவரைக் கோரினார். அப்பதவியை தன்னால் ஏற்க முடியாதென்று அவர் அறிவித்தார்.

இமாம் அவர்கள் நிசாப்பூரில் தங்கி தொடர்ந்து கல்வியைத் தேடுவதிலும் மாணவர்களுக்கு பாடபோதனை செய்வதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். சமூகம் எதிர்நோக்கிய அச்சுறுத்தல்களில் இருந்து சமூகத்தை விடுவிப்பதற்காக பல நூல்களையும் எழுதினார்கள். இத்தகு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ஹிஜ்ரி 505/கி.பி. 1111இல் இறையடி எய்தினார்கள்.

1.இஹ்யா உலூமுத்தீன் 2.முகாஸித் அல் பலாஸிபா
3.தஹாபுத் அல் பலாஸிபா 4. அல் முன்கித் மினழ்ழலல்
5.றிஸாலா அல் குத்ஸிய்யா 6. மயார் அல் இல்ம் பி பன்னில் மன்தீக் 7. புதுஹாதுல் உலூம் 8.மிஷ்காத் அல் அன்வார்

9.முகாஷபாத் அல் குலூப் 10.அல் மஉரிபாத் அல் அக்ழிய்யா
11.மின்ஹாஜ் அல் ஆபிதீன் 12.மீதான் அல் அமல்
13.பிதாயதுல் ஹிதாயா 14.நஸிஹாத் அல் முலூக்
15.அல்கிஸ்தாஸ் அல் முக்தஸீம் 16 முர்ஷிதுக் தாலிபீன்
17. கிமியா ஸஆதக்

இமாம் கஸ்ஸாலி தான் வாழ்ந்த சமூகத்தின் சமய, ஒழுக்கறியல் நிலை பற்றி விமர்சன ரீதியான மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டார். முஸ்லிம் சமூகத்தின் ஆட்சியாளர்கள் பிரபுக்கள், உலமாக்கள், பொதுமக்கள், முதலாம் பலதரத்து மக்களும் உலக ஆசாபாசங்களில் மூழ்கியிருப்பதை அவதானித்தார்.

உலக மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டிய இச்சமூகம் தன் தரம் குன்றியிருப்பதற்கான காரணம் பொருளாசையிலும் பதவி மோகத்திலும் மூழ்கியிருப்பதே என்று கருதினார். இப் பின்தங்கிய நிலையில் முஸ்லிம் சமூகத்தை மேம்படுத்த இச்சமூகத்தை சீர்திருத்தி இஸ்லாமிய மயப்படுத்தப்பட வேண்டும் என்று கருதியே 'இஹ்யா உலூமுத்தீன்' என்ற நூலை எழுதினார்.

இமாம் கஸ்ஸாலி தத்துவவியலடிப்படையிலான ஆய்வுகளுக்கு முரண்பட்டவரல்லர். அவரே சமய இயலாளர்களுள் தத்துவவியல் பற்றி ஆழமாக கற்ற முதல் முஸ்லிமாவார்.

அவருக்கு முன்பு வாழ்ந்த முஸ்லிம் சமயவியலாளர்களுள் ஒரு பிரிவினர் கிரேக்க தத்துவவியலை மனப்பூர்வமாக ஏற்று ஆதரித்தனர். மறு பிரிவினர் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். கிரேக்க தத்துவவியலை ஆதரிப்பவரோ, எதிர்பார்ப்பவரோ அக்கலையில் ஆழ்ந்த புலமை பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தை இமாம் கஸ்ஸாலி கொண்டிருந்தார்.

அதனால் தத்துவ இயல் சார்ந்த புகழ்பூத்த நூல்களை வாசித்து ஆழமாக ஆராய்ந்து அறிந்து கொண்டார். அதை அடுத்தே அவர் தத்துவ இயல்பற்றிய நூல்களை எழுதினார். தத்துவ இயல் பற்றி அவர் எழுதிய பல நூல்களில் மகாஸித் அல்பலாசிபா (தத்துவவியலாளர்களின் முரண்பாடுகள்) எனும் இரண்டும் குறிப்பிடத்தக்கவையாகும்.

மகாஸிதுல் பலாஸிபா எனும் நூலில் தர்க்கம், பௌதீகம் Metaphysics என்பன பற்றி நிலவிய சித்தாந்தங்களை விளக்கியுள்ளார். இந்நூலில் அவர் அரிஸ்டோட்டல் முன்வைத்துள்ள கருத்துக்களை விமர்சித்துள்ளார்.

அறிவு என்னும் அற்புதம் 14

(பேரறிஞர்கள் வரலாறு : அறிவியல் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்)

விஞ்ஞானி என்றதும் அனைவரது நினைவுக்கும் வரும் பெயர் ஐன்ஸ்டீன். இயற்கையில் புதைந்திருக்கும் ஏராளமான ரகசியங்களை வெளிக்கொண்டு வந்தவர்.

அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் நடந்து செல்லும் மனிதன், சாலையில் பயணிக்கும் கார், கடலில் செல்லும் கப்பல், வானத்தில் பறக்கும் விமானம், சூரியனைச் சுற்றும் கோள்கள், சுழன்று கொண்டிருக்கும் நட்சத்திரத் திரள்கள் என எல்லாவற்றின் இயக்கமும் சார்பானவை. தனித்தவை அல்ல.

பார்வையாளர் அல்லது உணர்பவரின் இயக்கத்தைப் பொருத்து அவர் பார்க்கும் இயக்கமும் மாறுபட்டதாகத் தோன்றும் என்பதைத்தான் சார்பு நிலை என்கிறார்கள்.

இந்தச் சார்பு நிலையை பல கோட்பாடுகளால் விவரித்தவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். ஐசக் நியூட்டன், ஆர்க்கிமிடீஸ் போன்ற மிகச் சிறந்த விஞ்ஞானிகளுக்கு இணையாகப் போற்றப்படுபவர். கடந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த அறிவியல் மேதை. உலகம் நம்பிக் கொண்டிருந்த பல விஞ்ஞானத் தத்துவங்களைத் உடைத்தெறிந்தவர்.

மனிதகுல வரலாற்றிலேயே மிகவும் புகழ்பெற்ற,
சாதாரண மக்கள் வரை கேள்விப்பட்டிருக்கும் E = MC2 என்ற சூத்திரத்தை உருவாக்கியவர் ஐன்ஸ்டீன்.

1921-ஆம் ஆண்டு இவர் பெற்ற நோபல் பரிசு, குவான்டம் விசையியல், ஒளிமின் விளைவு போன்றவை பற்றிய இவரது கண்டுபிடிப்புகளுக்காக வழங்கப்பட்டது. ஆய்ந்து பார்த்தால் இவர் அறிவியலுக்கு ஆற்றிய பணிகள் ஏராளம்.

கடவுள் அண்டத்தை உருவாக்கினார். பொருள்கள் இருந்தன. ஐன்ஸ்டீன் வந்து அவற்றின் மீது ஒளியைப் பாய்ச்சினார் என்று கூறும் அளவுக்கு அவர் வகுத்துத் தந்த கோட்பாடுகள் அறிவியல் உலகில் புரட்சியை ஏற்படுத்தின.

1879-ஆம் ஆண்டு ஜெர்மனியில் பிறந்த ஐன்ஸ்டீன், குழந்தைப் பருவத்தில் மந்த புத்திக்காரராகவே அறியப்பட்டார். எந்தக் கேள்விக்கும் உடனடியாகப் பதிலளிக்க மாட்டார். அவசரமாகப் பதில்களை விரும்பும் ஆசிரியர்களுக்கு ஐன்ஸ்டீனைப் பிடிக்காது. பள்ளிகள் அவரைத் துரத்தின. இவருக்கும் வகுப்பறைகள் பிடித்திருக்கவில்லை. காந்த ஊசிகளை வைத்துக் கொண்டு பொழுதைப் போக்கிக் கொண்டிருப்பார்.

16 வயதில் பாலிடெக்னிக் கல்லூரிக்கான நுழைவுத் தேர்வில் தோற்றுப் போனார். இருப்பினும் மேல்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்து மீண்டும் பாலிடெக்னிக் கல்லூரில் சேர்ந்தார். இயற்பியலும் கணிதமும் அவருக்கு விருப்பமான பாடங்களாக இருந்தன. இயற்பியலில் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார் அவையை ஐன்ஸ்டீன் டாக்டர் பட்டம் பெறுவதற்கு உதவின.

1905-ஆம் ஆண்டு ஐன்ஸ்டீன் வாழ்க்கையில்
மட்டுமல்ல அறிவயில் உலகுக்கே அதிசயங்களை வழங்கிய ஆண்டு. ஒளிமின்விளைவு, பிரௌனியன் இயக்கம், சிறப்புச் சார்புக் கோட்பாடு, E=MC2 என்ற நிறை-ஆற்றல் சமநிலை விதி என இயற்பியல் உலகை அதிரவைத்த ஐன்ஸ்டீனின் பல முக்கியமான படைப்புகள் இந்த ஆண்டில்தான் வெளியாகின.

ஐன்ஸ்டீன் ஒரு யூதர் என்பதால் ஒரு தரப்பு விஞ்ஞானிகள் இவரது கருத்துகளை கடுமையாக எதிர்த்தனர். மற்றொரு தரப்பினர் தங்களது பழைய கோட்பாடுகளில் இருந்து விலகி வருவதில் தயக்கம் ஏற்பட்டது. ஆனால் ஐன்ஸ்டீனின் கோட்பாடுகள் எல்லாம் வெவ்வேறு தருணங்களில் நிரூபணமாகின.

தொடர்ந்து பல கோட்பாடுகளையும்,கட்டுரைகளையும் வெளியிட்டு வந்த ஐன்ஸ்டீனுக்கு உலகப் புகழ் கிடைத்ததுடன் பல புகழ்பெற்ற விஞ்ஞானிகளும் அவருடன் ஒருகிணைந்து பணியாற்ற முன்வந்தனர்.

போஸான் என்று குறிப்பிட்ட வகைத் துகள்களுக்கு பெயர் வருவதற்குக் காரணமான இந்திய விஞ்ஞானி சத்யேந்திர நாத் போஸும் அவர்களில் ஒருவர்.

ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது, அமெரிக்காவில் இருந்த ஐன்ஸ்டீன் அதன் பிறகு நாடு திரும்பவே இல்லை. இந்த முடிவே இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவின் கை ஓங்குவதற்கு முக்கியக் காரணமாக அமைந்தது.

ஜெர்மனியில் பேரழிவு ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதாக, ஐன்ஸ்டீனின் ஒப்புதலுடன் அனுப்பப்பட்ட கடிதமே அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்டை புதிய வியூகத்தை வகுக்கச் செய்தது. அணுகுண்டுகள் தயாரிக்கப்பட்டன. அவற்றின் மூலமே போரின் முடிவுகள் மாறின.

அறிவியல் மட்டுமல்லாமல், அரசியல், சமூகம், தத்துவம், சேவை என பல துறைகளிலும் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றியவர் ஐன்ஸ்டீன்.

யூதர்களின் நலனுக்காகப் குரல் கொடுத்த அவர், தாம் ஒரு பொதுவுடமைவாதி என்று வெளிப்படையாக அறிவித்தார். ஆயுதத்தின் மூலமாக அமைதியை ஏற்படுத்த முடியாது, புரிதல் மட்டுமே அமைதிக்கான நிரந்தர வழி என்று கூறினார்.

அவரது அறிவியல் கருத்துகளை ஏற்றுக் கொண்ட வல்லரசுகள், அதற்குப் பின்னணியில் உள்ள அவரது தத்துவங்களை மட்டும் புரிந்துகொள்ளவில்லை.

ஐன்ஸ்டீன் கூறிய சில தத்துவங்கள்

1.கருந்துளைகள் கடவுளை பூஜ்ஜியத்தால் வகுத்த இடங்கள்.

2.ஒரு விஷயத்தை உங்களால் ஓர் ஆறு வயதுக் குழந்தைக்கு எளிதாக விளக்க முடியவில்லையெனில், அதை நீங்கள் சரியாக கற்கவில்லை என்று அர்த்தம்.

3.எந்தவொரு அறிவுள்ள முட்டாளும் விஷயங்களை பெரிதாகவும் சிக்கலானதாகவும் செய்திட இயலும். ஆனால், ஒரு மேதையால் மட்டுமே அவற்றை எளிதாகச் செய்ய முடியும்.

4. நம்மை சீர்குலைக்கக்கூடிய புகழ்ச்சியில் இருந்து விடுபட ஒரே வழி,மீண்டும் உழைக்கச் செல்வதுதான்.

5.அறிவாற்றலை விட கற்பனைத்திறன் மிகவும் முக்கியமானது. அறிவாற்றலுக்கு எல்லை உண்டு, கற்பனைத்திறனுக்கு எல்லை கிடையாது.

6. சிறு செயல்களிலும் உண்மையைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளாதவர், பெரிய விஷயங்களில் நம்பத் தகுந்தவரில்லை.

7. மனிதனின் தீய குணங்களை இயல்மாற்றம் செய்வதைவிட புளுட்டோனியத்தை இயல்மாற்றம் செய்வது சுலபமானது.

8. கடவுளின் முன் நாமனைவரும் சம அளவில் புத்திசாலிகள்/ முட்டாள்கள்.

9.கடவுள் அண்டத்தைப் படைத்த போது அதை எவ்வாறு படைப்பது என்று விரும்பித் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அவருக்கு இருந்ததா?

10.தேசியம் என்பது ஒரு குழந்தைப்பருவ நோய். மனித இனத்தை பிடித்து வாட்டும் அம்மை நோய்.

11.தனி நபராகக் கருதப்படும் ஒரு கடவுளில் எனக்கு நம்பிக்கையில்லை. இந்த நம்பிக்கையின்மையை நான் என்றும் மறுத்ததும் கிடையாது. அதற்கு மாறாக அதைத் தெளிவாகவே கூறியிருக்கிறேன்.

12. வெற்றி பெற்ற மனிதராக முயற்சிப்பதை விட, மதிப்பு மிக்க மனிதராக முயற்சி செய்யுங்கள்.

13.வாழ்க்கை என்பது மிதிவண்டியை ஓட்டுவது போலத்தான். விழாமல் இருக்க வேண்டுமென்றால், நிற்காமல் நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

14. அமைதியை வலுவாக கட்டுப்படுத்திக் கொண்டு வர முடியாது. அது புரிந்துணர்விலேயே நீடிக்கும்.

15.யோசிக்காமல் அதிகாரத்திற்கு அடிபணிந்து போவதுதான், உண்மைக்கு மிகப்பெரிய எதிரி.

16. புத்திசாலி பிரச்சினைகளை தீர்ப்பான். ஞானமுள்ளவன் பிரச்சினைகளை அண்ட விட மாட்டான்.

17. எண்ணக்கூடியனவெல்லாம் எண்ணத்தகுந்தனவல்ல. எண்ணத்தகுந்தனவெல்லாம் எண்ணக்கூடியனவல்ல.

18.தவறு செய்பவர்களை விட அதை வேடிக்கை பார்ப்பவர்களே மிகவும் கொடுமையானவர்கள்.

19.உன் முயற்சிகளை கைவிடாதவரை, நீ தோல்வி
அடைந்தவன் கிடையாது.

20.உண்மைகள் தேற்றங்களுடன் பொருந்தவில்லை என்றால்
உண்மைகளை மாற்றுங்கள்.

21.நான் எதிர்காலத்தைப் பற்றி யோசிப்பதில்லை, ஏனெனில் அது தேவையானபோது வந்தே தீரும்.

22.ஆசிரியரைப் பொறுத்தவரை நான் ஒரு முட்டாள். உங்களைப் பொறுத்தவரை நான் ஒரு அறிவாளி. என்னைப் பொறுத்தவரை நான் யாரென்று தேடிக்கொண்டிருக்கிறேன் சரியாக புரியவில்லை.

23. வாழ்க்கையில் தவறே செய்யாதவர்கள், வாழ்க்கையில் புதிதாக எதையும் முயற்சிக்காதவர்களாகதான் இருக்கமுடியும்.

24.அனைத்து மதங்களும் கலையும் அறிவியலும் ஒரே மரத்தின் கிளைகள்.

25. வெகு அதிகமாகப் படித்து, தன் மூளையையும் குறைவாக பயன்படுத்துபவன் சிந்தனை என்ற சோம்பேறித்தனத்துக்கு சென்றிடுவான்.

26. ஆழமான மதம் சார்ந்த கடவுள் நம்பிக்கை இல்லாதவன் நான். இது ஒரு வகையான புதிய மதம். இயற்கையிடம் நான் ஓர் அற்புதமான கட்டமைப்பைக் காண்கிறேன்; அதை மிகக்குறைந்த அளவிலேயே நம்மால் புரிந்து கொள்ள முடியும், அந்தப் புரிதல் சிந்திக்கக்கூடிய ஒவ்வொரு நபரின் உள்ளத்திலும் ஓர் உணர்வை உண்டாக்குகிறது. இது ஓர் உண்மையான மத உணர்வாகும். இதற்கும் மதவாதிகள் கூறும் மர்மமான மதப் புரிதலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

27. மனித இனத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதே விஞ்ஞானிகளின் முழு முதற் கடமை. அந்த வேலைதான் எல்லாவற்றையும் விட இப்போது தலையானது.

28. எவனும் எளிமையாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். எளிய வாழ்க்கையே சிறப்பானது. எளிமையான இல்லத்திலே, எல்லாரும் விரும்பும் எளிமை விரும்பியாக வாழ கற்றுக்கொண்டால் மக்களும் அப்படி வாழ்பவரைப் பின்பற்றத் தயங்க மாட்டார்கள்.

29. அறிவியலோடு கலக்காத மதம் குருட்டுத்தனமானது.

30.நமது எல்லையை அறியும்போது, அதைத் தாண்டி நம்மால் செல்ல முடியும்.

அறிவு என்னும் அற்புதம் 15

(பேரறிஞர்கள் வரலாறு : இமாம் அபூ ஹனிபா ரலியல்லாஹு அன்ஹு)

இவர்களது இயற்பெயர் நுஃமான் என்பதாகும். அபூஹனீபா என்பது இவர்களது புனைப் பெயர். இவர்களின் தந்தையின் பெயர் தாபித். ‘இமாமுல் அஃலம்’ (கௌரவமிக்க தலைவர்) என்னும் சிறப்புப் பெயர் இவர்களுக்கு உண்டு.

இவர்கள் ஈராக் தேசத்திலுள்ள கூபாவில் ஹிஜ்ரி 80 இல் (கி. பி 699) அப்துல் மலிக் பின் மர்வானின் ஆட்சியின்போது பிறந்தார்கள். இவர்களே ஹனபி மத்ஹபின் ஸ்தாபகர். இவர்கள் நடுத்தர உயரமும், சிவப்புக் கலந்த வெண்மை நிறமும், அழகிய தோற்றமுடையவர்கள்.

இவர்களின் தவத்தையும், பூரண இறைபக்தியையும் பாராட்டாதவர்களே இல்லை. இவர்கள் இரவிலே முற்றிலும் தூங்காது அல்லாஹ்வை வணங்குவார்கள். தர்மம் செய்வதில் தலைசிறந்து விளங்கினார்கள். குடும்பச் செலவு போகத் தங்கள் பொருளில் எஞ்சியதைச் சேகரித்து ஏழைகள் முதலானோருக்குத் தினமும் அளித்து வந்தார்கள். இவர்கள் ஓரிடத்தில் மாத்திரம் 7000 விடுத்தம் குர்ஆன் ஓதிப் பூர்த்தி செய்திருக்கிறார்கள்.

ஒருமுறை இவருக்கும் இவரது பக்கத்து வீட்டுக்கார குடிகாரருக்கும் நடந்த சம்பவம் மிகவும் சுவாரசியமானது அந்த பக்கத்து வீட்டுக் குடிகாரர் எப்பொழுதும் குடித்து விட்டு, இரவு நேரங்களில் சப்தம் போட்டு பாடிக் கொண்டு, இவரை அதிகம் தொந்திரவு செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள் இரவு அந்தப் பக்கத்து வீட்டில் இருந்து எந்தப் பாட்டுச் சப்தமும் வரவில்லை, நிசப்தமாக இருந்தது. மறுநாள் காலை அவரைப் பற்றி விசாரித்த பொழுது, அவரை காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்து வைத்திருப்பதாகத் தகவல் வந்தது.

இதனை அறிந்த மாத்திரத்தில் அபூஹனீஃபா அவர்கள் அந்தப் பகுதி கவர்னரிடம் சென்று, அந்தக் குடிகாரருக்காக வாதாடி அவருக்கு விடுதலை பெற்றுத் தந்ததோடு, அவர் சிறையில் இருந்த நாட்களில் ஏற்பட்ட பொருளாதார நஷ்டத்தை ஈடு செய்யும் அளவுக்கு பண உதவி செய்தார்.

அபூ ஹனீஃபா அவர்களின் இந்தப் பேருதவி, அந்த குடிகாரரைச் சிந்திக்க வைத்தது. இவர் மீது பெருமதிப்புக் கொள்ள வைத்தது. அடுத்த நாள் முதல் இது நாள் வரை தான் செய்து வந்த பாவச் செயலுக்கு பிராயச்சித்தமாக, இஸ்லாமியக் கல்வியைக் கற்பதில் தனது நேரத்தினைச் செலவு செய்ய முடிவெடுத்த அவர், அபூ ஹனீஃபா அவர்கள் பள்ளிவாசலில் நடத்தி வரக் கூடிய இஸ்லாமிய வகுப்பில் கலந்து கொள்ள ஆரம்பித்து விட்டார்.

இவர்களுக்கு கியாஸ் என்னும் ஒப்புமை ஆதார விதியால் சட்டங்கள் இயற்றுவதில் விசேஷ ஆற்றல் இருந்தது.

இமாம் ஹம்மாத் பின் அபூஸுலைமான், இமாம் முஹம்மத் பின் முன்கதிர், இமாம் அதாஃபின் அபூரபாஹ் முதலிய சட்ட நிபுணர்களிடமிருந்து கல்வி பெற்றார்கள். ஆயிரக் கணக்கான மாணவர்கள் இவர்களிடம் கல்வி கற்றார்கள்.

அவர்களின் சீடர்களுள் அக்கால அப்பாஸிய்யா அரசாங்கத்தில் நீதிபதிகளாயிருந்த (காஸி) அபூயூஸுப் (ரலியல்லாஹு அன்ஹு), முஹம்மத் ஷைபானி (ரலியல்லாஹு அன்ஹு) ஆகிய இருவரும் இவர்களின் கல்வியை உலகினருக்கு அளித்துதவினர்.

ஹிஜ்ரி 17ல் இந்நகரில் 40ஆயிரம் பேர் வாழ்ந்து வந்தனர்.
கூஃபா அன்று மிகப்பெரும் கல்விக் கேந்திரமாக திகழ்ந்து வந்தது.இமாம் புகாரி (ரஹ்) அவர்களின் புகாரி ஷரீபின் அறிவிப்பார்களின் முன்னூறுக்கு மேற்ப்பட்டவர்கள் கூஃபா வாசிகளே!.

இத்தகு கல்விக் கேந்திரத்தில்,கல்வியாளர்கள் இடையில் தான் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் பிறந்து வளர்ந்து வந்தார்கள்.இமாம் அவர்கள் துவக்க காலத்தில் இல்முல் கலாம் (இஸ்லாமிய கொள்கைகள்)பற்றிய கல்வித் துறையில் ஆர்வம் கொண்டிருந்தார்கள்.இத்துறையில் இமாம் அவர்கள் பெரும்பாண்டிதியம் பெற்றவர்களாக திகழ்ந்தார்கள்

அன்றையக் கொள்கை குழப்பவாதிகளான “காரிஜிய்யா” களுடன்,பல்வேறு விவாத அரங்கு நடத்தி வெற்றி கண்டுள்ளார்கள்.”இல்முல் அதபு” -,”இல்முல் மன்திக்”ஆகிய கலைகளிலும் இமாம் அவர்கள் மிகப்பெரும் திறமைப் பெற்றவர்களாக இருந்தார்கள்.

இவர்களின் ஹனபி மத்ஹபுக்குப் பின்னரே ஏனைய பிரதான மூன்று மத்ஹபுகளும் தோன்றின. உலகில் பெரும் பகுதியான முஸ்லிம்கள் இவர்களின் மத்ஹபைப் பின்பற்றுகின்றனர். நாஸ்திகருடன் இவர்கள் விவாதித்து அன்னவர்களைத் தோல்வியுறச் செய்தார்கள். பன்முறை பரிசுத்த மக்கா, மதீனா சென்றுள்ளார்கள். இமாம் மாலிகையும் (ரலியல்லாஹு அன்ஹு) சந்தித்துள்ளார்கள்.

“எம் சமூகத்தினரின் மத்தியில் ஓர் அறிஞர் தோன்றி அவர்களைக் காப்பாற்றி ஞானம் போதிக்கும் அறிவின் சுடராய் அவர் முன்வருவார்” என நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியிருப்பதாகச் சொல்லப்படுவது இவர்களைப் பற்றியென அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

“நான் அலி (ரலியல்லாஹு அன்ஹு) யின் ஆசீர்வாதம் பெற்றுள்ளேன்” என இவர்கள் கூறுபவர்களாயிருந்தார்கள். ஏனெனில் இவர்களின் தந்தை தாபித் (ரலியல்லாஹு அன்ஹு), அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் ஒருமுறை சென்றபோது அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அன்னாருக்காகவும் அன்னாரின் சந்ததிகளுக்காகவும் அல்லாஹ்வை இறைஞ்சி ஆசீர்வதித்தார்கள்.

இமாம் ஷாபியீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் இவர்களைப் பற்றிப் புகழும்பொழுது “இவ்வகில மக்களின் புத்தியும் விவேகமும் இமாமின் புத்தி விவேகத்திற்குச் சமமாகா” என்று வாழ்த்தினார்கள்.

இமாம் மாலிக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களும் இவர்களின் விவேகம், ஒன்றை நிரூபிக்கும் ஆற்றல் ஆகியவற்றை மிகவும் பாராட்டினார்கள்.

பட்டம், உத்தியோகப் பதவிகளினால் பெருமையடைதல் ஆகியவற்றை இவர்கள் விரும்பவில்லை. ஒருமுறை ஸிரியா நாட்டதிபதி அத்தேச பொக்கிஷப் பாதுகாவலராக இவர்களை நியமித்தார். அவர்கள் அதை மறுக்க அவ்வதிபதியின் உத்தரவுப் பிரகாரம் அவர்கள் தலைகுனிய வைக்கப்பட்டு முதுகில் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள்.

பனூ உமையாக்களின் கடைசி அரசரான மர்வானின் காலத்தில் இப்னு ஹுஸரா என்னும் அதிகாரி இமாமைக் கூபாவின் நீதிபதியாகவும் ‘பைதுல் மாலின்’ (அரசாங்க பொக்கிஷம்) பொறுப்பாளியாகவுமிருக்குமாறு கட்டளையிட அவர்கள் அதையேற்காதிருந்தபோது அவர்களுக்கு 100 கசையடிகள் கொடுக்குமாறு அவ்வதிகாரி கட்டளையிட்டான்.

அங்ஙனமே நாளொன்றுக்குப் பத்துக் கசையடியாகப் பத்து நாட்களுள் அது நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் இவர்கள் சிறிதுகாலம் மக்காவில் தங்கிப் பின்னர் அப்பாஸிய்யா அரசர் மன்சூர் அரசு புரியும்போது பஃதாத் திரும்பினார்கள்.

இவ்வரசனும் அவர்களைச் சும்மாவிடவில்லை. ஈராக் தேச நீதிபதியாயிருக்க உத்தரவிடப்பட்டார்கள். அரசனுக்கும் அவர்களுக்குமிடையே நீண்ட வாக்குவாதம் நடைபெற்றது. முடிவில் கசையடியும் சிறையும் பெற்றார்கள்.

சிறையிலும் 12 தினங்களாய்த் தாக்கப்பட்டார்கள். அவர்களின் கால்கள் வழியாக இரத்தம் வழிந்தோடியது. கடைசியாக விஷம் கலந்த ஒரு பானத்தை அருந்தக் கொடுத்து அவர்களைக் கொல்ல முடிவு செய்யப்பட்டது. மிகவும் பொறுமையுடன் அவர்கள் அல்லாஹ்வுக்காகச் சிரங்குனிந்து ஸுஜூதில் வீழ்ந்திருக்கும்போது அவர்கள் ஆவி பிரிந்தது.

அவர்கள் ஹிஜ்ரி 150 ஆம் வருஷம் ரஜபு மாதம் (கி. பி. 772) தங்களின் 70 ஆம் வயதில் பஃதாதில் காலமானார்கள்.

இவர்களின் காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தோழர்களில் பஸராவில் அனஸ் பின் மாலிக் (ரலியல்லாஹு அன்ஹு), கூபாவில் அப்துல்லாஹ் பின் ஔபா (ரலியல்லாஹு அன்ஹு), மதீனாவில் ஸஹ்ல் பின் ஸஃது (ரலியல்லாஹு அன்ஹு), மதீனாவில் அபுத்துபைல் ஆமிர் பின் வாஸிலா (ரலியல்லாஹு அன்ஹு) வும் இருந்தார்கள்.

அல்லாஹ் அவர்களை பொருந்தி கொள்வானாக!

.அறிவு என்னும் அற்புதம் 16

(அறிவை வெறுக்கலாமா? பகுதி 1)

இது இந்தக் கட்டத்திற்கு நியாயமான கேள்வி மட்டுமல்ல, முக்கியமான கேள்வியும்கூட. ஏனெனில் இந்தக் கேள்வியை மையமாக வைத்தே இந்த கட்டுரை தொடர் எழுதப்படுகிறது.

அறிவு என்பது இறைவனால் மனிதனுக்குக் கொடுக்கப்படும் செல்வம். இப்படிப் பார்க்கும்போது நம்மால் எந்த அறிவையும் குறைத்து மதிப்பிட முடியாது.

என்றாலும் எல்லா அறிவுகளும் மனிதனின் முன்னேற்றத்துக்குத் துணை புரிவதில்லை. சில அறிவுகள் மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினால், வேறுசில அறிவுகள் அவனுடைய முன்னேற்றத்திற்கு குழி பறிக்கின்றன. எனவே இஸ்லாம் அறிவின் சிறப்பை அதிலிருந்து கிடைக்கும் பயனை வைத்தே தீர்மானிக்கிறது.

குறிப்பிட்ட ஓர் அறிவை இஸ்லாம் எதிர்க்கிறது என்றால், அடியில் இடம் பெறும் மூன்று காரணங்களில் ஒன்று அவசியம் இருந்தாக வேண்டும்.

அறிவுகளில் சில, பொதுமக்களுக்குத் துன்பம் விளைவிக்கின்றன. செய்வினை செய்யும் அறிவு இத்தகையதுதான்.

இந்தத் துறையில் ஈடுபடுகிறவர்கள் அனேகமாக மற்றவர்களுக்குத் தொல்லையை ஏற்படுத்தும் எண்ணத்துடனேயே செயல்படுகிறார்கள். இந்த அறிவு பெரும்பான்மையாக இந்த நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

கணவன்- மனைவிக்கிடையில் பகைமையைத் தோற்றுவிப்பது, ஒன்றுபட்டு வாழும் குடும்பத்தைக் குலைப்பது, சுயநலம் பாதிக்கப்பட்டு விட்டதால் மற்றவர்களை நோயாளியாக்குவது இப்படி எத்தனையோ காரியங்கள் இந்த அறிவை வைத்துச் சாதிக்கப்படுகின்றன.

இந்தக் கலையைப் பற்றித் தெரிந்து கொள்வது குற்றமல்ல. அதை மற்றவர்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதுதான் குற்றம்.

நட்சத்திர ஓட்டத்தையும் கணித ஞானத்தையும் ஆதாரமாகக் கொண்டு இந்த வேலை செய்யப்படுகிறது. குறிப்பிட்ட நட்சத்திரச் சேர்க்கையில் தயாரிக்கப்படும் ஒருவித உலோகத்துண்டில் ஒரு மனிதனின் உருவம் செதுக்கப்படுகிறது.

அதைச் சுற்றிச் சில எழுத்துக்களை எழுதுகிறார்கள். அப்போது மார்க்கத்துக்கும் பகுத்தறிவுக்கும் மாறுபட்ட வார்த்தைகள் கூறப்படுகின்றன. இதனால் தீய சக்தியுடன் தொடர்பு கொண்டு காரியம் சாதிக்கப்படுகிறது.

இப்படிப் பல வேலைகளைச் செய்து முடிக்கும்போது அந்த மனிதனின் மனநிலையிலும் சிந்தனையிலும் மாறுதல் தோன்றுகிறது. இதனால் அவன் மனம் குழப்படைந்து உடல் ஆரோக்கியத்தை இழக்கிறது.

இப்படி இந்தக் கலைக்கு எத்தனையோ பகுதிகள்
இருக்கின்றன. அவற்றைத் தெரிந்து கொள்வதில் தவறில்லை. ஆனால் அவற்றை வைத்து மற்றவர்களுக்குத் துன்பம் இழைப்பது பெரும் குற்றம். எனவே இந்த அறிவு மறுக்கப்படுகிறது.

இப்படியொரு கலை இருக்கிறதா என்று நீங்கள் சந்தேகப்பட வேண்டியதில்லை. ஏனெனில் திருக்குர்ஆனின் ஒளியில் பார்க்கும்போது, இப்படியொரு கலை அறிவு நிச்சயமாக இருக்கத்தான் செய்கிறது என்ற நம்பிக்கையே நமக்கு ஏற்படுகிறது.

இந்த அறிவை வைத்துக் கணவன்-மனைவிக் கிடையில் பகைமை தோற்றுவிக்கப்படுகிறது என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

ஒரு சமயம் இந்தத் தீய கலையின் ஆற்றலால் பெருமானாரே பாதிக்கப்பட்டு விட்டார்கள். வானவர் ஜிப்ரயீல் உண்மையை அறிந்து தேவையான பரிகாரம் செய்யப்பட்டது. கிணற்றுக்குள் இந்த வேலை செய்து வைக்கப்பட்டிருந்தது.

பொதுப்படையாக இந்தக் கலையைப் பற்றித் தெரிந்து கொள்வதில் தவறில்லை என்றாலும், இதைத் தெரிந்து கொள்கிறவர்கள் மற்றவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கத் தவறுவதில்லை. எனவே இந்த அறிவு வன்மையாக இகழப்படுகிறது.

இத்தகைய அறிவுகளை நாம் இகழத்தான் வேண்டும். மக்களுக்கும் மார்க்கத்துக்கும் தீங்கிழைக்கக்கூடிய எந்த அறிவுக்கும் இஸ்லாத்தில் மதிப்புக் கிடையாது.

ஆதாரம் : இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் எழுதிய
"கிதாபுல் இல்ம் ''

அறிவு என்னும் அற்புதம் 17

(அறிவை வெறுக்கலாமா? பகுதி 2)

நட்சத்திர ஓட்டத்தை வைத்து எதிர்காலத்தை எடைபோட முயற்சி செய்யும் அறிவையே வானசாஸ்திரம் என்று நான் குறிப்பிடுகிறேன்.

எந்த விண்மீனுடன் எந்த விண்மீன் எந்த இடத்தில் சந்தித்தால் உலகில் எந்த விளைவு ஏற்படும் என்று வானஇயல் நிபுணர்கள் கண்டுபிடிக்கிறார்கள். மூஸா (அலை) அவர்கள் காலத்தில் கடல் பிளந்தது , லூத்(அலை). காலத்தில் பூமி தலைகீழாக புரட்டப்பட்டது போன்ற நிகழ்வுகளுக்கெல்லாம் விண்மீன்களை காரணம் காட்டுகிறார்கள்.

வைத்தியன் ஒருவன் நோயாளியின் நாடித் துடிப்பைப் பார்த்து நோயைக் கண்டுபிடிப்பதுபோல, இவர்கள் விண்மீன்களின் ஓட்டத்தை வைத்து வைத்து விளைவுகளைக் கண்டுபிடிக்கிறார்கள்.

குறிப்பிட்ட விண்மீன்கள் குறிப்பிட்ட இடத்தில் சேரும் போது, உலகில் புயலோ நில நடுக்கமோ ஏற்படுகிறது என்றால், அந்த விளைவையே அந்த விண்மீன்கள்தான் ஏற்படுத்துகின்றன என்பது பொருளல்ல. உலகில் பிளவு ஏற்படும்போது விண்மீன்களின் ஓட்டத்தில் அந்த உண்மை தெரிகிறது.

இந்தத் துறையில் மும்முரமாக ஈடுபடுகிறவர்கள் உலகில் தோன்றும் சூழல்கள் அத்தனைக்கும் விண்மீன்களின் இயக்கத்தையே காரணமாகக் காட்ட ஆரம்பித்து விடுகிறார்கள்.இத்தகையவர்களின் உள்ளத்தில், 'அனைத்தையும் இயக்குகிறவன் இறைவன் ஒருவனே' என்ற இஸ்லாமியக் கொள்கை, எப்படி நிலைத்து நிற்க முடியும்?

وَاَنَّهٗ هُوَ رَبُّ الشِّعْرٰىۙ
நிச்சயமாக அவன் தான் (இவர்கள் வணங்கும்) ஷிஃரா (எனும் கோளத்திற்கும்) இறைவன்.

وَاَنَّهٗۤ اَهْلَكَ عَادَا ۨالْاُوْلٰى ۙ
நிச்சயமாக முந்திய ஆ(து கூட்டத்)தை அழித்தவனும் அவன்தான். (குர்ஆன் : 53:49, 50)

எனவேதான் இந்த அறிவை இஸ்லாம் இகழ்கிறது. விண்மீன்களின் இயக்கத்தில் உலகம் பெரிதும் சம்பந்தப் பட்டிருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை. நட்சத்திரத்தை நம்புகிறவர்கள் அதனை இயக்கும் இறைவனை மறந்துவிடக் கூடாது என்பதே நம் கருத்து.

உண்மையில் இது சிக்கலானதொரு பிரச்சினை. இதில் யாரும் சிக்கிக் குழம்பக்கூடாது என்று எண்ணியே பெருமானார், "விண்மீன்களின் ஆற்றல் பற்றிப் பேச்சு எழுந்தால் வாயை மூடிக்கொள்ளுங்கள்" என்று கூறியிருக்கிறார்கள்.

விண்மீன்கள்தான் உலகத்தை இயக்குகின்றன என்று நம்புவது அறியாமை. மனிதனின் நாடித் துடிப்புத்தான் அவனுடைய உடலிலும் உள்ளத்திலும் நோயைத் தோற்று விக்கிறது என்று கூறுவது அறியாமையல்லவோ? நாடித் துடிப்புக்கும் நோய்க்கும் சம்பந்தம் இருப்பதுபோல், நட்சத்திர ஓட்டத்துக்கும் உலக நிகழ்ச்சிக்கும் சம்பந்தம் இருக்கிறது.

விண்மீன்களே அனைத்தையும் இயக்குகின்றன என்று என் சமூகத்தவர் நம்ப ஆரம்பித்துவிடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன்" என்பது நபி கருத்து.

ஆனால் ...
فَنَظَرَ نَظْرَةً فِى النُّجُوْمِۙ

பின்னர் அவர் (இப்ராஹீம்) நட்சத்திரங்களை ஒரு பார்வை பார்த்தார்.
فَقَالَ اِنِّىْ سَقِيْمٌ

“நிச்சயமாக நாம் நோயாளியாக இருக்கிறேன்” என்றும் கூறினார். (குர்ஆன் : 37:88,89)

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்வாறு தம்மை நோயாளி என்று கூறியது பொய்யான மொழி என்பதாகச் சிலர் கருதக்கூடும். உண்மையில் அது பொய்யல்ல.

எவ்வாறெனில், ஸக்முன் என்பது ஸ்தூலம் சம்பந்தமான வியாதிக்குப் பெயர். மனிதனது ஸ்தூலத்திலுள்ள பித்த வாத கோழைகள் யாவும் அவையவை இருக்க வேண்டிய அளவுப்படி இருப்பதில்லை. மிக அபூர்வமாகவே அவை அளவுப்படி இருக்கும்.

ஏதேனும் ஒன்று அதிகமாகவோ குறைவாகவோ மாறுபட்டிருப்பது சகஜம். இவற்றில் அதிகமான வித்தியாசமேற்பட்டால்தான் உடலில் நோய் இருப்பதை பிறர் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும். குறைவாக இருந்தால் மனிதன் ஆரோக்கியமாகவே இருப்பதாகத்தான் பிறர் கருதுவர்.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இக்கருத்தின் படி தம்மை நோயாளி என்று கூறி இருக்கலாம். இது உண்மையில் பொய்யுமல்ல. மேலும், 'நோயாளி' என்ற பதத்துக்கு 'மனநோய்' என்றும் கருத்துரைப்பாருமுண்டு. வேறு பல கருத்துகளும் இப்பதத்துக்கு உரைக்கப்படுகிறது.

உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “கடலிலும் கரையிலும் பிரயாணம் செய்யும்போது திசையைத் தெரிந்து கொள்ளும் அளவுவான இயலைக் கற்றுக் கொள்ளுங்கள். அத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள்."

வான இயலில் மற்றொரு வகையுண்டு. முதற்பிரிவைப் போல் இதில் விண்மீன்களின் இயக்கத்துக்கும் நிகழ்ச்சிகளுக்கும் முடிச்சுப் போடப்படுவதில்லை.

இப்பிரிவினர் சூரியன், சந்திரன், செவ்வாய், வியாழன், சனி முதலான விண்வெளி உலக கோளங்கள் எங்கெங்கு அமைந்திருக்கின்றன, எப்படியெப்படி அமைந்திருக்கின்றன என்பன போன்ற விவரங்கள் இங்கு ஆராயப்படுகின்றன.

இந்தத் துறையில் ஈடுபடுகிறவர்களுக்கு விண்மீன்களினால் உலகில் தோன்றும் விளைவுகள் பற்றிக் கவலையில்லை. எனவே முதற் பிரிவினருக்கு ஏற்படும் மனநிலை இரண்டாம் பிரிவினருக்கு ஏற்பட முடியாது.

இந்தப் பிரிவைப் பற்றிய குறிப்புகள் திருக்குர்ஆனில் காணப்படுகின்றன. சூரியனும் சந்திரனும் இறைவனின் கட்டளைக்கு உட்பட்டே இயங்குகின்றன என்று அது
தெரிவிக்கிறது.

اَلشَّمْسُ وَالْقَمَرُ بِحُسْبَانٍ

சூரியனும் சந்திரனும் (அவற்றிற்கு நிர்ணயிக்கப் பெற்ற) கணக்கின்படியே இருக்கின்றன. (குர்ஆன் : 55:5)

இந்தத் துறையில் இறங்குகின்றவர்களால் இறைவனின் பேராற்றலை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். எனவே இந்த அறிவினை நம்மால் இகழ்ந்து கூறமுடியாது.

ஆதார நூல்கள் : 1) தஃப்ஸீர் ஹமதிய்யா,
2) இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் எழுதிய "கிதாபுல் இல்ம் ''

அறிவு என்னும் அற்புதம் 18

(அறிவை வெறுக்கலாமா? பகுதி 3)

விண்மீன்களின் ஓட்டத்தை வைத்து எதிர்காலத்தைக் கொஞ்சமும் பிசகாமல் தெரிந்துகொள்ள முடியும் என்று நம்புவதுதான் தவறு.

இப்படி நம்புவதைத் தவறு என்று நாம் சொல்கிறோமல்லவா? இதற்கு நம்மால் மூன்று காரணங்கள் காட்ட முடியும்.

முதற்காரணம்:-

விண்மீன்களே உலகை இயக்குகின்றன என்று நம்புவது பெரும்பாலோருக்குத் தீங்கு செய்யும் ஒன்று. இது எவ்வளவு மோசமான நம்பிக்கை என்பதை விளக்கிக் காட்ட வேண்டியதில்லை என்றே நான் நினைக்கிறேன். இந்த நம்பிக்கையினால் அவர்கள் இஸ்லாத்துக்கு முற்றிலும் மாறுபட்ட வேறொரு கொள்கையை உருவாக்கிக் கொள்கிறார்கள்.

நட்சத்திரங்கள் இயங்கியதும் உலகில் விளைவுகள் தோன்றுகின்றன என்று நம்புவதால், விண்வெளியில் ஒளி கக்கும் அந்த கோளங்களை இறையாற்றல் பொருந்தியவை என்று அவர்கள் நம்ப ஆரம்பிக்கிறார்கள்.

இதனால், இறைவனை மதிக்க வேண்டிய அவர்கள் அவனால் உருவாக்கப்பட்ட உயிரற்ற கோளங்களை மதிக்கத் துவங்குகிறார்கள். தம் வாழ்வில் குறுக்கிடும் நன்மைகளையும் தீமைகளையும் விண்மீன்களுடன் சேர்த்துவைத்து எண்ணத் தலைப்படுகிறார்கள். இத்தகையவர்களின் உள்ளத்தில் எப்படி இறையன்பு வளர முடியும் என்று நமக்குத் தெரியவில்லை.

பரந்த ஞானமும் ஆழ்ந்த உள்ளமும் பெற்றவர்களுக்கு இயலினால் எவ்விதக் குழப்பமும் ஏற்படப் போவதில்லை. ஆனால் மக்கள் திரளில் இத்தகையவர்கள் மிகக் குறைவு என்பதையும் இங்கு நாம் மறந்துவிடுவதற்கில்லை. இவர்கள் எவ்வளவுதான் குறைந்தவர்களாயிருந்தாலும், இவர்களின் சிறப்பு மிக உயர்ந்தது.

சூரியன், சந்திரன் முதலான விண்வெளிக் கோளங்களைப் பற்றி இவர்கள் நன்கு தெரிந்து கொள்கிறார்கள். தமக்குத் தாமாக இயங்கும் சுதந்திரத் தன்மை அவற்றுக்குக் கிடையாது என்றும், அவை இறைவனின் ஆணைக்குட்பட்டே இயங்குகின்றன என்றும் இவர்கள் உணர்ந்து கொள்கிறார்கள். இவர்களைப் போல் நீங்கள் நடந்து கொள்கிறீர்களா? அப்படியானால் உங்களைப் பொறுத்தவரை வானஇயலில் எந்தத் தீமையும் கிடையாது.

ஆனால் இப்படி நடப்பது எல்லோருக்கும் சாத்தியம் என்று குறிப்பிடுவது தவறு. மக்களில் பலர் வெளிப்படையாகத் தெரியும் காரணங்களை நம்பிக்கொண்டு வேலை செய்கிறவர்களே அவர்கள் விண்மீன்கள் இயங்குவதையும் அதையொட்டி உலகில் நல்ல விளைவு அல்லது தீய விளைவு தோன்றுவதையும் பார்க்கிறார்கள்.

எனவே உலகில் தோன்றும் விளைவுகளுக்கு விண்மீன்களின் இயக்கமே காரணம் என்று தீர்மானிக்கிறார்கள். விண்மீன்களுக்கு அப்பால், அவற்றை இயக்கும் பேராற்றல் ஒன்று மறைந்திருக்கிறது என்ற உண்மையை அவர்கள் தெரிந்து கொள்வதில்லை.

இத்தகையவர்களை எண்ணிப் பார்க்கும்போது. எழுத்துக்களுள்ள காகிதத்தின்மீது ஓடக்கூடிய சிற்றெறும்பின் நிலைதான் எனக்கு நினைவுக்கு வருகிறது. அதற்குப் பகுத்தறிவு இருப்பதாக வைத்துக் கொண்டால், எழுத்துக்குக் காரணம் ஓர் எழுதுகோல் என்பதை அது சிரமப்பட்டேனும் தெரிந்து கொள்ளலாம்.

இந்த அளவுக்குத்தான் அது முன்னேறலாம் எழுதுகோலை விரல்கள் இயக்குகின்றன என்பதை விரல்களை மனிதனின் ஆற்றல் இயக்குகிறது என்பதை மனிதனின் ஆற்றலை அவனது உள்ளம் தூண்டி விடுகிறது என்பதையோ அந்தச் சிற்றெறும்பினால் கண்டுபிடிக்க முடியாது .

காகிதத்தில் விழும் எழுத்துக்கு எழுதுகோல்தான் காரணம் என்று சிற்றெறும்பு எண்ணுவதுபோல், வானஇயலில் நுழைந்தவர்களில் பலர் விண்மீன்களினால்தான் உலகம் இயங்குகிறது என்று எண்ணுகிறார்கள்.

சிற்றெறும்மை பொறுத்தமட்டில் எழுதுகோலுக்கு அப்பால் எதுவும் கிடையாது இதுபோலவே, வான இயலில் ஈடுபட்ட பெரும்பாலோ பொறுத்த மட்டில் விண்மீன்களுக்கு அப்பால் எதுவும் கிடையாது.

உள்ளம்தான் மனிதனை இயக்குகிறது என்பதை மறப்பது மறுப்பதும் அறியாமையின் சின்னங்கள் அல்லவா? இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால், விண்மீன்களையும் உலகையும் இயக்குகிறவன் இறைவன்தான் என்பதை மறப்பது மறுப்பதும்கூட அறியாமையின் சின்னங்களே என்பதை நீங் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

வான இயலை நாம் மறுப்பதற்கு இது முதல் காரணம். மூலத்திற்கு மூலமாக அமைந்திருக்கும் பேராற்றனை திரைபோட்டு மறைக்கிறது.

ஆதார நூல் : இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் எழுதிய "கிதாபுல் இல்ம் ''

____

இதை சிறு கவிதை மூலம் விளக்குகிறேன்.

எறும்பின் தியானம் .

எருமையின் முதுகில் ஊர்ந்துகொண்டிருந்தது எறும்பு

நாக்கு சுழற்றுவதை நிறுத்தி ஊர்தலைத் தியானிக்கிறது எருமை

பாறையின் மேல் ஊர்வதாக எறும்பு போய்க்கொண்டிருக்கலாம்

காற்று ஊர்வதாக எருமை நினைக்கலாம்

வால் வரை வந்து வெளியின் ஆழத்தை வியக்கிறது எறும்பு

எறும்பின் தியானத்தில் எருமையின் தியானம் கலைகிறது.

வாலின் அசைவில் வெளி கடந்து நிலம் வீழ்ந்து ஊர்ந்துகொண்டிருக்கிறது எறும்பு.

இப்போது தியானிக்கத் தொடங்குகிறது நிலம்.

..அறிவு என்னும் அற்புதம் 19

(அறிவை வெறுக்கலாமா? பகுதி 4)

இரண்டாம் காரணம்: வான இயல் நிபுணர்கள் விண்மீன்களின் இயக்கத்தை வைத்து எதிர்காலம் பற்றிக் கணக்குப் போடுகிறார்கள் என்று நான் குறிப்பிட்டேனல்லவா?

இதை வார்த்தைக்கு வார்த்தை நிச்சயமானது என்று சொல்லிவிட முடியாது. இது உத்தேசமான ஓர் அறிவு. தனிப்பட்ட மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் இது நிச்சயமாக எல்லா நேரங்களிலும் பொருந்துவதில்லை.

உலகிலுள்ள அறிவுகள் அனைத்தும் இறைவனால் கொடுக்கப்பட்டவைதான். வான இயல்பற்றிய அறிவும் இறைவனால் கொடுக்கப்பட்டதுதான். இதனை உலகத்திற்கு கொடுத்தவர் இத்ரீஸ் நபி அவர்கள்.

இத்ரீஸ் நபியவர்களை வானலோகத்திற்கு அழைத்து சென்று மலக்குகள் பார்வையிடும் " ஸிர்ருல் மலக்கூத்து " என்கிற பிரபஞ்சங்கள் இரகசிய கிதாபை படிக்க கொடுத்தும் சூரியனுடைய கோள்கள் சுற்றி வரும் பாதைகளில் அந்தந்த கிரகங்களோடு அவரையும் பயணிக்க செய்தார்கள்

இப்படி சனிக்கோளுடன் சேர்ந்து 30 ஆண்டுகள் விண்ணிலே பயணித்து வந்தார்கள். ஆகையால் இவர்களால் தன்னால் நேரில் கண்ட நட்சத்திரத்திரங்களைப் பற்றியும் கிதாபு (பிரபஞ்சங்கள் இரகசியத்தை) ஒன்றாக சேர்த்து வான சாஸ்திரத்தை இவர்கள் தொகுத்து பூமிக்கு கொடுத்தார்கள்

இந்த ஞானத்தின் துணைகொண்டு அப்போதைய மக்கள் எத்தனையோ மர்மங்களைத் தெரிந்து கொண்டார்கள். எதிர்காலம் குறித்து அவர்கள் கூறியவை பெரும்பான்மை சரியாயிருந்தன.

ஆனால் அந்த ஞானமும் காலத்தை அளக்கும் திறமையும் அழிந்துபோய் விட்டன. அந்தத் திறமையை இன்றைக்குக் காண முடியாது. இன்றைய வானஇயல் நிபுணர்கள் கூறுவதில் ஏதேனும் உண்மை இருந்தால், அது தற்செயலானதுதானே தவிர, தவிர்க்க முடியாதது அல்ல! ஏனெனில், இந்த நிபுணர்கள் குறிப்பிடும் விளைவுகள் பெரும்பான்மை நிகழ்வதேயில்லை.

இப்படிப் பார்க்கும்போது, இதனை அறிவு என்று சொல்வதைவிட அறியாமை என்று சொல்வது மிகப் பொருத்தம் என்றே தீர்மானிக்க வேண்டி ஏற்படுகிறது. அறியாமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதை இஸ்லாம் எதிர்க்கிறது.

விண்வெளியில் கார்முகிற் கூட்டம் மிதந்து செல்லும் போது நாம் 'மழை வரப்போகிறது' என்று தீர்மானிக்கிறோம். நம் தீர்மானம் பெரும்பான்மை உண்மையாகவே இருக்கிறது. ஆனால் அதற்காக, 'கார்முகிற் கூட்டம் தோன்றினால் மழை பெய்துதான் ஆக வேண்டும்' என்று சொல்லிவிட முடியாதல்லவா?

நீல விண்திரை கார்முகில் திரையாக மாறியதுபோல், கார்முகிற் கூட்டம் திடீரென்று காற்றினால் சிதறியோடி நீல விண்திரையை முகம் காட்ட வைக்கலாம். ஏன் தெரியுமா?

மழை பெய்வதற்குக் கார்முகிற் கூட்டம் தோன்றியது ஒரு காரணம்; இதற்குப் பின்னால் பல காரணங்கள் இருக்கின்றன. காற்று வீசுவது, அதில் குளிர்ந்த தன்மை இருப்பது - இப்படி எத்தனையோ காரணங்கள்.

இந்தக் காரணங்கள் எல்லாம் ஒன்று சேரும் போதுதான் மழை பெய்ய முடியும். அவற்றில் ஒன்றே ஒன்று இழக்கப்பட்டாலும் போதும், ஒரு சொட்டுத் தண்ணீரை உங்களால் பார்க்க முடியாது.

எனவே, கார்முகிற் கூட்டம் தோன்றும் போதெல்லாம் மழை பொழிந்துதான் ஆகவேண்டும் என்று நம்புவது நிச்சயமாக அறியாமைதான். கார்முகில் இல்லாமல் மழை பொழிய முடியாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் கார்முகிற் கூட்டம் சிலவேளை மழையைத் தராமல் மறைந்து விடுவதுண்டு என்பதைத் தயவுசெய்து நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்.

மழைக்கும் மேகத்துக்குமிடையில் பிணைப்பு இருப்பது போல், விண்மீன்களுக்கும் உலக நிகழ்ச்சிகளுக்கு மிடையில் பிணைப்பு உண்டு.

மழை பெய்வதற்கு மேகத்தைத் தவிர்த்து எத்தனையோ காரணங்கள் இருப்பதுபோல், உலகில் தோன்றும் நிகழ்ச்சிகளுக்கு விண்மீன்களைத் தவிர்த்து எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் அலசிப் பார்த்து முடிவு காண்பது சாதாரணமாக மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்று.

அப்படி ஒரு மனிதன் அந்தக் காரணங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டுவிட்டால், அப்புறம், 'அனைத்தையும் இறைவனே இயக்குகிறான்' என்பதில் அவனுக்குச் சந்தேகம் தோன்றப் போவதில்லை

ஆதார நூற்கள் : 1) தஃப்ஸீர் ஹமீதிய்யா

2) இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் எழுதிய "கிதாபுல் இல்ம் ''

அறிவு என்னும் அற்புதம் 20

(மத அறிவும் பௌதீக அறிவும்)

மனித வரலாற்றில் முதன் முதலாக மத அறிவை மற்ற இயற்பொருள் சார்ந்த பௌதீக அறிவிலிருந்து வேறுபடுத்தியது இஸ்லாம் மார்க்கம் மட்டும்தான்

பொதுமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மத அறிவிற்கு மூலாதாரம் இறை வெளிப்பாடு (வஹீ)தான். (இந்த வாதத்திற்கு ஆதாரமாக இறை வெளிப்பாடாகிய குர்ஆன் நூல் வடிவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது)

தனி மனிதர்கள் சுயேச்சையாக எவ்வித நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகாமல் தீர்வு காண்பதற்கு ஏதுவாக இயற்கை நிகழ்வுகளை ஆய்வதற்கு முழு உரிமையும் வழங்கப்பட்டது.

...ஆனால் கிருஸ்துவ மதத்தில் அப்படி அல்ல, மதக் கொள்கை கோட்பாட்டிற்கு பௌதீக அறிவு குறுக்கிட்டால் அதை பாதகமானதாக கருதி, அது தண்டனைக்குரிய விஷயமாக பார்க்கப்படுகிறது .உதாரணமாக..

சூரியனும் மற்ற கோள்களும் பூமியைச் சுற்றுவதாகவே பல நூற்றாண்டுகளாக நம்பப்பட்டது. பூமி உள்ளிட்ட கோள்கள்தான் சூரியனைச் சுற்றுகின்றன என்று கலிலியோ, கோபர்நிகஸ், ஜோகன்னஸ் கெப்ளர் ஆகியோரின் ஆய்வுகள்தான் முதன்முறையாக கூறின.

கலிலியோ கண்டுபிடிப்புகள் கிறிஸ்தவ மத நம்பிக்கைக்கு எதிரானது என்று கூறி இவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இவரது கருத்துகளைத் திரும்பப் பெறவும் வலியுறுத்தப்பட்டது. நீண்டகாலம் இவர் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டதாகவும், கல்லால் அடித்து, தீவைத்துக் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நவீன வானியல் ஆய்வுகளின் தந்தை, நவீன இயற்பியலின் தந்தை, அறிவியலின் தந்தை என்றெல்லாம் போற்றப்படும் கலிலியோ 78 வயதில் மறைந்தார். கலிலியோ இறந்து 350 ஆண்டுகளுக்குப் பிறகு, அவரை தண்டித்தது தவறு என்று 1992-ல் போப் மன்னிப்பு கோரினார்.

அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:
நபி (ஸல்) அவர்கள் பேரீச்ச மரங்களுக்கு மகரந்தச் சேர்க்கை செய்துகொண்டிருந்த மக்களைக் கடந்து சென்றார்கள்.

அப்போது, "நீங்கள் (இவ்வாறு) செய்யாமலிருந்தால் நன்றாயிருக்குமே!" என்று சொன்னார்கள். ஆகவே, (அவர்கள் மகரந்தச் சேர்க்கை செய்வதை விட்டுவிட்டனர். அதனால் அந்த மகசூலில்) நன்றாகக் கனியாத தாழ்ந்த ரகக் காய்களே காய்த்தன.

அப்போது அவர்களைக் கடந்து நபி (ஸல்) அவர்கள் சென்றபோது, "உங்கள் (பேரீச்ச) மரங்களுக்கு என்ன நேர்ந்தது?"என்று கேட்டார்கள்.

மக்கள், "நீங்கள் இப்படி இப்படிச் சொன்னீர்கள். (அதனால் நாங்கள் மகரந்தச் சேர்க்கை செய்வதை விட்டுவிட்டோம். அதனால் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது)" என்று கூறினர்.

நபி (ஸல்) அவர்கள், "உங்கள் உலக விவகாரங்கள் பற்றி (என்னைவிட) நீங்களே நன்கு அறிந்தவர்கள்" என்று சொன்னார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் : 4713.

"மகரந்தச் சேர்க்கை செய்வதால் பலன் ஏற்படுமாயின் அவர்கள் அதை தொடர்ந்து செய்யட்டும் நான் யூகத்தின் பேரில்தான் அதைச் சொன்னேன். அது ஓர் அபிப்ராயமே இது போன்ற செயல்களில் என்னுடைய அபிப்பிராயத்தை ஏற்று நடக்க வேண்டும் என்பது இல்லை.

..ஆனால் நான் இறைவனை பற்றி சொல்வதை ஏற்று செயல்பட வேண்டும் என்பது கட்டாயம். இறைவனைப் பற்றி சொல்லும் போது நான் யதார்த்தமல்லாதவற்றைக் கூற மாட்டேன்" என்று விளக்கினார்கள்

இந்த நபிமொழியின்படி இஸ்லாம் மத நடவடிக்கைகளை அறிவியல் ஆய்வில் நின்றும் வேறுபடுத்தியுள்ளது என்பது தெரிகிறது. மத நடவடிக்கைகளைப் பொருத்த மட்டில் இறை காட்டிய வழியை முற்றிலுமாகக் கடைப்பிடித்தாக வேண்டும்.

ஆனால், அறிவியல் துறையில் மனித அனுபவங்களுக்கு ஏற்பச் செயல்பட வேண்டும் என்று கூறும் இஸ்லாம் அறிவியல் துறைச் சரித்திரத்தில் ஒரு மகத்தான புரட்சியைச் சாத்தியமாக்கியது இந்தப் பாகுபாடுதான் .

அறிவு என்னும் அற்புதம் 21

(கணித மேதை அல் குவரிஸ்மி (கிபி 780 - 850)

அபு ஜாபர் முஹம்மத் இப்னு மூஸா என்ற இயற்பெயர் கொண்ட அல் குவரிஸ்மி பக்தாதின் பக்கத்தில், யூப்ரடீஸ், டைகிரீஸ் நதிகளுக்கிடையே அமைந்த குத்ரு புல்லி என்ற மாவட்டத்தில் வாழ்ந்ததாக வரலாற்றாசிரியர் அல்தபரீ கூறுகிறார்.

அவரது மூதாதையர்கள் குவாரிஸ்மிலிருந்து வந்தவர்கள். அவர்கள் ஜோராஸ்டிர மதத்தை (நெருப்பு வணங்கிகள்) பின்பற்றியவர்கள்.

அவரது வாழ்க்கையைப் பற்றி மிகக் குறைவான தகவல்களே கிடைத்துள்ளன. குவாரிஸ்மி ஏழ்மைமிக்க குடும்பத்திலிருந்து வந்தாலும் அவரது அர்ப்பணிப்பும், அயராத உழைப்பும், முஸ்லிம் உலகமே அவரைக் குறித்து பெருமைப்படும் அளவுக்கு

உயர்ந்த சிகரத்தை அடையக் காரணமாயின. மத்திய காலத்தில் எந்த ஒரு கணித மேதையும் எட்ட முடியாத சிகரத்தை அல்குவாரிஸ்மி தொட்டிருந்தார்.

கலீஃபா மாமூன் அவர்களின் ஆட்சிகாலத்தில் (கி.பி 825) அவர் பக்தாத் சென்றார். அந்த கால கட்டத்தில் அங்கு பேராற்றல் உள்ள பல அறிஞர்கள் ஆராய்ச்சியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அங்கிருந்த 'பைதுல் ஹிக்மா' (அறிவின் இல்லம்) அறிவின் இல்லத் பல்கலைக்கழகத்தின் கல்விச் சூழல் அவரைப் பெரிதும் கவர்ந்தது.

ஆகவே அவர் கணிதவியலில் ஆழமான ஆய்வுகளை அங்கே மேற்கொண்டு அதன் விளைவாக, தான் கண்டறிந்த நுணுக்கமான கணிதக் கோட்பாடுகளை அங்கிருந்த அறிவியல் கழகத்தில் சமர்ப்பித்தார். இதை இக்காலத்தில் முனைவர் பட்ட ஆய்வுக்கு (பி.எச்.டி.) பல்கலைக்கழகங்களில் சமர்ப்பிக்கப்படும் ஆய்வேட்டிற்கு சமமாகச் சொல்லலாம்.

பல்கலைக்கழகத்தில் இவர் தனது கணித ஆய்வுகளைச் சமர்ப்பித்ததும் அந்தத் துறைசார்ந்த நிபுணர்கள் அவரிடம் வினாக் கணைகளைத் தொடுத்தனர். அவர்கள் திருப்தியுறும் விதமாக அவர் பதிலளித்தார். அதைத் தொடர்ந்து அவர் 'பைதுல் ஹிக்மாவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

அல்ஜீப்ரா என்று அறியப்பட்ட கனிதக் கோட்பாட்டைப் பற்றி முதன் முதலில் ஆய்வுக் கட்டுரை எழுதிய முஸ்லிம் அறிஞர் இவர்தான். அவரது 'அல்ஜபர் வல்முகாபலா' - 'அல் ஜீப்ரா' எனும் நூல் கணிதவியலுக்கு மிக முக்கிய பங்களிப்பாகும். அந்த நூலின் தலைப்பே 'அல்ஜீப்ரா' என்ற சொல்லை உலகுக்குத் தந்தது.அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட சில வழிமுறைகள் இன்றும் உலகெங்கும் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் பயிற்றுவிக்கப்படுகிறன.

அல்குவாரிஸ்மியும், அவரது சகாக்களும் பக்தாதில் உள்ள அறிவின் இல்லத்தில்' ஆராய்ச்சியாளராக இருந்தார்கள். அங்கு அவர்களுக்குரிய கடமை என்னவெனில், கிரேக்க விஞ்ஞான பிரதிகளை மொழியாக்கம் செய்வதில் பங்கு கொள்ளுதல், அத்தோடு அங்கு அவர்கள் அட்சர கணிதம், ஷேத்திர கணிதம், வானியல் ஆகியவற்றைப் படிப்பதுடன், அவற்றைப் பற்றியும் எழுதினர்.

உண்மையாக அல்குவாரிஸ்மி அரசு ஆதரவுடன்தான் பணி செய்தார். பரவலாக அறியப்பட்ட அவரது விண்ணியல் கலை வரிசைப்பட்டியல் ஜிஜ்சை (சமஸ்கிருதத்தில் ஜெய்ஷா) அல்ஃபஜாரியின் கண்டுபிடிப்பின் அடிப்படையில், இந்திய கிரேக்க வானியல்கலை அமைப்போடு இணைந்து அதே நேரத்தில் தனது சொந்த பங்களிப்பையும் தந்து உருவாக்கினார்.

பூமியின் நிலத்தளவை, கணக்கியல் (Geodetic) நடவடிக்கைகளில் பங்கு கொண்டவர்கள், மூஸா இப்னு ஷாகிரினின் மகன்களும் அல்குவாரிஸ்மியுமாகும். அவர் யூத காலண்டர் பற்றியும் ஒரு நூல் எழுதினார்.

இந்த காலகட்டத்தில் ஐரோப்பாவில் ரோம எண்களே புழக்கத்தில் இருந்தன. எண் குறிப்பை நிலைப்படுத்தும் முக்கியமான முறையை இந்தியர்கள்தான் கண்டுபிடித்தனர்.

அதாவது ஒரு தனிப்பட்ட எண், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் போன்ற வித்தியாசமான மதிப்பை வெளிப்படுத்த அந்த எண்ணுக்கு அடுத்து ஜீரோ என்ற '0' பூஜ்யத்தை இணைத்தால் 10, 100, 1000 போன்று மேலும் இலட்சம், கோடி வரை மற்றும் முடிவற்ற எந்த எண்ணிக்கையையும் இலகுவில் எழுதிவிட முடியும். இந்த அரபு எண்களை அறிமுகப்படுத்தியதில் பெரும் பொறுப்பெடுத்துக் கொண்டது அல்குவாரிஸ்மி நூலே.

இதில் கவர்ச்சியூட்டும் செய்தி என்னவெனில், முஸ்லிம் அறிஞர்கள் மிகவும் கண்ணியமிக்கவர்களாக இருந்துள்ளார்கள். தசாம்ச முறையை இந்தியர்கள்தான் கண்டு பிடித்தனர். அரபு அறிஞர்கள் அவர்களிடமிருந்து கற்று உலகெங்கும் அதைப் பரப்பினார்கள். ஆயினும் அதன் முழுப் புகழனைத்தையும் இந்தியாவுக்கே அர்ப்பணிக்கும் விதமாக 'இல்ம் ஹிந்ஸா' (இந்திய தசாம்ச அறிவு) எனப் பெயரிட்டார்கள்!

(இந்த தசாம்ச - ஜீரோ - முறை இந்தியாவில் கண்டுபிடிக்கப் பட்டாலும். அங்கு அது உடன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பின்பு அது பக்தாதில் உள்ள ஆட்சியாளர்களால் ஆதரிக்கப்பட்டு ,பிறகு ஸ்பெயினில் இஸ்லாமிய ஆட்சியாளர்கள் மூலம் ஐரோப்பா எங்கும் பரப்பப்பட்டது. அதன்பிறகே இந்தியர்கள் அதைத் தங்களின் புழக்கத்தில்கொண்டு வந்தார்கள்.)

பிற்காலத்தில் கணித விற்பன்னர்களில் குவாரிஸ்மியின் செல்வாக்கால் ஈர்க்கப்பட்டவர் ஓமர் கைய்யாம் ஆகும்!

12ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அல்குவாரிஸ்மியின் பல நூல்கள் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

உண்மையில், கணிதத்துறை பற்றி அவர் எழுதிய அவரது நூல், கிதாபுல் - ஜம்ஆ -வல்தஃப்ரீ பில் ஹிஸாப் அல் ஹிந்தி என்ற அவர் அரபியில் எழுதிய நூல் தொலைந்துவிட்டது. ஆயினும் அதன் இலத்தீன் மொழிபெயர்ப்பு இன்றும் வாழ்கிறது.

அட்சர கணிதத்தைப் பற்றி (அல்ஜீப்ரா) அவர் எழுதிய நூலும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இத்தகைய மொழி பெயர்ப்புக்களின் காரணமாகவே, 'அதுவரை முற்றிலும் அறியப் படாத இந்த புதிய அறிவியல் மேற்குலகிற்கு அறிமுகப்படுத்தப் பட்டது.

அவரது விண்ணியல் அட்டவணைகளும் பல ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பிறகு அவை சீன மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டன!

#அல்_குவாரிஸ்மி பற்றி மேலும் சில தகவல்கள் :

ஒன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் வாழ்ந்த இந்த அறிஞர் #அல்ஜிப்ராவின்_தந்தை என அறியப்படுபவர். சந்திரனில் ஒரு பள்ளத்தாக்கு இவர் பெயரால் அழைக்கப்படுகிறது.அவர் எழுதிய பல புத்தகங்களில் மிகவும் புகழ்பெற்றவை இரண்டு...

முதலாவது :
#இந்திய_எண்களை_கொண்டு_கணக்கு இந்தப் புத்தகத்தின் மூலமாகத் தான் இப்போது அரேபிய எண்கள் என அழைக்கப்படும் இந்தியாவில் பிறந்த எண்கள் உலகம் முழுவதும் அறியப்பட்டன...

இரண்டாவது :
#ஸிஜ்_அல்_ஸிந்த்_ஹிந்த்'
என்று அறியப்படும் வானவியல் அட்டவணை.

சூரியன், சந்திரன் மற்றும் அவரது காலத்தில் அறியப்பட்டிருந்த ஐந்து கிரகங்களின் பாதைகளின் அட்டவணை. இவருக்கு முன்னாலேயே எட்டாவது நூற்றாண்டில் #பிரம்ம_குப்தரின் - #பிரம்ம_சித்தாந்தம் என்ற வானவியல் நூல் #அல்ஃபசாரி என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது. ஆனால் இவரது அட்டவணை தான் அரேபியர்கள் தாங்களாகத் தயாரித்த முதல் அட்டவணை...

குவாரிஸ்மி வானவியல், கணிதத்தோடு நின்றுவிட வில்லை.
#உலகத்தின்_வடிவம்' என்ற பூகோளப் புத்தகத்தையும் எழுதினார்.

இரண்டாம் நூற்றாண்டில் #அலெக்ஸாண்டிரியாவில் வாழ்ந்த #தாலமி கிரேக்க மொழியில் எழுதிய #பூகோளம்' என்ற புகழ்பெற்ற புத்தகத்தைத் தழுவி எழுதிய அந்தப் புத்தகம், உலகத்தின் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நகரங்களைப் பற்றிப் பேசுகிறது...

அறிவு என்னும் அற்புதம் 22

(விண்ணியல் அறிஞர் அல்ஃபர்கானி (கிபி 860)

அபு அப்பாஸ் அஹமது இப்னு முஹம்மத் இப்னு காதிர் அல் ஃபர்கானி, ஃபர்கானாவில் பிறந்தார். அவர் தனது பணிகளை கலீஃபா மாமூன் அரசவையில் தொடங்கி பின் வந்த நான்கு கலீஃபாக்கள் அவைகளில் நிறைவு செய்தார்.

அல்ஃபர்கானி, என்றும் நினைவில் நிற்கக்கூடிய 'வானியலின் அடிப்படைகள்' என்ற நூலை எழுதினார். அந்த நூல் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, ஐரோப்பிய விண்ணியல் ஆய்வின்மீது மகத்தான செல்வாக்கை உருவாக்கியது.

அல்ஃபர்கானி பூமியின் சுற்றளவிலும், (6500 மைல்கள் என்பதிலும்) மற்றும் கிரகங்களின் சுற்றளவிலும் அவர் பிடிவாதமாக இருந்தார்.

உண்மையில் எல்லா முஸ்லிம் அறிவியல் அறிஞர்களைப் போலவே அல்ஃபர்கானியும் சகல கலா விற்பன்னராக திகழ்ந்தார். அவரது செயற்திறன்களில் பொறியியலும் (என்ஜீனியரிங்) அடங்கும்.

கலீஃபா முத்தவக்கில் ஆட்சி காலத்தில், உயர்ந்த, புகழ்பெற்ற 'நைலோ மீட்டரை' (நைல் நதியின் எழுச்சியை, பொங்கு மட்டத்தை - காட்டும் ஒரு மகத்தான தூண்) ஃபுஸாத்தில் (பழைய கெய்ரோவில்) வடிவமைத்துக் கட்டும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தத் திட்டம் அல் ஃபர்கானியின் மரணத்திற்கு சற்று பின் 861ல் முழுமை பெற்றது.

கலீஃபா முத்தவக்கில் சமாரியாவிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் 'ஜபாரியா' என்ற பெயரில் புது நகர் ஒன்றை கிபி 858ல் உருவாக்க முனைந்தார்.

முதல் கட்டமாக ஜபாரியா ஏரியை வெட்டும் பணியை மூஸா இப்னு ஷாகிரின் என்பவரின் இரு மகன்களான, முஹம்மது மற்றும் அஹமதுவிடம் கலீஃபா முதவக்கில் பொறுப்பு கொடுத்தார்.

மேலும் இப்னு ஷாகிரின் மகன்கள் இருவரும் வேண்டுமென்றே சிறந்த பொறியாளரான சிந்த் இப்னு அலியை தொழில் ரீதியான பொறாமையின் காரணமாக அலட்சியப்படுத்தியதோடு., அவரை சமாராவிலுள்ள முதவக்கிலின் அரசவையிலிருந்து அப்புறப்படுத்தி, பக்தாதுக்குச் செல்ல வைத்தனர்.

பின் அந்தப் பணியை அல்ஃபர்கானியிடம் ஒப்படைத்தனர். அல் ஃபர்கானி அறிவியல் விஞ்ஞான கோட்பாட்டைச் சொல்லும் ஒரு தத்துவ வாதி, அவருக்கு அதில் உள்ள மகத்தான அறிவைப்போல, செயல்முறை பொறியியலில் அந்த அளவு பயிற்சியின்மையால் வெற்றிபெற முடியவில்லை.

அந்த ஏரிக்காக கால்வாய் தோண்டும் போது கால்வாயின் மற்ற பகுதியைவிட அதன் தொடக்கத்தில் அதிக ஆழமாகத் தோண்டிவிட்டார். அதனால் சைகிரீங் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காலத்தைத் தவிர மற்ற காலங்களில் அந்தக் கால்வாயில் தண்ணீர் ஓடுவதில்லை.

அதனால் அந்த இரண்டு சகோதரர்களையும் கலீஃபா முத்தவக்கில் கடுமையாகத் தண்டிக்கப்பட இருந்தார். ஆனால் சிந்த் இப்னு அலி, அல்ஃபர்கானின் கணக்கீட்டின் நடைமுறைத் தவறுகளைச் சரி செய்து, அல்ஃபர்கானின் வேண்டுகோளுக் கிணங்க அவர் மீது இரக்கம் கொண்டு அந்தப் பணியை சிந்த் இப்னு அலி செய்து முடிக்க தவறு செய்த சகோதரர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

அறிவு என்னும் அற்புதம் 23

(இருண்ட காலத்தில் இஸ்லாமிய பேரொளி)

சமகால உலகம் அறிவியல் கண்டுபிடிப்புகளிலும் விஞ்ஞான தொழில்நுட்பங்களிலும் அவை அனைத்துக்குமான அஸ்திவாரம் அல்குர்ஆனின் மூலமாகவே இடப்பட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் அல்குர்ஆன் ஒரு பிரபஞ்ச நூல் மட்டுமன்றி அறிவியல் கண்டுபிடிப்பு மற்றும் வளர்ச்சிக்கான பாடத்திட்டம் அனைத்துமே குர்ஆனில் குறிப்பிட்டே இருக்கிறது

இதனாலேயே "அல்குர்ஆன் பேசும் பிரபஞ்சம். பிரபஞ்சம் மௌனக் குர்ஆன்" என்ற இக்கருத்தை உஸ்தாத் மன்சூர் தன்னுடைய அல்குர்ஆன் விளக்க உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய வரலாறில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம் 'இருண்ட காலம்' என்றழைக்கப்படுகிறது.

நாகரிகத்திலிருந்து வெகு தொலைவில் ஐரோப்பா இருந்த காலக் கட்டம் அது. "ஐரோப்பாவில் வன்முறை நிறைந்து அறிவொளி இருண்டு இருந்த ஒரு காலம் அது''. (என்சைக்ளோ பீடியா 1984)

"இருண்ட காலம்" எனும் சொற்றொடர் ஐரோப்பாவிற்கே பொருந்தும்; ஐரோப்பா 'இருண்ட கால'த்தின் காரிருளில் மூழ்கி இருந்தபோது, இஸ்லாமிய உலகில் நாகரிகம் பேரொளி வீசிக் கொண்டிருந்தது.

மேற்கத்தியத் தத்துவத்தின் வரலாறு (History of Western Philosophy) எனும் தம் நூலில் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல், "இந்தியா முதல் ஸ்பெயின் வரை ஒளிமிக்க இஸ்லாமிய நாகரிகம் பரவியது" என்று எழுதுகிறார்.

தொலை நோக்கு கருவியைக் (Teles Cope) கண்டுபிடித்து கலீலியோ என்றுதான் சாதாரணமாக நம்பப்படுகிறது. ஆனால் கலீலியோவுக்கு ஏறத்தாழ 700 ஆண்டுகளுக்கு முன்பே அபு இஸ்ஹாக் இப்னு ஜந்துப் என்பவர் வானவீதி ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார்.

தொலைவிலுள்ளவற்றை நோக்க இவர் சிலவிதிகளை வகுத்து, அவ்விதிகளை ஒட்டி ஒருவிதத் தொலை நோக்கும் கருவியை உருவாக்கி இருந்தார். இந்தக் கருவியை அடிப்படையாகக் கொண்டு அதில் சில மேம்பாடுகளைச் செய்தார் கலீலியோ.

கலீலியோவின் தொலை நோக்குக் கருவியை முன்னோடியாகக் கொண்டுதான், மிக நுணுக்கமான இன்றைய நவீன மின்சாரத் தொலை நோக்கும் கருவிகள் தயாரிக்கப் பட்டன. நவீன அறிவியலின் அடிப்படை ஆய்வுக்கு இதுவே வித்திட்டது

ஆனால், பண்டைக் காலங்களில் இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பலவிதமான மூட நம்பிக்கைகள் தடையாயிருந்தன. ஜாபிர் இப்னு ஹய்யான் (D. 817) என்பவர் கூர்நோக்கின் (ஆய்வின்) அத்தியாவசியத்தை உணர்ந்தவராகத் தாம் கண்டுபிடித்தவற்றை அறிவியல் ஆய்விற்குப் பயன்படுத்தினார்.

ஆய்வின் விவரங்களை மொழியாக்கம் செய்து ஐரோப்பாவிற்கு அனுப்பி வைத்தார். இந்த வழியில் ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, இன்றைய அறிவியல் பரிசோதனைக்குத் தகுந்த அடித்தளம் அமைக்கப்பட்டது.

மனித வரலாற்றில் நிலைம விதி (Theory of Incertia) பற்றி முதன் முதலாக எடுத்துரைத்தவர் அலி ஹஸன் இப்னு அல் ஹய்ஷவும் (D. 1021) ஆவார்.

இந்தக் கண்டுபிடிப்பைப் பற்றி அறிந்த ஐரோப்பிய வல்லுநர்கள் அதைப் பற்றி அறிய மேலும் நுண்ணிய ஆய்வை மேற்கொண்டனர். வெகு காலத்திற்குப்பின் அதுவே நியூட்டன் விதிகள் (Newton's Lav of Motion) என முறைப்படுத்தப்பட்டது.

புறவிசை (External Force) ஒன்று செயற்பட்டு மாற்றும்வரை எந்த ஒரு பொருளும் தனது ஓய்வு நிலையையோ அல்லது நேர்க்கோட்டில் அமைந்த சீரான இயக்க நிலையையோ மாற்றி கொள்ளாமல் தொடர்ந்து அதே நிலையில் இருக்கும் என்பதுதான் நியூட்டன் விதி.

அறிவு என்னும் அற்புதம் 24

(பூவுலகின் வயது)

மனித வர்க்கம் புவியில் தோன்றிய காலத்தைப்பற்றி அறிவியல் வல்லுநர்களால் ஒருமித்த கருத்துக்கு வர முடியவில்லை. கிறிஸ்துவுக்கு 10ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தது என அவர்கள் கருதும் ஒரு மனித எலும்புக் கூட்டைக் கண்டெடுத்துள்ள மையால் இந்தக் காரியத்தைப் பற்றிப் பைபிளில் கூறப்படுவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

பைபிளில் ஆதி ஆகமத்தில் (Gen- esis) கூறப்பட்டு, மனித வர்க்கத்தின் தோற்றம் பற்றிய நாளின் அடிப்படை யில், ஆதம், கிறிஸ்துவுக்கு 3700 (மூவாயிரத்து எழுநூறு) ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகக் கணிக்கபபடுகிறது.

பழைய ஏற்பாட்டைப் (Old Testament) பின்பற்றிக் கணிக்கப்பட்ட யூத நாள்காட்டி (Jewish Calender) இந்தத் தேதியை மிகத் துல்லியமாக அறிவிக்கின்றது. இதன்படி கிறிஸ்துவ ஆண்டு 1975இன் பின்பாதியில் உலகம் தோன்றி 5736 ஆண்டுகள் ஆகின்றன. நவீன அறிவியல்படி இஃது ஏற்றுத் தக்கதன்று.

பைபிளின் கூற்றுப்பிரகாரம், கிறிஸ்துவர்கள், புவியின் வயது ஒரு சில ஆயிரம் ஆண்டுகள்தாம் ஆகியுள்ளதாகக் கருதுகிறார்கள். ஜேம்ஸ் ஹட்டன் எனும் பிரபலமான வல்லுநர் மேற்கொண்ட ஆய்வுக்குப் பின்னர்தான் அறிவியல் ரீதியாக இந்தக் கணிப்பு தவறு ஒரு சில என்பது வெளியாயிற்று.

புவி மற்றும் அதிலுள்ள பாறைகளின் அமைப்பையும்
ஆய்வதற்காகத் தம் வாணாள் முழுவதும் பாடுபட்டார் இவர். இவருடைய ஆய்வின் விளைவாக, புவி இன்றைய அதன் வடிவைப்பெற பல மில்லியன் ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும் என்பது புலனாயிற்று.

சார்லஸ் லையல் (Charles Lye11) என்பவர் இதற்குப்பின் நடத்திய ஆய்வு ஹட்டனின் முடிவை உறுதி செய்தது. இவருடைய பிரசித்தி பெற்ற நூலாகிய புவியியல் கோட்பாடுகளின் (Principles of Geology) முதல் பகுதி 1830-இல் பிரசுரமாகியது. இந்த நூல் வெளியான பின்னர்தான்
பைபிளின் காலக் கணிப்பை, முக்கியம் வாய்ந்த விவாதங்களில் மேற்கோள் காட்டுவது நிறுத்தப்பட்டது.

“உண்மையில் லையல்லினுடைய நூற்கள்தாம், பைபிளின் கூற்றுகள் சில அம்சங்களிலாவது ஏதோ ஒரு வகையில் தவறாக இருக்கக்கூடும் என்று உலகத்தை நம்ப வைத்தது. அது இதுகாறும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒரு கருத்து” என்று ஃபிரட் ஹோய்ல் (Fred Hoyle) என்பவர், அறிவார்ந்த பிரபஞ்சம் (The Intelligent எனும் தம் நூலில் எழுதுகிறார். Universe)

பைபிளில் காணப்படும் இத்தகைய கருத்துகள் ஐரோப்பாவில் அறிவியல் வளர்ச்சிக்கு பெரும் முட்டுக்கட்டையாகத் திகழ்ந்தன. கிறிஸ்துவ ஆலயக் குழுவின் அங்கீகாரம் பெறாமல் யாரேனும் ஏதேனும் தத்துவத்தை வெளியிட முன்வந்தால், அது புனிதத்துவத்தைப் பாழடிக்கின்ற தத்துவம் என்று முடிவு கட்டித் தண்டிக்கப்படுவார்.

ஆனால், இஸ்லாமில் இத்தகைய யதார்த்தமில்லாத கருத்துகள் தலை தூக்கியதே இல்லை. ஆகவேதான், ஸ்பெயினில் அறிவியல் ஆய்வு தொடங்கியபோது மார்க்க ரீதியாக எவ்வித மறுப்பும் எதிர்ப்பும் தோன்றவில்லை.

பூமியின் வயது எவ்வளவு? என்பது பற்றி பிரிட்டானிக்கா :-

பூமியின் வயது இன்னும் ஒரு திறந்த கேள்வி-சரி, நீங்கள் யாருடன் பேசுகிறீர்கள் என்பதைப் பொறுத்து. யூத மற்றும் கிரிஸ்துவர் மரபுகளில், மத அறிஞர்கள் பைபிள் , உண்மையில் விளக்கம், உலகம் தோராயமாக 6,000 ஆண்டுகள் பழமையானது என்று கூறுகிறது என்று தெரிவிக்கின்றனர் -

இது இளம்-பூமி படைப்பாளிகளால் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது . பிற மத மரபுகளிலிருந்து விடையைக் கிண்டல் செய்வது சற்று கடினமானது. உதாரணமாக, முஸ்லீம் அறிஞர்கள் குர்ஆன் படைப்பின் ஒவ்வொரு ஆறு நாட்களும் பைபிளின் புத்தகமான ஆதியாகமத்தில் வழங்கப்படுவதைக் குறிப்பிடுகிறது.1,000 மற்றும் 50,000 ஆண்டுகளுக்கு இடையில் எங்கோ நீடித்தது,

ஆனால் இஸ்லாமிய பாரம்பரியத்தில் பூமியின் வயது பற்றி வேறு சில குறிப்புகள் உள்ளன. சில இந்து நூல்களின்படி, பூமி 150 டிரில்லியன் (ஒரு t உடன்) ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளது!

பூமியின் பழமையான பாறைகள் மற்றும் தாதுக்களின் தோராயமான வயதை தீர்மானிக்க விஞ்ஞானிகள் கதிரியக்க டேட்டிங் நுட்பங்களைப் பயன்படுத்தியுள்ளனர் . பூமி 4.4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவானது என்று அவர்கள் மதிப்பிடுகின்றனர் .

கிரகத்தின் வெளிப்புற மேலோடு எப்போது உருவாகத் தொடங்கியது என்பது யாருக்கும் தெரியாது என்றாலும், சில விஞ்ஞானிகள் சுமார் 4.4 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய சில சிர்கான் தானியங்களின் இருப்பு நிலையான கண்டங்கள் , திரவ நீர் மற்றும் மேற்பரப்பு வெப்பநிலை இருப்பதை உறுதிப்படுத்துவதாக நம்புகிறார்கள்.

100 °C (212 °F) க்கும் குறைவாக புவியியலாளர்கள் ஒரு முறைசாரா நேர இடைவெளியை உருவாக்கியுள்ளனர், ஹேடியன் ஈயான், இது சுமார் 4.6 பில்லியனிலிருந்து சுமார் 4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வரை நீண்டுள்ளது, இது ஆரம்பகால சூரிய மண்டலத்தின் வாயுக்கள் , தூசி, பாறைகள் மற்றும் பிற குப்பைகள் ஆகியவற்றின் மூலம் பூமி உருவான காலத்தை விவரிக்கிறது ."

அறிவு என்னும் அற்புதம் 25

(மதமும், அறிவியலும்)

அறிவும் அறிவியலும் இன்றி நாகரிகம் தோன்ற முடியாது என்பது ஒரு பேருண்மையாகும். ஆயினும் மதம் அறிவியலுக்கு முரணானது, அது அறிவியலை ஆட்சேபிக்கின்றது என்ற வாதம் பிழையானதாகும்.

மதம் அறிவியலுக்கு எதிரானது என்ற கருத்து ஐரோப்பிய வரலாற்றில் நடைபெற்ற சில நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து எழுந்தவோர் ஐரோப்பிய நோக்காகும். மதத்திற்கும் அறிவியலுக்கும் இடையில் உலகில் வேறு எங்கும் போராட்டங்கள் நிகழவில்லை. அது ஐரோப்பாவிலேயே நிகழ்ந்தது.

மனித வரலாற்றில் மதம் அறிவு வளர்ச்சிக்கு தடையாக எங்கும் இருந்ததில்லை. ஐரோப்பாவில் தான் கிறிஸ்தவக் கோயில் அறிவு ஆராய்ச்சிக்கும், சுதந்திரமான சிந்தனைக்கும் எதிராக வரலாற்றின் மத்திய காலப்பிரிவில் செயற்பட்டது.

ஆனால் இஸ்லாத்தைப் பொறுத்த வரையில், அது அறிவு ஆராய்ச்சியை ஊக்குவித்த மார்க்கம் மட்டுமல்ல, அறிவை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மார்க்கமுமாகும்.

அது அறிவு ஆராய்ச்சிக்கு கொடுக்கும் முக்கியத்துவம் அதிசயிக்கத்தக்கதாகும். கல்வியினதும் அதனைக் கற்பவனதும், அதனைக் கற்பிப்பவனதும் சிறப்புகளைப் பற்றி இஸ்லாம் விரிவாகப் பேசியுள்ளது. .

அல்குர்ஆனை ஆராய்ந்து நோக்குகையில் அது அறிவுத்துறைக்கு கொடுத்திருக்கும அழுத்தத்தையும் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ள முடியும்.

'அறிவு' எனும் பொருள்படும் 'இல்ம்' எனும் பதம் அல்குர்ஆனில் என்பது இடங்களில் இடம்பெற்றிருக்கின்றது. இப்பதத்திலிருந்து பிறந்த சொற்களோ அல்குர்ஆனில் பல நூறு தடவைகள் வந்துள்ளன.

அறிவு எனும் கருத்தை கொடுக்கும் 'அல்-அல்பாப்' எனும் சொல் அல்குர்ஆனில் 16 தடவைகள் இடம் பெற்றிருக்கின்றது. குறித்த பொருளைத் தரும் 'அந்நுஹா' எனும் சொல் இரு தடவைகள் இடம்பெற்று இருக்கின்றது.

அல்குர்ஆனில் 'அல்-அகல்' எனும் பதம் அறிவு என்னும் பொருளைத்தரும். அதில் இடம்பெற்றுள்ள இந்த வினையடியிலிருந்து பிறந்த சொற்களின் எண்ணிக்கை 49 ஆகும்.

சிந்தனை என்ற கருத்தில் பயன்படுத்தப்படுதம் 'அல்-பிக்ர்' என்ற சொல்லிலிருந்து பிறந்த 18 சொற்களும் அல்குர்ஆனில் இடம் பெற்றுள்ளன. 'அல்-பிக்ஹ்' விளக்கம் என்ற பதத்திலிருந்து பிறந்த 21 சொற்களும் காணப்படுகின்றன.

அல்-ஹிக்மா' (ஞானம்) என்ற பதம் 20 தடவைகள் வந்துள்ளதுடன், ஆதாரம் எனும் பொருள்படும் 'அல்-புர்ஹான்' என்ற சொல் 7 தடவைகளும் அல்குர்ஆனில்
குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுடன் ஆராய்தல், நோக்குதல், சிந்தித்தல் போன்ற கருத்துக்களைத் தரும் பல சொற்களும் அல்குர்ஆனில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

இவை அனைத்துக்கும் மேலாக அல்குர்ஆனில் ஆரம்பமாக இறங்கிய வசனங்களோ, அறிவைப்பற்றியும் அறிவின் அடிப்படைகளகத் திகழும் வாசிப்பு, எழுத்து, எழுதுகோல் பற்றியும் பேசுவதை பார்க்கின்றோம்.

ஸூரத்துல் அலக்கின் இவ்வாரம்ப வசனங்களைத் தொடர்ந்து இறங்கிய ஸூறா 'அல்கலமின்' ஆரம்ப வசனமும் அறிவின் முக்கியத்துவத்தனை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது.

இது போன்று ஆராயுமாறும், சிந்திக்குமாறும மனிதர்களைத் தூண்டுகின்ற சுமார் 35 வசனங்கள் அல்குர்ஆனில் காணப்படுகின்றன. கல்வியைத் தேடி உலகில் பயணம் செய்யுமாறு ஆர்வமூட்டும் சுமார் 50 வசனங்களை அல்குர்ஆனில் காணமுடிகின்றது.

அல்குர்ஆனில் பிரபஞ்சம் தொடர்பாகவும் அறிவியல் அத்தாட்சிகள் தொடர்பாகவும் பேசுகின்ற சுமார் 750 திருவசனங்கள் காணப்படுகின்றன. அது மட்டுமா?

அல்குர்ஆனில் இயற்கை, விஞ்ஞானம், வானவியல், தாவரவியல், மிருகவியல், விவசாயம், மானிடவியல், மனோதத்துவம், மருத்துவம், சமூகவியல், வரலாறு, புவியியல் போன்ற கலைகள் தொடர்பான பல உண்மைகளும் அக்கலைகளுடன் தொடர்பான பல அடிப்படைகளும் குறிப்பிடப்பட்ட ள்ளன.

அல்குர்ஆன் அறிவின் அவசியத்தை எந்தளவு
வலியுறுத்துகின்றது எனில், "அறிஞர்களே அல்லாஹ்வை சரியாக அஞ்சுவார்கள்" எனக் கூறுகின்றது.

மேலும் அல்குர்ஆன் அறியாமையையும் மடமையையும் பற்றி கூறும்போது, "அது நரகத்தின் பாதை" என வர்ணிக்கின்றது. பார்க்க: அல் அஃராப்: 79.

பெரும்பாலான ஹதீஸ் கிரந்தங்களில் 'கிதாபுல் இல்ம் எனும் பெயரில் அறிவைப் பற்றிப் பேசும் ஹதீஸ்களைக் கொண்ட ஒரு தனியான அத்தியாயத்தைக் காண முடியும். அறிவுடன் தொடர்பான பல ஹதீஸ்கள் வேறு பல அத்தியாயங்களிலும் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக 'கிதாபுத்திப்பி' (மருத்துவம் பற்றியது) என்ற அத்தியாயத்தைக் குறிப்பிடலாம்.

நூற்றுக்கணக்கான ஹதீஸ் கிரந்தங்களில் ஒன்றான ஸஹீஹுல் புகாரியில் மாத்திரம் 'கிதாபுல் இல்ம்' எனும் அத்தியாயத்தில் 102 நபிமொழிகள் காணப்படுகின்றன.

அல்குர்ஆன் விஞ்ஞான, கைத்தொழில், தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஆக்கமும்,ஊக்கமும் கொடுப்பதை காணமுடிகின்றது.

இன்றைய கைத்தொழில் முன்னேற்றத்துக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ள இரும்பைத் தலைப்பாகக் கொண்ட ஓர் அத்தியாயமே குர்ஆனில் இடம்பெற்றுள்ளது. இவ்வத்தியாயம் இரும்பின் சிவில், இராணுவ பயன்பாடுகளைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது. பார்க்க குர்ஆன் (57:25)

மேலும் இறைத் தூதர்களில் பெரும்பாலானோரும பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதை வரலாறு உறுதி செய்கின்றது. உதாரணமாக, நபி நூஹ் (அலை) கப்பல் கட்டும் தொழிலை அறிந்து இருந்தார்கள்.

நபிமார்களான இப்றாஹீம் (அலை) , இஸ்மாயீல் (அலை) கட்டட நிர்மாணிகளாக விளங்கி கஃபாவைக் கட்டினார்கள்.

நபி தாவூத் (அலை) இரும்பை உருக்கி கவசங்கள் செய்யும் திறனைப் பெற்றிருந்தார்கள்.

நபி ஸுலைமான் (அலை) அவர்களோ ஜின்களின் உதவியுடன் அதிசயிக்கத்தக்க பல பணிகளை மேற்கொண்டமை பற்றி அல்குர்ஆன் விளக்குகின்றது..

பல திறன்களையும் அபார ஆற்றல்களையும் பெற்றிருந்த நபி ஸுலைமான் (அலை) அவற்றை வைத்து அத்துமீறலிலோ, அட்டகாசத்திலோ ஈடுபடவில்லை; பெருமையோ இறுமாப்போ கொள்ளவில்லை. மாறாக 'இது எனது இறைவன் எனக்களித்த அருளாகும்' என்று பணிவுடன் பகர்ந்தார்கள்.

துல்கர்ணைன் (அலை) அவர்கள் தனது அபார அறிவியல் ஆற்றலைப் பிரயோகித்து ஒரு பெரு மதிலைக் கட்டிய போது மக்கள் அதற்காக அவருக்கு சன்மானம் வழங்க முற்பட்ட போதும், மிகவும் அடக்கமாக 'இது எனது இறைவன் எனக்கு அளித்த அருளாகும். எனது இறைவனின் குறித்த வாக்களிக்கப்பட்ட நாள் வந்து விடும்போது இந்த மதில் தவிடு பொடியாகிவிடும்' என்றார்கள்.

'திட்டமிடல்' என்பது ஒரு பிரதான அறிவியல் அணுகுமுறை ஆகும். அல்குர்ஆன் நபி யூஸுப் (அலை) அவர்களின் பதினைந்தாண்டு பொருளாதாரத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

அத்திட்டத்தின் காரணமாக எவ்வாறு அன்று எகிப்தும் அதைச் சூழவிருந்த பிரதேசங்களும் பேரழிவிலிருந்தும், பெரும் பஞ்சத்திலிருந்தும் காப்பாற்றப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

அறிவு ஆராய்ச்சிக்கும், அறிவியல் அணுகுமுறைக்கும் நபி முகம்மது (ஸல்) அவர்கள் முக்கியத்துவம் அளித்த பாங்கினை அன்னாரின் வாழ்க்கை முறையில் காணமுடிகின்றது.

நபி (ஸல்) அவர்களும் தனது பிரசார வாழ்க்கையில் எவ்வாறு நுணுக்கமான திட்டங்களைத்தீட்டி செயற்பட்டார்கள் என்பதைக் காண முடிகின்றது. முதலாம் ஹிஜ்ரத், இரண்டாம் ஹிஜ்ரத், யுத்தங்கள் முதலியன இதற்கு சிறந்த சான்றாதாரங்களாகம்.

'கணக்கெடுப்பு' என்பது மற்றுமோர் அறிவியல் அணுகுமுறையாகும். நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்குச் சென்று சில நாட்களிலேயே அங்குள்ள முஸ்லிம்களின் ஜனத்தொகையை கணக்கெடுக்குமாறு பணித்தார்கள். அவர்களின் தொகை அப்போது 1500 ஆக இருந்தது. (புகாரி).

அடிப்படை இஸ்லாமிய நம்பிக்கைகள், விழுமியங்கள், பெறுமானங்கள், சட்ட திட்டங்கள் முதலானவற்றுடன் தொடர்பற்ற உலகாயத, தொழில்நுட்ப விவகாரங்களில் அந்நியரின் உதவியை நாடுதல், ஆலோசனைகளைப் பெறல் ஆகியன பிழையானவையல்ல என்பதையும் நபி (ஸல்) அவர்கள் தன் செயற்பாடுகள் மூலம் எடுத்துக்காட்டி யுள்ளார்கள்.

பாரசீகரின் வழிமுறையான யுத்தத்தின் போது அகழி வெட்டும் உத்தியை சல்மான் (றழி) அவர்கள் மூலம் அறிந்து, அஹ்ஸாப்' யுத்தத்தின் போது செயற்படுத்தியமை, குத்பாப் பிரசங்கம் நிகழ்த்துவதற்காக ஓர் உரோம தச்சன் செய்து கொடுத்த மிம்பரை பயன்படுத்தியமை முதலியன இதற்கான சில உதாரணங்களாகும்.

அல்குர்ஆனினதும், சுன்னாவினதும் இத்தகைய
போதனைகளாலும் வழி காட்டல்களாலும் உந்தப்பட்டே ஆரம்ப கால முஸ்லிம்கள் அறிவாராய்ச்சித் துறைக்கும், பல கண்டு பிடிப்புகளுக்கும் முன்னோடிகளாக அமைந்தனர். ஐரோப்பா இருளில் சூழ்ந்திருந்த மத்திய காலப் பிரிவில் இஸ்லாமிய உலகில் அறிவுத்தீபம் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

முஸ்லிம்கள் அறிவின் அனைத்துத் துறைகளுக்கும் மகத்தான பங்களிப்பைச் செய்து கலாநிலையங்கள், நூலகங்கள், ஆய்வு கூடங்கள், அவதான நிலையங்கள் என்பவற்றை கட்டியெழுப்பி உலகுக்கு அறிவொளி பரப்பினர்.

இத்தகைய ஈமானிய உள்ளம் படைத்தவர்களிடம் அறிவும். ஆராய்ச்சியும் இருக்கின்ற போதே உலகம், அறிவியலால் உன்னதமான பயனைப் பெற முடியும்; அறிவியல் ஆக்கத்திற்கும், மனித வாழ்வின் சுபீட்சத்திற்கும் வழிவகுக்க முடியும். அதற்காக சிந்திப்போம்; செயல்படுவோம்.

சாதனைகளின் சரித்திரங்கள் 1

ஹாங்காங்கில் ஒரு கருத்தரங்கிற்கு கண்டிப்பாக அலைபேசிகளை அரங்குக்குள் அனுமதிக்கவில்லை வரவேற்பறையில் அவற்றை கண்டிப்பாக ஒப்படைத்துவிட்டு டோக்கன் பெற்றுக் கொள்ளச் சொன்னார்கள் .

பலரும் மருகி மருகி நின்றார்கள். 'இதுபோன்ற நிகழ்ச்சிகளில் அலைபேசிகளை ஒலிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று தானே சொல்வார்கள் இப்படி சொல்லாமல் கொள்ளாமல் அலைபேசிகளை வாங்கி வைத்துக்கொள்ளமாட்டார்கள்' என்ற வருத்தம். என்ன செய்வது.. கருத்தரங்கிற்கு வந்தாச்சு , சரி அலைபேசியை கொடுத்துவிட்டு அரங்கிற்குள் போனார்கள் .

அரங்கில் நடந்த கருத்தரங்கில் யாரும் எந்தக் கருத்துக்களையும் கேட்டபாடில்லை. அவர்கள் அத்தனை பேரின் முழு சிந்தனையும் வெளியே கொடுத்துவிட்டு வந்த அலைபேசி மீதே இருந்தது . இதை கருத்தரங்கமும் கவனித்தது . தேனீர் இடைவேளை அறிவிக்கப்பட்டதுதான் தாமதம் பலரும் அரங்கில் இருந்து பாய்ந்து பறந்தோடி வெளியேறி தத்தமது அலைபேசியை கைப்பற்றி அதன் மீது கவிழ்ந்து கொண்டார்கள்.தேனீர் கோப்பைகள் காத்துக் கொண்டிருந்தன.

உலகமெங்கும் இவர்களைப் போல் ''தொடுதிரை அடிமைகள் இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் கருத்தரங்கம்தான் இது ! "என்று முடிவில் அறிவிக்கப்பட்டது.

அலைபேசியை மறந்தாலோ , தொலைந்தாலோ, அதில் சார்ஜ் குறைந்தாலோ , தொடர்பு எல்லைக்கு வெளியே போக நேர்ந்தாலோ சிலர் ரொம்பவும் பதற்றம் அடைகிறார்கள் . அவர்களுக்கு BP கொஞ்சம் எகிறுகிறது

வேறு சிலர் அடிக்கடி அனிச்சையாக ஸ்மார்ட் போனை எடுத்து தகவலோ , அஞ்சலோ வந்திருக்கிறதா ? என்று பார்த்துக்கொண்டு இருப்பார்கள்.

சிலர் அவசியமில்லாமல் படமெடுத்தபடியே இருப்பார்கள் . சிலர் தாங்கள் பதிவிட்ட தகவலுக்கு யாரும் பதில் அளிக்கவில்லை என்றால் ரொம்பவும் நொந்து கொள்கிறார்கள். சில சமயம் Profile போய் போன் போட்டு உங்க பதிவுக்கு எத்தனை Share செய்கிறேன் .என் பதிவுக்கு நீங்கள் ஒரு ஸ்மைல் Like போடக் கூடாதா ? கூச்சமில்லாமல் கேட்கிறார்கள்.

...இப்படிப்பட்டவர்கள் அத்தனை பேரும் இளஞர்கள் / இளஞிகள் இவர்களுக்கு சாதிக்க வேண்டும் என்ற எவ்வித இலட்சியங்களும் கடமையுணர்வுகளும் இல்லையா ? என்று இவர்களுக்கும் ஏதேனும் இலட்சியங்கள் இருக்காதா ? அதை

அடைவதற்குரிய உத்வேகம் கொண்ட பதிவுகளை நீங்கள் எழுதினால் என்ன.. என்று இரவு 11 மணிக்கு நண்பர் Vali Poakkan Parathesi கேட்டார்.

நானும் எழுதலாம் .அதற்காக கஜினி முஹம்மது 17 தடவை படையெடுத்து இந்தியாவை வென்ற வரலாற்றையோ, செருப்பு தைக்கும் தொழிலாளியின் மகனாகப் பிறந்து அமெரிக்க அதிபரான அபிரகாம் லிங்கன் வரலாற்றை சொன்னால் அவர்கள் பதிவை கடந்து போகலாம்,

இன்றைய தலைமுறையினருக்கு இறந்த கால வரலாற்று எடுத்துக்காட்டுகளை விட நிகழ்காலத்தில் சாதித்த சாதனையாளர்கள் முட்டிமோதி,தட்டுத்தடுமாறி விழுந்து , அடையாளமின்றித் தொலைந்து , தவறுகளை உணர்ந்து, தன்னம்பிக்கையுடன் வீறுகொண்டு எழுந்து , வேதனையெல்லாம் சாதனையாக்கிய சாதனையாளர்களின் சரித்திரங்களை சொல்ல வருகிறேன்.

இந்த சாதனையாளர்களின் சரித்திரங்கள் நிச்சயம் இந்த தொடு திரையை விட்டும் தூரமாக்கி வைக்கும் என்று தொடு திரை வாயிலாக சொல்ல விழைகிறேன் !

சாதனைகளின் சரித்திரங்கள் 2

(சர் ஜேம்ஸ் டைசன் (Sir James Dyson)

வெற்றியாளர்கள் அனைவரும் எடுத்த எடுப்பிலேயே வெற்றி கனியைக் சுவைத்து விடுவதில்லை. கடும் போராட்டம், உழைப்புக்கு மத்தியில் தான் வெற்றியைச் சுவைக்க முடிகிறது.

வெற்றி பெற்ற பிரபலங்கள் தங்கள் வாழ்வில் பல போராட்டங்களையும், தோல்விகளையும், நெருக்கடிகளையும் சந்தித்து அந்த அனுபவங்களில் இருந்து மீண்டவர்கள் தான் என்பதை ஒரு போதும் மனித மனம் ஏற்றுக் கொள்வதில்லை.

விடாமுயற்சியும், உழைப்பும் தான் அதிகபடியான வேறுபாடாக இருக்கிறது. சில நேரங்களில் விடாமுயற்சியும், உழைப்பும் இருந்தாலும் வெற்றி அடைய முடிவதில்லை என நினைக்கலாம்.

தொடர்ந்து உழைத்து உழைத்து வெற்றி கிடைக்காமல் தோல்வியை சந்தித்தவன் சலிப்படைகிறான். எல்லா செயலிலும் சலிப்பை மட்டுமே அனுபவித்து பழக்கப்பட்டவன் என்று சிலர் தன்னைப் பற்றி கூறிக் கொள்கின்றனர்.

சலிப்படைகிற ஒருவனால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்ற மந்திரத்தை நிறைய பேர் தெரிந்து வைத்திருப்பதில்லை சலிப்பை அனுபவமாக மாற்றிக் கொள்ளும் திறமைசாலிகள் மட்டுமே வெற்றிப் பெறுகின்றனர்.

1990 களின் வாக்கில் வீடு சுத்தம் செய்யும் கருவியான வாக்யூம் கிளினரைக் (Vacuum) கண்டுபிடித்த டைசன் அதற்கு முன்னர் பல முறை தோல்வியைத் தழுவியவர் என்பது தான் சுட்டிக் காட்ட வேண்டிய விஷயம்.

அவரது வெற்றிகரமான G-Force Vacuum கிளினர் அதற்கு முன்பு அது 5126 முறை தோல்வியைத் தழுவிய ஒரு கருவி என்பதனை யாராலும் ஒத்துக் கொள்ள முடியாது.

டைசன் தனது 15 வருட கால கடும் உழைப்பில் 5126 முறை புதிய வடிவங்களில் Vacuum கிளினரை முயற்சித்துப் பின்னர் தான் வெற்றிகரமான வடிவத்தை உருவாக்கினார்.

5126 முறை தோல்வியைச் சந்தித்தவர் என்பதனை ஒத்துக் கொள்வதில் டைசன் எப்போதும் பெருமை கொள்கிறார்.

இப்போதுள்ள vaccum கிளினர் டிசைன் செய்யப்படும் போதெல்லாம், இது சரியாக இருக்கும் என்றெண்ணியே உருவாக்கப்பட்டது. ஆனால் 5126 டிசைனுக்குப் பிறகு 5127 டிசைன்தான் வெற்றிபெறும் என்பதை ஜேம்ஸ் டைசன் கூட எதிர்ப்பார்த்திருக்கமாட்டார்.

20 வருடங்களுக்கு முன்னர் எனது தயாரிப்பினை சந்தையில் விற்க முயற்சித்து இருந்தால் ஒரு விளையாட்டு பையனாகத்தான் என்னை மதித்திருப்பார்கள் என்று தனது தோல்வியைக் குறித்து ஒப்புக்கொள்கிறார். தற்போது இவரது சொத்து மதிப்பு 4.6 பில்லியனையும் தாண்டுகிறது.

اِنَّ سَعْيَكُمْ لَشَتّٰى

"உங்கள் முயற்சி பலதரப்பட்டதாக உள்ளது". (குர்ஆன் 92 : 4)

நண்பர்களே... இந்த வாழ்க்கையிலிருந்து நீங்கள் பெறும் படிப்பினைகளை உணருங்களேன் .

சாதனைகளின் சரித்திரங்கள் 3

(வால்ட் டிஸ்னி (Walt Disney)

உலகில் அதிகமானோரை சிரிக்க வைத்த ஒரு நபர் யாரென்று கேட்டால் சார்லி சாப்ளின் என்று வரலாறு சொல்லும். உயிரோடு உலா வந்து உலக மக்களை சிரிக்க வைத்தவர் அவர். ஆனால் உயிரற்ற ஒன்று சார்லி சாப்ளினுக்கு இணையாக உலகை சிரிக்க வைத்திருக்கிறது என்பது உங்களுக்கு தெரியுமா? உங்களுக்கு தெரியாவிட்டாலும் உங்கள் பிள்ளைகளுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

சுமார் 85 ஆண்டுகளுக்கு முன்பு கேலிச்சித்திர உலகில் அடியெடுத்து வைத்து கற்பனை உலகை கொடி கட்டி பறக்க வைத்த அந்த கதாபாத்திரம் மிக்கி மவுஸ் (Mickey Mouse). பெரியவர்களைக் கூட குழந்தைகளாக மாற்றி சிரிக்க வைத்த அந்த மந்திர கதாபாத்திரத்தை உலகுக்கு தந்தவர் வால்ட் டிஸ்னி (Walt Disney). பொழுதுபோக்கு என்ற பரந்து விரிந்த வானம் அவருக்கு வசப்பட்ட கதையை தெரிந்துகொள்வோம்.

1901-ஆம் ஆண்டு டிசம்பர் 5-ஆம் நாள் அமெரிக்காவின் Illinois மாநிலத்தில் பிறந்தார் வால்ட் டிஸ்னி. அவருக்கு சிறு வயதிலிருந்தே ஓவியங்கள் வரைவதிலும், தீட்டுவதிலும் ஆர்வம் இருந்தது. ஏழு வயதானபோதே அவர் ஓவியங்கள் வரைந்து அண்டை வீட்டுக்காரர்களிடம் விற்பார்.

பள்ளிப்பாடங்களை படிப்பதற்கு பதில் அவர் எப்போதுமே இயற்கை காட்சிகளையும், விலங்குகளையும் வரைந்து கொண்டிருப்பார். தந்தைக்கு அது பிடிக்கவில்லை என்றாலும், பிடித்த துறையைத் தேர்ந்தெடுக்குமாறு வால்ட் டிஸ்னிக்கு தாயார் ஊக்கமூட்டினார்.

சிக்காக்கோவின் மெக்கின்லி (McKinley High School) உயர்நிலைப்பள்ளியில் ஓவியம் மற்றும் புகைப்படத்துறையில் படித்தார் வால்ட் டிஸ்னி. ஒரு நுண்கலைக்கழகத்தில் சேர்ந்து தனது ஓவியத்திறமையை வளர்த்துக்கொண்டார். தனக்கு மிகவும் விருப்பமான திரைப்பட நாயகன் சார்லி சாப்ளினைப் போல் டிஸ்னி பள்ளியில் நடித்துக்காட்டுவார்.

ஆசிரியர்கள் அவரை கதை சொல்லுமாறு கேட்டுக் கொள்வார்கள். அவர் கரும்பலகையில் ஓவியங்களாக வரைந்துகொண்டே கதை சொல்லுவார். தந்தைக்குத் தெரியாமல் இரவு நேரங்களில் உள்ளூர் அரங்குகளில் நகைச்சுவை நாடகங்களில் நடித்த அனுபவமும் அவருக்கு உண்டு.

1922-ஆம் ஆண்டு 21 வயதானபோது வால்ட் டிஸ்னி Laugh-O-Grams என்ற தனது முதல் நிறுவனத்தை சகோதரர் Roy-யுடன் சேர்ந்து தொடங்கினார். தனது மாமாவிடம் 500 டாலர் கடனாக பெற்று அந்த நிறுவனத்தை ஆரம்பித்தார்.

கேலிச்சித்திர படங்களை உருவாக்குவதில் சோதனை செய்து பார்த்த அவர் Alice in Cartoon land என்ற கார்ட்டூன் படத்தை தயாரித்தார். அது தோல்வியைத் தழுவியது நிறுவனமும் நொடித்துப் போனது. ஆனால் அந்த முதல் தோல்வி அவரை வருத்தவில்லை. மனம் தளராத வால்ட் டிஸ்னி அடுத்து Oswald the Lucky Rabbit என்ற புதிய கேலிச்சித்திரத்தை உருவாக்கினார்.

அது ஓரளவுக்கு சிறப்பாக அமைந்தாலும் அதன் உரிமையை இன்னொருவர் வாங்கிக்கொண்டு டிஸ்னியை ஏமாற்றினார். அப்போதும் மனம் தளராத டிஸ்னி தன் சகோதரர் ராயுடன் இனிமேல் நாம் சொந்தமாக தொழில் செய்வோம் நமக்கு கைகொடுக்கப் போவது ஓர் எலி. அது நமக்கே சொந்தமாக இருக்கும் என்று கூறினார்.

அப்போது உலகுக்கு அறிமுகமான அந்த அதிசய எலிதான் 'Mickey Mouse'. முகம், இரண்டு காதுகள் என வெறும் மூன்று வட்டங்களால் உருவானது Mickey Mouse. பிறந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே அது உலகப்புகழ் பெற்றது.

வால்ட் டிஸ்னியின் கவனம் ஹாலிவுட்டின் பக்கம் திரும்பியது. மிக்கிக்கு உருவம் தந்த டிஸ்னிதான் அதற்கு குரலும் கொடுத்தார். அவர் அடுத்தடுத்து தயாரித்த Steamboat Willie, The Skeleton Dance போன்ற கேலிச்சித்திரங்களில் அந்த மிக்கி அடித்த லூட்டிகளையும் அதன் சேட்டைகளையும் இமை கொட்டாமல் மக்கள் பார்த்து ரசித்தனர், குழந்தைகள் கற்பனை வானில் சிறகடித்துப் பறந்தனர். பெரியவர்கள் மீண்டும் குழந்தைகளாகி தங்கள் கவலைகளை மறந்து சிரித்தனர்.

1932-ஆம் ஆண்டு டிஸ்னி உருவாக்கித்தந்த 'Flowers and Trees' என்ற திரைப்படத்திற்கு ஆஸ்கர் விருது கிடைத்தது. Mickey Mouse என்ற சுட்டி எலியை தந்த டிஸ்னி கேலிச்சித்திர உலகில் அடுத்து அறிமுகப்படுத்திய வெற்றி கதாபாத்திரம் 'Donald Duck' என்ற வாத்து.

அந்த வாத்தும், எலியும் செய்த சேட்டைகளை எண்ணி இன்றும் தன்னை மறந்து சிரிப்பவர்கள் ஏராளம். 1937-ஆம் ஆண்டில் Snow White and the Seven Dwarfs என்ற முழுநீள கேலிச்சித்திரத்தை வழங்கினார் டிஸ்னி. அதற்கு அப்போது ஆன செலவு எவ்வுளவு தெரியுமா? ஒன்றரை மில்லியன் அமெரிக்க டாலர். அவ்வுளவு பொருட்செலவில் உருவான அந்தப்படம் மிகப்பெரிய வசூல் சாதனையை செய்தது.

அதன் பின்னர் Pinocchio, Fantasia, Dumbo, Bambi போன்ற புகழ்பெற்ற கேலிச்சித்திர படங்களை அவர் உருவாக்கினார். திரையில் மட்டுமே காட்ட முடிந்த கற்பனை உலகை நிஜமாக்கி காட்ட விரும்பிய டிஸ்னி 1955-ஆம் ஆண்டில் 17 மில்லியன் டாலர் செலவில் மிகப்பிரமாண்டமான 'Disneyland Park' என்ற பொழுதுபோக்குப் பூங்காவை அமெரிக்காவின் Oakland நகரில் உருவாக்கினார்.

Disneyland பூங்கா நிச்சயம் முதல் ஆண்டிலேயே நொடித்துப்போகும் என்று பலர் ஆரூடங்கள் கூறினர். ஆனால் பூங்காவை பார்க்க வந்தவர்களோ அதனை பூலோக சொர்க்கம் என்று வருணித்தனர். முதல் 25 ஆண்டுகளில் பல உலகத்தலைவர்கள் உட்பட 200 மில்லியன் பேர் கண்டு ரசித்தனர். தற்போது ஆண்டுக்கு சுமார் 15 மில்லியன் வருகையாளர்களை அது ஈர்க்கிறது.

ஒவ்வொரு குழந்தையும் சென்று பார்த்து வர விரும்பும் கனவுலகம் அது. டிஸ்னி சிறுவனாக இருந்த வயதில் பள்ளிக்குப் போகும் வழியில் ஒரு பூங்கா இருந்தது அதில் கட்டணம் செலுத்தினால்தான் விளையாட முடியும். டிஸ்னி அப்போது ஏழ்மையில் வாடியதால் ஒருமுறைகூட அவரால் அந்த பூங்காவில் விளையாட முடியவில்லை.

அந்த ஏக்கம்தான் உலகின் மிகப்பெரிய விளையாட்டுப் பூங்காவை உருவாக்கும் எண்ணத்தை அவருக்குள் விதைத்திருக்க வேண்டும். இன்று கேலிச்சித்திரம் என்றால் நம் நினைவுக்கு வரும் முதல் பெயர் மிக்கி மவுஸ். அந்த அதிசய கதாபாத்திரம் எப்படி உருவானது? வால்ட் டிஸ்னியே ஒருமுறை அதைப்பற்றி கூறினார்....

மிக்கி மவுஸ் தோற்றம் பற்றி வால்ட் டிஸ்னியின் கருத்து "வாழ்க்கையில் என்ன செய்யப்போகிறோம்? என்று தெரியாமல், ஒரு பிடிப்பு இல்லாமல் எல்லாமே இழந்த நிலையில் ஒருமுறை Manhattan-லிருந்து Hollywood-டிற்கு இரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தேன். எப்போதும் போலவே அப்போதும் நான் கற்பனை உலகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தேன். அப்போது என் ஓவிய நோட்டுப்புத்தகத்தில் நான் கிறுக்கிய கதாபாத்திரம்தான் மிக்கி மவுஸ்."

கற்பனை என்ற சொல்லுக்கு புது அர்த்தம் கொடுத்த வால்ட் டிஸ்னி நோய்வாய்ப்பட்டு 1966-ஆம் ஆண்டு டிசம்பர் 15-ஆம் நாள் தமது 65-ஆவது வயதில் காலமானார். இறப்பதற்கு முதல் நாள்கூட அவர் பல புதிய எண்ணங்களை நிறைவேற்ற திட்டம் தீட்டிக்கொண்டிருந்ததாக கூறுகிறார் அவரது சகோதரர் ராய். வால்ட் டிஸ்னியின் சரித்திர வெற்றிக்கு காரணங்கள் என்ன? அவரே கூறுகிறார் இவ்வாறு.....

மனிதனுக்கு எட்டாத உயரம் என்று எதுவுமே கிடையாது. அதற்கு கனவை நனவாக்கும் ரகசியம் தெரிந்திருக்க வேண்டும். அந்த ரகசியம் நான்கு C எழுத்துகளில் அடங்கியிருக்கிறது. Curiosity, Confidence, Courage, Constancy அதாவது ஆர்வம், தன்னம்பிக்கை, தைரியம், நிலைப்பாடு இந்த நான்கிலும் ஆக முக்கியமானது தன்னம்பிக்கைதான்.

நீங்கள் ஒன்றை நம்பினால் அதனை உளப்பூர்வமாக எந்த கேள்விக்கும் இடம் தராமல் நம்புங்கள். அதுதான் வெற்றியின் ரகசியம்.

வால்ட் டிஸ்னிக்கு வெற்றியைத் தந்த அந்த நான்கு C மந்திரம் நிச்சயம் நமக்கும் பொருந்தும். டிஸ்னியைப்போல் ஆர்வம், தன்னம்பிக்கை, தைரியம், நிலைப்பாடு ஆகியவற்றுடன் விடாமுயற்சியோடு செயல்பட்டால் வால்ட் டிஸ்னிக்கு கற்பனை என்ற வானம் வசப்பட்டதைப்போல நமக்கும் நாம் விரும்பும் வானம் நிச்சயம் வசப்படும்.

"நீ நட்சத்திரமாக ஜொலிக்க விரும்பினால்
நீ யார் என்பது முக்கியமல்ல;
உனது மனது எதை விரும்புகிறதோ,
அது நிச்சயம் உன்னை வந்து சேரும்." -அப்துல் கலாம்

நண்பர்களே... இந்த வாழ்க்கையிலிருந்து நீங்கள் பெறும் படிப்பினைகளை உணருங்களேன்

சாதனைகளின் சரித்திரங்கள் 4

(ஸ்டீவ் ஜாப்ஸ் steve jobs)

தொடர் தோல்விகள், விடாத முயற்சி, மார்கெட்டிங் தந்திரம்... ஆப்பிள் மற்றும் ஸ்டீவ் ஜாப்ஸ்-ன் உண்மை கதை

ஆப்பிள் இன்று உலகின் நம்பர் ஒன் நிறுவனமாக வளர்ந்திருக்கிறது. வெறும் 25 ஆண்டுகளில்தான் ஆப்பிள் இந்த வளர்ச்சியை பெற்றுள்ளது. இதற்கு முக்கியமான காரணம் அதன் நிறுவனம் ஸ்டீவ் ஜாப்ஸ், மார்கெட்டிங் தந்திரம், அவர் பயன்படுத்திய யுக்தி என அவரை பற்றிய இன்ஸ்பிரேஷனல் கதை தான் இங்கே நாம் காணப்போகிறோம்.

இன்று உங்களிடம் ஒரு ஆப்பிள் போன் இருந்தால் இந்த சமூகத்தில் ஒரு பெரிய அந்தஸ்து கிடைக்கும், ஆப்பிள் கணிணியை உங்களுக்கு உபயோகப்படுத்த தெரிந்தாலே நீங்கள் அதி புத்திசாலி இப்படியாக ஆப்பிள் நிறுவனத்தின் தயாரிப்புகள் ஒரு மனிதனிற்கான அடையாளத்தை பெற்று தருகிறது. காரணம் அதன் தரம், விலை மற்றும் வடிவமைப்பு.

இப்படி உலகம் முழுவதும் வெற்றி கொடி வீசி தனக்கென ஒரு பாதையை வடிவமைத்து அதில் பல வாடிக்கையாளர்களை தக்க வைத்திருக்கும் ஆப்பிள் நிறுவனத்தின் தந்தையான ஸ்டீவ் ஜாப்ஸ் குறித்து...

1955ம் ஆண்டு பிப் 24ம் தேதி அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் பிறந்தவர் ஸ்டீவ் ஜாப்ஸ், இவர் தாய் செபில் மற்றும் தந்தை அப்துல் ஃபத்தா ஜான் ஆகியோர் சிரியாவைச் சேர்ந்தவர்கள். 1954ம் ஆண்டு செபில் கருவுற்றபோது இருவருக்கும் திருமணமாகவில்லை. இந்நிலையில் சிரியாவிலிருந்து அமெரிக்காவிற்கு தப்பி வந்தனர். அங்கு தான் ஸ்டீவ் ஜாப்ஸ பிறந்தார்.

ஸ்டீவ் ஜாப்ஸ் பிறந்த போது அவரது பெற்றோர் விஸ்கான்சின் பல்கலைகழக மாணவர்கள் தான் திருமணம் ஆகாமல் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். பின் தகப்பனார் அப்துல் ஃபத்தா ஜான் ஒரு போலிட்டிகல் சயின்ஸ் பேராசிரியராக இருந்தார். தாய் ஒரு ஸ்பீச் தெரப்பிஸ்டாக இருந்தார்.

ஸ்டீவ் ஜாப்ஸை தத்தெடுக்க முன் வந்தது அந்த பகுதியில் செல்வந்தராக இருந்த பால் ஜாப்ஸ் - கிளாரா ஜாப்ஸ் தம்பதியினர். இவர்கள் இருவரும் ஸ்டீவ் ஜாப்ஸை தந்தெடுத்து அவர்கள் தான் ஸ்டீவ் பால் ஜாப்ஸ் என அவருக்கு பெயரை வைத்தனர்.

இவர் தன் வளர்ந்த இடமே கலிஃபோர்னியா தான் அந்த இடம் தான் தற்போது சிலிக்கான வேலி என அழைக்கப்படுகிறது.

சிறுவயதிலேயே ஸ்டீவ் ஜாப் தனது தந்தையுடன் வீட்டின் பின் பகுதியில் எலெக்டரானிக் கரஜை வைத்திருந்தனர். பால் ஜாப்ஸ் தான் முதலில் ஸ்டீவ் ஜாப்ஸிற்கு எப்படி எலெக்டரானிக் பொருட்கள் செயல்படுகிறது என சொல்லிக்கொடுத்தார்.

அப்பொழுது ஸ்டீவ் ஜாப்ஸிற்கு எலெக்டரானிக் உதிரி பாகங்களை வாங்கி அதன் மூலம் எலெக்டரானிக் பொருட்களை தயாரிக்கும் எண்ணம் வந்தது. இந்த எண்ணம் தான் பின் நாளில் இவரை ஆப்பிள் கம்யூட்டரை தயாரிக்க துணையாக நின்றது.

ஸ்டீவ் ஜாப்ஸ் சிறுவயதிலேயே அறிவாளியாகவும், புத்திசாலியாகவும் இருந்தார். இவருக்கு வழக்கமான பள்ளிக்கு செல்லவே பிடிக்கவில்லை. பள்ளியில் போர் அடித்தால் பள்ளியில் பல குறும்புகளை செய்தவர். ஒரு முறை பள்ளியில் அறிவிப்பு பலகையில் யார் அனுமதியும் இல்லாமல் நாளை எல்லோரும் அவரவர் வளர்ப்பு பிராணிகளுடன் பள்ளிக்கு வரவேண்டும் என எழுதி போட்டுவிட்டார்.

மறுநாள் எல்லோரும், நாய், பூனை, கோழி என பள்ளிக்கு வந்து பள்ளியையே நிரப்பிவிட்டனர்.இதனால் பள்ளி நிர்வாகத்திற்கு பெரும் தலைவலியே ஏற்பட்டது.

பள்ளி முடித்து இவர் ஃபோர்ட்லாண்ட் கல்லூரிக்கு சென்றார். அங்கு 6 மாதம் மட்டுமே படித்துவிட்டு நின்றுவிட்டார். பின்னர் அடுத்த 18 மாதம் கிரியேட்டிவ் வகுப்புகளுக்கு சென்றார். பின்னர் அவர் கேலிகிராபி படித்தார். அதன் மூலம் அவருக்க டைப்போகிராபி மீது ஆர் வம் ஏற்பட்டது.

1974ம் ஆண்டு இவர் தனது 19வது வயதில் அட்டாரி என்ற நிறுவனத்தில் வீடியோ கேம் டிசைனராக பணியில் சேர்ந்தார். அந்த பணியில் இருக்கும் போது அவருக்கு மக்களை பற்றிய பார்வை ஏற்பட்டது சில மக்கள் வசதியாகவும் சில மக்கள் ஏழையாகவும் இருக்கிறார்களே ஏன் என யோசித்தார்.

நேரடியாக சர்ச்க்கு சென்று அங்கிருந்த பாதிரியாரிடம் இதை பற்றி விளக்கம் கேட்டார். அதற்கு அந்தபாதிரியார் "எல்லாம் அப்படி தான் நடக்கும், இது உனக்கு புரியாது" என சொல்லியுள்ளார். இந்த பதில் ஸ்டீவ் ஜாப்ஸ்சிற்கு பிடிக்கவில்லை. தனக்கு புரியாத விஷயம் எனக்கு வேண்டாம் என கருதினார். பின்னர் கடவுளை பற்றிய தேடல் அவருக்குள் பிறந்தது.

இதற்கிடையில் 1971ம் ஆண்டு ஸ்டீவ் ஜாப்ஸ், ஸ்டீவ் வாஸ்னிக் என்பவரை சந்தித்தார். அவரும் எலெக்டரானிக் துறையில் மிகப்பெரிய வல்லுனராக இருந்தார். இவரும் நண்பர்களாக இருந்தனர். இவரும் ஒருவருக்கொருவர் தங்களுக்கான ஐடியாக்களை பகிர்ந்து கொண்டு தன் வாழ்க்கையில் பணியிக்க துவங்கினர்.

இந்நிலையில் 1974ம் ஆண்டு ஸ்டீவ் ஜாப்ஸிற்கு கடவுள் குறித்த தேடல் ஏற்பட்டது. அப்பொழுது அவருக்கு இந்தியாவை பற்றியும் இந்து மதம் பற்றியும் தெரியவந்தது. அதன் மீது ஈர்ப்பு ஏற்பட்டது. அதனால் அதை பற்றி தெரிந்து கொள்ள அவர் இந்தியா வந்தார்.

உ.பி மாநிலத்தில் அவர் நீம் கரோலிபாபா என்பவரை ஆசிரமத்தில் சந்தித்து பேசினார். அவரது பேச்சில் ஸ்டீவ் ஜாப்ஸின் கடவுள் குறித்த தேடுலுக்கான பதில் கிடைத்தது. ஸ்டீவ் ஜாப்ஸ் கரோலி பாபாவை தனது குருவாக ஏற்றுக்கொண்டு ஆன்மீக தேடுக்காக இமயமலை பகுதியில் பயணம் மேற்கொண்டு இறுதியாக புத்த மதத்தை தழுவினார்.

பின்னர் அமெரிக்கா திரும்பிய அவர் 1976ம் ஆண்டு தனது நண்பர் ஸ்டீவ் வாஸ்னிக் உடன் இணைந்து ஆப்பிள் நிறுவனத்தின் தன் வீட்டிலேயே உருவாக்கினர். இருவரும் இணைந்து ஆப்பிள் 1 என்ற கம்யூட்டரை தயாரித்தனர். பெரும்பாலான தயாரிப்புகளை ஸ்டீவ் வாஸ்னிக்கே செய்தார். அதை விற்பனை செய்யும் பொறுப்பை ஸ்டீவ் ஜாப்ஸ் எடுத்துக்கொண்டார்.

அன்றைய காலகட்டத்தில் கம்யூட்டர் மிகப்பெரியதாக இருந்தது. அதை சிரிதாக செய்ய வேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோள் முதல் ஆப்பிள் கம்யூட்டர் உருவானது. ஆனால் அதை வாங்க யாரும் முன் வரவில்லை.மிக சொற்ப எண்ணிக்கையிலான கம்யூட்டர் மட்டுமே விற்பனையானது

இதற்கான காரணத்தை ஆய்வு செய்தார் ஸ்டீவ் ஜாப்ஸ், இதற்கு அதன் லுக் தான் காரணம் என புரிந்து கொண்டார். பின்னர் ஆப்பிள் 2வது கம்யூட்டரை உருவாக்கினார். இப்பொழுது அதன் உட்கட்டமைப்பை மட்டும் ஸ்டீவ் வாஸ்னிக் உருவாக்கினார். வெளிப்புற விடிவமைப்பை ஸ்டீவ் ஜாப்பை ஸ்டைலாக உருவாக்கினார்.

இந்த கம்யூட்டரை அவர்கள் ஒரு விற்பனை ஸ்டாலுக்கு கொண்டு சென்றனர். அவர்கள் கையில் இருந்தது வெறும் 3 கம்யூட்டர்கள் தான். ஆனால் ஸ்டீவ் ஜாப்ஸ் ஒரு காரியம செய்தார் வெறும் அட்டை பெட்டிகளை அதிகம் அச்சடித்து ஸ்டால் முழுவதும் நிரப்பி 3 கம்யூட்டர்களை மட்டும் மக்கள் பார்வைக்காக வைத்தார்.

இதை பார்த்த மக்கள் பலர் ஆச்சரியப்பட்டனர். அதன் லுக் அவர்களை கவர்ந்து இழுந்தது. இதனால் இவர்களுக்கு பலர் ஆர்டர்களை கொடுத்தனர். அதற்காக பெறப்பட்ட முன் பணத்தை வைத்தே அடுத்தடுத்த கம்யூட்டர்களை உருவாக்கி விற்பனை செய்தார்.

இருந்தாலும் அன்றைய சூழ்நிலையில் மக்களுக்கு கம்யூட்டர் குறித்த விழிப்புணர்வு இல்லை இதனால் இவர்கள் பெரும்லாபம் சம்பாதிக்கும் அளவிற்கு கம்யூட்டர் விற்பனையாகவில்லை. 1975ல் துவங்கிய ஆப்பிள் நிறுவனத்தை விட்டு 1986ல் வெளியேறினார் ஸ்டீவ் ஜாப்ஸ்

ஆனால் இவரது திறமையை வால்ட் டிஸ்னி நிறுவனம் பார்த்து அவருக்கு அதன் இயக்குநர்களின் ஒரு பதவியை வழங்கியது. அதன் பின் அவர் வாட்ஸ் டிஸ்னி நிறுவனம் மூலம் பிக்சார் என்ற அனிமேஷன் நிறவனத்தையும் உருவாக்கினார். ஆனால் இது எல்லாம் இவர் எதிர்பாரத்ததுபடி செல்லவில்லை. தோல்வியை தழுவியது. பின்னர் நெக்ஸ்ட் என் சாஃப்ட்வேர் நிறுவனத்தை உருவாக்கி தோல்வியடைந்தார்.

இறுதியாக 1997ம் மீண்டும் ஆப்பிள் நிறுவனத்திற்கே திரும்பினார் ஸ்டீவ் ஜாப்ஸ், இந்த முறை பல கம்யூட்டர்களை தயாரித்தார். பெரும்பாலான கம்யூட்டர்கள் தோல்வியை தழுவியது. பின்னர் மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து கம்யூட்டர் தயாரிக்கும் வேலையை வாங்கினார். ஆனால் மைக்ரோசாஃப்ட் இறுதியாக அதை வேறு நிறுவனத்திற்கு மாற்றிவிட்டது.

பின்னர் ஆப்பிள் கம்யூட்டரையே தயாரித்து விற்க பல முயற்சிகளை மேற்கொண்டும் பெரிய அளவில் வெற்றிபெறவில்லை. இந்நிலயையில் 10 ஆண்டுகால போராட்டத்திற்கு பின்பு 1996ல் ஐமேக் என்ற கம்யூட்டரை வடிவமைத்தார். இந்த கம்யூட்டரை விற்க காந்தி, சார்லி சாப்ளின் என பல உலக ஆளுமைகளின் புகைப்படங்களை வைத்து "திங் டிஃப்ரன்ட்" (வித்தியாசமாக யோசியுங்கள்) என விளம்பரம் செய்தார்.

இந்த விளம்பரம் பலரது கவனத்தை ஈர்த்தது பலர் ஆப்பிள் நிறுவனத்தின் கம்யூட்டரை பற்றி பேச துவங்கினர். ஆப்பிள் நிறுவன கம்யூட்டர்கள் விற்பனை மெல்ல அதிகரித்தது. அதன் தரம் மிகப்பெரிய பெயரை பெற்றது. ஆப்பிள் நிறுவனம் எதிர்பாராத வளர்ச்சியை அடைந்தது.

ஸ்டீவ் ஜாப்ஸ் ஆப்பிள் நிறுவனத்தில் அடுத்தடுத்த பொருட்களை தயாரிக்க முன் வந்தார். ஆப்பிள் லேப்டாப், ஐபேடு என தனது தயாரிப்பு பொருட்களை அதிகரித்துக்கொண்டே சென்றார்.அவர் அதன்பின் அறிமுகப்படுத்திய அனைத்தும் வெற்றி பெற்றது. மக்கள் வாழ்வை எளிமையாக்குவதை மட்டும் குறியாக வைத்து தயாரிப்புகளை அறிமுகப்படுத்தினார்.

இதற்கிடையில் 1991ல் இவருக்கு லாரென்ஸ் பாவெல் என்பவருடன் திருமணமாகி குழந்தை பிறந்தது. அதற்கு முன்னர் ஸ்டீவ் ஜாப்ஸ் தனது கல்லூரி கால தோழியாக கிரிஸ்டன் பெர்னன் என்பவருடன் 1971-1977ம் ஆண்டிற்கு இடையில் உறவில் இருந்தார். இவர்களுக்கு இரு பெண் குழந்தைகள் இருந்தது

அதன் மூலம் பிறந்த ஒரு குழந்தைகள் தான் லீசா பெர்னன். இவர் ஆப்பிள் நிறுவனத்தின் தான் பணியாற்றினார். அப்பொழுது தான் அவருக்கு ஒரு உண்மை தெரிந்தது, தனது தந்தை ஸ்டீவ் ஜாப்பின் உண்மையான தாய் தந்தை பால் ஜாப்ஸ் - கிளாரா ஜாப்ஸ் இல்லை. இவர்கள் ஜாப்ஸை தத்தெடுத்து தான் வளர்த்தார்கள் சிரியாவை சேர்ந்த தம்பதியின் மகன் தான் ஸ்டீவ் ஜாப்ஸ் என தெரிந்தது. அதன்பின்னர் தான் இந்த விவகாரம் வெளி உலகிற்கு வந்தது.

ஸ்டீவ் ஜாப்ஸ் நல்ல நிலைக்கு வந்ததும் சிலிக்கான வேலி பகுதியில் அவருக்கான பெரிய வீடு ஒன்ற கட்டினார். அந்த வீட்டில் ஐன்ஸ்டீன் மற்றும் கரோலி பாபா ஆகிய இரண்டு பேரின் புகைப்படத்தை மட்டும் பெரியதாக வைத்திருந்தார். அந்த இரண்டு பெரும் தான் தன் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதாக அவர் நம்பினார்.

தான் ஒரு தத்துபிள்ளை என்பதை ஸ்டீவ் ஜாப்ஸ் ஒரு பேட்டியில் கூறினார். அப்பொழுது அவர் தான் தன்னை பெற்றொடுத்த பெற்றோரை தான் தான் இறக்கும் வரை பார்கப்போவதில்லை என்றும் பால் ஜாப்ஸ், மற்றும் கிளாரா ஜாப்ஸ் ஆகியோர் தான் தன்னை வளர்க்க முழு முயற்சி செய்ததாகவும் அவர்கள் தன் மீது மிகுந்த பாசம் வைத்திருப்பதாகவும் அவர்கள் இருக்கும் போது பெற்றொடுத்த பெற்றோரை சந்தித்தால் அவர்கள் மனம் புண்படும் என்றும் கூறியிருந்தார்.

இந்நிலையில் கிளாரா ஜாப்ஸ் 1986ம் ஆண்டு இறந்த பின்பு ஸ்டீவ் ஜாப்ஸிற்கு தன்னை பெற்ற தனது அம்மாவை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இதை அவர் அவரது தந்தை பால் ஜாப்ஸ் அனுமதியுடன் சென்றார். அப்பொழுது ஸ்டீவ் ஜாப்ஸ் எமோசனல் ஆகி அன்றைய காலகட்ட சூழ்நிலையில் தன்னை கருவிலேயே கலைக்காமல் பெற்றதெடுத்ததற்காகவும் அதற்கா அவர் பட்ட கஷ்டத்திற்காக நன்றி கூறினார்.

அதற்கு அந்த தாய் அவரிடம் மகனை ஒரு பேப்பரில் கையெழுத்து போட்டு தத்து கொடுத்ததை எண்ணி பல ஆண்டுகள் வருத்தப்பட்டு அழுததாகவும், அதற்கான தன்னை மன்னிக்கும் படியும் கண்ணீர் விட்டு அழுதார். அந்த நேரம் அவரது வாழ்வின் நெகிழ்ச்சியான நேரமாக இருந்தது. ஆனால் அதன் பீன் ஸ்டீவ் ஜாப் தனது பெற்றோர்களிடம் எந்த விதமான உறவும் வைத்துக்கொள்ளவில்லை. ஆப்பிள் நிறுவனத்துடனும் அவர்களை தொடர்பு படுத்தவில்லை.

ஸ்டீவ் ஜாப்பிஸின் தாய் ஸ்பிக்கில் ஜானை திருமணம் செய்து கொண்டு மோனா என்ற பெண் குழந்தையை பெற்றொடுத்தார். பின்னர் அவர் அப்துல் ஃபத்தா ஜானை விவாகரத்து செய்துவிட்டு ஜார்ஜ் சிம்சன் என்பவரை 1970 களில் திருமணம் செய்து கொண்டார். அதன் காரணமாக மோனா தனது இரண்டாவது பெயராக சிம்சன் என வைத்துக்கொண்டார்.

ஸ்டீவ் ஜாப்ஸின் தந்தை அப்துல் ஃபத்தாஜான் கலிஃபோர்னியாவில் அப்பொழுது ஒரு சிறிய ரெஸ்டாரெண்டில் பணியாற்றி வந்துள்ளார். ஜார்ஜ் சிம்சன் அவரை ஒருமுறை சந்தித்து பேசியுள்ளார். அப்பொழுது அப்துல் ஃபத்தா ஜான் தனக்கும் ஸ்பிக்கெலுக்கும் பிறந்த குழந்தை குறித்து பேசியுள்ளார். அதற்கு முன்னரே ஸ்டீவ் ஜாப்ஸ் மற்றும் அவரது தாய் சந்திப்பு நிகழ்ந்துவிட்டது. ஆனால் அது குறித்து அவர் தந்தை அப்துல் ஃபத்தா ஜானிடம் பகிர்ந்து கொள்ளவில்லை.

ஸ்டீவ் ஜாப்ஸூம் அவரது தந்தையை பார்க்க விருப்பபடவில்லை. அவர் அவரது குழந்தைகளை சரியாக வளர்க்காத தந்தையாக அவரை கருதி அவர் மீது கோபத்தில் இருந்தார். இருவரை சந்திக்கவில்லை அதே போல சிரியாவில் உள்ள அவரது தாய் தந்தை வழி சொந்தங்களையும் ஸ்டீவ் ஜாப்ஸ் சந்திக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் சிம்சன் அவர்களை சந்தித்தார்.

இந்த கதைகளை எல்லாம் சிம்சன் தான் எழுதிய "தி லாஸ்ட் ஃபாதர்"(தொலைந்து போன தந்தை) என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.

2003ம் ஆண்டு கேன்சர் நோயால் பாதிக்கப்பட்ட ஸ்டீவ் ஜாப்ஸ் தனது இறுதி நாட்களை எண்ண துவங்கினார். 2011ம் ஆண்டு மிக கடுமையாக பாதிக்கப்பட்டார் அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் தேதி ஆப்பிள் நிறுவனத்தின் பதவியிலிருந்து விலகி

டிம்குக்கிற்கு அந்த பதவியை வழங்கினார். அதே ஆண்டு ஆக்டோபர் 06ம் தேதி அவர் உடல் நலக்குறைவால் உயிரிழந்துவிட்டார்.

ஸ்டீவ் ஜாப்ஸ் தனது நண்பர்களுடன் உருவாக்கிய ஆப்பிள் நிறுவனம் தற்போது உலகில் அசைக்க முடியாத நிறுவனமாக வளர்ந்தது ஐமேக், ஐடியூஸ்ன்ஸ், ஐபாட்,ஐபோன், ஐபேடு ஆகிய தயாரிப்புகளை முன்வைத்து உலகின் மிகப்பெரிய நிறுவனமாக மாறியுள்ளது. யாராலும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத இந்த வளர்ச்சி இன்றைய இளம் தலைமுறையினருக்கு ஒரு இன்ஸ்பிரேஷனாக அமைந்துள்ளது.

وَاَنْ لَّيْسَ لِلْاِنْسَانِ اِلَّا مَا سَعٰىۙ
இன்னும், மனிதனுக்கு அவன் முயல்வதல்லாமல் வேறில்லை.

وَاَنَّ سَعْيَهٗ سَوْفَ يُرٰى
அன்றியும், நிச்சயமாக அவன் முயற்சி(யின் பலன்) பின் அவனுக்குக் காண்பிக்கப்படும். (குர்ஆன் : 53:39,40)

ஸ்டீவ் ஜாப்ஸ் குறித்து நீங்கள் அறியாத பல தகவல்களை அறிந்திருப்பீர்கள் என நம்புகிறோம். மேலும் உங்களுக்கு அவரை பற்றிய தகவல் தெரிந்தால் கமெண்டில் சொல்லுங்கள்.

நண்பர்களே... இந்த வாழ்க்கையிலிருந்து நீங்கள் பெறும் படிப்பினைகளை உணருங்களேன்

சாதனைகளின் சரித்திரங்கள் 5

(பில்கேட்ஸ் Bill gates)

பில்கேட்ஸ் முழுப் பெயர் வில்லியம் ஹென்றி கேட்ஸ். 1955 அக் டோபர் 28-ஆம் நாள் சீயாட்டில் (வாஷிங்டன்) நகரில் பிறந்தவர். தந்தை வில்லியம் சட்ட நிறுவனமொன்றின் பங்குதாரர். தாய் மேரி மாக்ஸ்வல். படிக்கிற காலத்திலேயே சந்தித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள்.

பில்கேட்ஸுக்கு படிப்பில் அத்தனை ஆர்வமில்லை. பாடப் புத்தகங்களை விட ‘டார்ஜான்’ மாதிரி கதைகள் படிக்கவும், ரூஸ்வெல்ட் நெப்போலியன் மாதிரி பிரபலங்களின் வாழ்க்கை வரலாறுகள் படிக்கவும் விருப்பம்.

11 வயதிலேயே அபார ஞாபக சக்தி உள்ளவர் அவர்.13 வயதில் கம்ப்யூட்டரின் செயல்முறைகள் அத்துப்படி. 17 வயதில் ஒரு கோடை விடுமுறையில் பித்தான்கள் (குடியரசுத் தலைவர் கால பித்தான்கள்) வாங்கி விற்றார்.

ஒவ்வொரு பித்தானையும் 5 சென்ட் விலை கொடுத்து 5000 பித்தான்கள் வாங்கியிருந்தார். அந்தப் பித்தான்களுக்கு கிராக்கி வந்த போது ஒரு பித்தான் 25 டாலர் என்று விலை வைத்து விற்றார்.

பில்கேட்ஸ் கம்ப்யூட்டரில் காட்டிய அக்கறையை உடம்பின் சுத்தத்திலோ, வீட்டுவேலையிலோ, காரோட்டுவதிலோ காட்டியதில்லை.

கம்ப்யூட்டரில் ஏதாவது ப்ரொக்ராம் செய்து கொண்டே இருக்க வேண்டும். அவருக்கு ஸ்கூலில் அவர் கட்டணம் செலுத்தாமலே கம்ப்யூட்டரை உபயோகித்துக் கொள்ள அனுமதித்திருந்தார்கள்.

பில்கேட்ஸ் மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தைத் தொடங்கினார் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் படித்த போதே தன்னுடைய நண்பர் ஆலனுடன் சேர்ந்து மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தைத் தொடங்கிவிட்டார்.

அப்போது அவருடைய வயது 12 கம்பெனி நன்றாக இயங்கவும், கேட்ஸ் படிப்பை விட்டுவிட்டார். தொழிலில் புதிய உத்திகளைப் புகுத்துவதும், உற்பத்திப் பிரிவை கவனித்துக் கொள்வது ஆன்லைன் வேலை.

.

கேட்ஸ் புதிய பிசினஸ் ஒப்பந்தம், பேரம் இவற்றைக் கவனித்துக் கொண்டார். வேறு சில நண்பர்களையும் தம்முடைய நிறுவனத்தில் கூட்டாக சேர்த்துக் கொண்டார். 0:40 விகிதத்தில் தமக்குச் சாதகமாய் ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்.

ஆப்பிள் கம்ப்யூட்டர், கமோடர் நிறுவனங்களுக்கு ப்ரொக்ராம்கள் எழுதித் தந்து பதினெட்டே மாதங்களில் பல லட்சம் டாலர்களை அவர்கள் சம்பாதித்து விட்டனர்.

அப்போது உ.பி.எம் நிறுவனம் தான் அதிக அளவில் கம்ப்யூட்டர்களைத் தயார்த்துக் கொண்டிருந்தது. அவை ரொம்ப பெரிய சைஸ்', தனிநபர் உபயோகத்துக்கு ஏற்றதாயில்லை.

பி.லஸி தயாரிப்பில் இறங்கிய போது அதிவேக ப்ரொக்ராம்களை அளிக்கக்கூடிய ஆப்ரேடிங் சிஸ்டத்தை கேட்ஸ் உருவாக்கித் தந்தார். முழு உரிமையைத் தாமே வைத்துக் கொண்டு, பயன்படுத்துகிற உரிமையை மட்டுமே ஐ.பி.எம்முக்குத் தந்தார்.

அவர்கள் ப்ரொக்ராமைப் பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும் அவருக்குப் பணம் கொடுப்பதாய் ஒப்பந்தம். அதன் மூலம் பல கோடி டாலர்கள் கேட் ஸிற்கு கிடைத்தது, இன்றும் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

பில்கேட்ஸின் தொழில் வெற்றிக்கான யுக்திகள்
போட்டியாளர்களை எப்படிக் கையாள்வதென்று அவருக்குத் தெரியும். ஒன்று, எதிரியை வளைத்துப் போடுவார் அல்லது செயலற்றுப் போகச் செய்வது விடுவார். அதுவே அவருடைய வெற்றி ரகசியம்.

1986-ல் கேட்ஸ் பல நூறு கோடிகளுக்கு அதிபர், 1200 ஊழியர்களும் சவுகரியமாய் வேலை பார்க்க புதிய வேலையிடம் உருவாக்கப்பட்டது.

1990-ல் விண்டோஸ் 3.0 அறிமுகம். மைக்ரோசாஃப்டின் ஆண்டு வருமானம் 100 கோடி டாலர்களைத் தாண்டியது. 1992-ல் மைக்ரோசாஃப்டின் பங்குகள் கிடுகிடு வென்று உயர்ந்தன.

கேட்ஸ் அமெரிக்காவின் முதன்மைக் கோடீஸ்வரரானார். 1995-ல் உலகின் நம்பர் ஒன் கோடீஸ்வரர். இன்று அவருடைய சொத்தின் மதிப்பு இரண்டரை லட்சம் கோடி. கேட்ஸின் வளர்ச்சி அசுரத்தனமானது, மற்ற நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல்.

அத்தனை வளர்ச்சியை அவரால் எப்படி எட்ட முடிந்தது? மூளை பலம், நிறுவன ஊழியர்களின் ஈடுபாடு. கெட்டிக்காரர்கள் கொண்ட நிறுவனம் மைக்ரோசாஃப்ட், நிறுவன பங்குகளை ஊழியர்களுக்கு வழங்கி அவர்களையும் நிறுவனத்தின் உரிமையாளராக்கியிருக்கிறார். (நன்கு கவனிக்க வேண்டிய விஷயம் இது)

அவர்கள் ஈடுபாட்டுடன் உழைக்கக் கேட்பானேன்? மைக்ரோசாஃப்டில் பணத்தைத் தாராளமாய் செலவிட்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறார்கள்.

பில்கேட்ஸஸின் சிக்கனம் மற்றும் எளிமை பில்கேட்ஸின் வளர்ச்சிக்குக் காரணம் புதிது புதிதாய்க் கண்டு பிடித்துக் கொண்டிருப்பது. பில்கேட்ஸ் 50 கோடி ரூபாய் செலவழித்துத் தம்முடைய வீட்டைக் கட்டியிருந்தாலும் பணத்தை சிக்கனமாய் பயன்படுத்துகிறவர்.

நேரத்திலும் சிக்கனம். 10 மணி பிளேனைப் பிடிக்கத் தமது அலுவலகத்திலிருந்து 9.50க்குத்தான் புறப்படுவார். பில்கேட்ஸ் ரொம்ப எளிமையானவர். பிரத்யேகக் காரியதரிசியெல்லாம் வைத்துக் கொள்ளவில்லை, ஒரேயொரு உதவியாளர் மட்டுமே.

'மெமோ'க்களையும் கடிதங்களையும் தமது கைப்பட 'டைப்' செய்து விடுவார். அவர் ஒரு தொழில்நுட்ப வல்லுநர் மட்டுமல்ல, தேர்ந்த வியாபாரியும் கூட.

தம்முடைய ஊழியர்களின் பணியை, திறமையை அவர் வாயால் பாராட்டுவதில்லை, செயலால் பாராட்டி விடுவார். அதே சமயம் ஊழியர்களில் யாருடைய பணியிலேனும் தொய்வு இருப்பது தெரிந்தால் தயங்காமல் வேலையை விட்டு நீக்கி விடுவார்.

மைக்ரோசாஃப்டில் குழுக்களாய் பிரிந்து வேலை செய்கிறார்கள். அதனால் பலருடைய திறமையும் ஒருங்கிணைக்கப்படுகிறது. பில்கேட்ஸும் சரி அவருடைய நிறுவனமும் சரி சவால்களை அதிகம் சந்திப்பதால் அதிக ஆற்றலுடன் திகழ முடிகிறது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உங்களில் ஒருவருடைய பணியாளர் வெப்பத்தையும் புகையையும் தாங்கிக்கொண்டு உணவு சமைத்துக் கொண்டுவந்தால், அவரையும் தம்முடன் அமரச் செய்து அவர் உண்ணட்டும். உணவு குறைவானதாக இருந்தால் அதில் ஓரிரு கவளங்களையாவது அவரது கையில் வைக்கட்டும்.
அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம் 3421

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது: நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பத்து ஆண்டுகள் பணிவிடை செய்தேன். அல்லாஹ்வின் மீதாணையாக! அவர்கள் என்னை (மனம் வேதனைப்படும்படி) "ச்சீ' என்றோ "இதை ஏன் செய்தாய்?" என்றோ, "நீ இப்படிச் செய்திருக்கக் கூடாதா?" என்றோ எதற்காகவும் அவர்கள் (கடிந்து) சொன்னதில்லை. நூல்: முஸ்லிம் 4623

ஒரு பணியாளரிடம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கு நபிகள் நாயகம் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்துள்ளார்கள். தங்களது குழந்தைகளிடம் கூட பெற்றோர்கள் இவ்வாறு நடந்து கொள்வதில்லை. ஆனால் நபியவர்கள் தனது பணியாளரிடத்தில் சிறந்த முறையில் நடந்து முதலாளிகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள்.

முதலாளிகள் பெறவேண்டிய படிப்பினைகள்.

நண்பர்களே... இந்த வாழ்க்கையிலிருந்து நீங்கள் பெறும் படிப்பினைகளை உணருங்களேன்.

சாதனைகளின் சரித்திரங்கள் 6

(ஹாரிபாட்டர் எழுதிய ஜே.கே.ரவுலிங்)

ஜே. கே. ரௌலிங் (J. K. Rowling, பிறப்பு: 31 சூலை 1965) ஒரு ஆங்கில புதின எழுத்தாளர். ஜே.கே.ரவுலிங்கின் தந்தை பீட்டர் ஜேம்ஸ் ரவுலிங் ரோல்ஸ்ராய்ஸ் நிறுவனத்தில் பொறியாளராகப் பணிபுரிந்து வந்தார். அவருடைய தாய் ஆனி ரவுலிங், அறிவியல் தொழில்நுட்ப வல்லுநராக இங்கிலாந்தில் பணிபுரிந்து வந்தார்.

இங்கிலாந்து ராணியைவிடப் பெரிய கோடீஸ்வரப் பெண்மணி ஜே.கே.ரவுலிங் . எழுத்தின் மூலமாக மட்டுமே 6,000 கோடி ரூபாய்க்கும் மேலாகச் சம்பாதிக்க முடியும் என நிரூபித்த உலகின் முதல் பில்லியனர் எழுத்தாளர் அவர்.

ஆனால், ஒரு காலத்தில் கணவனைப் பிரிந்து கைக்குழந்தையுடன் வாழும் தாய்மார்களுக்கு அரசாங்கம் தரும் சொற்ப உதவித்தொகையில் வாழ்க்கை நடத்திய பெண் அவர். மிகவும் அவமானகரமான, அடுக்கடுக்கான தோல்விகளால் புடம்போடப்பட்ட மனிதர் அவர்.

அவரது ஹாரி பாட்டர் வரிசைப் புத்தகங்கள் 40 கோடிக்கும் அதிகமான பிரதிகள் விற்றுள்ளன. 75-க்கும் மேற்பட்ட மொழிகளில் அவரது கதைகள் வாசிக்கப்படுகினறன. எழுத்துலகில் மட்டுமல்ல... திரையுலகிலும் ஹாரி பாட்டர் படங்கள் வசூலை வாரிக்குவித்துள்ளன. இன்று, ஜெ.கே.ரவுலிங் பற்றி தெரியாதவர்கள் உலகில் குறைவு.

சமீபத்தில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவர் கூறினார்: "நாம் தோல்விகளைப் பற்றி அதிகம் பேசுவதில்லை. தோல்விகள் தவிர்க்க முடியாதவை என்ற உண்மையைப் பற்றி நாம் பேசுவதில்லை. நான் வாழ்க்கையில் தோல்வி மேல் தோல்வி அடைந்து நொந்துபோயிருந்த அந்த நேரத்தில், வாழ்க்கையில் ஓரளவு வெற்றி பெற்ற யாராவது என்னிடம் வந்து, 'நீ பல தோல்விகளைச் சந்தித்தால் மட்டுமே வெற்றி அடைய முடியும்' என்று சொல்லியிருந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்."

இங்கிலாந்து நாட்டில் 1965-ம் ஆண்டு பிறந்த ஜெ.கே.ரவுலிங், சின்ன வயதிலேயே புத்தகங்களை தேடித்தேடி வாசிப்பதில் பேரார்வம் கொண்டிருந்தார். அவரது எழுத்து ஆர்வத்தைப் புரிந்துகொண்ட அவரது பள்ளி ஆசிரியர்கள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க வழிகாட்டினர்.

1982-ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு எழுதிய ஜே.கே.ரவுலிங், தேர்வில் நிராகரிக்கப்பட்டார். அவமானத்தில் கூனிக் குறுகிப்போன ஜெ.கே.ரவுலிங், வீட்டைவிட்டு வெளியில் வருவதைப் பல நாட்கள் தவிர்த்தார். பின்னர் தன்னைத்தானே தேற்றிக்கொண்ட அவர், எக்ஸட்டர் பல்கலைக்கழகத்தில் விண்ணப்பிக்கத் தயாரானார்.

தனக்குள் இருந்த எழுத்தாற்றல் ஆர்வம் காரணமாக ஆங்கில இலக்கியம் படிக்க அவருக்கு அதிக ஆசை. மிகப் பெரிய எழுத்தாளர்களின் வரிசையில், தன்னைக் கருதிய ஜே.கே.ரவுலிங், தன்னை முழுநேர எழுத்தாளராகவே மனதுக்குள் கற்பனை செய்து வந்திருந்தார்.

தனது ஆர்வத்தை அவர் தயங்கியபடி சொன்னபோது. ஏழ்மையான பின்னணி கொண்ட அவரது பெற்றோர், "ஆங்கில இலக்கியம் சோறு போடாது. பிரெஞ்சு மொழி படித்தால் ஓர் அலுவலக உதவியாளர் வேலையாவது கிடைக்கும்" என்று வாதிட்டனர்.

வேறு வழியின்றி எக்ஸட்டர் பல்கலைக்கழகத்தில், பிரெஞ்சு மற்றும் செவ்வியல் இலக்கியப் படிப்பில் சேர்ந்தார். சில நாட்களிலேயே தனக்குப் பொருத்தமில்லாத படிப்பில் சேர்ந்ததை நினைத்து நொந்துபோனார்.

பி.ஏ பட்டம் பெற்ற பின்னர் லண்டன் மாநகருக்குச் சென்ற ஜெ.கே.ரவுலிங், ஆம்னாஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பில் ஆராய்ச்சி உதவியாளர் பணியில் சில மாதங்கள் செயல்பட்டார். அங்கு அவருக்குக் கிடைத்த அனுபவங்கள் வித்தியாசமானவை.

அப்போது கொடுங்கோலாட்சி நடந்த நாடுகளில் இருந்து தப்ப முயன்றவர்களும்,தப்பி வந்தவர்களும் எழுதும் அதிர்ச்சிகரமான கடிதங்களைப் படித்துக் குறிப்பெடுத்து வந்தார். மனிதர்கள் எத்தனை மோசமான சித்ரவதைகளை அனுபவிக்கிறார்கள்ள் என்பதை அறிந்து மனம் பதைபதைத்தார்.

அவர் எழுதிய நாவல்களில் இடம்பெற்ற சில அதீதச் சம்பவங்களும் கதாபாத்திரங்களும் ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் வேலையில் அவர் சந்தித்த அனுபவங்கள் அடிப்படையிலானவை.

ஒருமுறை லண்டனுக்குச் செல்வதற்காக மான்செஸ்டர் ரயில் நிலையம் சென்றார். ரயில் வர 4 மணி நேரம் தாமதமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. காத்திருந்த வேளையில், அவருக்கு ஒரு புத்தம் புதிய சிந்தனைக் கீற்று பளிச்சிட்டது.

மந்திரஜாலப் பள்ளி ஒன்றில் படிக்கும் ஹாரி என்ற சிறுவனைப் பற்றிய காட்சிக் கதைச் சித்திரம் அது. ஒரு முழு நீளத் திரைப்படம் போல் உருவான அந்தக் கதைச் சித்திரம் அவருக்குள் புதிய உணர்வலைகளை எழுப்பியது. வீட்டுக்கு வந்த உடன் அதனைப் பக்கம் பக்கமாக எழுதத் தொடங்கி விட்டார்.

அவர் தனது பிரம்மாண்டமான ஹாரிபாட்டர் நாவலை எழுதத் தொடங்கிய நேரத்தில், அவரது அம்மாவின் உடல் நலம் மோசமானது. தன்னை உயிருக்கு உயிராக நேசித்து, அரவணைத்துப் பாதுகாத்து வந்த தனது தாயாரின் மறைவு ஜெ.கே.ரவுலிங்கின் வாழ்க்கையை அடியோடு புரட்டிப்போட்டது. அவரால் வேலைக்கு செல்ல முடியவில்லை, எழுத்துப் பணியையும் தொடர முடியவில்லை.

ஒரு மாற்றத்துக்காக போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள போர்டோ நகருக்குச் சென்ற ஜெ.கே.ரவுலிங், அங்கு ஆங்கில ஆசிரியராக இரவு நேரப் பணியில் சேர்ந்தார். பகலில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதித் தள்ளினார்.

அங்கு, தான் சந்தித்த, தன்னைவிட வயதில் குறைந்த இளைஞர் ஒருவரை மணந்துகொண்டார்.மகள் பிறந்தாள். மண வாழ்க்கை நீடிக்கவில்லை. கணவரால் துன்புறுத்தப்படட்டு, துரத்தப்பட்டார். மீண்டும் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார். இங்கிலாந்திலும்உதவுவதற்கு யாரும் இல்லை. தந்தை மறுமணம் செய்துகொண்டு போய்விட்டார்.

தங்கையாலும் பெரிய உதவி செய்ய முடியவில்லை. பழைய நண்பர்கள் சிலர் சிறிதளவு பண உதவி செய்திட முன்வந்த போதும்,அதனை கைநீட்டி வாங்க மனம் இடம் கொடுக்கவில்லை.

கணவனைப் பிரிந்து கைக்குழந்தையுடன் வாழும் தாய்மார்களுக்கு அரசாங்கம் தரும் சொற்ப உதவித்தொகைக்கு விண்ணப்பித்து, தனது கைக் குழந்தையுடன் போராட்ட வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

மற்ற குழந்தைகள் நிறைய விளையாட்டுப் பொருட்களோடு உற்சாகமாக விளையாடுவதைப் பார்த்தால், தன் குழந்தைக்கு எதுவுமே தர முடியவில்லை என்ற ஏக்கம் அவரது மனதை வலிக்கச் செய்தது. ஏமாற்றங்களும், சுய பச்சாதாபமும் அவரது மனநிலையைப் பாதிக்கத் தொடங்கியிருந்தன.

அவரது குழந்தைக்கு ஒரு சிறிய விளையாட்டுப் பொம்மையை சமூகநலத் துறை ஊழியர் ஒருவர் இலவசமாக வழங்கியபோது, அதைப் பிடுங்கி குப்பைத்தொட்டியல் போடும் அளவுக்கு அவர் மன அழுத்தத்தில் இருந்தார்.

மன அழுத்தத்தின் உச்சத்தில், தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் தனக்கு எழுந்ததாகவும், மருத்துவச் சிகிச்சைக்குப் பின் மன அழுத்தம் குறைந்ததாகவும் அவர் பின்னாட்களில் கூறியுள்ளார். வறுமையுடன் போராட்டம் ஒருபுறம் இருக்க...

துரத்தியடித்த கணவர். ஜெ.கே.ரவுலிங்கையும் குழந்தையையும் தேடி இங்கிலாந்து வந்துவிட்டார். போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்ட அவரால் பெரும் தொந்தரவுகள். அவரிடம் இருந்து மணவிலக்குப் பெற ஜெ.கே.ரவுலிங் பெரும்பாடு படவேண்டியிருந்தது.

இத்தனைச் சோதனைகளுக்கு இடையிலும், ஜெ.கே.ரவுலிங்கை நம்பிக்கை இழக்காமல் வைத்திருந்தது, அவரது எழுத்துப் பணி மட்டுமே. வெளியில் சுற்றிவிட்டு, அந்தக் குழந்தை தூங்கும் நேரமெல்லாம் எழுதுவதை வழக்கமாக்கிக்கொள்ண்டார். பூங்காவிலோ, காப்பி கடையிலோ, வீட்டிலோ, வீதியிலோ, எங்கெல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறதோ அங்கெல்லாம் எழுதித் தள்ளினார்.

"வீடில்லாமல், பணம் இல்லாமல், கணவர் இல்லாமல், கைக்குழந்தையுடன வாழ்ந்த அந்த நாட்களில் எனது வாழ்க்கை இருள்மயமானதாக இருந்தது. தோல்விகள் என்னைச் சூழ்ந்து நிற்கின்றன. அந்தத் தோல்விகள், என்னிடம் இருந்த தேவையற்ற அனைத்தையும் பறித்து எறிந்து விட்டன. எதை எனது வாழ்க்கையின் தவப் பணியாக நினைத்தேனோ, அதில் மட்டுமே எனது முழு சக்தியையும் ஒன்று குவிக்கும்படி, தோல்விகள் என்னை விரட்டின" என்று பின்னாட்களில் குறிப்பிட்டார் ஜெ.கே.ரவுலிங்.

தனது முழு சக்தியையும் திரட்டி ஹாரிபாட்டர் முதல் பாகத்தை எழுதி முடித்தார் ஜெ.கே.ரவுலிங். தனக்கு முழு திருப்தி ஏற்படும்வரை அதனை மெருகேற்றி, மிகுந்த நம்பிக்கையோடு பதிப்பகத்துக்கு அனுப்பிவைத்தார். 'பதிப்பிக்கத் தகுந்ததல்ல' என்ற குறிப்புடன் திருப்பி அனுப்பப்பட்டது ஹாரிபாட்டர் நாவல்.

11 பதிப்பகங்கள் நிராகரித்த அந்த நாவலை, மனம் தளராமல் 12-வது பதிப்பகத்துக்கு அனுப்பி வைத்தார் ஜெ.கே.ரவுலிங்.

ஹாரிபாட்டர் நாவலின் பிரதியை ப்ளூம்ஸ்பரி பதிப்பாசிரியர் படிக்கத் தொடங்கியபோது, அவரது 8 வயது மகளும் அதைப் படிக்கத் தொடங்கினார். அந்தச் சிறுமி, அடுத்தடுத்த அத்தியாயங்களைப் படிக்கத் தருமாறு தனது அப்பாவிடம் கெஞ்சியபோது அந்த நாவல் குழந்தைகளைக் கவரும் என்று பதிப்பாசிரியர் புரிந்துகொண்டார்

ஜெ.கே.ரவுலிங்கை அழைத்து பதிப்பு ஒப்பந்தம் போட்டார். எதிர்பாராத மாபெரும் வரவேற்பைப் பெற்ற ஹாரிபாட்டர் நாவல்கள். தொடர் தோல்விகளைத் தாங்கிக் கொண்டு மனம் தளராமல் உழைத்த ஜெ.கே.ரவுலிங்குக்கு வெற்றி மேல் வெற்றி.

ஜே.கே.ரவுலிங் ஒருமுறை மாணவர்களிடம் பேசியபோது குறிப்பிட்டார்:"உங்களில் யாரும் நான் சந்தித்த அளவுக்கு மோசமான தோல்விகளைச் சந்திக்கப் போவதில்லை. தோல்விகள் தவிர்க்க முடியாதவை என்றாலும், அவை வாழ்க்கையின் இயல்பான பகுதி என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தோல்விகளைக் கண்டு அச்சப்பட வேண்டாம்."

ஜே.கே.ரவுலிங்கின் எழுதிய கதாநாயகன் ஹாரி பாட்டர் மந்திர சக்திகளைக் கொண்ட ஒரு அனாதை சிறுவன், அவர் தனது மாமாக்கள் கொடுத்த கொடூரமான வாழ்க்கையிலிருந்து தப்பிக்க ஒரு மந்திர உலகத்திற்கு தப்பித்து, அவர்களுடன் அவன் வாழ்கிறான்.

கதாநாயகன் ஹாரி பாட்டரை வைத்து ஏழு புத்தகங்களை எழுதி குவித்தார் ஜே.கே.ரவுலிங்கின் .இந்த ஏழு புத்தகங்களில் எந்த ஒன்றையும் தவிர்க்க முடியாது.

ஜே.கே. ரோலிங் எழுதிய ஹாரி பாட்டர் சிறுவன் கதாபாத்திரமாகக் கொண்டு எழுதப்பட்ட ஏழு புத்தகங்கள்

1) தத்துவஞானியின் கல் (1997)

2) சேம்பர் ஆஃப் சீக்ரெட்ஸ் (1998)

3) அஸ்கபானின் கைதி (1999)

4) நெருப்புக் குவளை (2000)

5) ஆர்டர் ஆஃப் தி பீனிக்ஸ் (2003)

6) ஹாஃப்-ப்ளட் பிரின்ஸ் (2005)

7) டெத்லி ஹாலோஸ் (2007)

ஹாரிபாட்டர் கதை மூலம் உலகப் புகழ் பெற்றுள்ள ஜே.கே.ரவுலிங், இந்த இடத்தை பிடிக்க தனது வாழ்க்கையில் பல்வேறு சோதனைகளை சந்திக்க வேண்டியிருந்தது.

ரவுலிங் அவரது பாத்திரங்கள்க்கு-செல்வந்தர்கள் மற்றும் குழந்தைகள் மூலம் உலகம் முழுவதும் புகழ் பெற்றது, அவரின் கதைகளை குழந்தைகள் மீண்டும் மீண்டும் வாசிப்பதை பெருமளவில் விரும்புகின்றனர்.

நண்பர்களே... இந்த வாழ்க்கையிலிருந்து நீங்கள் பெறும் படிப்பினைகளை உணருங்களேன்.

சாதனைகளின் சரித்திரங்கள் 7

(ஹெலன் கெல்லர்)

அமெரிக்கா, வட அலபாமா, டஸ்கும்பியா கிராமத்தில், ஜூன் 27, 1880ல், பிறந்தார் ஹெலன் கெல்லர். இரண்டு வயதில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கண் பார்வை, கேட்கும் சக்தி, பேசும் திறன் ஆக ஐம்புலன்களில் மூன்றையும் இழந்தார். விடாமுயற்சி, பயிற்சியால் ஓரளவு பேசும் திறன் பெற்றார். கல்வியில் தீவிர கவனம் செலுத்தி, 24ம் வயதில் முதுகலை பட்டம் பெற்றார். ஆங்கிலம், லத்தீன், பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழிகளையும் கற்று தேர்ந்தார்.

தன்னம்பிக்கையின் மொத்த வடிவாய் உருவெடுத்த ஒரு பெண்ணின் வாழ்க்கைச் சரித்திரம்! ஆம் அவள்தான் ஹெலன் கெல்லர்! அவளது வாழ்க்கையைப் படிக்கும் போது உச்சி முதல் உள்ளங்கால்வரை மயிர்சிலிக்கும்.
எம் உயிர் சிலிர்க்கும்.

அவளது வாழ்க்கையை உணரும் போது எம்மை நினைத்து எமக்கு வெட்கம் தான் வரும். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அவளது கண்கள் இரண்டும் பார்க்காது. காதுகள் இரண்டும்கேட்காது. வாய் பேசாது. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் அந்த வாழ்க்கையை !
இறைவனின் படைப்பில் இளவயதிலேயே அவளில் மனிதம் செத்துவிட்டிருந்தது. ஜீவன் மட்டும் உடலோடு ஒட்டிக் கொண்டிருக்க தனது உணர்வுகளை மற்றவர்களுக்கு எள்ளளவும் புரிய வைக்க முடியாத ஒரு இருண்ட உலகத்தில் தனியாக அவள் மட்டும்....

அப்போதுதான் ஸல்லிவன் என்ற ஆசிரியை அவளுக்குக் கிடைத்தார். மூன்று புலன்களற்ற ஹெலனுக்கு தன்னால் கற்பிக்க முடியும் என்கின்ற தன்னம்பிக்கை ஸல்லிவனுக்கு இருந்தது.

வார்த்தை வார்த்தையாக ஹெலனின் கையில் எழுதிக் காட்டித்தான் தன் கற்பித்தலைத் தொடங்கினார். ஸல்லிவனின் சலிக்காத தன்னம்பிக்கை ஹெலன் என்னும் சாதனையாளரை உலகிற்குக் காட்டியது. அவர் மட்டும் ஹெலனுக்கு ஆசிரியையாகக் கிடைக்காதிருந்திருந்தால் ஹெலன் என்ற அற்புத சாதனையாளரை உலகம் இழந்து போயிருக்கும்.

ஒருமுறை ஹெலன் கெல்லரை வண்டியில் அழைத்து சென்றார், ஆசிரியை ஆன் சல்லிவன். அப்போது, ஹெலனுக்கு கவனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சி அளித்தார். அந்த ஒருமுகப்படுத்தும் பயிற்சியில் கவனம் கொண்டு, 'திறந்த வெளியில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்...வயல் வெளியில் செல்கிறோம்...மரங்களுக்கு நடுவே செல்கிறோம்...' என பயணப் பாதையை உணர்ந்து கூறினார். இது, இன்றைய உளவியலாளர்களுக்கு கூட பெரும் வியப்பை தருகிறது.
எழுத்தாளராய்ப் பேச்சாளராய் அரிய சாதனைகள் நிகழ்த்தி அரிய வழிகாட்டும் நூல்கள் பல எழுதி எண்பத்தெட்டு வயது வரை ஆரோக்கியமாய் வாழ்ந்து உலகின் எட்டாவது அதிசயம் என்று பாராட்டுடப் பெற்றார் ஹெலன்.

'வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை. ஒன்று போனால் இன்னொன்று வரும். அந்த நம்பிக்கை இருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது" என்று சொன்ன ஹெலன், உலகெங்கும் பார்வையற்றோர் செவிப்புலனற்றோர் பள்ளிகள் திறக்கவும் அவர்களுக்கு உதவவும் ஒன்றரைக் கோடி ரூபாய் நிதியுடன் 'ஹெலன் கெல்லர் நிதி' என்று தொடங்கினர்.

அதிலிருந்து கிடைத்த தொகைகளை மேற்படி பள்ளிகளுக்கு வாரி வழங்கினார். பார்வையற்றவர்களுக்கென்று தேசிய நூலகம் ஒன்றையும் உருவாக்கி உலகம் முழுவதிலிருந்தும் அதற்கு நூல்கள் வந்து குவிய ஏற்பாடு செய்தார். இப்படித் தன் இறுதிநாள் வரை தைரியமூட்டி அவர்களும் தன்னைப் போல மீட்சி பெற உழைத்தார்.

பார்க்கிற, கேட்கிற, பேசுகிற சக்திகளில் ஒன்றை இழந்தாலும் மனமுடைந்து மூலையில் முடங்கிப் போகும் எம்மில் பலருக்கு மத்தியில் மூன்றையுமே இழந்தும் ஹெலன் கெல்லர் படைத்த சாதனைதானே தன்னம்பிக்கையின் வித்து.

அதன் ஆதர்ஷ சக்தி உடல் ஊனமுற்றிருந்தாலும் சுடர்விட்டுப் பிரகாசித்தது. அவளது ஆத்மா நினைக்கவே உடல் புல்லரிக்க வில்லையா? உயிர் துடிக்கவில்லையா? எல்லாவற்றிற்கும் என்ன காரணம்? ஒரு சொல்லில் சொல்வதென்றால் தன்னம்பிக்கை! அவள் பட்ட பாட்டை நினைக்கும் போது எமது துன்பங்கள் அவளது கால் தூசியும் பெறாது என்பது ஞிரியும். ஆனால் அவளுக்குள் ஜீவசக்தியாக ஒளிர்ந்து கொண்டிருந்தது வாழ வேண்டும் என்ற நம்பிக்கை!
சாதிப்பேன் என்கின்ற நம்பிக்கை! மொத்தத்தில் தன்னம்பிக்கை!

'வாழ்க்கையை ஒரு அவசர நெருக்கடியாக ஒவ்வொருவரும் உணரவேண்டும். அப்போதுதான் நமது ஆற்றல் எல்லாம் வலிமை பெற்று செயல்களைத் துரிதமாகச் செய்ய முடியும் என்று எழுதினார் அவர்.
"நிமிர்ந்து அமருங்கள். அதன் பின்னர் முதலில் ஒரு புனித எண்ணத்தை எல்லா உயிரினங்களின் மீதும் செலுத்துங்கள். எல்லோரும் இன்பம் பெறுக. எல்லோரும் அமைதி பெறுக; எல்லோரும் ஆனந்தம் பெறுக' என்று மனத்தில் திரும்பத் திரும்பக் கூறுங்கள். கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்று எல்லா திசைகளுக்கும் அவ்வாறு செய்யுங்கள். இவ்வாறு எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் செய்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நீங்களும் நன்மையை உணர்வீர்கள்.

"நம்மை ஆரோக்கியமாக வைத்திருக்க மிகவும் எளிய வழி பிறரது ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்வதே; நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு மிக எளிய வழி பிறரை மகிழ்ச்சியுறச் செய்வதே' என்பதை நாளடைவில் அறிந்து கொள்வீர்கள்.

" சுபுஹுான் குத்தூஸ் ரப்பில் மலாயிக்கத்தி வர்ரூஹி " என்பதாக இறைஞானிகள் கூறுவார்கள். இதையே அடிக்கடி திக்ராக செய்யுங்கள்

இதன்பிறகு கடவுளிடம் நம்பிக்கை உடையவர்கள் பிராத்தனை செய்யுங்கள்; பணத்திற்காக அல்ல, உடல்நலத்திற்காக அல்ல. சொர்க்கத்திற்காக அல்ல ஞானத்திற்காக, ஒளிக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். பிற பிரார்த்தனைகள் எல்லாமே சுயநலம்தான்"
"பின்பு உங்கள் உடம்பை நினைத்து அது நலமாக உறுதியாக இருப்பதாக எண்ணுங்கள். உடல்தான் நம்மிடம் உள்ள சிறந்த கருவி. இது வஜ்ரம் போல் உறுதியாக இருப்பதாகவும், இதன் துணையுடன் நீங்கள் வாழ்க்கைக் கடலையே தாண்டிவிடலாம் என்று எண்ணுங்கள்.

உங்கள் உடம்பு உறுதியாக இருப்பதாக அதனிடம் சொல்லுங்கள். உங்கள் மனம் உறுதியாக இருப்பதாக அதனிடம் சொல்லங்கள். உங்களிடமே எல்லையில்லா நம்பிக்கை, முழு நம்பிக்கை வையுங்கள் என்கிறார் விவேகானந்தர்.

உள்ளிருக்கும் ஆத்மாவின் ஓயாத அழுகுரல்கள் சாதிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கையை அந்த வெறியை எமக்குள் ஊட்டட்டும். அவை எம்மை தன்னம்பிக்கை மிகுந்த மனிதர்களாக்கட்டும். எம் சமுதாயம் உலகை அசைக்கும் ஆற்றல் கொண்ட சமுதாயமாக மாறட்டும்!
"இந்த இருண்ட அமைதியான என் வாழ்வை கடவுள் எதோவொரு திட்டத்தோடுதான் படைத்திருக்கின்றார். அதை என்றாவது ஒரு நாள் நான் உணர்வேன். அப்போது நான் அது குறித்து மகிழ்வேன்" - ஹெலன் கெல்லர்

கல்லூரியில் படித்த போது, 'என் கதை' என்ற தலைப்பில், சுயசரிதை நூலை எழுதினார். தொடர்ந்து, 'இருளுக்கு வெளியே' என்ற இவரது கட்டுரை பிரபலமானது.

ஹெலன் கெல்லர், 39 நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது பார்வையற்றோர், செவித்திறன் குன்றியோருக்கு, பள்ளிகள் திறக்கும்படி, பிரசாரம் செய்தார்; நிதியுதவியும் வழங்கினார்.மாற்றுத் திறனாளிகள் வாழ்வு உயர, தொழிற்பயிற்சி தேவை என வலியுறுத்தினார்.

இந்தியாவில் அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேருவை சந்தித்தார். பார்வையற்றோர், செவித்திறன் குறைந்தோருக்கு பல திட்டங்களை பரிந்துரைத்தார்.
அவரது வாழ்க்கை அனுபவம், 'மீட்சி' என ஆணவப் படமாக எடுக்கப்பட்டது. அதில் அவரே நடித்தார்.
பார்வையற்றோருக்காக தேசிய நூலகம் ஒன்றையும் உருவாக்கினார்.

வாழ்நாளில், 12 முக்கிய நூல்களை எழுதியுள்ளார் ஹெலன். பொதுநலனில் பெரும் அக்கறை கொண்டிருந்தார். இருபதாம் நூற்றாண்டில், உலகின் சிறப்பு மிக்க பெண்ணாக பாராட்டு பெற்றார்.
பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்ட ஹெலன் கெல்லர், ஜூன் 1, 1968ல், 87ம் வயதில் மறைந்தார்.

அமெரிக்கா, அலபாமா மாநிலத்தில் 2009ல் ஹெலன் கெல்லருக்கு வெண்கலச் சிலை நிறுவப்பட்டது. முதன் முதலாக ஏழு வயதில், தண்ணீரைத் தொட்டு உணர்ந்து பொருளை புரிந்துகொண்ட காட்சி சிலையாக வடிக்கப்பட்டுள்ளது.

சாதனைகளின் சரித்திரங்கள் 8

(நிக் வுஜிசிக்)

1982 இல் ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் துஷ்கா (நர்ஸ்) மற்றும் போரிஸ் வுஜிசிக் ஆகியோருக்குப் பிறந்தார். அவர் ஒரு ஆரோக்கியமான குழந்தையாக இருந்தாலும், நிக் இரண்டு கைகள் மற்றும் இரண்டு.கால்கள் இல்லாமல் பிறந்தார்; அவருக்கு கால்கள் இல்லை, ஆனால் இரண்டு சிறிய பாதங்கள், அவற்றில் ஒன்று இரண்டு கால்விரல்கள்.

"தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே தெரிந்திருந்தால்கூட கருவைக் கலைத்திருப்பார்கள் பெற்றோர்கள். பாவம், அந்த அப்பாவிப் பெற்றோர்கள் பெற்ற ஆண் குழந்தை இரு கைகளும் இல்லாமல், இரு கால்களும் இல்லாமல் பிறந்திருப்பதைப் பார்த்ததும் துடிதுடித்துப் போனார்கள். அக்குழந்தையை வளர்த்தெடுக்கவும், படிக்க வைக்கவும் அவர்கள் பட்ட துயரங்களையும், துன்பங்களையும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது.

கொஞ்சம் வளர்ந்து பள்ளியில் சேர்க்கப்போகும் போது அரசாங்கம், பள்ளியில் சேர்ந்து படிக்க அனுமதிக்கவில்லை. அரசை எதிர்த்து ஒரு மாபெரும் யுத்தமே நடத்தி அரசுப் பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தனர் பெற்றோர்கள்.

பள்ளியில் அவரைக் கிண்டலும், கேலியும் செய்யாத மாணவரும் இல்லை, மாணவியரும் இல்லை. பள்ளி முடிந்து ஒருநாள் வீட்டுக்கு வந்த சிறுவன் வூஜிச் தனது தாயாரைக் கட்டியணைத்துக் கொண்டு "அம்மா, என்னை கருவிலேயே சாகடித்திருக்கக் கூடாதா? பலரும் அவமானப்படுத்துகிற என்னை எதற்காக பெற்றெடுத்தாய்?' என்ற கேட்க , ஒரே பதில் : "கடவுளிடம் கேள் "

என் தேவனே .. 'எனக்கும் கைகள் , கால்கள் கொடு 'கடவுள் தான் அதிசயங்களை நிகழ்த்துபவராயிற்றே விடியும்போது தனக்குத் கைகளும், கால்களும் முளைத்திருக்கும் என பல இரவுகளில் கண்மூடி விழித்த எந்த விடியலிலும் நம்பிக்கை வெளிச்சம் கொடுக்க வில்லை.

இருப்பினும், அவரது கைகால்கள் இல்லாததால் பள்ளி கொடுமைப்படுத்துபவர்களுக்கு இலக்காகி, அவர் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளானார். எட்டு வயதில், அவர் தற்கொலை செய்து கொள்ள நினைத்தார், மேலும் பத்து வயதில் தனது குளியல் தொட்டியில் மூழ்கி தற்கொலை செய்து கொள்ள முயன்றார்; அவனது பெற்றோர் மீதான அன்பு அவனைப் பின்தொடர்வதைத் தடுத்தது.

கடவுள் தனக்கு கைகளையும் கால்களையும் தர வேண்டும் என்று நிக் மிகவும் கடினமாக ஜெபித்தார், ஆரம்பத்தில் கடவுளிடம், அவருடைய பிரார்த்தனைக்கு பதிலளிக்கப்படாவிட்டால், நிக் அவரை காலவரையின்றி பாராட்ட மாட்டார் என்று கூறினார். இருப்பினும், அவரது தாயார் கடுமையான ஊனமுற்ற ஒரு மனிதனைப் பற்றிய செய்தித்தாளில் கட்டுரையைக் காண்பித்தபோது அவருடைய நம்பிக்கையில் ஒரு முக்கிய திருப்புமுனை ஏற்பட்டது.

கைகால்கள் இல்லாமல் ஒரு முழு வாழ்க்கையை எப்படி வாழ்வது என்பதை நிக் படிப்படியாகக் கண்டுபிடித்தார், கைகால் உள்ளவர்கள் சிந்திக்காமல் சாதிக்கும் பல தினசரி திறன்களை மாற்றியமைத்தார்.

நிக் தனது இடது காலில் இரண்டு கால்விரல்கள் மற்றும் அவரது பெருவிரலில் சறுக்கிய ஒரு சிறப்பு பிடியுடன் எழுதுகிறார். கம்ப்யூட்டரை எப்படிப் பயன்படுத்துவது என்பது அவருக்குத் தெரியும், மேலும் "ஹீல் அண்ட் டோ" முறையைப் பயன்படுத்தி நிமிடத்திற்கு 45 வார்த்தைகள் வரை தட்டச்சு செய்யலாம்.

கோல்ஃப், நீச்சல், ஸ்கை-டைவிங் போன்றவற்றில் பங்கேற்பதைத் தவிர, டென்னிஸ் பந்துகளை வீசுவது, டிரம் பெடல்களை விளையாடுவது, ஒரு கிளாஸ் தண்ணீர் எடுப்பது, தலைமுடியை சீப்புவது, பல் துலக்குவது, ஃபோனைப் பேசுவது மற்றும் ஷேவ் செய்வது போன்றவற்றையும் அவர் கற்றுக்கொண்டார்.

வூஜிச் வளர, வளர அவன் பேச்சு பலரையும் வசீகரிக்கத் தொடங்கியது. கைகளும் கால்களும் இல்லையென்றாலும் அவன் ஒரு மாபெரும் பேச்சாளனாக மாறினான். தனது 26-வது வயதில் ஒரு சிறந்த தன்னம்பிக்கை சொற்பொழிவு ஆற்றும் சாதனை மனிதராக மாறிவிட்டான் வூஜிச். உலகிலுள்ள அனைத்து மக்களும் அவனது பேச்சை ஆர்வமுடன் கேட்பதற்காக குவியத் தொடங்கினார்கள். வூஜிச் பேசுகிறார் என்றால் அரங்கம் முழுவதும் நிற்கக்கூட இடமில்லாமல் நிரம்பி வழியும்.

வூஜிச் பேசும் இடங்களிலெல்லாம் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. 'கடவுள் இந்த உலகத்துக்குச் செய்ய வேண்டியதை என்னைப் போன்ற ஒரு அசாதாரணப் பிறவி மூலமாகத்தான் செய்து முடிக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன். எனக்கு அந்தப் பெரும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. உண்மையில் நான் குறையுடன் பிறந்ததற்காகப் பெருமைப்படுகிறேன்.

என் உருவத்தை என்னால் மாற்ற முடியாது. ஆனால் உலகம் முழுவதும் மனதளவில் குறைப்பட்ட எத்தனையோ பரிதாபத்துக்குரியவர்களை மாற்றி மறுவாழ்வு வாழ வைத்திருக்கிறேன். நீங்கள் எப்படிப்பட்ட தாழ்வு மனப்பான்மை உள்ளவராக இருந்தாலும் உங்களை என்னால் மாற்ற முடியும்' என்று ஒரு கனமழை பொழிவதுபோல தன்னம்பிக்கை வார்த்தைகளை கொட்டுகிறார் வூஜிச்.

இரு கைகளும், இரு கால்களும் இல்லாமல் பிறந்த நான் எனக்குத் தேவைப்படும் எந்த உதவியையும் நான் பிறரைச் செய்யுமாறு எப்போதும் சொல்வதில்லை. எதிர்பார்ப்பதும் இல்லை. எனக்குத் தேவையான அனைத்தையும் நானே செய்துகொள்கிறேன்.

எனது வாகனத்தை நானேதான் ஓட்டிச் செல்வேன். என் வாழ்வில் நடந்த அவமானங்களையும், கடந்து வந்த கரடு, முரடான பாதைகளையும் சொல்லிச் சொல்லியே பலரை உற்சாகப்படுத்தியிருக்கிறேன். எனது பேச்சைக் கேட்க வந்த எண்ணற்ற மக்களின் தாழ்வு மனப்பான்மையை தவிடுபொடியாக உடைத்தெறிந்திருக்கிறேன்

நடக்கவே முடியாமல் என் கூட்டத்துக்கு வந்த பல மாற்றுத்திறனாளிகள் என் பேச்சைக் கேட்டு எழுந்து நடந்திருக்கிறார்கள். சொன்னால் நம்ப மாட்டீர்கள், சிலர் ஓடியும் இருக்கிறார்கள்.

அவமானங்களையும், அடைந்து வரும் துயரங்களையும் தயவுசெய்து தூக்கி வீசுங்கள். ஒவ்வொரு நாளும் காலை எழுகிறபோது புதிதாகப் பிறந்ததாக எண்ணிக்கொண்டு புதிய பயணத்தைத் தொடங்குங்கள். உங்கள் ஒவ்வொருவரிடமும் திறமைகள் இருக்கின்றன என்பதை நம்புங்கள்.

நீங்கள் ஏதேனும் சாதிப்பதற்காகத்தான் கடவுள் உங்களை அனுப்பியிருக்கிறார் என்று நம்புங்கள், எளிதில் வெற்றியடைவீர்கள்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸில் வசிக்கிறார்.

2005 ஆம் ஆண்டில், வுஜிசிக் ஆண்டின் இளம் ஆஸ்திரேலியன் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டார்.

12 பிப்ரவரி 2012 அன்று, அவர் தனது காதலி கனே மியாஹாராவை மணந்தார், மேலும் 13 பிப்ரவரி 2013 அன்று, அவர்களின் மகன் கியோஷி ஜேம்ஸ் வுஜிசிக் 8 பவுண்டுகள் 10 அவுன்ஸ் எடையுடன் பிறந்தார். இரண்டு ஆண் குழந்தைகள் மற்றும் இரட்டை மகள்களின் தந்தை

ஒருவரை மட்டும் என்னால் ஊக்கப்படுத்த முடிந்தால் இந்த வாழ்க்கையில் என் வேலை முடிந்துவிட்டது.

எல்லோரும் வெற்றி பெற விரும்புகிறார்கள், ஆனால் வெற்றி தோல்வி வித்தியாசத்தில் நாம் தாமதிக்கக் கூடாது... ஆனால் தோல்வி தோல்வியா?

நான் என் வாழ்க்கையை நேசிக்கிறேன், ஏனென்றால் நான் என் நோக்கத்தைப் பார்த்தேன்.

நான் மீண்டும் மீண்டும் முயற்சிப்பேன், ஏனென்றால் நான் கைவிடும் தருணம், நான் தோல்வியுற்ற தருணம்.

நன்றியுள்ள ஒரு கசப்பான நபரை நான் சந்தித்ததில்லை. அல்லது கசப்பான ஒரு நன்றியுள்ள நபர்.

நீங்கள் போதுமானவர் இல்லை என்று நினைப்பது பொய். நீங்கள் எதற்கும் தகுதியற்றவர் என்று நினைப்பது பொய்.

வழியில் நீங்கள் கீழே விழலாம், ..சில சமயங்களில் வாழ்க்கையில், நீங்கள் கீழே விழலாம், மீண்டும் எழும்புவதற்கான வலிமையைக் காணமுடியாமல்... நம்பிக்கை இருப்பதாக நினைக்கிறீர்களா? ஏனென்றால், நான் இங்கே கீழே இருக்கிறேன், எனக்கு கைகளும் கால்களும் இல்லை, ... என்னால் எழுந்திருப்பது சாத்தியமற்றதாக இருக்க வேண்டும்,

ஆனால் அது இல்லை.நான் முயற்சி செய்யும் வரை, எப்போதும் எழுந்திருக்க வாய்ப்பு உள்ளது. நீங்கள் கைவிடாத வரை இது முடிவல்ல.

நீங்கள் ஒரு நல்ல கணிதவியலாளரா, அல்லது ஒரு நல்ல தடகள வீரரா, அல்லது எதிலும் திறமை இல்லாதவராக இருந்தால் - நீங்கள் நினைப்பது எனக்கு கவலையில்லை. ஆனால் நான் வந்து சொல்கிறேன், நீங்கள் இருக்கும் விதம் மிகவும் அருமை.

என் மனைவியின் கைகளைப் பிடிக்க எனக்கு கைகள் இல்லாமல் இருக்கலாம், ஆனால் அவளுடைய இதயத்தைப் பிடிக்க எனக்கு கைகள் தேவையில்லை. அதைத்தான் நான் தாங்குவேன்.

என்னிடம் இல்லாததற்கு கடவுள் மீது கோபம் கொள்வது அல்லது உங்களிடம் உள்ளதற்கு நன்றி சொல்ல எனக்கு விருப்பம் உள்ளது.

உள்ளுக்குள் உடைந்து போனால் வெளியில் முழுமையாய் இருப்பதில் அர்த்தமில்லை.

நான் எழுவதற்கு நூறு முறை முயற்சிப்பேன், நான் நூறு முறை தோல்வியுற்றால். நான் தோல்வியடைந்து விட்டுவிட்டால், நான் எப்போதாவது எழுந்திருப்பேனா? இல்லை! நான் தோல்வியுற்றால், நான் மீண்டும் மீண்டும் முயற்சிப்பேன். ஆனால் இது முடிவல்ல என்பதை நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.
தோல்வி முக்கியமல்ல, அதை எப்படி சமாளிப்பது என்பது முக்கியம்."

'கடவுள் அதிசயம் நிகழ்த்துவார் ' என்ற தனது நம்பிக்கையில் , 'ஆம், நிச்சயம் அதுவும் நடக்கும். எனக்கும் கால்கள் முளைக்கும் .அந்த நம்பிக்கையில்தான் ஒரு ஜோடி ஷூ வாங்கி அலமாரியில் பத்திரமாக வைத்திருக்கிறேன் "

சாதனைகளின் சரித்திரங்கள் 9

(நிக் வுஜிசிக் 2)

(நிக் வுஜிசிக்கின் காதல் அதையும் தாண்டி புனிதமானது!)

வாழ்க்கையில் எனக்கு கேர்ள் ஃப்ரெண்ட் அமையவே அமையாது' என்ற கவலைதான், சிறுவயதில் நிக் தற்கொலை முயற்சி செய்ய முக்கியக் காரணம்.

2010-ம் ஆண்டு டெக்ஸாஸின் ஓர் இடத்தில் உரையாற்றியபோது அவளைப் பார்த்தார் நிக். கண்டதும் காதல். அன்று மேடையில் வார்த்தைகள் தடுமாறின. அந்தப் பெண்ணின் பெயர் கேனே. அவளை எப்படியாவது காதலித்தே தீர வேண்டும் எனத் தோன்றியது.

மீண்டும் மீண்டும் சந்திப்பதற்கான வாய்ப்புகளை வலிய ஏற்படுத்தினார். நேசம் வளர்ந்தது. கொஞ்சம் டேட்டிங். ஒருநாள் கடலின் நடுவில் படகின் முகப்பில் 'டைட்டானிக்' ஜாக்கும் ரோஸுமாகத் தழுவி நின்றார்கள். அந்தப் பொழுதில் தன் காதலைச் சொல்லி, வாயால் மோதிரமும் அணிவித்தார் நிக்.

கேனே மகிழ்ச்சியில் திளைத்தார். 'சில ஆண்களைப் பார்த்ததும் பாய் ஃப்ரெண்ட் ஆக்கிக்கொள்ளலாம் எனத் தோன்றும். ஆனால் நிக்கைச் சந்தித்த முதல் நொடியிலேயே இவரை கணவர் ஆக்கிக்கொள்ள வேண்டும் எனத் தோன்றியது' என்பது கேனேவின் லவ் மொழி.

இருவரும் 2012-ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார்கள். 2013-ம் ஆண்டு பரிபூரண ஆரோக்கியத்துடன் ஓர் ஆண் குழந்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

2015-ம் ஆண்டு இரண்டாவது மகன் பிறந்திருக்கிறான். ஒரு பேட்டியில் நிருபர் ஒருவர் நிக்கிடம் கேட்ட கேள்வி, 'நீங்கள் எப்படி குழந்தை பெற்றுக்கொண்டீர்கள்... கை, கால்கள் இல்லாமல் எப்படிச் சாத்தியமானது?' நிக் பட்டெனக் கேட்ட பதில் கேள்வி, 'குழந்தை பெற்றுக்கொள்ள கை, கால்கள் அவசியமா என்ன?'

நிக்- கேனே காதல் கதை:
www.youtube.com/ Littl May watch?v=s3QezBvN1BE

சாதனைகளின் சரித்திரங்கள் 10

(நிக் வுஜிசிக் 3)

சக்கி என்பவன், நிக்கின் பள்ளியில் படித்த புஜபல முரட்டு மாணவன். நிக்கிடம் அடிக்கடி வம்பிழுத்தான். 'ஒண்டிக்கு ஒண்டி வர்றியா?' என ஒருமுறை அவன் கேட்க, நிக்கும் ஏதோ ஒரு தைரியத்தில் ஒப்புக்கொண்டான்.

மறுநாள் மதிய இடைவேளையில் மைதானத்தில் மாணவர்கள் குழுமி இருக்க, நிக்கும் சக்கியும் எதிர் எதிரே. நிக்குக்குள் பயம் நிரம்பித் ததும்பியது. ஆசிரியர்கள் யாராவது விஷயம் அறிந்து வந்து சண்டையைத் தடுத்துவிடுவார்கள் என நம்பினான். அது நடக்கவில்லை.

'வீல்சேரில் இருந்து இறங்கு' என்றான் சக்கி.
'நீயும் முட்டி போட்டுத்தான் மோத வேண்டும்' என்றான் நிக்.

சக்கி முட்டி போட்டான். நிக்கை அடித்துப் போட்டான். நிக்குக்கு உடலைப் புரட்டி, முன்நெற்றியை தரையில் பதித்து, அழுத்தி எழுந்து நிற்பதே சிரமமாக இருந்தது. மீண்டும் மீண்டும் அடி. நிக், சுருண்டு விழுந்தான்.

'அய்யோ வேணாம்' என மாணவிகள் அழ ஆரம்பிக்க, தனக்காக யாரோ சிந்தும் கண்ணீரும், கீழே விழுந்த அவமானமும் நிக்கைச் சிலிர்த்தெழச் செய்தன.
சிரமப்பட்டு மீண்டும் எழுந்து, தன் உடலைத் தரையில் ஊன்றி, ஓர் ஏவுகணைபோல பாய்ந்து, தன் தலையால் சக்கியின் முகத்தில் கடுமையாக மோதி விழுந்தான். சக்கியின் மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியது.

கூட்டம் ஸ்தம்பித்தது. பின் நிக்குக்காக ஆர்ப்பரித்தது. நிக்கோ பதறி, சக்கியிட மன்னிப்பு கேட்டான். சக்கி, அங்கே நிற்க முடியமல் வெளியேறினான். பின் பள்ளியில் இருந்தும் நிரந்தரமாக!

பயத்தை விழுங்கிவிட்டால் எந்த ஓர் அசாதாரணச் சூழலையும் சமாளிக்கலாம் என நிக்குக்குத் தைரியப் பாடம் கற்றுக்கொடுத்தது அந்த நிகழ்வு.

அதேபோல லாரா என்கிற பள்ளித்தோழி கேட்ட ஒரு கேள்வி, நிக்கை அடுத்தக் கட்டம் நோக்கி நகர்த்தியது.

'இப்படி எத்தனை காலம்தான் ஒவ்வொன்றுக்கும் அடுத்தவர்களையே நம்பி இருப்பாய்?'-தோழியின் கேள்வியால் காயப்படாமல் 'தான் சுதந்திரமாக இயங்கப் பழக வேண்டும்' என உணர்ந்தான் நிக்.

பல் துலக்குவதில் இருந்து, குளிப்பது, கழிவறையை உபயோகிப்பது, உடை அணிவது, முட்டையை உடைத்து ஆம்லெட் போடுவது, இரண்டு விரல்களால் ரிமோட்டை இயக்குவது, கீபோர்டில் டைப் அடிப்பது, குட்டிக் காலை துடுப்பெனச் சுழற்றி நீச்சலடிப்பது என, தினம் தினம் புதிய விஷயங்களை கற்க ஆரம்பித்தான்.

Life without Limits இது, நிக்கின் வாழ்க்கை வரலாறு புத்தகம். Unstoppable, Limitless, Stand Strong, Love without Limits ஆகியவை, நிக்கின் பிற புத்தகங்கள். அனைத்துமே விற்பனையில் சாதனை படைப்பவை. தவிர, No Arms, No Legs, No Worries என்ற நிக்கின் வாழ்க்கையும் தன்னம்பிக்கை உரைகளும் அடங்கிய டி.வி.டி மிகப் பிரபலம்.

நிக் ஒருமுறை இந்தோனேஷியா சென்றபோது, அங்கு இருந்த நண்பர், நிக்கின் டி.வி.டி., போலி டி.வி.டி-யாக ஒன்றரை லட்சம் காப்பிகளுக்கும் மேல் விற்றுள்ளதாக வருத்தப்பட்டார். நிக் சிரித்தபடியே சொன்ன பதில், 'நல்ல விஷயம் மக்களிடம் எந்த வழியில் போய்ச் சேர்ந்தாலும் எனக்கு மகிழ்ச்சியே!"

நிக் தன்னம்பிக்கைப் பற்றிய சொற்பொழிவு உரையாற்றி முடித்ததும் பார்வையாளர்கள் வரிசையில் நின்று அவரைத் தழுவிச் செல்வது வழக்கம்.

2010-ம் ஆண்டு ஒரு மணி நேரத்தில் 1,749 பேர் நிக்கைத் தழுவிச்செல்ல, அது கின்னஸ் சாதனையாகப் பதிவானது.

இருந்தாலும், நிக் தனக்குக் கிடைத்த சிறந்த தழுவலாக நினைப்பது, இரண்டு கைகள் இல்லாத ஆப்பிரிக்க சிறுவன் தன்னை தழுவியதையும்,

2009-ம் ஆண்டு இரண்டரை வயது ஆஸ்திரேலியச் சிறுமி ஒருத்தி, தன் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு நிக்கை போன்றே அவரது பாணியிலேயே கழுத்தாலும் தோள்பட்டையாலும் தழுவியதே!

சாதனைகளின் சரித்திரங்கள் 11.

உசைன் போல்ட் (Usain Bolt)

கரீபியன் தீவுவாசிகளுக்கு கிரிக்கெட், தடகளமும், இரண்டு "கால்கள்". விளையாட்டுகளின் மீது அலாதியான விருப்பம் அங்கு வளரும் இளம் தலைமுறைக்கு இயல்பானதே. சிறுவன் உசைனுக்கும் கிரிக்கெட், கால்பந்து மீது பெரும் ஆர்வம்.

அதிலும் கிரிக்கெட் விளையாடுவதென்றால் சொல்லவே வேண்டாம். தனது பள்ளியின் கிரிக்கெட் அணியில் பந்து வீச்சாளராக விளையாடினார் உசைன். பந்து வீச ஓடிவரும் உசைனின் வேகத்தைக் கவனித்துப் பாராட்டிய பள்ளி ஆசிரியர்,

“நீ தடகளப் போட்டிகளில் கவனம் செலுத்து உசைன். பள்ளிகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகளில் கலந்துகொள்” என்றார். இருப்பினும் உசைனின் மனது ஆசிரியரின் வார்த்தைகளை முதலில் ஏற்கவில்லை.

ஆசிரியர் சொன்னது போலவே பள்ளிகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் வர, தனக்குத் தடகளத்தில் ஆர்வமேதுமில்லை என்று ஆசிரியரிடம் கூறினார் உசைன். ஆனால் ஆசிரியரோ, “நீ இன்று பங்கேற்றால் நிச்சயம் வெற்றி பெறுவாய்” என்றார்.

மேலும், அமைதியாக இருந்த உசைனிடம், ”நீ இதில் வெற்றி பெற்றால் சிக்கனோடு சேர்ந்த நல்ல மதிய உணவு வாங்கித் தருகிறேன்” கூறினார். சிரித்துக் கொண்டே அதனை ஒப்புக்கொண்ட உசைன் தடகளப் போட்டியில் வெற்றியும் பெற்றார்.

இதுவே தடகள உலகில் உசைன் போல்ட்டின் முதல் வெற்றி. சிக்கனின் சுவையைக் காட்டிலும் வெற்றியின் சுவை போல்ட்டுக்குப் பெரிதும் பிடித்துப் போனது. மேலும், பல போட்டிகளில் விளையாட்டாகவே பங்கேற்று வென்றார் உசைன். வெற்றிகளும் பதக்கங்களும் மேன்மேலும் குவிய 14 வயதிலேயே சர்வதேச அளவிலான ஜூனியர் லெவல் தடகளப் போட்டிகளில் பங்கு பெறும் வாய்ப்பு உசைனுக்குக் கிடைத்தது.

இயல்பாக அமைந்த உயரம், ஓட்டத்திற்கு ஏற்ற உடல்வாகு, பயிற்சி என அனைத்தும் கிடைத்திருந்தும் அவற்றின் முக்கியத்துவத்தை உணர முடியாமல் கிரிக்கெட் மீதான ஆர்வம் போல்ட்டின் கண்களை மறைத்தன. இதனால் தனது முதல் சர்வதேச அளவிலான ஜூனியர் லெவல் போட்டியில் தோல்வியைக் கண்டார் உசைன்.

தோல்வி உசைனுக்கு மிகவும் கசந்தது. மனதை மிகவும் பாதித்தது. வீட்டின் கொல்லைப் புறத்தில் தனிமையில் அழுது கொண்டிருந்த போல்ட்டை அவரது பெற்றோர் அரவணைத்தனர். “இப்போது ஒன்றும் ஆகவில்லை, முறையான பயிற்சியில் ஈடுபடு, முயற்சியே செய்யாமல் ஒதுங்கிப் போகாதே. அதன் முடிவு என்னவானாலும் தைரியமாக ஏற்றுக்கொள்” என்றனர்.

உசைனுக்கு நம்பிக்கை பிறந்தது. அமெரிக்கத் தடகள வீரர் மைக்கேல் ஜான்ஸன் ஒலிம்பிக்கில் 200 மீட்டர் பந்தய தூரத்தை 19.32 விநாடிகளில் கடந்த சாதனை வீடியோவைப் பார்க்கும் வாய்ப்பு போல்ட்டுக்குக் கிடைத்தது. தானும் அந்த இடத்தில் ஒரு நாள் நிற்பேன் என மனதில் உறுதி கொண்டார் சிறுவனான உசைன் போல்ட்.

2002-ல் தன் சொந்த நாடான ஜமைக்காவில் நடந்த சர்வதேச அளவிலான ஜூனியர் தடகளப் போட்டியில் 200 மீட்டர் ஓட்டத்தில் 20.61 விநாடிகளில் கடந்து வெற்றி பெற்று சர்வதேச அளவில் தன் முதல் வெற்றியைப் பதிவு செய்ததோடு ஜூனியர் பிரிவில் மிகக் குறைந்த வயதில் உலக சாம்பியன் என்ற பெயரையும் பெற்றார்.

உசைனுக்குப் புதிய பயிற்சியாளராக வந்த ஃபிட்ஸ் கோல்மென், களப் பயிற்சிகளை விட மற்ற பயிற்சிகளில் அதிக கவனம் செலுத்தினார். முதுகிலும், கால்களிலும் ஏற்பட்ட அதீத வலியை போல்ட்டால் தாங்க முடியவில்லை. 2004-ல் போல்ட்டின் முதல் ஒலிம்பிக் வாய்ப்பு. ஆனால் ஃபிட்னஸ் சரியாக இல்லாத காரணத்தால் 200 மீட்டர் பந்தயத்தில் முதல் சுற்றிலேயே வெளியேறினார்.

காயத்தைவிட போல்ட்டுக்குத் தோல்வியே அதிகமாக வலித்தது. போல்ட்டைப் பரிசோசித்த ஜெர்மானிய மருத்துவர் ஹேன்ஸ் முல்லர் போல்ட்டின் முதுகெலும்பு சற்றே வளைந்திருப்பதாகக் கூறினார்.

அதனால் அவருடைய வலது கால் இடது காலைவிட அரை இன்ச் உயரம் குறைவாக இருப்பதாகவும் முதுகிலும் காலிலும் ஏற்படும் வலிக்கு இதுவே காரணம் என்றும் கூறினார். பிசியோதெரபி சிகிச்சை மூலமாக குணப்படுத்தலாம் என்றும், கூடுதலாக ஹோமியோபதி மருந்துகள் எடுத்துக் கொள்ளவும் பரிந்துரைத்தார்.

சற்றே மனம் தளர்ந்திருந்த போல்ட்டுடன் புதிய பயிற்சியாளராக கைகோத்தார் ஜமைக்காவின் இளென் மில்ஸ். மில்ஸின் புதிய பயிற்சி முறைகள் போல்ட்டை சற்றே தேற்றின.

2005-ல் பின்லாந்தில் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தசைப் பிடிப்பினால் தோல்வி,
2006-ல் காமன்வெல்த் போட்டிகளிலும் அதே தசைப் பிடிப்பினால் தோல்வி. மிகவும் மனம் தளர்ந்த போல்ட்டை அரவணைத்த பயிற்சியாளர் மில்ஸ்,

”2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை இலக்காக வைத்துப் பயிற்சியைத் தொடங்கலாம்” என உற்சாகமூட்டினார்.

“உனக்காக ஓடு. உனக்கென ஒரு லட்சியத்தையும், இலக்கையும் உருவாக்க ஓடு. அதை நோக்கியே நீ உன்னைச் செலுத்து. பழைய தோல்விகள், முதுகு வலி, கால் வலி என எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு ஓடு, உறுதியாக ஓடு, முன்பை விட உறுதியாக முன்பைவிட வேகமாக” என ஒவ்வொரு தருணத்திலும் ஊக்கப்படுத்தினார் மில்ஸ்.

இதனைத் தொடர்ந்து உசைன் போல்ட் கடினமாக உழைக்க ஆரம்பித்தார். 2008ஆம் ஆண்டு பெய்ஜிங் ஒலிம்பிக்கில் 100 மீட்டர் பந்தய தூரத்தை 9.69 விநாடிகளில் கடந்து உலக சாதனை படைத்து தங்கம் வென்றார்,

அடுத்து 200 மீட்டரில் 19.30 விநாடிகள் வென்று மைக்கேல் ஜான்ஸனின் 12 ஆண்டு கால உலக சாதனையைத் தகர்த்தார்.

4 x 100 மீட்டர் ரிலேவிலும் 37.10 விநாடிகள் என்று உலக சாதனை படைத்தார்.

உலகமே உசைன் போல்ட்டைத் திரும்பிப் பார்த்தது. ஊடகங்கள் அனைத்தும் தூக்கி வைத்துக் கொண்டாடின. வெற்றிக்குப் பின்னர் களத்தில் இரண்டு கைகளையும் வானத்தை நோக்கி போல்ட் கொடுக்கும் போஸ் உலக ஃபேமஸ்.

2009 பெர்லின் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 100 மீ மற்றும் 200 மீ இரண்டிலும் 9.58 மற்றும் 19.19 விநாடிகளில் கடந்து தன்னுடைய சாதனைகளைத் தானே மாற்றியமைத்தார் உசைன் போல்ட்.

2012ஆம் ஆண்டு மற்றும் 2016ஆம் ஆண்டும் இரண்டு ஒலிம்பிக்கிலுமே 100 மீ, 200 மீ, 400 மீ ரிலே என மூன்று போட்டிகளிலும் தங்கம் வென்று தனது தொடர் சாதனைகளால் தடகள உலகில் தனது கால்தடத்தை மிக அழுத்தமாகப் பதித்தார்.

தனது சுயசரிதையில், தடகள உலகில் தனது முதல் வெற்றியில் கிடைத்தது சிக்கன் மட்டுமின்றி தன் திறமையைப் பற்றிய புரிதலுமே எனக் குறிப்பிட்டிருக்கிறார் உசைன் போல்ட்.

அதுமட்டுமில்லாமல் தனது ஜூனியர் லெவல் சர்வதேசப் போட்டியின் வெற்றியால் தனக்குக் கிடைத்த சுகபோகங்களில் சிக்கி அந்த இடத்திலேயே தேங்கிவிடாமல் அதைக் கடந்துவந்த அனுபவங்களையும் பகிர்ந்து தன்னை அடிமைப்படுத்தக்கூடிய கஞ்சா உட்பட பல போதைப் பழக்கங்களுக்கு அடிமையாகாமல் தன் இலக்கை நோக்கிப் பயணித்தது என்று பல அனுபவங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கத்துடன் தடகளப் போட்டிகளில் இருந்து தனது ஓய்வையும் அறிவித்தார். ஓய்வுக்குப் பின்னர் தனக்குப் பிடித்த கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டு வருகிறார். அத்துடன் கால்பந்தாட்டத்தில் தன் விருப்ப அணியான மான்செஸ்டர் யுனைடெட் அணியில் இணைந்து விளையாடுவது தனது ஆசை என்றும் தெரிவித்திருந்தார்.

தற்போது “ட்ராக்ஸ் அண்ட் ரெக்கார்ட்ஸ்” என்ற பெயரில் உணவகமும், ஆடை தயாரிக்கும் நிறுவனமும் நடத்தி வருகிறார்.

தன் கடின முயற்சியால் இன்று உலக அரங்கில் தன் பெயரையும் தன் நாட்டின் பெயரையும் நிலை நிறுத்தி, தடகள உலகில் நீங்கா தடம் பதித்தார் உசைன் போல்ட்

சாதனைகளின் சரித்திரங்கள் 12

மார்க் ஸுக்கர்பெர்க் (ஃபேஸ்புக் ஓனர்)

மார்க் எலியட் ஸுக்கர்பெர்க் மே 14, 1984 நியூயார்க்கில் உள்ள ஒயிட் பிளைன்ஸில் சுக்கர்பெர்க் பிறந்தார். நியூயார்க்கில் உள்ள டாப்ஸ் பெர்ரியில் வளர்ந்தார்.

இவளது தந்தை எட்வர்ட் டாப்ஸ் பெர்ரியில் பல் மருத்துவர் மார்க் ஸுக்கர்பெர்க் நடக்கும் பருவத்தில் (1985), எட்வர்டு தனது கிளினிக்கில் புதிய கம்ப்யூட்டர்களை நிறுவினார். விவரம் அறியாத வயதிலேயே கம்ப்யூட்டர் ஸ்பரிசத்துடன் வளர்ந்தான் சிறுவன் மார்க்.

விளையும் பயிர் முளையிலேயே, தனி கம்ப்யூட்டர் கேட்டு அடம்பிடித்தது. சமாளிக்க முடியாமல் பெற்றோரும் வாங்கிக் கொடுத்தனர். 10 வயது மார்க், அதில் படம் வரைந்தான்; படம் பார்த்தான். வேறு என்ன செய்ய? கம்ப்யூட்டர் போரடிக்குதுப்பா!' என அலுத்துக்கொள்ள, 'சி++ ஃபார் டம்மீஸ்' என்ற புரோகிராமிங் புத்தகத்தை தன் மகனிடம் விளையாட்டாகத் தூக்கிக் கொடுத்தார் எட்வர்டு.

மார்க், அதில் லயித்தான். புத்தகத்தைப் படித்துப் புரிந்து கொண்டு,சிறு சிறு புரோகிராம்கள் எழுத ஆரம்பித்தான். அந்த 'விளையாட்டு' அவனுக்குப் பிடித்திருந்தது. மகனின் ஆர்வத்தைக் கண்டுகொண்ட எட்வர்டு, அருகில் நடந்த 'புரோகிராமிங் வகுப்பு'க்கு அனுப்பினார். பொடியனின் ஆர்வமும் திறமையும், வகுப்பில் இருந்த சீனியர்களைத் திகைக்கச் செய்தன.

'அப்பா, உங்க கம்ப்யூட்டரையும் கிளினிக் ரிசப்ஷன்ல இருக்கிற கம்ப்யூட்டரையும் ஒரே நெட்வொர்க்ல கொண்டுவாங்க' என மார்க் கட்டளையிட, எட்வர்டும் அப்படியே செய்தார். டாக்டரும் ரிசப்ஷனிஸ்ட்டும் ஒருவருக்கொருவர் தகவல் பரிமாறிக்கொள்ளும்படி புதிய 'சாட் புரோகிராம்' எழுதி அசத்தினான் மார்க். இன்றைக்கு உலகையே ஃபேஸ்புக்கால் கட்டி வைத்திருக்கும் மார்க் நிகழ்த்திய முதல் 'இணைப்பு வைபவம்' அது.

வீடியோ கேம்ஸ்களில் மூழ்கிக்கிடக்கும் பதின் வயதில், மார்க் தன்னைப் போன்ற புரோகிராமிங் ஆர்வமுள்ள நண்பர்களுடன் சேர்ந்து புதிய கேம்ஸ்களை உருவாக்கினான். அதற்காக 'புரோகிராமிங்தான் வாழ்க்கை' என அவன் அப்போதே முடிவெடுக்கவில்லை அது என்னவோ, செம்புலப் பெயல்நீர்போல, 'பிஹெச்பி'யும் 'சி ப்ளஸ் ப்ளஸ்ஸூம் அவனுள் இயல்பாகக் கலந்தன.

பள்ளி இறுதி ஆண் ஒரு புராஜெக்ட் செய்ய டி ல் வேண்டும். மார்க்கும் அவரது நண்பர் ஆடமும் இணைந்து 'ஸினாப்ஸ்' (Synapse) என்ற ஒரு புதிய மியூசிக் பிளேயரை உருவாக்கினார்கள். ஒரு கம்ப்யூட்டரை உபயோகிப்பவர் என்ன மாதிரியான பாடல்களை அதிகம் விரும்பிக் கேட்கிறார் என அவரது ரசனையை ஸினாப்ஸ் மோப்பம் பிடித்துக்கொள்ளும்.

ஏற்கெனவே இருக்கும் பாடல்கள். புதிதாகச் சேர்க்கும் பாடல்கள் எல்லாவற்றிலும் இருந்து அவருக்குப் பிடித்த மாதிரியான பாடல்களைத் தானே தேர்ந்தெடுத்து, 'ப்ளே லிஸ்ட்' ஒன்றை உருவாக்கி ஒலிக்கச் செய்யும். பள்ளி அளவில் ஸினாப்ஸ் புகழ்பெற, மார்க்கும் ஆடமும் அதை இணையத்தில் இலவசமாக உலவ விட்டார்கள். உபயோகித்தவர்கள், உச்சி முகர்ந்து பாராட்டினார்கள்.

'பள்ளிச் சிறுவர்'களின் அபாரத் திறமை, எட்டுத் திக்கும் எட்டியது. மைக்ரோசாஃப்ட் முதல் மியூசிக் மேட்ச் வரை, சிறிய பெரிய நிறுவனங்களின் 'ஆஃபர் லெட்டர்' இருவரது இன்பாக்ஸையும் தட்டியது. மார்க், சற்றே மிரளத்தான் செய்தார்.

'அதுக்குள்ளயா... அய்யோ, நான் காலேஜ் படிக்கணும்'! என நழுவினார். 'சரி, ஒரு மில்லியன் டாலர் தர்றோம். அந்த ஸினாப்ஸை எங்ககிட்ட வித்துருங்க' எனவும் கேட்டுப் பார்த்தார்கள். மைக்ரோசாஃப்ட் இரண்டு மில்லியன் தருவதாகவும் அழைத்தது. ஆனால், அங்கே மூன்று வருடம் பணியாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன்.

மைக்ரோசாஃப்ட்டில் வேலை என்பது ஆகச் சிறந்த வெகுமதிதான். ஆனால், என் கல்லூரிக் கனவுகள்? கடும் குழப்பத்தில் தவித்த மார்க், இறுதியில் 'குழந்தைத் தொழிலாளி'யாக மாற விரும்பாமல், 'ஹார்வர்டு' பல்கலைக்கழகத்தில் படிக்க விண்ணப்பித்தார்.

அங்கே ஒவ்வொரு செமஸ்டரின் ஆரம்பத்திலும், மாணவர்கள் தங்கள் விருப்பத்துக்கு உரிய பாடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தங்கள் நண்பர்கள், காதலிக்கத் துரத்தும் பெண்கள்/ஆண்கள் எதைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என விவரம் தெரிந்தால், தாங்களும் அங்கே நங்கூரமிடலாம் அல்லவா?

அதைத் தொகுத்துச் சொல்லும் ஹார்வர்டுக்கு உரிய பொது இணையதளம் எதுவும் இல்லை. மாணவர்கள் தவித்தார்கள். அதற்காகவே மார்க், 2003-ம் ஆண்டு மத்தியில் கோர்ஸ்மேட்ச்' (CourseMatch) என்ற இணையதளத்தை இன்ஸ்டன்ட்டாக உருவாக்கினார். செம ஹிட். தளத்தை உருவாக்க எந்தவித டேட்டாபேஸும் மார்க்கிடம் கிடையாது.

ஒவ்வொரு மாணவரும் தளத்தினுள் நுழைந்து, தங்கள் விவரங்களைத் தாங்களே பதிவுசெய்துகொண்டனர். புதிய டேட்டாபேஸ் உருவானது. கோர்ஸ் மேட்ச்-ன் இந்த மாடல்தான் ஃபேஸ்புக்கின் அடித்தளமும்கூட..

மார்க், ஃபேஸ்புக்கை நிறுவுவதற்கு பல ஆண்டுகள் முன்பே ஹார்வர்டில் ஒரு 'ஃபேஸ்புக்' புழக்கத்தில் இருந்தது. ஹார்வர்டு மாணவர்களின் சுயவிவரங்களும் புகைப்படங்களும் அச்சடிக்கப்பட்ட தொகுப்பு. இணைய வசதி வந்தபின் அவை டிஜிட்டல் வடிவில் கிடைத்தன. ஆனால், அவற்றை அந்தந்தத் துறை சார்ந்தவர்கள் மட்டுமே பார்க்க முடியும். மற்ற துறையினர் உள்ளே நுழைய முடியாது. செக்யூரிட்டி... பாஸ்வேர்டு... இத்யாதி.

'மப்பும்' மந்தாரமுமாக இருந்த ஒரு பொழுதில், மார்க்குக்கு 'ஹார்வர்டிலேயே அழகான பெண் யார்... ஆண் யார்?' என்பதைத் தேர்ந்தெடுக்கும் ஒரு புரோகிராம் எழுதும் கோக்குமாக்கு யோசனை தோன்றியது.

நெட்வொர்க் வழியே ஹார்வர்டின் ஒவ்வொரு துறையில் இருந்தும் மாணவர்களின் விவரங்களைத் திருடினார். 'ஃபேஷ்மேஷ்' (Facemash) என்றொரு புரோகிராம் உருவாக்கினார். இரண்டு பெண்களின் (அல்லது ஆண்களின்) புகைப்படத்தை ஒப்பிட்டு யார் அழகானவர் எனத் தேர்ந்தெடுத்தால், தேர்ந்தெடுக்கப்படாத படம் மறைந்து அடுத்த படம் தோன்றும். இப்படியே ஒப்பிட்டு ஓட்டு அளித்துக்கொண்டே செல்லலாம்.

மார்க், ஃபேஷ்மேஷை உருவாக்கி இணையத்தில் ஏற்றிய சில மணி நேரத்திலேயே, மாணவர்கள் அதை மொய்க்க ஆரம்பித்தனர். ஓட்டுகள் குவியக் குவிய, ஹார்வர்டின் இணைய இணைப்பு டிராஃபிக்கால் செயல் இழந்தது. மார்க்கும் அத்துடன் ஃபேஷ்மேஷுக்குத் திரை போட்டார். தனக்குள் முடிவெடுத்தார். குற்றமான விளையாட்டைச் செய்யாதே.

சில நாட்களில் மார்க், பல்கலைக்கழகத்தின் விசாரணை வளையத்துக்குள் நிறுத்தப்பட்டார். புகைப்படங்களைத் திருடியது, இணைய இணைப்பைத் தவறாகப் பயன்படுத்தியது, அழகுக்கான ஓட்டு என்ற பெயரில் கறுப்பு இனத்தவரின் மனதைப் புண்படுத்தியது இப்படிச் சில குற்றச்சாட்டுகள் பாய்ந்தன.

புண்படுத்தியதற்காக மன்னிப்புக் கெட்டுக்கொட மார்க், 'சாதாரண மாணவன் ஒருவன் தகவல்களை எளிதாகத் திருடும் அளவுக்குத்தான் பல்கலைக்கழகத்தின் இணையதளப் பாதுகாப்பு இருக்கிறது. என்பதை உணர்த்தியிருக்கிறேன் அதற்காகப் பாராட்டுங்கள்' என்றார் சாமர்த்தியமாக, தண்டனை இல்லாமல் தப்பித்தார்.

அடுத்ததாக மார்க். ஹார்வர்டு மாணவர்களுக்கான புதிய சோஷியல் நெட்வொர்க் தளம் ஒன்றை அமைக்கும் யோசனையில் இறங்கினார் 'அந்தச் செயலை முடிக்க என்னவெல்லாம் தேவை எனத் தீவிரமாகத் திட்டமிட்ட பின்பே முனைப்புடன் களத்தில் இறங்கினார்.

கோர்ஸ்மேட்சை'விட அதிகப் பயனுள்ளதாக, குறிப்பாக சாட்டிங்கில் தொடங்கி டேட்டிங் வரை புதிய தளம் மாணவர்களுக்குக் கைகொடுக்க வேண்டும். என்ற சீரிய நோக்கத்துடன் செயலாற்றினார். தளத்தினுள் நுழைய அடிப்படைத் தேவை ஹார்வர்டு இமெயில் கணக்கு. மாணவர்கள் சுய விவரங்களைத் தாங்களே இதில் பதிவு செய்துகொள்ளலாம். அடுத்தவர்களின்

தகவல்களை நோட்டம்விடலாம். 'கொஞ்சம் படிக்கிறேன்', 'நீச்சல் அடிக்கிறேன்', 'காதலில் துடிக்கிறேன்' என ஏதாவது ஸ்டேட்டஸ் அப்டேட்ஸ் போடலாம்.

'thefacebook.com' என, அந்தத் தளத்துக்காக இணையதள முகவரியை 2004-ம் ஆண்டு ஜனவரி மாதம் பதிவுசெய்தார் மார்க். இரவு, பகல், பசி, தூக்கம் எல்லாம் மறந்து தளத்தை இயக்கிவிட வேண்டும் என்ற உத்வேகத்துடன் இயங்கினார்.

2006-ம் ஆண்டு செப்டம்பரில், மாணவர்களுக்கு மட்டும் அல்லாமல் பொதுமக்களுக்கான சேவையையும் ஆரம்பித்தது ஃபேஸ்புக். 2007-ம் ஆண்டு, நிறுவனங்களுக்கான பிசினஸ் பக்கங்கள் தொடங்கப்பட்டன.

அடுத்தடுத்து ஃபேஸ்புக் வால், நியூஸ் பீட், போட்டோ ஷேரிங், கேம்ஸ், குரூப்ஸ் எனப் புதிய வசதிகள் பளபளக்க, சமூகம் அள்ளி அணைத்து 'லைக்'கிட்டு, அபாரம் என 'கமென்ட்' போட்டு, 'ஃபேஸ்புக்குக்கு நீங்க வாங்க' என தங்கள் கருத்துகளை எங்கெங்கும் 'ஷேர்' செய்ய ஆரம்பித்தது.

'ஃபேஸ்புக்கை ஆரம்பிக்கும்போது அதற்குப் பின் இத்தனைப் பெரிய வியாபார வாய்ப்பு இருப்பதாக நான் சத்தியமாக நினைக்கவில்லை' என பிறகு சொன்னார் மார்க்

NOTES-:

DATE THIS BOOK WAS MADE 23-09-2023